உத்மானிய துருக்கியர்களின் வரலாறு

[HISTORY OF OTTOMAN TURKS FROM 1258 TO 1924 A. D.]



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—597

உத்மானிய துருக்கியர்களின் வரலாறு

(கி.பி. 1258 - 1924)

(மேற்பட்டப் படிப்பிற்குரியது)

[திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது]

ஆசிரியர்

அ. உஸ்மான் ஷெரீப், எம்.ஏ.,

முதல்வர்,

அரசினர் கலைக் கல்லூரி,

கடலூர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December 1974

T.N.T.B.S. (C.P.) No. 597

© Tamilnadu Textbook Society

History of the Ottoman Turks from 1258 to 1924 A.D.

A. OOSMANN SHARIFF

Price Rs. **12-70**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture) New Delhi.

Printed by:
ENENJEY PRINTERS,
14, Tassudin Khan Bahadur St.
Madras-600005.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினொன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.) 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'உத்மானிய துருக்கியர்களின் வரலாறு' (கி.பி. 1258—1924) என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 597ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 632 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை. ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியில் இஸ்லாமிய உலகின் நிலை ...	1
	முகம்மது (1232–1273) ...	2
	மம்லூக்குகள் ...	4
2.	உத்மான் (1288–1326) ...	13
3.	ஓர்கான் (1326-1359) ...	31
4.	முதலாம் முராத் (1359-1389) ...	44
	1. திரேஸின்மீது படையெடுப்புகள் ...	46
	2. மாஸிடோனியா, பல்கேரியா, செர்பியா மீது படையெடுப்புகள் ...	51
	3. சின்ன ஆசியாவில் முராதின் வெற்றிகள் ...	53
5.	முதலாம் பேஜீத் (1389-1403) ...	61
6.	பேரரசை மீட்டுவித்த முதலாம் முகம்மது (1413-1421) ...	77
7.	இரண்டாம் முராத் (1421-1451) ...	86
8.	இரண்டாம் முகம்மது —'மாபெரும் வெற்றியாளர்' (1451-1481) ...	100
	கான்ஸ்டான்டிநோப்பிளின் வீழ்ச்சி ...	100
9.	இரண்டாம் பேஜீதும் ஜெம்மும் (1481-1512)	121
10.	முதலாம் சலீம் (1512-1520) ...	129
11.	மாண்புமிகு முதலாம் சுலைமான் (1520-1566) ...	137
12.	இரண்டாம் சலீமும் பிரதம அமைச்சர் சொக்கல்லியும் (1566-1578) ...	164
	பதினேரும் நூற்றாண்டின் உத்மானியக் கட்டடக் கலை ...	171
	உத்மானிய இலக்கியம் ...	173
13.	உத்மானியப் பேரரசின் நிறுவனங்கள் ...	175
	சுல்தான் ...	175
	1. ஆட்சிக்கான நிறுவனங்கள் ...	177
	2. முஸ்லிம் நிறுவனம் ...	185

		பக்கம்
	3. முஸ்லிமல்லாத குடிமக்கள் ...	189
	4. அன்னியர்கள் ...	190
	5. குறைபாடுகள் ...	190
14.	சுல்தானுக்களின் ஆட்சியும் பேரரசின் சீர்குலைவும் —(1578-1656) ...	192
15.	கொப்ரீலீ வஸீர்கள் (1656-1702) ...	214
16.	துருக்கியும் ரஷியாவும் ...	238
	(அ) பஸ்ஸரோவிட்ச் உடன்படிக்கை ...	238
	(ஆ) பெல்கிரேட் ஒப்பந்தம் ...	250
	(இ) கைனர்ட்ஜி ஒப்பந்தம் ...	258
	(ஈ) ஜஸ்ஸி ஒப்பந்தம் ...	271
17.	புக்காரெஸ்ட் உடன்படிக்கை (1792-1812) ...	286
18.	இரண்டாம் மகமூது (1808-1839) ...	306
	கிழக்குப் பிரச்சினை ...	306
19.	சுல்தான் அப்துல் மஜீது (1839-1861) ...	343
	கிழக்குப் பிரச்சினை (தொடர்ச்சி) ...	343
20.	இரண்டாம் அப்துல் ஹமீது (1876-1909) ...	372
	அப்துல் ஹமீதும் இஸ்லாமிய ஒற்றுமை இயக்கமும் ...	410
21.	இளந்துருக்கியர்கள் (1909-1914) ...	413
	பால்கன் போர்கள் ...	413
22.	துருக்கிய-ஜெர்மானிய கூட்டுறவின் தொடக்கம்	435
23.	முதல் உலகப் பெரும்போர் (1914-1918) ...	441
24.	பாரிஸ் ஒப்பந்த மாநாடு ...	463
	கமால்பாஷாவின் கீர்த்தி ...	475
	சுல்தான் பதவி ஒழிப்பு ...	480
	சுல்தான் பதவி ஒழிப்புக்குப் பின்னால் ...	483
25.	மாபெரும் துருக்கியர் முஸ்தபா கமால்பாஷாவின் தலைமையில் துருக்கிக் குடியரசு ...	487
	உத்மானிய வம்சாவளிப் பட்டியல் ...	514
	மேற்கோள் நூற்பட்டியல் ...	516
	கலைச்சொல் அகராதி ...	519

1. பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியில் இஸ்லாமிய உலகின் நிலை

ஹுலாகு (Hulagu) என்பவர் பாரசீகத்தில் மங்கோலிய இராச்சியத்தை நிர்மாணித்தார். அவ் விராச்சியம் அமு தர்யா (Amu Darya) யிலிருந்து சிரியாவின் (Syria) எல்லைகள் வரையிலும் காக்கஸஸ் மலைகளிலிருந்து (The Caucasus) இந்தியக் கடல் வரையிலும் பரவியிருந்தது. அவர்தாம் முதன் முதலாக இல்-கான் (Il-Khan) என்ற பட்டப் பெயரைப் புனைந்து கொண்டவர். அதனை அவருக்குப்பின் வந்தவர்களும் ஏழாம் அரசரான கஸன் முகம்மது (Ghazan Muhammad, 1295-1304) காலம் வரையிலும் ஏற்றுக் கொண்டிருந்தனர். அவருடைய ஆட்சிக் காலத்தில் இஸ்லாம் அந் நாட்டின் சமயமாயிற்று. இல்-கான்கள் அல்லது ஹுலாகு வமிசத்தினர் காலத்தில் பாக்தாத் (Baghdad), அல்-இராகுல் அரபி (Al-Iraqul Arabi) என்ற ஒரு மாநிலத்தின் தலைநகரமாக மட்டுமே இருந்தது. 1265-ல் ஹுலாகு இறந்து விட்டார். அவருடைய வாரிசுகளும் பாரசீகர்களின் பண்பாட்டைப் பாராட்டியதோடு, அவர்களுடைய நிர்வாகத் திறமையையும் செம்மையாகப் பயன்படுத்திக் கொண்டனர். அவர்களுடைய அரசவைகளில் அல்ஜுவைனி (Al-Juwayni, 1283), ரஷீதுத்தீன் (Rashid-ud-din, 1318) (வரலாற்றறிஞர்) போன்ற மாபெரும் அறிஞர்கள் புகழ்பெற்று விளங்கினர். பாரசீகத்தில் எழுபத்தைந்து ஆண்டு காலமாக நடைபெற்று வந்த இல்-கான்களுடைய ஆட்சி பெரும் இலக்கிய சாதனைகளுக்கு இடமளித்திருந்தது. பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் சிலுவைப் போர் வீரர்கள் கடற்புறம் விரட்டியடிக்கப்பட்டிருந்தனர். ஏழாம் இல்-கான் அரசர் இஸ்லாத்தை அரசு சமயமாக ஏற்றுக்கொண்டிருந்தார். இஸ்லாமியப் பண்பாட்டினை மிகவும் கொடூரமாக ஹுலாகு அழிக்க முயன்றதற்கு அரை நூற்றாண்

டிற்குப் பிறகு அவருடைய பேரன் கஸன் (Ghazan) என்பவர் ஒரு பற்றுடைய முஸ்லிமாக அப் பண்பாட்டினை உயிர்ப்பிப் பதற்குத் தீவிர முயற்சியில் முனைந்திருந்தார்.

ஸ்பானிய நாட்டைப் பொறுத்தவரை, அதன் ஒரு பகுதியாக இருந்த கிரனடாவைச் சார்ந்த நசீரித்துகள் (Nasirids of Granada) அத் தீபகற்பத்தில் முஸ்லிம் ஆட்சியின் கடைசிப் பிரதி நிதிகளாக இருந்தனர். மொராக்கோ (Morocco)வில் அல்நசீரித் தின் (ஸ்பெய்னில் கடைசி முவாஹித் கலீஃபா) ஒன்பது வாரிசு கள் (எல்லாம் அப்துல் மூமின் என்பவரின் மரபு வழி வந்தவர் கள்) தம்முடைய தலைநகரான ஸனதா (Zanatah), மர்ரகேஷ் (Marrakesh) என்ற இனங்களின் கிளையினரான பனூ மாரின் (Banu Marin) என்ற இனத்தைச் சார்ந்த நாடோடி மக்களினால் 1269-ல் கைப்பற்றப்படும் வரையில் தொடர்ந்து ஆட்சி நடத்தி வந்தனர்.

மதீனாவைச் சார்ந்த சிறப்பு மிக்க கஸ்ரஸ் இனத்திலிருந்து உருவாகிய நசீரித் வம்சத்தை (1232-1492) உருவாக்கியவர் முகம்மது இப்னு யூசுஃப் இப்னு நாஸிர் (Muhammad Ibn Yusuf Ibn Nasar) என்பவராவார். இப்னுல் அஹ்மத் (Ibnul Ahmad) என்றும் அவர் அறியப்பட்டிருந்தார். ஆகவே, அவ் வினத்திற்கு பனூ அல் அஹமது என்ற பெயர் அளிக்கப்பட்டிருந்தது. அவ ருடைய வாழ்க்கை வரலாற்றை அவருக்குப்பின் வந்த அரசர் களில் ஒருவருடைய அரசவையில் சிறப்புற்று விளங்கிய இப்னு கல்தூன் (Ibn Khaldun) என்ற வரலாற்றறிஞரிடத்திருந்து நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. முவாஹிதுகளின் வீழ்ச்சிக்குப் பிறகு காஸ்டில்லிய நாட்டினர் ஒரு முஸ்லிம் தலைவரை மற்றொரு முஸ்லிம் தலைவருக்கெதிராகத் தூண்டிவிட்டுக் கொண்டிருந் தனர். இவ்விதமாக, இறுதியில் அனைவருமே அழிந்தனர். முகம்மது, கிறிஸ்தவர்களின் ஆதரவைப் பெற்றுத் தமக்கெனக் கிரனடாவைச் சுற்றி ஒரு நாட்டை அமைத்துக் கொண்டார். இந் நாடு, செவில் (Seville) நாட்டின் புகழை ஒத்த புகழினைப் பெற்று விளங்கிற்று. அடுத்த இரண்டரை நூற்றாண்டுக் காலம் வரை கிறித்துவ சமயத்திற்கெதிராக இஸ்லாமிய சமயத்தை ஆதரிக்கும் நாடாக அது விளங்கிற்று.

முகம்மது (1232-1273)

முகம்மது, அல்காலிப் (Al-Galib) என்ற பட்டப் பெயரைப் புனைந்து கொண்டு கிரனடாவைத் தமது தலைநகராகக் கொண்டு ஆட்சியைத் தொடங்கினர். அவரும் அவருடைய வாரிசுகளும்

காஸ்டில்லிய அரசருக்கு வணக்கம் தெரிவித்துக் கப்பமும் செலுத்தி வந்தனர். கிரனடா அவர்களுடைய டமாஸ்கஸ் ஆகும். அங்கே சிரியா நாட்டினர் பலரும் யூதர்களும் குடியேறி யிருந்தனர்.

எழில்மிக்க இந் நகரின் தென்கிழக்கு எல்லையில் ஒரு குன்றின் மீது ஏற்கெனவே இருந்த உமையாக்கள் அமைத்திருந்த கோட்டையின் சிதைவுகளின் மேல் அல்-காலிப், உலகமே புகழ் கின்ற அல்-ஹம்ப்ரா (Al-Hambra) (சிவப்பு) அரண்மனையைக் கட்டினர். இது செங்கற்களினால் கட்டப்பட்டதாகும். அவருக்குப் பிறகு வந்த மூன்று அரசர்களும் இவ்வரண்மனையை விரிவுபடுத்தி மேலும் பலவகைகளிலும் அலங்கரித்து வைத்தனர். கார்டோவா வில் உள்ள பல்கலைக் கழகம், மதீனத்துல் ஜஹ்ரா (Madinat-al-Zahra) மற்றும் அல்ஹம்ப்ரா அரண்மனை ஆகிய இம் மூன்றும் ஸ்பானிய நாட்டின் சிறப்பு மிக்க கட்டடக்கலை நினைவுச் சின்னங் களாகும். அந்த அரண்மனையில் நசீரித் அரசர்கள் தம் அரசவையை நடத்தி வந்தனர். அது உமையா, அப்பாஸி ஆட்சியாளர்கள் பெற்றிருந்த புகழையும் சிறப்பையும் மீண்டும் ஸ்பெயினில் நிலைநாட்டிற்று. கலை, கல்வி ஆகியவை பெரும் ஆதரவு பெற்று விளங்கியமையால், வட ஆப்பிரிக்காவிலிருந்து பல அறிஞர்கள் அங்கு வந்து குவியத் தொடங்கினர். வர்த்தகத் திற்கு, குறிப்பாக இத்தாலிய நாட்டுடன் நடைபெற்றுவந்த பட்டு வியாபாரத்திற்குப் பெரும் ஆதரவு கொடுக்கப்பட்டதன் விளை வாக, கிரனடா நகரம் ஸ்பானிய நாட்டிலேயே மிக்க செல்வம் படைத்த நகரமாகத் திகழ்ந்தது. அக் குடும்பத்தைச் சார்ந்த அரசர்களின் தலைமையில் அத் தலைநகரம், கிறித்தவர்களின் தொல்லைகளிலிருந்து விடுதலை பெறும் நோக்குடன் ஓடிவந்த முஸ்லிம்களுக்கு அடைக்கலம் தருவதாகவும், கலை, விஞ்ஞானம் ஆகிய துறைகளில் கார்டோவா நகரின் வாரிசாகவும் இருந்தது. இருந்தபோதிலும் இவையெல்லாம் ஸ்பெயின் நாட்டில் இஸ்லாம் என்ற கதிரவனின் கடைசி ஒளிச்சுடர்களேயாகும். அரகானைச் சார்ந்த ஃபெர்டினண்டும் (Ferdinand of Aragan) காஸ்டைலைச் சார்ந்த இஸபெல்லாவும் (Isabella of Castile) திருமணம் செய்து கொண்டதனால் அவ்விரு நாடுகளும் ஒன்றுக இணைந்தன. இதன் விளைவாக, ஸ்பானிய நாட்டுக் கிறித்தவர்களிடையே பெரும் இணைப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. இஸ்லாமியர் களிடத்தில் இருந்த பகுதிகளை அக் கிறித்தவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக மீட்டுக் கொண்டிருந்தனர். இந் நடவடிக்கைகளின் விளைவாக, பதின்மூன்றும் நூற்றாண்டுக்குள் ஸ்பெயினில் முஸ்லிம்கள் பலரும் படையெடுப்புகளின் விளைவாகவோ,

ஒப்பந்தங்களின் விளைவாகவோ கிறித்தவர்களின் குடிமக்களாயினர். ஆனலும், தமக்குரிய பண்பாட்டினையும் சட்ட திட்டங்களையும் அவர்கள் விடாமல் பேணிக் காத்தே வந்தனர். அது போல் இருந்த முஸ்லிம்கள் முதேஜார்கள் (Mudejars) என்றழைக்கப்பட்டனர். அவர்களில் பலர் படிப்படியாக அராபிய மொழியை மறந்து மற்ற மொழிகளைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர்; கிறித்தவர்களுடனும் ஒன்றிவிட்டனர்.

மம்லூக்குகள்

மம்லூக்குகள் (Mamlukes) அராபிய உலகின் இடைக்கால வமிசத்தினரில் இறுதியானவர்களாவர். அவர்கள் அந்நிய நாடு ஒன்றில் பல இனத்தினரும் நாட்டினரும் சேர்ந்து தோற்றுவித்த இராணுவச் சிறு குழு ஆட்சியின் கீழிருந்த அடிமைகள் வம்சத்தினராவர். அவர்கள் சிரியாவிலும் எகிப்திலும் இருந்த சிலுவைப் போர் வீரர்களை வெளியே விரட்டினர்; ஹுலாகு மற்றும் தைமூர் ஆகியவர்களின் தலைமையில் முன்னேறிக் கொண்டிருந்த மங்கோலியர்களையும் தடுத்து நிறுத்தினர். அவ்விதம் செய்து, எகிப்து நாட்டின் கலாசாரத்தையும் அரசியல் நிறுவனங்களையும் தொடர்ந்து காத்தனர். அவர்களுடைய ஆட்சி கி.பி. 1250-லிருந்து 1517ஆம் ஆண்டு வரை நீடித்தது. கலைக்கும் கட்டடக் கலைக்கும் அவர்கள் அளித்த ஆதரவின் விளைவாக இன்றும்கூடக் கெய்ரோ நகரம் முஸ்லிம் உலகில் வனப்பு மிக்க இடங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. 1517-ல் அவர்கள் உத்மானிய துருக்கியரான சலீம் என்பவரால் முறியடிக்கப்பட்டனர்.

மம்லூக்குகளின் அதிகாரத்திற்கு ஷஜருல்துர் (Shajaral-Durr) (முத்து மரம்) என்ற பெண்மணி அடிகோலினர். அவர் காலஞ்சென்ற அய்யூபி அல்-சாலிஹ் (Ayyubid-al-Salih—1249) என்பவருடைய மனைவியாவார். ஆரம்பத்தில் அவர் துருக்கிய அல்லது அர்மீனிய அடிமையாயிருந்தவர். முன்னாளில் அல்-முஸ்தஃஸிம் என்ற கலீஃபாவின் அடிமையாகவும் அந்தப்புரத்து மாதர்களில் ஒருவராகவும் இருந்த ஷஜர்அல்-சாலிஹின் பணியில் சேர்ந்து, அவருக்கு ஒரு மகனை ஈன்றெடுத்ததற்குப் பிறகு விடுதலை பெற்றார். கணவர் சாலிஹ் காலமான பின், அரச அதிகாரத்தை அவர் மேற்கொண்டதற்குப் பிறகு அவருடைய முன்னாள் கலீஃபா எகிப்தின் அமீர்களுக்குப் பின்வரும் மிகக் கடுமையான அறிக்கை ஒன்றை விடுத்தார்: 'உங்களை ஆள்வதற்காக ஆண்கள் எவரும் இல்லையெனின், எமக்குத்

தெரிவியுங்கள். நாங்கள் ஒருவரை அனுப்பிவைக்கிறோம்.' காலப்போக்கில் ஷஜர் வட ஆப்பிரிக்காவிலும் மேற்கு ஆசியாவிலும் அமைந்திருந்த ஒரு பகுதியில் ஆட்சி புரிந்தார்; தம் பெயரை நாணயங்களில் அச்சிட்டு வெளியிட்டார். வெள்ளிக் கிழமை நடைபெறும் தொழுகையில் தம் பெயரையும் குறிப்பிடும் படி பற்புறுத்தினர். அமீர்கள் எல்லாரும் சேர்ந்து இஸ்ஸுத்தீன் ஐபக் (Izzal-Din-Aybak) என்பவரை அவருடைய படைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தபோது, அவரையே சுல்தானை மறுமணம் புரிந்து கொண்டார். ஐபக் தமது ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் சிரியாவின் பட்டத்திற்கு வரவேண்டியவர்களாக இருந்த அய்யூபிக் கட்சியினரை நசுக்குவதில் முனைந்திருந்து கூட்டு, குழந்தை அரசராக இருந்த அல்-அஷ்ரப் என்பவரைச் சிம்மாசனத்திலிருந்து நீக்கி, தம் படைத் தலைவரையும் அறவே ஒழித்துவிட்டார். இதற்குள்ளாக அரசி, அரசனுக்குரிய அதிகாரங்களைத் தாமே பயன்படுத்திக் கொண்டதோடல்லாமல், அவரைத் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படியும் ஆணையிட்டார். இறுதியில் ஐபக் மற்றொரு விவாகம் செய்து கொள்ளப் போவதாகக் கேள்வியுற்று அவரைக் குளியல் அறையிலேயே கொன்று விட்டார். இதைக் கேள்வியுற்ற இவ்வரசனின் முதல் மனையாளின் அடிமைப் பெண்கள் இவரைக் கொன்று இவருடைய சடலத்தை அரண்மனை மாடத்திலிருந்து கீழே தள்ளிவிட்டனர்.

ஐபக் (1250-57) என்பவர் முதல் மம்லூக் சுல்தானுவார். இவ் வமிசம் பஹ்ரீ (Bahri, 1250-1390) என்றும், புர்ஜீ (Burji, 1382-1517) என்றும் இரண்டு பிரிவுகளாக் கொண்டிருந்தது. பஹ்ரீ மம்லூக்குகள், நைல் நதியின் அல் ரௌதா என்ற தீவில் தம்முடைய அடிமைகளாக் குடியேற்றியவரான அய்யூபி அல்-ஷா என்பவருடைய சொந்தப் பாதுகாவலரின் கூட்டத்திலிருந்து தோன்றியவர்கள். பஹ்ரீகள் பெரும்பாலும் துருக்கியர்களும் மங்கோலியர்களுமே யாவர். அயல் நாட்டு அடிமைகளைத் தமது பாதுகாவலராகக் கொள்வதில் அய்யூபிகள் பாக்தாத் கலீஃபாக்களையே பின்பற்றி, அதே விளைவுகளையும் பெற்றனர். நேற்று அடிமைகளா யிருந்தவர்கள் இன்றைய படைத்தலைவர்களாகவும் நாளை சுல்தான்களாகவும் ஆயினர்.

புர்ஜீகள் என்றழைக்கப்பட்டவர்கள் பின்னால் தோன்றியவர்கள். அவர்களும் சொந்தப் பாதுகாவலர்களாகவே வாழ்க்கையைத் தொடங்கினர். இருப்பினும், பஹ்ரீ மம்லூக் கலாவூன் (Bahri Mamluke Qalawun, 1279-90) என்பவர்தாம் இப்பிரிவினையைத் துவக்கினர். அவர்களில் பெரும்பாலானோர் சிர்கா

சிய (Circassian) அடிமைகளாவர். அரணுக்கு வெளியிலிருந்த கோபுரங்களில் அவர்கள் தங்கியிருந்தனர். அராபிய மொழியில் புர்ஜ் என்பது கோபுரத்தைக் குறிக்கும். மொத்தத்தில் இருபத்து நான்கு பஹ்ரீ மம்லூக்குகளும் இருபத்து மூன்று புர்ஜீகளும் ஆண்டனர். புர்ஜீகள் மரபுரிமை வாரிசுரிமைகளைப் போற்ற வில்லை. அரியணையை எவன் ஒருவன் கைப்பற்றிக் கொள் கின்றானே அவனையே அவர்கள் மன்னனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பல வேளைகளில் சுல்தான்களின் மகன்களுக்குப் பதிலாக அவர்களுடைய தகுதி வாய்ந்த அடிமைகளே பட்டத் திற்கு வந்தனர். சுல்தான்களில் பலர் கொல்லப்பட்டு மாண்டனர்.

ஐபக்கின் முதல் பொறுப்பு, தமது இராச்சியத்தை வலுப் படுத்தி அதன் எல்லைகளைப் பாதுகாப்பதாய் இருந்தது. தமது வாழ்நாள்களில் பெரும்பகுதியை அவர் சிரியா, பாலஸ்தீனம், எகிப்து ஆகிய நாடுகளில் போர் நிகழ்த்துவதிலேயே கழித்தார். அல் முஸப்பர் சைஃபுத்தீன் குதுஸ் (Al-Muzaffar Sayf-al-Din-Qutuz, 1259-60) என்பவர் அல்-காக்கைச் சார்ந்த அய்யூபி சுல்தானுடைய தாக்குதலை எதிர்த்து நின்றார். எகிப்தின்மீது அய்யூபிகள் நிகழ்த்திய படையெடுப்பு முடிவடைந்ததும், கித்புகாவின் தலைமையிலிருந்த ஹுலாகுவின் மங்கோலியப் படையினால் பெரும் ஆபத்து ஏற்பட்டது. குதுஸ்ஸிடம் அனுப்பி வைக்கப்பட்ட ஹுலாகுவின் தூதர்கள் குதுஸ்ஸினால் கொல்லப் பட்டனர். ஐன் ஜாலூத் (Ayn Jalut, 1260) என்ற இடத்தில் போர் நடந்தது. அதில் பேபர்ஸ் பெரும்பங்கு பெற்றார். ஒரு தலை சிறந்த படைத்தலைவராக அவர் விளங்கினார். டார்ட்டார் படை விரட்டியடிக்கப்பட்டது. போர்க்களத்தில் கித்புகாவும் மற்ற வர்களும் இறந்தனர். தனது அண்டைப்புற நாட்டிற்கு ஏற்பட்ட அவல நிலையிலிருந்து எகிப்து தப்பித்துக்கொண்டது. தாம் ஆற்றிய இராணுவப் பணிக்காக அலெப்போவைப் பரிசாகப் பெறக்கூடும் என பேபர்ஸ் ஆசைப்பட்டார்; ஆனால், ஏமாற்ற முற்றார். சிரியாவிலிருந்து வீடு திரும்பும்போது குதுஸ்ஸுடன் வேட்டையாடிக் கொண்டிருக்கையில் உடன் சதிகாரன் ஒருவன் சுல்தானைப் புகழ்ந்து அவருடைய கைக்கு முத்தமிடுகையில், பேபர்ஸ் அவரைக் கொன்றுவிட்டார் (அக்டோபர், 1260). கொல்லப்பட்ட சுல்தானுக்குப் பிறகு அவரைக் கொன்ற கொலை யாளியே சுல்தானானார்.

அல் மலிக்குஸ் ஸாஹிர் (Al-Malik al-Zahir) (வெற்றி மன்னர்) ருக்னுத்தீன் (Rukn-al-Din) (சமயத்தின் தூண்)

பேபர்ஸ்-அல் புந்துக்தாரி (Baybars-al-Bunduqdari, 1260-77) என்பவர் மம்லூக் சுல்தான்களுள் சாலச் சிறந்தவராவார். ஒரு துர்க்கோமன் (Turkoman) அடிமையாக அவர் வாழ்க்கையைத் தொடங்கினர். சிறுவராக இருக்கும்போது இவர் டமாஸ்கஸில் எண்ணூறு திர்ஹத்துக்கு விற்கப்பட்டார்; ஆனால், கண்ணில் ஏதோ கோளாறு இருந்ததனால், மீண்டும் திருப்பிக் கொடுக்கப் பட்டார். இறுதியில், இவரை அய்யூபி அல் சாலிஹ் விலைக்கு வாங்கிக்கொண்டார். அல் சாலிஹ் இவரை முதலில் தமது பாது காவலரின் ஒரு பகுதியின் தலைவராக நியமித்தார். அந் நிலையிலிருந்து அவர் படிப்படியாக உயர்ந்து, இராச்சியத்திலே மிக்க உயர் அந்தஸ்தைப் பெற்றுவிட்டார். மனிதர்களுக்குத் தலைமை தாங்குவதற்கான குணவியல்புகளை இவர் மிகவும் சிறப் பாகப் பெற்றிருந்தார். இவரும் இவருக்குப் பிறகு வந்த சுல்தான் களும் சிலுவைப் போர்களை இறுதியாக ஒடுக்கிவிட்டனர். மம்லூக்குகளின் அதிகாரத்தை இவர்தாம் உண்மையில் நிர்மாணித்தார் என்று கூறுவது மிகையாகாது. 1263ஆம் ஆண்டிலிருந்து 1271ஆம் ஆண்டு வரை இவர் சிலுவைப் போர் வீரர்களுக்கெதிராகப் பல போர்களை மிகத் தீவிரமாக நிகழ்த்தினர். இவருடைய படையெடுப்புகளின் விளைவாக, ஃபிராங்கியர்களுடைய (Franks) எதிர்ப்பின் முதுகெலும்பே உடைக்கப்பட்டது என்றுகூடக் கூறலாம். தவிர, அவை அவருக்குப் பிறகு வந்த கலாவூன் (Qalawun), அல் அஷ்ரஃப் (al Ashraf) ஆகியவர்கள் பெற்ற வெற்றிகளுக்கும் வழி வகுத்துக் கொடுத்தன. கொலைகார ஹஷ்ஷாஷீன் இயக்கத்தையும் (Assassin Movement) அவர் தீவிரமாக ஒடுக்கினர். அவருடைய படைத்தலைவர்கள் அவருடைய இராச்சியத்தை மேற்கில் பெர்பர்கள் வசித்துவந்த பகுதி வரையிலும் தெற்கில் நூபியா வரையிலும் (சூடான்) விஸ்தரித்தனர்.

பேபர்ஸ் ஓர் இராணுவத் தலைவராக மட்டுமே விளங்க வில்லை; ஒரு சிறந்த நிர்வாகியாகவும் அவர் விளங்கினர். அவர் படையை ஒழுங்காக அமைத்தார்; கப்பற்படையை உருவாக் கினர்; சிரியாவின் அரண்களை வலுப்படுத்தினர்; வாய்க்கால்களை வெட்டினர்; துறைமுகங்களைப் பழுதுபார்த்து அபிவிருத்தி செய்தார்; கெய்ரோவையும் டமாஸ்கஸையும் அஞ்சல் துறையின் மூலமாக இணைத்தார். அஞ்சல்கள் இவ் விரண்டு நகரங்களிடையே நான்கே நாள்களில் சேரும்படி நடவடிக்கை களை எடுத்துக்கொண்டார்; பொதுப் பணிகளை மேற் கொண்டார். பள்ளிவாசல்களை அவர் அலங்கரித்து, சமய அறக் கட்டளைகளையும் ஏற்படுத்தினர். நான்கு வகை வைதிகச்

சடங்குகளைச் சுட்டிக்காட்டும் வகையில் நான்கு காழிகளை அவர்தாம் முதல் முதலாக எகிப்தில் நியமித்தார். எகிப்தின் மஹ்மில்கள்[1] (Mahmil) அவர்தாம் ஒழுங்காக அமைத்துக் கொடுத்தார். அவர் மங்கோலியர்களுடனும் ஐரோப்பியர்களுடனும் தொடர்பு கொண்டிருந்தார். அவருடைய சமயப் பற்றும், ஆழ்ந்த சமய ஆர்வமும், புனிதப் போரில் இஸ்லாத்துக்கு அவர் தேடித்தந்த புகழும் அவரை ஹாரூன் ரஷீதுக்கு நிகராக்கிவிட்டன. கட்டுக்கதைகளில் அவருடைய பெயர் சலாஹுத்தீனின் பெயரைவிட அதிகச் சிறப்புப்பெற்று விளங்கிற்று.

பேபர்ஸின் ஆட்சியின் ஒரு முக்கியமான நிகழ்ச்சி, அவர் அப்பாஸிக் கலீஃபாக்கள் வரிசை ஒன்றைத் தொடங்கிவைத்ததாகும். அவர்கள் அந்தக் கலீஃபாக்களின் பெயரை மட்டுமே பெற்றிருந்தனர்; அதிகாரத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை. சுல்தானின் நோக்கமோ தாம் சூடியுள்ள கிரீடம் சரியான முறையில் பெறப்பட்டது என்பதை நிரூபிப்பதும், முஸ்லிம்களின் மனத்தில் தம் அரசவைக்கு நிரந்தரமான ஓர் இடம் அளிப்பதும், எகிப்தில் ஏற்பட்டுக்கொண்டிருந்த சதிகளுக்கு முடிவு காண்பதுமாகும். இந் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அவர், கடைசி அப்பாஸி கலீஃபாவின் மாமனும், அல் ஸஹீர் என்ற கலீஃபாவின் மகனுமான ஒருவரை ஜூன் 1261-ல் டமாஸ்கஸுக்கு வரவழைத்து மிக்க ஆடம்பரத்துடன் அவரை அல் முஸ்தன்ஸிர் (al Mustansir) என்ற பெயரால் கலீஃபாவாக நியமித்தார். இவர் ஒப்பு பெற்ற கலீஃபாவாகவே பதவி வகித்தார். மிக்க ஆடம்பரத்துடன் இவர் சிரியாவிற்கு வெளியே கொண்டு செல்லப்பட்டார். தம்மாலேயே கலீஃபாவாக அமர்த்தப்பெற்றவரிடத்திருந்து சுல்தான் தம்மை எகிப்து, சிரியா, தியார் பகர் (Diyar-Bakar), அல் ஹிஜாஸ், அல்-யமன் மற்றும் யூப்ரட்டீஸ் நதிப் பிரதேசம் ஆகியவற்றின் சுல்தானாக நியமிப்பதற்கான ஆணை ஒன்றையும் பெற்றுக்கொண்டார். மூன்று மாதங்களுக்குப் பிறகு பேபர்ஸ், பாக்தாதில் தம்முடைய கலீஃபாவை மீண்டும் நியமிப்பதற்காகச் சற்றும் யோசனையின்றிக் கெய்ரோவிலிருந்து புறப்பட்டார். ஆனால், டமாஸ்கஸ் நகரை அடைந்ததும் அவரை அவருடைய விதிக்கே விட்டுவிட்டார். அல் முஸ்தன்ஸிர் பாக்தாதின் மங்கோல் ஆளுநரால் கைது செய்யப்பட்டார். அவரைப்பற்றிப் பின்பு ஒன்றும் அறியமுடியவில்லை.

[1] மஹ்மில்: புனிதப் பயணத்தின் போது எடுத்துச்செல்லப்படும் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு.

ஓராண்டு கழித்து, அல் ஹகீம் கெய்ரோவில் கலீஃபாவாக நியமிக்கப்பட்டார். இவரும், இரண்டரை நூற்றாண்டு காலமாக இவர் வழியே வந்தவர்களும் பெயரளவிற்கு மட்டுமே கலீஃபாவாகப் பதவி வகித்து வந்தனர். உத்மானிய சுல்தான் முதலாம் பேஜீத் உட்பட பல முஸ்லிம் அரசர்கள் அவரிடத்திருந்து அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருந்தனர்; ஆனால், அவ்வித அங்கீகாரத்திற்கு எவ்வித மதிப்போ முக்கியத்துவமோ இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். நாளுக்கு நாள் இக் கலீஃபாக்களின் நிலை மிகவும் மோசமாகிக்கொண்டிருந்தது. இறுதியில், 1517-ல் சலீம் என்ற உத்மானிய சுல்தான் மம்லூக்கு களிடத்திருந்து எகிப்தைப் பறித்துக் கொண்டபோது, அவர் அவ் வம்சத்துக் கடைசிக் கலீஃபாவான அல் முத்தவக்கிலை தம்முடன் கான்ஸ்டான்டிநோப்பிலுக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்.

பேபர்ஸைக்குப் பிறகு மிகச் சிறப்புப்பெற்று விளங்கிய மம்லூக் சுல்தான் அல் மலிக்குல்-மன்சூர்-சைபுத்தீன் கலாவூன் (al-Malik Al-Mansur Sayfuddin Qalawun, 1279-90) என்பவராவார். பேபர்ஸைப் போலவே இவரும் துர்க்கோமன் அடிமையாக இருந்து, இளமையிலேயே எகிப்திற்குக் கொண்டு போகப்பட்டு, அல்சாலிஹ் என்பவருக்கு விற்கப்பட்டுவிட்டார். கலாவூன் தம் பாதுகாப்பிலிருந்த சலாமிஷ் (Salamish) என்ற பேபர்ஸின் ஏழு வயது மகனை விலக்கிவிட்டு, அதிகாரத்தைத் தாமே பறித்துக்கொண்டார். கலாவூன் பதவி ஏற்றதுமே பாரசீகத்து மங்கோலிய இல்-கான்கள் அவருடைய இராச்சியத் திலுள்ள சிரியாவைத் தாக்கத் தொடங்கினர். அவர்களுள் ஹுலாகுவின் மகனை அபக்காவும் அபக்காவின் மகன் அர்கூன் என்பவரும் கிறித்தவர்பால் சற்று அன்பு கொண்டிருந்தனர். ஆகவே, எகிப்தியரைச் சிரியாவிலிருந்து விரட்டிடப் புதிய சிலுவைப் போரைத் தொடங்குவதற்காகப் போப்புடனும் இதர ஐரோப்பிய ஆட்சியாளர்களுடனும் பேச்சு வார்த்தை தொடங் கினர். ஆனால், அத் திட்டம் நிறைவேறவில்லை. அபக்காவின் படை அதிக சிறப்புடையதாக இருப்பினும் ஹம்ஸ் (Hums) என்ற இடத்தில் 1280-ல் முறியடிக்கப்பட்டது. இதற்குச் சிறிது காலத் திற்குப் பின்னர் மங்கோலியர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். சுல்தான் மற்றும் பல ஐரோப்பிய அரசர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு தம்மை மேலும் வலுப்படுத்திக் கொண்டார்.

கலாவூன் மற்றும் பல துறைகளிலும் சிறப்புப்பெற்று விளங்கினார். அலெப்போ, பலபக் மற்றும் டமாஸ்கஸ் ஆகிய

அரண்களை மிகச் சிறப்பாக அவர் வலுப்படுத்திக்கொண்டார். கெய்ரோவில் அவர் ஒரு மருத்துவ சாலையைக் கட்டினார். அதனோடு பள்ளி-மசூதி ஒன்றும் கல்லறை ஒன்றும் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன. கட்டடக் கலையில் இவ் வமைப்புகள் மிகவும் சிறப்புப்பெற்று விளங்குகின்றன. ஆனலும், அவர் கட்டிய மருத்துவ நிலையம்தான் எல்லாவற்றையும்விட மிகவும் சிறப்புப்பெற்று விளங்கிற்று.

அவருடைய மகனும் வாரிசுமான அல் மலிக்குல் அஷ்ரஃப் கலீல் (1290-93) என்பவர் 1291-ல் அக்காவைக் (Akka) கைப் பற்றியது மட்டுமே அவருடைய சாதனையாகும். அது வீழ்ச்சி யுற்றதன் விளைவாக ஃபிராங்கியர்களின் கையிலிருந்த மற்றும் பல அரண்களும் வீழ்ச்சியுற்றன. 'உலகத்தைப்பற்றிய விவாதத் தையே இவ்வளவு நாள்களாகப் பிரதிபலித்துக் கொண்டிருந்த கடற்கரையோரத்தில் சோகமும் தனிமையும் நிறைந்த அமைதி குடிகொண்டுவிட்டது.' சிரியாவின் வட கடற்கரைக்கப்பால் இருந்த அர்வாட் (Arwad) என்ற தீவில் ஏற்கெனவே குடியேறி இருந்த வீரர்கள் 1302-ல் அல்-அஷ்ரஃபின் இளைய சகோதரரும் வாரிசுமான அல் மலிக்குல் நாசிர் முகம்மது என்பவரால் விரட்டி யடிக்கப்பட்டனர்.

அல் முதமாஸ்ஸிக்கைப் போலவே அல் நாசிரும் நெடுநாள் கள் வரை ஆட்சி புரிந்தார். அவருடைய ஆட்சிக் காலத்தில் கடைசி முறையாக மங்கோலியர்கள் கடுமையான படை யெடுப்பை நிகழ்த்தினர். இப் படையெடுப்பு ஏழாம் இல்-கான் கஸன் மஹ்மூத் (Il-Khan Ghazan Mahmud) என்பவரின் தலைமையில் நடந்தேறியது. அவருடைய காலத்தில்தான் இஸ்லாம் இல்-கான்களின் அரசு சமயமாயிற்று. மங்கோலியர் களின் படை மிகவும் பெரிதாக இருந்ததனல் அதைத் தாக்கிய எகிப்துப் படை விரட்டியடிக்கப் பெற்றது. வெற்றி பெற்ற மங்கோ லியர்கள் தொடர்ந்து முன்னேறி, 1300-ல் டமாஸ்கஸ்ஸைக் கைப்பற்றினர். அந் நகரம் சூறையாடப்படுவதிலிருந்து தப்பித்துக் கொண்டது; ஆனலும் வட சிரியாவின் இதரப் பகுதி கள் கொள்ளைக்கும் கொடுமைக்கும் இரையாயின. அவ் வாண் டில் மார்ச் மாதத்தில் மங்கோலியர்கள் சிரியாவின் தலைநகரை விட்டு வெளியேறினர். எகிப்து நாட்டினர் மீண்டும் அதைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். மூன்று ஆண்டுகட்குப் பிறகு கஸன் மீண்டும் எடுத்த படையெடுப்பிற்கு டமாஸ்கஸ்ஸுக்கு அருகில் தடை விதிக்கப்பட்டது. நான்காம் தடவையாக மம்லூக்குகள் எகிப்தின் மிகக் கடுமையான எதிரிகளை முறியடித்தனர்.

அல் நாசிரின் அமைதிக் காலச் சாதனைகளே போர்ச் சாதனைகளைவிட அதிக சிறப்புப் பெற்று விளங்குகின்றன. குட்டையாகவும் ஒரு கால் இல்லாமலும் இருந்த சுல்தான் அழகான பொருள்களிலும் எழில்களிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். ஆடம்பர வாழ்க்கை வாழ்வதில் அவர் சிறிதும் சலிப்புறவில்லை. தம்மைச் சுற்றிலும் ஆடம்பரங்களே அதிகம் காட்சியளிக்க வேண்டுமென விரும்பினர். அவர் கட்டிய பெரும் புகழ் வாய்ந்த அல் கசர் அல் அப்லக் (Al Qasar al-Ablaq) (பலவர்ண மாளிகை) என்ற கட்டடம் டமாஸ்கஸ்ஸிலிருந்த மாளிகையை மாதிரியாகக் கொண்டு கட்டப்பட்டதாகும். விளையாட்டு வீரராகவும், வேட்டையாடுபவராகவும், குதிரை ஏற்றத்தில் பெரும் விருப்பம் காட்டியவராகவுமிருந்த இவர் அதிக விலைகொடுத்துக் குதிரை வாங்குவதற்குச் சிறிதும் தயங்கவில்லை.

இவர் தமது சொந்த ஆசாபாசங்களை மட்டுமே பூர்த்தி செய்து கொள்வதில் ஈடுபாடு கொண்டவராக இருக்கவில்லை. அவருடைய ஆட்சியின் அவருடைய பல்வேறு பொதுப்பணித் துறைச் சாதனைகள் மம்லூக்குகளின் பண்பாட்டினை உச்ச கட்டத்தை அடையச் செய்தன. அக் கட்டடங்களைக் கட்டி முடிப்பதற்காக அவர் தொழிலாளர்களிடம் கட்டாய வேலை வாங்கினர். அவர் அலெக்ஸாண்டிரியாவையும் நைல் நதியையும் இணைக்க ஒரு கால்வாயை வெட்டினர். அதில் ஒரு லட்சம் பணியாள்கள் வேலை செய்தனர்; நைல் நதியிலிருந்து கெய்ரோவின் அரணுக்குச் செல்லும் கட்டுக் கால்வாய் ஒன்றையும் அவர் கட்டினர் (1311); அவர் தம் இராச்சியம் முழுவதிலும் முப்பது மசூதிகளையும் பற்பல தைக்கால் மடங்களையும், மக்கள் நீர் குடிப்பதற்கான நீர் ஊற்றுகளையும் கட்டினர். தவிர, பல குளியல் அறைகளையும், கல்விக்கூடங்களையும் கட்டினர். மக்கா நகரம் சிறப்புற்று விளங்குமாறு அவர் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார். தம் அரண்மனையில் கட்டிய தமது சொந்தப் பள்ளியையும் பல்வேறு வகைகளிலும் அவர் அலங்கரித்தார். 1304-ல் கட்டி முடிக்கப்பட்டதும் அவருடைய பெயரைக் கொண்டு அல் நாசிரியா என்று விளங்குவதுமான கல்விக் கூடத்தை இன்றும் கெய்ரோவில் காணலாம். அவருடைய பள்ளியும் மசூதியும் முஸ்லிம் கட்டடக் கலையின் வரலாற்றிலேயே மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. சிறிய கலைகளும் அவர் காலத்தில் பெரும் முன்னேற்றமடைந்திருந்தன.

அவருடைய நீண்ட ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பெருஞ் செலவினைச் சரிப்படுத்துவதற்கு மக்களிடத்துப் பெரும் தீர்வைகளை வசூலிக்க வேண்டியிருந்தது. அதுவே அவ் வமிசம் வீழ்ச்சி


யுறுவதற்கும் காரணமாயிற்று. எங்கும் பரவியிருந்த துயரினைப் போக்குவதற்கு சுல்தான் ஒரு சில பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஐரோப்பாவுடனும் கீழை நாடுகளுடனும் நடைபெறும் வியாபாரத்தை இவர் ஊக்குவித்தார்; நிலத்தைப் புதிதாக ஆய்வு செய்யுமாறு இவர் உத்தரவிட்டார்; உப்புத் தீர்வையை ரத்து செய்தார். கோழி வகைகள், கரும்பு, படகுகள், அடிமைகள், குதிரைகள் ஆகியவற்றின்மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வைகளையும் அவர் ரத்து செய்தார். மதுவிலக்கை அமல்படுத்தினார்; அதிக விலைக்கு ரொட்டிகளை விற்ற ரொட்டிக்காரர்களுக்கு அவர் சவுக்கடி கொடுத்தார். இருந்த போதிலும் இவற்றின் விளைவு தாற்காலிகமானதாகவே இருந்தது. அவர் இறந்ததற்குப் பிறகு இராச்சியமெங்கிலும் உள்நாட்டுப் போர்கள் மூண்டன. வறுமையும் கொள்ளை நோய்களும் பரவின. இதனால் மக்களின் நிலை மேலும் மோசமாயிற்று. ஐரோப்பாவை ஆட்டி வைத்த 'கறுப்புச் சாவு' என்ற கொள்ளை நோய் எகிப்தையும் ஏழாண்டுகளுக்கு ஆட்டி வைத்தது.

அல் நாசிருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த பன்னிரண்டு அரசர்களும் பெயரளவில் மட்டுமே அரசர்களாயிருந்தனர். அவர்களுடைய அமீர்கள்தாம் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தனர். இவர்களுள் ஒருவரும்கூட எந்தத் துறையிலும் சிறப்புப் பெற்று விளங்கவில்லை. இக்காலத்தில் கட்டப்பட்ட குறிப்பிடத்தக்க ஒரே ஒரு கட்டடம் 1362-ல் அல் நாசிரின் மகன் அல் ஹஸன் (Al Hasan) என்பவரால் கட்டி முடிக்கப்பட்ட மசூதியாகும். பஹ்ரீ அரசர்களுள் கடைசியானவர் அல் சாலிஹ் ஹாஜி இப்னு ஷாபான் (Al Salih Hajji Ibn Shaban) என்பவராவார். சிறு பிள்ளையாக இருந்த இவரது ஆட்சி இரு ஆண்டுகட்கு மட்டுமே நீடித்தது. அவ் வமிசம் பர்கூக் (Barquq) என்பவரால் முடிக்கப்பட்டது. இவர் புர்ஜீ வம்சம் என்ற புதிய வம்சாவளியினை உருவாக்கினர்.

2. உத்மான் (1288-1326)

(Othman)

ஐரோப்பா முழுவதற்குமே பதின்மூன்றும் நூற்றாண்டு மிக முக்கியமான ஒரு காலமாகும். எல்லாத் திசைகளிலும் பரவியிருந்த பேரரசின் அதிகாரமும் செல்வாக்கும் அப்பொழுது மங்கிக் கொண்டிருந்தன. இத்தாலி மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகள் தனிப்பட்ட நாடுகளாகிக் கொண்டிருந்தன. கருத்துகள் விரிவு பெற்றதனாலும் புத்தம்புதுப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பெற்றுக் கொண்டிருந்ததனாலும் மக்களுடைய உரிமைகள் வளர்ச்சியுற்றன. இங்கிலாந்தில் நார்மானியர்களும் சாக்சானிய மக்களும் ஒன்றுக இணைந்த மக்களாயினர். அம் மக்களுக்கிடையே இருந்த பிணைப்புகள் மேலும் வலியுறுத்தப்பட்டன. 'மாக்ன கார்ட்டா' (Magna Carta) என்ற மகா சாசனம் கையொப்பமிடப்பட்டது; முதல் பாராளுமன்றமும் கூட்டப்பட்டது. புனித நகரம் என்றழைக்கப்பட்ட ஜெரூசலேம் (Jerusalem) என்ற நகருக்காகக் கிழக்கில் நடைபெற்று வந்த நெடுங்காலச் சச்சரவு கிறித்தவர்களின் படுதோல்வியில் முடிவடைந்தது. கடைசிச் சிலுவைப் போருக்கு செயின்ட் லூயிஸ் என்பவர் தலைமை வகித்தார். அப் போர் எகிப்தின் மம்லூக்குகளுக்கெதிராக நிகழ்த்தப்பட்டதாகும். அதில் அரசனும் அவனுடைய படைகளும் சிறையிலடைக்கப்பட்டனர். ஆனாலும், கிழக்கில் ஏற்பட்ட தோல்வி மேற்கில் பெறப்பட்ட வெற்றிகளினால் ஈடு செய்யப்பட்டது. மாபெரும் நாகரிகம் ஒன்றை உருவாக்கியிருந்த மூர்களிடமிருந்து காஸ்டைலைச் சேர்ந்த ஃபெர்டினண்டு, நகரம் நகரமாகக் கைப்பற்றிக் கொண்டிருந்தார். சாரசினியர்களின் சிறப்புமாகாணமாக இருந்த சிசிலித் தீவில் பற்பல துயர் நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. இறுதியில், இரு சிசிலிகள் என்ற நாடு ஒன்றும் உருவாயிற்று. இவ்விதமாக, ஐரோப்பா முழுதுமே ஒரு பெரும் அரசியல் மாற்றத்தில் சுழன்று கொண்டிருந்தது.



படம் 1

[படவிளக்கம் அடியில் காண்க]

1353ஆம் ஆண்டில் உத்மானியர்கள் ஐரோப்பாவில் நுழைந்தபோது தென்கிழக்கு ஐரோப்பாவும் சின்ன ஆசியாவும்

1. போலந்து
2. செடிரச்சியா
3. லிதுவேனியா
4. ஜெர்மனி
5. ஹங்கேரி
6. வியன்னு
7. பிரெஸ்பர்க்
8. கொமார்ன்
9. பூடா
10. பெஸ்த்
11. புக் நதி
12. நீஸ்டர் நதி
13. புருத் நதி
14. முஜாஸ்ஸி
15. ஒக்ஸ்கார்ப்ட்
16. மால்தேவியா
17. டிரான்ஸில்வேனியா
18. நியிஸ் நதி
19. திராவே நதி
20. ஸ்டப் பிரிஸன் பெர்க்
21. டான்யூப் நதி
22. போடர் வார்டின்
23. சாவே நதி
42. க்ரோஷியா
25. பாஸ்னியா
26. ஸாரா
27. ஸெப்னிட்ஸோ
28. ஸ்பாலாட்
29. டால்மேடியா
30. எட்ரியாடிக் கடல்
31. ரகூஸா
32. டைபின்ஜே
33. பெல்கிரேட்
34. வல்லாச்சியா
35. கரஜோவா
36. விட்டின்
37. புகாரெஸ்ட்
38. இஸ்மால்
39. டானுப் நதி
40. ஸிலிஸ்டிரா
41. ரஸ்ட்சக்
42. நிகோபோலீஸ்
43. நிஷ்
44. கொஸ்ஸோவா
45. ஸெர்விபின் பேரரசு
46. ஸ்கூடாரி
47. டுராஸ்ஸோ
48. வர்திலாவ் நதி
49. பல்கேரியா
50. ஸோஃபியா
51. கருங்கடல்
52. கான்ஸ்டான்டிநோப்பில்
53. சைறுப்
54. சிர்காஸ்ஸியா
55. லாஸ்ஸியா
56. கார்ஸ்
57. எர்ஸோரம்
58. டிரெபிஸாண்ட் பேரரசு
59. அனாட்டோலியா
60. எட்ரியாநோப்பில்
61. மாரிட்ஸா நதி
62. பிலிப்பபோலிஸ்
63. திமோடிகா
64. ஸலோன்னியப் பேரரசு
65. ஸ்கூடாரி
66. நைகோபிடியா
67. கிக்கியா
68. உத்மானிய ஆட்சிப் பகுதி
69. கரஸி
70. அனாடோலியா
71. ஸ்குரூடா நதி
72. ஸெரெஸ்
73. மொனஸ்டிர்
74. லெம்னஸ்
75. லாரிஸ்ஸா
76. யானினு
77. அர்டா
78. லெபான்ட்
79. இயோபியா
80. மைடிலினி
81. சியாஸ்
82. லெஸ்பாஸ்
83. பத்ராஸ்
84. ஏதென்ஸ்
85. கார்ப்பூ
86. மாக்கெடோனியா
87. ஸ்மிர்னு
88. கேர்மியா
89. கரமேனியா
90. கோனியா
91. ஹமித்
92. மெண்டெஸி
93. டெக்கே
94. ரோட்ஸ்
95. மத்திய தரைக் கடல்
96. ஆன்டியாக்
97. ஸைப்ரஸ்
98. டார்ஸஸ்
99. சிலாஸ்கே
100. ஸைப்ரஸ் இராச்சியம்
101. நைகோஸியா
102. ஃபமகுஸ்தா
103. கிரீட்
104. காண்டியா

அதே நூற்றாண்டில் ஆசியாவும் ஒரு பெரும் புரட்சிக்கு இலக்காயிற்று. அப் புரட்சி திடீரென்றுதான் ஏற்பட்டது. மிகவும் பயங்கரமான விளைவுகளை அது ஏற்படுத்தியது. செங்கிஸ்கான் என்ற மங்கோலியத் தலைவனின் குடிமக்கள் மத்திய ஆசியாவில் தங்குதடையின்றித் திறந்து விடப்பட்டனர் நெடுநாட்களாக அடைபட்டுக்கிடந்த வெள்ளத்தைப்போல் அக் கூட்டத்தினர் மின் விரைவில் கிழக்கில் எங்கும் பாய்ந்தனர். அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் சேதத்தை விளைவித்தனர். எங்கும் சிதைவே தலைதூக்கி நின்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே செங்கிஸ் இறந்து விட்டாராயினும், அவருடைய புதல்வர்களும் பேரர்களும் அவருடைய படையெடுப்புகளை விடாமல் தொடர்ந்து நடத்தி வந்தனர். கடந்த ஐந்நூறு ஆண்டுகளாக பாக்தாதில் சிறந்து விளங்கிய கலீஃபாக்களின் ஆட்சி ஹுலாகு கானின் கடுந் தாக்குதல்களுக்கு இரையாயிற்று. சலாஹுத்தீன் என்ற மாபெரும் ஆட்சியாளரின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்ததும் இப்பால் மம்லூக் தலைவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்ததுமான செழுமை வாய்ந்த மாநிலங்கள் அனைத்தும் நாகரிகமற்ற கூட்டத்தினரால் அச்சுறுத்தப்பட்டுக் கைப்பற்றவும் பட்டன. ஐகோனியாவின் செல்ஜூக்கிய சுல்தானைலன்றி மற்ற எவராலும் நெடுங்காலம் வரையிலும் தாக்கப்படாமலிருந்த அனட்டோலியாவின் கணவாய்களும்கூட இக் கொடிய தாக்குதல்களினால் நடுநடுங்கிக் கொண்டிருந்தன. மங்கோலியப் படை ஒன்று ஜெர்மனி நாடுவரை முன்னேறி ஹங்கேரியைச் சூறையாடி லிக்னிட்ஸ் என்ற இடத்தில் டியூட்டானியப் படைவீரர்களை விரட்டியது; பிறகு அவர்கள் மிக்க மன நிறைவுடன் நாடு திரும்பினர்.

மங்கோலியர்கள் ஓரிடத்தில் நிரந்தரமாகக் குடியிருக்க விரும்பாது நாடோடிகளாக நடமாடிக்கொண்டிருப்பதையே அதிகமாக விரும்பியது மற்றவர்கட்கு நன்மையாக முடிந்தது. இல்லையெனில், அவர்கள் பாய்ந்த இடங்களிலெல்லாம் பேரரசுகள் வேரூன்றியிருக்கக்கூடும். அலைபோல் பாய்ந்த அவர்கள் அவ்விதமே திரும்பியும் விட்டனர். எனினும், தூரக் கிழக்கில் அவர்களது படையெடுப்பின் செல்வாக்குச் சற்று நிரந்தரமாகவேயிருந்தது. மாபெரும் மங்கோலியனான செங்கிஸ் கானின் வழித்தோன்றல்கள் பல தலைமுறைகளாகச் சீனாவின் யூயென் பேரரசர்களாகவும், துருக்கிஸ்தானத்தின் கான்களாகவும், கிரிமியா கஸன் போன்ற இடங்களின் தலைவர்களாகவும் இருந்து வந்தனர். பல நூற்றாண்டுகாலமாக அவர்கள் ரஷிய நாட்டின் மீது ஆதிக்கம் பெற்று விளங்கினர்.

இவர்கள் எல்லாரும் பெருமளவும் அநாகரிக மிக்கவர்களாகவே இருந்தனர். அராபியர்கள், பாரசீகர்கள், துருக்கியர்கள் ஆகிய வர்களெல்லாம் ஒருவர்பின் ஒருவராகத் தம்முடைய புலமையை வெளிப்படுத்தி உருவாக்கிய கலீஃபாக்களின் ஆட்சிக்குட்பட் டிருந்த நாகரிகமுற்ற நிலங்களின்மேல் அம் மங்கோலியர்களால் தங்கள் நிரந்தரமான செல்வாக்கினைப் படரவைக்க முடியவில்லை.

உத்மானிய துருக்கியர்கள் என்பவர்கள் யாவர் என்பதைப் பற்றி அறிய நாம் பழங்கால வரலாற்றை ஆராயவேண்டி யிருக் கின்றது. மத்திய, மற்றும் கிழக்கு ஆசியாவின் பண்டைய வரலாற்றில் எதையும் திட்டவட்டமாக நிர்ணயிப்பதற்கில்லை. பல விவரங்கள் தெளிவற்றிருக்கின்றன. ஆனால், ஒன்றினை மட்டும் உறுதியாகக் கூறமுடியும். அதாவது, சுங்கேரியாவின் சமவெளிப் பிரதேசங்களிலும் மாபெரும் கோபி பாலைவனத் திலும் திரிந்துகொண்டிருந்த எண்ணற்ற நாடோடி இனத் தினரில் இரண்டு இனத்தினரான மங்கோலியர்களும் துருக் கியர்களும் தனிக் கவனத்திற்குரியவராவர். இவ்விரு இனத் தினரும் மாறிமாறி 'இறைவனின் கசை' என்றழைக்கப்படும் அளவிற்குக் கொடூரமாக நடந்துகொண்டனர். மங்கோலியர்கள், சீனுவை ஆண்ட ஹான் வம்சத்தின் காலத்தில் ஹியாங்நு என்ற பெயரைப் பூண்டு வையகம் முழுவதையும் தமது ஆதிக் கத்துக்குட்படுத்தி வைத்திருந்தவர்களாகவும், குறிப்பாக உய்குர்கள் (Uigurs), துருக்கியர்கள் என்றழைக்கப்பட்ட இரு மாபெரும் துருக்கிய இனத்தினரையும் தமது ஆதிக்கத்துக்குட் படுத்தி வைத்திருந்தவர்களாகவும் முதன் முதலாகக் காட்சி யளிக்கின்றனர். உய்குர்கள் இறுதியில் இவ் வாதிக்கத்தி லிருந்து விடுதலை பெற்றனர். அவர்கள், எயுச்சி (Eyuchchi) வெள்ளை ஹூணர்கள் (White Huns) என்ற பெயர்களை மேற் கொண்டு, பாக்டீரியாவிலிருந்த கிரேக்க இராச்சியத்தைச் சின்னபின்னமாக்கி பால்க் (Balk) என்ற நகரைத் தலைநகராகக் கொண்டிருந்த சிறப்புமிக்க பேரரசு ஒன்றினைத் தோற்று வித்தனர். இப் பேரரசு ஒரு புறத்தில் சாரசன்களுக்கு ஓர் எமனாகவே இருந்தது; இந்திய வரலாற்றிலும் ஒரு சிறப் பிடத்தைப் பெற்றது. ஹியாங்நு என்ற இனத்தாரின் அதிகாரம் சீனர்களால் அழிக்கப்பட்டது. ஜெனன்-ஜெனன் என்ற இனத் தாரின் தலைமையில் அது மீண்டும் உயிர்பெற்று எழுந்தது. இவ் வினத்தினர் கிழக்கில் வோல்கா நதியினின்றும் ஆரம்ப மான புல் வெளிகளைத் தம் வசப்படுத்தி வைத்திருந்தனர். ஆறும் நூற்றாண்டின் துவக்கத்தில் இவ்வினத்தினருக் கெதிராகக் கிளர்ச்சி தோன்றியது. இத் தறுவாயில் துருக்கியர்கள் என்று

அழைக்கப்பட்டவர்கள் முதன் முதலாக வரலாற்றில் தோன்று கின்றனர். இவர்கள் மஞ்சூரியாவிலிருந்து கார்பேதியன் மலைகள் வரையிலும் பரவியிருந்த பேரரசு ஒன்றை நிலைநாட் டினர். டிரான்ஸ் ஆக்ஸியானு (Trans Oxiana) என்ற பகுதியும் சிந்துநதி வரையிலும் பரவியிருந்த நிலப்பகுதியும் இப் பேரரசின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தன. தெற்கில் சிஹூன் (Sihun) அல்லது ஜக்ஸார்ட்டீஸ் (Jaxartes) வரையிலும் பரவியிருந்த இவர்களது அதிகாரம் சமானி வமிசத்தைத் தோற்றுவித்த அராபியர்களால் அழிக்கப்பட்டது. இருப்பினும், துருக்கியர்கள் புல் வெளிகளைத் தொடர்ந்து அடக்கி ஆண்டனர்; சமானியர் களுக்கும் கலீஃபாக்களுக்கும் கூடத் தேவைப்பட்ட கூலிப் படைகளையும் அவர்கள் அளித்து வந்தனர். இப் படைகளின் தலைவர்கள் இந்தக் காலத்தில் தம் தலைவர்களை விலக்கிவிட்டு, கஜினி (Ghazini) என்ற இடத்தில் சிறப்புமிக்க துருக்கிய வம்சம் ஒன்றினை நிறுவினர். இவர்களுக்குச் சற்றுப் பின்னர் வந்த கூட்டத்தினர் குராசானில் தம்மை நிலைநாட்டிக்கொண்டு, தம் தலைவர்களின்மூலம் செல்ஜூக்கியர்களின் புகழ்வாய்ந்த பேரரசை உருவாக்கினர். அத் தலைவர்கள், பதினொன்றும் நூற்றுண்டிலிருந்து பதின்மூன்றும் நூற்றுண்டு வரையிலும் ஆசியாவில் கலீஃபாக்களின் ஆட்சிப் பகுதிகளில் பெரும் பாலானவற்றை ஆட்சி புரிந்து வந்தனர்; பிறகு முஸ்லிம்களின் ஆட்சியை அனட்டோலியா மலைப்பிரதேசங்களில் பரப்பி, உத் மானியர்களுக்கு வழிவகுத்துக் கொடுத்தனர். இதற்குள்ளாக கலீஃபாக்களின் பேரரசு எங்கிலும் துருக்கியர்கள் நிறைந்திருந் தனர். கைதிகளாக நுழைந்த இவர்களுடைய இராணுவ ஆற்றல் கலீஃபாக்களின் பாதுகாவலர்களாக இருப்பதற்குப் பெருமளவும் உதவிற்று. முதலில் அடிமைகளாகவும், பிறகு இராணுவ உயர்குடி ஆட்சியினராகவும், அதன் பிறகு செல் ஜூக்கிய சுல்தான்களாகவும் துருக்கியர்கள் நாளுக்கு நாள் முன்னேறி, ஒரு காலத்தில் அராபியர்களுக்கும் பாரசீகர்களுக்கு முரியதாக இருந்த ஆக்ஸஸ் நதியிலிருந்து எகிப்தின் எல்லை வரையிலும் பைஸான்ஷியப் பேரரசின் ஆசிய எல்லைவரையிலும் பரவியிருந்த ஆட்சிப் பகுதியைத் தமதாக்கிக்கொண்டனர்.

குராசான், மற்றும் பாரசீகம் ஆகியவற்றின் செல்ஜூக்கிய சுல்தான்கள், தங்களின்கீழ்க் குறுநில மன்னர்களா யிருந்த குவாரிஸம் (Khuwarizm) அல்லது கீவா (Khiva)வின் ஷாக்களால் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டனர். இந்தக் குறுநில மன்னர் களுக்கு, ஆரல் கடலின் வடபுறத்திலிருந்த நாட்டிலிருந்து வந்த வர்களும் தற்காலத்தில் துருக்கியர்கள்என்று அழைக்கப்படுபவர்

களின் மூதாதையோருமாகிய கங்காலிகளின் ஆதரவும் கிட்டி. யிருந்தது. படிப்படியாகக் குவாரிஸத்தின் ஷாக்கள் தம் தலைவர் களின் ஆட்சிப் பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு, பதின்மூன்றும் நூற்றாண்டின் துவக்கத்தில் இஸ்லாமிய ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த ஆசியப் பேரரசைத் தமது அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவர முயன்றுகொண்டிருந்தனர். இவ்விதம் அவர்கள் தமது கனவுகளை நனவுகளாக்கிக்கொண்டிருக்கும் தறுவாயில், அவர்கள் ஒரு பேரிடிக்கு இரையாயினர். அந்த இராச்சியமே முற்றிலும் மறைந்துவிட்டது. மங்கோலியர்களின் வலிமை அப்புறமும் குறைந்து விடவில்லை. அவர்கள் இன்னமும் அநாகரிக மிக்கவர்களாகவே இருந்துகொண்டு, தமது மறைவிடத்தி லிருந்தவாறு திடீரென்று பாய்ந்து முன்னால் வந்தவர்களின் ஆட்சிப் பகுதிகளைத் தமதாக்கிக்கொள்ள ஆயத்தமாயிருந்தனர். இந்தத் தடவை பேரிடியாகத் தோன்றியவர்கள் ஆசியாவின் மங்கோலியர்களாவர். இவர்கள்தாம் இப்பொழுது மேலை நாடுகளை அச்சுறுத்தத் தொடங்கினர். படை வீரர்களாகவே பிறவி எடுத்திருந்தவர்கள் சூழ்ந்திருக்க, எண்ணற்ற நாடோடிகள் பின்தொடர்ந்து வர, செங்கிஸ்கான் என்னும் மாபெரும் மங்கோலியத் தலைவர் குவாரிஸம் ஷாவின் இராச் சியங்களைக் கைப்பற்றிக்கொண்டு, கலீஃபாக்கள் செல் ஜூக்குகள் ஆகியவர்களின் பேரரசின்மீது பாய்ந்து, ஏற்கெனவே நிறுவப்பட்டிருந்த ஆட்சிகளையெல்லாம் வேரொடு களைந்தெறி வதில் முனைந்துவிட்டார். அவருடைய படைகள் ஐரோப் பாவிலும் புகுந்துவிட்டன. நல்வசமாக, ட்யூட்டானிய வீரர்கள் தலையிட்டு அவருடைய முன்னேற்றத்தைத் தடுத்திராவிடின், மேலைய நாகரிகம் தோன்றுவதே தடைப்பட்டிருக்கும். இம் மாபெரும் படையெடுப்பின் விளைவுகளை ஒருசில இடங்களைத் தவிர மற்றெங்கும் காண்பதற்கில்லை.

மங்கோலியர்களது படையெடுப்பினால் சிதைவு ஏற்பட்ட தெனினும், துருக்கியர்கள் ஆசியாவிற்கு மேற்குப் புறத்திலிருந்த பகுதிகளுக்கெல்லாம் தொடர்ந்து தலைவர்களாக விளங்கிக் கொண்டிருந்தனர். குவாரிஸம் அரசு வீழ்ச்சியுற்றதும், அதி லிருந்து விரட்டியடிக்கப்பட்ட மங்கோலியர்கள் தெற்கு நோக்கி ஓடினர். ஒருசிலர் துர்க்கோமான்கள் என்ற பெயரை ஏற்றுப் பதினான்காம் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் பராசீக, சிரிய வரலாற்றில் மிகத் தீவிரப் பங்கு பெற்றனர். மற்றும் சிலர் மேலும் தெற்கில் திரிந்தலைந்து, எகிப்தின் மம்லூக் சுல்தான் களுடன் மோதிக்கொண்டனர். ஆங்கே அவர்கள் தோற்கடிக் கப்பட்டவுடன் வடபுறம் நோக்கி முன்னேறிச் சின்ன ஆசியாவில்

தங்களுடைய உறவினர்களான செல்ஜூக்கிய துருக்கியர் களுடன் சேர்ந்து கொண்டனர். இவ் வினத்தாரில் ஒரு பகுதி யினர் மங்கோலியப் படையெடுப்பினால் ஏற்பட்ட அதிர்ச்சிக்கு இரையாகி, இறுதியில் அனட்டோலியாவின் துருக்கியர்களுடன் சேர்ந்து கொண்டனர். அவ் வினத்தைச் சேர்ந்தவர்தாம் எர்தொக்ரல்(Ertoghrul) என்பவர்; பின்னாளில் அவ்வினம் உத்மா னியர்கள் என்னும் புகழுக்குரியதாக ஆயிற்று. அவர்கள் சின்ன ஆசியாவிலிருந்த தங்களுடைய உறவினர்களுடன் சேர்ந்து கொண்டபொழுது இஸ்லாமிய மதம் பரவியிருந்த நிலப்பகுதி களெல்லாம் நாடோடி இனத்தின்வச மிருந்தன. துருக்கியர் களே சின்ன ஆசியாவை ஆட்சி புரிந்தனர்; அவர்களேதாம் எகிப்தையும் ஆண்டனர். அவர்கள்தாம் சிரியா, மெஸ பொட்டேமியா (Mesopotamia) என்ற பகுதிகளிலிருந்த மங்கோலி யர்களின் குறுநில மன்னர்களாகப் பதவி வகித்தனர். அதே சமயத்தில் செங்கிஸ்கானின் வழித்தோன்றல்கள் பாரசீகத்து கலீஃபாக்களின் ஆட்சியை மேற்கொண்டு விட்டனர்; வனப் பிரதேசங்களான வோல்கா, யூரல் மலைத் தொடர்கள், ஆக்ஸஸ் நதிப் பிரதேசம், டார்ட்டாரே பாலைவனப் பிரதேசங்கள் ஆகிய வற்றிலெல்லாம் பூரண அதிகாரத்தைப் பெற்று, மத்திய ஆசியா வில் பரவி, சீனாவில் ஒரு பேரரசை நிர்மாணித்தனர்; பிற்காலத் தில் இந்தியாவில் மொகலாயர்கள் என்னும் புகழுடன் விளங்கிய மங்கோலியர்களின் ஆட்சிக்கு வழிவகுத்துக் கொண்டிருந்தனர்.

மத்தியதரைக் கடலோரங்களில் அமைந்திருந்த நாடுகளுக் கெல்லாம் துருக்கிய இனத்தினரே ஆட்சியாளர்களாக விளங்க மக்கள் பெரும் பாக்கியம் பெற்றிருந்தனர் போலும்! மங்கோலி யர்கள் அங்கு வரு முன்பே துருக்கியர்கள் வந்திருந்தனர். எகிப்தின் மம்லூக் அரசர்களின் நாளங்களில் துருக்கிய உதிரமே ஓடிக் கொண்டிருந்தது. அவர்கள் தங்களது எல்லைகளைப் பாழடித்துக் கொண்டிருந்த மங்கோலிய அலைகளைத் தடுத்துச் சமாளித்துக் கொண்டிருந்தனர். ஐக்கோனியம் (ரூம்) (Iconium) என்ற இடத்தைச் சார்ந்த துருக்கிய சுல்தான்கள் அநாகரிக மிக்கவர்களின் தாக்குதல்களை எதிர்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் வாரிசுகளான உத்மானிய துருக்கியர்கள் மங்கோலி யர்களைச் சின்ன ஆசியாவிலிருந்து சிறிது சிறிதாக விரட்டி, மத் தியதரைக்கடற்பகுதியின் கிழக்கு மற்றும் தெற்குக் கரையோரங் களைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். மேலும், செங்கிஸ் கானின்மரபுவழி வந்தவர்களையும் கிரீமியாவில் தோற்கடித்தனர். இச் சாதனைகளை யெல்லாம் நிறைவேற்றிவிட்டு, உத்மானிய துருக்கியர்கள் பாக்தாதில் ஹூலாகுவின் (Hulagu) அரியணை

மீதேறியே அமர்ந்தும் கொண்டனர். நெடு நாட்களாகவே ஹுலாகு என்பவர் செல்ஜூக்குகளின் ஆட்சிப் பகுதிகளையெல்லாம் அடக்கி ஆண்டு கொண்டிருந்தார். மங்கோலியர்கள் வீணுகக் கைப்பற்ற முயன்ற சாரசன் இராச்சியங்கள் துருக்கியர்களின் கைக்கு வந்து சேர்ந்தன. அனட்டோலியாவை ஆண்டு கொண்டிருந்தவர்களுக்கும் புதிதாக வந்த படையெடுப்பாளர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலின் விளைவாகத் தோன்றிய வர்கள்தாம் உத்மானிய துருக்கியர்களாவர்.

இவ்விதமாகத் தோன்றிய உத்மானியர்களைப்பற்றிய அடிப்படைச் சான்றுகள் வரலாற்றறிஞனுக்கு மிக எளிதாகக் கிட்டக் கூடியனவாக இருக்கவில்லை. கான்ஸ்டான்டிநோப்பிலைக் (Constantinople) கைப்பற்றுவதற்கு முற்பட்ட காலத்திற்கான குறிப்பேடுகள் எதையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. அவர்களுடைய மிகமுந்திய வரலாற்றறிஞர்களே பதினைரும் நூற்றாண்டின் முடிவுக் காலத்திற்குரியவர்களாவர். ஒரு சிலர் பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தோன்றினர். ஆகவே, உஸ்மான்லிகள் (Osmanlis) என்றழைக்கப்பட்ட எளிய மக்களுடைய கட்டுக்கதைகளையும் மரபுகளையும் விஞ்ஞான முறையில் வரையறுத்து ஒன்றுக அமைக்க முடியவில்லை. அக் கட்டுக்கதைகளை அவர்கள் எவ்விதத் தயக்கமுமின்றி நம்பினர். அவர்கள் எவ்விதம் முளைத்தனர் என்பதைப்பற்றிய நம்பத்தக்க விவரங்கள் எதையும் பைஸான்ஷியர்களும் கொடுக்கவில்லை. ஏனெனில், அவ் விவரங்களைப் பெறுவதற்கான வழிகள் எதுவும் அவர்களுக்கும் தென்படவில்லை. இடைக்கால ஐரோப்பிய வரலாற்றாசிரியரின் சான்றுகள் மதிப்புமிக்கவையானாலும், அவை ஐரோப்பிய நாகரிகத்தை அச்சுறுத்த ஆரம்பித்த உஸ்மான்லிகளைப்பற்றிக் கிறித்தவ உலகம் கொண்டிருந்த கருத்துக்களைப் பிரதிபலிப்பவையாகவே இருந்தன.

இருப்பினும், இக் கட்டுக்கதைகளைப் புறக்கணித்துவிடவும் முடியாது. நம்பத் தக்கதும் உறுதியானதுமான விவரங்கள் கிடைக்கவில்லையாயின், இக் கட்டுக்கதைகளையும் மரபுகளையும் மிக விழிப்புடன் ஆராயவேண்டி நேரிடுகிறது. ஒரு மக்களினத் தோற்றத்தைப்பற்றி ஆராய்கையில், இக் குறிக்கோள் மிகவும் முக்கியமெனத் தென்படுகின்றது. எந்த ஓரினமும் தனது தோற்றத்தைப்பற்றிய குறிப்புகளை விட்டுச் செல்லவில்லை. ஒரு மக்களினத் தோற்றம் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்காததால், பொது வரலாற்றில் அவ் வினம் அதிகமாகக்

குறிப்பிடப்படுவதில்லை. அவர்களுடைய சாதனைகள் முக்கியத்துவம்பெற்று விளங்கினால் மட்டுமே வரலாற்றறிஞர்கள் தங்களது கவனத்தை அவர்கள்மீது பாயவிடுகின்றனர்.

ஆகவே, உஸ்மான் அல்லது உத்மான் என்ற பெயரைக் கொண்டிருந்தவரின் பெயரையே தாமும் மேற்கொண்டிருந்த இனத்தினர் யாவர்? மற்ற அனட்டோலிய துருக்கியர் கூட்டங்களினின்றும் இவர்கள் எவ்வாறு வேறுபட்டிருந்தனர்? உத்மானிய வாழ்க்கை வரலாறு தொடங்கிய காலத்தில் அவ்வினத்தினர் நாட்டுணர்ச்சி எதையாவது பெற்றிருந்தார்களா? அவர்களைப்பற்றிய வரலாறு ஏதாவது உண்டா? ஒரு குறிப்பிட்ட, திட்டவட்டமான குறிக்கோளைக் கொண்டு அவர்கள் ஏதாவது இராச்சியத்தை நிர்மாணித்தார்களா? வியக்கும் வகையில் அவர்கள் வளர்ச்சி பெற்று முன்னேறியதற்குக் காரணங்கள் இருக்கின்றனவா? இவர்களைப்பற்றி ஆராய்கையில் இக் கேள்விகளெல்லாம் இயல்பாகவே எழுகின்றன.

செங்கிஸ்கானின் படையெடுப்பின் விளைவாகக் குரோசானிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட துருக்கியர்கள் பாரசீகத்தில் தொடர்ந்து தங்கியிருக்க முடியாத நிலையில், தம் தலைவரான சுலைமான் ஷா (Sulaiman Shah) என்பாரின் தலைமையில் ரூம் அல்லது ஐக்கோனியத்தை நோக்கி நடக்கலாயினர். அத் தறுவாயில் ரூமை முதலாம் அலாவுத்தீன் (Alauddin I) என்பவர் ஆளத் தொடங்கியிருந்தார். சுலைமான் ஷாவின் தலைமையில் ரூமுக்கு வந்துகொண்டிருந்த அந்த ஐம்பதினாயிரம் நாடோடித் துருக்கியர்கள் பல ஆண்டுகளாக எர்ஸிரம் (Erzerum) மற்றும் எர்ஸின்ட்ஜியான் (Erzindjian) ஆகிய இடங்களில் திரிந்து கொண்டிருந்து, அங்கிருந்த மக்களைச் சூறையாடி வந்தனர். இறுதியில் சுலைமான் ஷா தமது தாயகத்திற்கே திரும்பிவிட்டார். அவ்விதம் திரும்புகையில், அலெப்போ (Aleppo) மாவட்டத்தின் மூலமாக வர அவர் எத்தனித்தார். ஜபர் (Djaber) என்ற இடத்திற்கருகில் அவர்கள் யூப்ரட்டீஸ் நதியைக் கடந்து முன்னேற விரும்பினர். நதியை எளிதாகக் கடக்கக் கூடிய ஒரு துறையை சுலைமான் தேடிக் கொண்டிருந்தார். நதிக் கரையில் பாறை மிகுதியாக இருந்ததனால், அவர் ஏறிச்சென்ற குதிரை கால் இடறியது. அத்துடன் சுல்தான் சுலைமானும் நழுவி நதியில் விழுந்து இறந்தார். அவருடைய இவ்விதச் சோக முடிவு விதியின் எச்சரிக்கையாகும் எனக் கருதப்பட்டது. இஃது இறைவனின் கட்டளையைப் போன்றிருந்தது. ஒருசில துருக்கியர்கள் அவ்விடத்திலேயே குடியேறிவிட்டனர். சுலைமானைப் பின்தொடர்ந்து

வந்தவர்களுக்கிடையே பிளவு ஏற்பட்டது. அவர்களில் ஒரு சிலர்—சிரியாவின் துர்க்கோமானியர்கள் என்றழைக்கப்பட்டவர்கள்—வனப் பிரதேசங்களுக்குள்ளே சென்றனர். மற்றும் சிலர் ரூமுக்குச் சென்றனர். அவர்களுடைய வழித்தோன்றல்கள் இன்றும் அவ்விடத்தில் குடியிருக்கின்றனர்.

சுலைமான், தாம் இறக்கும் பொழுது சொங்குர்ட்டிஜின் (Sonkurtijin) குன்தோக்து (Gundogdu) எர்தொக்ரல் (Erthogrul) மற்றும் தண்டார் (Dundar) என்னும் நான்கு மகன்களை விட்டுச் சென்றார். துருக்கியர்களுள்ளே ஒருசிலர் இந்த நான்கு சகோதரர்களையும் பின்தொடர்ந்து மீண்டும் ரூமுக்கே திரும்பி, யூப்ரட்டீஸ் நதியின் தோற்றுவாய்க்கு வந்து சேர்ந்தனர். எர்தொக்ரலும் தண்டாரும் நானூறு குடும்பத்தினருடன் அங்கே தங்கி விட்டிருக்கையில், மற்ற இரண்டு சகோதரர்களும் தமது தாயகம் திரும்பினர். எர்தொக்ரல் ரூமில் மீண்டும் முன்னேறி கரட்ஜடக் (Karadjadagh) என்ற மலையின் அடிபிலிருந்த அங்கோரா (Angora) என்ற இடத்துக்கருகாமையில் குடியேறினர்.

எர்தொக்ரல் அவருடைய இனத்தாருடன் ரூமுக்குச் சென்று கொண்டிருக்கையில், சுல்தான் அலாவுத்தீன் தம் பகைவர்களுடன் கடும் போரில் மூழ்கியிருப்பதைக் கண்டார். அவர்கள் அருகில் வந்தபொழுது சுல்தான் தம் பகைவர்களான டார்ட்டார்களிடம் பலத்த அடி வாங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். தமது வரலாற்றினை வெளிப்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது என்று மகிழ்ச்சியுற்ற எர்தொக்ரல் நூற்றுக்கணக்கிலிருந்த தமது சிறந்த படை வீரர்களைக் கண்டு முழங்கினார்: 'நண்பர்களே! நாம் இப்பொழுது போர்க் களத்திற்கே வந்து கொண்டிருக்கின்றோம். நாம் வாளை ஏந்திக் கொண்டு நிற்கின்றோம். பெண்டிர்களைப் போல் இவ்விடத்திலிருந்து தப்பி நாம் தொடர்ந்து முன்னேறுவது என்பது ஆண்மைக்கு உகந்ததாக இருக்க முடியாது. இவ் விருவர்களில் எவரையேனும் நாம் ஆதரிக்க வேண்டும். வெற்றி பெறுபவர்கள், தோல்வியடைந்து கொண்டிருக்கிறவர்கள் ஆகிய இவ்விருகட்சியில் நாம் யாரை ஆதரிப்பது?' அங்கு இருந்தவர்கள் அவ் வினவிற்கு இவ் விதம் விடையளித்தனர்: 'தோற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு உதவுவது என்பது எளிதன்று. நாமே பலவீனமுள்ளவர்களாயிருக்கின்றோம். வெற்றியாளர்களோ வலிமை மிக்கவர்களாயிருக்கின்றனர்.' எர்தொக்ரல் அதற்குப் பின்வருமாறு விடையளித்தார்: 'நீங்கள்

பேசியது வீரமிக்க ஆண்களின் பேச்சன்று. தோல்வியுற்றுக் கொண்டிருப்பவர்களை ஆதரிப்பதே ஆண்மையின் செயலாகும்.' இதைக் கேட்ட அவ் வீரர்கள் மங்கோலியர்களின்மீது பாய்ந்து அவர்களை ஓடோடச் செய்தனர். எதிர்பாரா வகையில் தமக்கு எர்தொக்ரலிடத்திருந்து உதவி வந்ததைக் கண்ட அலாவுத்தீன் அத் துருக்கியருக்கு நன்றி பாராட்டி, அவர்களின் தலைவருக்கு ஒரு சிறப்பு அங்கியையும் அவருடைய நண்பர்களுக்குப் பற்பல பரிசுகளையும் வாரி வழங்கினர் சுல்தான் மேலும் தமது நன்றியைத் தெரிவிக்கும் வகையில், செல்ஜூக்கியர்களின் கீழ் மானியமாகப் பெற்றிருக்க எர்தொக்ரலுக்கு நிலத்தையும் அளித்தார். அம் மானியத்தில் சுகுத் (Sugut) என்ற மாவட்டமும் அடங்கியிருந்தது. அது புருஸாவுக்குத் தென்கிழக்கில் 96 கி.மீ. தூரத்திலிருந்தது.

அலாவுத்தீனின் தேய்வுற்றுக்கொண்டிருந்த ஆட்சிக்கு எர்தொக்ரலும் அவருடைய படை வீரர்களும் விரும்பத்தக்க ஆதரவாயிருந்தனர். பிறகு ஒரு சிறிய பைஸான்ஷியப் படையுடன் ஏற்பட்ட மோதலில் துருக்கியர்கள் மீண்டும் வெற்றி கண்டனர். அதையொட்டி சுல்தான் அலாவுத்தீன் தமது ஆட்சிப் பகுதியின் எல்லையில் பெயரளவிற்கே தமது ஆட்சிக்குட் பட்டிருந்த பகுதியை எர்தொக்ரலுக்கு அன்பளிப்பாக வழங்கினர். அக் காலந் தொட்டு எர்தொக்ரல் தமக்கு அளிக்கப் பட்டிருந்த நிலப்பகுதியில் குறிப்பிடத்தக்க எந்த நிகழ்ச்சியுமின்றித் தமது இனத்தாரின் தலைவராக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார். குரோசானை விட்டு வந்து ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகட்குப் பிறகு 1288-ல் அவர் உயிர் நீத்தார்.

கி.பி. 1258-ல் சுகுத்தில் எர்தொக்ரலுக்கு உத்மான் அல்லது உஸ்மான் என்ற மகன் ஒருவன் பிறந்தான். இந்த உத்மான் என்பவர்தாம் அவ் வமிசத்திலேயே தங்குதடையின்றிச் சுதந்திரத்தை வலியுறுத்திய முதல் அரசராவார். ஆகவேதான் அவருடைய வழித்தோன்றல்கள் 'உத்மான்கள்' என்ற பெயரையே தாமும் சூட்டிக்கொண்டனர். அதிலிருந்து திரிபடைந்த சொல்லே 'ஆட்டொமன்' (Ottoman) என்னும் பெயராகும். அப் பெயரில் அவர்கள் அளவிலாப் பெருமை கொண்டனர். போர் புரியும் ஓர் இனத்தினரின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான எல்லாத் தகுதிகளையும் அவர் பெற்றிருந்ததனால், அவரையே அவர்கள் எர்தொக்ரலின் மறைவிற்குப் பிறகு தமது அரசராகத் தேர்ந்தெடுத்தனர். ஆகவே, இவரே உத்மானிய

பேரரசை நிலைநாட்டியவர் என்று அழைக்கப்படுகின்றார். தம் தந்தையைவிட இவர் பேரவா மிகுந்தவராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கினர்.

இருந்தபோதிலும், அந்தக் காலத்தில் இவருடைய குடும்ப அந்தஸ்து அவ்வளவு உயர்வாக இருந்தது என்று கூறுவதற்கில்லை. பதினறு வயதடைந்திருந்த இவர், ஷேக் இதப்அலீ (Sheik Idebali) என்ற மகான் ஒருவருடைய அழகு வாய்ந்த மகளான மல்காதூன் என்பவளைக் காதலிக்க, கரமானியாவிலேயே பெரும் புகழ்பெற்று விளங்கிய அம் மகான், உத்மானின் குடும்பம் மிகச் சமீப காலத்தில்தான் அப் பகுதிக்கு வந்துள்ளது என்ற காரணத்தை முன்னிட்டும், சமூகத்தில் உயர் அந்தஸ்து எதுவும் பெற்றிருக்கவில்லை என்ற காரணத்தை முன்னிட்டும் தம் மகளை அவ் விளைஞனுக்கு மணம் செய்துவைக்கத் தயங்கினர். உயர் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்கள் பலர் அந்த யுவதியின் கையை நாடினர். ஆனலும் விரைவில் இதப்அலீ அவர்கள் ஒரு கனவினல் தெளிவுற்று, தம் மகளை உத்மானுக்குத் திருமணம் செய்துவைக்க இசைந்தார். கட்டுக் கதைகள் குறிப்பிடும் அக் கனவாவது: இதப்அலீயின் மார்பிலிருந்து ஒரு பூரண சந்திரன் உதித்து மேலே வருகின்றன். அச் சந்திரன் உத்மானின் மார்பில் சாயத் தொடங்குகின்றன். பிறகு அவன் மார்பிலேயே வீழ்ந்து மறைந்து விடுகின்றன். பிறகு இதப் அலீயின் இடுப்பிலிருந்து ஒரு பெரிய மரம் எழுகின்றது. வளர்ந்து கொண்டேயிருக்கும் அம் மரம் பல கிளைகளை விடுகின்றது. வானத்தை எல்லாம் மூடும் வகையில் அதனுடைய கிளைகள் எங்கும் பரவியிருக்கையில், குடையைப்போல் பரவி இருந்த அக் கிளைகளைக் காக்கஸஸ் (Caucases) அட்லாஸ்(Atlas) டாரஸ் (Tarus) ஹீமஸ் (Haemus) என்ற நான்கு மலைகள் தாங்கி நிற்கின்றன. அம் மரத்தின் வேர்களினின்றும் டைக்ரிஸ் (Tigris) யூஃப்ரட்டீஸ் (Euphrates) டான்யூப் (Danube) நைல் (Nile) ஆகிய நான்கு நதிகள் அதிவேகமாகப் பாயத் தொடங்குகின்றன. நிலங்கள் பயிர்களினல் நிறைந்து கிடக்கின்றன. மலைச் சரிவுகளில் காடுகள் அடர்த்தியாக அமைந்துள்ளன. எங்கும் நீரூற்றுகளும், மலர்ச்செடிகளும் காட்சி யளிக்கின்றன. சம வெளிகளில் கம்பீரமான நகரங்கள் காணப்படுகின்றன. கோயில்களும் கோபுரங்களும் வானளாவி நிற்கும் மாட மாளிகைகளும் தென்படுகின்றன. அவற்றின் உச்சியில் சந்திரன் மிகப் பிரகாசத்துடன் விளங்குகின்றன. கோபுரங்களிலிருந்து மூ'அத்தினுடைய குரல் கேட்கின்றது. சுழில்மிக்க அக் காட்சியைக் கிழித்துக்கொண்டுவரும் அக் குரல் குயில்களின்

இனிய பாடலுடன் கலந்துகொள்கிறது. திடீரென்று ஒரு புயற் காற்று அடிக்கின்றது. வாள்முனை போன்ற நுனிகளைக்கொண்ட இலைகளை நகரங்கள்பால் (குறிப்பாகக் கான்ஸ்டான்டிநோப்பில் பால்) திருப்புகின்றது. இரு கடல்களும் இரு கண்டங்களும் சேரும் இடத்தில் அமைந்திருக்கும் அந் நகரம் ஒரு மோதிரத்தில் இரு விலை உயர்ந்த கற்களுக்கு நடுவில் பிரகாசிக்கும் வைரத்தைப் போல் ஒளிர்கின்றது. உலகப் பேரரசையே சுட்டிக் காட்டுவ தாக இருக்கும் அம் மோதிரத்தை உத்மான் தமது விரலில் அணிந்துகொள்ளப் போவதாகக் கனவு காண்கின்றார். திடீரென்று எழுந்து அது வெறும் கனவு என்பதை உணர்கிறார்.

உத்மான் தாம் கண்ட கனவை இதப்அலீக்குத் தெரி விக்கிறார். உத்மானுக்கும் மல்காதூனுக்கும் பிறக்கப்போகும் குழந்தைகளின் வருங்காலம் பெருமதிப்பும் அதிகாரமும் புகழும் கொண்டதாகவே இருக்கப்போகின்றது என்பதையே அக் கனவு தெளிவுபடுத்துகின்றது என்று உணர்ந்த அம் மகான் அவ்விருவருக்கும் விரைவிலேயே திருமணம் செய்து வைத்தார்.

ஒரு பேரரசை உருவாக்கியவருடைய இக் கனவிற்கு ஆசிரியர்கள் பெரும் முக்கியத்துவம் அளிப்பர். வருங்காலத்தில் உத்மானுடைய வழித் தோன்றல்கள் கட்டுப்பாடற்ற செய லாற்றலைக் கொண்டிருந்ததை அவருடைய பெயர் சுட்டிக் காட்டுகின்றது என்றும் அவர்கள் நினைப்பர். உத்மான் என்ற சொல்லுக்கு 'எலும்புகளை முறிக்கின்றவன்' என்பது பொருளாகும். பொதுவாக, ராஜ பருந்துகள் என்றழைக்கப்பட்ட ஒருவகைப் பட்ட பெரிய கழுகுகளுக்கும் இப் பெயர் இடப்படுகின்றது. கிழக்கில் இது இறைமையின் சின்னமாக விளங்குகிறது.

உத்மானுடைய அழகுக்கும் ஆளுமைக்கும் அவரை எல்லா எழுத்தாளர்களும் புகழ்கின்றனர். அவர் உடல்வலிமை மிக்க வராகவும் திறம்படைத்தவராகவும் விளங்கினர். கருநிறமான அவருடைய தலைமுடி, தாடி, புருவங்கள் ஆகியவை யெல்லாம் 'காரா' அதாவது, கறுநிற உத்மான் என்ற பெயரை அவருக்கு வாங்கிக் கொடுத்தன.

அவர் நிகழ்த்திய படையெடுப்புகள் அவரை சுல்தான் ஓனி (Sultan Oeni) என்ற இராச்சியத்திற்கப்பால் கொண்டு சென்றன. அவர் தமது ஆட்சிப் பகுதிகளை எர்மெனி மலைப் பிரதேசங்கள், சுல்தானேனி ஆகிய பகுதிகளிலிருந்து ஒலிம்பஸ் வரையிலும் பரப்பினர். ஒலிம்பஸ் மலை புருஸாவைக் கைப்பற்று

வதற்கு ஏதுவாக இருந்தது. உறுதியானதும், ஒரு சார்பற்றது மான நீதிமுறை அவருடைய அடிப்படைக் கொள்கையாக இருந்தது. அதுவே அவருடைய அதிகாரம் பரவுவதற்கும் காரணமாயிற்று. பதின்மூன்றும் நூற்றுண்டின் முடிவுக்குள்ளாக செல்ஜூக்குகளின் வம்சம் இரண்டரை நூற்றுண்டுகளுக்குப்பிறகு குலைந்தது. உள்நாட்டுப் போர்கள் சதிகள் ஆகியவற்றின் விளைவாக ருமிலிருந்த செல்ஜூக்குகளும் மிகத் தீவிரமாகப் பாதிக்கப்பட்டனர். அவர்களுடைய இராச்சியமும் பத்துச் சிறு பகுதிகளாகத் துண்டிக்கப்பெற்றது. அதில் சுல்தானேனி என்பது ஒன்றுகும். தம்முடைய இனத்தினரான செல்ஜூக்கிய துருக்கியர்களுடைய ஸ்தானத்தை உத்மானிய துருக்கியர்கள் பெறுவதற்குக் காலம் நெருங்கிவிட்டது. இருந்தபோதிலும், பல ஆண்டு காலங்களுக்குப் பிறகுதான் உத்மானிய வம்சத்தினர் செல்ஜூக்கியர்களின் நாடுகளைக் கைப்பற்ற முடிந்தது.

இந்த நாடுகளின்மீது உத்மான் தமது கவனத்தை உடனடியாகத் திருப்பாது, கிரேக்கர்களின்மீது திருப்பி, எனிஷெர்ரைக் (Yenisher) கைப்பற்றிக்கொண்டார். மற்றும் பல கிரேக்க நகரங்களைக் கைப்பற்றுவதற்கு இந்த இடம் மிகவும் சாதகமாக இருந்தது. இவ் விடங்களிலெல்லாம் இவர் கிரேக்கர், துருக்கியர்கள், கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் எவராயிருப்பினும் யாவருக்கும் ஒருசார்பற்ற ஒத்த நீதியையே வழங்கியதனால், இவருடைய புகழ் எங்கும் பரவிற்று; மற்றும் பல இடங்களைக் கைப்பற்றுவதற்கும் அது பெரும் ஆதரவாக இருந்தது.

கிரேக்க நகரங்கள், மற்றும் அரண்கள் பலவற்றைக் கைப்பற்றியதற்குப் பிறகு உத்மான் தம் படைகளைக்கொண்டு புருஸாவைத் தாக்கினார். பத்தாண்டுக்காலம் அதை முற்றுகையிட்டார். முற்றுகையின்போது அவர் கையாண்ட முறை டோரியன்கள் (Dorians) பழங் கிரேக்க வரலாற்றில் கையாண்டதைப் போன்றே இருந்தது. அதாவது, புருஸாவுக்கு அருகாமையில் மிக உறுதியான கேந்திரம் ஒன்றை நிலைநாட்டி, புருஸாவின் சுற்றுப்புறங்களிலிருந்த நிலங்களைச் சூறையாடி, நகருக்குச் செல்லும் போக்குவரத்துக்களைத் துண்டிப்பது என்பதாகும். இவ்விதமாக, முற்றுகையிடப்படுபவர்களைக் களைப்புறச் செய்வதே அவரது நோக்கமாகும். இறுதியில் 1326-ல் புருஸா நகரம் அடிபணிந்தது. இந்த மாபெரும் வெற்றி உத்மானின் மகனை ஓர்கானால் பெறப்பட்டதாகும். அவ் வெற்றியைப்பற்றிச் செவியேற்ற பிறகே உத்மான் உயிர் நீத்தார். அவருடைய சடலம் அவருடைய விருப்பத்தின்படியே புருஸாவில் அடக்கம்

செய்யப்பட்டது. புருஸா நகரம் வளர்ந்துகொண்டிருந்த துருக்கிய நாட்டின் தலைநக ராயிற்று. ஒரு மாபெரும் அரசுக்கு அடிகோலிய சுல்தான் இங்குத்தான் அடக்கமாயிருக்கின்றார். அவருடைய உடல் கான்ஸ்டான்டிநோப்பில் நகரில் இன்றும் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அவருக்குப் பின்னால் வந்த பல சுல்தான்கள் அனைவரும் அவருடைய வாளை ஏந்தித் தான் முடிதரித்துக்கொண்டனர்.

ஒரு பெரும் இராச்சியத்தை, ஒரு பேரரசை உருவாக்க உத்மான்தாம் முதன் முதலாகக் கனவு கண்டார். அக் கனவை நனவாக்கினர். கட்டுக்கடங்கா ஆசியர்களைப் பழைய புதிய ஐரோப்பிய இனங்களுடன் இணைத்து ஒரு புதிய மக்கள் இனத்தையே அவர் உருவாக்கினர். அறுநூறு ஆண்டு காலம் வரை இடையருமல் ஆண்டுவந்த அரச குடும்பத்தையும் அவர் தோற்றுவித்தார். அவருக்கிருந்த நெருக்கடியான சூழ்நிலையில் இப் பெரும் சாதனைகளை வைத்துப் பார்க்கையில், ஓர் அரும் பெரும் குணவியல்பும் ஒரு மாபெரும் குறிக்கோளும் இணைந்து ஓர் உருவத்தைத் தோற்றுவிக்கின்றதை நாம் உணரக்கூடும். இவருடைய குணவியல்பும் ஆளுமையும், ஆஞ்சு மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் மன்னராயிலங்கிய வில்லியத்தை நமக்கு நினைவூட்டுகின்றன.

கவர்ச்சிமிக்க ஆளுமையைப் படைத்தவர் அவர். அவரிடம் பணியாற்ற யாவரும் விரைந்தனர். மைகேலோக்லி மற்றும் மார்கோ ஸொக்லி என்ற குடும்பங்கள் உத்மானின் கிறித்தவத் துணைவர்களாக இருந்தவர்களால் உருவாக்கப்பட்டவை. அவருடன் அவர்கள் நெடுநாட்களாகத் தொடர்புகொண்டிருந்து முஸ்லிம்களுமாயினர். மைகேல், மார்கோ, உத்மானின் மகன் உட்பட மற்றும் பல தலைவர்கள் இராணுவச் சாதனைகளில் உத்மானையும் மிஞ்சியிருந்தனர். ஆனாலும், அவர்கள் அத் தலைவருக்காகக் கடுமையாக உழைத்தனர். அவர்களிடையே இருந்த சமரசமும் பற்றுதலும் பைஸான்டியப் படைத்தலைவர்களிடத்தும் காட்டலான் படைத் தலைவர்களிடத்தும் நிலவிய நிலைக்கும் முற்றிலும் வேறுபட்டிருந்தன. மிகச் சாதாரணத் தலைவர்கள் செய்வதுபோல் அவர் தம்முடன் போட்டியிடுபவர்களையும் தம்மிடம் பகைமை கொண்டிருந்தவர்களையும் வேரோடு களைந்தெறிந்து விடவில்லை. அவர் தம்மையும் தம்முடன் இருந்த மற்றவர்களையும் கட்டுப்படுத்தியே வைத்திருந்தார். எல்லாவற்றையும் மிகவும் பொறுமையுடன் ஆராய்ந்து, கவனித்துச் செய்தார். அடிகோலிட்டவரை அடிகோலிலிருந்தே நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

தவிரவும், அவருக்கு ஒரு குறிக்கோளும் இருந்தது. இஸ்லாமிய சமயத்தை முன்னேற்றிய அப் பெருமக்கள் மறைந்து போயினர். அலை பின்வாங்கிற்று. ஆசியாவைப் புறமதத்தினர் ஆண்டுகொண்டிருந்தனர். ஆபிரிக்கா தூக்கத்தில் மூழ்கிக் கிடந்தது. 1309-ல் இஸ்லாமியர்கள் முதன் முதலாகத் தோல்வியைக் காண்கின்றனர். அந்த நிலையில் உத்மான் அச் சமயத்திற்குப் புத்துயிர் அளித்தார்; ஆர்வத்தைக் கொடுத்தார். அவருக்கு முன்பிருந்த அதே பெயரைக்கொண்ட கலீஃபா மற்றும் இதர கலீஃபாக்களின் அவதாரமாகவே அவர் தென் பட்டார். தம்மை நேர் வழியில் கொண்டுசெல்லும்படி அவர் இறைவனை வணங்கியதிலிருந்து, அவருடைய குணவியல்பும் இறைப் பக்தியும் புலனுகின்றன. அவர் சமய ஆர்வத்தினுல் ஊக்குவிக்கப்பட்டு, சமயத்தைத் தமது முதல் குறிக்கோளாகவும் முதன்மை நோக்கமாகவும் கொண்டிருந்தார் என்ற நோக்கில், அவரைச் சமய வெறியாளர் என்று கொள்ளலாம். ஆனுல், அவர் பிற சமயங்களுடன், கிறித்தவர்களுடன், கிரேக்கத் திருச் சபையினரிடம் பொறுமையில்லாமல் நடந்து கொள்ளவில்லை. அவ்விதக் கொள்கையை அவர் மேற்கொண்டிருந்திருப்பாராயின், அவருக்கு வெற்றியே கிட்டியிருக்காது; உத்மானிய இனமும் உலகத்தில் தோன்றியிருக்காது

ஒரு புதிய இராச்சியம் உருவாயிற்று. ஒரு புதிய இன மக்கள் தோன்றினர். இவ்வளவு இருந்தும், உத்மான் 'சுல்தான்' என்ற பட்டத்தைச் சூட்டிக்கொள்ளவில்லை. சின்ன ஆசியாவில் இருந்த சிறிய இராச்சியங்களின் ஆட்சியாளர்களைப் போலவே அவரும் ஓர் அமீராக இருந்தார். ஒரு பெரும்படை வீரராகவும் அவர் விளங்கவில்லை. மாபெரும் படையெடுப்பு எதையும் நிகழ்த்துவதற்கான வாய்ப்பும் அவர் பெறவில்லை. ஆனுலும், அவர் ஒரு துணிகர வீரர்; தம்மைப் பின்பற்றுவோரை மிக அசாதாரணமாக ஊக்குவிப்பதற்கான தன்மையைப் படைத்திருந்தவர். தமது இராச்சியங்களை விசாலப்படுத்துவதில் அவர் அயராமல் அக்கறை கொண்டிருந்தார். அறிவும் திறனும் படைத்த நிர்வாகியாகவும் அவர் விளங்கினர். எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்த அவர் ஆன்மிகத்திலும் உயர்ந்தவராகத் தென்பட்டார். போர்க் கொள்ளைப்பொருளை அவர் தமது வீரர்களுக்கிடையே பங்கிட்டுக்கொடுத்தார்; அதில் ஒரு பகுதியை ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் ஒதுக்கி வைத்தார்.

அவர் குணத்தில் கொடூரத்தின் சாயலே கிடையாது என்பதற்கில்லை. ஒரு சமயத்தில், அவர் தம் போர்க் குழு

வினருக்குத் தமது சுற்றுப்புறத்தாரின்மீது நடத்தவேண்டிய படையெடுப்புகளைப்பற்றி எடுத்துக் கூறிக்கொண்டிருக்கையில், அவருடைய வயது முதிர்ந்த சிற்றப்பரான டண்டார் என்பவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கையில் உத்மான் சினமுற்று, அவருடன் வாதாட விரும்பாது, அவர்மீது அம்பெய்து அவரை அவ்விடத்திலேயே கொன்றுவிட்டார். ஆனால், இச் செயலை நாம் இக்கால நிலையிலிருந்து ஆய்வது நல்லதன்று. உத்மானின் காலத்திய சூழ்நிலைகளை மனத்தில்கொண்டு பார்ப்போமேயானால், இது ஒரு பெரும் குற்றமில்லை என்பதை நாம் உணரலாம்.

3. ஓர்கான் (1326–1359)

(Orchan)

உத்மான் மரணப் படுக்கையிலிருந்த பொழுது தமது மகன் கள் இருவரில் இளையவரான ஓர்காஸைத் தமது வாரிசாக நியமித் தார். அப்பொழுது நாற்பத்திரண்டு வயதினராக இருந்த இவர் தம் தந்தையின் கண்காணிப்பிலேயே வீரஞ்ச வளர்ச்சி பெற்றார்; பல படையெடுப்புகளில் தமது திறமையைக் காட்டி யுள்ளார். குறிப்பாக, புருஸா நகரைக் கைப்பற்றுகையில் இவருடைய வீரமும் தீரமும் புகழத்தக்கனவா யிருந்தன. மூத்த சகோதரரான அலாவுத்தீன் படை வீரராகத் திகழவில்லை. அறிவில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த இவர் சட்டம் சமயம் இவற்றின்மீது அதிகப் பற்றுக் கொண்டு இதப்அலீயின் மாணாக்க ராகவே வாழ்க்கை நடத்தி வந்தார்.

ஓர்கான் தம்முடைய தந்தையின் கட்டளையின்படி, தம் அண்ணனையும் மீறிப் பட்டத்திற்கு வரவிரும்பாமல் இருந்தார் என்று வரலாற்றுசிரியர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். வாரிசாகப் பெற்ற அரசை அவர் இரண்டாகப் பிரித்து, இரண்டு பேருமே ஆட்சிபுரியத் தம் விருப்பத்தைத் தெரிவித்தார் என்றும் அலாவுத்தீன் அதற்கு மறுத்துவிட்டார் என்றும் அவ்வாசிரியர் கள் கூறுகின்றனர். இறுதியில், அண்ணனையே தமது வஜீராக அவர் கொண்டு நிர்வாகத்தை நடத்தினர்.

இவ்விதமாகப் பட்டத்திற்கு வந்த ஓர்கானின் பிரச்னைகள் பலவாகவே இருந்தன. நைக்கியம் (Nicaea) நைக்கொமீடியம் (Nicomedia) ஆகிய இடங்களை அவர் கைப்பற்ற வேண்டி யிருந்தது. அப் பகுதிகள் அடங்கிய அந் நாடோ, சட்டங்கள் நாணய முறை திட்டவட்டமான எல்லைகள் எதையும் பெற் றிருக்கவில்லை; அதன் குடிமக்களோ அப்பொழுதுதான் நாட் டுணர்ச்சி என்ற ஒரு வகை உணர்ச்சியை வெளிப்படுத்தத் தொடங்கிக் கொண்டிருந்தனர். அவரைச் சுற்றியிருந்த

அண்டை நாட்டினர் அவரைவிட அதிக பலம் வாய்ந்தவர்களாக இருந்தனர். துறைமுகங்களோயோ, கப்பல்களோயோ, மாலுமி களோயோ அவர் பெற்றிருக்கவில்லை. அவருடைய படை வீரர்கள் பெரும் தீரம் படைத்தவர்களாகவும் இருக்கவில்லை. தம் மக்க ளான உஸ்மான்லிகளுக்குத் தலைமை வகிக்கும் பாக்கியமும் அவருக்குப் பிறப்புரிமையாக வந்துவிடவில்லை. புருஸா நகரைப் பெற்றுவிட்ட அம் மக்கள் தம் தலைவரிடத்திருந்து அசாதாரணத் திறமைகளை எதிர்பார்த்தனர். ஒரு சிறந்த அரசினை அவர் உருவாக்க வேண்டியிருந்தது. இவற்றை எல்லாம் சாதிப்பதென் றால் அவர் உடனடியாக நைக்கியம் நைக்கொமீடியம் ஆகிய வற்றை வென்று, தம் இராச்சியத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. தமது மக்களை இணைப்புற்ற நாட்டினராக்கும் பொறுப்பும் அவருடையதாகி விட்டது.

ஓர்கான் தம் தந்தை வழியே சென்றார்; அ3த முறைகளைக் கையாண்டார். தமது நாட்டை நிதானமாக, அதே சமயத்தில் மிகவும் உறுதியாக இடைவிடாமல் விஸ்தரிக்க முயன்றார். அவர் தம் படையெடுப்புகளினால் தாம் வாரிசாகப் பெற்றிருந்த நாட்டை மூன்று மடங்கு அதிகமாக்கினார். அவருடைய இராச் சியத்தில் மூன்றில் இரண்டு பங்கு சின்ன ஆசியாவின் வட மேற்குப்பகுதியில் அமைந்திருந்தது. மீதிப் பகுதி ஐரோப்பாவில் பொருந்தியிருந்தது. ஐரோப்பாவில் அவர்தாம் முதன் முதலில் துருக்கியர்களைக் குடியேறச் செய்தார். புருஸாவை அவர் தமது தலைநகராகக் கொண்டு, சுல்தான் என்ற பட்டப் பெயரையும் முதன் முதலாகச் சூட்டிக்கொண்டார்; தம் பெயரிலேயே நாணயங்களை அச்சிட்டார். அவற்றில் பின்வரும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன: 'உத்மானின் மகன் ஓர்கானுடைய பேரரசை இறைவன் நீடித்து வாழ வைப்பானாக.' இருக்கும் நிலையை வருணிப்பதாகக் கொள்ளாது, அவர் கொண்டிருந்த குறிக்கோளையே சுட்டிக் காட்டுவதாக இச் சொற்றொடரைக் கொள்ளல் வேண்டும். ஓர்கான் மிக எளிய வாழ்க்கையை மேற் கொண்டிருந்தார். அவர் எக்காலமும் சுறுசுறுப்பாக நடமாடிக் கொண்டே இருந்தார். போர்க்களங்களில் ஈடுபடாத சமயத்தில் தம் படைகளுடன் அவர் தமது பற்பல அரண்களைச் சுற்றிப் பார்ப்பதிலேயே காலத்தைக் கழித்தார். ஒவ்வோர் இடத்திலும் அவர் ஒரு திங்களுக்குமேல் தங்கியது கிடையாது.

பட்டத்திற்கு வந்ததற்குப் பிறகு நைக்கியம் மற்றும் நைக்கொ மீடியம் ஆகியவற்றைக் கைப்பற்றுவதே அவருடைய உடனடி யான நோக்கமாக இருந்தது. இவை பைஸான்ஷியப் பேரரசு

ஆசியாவில் கடைசியாகப் பெற்றிருந்த இடங்களாகும். அப் பொழுது நைக்கியம் ஒரு பெரும் நகரமாக இருந்தது. கான்ஸ் டான்டிநோப்பிலை லத்தீனியர்கள் கைப்பற்றி வைத்திருந்த அறுபது ஆண்டு காலத்தில் நைக்கியம் பெரும் புகழ்பெற்று விளங்கியது. அங்கிருந்த கிரேக்கப் பேரரசர்களோ ஆசியாவிற்கு விரட்டி ஓட்டிவிட்ட லத்தீனியர்கள், அந் நகரைத் தமது தலை நகராகக் கொண்டனர். பல அரண்களால் நிரப்பப்பட்டிருந்த அந் நகரை, புருஸாவைத் துண்டித்தது போலவே, கான்ஸ் டான்டிநோப்பிலுடன் அது கொண்டிருந்த போக்குவரத்தைத் துண்டித்து, மக்களுக்கு இன்றியமையாததாகத் தேவைப்பட்ட பொருள்களைப் பெறவிடாமல் செய்ய வேண்டியிருந்தது. மூன்றும் அண்ட்ரோனிக்கஸ் (Andronicus III) என்ற கிரேக்க அரசர் அந் நகருக்கு உதவி அளிக்க முயன்றார். மிக அவசரமாக அவர் 1326-ல் ஒரு கூலிப் படையைத் திரட்டி அதற்குத் தலைமை வகித்து, பாஸ்பரஸ்ஸைக் (Bhosporus) கடந்து சென்றார். நைக்கொமீடிய விரிகுடாவிற்கு வடக்கிலிருந்த பெலகொனன் (Pelaconan) என்ற இடத்தில் அவருக்கும் ஓர்கானுக்குமிடையே போர் நிகழ்ந்தது. இப் போரில் கிரேக்கப் படைகளுக்கு மிகச் சிறிய சேதம் ஏற்படுகையில், ஓர்கானுக்குப் பெருத்த ஆள், பொருள் சேதம் ஏற்பட்டது என்பது கிரேக்க வரலாற்றறிஞர் களின் கருத்து. எவ்வாறுயினும், அண்ட்ரோனிக்கஸ் பின்வாங்க முடிவு செய்தார். ஆனால், இரவில் அவருடைய படைகளுக்கும் ஓர்கானின் படைகளுக்குமிடையே திடீரென்று ஏற்பட்ட மோதலில் பேரரசரே காயமுற்றார். அங்கிருந்து ஓட்டம் பிடித்த அவர் ஒரு பல்லக்கில் கான்ஸ்டான்டிநோப்பிலுக்குக் கொண்டுபோகப் பட்டார். அவரால் இங்ஙனம் கைவிடப்பட்டு மனச் சோர் வடைந்த படை தோற்கடிக்கப்பட்டு விரட்டியோட்டப்பட்டது. இதன் விளைவாக, நைக்கியம் 1327-ல் அடிபணிந்தது. கீழ்ப்படிந் தோருக்கு மிகச் சாதகமான நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அதன் படை வீரர்கள் பலரும் குடிமக்களில் பலரும் இஸ்லாமிய சமயத்தைத் தழுவிக் கொண்டனர். அவர்கள் விரும்பினால் ஐரோப்பாவுக்கே போய்விடலாம் என்ற சலுகையை ஒரு சிலரே பயன்படுத்திக் கொண்டனர். இந்தத் தோல்வி பைஸான்டியப் பேரரசுக்குப் பெரும் இடியாகவே இருந்தது. அவர்களிடம் எஞ்சி நின்ற நைக்கொமீடியம் அதன் தலைவிதிக்கே விடப்பட்டது. நைக்கொமீடியம் பல அரண்களால் வலுப்படுத்தப்பட்டிருந் தாலும், 1337-ல் அடிபணிந்தது. புருஸாவின் மீதும் நைக்கியத் தின் மீதும் விதிக்கப்பட்ட நிபந்தனைகளைப் போன்றவைகளே அதன் மீதும் திணிக்கப்பட்டன.

நைக்கியம் கைப்பற்றப்பட்டதற்கும் நைக்கொமீடியம் கைப் பற்றப்பட்டதற்கு மிடையே இருந்த பத்தாண்டுக் காலத்தில் ஓர்கான் ஆசியாவில் மற்றும் பல இடங்களிலும் தமது இராச்சி யத்தை வியாபித்துக் கொள்வதில் கண்ணுங் கருத்துமா யிருந் தார். ஒரு சில வரலாற்றறிஞர்களின் கருத்துப்படி, அவ்வித விஸ்தரிப்புத் தெற்கிலிருந்த அங்கோரா (Angora) புறம் ஏற்பட் டது. ஆனல், இதை மறுத்துச் சில ஆசிரியர்கள் அவ் விரிவு வட மேற்கில் பண்டைக்கால மைசியாவில் (Mysia) ஏற்பட்டது என்பர். சருகானுக்கு (Sarukhan) வடக்கிலிருந்த கரஸி (Karasi) என்ற இராச்சியத்தை ஓர்கான் கைப்பற்றிக் கொண்டார். அந்த இராச்சியத்தின் அமீர் (Emir) 1333-ல் இறந்து விட்டார். அவருடைய இரு மகன்களுக்குமிடையே வாரிசுரிமைப் போர் மூண்டது. உத்மானியர்கள் இளையவரை ஆதரித்தனர். இவர் இவருடைய சகோதரரால் கொல்லப்பட்டபோது, ஓர்கான் அக் கொலைக்குப் பழிவாங்குவதற்காக ஒரு படையை அனுப்பி வைத்தார். அந்த அமீர் வனத்திற்கு விரட்டியடிக்கப்பட்டார். அவருடைய இராச்சியத்தை ஓர்கான் உடனடியாகத் தம் இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டார். இதே போன்ற கதி மார்மோரா, மற்றும் ஹெல்லஸ்பாண்ட் கரையோரங்களில் இருந்த பல சிறிய நாடுகளுக்கும் ஏற்பட்டது. இவற்றை யெல்லாம் கைப்பற்றிக்கொண்டதன் விளைவாக, அனட்டோலியா வின் வடமேற்குப் பகுதி அனைத்தும் உத்மானியர்கள் கைவச மாயிற்று. கரஸி மற்றும் இதர சிறிய நாடுகளுடைய மக்கள் பெரும்பாலும் துருக்கிய இனத்தினராக இருந்தனர். அதே சமயத்தில் கரையோரத்தில் வாழ்ந்து வந்த பல கிரேக்கர் களும் இஸ்லாமிய சமயத்தை மேற்கொண்டிருக்கவும் கூடும். இக் கைப்பற்றுதல்களுக்கும் 1337-ல் நைக்கொமீடியம் பிடி பட்டதற்கும் பிறகு ஓர்கானுடைய ஆட்சிக் காலத்தில் ஆசியப் பகுதியில் மேலும் நிலப்பகுதிகள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

நைக்கொமீடியம் கைப்பற்றப்பட்டதற்குப் பின் சிறிது காலம் அமைதி நிலவியது. ஓர்கான் அதனைச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு, தம் இராச்சியத்தையும் படையையும் ஒழுங்காக அமைத்துக் கொள்வதற்கான திட்டங்களை நிறை வேற்றிக் கொண்டார். உத்மான், ஓர்கான் ஆகியவர்களின் காலத்தில் அவர்கள் தம் சுற்றுப்புறத்தினருடன் சச்சரவுகளில் ஈடுபட்டிருந்த பொழுது, ஆயுதம் தாங்கிப் போரிடுவதற்கான தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்காகத் தமது நாட்டிலோ அல்லது இனத்திலோ ஆயுதம் தாங்கிப் போர் புரிவதற்குத் தகுதி பெற்றிருந்த ஆண்மக்கள் அனைவருக்கும் போரிடும்பிடி

வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவ் வேண்டுகோளுக்கு அனை வரும் எவ்விதத் தயக்கமுமின்றி இணங்கினர். அவர்களுடைய போர்ப்பணி முடிவடைந்துவிட்டதும், அவ் வீரர்களெல்லாம் தத் தம் வீடுகளுக்குத் திரும்பி, மீண்டும் தமது தொழில்களில் முனையத் தொடங்குவர். ஆட்சிப் பகுதியின் எல்லைகள் மிகத் துரிதமாக விரிவடைந்து கொண்டிருந்தது போலவே அவர்களும் பெருகிக் கொண்டிருந்ததால், உறுதியானதும் நிரந்தரமானது மான ஒரு படையை உருவாக்குவது மிகவும் அத்தியாவசியமாகி விட்டது. இதுபோன்ற திட்டத்தைத் தீட்டி வைத்திருந்த அலாவுத்தீனின் அறிவுரையின்பேரில், ஓர்கான் அதனை நிலை நாட்ட உறுதியாகத் தீர்மானித்தார். ஒருபுறத்தில் அவர் இடையருத பணியாற்றுவதற்காகப் பெரும் குதிரைப் படை ஒன்றை ஏற்படுத்தினர். அப்படைவீரர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டதோடு நல்ல ஊதியமும் கொடுக்கப்பட்டது. மற்றொரு புறத்தில், இடையருமல் பணியாற்ற வேண்டிய தேவையற்ற குதிரைப் படை ஒன்றும் உருவாயிற்று. ஆனால் தேவை ஏற்பட்டபோது, இப் படையினர் கட்டாயமாக வேலை செய்யுமாறு வற்புறுத்தப்பட்டனர்.

இவ்விதப் படைகளைத் திரட்டுவதற்காக நாட்டுப்புற மாவட் டங்கள் பல மானியங்களாகத் துண்டிக்கப்பட்டன. அதனைப் பெற்றிருந்தவர்கள் ஒவ்வொருவரும், போர் ஏற்படுமாயின், கட்டாயமாகப் போர்ப்பணி புரியவேண்டி நேரிட்டது. போருக்கு வருகையில் அவர்கள் குதிரைகளுடனும் ஆயுதங்களுடனும் வரவேண்டும். இல்லையெனில், தமது மானியத்திற்கு ஏற்றபடி பதில் ஆட்களை அனுப்பிவைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் பட்டது. உண்மையில், இது ஒருசில மாறுதல்களுடன் கூடிய ஐரோப்பாவிலிருந்த நிலமானிய முறையேயாகும். ஆனால், இவ் விரு முறைகளுக்குமிடையே ஒரு வேறுபாடு இருந்தது. அதாவது, ஓர்கானின் இராச்சியத்திலிருந்த மானியங்கள் சிறியனவாகவும் பொதுவாக மரபுரிமையின் அடிப்படையில் அமையாதனவாக வும் இருந்தன. தாம் ஆற்றிய இராணுவச் சேவைக்காக அவர் களுக்கு வாழ்நாள் முழுவதும் அம் மானியங்களை அனுபவிப்பதற் கான உரிமை மட்டும் அளிக்கப்பட்டிருந்தது. அவர்கள் இறந்த பின்னர் அவர்களுடைய மானியங்கள் ஏனைப்படைவீரர்களுக்கு அளிக்கப்பெற்றன. இருப்பினும், சிற்சில வேளைகளில் மரபுரிமை அங்கீகரிக்கப்படாமலும் இல்லை. முஸ்லிம் அல்லாதாரிடத்திருந்து புதிய பகுதிகள் கைப்பற்றப்பட்டபோது அவற்றில் பெரும் பகுதிகள் மானியங்களாகப் பிரிக்கப்பட்டு, போரில் சிறப்புப் பெற்று விளங்கிய வீரர்களுக்குத் தரப்பட்டன. புதிய குதிரைப்

படையிலோ அல்லது நிலமானியக் குதிரைப்படையிலோ இருந்துகொண்டு இராணுவப் பணியாற்றுவது என்பதை முஸ்லிம்கள்தாம் செய்யவேண்டியிருந்தது. இவ்விதமாக இராணுவப் பணியிலிருந்து விலக்குக் கொடுக்கப்பட்ட கிறித்துவர்களின்மீது தலைவரி விதிக்கப்பட்டது. இவ் வரியிலிருந்து முஸ்லிம்கள் விலக்குக் கொடுக்கப்பட்டிருந்தனர்.

ஓர்கானுல் துவக்கிவைக்கப்பட்டதும், அவருடைய மகன் முராத் (Murad) என்பவரால் விஸ்தரிக்கப்பட்டு மேலும் ஒழுங்கு படுத்தப்பட்டதுமான புதிய படை, புதிதான உத்மானிய அரசு போரை நடத்துவதற்குதவும் மிக்க வலிமை பொருந்திய கருவியாயிற்று. மேலும், முஸ்லிமல்லாத நாடுகள் பலவற்றை வெல்லவும் அது தூண்டிற்று. போரில் காட்டிய ஆற்றலுக்காகவும் துணிகரத்துக்காகவும் முஸ்லிம் படைவீரர்களுக்குப் பெரும் பரிசுகள் வழங்கப்பெற்றன. அவர்களுக்கு வெற்றி ஏற்பட்டதெனில், பணமாகவும் ஆடு மாடுகளாகவும் கிடைத்த கொள்ளைப் பொருள்களில் அவர்களுக்குப் பங்கு இருந்தது. அதனேடுகூட, சிறைவாரப்பட்டவர்கள் அடிமைகளாக விற்கப்பட்டுப் பெறப்பட்ட தொகையில் ஐந்தில் நான்கு பங்கு அவர்களுக்குரியதாக இருந்தது. மற்ற ஐந்தில் ஒரு பங்கு சுல்தானுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டது. கைதாக்கப்பட்டவர்களுள் எதிரியின் படைவீரர்களும் இருந்தனர்; பல வேளைகளில், கைப்பற்றப்பட்ட பகுதிகளின் குடிமக்களும் இருந்தனர். கைதியாக்கப்பட்டவர்களில் இளைஞர்களும் யுவதிகளும் கொண்டு செல்லப்பட்டு, ஆண்கள் அடிமைகளாகவும் பெண்கள் மனைவிகளாகவும் விலைமாதர்களாகவும் விற்கப்பட்டனர். பறிமுதல் செய்யப்பட்ட நிலத்தில் பெரும் பகுதியையும் படைவீரர்கள் தங்களது பங்காகப் பெற்றனர். இந்த மானியங்கள் அவர்களுக்கு அவர்கள் வாழ்நாள் வரையில் மட்டுமே அளிக்கப்பட்டதனால், போரில் தம் சார்பில் கொல்லப்பட்ட படைவீரர்களின் நிலங்களும் பிரித்துக் கொடுக்கப்பட்டன. சிற்சில வேளைகளில் ஒரு மானியம் ஒரே படையெடுப்பின்போதும் பல கை மாறியதுமுண்டு.

வெல்லப்பட்ட நாடுகளில் வசித்துவந்த முஸ்லிம் குடிமக்கள் அடிமைகளாக விற்கப்படவும் இல்லை; அவர்களுடைய நிலங்கள் பறித்துக் கொள்ளப்படவுமில்லை. இவ்வித நடவடிக்கைகளெல்லாம் கிறித்துவர்களின்மீதும் முஸ்லிம்களல்லாதார்மீதும் எடுக்கப்பட்டன. சிற்சில சமயங்களில், அடிமைகளாக விற்கப்படுவதிலிருந்தும் நிலங்களை இழக்க நேரிடும் நிலையிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்காக இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுமாறு

கிறித்தவர்களுக்குச் சலுகை காட்டப்பட்டது. ஆனால், ஐரோப் பாவைப் பொறுத்தவரையிலும் அவ்வித விலக்குகள் மிகவும் அரிதாகத்தாம் அளிக்கப்பட்டன. அதுபோன்ற விலக்குகளை அவ் வீரர்கள் பெற்றாலும், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய இதர பங்குகள் குறைக்கப்பட்டன.

இவ்விதமாக ஒழுங்காக அமைக்கப்பட்ட படையுடன் 1354-ல் ஓர்கான் முதல் முதலாகத் தமது கவனத்தை ஐரோப்பாவின் பக்கம் திருப்பினர். அந் நாள் தொட்டு, 1359-ல் அவர் இறக்கும் வரையிலும் துடிதுடித்துக்கொண்டிருந்த அவரது பேரவா பைஸான்ஷியப் பேரரசின்மீது பாய்ந்தது. வயதாகி விட்டதனால் அவரே நேரில் படைகளைத் திரட்டிச் செல்ல முடிய வில்லை. ஆனால், அவருடைய மூத்த மகனை சுல்தான்— படைகளை நடத்துவதில் அளவில்லா விருப்பம் கொண்டவர்— அப் படைகளுக்குத் தலைமைதாங்கிப் போர்களை நடத்தினர்.

பழங்காலத்தில் சீரும் சிறப்பும்பெற்று விளங்கிய பைஸான் ஷியப் பேரரசு பதினான்காம் நூற்றாண்டின் மத்தியில் மிகவும் சுருங்கிக் கிடந்தது. அதனுடைய அதிகார எல்லையில் அடங்கி யிருந்த ஆட்சிப் பகுதிகள் மிகவும் பரவலாக இருந்த நிலையை இழந்துவிட்டு, நான்காம் சிலுவைப் போர் வீரர்களின் தாக்கு தலின்போதே பெரும் சேதமுற்றன. பலஸ்தீனத்திலிருந்த முஸ்லிம்களைத் தாக்குவதற்காகப் புறப்பட்ட அவ் வீரர்கள் 1204 இறுதியில் மிகவும் கேவல நிலையையடைந்து, கிறித்தவ நாடாக இருந்த பைஸான்ஷிய மாநிலத்தையே தாக்கத் தொடங்கினர் கள். கான்ஸ்டான்டிநோப்பிலை இவர்கள் கைப்பற்றிக்கொண்டு, பைஸான்ஷியப் பேரரசனை அவனுடைய தலைநகரை நைக்கியத் திற்கு மாற்றிக்கொள்ளுமாறு வற்புறுத்தினர். இதன் விளைவாகச் சிறிது காலத்திற்கு அங்கே இலத்தீன் பேரரசு உருவாயிற்று. 1261-ல் பைஸான்ஷிய கிரேக்கர்கள் கான்ஸ்டான்டிநோப்பிலை மீண்டும் கைப்பற்றிக்கொண்டு, இலத்தீன் பேரரசை வரலாற்றி லிருந்தே போக்கடித்து விட்டனர். பிறகு அவர்கள் ஐரோப்பா விலும் ஆசியாவிலும் இருந்த அவர்களது பழைய இராச்சியங்கள் ஒருசிலவற்றையும் மீட்டுக்கொண்டனர். ஆசியாவிலிருந்து அவர் களை விரட்டியடித்த ஓர்கான் அவர்களை ஐரோப்பாவில் தாக்கத் தீர்மானித்தபொழுது, அவர்கள் சலோனிகா உட்பட மாஸி டோனியா, மற்றும் கிரீஸில் மொரியாவின் பெரும்பகுதி ஆகிய வற்றையே பெற்றிருந்தனர். அவர்கள் இருந்ததற்கு வடபுறத் திலிருந்த ஸெர்பியாவில் (Serbia) ஸ்டீபன் துஷான் என்ற தலை சிறந்த அரசர் பால்கன் தீபகற்பத்தில் பாதிக்கு மேற்பட்ட

பகுதியில் தமது அதிகாரத்தை வற்புறுத்தி வலியுறுத்திக் கொண்டிருந்தார். ஸெர்பியா சலோனிகாவை (Salonika) அச் சுறுத்திக் கொண்டிருந்ததுடன், கான்ஸ்டான்டி நோப்பிலின் மீதே கண்ணுங் கருத்துமாயிருந்தது. பல்கேரியா (Bulgeria) தனக்குரிய பகுதிகள் சிலவற்றை ஸெர்பியாவுக்குப் பறி கொடுத்துவிட்ட போதிலும், பால்கன் பகுதியில் பாதிக்கு மேற் பட்ட ஆட்சிப் பகுதியை அது இன்னமும் வைத்துக்கொண் டிருந்தது. வெனிஸ், ஜினேவா குடியரசுகள் ஏஜியன் கடலிலும் (Aegean Sea) ஏட்ரியாட்டிக் கடலிலும் பல துறைமுகங்களையும் தீவுகளையும் தம்வசப்படுத்தி வைத்துக்கொண்டு, ஒன்றின்மீது ஒன்று பொருமை கொண்டிருந்தன. இந்தச் சாதகமான நிலை படையெடுப்பாளர்களுக்குத் தக்க வாய்ப்பளித்தது. கிறித்தவர் களுக்கிடையே ஒற்றுமை இல்லை என்பதை உத்மானியர்கள் வெகு எளிதாக அறிந்துகொண்டனர்.

ஐரோப்பாவில் உத்மானியர்கள் முதன் முதலாக நுழைந்த தைப்பற்றிய குறிப்புகளை முந்தைய துருக்கிய வரலாற்றறிஞர் களும் வான் ஹாம்மெர் (Von Hammer) போன்றவர்களும் எழுதி யுள்ளனர். அவ் வரலாறு பின்வருமாறு அமைந்துள்ளது: 1356-ல் ஓர்கானின் மகன் சுலைமான் ஒரு சிறிய உத்மானியப் படையுடன் படகுகளில் ஹெல்லஸ்பாண்ட்டைக் கடந்து, அந் நீர்ச்சந்தியின் ஐரோப்பியப் புறத்திலிருந்த சிம்பே (Tzympe) என்ற அரணைக் காத்துக்கொண்டிருந்த கிரேக்கப் படையைத் தாக்கி முறி யடித்துத் தம் படையை மேலும் அதிகரித்துக்கொண்டார். பேராசிரியர் கிப்பன்ஸ் (H. A. Gibbons) என்பவர் இந்த முக்கிய நிகழ்ச்சியைப்பற்றிப் பல விவரங்களைக் குறிப்பிடுகின்றார்.

1338-ல் கிரேக்கப் பேரரசர் மூன்றும் அண்ட்ரோனிக்கஸ் (Andronicus III) இறந்துவிட்டார். பேலியோலோகி (Palaeologi) வம்சத்திலேயே அவர் மிகவும் தகுதியற்றவரும் வலிமை குன்றிய வருமான அரசராவார். அவர் இறந்ததும், அவருடைய தலைமை அமைச்சராக இருந்த கான்ட்டாகுஸீன் (Cantacuzene) என்பவர் காலஞ்சென்ற அரசருடைய உயிலின்படி, அவருடைய மகன் ஜான் பேலியோலோகஸின் பாதுகாவலராகவும், பேரரசி ஆன்னு வின் (Anna) உடன் ஆட்சியாளராகவும் நியமிக்கப்பட்டிருந் தார். இந்த ஏற்பாட்டில் திருப்தி கொள்ளாத கான்ட்டாகுஸின் பேரரசையே தம் வசப்படுத்திக் கொள்ள விரும்பி 1343-ல் நிக்கோடிகா (Nikotica) என்ற இடத்தில் தம்மைப் பேரரசராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். இதற்குப் பேரரசி பலத்த எதிர்ப்புத் தெரிவித்தாள். உள்நாட்டுப் போர் மூண்டது. இந்த

நிலையில் ஆன்னு, கான்ட்டாகுளின் ஆகிய இருவருமே ஓர்கானிடம் உதவி நாடினர். தமக்கு ஆருயிரம் படை வீரர் களைக் கொடுத்து உதவினால் தாம் தமது மகளான தியோட ராவை (Theodora) ஓர்கானுக்குத் திருமணம் செய்து வைப்ப தாகக் கான்ட்டாகுளின் வாக்குறுதி யளித்தார். இந் நிபந்தனை ஆன்னுவின் நிபந்தனைகளைவிட அதிகமும் கவர்ச்சியுள்ளதாக இருந்ததனால், ஓர்கான் அதனை ஏற்றுக் கொண்டார். இதை யொட்டிக் கான்ட்டாகுளினுக்குப் பக்கபலமாக ஆருயிரம் துருக் கியப் படைகள் 1345-ல் ஐரோப்பாவுக்குள் புகுந்தன. அப் படை வீரர்களைக்கொண்டு கான்ட்டாகுளின், பேரரசியின்வசம் சிக் குண்டிருந்த கான்ஸ்டான்டிநோப்பிலைத் தாக்கினர். முற்றுகை ஓராண்டுக் காலம் நீடித்தது. கான்ட்டாகுளின் அந் நகரில் தமக்குச் சாதகமா யிருந்தவர்களுடைய ஆதரவுடன் நகருக் குள் புகுந்து விட்டார். வேறு வழியின்றிப் பேரரசி சமாதானம் செய்து கொள்ள நேரிட்டது. தன்னுடனும் தன் மகனுடனும் கான்ட்டாகுளினும் அவருடைய மனைவியும் பேரரசராகவும் பேரரசியாகவும் மகுடம் தரிக்க வேண்டும் என்பதற்கு ஆன்னு இணக்கம் தெரிவித்தாள். மேலும், ஜான் பேலியோலோகஸ் கான்ட்டாகுளினின் மற்றொரு மகளை மணம் செய்து கொள்ள வேண்டும் என்றும் ஏற்பாடாயிற்று. புதிய பேரரசருடன் ஏற்கெனவே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி ஓர்கான் தமது 62ஆவது வயதில் யுவதி தியோடராவை மணம் புரிந்து கொண்டார்.

ஓர்கான் கடனுக்குக் கொடுத்த ஆருயிரம் படை வீரர்களும் ஆசியாவிற்குத் திரும்பி இருக்கவேண்டும். ஆனால், இவ்விதமாகப் படைகளைக் கடனுக்குக் கொடுப்பது நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வந்தது. 1349-ல் ஸ்டீபன் துஷானைத் தலைவ ராகக் கொண்டிருந்த ஸெர்பியர்கள் சலோனிகாவை அச்சுறுத்திக் கொண்டிருந்தனர்; கான்ஸ்டான்டிநோப்பிலையே அவர்கள் கைப்பற்றத் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர். இரண்டு பேரரசர்களான ஓர்கானின் மாமனாரும் சகலனும் அவரது உதவியை மீண்டும் நாடினர். அவர்களுடைய வேண்டு கோளுக்கு ஓர்கான் இணங்கி, சலோனிகாவின் நிவாரணத்திற்கு இருபதினாயிரம் படை வீரர்களை அனுப்பி வைத்தார். அப் படை யினரின் உதவியுடன் கான்ட்டாகுளின் ஸெர்பியர்களை முறி யடித்து, கான்ஸ்டான்டிநோப்பிலி லிருந்த பைஸான்ஷியப் பேரரசை நிரந்தரமாகப் போக்கிவிட அவர்கள் கொண்டிருந்த எண்ணங்களை யெல்லாம் சிதறடித்தார். இவ் வேளையிலும் உத் மானியத் துருப்பு வீரர்கள் தமது குறிக்கோளை நிறைவேற்றிக்

கொண்டு ஆசியாவிற்குத் திரும்பினர் போலும்! ஆனலும், நான்கு ஆண்டுகட்குப் பிறகு நீர்ச்சந்தியைக் கடந்து படைகளை அனுப்புவதற்கான வாய்ப்பு ஒர்கானுக்குக் கிட்டியது. இந்தத் தடவை அவர்கள் ஐரோப்பாவில் நிரந்தரமாகத் தங்கி விடவும் நேரிட்டது. கான்ட்டாகுஸின் தாம் மற்றவர்களுடன் துணை ஆட்சியாளராக இருப்பதை விரும்பாது, அதிகாரத்தை வன்முறையால் தாமே கைப்பற்றிக் கொள்ள 1353-ல் முயற்சி யெடுத்தார். வயதுக்கு வந்திருந்த அவருடைய மருமகனை ஜான் பேலியோலோகஸ் இதனைத் தீவிரமாக எதிர்த்தார். ஆகவே, மீண்டும் உள்நாட்டுப் போர் மூண்டது. மூன்றும் முறையாகக் கான்ட்டாகுஸின் தம் மருமகன் ஒர்கானிடம் உதவி நாடினர். இருபதினாயிரம் படை வீரர்களைக் கடனுகக் கொடுத்தால் அதற்குப் பதிலாக ஹெல்லஸ்பாண்ட்டில் ஐரோப்பியப் பகுதியில் உள்ள ஓர் அரணை உத்மானியர்களுக்குக் கொடுத்துவிடுவதாகக் கான்ட்டாகுஸின் வாக்களித்தார். ஒர்கான் இதற்கு இணங்கினர். சுலைமானின் தலைமையில் உத்மானியவீரர்கள் ஐரோப்பாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தம் மருமகனை ஜானை விலக்குவதற்கே கான்ட்டாகுஸின் அப் படையைப் பயன்படுத்தினர். அவருக்கு வெற்றி கிட்டியது. டெமோடிகாவை அவருடைய கட்சியினர் கைப்பற்றிக் கொண்டனர். சிம்பே என்ற முக்கியத்துவமற்ற அரண் ஒன்று ஒர்கானிடம் ஒப்படைக்கப்பட்டது. கான்ட்டாகுஸினின் முழு அனுமதியுடன் உத்மானியர்கள் அதில் குடியேறிக் கொண்டனர்.

இதற்குச் சற்றுப் பிறகு திரேசிய செர்சனீஸில் ஒரு பெரும் பூகம்பம் ஏற்பட்டது. இதனல் காலிபோலி (Gallipoli) உட்படப் பல நகரங்கள் சேதமுற்றன. காலிபோலி, ஹெல்லஸ்பாண்ட்டில் ஐரோப்பியப் பகுதியிலிருந்த மிகவும் முக்கியமான அரணுகும். சிம்பே (Tzympe) என்ற அரணுக்கு அருகாமையிலும் அது இருந்தது. அதனுடைய சுவர்களும் பாதுகாப்புகளும் பலத்த சேதமுற்றமையினல், அதில் நுழைவது மிகவும் எளிதாகி விட்டது. சிம்பேயில் சுலைமானின் தலைமையில் இருந்த உத்மானியப் படைகளுக்கு அதனைக் கைப்பற்றிக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தவுடன் அவ் வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் முன் வந்தனர். பூகம்பமும் அதனல் சுவர்களுக்கு ஏற்பட்ட சேதமும் தெய்வச் செயல்களாகும் என்று காலிபோலியிலிருந்த கிரேக்கப் படையினர் கருதினர்; உத்மானியர்கள் எவ்வித எதிர்ப்புமில்லாமலே அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். இவ்விதச் செயல் தாம் கையொப்பமிட்ட ஒப்பந்தத்திற்கு முற்றிலும் மாருனது என்று கான்ட்டாகுஸின் குற்றம்சாட்டி, காலிபோலி தமக்குத் திருப்பித் தரப்படவேண்டும் என்று வற்புறுத்தினர். சிம்பேவுக்காகத் தக்க

கிரயத்தைக் கொடுப்பதற்கும் அவர் இணங்கினர். ஆனல், ஓர்கான் சிம்பேவுக்காகப் போதுமான அளவு பணம் பெறுவ தற்குத் தயாராகவே இருந்தார். எனினும், காலிபோலியைக் கைவிட முடியாது என்று அவர் வெட்ட வெளிச்சமாகத் தெரி வித்து விட்டார். 'இறைவன் அரணின் பாதுகாப்புகளைச் சிதற டித்ததனல் என்னுடைய படையினர் அந் நகரைக் கைப்பற்றிக் கொண்டு இறைவனுக்கு நன்றி தெரிவிக்கின்றனர்' என்று அவர் கூறிவிட்டார். பூகம்பத்தின் வாயிலாக இறைவன் தலையிட்டான் என்று கருதப்பட்ட நிகழ்ச்சியை கிரேக்கர்கள் தம் அரணைப் பாது காக்கத் தவறியதற்கும், துருக்கியர்கள் அதனைக் கைப்பற்றிக் கொண்டதற்கும் சாக்குப் போக்காகக் கூறிக்கொள்ள அவர்கள் பயன்படுத்திக்கொண்டனர்.

ஓர்கானின் இச் செயல் கான்ஸ்டான்டிநோப்பிலில் பெருங் கோபத்தைக் கிளறிவிட்டது. ஐரோப்பாவில் துருக்கியரை வர வழைத்தது எத்தனை பெரிய தவறு என்பதைக் கான்ட்டாகுஸின் உணரத் தொடங்கினர். மக்களுடைய கருத்துக்கிணங்கி அவர் ஓர்கானின்மீது போர் தொடுத்தார். ஆசியாவிலிருந்து உத் மானியர்களை விரட்டியடிக்க ஸெர்பியா, பல்கேரியா ஆகிய நாடு களின் அரசர்களின் உதவியைக் கான்ட்டாகுஸின் நாடினர். ஆனல் அவர்கள் அவ் வுதவியை நல்க மறுத்துவிட்டனர். அந்த நெருக்கடியான வேளையில் கிறித்தவ அரசர்கள் அனைவரும் ஒன்றுபட்டிருப்பார்களாயின். துருக்கியர்களின் நிலை சற்று மோச மாகவே இருந்திருக்கக்கூடும்; வரலாறும் வேறு திசையில் சென்றிருக்கும். அவ்வித ஒற்றுமையில்லாமையே உத்மானியப் பேரரசு ஐரோப்பாவில் பரவுவதற்கு ஏதுவாயிருந்தது.

கான்ட்டாகுஸின் தம் நாட்டிற்கு இழைத்த துரோகத்தின் பலனை வெகு விரைவில் அடையவேண்டி ஏற்பட்டது. எல்லாமே அவருக்குச் சாதகமாகச் சென்று கொண்டிருந்தன. பேலியோ லோகி வம்சத்தினரை அவர் சிம்மாசனத்திலிருந்து விலக்கி விட்டார். அவர் தம் மகனை மத்தேயுவைத் (Mathew) தமது துணை ஆட்சியாளராக அமைத்துக்கொண்டார். ஆனல், ஐரோப்பாவிற்குத் துருக்கியரை வரவழைத்த அவரது செயல் யாவரின் மனத்திலும் கசப்பை ஏற்படுத்தியது. கிரேக்க மதத் தலைவர் மத்தேயுவுக்கு முடிசூட்ட மறுத்துவிட்டார். கான்ஸ் டான்டிநோப்பில் நகரிலேயே ஒரு புரட்சி ஏற்பட்டது. கான்ட்டா குஸின் நண்பர்களால் புறக்கணிக்கப்பட்டுத் தனித்து நின்றார். துரோகமிழைத்துத் துருக்கியர்களிடம் பேரரசை ஒப்படைத்து விட்டாரென்று அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. சிம்மாசனத்தி

லிருந்து இறங்குமாறு அவர் வற்புறுத்தப்பட்டார். துறவியாகி விட்ட அவர் கிரீஸில் மடம் ஒன்றில் அடைக்கலம் புகுந்தார். அவருடைய அரசி ஐரினி (Irene) என்பவளும் மடக்கன்னி (nun) யானாள்.

மக்கள் ஜான் பேலியோலோகஸை வரவேற்று, மத்தேயுவைத் தோற்கடித்து, ஜானைப் பேரரசராக்கினர். அவரது ஆட்சி ஐம்பது ஆண்டிற்கு நீடித்து நிலைத்திருந்தது. ஆனாலும், துருக்கியர்களை ஐரோப்பாவிலிருந்து விரட்ட அவராலும் இயலவில்லை. கான்ட்டாகுஸீனின் ஐரோப்பாவிற்கு வரவழைத்த இருபதினாயிரம் படை வீரர்களும் அங்கேயே தங்கி அந் நாட்டிற்கெதிராகவே நடந்துகொண்டனர். சுலைமானின் தலைமையில் அவர்கள் திரேசுக்குள் புகுந்து, சோர்லுவைக் (Tchorlu) கைப்பற்றிக் கொண்டனர். அது கான்ஸ்டான்டிநோப்பிலுக்கு மிகவும் அருகாமையிலேயே இருந்தது. இந் நகரிலும் தெமோடிகாவிலும் துருக்கியர்கள் தாற்காலிகமாகக் குடியேறியிருந்தனர் என்றாலும், திரேசின் தென் பகுதியில் அவர்கள் தம்மை மிக உறுதியாக நிலைநாட்டிக் கொண்டனர். இறுதியில் ஓர்கானுடன் ஜான் ஒப்பந்தம் செய்து கொள்ளும்படியும் வற்புறுத்தப்பட்டார். அவ்வொப்பந்தம், திரேசில் உத்மானியர்கள் கைவசமான பகுதிகள் அவர்களுக்கே உரியவையாகும் என்று அங்கீகரித்தது. அந் நாள் தொட்டு, பைஸான்ஷியப் பேரரசு உத்மானிய சல்தனத்திற்கு அடிபணிந்தே வந்தது. ஆசியாவிலிருந்து ஓர்கானின் மைந்தர் சுலைமான் பல துருக்கியர்களைக் கொண்டுவந்து திரேசின் செர்ஸொனீஸிலும் திரேசின் இதர பகுதிகளிலும் குடியேறச் செய்தார்.

உத்மானியப் படைக்குத் தலைவராயிருந்து தம் தீரத்தையும் திறத்தையும் காட்டிய சுலைமான் வேட்டையாடிக்கொண்டிருக்கும் வேளையில் குதிரையிலிருந்து தவறி விழுந்து இறந்தார். கவலையுற்ற அவருடைய தந்தை ஓர்கான் அடுத்த ஆண்டில் உயிர் நீத்தார். அவர் உத்மானியப் பேரரசின் எல்லைகளைப் பல திக்குகளிலும் விஸ்தரித்தார். ஆசியாவில் இன்னும் இருந்துகொண்டிருந்த பைஸான்ஷியர்களை விரட்டியடிக்க வேண்டும் என்று அவர் கொண்டிருந்த நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொண்டார்; அனட்டோலியாவின் வடமேற்குப் பகுதியிலிருந்த மைசியாவைக் கைப்பற்றிக்கொண்டார். அவர் ஐரோப்பாவின் மீது படையெடுத்துத் திரேசின் ஒரு பகுதியின்மீது உத்மானியர் ஆட்சியை நிலைநாட்டினர். பைஸான்ஷிய நாட்டை அவர்களின் ஓர் அடிமை நாடாகவே ஆக்கிவிட்டிருந்தார். இப் பெருஞ் சாதனைகளை அவர் தம்முடைய ஆற்றலினாலோ, போர்க்களங்

களில் பெரும் வெற்றிகளைப் பெற்றதனாலோ, அரண்களின்மீது வெற்றிகரமான தாக்குதல்களை நிகழ்த்தியதனாலோ நிறை வேற்றவில்லை. அவை யெல்லாம் அவருடைய தூதரகத் திறமை யினாலும், சதிச் செயல்களினாலும், படைப் பலத்தினாலும், எதிரியின் பலவீனத்தினாலும் நிறைவேற்றப்பட்டவை யாகும். அவர் தீட்டிய கருவிகளினால்தான் ஐரோப்பாவிலும் ஆசியா விலும் அவருடைய மகன் முராத் (Murad) மேலும் பல வெற்றி களைப் பெறமுடிந்தது.

அவர் ஆட்சிபுரிந்த முப்பத்துமூன்று ஆண்டு காலத்தில் அவருடைய நாட்டின் மிக முக்கியமான நிறுவனங்கள் உருவாக் கப்பட்டுவிட்டன. முஸ்லிம்களின் அதிகாரம் ஆசியாவின் மிகச் செழுமை வாய்ந்த மாநிலங்களின்மீது பரவியதுடன் நில்லாமல் ஐரோப்பிய கண்டத்திலும் நிலைநாட்டப்பட்டிருந்தது. உத்மான் ஒரு புதிய மக்களினத்தை உருவாக்கியவர் என்று புகழ் பெற்று விளங்குகையில், அவருடைய மகன் ஒரு புதிய நாட்டினை உருவாக்கிய பெருமதிப்பினைப் பெற்று விளங்குகின்றார். இரண்டு தலைமுறைக் காலத்தில் அவர் சாதித்தவற்றை ஒரு சிலரே சாதித்திருக்க முடியும். தம்முடைய வாழ்நாள் முழுவதையும் அவர் போரில் கழித்தார். போரினால் கிடைத்த லாபங்களைக் காப்பதிலும் நாட்கள் கழிந்தன. அவருடைய தந்தையைப் போலவே அவரும் மிக எளிய பழக்க வழக்கங்களை மேற்கொண் டிருந்தார். நைக்கியத்தில் அவர் தம் கரங்களாலேயே ஏழை களுக்குக் கஞ்சி வார்த்து உணவும் அளித்தார்.

முன்னாள் மேற்கத்திய வரலாற்றறிஞர்கள் அவரைத் தீய குணம்படைத்தவன், கொடூரன், ஏமாற்றுபவன் என்றெல்லாம் வருணிப்பது தவறாகும் என்று கிப்பன்ஸ் குறிப்பிடுகின்றார். உண்மையில், கொடூரமிக்கவராகவோ பிறரை ஏமாற்றுபவ ராகவோ அவர் இருக்கவில்லை. வரலாற்றில் பெரும் சாதனை களைப் புரிந்திருக்கும் யாவருமே கொண்டிருந்த மூன்று குண வியல்புகளை—இணைப்புற்ற குறிக்கோள், சற்றும் தளராத சக்தி, விவரங்களை ஆராய்வதில் அளவிலாத்திறன்—அவரும் பெற்றிருந் தார். அறுபது ஆண்டு காலத்திற்கு அவர் பொதுப்பணி புரிந்து, பைஸான்ஷியப் பேரரசரின் சகலராகவும், ஜினேவாவின் நண்பராகவும், திரேசின் உண்மைத் தலைவராகவும் உயிர் நீத்தார். அவருடைய வாழ்க்கையின் குறிக்கோளை அவருடைய நாணயத்தில் அச்சிடப்பட்டிருந்த 'உத்மானின் மகன் ஓர்கானுடைய பேரரசை இறைவன் நீடித்து வைப்பானாக' என்ற வாக்கியம் சுட்டிக்காட்டுகின்றது.

4. முதலாம் முராத் (1359 - 1389)

(Murad I)

ஓர்கானின் மகன் சுலைமான் பாஷா தந்தைக்கு முன்பே இறந்துவிட்டார். இதனால் அவருடைய இளைய சகோதரர் முராத் என்பவர் உத்மானியப் பட்டத்திற்கு வர நேரிட்டது. பட்டத்திற்கு வந்தபொழுது நாற்பது வயதினராக இருந்த இவர் அடுத்த முப்பது ஆண்டிற்கு உத்மானியர்களை ஆண்டார். தளரா ஆற்றலையும் சுறுசுறுப்பையும் படைத்த இவர் ஆட்சி புரிவதற்குத் தேவைப்படும் தகுதிகளையெல்லாம் அளவுக்கு மீறியே பெற்றிருந்தார் என்பதை வெகு விரைவிலேயே நிரூபித்துவிட்டார். இவருக்குப் படிக்கத் தெரியாது; கையெழுத்திடவும் இவரறியார். ரகுசா நகரிலுள்ள ஆவணக் காப்பகத்தில் (Archives) அந்தக் குடியரசுடன் முராத் 1363-ல் செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்று உள்ளது. அதில் அவர் தம் கையை மையில் தோய்த்தெடுத்து, தம் விரல் அடையாளங்களை அவ் வொப் பந்தத்தில் பதித்திருக்கின்றார். இவ்வித அடையாளம் அல்லது தொக்ரா (Tughra) பிற்காலத்தில் துருக்கிய சுல்தானியர்களின் அதிகாரபூர்வமான கையெழுத்தாயிற்று. உத்மானும் ஓர் கானும் உத்மானிய வம்சத்தையும் நாட்டையும் உருவாக்கினர். ஆனால், உத்மானியர்களின் ஆட்சியை மற்ற இனத்தாரின்மீது திணித்து ஒரு பேரரசை உருவாக்கிய புகழ் முராதுக்கே உரியதாகும்.

உத்மானிய நாடு ஓர்கானால் மிகவும் பரவலாக நிலை நாட்டப்பட்டிருந்த போதிலும், முராத் பட்டத்திற்கு வந்த வேளையில் அனட்டோலியாவில் இருந்த மற்றத் துருக்கிய நாடு களைவிடப் பரப்பளவில் சற்றுக் குறைந்தேயிருந்தது. மார்மோரா கடலின் இருபுறங்களும் அதில் அடங்கியிருந்தன. அப் பகுதி இருநூறு மைல் நீளமாகவும் நூறு மைல் அகலமாகவும் இருந்தது.

டார்டனெல்ஸின் இருபுறங்களும் அதில் அடங்கி இருந்தன என்றாலும், பாஸ்பரஸின் ஒரு பக்கமே அதில் அடங்கியிருந்தது. மறுபுறத்திலிருந்த கான்ஸ்டான்டிநோப்பிலோ உத்மானியர்கள் சூழ்ந்திருந்தபோதிலும், அது பெயரளவிற்கே சுதந்திர நாடாக இருந்தது. திரேஸிலிருந்த கிரேக்க மாநிலங்களுடன் போக்கு வரத்துத் தொடர்பினை அது கொண்டிருந்தது. இருபதினாயிரம் மைல் பரப்பளவில் இருந்த அப் பகுதியில் மக்கள்தொகை பத்து லட்சத்திற்குச் சற்றுக் குறைவாகவே இருந்தது. இவ்வளவு சிறிய பகுதியிலிருந்துகொண்டு முராத் எப்படித்தான் ஒரு பேரரசாக அதை மாற்றினார் என்பது வியந்தையாகத்தான் இருக்கின்றது. அனட்டோலியாவின் இதர பகுதிகளிலிருந்த துருக்கியர்களும் அவருடைய கொடியின்கீழ்த் திரண்டிருக்கக்கூடும்.

வெடிமருந்து கண்டுபிடிக்கப்படுவதற்கு முந்திய காலத்தில், டார்டனெல்ஸின் இருபுறங்களையும் சொந்தமாகப் பெற்றுவிட்ட தனால்மட்டுமே நீர்ச்சந்தியின்மீது எவனும் ஆதிக்கம் பெற்றுவிட முடியாது. ஒரு தலைசிறந்த கப்பற்படையை முராத் பெற்றிருக்க வில்லையாதலால், ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே அவருடைய படைகளைக் கொண்டுசெல்வதற்காக அவர் கப்பற் படைப் பலம் பெற்ற ஒரு நாட்டையே நம்பி இருக்க நேரிட்டது. ஜினேவா நகரத்தினர் அவ்விதப் பலத்தைப் பெற்றிருந்ததனால் உத்மானியர்களை ஐரோப்பாவிற்கு வரவிடாதபடி செய்திருக்கக் கூடும். கருங் கடலோரங்களிலும் பாஸ்பரஸில் கடாலா என்ற இடத்திலும் பலமுக்கிய வர்த்தகக் குடியேற்றங்கள் அவர்களுக்கு இருந்தன. ஆனாலும், அவர்கள் கிரேக்கர்களை வெறுத்தனர்; பணத்திற்கு ஆசைப்பட்டனர். பணத்திற்காக முராதின் படைகளை நீர்ச்சந்தியைக் கடப்பதற்கு உதவ அவர்கள் தயங்க வில்லை. இவ்விதமாகத் தமது ஆற்றலினால் முராத் முப்பதாண்டு ஆட்சிக்காலத்தில் தமது சிறிய இராச்சியத்தை ஏறத்தாழ ஐந்து மடங்கு பெருக்கிவிட்டார்; அதனுடைய எல்லைகளை டான்யூப் (Danube) நதிவரையிலும் விஸ்தரித்துவிட்டார். கிரேக்கப் பேரரசர் உட்படப் பற்பல நாட்டினரைத் தமது பேரரசுக்குக் கப்பம் செலுத்தும்படி அவர் வற்புறுத்தினார். உத்மானிய வரலாற்றில் அவருடைய புகழ் கான்ஸ்டான்டிநோப்பிலை வென்ற முகம்மது, அப் பேரரசின் புகழ் உச்சகட்டத்தை எட்டும்வண்ணம் செய்த சுலைமான் ஆகியோருடைய புகழுக்குச் சரிசமமாகவே இருந்தது.

முராதின் வெற்றிகளைக் கால வரிசைப்படுத்தாது மூன்று தலைப்புகளின் கீழ் ஒழுங்குற ஆராயலாம்:

1. திரேஸ் மற்றும் பல்கேரியா ஆகியவற்றிலிருந்த கிரேக்கப் பேரரசுக்கான உடைமைகளை அவர் கைப்பற்றுதலும் பாழடைந்த அந்தப் பேரரசை மிகவும் இழிநிலைக்குக் கொண்டு வருதலும்.

2. பல்கேரியா, மாஸிடோனியா மற்றும் ஸெர்பியாவில் அவர் பெற்ற மாபெரும் வெற்றிகள்.

3. அனட்டோலியாவிலிருந்த இதர துருக்கிய நாடுகளை அவர் கைப்பற்றித் தம் இராச்சியத்தை மேலும் விஸ்தரித்துக் கொள்ளுதல்.

1. திரேஸின்மீது படையெடுப்புகள்

முராத் பட்டத்திற்கு வந்தபோது ஐந்தாம் ஜான் பேலியோலோகஸ் என்பவர் (John Paleologus) கிரேக்கப் பேரரசராக ஆட்சி புரிந்துகொண்டிருந்தார். துரதிருஷ்டம் பிடித்தவரும் திறமையற்றவருமான அவரது ஆட்சியின்போது, அப் பேரரசு சீர்குலைந்த நிலையில் இருந்தது. முன்னேறிக்கொண்டிருந்த முஸ்லிம் படைகளை எதிர்த்து நிற்க அதற்குச் சக்தி கிடையாது; பிறர் உதவியை அது நாடுவதற்குமில்லை. முதல் சிலுவைப் போரின் காலத்தில் கிறித்தவர்களுக்கிடையே இருந்த ஒற்றுமை இப்பொழுது முற்றிலும் மறைந்துவிட்டிருந்தது. இலத்தீன் திருச்சபைக்கும் கிரேக்கத் திருச்சபைக்கும் இடையே கடும் சச்சரவுகள் ஏற்பட்டிருந்தன. அவர்கள் துருக்கியர்களைக் கண்டு அஞ்சியதைவிட, தம்மையே அதிகமாக வெறுத்துக்கொண்டனர். கிரேக்கர்கள் ரோமாபுரியின் போப்பின் ஆதிக்கத்துக்குட் பட்டிருந்தால்மட்டுமே தாம் அவர்களுடைய உதவிக்கு வரமுடியுமென்று இலத்தீன் கிறித்தவர்கள் அறிவித்துவிட்டனர். இந்த நிபந்தனைக்குக் கிரேக்கர்கள்பணிய முற்றிலும் மறுத்துவிட்டனர். முஸ்லிம்களின் தாக்குதல்களிலிருந்து தங்களது பேரரசைக் காத்துக்கொள்வதற்கும்கூட அவ்விதம் உதவி செய்ய அவர்கள் மறுத்துவிட்டனர்.

இந்தச் சூழ்நிலைகளுக்கிடையே முராத் தமது ஆட்சியின் தொடக்கத்தில் தமது தந்தைவழிச் சென்று, ஐரோப்பாவில் படையெடுப்புகளை நிகழ்த்த முடிவெடுத்தார். அப்பொழுது அவரது இராச்சியத்தின் தலைநகராக இருந்த புருஸாவைவிட்டு அவர் புறப்பட்டு டார்டனெல்ஸைக் கடந்து ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு திரேஸுக்குள் நுழைந்தார். எவ்ரினுஸ் (Evrenos) லால்ஷாவின் (Lal Shalin) என்ற அவருடைய இரு படைத்தலைவர்களும் படையின் இருபுறங்களுக்கும் தலைமை தாங்கினர். எவ்ரினுஸ் இடப்புறத்தில்

முன்னேறி, சோர்லு (Tchorlu) என்ற அரணை மீட்டுக்கொண்டு அதன் படையைப் படுகொலை செய்து அதன் சுவர்களைத் தகர்த்தார். வலப்புறத்திலிருந்த லால்ஷாலின் கர்க் கிலிஸ்ஸி (Kirk Kilisse) என்ற இடத்தைக் கைப்பற்றிக்கொண்டு, கருங்கடல் புறத்திலிருந்து எதிரிகள் வராவண்ணம் தடுத்துவிட்டார். பிறகு முராத் மத்தியில் இருந்த படையைத் திரட்டிக்கொண்டு, இரு படைகளுடனும் ஒரு சந்திப்பை ஏற்படுத்திக்கொண்டு, எஸ்கி பாபா என்ற இடத்தில் 1363-ல் பெரும் போர் ஒன்றை நிகழ்த்தினர். அதில் அவர் தம்மை எதிர்த்த பைஸான்ஷியப் படையை முறியடித்தார். இதன் விளைவாக, ஏட்ரியாநோப்பில் எவ்வித எதிர்ப்புமின்றி, சரணடைந்தது; அனேகமாகத் திரேஸ் முழுவதுமே முராதின் வசமாயிற்று. பிறகு லால்ஷாலின் முன்னேறி மாரிட்ஸா சமவெளியின் வழியாக பல்கேரியாவுக்குள் நுழைந்து, பால்கன்ஸுக்குத் தெற்கில் பைஸான்ஷியரின் உடைமையாக இருந்த பிலிப்போபோலிஸைக் (Philippopolis) கைப்பற்றிக்கொண்டார்.

இவ் வெற்றியின் விளைவாக, கிரேக்கப் பேரரசர் முராதுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள நேர்ந்தது. அவ் வொப்பந்தத்தின் படி, திரேசில் தாம் இழந்தவற்றைப் பேரரசர் மீண்டும் பெற எவ்வித முயற்சியும் செய்யக்கூடாது; ஐரோப்பாவில் உத்மானியர்கள் மேலும் முன்னேறுவதற்குத் தடையிட பல்கேரியர்களுக்கும் ஸெர்பியர்களுக்கும் எவ்வித உதவியும் அளிக்கக் கூடாது. முராதுக்கெதிராக அவருடைய துருக்கிய அமீர்களுக்கு எவ்வித ஆதரவும் அளிக்கக்கூடாது என்ற நிபந்தனைகள் பேரரசின்மீது திணிக்கப்பட்டன. இம் மாபெரும் வெற்றிக்குப் பிறகு முராத் புருஸாவிற்குத் திரும்பினர். அங்கே புதிய படையெடுப்புகளை நிகழ்த்துவதற்கும் படையை ஒழுங்குற அமைப்பதற்கும் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்தார். சில முக்கிய நிகழ்ச்சிகள் அவரை மீண்டும் ஐரோப்பாவிற்கு இழுத்துச் சென்றன. உத்மானிய துருக்கியர்களை எதிர்த்து நிற்க, கிரேக்கர்களுக்குக் கிறித்தவ அரசர்கள் எவ்வித உதவியும் வழங்க முன்வரவில்லை. ஆனால், உத்மானியர்கள் பல்கேரியாவை நோக்கி முன்னேறியதும் அக் கிறித்தவ அரசர்கள் பெரும் பீதியுற்றனர். உத்மானியர்களுக்கு எதிர்ப்பு அளிக்குமாறு ஹங்கேரி நாட்டு அரசர் லூயிஸ், செர்பியா, பாஸ்னியா மற்றும் வல்லாச்சியா ஆகிய சிற்றரசுகளின் இளவரசர்கள் இவர்களையெல்லாம் போப் ஐந்தாம் அர்பன் (Pope Urban V) தூண்டிக் கொண்டிருந்தார். அவர்கள் எல்லாரும் ஒன்றுபட்டு, இருபதினாயிரம் படைவீரரைக்கொண்ட ஒருபெரும் படையைத் திரட்டிக்

கொண்டு திரேஸுக்குள் புகுந்தனர். அவர்களது நோக்கம் துருக்கியர்களை ஐரோப்பாவிலிருந்து விரட்டியடிப்பது என்பதாகும். அவர்களை எதிர்த்துத் தாக்க முராத் விரைந்தார். ஆனால் அவர் அங்கு வருவதற்கு முன்பே லால்ஷாலினின் கூட்டணியினருக்கெதிராகத் தம் படையைத் திரட்டிவிட்டார். இருதரப்புப் படைகளும் ஏட்ரியானோப்பிலுக்கு மிக அருகில் மாரிட்ஸா (Maritza) நதிக்கரையில் மோதிக்கொண்டன. உத்மானியப்படைத் தலைவர் இல்பெக்கி (Ilbeki) இரவில் திடீரென்று தாக்குதலைத் தொடங்கினர். அச் சமயம் கிறித்தவப் படைவீரர்கள் ஆழ்ந்த தூக்கத்தில் மூழ்கிக் கிடந்தனர். அப் படையினரின் முகாமில் குழப்பம் ஏற்பட்டது. தீயில் மாட்டிய காட்டு விலங்குகள்போல் கூட்டணிப்படையினர் அத் தாக்குதலில் சிக்கிக்கொண்டனர். எண்ணற்ற படைவீரர்கள் மாரிட்ஸா நதியின் வெள்ளத்துக்கு இரையாயினர்.

கிறித்தவப்படை பெரும்பாலும் அழிந்தே போயிற்று. ஹங்கேரியின் அரசர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். இதுதான் முதன் முதலாக ஹங்கேரியர்களுக்கும் உத்மானியர்களுக்குமிடையே ஏற்பட்ட போராகும். இப் போரின் விளைவாக, பால்கன் மலைகளுக்குத் தெற்கிலிருந்த பகுதிகள் எல்லாம் உத்மானியப் பேரரசுடன் இணைக்கப்பெற்றன. இரவில் திடீரென்று தாக்குதல் நடத்திய இல்பெக்கி, லால்ஷாலினின் தூண்டுதலின்பேரில் விஷமிடப்பட்டுக் கொல்லப்பட்டார்.

மாரிட்ஸாப் போர் கிறித்தவர்களுக்கு ஒரு பேரிடியாகும். அதன் ஒரு முக்கிய விளைவென்னவென்றால், ஆசியாவில் இல்லாது ஐரோப்பாவில்தான் மேலும் வெற்றிகளைக் காண வேண்டும் என்று முராத் முடிவெடுத்ததாகும். இவ் வெண்ணத்தை நிறைவேற்றும் வகையில், அவர் தமது தலைநகரை புருஸாவிலிருந்து திரேஸுக்கு மாற்றம் செய்து, தெமோடிகாவைத் தம் பேரரசின் தலைநகராக்கிக்கொண்டார். மூன்று ஆண்டுகட்குப் பிறகு அவர் அதனை ஏட்ரியானோப்பிலுக்கு மாற்றிக்கொண்டார். அடுத்த தொண்ணூறு ஆண்டு காலத்திற்கு அதுவே உத்மானியப் பேரரசின் தலைநகராக விளங்கிற்று. முராத் ஏட்ரியானோப்பிலில் இருந்தவாறே பால்கன் பகுதியிலிருந்த இதர நாடுகளின்மீது படையெடுப்புகளை நிகழ்த்தி வந்தார். இப் போரினால் மற்றொரு முக்கிய விளைவும் ஏற்பட்டது. கிரேக்கப் பேரரசர் ஐந்தாம் பேலியோலோகஸ் என்பவர் உத்மானியர்களுக்கு அடிபணிவதில் மேலும் ஓரடி எடுத்துவைத்தார்; அதாவது, அவர் சுல்தானுக்குக் கப்பம் செலுத்துவதற்கும் வருங்காலப்

போர்களில் உத்மானியப் படைகளுக்கு உதவியாக ஒரு படையை அனுப்புவதற்கும் இணங்கினர்.

சற்றுப் பிறகு பேரரசர் தமது இழிவான நிலையை உணர்ந்து முணுமுணுக்கத் தொடங்கினர். 1869-ல் அவர் ரோமாபுரிக்குத் தூது சென்று கிறித்தவர்களைத் தட்டி எழுப்புமாறு போப்பாண்டவரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். உத்மானியர்களுக்கெதிராக மீண்டும் ஒரு சிலுவைப் போரை நிகழ்த்தவேண்டும் என்று அவர் வற்புறுத்தினர். தமது இராச்சியத்தின் விவகாரங்களைக் கவனிப்பதற்காக அவர் தமது மகன் அண்ட்ரோனிக்கஸைக் கான்ஸ்டான்ட்டிநோப்பிலில் விட்டுவந்தார். ரோமாபுரிக்கு வந்து, ஐந்தாம் அர்பன் என்ற போப்பினால் விதிக்கப்பட்ட மிக இழிவான நிபந்தனைகளுக்கு இவர் அடிபணிந்தார். ரோமாபுரித் திருச்சபையின் கொள்கைகளுக்கு மாறுபட்டிருந்த கிரேக்கத் திருச்சபைக் கொள்கைகளை அவர் கைவிட்டார்; சமய விவகாரங்களில் போப்பின் இறைமையை ஏற்றுக்கொண்டார். பிறகு அவர் போப்பிற்கு முன்னால் குனிந்து அவருடைய பாதங்களைத் தொடுவதற்கு அனுமதிக்கப்பட்டார்; போப்புடன் செல்வதற்கும் அனுமதிக்கப்பட்டார். இந்த இழிவான நிபந்தனைகளுக்கு ஈடாக அவர் போப்பிடம் எந்தச் சலுகையும் பெறவில்லை. உத்மானியர்களுக்கெதிராக மீண்டும் கிறித்தவர்களை ஆயுதங்களை எடுக்குமாறு வற்புறுத்தும் நிலையில் அப்பொழுது போப் பாண்டவர் இருக்கவில்லை.

பேரரசர் போப்பாண்டவருக்குக் கொடுத்த சலுகைகளைக் கான்ஸ்டான்ட்டிநோப்பிலில் உள்ள கிரேக்கத் திருச்சபையின் அதிகாரிகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்விரு திருச்சபைகளும் ஒன்றுக இணைவதற்கான வழியே பிறக்கவில்லை. பேரரசர் ஜான் பேலியோலோகஸ் எதையும் சாதிக்காது வெறும் கையுடனே நாடு திரும்பினர். திரும்பி வருகையில் வெனிஸ் நகருக்குள் புகுந்தவுடன் அவர் சிறையிலடைக்கப்பட்டார். அவருக்குக் கடன் கொடுத்திருந்த வெனிஸ் நகர வர்த்தகர்களின் தூண்டுதலின் பேரில் அவ்விதம் செய்யப்பட்டது. கடனைத் திருப்பிக் கொடுக்க இயலாததால் சட்டபூர்வமாக எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை அவரால் எடுக்க முடியவில்லை. தம் தந்தை கான்ஸ்டான்டிநோப்பிலுக்குத் திரும்பக்கூடாது என்றே அண்ட்ரோனிக்கஸ் விரும்பினர். பணத்தைச் செலுத்திப் பேரரசரை விடுவிப்பதற்கு அவர் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. கருவூலத்தில் பணம் இல்லை என்று அவர் கூறி விட்டார். ஆனால், பேரரசரின் இளைய குமாரரான இமானுவேல்

என்பவர் தம் சொத்துக்களையெல்லாம் விற்று, கிடைத்த பணத்தைக்கொண்டு தந்தையை விடுவித்தார். பேரரசர் கான்ஸ்டான்டிநோப்பிலுக்குத் திரும்பியவுடன் எல்லாப் பதவி களையும் அண்ட்ரோனிக்கஸ்லிடமிருந்து பறித்துக்கொண்டு அந்த இடத்தில் இமானுவேலை நியமித்தார்; அவரையே கூட்டுப் பேரரசராகவும் நியமித்துக்கொண்டார்.

தந்தையின் பெயரையே கொண்டிருந்த அண்ட்ரோனிக்க ஸின் மகன், தம் தந்தையைப் பாட்டனார் நடத்தியதைக் கண்டு சினமுற்று சுல்தான் முராதின் இளைய மகன் சௌத்ஜி (Soudgi) என்பவருடன் சேர்ந்து சதித்திட்டம் ஒன்றைத் தீட்டிப் பேரர சரையும் சுல்தானையும் பதவியிலிருந்து விலக்கித் தாமே அப் பதவிகளை ஏற்றுக்கொள்ள நினைத்தார். முராத் ஆசியாவி லிருந்தபொழுது ஐரோப்பாவில் சுல்தானின் படைக்குத் தலைமை தாங்கிய சௌத்ஜி, உத்மானியப் படைகளின் பற்றுதலை ஆட்டி வைத்து, கான்ஸ்டான்டிநோப்பிலின் அருகில் மாபெரும் படை ஒன்றைத் திரட்டிவிட்டார். இங்கு மற்றும் பல கிரேக்கப் படை வீரர்களும் பிரபுக்களின் படைகளும் அவருடன் சேர்ந்து கொண்டன.

இந்த மூடத்தனமான கிளர்ச்சியைப்பற்றி புருஸாவிலிருந்த முராத் கேள்வியுற்றதும் அவர் ஐரோப்பாவிற்கு விரைந்தார்; கிரேக்கப் பேரரசருடன் இணைந்து எதிர்ப்புக் காட்டினார். கிளர்ச்சி யாளர்கள் சிறையடைக்கப்பட்டால் அவ்விருவரும் குருடாக்கப் படவேண்டும் என்ற நிபந்தனைக்கு சுல்தானும் பேரரசரும் இணங்கினர். படையைத் திரட்டிக்கொண்டு சுல்தான் சௌத் ஜியின் படையை நோக்கி முன்னேறினார். படைக்கு மிக அருகாமையில் வந்தவுடன் மீண்டும் தங்களுடைய பணிக்குச் சென்றுவிடுமாறு இரவோடு இரவாக அவர் தம் வீரர்களுக்குக் கட்டளையிட்டார்; அவ்விதம் செய்தால் மன்னிப்பு அளிப்ப தாகவும் வாக்குறுதி அளித்தார். சுல்தானுடைய குரலைக் கேட்டுவிட்ட படைவீரர்கள் தம்முடைய துரோகச் செயலுக்கு மனம் வருந்தி, மூடத்தனமாக யாருக்கு ஆதரவு கொடுக்க முன் வந்தனரோ அவர்களைக் கைவிட்டுவிட்டனர். படைவீரர்களால் கைவிடப்பட்ட சௌத்ஜியும் அண்ட்ரோனிக்கஸ்ஸும் கிரேக்கப் பிரபுக்களும் தெமோட்டிகா அரணில் அடைக்கலம் புகுந்தனர். முராத் அவ்விடத்தையும் அத்துடன் இரு இளவரசர்களையும் எளிதாகவே கைப்பற்றிக்கொண்டார். பேரரசருடன் தாம் ஏற் கெனவே செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்தின்படி தம் மகனைத் தாமே குருடாக்கி, ஒப்பந்தத்தைச் சற்று மீறியே அவ்வினைவர

சரைத் தூக்கிலுமிட்டு விட்டார். கிரேக்கப் பிரபுக்களை இரண்டு மூன்று பேராகக் கட்டி அரிட்ஸா நதியில் போட்டுவிடுமாறு அவர் கட்டளையிட்டு, அவர்கள் நீரில் மூழ்கிச் சாவதை நேரில் கண்டு மகிழ்ச்சியுற்றார். தங்கள் மகன்களைப் பெற்றோரே கொல்லுமாறு அவர் கட்டளையிட்டாராம். அவ்விதம் செய்ய அவர்கள் மறுத்தபொழுது அவர்களையும் புதல்வர்களையும் சேர்த்து ஆற்றில் தள்ளிவிட்டாராம். இந் நிகழ்ச்சி தம் இனத்தாருக்கு இயல்பாகவே அமைந்திருந்த கொடூர குணத்தை முராதும் பெற்றிருந்தார் என்பதை உணர்த்துகின்றது. அவர் அண்ட்ரோனிக்கஸைப் பேரரசரிடம் ஒப்படைத்தார். பேரரசர் தம் பேரனை ஓரளவுதான் குருடாக்கினர்.

இந்த நிகழ்ச்சிகளின் விளைவாகப் பேரரசர் பேலியோலோகஸ் முராதுடன் மற்றொரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள நேரிட்டது. அதன்படி தமது வாழ்நாள் முழுவதும் தமது உடைமைகளை அனுபவிப்பதற்காகத் தாம் சுல்தானின் கீழாள் என்று அங்கீகரித்துக் கொண்டதோடு, உத்மானியப் படையில் பணிபுரிவதாகவும் வாக்குறுதி யளித்தார்; தம் மகன் இமானுவேலை முராதினிடம் பிணையாக நிறுத்தியும் வைத்தார். மரபெரும் பேரரசாக விளங்கி வந்த பைஸான்ஷியப் பேரரசு அந்தியில் இந்தக் கதியை ஏற்க நேரிட்டது.

2. மாஸிடோனியா பல்கேரியா மற்றும் செர்பியா ஆகிய இடங்களில் படையெடுப்புகளை நிகழ்த்துதல்

திரேஸ்ஸை உத்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டனர். கிறித்தவர்கள் மாரிட்ஸாப் போரில் கடுமையாகத் தோற்கடிக்கப் பட்டனர். இவையெல்லாம் பல்கேரியர்களுக்கும் கிரேக்கப் பேரரசுக்கும் பேரிடிகளாகவே இருந்தன. ஏட்டியாநோப்பிலைக் கைப்பற்றிக் கொண்டதனால் பல்கேரியா, மற்றும் மாஸிடோனியா ஆகிய பகுதிகளின் வாயில்கள் திறந்துவிடப்பட்டன. இருப்பினும், இந்தச் சாதகமான சூழ்நிலைகளை முராதால் 1386ஆம் ஆண்டுவரையிலும் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவ்வாண்டுதொட்டு அவர் பல தாக்குதல்களை நடத்தி, இறுதியில் மாஸிடோனியா, மற்றும் பல்கேரியா ஸெர்பியா ஆகியவற்றின் பெரும் பகுதி முதலியவற்றைத் தமது ஆதிக்கத்துக்குட்படுத்தினர். தீபகற்பத்தில் நிலவிய நிலைமை அவருக்கு மிகவும் சாதகமாக இருந்தது. பல்கேரியர்கள், ஸெர்பியர்கள், பாஸ்னியர்கள், கிரேக்கர்கள் ஆகியவர்களெல்லாம் ஒருவர்மீது ஒருவர்

கடும் பொருமை கொண்டிருந்தனர்; தம் பகைவர்களைவிட உத்மானியர்கள் விருத்தியடைவதையே ஒவ்வொருவரும் விரும்பினர். பல்கேரியா ஒன்றுபட்டிருக்குமாயின், அதுவே முராதைத் தடுப்பதற்குப் போதுமானதாக இருந்திருக்கக் கூடும். ஆனால், 1365-ல் அதனுடைய அரசர் அலெக்ஸாந்தர் என்பவர் இறந்து விட்டார். அவருடைய இராச்சியம் அவருடைய மூன்று மகன்களுக்கிடையே பிரிக்கப்பட்டது. மூத்தவரான சிஸ்மன் (Sisman) எல்லோரையும்விட அதிகமான பகுதியைப் பெற்றார். உத்மானியர்கள் தாக்கியபோது மற்ற இரு சகோதரர்களும் எவ்வித உதவியையும் சிஸ்மனுக்குக்கொடுக்கவில்லை. 1366ஆம் ஆண்டுக்கும் 1369ஆம் ஆண்டுக்குமிடையே முராத் பல்கேரியாவுக்குள் முன்னேறி ரோடோப் மலைகள்வரை பரவியிருந்த மாரிட்ஸா சமவெளியைக் கைப்பற்றிக் கொண்டார். 1371-ல் சமகாஃப் (Samakof) என்ற இடத்தில் லால்ஷாவின் பல்கேரிய-ஸெர்பிய படையொன்றைக் கடுமையாகத் தோற்கடித்தார். இதன் விளைவாக பால்கன் மலைத் தொடர்வரையிலிருந்த பல்கேரியப் பகுதி உத்மானிய பேரரசுடன் இணைத்துக் கொள்ளப் பெற்றது. அடுத்த ஐந்நூறு ஆண்டுகள் வரையிலும் அது உத்மானியர்களின் வசப்பட்டே இருந்தது.

சமகாஃபில் பெற்ற வெற்றி உண்மையில் மாபெரும் வெற்றியாகும். இவ் வெற்றிக்குப் பிறகு, பால்கன் மலைத்தொடரின் வட பகுதியில் பல்கேரியாவின்மீது படையெடுப்பு நடத்தாது, மேற்கு நோக்கிச் சென்று எவ்ரினஸ்ஸுடன் சேர்ந்து கொண்டு வர்டார் நதி (Vardar River) வரை பரவியிருந்த மாஸிடோனியாவின்மீது படையெடுப்பு நடத்துமாறு லால்ஷாவினுக்கு முராத் உத்தரவிட்டார். இத் தொழிலில் இரு படைத் தலைவர்களும் 1371-72 ஆண்டுகளில் முனைந்திருந்தனர். காவல்லா (Kavalla) டிருமா (Druma) செர்ரெஸ் (Serres) ஆகியவை யெல்லாம் அவர்கள் வசமாயின. 1372-ல் அவர்கள் வர்டார் நதியைக் கடந்து பழைய ஸெர்பியா, அல்பேனியா, பாஸ்னியா ஆகியவற்றில் நுழைந்தனர். ஆனாலும் ஸெர்பியாவின் முக்கிய பாகம் அதன் அரசரான லாஸரிடமே (Lazar) இருந்தது. இருப்பினும், அவரும் சுல்தானின் இறைமைக்கு அடிபணிய வேண்டியே இருந்தது. இணைத்துக் கொள்ளப்படாத பல்கேரியப் பகுதியைப் பொறுத்தவரையிலும், அதனுடைய அரசரான சிஸ்மன் சுதந்திரமாக வாழ அனுமதிக்கப்பட்டார். அவருடைய மகள் முராதின் அந்தப்புரத்தில் சேர்ந்துவிட்டாள். 1881ஆம் ஆண்டு வரையிலும் முராத் மௌனம் சாதித்துப் பிறகு தமது படைகளை வர்டார் நதியைக் கடக்க வைத்து, மொனஸ்டிர்ரைக் (Monastir)

கைப்பற்றிக் கொண்டார். அவர் சோஃபியாவையும் (Sofia) 1386-ல் நிஷ்ஷையும் (Nisch) கைப்பற்றிக் கொண்டார்.

3. சின்ன ஆசியாவில் முராதின் வெற்றிகள்

1376ஆம் ஆண்டுக்கும் 1380ஆம் ஆண்டுக்குமிடையே இருந்த இடைக் காலத்தில் முராத் தமது கவனத்தைச் சின்ன ஆசியா மீது திருப்பினர். முதலாண்டில் அவர் போரிடுவதாக அச்சுறுத்தி, கெர்மியாவின் அமீரை அவருடைய மகளைத் தம் மகன் பேஎஜீத் (Bayezid) என்பவனுக்குத் திருமணம் செய்து வைக்குமாறு கட்டாயப்படுத்தினர். அந்தப் பெண்மணி கெர்மியாவையும், மிக்க முக்கியத்துவம் வாய்ந்த கௌட்டாயியா (Kautayia) என்ற அரணையும் சீதனமாகக் கொண்டு வந்தாள். இதைத் தொடர்ந்து சுல்தான் முராத், ஹமீதின் அமீரை அக்ஷேர் (Ak-Sheir) மாவட்டம் உட்பட்ட டெக்கே (Tekke) கெர்மியா (Kermia) மற்றும் கரமானியா (Karamania) ஆகிய வற்றுக்கிடையிலிருந்த அவரது இராச்சியத்தின் ஒரு பகுதியைத் தமக்கு விற்றுவிடுமாறு 1377-ல் கட்டாயப்படுத்தினர். இந்தச் சேர்க்கைகளின் விளைவாக அவரது இராச்சியம் கரமானியா வரையிலும் வியாபித்திருந்தது. மீண்டும் 1378-ல் அவர் டெக்கேயின் அமீருடன் போர் தொடங்கி, அதாலியா (Adelia) என்ற பகுதியை அவரிடமே விட்டுவிட்டு மற்றப் பகுதியைத் தம் இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டார்.

1387-ல் முராத் கரமானியாவின் அமீர் அலாவுத்தீன் என்பவரைத் தாக்கினர்; கிரேக்கப் பேரரசரையும், ஸெர்பியா பல்கேரியா ஆகியவற்றின் அரசர்களையும் தமக்குப் படைகளை அனுப்பி வைக்குமாறு கோரினர். அவருடைய மகன்களான பேஎஜீத், யாகூப் (Yakub) ஆகிய இருவரும் படைகளுக்குத் தலைமை வகித்தனர். படை செல்லும் மாவட்டங்களிலுள்ள விவசாயிகளைத் திருப்திப்படுத்துவதற்கும், தமது படைக்குத் தேவைப்படும் பொருள்களையெல்லாம் பெறுவதற்கும் தம் வீரர்க்குக் கொள்ளையடிக்கக் கூடாதென்றும் மக்களின் உயிரும் சொத்தும் நாசப்படுத்தப்படக் கூடாவென்றும் அவர் கடும் உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார். ஆனால், அவருடைய படை யிலிருந்த இரண்டாயிரம் ஸெர்பியப் படைவீரர்கள் அவ்வாணை களை ஏற்க மறுத்துவிட்டு, வழியிலெல்லாம் பல அட்டூழியங்களைப் புரிந்தனர். முராத் அவர்களை மிகக் கடுமையாகத் தண்டித்து, பலரைத் தூக்கிலுமிட்டார். பிறகு, படை கரமானியர்களைத் தாக்கச் சென்றது. அங்கோர் சமவெளியில் மீண்டும் ஒரு போர்

நிகழ்ந்தது. பேஎஜீத் தம் குதிரைப் படைகளைக் கொண்டு, மிகவும் கடுமையாகப் போரிட்டார். இதனல் அவருக்கு 'இடி யேறு' என்ற பெயரும் வழங்கப்பட்டது.

முராத் பெற்ற வெற்றிகளில் இதுவும் மாபெரிதாகும் என்று சில வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். இருப்பினும், இதனல் பெருத்த லாபம் எதுவும் விளேயவில்லே. கரமானியா சுதந்திர வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்த அனுமதிக்கப்பட்டது.

எழுபது வயதினராகி விட்டதனல் ஓய்வு பெற விரும்பிய முராத் ஸெர்பியர்களின் கிளர்ச்சியின் விளேவாக மீண்டும் ஐரோப்பாவிற்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது. ஸெர்பியப் படைவீரர்களுள் உயிருடன் திரும்பியவர்கள், கரமானியாவிற் குச் செல்லுகையில் வழியில் தமக்கு ஏற்பட்ட அவல நிலேயைப் பற்றித் தம் நாட்டினரிடம் கூறியபோது, அது எங்கும் சினத்தை யும் பரபரப்பையும் ஊட்டியது. ஆகவே, ஸெர்பியா முழுதுமே கிளர்ந்தெழுந்தது. பல்கேரியா, பாஸ்னியா, அல்பேனியா ஆகியவையெல்லாம் ஒன்றுக இணேந்தன. ஹங்கேரி, வலாச் சியா ஆகிய பகுதிகளிலிருந்தும் உதவி கிட்டியது. முராத் உத்மானியப் படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு, பால்கன் மலேப்பிரதேசங்களேயும் கடந்து சென்று, ஷும்லா (Schumla) திர்னேவா (Tirnova) ஆகியவற்றையும் கைப்பற்றிக் கொண்டு, பிறகு டான்யூப் நதியை நோக்கி முன்னேறினர். பல்கேரியா வின் அரசர் சிஸ்மன் நைக்கோபோலிஸ் என்ற நகரில் ஒளிந்து கொண்டார். ஆனல், விரைவில் அவர் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள நேரிட்டது. சிலிஸ்டிரியாவைத் துருக்கியர்களிடம் ஒப்படைப்பதாகவும், வருங்காலத்தில் அவர்களுக்குக் கப்பம் செலுத்துவதாகவும் அவர் வாக்குறுதி கொடுத்தார்.

கூட்டணியிலிருந்து பல்கேரிய அரசர் இவ்விதம் பிரிந்து சென்று விட்டாராயினும், ஸெர்பியாவின் அரசர் லாஸர் என்ப வர் போரைத் தொடர்ந்து நடத்தினர். எழுபது வயதடைந்த வராகிவிட்ட போதிலும், முராத் படையைத் திரட்டினர். முன் போலவே இப்பொழுதும் அவருடைய இரு குமாரர்களும் அவருக்கு ஆதரவு கொடுத்தனர். போர் கொஸ்ஸோவோ (Kossovo) என்ற இடத்தில் நடைபெற்றது. இது ஸெர்பியாவும் பல்கேரியாவும் சந்திக்குமிடத்தில் அமைந்துள்ளது. போர் மிக வும் கடுமையாக நடைபெற்றது. மிக நெருக்கடியான சமயத் தில் மிலோஷ் (Milosch) என்னும் ஸெர்பியப் பிரபு ஒருவர் சுல்தானே மிக அவசரமாகச் சந்திக்க வேண்டுமென்று கூறி, அவரை அணுகி, வணக்கம் தெரிவிப்பதாகப் பாவனே செய்து,

திடீரென்று கத்தியால் குத்திவிட்டார். சுல்தான் படுகாய முற்றார். மிலோஷ் தப்பி ஓட முயன்றும், முடியவில்லை. சுல்தான் அவருடைய கூடாரத்திற்குக் கொண்டு வரப்பட்டார். பலத்த காயம் ஏற்பட்டிருந்த போதிலும் சுல்தான் சற்றும் தளராமல் உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டே, தம் படைகளுக்கு வெற்றியைத் தேடித் தந்தார். ஸெர்பியர்களும் அவர்களுடைய ஆதரவாளர்களும் அடியுடன் முறியடிக்கப்பட்டனர். லாஸர் சிறைபிடிக்கப்பட்டார். அவரும் சுல்தானுடைய கூடாரத்திற்குக் கொண்டு வரப்பட்டார். மிலோஷையும் லாஸரையும் தூக்கிலிட்டதற்குப் பிறகுதான் சுல்தான் உயிர் நீத்தார்.

அவரது ஆட்சிக்காலம் உத்மானியப் பேரரசின் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இருபத்து நான்கு ஆண்டு காலமாகத் தம் படைகளைத் தாமே நேரில் நடத்திச் சென்று அயராமல் புரிந்த போர்களில் அவர் தோல்வி என்பதையே கண்டதில்லை. முதன் முதலாக அவர் தம் பேரரசைப் பற்பல பகுதிகளில் விஸ்தரித்தார். அதில் துருக்கியர்கள் அல்லது பைஸான்ஷியர்கள் மட்டுமே குடியிருக்கவில்லை; ஸெர்பியர்கள், பல்கேரியர்கள் மற்றும் பாஸ்னியர்கள் போன்ற கட்டுறுதி வாய்ந்த கிறித்தவ இனத்தினர் பலரும் அதில் குடியிருந்தனர். இவர் காலத்தில்தான் முதன் முதலாகத் துருக்கியர்களுக்கும் ஹங்கேரிய மக்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. துருக்கியர்கள் ஹங்கேரியர்களைத் தோற்கடித்தனர். பேரரசின் செல்வாக்கு டான்யூப் நதிவரையிலும் பரவிற்று. நடுவில் இருந்த அன்னியரின் ஆட்சிப் பகுதி வெல்லப்பட்ட நாடாகக் கருதப்பட்டு, பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்படவில்லை. ஸெர்பியா போன்ற நாடுகள் சுதந்திர நிலையிலேயே விட்டு வைக்கப்பட்டன. அவை கப்பத்தை மட்டும் செலுத்திவந்தன. திரேஸ், மாஸிடோனியா, பல்கேரியா போன்ற இதர பகுதிகள் சுல்தானின் இராச்சியத்துடன் இணைத்துக்கொள்ளப் பெற்றன.

போரில் ஈடுபட்டிராத வேளைகளில் முராத் தம் தந்தை காட்டிய வழியே சென்று தமது படைகளை மேலும் ஒழுங்கு படுத்திக்கொண்டிருந்தார். புதிதான நிரந்தரப் படை ஒன்றையும் அவர் உருவாக்கினார். இப் படைக்குத் தேவைப்பட்ட வீரர்களை ஐரோப்பாவில் வெல்லப்பட்ட மாநிலங்களில் தங்கியிருந்த கிறித்தவ மக்களிடத்திருந்து அவர் திரட்டி எடுத்தார். இதுதான் ஜனிஸ்ஸரீகள் (Janissaries) என்று புகழ்பெற்று விளங்கிய புதுப் படையாகும்.[1] இதனை உருவாக்கியவர் ஓர்கான்

[1] ஜனிஸ்ஸரீ என்ற சொல் 'புதுக் காலாட் படை' (New Soldiery) என்று துருக்கி மொழியில் பொருளாம்.

என்று கருதுபவர் ஒரு சிலரும் உண்டு. வான் ஹாமெர்ரும் அவரைத் தொடர்ந்து மற்றும் பல வரலாற்றறிஞர்களும், குறிப்பாக சர் எட்வர்டு பியர்ஸ் (Sir Edward Pears) என்பவரும் இப் படையின் அமைப்பைப்பற்றிய விவரங்களையும் அதனை உருவாக்கியவருடைய நோக்கங்களையும் விளக்கி விவரித்துள்ளனர். பத்து வயதுக்கும் பன்னிரண்டு வயதுக்கும் இடைப்பட்ட ஓராயிரம் சிறுவர்கள் ஒவ்வோர் ஆண்டும் கிறித்தவக் குழந்தைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். கட்டுறுதி வாய்ந்தவர்களும் அறிவாளிகளும் மட்டுமே அவ் விதம் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அவர்கள் கட்டாயமாக இஸ்லாமியர்களாக மத மாற்றம் செய்யப்பட்டு, சுல்தானின் நேர்முகக் கண்காணிப்பில் இராணுவப் பயிற்சி அளிக்கப்பெற்றனர். ஆறு ஆண்டு கடுமையான பயிற்சிக்குப் பிறகு அவர்கள் தனிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்விதமாக அப் படையின் எண்ணிக்கை பன்னிரண்டாயிரமாக அதிகரித்தது. இப் படையின் ஒழுங்கு முறைக் கட்டுப்பாடு மிகக் கடுமையாக இருந்தது. உத்மானியப் படையிலேயே அது திறம்படைத்ததாகவும் நம்பிக்கைக்குரியதாகவும் இருந்தது. அதில் இருந்தவர்கள் படை முகாம்களையே தங்களது இருப்பிடமாகவும் பொழுதுபோக்கிற்கான இடமாகவும் கருதினர். அவர்களுடைய வாழ்நாளே அதற்கென அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. அவர்கள் சொந்தமாகச் சொத்து வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பெறவில்லை. பேரரசின் வரலாற்றில் நெடுங்காலம் வரையிலும் அவர்கள் மணம் புரிந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. போரில் அவர்கள் உத்மானியப் படைகளின் முதுகெலும்பாகவே இருந்தனர் என்று கூறுவது மிகையாகாது. கடும் போர்கள் பலவற்றில் பேரழிவும் தோல்வியும் ஏற்படவிருக்கும் தறுவாயில் அவர்கள் எதிரிகளைப் பயங்கரமாகத் தாக்கி, அப் படையைக் காப்பாற்றியுள்ளனர். இப் படையைக்கொண்டு தம்மை வலுப்படுத்திக்கொண்ட சுல்தான், தம்மீது தனிப் பற்றுக்கொண்டிருந்த போர் வீரர்களின் மூலம் தம்மைச் சூழ்ந்திருந்த எல்லாப் பயங்கரச் சதிகாரக் கூட்டத்தினரையும் அடக்கினார். இளம் பிராயத்திலேயே பெற்றோர்களிடத்திலிருந்து பிரிக்கப்பெற்று, கடும்பயிற்சி அளிக்கப்பெற்று, கட்டுறுதியும் ஒழுங்கும் பெற்றிருந்த இப் படையினருக்குப் பெற்றோர் உறவினர் என்று எவரும் இல்லை. சுயநலம் கிடையாது. தம்முடைய படையில் மேலும் மேலும் ராணுவப் பதவியில் உயரவேண்டும் என்ற ஒரு குறிக்கோள் மட்டுமே அவர்களை ஊக்குவித்துக்கொண்டிருந்தது. இது போன்ற ஒரு படையைப் பெற்றிருக்கும் எந்தத் தலைவனும் போரில் தோல்வி என்பதையே காணமுடியாது.

கிறித்தவப் பெற்றோர்களிடத்திருந்து ஆண் குழந்தைகளை எடுத்துக்கொண்ட செயல் மிகக் கடுமையும் கொடூரமும் வாய்ந்த தீர்வையாகவே அவர்களால் கருதப்பட்டது. இவ் விதமாக உருவாக்கப்பட்ட படை, அதை வைத்துச் சமாளிப்பதற்குத் தகுதி பெற்றிருந்த சுல்தான்களின் கரத்திடையே விலை உயர்ந்த சிறப்புமிக்க ஒரு கருவியாகப் பயன்பட்டது. பிற்காலத்தில் சுல்தான்கள் பலவீனமுற்றுச் சீர்குலைந்திருந்த சமயத்தில் அதுவே ஒரு பயங்கரக்கருவியாக மாறி, தலைவனையே விழுங்கக் கூடியதாக ஆகியும்விட்டது. எந்த சுல்தானைப் பதவியிலிருந்து விலக்கவேண்டும்; எவரை அப் பதவியில் அமர்த்தவேண்டும் என்பனவற்றை யெல்லாம் அதுவே நிர்ணயித்தது. போர்க் கொள்கையையே அது அடிக்கடி வற்புறுத்திற்று. கிறித்தவக் குழந்தைகளிலிருந்துதான் இப் படையினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இருந்த நிர்ப்பந்தம் 1648-ல் நான்காம் முகம்மதுவின் (Mohamed IV) காலத்தில் விலக்கப்பட்டுவிட்டது. ஜனிஸ்ஸரீகளின் மகன்களும் முஸ்லிம்களின் மகன்களும் அதில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பின்னரில் கிறித்தவக் குழந்தைகளைத் தேர்ந்தெடுக்கும் முறையே கைவிடப்பட்டு, முஸ்லிம்களின் மகன்கள் மட்டுமே அப் படையில் சேர அனுமதிக்கப் பட்டனர். சுலைமானின் காலத்திற்குப் பிறகு அதனுடைய எண்ணிக்கை பெருகலாயிற்று. அது அரசுக்கே ஒரு பேராபத்தாகிவிட்டது. இரண்டாம் மகமூதும் அவருக்கு முன்பு ஆட்சி புரிந்த சுல்தான்களும் அனுபவித்த இன்னல்களுக்காக அந்த சுல்தான் அப் படையினர் மீது 1826-ல் மிகக் கடுமையாக வஞ்சம் தீர்த்துக்கொண்டு முழுப் படையையுமே பாழடித்து விட்டார்.

இவ்விதமான படை ஒன்றை முராத் உருவாக்கி அதனைச் சிறந்த ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொண்டார். அடுத்த இருநூறு ஆண்டு காலம் வரையிலும் அந்தக் கருவி உத்மானியப் பேரரசின் ஆக்கிரமிப்புகளில் மிக முக்கியப் பங்குபெற்றது. உத்மானியப் பேரரசின் துரிதமான விஸ்தரிப்பிற்கு அது ஒரு முக்கிய காரணமாயிற்று.

அவருடைய குணாதிசயங்களைப் பொறுத்தவரை, அவர் மற்றத் துருக்கிய அரசர்களைவிட முனைப்பார்வலராக விளங்குகின்றார். அவர் பெரும் ஆற்றல் படைத்தவர்; எல்லா முயற்சிகளிலும் வெற்றி கண்டவர். அவருடைய தந்தையும் பாட்டனாரும் எதிரிகளைக் கொன்றதைவிட அதிகமாகவே அவர் கொன்றுள்ளார். வாள்பலத்தைக் கொண்டும், திருமணத் தொடர்புகளைக்

கொண்டும், விலை கொடுத்தும் அவர் தமது பேரரசின் எல்லைகளை விஸ்தரித்துக்கொண்டார். கிரேக்க இளவரசர்களுக்கிடையே ஏற்பட்டிருந்த பிளவுகளையும் பிணக்குகளையும் அவர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு திரேஸின் பெரும் பகுதியையும் அதைச் சுற்றியிருந்த நிலப்பரப்புகளையும் தமது நாட்டு எல்லையுடன் சேர்த்துக்கொண்டார். திரேஸில் கான்ஸ்டான்ட்டி நோப்பிலைத் தவிர மற்றெதையும் அவர் (கிரேக்கப்) பேரரசரின் கையில் விட்டு வைக்கவில்லை. பேரரசு எதுவுமில்லாமலேயே அக்கிரேக்கர் 'பேரரசர்' என்றழைக்கப்பட்டார். முராத் பல்கேரியாவின் பெரும் பகுதியை வென்று ஸெர்பியா, பாஸ்னியா, மற்றும் மாஸிடோனியா ஆகியவற்றுக்குள் புகுந்தார். அவர் தாராள மனப்பான்மை படைத்தவர்; அதே சமயத்தில் கடுமையாகவும் நடந்துகொள்ள அவர் தவறியதில்லை. அவருடைய குடிமக்கள் அவரை விரும்பினர்; அதே சமயத்தில் அவரைக் கண்டு அஞ்சினர். அவர் ஒரு சில வார்த்தைகளையே பேசுபவர். இருப்பினும், அந்த ஒன்றிரண்டு வார்த்தைகளே மிக ஆழமாகப் பதியக் கூடியவையாக இருக்கும்.

இவ் விதமாக முதலாம் முராதின் காலத்தில் பால்கன் பகுதிகள் இடையருமல் தாக்கப்பட்டன. உத்மானியப் படைகள் படிப்படியாகப் படையெடுத்துச் சென்று, மாரிட்ஸா வர்டார் நதிகள் பாயும் பள்ளத்தாக்குகளைத் தம் வசப்படுத்திக்கொண்டு அல்பேனியாவையும் ஏட்ரியாட்டிக் கடற்கரை வரை பரவி இருந்த பகுதியையும் கொள்ளையடித்தன. 1389-ல் புகழ்மிக்க கொஸ்ஸோவோ போர்க்களத்தில் ஸெர்பியர்களின் தலைமையில் கூடிய கூட்டணியை முராத் முறியடித்தார். பால்கன் தீபகற்பத்தின் மத்தியப் பகுதி இப்பொழுது துருக்கியர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுவிட்டது. கான்ஸ்டான்ட்டிநோப்பில் பெரும்பாலும் தனித்தே இருக்கவேண்டியதாயிற்று. சிலுவைப் போரை மீண்டும் நிகழ்த்த வேண்டிப் போப்பாண்டவர் விடுத்த வேண்டுகோள்களும், ஹங்கேரியர்கள் ஆயுதம் தாங்கி அளித்த எதிர்ப்பும் பயனற்றனவாய்ப் போய்விட்டன. கான்ஸ்டான்ட்டி நோப்பிலுக்கு அருகாமையிலிருந்த ஏட்ரியாநோப்பிலுக்குத் துருக்கியரின் தலைநகரம் மாற்றிக் கொள்ளப்பட்டது (1365-66).

சிறிய சிற்றரசு நாடாக இருந்த ஒரு குறுநிலம் நூறு ஆண்டுகளுக்குள்ளாக இரு கண்டங்களில் ஆட்சி நிலவும் பகுதிகளைப் பெற்ற ஒரு பெரும் இராச்சியமாக மாறியதற்கான காரணங்கள் பலவாம். எவ் விளக்கமும் நிரந்தரமானது என்று கூறுவதற்

கில்லையாயினும், ஒருசில காரணங்கள் வெட்ட வெளிச்சமாகத் தென்படுகின்றன. உத்மானியர்களுக்கு ஏற்பட்டிருந்த எதிர்ப்புப் படுமோசமாகப் பிளவுபட்டதாக இருந்தது. ஸெர்புகள், பல்கார்கள், பைஸான்ஷியர்கள் ஆகிய இவர்களனைவருமே பெரும் ஆபத்தும் நெருக்கடியும் ஏற்பட்ட போதுங்கூட ஒன்று பட முன்வரவில்லை. பழைய கிரேக்க வரலாற்றின் கிரேக்கர்களும் இந்திய வரலாற்றின் இராசபுத்திரர்களும் போலவே இக்கிறித்தவ நாடுகளும் ஒன்றுபடவில்லை. தமது பகைவரைவிடச் சற்று அதிக இலாபங்களையும் சலுகைகளையும் பெற அந் நாடுகள் சுயநலத்துடன் தனித்து நின்றே உத்மானியர்களை எதிர்க்க விரும்பின. இலத்தீன் மேலைப் பகுதி உதவி அனுப்பி இருக்கக் கூடும்; ஆனால், அதுவும் பிளவுபட்டே இருந்தது. பல ஆண்டு கட்கு முன்பு தீவிர உணர்ச்சியை ஊட்டிவிட்ட சிலுவைப் போர்களுக்கிருந்த ஊக்கமும் ஆர்வமும் இப்பொழுது காணப்படவில்லை. ஃபிரான்சும் இங்கிலாந்தும் ஒன்றை ஒன்று எதிர்த்து நின்றன. வெனிஸ் நகரும் ஜினேவா நகரும் எதிர் எதிராக மிகக் கடுமையான போட்டியில் ஈடுபட்டிருந்தன. ரோமர்களின் திருச்சபையும் பிளவுபட்டுப் பலவீனமுற்றிருந்தது. இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் உத்மானியர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். தவிரவும், 1347-ல் கிரீமியா விலிருந்து (Crimea) கான்ஸ்டான்ட்டிநோப்பிலுக்குப் பரவிய 'கறுப்பு மரணம்' (Black Death) என்ற கொள்ளைநோய் அடுத்த ஐந்து ஆண்டு காலத்தில் ஐரோப்பா முற்றிலுமே பரவி, கிரேக்கர்களையும் மற்றுமுள்ள ஐரோப்பிய மக்களையும் கொடுமைப் படுத்தியது; ஆனால், அதே வேளையில் துருக்கியர் அதிலிருந்து தப்பித்துக்கொண்டனர். மேலும், உத்மானியர்கள் ஐரோப்பாவினுள் நுழைவது அவ்வளவு கடினமானதாக இருக்கவில்லை. ஐரோப்பிய நாடுகளைக் கொள்ளையடித்துப் பெரும் பொருள் களைத் திரட்டலாம் என்ற ஆசையும் உத்மானியர்களை ஊக்குவித்தது. தவிர, ஒருசில பால்கன் மக்களுக்கு, பைஸான்ஷிய ஆட்சியைவிடத் துருக்கியருடையது எவ்வளவோ தாராளத் தன்மையுள்ளதாகக் காணப்பட்டிருக்கக்கூடும். ஆரம்பத்தில் துருக்கியர்கள், கிறித்தவர்கள் அவர்களுடைய கிறித்துவ சமயத்தைத் தொடர்ந்து பின்பற்றச் சலுகைகள் பல வழங்கினர்கள். ஆங்காங்கே மத மாற்றங்கள் செய்யப்பட்டன என்பதை மறுக்க முடியாது. இருப்பினும், பொதுவாகத் துருக்கியர்கள் தமக்குக் கப்பமும் தீர்வைகளும் செலுத்தியவர்களிடம் சமய விஷயங்களில் விட்டுக்கொடுக்கும் தன்மையுடன் தாம் நடந்துகொண்டனர்.

உத்மானியர்கள் அடைந்த மகத்தான பெருவெற்றிகளுக்கு அவர்கள் புறத்திலும் சில முக்கிய காரணங்கள் இருந்தன. ஆரம்பத்தில் உத்மானியர்கள் தமது இஸ்லாமிய மதத்தைக் கிறித்தவர்களுக்கிடையே பரப்பும் நோக்கத்தில் ஊக்குவிக்கப் பட்டிருக்கவேண்டும். ஆனல், காலப் போக்கில், பிற நாடு களுக்குச் சென்று கொள்ளேப் பொருள்களே வாரி எடுத்து வரவேண்டும் என்னும் நோக்கமே அவர்களே அதிகமாக ஊக்கு வித்திருக்கவேண்டும். தவிர, உத்மானிய குடும்பத்தில் சிறந்த தலேவர்கள் பலர் தோன்றினர். பொதுவாக, அவர்கள் நெடு நாட்கள் வரையில் தொடர்ந்து ஆட்சியும் புரிந்தனர். ஒவ்வொருவரும் நீண்ட நாட்கள் ஆட்சி புரிந்துகொண்டிருந்த தனுல், அரசும் நிலேபெற்றிருந்தது; வெளிநாடுகளுடன் போர்களே நடத்துவதற்கும் உள்நாட்டில் அமைதியையும் சிறப் பான ஆட்சியையும் நிலேநாட்டுவதற்கும் அது ஏதுவாக இருந்தது. மேலும், உத்மானியர்களுடன் போட்டியிட்டுக் கொண்டிருந்த இதர அமீர்கள் கிழக்கில் சற்றுத் தொலேவிலேயே இருந்தனர். அவர்களுள் ஒரு சிலருடைய ஆட்சிப் பகுதிகள் திருமணத் தொடர்புகள் ஏற்பட்டதன் காரணமாக உத்மானியர் களின் அதிகாரஎல்லேக்கு உட்பட்டுவிட்டன. கடற்கரையிலிருந்து உட்புறமாகத் தொலேவிலிருந்த உள்நாட்டுப் பகுதிகள் பல 'உலமா'க்களே (இஸ்லாமிய சமய அறிஞர்களே) உலகுக்கு அளித்தன. அவர்களும் செல்ஜூக்கியர்களும் நிர்வாக அனுபவம் பெறுவதற்கு அப் பகுதிகள் மிகவும் சாதகமாயிருந்தன. கிறித்த வர்களின் நிலேக்கு முற்றிலும் மாறுக, உத்மானியர்களுக்கிடையே ஒற்றுமை உணர்ச்சி மிகவும் அதிகமாகவே இருந்தது. 'ஒன்று பட்டால்தான் உண்டு வாழ்வு; இல்லேயென்றுல் தாழ்வு' என்ற உண்மையை அவர்கள் மிகத் தீவிரமாக உணர்ந்திருந்தனர். ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், ஜனிஸ்ஸரீப் படையும் உத் மானியர்களுக்குப் பலம்நல்கும் சிறந்த கருவியாயியங்கிற்று. அப் படையினரின் ஆற்றல், துணிச்சல், தளராமல் போர் புரியும் அஞ்சா நெஞ்ச ஆற்றல் ஆகியவையெல்லாம் உத்மானியர் களுக்கு மகத்தான வெற்றிகளே வாங்கிக் கொடுத்தன என்று கூறுவதில் மிகை இருக்க முடியாது.

5. முதலாம் பேஜீத் (1389-1403)

(Bayezid I)

கொஸ்ஸோவோ போர்க்களத்தில் காயமுற்ற முராத் மரணப் படுக்கையிலிருந்தவாறு தம் கடும் பகைவரான லாஸரைக் கொல்லுமாறு உத்தரவிட்டுக் கொண்டே உயிர் நீத்தார். தம் தந்தையின் மரணத்தைப்பற்றியும் அதன் விளைவாகத் தாமே சுல்தானாகி விட்டதையும் கேள்வியுற்ற பேஜீத் தம் சகோதரர் யாகூபை உடனே கொல்லுமாறு உத்தரவு பிறப்பித் தார். யாகூப் பல போர் முனைகளில் வெற்றிகரமாகப் போர் புரிந்தவர். இருப்பினும், அவரால் தம் நிலைக்கு வருங்காலத்தில் ஏதாவது நிகழக் கூடும் என்று அஞ்சிய பேஜீத் அவ்வித ஆணையைப் பிறப்பித்தார். இச் செயலுக்குத் திருக் குர்ஆனி லிருந்து வாசகம் ஒன்றும் மேற்கோள் காண்பிக்கப்பட்டது: 'தூக்கிலிடுவதைவிடக் கிளர்ச்சி செய்தலானது மிகவும் மோச மானது.' பின்னுளில் யாகூப் உத்மானிய சிம்மாசனத்திற்கு உரிமை பாராட்டக் கூடும் என்று பேஜீத் நினைத்தார். ஆகவே, இறந்து கிடந்த தந்தையின் முன்னிலையிலேயே அவர் தம் சகோதரரை வீழ்த்திவிட்டார். உத்மானிய அரச குடும்பத்தில் இதுதான் முதன் முதலாக நடந்த உடன்பிறப்புக் கொலையாகும். இக் காலந்தொட்டு, துருக்கியில் சுல்தான் பட்டத்திற்கு வந்த வுடன் தம் சகோதரர்களையும், மற்றும் உரிமையாளர்களையும் சிம்மாசனத்திற்கு உரிமை பாராட்டுவதைத் தடுக்கும் நோக்கு டன் கொலை செய்வது பழக்கமாகி விட்டது. நாளடைவில் இப் பழக்கமே உத்மானிய வமிசம் வீழ்ச்சியுறுவதற்கான ஒரு முக்கிய காரணமாயிற்று.

பட்டத்திற்கு வந்தபோது பேஜீதுக்கு வயது முப்பத்து நான்காக இருந்தது. அவர் பதினான்கு ஆண்டு காலமே ஆட்சி புரிந்தார்; கடைசி நாட்களைச் சிறையில் கழித்தார். இவரைப்

போன்று மற்றெந்த உத்மானிய அரசரும் மிகச் சிறப்பான வெற்றிகளைப் பெற்றுப் பிறகு கடுந்தோல்வி யடைந்ததில்லை. தமக்கு முன் ஆட்சிபுரிந்த மூவரிடத்திலும் காணப்பட்ட ஆற்றல் இராணுவத்திறன் ஆகியவற்றையெல்லாம் இவர் பெற்றிருந்தார். கொடுமை இழைப்பதில் அவர்களையெல்லாம் இவர் மிஞ்சி இருந்தார். அவருடைய சொந்த வாழ்க்கையில் சிற்றின்பத்தில் அவர் மிகவும் மோசமாக மூழ்கிக் கிடந்தார்.

முராத் சரியெனக் கருதிக் கையாண்ட கொள்கையைவிடச் சற்று அதிக துணிச்சல் மிக்க கொள்கையையே இவர் தமது ஆட்சியின் துவக்கத்தில் ஐரோப்பிய கிறித்தவ நாடுகளைப் பொறுத்தவரை கையாண்டார். வர்த்தகச் சலுகைகளைப் புதிதாக்கும் நோக்கத்துடன் இவரை அணுகிய ஓர் இத்தாலியத் தூதுக் குழுவினரிடம், தாம் ஹங்கேரியைக் கைப்பற்றும் பொழுது ரோமாபுரிக்குக் குதிரை மீதேறி வருவதாகவும் அங்கே அக் குதிரைக்குத் தீனியாகப் புல்லரிசியை (Oats) செய்ன்ட் பீட்டர்ஸ் திருச்சபையின் புனிதப் பீடத்தின் மேலேறிக் கொடுக்கப் போவ தாகவும் இவர் விடை யளித்தார். இவர் கிறித்தவர்களை நடத்திய வகை இவருடைய முன்னோர் கையாண்ட வகையைவிடக் கொடூரமாக இருந்தது.

கொஸ்ஸோவோவில் தம் தந்தை முராத் பெற்ற பெரும் வெற்றியைத் தொடர்ந்து, இவர் ஸெர்பியாவில் லாஸருக்குப் பிறகு வந்த ஸ்டீபனை அமைதி ஏற்படுத்திக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தினர். அப்பொழுது செய்து கொள்ளப்பட்ட அமைதி ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் சற்றுக் கடுமையற்றன வாகவே இருந்தன. பல்கேரியாவைப் போலல்லாது, ஸெர்பிய நாடு உத்மானிய பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்படவில்லை; உத்மானியர்களின் கீழ்க் கப்பம் செலுத்துகின்ற, ஆனாலும் சுயாட்சி பெற்ற நாடாக அது அங்கீகரிக்கப்பட்டது. ஐயாயிரம் படை வீரர்களை அது சுல்தானுக்கு அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. ஸ்டீபன் தம் சகோதரி டெஸ்பினுவை (Despina) சுல்தானுக்குத் திருமணமும் செய்து வைத்தார். இத் திருமணம், இரு தரப்பினரும் பொறுத்தவரை, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனால் பேஎஜீதுக்குப் பல நலன்கள் ஏற்பட்டன. தம் வாழ்நாள் முழுவதும் அவர் டெஸ்பினுவுடன் மிக்க பற்றுதலுடன் நடந்து கொண்டார். அது போன்றே அவருடைய மைத்துனர் ஸ்டீபனும் சுல்தானிடம் விசுவாசமும் நட்பும் கொண்டிருந்தார். ஸெர்பியர்கள் உஸ் மான்லிகளுடன் நட்புக் கொண்டிருந்து நைக்கோபோலிஸ்

(Nicopolis) மற்றும் அங்கோரா ஆகிய இடங்களில் அவர்களுடைய கட்சியில் மிகத் தீவிரமாகப் போர் புரிந்தனர். இதற்குக் கைம்மாறாக சுல்தானும் ஸெர்பியர்களுக்கு மேலுக்கு வருவதற்குப் பல வாய்ப்புகளையும் உண்டுபண்ணிக் கொடுத்து, அல்பேனியர்கள், டால்மேடியர்கள், ஹங்கேரியர்கள் ஆகியவர்களைக் கொள்ளையடித்துப் பெறப்பட்ட பொருள்களைப் பங்குபோட்டுக் கொடுத்ததுடன் கிரேக்க வைதிகத் திருச் சபையையும் ஆதரித்தார்.

ஸெர்பியர்களுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்ட பேஎஜீத் தம் படையுடன் தெற்குப் பகுதியில் முன்னேறி, கான்ஸ்டான்ட்டிநோப்பிலுக்கு மிக அருகாமையில் இருந்து அச்சுறுத்திக் கொண்டிருந்தார். அந்த நகரை வயது முதிர்ந்த ஜான் பேலியோலோகஸ் என்பவரே இன்னும் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். இமானுவேல் என்ற அவர் மகனை கூட்டரசரும் அவருக்கு ஆதரவாக இருந்தார். அரைக் குருடானவராகவே ஆக்கப்பட்டிருந்த அண்ட்ரோனிக்கஸுக்கு (கிரேக்க)ப் பேரரசருக்கெதிராக ஆதரவு கொடுக்கப் போவதாக சுல்தான் அச்சுறுத்தி, அவ்விரு பேரரசர்களையும் ஒப்பந்தம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினர். அவ் வொப்பந்தத்தின்படி, எஞ்சியிருந்த கிரேக்கப் பேரரசு உத்மானியர்களின் அடிமை நாடாயிற்று. ஆண்டுதோறும் முப்பதினாயிரம் தங்க நாணயங்களைக் கப்பமாகச் செலுத்தவும், சுல்தானின் விருப்பப்படி அவர் பயன்படுத்திக் கொள்வதற்காகப் பன்னிரண்டாயிரம் படை வீரர்களைக் கொண்ட சேனை ஒன்றை சுல்தானுக்கு அளிக்கவும் அப் பேரரசர் ஏற்றுக் கொண்டார். சின்ன ஆசியாவில் பைஸான்ஷியரின் வசத்திலிருந்த ஃபிலடெல்ஃபியா (Philadelphia) என்ற அரணையும் கொடுத்து விடுவதாகப் பேரரசர் வாக்குறுதி யளித்தார். அதைப் பாதுகாத்து வந்த படைத் தலைவர் அதை சுல்தானிடம் சரணடையச் செய்ய மறுத்ததும், கிரேக்கப் பேரரசரே தம் படையைக் கொண்டு அதைக் கைப்பற்றித் தம்மிடம் தர வேண்டுமென்று சுல்தான் வற்புறுத்தினர். அவ்வளவு தாழ்வான கேவல நிலையை அடைந்திருந்த பைஸான்ஷியப் பேரரசை பேஎஜீத் மேலும் ஒரு செயலைப் புரிந்து அதனை இன்னும் அதிக இகழ்ச்சிக்குள்ளாக்கினர். இமானுவேலுக்கென்று அந்நிய நாட்டுக் கப்பல் ஒன்றில் கொண்டு வரப்பட்ட மணமகளைத் தம் அந்தப்புரத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சுல்தான் விடாப்பிடியாக வற்புறுத்தினர்.

பிறகு சுல்தான் தம் கவனத்தைச் சின்ன ஆசியாவின் பக்கம் திருப்பினர். அங்கும் ஒரு சில பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு

தம் பேரரசை விஸ்தரித்துக் கொள்ள அவர் திட்டமிட்டார். முதன் முதலாக அவர் எய்டின் (Aidin) என்ற சிற்றரசு நாட்டைத் தாக்கினார். அதன் அமீரை அவர் தோற்கடித்து அந் நாட்டைத் தம் இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டார். பிறகு, அவர் ஸ்மிர்னா (Smyrna) நகரைத் தாக்கினார். அப்பொழுது அந் நகர் ஜெருசலேமின் செயின்ட் ஜான் பெருவீரர்கள் (Knights of St. John of Jerusalem) என்ற பாதுகாப்புப் படை வீரர் கைவசப்பட்டிருந்தது. அவ் வீரர்கள் பெரிதும் எதிர்த்துப் போராடினர்கள். பேளஜீத் கடற் பலத்தைப் பெற்றிராத காரணத்தால் ஆறு வார முற்றுகைக்குப்பின் அதைக் கைவிட்டார். பிறகு அவர் 1391-ல் டெக்கேயின் அமீரைத் (The Emir of Tekke) தாக்கி முராத் அவரிடம் விட்டு வைத்திருந்த பகுதிகளையும் அடாலியா (Adalia) என்ற மிக முக்கிய நகரத்தையும் தமதாக்கிக் கொண்டார். இக் கைப்பற்றுதலின் விளைவாக, உத்மானியப் பேரரசின் எல்லைகள் கரமானியா என்ற சிற்றரசு நாடு வரை பரவியிருந்தன. அதனுடைய அமீர் அலாவுத்தீன் என்பவர் சுல்தானின் மைத்துனராவார். இவ்விதக் குடும்பத் தொடர்பும் அந்த அமீருக்குத் தற்காப்பு அளிக்கவில்லை. சுல்தான் கோனியாவைத் தாக்கினார். அலாவுத்தீன் தம் நாட்டின் அக்ஷேர் (Aksheir) உட்பட ஒரு சில பகுதிகளை சுல்தானுக்குக் கொடுத்துவிடுவதாக வாக்குறுதியளித்த பிறகுதான் சுல்தான் அவ்விடத்திலிருந்து பின்வாங்கிக் கொண்டார்.

இப் பகுதிகளையெல்லாம் ஆட்சி புரிய வேண்டுமென்னும் பேராசையினால்தான் சுல்தான் இப் படையெழுச்சிகளை மேற் கொண்டார். இவ்வாறு கைப்பற்றுதல்களை நடத்தியதற்குப் பிறகு அவர் ஏட்ரியானோப்பிலுக்குத் திரும்பினர். வெல்லப்பட்ட மாநிலங்களைத் தம் ஆளுநர் தைமூர்த்தாஷ் (Timurtash) என்பவரின் பொறுப்பில் விட்டு வைத்திருந்தார். இதற்கிடையே பேரரசர் ஜான் தம் தலைநகரின் தற்காப்பினை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்காகக் கான்ஸ்டான்டிநோப்பிலிலிருந்த மிக அழகான திருச்சபைகள் மூன்றினை இடித்துத் தள்ளிவிட்டார். அச் சிதைவுகளைக் கொண்டு அந் நகரைப் பலப்படுத்திக் கொள்ள அவர் நினைத்தார். இதைப் பற்றிக் கேள்வியுற்ற சுல்தான் அவ்விதம் செய்யக் கூடாது என ஆணையிட்டார்; செய்தால் இமானுவேலின் கண்களைப் பிடுங்கிவிடப் போவதாகவும் அச்சுறுத்தினர். வேறு வழியின்றி, பேரரசர் அந்த ஆணைக்குக் கீழ்ப்படிந்தார். ஆனால், இந்த அவமானம்தான் அவர் கடைசியாக அனுபவிக்க வேண்டியிருந்த ஒன்றாகும். அதற்குச் சற்றுப் பிறகு அவர் இறந்தார். அவருடைய மகன்

இமானுவேல் அப்பொழுது சுல்தானின் அரசவையில் ஒரு பணியாளனாக அமர்த்தப்பட்டிருந்தார். தந்தையின் மரணத்தைப் பற்றிக் கேள்வியுற்ற அவர் எவருக்கும் தெரியாமல் தப்பித்துக் கொண்டு கான்ஸ்டான்ட்டிநோப்பில் நகரை வந்தடைந்தார். அங்கே அவர் அரசராக நியமிக்கப்பட்டார். இதற்காகப் பழிவாங்கும் வகையில் பேஎஜீத் கான்ஸ்டான்ட்டிநோப்பிலே முற்றுகையிட்டார். முற்றுகை ஏறக்குறைய ஏழு ஆண்டுகால அளவுக்கு நீடித்தது. அந்த நெருக்கடியான வேளையில் சின்ன ஆசியா மீது தைமூர் படையெடுத்துள்ளார் என்ற செய்தி சுல்தானை முற்றுகையைக் கைவிடும்படி தூண்டிற்று.

முற்றுகையைத் தொடர்ந்து நிகழ்த்துவதற்குத் தம் படையின் ஒரு பகுதியை அங்கேயே விட்டுவிட்டு, கிரேக்கப் படைக்கு இரவும் பகலுமாகத் தொல்லை கொடுக்குமாறு உத்தரவுமிட்டு, பேஎஜீத் தம் பெரும்படையுடன் பல்கேரியாவுக்குள் புகுந்து மேலும் முன்னேறி வலாச்சியாவின் ஆட்சியாளரைத் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு வற்புறுத்தினார். அவருடைய படையின் மற்றொரு பகுதி சிர்மியாவுக்குள் (Syrmia) நுழைந்து ஹங்கேரிய மக்களுடன் போர் புரிந்தது. ஆனால், அவர்களால் அது முறியடிக்கப்பட்டு விரட்டி ஓட்டப்பட்டது. ஹங்கேரிய அரசர் சிகிஸ்மண்ட் (Sigismund) என்பவர் எதிர்த் தாக்குதல் நடத்தி நைக்கோபோலிஸ் என்ற முக்கிய அரணையும் கைப்பற்றிக்கொண்டார். ஆனால் வலாச்சியர்களின் உதவியைப் பெற்ற பேஎஜீத் அந் நகரை விட்டு ஓடிவிடுமாறு சிகிஸ்மண்டை வற்புறுத்தினார். இவ்விதமாக சிகிஸ்மண்ட் பின்வாங்கி ஓடிக் கொண்டிருந்த பொழுது, ஹுன்யாடி என்னும் மாநிலத்தின் வழியாக வந்து கொண்டிருக்கையில்தான் அவர் எலிஸபெத் மொரோனே (Elizabeth Moronay) என்ற பெண்ணைச் சந்தித்து அவள்மீது காதல் கொண்டார். அவர்களுக்குப் பிறந்த மகன்தான் மாண்புமிகு ஹுன்யாடி (Hunyadi the Great) என்னும் புகழ்பெற்ற ஹங்கேரிய வீரனுவான். அவ் வீரனே பிற்காலத்தில் துருக்கியர்களைப் பலமாக எதிர்த்தவன்.

இன்னும் சுயாட்சி நிலையை அனுபவித்துக் கொண்டிருந்த பல்கேரியாவைத் தாக்குவதற்காக பேஎஜீத் தமது மூத்த மகன் சுலைமான் என்பவரைப் படையுடன் அனுப்பி வைத்தார். அந் நாட்டின் தலைநகரான திர்னுவா (Tirnova) முற்றுகையிடப் பட்டது. மூன்று மாத முற்றுகைக்குப் பிறகு அது கைப்பற்றப் பட்டது. அதில் வசித்து வந்த குடிமக்கள் சின்ன ஆசியாவுக்கு அடிமைகளாக அனுப்பி வைக்கப்பட்டனர். பல்கேரியாவின்

தெற்குப் பகுதியை உத்மானியப் பேரரசில் ஏற்கெனவே இணைத்துவிட்டதைப் போல் வடபகுதியையும் இணைத்துக் கொள்ள பேஎஜீத் திட்டமிட்டார். இதனையும் அவர் நிறை வேற்றிக்கொண்டதனால், பல்கேரியா உத்மானியர்களின் அடிமை நாடாயிற்று. பல்கேரியர்களுடைய இளவரசர் சிஸ்மன் எங்கோ ஓடி மறைந்து விட்டார். அவருடன் ஆளும் வமிசமும் முற்றுப் பெற்றது. முஸ்லிம்களுடையதைத் தவிர மற்றவர்களு டைய நிலம் பறித்துக் கொள்ளப்பட்டது. இராணுவப் பணியை வற்புறுத்திய நிலமானியமுறை ஒன்றின்படி அந் நிலம் துருக் கியர்களுக்கிடையே பகிர்ந்து கொடுக்கப்பட்டது. குடியானவர் கள் அடிமைகளாயினர்.

இதே சமயத்தில் நைக்கோபோலிஸ், விட்டின் (Widdin) மற்றும் சிலிஸ்ட்ரியா (Silistria) ஆகிய அரண்களும் உத்மானியர் களின் வசமாயின. இவை ஹங்கேரிக்குச் செல்லும் வழிகளைத் திறந்துவிட்டன. கொள்ளையடிப்பதற்காக என்றே பேஎஜீத் பல கொள்ளைத் தாக்குதல்களை அதன்மீது நடத்தினர். படை யில் ஒழுங்காகச் சேர்க்கப்பட்டிராத அகின்ஜிகள் (Akinjis) என்ற அவருடைய படை வீரர்கள் எங்கும் பரவிக் கொள்ளையடித்து, பெருங்கிலியை உண்டாக்கிக் கொண்டிருந்தனர். கிராமங்களி லெல்லாம் புகுந்து அக் கிராமவாசிகளைத் தாக்கி அவர்களைக் கொள்ளையடித்து இறுதியில் அடிமைகளாகவும் கொண்டு போயினர். அதே நோக்கத்துடன் ஆசியாவில் தாம் புதிதாகப் பெற்றிருந்த துறைமுகங்களுக்குப் படைகளை அவர் அனுப்பி வைத்து, கியாஸ் (Chios) மற்றும் நீக்ரோபாண்ட் (Negropant) ஆகிய தீவுகளையும் கிரேக்கக் கடற்கரையிலிருந்த மாநிலங்களை யும் அவர் சூறையாடினர்.

இவ்விதமாக ஐரோப்பாவின் வடபுறத்தில் நடவடிக்கை களில் அவர் ஈடுபட்டிருக்கையில், அண்மையில் சின்ன ஆசியாவில் கைப்பற்றப்பட்டிருந்த பகுதிகளில் கிளர்ச்சி ஏற்பட்டது. அதற்குப் பெரும்பாலும் கரமானியாவின் அமீரே காரணமாவார். ஆகவே, பேஎஜீத் தம் கவனத்தைச் சின்ன ஆசியாவின்பக்கல் செலுத்த அவசியம் நேரிட்டது. ஆனால், அவர் படையைத் திரட்டிச் செல்கையில், தம் மைத்துனரும் கர மானியாவின் ஆட்சியாளருமான அலாவுத்தீன் அனுப்பிவைத்த தூதரை புருஸாவில் சந்தித்தார். தமக்கிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினையை வாளினால்தான் தீர்க்க முடியும் என்று பேஎஜீத் கூறிவிட்டு, தைமூர்தாஷ் என்பவரின் தலைமையில் கரமானியா வுக்கெதிராகப் படையை அனுப்பிவைத்தார். அக்-சாய் (Ak-

Tchai) என்ற இடத்தில் கடும்போர் நடந்தது. உத்மானியர்கள் மகத்தான வெற்றி பெற்றனர். அலாவுத்தீனும் அவருடைய இரு மகன்களும் கைது செய்யப்பட்டு, சுல்தானின் உத்தரவு இன்றியே தூக்கிலிடப்பட்டனர். கரமானியாவை உத்மானியப் படை வீரர்கள் கைப்பற்றிக்கொண்டனர். எங்கும் எதிர்ப்பே ஏற்படவில்லை. அந் நாட்டின் கிழக்குப்புறத்திலிருந்த கோனியாவும் மற்றும் பல நகரங்களும் கைப்பற்றிக்கொள்ளப்பட்டன. ஆயினும், இப்பொழுதும் கரமானியாவை சுல்தான் தம் பேரரசுடன் இணைத்துக்கொள்ளவில்லை. தைமூர் சின்ன ஆசியா மீது படையெடுத்ததற்குப் பிறகு கரமானியா தன் சுதந்திரத்தை மீண்டும் பெற்றது. எழுபது ஆண்டுகட்குப் பிறகுதான் அது அடிபணிய வைக்கப்பட்டு, பேரரசுடன் இணைத்துக்கொள்ளப் பட்டது.

ஏறக்குறைய 1393-94-ல் சின்ன ஆசியாவில் சம்ஸூன் (Samsun) சிஸேரியா (Caesarea) மற்றும் சிவாஸ் (Sivas) போன்ற பல இடங்களையும் பேஎஜீத் கைப்பற்றிக்கொண்டார். ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் இவர் அடைந்த மாபெரும் வெற்றிகளுக்குப் பிறகு சற்று அமைதி ஏற்பட்டது. இவ் வமைதிக் காலத்தில் பேஎஜீத் மிக மோசமாகத் தம்மைச் சிற்றின்ப லீலைகளில் ஆழ்த்திக்கொண்டார். இந் நிலையிலிருந்து அவர் சிகிஸ்மண்டின் அச்சுறுத்தல்களினால் அவரது சுயநிலைக்குக் கொண்டு வரப்பட்டார்.

தம் நாட்டின்மீது அவ் வப்பொழுது நடந்துகொண்டிருந்த படையெடுப்புகளைக் கண்டு சிகிஸ்மண்ட் அருவருப்புக் கொள்ளத் தொடங்கினர். டான்யூப் நதியோரத்தில் தமக்குரிய அரண்களை மீட்டுக்கொள்ளும் நோக்கத்துடன் அவ் வரசர் உத்மானியர்களைத் தாக்கத் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தார். இதை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர் ஐரோப்பிய கிறித்தவ நாடுகளின் உதவியை 1395-ல் நாடினர். ஒன்பதாம் போனிஃபஸ் (Boniface IX) என்ற போப் இவருக்கு ஆதரவு கொடுத்து மீண்டும் ஒரு சிலுவைப்போரைத் தொடரப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். ஃபிரான்ஸின் அரசரான ஆரும் சார்லஸின் (Charles VI) முயற்சியால் ஃபிரான்ஸில் இருந்த தலையார்ந்த பிரபுகள் கோம்டெ டெ நெவேர் (Comte de Nevers) என்பவரின் தலைமையில் ஒன்றுபடும்படி வற்புறுத்தப்பட்டனர். இருபத்திரண்டு வயதினரான அவ் விளைஞருக்கு இராணுவ அனுபவம் என்பதே கிடையாது. இப் போருக்காக ஃபிரான்ஸில் படைவீரர்கள் பலர் திரண்டனர். இங்கிலாந்து, ஸ்காட்லந்து, ஃபிளாண்டர்ஸ், லோம்பார்டி, சாவாய் போன்ற நாடுகளி

லிருந்தும் படைகள் வந்து குவிந்தன. ஜெர்மனியின் வழியாக ஹங்கேரிக்கு அவ் வீரர்கள் சென்று கொண்டிருக்கையில் ஹோஹென்ஸொல்லர்னைச் சார்ந்த ஃபிரட்ரிக் கோமகனும் (Count Frederic of Hohenzollern) பவேரியப் படைகளும் அவர்களுடன் சேர்ந்துகொண்டனர். சற்றுப் பிறகு டெ நெய்லக் (de Naillac) என்பவரின் தலைமையில் ஜெருசலேமின் ஸெய்ன்ட் ஜான் பெருவீரர்கள் என்ற வீரர்களும் சேர்ந்துகொண்டனர். சிகிஸ்மண்டின் தலைமையில் இருந்த ஹங்கேரியப் படையினரும் வலாச்சியா மற்றும் பாஸ்னியா ஆகிய இடங்களிலிருந்து வந்த படையினரும் சிலுவைப்போர்ப் படையுடன் சேர்ந்துகொண்டதும் அந்தச் சேனைத்திரள் அப்பொழுது அறுபதினாயிரம் படைவீரர்களைக்கொண்ட மாபெரும் படையாயிற்று. இப் படையெடுப்பு, 'சிலுவைப்போர்' (Crusade) என்றழைக்கப்பட்டாலும் உண்மையில் இது லௌகிக விஷயங்களுக்காக என நடைபெற்ற போராகவே இருந்தது. இதில் கலந்து கொண்டவர்கள் இதனை ஒரு மணப்புற விருந்தாகவே கருதினர். இக் கலப்புப்படை வீரர்கள் ஹங்கேரியில் பூடா (Buda) என்ற இடத்தில் 1396-ல் கூடினர்; பிறகு டான்யூப் நதி வழியாக நைக்கோபோலிஸுக்கு வருகையில் வழியில் விட்டின் மற்றும் சிஸ்டோவா ஆகிய வற்றையும் கைப்பற்றிக்கொண்டனர். அவர்கள் ஸெர்பியா வழியாகச் சென்றுகொண் டிருந்தபொழுது பாமரக் கிறித்தவக் குடிமக்கள் குடியிருந்த மாவட்டங்களை எல்லாம் சூறையாடினர். கொடூரத்திலும் நாச வேலைகளிலும் அவர்கள் உத்மானியர்களைப் போன்றே நடந்துகொண்டனர்; சிற்சில வேளைகளில் அவர்களையும் மிஞ்சி விட்டிருந்தனர். செப்டம்பர் மாதத்தில் அவர்கள் நைக்கோபோலிஸுக்கு எதிரே முகாமிட்டனர்; ஆனாலும், பதினாறு நாட்கள் வரை அரணை அவர்கள் தாக்காமலேயே விட்டு வைத்தனர். உத்மானியர்களோ அதனை மிகவும் தீவிரமாகக் காத்து வந்தார்கள். அந்தப் பதினாறு நாட்களில் பேஎஜீத் தமது படைகளைத் திரட்டிக்கொண்டு கூட்டுப்படைகளை நோக்கி முன்னேறச் சிறந்த வாய்ப்புப் பெற்றுவிட்டார்.

கிறித்தவக் கூட்டாளங்கள் சிற்றின்பங்களின் மற்றும் சூதாட்டங்களின் உறைவிடங்களாகவே விளங்கின. விலைமாதர்கள் பலரும் அப்படை வீரர்களுடன் வந்திருந்தனர். ஒழுங்கீனமும் குழப்பமுமே அவர்களிடத்தில் ஓங்கியிருந்தன. இவற்றுக்கு மாறாக, பேஎஜீதின் படையோ, தன்னம்பிக்கை பெற்று வலிமை மிக்கதாக விளங்கிற்று. அவருடைய படையினர் எவ்விதத் தடங்கலுமின்றி எதிரியை நெருங்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுதும் கூடத் தமக்கு ஏற்பட்டிருந்த பேராபத்தைக் கிறித்தவப் படை

கள் உணரவில்லை. துருக்கியர் திடீரென்று அவர்களைத் தாக்கினர். கூட்டுப்படையினர் தமது சூதாட்டங்களையும் பரத்தையர்களையும் விட்டு ஓட நேர்ந்தது. எதிரிகள் தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் எதிர்க்கத் தொடங்கினர்.

உத்மானியப் போர் முறைகளைப்பற்றிச் சிறிதளவிலும் அறிந்திராத கூட்டுப்படையினர் அடிமேல் அடி வாங்கிக் கொண்டிருந்தனர். அம் முறைகளில் அனுபவமுற்றிருந்த சிகிஸ்மண்டின் அறிவுரைகளையும் அவர்கள் ஏற்கும் பக்குவத்தைப் பெருமல் அவரையே சந்தேகிக்கவும் தொடங்கினர். நிகழ்ந்த போரில் உத்மானிய படைகள் மகத்தான வெற்றி கண்டனர். போர் மூன்று மணிநேரமே நிகழ்ந்தது. இரு தரப்பிலும் ஆட்சேதம் மிகவும் பலமாக இருந்தது. பத்தாயிரம் கிறித்தவர்கள் கைதாக்கப்பட்டனர். டான்யூப் நதியைக் கடந்து தப்பி ஓடியவர்கள் வலாச்சியா வழியாகச் சென்று கொண்டிருக்கையில் பலத்த சேதத்துக்கு ஆளாயினர். சிகிஸ்மண்ட் தம் படையை அதன் விதிக்கே விட்டுவிட்டார்.

நைக்கோபோலிஸ் போரில் பெரும் சேதம் தமது படைக்கும் ஏற்பட்டது என்று அறியவந்த பேஎஜீத் பெரும் சினமுற்றார். தம் முன்னிலையிலேயே பத்தாயிரம் கிறித்தவக் கைதிகள் தூக்கிலிடப்பட வேண்டுமென்று அவர் உத்தரவிட்டார். இப் படுகொலையிலிருந்து இருபத்து நான்கு வீரர்கள் மட்டுமே தப்பினர்.

நைக்கோபோலிஸ் போர் பேஎஜீதைத் தமது அதிகாரத்தின் உச்சகட்டத்தை அடைய வைத்தது. அப் போருக்குப் பிறகு உத்மானியப் படை வலாச்சியா, ஸ்டைரியா (Styria) மற்றும் ஹங்கேரி ஆகியவற்றின் மீதும் தாக்குதல்களை நிகழ்த்தியது. பீட்டர்வர்டைன் (Peterwardeine) என்ற நகரம் கைப்பற்றப்பட்டு, அதனுடைய குடிமக்கள் பதினெட்டாயிரம் பேர் அடிமைகளாக விற்கப்பட்டனர். மற்றொரு படைப் பகுதி சிர்மியாவைத் தாக்கி, டிரவே (Dreve) டான்யூப் ஆகிய நதிகளுக்கிடையிலிருந்த பிரதேசத்தைச் சூறையாடியது. சிலுவைப் போர் வீரர்களால் நதியோரத்தில் கைப்பற்றப்பட்டிருந்த அரண்களை உத்மானியர் மீண்டும் கைப்பற்றிக் கொண்டனர். வலாச்சியாவின் மீது நிகழ்ந்த படையெடுப்புத் தோல்வியுற்றது. அதில் ஈடுபட்ட துருக்கியர்கள் முறியடிக்கப் பெற்று விரட்டியடிக்கப் பெற்றனர். சுல்தானே ஹங்கேரியிலிருந்த பூடாவைத் தாக்கினார். ஆனாலும், அவருடைய முன்னேற்றம் அவரைத் துன்புறுத்திக் கொண்டிருந்த முடக்கு நோயால் பாதிக்கப்பட்டது.

இப் படையெடுப்புக்குப் பிறகு பேஎஜீத் ஏட்ரியாநோப்பிலுக்குத் திரும்பி விட்டார்; அங்கே கிரேக்கப் பேரரசினை மேலும் இழிவுபடுத்துவதில் முனைந்தார். அவர் இமானுவேலைப் பதவியிலிருந்து விலகுமாறு கட்டாயப்படுத்தி, அண்ட்ரோனிக்களின் மகனை ஜான் என்பவரைப் பேரரசராக நியமித்தார். 1397-ல் மீண்டும் படையைத் திரட்டிக்கொண்டு கிரீஸின்மீது அவர் பேரிடிபோல் பாய்ந்தார். அவர் தம் படையைத் திரட்டிக் கொண்டு, தெஸ்ஸாலீ வழியாகச் செல்லுகையில் வழியில் லாரிஸ்ஸா, மற்றும் ஃபார்ஸாலியா (Pharsalia) ஆகியவற்றைக் கைப்பற்றினர். தெர்மோபைலீ (Thermopylae) வழியாக அவர் படையைத் திரட்டிக் கொண்டு முன்னேறினர். அந்த வழியாக அவரது படை சென்றதுமே டோரிஸ் (Doris) லோக்ரிஸ் (Locris) என்ற இடங்கள் அடிபணிந்தன. பிறகு அவருடைய இரு படைத் தலைவர்களான யாகூபும் எவ்ரினுஸ் என்பவரும் பெலொப்பொன்னீஸஸின் மீது படை யெடுத்தனர். எவ்ரினுஸ் ஆர்கஸ்ஸைக் கைப்பற்றிச் சூறையாடினர். அதனுடைய முப்பதாயிரம் குடிமக்கள் அடிமைகளாக விற்கப்பட்டு, ஆசியா விற்குக் கொண்டு போகப்பட்டனர். மோரியாவிலும் துருக்கிய குடியேற்ற நாடுகள் தோன்றின. அங்கே கிரேக்கப் பேரரசரின் பிரதிநிதியாக இருந்து ஆட்சி புரிந்துகொண்டிருந்த தியோடோர் பேலியோலோகஸ் (Theodore Palaeologus) சுல்தானின்கீழ்ச் சிற்றரசராகக் கப்பம் செலுத்தி வாழ்வதற்கு இணங்கினர்.

ஏட்ரியாநோப்பிலுக்குத் திரும்பிய பேஎஜீத் கான்ஸ்டான்ட்டிநோப்பிலைக் கைப்பற்றி விடவேண்டும் என்று முடிவெடுத்தார். கிரேக்கப் பேரரசோ தனக்குரிய எல்லா இடங்களையும் ஏற்கெனவே இழந்து விட்டிருந்தது. சுவர்களுக்குள்ளடங்கியிருந்த தலைநகரம் மட்டுமே எஞ்சி நின்றது. அவமானப்படுத்தும் வகையில் சுல்தான் பேரரசருக்குத் தூது அனுப்பினர்.

'உனக்கு முன்பிருந்த இமானுவேலை நான் சிம்மாசனத்திலிருந்து விலக்கியது என்னுடைய நலனுக்கே யன்றி, உன்னுடைய நலனுக்காக அல்லவே! ஆகவே, நீ என் நண்பனாக இருக்க வேண்டி விரும்பினால் உன்னுடைய கிரீடத்தை இப்பொழுதே என்னிடம் ஒப்படைத்து விடு. நீ விரும்பும் மற்றொரு நாட்டை நான் உனக்கு அளிக்கின்றேன். நீ இணங்கவில்லை யாயின், என் இறைவன்மீதும் நபிகள் நாயகத்தின்மீதும் ஆணை! நான் உன் நகரை வாளா விடமாட்டேன். அதை முற்றும் நான் அழித்தே தீருவேன்!'

இந்தக் கடுமையான நிபந்தனைக்கு ஜான் இணங்கவில்லை என்ருல் உத்மானியப் படையின் தாக்குதல்களால் தங்களுக்கு எப்படிப்பட்ட பயங்கர நிலை ஏற்பட்டுவிடும் என்பதை உணர்ந்திருந்த கான்ஸ்டான்ட்டிநோப்பில் நகரவாசிகள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருந்தனர். ஆனல், கிறித்தவ வல்லரசுகள் தமக்கு ஆதரவு கொடுக்க முன்வரும் என்று நம்பிய பேரரசர் சரணடைய மறுத்து விட்டார். தூதரின் மூலமாக மிக்க மரியாதையுடன் அவர் சுல்தானுக்கு விடை யளித்தார்: 'நாம் பலவீனம் அடைந்தவர்களாகவே இருக்கின்ருேம். என்ருலும், பலவீனர்களைக் காப்பவரும் ஆற்றல் மிக்கோரை அடிபணிய வைப்பவருமான கர்த்தரின் உதவியை நாம் நாடுகின்ருேம் என்பதை உன் தலைவரிடம் போய்க் கூறு. சுல்தான் எதை வேண்டுமானலும் செய்து கொள்ளட்டும்.'

இந்த நெருக்கடியான சமயத்தில், தம் அச்சுறுத்தல்களைச் செயற்படுத்துவதற்கு முன்பே ஆசியாவில் நிகழ்ந்த பெரும் நிகழ்ச்சிகளின் விளைவாக, பேஎஜீத் முற்றுகையைக் கைவிட நேரிட்டது. இதுவரையிலும் பன்னிரு ஆண்டு காலமாக இடையருமல் புரிந்த போர்களில் பேஎஜீத் வெற்றியே கண்டுவந்தார். சின்ன ஆசியாவின் பெரும் பகுதி, மாஸிடோனியா, வடபல்கேரியா, மற்றும் தெஸ்ஸாலீ ஆகியவற்றையெல்லாம் அவர் கைப்பற்றிக் கொண்டார். கிரேக்கப் பேரரசையும் மற்றும் வலாச்சியா, மாஸ்னியா, கிரீஸின் பெரும்பகுதி ஆகியவற்றையெல்லாமும் அவர் தமக்கு அடிபணிய வைத்துவிட்டார். நைக்கோபோலிஸ் போரில் அவர் ஐரோப்பாவின் மாபெரும் வீரர்களையெல்லாம் தோற்கடித்துள்ளார். இவற்றிலெல்லாம் அவர் தோல்வி என்பதையே கண்டதில்லை. ஆனல், அடுத்த இரண்டு ஆண்டுகள் — அவருடைய ஆட்சியின் இறுதி இரண்டு ஆண்டுகள் — அவர் தோல்வியுறுவதைக் கண்டன. அக் காலத்தில் அவர் பேரழிவை அனுபவிக்க வேண்டி யிருந்தது. சிறையில் அடைக்கப்பட்டு உயிரும் நீத்தார்; தாற்காலிகமாகத் துருக்கியப் பேரரசு தவிடு பொடியாயிற்று. முதன் முதலாக அவர் தைமூருடன் மோதிக் கொண்டார். தைமூர் மாபெரும் படைத் தலைவர், போர் வீரர், அஞ்சா நெஞ்சர், திறமை வாய்ந்தவர், தந்திரத்தில் வல்லவர், கொடூர மிக்கவர். இவ்வகையிலெல்லாம் பேஎஜீத் அவருக்குச் சற்றுக் குறைந்தவராகவே யிருந்தார்.

டார்ட்டார் இனத்தைச் சார்ந்த தைமூர் — 'தைமூர்லேன்' என்று புகழ் பெற்று விளங்கியவர்—இளமையில் ஏற்பட்ட ஒரு விபத்தில் காலில் ஊனமேற்பட்டதால் தைமூர்லேன் (Timur the

lame) என்றழைக்கப்பட்டார். வரலாற்றிலேயே மிகப் பெரிய, மிகக் கொடுமை வாய்ந்த, மிகக் கடுமையாகச் சூறையாடிய பொல்லாத மூர்க்கர் இவரே ஆவார். இவர் 1333-ல் பிறந்தார். இவர் தம் தாய்வழியில் மாபெரும் செங்கிஸ்கானின் வழித் தோன்றலாவார். சமர்க்கந்தின் (Samarkhand) சுற்றுப்புறத்திலிருந்த டார்ட்டார் இனத்தாரின் தலைவராக இவர் தமது வாழ்க்கையைத் தொடங்கினர். இவரால் தமது முப்பத்தைந்தாவது வயதிலிருந்துதான் சீரும் சிறப்பும் பெற முடிந்தது. அப்பொழுது சுற்றுப்புறங்களிலிருந்த இதர டார்ட்டார் இனத்தினரின் மீதும் இவர் தமது அதிகாரத்தைச் செலுத்தி வந்தார். அவ்வேளையில் ஈரேயகம் முழுவதையும் வென்றிட இவர் கனவு காணத் தொடங்கினர். விண்ணுலகில் ஒரே ஒரு கடவுள் இருப்பதைப் போல், மண்ணுலகிலும் ஒரே ஓர் அரசன் மட்டுமே ஆட்சி புரிய வேண்டும் என்று அவர் கூறினராம். அவ் வொரே அரசனும் தாமாகத்தான் இருக்கவேண்டும் என்றும் அவர் விரும்பினர். இக் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள அவர் அயராமல் முயன்று வந்தார். முப்பத்தைந்து ஆண்டு காலம்வரை அவர் நடத்திய படையெடுப்புகளின் விளைவாக, சீனாவின் பெரும் சுவரிலிருந்து சின்ன ஆசியாவின் எல்லை வரையிலும், ஆரல் கடலிலிருந்து கங்கை வரையிலும், பாரசீகக் குடா வரையிலும் பரவியிருந்த ஒரு பேரரசை உருவாக்கி விட்டார். அக்காலத்திற்குள்ளாக அவர் இருபத்தேழு தனிநாடுகளை வென்றும் ஒன்பது அரச குடும்பங்களை அழித்தும் விட்டார். வெற்றிகள் பெற்றதற்குப் பிறகு குடிமக்களுக்கு அவர் சொல்லொணாக் கொடுமைகளை இழைத்தார்.

அப்படிப்பட்டவர் அப்பொழுது பலவகைகளிலும் மிகத் தீவிரமாக வளர்ச்சியுற்றுக் கொண்டிருந்த உத்மானிய பேரரசுடன் மோதிக் கொள்வது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. ஒருவரை ஒருவர் நெருங்கியே வாழ்ந்து வந்த அவ்விரு அரசர்களுக்கிடையே போர் மூள்வதற்கான காரணங்கள் பற்பல ஏற்பட்டுக் கொண்டிருந்தன. ஒவ்வொருவரும் தம் எதிரியின் நாட்டிலிருந்து தம்மை வந்தடைந்தவர்களுக்கு அடைக்கலம் தந்தனர். இப்படிக் குடியேறியவர்கள் அவ்விரு பகைவர்களுக்கிடையே பல சதிகளை உருவாக்கிக் கொண்டிருந்தனர். அகங்கார மிக்கதும் மரியாதை குறைந்ததுமான பேச்சு வார்த்தைகள் அவ் விருவருக்குமிடையே நடைபெற்றுக் கொண்டிருந்தன. இறுதியில் அர்மீனியாவிலிருந்தவாறு சின்ன ஆசியாவைத் தாக்குவது என்று தைமூர் 1400-ல் முடிவெடுத்தார். அவரது கொடியின்கீழ் மாபெரும் படை ஒன்று திரண்டது. அதன் எண்ணிக்கை எண்பதினாயிரத்துக்குக் குறைந்திராது என்று

அறிஞர்கள் கணக்கிட்டனர். அர்மீனியாவின் எல்லையில் கப்படோஷியாவிலுள்ள (Cappadocia) சிவாஸ் என்ற நகரை அப் படை முற்றுகையிட்டது. அதை பேஎஜீத் மூன்று ஆண்டு கட்கு முன்புதான் கைப்பற்றி யிருந்தார். இப்பொழுது அது பேஎஜீதின் மூத்த மகனை எர்தொக்ரலின் தலைமையில் இருந்த படையினால் காக்கப்பட்டு வந்தது. பாதுகாப்புப் பலமாக இருந்த போதிலும், தைமூர் எத் தியாகத்தையும் புரிந்து அதைக் கைப்பற்றத் தீர்மானித்தார். பெருந் தாக்கு தலுக்குப் பிறகு அந் நகரம் கைப்பற்றப்பட்டது. அதனைக் காத்த வீரர்களுள் நாலாயிரம் பேர் தைமூரின் உத்தரவின் பேரில் உயிருடன் புதைக்கப்பட்டனர். எர்தொக்ரலும் தூக்கி லிடப்பட்டான்.

தம் படைக்கே தோல்வி ஏற்பட்டுள்ளது என்பதையும் தம் மகன் கொல்லப்பட்டான் என்பதையும் கேள்வியுற்ற சுல்தான் பெரும் அதிர்ச்சியுற்றார். ஆகவே, கஸ்ஸோவோ நைக்கோ போலிஸ் போன்ற பெரும் போர்முனைகளில் போரிட்ட ஆற்றல் மிக்க வீரர்களைக்கொண்ட படையுடன் சுல்தான் சின்ன ஆசியா விற்கு விரைந்தார்; ஆனால், அங்கு வந்து பார்க்கும்பொழுது தைமூர் அங்கில்லை. தெற்கிலிருந்த எகிப்தின் மம்லூக்குகளை அச் சுறுத்துவதற்காக அவர் அங்குச் சென்றுவிட்டிருந்தார். எனவே 1402-ல் தான் இரு படைகளும் மீண்டும் கை கலந்தன. அதற் கிடையில் பேஎஜீத் தம் படையினரிடையே மதிப்பிழந்து கொண்டிருந்தார். தைமூரின் ஒற்றர்கள் அப் படையினருக் கிடையே சுறுசுறுப்பாக வேலை செய்து, சுல்தான்மீது அவர்கள் கொண்டிருந்த பற்றுதலைக் குலைத்துக் கொண்டிருந்தனர். சுல்தானின் பேராசையும் ஈன மனப்பான்மையும் அவர் களுடைய குறிக்கோளை வெகு எளிதில் சீக்கிரமே நிறைவேற்றிக் கொண்டிருந்தன. தைமூர் தம்மைப் பின்தொடர்வோரிடம் எவ்வளவு தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்கின்றார் என்பதை உணர்ந்துகொண்ட சுல்தானின் படை வீரர்கள் அம் மங்கோலியரிடம் அவ்வளவாகப் பகைமை கொள்ளாமல் இருந் தனர். இவ்விதமாகவெல்லாம் நிலைமை மாறிக்கொண்டிருந்த போதிலும் சுல்தான் தம் படைவீரர்களைத் தணிக்க எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. 1,20,000 படைவீரர் களுடன் அவர் தைமூரை எதிர்த்து முன்னேறினார். அவர் களினும் ஆறு மடங்கு அதிகமான போர் வீரர்களைப் பெற் றுள்ளார் என்று புகழ்பெற்று விளங்கிய தைமூர் அங்கோராப் போர்க்களத்தில் எதிரியைச் சந்தித்தார்.

பேஎஜீத் மிகச் சாதாரண விழிப்புணர்ச்சிகளையும் கைவிட்டிருந்தார்; தமக்கே உரிய திறமைகளையும் அவரால் காட்டிக் கொள்ள முடியவில்லை. தைமூர் தமது முழுப் படைப்பலத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடியதாக இருந்த திறந்த வெளியில், அவருடைய படைகளை எதிர்ப்பது எவ்வளவு ஆபத்தானதாகும் என்பதை உணர்த்திய அனுபவமிகுந்த ராணுவத் தலைவர்களின் அறிவுரையையும் பேஎஜீத் புறக்கணித்துவிட்டார். மூடத்தனமான அசட்டுத் துணிச்சலுடன் அவர் போரில் குதித்தார். இந்த இக்கட்டான நிலையில் பேஎஜீத் தம் படைகளை ஒருபெரும் வேட்டையாட்டத்தில் ஈடுபடுத்தினர். அவ் வேட்டையாட்டம் அவர்களைத் தண்ணீரின்றி வறண்டு கிடந்த மாவட்டம் ஒன்றுக்குக் கொண்டுசென்றது. அங்கே அவருடைய படை வீரர்கள் பல இன்னல்களுக்கு ஆளாயினர். ஐயாயிரம் பேர் நாவறட்சியினால் மாண்டனர்.

பேஎஜீத் தம் முகாமுக்குத் திரும்பியதும், அதற்குத் தண்ணீர் பாய்ச்சிவந்த ஓடையின் போக்கை வேற்றுத் திசையில் தைமூர் மாற்றியிருப்பதைக் கண்டார். ஏற்கெனவே தண்ணீரின்றி வாடி வறண்டு கிடந்த உத்மானியப் படையினரின் நிலை மேலும் மோசமாயிற்று. அவ் வோடையின் தண்ணீரில் தைமூர் விஷம் கலந்திருப்பதையும் சுல்தான் உணர்ந்தார். இந்த நிலையில், உத்மானியப் படையில் நான்கில் ஒரு பங்கினராயிருந்த டார்ட்டார்ப் படைவீரர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக இருக்கவில்லை. அவர்கள் எல்லாரும் தைமூரின் டார்ட்டார்ப் படையினரின் மீதுதான் அனுதாபம் கொண்டிருந்தனர். இந்த அசாதகமான சூழ்நிலைக் கிடையேதான் சுல்தான் போரிட நேர்ந்தது. போர் நடந்துகொண்டிருக்கையில், சின்ன ஆசியாவில் வலுக்கட்டாயமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட படைவீரர்கள் எதிரியிடம் சென்றுவிட்டனர். ஜனிஸ்ஸரீகளும் ஸெர்பியத் துணைப் படைவீரர்களும் மட்டுமே கடைசிவரை போரிட்டனர். இறுதியில் வெற்றி டார்ட்டார்களுக்கே ஏற்பட்டது. மிகத் தீரமாகப் போர் புரிந்த சுல்தான் முடிவில் முறியடிக்கப்பட்டுக் கைதாக்கப்பட்டார்.

சிறிது காலம் வரை சிறையிலடைக்கப்பட்ட பேஎஜீதைச் தைமூர் சற்றுத் தாராள மனப்பான்மையுடனேயே நடத்தி வந்தார். ஆனால், சுல்தான் தப்பியோட முயன்றதும், காவல் கடுமையாக்கப்பட்டது; இரவில் சுல்தானுக்குச் சங்கிலி விலங்குகள் பூட்டப்பட்டன. சில நாட்கள் சென்று, தைமூர் அவரை இன்னமும் மோசமாகவும் கொடூரமாகவும் நடத்தினர். தைமூர்

தாம் செல்லும் இடங்களுக்கெல்லாம் தம் கைதியையும் ஒரு கூண்டில் அடைத்துக் கொண்டுசென்று, பல்வேறு வகைகளிலும் அவரை அவமதித்துக் கொண்டிருந்தார். அவருடைய மனைவியாள் டெஸ்பினா என்பவளும் பல வகைகளிலும் அவமதிக்கப்பட்டாள். சுல்தானின் மற்றப் பெண்டிரும் தைமூரின் அந்தப்புரத்துக்கு மாற்றப்பட்டனர். தைமூர் தம் பகைவரைக் காலால் மிதித்தும் சென்றார் என்று கூறப்படுகிறது.

இந்த இகழ்ச்சிகளினால் மனமுடைந்த சுல்தான் எட்டு மாதங்களுக்குப் பிறகு தமது நாற்பத்தெட்டாவது வயதில் உயிர் நீத்தார். தைமூரும் இரண்டு ஆண்டுகட்குப் பிறகு காலமானார். ஆனால் இறப்பதற்கு முன் அவர் சின்ன ஆசியாவின் பெரும் பாலான பகுதிகளையும், உத்மானியர்களிடத்திருந்து நைக்கியம் புருஸா மற்றும் பல அரண்கள் ஆகியவற்றையும், ஜெரு ஸலேமின் செயின்ட் ஜான் பெருவீரர்கள் என்ற படைவீரர் களிடத்திருந்து ஸ்மிர்னாவையும் கைப்பற்றிக் கொண்டுவிட்டார். ஸ்மிர்னாவின் மதில்கள் தகர்த்தெறியப்பட்டன. அந்த இரண்டு வாரங்களில் தைமூர், அவற்றைவிட மூன்று மடங்கு அதிகமான காலத்தில் கைப்பற்ற முடியாத அரணைக் கைப்பற்றிக்கொண்டார். அதைக் காத்துவந்த வீரர்கள் என்ன செய்வது என்று திணறிக்கொண்டிருந்த நகரவாசிகளுக்கிடையே புகுந்து தப்பி ஓட முயன்றனர். அவர்களில் பலர் ரோட்ஸ் (Rhodes) என்ற தீவுக்குத் தப்பி ஓடிவிட்டனர். அவ்வாறு தப்பி ஓட முடியாதவர்கள் தைமூரால் கொல்லப்பட்டனர். அவர்களுடைய துண்டிக்கப்பட்ட தலைகள் எல்லாம் பெரும் குவியலாகக் குவிக்கப்பட்டன. அவரைத் தணிப்பதற்கெனப் புகழ் பாடிக் கொண்டே வந்த குழந்தைகளையும் குதிரைகளைக்கொண்டு மிதித்துக் கொல்லும்படி தைமூர் உத்தரவிட்டார். அந்த உத்தரவு உடனே நிறைவேற்றவும் பட்டது!

உத்மானியர்களிடம் தோல்வியுற்றுச் சரணடைந்த அரசர் கள் பலரின் நாடுகள் இவர்களிடமே திருப்பிக் கொடுக்கப் பட்டன. கரமானியாவும் அதன் அமீரிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. இறுதியில் தைமூர் சமர்க்கந்துக்குத் திரும்பினார். அங்கிருந்துகொண்டு அவர் சீனாவின்மீது படையெடுக்கத் திட்டமிட்டார். ஆனால், அத் திட்டம் நிறைவேறுவதற்கு முன்பே தமது எழுபத்தோராவது வயதில் அவர் இறந்தார். அவர் சின்ன ஆசியாவில் நடத்திய கொள்ளைப் படையெடுப்புகளின் விளைவாக, அங்கிருந்த உத்மானிய பேரரசு அறவே குலைந்தது. ஆனாலும், டார்ட்டார்கள் சேதத்தைத் தவிர மற்றெந்த அடையாளத்தையும் விட்டு வைக்காது மறைந்தே போய்விட்டனர்.

பேளஜீதின் உடலைப் பொறுத்த வீழ்ச்சி மோசமாக இருப்பினும், அவருடைய ஆன்மிகச் சீர்குலைவு அதைவிட மோசமாக இருந்தது. அதனால் உத்மானியப் பேரரசின் குடிமக்களுக்கு நிரந்தரமான சேதம் ஏற்பட்டது. அமைதி சூழ்ந்திருந்த இடைக்காலங்களில் அவர் மிகவும் மோசமான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். சிற்றின்பங்களிலும் களியாட்டங்களிலும் குடிப்போதைகளிலும் அவர் சதா மூழ்கிக்கிடந்தார். காமக் களியாட்டங்களில் அவர் நீச்சல் அடித்துக்கொண்டிருந்தார். கிறித்தவ இளைஞர்களை இஸ்லாமியர்களாக்கி அவர்களைத் தமது அரசவையின் பணிக்கு வைத்துக்கொள்வதுபோல் பாவனை செய்து, அவர்களுடன் தகாப்புணர்ச்சி கொண்டிருந்தார். இவ்வித மோசமான இவரது நடத்தை தொற்று நோய் போல் பரவி, உயர்குடி மக்களையும் பாதித்தது. இங்ஙனமாகப் பேரரசின் உயர்குடி மக்களிடையே ஏற்பட்ட ஆன்மிகச் சீர்குலைவு இறுதியில் அப் பேரரசு சீர் குலைவதற்கு ஒரு முக்கிய காரணமாயிற்று என்று கூறுவது மிகையாகாது. அவருடைய வீழ்ச்சியின் விளைவாக உத்மானியர்களின் வரலாறே முடிந்து விட்டது போலும்! பேளஜீதைப் போன்று அதிகாரத்தின் உச்சியை அடைந்து, பின் வீழ்ச்சியுற்றுக் கேவலமான கைதியாக முடிவடைந்த ஒருவரை வரலாற்றில் காண்பது அரிதேயாகும்.

6. போரை மீட்டுவித்த முதலாம் முகம்மது (1413–1421)

அங்கோராவில் ஏற்பட்ட தோல்வியின் விளைவாக, உத்மானியர்களின் ஆட்சி நிரந்தரமாகவே மறைந்து விட்டதுபோல் தோன்றியது. ஒரே அடியில் தைமூர் வெளித்தோற்றத்தளவில் அதை ஆசியாவிலிருந்து விட்டெறிந்தான் போலும்! அந்தச் சிறப்பான வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வதற்காக ஐரோப்பிய நாடுகள் பலவும் காத்துக்கொண்டிருந்தன. ஹங்கேரியர்கள், போலந்து மக்கள், பல்கேரியர்கள், அல்பேனியர்கள், விலாச்சர்கள் (Vlaches) மற்றும் பற்பலர் துருக்கிய எல்லைகளில் சுற்றிக்கொண்டிருந்தனர்; அல்லது தம் எல்லைகளுக்குள்ளேயே கிளர்ந்தெழ ஆயத்தமாக இருந்தனர். தங்களுடைய துருக்கிப் பகைவன் முற்றிலுமே மறைந்து விட்டதாக அவர்கள் கருதிக்கொண்டனர்.

ஆனால், வியக்கத்தக்க வகையில் உத்மானியர்கள் மீண்டும் உயிர்பெற்று எழுந்தனர். துருக்கியரின் பேரரசு எவரும் எதிர்பார்த்திராத ஓர் அரிய ஆற்றலை வெளிப்படுத்தியது. தைமூரின் படையெடுப்பிலிருந்து மட்டுமே அது விடுபடவில்லை; பேஸஜீத் இறந்ததற்குப் பிறகு அவருடைய நான்கு மகன்களுக்கிடையே ஏற்பட்ட உள்நாட்டுப் போரையும் அப் பேரரசு சமாளித்துவிட்டது. பத்து ஆண்டுக் காலம்நீடித்த இடையாட்சிக் காலம் ஒன்று ஏற்பட்டிருந்தது. அப்பொழுது சிம்மாசனத்திற்குப் பல போட்டியாளர்கள் போட்டியிட்டுக் கொண்டனர். இந்த அசாதாரண இன்னல்களிலிருந்து பேரரசு பேஸஜீதின் கடைசி மகனை முதலாம் முகம்மதின் தலைமையில் புத்துயிர் பெற்று எவ்வித இழப்புமில்லாமல் கால் ஊன்றிவிட்டது.

தைமூரின் படைவீரர்கள் சின்ன ஆசியா முழுவதையும் சூறையாடியதற்குப் பிறகு தம்முடைய இருப்பிடமான மத்திய

ஆசியாவுக்குத் திரும்பினர். டார்ட்டார்கள் சின்ன ஆசியாவில் தம் ஆட்சியை நிறுவவோ, ஏற்படுத்தியதைக் காப்பாற்றவோ, உருப்படியான சின்னம் எதையும் விட்டுச்செல்லவோ இல்லை. உத்மானியர்கள் தமக்குள்ளேயே போட்டியிட்டுக்கொண்டும் தம் முடைய பழைய சிற்றரசர்களுடன் போரிட்டுக்கொண்டும் தம் அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டிக் கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பெற்றனர்.

பேஎஜீதின் ஆறு மகன்களுள் ஐவர் அங்கோராப் போர்க் களத்தில் அவருடன் போரிட்டனர். அவர்களுள் ஒருவரான முஸ்தஃபா (Mustapha) போர்க்களத்திலேயே மடிந்துவிட்ட தாகக் கருதப்பட்டார். மூஸா (Musa) என்ற மற்றொரு மகன் சுல்தானுடன் சிறையில் அடைக்கப்பட்டார். மற்ற மூவரும் தப்பி ஓடிவிட்டனர். இவர்களுள் மூத்தவரான சுலைமான் பிரதம அமைச்சரான அலீயைப் பின்தொடர்ந்தார். ஜனிஸ் ஸரீப் படைகளுக்குத் தலைவராக இருந்த ஹஸன் என்பவர் ஏட்ரியானோப்பிலுக்குத் தப்பி ஓடி, பேஎஜீத் இறந்தவுடன் தம்மை சுல்தானாகப் பிரகடனம் செய்துகொண்டார். சுல்தான் என்ற நிலையில் பேரரசின் ஐரோப்பிய மாநிலங்களின்மீதும் அவர் தமது ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தார். இளைய மகனான இஸ்ஸா (Issa) என்பவர் புருஸாவுக்குத் தப்பி ஓடித் தம்மை அரசராகப் பிரகடனம் செய்துகொண்டார். கடைசி மகனான முகம்மது அமாசியா (Amasia) என்ற இடத்திற்குச் சென்று ஓய்வு பெற்றுக்கொண்டிருந்தார். அமாசியா சின்ன ஆசியாவின் வடகிழக்கில் ஒரு சிறிய சிற்றரசு நாடாக இருந்தது. எல்லா மகன்களிலுமே மிகவும் திறம்படைத்தவராக இருந்த முகம்மது அந்த மாநிலத்தின் மீது ஆதிக்கம் செலுத்திவந்தார். தந்தை இறந்ததற்குப் பிறகு இம் மூன்று மகன்களும் பேரரசு மீது உரிமை பாராட்டிக்கொண்டு வெளிப்படையாக மோதிக் கொள்ள முற்பட்டனர். பிறகு அவர்களுடன் மூசாவும் சேர்ந்து கொண்டார்.

முதன் முதலாக மோதல் முகம்மதுவுக்கும் இஸ்ஸாவுக்கும் இடையே ஏற்பட்டது. ஆசியாவிலுள்ள உத்மானிய உடைமை களைத் தமக்கிடையே பங்கிட்டுக்கொள்ளலாம் என்று முகம்மது கூறினார். ஆனால், இஸ்ஸா அதனை ஏற்றுக்கொள்ளாது முழு இராச்சியத்திற்குமே உரிமை பாராட்டினார். அவர் தோல்வி யுற்று ஐரோப்பாவிற்கு ஓடிவிட்டார். அங்கே அவர் தம் அண்ணன் சுலைமானின் உதவியை நாடினார். ஐரோப்பாவி லிருந்த உத்மானிய மாநிலங்களின்மீது உறுதியான பிடிப்

பினைக் கொண்டிருந்த சுலைமான் இஸ்ஸாவை ஆதரிக்கும் வகையில் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு சின்ன ஆசியாவுக்குள் நுழைந்து முகம்மதுவை மிகக் கடுமையாகத் தாக்கினார். சுலைமானின் கவனத்தை ஐரோப்பாவிலிருந்து வேறு திசைக்குத் திருப்புவதற்காக முகம்மது, மூசாவை நிலச் சந்தியைக் கடந்து அப்புறம் போகுமாறு உத்தரவிட்டார். விரும்பிய விளைவு இச் செயலினால் ஏற்பட்டது. ஏட்ரியாநோப்பிலுக்கு சுலைமான் பின் வாங்கிக்கொள்ள நேரிட்டது. அவருடைய வெளியேற்றத் திற்குப் பிறகு முகம்மது இஸ்ஸாவை மீண்டும் தோற்கடித்தார். இஸ்ஸா எங்கோ மறைந்தே போய்விட்டார்.

ஐரோப்பாவில் சுலைமானுக்கும் மூசாவுக்கும் இடையே மிகக் கடுமையான போர் மூண்டுவிட்டது. தம் தந்தையைப் போன்றே சுலைமானும் இருந்தார். பெரும் துணிச்சலுடனும் ஆற்றலுடனும் செயற்பட்டதற்குப் பிறகு அவர் களியாட்டங்களில் மூழ்கிக் கிடப்பார். குடிப் போதையில் இருக்கும்பொழுது அவர் எல்லோரிடமும், குறிப்பாகத் தம் படைவீரர்களிடம் மிகக் கடுமையாக நடந்துகொள்வார். இறுதியாக, அவருடைய கொடூர நடக்கை, மானங்கெட்ட வாழ்க்கை, குடிப் பழக்கம் ஆகியவற்றால் சினமும் அருவருப்புமுற்ற ஜனிஸ்ஸரீப் படை வீரர்கள் அவருக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து அவரைக் கொன்றுவிட்டனர்; அவர்கள் மூசாவுடன் சேர்ந்தும் கொண்டனர். மூசா ஐரோப்பாவின் தலைவராகித் தம்மை சுல்தானாக அறிவித்துக்கொண்டார்.

ஸெர்பிய மக்கள் முகம்மதுவுக்கு ஆதரவு காட்டித் தமக்குத் துரோகம் புரிந்துள்ளனர் என்று கருதி, மூசா இவர்களைப் பழி வாங்குவதற்காகப் படையெடுத்துச் சென்று, இம் மக்களைப் பல கொடுமைகளுக்கு இரையாக்கினர். பிறகு அவர் ஏட்ரியா நோப்பிலுக்குத் திரும்பிப் பேரரசர் இமானுவேலுக்கு எதிராகப் படையெடுத்துச் சென்றார். அப் பேரரசர், பேஎலஜீத் இறந்ததற்குப் பிறகு முகம்மதுவை ஆதரித்துவந்த அண்ட்ரோனிக்கஸைக் கிரேக்க சிம்மாசனத்திலிருந்து விலக்கித் தாமே அவ்விடத்தில் அமர்ந்துகொண்டார். மூசாவின் தாக்குதலை எதிர்த்து நிற்பதற்காக முகம்மதுவின் உதவியைப் பேரரசர் நாடினார். ஸெர்பியர்கள், துருக்கியர்கள் ஆகியவர்கள் அடங்கிய ஒரு படையைத் திரட்டிக்கொண்டு முகம்மது பாஸ்பரஸ்ஸைக் கடந்து, கான்ஸ்டான்ட்டிநோப்பிலைத் தாக்கிக்கொண்டிருந்த மற்றொரு துருக்கியப் படைக்கு எதிராகச் சென்றுகொண்டிருந்தார். இவ்விதமாகத் துருக்கியப் படைகளுக்கிடையே மோதல் ஏற்பட்டது.

இறுதியில், பின்வாங்கிக்கொண்ட மூசாவை முகம்மது பின் தொடர்ந்தார். பிறகு அவ்விரு படைகளும் ஸெர்பியாவின் எல்லைகளை நெருங்கிக்கொண்டிருக்கையில், அவர்களிடையே ஏற்படவிருந்த மோதல் மூசாவின் படைகள் அவருக்கெதிராகக் கிளர்ந்தெழுந்ததனால் தவிர்த்துக் கொள்ளப்பட்டது. அவருக்கும் ஜனிஸ்ஸரீப் படைத் தலைவரான ஹஸனுக்கும் இடையே நடைபெற்ற கடுமையான பேச்சுக்களின் விளைவாக மூசா ஹஸனைக் குத்திக் கொன்றுவிட்டார்; ஹஸனின் துணைவர் மூசாவைத் தாக்கிக் கடுமையாகக் காயப்படுத்திவிட்டார். தம் படைத்தலைவர் படுகாயமுற்றுக் கிடக்கின்றார் என்ற செய்தியைக் கேள்வியுற்ற மூசாவின் படை வீரர்கள் குழப்பத்துக்குள்ளாகி முகம்மதுவின் பக்கம் சேர்ந்துகொண்டனர். ஆகவே, வேறு வழியின்றி மூசா மூன்று பணியாட்களுடன் தப்பி ஓடிவிட்டார். பிறகு அவருடைய பூத உடல் சேற்றில் கண்டெடுக்கப்பட்டது. இப்பொழுது முகம்மதுவுக்கு நிகர் ஒருவருமே கிடையாது. அவரே கல்தானாகப் பதவியேற்றார். சுல்தானாக எட்டு ஆண்டு காலம் மட்டுமே அவர் ஆட்சி புரிந்தார்.

ஆட்சி புரிந்து கொண்டிருக்கையில், அவர் அசாதாரணத் திறமையையும் பொறுமையையும் காட்டினார். தமது பேரரசை முழுமையாக மீட்டுவித்து அதனையும் ஒன்றாக இணைத்துக் கொண்டதில் அவர் தாம் ஓர் அரசியல் வல்லுநர் என்பதையும் படைத் தலைவர் என்பதையும் நிரூபித்துக் கொண்டார். அமைதியை நிலைநாட்டுவதில் அவர் பெரிதும் விருப்பம் காட்டினார். ஸெர்பியா வலாச்சியா மற்றும் அல்பேனியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்த போது அவர் பின் வருமாறு கூறினார்: 'உங்களுடைய அரசர்களுக்கு நான் அமைதியை அளிக்கின்றேன் என்பதையும், அது போன்றே அவர்களிடத்திருந்து நான் அமைதியை எதிர்பார்க்கின்றேன் என்பதையும் கூறத் தவறுதீர்கள். அமைதியைக் குலைப்பவர்களை இறைவன் தண்டிப்பானாக!'

இக் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர் கிரேக்கப் பேரரசருடன் அமைதியை நிறுவிக் கொண்டார். அவருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, கருங்கடலிலும் தெஸ்ஸாலீயிலும் உள்ள அப் பேரரசர்க்குரிய ஒரு சில நகரங்களைத் திருப்பிக் கொடுத்து விட்டார். ஸெர்பியா, வலாச்சியா மற்றும் அல்பேனியா நாடுகளின் அரசர்களிடத்திருந்து தூதர்கள் வரப் பெற்றார்; வெனீஸ் நகருடன் அமைதி ஒப்பந்தம் ஒன்றை அவர் செய்து கொண்டார். இருப்பினும், அவர் தம் படையைப்

பயன்படுத்துவதற்கும் தாம் ஒரு படைத் தலைவர் என்பதைக் காட்டிக் கொள்வதற்கும் பல காரணங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. தைமூருக்கு அடிபணிவதாக வாக்குறுதி யளித்திருந்த சின்ன ஆசியாவிலுள்ள கரமானிய மற்றும் ஸெர்பிய அமீர்களை உத்மானியப் பேரரசிற்கு அடிபணியுமாறு முகம்மது கட்டாயப் படுத்தினார். கரமானியாவின் ஆட்சியாளர் தம் சுதந்திரத்தை வலியுறுத்துவதற்காக இரண்டு மூன்று தடவை கிளர்ந்தெழுந்தார். ஒவ்வொரு தடவையும் முகம்மது அவரைத் தோற்கடித்தார். ஆனாலும், அவர் தம் அதிகாரத்தை அவர் மீது செலுத்த வற்புறுத்தினாரே யன்றி, அவருடைய ஆட்சிப் பகுதிகளைத் தமது பேரரசில் இணைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஸ்மிர்னா, ஏய்டின் ஆகிய இடங்களில் ஒரு துருக்கிய நாட்டினை உருவாக்குவதற்காக ஒருவன் மேற்கொண்ட முயற்சியை அவர் முறியடித்தார். தர்வேஷ்கள் (Dervishes) நடத்திய பயங்கரக் கிளர்ச்சி ஒன்றையும் அவர் ஒடுக்கினார். அச் சமயப் பிரிவே மறைந்து விடும்படி அவர் செய்தார். வெனிஸ் குடியரசுக்கும் அவருக்குமிடையே கடலில் மோதல் ஏற்பட்டது. அதில் அவர் தோல்வியுற்றார் என்றாலும், தமது மானத்திற்குப் பங்கம் ஏற்படா வண்ணம் ஓர் ஒப்பந்தத்தையும் செய்து கொண்டார்.

அரசர் என்ற நிலையில் அவர் பல அரிய குணங்களைப் பெற்றிருந்தார். இலக்கியத்திலும் கவிதையிலும் அவர் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். அவரிடம் காணப்பட்ட சிறந்த பண்புகளுக்காக அவர் மாபெரும் பண்பாளர்(the Great Gentleman) என்று பெருமையோடு அழைக்கப்பட்டார். அவர் பெருந்தன்மையுடனும், நியாயமாகவும், தாராள மனப்பான்மையுடனும் நடந்து கொண்டார். அவர் தாம் அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்றி வந்தார். தாம் மீட்ட பேரரசை வெறும் படைப் பலம் கொண்டு காப்பாற்ற முடியாது என்பதை அவர் திட்டவட்டமாகப் புரிந்து கொண்டிருந்தார். நீதியும் இரக்கக் குணமும் தேவை என்பதை அவர் அறிவார். அவருடைய கிறித்தவக் குடிமக்கள் சற்றுத் தாராளமாகவே நடத்தப்பட்டனர். அவர்களுக்குக் கொடுமைகள் இழைப்பதை அவர் சற்றேனும் விரும்பவில்லை. அவர் தம் இளைய சகோதரரைக் குருடாக்கியதும் அவருடைய அண்ணன் சுலைமானின் மகனைக் கொன்றுவிட்டதும் ஆகிய செயல்கள் உண்மையில் அவருடைய நற்பெயருக்குக் கறை ஏற்படுத்தின. அவை கொடூரமான செயல்களே. இருப்பினும், அக்காலத்தில் ஓர் அரசர் அவர்களைப் போன்றவர்களை வாளா விட்டு வைப்பது என்பது மரபுக்கு மாறுகவே இருந்தது. அவர் தம் சகோதரர்களிடத்திருந்து பெற்ற அனுபவமும்

அவருடைய வமிசத்தின் வரலாறும், உத்மானிய இனத்தினர் சுல்தான் என்ற பதவியினும் குறைந்த மற்றெந்தப் பதவியையும் விரும்பவில்லை என்பதை அவருக்கு மிக உறுதியாக உணர்த்தி யிருந்தன. முகம்மது தமது குறுகிய ஆட்சிக் காலத்தில் பேரரசின் மீது முழு ஆதிக்கமும் பெற்று விட்டதற்குப் பிறகு அதனை விஸ்தரிக்கவில்லை என்றாலும், அவரை அதனை உரு வாக்கியவர்களில் ஒருவர் என்றும் அதன் மிகச் சிறப்பானதும் வெற்றிகரமானதுமான அரசர்களுள் ஒருவர் என்றும் கருதுவது நியாயமே.

அவர் 1421-ல் தமது நாற்பத்தேழாவது வயதில் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டு உயிர்நீத்தார். புருஸாவில் தாமே கட்டிமுடித்த 'பச்சை மசூதி' (Green Mosque) என்ற பள்ளிவாச லுக்கருகில் அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவருடைய காலத் தில் புருஸா பேரரசின் தலைநகராக இருக்கவில்லை. அதை அவர் ஐரோப்பாவிற்கு மாற்றியிருந்தார். இப்பொழுது ஏட்ரியா நோப்பில்தான் உத்மானியர்களின் தலைநகராக விளங்கிற்று.

பன்னிரண்டு ஆண்டு ஆட்சியில் பேரரசு அதன் பழைய நிலையை அடைந்தது. அங்கோராப் போருக்குப் பிறகு மறைந்தே போய்விட்டது என்று கருதப்பட்ட பேரரசு மீண் டும் புத்துயிர் பெற்று எழுந்தது. மாபெரும் வெற்றி பெற்ற டார்ட்டார்கள் ஒரு நினைவுச் சின்னமும் விட்டுச் செல்லாமல் மறைந்துவிட்டனர். ஆனால், அவர்களால் அழிக்கப்பட்டவர் களோ மீண்டும் தலைதூக்கத் தொடங்கினர். உண்மையில் கூறப்போனால் துருக்கியர்களின் ஆட்சியின் மிகச் சிறந்த கூறுனது, அதன் உயிர்ச் சக்தியாகும். அறிவுடைய தீர்க்க தரிசிகள் அப் பேரரசு மறைந்துவிடும் என்று மீண்டும் மீண்டும் தீர்க்கதரிசனம் கூறினர்; இருந்தும், அது நிலைத்து நின்றது. ஒன்றன்பின் ஒன்றுகப் பல மாநிலங்கள் அதிலிருந்து பிரிந்து சென்றன. அப்படி இருந்தும், சுல்தான் அந்தப் பேரரசின் சிம்மாசனத்தின்மீது மிகக் கம்பீரமாக அமர்ந்து ஆட்சி நடத்தி னார். ஓர் அரசருக்குத் தேவைப்படும் பண்பாடுகளில் ஒரு சிலவற்றையே துருக்கிய அரசர்கள் பெற்றிருந்தார்கள் என் பதையும், தம் வாள் பலத்தால் அடக்கிய குடிமக்களைச் சமாதானப்படுத்த அவர்கள் எவ்வளவு சிறிய முயற்சி செய் தனர் என்பதையும் கவனத்தில் கொள்வோமானால், அவருடைய அதிகாரம் எவ்வளவு உறுதியாக இருந்தது, அவருடைய ஆட்சி எவ்வளவிற்கு ஆட்டங் காணுமல் இருந்தது என்பன உண்மையில் வியப்பு ஊட்டிவிடும்.

தைமூரின் படைகள் பாஸ்பரஸின் தெற்குக் கடற் பகுதிகளைத் தீவிரமாகத் தாக்கிக்கொண்டிருக்கையிலும், நெடுங்காலமாக ஆழ்ந்த நித்திரையில் கிடந்த கிரேக்கப் பேரரசு எழுந்து, தான் முன்பு இழந்திருந்த மாநிலங்களைப் பெற்றுக்கொண் டிருக்கையிலும் துருக்கியர்களின் சக்தி அழிந்தே போய் விட்டது என்று கூறக் கூடும்; இருப்பினும், பன்னிரண்டு ஆண்டு களுக்குள்ளாக, முன்பு இழக்கப்பட்ட மாநிலங்கள் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டன. அவையெல்லாம் முதலாம் முகம்மதுவின் ஆட்சிக்கு உட்படலாயின. உத்மானியப் பேரரசு வலிமை குன்றி நிற்பதற்குப் பதிலாக மேலும் வலிமையுடனும் ஆற்றலுடனும் எழுச்சி பெற்றது. மேலும், பல படையெடுப் புக்களை நிகழ்த்துவதற்கான ஆயத்தங்களோடு அது மீண்டும் உதயமாயிற்று.

உத்மானியர்களின் ஆட்சி அளித்த இவ்விதமான வியக்கத் தக்க காட்சிக்கான காரணங்கள் யாவை? அவை முதன் முதலாகத் தோன்றுவதற்கான காரணங்களே இப்பொழுதும் தோன்றியிருந்தன. 'எண்ணிக்கையில் அதிகமாயிருந்த கிறித் தவக் குடிமக்கள் சிறிய எண்ணிக்கையிலிருந்த முஸ்லிம் படையெடுப்பாளர்களால் வெல்லப்படுவதற்கும், உள்ளூர் மக் களைவிட அதிகக் கொடூரம் வாய்ந்த இனத்தினரால் நாகரிக வளர்ச்சி பெற்ற நாடுகளில் குடியேற்றம் நடைபெறுவதற்கும் ஐரோப்பாவில் உத்மானியத் துருக்கியர்கள் நிலைநாட்டப் பட்டது கடைசி எடுத்துக்காட்டாகும்' என்று ஃபின்லே என்ற வரலாற்றறிஞர், காரணங்களை ஆராய்கையில் கூறு கின்றார். மூன்று முக்கிய காரணங்கள் உத்மானியர்களின் வளர்ச்சிக்கு ஏதுவாயிருந்தன. ஒன்று: சமய நம்பிக்கைகளி லும் ஆன்மிகத்திலும் இராணுவப் போக்கிலும் உத்மானியர் களின் இனம் சிறப்புற்று விளங்கிற்று. இரண்டு: ஏட்ரியாட்டிக் கடலுக்கும் கருங்கடலுக்கும் இடையேயிருந்த நாட்டுப் பகுதியில் வசித்துவந்த குடிமக்கள் பற்பல இனங்களைச் சார்ந்த வர்களாக இருந்தனர். மூன்று: கிரேக்கப் பேரரசின் மக்கள் தொகை குறைதல், அதன் நீதி வழங்கும் முறையும் நிர்வாகமும் மிகத் தாழ்ந்தநிலையை எட்டுதல், கிரேக்க இனத்தினரின் ஆன் மிகச் சீர்குலைவு ஆகியவையும் ஒரு முக்கிய காரணமாகும்.

உத்மானுக்கும் அவருடைய வாரிசுகளுக்கும் எண்ணற்ற முஸ்லிம் குடிமக்களும் கிறித்தவ இனத்தினரும் காட்டிய மரி யாதையும் கீழ்ப்படிதலும் அவர்கள் சிறந்தவர்கள் என்பதற்குச் சான்றளிக்கின்றன. மற்றும் பல அநாகரிகமிக்க இனங்கள்

எழுச்சி பெற்றுச் செழுமைமிக்க மாநிலங்களை யெல்லாம் வென்றுள்ளன; ஆனால், அவையெல்லாம் ஆடம்பர வாழ்க்கைக்கும் ஆன்மிகச் சீர்குலைவிற்குமே பலியாயின. உத்மானியர்கள் தாம் பெற்றிருந்த ஆற்றலையும் ஆன்மிகச் சிறப்பையும் குலையாமல் நெடுநாட்கள் வரையிலும் காத்து வந்தனர். இதற்கான காரணத்தைப் பெரும்பாலும் ஓர்கானும் அவருடைய சகோதரர் அலாவுத்தீனும் அசாதாரணத் திறமையுடன் புகுத்திய அரசு முறையிலும், நீதி வழங்கும் துறையிலும், சுல்தானுடைய குடும்பத்தினருக்கு அளிக்கப்பட்ட கல்வியின் தரத்திலும், உத்மானிய அதிகாரத்திற்கு வித்தாக இருந்த கிறித்தவச் சிறுவர்களைப் பற்றிய முறை எவ்விதம் உருவாக்கப்பட்டன என்பதிலும் காண வேண்டும். மிகப் பெரிய இனத்தினரின் அறிவாற்றலாலும், உடல் ஆற்றலாலும் முஸ்லிம்களும் கிறித்தவர்களும் பிணைக்கப் பட்டிருந்தனர். சுல்தானின் கொடி வெற்றிகரமாக ஐரோப்பா ஆசியா ஆகியவற்றின் இதய பாகங்களுக்கே கொண்டு போகப் பெற்றது. கிறித்தவச் சிறுவர்களுக்குக் கல்வியளித்துக் கிறித்தவ சமயத்தையே போக்கிவிட ஓர்கானும் அவருடைய வழீரும் திட்டமிட்டமை துணிச்சல் மிகுந்த ஒரு திட்டமாகும். கப்பங்களைச் செலுத்தும் கிறித்தவரின் சிறுவர்களுக்கு அளிக்கப்பட்ட கல்வியே உத்மானிய இனத்தைச் சார்ந்த இளவரசர்களுக்கும் உயர்குடி மக்களுக்கும் தரப்பட்டது. இதன் விளைவாகத் துருக்கிப் பேரரசை ஆண்ட முந்தைய மாமன்னர்கள் அறிவுக் கூர்மையுடையவர்களாகவும் முன்னேக்குடைய கருத்துக்களைக் கொண்டவர்களாகவும் விளங்கினர். அவர்கள் நிர்வாகத்திலும் இராணுவத்திலும் பல முன்னேற்றங்களைப் புகுத்துவதற்கும், புதியவைகளையும் கலப்புகளையும் மேற்கொள்வதற்கும் ஆயத்தமாயிருந்தனர். அவ்வளவு ஆற்றல் படைத்த அரசர்கள் சுய நலத்தையே நாடுபவர்களாகவும் மனச் சாட்சியற்று நடந்து கொள்பவர்களாகவும் இருந்த கிரேக்கப் பேரரசர்களுக்குக் கடும் பகைவர்களாயினர். கல்வியிலும் ஒழுங்கிலும் அவர்களுடைய குடிமக்கள் பேலியோலோகஸின் குடிமக்களைவிடச் சிறந்தவர்களாக இருந்தனர். தவிர, இந்தக் குடிமக்கள் பல்வேறு இனங்களைச் சார்ந்தவர்கள்; ஒருவர் மீது ஒருவர் பகைமையும் பொறுமையும் கொண்டிருந்தவர்கள். ஸ்லாவ்கள், கிரேக்கர்கள் பல்கேரியர்கள், அல்பேனியர்கள் முதலியவர்கள் எல்லாரும் அங்கே குடியிருந்தனர். இவர்களில் பல்வேறு கலப்புக்களும் ஏற்பட்டிருந்தன. கிரேக்கப் பேரரசின் அரசாங்கம் மிக மோசமாக இருந்ததனால் இந்தப் பலவகைப்பட்ட மக்களையெல்லாம் ஒன்றுக இணைக்கத் தவறி விட்டது. இந்தச் சூழ்நிலையில் அவர்களைத்

தாக்குவதும் அவர்களை அடிபணிய வைப்பதும் துருக்கியர் களுக்கு எளிதாகிவிட்டன. அந்த வேளையில் எல்லா வகை களிலும் உத்மானியர்கள் கிரேக்கர்களைவிடச் சிறந்தவர்களாகத் தென்பட்டனர்; விளங்கினர். இப் பேரரசு மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு முகம்மது ஒரு முக்கிய காரணமாவார். அவருடைய ஆன்மிக நிலையும் குணவியல்புகளும் அவருடைய சகோதரர் களின் நிலையை விட மிகவும் சிறப்பானவையாக இருந்தன. அதனாலேயே அவருடைய படைவீரர்கள் அவருக்கு மரியாதை செலுத்தினர்; மதிப்புக் கொடுத்தனர்.

7. இரண்டாம் முராத் (1421 - 51)
(Murad II)

முதலாம் முகம்மதுவுக்குப் பிறகு அவருடைய மைந்தர் முராத், இரண்டாம் முராத் என்ற பட்டப் பெயருடன் அரியணை ஏறினர். அவர் தம் பதவியை விட்டு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த இரு சிறு இடைவேளைகள் உட்பட, முப்பதாண்டுக் காலமாக உத்மானியப் பேரரசின் மீது ஆட்சி புரிந்துவந்தார். ஆனால், அவ்விரண்டு வேளைகளிலும் அவர் தம்முடைய மகனின் இளமையையும் அனுபவமில்லாமையையும் முன்னிட்டும், நாடு இருந்த சூழ்நிலைகளைப் பொறுத்தும் மீண்டும் பதவி வகிக்குமாறு வற்புறுத்தப்பட்டார். படைத் தலைவனாகவும் நீதிமானாகவும் செயல்படுவதில் அவர் தம் தந்தை பெற்றிருந்த தகுதிகளைச் சற்றும் குறையாமல் பெற்றிருந்தார்.

ஆனாலும், இவர் தந்தையைவிட மிகவும் பேரவாக்கொண்டவராக இருந்தார். முகம்மதுவின் சமாதானப்படுத்திக் கொண்டு செல்லும் தன்மை, அவர் நாடிய அமைதிக் கொள்கை, பேரரசை ஒன்றுக இணைப்பதற்கான விருப்பம் ஆகியவை யெல்லாம் அரசுக்கு மிக இன்றியமையாதனவாக இருந்தன. இப்பொழுது மீண்டும் படையெடுப்புகளை நிகழ்த்துவதற்குத் துருக்கியர்கள் ஆயத்தமாயிருந்தனர். அதுபோன்ற வாழ்க்கைக்கு இந்த முராத் போன்ற ஒருவர்தாம் தேவைப்பட்டார். மக்களுடைய ஆசைகளை அவர் வெகு சிறப்பாகவே நிறைவேற்றிக் கொடுத்தார்.

முராதின் இளமையையும் அனுபவமில்லா நிலையையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த கிரேக்கப் பேரரசரான இமானுவேல் என்பவர் முராதின் ஆட்சியின் துவக்கத்திலேயே சற்று மூடத்தனமாக நடந்து கொண்டார். உண்மையிலேயோ உண்மையில்லாமலேயோ பேளஜீதின்

மகன் முஸ்தஃபா என்று தம்மை அழைத்துக் கொண்டிருந்த ஒருவரைக் கிரேக்கப் பேரரசர் விடுதலை செய்து விட்டார். அங்கோராப் போருக்குப் பிறகு மறைந்து விட்டிருந்த இவர் இப்பொழுது பேரரசர் இமானுவேலால் விடுதலை செய்யப்பட்டு, உத்மானியப் பேரரசுக்கு உரிமை பாராட்டினர். அவருடன் இமானுவேல் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். அதன் படி, முஸ்தஃபா வெற்றிகரமாக உரிமை பாராட்டிப் பதவிக்கு வந்துவிட்டால் காலிப்போலி என்ற நகரையும் கருங்கடலிலிருந்த ஏனை நகரங்களையும் அவர் கிரேக்கப் பேரரசருக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

இவ்விதமாக, இஸ்லாத்துக்கு மிக மோசமாகத் துரோகம் இழைத்தார் எனினும், முஸ்தபா என்றழைக்கப்பட்டவர் ஐரோப் பாவில் பெரிய படை ஒன்றினைத் திரட்டி, முராதுடன் சேர்ந் திருந்த படையினரை முறியடித்தார். பிறகு, அவர் டார்ட னெல்ஸைக் கடந்து ஆசியாவுக்குள் நுழைந்தார். அவருடைய படை வீரர்கள் இமானுவேல் அளித்த படகுகளில் ஏறி, அவ் விடத்தை யடைந்தனர். இந்த நெருக்கடியை முராத் மிக்க ஆற்றலுடனும் திறமையுடனும் சமாளிக்க முயன்றார். முஸ்தபா வின் சேனையில் அதிருப்தியடைந்திருந்த படைவீரர்களை முராத் தம் பக்கம் இழுத்துக் கொண்டார். மீதி இருந்தவர்களை அவர் வெகு எளிதாக முறியடித்தார். காலிப்போலிக்கு முஸ்தபா விரட்டியோட்டப்பட்டார். அங்கே அவர் முற்றுகை யிடப்பட்டுச் சிறையடைக்கப்பட்டு இறுதியில் தூக்கிலிடப்பட்டார்.

தமக்குப் போட்டியாக நின்ற முஸ்தபாவைக் கொன்றுவிட்டு, தமக்குத் துரோகம் செய்த பேரரசர் இமானுவேலைப் பழிவாங்க முராத் முடிவுசெய்தார். அத்துடன், கான்ஸ்டான்ட்டிநோப்பிலைக் கைப்பற்றிக் கிரேக்கப் பேரரசையும் அழித்துவிட அவர் தீர்மானித்தார். இதனை நிறைவேற்றுவதற்காக ஆற்றல் மிக்க படை வீரர்களைக் கொண்ட படை ஒன்றையும் அவர் திரட்டிக் கொண்டார். அத் தலைநகரையே தகர்த்தெறிவதற்காக அவர் தீவிர நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டார். படையிலிருந்த பற்பலரையும் பற்பல விதமாக அவர் ஊக்குவித்தார். ஆனாலும், அவருடைய தாக்குதலில் அவர் வெற்றி காணவில்லை. கிரேக்க வீரர்கள் மிகவும் தீரத்துடன் அந் நகரைப் பாதுகாத்தனர். ஆனாலும், முராத் விடாமல் இம் முற்றுகையை நடத்தி இருப்பா ராயின், அவருக்கு வெற்றி நிச்சயமாகக் கிட்டியிருக்கக் கூடும்; ஆனால், கிரேக்கப் பேரரசர் கையாண்ட யுக்தி ஒன்றினை முன்னிட்டு அவர் முற்றுகையைக் கலைக்க நேரிட்டது.

முஸ்தஃபா என்ற பெயரைக் கொண்டிருந்த முராதின் மற்றொரு இளைய சகோதரர், ஆசியாவில் அவருக்குப் போட்டியாளராகத் தோன்றினர். இப் புதிய உரிமையாளரைக் கரமானியர்களும் கெர்மியர்களும் ஆதரித்தனர். அவர்களுடைய உதவியைக் கொண்டு அப் போட்டி உரிமையாளர் சின்ன ஆசியாவில் இருந்த உத்மானியப் படையை முறியடித்தார். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் கான்ஸ்டான்ட்டிநோப்பிளின் முற்றுகையைக் கைவிடுவது என்று முராத் முடிவு செய்து, இப் புதிய ஆபத்தைச் சமாளிப்பதற்காகத் தம் படையின் பெரும் பகுதியைச் சின்ன ஆசியாவுக்குக் கொண்டு போனார்; வெகு விரைவில் முஸ்தபாவின் படையை நெருங்கி அதனைத் தோற்கடித்தார். முஸ்தபா கைது செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார். பிறகு, முராத் கரமானிய அமீரையும் இதர அமீர்களையும் தமது பேரரசுக்கு முற்றிலும் அடிபணிய வைத்தார்.

இதற்கிடையே இமானுவேல் இறந்துவிட்டார். ஜான் பேலியோலோகஸ் (John Paleologus) என்பவர் பட்டத்திற்கு வந்தார். கான்ஸ்டான்ட்டிநோப்பிலுக்குத் திரும்பிய முராத் முற்றுகையைத் தொடர்ந்து நடத்தாது, புதிய பேரரசருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டு, அவரிடமிருந்த எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு, கப்பமும் விதித்தார். இவ்விதமாகக் கிறித்தவப் பேரரசு இன்னும் சிறிது காலத்திற்கு உயிர் பெற்றது.

கிரேக்கப் பேரரசால் அண்மையில் வெனிஸ் குடியரசுக்கு விற்கப்பட்ட சலோனிக்காவைப் (Salonika) பொறுத்தவரை, அந் நகரம் ஒரு காலத்தில் உத்மானியர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்ற காரணத்தைக் காட்டி, அவ்வித மாற்றுதலை அங்கீகரிக்க முராத் மறுத்துவிட்டார். கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் அது மூன்று தடவை உத்மானியர்களின் கைவசமாயிற்று; அத்தனை தடவை கிரேக்கர்களால் அது மீட்கவும்பட்டது. அதைத் தாக்குவதற்கு முராத் 1430-ல் படையுடன் சென்றார். வெனிஸ்வாசிகள் அதனை மும்முரமாகப் பாதுகாத்த போதிலும், முராத் இறுதியில் அதைக் கைப்பற்றிக் கொண்டார். இறுதியில் அவர் அதையும் அந்த மாவட்டத்தையும் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டார். கைதாக்கப்பட்ட கிரேக்க மக்கள் அடிமைகளாக விற்கப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கை அளவுக்கு மீறி இருந்ததனால், அழகான பெண்களும் ஒரு ஜோடி காலணிக்குப் பகரமாக விற்கப்பட்டனர்.

சின்ன ஆசியாவில் தோன்றிய கிளர்ச்சியை அடக்குதல், கிரேக்கப் பேரரசை அடிபணிய வைத்தல், சலோனிக்காவைக் கைப்பற்றுதல் ஆகிய இந்தச் செயல்களெல்லாம் முராதின் கவனத்தை வேறு புறங்களில் செல்லவிடவில்லை. பின்னாளில் அவர் தம் சுற்றுப் புறத்தாரான ஹங்கேரியர்களுடன் போரில் மிகத் தீவிரமாக ஈடுபட வேண்டியிருந்தது. உத்மானியப் பேரரசின் வட எல்லைப் பிரதேசங்களில், குறிப்பாக டான்யூப் நதிக்கப்பாற்பட்ட பகுதிகளில் உத்மானியர்கள் கொள்ளையடித்து அம் மாவட்டங்களையெல்லாம் சூறையாடிக் கொண்டிருந்தனர். அம் மக்களில் பல்லாயிரம் பேர் சிறையில் அடைக்கப்பட்டு அடிமைகளாக விற்கப்பட்டனர். இந்தச் சமயத்தில், ஹங்கேரியில் மாபெரும் வீரர் ஒருவர் தோன்றினார். அவர்தாம் சிகிஸ்மண்ட் என்ற அரசனின் மகனுவார். ஹுன்யாடி (Hunyadi) என்று இவருக்குப் பெயர். மக்களினத்துக்குத் தலைமை தாங்குவதற்கென்றே அவர் பிறந்தவர். அவர் ஒரு பெரும் படைத் தலைவராக இருக்கவில்லையாயினும் ஆற்றல் மிக்க சிறந்த வீரராக விளங்கினார். போரில் மற்றத் திக்குகளில் அவர் பெரும் புகழ் பெற்றவர். இப்பொழுது அவர் உத்மானியர்களின் கடும் பகைவராகி விட்டார். 'மாபெரும் வீரர்' என்றும் 'தேசிய வீரர்' என்றும் மக்கள் அவரை இயல்பாகவே கருதினர். இருப்பினும், அவரும் இரத்தம் சிந்துவதில் தணியா ஆசைகொண்டிருந்த ஒரு முரடனுவார். போர்க் களத்தில் பிடிபட்ட கைதிகளை யெல்லாம் கொல்வது அவருக்கு ஒரு சாதாரணப் பழக்கமாகவே ஆகிவிட்டிருந்தது. இதனை விருந்துகளில் தம் முன்னிலையிலேயே நிகழ்த்துவதில் அவர் பெரும் ஆசை கொண்டிருந்தார். விருந்தினர்கள், கொல்லப்படுபவர்களின் ஒப்பாரிப் புலம்பல்களைக் களிப்புடன் கேட்டுக் கொண்டே விருந்துண்ண வேண்டுமாம்!

இருபதாண்டுக் காலம் வரை ஹுன்யாடி உத்மானியப் படைகளின் கடும் பகைவராக இருந்து வந்தார். முதன் முதலாக இருதரப்பினருக்குமிடையே டான்யூப் நதியின் வடக்கிலுள்ள ஹெர்மான்ஸ்டட் (Hermanstadt) என்ற இடத்தில் மோதல் ஏற்பட்டது. அதை எண்பதாயிரம் உத்மானியப் படை வீரர்கள் முற்றுகையிட்டிருந்தனர். அவர்களுக்கெதிராக இருபதினாயிரம் படை வீரர்களை ஹுன்யாடி திரட்டிக் கொண்டு சென்றார். எண்ணிக்கையில் உத்மானியர்களைவிடக் குறைந்த படை வீரர்களைக் கொண்டிருந்தாலும் ஹுன்யாடி உத்மானியர்களைத் தோற்கடித்தார். இருபதினாயிரம் உத்மானியர்கள் கொல்லப் பட்டனர்; படைத் தலைவரும் கொல்லப்பட்டார். மற்றவர்கள் அங்குமிங்குமாகச் சிதறடிக்கப் பெற்றனர். ஹுன்யாடிக்கெதிராக

80,000 வீரர்களைக் கொண்ட மற்றொரு சேனையை இன்னொரு பாஷாவின்கீழ் முராத் அனுப்பி வைத்தார். வர்சாக் (Varsag) என்ற இடத்தில் அதையும் ஹுன்யாடி முறியடித்துவிட்டார்.

குறிப்பிடத்தக்க இந்த வெற்றிகள் ஐரோப்பாவில் பெரும் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் கிளப்பிவிட்டன. உத்மானியர்களைத் தாக்கி அவர்களை ஐரோப்பாவிலிருந்து விரட்டியடித்து விடவேண்டும் என்றே ஐரோப்பிய நாடுகள் தீர்மானித்து விட்டன. இத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக ஹங்கேரியும் போலந்தும் மற்றும் வலாச்சியா போஸ்னியா ஆகிய நாடுகளும் கூட்டுறவு ஏற்படுத்திக்கொண்டன. ஸ்டீபன் லாஸரிவிட்ச் (Stephen Lazariwitch) என்ற அரசனின் கீழ் இது வரையிலும் உத்மானியர்களுக்கு ஆதரவு கொடுத்து வந்த செர்பியநாடு இனி அத் தொடர்பினை விட்டுவிடுமாறு வற்புறுத்தப்பட்டதோடு, ஸ்டீபனின் வாரிசான ஜார்ஜ் பிராங்க்கோவிட்ச் (George Brancowitch) என்பவரின் ஆட்சிக்காலத்தில் இக் கூட்டணியுடன் சேர்ந்துகொண்டு உத்மானியர்களை எதிர்க்குமாறும் வற்புறுத்தப்பட்டது. யூஜெனியஸ் (Eugenius) என்ற போப்பாண்டவரும் இக் கூட்டணியை மிகவும் தீவிரமாக ஆதரித்தார். அவருடைய பிரதிநிதியான கார்டினல் ஜூலியன் ஸிஸேரினி (Cardinal Julian Caesarini) என்பவர் அதனை ஆதரிப்பதற்காக ஒரு படையையும் கொண்டு சென்றார். போரை நிகழ்த்துவதற்காகப் பல வகைகளிலும் பணம் வசூலிக்கப்பட்டது. ஃபிரெஞ்சு மற்றும் ஜெர்மன் வீரர்கள் பல்லாயிரக் கணக்கில் கூட்டுப் படையினருடன் சேர்ந்துகொண்டனர். உண்மையில், அது இஸ்லாமியர்களுக்கெதிராக உருவான மற்றொரு சிலுவைப் போராகும். இந்த மாபெரும் கூட்டுப்படைக்குப் பெயரளவிற்கு லாடிஸ்லாஸ் (Ladislaus) என்பவர் தலைமை வகித்திருந்தபோதிலும், ஹுன்யாடியே அதன் உண்மைத் தலைவராக விளங்கினார். வெனிஸ், ஜினோவாக் குடியரசுகள் கூட்டணிக்கு ஆதரவு அளித்தன. இக்காலத்தில் உத்மானியர்கள் ஒரு கப்பற்படையைப் பெற்றிருக்கவில்லையாதலால் இந்தக் குடியரசுகள் தங்களுடைய ஆற்றல் வாய்ந்த கப்பல்களைக் கொண்டு, அப்பொழுது சின்ன ஆசியாவில் கரமானியர்களுடன் போரில் ஈடுபட்டிருந்த முராத் அவருடைய படையின் முக்கியப் பிரிவை ஐரோப்பாவிற்கு மாற்றுவதினின்று தடுத்து நிறுத்திவிட முடியும் என்று எதிர்பார்த்தனர்.

இவ்விதச் சாதகமான சூழ்நிலைகளைப் பெற்றிருந்த கூட்டுப் படை 1443-ல் டான்யூபைக் கடந்து சென்றது. மாசோவாவின்

(Masova) கரையிலும், மீண்டும் நிஷ் (Nisch) என்ற இடத்திலும் அது உத்மானியர்களை முறியடித்தது. பிறகு அது பால்கன் பகுதியைப் பனிக்காலத்தில் கடந்து, மீண்டும் துருக்கியரின் படைகளைத் தோற்கடித்தது. இவ் வெற்றிகளைத் தொடர்ந்து மேலும் தாக்குதல்களை நடத்தாது, ஹுன்யாடி மனநிறைவு பெற்றுத் தம் படையுடன் பூடாவுக்குத் திரும்பிவிட்டார்.

ஹங்கேரியர்கள் பால்கன் பிரதேசத்தைக் கடந்து பின் வாங்கிக்கொண்டனர் என்பதைக் கேள்வியுற்ற முராத் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதே நலம் என்றும், டான்யூபைக் கடந்து அவர்களைப் பின்தொடரக் கூடாது என்றும் மன உறுதிகொண்டு விட்டார். சில இன்னல்களுக்குப் பிறகு ஸெகடின் (Szegeddin) என்ற இடத்தில் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன்படி, ஸெர்பியா உத்மானியர்களின் பிடியிலிருந்து விடுபடவேண்டும் என்றும், வலாச்சியாவை ஹங்கேரியர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. பத்தாண்டுக் காலத்திற்கு இது அமலில் இருக்கவேண்டும். இது, ஸெர்பியாவின் லாடிஸ்லாஸுக்கும் முராதுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தமாகும்; திருக் குர்ஆனின் மீதும் கிறித்தவ வேதத்தின்மீதும் பிரமாணம் எடுத்துக்கொள்ளப் பட்டுக் கையொப்பமிடப்பட்டதாகும்.

இந்த ஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், முராத் சிம்மாசனத்தைவிட்டு இறங்க முடிவு செய்தார். போரினால் களைப்பு ஏற்பட்டிருந்த அவருக்குத் தம்முடைய எஞ்சிய நாட்களை அதுவரையிலும் அவர் அனுபவிக்காத சிற்றின்பங்களில் கழிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. நாற்பத்தொரு வயதை அடைந்திருந்த இவர் இல்லற வாழ்க்கைக்கான ஆற்றலை இன்னும் பெற்றிருந்தார். பேரரசர் ஐந்தாம் சார்லஸ்ஸைப் (Charles V) போல் இவர் ஒரு மடத்திற்குச் சென்று ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அதற்கு மாறாக, ரோமாபுரிப் பேரரசர் டையோக்லீஷியனைப் போல் (Dioclietian) எழில்மிக்க பூங்காக்கள் சூழ்ந்த ஆடம்பரமான அரண்மனைக்குச் செல்லவே விரும்பினார். அதுபோன்ற அரண்மனை ஒன்றினை அவர் மாக்னீஸியாவில் (Magnisia) கட்டி முடித்திருந்தார். 1444-ல் ஸெகடின் ஒப்பந்தம் உறுதிப்படுத்தப்பட்டவுடன், அவர் தமது நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் தம் மகன் முகம்மதுவைச் சிம்மாசனத்தில் அமர்த்திவிட்டு, மாக்னீஸியாவிற்குச் சென்றுவிட்டார். முகம்மதுவுக்கு அப்பொழுது பதினான்கே வயதாகியிருந்தது.

இந்தப் பதவிவிலகலைப்பற்றிக் கிறித்தவர்கள் கேள்வியுற்ற துமே, ஸெகடின் ஒப்பந்தத்தை மீறி விடுவதே சரியென முடிவு செய்துவிட்டனர். அவ் வொப்பந்தத்துக்கு மாறுக நடந்து கொள்ளுமாறு போப்பும் கிரேக்கப் பேரரசரும் தங்கள் ஆன்மிகப் பலத்தைக்கொண்டு ஹுன்யாடியைத் தூண்டினர். (கிறிஸ்துவை ஏற்பதில்) நம்பிக்கையற்றவர்களுக்கு அளித்த வாக்குறுதியைக் கிறித்தவர் மீறலாம் என்று போப்பின் ஆதரவுடன் கார்டினல் ஸிமெனீஸ் (Cardinal Ximenes) எடுத்துரைத்தார். அவ்விதம் நடந்துகொள்ள ஹுன்யாடி விரும்பவில்லையாயினும், பல்கேரியாவின் சிம்மாசனம் தமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருடைய மன உறுதியைக் குலைத்தது. மிகப் புனிதமான பிரமாணத்துடன் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தை மீறுவதற்கு அவர் இணங்கிவிட்டார். ஒப்பந்தம் ஏற்பட்ட ஒரு மாதக் காலத்திற்குள்ளாகவே இவ்விதமாக அதற்குத் துரோகம் இழைக்கப்பட்டது. ஆனாலும், துருக்கியர்கள் தாம் அளித்த வாக்கினைக் காப்பாற்றி ஸெர்பியாவிலுள்ள கோட்டைகளை விட்டு வெளியேறும் வரையில் காத்திருந்து, பிறகே சதியாளர்கள் தமது பயங்கரத் திட்டத்தை வெளிப்படுத்தினர்.

உத்மானியர்களுக்கெதிராக, உடனடியாக ஒரு படையை அனுப்ப முடிவு செய்யப்பட்டது. ஆனாலும் அப் படை, முன் அனுப்பப்பட்டதைவிடச் சிறியதாகவே இருந்தது. ஹுன்யாடியின் தலைமையில், அப் படையினர் பல்கேரியாவின்மீது படையெடுத்தனர்; பிறகு பால்கன் மலைப் பிரதேசங்களைக் கடந்து செல்லாமல் அவர்கள் டான்யூப் நதி வழியாகக் கடற்கரைக்கு வந்து வார்னை (Varna) நோக்கி முன்னேறினர். அதற்கிடையே இச்செய்திகளைக் கேள்வியுற்றுப் பெரும்பீதிக்குள்ளான உத்மானியர்கள், இளைஞராக இருந்த தங்களுடைய அரசரால் நிலைமையைச் சமாளிக்க முடிகின்றதோ இல்லையோ என்று அஞ்சி, ஓய்வெடுத்துக் கொண்டிருந்த முராதைத் திரும்பி வருமாறு அவருக்கு அழைப்பு விடுத்தனர். அவர் துரிதமாகச் செயற்பட்டு, சின்ன ஆசியாவில் ஒரு படையைச் சேகரித்தார். படைவீரர்களை ஹெல்லெஸ்பாண்ட்டிற்குப் படகுகளில் கொண்டு சென்றால் தலா ஒரு துக்கா (Ducat)[1] தருவதாக அவர் ஜினோவா மக்களைத் தூண்டினார். அவருடைய நோக்கத்தைக் கிறித்தவப் படையினர் அறிந்துகொள்வதற்கு முன்னமேயே எதிர்பாராவகையில் அவர் திடீரென்று வார்னைவின்மூன் தோன்றிவிட்டார்.

[1] ஒரு Ducat என்பது, $ 3·93 மதிப்புள்ள தங்க நாணயம்.

அவருடைய படையின் எண்ணிக்கை லாடிஸ்லாஸின் படையி லிருந்த எண்ணிக்கையைவிட மிக அதிகமாக இருந்தது. இருப்பினும், அவருடைய படையின் இரு பக்கங்களும் பெரும் ஆட்சேதத்துடன் விரட்டியடிக்கப்பெற்றன. நடுவிலிருந்த, படைக்குத் தலைமை தாங்கிய முராத் ஒரு சில நிமிடங்கள் வரை தம் மன அமைதியை இழந்துவிட்டிருந்தார்; ஓட்டம் பிடிக்கவும் அவர் ஆயத்தமாகிக்கொண்டிருந்தார். ஆனால், நல்வசமாக அனட்டோலியாவின் அரசரான கரஜா (Karaja) என்பவர் முராதின் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு, அவரைத் தொடர்ந்து போரிடுமாறு வற்புறுத்தினர். ஜனிஸ் ஸரீப் படையினர் மிக உறுதியாக நின்று கிறித்தவர்களின் முக்கியப் படையை முறியடித்தனர். லாடிஸ்லாஸின் குதிரை கொல்லப்பட்டவுடன், கீழே விழுந்த அவரைப் பகைவர்கள் சூழ்ந்துகொண்டு அவ்விடத்திலேயே வெட்டி வீழ்த்தினர். துண்டிக்கப்பட்ட அவரது தலை ஈட்டியின் முனையில் சொருகப் பட்டு, யாவரும் காணும்படி தூக்கிப் பிடிக்கப்பட்டது. இக் குரூரக் காட்சியைக் கண்ணுற்ற ஹங்கேரியர்களின் உடல் சிலிர்த்தது. பீதிக்குள்ளான அவர்கள் அங்குமிங்குமாக ஓடினர். வெற்றிபெற்ற தமது வலது பக்கமிருந்த படையுடன் திரும்பிய ஹுன்யாடி வீணுகவே ஜனிஸ்ஸரீகளைத் தாக்கி, அவர்களிடம் சிக்கிய அரசரின் தலையை மீட்க முயன்றார். ஆனால், எதிர்ப்புப் பலமாக இருந்ததனால் பீதியுற்ற அவரும், எஞ்சியிருந்த தமது படையுடன் ஓடத் தொடங்கினர். இவ்வாறு தலைவர்களின்றி விடப்பட்டிருந்த ஹங்கேரியப் படைவீரர்கள், துருக்கியர்களால் தாக்குண்டு கொல்லப்பட்டனர். ஹங்கேரிய அரசரும், இப் போரிடிக்குக் காரணமாயிருந்த கார்டினல் ஜூலியனும் துருக் கியர்களின் வாளுக்கு இரையாயினர். மற்றும் இரண்டு மேற்றி ராணியார்களும் (Bishops) (இலாவு மற்றும் கிராஸ்வர்டைன் என்ற இடங்களின் பிஷப்புகள்) அதே முடிவினை அடைந்தனர். இந்த மாபெரும் தோல்வியும் பேரிழப்பும் நியாயமானவையே ஆகும். போர்க்களத்தில் மூன்றில் இரண்டு பங்கு கிறித்தவப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். அதைவிட அதிகமாக உத்மானியர்களுக்கும் அதே கதி ஏற்பட்டது.

இப் போரின் முக்கிய விளைவால், பாஸ்னியா மற்றும் ஸெர்பியா ஆகிய நாடுகள் முற்றிலும் அடிபணிய வைக்கப் பெற்றன. ஹுன்யாடி வெற்றி பெற்றுவிட்டால், அப் பகுதிகளி லிருந்த கிறித்தவர்கள் எல்லாம் இலத்தீன் திருச்சபைக்கு (Roman Church) அடிபணிய வேண்டிய நிலை ஏற்படும் என்று

அஞ்சிய அம் மக்கள் மீண்டும் முஸ்லிம்களின் ஆட்சிக்கு உட் பட்டிருப்பதையே அதிகமாக விரும்பினர்.

அம் மாபெரும் வெற்றியைப் பெற்றுவிட்ட முராத் மீண்டும் சிம்மாசனத்திலிருந்து இறங்கி, மாக்னீஸியாவுக்குத் திரும்பி விட்டார். ஆனல், சுல்தானுக மீண்டும் பதவியேற்ற அவருடைய மகன் பேரரசின் விவகாரங்களைச் சமாளிப்பதற்குப் போதிய அனுபவம் பெற்றவராக இருக்கவில்லையாதலாலும், ஜனிஸ்ஸரீப் படையினரிடையே கலகம் ஏற்பட்டதனலும் முராத் தமது ஓய் விடத்திலிருந்து மீண்டும் தலைநகருக்குத் திரும்பி வரவேண்டிய அவசியம் தோன்றுவதாயிற்று. ஏட்ரியாநோப்பிலில் தங்கி இருந்த ஜனிஸ்ஸரீப் படையினர் மிகத் தீவிரமாகக் கிளர்ந் தெழுந்தனர். அவர்கள் அந் நகரைச் சூறையாடிப் பல கொடுமைகளை இழைத்தனர். இளைஞரான சுல்தானின் அமைச்சர்கள் இவற்றின் விளைவாகப் பெரும் பீதியுற்றனர். கட்டுக்கடங்கா ஜனிஸ்ஸரீகளை முராத் போன்ற உறுதியான வர்கள் மட்டுமே கட்டுப்படுத்த முடியும் என்று அவர் கள் கருதினர். ஆகவே, முராத் திரும்பவும் வந்து பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்பட்டார். வேட்டைக்குச் சென்றுவிடுமாறு முகம்மது தூண்டப்பட்டார். மகன் நகரில் இல்லாதபோது முராத் ஏட்ரியாநோப்பிலுக்குள் நுழைந்து, அரச பதவியை மேற்கொண்டு விட்டார். வீடு திரும்பிய முகம்மது தம் தந்தை மீண்டும் சுல்தானுக அரியணை ஏறியிருப்பதை உணர்ந்தார். படையினரும் முராதைப் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்றனர். கட்டுங்கடங்கா ஜனிஸ்ஸரீப் படையினரும் அவருக்கு அடிபணிந்தனர். அடுத்து, ஏழாண்டு கள் வரை முராத் ஆட்சி புரிந்தார். அந்த ஏழாண்டுகளும் இடையருத போர்களிலேயே கழிந்தன. கிரேக்கப் பேரரசரின் உடன்பிறந்த இரு சகோதரர்கள் மொரியாவைத் தமக்கிடையே பங்கிட்டுக்கொண்டு, தம்மை இளவரசர்கள் அல்லது சர்வாதி காரிகள் என்று அழைத்துக்கொண்டு, ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தனர். முராத் முதன் முதலாக மொரியாவின்மீது படையெடுத்தார். அதை அவர் மிக எளிதாகத் தாக்கிக் கோரிந்த் (Corinth) நிலச்சந்தியைக் காத்து வந்த அரணைக் கைப்பற்றிக்கொண்டார். அவ்விரு சர்வாதிகாரிகளையும் துருக்கிப் பேரரசுக்கு அடிபணிந்திருக்குமாறு அவர் கட்டாயப்படுத் தினர்.

முராத் மீண்டும் ஒருமுறை தமது கவனத்தை ஸெர்பியா மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளின் மீது திருப்பினர்

ஹுன்யாடியின் தலைமையில் திரண்ட ஹங்கேரிய, ஸெர்பிய, பாஸ்னியப் படைகளைக் கொஸ்ஸோவாப் போரில் மீண்டும் ஒரு முறை (அக்டோபர், 1448) முராத் தோற்கடித்தார். இப் பெரும் போரின் விளைவாக, ஸெர்பிய நாடு தன் சுதந்திரத்தை முற்றிலுமே இழந்துவிட்டது. இறுதியில், அது உத்மானியப் பேரரசோடு இணைத்துக்கொள்ளப்பட்டது. பாஸ்னியா, பேரர சிற்குக் கப்பம் செலுத்தும் ஒரு நாடாயிற்று. ஆனாலும், அல்பேனியர்களைத் தோற்கடிப்பதில் முராத் அவ்வளவிற்கு வெற்றிபெறவில்லை. இவர்களுக்கு ஜார்ஜ் காஸ்ட்ரியோட்டா (George Castriota) என்பவர் தலைமை வகித்தார். ஸ்கந்தெர் பெர்க் (Scanderberg) என்று இவர் பொதுவாக அழைக்கப் பட்டார். இவர் ஒரு காலத்தில் முராதின் அரசவையில் முஸ்லி மாக வளர்ந்து போர்க் கலையை அந்த சுல்தானின் சீடரா யிருந்தே தெரிந்து கொண்டார். ஆனால், இப்பொழுது அவர் அல்பேனியர்களின் தலைவராவதற்கு ஆசைப்பட்டு, இஸ்லாத் தைக் கைவிட்டார். இவர் உத்மானியர்களின் படைகளின் மீது 'திடீர்த்' தாக்குதல்களை நடத்தி, வெற்றியும் பெற்றுக் கொண்டிருந்தார். ஆகவே, அந் நாட்டை முராதால் எளிதாக அடக்க முடியவில்லை. இதுதான் தம் வாழ்க்கையில் அவர் கண்ட ஒரே ஒரு தோல்வி என்று கூறவேண்டும். ஹுன்யாடி யினிடம் அவருடைய படைத் தலைவர்கள் பல தடவை தோல்வி அடைந்துள்ளனர். ஆனாலும், அம் மாபெரும் வீரரைச் சந்தித்த இரு போர்க் களங்களிலும் முராத் மட்டுமே மகத்தான வெற்றி களைப் பெற்றார். 1451-ல் அவர் வலிப்பு நோயால் இறந்தார்.

முராத் மரித்து விட்டாலும், அவரது ஆவி இறக்கவில்லை. முராத் இறந்து ஐந்து ஆண்டுகட்குப் பிறகு அவருடைய மகன் முகம்மது ஹங்கேரியின் நுழைவாயிலாக இருந்த பெல்கிரேடை (Belgrade) முற்றுகையிட்டார். அவரை எதிர்க்க ஹுன்யாடி தோன்றினார். ஹுன்யாடி பெற்ற வெற்றி, தம் வாழ்க்கையிலேயே அவர் பெற்ற மகத்தான வெற்றியாகும். படையைச் சிறிதும் தளராமல் போராடும்படி அவர் தூண்டி விட்டார். ஜான் காபிஸ்டிரான் என்னும் பாதிரி 60,000 படை வீரர்களுடன் ஹுன்யாடியின் உதவிக்கு விரைந்தார். ஜனிஸ்ஸரீப் படையினர் அந் நகரில் நுழைந்துவிட்ட பொழுது, ஹுன்யாடியும் ஜான் காபிஸ்டிரான் என்ற பாதிரியும் திடீரென்று அவர்கள் மீது பாய்ந்து தாக்கினர். அவர் களுடைய தாக்குதல் மிகக் கடுமையாக இருந்தமையால் துருக்கியர்கள் திணறினர். அத் தாக்குதலைப் பின்தொடர்ந்து

ஹுன்யாடியும் அப் பாதிரியும் உத்மானியர்களை விரட்டியடித்தனர். உத்மானியர்கள் தம் உயிரைக் காப்பதற்காக எல்லாவற்றையும் கிறித்தவர்களிடமே விட்டுவிட்டு ஓடிவிட்டனர். சுல்தான் முகம்மதுவோ காயமுற்றார். அவருடைய 25,000 படை வீரர்கள் போர்க்களத்தில் மாண்டு கிடந்தனர். இந் நிகழ்ச்சி நடந்த இருபது நாட்களுக்குப் பிறகு, ஹுன்யாடி — பல போர்களில் வெற்றி பெற்ற அம் மாவீரர் — உயிர்நீத்தார்.

முராதினுடைய வாழ்க்கை வரலாற்றின்மீது கண்ணோட்டம் செலுத்துவோமேயானால், தம்முடைய பேரரசை ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கடைப்பிடித்து அவர் விரிவுபடுத்தியதாகக் காண்பதற்கில்லை. ஒவ்வொரு தடவையும் அவர்மீது பிறரால் போர் திணிக்கப்பட்டது. கரமானியாவின் அமீர் அவர்மீது மூன்று தடவை போர் தொடங்கியுள்ளார். அம் மூன்று தடவையும் முராத் அவரைத் தோற்கடித்துள்ளார். அந்த அமீர் தமக்குக் கீழ்ப்படிவதை மட்டுமே முராத் விரும்பினர். அவருடைய ஆட்சிப் பகுதியைத் தம் பேரரசில் இணைத்துக் கொள்ள இவர் விரும்பவில்லை. கிரேக்கப் பேரரசர் இவரிடம் எவ்வளவு துரோகத்தனமாக நடந்து கொண்டார் என்பதை முன்னரே ஆராய்ந்துள்ளோம். ஆகவே, அவரை எதிர்த்து முராத் போருக்குச் சென்றது நியாயமே! அது போன்றே வெனிஸியக் குடியரசின் வசம் இருந்த சலோனிக்காவை முராத் தாக்கியதும் நியாயமானதேயாகும். வட எல்லைப் பகுதியில் ஏற்பட்ட போர்கள் ஹங்கேரியர்களாலும் அவர்களுடன் ஒத்துழைத்த கிறித்தவ வல்லரசுகளாலும் முராதின்மீது வலியத் திணிக்கப்பட்டவைகளேயாகும். இவ்விதமாக, அவருடைய முப்பதாண்டு ஆட்சிக் காலத்தில் உத்மானியப் பேரரசு, சின்ன ஆசியாவின் பல சிறிய நாடுகள் கைப்பற்றப்பட்டமையாலும், ஸெர்பியா மற்றும் பாஸ்னியா ஆகியவை அடிபணிய வைக்கப்பட்டமையாலும், சலோனிக்காவும், அதன் மாவட்டமும் வெல்லப்பட்டதனாலும், மொரியா கப்பம் செலுத்தும் ஒரு நாடாக மாற்றப்பட்டதனாலும் விரிவு பெற்றது. அப் பேரரசின் கீழ் அடிமை நாடாக இருந்த வலாச்சியா அதிலிருந்து பிரிந்து நின்றதனால்தான் அப் பேரரசின் பரப்பளவு சற்றுக் குறைந்தது.

துருக்கிய வரலாற்றறிஞர் ஒருவர், அவரைப்பற்றிப் பின்வருமாறு புகழ் மாலை பாடியுள்ளார்: 'முராத் ஆற்றல் மிக்க — நியாயமாக நடந்துகொள்ளக்கூடிய — ஓர் அரசராவார்; அவர்

ஓர் உன்னதமான மனிதராவார்; பொறுமையுடன் உழைப்பவர்; கற்றறிந்தவர்; இரக்கம் காட்டுபவர்; சமயப் பற்றுள்ளவர்; தயாள குணம் படைத்தவர்; கடும் உழைப்பாளிகளுக்கு ஆதரவு அளிப்பவர்; அவர்களை விரும்பியவர்; எக்கலையிலாயினும், விஞ்ஞானத் துறையிலாயினும், சிறப்புப் பெற்றவர்களை விரும்பி ஆதரித்தவர். அவரைப்போல் மற்றெவரும் அவ்வளவு அதிகமான, பெரிய வெற்றிகளைப் பெறவில்லை. பெல்கிரேட் மட்டுமே அவரை எதிர்த்து நின்று அவருடைய தாக்குதல்களைச் சமாளித்தது. அவருடைய ஆட்சியில் படைவீரன் எப்பொழுதுமே வெற்றியைக் கண்டு கொண்டிருந்தான். குடிமகன் எப்பொழுதுமே பாதுகாப்புடனும் செல்வத்துடனும் வாழ்ந்து கொண்டிருந்தான். ஏதாவது ஒரு நாட்டை அவர் வென்றால், அங்கே மசூதிகளையும், சத்திரங்களையும், மருத்துவமனைகளையும், கல்லூரிகளையும் கட்டுவதே அவருடைய முதல் அக்கறையாக இருந்தது.'

'இவ்வளவு பாராட்டுதல்கள் அவரைப்பற்றிப் பொருத்தமாகுமா?' என்று கேட்கும் கிப்பன்ஸ் (Gibbons) என்ற மாபெரும் வரலாற்றறிஞர், பின்வருமாறு கூறுகிறார்: 'முராதின் நீதி மனப்பான்மைக்கும் தணிந்து செல்லும் போக்குக்கும் அவருடைய நடத்தை சான்று கூறுகின்றது. அவற்றைக் கிறித்தவர்களே அங்கீகரிக்கின்றனர். அவருடைய வளமிக்க ஆட்சியும் அமைதியான மரணமும் அவருக்குக் கிடைத்த சிறப்பான அன்பளிப்புக்களாகும் என்று அவர்கள் கருதுகின்றனர். தமது வயதிற்கேற்ற ஆற்றலும் இராணுவ பலமும் அவரிடம் இருந்த போதிலும், போதுமான காரணமும் தூண்டுதலும் இருந்தாலன்றி, அவர் போருக்குச் செல்வது அரிதாகும். ஒப்பந்தங்களை அவர் மீறியது கிடையாது. அவற்றைப் புனிதமானவை என்றே அவர் கருதினார்.'

ஆட்சித் தொல்லைகளிலிருந்து விடுபட்டு நிம்மதியான வாழ்வை மேற்கொள்ள அவர் இருமுறை மாக்னீஸியாவிற்குச் சென்றார். அங்கே அவர் ஓய்வு பெற்றுக்கொண்டு, அமைதியாகக் கவிஞர்களுடனும், ஞானிகளுடனும், சமய வல்லுநர்களுடனும், கற்றறிந்தவர்களுடனும் காலத்தைக் கழிக்க விரும்பினார். ஃபுதுவ்வா (Futuwwa) என்பதை, அதாவது ஒரு மனிதன் மேற்கொள்ள வேண்டிய இலட்சியமான வாழ்க்கையைப் பின்பற்றவே அவர் ஆசைப்பட்டார். மன அமைதியுடன் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் வாழ்க்கையைக் கழிப்பதில் அவர் விருப்பங்கொண்டார். உண்மையில் அவரு

டைய காலம் துருக்கி மொழி மறுமலர்ச்சி பெற்று விளங்கிய காலமாகும். உத்மானியர்களின் அரசவையில் பேசப்பெற்ற துருக்கி மொழி, கற்றறிந்தவர்களின் மொழியாயிற்று. சின்ன ஆசியாவில் கென்யா, குதாயா மற்றும் புருஸா ஆகியவையும், ஐரோப்பாவில் எதிர்னேயும் அதன் மையங்களாயின. கரமானிய, கெர்மிய, உத்மானிய அரச குடும்பங்களும் அவர்களின் அரசவைகளும் அவற்றுக்கு ஆதரவு அளித்தன. உமர் பே (Umur Bey) என்ற தைமூர்த்தாஷ் பாஷாவின் மகன் ஒருவர், தம்மைப்பற்றி எழுதிக் கொண்டிருந்த கவிஞர் ஒருவருக்குத் துருக்கிச் சொற்களை அதிகமாகப் பயன்படுத்துமாறு உத்தரவிட்டாராம்.

பல பாரசீக, அராபிய நூல்கள் உத்மானியத் துருக்கி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. ஷேய்கி, கமால், உம்மீ, எஷ்ரிஃபோக்லு (Eshrifoglu), ரூமி, ஹுசாமி, ஷெம்ஷி மற்றும் நெடிமி போன்ற கவிஞர்கள் பெருமதிப்புப் பெற்று விளங்கினர். சூஃபிகள், ஞானிகள், முனிவர்கள் (அனட்டோலியாவில் அவர்கள் ஷேக்குகள் என்றழைக்கப்பட்டனர்) பலர் இருந்தனர். அவர்களுக்கும் பெரும் மதிப்பும் மரியாதையும் காட்டப்பட்டன. முதலாம் பேஜீத் காலந்தொட்டு, புருஸாவில் பெருமதிப்புப் பெற்று விளங்கியவர் அமீர் சுல்தான் என்பவராவார். அவர் துருக்கிஸ்தானத்திலுள்ள புகாராவாசியாவார்.

முராதின் காலத்தில்தான் முதன்முதலாக ஒருவகைப்பட்ட உத்மானிய வரலாறு தோன்றியது. அப்பொழுது வீர காவிய உணர்ச்சியியக்கம் ஒன்று உருவாயிற்று. அதுவரையிலும் உத்மானிய வரலாற்றறிஞர்கள் காஜீகளைப் (இஸ்லாமியப் புனிதப் போர்வீரர்களை) பற்றியும் அவர்களின் மாபெரும் செயல்களைப்பற்றியும் புகழ்பாடி வந்தனர். முராதின் ஆட்சியில், புதியதும் ஒழுங்கு பெற்றதுமான வரலாறு ஒன்று உருவாயிற்று. துருக்கி இனத்தாரில் மிக உன்னதமானவர்களான ஓகூஸ் (Oghuz) இனத்தினரின் காலந்தொட்டு வருபவர்களும் அவ்வரலாற்றில் குறிப்பிடப்பட்டனர். உத்மானுடைய மூதாதையோர் 400 குதிரைகளில் ஏறிக்கொண்டு துருக்கியிலிருந்து புறப்பட்டு, சின்ன ஆசியாவுக்குள் புகுந்து போரிட்ட காட்சிகளைப்பற்றிய இனிய கதைகள் பலவும் தோன்றின. அவ் வரலாற்றறிஞர்கள் மற்றவர்களைவிட ஒருசிலரை மிக அதிகமாகப் புகழ்ந்து எழுதியதனால், அன்பளிப்புகளையும் பெற்றனர்.

இவை எல்லாவற்றையும்விட, முராத் தம் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் பெரும் கருத்துக் கொண்டிருந்தார்.

நாட்டிலேயே மிகக் கற்றறிந்தவர்களையும், கல்வி ஒளி பெற்று விளங்கியவர்களையும் அவர் தம் மகன்களுக்கு ஆசிரியர் களாக நியமித்தார். அவ் வாசிரியர்களில் பலர், முக்கிய இராணுவப் பதவிகளையும் நிர்வாகப் பதவிகளையும் வகித்திருந் தனர். அரண்மனைப் பள்ளியில் படித்த இளவரசர்களுடன் மற்றும் சில சிறுவர்களும் சேர்ந்து படித்தனர். அவர்களுள் சிலர், போர்க் கைதிகளாகவும் சுல்தானின் கீழிருந்த சிறப்புப் பெற்ற சிற்றரசர்களின் மகன்களாகவும் இருந்தனர். தம் மகன் களுடைய பொறுப்புக்களை உணர்த்துவதற்காக முராத் அவர் களுக்கு மட்டுமே கல்வி அளிக்கவில்லை. ஒழுக்கம், நேர்மை, ஆன்மிக இலட்சியங்கள் ஆகியவற்றில் பிற இளைஞர்களுக்கும் சிறந்த பயிற்சி அளித்து நாட்டிற்குப் பணிபுரிய வைப்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. இவ்விதக் கல்விப் பயிற்சிக்கு அவருடைய மகன் முகம்மதுவே சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கினர்.

8. இரண்டாம் முகம்மது (1451-1481): 'மாபெரும் வெற்றியாளர்'

கான்ஸ்டான்ட்டிநோப்பிலின் வீழ்ச்சி

இரண்டாம் முராதுக்குப் பிறகு அவர் மகன் முகம்மது 'இரண்டாம் முகம்மது' என்ற பட்டப் பெயருடன் அரியணை ஏறினர். இவருடைய பதினான்காம் வயதில் இவருடைய தந்தை மாக்னீஸியாவில் ஓய்வு பெறுவதற்காகப் பதவியி லிருந்து விலகியபின் சுல்தானாக உயர்ந்த முகம்மது, ஒரு நாட்டை எதிர்நோக்கி நிற்கும் நெருக்கடிகளைச் சமாளிக்கத் திராணி பெற்றிருக்கவில்லை என்று கருதப்பட்டா ரெனினும், இப்பொழுது மிக விரைவாக இவர் வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைந்தார். தம் தந்தை இறந்தவுடன் தமது இருபத் தோராம் வயதில் மீண்டும் அரியணை ஏறிய இவர் ஒரு கொடுங் கோலாட்சியாளனிடம் காணப்படும் மிகச் சிறந்த பண்பு களையும், அதே சமயத்தில் மிகவும் மோசமான குணங்களையும் பெற்றிருந்தார். தனித்து நின்றே அரசின் பொறுப்புக்களைச் சமாளிக்கும் ஆற்றலையும் தகுதிகளையும் இவர் பெற்றிருந்தார். படைத் தலைவர் என்ற நிலையிலும் அரசியல் வல்லுநர் என்ற நிலையிலும் இவரைப்போன்ற திறம் படைத்தவரை இது வரையிலும் உத்மானிய வம்சம் தோற்றுவிக்கவில்லை என்று கூறுவது மிகையாகாது. அறிவாற்றலையும் இலக்கியத் தகுதி யையும் இவர் சிறப்பாகப் பெற்றிருந்தார். இவர் ஐந்து மொழி களைத் தட்டுத்தடையின்றிப் பேசவல்லவர். இவருடைய இனத் தாருக்குள்ளேயே இவர் மிகவும் கர்வம் கொண்டவரும் பேரவாமிக்கவரும் ஆவார்; தம்முடைய குறிக்கோள்களை விடாப்பிடியாக நின்று நிறைவேற்றிக்கொள்ளும் பிடிவாதத் தன்மையை இவர் பெற்றிருந்தார். இந்த உயர்ப் பண்பாடு

களுடன், கொடூர குணத்தையும், துரோகம் புரியும் தன்மை யையும், மிகக் கேவலமான சிற்றின்பத்தில் ஈடுபடும் இழி குணத்தையும் இவர் கொண்டிருந்தார். அமைச்சர்களால் கட்டுப்படுத்தப்படாத அதிகாரத்தை வகிப்பதிலும் மனித உயிரைப் பொருட்படுத்தாமையிலும் இவர் இவருடைய முன்னோர்களினின்று வேறுபட்டிருந்தார். உத்மானின் காலந் தொட்டு, இரண்டாம் முராத் காலம் வரையிலும் சுல்தான்கள் தம்முடைய படைத் தலைவர்களுடனும் அமைச்சர்களுடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள்; அவர்களுடன் கலந்தே உணவு அருந்தினர்கள். ஆனால், முகம்மது இதற் கெல்லாம் மாறுபட்டவராகவே இருந்தார். அவர் ஒரு அப்பட்ட மான சர்வாதிகாரியாகவே நடந்துகொண்டார். அவர் எல்லோரிடத்திருந்தும் ஒதுங்கியே இருந்தார்; தனியாகவே உணவருந்தினர். எவரும் அவருடைய நம்பிக்கைக்குப் பாத் திரமாகவில்லை. வசீர்களையும் பாஷாக்களையும் அவர் அடிமை களைப் போலவே நடத்தினர். அவர்களுடைய உயிர்களுக்கு அவர் சிறிதேனும் மதிப்புக் கொடுத்ததில்லை. ஒரே வெட்டினால் கழுத்தைத் துண்டித்தெறியக்கூடியவர்கள் அவருடைய சொந் தப் பணித்துறையில் இருந்தனர். குறைந்தபட்சம் இரண்டு அமைச்சர்களாவது அவர் முன்னிலையிலேயே ஈவும் இரக்கமு மின்றி இவ்விதம் கொல்லப்பட்டுள்ளனர்.

மாக்னீஸியாவில் தம் தந்தை இறந்துவிட்டார் என்று கேள்வியுற்றதும், அரசாளும் அதிகாரத்தைப் பெறத் துடித்துக் கொண்டிருந்த முகம்மது உடனே குதிரை மீதேறி, 'என்னை நேசிக்கின்றவர்களெல்லாரும் என்னைப் பின்தொடருங்கள்!' என்று கூறிக்கொண்டு ஹெல்லஸ்பாண்ட்டுக்கு விரைந்தாராம்; அங்கிருந்து அவர் காலிப்போலிக்குக் கடந்து சென்று, ஏட்ரியா நோப்பிலை அடைந்தார். அங்கே அவர் மீண்டும் சுல்தானாகப் பிரகடனம் செய்யப்பட்டார். பட்டத்திற்கு வந்ததும் அவர் புரிந்த முதல் செயல், அவருடைய தந்தைக்கும் ஸெர்பிய இளவரசி ஒருத்திக்கும் பிறந்த சிறு குழந்தையைக் கொல்ல உத்தரவிட்டதாகும். அக் குழந்தையின் தாய் சுல்தானைப் பாராட்டிக் கொண்டிருக்கும்பொழுதே அக் குழந்தையைத் தண்ணீரில் மூழ்கடித்துக் கொல்லுமாறு அவர் உத்தரவிட்டிருந் தார். இந்தக் கொடூரச் செயல் அருவருப்பைக் கிளப்பியதும், அச் செயலைத் தாம் புரிந்ததாகக் காட்டிக் கொள்ளாது, அதனைப் புரிந்த இரண்டு அதிகாரிகளைக் கொல்லுமாறு அவர் ஆணையிட்டுவிட்டார்.

முகம்மது தமது ஆட்சி தொடங்கிய காலந் தொட்டே கான்ஸ்டான்ட்டிநோப்பிலைக் கைப்பற்றுவதற்கான நோக்கத் தைக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகத் தென்பட்டது. இந்த நோக்கத்துடன் அவர் ஹுன்யாடியுடனும் ஹங்கேரிய மக்களுடனும் மூன்று ஆண்டுக் கால ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். கரமானியர்களை அவர் முதலில் தண்டித்து, பிறகு மிக எளிய நிபந்தனைகளை அவர்கள்மீது விதித்தார். அவர் களுடைய இளவரசியை அவர் மணமும் புரிந்து கொண்டார். கிரேக்கப் பேரரசை ஆண்டு கொண்டிருந்த பேரரசரின் இரு சகோதரர்களும் கான்ஸ்டான்ட்டிநோப்பிலிலிருந்த கிரேக்கர் களுக்கு ஆதரவு கொடுப்பதைத் தடுப்பதற்காக முகம்மது பெலப் பொன்னீஸஸ்ஸுக்குப் படை ஒன்றை அனுப்பி வைத்தார். ஐரோப்பாவிலிருந்த பாஸ்பரஸ் பகுதியில் நீர்ச் சந்தியின்மீது ஆதிக்கம் பெற்றிருக்குமாறு ஓர் அரணைக் கட்ட அவர் உத்தரவு பிறப்பித்திருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த கிரேக்கப் பேரரசருக்கு அவர் தக்க விடை கொடுத்துவிட்டார்: தம்முடைய பகுதியை மட்டும் வலுப்படுத்திக்கொள்வதாக அவர் பதிலளித்து விட்டார். தூதர்களாக வந்தவர்களை சுல்தான் மிகக் கடுமை யாக மிரட்டி விட்டதனால், மீண்டும் கிரேக்கப் பேரரசர் வேறு தூதர்களை அனுப்பி வைக்கவில்லை. முகம்மது பட்டத்திற்கு வரு வதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே கான்ஸ்டன்ட்டைன் என்பவர் கிரேக்கப் பேரரசராகப் பட்டமேற்று இருந்தார். அவர் அவ் வமிசத்துக் கடைசி அரசர் ஆவார். அவர் துணிச்சல் மிக்கவராகவும் மனச்சாட்சியின்படி நடந்து கொள்பவருமாக விளங்கினர். ஆனாலும், புதிய சுல்தானிடம் அவர் மூடத்தன மாகவும், அவருக்குச் சினமூட்டும் வகையிலும் நடந்து கொண் டார். பேஜீதின் பேரனான ஓர்கான் என்பவருக்கு அதிக ஓய்வுப் பணம் கொடுக்கவில்லை யென்றால், அவரை உத்மானிய சிம்மாசனத்திற்குப் போட்டி உரிமையாளராக நிறுத்தி வைக்கப் போவதாக கான்ஸ்டன்டைன் சுல்தானை அச்சுறுத்தினர். இந்த உரிமையை முகம்மது அருவருப்புடன் மறுத்து விட்டார். பிரதம அமைச்சரான கலீல் என்பவர் கிரேக்கர்களின் கைக்கூலியாக விளங்கினர் என்று சந்தேகிக்கப்பட்ட போதிலும், அவர் கிரேக் கத் தூதரை மிகக் கண்டிப்பாக எச்சரித்தார்: 'உம்முடைய மூடத்தனத்தின் விளைவாகக் கான்ஸ்டான்ட்டிநோப்பில் சுல்தா னின் கைவசமாகிவிடும். ஓர்கானை மட்டும் சுல்தானுக்குப் பிரகட னப்படுத்திப் பாருங்கள்! உங்களுடைய உதவிக்கு ஹங்கேரியர் களையும் அழைத்துக் கொள்ளுங்கள்; உங்களால் முடிந்தவரை மாநிலங்களை மீண்டும் கைப்பற்றிக் கொள்ளுங்கள். நீர் நிச்சய மாகக் கிரேக்கப் பேரரசு விரைவில் முடிவடைவதைக் காண்பீர்!'

சுல்தான் கட்டச் சொல்லி ஆணையிட்ட புதிய அரண் 1452-ல் கட்டி முடிக்கப் பெற்றது. அவ் வரணும் அதற்கு எதிராக ஏற்கெனவே பேஎஜீத் கட்டி வைத்திருந்த அரணும் ஒன்றுசேர்ந்து நீர்ச்சந்தியின்மீது உத்மானியர்கள் ஆதிக்கம் பெற்றிருப்பதற்கு மிகவும் சாதகமா யிருந்தன என்பது, அக் கோட்டை கட்டி முடிக்கப்பட்டதற்குப் பிறகு தெரிய வந்தது. நீர்ச் சந்தியைக் கடந்து சென்ற வெனிஸ் நகரக் கப்பல்கள் கைப்பற்றிக் கொள்ளப்பட்டன. அவற்றின் மாலுமிகள் கொல்லப் பட்டனர். பிறகு கான்ஸ்டான்ட்டிநோப்பிலைத் தாம் கைப்பற்றப் போவதாக முகம்மது அறிவித்தார். மாபெரும் வெற்றிகளை அவர்களுடைய மூதாதையோர் பெற்றிருந்த போதிலும், மேலும் முன்னேற்றம் அடைவதற்குத் தடையாக இருப்பது இந் நகரமே என்பதை அவர் தம் பிரபுக்களுக்கு எடுத்துக் கூறினர்.

மறு ஆண்டில் நிகழ்த்தப்படக் கூடியதாக இருந்த படை யெடுப்புக்கான ஆயத்தங்களை முகம்மது 1452ஆம் ஆண்டிலேயே ஏட்ரியானோப்பிலில் செய்து வந்தார். அக்காலத்தில் ஐரோப்பிய படைகள் பயன்படுத்திக் கொண்டிருந்த வெடிகுண்டுகளைத் தயாரிப்பதற்கான வழி தெரியாது, அவர் கிரேக்கர்களிடம் அத் துறை நிபுணர் ஒருவரை அதிக ஊதியம் கொடுப்பதாகத் தூண்டி, அவருடன் சேர்ந்துகொண்டு, பெரும் குண்டுகளையும் பீரங்கிகளையும் தயாரித்துக் கொண்டார். அவர் தம் நோக் கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இரவும் பகலுமாகத் தம் படைத் தலைவர்களுடன் உழைத்தார். 1453ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அவர் கான்ஸ்டான்ட்டிநோப்பில் நகரில் அவர் களின் கண்ணெதிரில் ஒரு பெரும் படையைத் திரட்டி விட்டார். பன்னிரண்டாயிரம் ஜனிஸ்ஸரீப் படையினர் உட்பட, ஒன்றரை லட்சம் போர் வீரர்கள் அப் படையில் இருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தவிர, ஒழுங்கான பணித் துறையி லில்லாத பல படைவீரர்களும் இருந்தனர். எல்லோருமே அந் நகரைத் தாக்குவதற்குத் துடித்துக் கொண்டிருந்தனர்.

அது போன்றே கான்ஸ்டன்ட்டைனும் தம் தலைநகரைக் காப்பதற்காகத் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந் தார். தேவைப்பட்ட எல்லாவகைப் பொருள்களையும் அவர் சேகரித்தார்; நகரின் பழைய சுவர்களைப் பழுது பார்த்து வலுப் படுத்தினர்; நிகழ இருக்கும் போரில் பங்கு கொள்ளுமாறு மேனாட்டுக் கிறீத்தவ வல்லரசுகளுக்கு அழைப்பு விடுத்தார். அவற்றின் ஆதரவைப் பெறுவதற்காகவும், போப்பாண்டவரின் முழு ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காகவும் கிரேக்க லத்தீன்

திருச் சபைகள் ஒன்றுபடுவதற்கான திட்டம் ஒன்றுக்கும் அவர் இணங்கினார். ஆனால், அத் திட்டம் நிறைவேறவில்லை. மேல் நாடுகளிலிருந்து உதவி வந்தது என்றாலும், அது போதுமான தாக இருக்கவில்லை. மொத்தத்தில் மூவாயிரம் படை வீரர்களே அந் நாடுகளிலிருந்து கான்ஸ்டான்டிநோப்பிலுக்கு வந்து சேர்ந் தனர். கான்ஸ்டன்ட்டைனிடம் 8,000 படைவீரர்களே இருந் தனர். ஃபிரான்ஸ், ஜெர்மனி, ஹங்கேரி, போலந்து ஆகிய நாடு களிலிருந்து எவ்வித உதவியும் வந்துசேரவில்லை. இந்தநிலையில், கிரேக்கப் பேரரசருக்குப் போதுமான ஆள் பலமோ, பொருள் பலமோ கிடையாது. குறிப்பிடத் தக்க ஒரே ஒரு பலத்தை அவர் உறுதியாகப் பெற்றிருந்தார்: ஆற்றல் மிக்க இருபது கப்பல்கள் அவரிடத்தில் இருந்தன. அவற்றில் மூன்று வெனிஸ் நகருக்குரியவை யாகும். இவ்விதமாக, கான்ஸ்டன்ட்டைனுக்கு இதர கிறித்தவ வல்லரசுகளிடத்திருந்தோ கிரேக்கர்களிடத் திருந்தோ வலுப்பமான ஆதரவு எதுவும் கிடைக்கவில்லை. உண்மையில், அப்படிப்பட்ட ஓர் ஆதரவு மட்டும் பேரரசருக்குக் கிடைத்திருக்குமாயின், சுல்தான் முகம்மதால் கான்ஸ்டான்ட்டி நோப்பிலைக் கைப்பற்றி இருக்க முடியாது. ஏனெனில், கிரேக்கர் களின் படைப் பலம் குன்றியே இருந்ததென்றாலும், அவர்களிடம் அளவில்லா ஆற்றலும் ஆர்வமும் காணப்பட்டன.

ஏப்ரல் 6ஆம் நாள், 1453-ல் முகம்மது முற்றுகையைத் தொடங்கினார். ஏராளமான துருக்கிப் படைகள் அந் நகரின் சுவர்களுக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஓர்பான் என்ற ஹங்கேரியனின் தலைமையில் மிகப் பெரிய பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. அவற்றுள் மிகப் பெரியவை 1,200 ராத்தல் எடையுள்ள குண்டுகளைப் பொழிந்து வெடிக்கக் கூடிய னவாக இருந்தன. சிறிய கப்பல்களைக் கொண்ட துருக்கிக் கப்பற்படை ஒன்று பாஸ்பரஸ்ஸில் நங்கூரம் பாய்ச்சப் பெற்றுக் கிடந்தது. ஏப்ரல் 6ஆம் நாள் தாக்குதல் நடைபெற்றது; ஐம்பது நாட்களுக்கு அப்பாலும் அது தொடர்ந்து நடை பெற்றது. அவ்வப்பொழுது பீரங்கிகள் சுவர்களைத் தகர்த் தெறிந்து கொண்டிருந்தன. நகரைப் பாதுகாக்கும் படையினர் தாக்குதல்களை எதிர்த்துக் கொண்டிருந்தனர். பாதுகாக்கும் வீரர்களின் கவனத்தைத் திருப்புவதற்காகத் துருக்கியர்கள் சில சிறிய படகுகளை நில மார்க்கமாகக் கொண்டுவந்து, 'கோல்டன் ஹார்ன்' (Golden Horn) என்ற துறைமுகத்தில் விட்டனர். இருப்பினும், அந் நகரம் விடாமல் எதிர்த்து வந்தது. ஆனலும், நகரவாசிகளிடையே அச்சமும் பீதியும் ஏற்பட்டிருந்தன. கிரேக்கர்கள் மேலை நாடுகளிடத்திருந்து உதவி பெறக்கூடும்

என்று அஞ்சிய முகம்மதின் பிரதான அமைச்சர் முற்றுகையைக் கலைத்துவிடுமாறு சுல்தானுக்கு அறிவுரை வழங்கினர். ஆனாலும், மற்ற அமைச்சர்களின் ஆமோதிப்பைப் பெற்றிருந்த சுல்தான் தொடர்ந்து தாக்குதலை நடத்த வேண்டுமென்றே உறுதிகொண்டார். செவ்வாய்க்கிழமை, மே மாதம் 29ஆம் நாள் அதிகாலை (1453) இறுதித் தாக்குதல் நடைபெற்றது. ஆயிரக் கணக்கில் படை வீரர்கள் ஒருவர்பின் ஒருவராக வந்துகொண்டேயிருந்தனர். ராணுவ ஒழுங்கின்படி படையில் சேர்ந்திராதவர்களும் காலாட் படையினரும் அலையலையாக மோதிக் கொண்டிருக்கையில், ஜனிஸ்ஸரீப் படையினர் மதில்களின்மீது ஏறிவிட்டனர். இறுதிப் பேராசரான பதினொன்றும் பேலியோலோகஸ் எவரும் கவனிப்பாரின்றி, வீழ்ந்து மடிந்தார். வீழ்ச்சியுற்ற நகரம் துருக்கியர்களால் சூறையாடப்பட்டது. இருப்பினும், இந்தத் தடவை நடந்த சூறையாட்டம் 1204-ல் கிறித்தவச் சிலுவைப் போர் வீரர்களால் நிகழ்த்தப்பட்ட சூறையாட்டத்தைவிட மோசமாக இருக்கவில்லை. அம் மாபெரும் வெற்றி பெற்ற சுல்தான் முகம்மதுவை மக்கள் 'ஃபத்தே முஹம்மத்' (Fateh Mohammed) என்று அழைத்தனர். இதன் பொருள் 'மாபெரும் வெற்றியாளரான முகம்மது' என்பதாம். சுல்தான் பிறகு ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டி, நகரத்தை மாற்றி அமைக்கும் வேலையில் ஈடுபட்டார்.[1]

இளம் வயதினராக இருந்த சுல்தான் பல கொடுமைகளைப் புரிந்தார் எனினும், மற்ற வகைகளில் பெரும் முன்னேக்கு உடையவராகவும் அரசியல் வலிமை பெற்றவராகவும் நடந்து கொண்டார். அவர் புரிந்த மிக முக்கிய செயல்களில் ஒன்று, நகரம் சூறையாடப்பட்டதற்குப் பிறகு, அவர் தம்மைக் 'கிரேக்கத் திருச் சபையின் பாதுகாவல'ராக அறிவித்ததாகும். அச் சபையைச் சார்ந்த வைதிகர்களுக்குச் சலுகைகள் அளிக்கும் சாசனம் ஒன்றை அவர் வெளியிட்டார். தலைநகரிலுள்ள திருச்சபைகள் சிலவற்றை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், தங்கள் தொன்றுதொட்டு வரும் முறைப்படி அவர்கள் தங்களுடைய சமயச் சடங்குகளை அத் திருச்சபைகளில் மேற்கொண்டு ஒழுகி வரலாம் என்றும் அவர்களுக்குச் சலுகை வழங்கப் பெற்றது. குடிமுறை விவகாரங்களிலும் அவர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கப்பட்டன. அவர்களுடைய திருமணச் சட்டங்களையும் சொத்து வாரிசு உரிமைகளையும் அச்

[1] இம் முற்றுகையைப் பற்றிய முழு வருணனையையும் இப்பன் எழுதிய, 'Decline & Fall of the Roman Empire' என்ற நூலிலும் துருக்கிய வரலாற்றறிஞர் சாதுத்தீன் எழுதிய குறிப்புக்களிலும் பரக்கக் காணலாம்.

சாசனம் அங்கீகரித்தது. அவற்றைச் செயல்படுத்துவதற்காக அவர்களுடைய பாட்ரியார்க்குக்கும் (தலைவருக்கும்) சமய நீதி மன்றங்களுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது.

கிரேக்கத் திருச்சபையைச் சார்ந்த பாதிரிகளில் சாலச் சிறந்தவர் கென்னடியஸ் (Gennadius) என்பவர். அவரை சுல்தான் வரவழைத்தார். அவர் ஏட்ரியானோப்பிலின் பாஷா ஒருவருக்கு அடிமையாக விற்கப்பட்டிருந்தார். கான்ஸ்டான்ட்டி நோப்பிலுக்குத் திரும்பிய அப் பாதிரியை சுல்தான் கிரேக்கத் திருச்சபையின் தலைமைக் குருவாக்கினர். இச் செயல் மிகவும் அறிவுக் கூர்மை மிக்க செயலாகும்; அந்த நெருக்கடியான வேளையில் எடுத்துக் கொள்ளத் தக்க செயலாகவும் அது இருந்தது. இஸ்லாமிய சமயத்தை ஏற்க மறுத்த கிரேக்கர்களையும் மற்றவர்களையும் படுகொலை செய்துவிட வேண்டுமென்று துருக்கியர்களுள் மதவெறி பிடித்த தீவிரவாதிகள் அரசருக்கு எடுத்துக் கூறினர். அவ்விதம் செய்வது அரசுக்கு நலன் விளைவிக்கும் என்று அவருக்குத் தென்பட்டிருக்குமாயின், அவர் அதை நிச்சயமாகச் செய்திருப்பார். ஆனால், ஒளிசால் அரசியல் முறை ஒன்றை அவர் திட்டமிட்டே பின்பற்றியதனால், அவ்விதம் அவர் செய்யவில்லை. தலைநகரை மக்களால் நிரப்ப வேண்டியிருந்தது. துருக்கியரல்லாதாரை அங்கே வரவழைக்க வேண்டி யிருந்தது. சுல்தான் ஐரோப்பாவில் மேலும் பல இடங்களைத் தம் வசப்படுத்த ஆசை கொண்டிருந்தார். தோற்கடிக்கப்பட்ட எல்லா மக்களையும் மதமாற்றம் செய்வதென்றால் அவர்களிடத்திருந்து எதிர்ப்பு ஏற்படலாம் என்பதையும், ஒருசிலரை மட்டுமே மத மாற்றம் செய்வதால் அவ் வெதிர்ப்பின் வேகம் தணிந்தே இருக்கும் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். ஸெர்பியாவுக்குத் தலைவராகி விட்டால், வைதிக கிரேக்கத் திருச்சபையை என்ன செய்வார்? என்று ஹுன்யாடி என்ற ஹங்கேரிய தேச பக்தரை ஸெர்பியாவின் அரசர் கேட்டபோது, 'நான் எங்கும் கத்தோலிக்கத் திருச்சபைகளை நிலைநாட்டுவேன்' என்று ஹுன்யாடி கூறினராம். அவ்விதமே முகம்மதுவை ஒருவர் வினவியபோது, 'ஒவ்வொரு மசூதியின் பக்கத்திலும் உங்களுடைய மக்கள் துதிப்பதற்காகக் கிறித்து ஆலயத் திருச்சபையை உருவாக்குவேன்' என்று சுல்தான் பதிலளித்தாராம்.

இவ்விதமாக முகம்மது கடைப்பிடித்த சமயப் பொறைக் கொள்கை அக் காலத்தில் ஐரோப்பாவின் கிறித்தவ வல்லரசுகளின் அரசியல் கோட்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகவே இருந்தது. அவருடைய மாதிரியை ஸ்பானிய நாட்டினர் பின்

பற்றவில்லை. மூர்கள் தம்மை வென்றவர்களுடைய சமயத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தபோது அந் நாட்டினர் அம் மூர்களை நாட்டைவிட்டே வெளியேற்றிவிட்டனர். துருக்கியரின் ஐரோப்பிய படையெடுப்புகள் சமய வெறியினாலோ இஸ்லாமிய சமயத்தைப் பரப்புவதற்கான நோக்கத்தாலோ தூண்டுவிக்கப் பட்டதல்ல என்பதற்கு முகம்மதுவின் செயல் ஒரு சிறந்த சான்றாகும். வெல்லப்பட்ட கான்ஸ்டான்ட்டிநோப்பில் நகரில் இருந்த கிரேக்கர்களையும் மற்றவர்களையும் இஸ்லாம் மதத்தைத் தழுவச்செய்ய எவ்வித வற்புறுத்தலும் கடைப்பிடிக்கப் படவில்லை போலும்!

கான்ஸ்டான்ட்டிநோப்பிலை மீண்டும் மக்கள் நிறைந்த நகரமாக்குவதில் சுல்தான் தீவிரமாக முனைந்தார். படையெடுப்பிற்கு மிக முன்பே அந் நகரின் மக்கட்டொகை குறைந்து கொண்டேயிருந்தது. கிரேக்கப் பேரரசு தன் ஆட்சிப் பகுதிகளை இழந்துகொண்டு, பரப்பளவில் சுருங்கிக் கொண்டிருக்கையில், அப் பேரரசின் தலை நகரமும் தன் முக்கியத்துவத்தை இழந்துகொண்டே யிருந்தது. அந் நகரம் வீழ்ச்சியுற்றதும், அங்கே குடியிருந்த பலர் அதை விட்டு வெளியேறி ஓடிவிட்டனர். அவர்களை யெல்லாம் அங்கே வந்து மீண்டும் குடியேறுமாறு சுல்தான் வரவழைத்தார். அவர்களின் சொத்தையும் சமயத்தையும் தாம் பாதுகாத்துக் கொடுப்பதாக அவர் வாக்குறுதியளித்தார். தம் பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் குடியிருந்த கிரேக்கர்கள், யூதர்கள் மற்றும் துருக்கியர்கள் ஆகியவர்களின் குடும்பங்களை இந் நகரில் வந்து குடியேறுமாறு அவர் உத்தரவிட்டார். ட்ரெப்பிஸாண்டு (Trepizond) மற்றும் மோரியா ஆகியவற்றை அவர் கைப்பற்றியபொழுது அங்கிருந்த பல்லாயிரக் கணக்கான கிரேக்கர்கள் கான்ஸ்டான்ட்டிநோப்பில் நகருக்குக் கட்டாயமாக மாற்றம் செய்யப் பெற்றனர். அது போலவே ஏஜியன் கடலிலிருந்த பற்பல தீவுகளிலிருந்தும் மக்கள் மாற்றம் செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கைகளின் விளைவாக, அவருடைய ஆட்சியின் இறுதியில் கான்ஸ்டான்ட்டிநோப்பிலில் கடைசி கிரேக்கப் பேரரசர் காலத்தில் இருந்ததைவிட அதிகமான மக்கள் குடியிருந்தனர்.

பொதுக் கட்டடங்கள் அரசுக்கென ஒதுக்கி வைக்கப் பட்டன. பல திருச்சபைகள் மாதாக் கோவில்களாக்கப்பட்டன. ஜஸ்டினியன் கட்டிய ஹாஜியா சோஃபியா (Hagia Sophia) என்ற திருச்சபை முஸ்லிம்களின் அயா சோஃபியா என்றுயிற்று.

மக்களின் எண்ணிக்கை குறைந்து விட்டிருந்ததனால், காலியாக விடப்பட்டிருந்த சில திருச்சபைகளை மசூதிகளாக மாற்றி விட்டமை கிரேக்க மக்களுக்குத் தொல்லை கொடுத்தது என்று கூறுவதற்கில்லை. மசூதியைக் கட்டுவதற்கு மற்றோர் இடம் ஒதுக்கி வைக்கப்பட்டது. அதனைச் சுற்றிக் கல்விக் கூடங்கள், மருத்துவ மனைகள், ஏழைகளுக்கான நிவாரண விடுதிகள் ஆகியவை எழுந்தன. புதிதாகக் கட்டப்பட்ட மசூதி பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட புவி அதிர்ச்சியின் விளைவாகச் சேதமுற்றது. ஃபதே மசூதி என்று இப்பொழுது நிலைத்திருக்கும் மசூதி பின்னாளில் கட்டப்பட்டதாகும். அதன் கட்டடப் பாணியும் பின்னாளுக்குரியதாகும்.

மக்கட்டொகை அதிகமாகக் குவிந்திருந்த இடத்தில் முகம்மது தம் இருப்பிடத்தை அமைத்துக்கொண்டார். இப்பொழுது அந்த இடத்தில் இஸ்தம்பூல் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. அவர் இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்த இடம் ஒரு மடமாக இருந்தது. அந்த மடத்திற்குப் பல்வேறு சேர்க்கைகளை சுல்தான் அமைத்துக்கொடுத்தார். பன்னிரண்டு ஆண்டு காலம் வரையிலும் சுல்தான் இஸ்தம்பூலுக்கு[1] விஜயம் புரிந்த காலத்திலெல்லாம் அங்குத்தான் தங்கியிருந்தார். எனினும், 1459-ல் தம் இருப்பிடத்திற்காக அவர் மற்றோர் இடத்தைத் தேர்ந்தெடுத்தார். 1465-ல் அங்கே ஒரு பெரிய அரண்மனையை அவர் கட்டி முடித்தார். அவ் வரண்மனை 19ஆம் நூற்றாண்டு வரையிலும் சுல்தான்களின் தங்குமிடமாக இருந்து வந்தது. எஸ்கி ஸராய் (Eski Saray) என்ற பழைய அரண்மனை சுல்தான்களின் அந்தப்புரமாக இருந்து வந்தது. முதலாம் சுலைமானின் காலத்திற்குப் பிறகு மூன்று நூற்றாண்டு காலம் வரையிலும் அது முன்னாள் சுல்தான்களின் மனைவிகள், மகள்கள் ஆகியவர்களின் தங்குமிடமாயிருந்து வந்தது. எனி ஸராய் (Yeni Saray) என்ற புதிய அரண்மனை கோல்டன் ஹார்னுக்கும் மார்மோரா கடலுக்குமிடையில் பழம் பைஸான்ஷியக் கோட்டை இருந்த இடத்தில் கட்டப்பட்டது. அவ்விடம் மிகச் சிறந்த

[1] உலக முக்கியத்துவம் வாய்ந்த பெரிய நகர்களுள், துருக்கி நாட்டின் அக்காலத் தலைநகராகிய இஸ்தம்பூல் ஒரு தனிப்பட்ட தன்மையை வகிக்கிறது. கிறிஸ்து பிறப்பதற்கு வெகுகால முன்னரே தோன்றிய இந் நகரம் முதலில் பைஸான்ஷியம் (Byzantium) என்று பெயர் பெற்று விளங்கிற்று; அப்பால் கிழக்கு ரோமப் பேரரசின் கிறித்தவத் தலை நகராக ஆனதும், கான்ஸ்டான்ட்டிநோப்பில் என்று அழைக்கப்பட்டது. அது துருக்கி சுல்தானின் ஆட்சிக்கு வந்தபின் (1453-க்கு இப்பால்) இஸ்தம்பூல் என்று பெயர் பெற்றுவிட்டது. முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் கான்ஸ்டான்ட்டிநோப்பில் என்னும் பெயரைக் 'குஸ்துன் துன்யா' என்றே குறிப்பிடுகிறார்கள்.

இயற்கைக் காட்சிகள் சூழ்ந்த எழில் மிகு பகுதியில் அமைந் திருந்தது.

கான்ஸ்டான்ட்டிநோப்பில் நகரின் வீழ்ச்சியினுல் ஏற்பட்ட விளைவுகள் பற்பல. அவ் வீழ்ச்சி உலக வரலாற்றிலேயே ஒரு முக்கிய நிகழ்ச்சி; ஒரு புதிய யுகத்தையே அது உண்டாக்கியது. 'இடைக்காலத்தின் முடிவு' 'நவீன காலத்தின் தொடர்ச்சி' என்றெல்லாம் ஒரு சிலர் அதனைப்பற்றிக் கருதுகின்றனர். மற்றும் சிலர், இந் நிகழ்ச்சி முக்கியமான ஒன்றுக இருப்பினும், அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி அன்று என்று கருதுகின்றனர். அவ் வீழ்ச்சியைப்பற்றிய பல தவருன கருத்து கள் இப்பொழுது மறுக்கப்பட்டுள்ளன. அவ் வீழ்ச்சி தொடங்கி வைத்ததாகக் கருதப்படும் மறுமலர்ச்சி இயக்கமும் (Renaissance) சமய சீர்திருத்த இயக்கமும் (Reformation) ஏற்கெனவே ஆரம்பமாகி விட்டிருந்தன. கான்ஸ்டான்ட்டி நோப்பில் வீழ்ச்சி யுற்ற சமயத்தில் ஐரோப்பியர்கள் பலர், கிறித்தவ சமயமும் மனிதாபிமானத்தின் அடிப்படையில் அமைந்த அறிவாற்றலும் கொடிய துன்பத்துக்கு ஆளாகிவிட்டன என்று புலம்பினர். 'ரோமரின் மறுமரணம்' 'பிளாட்டோ இரண்டாம் தடவையாக மறைகின்ருர்' என்றெல்லாம் கருதப்பட்டது. கான்ஸ்டான்ட்டி நோப்பிலுக்கே, இரண்டாம் ரோமாபுரிக்கே இந்த நிலை ஏற்பட்டு விட்டதென்ருல், இத்தாலி பாஸ்னியா ஹங்கேரி போன்றவை களின் கதி என்னவாகும் என்று அஞ்சியவர்களும் இருந்தனர். சிலுவைப் போர்களை உயிர்ப்பிக்க வேண்டும் என்றனர் ஒரு சிலர். ஆனல், அது வெறும் பேச்சளவாகவே இருந்தது. 1453-ம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் மேல் நாடுகளில் கொள்ளப் பட்டிருந்த கருத்தென்னவென்ருல், 'கிரேக்கர்கள் மன்னிக்க முடியாத மிகப் பொல்லாத பெரும் பாவத்தைப் புரிந்த வர்கள். பிளவை ஏற்படுத்திய இவர்களுக்கு இது போன்ற கதிதான் நியாயமானதாகும். ரோமத் திருச்சபையை விட்டுச் சென்றதற்காக இவர்கள் இவ்விதம் பழி வாங்கப்பட்டனர்' என்பதாகும். கிரேக்கர்கள் பழைய துரோஜன்களை முறி யடித்ததற்காக அத் துரோஜன்களுடைய பிற் சந்ததியார்கள் எனக் கருதப்படும் துருக்கியர்களால் பழிவாங்கப்பட்டுள்ளனர் என்றும் ஒரு சில மேல் நாட்டினர் கருதினர். அந்த மாபெரும் நகரம் வீழ்ச்சியடைந்த சமயத்தில் பல கிரேக்க அறிஞர்கள், எழுத்தாசிரியர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள், சிற்பிகள் ஆகியோர் அதில் குடியிருந்தார்கள். சுதந்திரமாக வாழ்ந்து வந்த அவர்கள் இனிமேல் துருக்கியர்களின்கீழ் அத்தகைய சுதந்தரத்தை அனுபவிக்க இயலாது என்று கருதி, அந் நகரை

விட்டே வெளியேறினர். பலர் தங்களுக்குச் சாதகமான சூழ்நிலை இத்தாலியில் இருப்பதைக் கண்டு அங்குச் சென்று குடியேறினர். அவர்களுடைய வருகையினால் இத்தாலியில் மறுமலர்ச்சி இயக்கம் மேலும் தழைத்து ஓங்க முடிந்தது. இதுபோன்றே சமயத் துறையிலும் மாறுதல் ஏற்பட்டது.

துருக்கியர்களைப் பொறுத்தவரை, இஸ்தம்பூல்[1] என்று அவர்கள் அழைத்த கான்ஸ்டான்ட்டிநோப்பில் நகரம் கைப்பற்றப்படுதல் ஒரு தனித்து நிற்கும் நகரம் கைப்பற்றப்படுவதையும் விடச் சிறப்பும் பெருமையும் மிக்கதாக இருந்தது என்று கருதப்பட்டது. அது இஸ்லாமியப் போர் வீரரின் தன்னிகரற்ற செயலாகும் என்றும் கருதப்பட்டது. பல்லாயிரக் கணக்கான படிமங்களைக்கொண்ட மையத்தின் வீழ்ச்சி அதுவாகும். ஹாஜியா சோஃபியாவி லிருந்த படிமங்கள் (உருவச் சிலைகள்) களைந்தெறியப்பட்டன. அது அயா சோஃபியா என்றழைக்கப்பட்ட மசூதியாயிற்று. வெற்றி பெற்ற முகம்மது அந் நகருக்குள் நுழைந்தவுடன், அத் திருச்சபையில் இஸ்லாமிய முறைப்படி தொழுதாராம். அந்தப் படையெடுப்புத் துருக்கியர்களுக்கு அவர்களுடைய நாடெங்கும் பெரும் புகழைப் பெற்றுத் தந்தது. தவிர, இஸ்தம்பூல் பழைய அனட்டோலியாவையும் புதிய ருமேலியாவையும் ஒன்றுக இணைத்தது. அதைக் கைப்பற்றியதனால், துருக்கியர்கள் திடீரென்று ஓர் ஐரோப்பிய வல்லரசாகி விடவில்லை: ஏற்கெனவே அவர்கள் வல்லரசாகவே தான் விளங்கி வந்தனர். ஆனால், அந்த நகரத்து வீழ்ச்சி அந் நிலையை மேலும் உறுதிப்படுத்தியது. அக்காலந் தொட்டு, கான்ஸ்டான்ட்டிநோப்பிலைப் பாதுகாப்பதற்காகச் சிலுவைப் போர்களை நிகழ்த்துவதற்கான ஆயத்தங்களைச் செய்யும் வாய்ப்பினைக் கிறித்தவர்கள் இழந்துவிட்டனர். தவிரவும், ஐரோப்பிய அரசர்கள் பலர் உத்மானிய சுல்தானின் உதவியையே நாடிக் கொண்டிருந்தனர்.

இவ் வீழ்ச்சியின் மற்றொரு முக்கியத்துவமென்ன வென்றால், அந் நகரைத் துருக்கியர்கள் தம் வசப்படுத்திக் கொண்டமையால், ஒரு சிறப்பான கப்பற்படைக்கும் வாணிபத்துக்கும் பொருத்தமான துறைமுகத்தைப் பெற்றனர்; கடல்-தரை

[1] 'இஸ்தம்பூல்' என்பது, கிரேக்கர்கள் கூறி, துருக்கியர்கள் கேட்ட, 'இல் டின் பொலின்' (eis tin Polin) — 'நகரில்' என்ற சொற்றொடர் மருவி இஸ்தம்பூலாயிற்று என்று கருதப்படுகிறது. கான்ஸ்டான்ட்டிநோப்பிலின் நகரவாசிகள் தங்கள் நகரை வெறும் 'அந்த நகரம்' என்றே அழைத்தனர். சாதாரணக் கொச்சை கிரேக்க மொழியில் அது Stimboli என்று அழைக்கப்பட்டு வந்தது.

வாணிப மார்க்கங்களின் சந்திப்பில் ஒரு முக்கிய கேந்திரத்தையே அவர்கள் பெற்றுவிட்டனர். இந் நகரத்தின் வழியாகப் பல்வேறு திசைகளுக்கும் சென்றுகொண்டிருந்த வியாபார மார்க்கங்கள் பலவும் துருக்கியர்களின் கைவசமாயின. இவற்றையெல்லாம் தாமே அடக்கிவைத்து, கிறித்தவர்களை அவற்றைப் பயன்படுத்த முடியாதபடி செய்யவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கமாகும். பெரும் இழப்பாளிகளாகி விட்டிருந்த கிறித்தவர்கள் துருக்கியர்களின் நோக்கம் நிறைவேறுதபடி செய்ய, புதிய வியாபார வழிகளைக் கண்டுபிடிப்பதில் முனைந்தனர். 'நில மார்க்கங்கள் மூடப்பட்டால் என்ன? கடல் மார்க்கங்களைக் கண்டுபிடித்து உங்களுடைய எண்ணத்தை நிறைவேற விடாமல் தடுப்போம்!' என்று அவர்கள் கூறிக்கொண்டனர் போலும்! அவர்களுடைய முயற்சிகளின் விளைவாகப் புதிய மார்க்கங்களும் புதிய கண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்விதக் கண்டுபிடிப்புகளின் முக்கியத்துவத்தை இவ்வுலகம் அறிந்துள்ளது.

முகம்மது பல போர்களைப் புரிந்தார் என்றாலும், கான்ஸ்டான்ட்டிநோப்பிலில் அவர் நடத்திய தாக்குதல் அவரை 'ஃபத்தே முகம்மது' என்று புகழ்பெற்று விளங்க வைத்தது. அது ஒரு புறத்திலிருக்க, அவருடைய நீடித்த ஆட்சிக்காலத்தில் கான்ஸ்டான்ட்டிநோப்பிலை அவர் கைப்பற்றிய தீரச் செயல் அவர் நடத்திய படையெடுப்புகளின் பட்டியலில் முதலிடமாக அமைந்துள்ளது. அவருடைய முப்பதாண்டு ஆட்சிக்காலத்தில் அவர் தம் படைகளை நேரில் திரட்டிச்சென்று, அனேகமாக இடையருமலேயே போர் புரிந்துகொண்டிருந்தார். அவற்றின் விளைவாக அவர் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் ஆட்சிப் பகுதிகளைத் தம் பேரரசுடன் சேர்த்துக்கொள்ளாமற் போனது என்பது மிக அரிதேயாகும்.

முந்தைய சுல்தான்களின் காலத்திலேயே அவர்களுக்குக் கப்பம் செலுத்தும் நாடுகளாக இருந்த பாஸ்னியாவும் மோரியாத்தீபகற்பமும் மீண்டும் தாக்கப்பட்டு, பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. அந் நாட்டு அரசர்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டுக் கொல்லவும் பட்டனர். வலாச்சியாவும் கிரீமியாவும் அடிபணியும் நாடுகளாயின. ஆசியாவில் உத்மானியர்களின் நெடுநாளைய பகைமை நாடாக இருந்துவந்த கரமானியா இப்பொழுது வலுக்கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. செல்ஜூக்கிய வம்சத்தைச் சார்ந்த அரசர்கள் தூக்கிலிடப்பட்டனர். ட்ரெபிஸாண்ட் என்ற மாபெரும் நகரமும் அதனைச்

சுற்றியிருந்த கப்பொடீஸியா (Cappodicia) மாநிலமும் முகம்மது வால் வெல்லப்பட்டு, அவருடைய பேரரசில் இணைத்துக் கொள்ளப்பட்டன; ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த அதன் அரச குடும்பத்தினரும் கொல்லப்பட்டனர். கருங்கடலோரத்தில் ஜினோவா நகருக்குரிய உடைமைகள் கைப்பற்றப்பட்டுப் பறித்துக் கொள்ளப்பட்டன.

கிரேக்கத் தீவுக் கூட்டத்தில் லெஸ்பாஸ் (Lesbos) லெம்னோஸ் (Lemnos) செஃபலோனியா (Cephalonia) உட்படப் பல தீவுகள் தாக்கப்பட்டு, பேரரசுடன் சேர்த்துக் கொள்ளப்பெற்றன. அதே கதி இயூபியாவுக்கும் (Euboea) ஏற்பட்டது. இந்தப் படையெடுப்புகளையும் அன்றி, முகம்மது ஒவ்வோர் ஆண்டும் படைகளை ஸ்டைரியா (Styria) டிரான்ஸில்வேனியா (Transylvania) ஆகிய நாடுகளின் பல்வேறு பகுதிகளைத் தாக்க அனுப்பிக்கொண்டேயிருந்தார். இத்தாலிய நாட்டிற்கும்கூட அவர் ஒரு படையை அனுப்பிவைத்தார். வெனிஸ் குடியரசு உத்மானிய அரசுடன் மிக இகழ்ச்சிக்குரிய ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டது. அதன்படி, மற்றப் போர்களில் அவ்வரசு உத்மானியர்களுக்குக் கப்பற் படையைக் கொடுத்து உதவவேண்டியிருந்தது. இப் பேரவா மிக்க சுல்தானின் கடைசி இராணுவச் சாதனை, தெற்கு இத்தாலிக்கு ஒரு படையை அனுப்பியதாகும். அப் படை ஓட்ரான்டோவைக் கைப்பற்றியது. அவர் நடத்திய படை யெடுப்புகளில் வெற்றி பெறப்படாதவை பெல்கிரேட் (1456) ரோட்ஸ் தீவு (Rhodes Island, 1480) ஆகியவை மீது எடுக்கப் பட்டவைகளாகும். பெல்கிரேட் ஒரு முக்கியமான இடமாகும். ஹங்கேரி, ஜெர்மனி ஆகியவற்றின்மீது நடந்த படையெடுப்பு களை அது நெடுங்காலமாகவே தடுத்துக்கொண்டிருந்தது. ஆகவே, சுல்தானே நேரில் ஒரு பெரும் படையைத் திரட்டிச் சென்று, தக்க பீரங்கிப்படைப் பலத்துடன் படையெடுப்பை நிகழ்த்தினார். இதைக் கைப்பற்றுவது, கான்ஸ்டான்ட்டிநோப் பிளைக் கைப்பற்றியதைவிட எளிதான செயலாயிருக்கும் என்று அவர் கருதிவிட்டார். ஆனால், மிக நெருக்கடியான சமயத் திலும் கிரேக்கப் பேரரசுக்கு ஆதரவு கொடுக்க முன்வராத ஐரோப்பிய நாடுகள், பெல்கிரேட் வீழ்ச்சியுற்றால் ஜெர்மனி மிக எளிதாக வெல்லப்பட்டுவிடக்கூடும் என்பதை உணர்ந்து, அந் நகரைக் காக்கப் படைகளைத் திரட்டின. தமது உலக வாழ்வின் இந்த இறுதிப் போரில் ஹுன்யாடி ஹங்கேரியப் படைக்குத் தலைமைவகித்தார். துருக்கியர்கள் பெரும் உயிர்ச் சேதத்துக்குப் பிறகு, நகரின் ஒரு பகுதியைக் கைப்பற்றிக்கொண்டனர்.

ஆனால், நகரின் வடக்குப் பகுதி நீடித்து எதிர்த்து நின்றது. கிறித்தவப் படைவீரர்கள் பெருந் துணிச்சலுடன் எதிரிகளின் பீரங்கிகளைத் தாக்கினர்; அவற்றை எல்லாம் அவர்கள் கைப்பற் றிக்கொண்டு, சுல்தானையே காயப்படுத்தி விட்டனர். முகம்மது, தம் ஐம்பதினாயிரம் ஆட்களை இழந்ததற்குப்பிறகு முற்றுகையைக் கலைக்க நேர்ந்தது. இதுதான் ஹுன்யாடி என்ற ஹங்கேரிய தேசபக்தரின் இறுதிச் சாதனையாகும். குறிப்பிடத்தக்க இந்த மாபெரும் வெற்றிக்குப் பிறகு அவர் உயிர் நீத்தார். மீண்டும் ஐம்பது ஆண்டுகட்குப் பிறகுதான் பெல்கிரேட் நகரம் தாக்கப் பட்டது. ஹங்கேரி, வியன்னா ஆகியவற்றின்மீது நடைபெற விருந்த படையெடுப்புகளுக்கு அது வாயில்களைத் திறந்து விட்டது.

பெல்கிரேடில் பெற்றதைப் போலவே அல்பேனியாவிலும் சுல்தான் மிகத் தீவிரமான எதிர்ப்பை எதிர்நோக்கி யிருந்தார். ஹங்கேரியில் ஒரு ஹுன்யாடி தோன்றியதுபோலவே அல்பேனி யாவிலுள்ள எபிரஸ்லிலும் (Epirus) 'ஸ்கந்தெர்பெர்க்' (Scanderberg) என்னும் ஒரு தேச பக்தர் தோன்றினர். அவர் எபிரஸ் மக்களால் நேசிக்கப்பட்ட மாபெரும் தேசீய வீரர். அவருடைய உண்மைப் பெயர் காஸ்ட்ரியோட்டாவின் ஜார்ஜ் (George of Castriota) என்பதாகும். அவர் எபிரஸின் அரச குடும்பத்தைச் சார்ந்தவர். சிறுவனாக இருக்கும் பொழுது அவர் சுல்தான் இரண்டாம் முராதின் அரசவைக்குப் பிணையாக அனுப்பி வைக்கப்பட்டார். அங்கே அவருடைய உயர் குடிக்குரிய பண்புகளும் ஆற்றலும் அவரை சுல்தான்பால் ஈர்த்தன. அவர் இஸ்லாத்துக்கு மதமாற்றம் செய்யப்பட்டார். முராத் அவரைத் தம் சொந்த மகனாகவே பாவித்து நடத்தி, படையில் உயர் பதவி யையும் அளித்தார். அங்கே அவர் வெகு விரைவில் ஸ்கந்தெர் பெர்க், அதாவது, இஸ்கந்தர் பேக் (Iskender Beg) என்று பெயர் பெற்று விளங்கினர்.[1]

சுல்தானின் செல்லப் பிள்ளையாக இஸ்கந்தர் வளர்ந்து வந்தாலும், ஆசியாவிற்குத் தாம் படைத் தலைவனாக அனுப்பப் படவில்லை யென்றும், ஹங்கேரியில் போர் நடந்து கொண்டிருக் கையில் தாம் ஏதும் உயர் பதவியை வகிக்க வாய்ப்புப் பெற வில்லையே என்றும் அவருக்கு மனக்குறை இருந்துவந்தது. அவர் தம் நாட்டை ஆள விரும்பினர். ஆகவே, துரோகமான வகை யில் அவர் நடந்துகொண்டு, சுல்தானின் படைகளை விட்டு விட்டு, எபிரஸின் தலைமை நகரைத் தந்திரமாகக் கைப்பற்றிக்

[1] இவரைப் பற்றி முன் பக்கம் 95-ல் காண்க.

கொண்டார். அவர் சுல்தானின் செயலாளரை அந்தரங்கமாகச் சிறையடைத்து, சுல்தானின் பெயரால் கோனியாவின் ஆளுநருக்கு அவ்விடத்தைச் சரணடையச் செய்து விடுமாறு எழுதிக் கொடுக்க வற்புறுத்தி, பிறகு அவரைக் கொன்று விட்டார். எதையும் சந்தேகிக்காத அந்த ஆளுநர் திறவுகோல்களை இஸ்கந்தர்பேக்கிடம் ஒப்படைத்து விட்டார். இஸ்கந்தர் பேக் நகரைத் தம் வசப்படுத்திக் கொண்டவுடன், அங்கிருந்த துருக்கியர்களைப் படுகொலை செய்து இஸ்லாமிய சமயத்தைப் புறக்கணித்துவிட்டு, எபிரஸ் மக்களை ஆயுதம் தாங்கிக் கிளர்ந்தெழுமாறு ஊக்குவித்தார். அவருக்கெதிராக அனுப்பப்பட்ட படைகள் அனைத்தும் வெற்றி காணவில்லை. தமது செல்லப் பிள்ளையாக வளர்ந்தவருக்கு எதிராக சுல்தான் தீவிரமான தாக்குதல் எதையும் நடத்த விரும்பவில்லை போலும்! இஸ்கந்தர்பேக் கப்பம் செலுத்துவதற்கு இணங்கியிருப்பாராயின் அவர் வாளா விட்டு வைக்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால், கப்பம் செலுத்த அவர் அறவே மறுத்துவிட்டார். மாறுக, அச்சத்தினால் நடுநடுங்கிக் கொண்டிருந்த மாஸிடோனியா, தெஸ்ஸாலி போன்ற நகரங்களிடத்திருந்து அவர் பெரும் வருமானத்தைப் பெற்று வந்தார். பல முயற்சிகளையும் செய்து கிளர்ச்சியாளரை அடக்க முடியாத நிலையிலிருந்த முகம்மது இஸ்கந்தர்பேக்குடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். அதன்படி, சுல்தான் இஸ்கந்தர்பேக்கை எப்பிரஸ் மற்றும் அல்பேனியா ஆகியவற்றின் அரசராக அங்கீகரித்தார் (1461). ஆறு ஆண்டுக்குப் பிறகு, சுமார் இருபத்தைந்தாண்டு இடையருமல் போர் புரிந்ததற்குப் பிறகு, அம் மாபெரும் வீரர் உயிர் நீத்தார். அவருடைய இறுதிச் சாதனை, அவரது நாட்டை வெல்வதற்கு முகம்மது அனுப்பிய படையைத் தோற்கடித்ததாகும். அவருடைய மரணத்திற்குப் பிறகு சுல்தான் முகம்மது அல்பேனியாவை மிக எளிதாக அடக்கினார். ஸ்கந்தெர்பெர்கின் சாதனை, அதனுடைய உள்ளூர்ச் செல்வாக்குக்காக மட்டுமின்றி, இத்தாலியின் திசையில் உத்மானியர்கள் முன்னேற்றம் பெறுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்ததற்காகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது ஹுன்யாடியும் ஜான் காபிஸ்ட்ரானும் சிறிது காலத்திற்கு வட எல்லையை முடக்கியது போல் ஸ்கந்தெர்பெர்க் மேற்கில் துருக்கியர்களின் எல்லைக்கு முற்றுப் புள்ளியிட்டார்.

அந்த முட்டுக்கட்டை நீங்கியவுடன், துருக்கியர்கள் வெனிஸ் குடியரசைத் தாக்கத் திட்டமிடத் தொடங்கினர். வாணிபத்திலிருந்து பெறப்பட்ட செல்வத்தின் அடிப்படையில் அமைந்திருந்த அக் குடியரசு துருக்கி சுல்தானைத் தாழ்ந்து

வணங்கிக்கொண்டிருந்தது; 1454-ல் ஓர் ஒப்பந்தத்தையும் அது செய்துகொண்டது. ஆனால், ஸ்கெந்தர் பெற்ற வெற்றிகள் அக் குடியரசைத் தட்டி யெழுப்பின. ஆகவே, அவருடைய மரணத் திற்குப் பிறகு அதனுடைய துணிச்சலுக்காக அது தண்டிக்கப் பட்டது. ஆறு ஆண்டு போர் நடந்து அக் குடியரசுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டதும் 1479-ல் அது முகம்மதுவுடன் ஓர் ஒப்பந் தத்தைச் செய்துகொண்டது.

முகம்மது தமது படையெடுப்புகளின் போதெல்லாம் நிகரி லாக் கொடுமையையும் நம்பிக்கைத் துரோகத்தையும் புரிந்தார். சரணடைந்துவிட்டால் அவர்களுடைய உயிரும் சொத்தும் பாது காக்கப்படும் என்று வாக்குறுதி யளிக்கப்பட்டதை முற்றிலும் நம் பிச் சரணடைந்த அரசர்கள், படைத்தலைவர்கள், படைவீரர்கள் அனைவருமே ஈவு இரக்க மின்றிக் கொல்லப்பட்டனர். புனித வாக்குறுதிகளையும் பொருட்படுத்தாமல், துருக்கியர்கள் நகர வாசிகளை அடிமைகளாக விற்றுவிட்டனர்; அல்லது துருக்கிய இராச்சியங்களுக்குக் கட்டாயமாக மாற்றிவிட்டனர்.

பாஸ்னியா அவ்வித நம்பிக்கைத் துரோகத்திற்கு இலக் காயிற்று. அங்கே இறுதி வெற்றி சுல்தானின்கீழ்ப் படை ஒன்றின் பொறுப்பை ஏற்றிருந்த உத்மானிய பிரதம அமைச் சரால் பெறப்பெற்றது. அவர்களுடைய உயிர்களுக்குக் காப் புறுதி அளிக்கப்படும் என்ற நிபந்தனையின் பேரில் அந் நாட்டு அரசரும் அவருடைய படை வீரரும் சரணடைந்துவிட்டனர். இந்தச் சலுகையைக் காட்டியதற்கு அமைச்சரின்மீது சுல்தான் சினங்கொண்டார். எப்படி வாக்குறுதியை மீறுவது என்று முஃப்தியை (Mufti) சந்தேகங்கேட்டு, அவருடைய விடை எவ் விதமாக இருக்கவேண்டும் என்றும் சாடையாகக் குறிப்பிட்டார். அந்த முஃப்தியும், நம்பிக்கையற்றவருடன் செய்துகொள்ளப் படும் எவ்வித ஒப்பந்தமும் சுல்தானைக் கட்டுப்படுத்தாது என்று ஒரு ஃபத்வாவை (மார்க்கத்தீர்ப்பை) வெளியிட்டுவிட்டார். பாஸ்னியாவின் அரசரைக் கொலை செய்யுமாறு சுல்தான் அந்த முஃப்திக்கு உத்தரவிட்டார். அவ் வரசர் அந்த ஒப்பந்தத்தின் நகலைக் கையில் வைத்துக்கொண்டு வருகையில் முஃப்தி அவரை வெட்டி வீழ்த்தினார். ஸெகடின் ஒப்பந்தம் மீறப் பட்டதற்கு இப்பொழுது இவ்வகையில் பழி வாங்கப்பட்டது.[1]

இந்த வெற்றிகளிலெல்லாம் உத்மானியப் படை வீரர்கள் எண்ணிக்கையிலும் பலத்திலும் மிகவும் சிறப்புப் பெற்றிருந்

[1] மேன் 91, 92 பக்கங்கள் பார்க்க.

தனர். பற்பல வேளைகளில் அவர்களுடைய பகைவர்களிடையே காணப்பட்ட பிளவுகளும் துருக்கியர்களின் வெற்றிகளுக்குக் காரணமாயின. கரமானியா அடக்கப்பட்டதற்குக் காரணம் அதன் அமீர் இப்ராஹீம் என்பவரின் மரணமேயாகும். அவர் ஏழு மகன்களை விட்டுச்சென்றார். அவர்களுள் ஆறு பேர் அரச குடும்பத்தினராவர். ஒருவன் அடிமையாவான். தந்தை அவனை அதிகமாக நேசித்தார். இவனைத்தான் அவர் தம் வாரிசாகவும் நியமித்தார். ஆகவே, மற்ற ஆறு பேரும் தம் தந்தையின் சொத்துக்காகப் போரிட்டுக்கொண்டு, இளையவனைத் தலை நகரான கோனியாவில் முற்றுகையிட்டனர். இந்த நாட்டின் விவகாரத்தில் தலையிட்டு நாடு முழுவதையும் கைப்பற்றிக் கொள்வதற்கு இதுவே தக்க சமயமாகும் என்று முகம்மது கருதினார். ஆகவே, போரிடுவதற்கான எக் காரணமுமின்றி, அவர் ஒரு லட்சம் படையினரைத் திரட்டிக்கொண்டு அமீரின் எல்லா மகன்களுக்கும் எதிராகப் போர் புரிந்தார். அவர்கள் இறுதியில் சரணடைந்தனர். நெடுநாட்களாக உத்மானியர்களின் பகைவர்களாக இருந்த கரமானிய நாட்டினர் இப்பொழுது முற்றிலுமே அடிபணிய வைக்கப்பட்டனர். அந்நாடு உத்மானியப் பேரரசின் ஒரு மாநிலமாயிற்று. அப்பால் அது உத்மானியர்களுக்குத் தொல்லை கொடுக்கவில்லை.

முகம்மதுவின் கொடுமைகளினால் பெரும் இன்னலுக்கு இரையான நாடு கிரேக்க நாடாகும். இங்கும் ஒற்றுமையின்மை தான் அதன் சிதைவுக்குக் காரணமாயிற்று. கான்ஸ்டான்ட்டி நோப்பிலில் கடைசி கிரேக்கப் பேரரசராக ஆட்சிபுரிந்த கான்ஸ்டன்ட்டைனின் இரு சகோதரர்களான டெமீட்ரியஸ், தாமஸ் என்பவர்கள் சுல்தானின்கீழ், முறையே ஆர்மஸ் பத்ராஸ் ஆகிய வற்றின் சிற்றரசர்களாக ஆட்சி புரிந்து வந்தனர். அவர்கள் தம்மை அச்சுறுத்திக்கொண்டிருந்த ஆபத்தையும் பொருட் படுத்தாது, கான்ஸ்டன்ட்டைன் இறந்தவுடன் இறைமைக் காகப் போரிடத் தொடங்கினர். கரடுமுரடான அல்பேனியர்கள் இருவரையும் மாறிமாறி ஆதரித்து வந்தனர். ஒரு ஞாயிறு அன்றே அவர்கள் மூன்று முறை கட்சி மாறினார்களாம்! மொரியாவை முழுமையாகக் கைப்பற்றிக் கொள்வதற்காக இந்தச் சச்சரவு! தமக்கு நல்ல வாய்ப்பு இருக்கின்றது என்று உணர்ந்த முகம்மது 1458-ல் அதன்மீது படையெடுத்தார். இந்தப் பேராபத்தின் போதும் இரு சகோதரர்களும் ஒன்று சேராது, ஒருவரை ஒருவர் எதிர்த்துக் கொண்டிருந்தனர். அதே சமயத்தில் அவர்கள் துருக்கியர்களையும் எதிர்க்க முற்பட்டனர். முகம்மதுவின் படை சென்ற வழியிலெல்லாம்

மக்களைத் துன்புறுத்திக்கொண்டும், வெட்டி வீழ்த்திக் கொண்டும் சென்றது; பல கோட்டைகளையும் அது கைப் பற்றியது. ஒவ்வொரு சமயம் உயிருக்குக் காப்புறுதி தருவ தாகக் கூறப்பட்டு, சரணடைந்ததற்குப் பிறகு அவ்வுறுதி மீறப் பட்டது. பல்லாயிரக் கணக்கான மக்கள் அடிமைகளாக விற்கப் பட்டனர், அல்லது காலியாகக் கிடந்த கான்ஸ்டான்ட்டி நோப்பிலை நிரப்புவதற்காக அனுப்பப்பட்டனர். டெமீட்ரியஸ் என்பவர் சுல்தானுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, அவருடைய மகள் சுல்தானின் அந்தப்புரத்திற்கு வந்துசேர வேண்டியிருந்தது. ஆனால், அவள் சுல்தானின் அந்தப்புரத் துள் நுழையும் தகுதியற்றவள் என்று கூறப்பட்டு, அனுமதியும் மறுக்கப்பட்டது. பல வகைகளிலும் அவள் அவமதிக்கப்பட்டாள். தாமஸ் நாட்டை விட்டே ஓடிவிட்டார். சுல்தான் நாடு முழு வதையுமே கைப்பற்றிக்கொண்டு விட்டார். இந்தக் கொடூர மான படையெடுப்பின் நினைவு கிரேக்க மக்களின் மனத்தில் ஆழ்ந்து பதிந்திருந்தது. பல நூற்றாண்டு காலமாக அது துருக்கிப் பேரரசின் ஒரு மாநிலமாகவே இருந்து வந்தது. கான்ஸ்டான்ட்டிநோப்பிலுக்கு (இஸ்தம்பூலுக்கு) சுல்தான் திரும் புகையில் ஏதென்ஸ் நகர் வழியாக வந்துகொண்டிருந்தார். அங்கே ஃபிராங்க்கோ என்பவர் ஆட்சி புரிந்துகொண்டிருந்தார். அவ் வரசனை மூச்சுத் திணறஅடித்துக் கொல்லும்படி சுல்தான் உத்தரவிட்டார். அவருக்குத் தனிப்பட்ட சலுகை காட்டும் வகையில், இச் செயல் சுல்தானின் படைத்தலைவன் முன்னிலை யில் செய்யப்படாது, அவ்வரசனின் இருப்பிடத்திலேயே நிகழ்த்தப்பட்டது. அத்துடன், கடைசி கிரேக்க சுதந்திரப் பொறியும் மறைந்தது.

முகம்மதுவின் ஆட்சிக்காலத்தில் பேரரசு மிகத் தீவிரமாக இணைக்கப்பட்டது. சுல்தான் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆளு நர்களை நியமித்தார். பேரரசு வளர்ச்சி பெற்றுக்கொண் டிருக்கையில், அதன் பிரச்சினைகளும் அதிகமாகிக்கொண்டிருந் தன. பல்வகைப்பட்ட மக்களும் அதன் பல்வேறு பாகங்களிலும் குடியிருந்தனர். இதனால் அரசு என்னும் இயந்திரத்தை ஓட்டு வதற்கெனச் சிறந்த பயிற்சிபெற்ற ஆட்கள் தேவைப்பட்டனர். இதுபோன்ற பிரச்சினையை இரண்டாம் முராத் எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதைத் தீர்ப்பதற்காக அவ்வரசர் தம் மகன்கள் கல்வி பயின்ற பள்ளியில் ஆற்றல் வாய்ந்த இதர இளைஞர்களுக்கும் கல்வி அளித்தார். ஆனால் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முகம்மது இஸ்தம்பூலில் அரண்மனைப் பள்ளி (Palace School) என்ற ஒன்றை நிலைநாட்டினார். முதலில்

இப் பள்ளி பழைய அரண்மனையில் அமைக்கப்பட்டது; ஆனால் பின்னாளில் அது செராக்னியோவுக்கு மாற்றம் செய்யப்பட்டது. அங்கே அது இருபதாம் நூற்றாண்டு வரையிலும் பணியாற்றி வந்தது. 'பேஜஸ்' (Pages) என்றழைக்கப்பட்ட மாணவர்கள், போர்க்கைதிகள் அல்லது கிறித்தவ மாகாணங்களில் வசித்து வந்தவர்கள் ஆகியவர்களுள், பத்திலிருந்து பதினான்கு வரை வயதாகி இருந்த இளைஞர்களிலிருந்து மிக்க விழிப்புடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரண்மனைப் பள்ளியில் இவர்களுக்கு மொழிகள், இலக்கியங்கள், இசை, சட்டம், சமயம், இராணுவ இயல், கணிதஇயல், தத்துவம், அரசாங்க நிர்வாகம், தீர்வை முறை, நீதி, உடற்பயிற்சி, நடக்கை, விளையாட்டுப் போட்டிகள், மற்றும் கைத்தொழில் ஆகியவற்றிற்கெல்லாம் மிகத் தீவிரமாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப் பயிற்சி பன்னிரண்டு ஆண்டுகள் வரை நீடித்தது. பயிற்சி மிகக் கடுமையாக இருந்ததனால், சாலச் சிறந்தவர்களால்தாம் அதை முடிக்க முடிந்தது. பயிற்சிபெற்று முடிக்க இயலாதவர்கள் அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ப அரசாங்கப் பதவிகளில் நியமிக்கப்பட்டனர்.

அரசாங்கத்துப் பல்வேறு துறைகளிலும் நிர்வாகப் பதவிகளுக்குப் பட்டதாரிகள் நியமிக்கப்பட்டனர். நெடுங்காலம் வரையிலும் தாம் தங்கியிருந்த கல்விக் கூடத்தைப்பற்றியும் உள் அரண்மனையைப்பற்றியுமான விவரங்களை வெளிப்படுத்தாமல் அந்தரங்கமாக வைத்துக்கொள்வதாக அவர்கள் பிரமாணம் எடுத்துக்கொண்டனர். போதனாசிரியர்கள், புருஸா, எதிர்னே[1] மற்றும் இஸ்தம்பூல் ஆகிய நகரங்களிலுள்ள மதுதிக் கல்விக் கூடங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர். அரசாங்கத்தின் உயர் நிர்வாகப் பதவிகளை வகித்தவர்களும் போதனையளிக்க அப் பள்ளிக்கே வந்தனர். உடல் வலிமைக்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பளுவான சுமைகளைத் தூக்குவதற்கான வலுவைப் பெறுவதற்காகவும் பயிற்சி அளிக்கப்பட்டது. ஒரு காலத்தில் கைத்தொழில் செய்து சம்பாதிக்க வேண்டி நேரிடின், அதற்காகத் தம்மை அவர்கள் தயாரித்துக் கொள்வதற்காக, ஒவ்வொருவரும் கைவினையிலும் பயிற்சி அளிக்கப்பெற்றனர். மொத்தத்தில், எல்லா மாணவர்களுக்கும் பெரும் புத்துணர்ச்சி ஊட்டப்பட்டது. இவ் வரண்மனைப் பள்ளியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் தங்களுடைய நடக்கையிலும் மற்றவர்களிடத்திருந்து தனித்தேயிருந்தனர். அவர்கள் ஒரு சுல்தானிடம் பயிற்சி பெற்றவர்களாக இருப்பினும்,

[1] ஏட்ரியானோப்பில் என்னும் நகரே Edirne என்று அழைக்கப்படுகிறது.

அவருடைய மகனிடத்தில் வேலை பார்த்தனர்; அல்லது ஒரு வாரிசு நியமிக்கப்படும் வரையில் அவர்களே அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தனர். 'அரசவையினர்' என்று அழைக்கப்பட்ட இவர்கள் பண்பு மிக்கவர்களாயிருந்தனர்; நடை உடை பாவனையில் சிறிதும் குறைவின்றி இருந்தனர்; தம் அரசர்பால் பெரும் பற்றும் கொண்டிருந்தனர்; அரசாங்க அலுவல்களில் பெரும் திறமை பெற்று விளங்கினர். உத்மானிய அரசாங்கமே வெற்றிகரமாகவும் திறமையுடனும் செயல்பட்டுக் கொண்டிருந்தபோது, நிர்வாகிகள் தயாரிக்கப்பட்ட முறை தகுதியின் அடிப்படையில்தான் அமைந்திருந்தது. தகுதி புறக்கணிக்கப்பட்டு மற்றக் கூறுகள் தலை தூக்கியபோது, அரசாங்கம் வளர்ச்சியற்று நின்றுவிட்டது.

உயர்ந்த தரத்தின் கண்ணோட்டத்தில் முகம்மதுவின் கொடூரங்களையும் நம்பிக்கைத் துரோகச் செயல்களையும்பற்றி மதிப்பிடுவது அவ்வளவு சரியன்று. இவ் வகையில் அவருடைய பகைவர்கள் அவருக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர். அல்பேனியாவைச் சார்ந்த 'ஸ்கந்தெர்பெக்' என்பவர் அந் நாட்டைப் பெரும் நாட்டுப் பற்றுடன் பாதுகாத்ததனால், 'திருத் தொண்டர்' என்னும் புகழ்பெற்றதோடு, வரலாற்றிலும் ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்றார். அவரும்கூட வாய்ப்புக் கிடைத்த பொழுது மிகக் கொடூரமாகவே நடந்துகொண்டார். தாம் நடத்திய போர்களில் கைப்பற்றப்பட்ட கைதிகளைக் கொல்லுவது அவருடைய சாதாரணப் பழக்கமாயிருந்தது. மோரியாவை ஆண்ட இரு சர்வாதிகாரிகளும் இதுபோன்றே இருந்தனர். வலாச்சியாவின் அரசன் விலாட் (Wlad) என்பவன் வரலாற்றிலேயே மிகக் கொடிய முரடனாக விளங்கினான். 'தோலை உரிப்பவன்' என்றே அவனுக்குப் பெயர் இருந்தது. 1462-ல் முகம்மது வலாச்சியாவின்மீது படையெடுத்தார். விலாடைப் பின்துரத்திக் கொண்டு வந்த அவரும் அவருடைய படையினரும் அக் கொடியவனை ஓரிடத்தில் சந்தித்தனர். அதே இடத்தில் அக் கொடியவன் இருபதினாயிரம் துருக்கியர்களையும் பல்கேரியர்களையும் தோலை உரித்தும் சிலுவையிலிட்டும் கொன்றுள்ளான். அக் கொடியவனை சுல்தான் நாட்டைவிட்டு வெளியேற்றி, அவனுடைய ஸ்தானத்தில் ராடுல் (Radul) என்பவரை நியமித்தார். சுல்தான் இறந்து விட்டதும் விராஸ்ட் மீண்டும் திரும்பி வந்தான். ஆனால், அவனை ஓர் அடிமை கொன்று விட்டான். முன்பு முகம்மதுக்குக் கப்பம் செலுத்தும் நாடாக இருந்த வலாச்சியா இப்பொழுது ஓர் அடிமை நாடாயிற்று. 1520ஆம் ஆண்டு வரையிலும் ரோட்ஸ் தீவு கைப்பற்றப்படாமலேயே இருந்து வந்தது.

முகம்மது மாபெரும் வீரராகவும் படைத் தலைவராகவும் இருந்தார். எனினும், நிர்வாகியாகவும் அரசியல் மேதையாகவும் அவர் முக்கியத்துவம் பெற்று விளங்கினர். தாம் நடத்திய பல்வேறு படையெடுப்புகளில் அவர் படைவீரர்களை ஒழுங்காக அமைத்ததும் அவர்களுக்குத் தேவைப்பட்ட பொருள்களைச் சேகரித்து வைத்ததும் குறிப்பிடத் தக்கவையாகும். அவருடைய படைவீரர்களுக்கு உணவும் போர்க்கருவிகளும் தேவைப்பட்ட அளவுக்கு அளிக்கப்பட்டன. அவர் தமது பேரரசில் தாமே சட்டங்களின் பிறப்பிடமாக இருந்தார்; தம் குடிமக்களின்மீது கட்டுப்பாடற்ற அதிகாரத்தைப் பெற்றுமிருந்தார். இவர்களுடைய முன்னோர்களைவிட இவர்தாம் அதிக மசூதிகளையும் மருத்துவமனைகளையும் கல்லூரிகளையும் கல்விக் கூடங்களையும் தலைநகராகிய இஸ்தம்பூலிலும் மற்றுமுள்ள நகரங்களிலும் நிருமித்தார். கல்விமுறையில் விஞ்ஞானத்தின் முக்கியத்துவத்தை அவர் உணர்ந்திருந்தார். கற்றறிந்தவர்களின் கூட்டத்தை அவர் விரும்பி நாடினர். அவர்களுடன் உரையாடவும் அவர் விரும்பினர். கவிஞராகவும் அவர் புகழ் பெற்று விளங்கினர். முப்பதாண்டு ஆட்சி நடத்தி, தமது ஐம்பத்தொன்றும் ஆண்டில் அவர் உயிர் நீத்தார். மற்றொரு படையெடுப்பை நிகழ்த்துவதற்காக அவர் ஒரு படையைத் திரட்டினர். ஆனால், அதைத் திரட்டியதில் அவருடைய நோக்கம் என்ன? ரோட்ஸ் தீவின் மீது மற்றொரு தாக்குதல் நடத்துவதற்காகவா? அல்லது காண்டியாவின் (Candia) மீது படையெடுப்பதற்காகவா? அல்லது கலாப்ரியாவில் தாம் பெற்ற வெற்றியைப் பின்தொடர்வதற்காகவா? என்பது எவருக்குமே தெரியவில்லை. அம் மர்மத்தைத் தம் மனத்திலேயே வைத்துக் கொண்டு அவர் இறந்துவிட்டார். கான்ஸ்டான்ட்டிநோப்பிலில் அவர் கட்டிய மசூதியில் அவரே தாம் முதன் முதலாக அடக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் கொடுமைகள் பலவற்றையும் நம்பிக்கைத் துரோகங்களையும் இழைத்துள்ளார். என்றாலும், அவருடைய நாட்டு மக்களின் நன்னம்பிக்கையையும் மதிப்பையும் அவர் பெற்றிருந்தார். மிகப் பொருத்தமாகவே அவர் 'மாபெரும் வெற்றியாளர்' என்றழைக்கப்பட்டுள்ளார். கான்ஸ்டான்ட்டிநோப்பிலின் வீழ்ச்சிக்கும், அது முஸ்லிம்களின் தலைநகராக உயர்வதற்கும் ஒரு புது சகாப்தத்தை உண்டு பண்ணிய இம் மாபெரும் வெற்றியாளரை உலகம் உள்ளளவும் எவரும் மறக்கவும் முடியாது; உலக வரலாறுகளில் ஒரு மாபெரும் கீர்த்தியை நிலைநாட்டியவர் இந்த இரண்டாம் முகம்மது என்னும் துருக்கி சுல்தானுவார் என்பதை எவரும் மறைக்கவும் முடியாது.

9. இரண்டாம் பேஜீதும் ஜெம்மும் (1481–1512)

(Bayezid II & Jem)

இரண்டாம் முகம்மது இருமகன்களை விட்டுச் சென்றார். முப்பத்து மூன்று வயதினரான பேஜீத் அமாஸ்யா (Amasya) என்ற இடத்தின் ஆளுநராக இருந்தார். இருபத்தொன்பது வயதினரான ஜெம்[1] (Jem) என்ற மற்றொரு மகன் செல்ஜுக்கியர்களின் முன்னாள் தலைநகரான கோன்யாவின் ஆளுநராக இருந்தார். இஸ்தம்பூலிலிருந்து அமாஸ்யா எட்டுநாள் தூரத்திலிருந்ததனாலும், கோன்யா நான்கு நாள் தூரத்திலிருந்ததனாலும், இளைய மகன் மத்திய நிர்வாகத்தின் மீது ஆதிக்கத்தைப் பெறுவதற்கு நிலைமை சாதகமாக இருந்தது. ஆனாலும், ஜனிஸ்ஸரீப் படையினர், அரண்மனையில் இருந்த பணியாட்கள், அரசாங்க அலுவலர்கள், அரண்மனைக் கல்விக் கூடத்திலிருந்த பட்டதாரிகள் ஆகியோரெல்லாரும் பேஜீதையே விரும்பினர். ஆனால், முகம்மதுவின் கடைசிப் பிரதான அமைச்சர் அனட்டோலியாவின் முஸ்லிம் உயர்குடி வகுப்பினரைச் சார்ந்தவராகையால், ஜெம் பட்டத்திற்கு வரவேண்டுமென்று விரும்பினர். அவர் முகம்மதுவின் மரணத்தை மறைத்துவைத்து, அந்தரங்கமாக ஜெம்முக்குத் தூதர்களை அனுப்பி வைத்து, அவ் விளைஞர் வரும் வரையில் இஸ்தம்பூலைத் தனித்து வைக்க முற்பட்டார். ஆனால், முகம்மது காலமான செய்தி யாவருக்கும் தெரிந்து விட்டதனால், அடிமை அதிகாரிகளும் ஜனிஸ்ஸரீப் படையினரும் அதிகாரத்தைக் கைப்பற்றி, அமைச்சரைக் கொன்று, ஜெம்மிடம் அவர் அனுப்பிய அதிகாரிகளின் தோலை உரித்து, பேஜீதின்

[1] ஜெம் என்பது ஜெம்ஷீத் என்ற பெயரின் சுருக்கமாகும்.

வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். காஸி (Kazis) மரபுக்கு இருப்பிடமாக இருந்த அமாஸ்யாவில் பேஎஜீத் இருபத் தைந்து ஆண்டு காலம் தங்கியிருந்ததனால், அம் மரபில் அவர் ஈடுபாடு கொண்டிருப்பார் என்ற காரணத்தை முன்னிட்டு அவர் கள் அவரை ஆதரித்தனர். தவிரவும், பேஎஜீத் திருமணங் களின் மூலமாகவும் அரசியல் நட்பினாலும் ஆற்றல் வாய்ந்த அரசாங்க அதிகாரிகள் பலரின் ஆதரவையும் பெற்றிருந்தார். சின்ன ஆசியாவில் மாறுதலே விரும்பா முஸ்லிம் கூட்டத்தினர் ஜெம்மை ஆதரித்தனர். அவருடைய இளமையே அவருக்குப் பெரும் இன்னலாயிற்று. இந்த நாளுக்காக பேஎஜீத் நெடுங் காலமாகத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். அவருடைய மூத்த மகன் ஏற்கெனவே மாக்னீஸியாவின் ஆளுந ராகிவிட்டிருந்தான்.

அரண்மனைக்குச் செல்லும் வாயிலை அடைத்துக் கொண்டு நின்ற அதிகாரிகளின் வரிசையைத் தகர்ப்பதற்காக பேஎஜீத் ஒவ்வொரு ஜனிஸ்ஸரீப் படைவீரருக்கும் ஏராளமான பணத்தை வாரி இரைத்தார்; இடைவேளையில் இழைக்கப்பட்ட குற்றங்கள், கொள்ளையடிப்புகள் எல்லாவற்றுக்கும் ஒரு பொது மன்னிப்பும் அளித்தார். இவற்றை யெல்லாம்விட, அரண்மனை அடிமைக் கூட்டத்தாரிலிருந்து வீரர் ஒருவரைத்தான் தமது வாரிசாக நிய மிக்கப்போவதாகவும் அவர் அறிவித்தார்.

கர்மான், கோன்யா ஆகிய மாநிலங்களிலிருந்து வந்த படை களுடன் ஜெம் புருஸாவைக் கைப்பற்றிக் கொண்டு, அரச பதவிக்காக பேஎஜீதை எதிர்த்தார். ஒட்ரான்ட்டோவில் முகம் மதால் நிறுவப்பட்டிருந்த படை வரவழைக்கப்பட்டது. அது ஜெம்மை முறியடித்துவிட்டது. ஜெம் எகிப்திற்கு ஓட்டம் பிடித் தார்; பிறகு அங்கிருந்து மக்காவிற்கு யாத்திரை ஒன்றை மேற்கொண்டார். ஜெம் ஜெரூசலத்திலேயே அமைதியாகக் குடியிருந்து விட்டார். அவருக்குப் பெரும் நிதிக் கொடையை வழங்குவதாக பேஎஜீத் கூறினார். ஆனால், ஜெம் அதை ஏற்றுக் கொள்ளாது, 1482-ல் மீண்டும் சிம்மாசனத்தைக் கைப்பற்று வதற்கு இரண்டாம் தடவையாக முயன்றார். ஆனால், இந்த முயற்சியும் வீணாயிற்று ரோட்ஸ் தீவிலிருந்த செய்ண்ட் ஜான் பெரு வீரர்களிடம் இவர் அடைக்கலம் புகுந்து, அவர்களால் சிறையிலடைக்கப்பட்டு, உத்மானியர்களிடம் சாதகமான நிபந் தனைகளைக் கொண்ட ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள் வதற்குப் பயன்படுத்தப்பட்டார். அவர்களிடத்தில் இவர் சிறை யடைக்கப்பட்டிருந்தால் ஆண்டு ஒன்றுக்கு அவர்களுக்கு

40,000 துக்காத்துகள் (Ducats) கொடுப்பதற்கு பேளஜீத் இணங்கினர். அந்த வீரர்கள் பிறகு அவரை ஃபிரான்ஸுக்குக் கொண்டு சென்றனர். அங்கே அந்த நாட்டு அரசர் எட்டாம் சார்லஸின் கைகளில் அவர் சிக்கினர். பிறகு அவர் போப்பிடம் ஒப்படைக்கப்பட்டார். 1494-ல் எட்டாம் சார்லஸ் அவரை ஆரும் அலெக்ஸாந்தர் என்ற போப்பிடமிருந்து உத்மானியர்களுக்கெதிராகச் சிலுவைப் போர் ஒன்றை நடத்துவதற்காகக் கடன் வாங்கினர். ஆனல், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நேப்பிள்ஸ் நகரில் ஜெம் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிர் நீத்தார்.[1]

1482ஆம் ஆண்டுக்கும் 1495ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், எங்கே தம் சகோதரர் திரும்பி வந்துவிடுவாரோ என்ற அச்சத்தால் பீதியுற்றுக்கொண்டிருந்ததனல் பேளஜீதால் வெளிநாட்டு விவகாரங்களில் அவ்வளவாக ஈடுபடமுடியவில்லை. இருப்பினும், ஆக்கிரமிப்புக் கொள்கையினல்தான் உத்மானியப் பேரரசு உயிர் வாழ முடியும் என்ற நிலை ஏற்பட்டிருந்தது. போர்கள் நடைபெறவில்லையென்ருல், நிலமானிய சிப்பாஹீகள் ஜனிஸ்ஸரீப் படைவீரர்கள் மற்றும் அரசவையினர் ஆகியவர்கள் எல்லோருமே பெரிதும் அதிருப்தியுற்று விடுவர். ஆகவே, அவர்களின் திருப்திக்கென்றே அவ் வாண்டுகளில் டால்மேடியன் கடற்கரை, ஹங்கேரி, ஸ்டைரியா மற்றும் கொரிந்தியா ஆகிய இடங்களில் பற்பல படையெடுப்புகள் நிகழ்த்தப் பெற்றன. இந்தக் கொள்ளைப் படையெடுப்பு முடிவானதாக இருக்கவில்லையாயினும், ஏராளமான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. நீஸ்டெர் நதியின் (River Dniester) முகத்துவாரத்தின் கருங்கடலோரத்தில் இருந்த அக்கர்மான் (Akkerman) என்னும் நகரம் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. வலாச்சியாவும் மால்தேவியாவும் அடிபணிய வைக்கப்பட்டன.

பேளஜீதின் ஆட்சியின் தொடக்கத்தில் எகிப்தின் மம்லூக் சுல்தான்களுடன் போர் மூண்டது. துா - அல் - காதிரிக் கிடையே (Dhu-al-Khadir) ஏற்பட்ட வமிசத் தொல்லைகளினுல் எகிப்தியர்களுக்கும் உத்மானியர்களுக்குமிடையே எல்லைத் தகராறு மூண்டது. 1484-ல் ஜெம்முக்கு அவர்கள் அடைக்கலமும் ஆதரவும் வழங்கிய பிறகு வெளிப்படையாகவே போர் மூண்டது ஆறு பெரிய படையெடுப்புகள் நிகழ்த்தப்பட்ட போதிலும், பேளஜீத் அதானுவைத் தொடர்ந்து தம் கைவச

[1] அவரை பேளஜீத் விஷமிட்டுக் கொன்ருர் என்றும் கூறப்படுகின்றது.

மாக்கி வைக்க முடியவில்லை. அவருடைய படைத் தலைவர்கள் மம்லூக்குகளால் மீண்டும் மீண்டும் கைப்பற்றப்பட்டனர். இறுதியில் அமைதி ஏற்பட்டபோது, ஒப்பந்தத்தின்படி (1491) சச்சரவுக்கு ஆளாகியிருந்த எல்லைப் பகுதியின் பெரும்பாகம் எகிப்தியர்வசமே விட்டு வைக்கப்பட்டது. இருப்பினும், தெற்கு அல்பேனியாவிலிருந்த துர்க்கோமன் படைகளும் உத்மானியரல்லாதாரின் படைகளும் உத்மானியப் படைவீரர்களால் அடக்கப் பட்டிருந்தமையால், அடுத்த இருபது ஆண்டு காலத்திற்குப் பெருந்தொல்லை எதுவும் தோன்றிவிடவில்லை.

ஜெம்மின் மரணத்தைப் பின்தொடர்ந்து, பேஎஜீத் மேற்கில் மேலும் தீவிரமான ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றினார். டால்மேடியன் கடற்கரையோரத்தில் உத்மானியர்கள் நடத்திய கொள்ளைப் படையெடுப்புகளும் அதிகரித்தன. சைனேப், கால்லிப்போலி, லெபான்டோ (Lepanto), வலோனா (Valona) மற்றும் பிரவேஸா (Praveza) ஆகிய இடங்களில் போருக்கான ஆயத்தங்கள் அதி வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. 1499-ல் வெனிஸுடன் போர் மூண்டபோது, உத்மானியர்கள் மோடோன் (Modon) கோரோன் (Coron) ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டு, நவாரினோ (Navarino)வில் நடைபெற்ற கடற்போரில் வெனிஸியர்களை முறியடித்தனர். 1503-ல் ஆன்ட்ரியா கிரிட்டியாவுக்கும் (Andrea Grittia) பேஎஜீதின் வசீர்களுக்குமிடையே ஒப்பந்தம் கையொப்பமிடப்படும் வரை அமைதி ஏற்படவில்லை. இப் போர்களினால் கிரீஸிலும் கிழக்கு மத்திய தரைக் கடலிலும் வெனிஸியர்களின் அதிகாரம் மேலும் மங்கி விட்டது. அதே சமயத்தில் உத்மானியர்களின் கடற்பலம் பெருகி விட்டது. பேஎஜீதின் ஆட்சிக் காலத்தில் இருந்த உத்மானியக் கப்பற்படை மத்திய தரைக் கடலோரத்திலிருந்த இடங்களை விடாமல் கொள்ளையடித்துக் கொண்டிருந்தது.

வெனிஸுடன் போர் முடிவுற்றபோது உத்மானியப் பேரரசின் எல்லையில் ஷா[1] இஸ்மாயீல் என்பவர் தோன்றினார். ஈரான் நாட்டைச் சார்ந்த அவர், ஈரான் சின்ன ஆசியாவின் கிழக்குப் பகுதிகள் முதலிய பகுதிகளில் குடியிருந்த மக்களின் மனத்தில் சமய-தேசீய ஆற்றல் ஒன்றை ஒளிரச் செய்தார். ஒரு புறத்தில், நபிகள் நாயகம் முஹம்மத், நான்காம் கலீஃபா அலீ, மற்றும் ஏழாம் இமாம் இஸ்மாயீல் ஆகியவர்களின் வழித் தோன்றல் தாம் என்றும், மற்றொரு புறத்தில் துருக்கியர் மற்றும் பைஸான்ஷியப் பேரரசர்கள் ஆகியவர்களின் வழி வந்தவர் என்றும் தமக்கு உரிமை பாராட்டிக் கொண்ட ஷா இஸ்மாயீல்

[1] 'ஷா' என்னும் பாரசிகச் சொல்லுக்கு மன்னர் என்பது பொருள்.

ஈரானியர்களையும் துருக்கியர்களையும் அலீயின் வைதிகப் பற்றற்ற பக்தர்களையும் ஒன்றுக இணைத்தார். மாபெரும் சூஃபி என்று அழைக்கப்பட்ட இந்த இஸ்மாயீல் 1502-ல் ஷாவானார். ஷீஆ (Shia) மதப் பிரிவை அவர் தமது இராச்சியத்தின் சமயமாகப் பிரகடனம் செய்தார். சூஃபிகளும் ஷெய்க்குகளும் அடங்கிய அரசியல் முகவர்கள் சின்ன ஆசியா எங்கும் பரவினர்; குறிப்பாக அவர்கள் கிழக்கு, தெற்கு, தென்மேற்கு மலைப் பிரதேசங்களில் அதிகமாகக் குவிந்து கிடந்தனர். இஸ்மாயீல் நிகழ்த்திய பரப்புரை டெக்கே (Teke) கரமான் (Karaman) மற்றும் தூ-அல்-காதிர் (Dhu-al-Khadir) ஆகிய மாநிலங்களில் மிகத் தீவிரமானதாக இருந்தது.

உத்மானியப் பேரரசில் வாழ்ந்த முஸ்லிம்கள் அவ்வளவாக வைதிகர்களாக இருக்கவில்லை. பேஎஜீத் இயல்பாகவே ஒரு தத்துவ ஞானியாக இருந்தார். சூஃபி என்று பெயர் பெற்று விளங்கும் அளவிற்கு அவர் ஓர் ஞானியாகவும் இருந்தார். பேஎஜீதும் ஜனிஸ்ஸரீகளும் அரசவை அதிகாரிகளும் பக்தஷீ தர்வேஷ் (Baktashi Dervesh) பள்ளியைச் சார்ந்தவர்கள். இப் பள்ளி முரண்பாடான சமயப் பிரிவுகளை ஆதரித்தது. இந்தக் காரணங்களுக்கு மாறுக, அல்லது ஒருவேளை இந்தக் காரணங்களை முன்னிட்டு, உத்மானியர்கள் தம்முடைய இராச்சியத்தில் அந்நிய நாட்டு அரசன் ஒருவனின் நிலை குலைக்கும் பாங்குள்ள கருத்துக்கள் தட்டுத்தடங்கலின்றிப் பரவுவதற்கு அனுமதிவழங்கவில்லை. தியார்பக்கருக்கு (Diyarbakar) அருகில் 1502-ல் சிறிய மோதல்கள் ஏற்பட்டன. தம்மைப் பின்பற்றுவோர் தம்மைக் காண்பதற்கு அனுமதிக்கப்படவில்லை என்று இஸ்மாயீல் முறையிட்டார். தூதர் அங்குமிங்குமாகப் போய்வந்து கொண்டிருந்த போதிலும், எங்கே தம் ஜனிஸ்ஸரீப் படையினரை இஸ்மாயீலின் தூதர் கெடுத்து விடுவாரோ என்று பேஎஜீத் அஞ்சி அவரைத் தனியாகவே ஒதுக்கி வைத்ததோடு, கண்டிப்பான கண்காணிப்பிலும் வைத்திருந்தார். ஹர்புட்டிலும் (Harput) தியார்பக்கரிலும் இஸ்மாயீலைத் தாக்குவதற்காக பேஎஜீத் அனட்டோலியாவில் படைகளை 1508-ல் திரட்டி வைத்திருந்தார். ஆனாலும், போர் நிகழவில்லை. கிழக்கு ஈரானில் ஏற்பட்ட இன்னல்கள் இஸ்மாயீலின் கவனத்தை அத் திசையின் பக்கம் திருப்பின. அதே சமயத்தில் இஸ்மாயீலைப் பலர் ஆதரித்ததனால் பேஎஜீதும் போரிட விரும்பவில்லை.

எனினும், ஷா இஸ்மாயீலின் கோட்பாடுகளைப் பெருவாரியான மக்கள் ஏற்றுக் கொண்டிருந்தனர்; 1511-ல் கராபியிக்

(Karabiyik) என்ற கிழக்குப் பகுதி ஷெய்க் ஒருவர் வெளிப்படையாகவே கிளர்ச்சி செய்தார். ஷா குலீ (Shah Kuli) என்ற புனை பெயரை மேற்கொண்டிருந்த இந்த ஷெய்க் கோன்யாவை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண்டு, உத்மானிய அனட்டோலியப் படையின் தலைமைக் கேந்திரமாக இருந்த குதாயாவைத் (Kutaya) தம்வசமாக்கிக் கொண்டு, உத்மானியப் படைத் தலைவரைத் தோல் உரித்துக் கொன்று விட்டார். பிரதம அமைச்சர், மூன்று உத்மானிய இளவரசர்கள் ஆகியவர்களின் தலைமையில் இருந்த படை ஒன்று ஷா குலீயைக் கேய்சரி (Kayseri) என்ற இடத்துக்கருகில் கைது செய்தது. அங்கே ஷா குலீ, பிரதம அமைச்சர் ஆக இருவருமே மடிந்தனர். தம் தலைவரே மறைந்து விட்டதனால் முரண்பாடான கொள்கையினர் அங்குமிங்குமாக ஓடிவிட்டனர். கிளர்ச்சியும் ஒடுங்கியது. ஆனாலும் பேஎஜீதுக்குப் பிறகு வந்த அரசரின் காலத்தில் அது மேலும் மும்முரமாக எழுச்சி பெற்றது.

வெனிஸுடன் நடைபெற்ற போர் முடிவடைந்ததிலிருந்து பேஎஜீத் உடல் நலங்குன்றி இருந்தார். படை வீரர்கள் அவரைப் பார்ப்பதற்காக, அவர் அவ்வப்பொழுது தூக்கு கட்டிலில் சுமந்துகொண்டு போகப்பட்டார். ஒவ்வொரு தடவையும் அவர் நோய்வாய்ப்பட்டபோது அவருடைய மகன்களும் பேரர்களும் வருங்காலத்தைப்பற்றிப் பெருங் கவலைப் பட்டனர். அவருடைய எட்டு மகன்களுள், 1511-ல் மூவர் மட்டுமே உயிருடன் இருந்தனர். அவர்கள் மாக்னீஸியாவின் ஆளுநர் கொர்கூத், அமாஸ்யாவின் ஆளுநர் அகமத், ட்ரெப்பிஸாண்டின் ஆட்சியாளர் சலீம் என்பவர்களாவர். இரண்டாம் மகன் அகமத் தந்தையின் செல்லப்பிள்ளையாக இருந்தார். அவரை சுல்தான் தம் வாரிசாக நியமித்திருந்தார். ஆனாலும், அம் மூவரில் மிகவும் திறமை படைத்தவர் இளையவரான சலீம் என்பவரே யாவார். அவர் பெருந் துணிச்சல் கொண்டவர். ஆகவே, அவரைத்தான் படைவீரர்களும் ஜனிஸ்ஸரீகளும் ஆதரித்தனர். தம் தந்தையின் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சலீம் தமக்கே சிம்மாசனத்தை உரிமையாக்கிக் கொள்வதற்காகத் தம் அரசாங்க இருப்பிடத்தை விட்டுப் புறப்பட்டுப் போர்ப்படை போன்ற ஒரு பெரும் கூட்டத்தினருடன் தந்தையைப் பார்க்க இஸ்தம்பூலுக்கு வந்தார்; வந்தபின்னர், அங்கே சதித் திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தார். போருக்காகத் துடிதுடித்துக் கொண்டிருந்த ஜனிஸ்ஸரீகள் அவரை ஆதரித்தனர். ஆனால், தற்போதைக்குப் படையின் ஒரு பகுதி சுல்தானையே ஆதரித்து, அவருடைய மகன் சலீமைத்

தோற்கடித்தது. சலீம் கிரீமியாவுக்கு ஓடிவிட்டார். அங்கிருந்து கொண்டு அவர் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு, கருங்கடலைச் சுற்றிவந்து, இஸ்தம்பூலுக்குள் புகமுயன்றார். அங்கு அவர் வந்தவுடன் துருக்கிப் படை முழுவதுமே அவரை ஆதரித்தது. சலீமின் தூண்டுதலின்பேரில் ஜனிஸ்ஸரீகள் பேரரசரின் அரண்மனை வாயில்களைத் தகர்த்தெறிந்து தங்களை சுல்தான் நேரில் வரவேற்கவேண்டும் என்று வற்புறுத்தினர். பேஎஜீத் வேறு வழியின்றி, அடிபணிந்தார். சிம்மாசனத்தின்மீது அமர்ந்து, அவர்களைப் பார்த்து சுல்தான், 'நீங்கள் விரும்புவதுதான் என்ன?' என்று வினவ, தாங்கள் சலீம் சுல்தானை வருவதைத்தான் விரும்புவதாக அவர்கள் விடையளித்தனர். சுல்தான் தாம் உடனே பதவியிலிருந்து விலகிக் கொள்வதாகப் பிரகடனம் செய்துவிட்டார். தம் விருப்பப்படி சின்ன ஆசியாவுக்கு அவர் அனுப்பிவைக்கப்படுகையில், வழியில் உயிர் நீத்தார். பேஎஜீதைப் பட்டத்திலிருந்து விலக்கிய செயல் உண்மையில் முக்கியத்துவம் வாய்ந்ததேயாகும். ஏனெனில், அது ஜனிஸ்ஸரீகளின் அதிகாரம் எந்த அளவுக்கு வளர்ந்துவிட்டிருந்த தென்பதைக் காட்டுகின்றது. வருங்காலத்தில் மிக்க ஆற்றல் வாய்ந்த சுல்தான்களால் மட்டுமே அவர்களை அடக்கிப்பிடிக்க முடிந்தது. உண்மையில், அவர்களேதாம் அப் பேரரசின் இறுதிச் சீர்குலைவிற்குக் காரணமாகவும் ஆகிவிட்டனர்.

பேஎஜீத் ஒரு தத்துவஞானிக்கான குணவியல்பினைப் பெற்று அமைதியையும் சுகவாழ்வையும் விரும்பினர் என்றாலும், தம் வம்சத்து மற்ற அரசர்களைப் போன்றே இவரும் கொடுமைகளை இழைப்பதை விரும்பாமல் இல்லை. ஜெம்மை அவர் விஷமிட்டுக் கொன்றதாகச் சிலர் கூறுகிறார்கள்; ஆனால், இதைவிட மோசமான அவருடைய செயல், தமது படையின் மாபெரும் தலைவராக இருந்தவரும் ஜெம்மின் கிளர்ச்சியை ஒடுக்கியதனால் தம்முடைய விசுவாசத்திற்குப் பாத்திரமாய் விளங்கியவருமான அகமத் கெதுக் என்பவரைக் கொன்றதாகும். தம் அமைதிக் கொள்கையை வெளிப்படையாக அப் படைத் தலைவர் எதிர்த்ததனால் அவர் சுல்தானின் சினத்திற்கு இலக்கானார்.

முப்பத்தோர் ஆண்டு காலம் பேஎஜீத் ஆட்சி நடத்தியதனால் பேரரசுக்கு ஏற்பட்ட விளைவென்னவென்றால், ஒரு புறத்தில் ஹெர்ஸிகோவினை (Herzigovina) இணைக்கப்பட்ட தோடு அல்லாமல், வெனிஸியர்கள் மோரியாவிலிருந்து அப் புறப்படுத்தப்பட்டனர். மறுபுறத்தில், உத்மானியர்கள் எகிப்

தின் மம்லூக்குகளின் வசம் மூன்று கோட்டைகளை இழந்தனர். தவிர, தெற்கு இத்தாலியிலிருந்து உத்மானியர்கள் விலக வேண்டி ஏற்பட்டது.

உத்மானியர்களின் தூதரகத்தில் இவ் வாட்சியின்போது ஏற்பட்ட குறிப்பிடத்தக்க கூறு என்னவென்றால், முதன் முதலாக ரஷியர்கள் அத் துறையில் தோன்றியதாகும். மூன்றும் ஐவான் (Ivan III) என்ற ஸார் (Czar) பேஎஜீதினிடத்துத் தூதுக் குழு ஒன்றை அனுப்பி வைத்தார். சுல்தானின் முன்னிலையில் குனிந்து நிற்பதையோ, பிறருக்குப் பின்னால் நடந்து செல்வதையோ செய்தலாகாது என்று ஸார் அரசர் தம் தூதருக்கு உத்தரவிட்டிருந்தார். மரியாதை காட்டும் முறையில் இது போன்ற கோரிக்கைகளுக்கெல்லாம் பேஎஜீத் விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னால், துருக்கிப் பேரரசு நீடித்து நிலைபெற்றிருப்பதற்கே ரஷ்ய நாடு எவ்விதப் பேராபத்தாக விளங்கிற்று என்பதற்கு இந் நிகழ்ச்சி ஒரு முன்னோடியாக இருந்தது.

10. முதலாம் சலீம் (1512 – 20)

(Selim I)

பேஎஜீத் சிம்மாசனத்திலிருந்து வலுக்கட்டாயமாக விலக்கப்பட்டதற்குப் பிறகு இஸ்தம்பூல் நகரில் சலீம் ஜனிஸ்ஸரீகளின் முழு ஆதரவுடன் சுல்தானுகப் பிரகடனம் செய்யப்பட்டார். அவர் எட்டு ஆண்டுகள் மட்டுமே ஆட்சி புரிந்தார். ஆனலும், அவருடைய காலத்தில் சுல்தானியப் பேரரசு பரப்பளவில் இரண்டு மடங்காக அதிகரித்துவிட்டது. அவர் ஐரோப்பாவில் ஆட்சிப் பகுதிகளைக் கைப்பற்றவில்லை. ஆனல், ஆசியாவில் பாரசீக நாட்டுக்குரிய தியார்பக்கர், குர்திஸ்தான் ஆகிய மாநிலங்களையும், எகிப்து, சிரியா, புண்ணிய நகரங்கள் உட்பட அரேபியாவின் பெரும் பகுதியையும், எகிப்தின் மம்லூக் அரசர்களிடமிருந்த நிலப்பரப்பையும் பெற்று அவர்தம் இராச்சியத்தில் சேர்த்துக்கொண்டார். அரசராக அவர் தம் கடுமையான வாழ்க்கையைத் தமது நாற்பத்தேழாவது வயதில் தொடங்கினர். அவர் திறம்படைத்த நிர்வாகியாவார். அந்தப்புர வாழ்க்கையிலோ அல்லது வாழ்க்கையின் மற்ற அற்பசுக இன்பங்களிலோ அவர் கருத்துச்செலுத்தவில்லை. அசையாத உறுதியையும் ஆற்றலையும் படைத்த அரசர் அவர்; பேரரசைப் பரப்புவதில் தம் தந்தைக்கு நேர் மாருகப் பெரும் ஆசையைக் கொண்டிருந்தவர்; இராக்காலங்களில் சற்றே உறங்கி, மிகவாகக் கண் விழித்து, நூல்களைக் கற்றறிவதில் அவற்றைக் கழித்தவர். சமய விவாதங்களில் கலந்துகொள்வதையும், கற்றறிந்தவர்களின் கூட்டத்தில் இருப்பதையும் அவர் விரும்பினர். அக் கற்றறிந்தவர்களை அவர் பல அரசுப் பதவிகளில் நியமித்திருந்தார். இத்தன்மைகளையெல்லாம் அவர் பெற்றிருந்தார் எனினும், கொடூர சுபாவத்தையும் அவர் பெருமல் இல்லை. போர்க்களத்திலோ அல்லது அமைதிக்காலத்திலோ மனிதர்களின் உயிரை அவர் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அவரைச் சுற்றியிருந்த ஊமைப்

பணியாட்கள் சுல்தானால் சுட்டிக் காட்டப்பட்ட எவர்மீதும் பாய்ந்து அவரை மூச்சுத்திணற அடிப்பதற்குத் தயாராக இருந்தனர். சுல்தானின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களும் அவருடைய நெருங்கிய நண்பர்களும் தம் உயிரை எந்நேரத்திலும் இழக்க நேரிடலாம் என்று அஞ்சிக்கொண்டே இருந்தனர். அவருடைய திட்டங்களை எதிர்த்தவர்களுக்கோ அவற்றுக்கெதிரான வாதங்களைப் புரிந்தவர்களுக்கோ மரண தண்டனை எக்காலமும் காத்துக்கொண்டே இருந்தது. அவருடைய குறுகிய எட்டாண்டு ஆட்சிக்காலத்தில் ஏழு பிரதம அமைச்சர்கள் மரண தண்டனைக்கு இலக்காயினர். அதே கதி பல உயர் அதிகாரிகளுக்கும் ஏற்பட்டது. லஞ்சம் வாங்கினர் என்று நிரூபிக்கப்பட்ட நீதிபதிகளும் அதேபோன்ற கதியை அடைய வேண்டியிருந்தது. அவர்கள் தம்மீது தாமே தீர்ப்பளித்துக்கொண்டு, தம்மைத் தூக்கிலிடுபவர்களிடம் ஒப்படைத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலைகளும் உருவாயின. ஊதியத்தை உயர்த்தவேண்டும் என்று கோரிய ஜனிஸ்ஸரீப் படைவீரர்கள் பலர் கொல்லப்பட்டனர். எனினும், பலர் அவரின் கீழ்ப் பணியாற்றுவதற்கு விண்ணப்பங்களைக் கொடுத்துக் கொண்டேதான் இருந்தனர். இனிமையாகப் பேசவல்ல இந்தப் பேரரசர் அளவற்ற இரத்தத்தைச் சிந்தினர் என்றாலும், படையினரிடையே ஒழுங்கை நிலைநாட்டியதோடு, லஞ்ச ஊழலையும் போக்கடித்தார். பெரும்பாலான குடிமக்களின் விருப்பத்தை அவர் பெற்றிருந்தார்.

சல்தனத்துக்கான[1] உரிமை பறிக்கப்பட்டவர்களும், சின்ன ஆசியாவில் முக்கிய அரசுகளுக்குத் தலைமை தாங்கியவர்களுமான கோர்கந்து, அகமத் என்ற சுல்தானின் இரு மூத்த சகோதரர்களும் சுல்தானுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். இது உண்மையில் எதிர்பார்க்கப் பட்டதே. சலீம் ஒரு மணித்துளியும் தாமதிக்காமல் அவர்களுக்கெதிராகப் புருஸாமீது படைதிரட்டிக்கொண்டு சென்றார். என்ன நடைபெறுகின்றதென்பதை அறியாதிருந்த கோர்கந்து முறியடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். புருஸாவில் மிகப் பயங்கரமான படுகொலை நிகழ்ந்தது. சலீமின் சகோதரர் கோர்கந்தின் ஐந்து மகன்கள்—பட்டத்துக்கு உரிமை பாராட்டக் கூடியவர்கள் — அங்கே ஒன்றாகத் திரட்டப்பட்டனர். கூக்குரலுக்கும் ஒப்பாரிக்கும் புலம்பலுக்குமிடையே அவர்கள் கொல்லப்படுகையில், பக்கத்து அறையிலிருந்தவாறே சலீம் இந்தக் காட்சியைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தாராம்!

[1] சுல்தான் ஆளும் நாடும், அவரது ஆட்சி வரம்பும் 'சல்தனத்'-(Sultanate) என்று சொல்லப்படும்.

சற்று அதிக காலம் எதிர்த்து நின்ற அகமது என்ற மற்றொரு சகோதரர் ஒரு சில மாதங்களுக்குப் பிறகு தோற்கடிக்கப் பட்டுக் கொல்லப்பட்டார்.

எல்லா இடர்ப்பாடுகளிலிருந்தும் விடுபட்டு, சிம்மாசனத்தில் அமர்ந்த சலீம் இப்பொழுது தம் கவனத்தைப் பாரசீகத்தின்மீது செலுத்தினர். சமய உணர்ச்சி வேற்றுமை காரணமாக, இரு நாடுகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. நெடுங்காலமாகவே சுன்னீகளுக்கும் ஷீ ஆக்களுக்கும் இடையே அடிப்படைக் கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தன. துருக்கிப் பேரரசு சுன்னீ சமயப் பிரிவினரின் இருப்பிடமாகவும், பாரசீகம் ஷீஆக்களின் இருப்பிடமாகவும் இருந்தது. ஆனால், அண்மையில் சின்ன ஆசியாவில் ஷீஆக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண் டிருந்தது. பேரரசிலிருந்து மாறுபாடான சமயக்கொள்கை களைப் போக்க விரும்பிய சலீம், ஒற்றர்களின் படை ஒன்றைக் கொண்டு குறிப்பிட்ட நாளன்று எழுபதினாயிரம் ஆட்களைச் சிறை யடைத்தார். அவர்களுள் நாற்பதாயிரம் பேர் கொல்லப் பட்டனர். மற்றவர்கள் சிறைகளில் கடுங்காவல் தண்டனை அனுபவித்தனர். இந்த வன்முறைச் செயல் மக்களின் வெறுப்பைக் கிளறிவிடவில்லை. அவர் தம் செயலுக்கு 'நியாய மாக நடந்துகொள்பவர்' என்று யாவராலும் பாராட்டப் பட்டார். ஷீஆ மதப்பிரிவு துருக்கிப் பேரரசிலிருந்து அழிக்கப் பட்டது. இச் செயல், பாரசீகர்களுக்கும் உத்மானியர்களுக்கு மிடையே ஏற்கெனவே இருந்த பகைமை யுணர்ச்சிகளை மேலும் கிளறிவிட்டது. மோதலுக்கான உடனடியான காரணம், அகமதின் மகன் முராதுக்குப் பாரசீகர்கள் அடைக்கலம் அளித் திருந்தனர். பாரசீக நாடு அப்பொழுது ஷா இஸ்மாயீலின் பொறுப்பிலிருந்தது. ஆற்றலிலும் திறமையிலும் இரு அரசர் களும் ஒருவருக்கொருவர் சரிநிகராகவே இருந்தனர்.

மார்ச்சு மாதம் 1514-ல் சலீம் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு செயல்படத் தொடங்கினர்: உணவுப் பொருள்களைக் கொண்ட கப்பற்படை ஒன்றை ட்ரெப்பிஸாண்டுக்கு அனுப்பி வைத்தார். பல்லாயிரக்கணக்கான ஜனிஸ்ஸரீப் படை வீரர்கள், நிலமானியப் படைகள், பீரங்கிகள் ஆகியவற்றை யெல்லாம் சுல்தான் திரட்டியபின், இஸ்மாயீலைத் தேடிக்கொண்டு கிழக்குப் புறத்திற்குச் சென்றார். ஷா இஸ்மாயீல் சென்ற இடங்களுக் கெல்லாம் சுல்தானும் பின்தொடர்ந்து சென்றார். ஆகஸ்ட் மாதம் 1514-ல் சால்டிரான் (Chalderan) என்ற இடத்தில் மோதல் ஏற்பட்டது. இஸ்மாயீல் தம் அந்தப்புரத்தினரை

யெல்லாம் விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார். போரில் வெற்றியைப் பின்தொடர்ந்து உத்மானியர்கள் இஸ்மாயீலின் தலைநகரான தப்ரீஸைக் (Tabriz) கைப்பற்றிக்கொண்டனர். பனிக்காலத்தை சலீம் அங்கேயே கழிக்க விரும்பினார். ஆனால், ஜனிஸ்ஸரீகள் அதை எதிர்த்து இஸ்தம்பூலுக்குத் திரும்பிவிட்டனர். ஆனால், சலீம் பனிக்காலத்தை அமாஸ்யாவில் கழித்துக்கொண்டே தியார்பக்கர், குர்தீஸ்தான், வட இராக், சிரியா ஆகியவற்றின் மீது படையெடுப்புகளை நிகழ்த்த ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். பிறகு இஸ்தம்பூலுக்குத் திரும்பிய சலீம், ஷீஆக்களைக் களைந்தெறிந்தது போன்றே அந் நகரிலிருந்த கிறித்தவர்களையும் களைந்தெறிய முற்பட்டார். முஃப்தி குறுக்கிட்டதன் காரணமாக அதனை சுல்தான் கைவிட்டாரெனினும், இஸ்தம்பூலிலிருந்த கிறித்தவர்களின் திருச்சபைகளை யெல்லாம் பறித்துக்கொண்டு, அவற்றை யெல்லாம் அவர் மசூதிகளாக்கிவிட்டார்.

சிரியா மற்றும் எகிப்து ஆகியவற்றின்மீது படையெடுக்க சுல்தான் 1516-ல் முடிவெடுத்தார். நெடுங்காலமாக இவ் விரண்டு நாடுகளும் மம்லூக்குகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. அப்பொழுது மம்லூக் சுல்தானாக இருந்த கன்சர் கௌரி (Kansar Ghowri) என்பவருக்கு எண்பது வயதாகிவிட்டிருந்த போதிலும், அவரே படைவீரர்களுக்குத் தலைமை தாங்கிப் போர்களை நடத்திக்கொண்டிருந்தார். பாரசீகத்தில் ஏற்பட்டதுபோலவே இங்கும் சமயக் காரணம் பேரரசைத் தூண்டியது. மக்கா மதீனா ஆகிய புண்ணிய நகரங்களைப் பாதுகாப்பதற்கான உரிமையை சலீம் பாராட்டினார்; ஜூன் 26ஆம் நாள் அன்று சலீம் கோனியாவுக்கு வந்து, அலெப்போவிலிருந்த மம்லூக் அரசருக்குத் தூது அனுப்ப, அவர் பதில் தூது ஒன்றை அனுப்பினார். இராணுவ உடையில் காட்சிதந்த மம்லூக் தூதர்களைக் கண்ட சுல்தான் சினமுற்று, அத் தூதுக்குழுவை அவமதித்தார்.[1] இரு தரப்பினருக்குமிடையே அலெப்போவுக்கருகில் போர் நடைபெற்றது. எகிப்தியர்களிடத்தில் பீரங்கிகள் இல்லாமையால் வெகு எளிதாகவே துருக்கியர்கள் வெற்றி பெற்றுவிட்டனர். ஓட்டம் பிடித்த மம்லூக் அரசர் கௌரி நெரிசலில் மிதிபட்டு உயிர் இழந்தார். பிறகு சலீம் அலெப்போவில் சில நாட்கள் தங்கி, எகிப்தின்மீது படையெடுத்தார். எகிப்தியர்களுக்கும் உத்மானியர்களுக்குமிடையே கஸாவில் (Gaza) ஏற்பட்ட மோதலில் எகிப்தியர்கள் மிகக் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டனர். டிஸம்பர் 16ஆம் நாள் அன்று சலீம் டமாஸ்கஸுக்குத்

[1] மம்லூக் (அடிமை) எஜமான் மாதிரி காட்சியளிப்பதா? என்னும் எரிச்சல் காரணம்.

திரும்பி, பிறகு கஸா நகருக்குப் போய்ச் சேர்ந்தவுடன் அதன் குடிமக்களையெல்லாம் கொன்று விடுமாறு உத்தரவிட்டார். எகிப்தின் படையெடுப்பினால் தமக்கு ஆபத்து விளைந்திடுதல்கூடும் என்று எடுத்துரைத்த படைத்தலைவர்களைக் கொன்றுவிட அவர் உத்தரவிட்டார். ஜனவரி 10ஆம் தேதி அன்று படையெடுப்புக்கான ஏற்பாடுகள் முடிவு பெற்றன. சிரியாவுக்கும் எகிப்துக்கும் இடையிலுள்ள சீனாய்ப் பாலை வனத்தைக் கடக்கப் புறப்பட்ட உத்மானியப் படை பல இன்னல் களையும் பொறுத்துக்கொண்டு, எகிப்தை அடைந்தது. 1516ஆம் ஆண்டு கடைசி நாளன்று சலீம் தம் படையுடன் கெய்ரோ நகரை நெருங்கிவிட்டார். இதற்கிடையே சுல்தான் கௌரிக் குப் பிறகு துர்மான் பே (Tourman Bey) என்பவர் மம்லூக்குகளின் சுல்தானானார். ஆனால், கௌரியின் மகனை ஆதரித்தவர்கள் புதிய சுல்தானை எதிர்த்தனர். இதன் விளைவாக, எகிப்தின் படையில் பிளவு ஏற்பட்டிருந்தது. எகிப்துப் படைத் தலைவர்க ளான கஜ்ஜாலீ பே மற்றும் கைர் பே என்ற இருவர் சலீமுடன் அந்தரங்கத் தொடர்பு கொண்டுவிட்டனர்.

இரு தரப்புப் படைகளும் ரிதானியா (Ridania) என்ற இடத்தில் சந்தித்தன. போரில் எகிப்தியர்கள் முற்றும் முறி யடிக்கப்பட்டனர். அவர்களுடைய பீரங்கிகள் கஜ்ஜாலீயின் துரோகச் செயலினால் வேறு திசையில் அனுப்பி வைக்கப் பட்டமையால், அவர்கள் புறத்தில் இருபத்தையாயிரம் பேர் மடிந்தனர். பிறகு சலீம் கெய்ரோ நோக்கி முன்னேறினார். முதலில் எதிர்ப்பு இருக்கவில்லையாயினும், பிறகு மம்லூக்குகள் அதை மீட்பித்துக்கொண்டு துருக்கியர்களை மிகத் தீவிரமாகத் தாக்கினர். மிகக் கடுமையான போருக்குப் பிறகே சலீமால் கெய்ரோவைப் பிடிக்க முடிந்தது எங்கும் படுகொலை நடந்தது. மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர். எகிப்து பரி பூரணமாக அடக்கப்பட்டது. தீரத்துடன் போர் புரிந்த துர்மான் இரு துரோகிகளையும் பழித்ததற்குப் பிறகு கொல்லப்பட்டார்.

வென்ற நாட்டை ஒழுங்காக அமைப்பதற்கு சலீம் சில மாதங்களை எடுத்துக்கொண்டார். தம் சுல்தானிடம் நம்பிக்கைத் துரோகமாக நடந்துகொண்டவர்களும் படுகொலையிலிருந்து தப்பி இருந்தவர்களுமான மம்லூக்குகளிடம் எகிப்தின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களைக் கண்காணிக்கத் துருக்கி அரசாங்கம் ஓர் உயர் அதிகாரியை (பாஷாவை) நியமித்தது. தமது துரோகச் செயல்களுக்காக கஜ்ஜாலீ பேயும் கைர் பேயும் தக்க வகையில் பரிசு அளிக்கப்பெற்றனர்: கஜ்ஜாலீ பே

சிரியாவின் ஆளுநராகவும் கைர் பே எகிப்தின் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டனர். ஐயாயிரம் துருக்கிப் படைவீரர்கள் கெய்ரோவில் நிறுத்தி வைக்கப்பட்டனர். முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் புரிந்து, அப் போரில் பிடிபட்ட கைதிகளை அடிமைகளாக விற்கவோ அல்லது அந்தப்புரத்தில் சேர்த்துக் கொள்ளவோ இயலாத ஒரு போர் வேட்டையில் ஈடுபட விரும்பாத துருக்கிப்படையினர் இஸ்தம்பூலுக்குத் திரும்ப விரும்பினர்.[1] சலீமும் அதற்கு இணங்க வேண்டியிருந்தது.

இரண்டு ஆண்டுகட்குப் பிறகு இஸ்தம்பூலுக்குத் திரும்பிய சலீமுக்கு கிலாஃபத்தைப் (Caliphate) பற்றிய பிரச்சினையைச் சிந்திக்க நேரிட்டது. அலெப்போவில் பிறரின் கைப்பொம்மையாக இருந்த அல் முத்தவக்கில் (Al-Mutawakkil) என்ற கலீஃபா சலீமின் வசம் சிக்கிக்கொண்டார். சலீம் அவரை இஸ்தம்பூலுக்குக் கொண்டு சென்று, அறக்கட்டளை ஒன்றின் நிதியைக் களவாடியதாக அவர்மீது குற்றம்சாட்டி, அத்குலீ (Adkhulee) என்ற சிறையில் அடைத்தார். பிறகு 1543-ல் கெய்ரோவுக்கு அவர் திரும்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அங்குச் சென்றதும் அவர் இறந்துவிட்டார். கலீஃபாவின் பதவிக்குரிய அதிகாரங்களையும் சின்னங்களையும் கெய்ரோவிற்குப் புறப்படுவதற்கு முன்பு துருக்கியர்களுக்கு மாற்றிவிடுமாறு அவரை சலீம் வற்புறுத்தியதின் பேரில், அவர் அங்ஙனமே செய்துவிட்டார். இதன் விளைவாக, அன்றுதொட்டு உத்மானிய துருக்கி சுல்தான்கள் 'கலீஃபா'[2] என்ற பட்டப்பெயரையும் 'புனித இடங்களின் பாதுகாவலர்' என்ற விருதையும் மேற்கொண்டனர். இதனால் அவர்களுடைய மதிப்பும் புகழும் முஸ்லிம் உலகில் மேலும் ஓங்கியுயர்ந்துவிட்டன. அன்றியும், இதனால் எகிப்து அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் கப்பத் தொகையும் வந்துகொண்டிருந்தது. சுலைமானின் காலத்தில் அத் தொகை 80,000 துக்காத்துகளாக (Ducats) அதிகரித்திருந்தது. மேலும், சுல்தான் புரிந்த போர்களில் படைவீரர்களையும் கப்பல்களையும் எகிப்து அளித்து சுல்தானுக்கு உதவிபுரிந்தது.

பாரசீகத்தின் மீது நிகழ்த்தப்பட்ட படையெடுப்பைப் போன்றே, சிரியா மீதும் எகிப்து மீதும் நிகழ்த்தப்பட்ட இரண்டு

[1] ஒரு முஸ்லிம் சேனை மற்றொரு முஸ்லிம் சேனையை எதிர்த்து வென்றால், கைதிகளாகப் பிடிபடுபவர்களை அடிமைகளாக்க முடியாது; போர் முனையில் கிடைத்த பொருள்களைக் கவர்ந்துகொள்ளவும் முடியாது.

[2] கலீஃபா (Khalifa or Caliph) என்னும் அரபு வார்த்தைக்குப் 'பிரதிநிதி' என்பது பொருளாகும். கலீஃபாக்களின் ஆட்சி 'கிலாஃபத்' என்று அரபு மொழியில் சொல்லப்படும். இதுவே Caliphate என்று ஆங்கிலத்தில் எழுதப்படுகிறது.

படையெடுப்புகளும் முக்கிய விளைவுகளை உண்டுபண்ணின. துரோகம் இழைக்கப்பட்டதும், பீரங்கிகள் இல்லாமையும் மம்லூக்குகள் தோல்வியடைந்ததற்குக் காரணமாயின. சிரியா உத்மானியப் பேரரசுடன் இணைத்துக்கொள்ளப்பட்டுவிட்டது; ஆனால், எகிப்து அவ்விதம் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இதற்கான காரணத்தை எளிதாகப் புரிந்து கொள்வதற்கில்லை. துருக்கியர்களைப் போன்றே மம்லூக்குகளும் அந்த நாட்டிற்கு அன்னியர்களாவர். போரிலிருந்து தப்பிய அவர்களில் ஒருசிலர் எகிப்தின் ஆளும் வகுப்பினராக அங்கீகரிக்கப்படவில்லை. துரோகம் இழைத்தவர்களே அந்த நிலைக்கு உயர்த்தப்பட்டனர். இருந்தபோதிலும், எஞ்சியிருந்த இம் மம்லூக்குகள் வெகு விரைவில் எகிப்தில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டு, உத்மானியர்களால் நியமிக்கப்பட்டு அங்கு வந்த பாஷாக்களைத் (Pashas) தம் கைப் பொம்மைகளாக்கிக் கொண்டனர்.

சலீம் 1518-ல் தம் தலைநகருக்குத் திரும்பினார். எஞ்சியிருந்த இரண்டு ஆண்டு வாழ்நாட்களில் அவர் மேலும்படை யெடுப்புக்களை நிகழ்த்தவில்லை. மற்றொரு படையெடுப்புக்காக அவர் தீவிரமாக ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்; தம் கப்பற் படையை அதிகரித்தார்; சுமார் 150 போர்க் கப்பல்களைக் கட்டினார். ரோட்ஸ் தீவைத் தாக்குவதே அவருடைய நோக்க மாகும் என்று பொதுவாகக் கருதப்பட்டது. ஆனால், ஏதும் முடிவெடுப்பதற்குள்ளாக அவர் உயிர்நீத்து விட்டார். அவர் மாபெரும் வெற்றியாளராவார். அதே சமயத்தில், உத்மானிய வம்சத்திலேயே அவரைப்போல் மற்றெவரும் அவ்வளவு கொடூரமாக நடந்துகொள்ளவில்லை.

'சலீம் யாவூஸ்' (Salim Yavuz) என்பவரைப்பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. யாவூஸ் என்ற சொல்லுக்கு, நல்லவர், நேர்மையானவர், கண்டிப்பானவர், வளையாதவர், கடுமையானவர் என்று பொருள் உண்டு. உண்மையில் அவர் இக் குணங்களை யெல்லாம் பெற்றவராகத்தாம் இருந்தார். அவர் சிறந்த படைத்தலைவர், கவிஞர், திறம்படைத்த நிர்வாகி ஆவார். அவருடைய அரசவை தத்துவ ஞானிகள், வரலாற்றறிஞர்கள், சமய நிபுணர்கள், இலக்கியப் புகழ்பெற்றவர்கள் ஆகியவர்களுக்கெல்லாம் மையமாக விளங்கிற்று.

அவருடைய எட்டு ஆண்டு ஆட்சிக் காலத்தில் உத்மானியர்களின் ஆட்சிப் பகுதியின் எல்லைகள் பெருமளவும் விரிவுபடுத்தப்பட்டன. பெரும்பாலும் ஆசியாவில்தான் அவ் விரிவு ஏற்பட்டது. அங்கிருந்த பல முஸ்லிம் நாடுகளும் அடக்கப்பட்டன.

மத்திய கிழக்குப் பகுதியில் ஆதிக்க நிலை பெற்று விளங்கிய உத்மானியப் பேரரசு, அப் பகுதியிலேயே சாலச் சிறந்த முஸ்லிம் பேரரசாக, அதாவது இடைக்கால உலகமாது குல, அப்பாஸீ குலப் பேரரசர்கள், மற்றும் முஸ்லிம் புனித நிலங்களை ஆண்ட அரசர்கள் ஆகியவர்களின் வாரிசாக விளங்கிற்று. உத்மானியப் பேரரசைக் கீழ்நாட்டுக் கோட்பாட்டுமயமான தாகச் செய்வதற்கு இக் கைப்பற்றுதல்கள் எல்லாம் உறுதுணையாக இருந்தன. சலீமின் ஒரே ஆண் வாரிசு அவருடைய மகன் சுலைமான் என்பவராவார். உத்மானியர்களின் மீது இந்த சுலைமான் என்பவர் நாற்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி நடத்தினார். இவருடைய ஆட்சிக் காலத்தில் உத்மானியர்களின் ஆட்சி உச்சகட்டத்தை எட்டிப் பிடித்து நின்றது என்று கூறுவதில் மிகை ஏதும் இருக்க முடியாது என்பதை இனிக் காண்போம்.

11. மாண்புமிகு முதலாம் சுலைமான் (1520-1566)

(Sulaiman, the Great)

மேலை நாட்டினரால் 'மாட்சிமிக்கவர்' (Magnificent) என்றும் தம் குடிமக்களால் 'சட்டத் தொகுப்பினை உருவாக்கியவர்' (அல்கானூனீ—Alqanuni) என்றும் அழைக்கப்பெற்ற முதலாம் சுலைமான், உலக வரலாற்றிலேயே சிறப்புப் பெற்று விளங்கும் பதினைந்தாம் நூற்றாண்டுக்குரிய மற்ற ஐரோப்பிய அரசர்களுக்கு இணையான மாட்சிமை பெற்றுத் திகழ்ந்தவராவார். அவர் வாழ்ந்த காலமே ஒரு மிக விசித்திரமான காலமாகும். ஐரோப்பாவும் கீழை நாடுகளும் ஒன்றுசேர்ந்து சதிசெய்து, அக் காலத்திற்குரிய சாலச் சிறந்த அரசர்களை உருவாக்கி விட்டன போலும்! இதுபோன்றே எல்லாவகையிலும் அக் காலம் சிறப்புற்று விளங்குவதற்கும் அவை சதி செய்தன போலும்! பேரரசை உருவாக்குவதில் சார்லமேனுக்கு நிகராக இருந்த ஜெர்மானியப் பேரரசரும் ஸ்பானிய நாட்டின் அரசருமான ஐந்தாம் சார்லஸைப்பற்றியும், இங்கிலாந்தின் மன்னர் எட்டாம் ஹென்றி, அரசி எலிஸபெத் ஆகியவர்களைப்பற்றியும், போப் பத்தாம் லியோவைப்பற்றியும், ரஷிய நாட்டை உருவாக்கிய ஐவனைவிட்சைப்பற்றியும், போலந்தின் சிஸிஸ்மண்டைப்பற்றியும், பாரசீகத்தின் ஷா இஸ்மாயீலைப்பற்றியும், இந்தியாவில் மொகலாயப் பேரரசர் அக்பரைப்பற்றியும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த காலம் பதினைந்தாம் நூற்றாண்டாகும். சில வகைகளில் இவர்களையெல்லாம்விடச் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தார், துருக்கியின் சுலைமான் என்பவர். ஒரு கொலம்பஸ்ஸையும் கோடெஸ்ஸையும் டிரேக்கையும் ராலேயையும் ஸ்பென்ஸரையும் ஷேக்ஸ்பியரையும் ஈன்றெடுத்த நூற்றாண்டு அது. கான்ஸ்டான்ட்டிநோப்பிலின் வீழ்ச்சிக்குப் பிறகு பல கிரேக்க அறிஞர்

கள் அந் நகரைவிட்டு வெளியேறி, இத்தாலிய நாட்டில் குடிபுகுந்து, இலக்கியத்திலும் மற்றும் பல கலைகளிலும் மறு மலர்ச்சியை விளைத்த அந்த யுகம் எவ்விதம் ஐரோப்பிய வரலாற்றில் சிறப்புற்று விளங்குகின்றதோ, அதேபோன்று கிழக்கிலும் அக் காலம் சுலைமானின் சாதனைகளால் பேரும் புகழும் பெற்று விளங்குகின்றது. இக் காலத்தில் அனைத்தும் சிறப்புற்றே விளங்கின. இக் காலத்துக் கடற் கொள்ளைக்காரர்களும் நிகரற்றவர்களாகவே இருந்தனர் போலும்! அவர்களும் வம்சாவளிகளைத் தோற்றுவித்தனர். எத் துறையிலும் சுலைமான் ஐரோப்பிய அரசர்களுக்குக் குறைந்தவராக இருக்கவில்லை. இத்தாலியில் ஐந்தாம் சார்லஸுக்கும் முதலாம் ஃபிரான்ஸிஸுக்கும் இடையே நிகழ்ந்த போர்களுக்கு ஈடாக சுலைமான் நிகழ்த்திய போர்கள் இருந்தன. அதுபோன்றே, எலிஸபெத் காலத்து மாலுமிகள் ஸ்பானியர்களுக்கெதிராக நிறைவேற்றிய பெரும் சாதனைகளுக்கு, மத்தியதரைக் கடலிலும் இந்தியப் பெருங்கடலிலும் துருக்கிக் கப்பற்படைத் தலைவர்கள் ஆற்றிய சாதனைகள் நிகராக இருந்தன. இவற்றை யெல்லாம்விட, அப் புகழ் பெற்ற நூற்றாண்டில் துருக்கியர் சாதித்த பெரும் சாதனை, அவர்கள் அழிவுறுமல் பிழைத்துக்கொண்டதேயாகும். பல கூறுகளும் சூழ்நிலைகளும் அவர்களை எதிர்த்து நின்றன. இருந்தும், அவற்றை யெல்லாம் சமாளித்துக்கொண்டு சுலைமானின் காலத்தில் அவர்கள் உச்சகட்டத்தை அடைந்து விட்டனர். நெடுங்காலத் தூக்கத்திலிருந்து எழுந்து உட்கார்ந்த ஐரோப்பா கண்டம் ஆயுதம் ஏந்தி, கிறித்து மதத்தின் மீது நம்பிக்கையற்றவர்களைப் பழிவாங்கத் துடித்துக்கொண்டிருந்தபொழுது, உத்மானியர்களின் அதிகாரம் வீழ்ச்சியுற்று விடும் என்று எதிர்பார்க்கப்பட்டதில் வியப்பு இருக்கமுடியாது. இருந்தும், அப் பேரரசு வீழ்ச்சியுறுவதற்குப் பதிலாகப் புத்துயிர் பெற்று எழுந்து ஐரோப்பாவைச் சரிசமமான நிலையில் எதிர்த்தது; அப் போரில் வெற்றியும் அடைந்து மேலும் வலிமை பெற்று விளங்கியது.

இரண்டாம் பேஎஜீதின் ஆட்சிக் காலத்துப் பிற்பகுதியில் பதினைந்து வயதடைந்திருந்த சுலைமான், போலுவின் (Bolu) ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஆனால், அவருடைய பெரியப்பன் அகமது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததனால், சுலைமான் கிரீமியாவில் கஃப்பாவுக்கு (Kaffa) மாற்றப்பட்டார். அப் பகுதியைச் சார்ந்தவர் அவர் தாய்: ஒரு டார்ட்டார் கானின் மகள். அவருடைய தந்தை சலீம் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டதும், சுலைமான் இஸ்தம்பூலுக்கு வரவழைக்கப்

பட்டார். சலீம் தம் சகோதரர்களையும் அவர்களுடைய மகன் களையும் எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கையில் ஆட்சிப் பொறுப்பு சுலைமானின் வசமே பெரும்பாலும் இருந்தது. சலீம் நெடுங்காலமாக சிரியாவிலும் எகிப்திலும் போரிட்டுக் கொண்டிருக்கையில், சுலைமான் எதிர்னேயை (ஏட்ரியாநோப் பிலை) நிர்வகித்து வந்தார். 1517-ல் சலீம் இஸ்தம்பூலுக்குத் திரும்பியதற்குப் பிறகுதான் சுலைமான் மாக்னீஸியாமீது நிர் வாகம் செலுத்த அனுப்பிவைக்கப்பட்டார். இவ் விதமாக, சுலைமான் அரண்மனைப் பள்ளியில் படிக்க வாய்ப்புப் பெற்ற தோடு, தலைநகரிலும் எதிர்னேயிலும் மாநில ஆளுநராக ஐந்து ஆண்டுக்கு மேலாகத் தங்கியிருக்க முடிந்தது. வருங் காலத்தில் தமது பொறுப்புக்குப் பெறவேண்டிய பயிற்சியை யும் நடைமுறை அனுபவத்தையும் சுலைமான் பெற்ற அளவிற்கு மற்ற எந்தத் துருக்கி இளவரசரும் பெறவில்லை. உண்மையில் அவர் மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய பண்புமிக்க பேர்வழி ஆவார்.

ஆகவே, தம் தந்தைக்குப் பிறகு சுலைமான் அரியணை ஏறிய போது அவர் நிர்வாக அனுபவம் நிரம்பப் பெற்றவராகவே இருந்தார். அவருடைய இளமையும் கவர்ச்சி மிகுந்த ஆளுமை யும் மக்களிடத்தில் அவருக்கு நற்பெயரை வாங்கிக் கொடுத்தன. மாநிலங்களின் நிர்வாகியாக அவர் பணிபுரிந்தது மக்கள் மனத் தில் அவர் மீதான நம்பிக்கையை நிரப்பின. எல்லாவற்றையும் விட, தம் தந்தை கொடூரச் செயல்களில் அளவில்லா அக்கறை காட்டியதை சுலைமான் அடியுடன் வெறுத்ததே அவருடைய புகழுக்கு ஒரு சிறந்த காரணமாகும். ஏற்கெனவே அவரது இரக்க குணத்தினாலும் நேர்மையினாலும் அவர் புகழ்பெற்றிருந் தார். பட்டத்துக்கு வந்து அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கை கள் மக்கள் அவரிடத்தில் கொண்டிருந்த நல்லபிப்பிராயத்தை மேலும் வலியுறுத்தின. குற்றம் புரிபவர்களையும், லஞ்சம் வாங்கு வதை ஒரு வித்தையாகவே கடைப்பிடித்து வந்தவர்களையும் இவர் ஒடுக்கினார்; கடுமையாகத் தண்டித்தார். தம்முடைய பேரரசு எங்கிலும் சரிசமமான ஒத்த நீதியை வழங்குவதே அவருடைய மிகப் பெரும் நோக்கமாக இருந்தது. தங்களால் நேசிக்கப்படக்கூடியவராகவும், அதே சமயத்தில் தங்கள் மனத் தில் அச்சத்தை ஊட்டக் கூடியவராகவும் விளங்கிய ஒரு சுல்தானை மீண்டும் மக்கள் பெற்றதனால் பெருமகிழ்ச்சி யடைந்த னர்; சுலைமானை மற்றொரு முராத் என்று வரவேற்றனர்.

இருப்பினும், தம்முடைய கொடூர சுபாவத்தை அவர் முற்றி லும் விட்டவர் அல்லர். தமது இனத்துக்கே உரிய அத்தகு பண்பு

அவரிடத்திலும் ஓளவு காணப்பட்டே வந்தது. பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகட்குப் பிறகு, உயிருக்கும் சொத்துக்கும் சேதம் ஏற்படாது என்று வாக்குறுதி யளிக்கப்பட்டதன் பேரில் ரோட்ஸ் தீவு சரணடைந்ததும், அதையும் மீறி அவர் ஜெம்மின் மகன் ஒருவனைத் தேடிக் கண்டுபிடித்தார். அவனையும் அவனுடைய நான்கு சகோதரர்களையும் சுலைமான் கொன்று விட்டார். சிம்மாசனத்திற்குப் போட்டியிடக் கூடியவர் எப்படிப் பட்ட உறவின் முறையாளராக இருப்பினும், அவரைத் தொலைத்துவிடுவது அவருடைய முக்கிய நோக்கமாகும். இதையும்விட அவரது மிக மோசமான செயல், தம் இரு மகன்களையுமே அவர் கொன்றதாகும். மூத்த மகன் முஸ்தஃபா என்பவர் வாழ்க்கையில் முன்னுக்கு வரக்கூடிய இளவரசராகத் தென்பட்டார். ஒரு மாநிலத்தின் ஆளுநர் என்ற நிலையில் அவர் ஏற்கெனவே தம் திறமையைக் காட்டியுள்ளார்; படை வீரர்களின் பேரன்புக்குப் பாத்திரமானவர்; வருங்காலத்தைப் பொறுத்தவரை நாடு அவரைத்தான் நம்பி இருந்தது. ஆனாலும், கெளரெம் என்ற அவருடைய ரஷிய நாட்டு ஆசைநாயகியின் தூண்டுதலின் பேரில் சுல்தான் முஸ்தஃபாவைக் கொன்றுவிட்டார். பாஎஜீத் என்ற அவருடைய மற்றொரு மகன் 1561-ல் கிளர்ந்தெழுந்தார். தோல்வியுற்றுப் பாரசீகத்திற்கு ஓடி, ஷா தல்மாஸ்ப் (Shah Talmasp) என்ற அரசரிடம் அடைக்கலம் புகுந்த இவரை சுலைமான் தம் நாட்டிற்குக் கொண்டுவந்து, மிகக் கொடூரமாகக் கொன்றார். சுலைமானுடைய இரு மகன்களும் இவ்விதமாகக் கொல்லப்பட்டதனால் கெளரெம் என்றவளின் மகன் சலீம் ஒருவர்தான் எஞ்சியிருந்தார்; அவரே சுலைமானின் வாரிசுமானார்.[1] இவ் விளவரசர் தமது இனத்துக்குரிய திறமைகள் எதையும் பெற்றிருக்கவில்லை. உச்ச நிலையை எட்டியிருந்த உத்மானியப் பேரரசு அவ் விளவரசர் பட்டத்திற்கு வந்த காலந் தொட்டே சீர்குலையத் தொடங்கிற்று என்று கூறினால் அது மிகையாகாது.

சுல்தான் சுலைமான் ஆட்சி புரிந்த நாற்பத்தாறு ஆண்டு காலத்தில் பேரரசு மிக அதிகமாக விரிவடைந்தது. பெல்கிரேட் (Belgrade), ரோட்ஸ் தீவு, ஹங்கேரியின் பெரும்பகுதி, கிரீமியப் பகுதி, மோஸல் (Mosul), பாக்தாத் (Baghdad), பஸரா (Bassorah), பாரசீக நாட்டிலிருந்து பெறப்பட்ட அர்மீனியா (Armenia), எமன் (Yemen), ஏடன் (Aden), அல்ஜியர்ஸ்

[1] சுலைமான் தம் ஆசைநாயகியின் சாகசத்துக்கு இரையாகாதிருந்து, தம் மூத்த மகன்களை வாரிசுகளாக விட்டுச் சென்றிருந்தால், துருக்கிப் பேரரசின் வரலாறே மாறிப்போயிருக்கும்.

(Algiers), ஓரான் (Oran), திரிப்போலி (Tripoli) நூபியாவின் திசையிலிருந்த எகிப்தின் பெரும்பகுதி ஆகியவற்றை எல்லாம் சுல்தான் சுலைமான் தம் பேரரசில் இணைத்து வைத்திருந்தார். அவருடைய நீண்ட ஆட்சிக் காலத்தில் ஒரு சில வேளைகளில் மட்டுமே அவர் ஆயுதம் தாங்காது இருந்தார். ஹங்கேரியுடனும் ஆஸ்ட்ரியாவுடனும் போர் முடிந்ததற்குப் பிறகு பாரசீகத்தின்மீது அவர் போருக்குச் செல்வார். இவ்விதமாக எந்த நாட்டுக்கெதிராகவாவது அவர் மாறிமாறிப் போர் புரிந்து வந்தார். போர்ப் படைகளுக்கு சுல்தானே பெரும்பாலும் தலைமை வகித்தார். பதின்மூன்று போர்களை அவர் தாமே நேரில் நின்று நடத்தினர். அவற்றுள், பாரசீகம் போன்ற நாடுகளுக்கெதிராக நடந்தவை இரண்டு ஆண்டுகட்கு மேற்பட்டு நீடித்தன. ஏதேனும் ஒரு சாக்குப் போக்கைக் கற்பித்துக் கொண்டு அவர் போர் எழுந்து சென்றார். நாடுகளைக் கைப்பற்றும் அவாவே அவர் மனத்தில் அதிகமாகக் குடிகொண்டிருந்தது. அதனோடு, போர் புரிவதற்கும் கொள்ளையடிப்பதற்கும் துடித்துக் கொண்டிருந்த ஜனிஸ்ஸரிகளின் துடிதுடிப்பும் சேர்ந்து கொண்டது. சமய வெறி (மதப்பித்து) அப் போர்களுக்குக் காரணமாயிருந்தது என்று கூறுவதற்கில்லை.

1521-ல் சுலைமான் பெல்கிரேட் நகரின்மீது போர் தொடுத்தார். இதுதான் இரண்டாம் முகம்மதுவிற்கெதிராக வெற்றிகரமாக நின்ற நகரமாகும்.[1] சுலைமான் ஒரு பெரிய படையைத் திரட்டிக் கொண்டு அதைத் தாக்கினர். ஹங்கேரியர்கள் அதை மிகத் தீவிரமாகப் பாதுகாத்தனர். ஏழுநாட்கள் வரை நடந்த பீரங்கிப் பிரயோகத்திற்குப் பிறகு அந் நகரம் தகர்க்கப்பட்டு, கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. ஆனாலும், வழக்கத்திற்கு மாறுக, நகரில் மக்களோ படையினரோ படுகொலைக்கு இரையாகவில்லை. அந் நகரின் தலைமையான திருச்சபை மசூதியாக்கப்பட்டது. துருக்கிப் படைகள் நகரில் நிறுத்தி வைக்கப் பட்டன. டான்யூப் நதிப் பிரதேசத்தில் அந் நகரம் ஒரு தலைமை அரணைத் திகழ்ந்து வந்தது. ஹங்கேரிக்குள் நுழைவதற்கு அந் நகரம் ஒரு வாயிலாகவும் இருந்தது.

சுலைமான் இவ் வெற்றியைப் பின்தொடர்ந்து, 1523-ல் ரோட்ஸ் தீவைத் தாக்கினர். கடல் மார்க்கமாக இஸ்தம்பூலுக்குச் செல்லும் வழியில் இத் தீவு இருந்ததால், எகிப்து வெல்லப்

[1] *முன் பக்கம் 112, 113 பார்க்க.*

பட்ட காலந்தொட்டு அத் தீவைக் கைப்பற்றுவது மிகவும் அவசியமாகி விட்டது. இத் தாக்குதலை நடத்துவதற்காக சுலைமான் முந்நூறு கப்பல்களைக் கொண்ட கப்பற்படை ஒன்றையும் எண்ணாயிரம் ஜனிஸ்ஸரீ வீரர்களைக் கொண்ட படை ஒன்றையும் முற்றுகைக்கான நூறு பீரங்கிகளையும் அனுப்பி வைத்தார். அவரே ஒரு லட்சம் படைவீரர்களைத் திரட்டிக் கொண்டு சின்ன ஆசியா வழியாக ரோட்சுக்கு எதிராக இருந்த மார்மெரிஸ் விரிகுடாவுக்கு (Marmerice Bay) வந்து தீவை அடைந்தார். அங்கிருந்த படைவீரர்களும் அத் தீவுவாசிகளும் தம் தலைவர் லிஸில் ஆதம் (Listle Adam) என்பவரின் தலைமையில் தீரத்துடன் எதிர்த்துப் போரிட்டனர். ஒன்பது மாத முற்றுகைக்குப் பிறகுதான் அது அடிபணிந்தது. பீரங்கிப் பிரயோகத்தைத் தவிர்ப்பதற்காக, இப்பெரும் அரணை நெருங்குவதற்கு 'மறைவுக் குழி அகழ்களை வெட்டி முன்னேறுதல்' என்னும் முறை முதன் முதலாகக் கையாளப்பட்டது. பதினாயிரம் வீரர்களை சுலைமான் இழந்தார். அதே எண்ணிக்கையுள்ளவர்கள் நோய்க்கு இரையாயினர். அடிபணிவதற்கான நிபந்தனைகளின்படி, சரணடைந்ததற்குப் பிறகு எஞ்சி நின்ற படைவீரர்கள் அவரவருக்குரிய சொத்துக்களுடன் தத்தம் கப்பல்களிலேயே கிரீட் தீவுக்கு அனுப்பப்பட வேண்டும். ரோட்ஸ் தீவின் வீரர்கள் தோற்கடிக்கப்பட்டனர் என்றாலும், அவர்களுடைய தீரத்தை மெச்சிய சுல்தான் அவர்களைப் பெருமிதத்துடனேயே நடத்தினர். அந்த மாபெரும் வீரர்கள் அப்பொழுது பெரும்பாலும் பாலைவனத் தீவாக இருந்த மால்டா (Malta) என்னும் தீவில் குடியேறினர். அவர்கள் அதைத் தம் தலைநகராய்க் கொண்டு, அதை வலுப்படுத்திக் கொண்டிருந்தனர். மத்திய தரைக் கடலில் அது மையமான ஓரிடத்தில் அமைந்திருந்ததனால், அது பெரும் முக்கியத்துவம் பெறத் தொடங்கிற்று. சுலைமான் தமது நெடுங்கால ஆட்சியின் இறுதி ஆண்டில் அந்த வீரர்களை மால்டாத்தீவிலிருந்து வெளியேற்றி, வட ஆப்பிரிக்காவில் உத்மானியப் பேரரசை விரிவுபடுத்த நினைத்தார். ஆகவே, அதனைக் கைப்பற்றுவதற்காகப் பியாலே ரெயிஸ் (Piale Reis) என்பவரின் தலைமையில் ஒரு படையையும் கப்பற்படை ஒன்றையும் சுல்தான் அனுப்பி வைத்தார். இந்தத் தடவையும் அந்த வீரர்கள் லாவலெட்டி (Lavalletti) என்பவரின் தலைமையில் அதி வீரத்துடன் சுல்தானின் படையை எதிர்த்து நின்றனர். அரணைத் தாக்கிக் கொண்டிருக்கையில் துருக்கியர்கள் பல தடவையும் முறியடிக்கப்பட்டனர். இறுதியில் அப் படைகள் பெருஞ் சேதத்துடன் பின்வாங்க நேரிட்டது.

ரோட்ஸ் தீவை வென்றதற்குப் பிறகு இரண்டாண்டு காலத்தை சுல்தான் தமது இராச்சியத்தை ஒழுங்குபடுத்துவதில் கழித்தார். போர் புரியாது வாளாவிருப்பதை ஜனிஸ்ஸரீப் படைவீரர்கள் எதிர்த்தனர். தம் கேந்திரங்களில் வாளாவிருப்பதை விரும்பாத அவ் வீரர்கள் போர் புரிவதற்கும் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களில் தமக்குரிய பங்கைப் பெறுவதற்கும் துடிதுடித்துக் கொண்டிருந்தனர். ஆகவே, அவர்கள் கிளர்ச்சி செய்து, பிரதமர் இப்ராஹீம் போன்ற உயர் அதிகாரிகளின் இல்லங்களை யெல்லாம் தாக்கினர். கிளர்ச்சியை சுல்தான் ஒடுக்கினர். தம் கையினாலேயே மூன்று கிளர்ச்சியாளர்களையும் அவர் வீழ்த்தினர்; அவர்களுடைய தலைவர்களும் கொல்லப் பட்டனர். இருப்பினும், பரிசுகளை வழங்கி அவர்களையெல்லாம் தணிக்க விரும்பிய சுல்தான் அவர்களது தூண்டுதலின் பேரில் மீண்டும் ஒரு போர் தொடுத்தார். பேரவா மிக்க திட்டங்களை வகுத்திருந்த பேரரசர் ஐந்தாம் சார்லஸின் கவனத்தை ஃபிரெஞ்சு நாட்டினின்றும் திருப்புவதற்காக, அந்நாட்டு மன்னரான முதலாம் ஃபிரான்ஸிஸ் ஹங்கேரியின் மீது படையெடுக்குமாறு சுலைமானைத் தூண்டினர். துருக்கியர்கள் ஐரோப்பிய அரசியலின் சிக்கலில் முதன் முதலாக நுழைவதாக இதனைக் கொள்ளலாம். அப்பொழுது ஹங்கேரியும் பொஹீமியாவும் (Bohimia) இரண்டாம் லூயீயின் தலைமையில் இணைக்கப்பட்டிருந்தன. அவ்வரசரோ இளவயதினராகவும் அனுபவமற்றவராகவும் இருந்தார்.

1526-ல் இந்தியாவில் ஒரு பேரரசு நிர்மாணம்பெறுதற்காகப் பெரும் மோதல் ஏற்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் சுலைமானும் அவருடைய பிரதம அமைச்சரான இப்ராஹீமும் ஒரு லட்சம் ஆட்களையும் முந்நூறு பீரங்கிகளையும் சேகரித்துக் கொண்டு, பெல்கிரேட் நகருக்கு அணிவகுத்துச் சென்று, அங்கிருந்து ஹங்கேரியைத் தாக்கினர். இஸ்தம்பூலை விட்டுப் புறப்பட்டு ஐந்து மாதங்களுக்குப் பிறகு ஆகஸ்ட் 27ஆம் நாள் அன்று அவர்கள் ஹங்கேரியர்களை மொஹாக்ஸ் (Mohacz) என்ற இடத்தில் சந்தித்தனர். இது பெல்கிரேடுக்கும் பூடாவுக்கும் நடுவில் உள்ளது. போரின் விதி மிக விரைவிலேயே தீர்மானிக்கப்பட்டது. உத்மானியப் படைகள் அதிக ஆட் பலத்தையும் பீரங்கிப் படைப் பலத்தையும் பெற்றிருந்தமையால், ஹங்கேரியர்கள் மிகக் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டனர். அவர்களுடைய அரசரும் எட்டு மேற்றிராணியர்களும் இருபத்துநாலாயிரம் போர் வீரர்களும் இறந்துவிட்டனர். இதுவே ஹங்கேரியின் விதியைத் தீர்த்துவிட்டது. விரைவில் பூடா நகரமும் அவருக்கு அடிபணிந்

தது. அங்கிருந்த ஹங்கேரிய பிரபுக்களும் சரணடைந்தனர். சுலைமானின் உத்தரவின் பேரில், ஹங்கேரிய பிரமுகர்களுள் ஒருவரான கௌன்ட் ஸபோலியா (Count Zapolya) ஹங்கேரியின் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்குச் சற்றுப் பிறகு சுலைமான் பூடாவிலிருந்து டான்யூபுக்குப் பின்வாங்கிக் கொண்டு பிறகு தம் தலைநகருக்குத் திரும்பிவிட்டார். ஹங்கேரியின் ஒரு பகுதியில் சிறிது காலம் அவர் தங்கியிருந்ததன் விளைவாக எண்ணற்ற மக்கள் படுகொலைக்கு இரையாயினர்; இரண்டு லட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று கணக்கிடப்பட்டது. ஏராளமான கொள்ளைப் பொருள்களைத் திரட்டிக் கொண்டு உத்மானியப் படைவீரர்கள் வீடு திரும்பினர். ஹங்கேரியின் எல்லைகளில் இருந்த அரண்களில் துருக்கிப் படைகள் நிறுத்தி வைக்கப்பட்டன.

கௌன்ட் ஸபோலியா என்பவர் துருக்கியர்களின் வற்புறுத்தலின் பேரில் ஹங்கேரியின் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதனால், அந்நாட்டில் உள்நாட்டுப் போர் மூண்டது. பேரரசர் ஐந்தாம் சார்லஸின் சகோதரர் ஆர்ச்டியூக் ஃபெர்டினண்ட் (Archduke Ferdinand) என்பவர் ஹங்கேரியின் சிம்மாசனத்திற்கு உரிமை பாராட்டிக்கொண்டார். அதே சமயத்தில் ஸபோலியாவும் அவ்வித உரிமையைப் பாராட்டினார். மேற்கு ஹங்கேரியின் பிரபுக்கள் சட்டமன்றத்தில்கூடி ஃபெர்டினண்டை அரசராகத் தேர்ந்தெடுத்தனர். அவர் தம் உரிமையை வலியுறுத்துவதற்காகப் போட்டியாளர்மீது போரும் தொடங்கினர். ஆஸ்ட்ரிய மக்கள் அவரை ஆதரித்தனர். அவர் தம் போட்டியாளரை முறியடித்து நாட்டைவிட்டே விரட்டியடித்தார். ஸபோலியா போலந்து நாட்டிற்குச் சென்று, பிறகு ஹங்கேரியின்மீது தமக்கு இருக்கும் உரிமையை வற்புறுத்த சுல்தானின் உதவியை நாடினர். இதைக் கேள்வியுற்ற ஃபெர்டினண்ட் சுல்தானிடம் தூதுக்குழு ஒன்றை அனுப்பி, தமது உரிமையை ஆதரிக்குமாறு வேண்டிக்கொண்டதோடு, சுல்தானின் கைவசமாகி இருக்கும் பெல்கிரேடையும் ஹங்கேரியிலுள்ள இதர நகரங்களையும் தமக்கே கொடுத்துவிடுமாறு மூடத்தனமாக ஒரு கோரிக்கையையும் விடுத்தார். இரண்டு போட்டியாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த சுல்தானுடைய வசீரான இப்ராஹீம் என்பவர் அகங்காரத்துடன் நடந்துகொண்டார். 'சுல்தானுடைய குதிரை குளம்படி வைத்த இடங்களெல்லாம் சுல்தானுக்குரியனவாகும். நாம் ஹங்கேரியின் அரசர் லூயீயைக் கொன்றுவிட்டோம். அவருடைய இராச்சியம் நமதாகியுள்ளது; அல்லது நாம் விரும்புகிறவர்களுக்கு அதனைக் கொடுத்து

விடுவோம். மகுடம் ஒருவனை மன்னனுக்குவதில்லை. வாள்தான் ஒருவனை அரசனுக்குகின்றது; வாளேதான் மக்களை அடிபணிய வைக்கின்றது. வாளால் வெல்லப்பட்டது வாளால் மட்டுமே காக்கப்படும்' என்று இப்ராஹீம் கூறினார்.

சுல்தானின் தீர்ப்பு ஃபெர்டினண்டுக்கு எதிராக இருந்தது. அத் தீர்ப்பை நிறைவேற்றும் வகையில் சுல்தான் 1529-ல் இரண்டரை லட்சம் ஆட்களையும் முந்நூறு பீரங்கிகளையும் திரட்டிக்கொண்டு ஹங்கேரியின்மீது படையெடுத்து, பூடா நகரை முற்றுகையிட்டார். துரோகிகளின் செயலால் நகரம் சரணடைந்தது. விதிக்கப்பட்ட நிபந்தனையின்படி, குடி மக்களின் உயிரும் சொத்தும் அழிக்கப்படாமல் அப்படியே விட்டு விடப்பட்டன. கொள்ளைப்பொருளைப் பெறமுடியாத ஜனிஸ்ஸரீப் படையினர் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆகவே, கோபவெறியில் அவர்கள் கோட்டையி லிருந்து வெளியே வந்த குடிமக்களையெல்லாம் வீழ்த்தினர்; விற்பனைக்கெனக் கைம்பெண்களையும் அவர்கள் கொண்டு போயினர். ஹங்கேரியின் அப்பகுதியின் அரசராக ஸபோலியா நியமிக்கப்பெற்றார். பிறகு சுலைமான் வியன்னைவை (Vienna) நோக்கி முன்னேறினர். இரண்டு லட்சம் படைவீரர்களுடன் அவர் செப்டம்பர், 1529-ல் அவ்விடத்தை வந்தடைந்தார். வியன்னைவை முதல் தடவையாக அவர்கள் முற்றுகையிட்டனர்.

ஜெர்மன் பேரரசரான ஐந்தாம் சார்லஸ் என்பவர் அவ் வேளையில் ஐரோப்பாவில் மிகவும் ஆற்றல் மிக்க மாமன்னராக விளங்கிக்கொண்டிருந்தார். [ஸ்பானிய நாடு, நெதர்லாந்து, நேப்பில்ஸ், ஸிஸிலி மற்றும் ஜெர்மனியில் அவருக்கு இருந்த உடைமைகள் ஆகியவற்றையெல்லாம் அவர் பெற்றிருந்தார்.] சுலைமானின் சமகால அரசராக அவர் பல ஆண்டுக் காலமாக அவருடைய மாபெரும் அரசை ஆட்சிபுரிந்து கொண்டிருந் தார்; ஆப்பிரிக்காவில் தூனிஸ்ஸையும் அமெரிக்காவில் மெக்ஸிகோ மற்றும் பெரு (Peru) வையும் அவர் கைப்பற்றி வைத்திருந்தார். ஃபிரான்ஸின் முதலாம் ஃபிரான்ஸிஸால் தூண்டுவிக்கப்பட்ட சுலைமான் ஆஸ்ட்ரியாவின்மீது படை யெடுத்துக்கொண்டிருக்கையில், சார்லஸ் இத்தாலியில் ஃபிரான் ஸுக்கு எதிராக மிகத் தீவிரமான போரில் ஈடுபட்டிருந்தார். ஆகவே, இவரால் உத்மானியர்களுக்கு எதிராகப் படைகளை அனுப்ப முடியவில்லை. வியன்னை நகரம் ஒரு துணைப் பாதுகாப்புப் படையின்றித் தனியாகவே சுல்தானை எதிர்த்து நின்றது. தாக்குதல்களும் அன்றாடம் நடைபெற்றுக்கொண்டேயிருந்தன.

அக்டோபர், 1529-ல் பீரங்கிகள் சுவர்களைத் துளைத்தன. காலாட்படை பெரும்பாலும் வெற்றி யடைந்துவிட்டது. ஆனலும், இருதரப்பினருக்கும் அதிகக் கஷ்டநஷ்டம் ஏற்பட்டதனல் அக்டோபர் பதினைந்தாம் நாள் அன்று உத்மானியர்கள் பின் வாங்கிக்கொண்டனர். அப் படைகள் பின்வாங்கியமை வியன்ன வாசிகளுக்கு ஒரு தெய்வச் செயலாகவே தென்பட்டது. ஏனெனில், அவர்கள் சரணடைவதற்கு ஆயத்தமாகிக் கொண் டிருந்தனர். உண்மையில் உத்மானியர்களின் படை பின்வாங் கியதற்குக் காரணம் ஜனிஸ்ஸரீப் படைகளின் முணுமுணுப்பே யாகும். பனிக்காலம் ஆரம்பமாவதற்கு முன்பே அவர்கள் எதிர்னேவுக்கும் இஸ்தம்பூலுக்கும் திரும்பிவந்துவிட விரும்பினர். சுல்தானும் இஸ்தம்பூலுக்குத் திரும்பினர். அவருடைய படை, இழப்பு ஏதுமின்றி, தாய்நாடு வந்து சேர்ந்தது. முதல் வியன்ன முற்றுகை உண்மையில் தோல்வியில் முடிந்தது என்றுதான் கூறவேண்டும். இதனை மறைப்பதற்காக சுல்தான் தாம் வெற்றி பெற்றதாகக் கூறிக்கொண்டு, வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டார். இருப்பினும், அவர் ஆஸ்ட்ரியர்களை எதிர்த்துச் சென்று அந் நாட்டை வியன்ன நகரத்துச் சுவர்கள் வரையிலும் சூறையாடி, அவர்களால் எதிர்க்கப்படாமல் வீடு திரும்பினர் என்று கூறுவதில் மிகை இருக்க முடியாது.

மூன்று ஆண்டுகட்குப் பிறகு, 1532-ல் சுலைமான் மீண்டும் ஒரு பெரும் சேனையுடன் ஹங்கேரியின்மீது படையெடுத்தார். வியன்னவை எவ்விதத்தாலேனும் தாக்கிச் சார்லஸ் பேரரசரின் படையை முரியடிக்கவேண்டும் என்பதே அவருடைய உறுதி யான நோக்கம். இந்தத் தடவை சார்லஸே படைக்குத் தலைமை தாங்கினர். ஆற்றல் மிக்க இரண்டு அரசர்களுக் கிடையே மோதல் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனல், குன்ஸ் (Guns) என்ற அரண் மூன்றுவார காலம்வரை சுல்தானை எதிர்த்து நின்றதனல், சுல்தானின் படை வியன்ன நோக்கி முன்னேறுவது தாமதமாயிற்று. குன்ஸ் கோட்டை கைப்பற்றப்பட்டதற்குப் பிறகு, சுலைமான் வியன்ன நோக்கி மீண்டும் முன்னேறவில்லை. அவருடைய சேனை ஸ்டைரியாவைத் தாக்கிச் சூறையாடியது. அத்துடன், சுல்தான் அதைத் தம் நாட்டிற்குக் கொண்டுவந்துவிட்டார். சுலைமான் வியன்னவைக் கைப்பற்ற முடியாததற்குக் காரணம், அவருடைய போக்கு வரத்துக் கருவிகள் மிகப் பரவலாக இருந்ததனல், அவருடைய படைகளால் சரிவரச் செயல்பட முடியவில்லை. பால்கன் பகுதி யிலும் ஆஸ்ட்ரியாவிலும் இடையருமல் மழை பெய்துகொண் டிருந்ததனல், சுமையான பீரங்கிகளுடன் படை வீரர்களால்

எளிதாக நடமாட முடியவில்லை. ஆகவே, சுல்தானின் சேனை வியன்னுவைக் கைப்பற்றுமலேயே திரும்பவேண்டியதாயிற்று. சுல்தான் தலைநகருக்குத் திரும்பிவிட்டாராயினும், அமைதி ஏற்படவில்லை. ஃபெர்டினண்டுக்கும் ஸபோலியாவுக்கும் இடையே விட்டு விட்டு மோதல் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. 1538-ல் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அதன்படி, ஸபோலியா 'கிழக்கு ஹங்கேரி ட்ரான்ஸில்வேனியா ஆகியவற்றின் அரசர்' என்று பட்டப்பெயரை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். பெர்டினண்ட் 'மேற்குப் பகுதியின் அரசர்' என்று அங்கீகரிக்கப் பட்டார். ஆஸ்ட்ரியாவின் ஆதரவைப் பெற்றிருந்த ஹங்கேரியர்களோ அடிபணியவைக்கத் துருக்கியர்கள் முயன்றனர் என்றாலும், வியன்னுவைக் கைப்பற்ற முடியவில்லையாதலால், அவர்களால் அம் முயற்சியில் வெற்றிகாண முடியவில்லை. இது இங்ஙனம் இருக்க, அவர்கள் மற்றத் திசைகளிலும் தங்கள் கவனத்தைத் திருப்பினர்.

சுல்தான் சுலைமான் தமது ஆறுவது படையெடுப்பை 1534ல் பாரசீகத்தின்மீது நடத்தினர். பாரசீகத்து அரசரான ஷா இஸ்மாயீல் இறந்து அவருடைய சிம்மாசனத்தில் ஷா தஹ்மாஸ்ப் என்ற பலவீனமிக்க ஒருவர் அரசராக வீற்றிருந்தார். சுலைமான் முன் எச்சரிக்கையாக காலிப்போலியிலிருந்த பாரசீகக் கைதிகளைக் கொல்லுமாறு உத்தரவிட்டு விட்டார். முன்கூட்டியே ஒருசில மாதங்களுக்கு முன்பு அவர் இப்ராஹீமை ஒரு பெரும் படையுடன் அனுப்பிவிட்டார். இப்ராஹீம் அலெப்போவிலிருந்து பாக்தாதுக்குச் செல்லாமல், தப்ரீஸுக்குச் செல்லும் நேர்முக வழியைக் கடந்து சென்றார். பாரசீகர்களின் எதிர்ப்பு இல்லாமலேயே இப்ராஹீம் தப்ரீஸைக் கைப்பற்றிக் கொண்டார். சற்றுப் பிறகு சுலைமானும் அங்கு வந்து சேர்ந்தார். அவர்கள் தங்கள் படைகளைத் திரட்டிக் கொண்டு மிகக் கடினமான பாதை வழியாக மோஸல் மற்றும் பாக்தாத் ஆகிய நகர்களை நோக்கி முன்னேறினர். இறுதியில் அப் படைகள் பாக்தாதை அடைந்தன. அங்கிருந்தவர்களின் துரோகச் செயலால் அந் நகரம் சரணடைந்தது. மோஸல், பாக்தாத் ஆகிய இரண்டு பெரிய பாரசீக மாநிலங்களும் கைப்பற்றப்பட்டு உத்மானியப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. இதைத் தொடர்ந்து 1548, 1553, 1554 ஆகிய ஆண்டுகளில் மீண்டும் பாரசீகத்தின் மீது படையெடுப்புகள் நிகழ்த்தப்பெற்றன. உத்மானியர்களைப் பொறுத்தவரை, பாரசீகர்களின் திடீர்த் தாக்குதல்களிலிருந்து வந்த தொல்லைகளைவிட, தட்பவெப்ப நிலையிலிருந்தும் பொருள்கள் சரிவர வந்து சேராததனாலும் ஏற்பட்ட தொல்லைகளே

அதிகமாக இருந்தன. ஆனால், இந்தத் தடைவையும் அவர்களுக்கிடையே நேர்முக மோதல் ஏற்படவில்லை.

சுலைமானின் நீண்டநாள் ஆட்சியில் அவருடைய கப்பற் படையின் சாதனையும் குறிப்பிடத் தக்கதாக இருந்தது. ஸ்பானிய நாட்டுடனும் வெனிஸுடனும் நடைபெற்ற கடற் போர்களிலும் அது மிகக் கடுமையாகப் போரிட்டது. பலத்தில் துருக்கியர்களின் கப்பற்படையும் ஸ்பானிய நாட்டினரின் கப்பற் படையும் சரிசமமாக இருந்தபோதிலும், வெனிஸின் கடற்பலமும் போப்பின் கடற்படைப் பலமும் ஸ்பானிய நாட்டுப் படையுடன் ஒன்றுக இணைந்ததன் விளைவாக, அப் படைகளின் பலமும் எண்ணிக்கையும் அதிகமாகிவிட்டிருந்தன. இருப்பினும், அப் படைகளுக்கெதிராக நிகழ்ந்த இரு கடற் போர்களிலும் துருக்கியர்களே பெரு வெற்றி பெற்றனர். பொதுவாக, சுலைமானின் ஆட்சிக் காலம் முழுவதிலும் மத்தியதரைக் கடலில் துருக்கியர்களின் படைப்பலம் ஓங்கியே இருந்தது. இப் பலத்தைக் கொண்டு சுலைமானால் அல்ஜியர்ஸ், ஓரான், திரிப்போலி ஆகிய மாநிலங்களையும் ஏஜியன் கடலிலிருந்த பல்வேறு தீவுகளையும் தம் பேரரசுடன் சேர்த்துக் கொள்ளவும் முடிந்தது.

சுலைமானின் ஆட்சி தொடங்கியபோது வட ஆப்பிரிக்காவிலிருந்த முஸ்லிம் நாடுகள், திறமையற்றவர்களும் ஒழுக்கங் கெட்டவர்களுமான முஸ்லிம் அரசர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. அடுத்து இருந்த அராபிய நாடுகளின் மீது அவர்கள் எப் பிடிப்பையும் பெற்றிருக்கவில்லை. கடற்கரையிலிருந்த நகரங்களைக் கடற் கொள்ளைக்காரர்கள் தாக்கிக் கொண்டே இருந்தனர். அக் கொள்ளைக்காரர்கள் பெரும்பாலும் இந் நாடுகளின் கொடிகளையே தம் கப்பல்களில் பறக்கவிட்டுக் கொண்டு நடமாடினர்; சிற்சில வேளைகளில் தம்முடைய சொந்தக் கொடிகளையும் பறக்கவிட்டுக் கொண்டனர். மத்தியதரைக் கடல் வழியாக நடைபெற்று வந்த வியாபார மார்க்கத்தின்மீது அவர்கள் பாய்ந்து பெரும் பொருள்களையும் கொள்ளையடித்து, கைப்பற்றியவர்களை அடிமைகளாக விற்றும் வந்தனர். இந்தக் கொள்ளைக்காரர்கள் ஒரு படையாகவே தம்மை அமைத்துக் கொண்டிருந்தனர். இக் கொள்ளைக்காரர்களின் தலைவர்களாக இருந்தவர்கள் கப்பல்களை ஓட்டுவதிலும் படைகளைச் சமாளிப்பதிலும் பெரும் அனுபவசாலிகளாக விளங்கினர். ஸ்பெய்ன், இத்தாலி, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளின் கடற்கரைகளிலும் சிற்சில சமயங்களில் இங்கிலாந்து, அயர்லாந்து (Ireland) நாடுகளின் கரையோரங்களிலும் அவர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர்.

ஒரு கப்பற்படையை உருவாக்குவதிலும், அதன் கப்பல் களையும் பரப்பளவையும் அதிகரிப்பதிலும் முன்பு சலீம் மிக்க அக்கறை செலுத்தி வந்தார். சுலைமான் அவர் வழியே நடந்து, கப்பற்படையை வலுப்படுத்துவதில் பெரும் அக்கறை காட்டினார். ஆனாலும், தீரத்திலும் திறத்திலும் அவருடைய கப்பற்படைத் தலைவர்கள் கொள்ளைப் படையினருக்குச் சமமாக இருக்கவில்லை. இக்குறைபாட்டினை உணர்ந்த சுல்தான் அக் கடற்கொள்ளைக் காரர்களுள் மிக்க ஆற்றலும் துணிச்சலும் வாய்ந்தவர்களை அழைத்துத் தம் படையில் சேர்ந்து கொள்ளுமாறு வேண்டினார். அவர்களுக்கு அவர் தம் கப்பற்படையில் உயர் பதவிகளையும் அளித்தார்; ஒரு சிலரைப் படைத் தலைவர்களாகவும் தளபதி களாகவும் உயர்த்தினார். அவர்களுள் முதல்வரும் மிகவும் சிறப்புப் பெற்றவருமானவர் கைருத்தீன் என்பவராவார். வரலாற்றில் இவர் பார்பரோஸா (Barbarossa) என்ற பெயருடன் சிறப்புப் பெற்று விளங்குகின்றார். இளம்பிராயந் தொட்டே கப்பல்களைக் கொள்ளையடிக்கும் தொழிலை மேற்கொண்ட இவர் ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு, மத்தியதரைக் கடற்பகுதியையே நடுங்க வைத்துக் கொண்டிருந்தார். அல்ஜி யர்ஸைத் தாக்கி அவர் தம்மை அந் நகருக்கும் சுற்றுப்புறப் பகுதிகளுக்கும் தலைவராக்கிக் கொண்டார். ஆனால், சுதந்திர மாக அங்கே ஆட்சிபுரிய இவரால் இயலவில்லை யாதலால், துருக்கி சுல்தானின் இறைமையை இவர் ஏற்றுக் கொண்டார். ஸ்பெய்னில் அந்தலூசியாவிலிருந்த எழுபதினாயிரம் மூர் அகதி களை இவர் தமது கப்பல்களில் ஏற்றிக்கொண்டு சென்று, அல்ஜி யர்ஸில் குடியேற்றினார். பின்னாளில் சுலைமான் இவரைத் தூனிஸ்ஸைக் கைப்பற்றுவதற்காக நியமித்தார். தூனிஸ் அப்பொழுது மூலே ஹஸன் (Muley Hasan) என்பவரின் ஆட்சிக் குட்பட்டிருந்தது. இவர் தமது சகோதரர்கள் பலரைக் கொன் றவர்; அழகான நானூறு இளைஞர்களை அந்தப்புரத்திற்காகத் திரட்டிக் கொண்டிருந்தார். இந்த மானங்கெட்ட செயலுக்கு முற்றுப்புள்ளியிடும் பாவனையில் பார்பரோஸா தூனிஸ் நகரைத் தாக்கி, அதைக் கைப்பற்றியதோடு, அந்த சுல்தானையும் நகரைவிட்டு ஓடச் செய்தார். ஆனாலும், அந் நகர் அவரிடத் தில் வெகு நாள்கள் வரையில் இருக்கவில்லை. மூலே ஹஸன் பேரரசர் ஐந்தாம் சார்லஸின் உதவியை நாடினார்.

அந்தப் பேரரசர் ஐந்நூறு கப்பல்களைக் கொண்ட கப்பற் படை ஒன்றையும் முப்பதினாயிரம் படைவீரர்களையும் திரட்டிக் கொண்டு தூனிஸ் நகரை அணுகி, பார்பரோஸாவை முரி யடித்து, அவருடைய கப்பல்களையும் கைப்பற்றிக்கொண்டு,

நாட்டுக்குள் ஓடும்படி செய்தார். அப் பேரரசர் தூனிஸ்ஸின் சுல்தானுடைய அழைப்புக்கிணங்கி அங்கு வந்தார் எனினும், அந் நகரைச் சூறையாடும்படி தம் படைவீரர்களுக்கு அவர் உத்தரவு பிறப்பித்தார். அந் நாட்டு மக்களின்மீது அக்கிரமமான கொடுமைகள் இழைக்கப்பெற்றன. முப்பதினாயிரம் பாமர மக்கள் கொல்லப்பட்டனர்; பத்தாயிரம் பேர் அடிமைகளாக விற்கப்பட்டனர். மசூதிகளும் முக்கிய கட்டடங்களும் எரிக்கப் பட்டன. இவைபோன்ற கொடுமைகளே வெற்றி பெற்ற எந்த முஸ்லிம் படையும் புரிந்ததில்லை. பார்பரோஸாவினிடத்திருந்தும் உத்மானிய ஆட்சியினின்றும் விடுபட்ட தூனிஸ் மூலே ஹஸனிடம் ஒப்படைக்கப்பட்டது. மீண்டும் 1574-ல் தான் அது உத்மானியர் வசமாயிற்று.

தூனிஸ் நகரை பார்பரோஸா மிகச் சிறப்பாகப் பாதுகாத்தார். ஆனாலும், அவருடைய படைப்பலம் போதுமானதாக இருக்கவில்லை. தவிர, பாரசீகத்துடன் சுலைமான் போரிட்டுக் கொண்டிருந்ததனால் படை உதவியை அவரால் அனுப்பவும் முடியவில்லை. இதற்குச் சற்றுப் பிறகு உத்மானியர்களுக்கும் ஸ்பெய்னுக்கும் இடையே போர் மூண்டபோது சுல்தான் பார்பரோஸாவை இஸ்தம்பூலுக்கு வரவழைத்துத் தம் படையின் பெருந்தலைவராக்கினார். 1538-ல் ஸ்பெய்ன், வெனிஸ், போப் ஆகியவர்களின் கப்பற்படைகளை பார்பரோஸா பிரவீஸா (Pravesa) கடற் போரில் முறியடித்தார். மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு நெல்ஸன் (Nelson) கடைப்பிடித்த போர் முறையை பார்பரோஸா அப்பொழுதே முதன் முதலாகக் கையாண்டு எதிரிகளை மிகக் கடுமையாகத் தோற்கடித்தார். எதிரிக் கப்பல்கள் ஒரு சில கைப்பற்றப்பட்டன. மற்றவை இரவோடு இரவாக ஓட்டம் பிடித்தன. பின்னாளில் பார்பரோஸா சுலைமானுடன் கார்ஃபு (Gorfu) என்ற தீவிற்குச் சென்று தாக்குதலை நடத்தினார். ஆனால், அத் தீவை வெனிஸிய நாட்டினர் மிகத் தீவிரமாகப் பாதுகாத்ததனால் சுல்தான் பின் வாங்கும்படி நேரிட்டது.

கார்ஃபுவிலும் வியன்னாவுக்கு எதிரிலும் ஏற்பட்ட தோல்விகளே சுல்தான் சுலைமான் அவருடைய பல்வேறு படையெடுப்புகளின்போது அடைந்த தோல்விகளாகும். இருப்பினும், பார்பரோஸா வெனிஸிய மக்களுடன் நடத்திய போரில் ஏஜியன் கடலில் அவர்கள் பெற்றிருந்த கிரீட்டைத் தவிர மற்ற எல்லாத் தீவுகளையும் கைப்பற்றிக்கொண்டார்; மோரியாவிலிருந்த ஒரு சில கோட்டைகளையும் கைப்பற்றிக்கொண்டார். இவையெல்

லாம் அப் பெருந் தலைவருடைய இறுதிச் சாதனைகளாகும். 1546-ல் பார்பரோஸா இறந்துவிட்டார். அவருக்குப் பிறகு மற்றக் கப்பற் கொள்ளைக்காரர்கள் கடற்படையில் பல உயர் பதவிகளை வகித்தனர். அவர்களுள் மிகவும் சிறப்புப்பெற்றவர்கள் தொர்கூத் (Torghut) மற்றும் பியாலே (Piale) என்பவர்களாவர். அவ்விருவரும் துருக்கி குடிமக்களாவர்; கடற்கொள்ளையை ஒரு தொழிலாகவே அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். தம் துணிகரச் செயல்களிலும் ஆற்றலிலும் பிறருக்கு அச்சமூட்டுவதிலும் தொர்கூத் பார்பரோஸாவைப் போன்றே இருந்தார். சுல்தானின் நண்பர்கள் என்றும் பொருட்படுத்தாது, அவர்களுடைய கப்பல்களையும் அவர் கைப்பற்றிக்கொண்டார். வெனிஸியக் கப்பல்களைச் சேதப்படுத்தியதற்காக இஸ்தம்பூலுக்கு அவர் அழைக்கப்பட்டபோது அங்கு அவருக்கு என்ன நேரிடும் என்று உணர்ந்து அங்கு அவர் போகவில்லை. அவர் தம் கொள்ளைப் படையினரைத் திரட்டிக்கொண்டு மொராக்கோவிற்கு ஓடி அப் பகுதியைத் தமது கடற் கொள்ளைகளுக்குக் கேந்திரமாகக்கொண்டு கொள்ளையடித்து வந்தார். பின்னாளில் இத்தகு துணிச்சல் மிக்கவர் தேவைப்படுவார் என்பதை உணர்ந்து சுல்தான் அவரை மீண்டும் தம் கொடியின்கீழ்ப் பணியாற்ற அழைத்தார். திரிபோலியைக் கைப்பற்றிவிட்டால் அவரையே அதன் ஆளுநராக்குவதாகவும் சுல்தான் வாக்குறுதியளித்தார். அவ்வேளையில் திரிபோலி மால்டாவின் செயின்ட் ஜான் பெருவீரர்கள் என்பவர்களின் கையிலிருந்தது. தொர்கூத் அதைத் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டு, துருக்கிப் பேரரசுடன் இணைத்துக்கொண்டார். இறுதியில் அவரே திரிபோலியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். 1565-ல் மால்டாவைத் தாக்க ஒரு கப்பற்படையைத் திரட்டிக்கொண்டு அவர் படையெடுத்தார். ஆனால், அப் படையெடுப்பின்போது அவர் உயிர் இழந்தார்.

அடுத்தாற்போல் பியாலே என்பவரும் உத்மானியர்களின் கீழ்க் கப்பற்படைத் தலைவராகப் பணியாற்றினார். திரிபோலியை மீட்பிப்பதற்காகத் திரட்டப்பட்ட ஸ்பெயின், வெனிஸ், போப் ஆகியவர்களின் கப்பற்படைகளைப் பியாலே முறியடித்தார். பிறகு அவர் ஆப்பிரிக்காவின் கரையிலிருந்த ஓரானைத் தாக்கித் துருக்கிப் பேரரசுடன் அதனை இணைத்துக்கொண்டார். 1565-ல் மால்டாவுக் கெதிராக சுலைமான் நடத்திய அவரது ஆட்சிக் காலக் கடைசித் தாக்குதல் பியாலேயின் தலைமையில்தான் நிகழ்வுற்றது.

சுலைமானின் கடற்படை மத்தியதரைக் கடற்பகுதியில் மட்டுமே சுறுசுறுப்பாக இருந்தது என்று கூறுவதற்கில்லை. பீரிபாஷா என்பவரின் தலைமையில் ஒரு கப்பற்படை திரட்டப் பட்டு, சுயெஸுக்கு (Suez) அனுப்பி வைக்கப்பட்டது. அதனுடைய சாதனைகளின் விளைவாகத் துருக்கி செங்கடலின் மீது ஆதிக்கம் பெற முடிந்தது. ஏடனும் ஏமனும் கைப்பற்றிக் கொள்ளப்பட்டன. பிறகு பாரசீகக் குடாவிலும் அது செயலாற்ற முற்பட்டது. அங்கே போர்ச்சுகீசியர்களுடன் மோதல் ஏற் பட்டபோது உத்மானியக் கப்பல்கள் விரட்டியோட்டப்பட்டன.

மால்டாவில் சுல்தான் அடைந்த தோல்வி அவர் உள்ளத் துக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டே இருந்தது. தம்முடைய ஆட்சியின் முதல் ஆண்டிலேயே தாம் பெல்கிரேடைக் கைப் பற்றிப் பெற்ற வெற்றியைப் போன்ற ஒன்றைத் தமது ஆட்சி யின் இறுதி நாளிலும் மறுபடி பெறவேண்டும் என்ற அவா அவரைத் தூண்டிற்று. ஆகவே, வயது முதிர்ந்துவிட்டதென்ரு லும், உடல்நிலை சரியில்லை என்ற நிலையிலும், அவரே படையைத் திரட்டிக்கொண்டு 1566-ல் ஹங்கேரியின்மீது படையெடுத்தார். அவரால் குதிரைமீது ஏறிச் சவாரி செய்யவும் முடியவில்லை. படைக்கு முன்பு அவர் பல்லக்கில் எடுத்துச் செல்லப்பட்டார். ஸிகெத் (Szigeth) இர்லாவு (Erlau) ஆகிய இடங்களை எப்படி யாவது பிடித்து விடவேண்டுமென்பது அவருடைய தனிப்பட்ட அவா. படையெடுப்பைப்பற்றிய எல்லா விவரங்களையும் அவர் மிகவும் கவனத்துடன் அறிந்துவந்தார். ஆனல், ஸிகெத்தின் முற்றுகை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் சுல்தான் வலிப்பு நோயால் திடீரென்று இறந்துவிட்டார். அவர் இறந்துவிட்டார் என்ற உண்மை படையினரிடத்திருந்து பல நாள்கள் வரையிலும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவருடைய பெயரிலேயே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வந்தன. சலீம் ஆசியாவிலிருந்து பெல்கிரேட் நகரை வந்து அடைந்தபோதுதான் சுல்தானின் மரணத்தைப்பற்றிய செய்தி வெளியாயிற்று.

சுலைமான் தாமே படைகளைத் திரட்டிக்கொண்டு போர்க் களத்திற்கு நேரில் சென்று நடத்திய பதின்மூன்று படை யெடுப்புகளில் இது கடைசிப் படையெடுப்பாகும். மற்றும் பல படையெடுப்புகளுக்கு அவருடைய படைத் தலைவர்களே தலைமை தாங்கினர். இப் படையெடுப்புகளைப் பொறுத்தவரை, ஒன்றே ஒன்றில்தான் குறிப்பிட்ட ஓரிடத்தில் திட்டப்படி போர் நிகழ்ந்தது. அதுதான் மோஹாக்ஸ் போராகும். இப் போரில் ஹங்கேரியர்கள் முரியடிக்கப்பட்டனர். உத்மானியர்களின்

எண்ணிக்கை ஹங்கேரியர்களின் படையினரின் எண்ணிக் கையினும் மிக அதிகமாக இருந்ததனால், போரின் முடிவு மிகவும் தெளிவானதாகவும் இறுதியானதாகவும் இருந்தது. இதைத் தவிர ஹங்கேரியர்களுக் கெதிராகவோ ஆஸ்ட்ரியர்களுக் கெதிராகவோ, அல்லது பாரசீகர்களுக்கெதிராகவோ, பெரும் போர் எதுவும் நடைபெறவில்லை. நடத்தப்பட்ட மற்றெல்லாப் படையெடுப்புகளின்போதும் ஏராளமான உத்மானியப் படைகள் ஒழுங்காகப் படையில் சேராத போர் வீரர்களுடன் சேர்ந்து படையெடுப்பிற்கு இரையான நாடுகளைச் சூறையாடின. எதிரி களின் படைத்தலைவர்கள் உத்மானியர்களைப் போரில் நேரடி யாகச் சந்திக்க முடியாமல் தம் படைகளைப் பல்வேறு கோட்டை களில் குவித்து வைத்தனர். அந்த நிலையில் துருக்கியர்களின் படைவீரர்கள் அக் கோட்டைகளை முற்றுகையிட்டனர். ஒருசில வேளைகளில் மட்டுமே அப் படைகள் தோல்வியுற்றன. பொது வாகவே துருக்கிப் படைவீரர்களின் எண்ணிக்கை மிக அதிக மாக இருந்தது. அவர்களுடைய பீரங்கிகளும் எதிரிகளின் கருவிகளைவிட அதிக சக்திவாய்ந்தவையாக இருந்தன. அந்தச் சூழ்நிலையில் அக் கோட்டைகள் எதிர்ப்பு அளித்ததே அரி தாகும். அதையும்விட வியப்புக்குரியது, அவை பல நாள்கள் வரையிலும் தொடர்ந்து எதிர்த்து நின்றதாகும். பொதுவாக, வெற்றிபெற்ற துருக்கியர்கள் அக் கோட்டைகளைக் கைப்பற்றிய தற்குப் பிறகு அவற்றைப் பேரரசுடன் இணைத்துக்கொண்டனர்; அல்லது சுல்தானின் இறைமையை ஏற்றுக்கொண்டு அவருக்குக் கப்பம் செலுத்துமாறு அவை வற்புறுத்தப்பட்டன; அல்லது மிகக் கடுமையாகச் சூறையாடப்பட்டன.

சுல்தான் சுலைமான் தமது படையெடுப்புகளில் பெரும் பாலானவற்றில் வெற்றியே அடைந்தார். இருப்பினும், இக் காரணத்தை முன்னிட்டு அவரை ஒரு பெரும் படைத் தலைவர் என்று அழைப்பதற்கில்லை. ஆனாலும், ஐரோப்பாவில் ஒருவர் மட்டுமே அவரை எதிர்த்து நிற்கச் சமசக்தியைப் பெற்றிருந்தார். அவர்தாம் ஐந்தாம் சார்லஸ். ஆசியாவிலோ ஐரோப்பாவிலோ அவரை எதிர்க்க ஒருவருமே இல்லை. சார்லஸும் அவருடன் திறந்த வெளியில் போரிட விரும்பவில்லை போலும்!

சுலைமான் ஒரு சிறந்த படைத்தலைவராக இராவிடினும், ஒரு மாபெரும் அரசை நிர்மாணிப்பதிலும் மாபெரும் படை யெடுப்புகளை ஒழுங்குறத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதிலும் உண்மையில் நிகரற்றவராக விளங்கினார். அவருடைய ஆட்சிக் காலத்தில் உத்மானியப் பேரரசு மற்றெந்த உத்மானிய அரசரின்

காலத்திலும் இல்லாத அளவிற்கு வியாபித்திருந்தது. அதை விஸ்தரிப்பதில் அதிக ஆட்சேதமோ, பொருட்சேதமோ ஏற்பட வில்லை. அம் மாபெரும் படையெடுப்புகளுக்கான தயாரிப்பு களைச் செய்வதும் அவற்றை ஒழுங்குற நடத்துவதும் எளிதான செயல்கள் அல்ல. அவர் நடத்திய பல போர்களில் வியன்னை மீது நடத்திய படையெடுப்பில்தான், அவருக்குத் தேவைப் பட்ட பொருள்கள் கிடைக்காமையால், அவரால் வெற்றிபெற முடியவில்லை. தக்க தகுதிபெற்ற படைத்தலைவர்களைத் தேர்ந் தெடுத்து அவர்களிடத்தில் பொறுப்புகளை ஒப்படைத்தது சுல்தானின் ஒரு சிறப்புமிக்க திறமையாகும். மத்தியதரைக் கடலில் செல்லும் கப்பல்களை யெல்லாம் அச்சுறுத்திக்கொண் டிருந்த கடற் கொள்ளைக்காரர்களைத் தம் பணியில் சேர்த்துக் கொண்டு, அரும் சாதனைகளை யாற்றும்படி சுல்தான் அவர்களை வற்புறுத்தியது உண்மையில் அவருடைய திறமையை வெளிப் படுத்துகின்றது.

அவருடைய இராணுவ வெற்றிகளிலும், பேரரசுடன் நாடுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டதிலும் மட்டுமே சுல் தானுடைய சிறப்பினைக் காணுவதற்கில்லை. அவருடைய உறுதி யான, திட்டமான, அதே சமயத்தில் அனுதாபம் நிறைந்த கொள்கை நாட்டின் ஒவ்வொரு துறையின்மீதும் தனது விளைவுகளை ஏற்படுத்தி வைத்திருந்தது. பேரரசில் யாவருக்கும் ஒருசார்பற்ற நீதியை வழங்குவதையே அவர் வற்புறுத்தினர். இவ்வகையில், தவறு செய்பவர்களும் அநீதியையும் கொடுமை களையும் இழைப்பவர்களும், மாநில ஆளுநர்களேயாயினும் உயர் அதிகாரிகளேயாயினும், அவர்களை அரசர் உடனடியாகப் பதவி யிலிருந்து நீக்கிவிடுவார்; பல வேளைகளில் அவர்கள் தூக்கு தண்டனைக்குப் பலியாவர். தமக்கு எவ்வளவு நெருங்கினவர் களாக இருப்பினும், அவர்கள் தவறு இழைப்பார்களாயின், சுல்தான் அவர்களை விடுவதில்லை. சுல்தானின் மாப்பிள்ளை யான ஃபெரார்து பாஷா (Ferard Pasha) என்பவர் அநீதியையும் கொடுமையையும் இழைத்ததற்காகவும் லஞ்சம் வாங்கியதற் காகவும் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். அவருடைய மனைவி யின் வேண்டுகோளின் பேரிலும் சுல்தானுடைய தாயின் வேண்டுகோளின் பேரிலும் அவர் மற்றொரு மாநிலத்தின் ஆளுந ராக நியமிக்கப்பட்டார். ஆனாலும், மீண்டும் முன்போலவே நடந்து கொண்டதனால், அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட துடன், கொல்லவும் பட்டார்.

பேரரசின் நிதிநிலையை சுல்தான் மிகவும் சாதுரியமாகச் சமாளித்தார். ஒரு நாட்டுக்கு நிதியினால் நிரம்பிய கருவூலம்

எவ்வளவு இன்றியமையாதது என்பதை அவர் உணர்ந்திருந்தார். போர்கள் பலவற்றை அவர் புரிந்தார் எனினும், இரண்டு வேளைகளில்மட்டுமே நிதியைத் திரட்டுவதற்காக அவர் தனிப்பட்ட தீர்வைகளை வசூலித்தார். மற்ற வேளைகளில் எல்லாம் சாதாரண வசூலிப்பே போதுமானதாக இருந்தது. ஒப்புநோக்கில், தீர்வைகள் அவ்வளவு சுமைமிக்கனவாக இருக்கவில்லை. அவருடைய போர்கள், கொள்ளைப் பொருள்களின் வடிவத்திலும், வெல்லப்பட்ட நாடுகளிலிருந்து பெறப்பட்ட தீர்வைகளின் வடிவத்திலும், அடிமைகளை விற்று வரும் பணத்தின் வடிவத்திலும் பெரும் வருமானத்தை அளித்தன. ஐம்பதினாயிரம் ஜனிஸ்ஸரீகளும் ஸ்பாஹிகளும் (Spahis) அடங்கிய படை நிரந்தரமான படையாக இருந்தது. அப் படையினர் நிரம்ப ஊதியத்தைப் பெற்றும் வந்தனர். பேரரசில் இருந்த பல்வேறு நிலமானியக்காரர்களும் போர்க்காலத்தில் அரசருக்குப் படைகளை அனுப்பிவைக்கக் கடமைப்பட்டிருந்தனர். அவர்களுங்கூட இராணுவப் பணியாற்றவேண்டியிருந்தது. எண்ணிக்கையில் எண்பதாயிரமாக இருந்த இவர்கள் ஊதியம் பெறவில்லை. இவர்கள் எந்நாடுகளின் வழியாகச் சென்று கொண்டிருந்தார்களோ அந்நாடுகளைச் சூறையாடி, அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு வாழ்ந்து வந்தனர். ஆகவே, இந்த நிலையில் சுலைமானுடைய போர்கள் அரசாங்கத்திற்குப் பெரும் சுமையாக இருக்கவில்லை.

சுலைமானும் தமக்கு முற்பட்டவர்களைப்போலவே இலக்கியத்திலும் கவிதையிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் இயற்றிய கவிதைகள் பெரும் புகழ்பெற்று விளங்கின. அவர் நடத்திய படையெடுப்புகளைப்பற்றிய அன்றாட நிகழ்ச்சிகளை அவர் எழுதிவைத்திருந்தார். விஞ்ஞானத்தையும் கலையையும் சுல்தான் தயக்கமின்றி ஆதரித்தார். எல்லாவகையிலும் அவருடைய ஆட்சிக் காலம் துருக்கியர் வரலாற்றில் மிகவும் சிறப்புப்பெற்ற பொற்காலமாக இருந்தது. மசூதிகளையும், கல்லூரிகளையும், மருத்துவ நிலையங்களையும், கால்வாய்களையும், பாலங்களையும் கட்டுவதற்காக அவர் தாராளமாகப் பணம் செலவழித்தார். அவைபோன்ற அமைப்புகள் இஸ்தம்பூலில் மட்டுமே கட்டப்பட்டன என்று கூறுவதற்கில்லை. பேரரசின் எல்லா முக்கிய நகரங்களிலும் அவை நிருமிக்கப்பட்டிருந்தன.

அவருடைய ஐரோப்பிய சமகாலத்தவர்கள் அவருக்கு 'வீரூர்ந்தவர்' என்று புனைபெயரிட்டிருக்கையில், துருக்கியில் அவருடைய மக்கள் அவரை 'அல்கானூனி' அதாவது,

'சட்டத் தொகுப்பை உருவாக்கியவர்' என்றே அழைத்தனர். சட்டத்தின் எல்லாப் பிரிவுகளிலும் பெரும் மாறுதல்களையும் சீர் திருத்தங்களையும் கண்டது இவருடைய ஆட்சிக் காலம். அவை யெல்லாம் நீதியைச் சரிவர வழங்குவதற்கே வகுக்கப்பட்டன. நிலச் சட்டங்கள் எல்லாம் மாற்றி அமைக்கப்பட்டன. ஐரோப்பிய நிலமானிய முறையின் அடிப்படையில் அமைக்கப் பட்டிருந்த நிலமானிய முறை எளிதாக்கப்பட்டது. அதில் பல முன்னேற்றங்களும் புகுத்தப்பட்டன. குடியானவர்களின் நிலை அபிவிருத்தி செய்யப்பட்டது. நிரந்தரமான உரிமை முறை அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பெற்றது. ஹங்கேரி, ரஷியா போன்ற இடங்களில் இருந்ததைவிடத் துருக்கியில் குடியானவர்களின் நிலை மேலும் சிறப்புற்றதாகவே இருந்தது என்று திட்டவட்டமாகக் கூறலாம். மொரியாவிலிருந்த கிரேக்க மக்கள் வெனிஸியர்களின் ஆட்சியைவிடத் துருக்கியர்களின் ஆட்சியையே அதிகமாக விரும்பினர். ஹங்கேரிய குடியானவர் கள் சிலர் சுயமாகவே நாட்டைவிட்டு வெளியேறி, ருமேலியா வில் (Roumelia) நடைபெற்றுக்கொண்டிருந்த துருக்கியராட்சிக் குட்பட்டு வாழ அங்குச் சென்று குடியேறிவிட்டனர். அவ ருடைய நாற்பத்தாறு ஆண்டு ஆட்சிக்காலத்தில் அவருடைய ஆட்சிக்குட்பட்டிருந்த இருபது பல்வேறு இனத்தினரில் ஒருவ ராவது அவருடைய ஆட்சிக்கெதிராகக் கிளர்ந்தெழுவில்லை என்பதிலிருந்து, அவருடைய ஆட்சியில் மக்கள் எவ்வளவு மன நிறைவு கொண்டிருந்தனர் என்பது புலனாகின்றது.

ஆனால், அதே சமயத்தில் அவருடைய ஆட்சிமுறையில் குறைகள் பலவும் இருந்தன. இந்தக் குறைபாடுகள் அவருக் குப் பிறகு வந்த சுல்தான்களின் ஆட்சிக்காலத்தில் நாளுக்கு நாள் வளர்ந்து முற்றி, இறுதியில் அப் பேரரசைச் சீர்குலைய வைத்தன. அச் சீர்குலைவு பின்வரும் காரணங்களால் ஏற் பட்டது என்று வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்:

1. சுலைமானுடைய ஆட்சிக்காலத்தில் சுல்தான், 'திவான்' என்னும் இராஜ்ஜியசபையின் கூட்டங்களில் ஒழுங்காகக் கலந்து கொள்ளவில்லை. அந்தச் சபை மண்டபத்துக்கு அடுத்தாற் போலிருந்த அறையில் சன்னலுக்குப் பின்னால் அவர் மறைந்து கொண்டு, திவானில் நடக்கும் விவாதங்களில் தாமே கலந்து கொள்ளாது, அங்கே என்ன நடைபெறுகின்றது என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பிறகு வந்தவர்கள் அத் திரையின் பின் நின்று காண்பதையும் நிறுத்திவிட்டனர். இவ் விதமாக, சுல்தான் சபையின் கூட்டங்களில் கலந்து

கொள்ளாதிருந்தமையானது அவருடைய ஒழுங்கற்ற அதிகாரத்தை மேலும் அதிகரித்ததோடு, அவருடைய அமைச்சர்களின் செல்வாக்கை மேலும் சிறிதாக்கியது. சுலைமானைப் போன்ற திறம்படைத்த அரசர் ஒருவர் சிம்மாசனத்தில் வீற்றிருந்த வரையிலும் விளைவுகள் அவ்வளவு மோசமாகிவிடவில்லை போலும்! எனினும், அவருக்குப் பிறகு வந்த தகுதியற்றவர்களின் காலத்தில் பல கொடிய விளைவுகள் ஏற்படலாயின. அச்சபையின் செல்வாக்கிலிருந்து சுல்தான் விடுதலைபெற்றுவிட்டதனால், அவருடைய முடிவுகள் பொறுப்புள்ள அமைச்சர்களினாலோ அல்லது இராஜ்ஜிய சபையினாலோ எடுக்கப்படாமல், அந்தப்புரத்திலிருந்தவர்களாலோ வெளியிலிருந்த பொறுப்பற்ற லஞ்ச ஊழலில் மூழ்கிக் கிடந்தவர்களாலோ எடுக்கப்பட்டன.

2. கீழ்ப் பதவிகளிலிருந்து அனுபவமிக்கவர்களைப் படிப்படியாக உயர்த்தி, உயர்பதவிகளை வகிக்குமாறு செய்யும் பழக்கத்தை சுல்தான் கைவிட்டதனாலும் பேரரசு சீர்குலைவுற்றது. எடுத்த எடுப்பில் உயர்பதவிக்கு நியமிக்கப்பட்டவர்களில் முக்கியசான்றாக விளங்குபவர் இப்ராஹீம் என்ற சுல்தானின் மிக நெருங்கிய நண்பரும் அவரது நல்விருப்பத்திற்குப் பாத்திரரானவருமாவார். உண்மையில் சுலைமான் எந்த உயர்பதவியாயிருப்பினும் வெளியாட்களையே நியமித்துக் கொண்டார். அலிகளும் கட்சி மாறினவர்களும் சுல்தானால் உயர்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர். ஆட்களைச் சரிவர மதிப்பிடுவதில் சுலைமான் திறம்படைத்தவர்; அவர்களைப் பதவிகளில் அமர்த்துவதில் அவர் பிழைகள் இழைத்ததாகத் தெரியவரவில்லை. ஆனாலும், அவருடைய வாரிசுகளின் காலத்தில் அவ்விதத் திறமை காணப்படவில்லை. ஆகவே, சுல்தானுடைய மன இச்சைப்படியோ அல்லது அந்தப்புரத்துச் செல்வாக்கின் பேரிலோ அல்லது மற்றத் தகுதியற்றவர்களின் செல்வாக்கை முன்னிட்டோ பிற்காலத்தில் பதவிகளில் ஆட்கள் நியமிக்கப்பட்டனர்.

3. சுலைமானுடைய மகளை மணந்து கொண்டவரும், பதினைந்து ஆண்டுக் காலம்வரை பிரதம அமைச்சராகப் பதவி வகித்து வந்தவருமான ருஸ்தும் பாஷா (Rusthum Pasha) என்பவருடைய மானங்கெட்ட நடத்தையும் அவருடைய லஞ்சம் வாங்கும் பழக்கமும் பேரரசின் சீர்குலைவை விரைவுபடுத்தின. கருவூலத்தை நிரப்புவது அவருடைய சிறப்பியல்பு என்று சுல்தான் கருதினார். செல்வத்தைத் திரட்ட அவர் கையாண்ட முறைகளில் ஒன்று, நாட்டில் உயர்பதவிகளில் நியமிக்கப்பட்ட

வர்களிடத்திருந்து ஏராளமான பணத்தைச் சுரண்டிப் பெறுவது என்பதாகும். கொடுக்க வேண்டிய தொகை சுலைமானுடைய காலத்தில் ஊதியங்களுக்கேற்றபடி நிர்ணயிக்கப்பட்டது. அது போன்ற முறைகள் இராணுவப் பதவிகளுக்காகவும் கடற்படைக் கான பதவிகளுக்காகவும் பயன்படுத்தப்படவில்லை. பிந்திய சுல்தான்களின் காலத்தில் அத் தொகை எவ்வித முறையுமின்றி யும் அளவு மீறியும் நிர்ணயிக்கப்பட்டது. பணத்தை வாங்கும் அப் பழக்கம் இராணுவத்திலும் கடற்படையிலும் கடைப்பிடிக்கப் பட்டது. எல்லாப் பதவிகளும் ஏலத்துக்கு விடப்பட்டன. அதிக விலைக்குக் கேட்பவருக்கு அவை விற்கப்பட்டன. இப் பணத் தொகையைத் திரட்டுவதற்காக மாநில ஆளுநர்களாகவும் மற்ற வகை அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட்டவர்கள் பற்பல தவருன முறைகளைக் கடைப்பிடித்தனர். பொதுப்பணிக்கான உணர்ச்சி முற்றிலுமே மறைந்து விட்டது.

4. சுலைமான் தாம் விரும்பியவர்களுக்குப் பலவித உரிமை களை அளித்ததனாலும், தங்கள் பதவிகளைத் தங்களுக்குக் கீழிருந்த வர்களுக்கு விற்றுவிட்டுப் பெரும் செல்வத்தைத் திரட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டதனாலும் சீர்குலைவு ஏற்பட்டது. பதின் மூன்று ஆண்டுக் காலமாக வசீராக இருந்த இப்ராஹீமும் அப் பத வியைப் பதினைந்து ஆண்டுக் காலம் வகித்த ருஸ்துமும் ஏராள மான செல்வத்தைத் திரட்டி வைத்திருந்தனர். அவர்கள் மிக ஆடம்பரமான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். மேலும் பல அமைச்சர்களும் அதிகாரிகளும் அப் பிரதம அமைச்சர்களின் பாதையிலேயே சென்றனர். பெருஞ் செல்வத்தைத் திரட்டு வதற்கு உயர்பதவிகள் சிறந்த கருவிகளாகக் கருதப்பட்டன. இந்தக் கேடுகள் பேரரசெங்கிலும் மிக விரைவாகப் பரவிக் கொண்டிருந்தன. பேரரசு லஞ்ச ஊழலில் சிக்கி மூச்சுத் திணறிக் கொண்டு நின்றது.

ஆனாலும், இதைச் சரிசெய்வதற்கான அல்லது இதற்குப் பழிவாங்குவதற்கான பழக்கம் ஒன்றும் இருந்தது. அதாவது, அரசனுடைய கட்டளையின்படி ஓர் உயர் அதிகாரி கொல்லப் பட்டானெனின், அவனுடைய சொத்துகளெல்லாம் அரசரால் பறித்துக் கொள்ளப்பட்டன. இப்ராஹீமின் எல்லையற்ற செல்வம் இவ்விதமாகப் பறித்துக் கொள்ளப்பட்டது. சுலைமானின் காலத் திலும், குறிப்பாக அவருக்குப் பிறகு வந்த சுல்தான்களின் காலத்திலும், ஆளுநர்கள் உயர் அதிகாரிகள் முதலியோரிடத் திருந்து பறித்துக் கொள்ளப்பட்ட செல்வம் அரசுக்குச் சிறந்த வருமானமாயிற்று. அவ்விதமாக அரசுக்கு வருமானம் பெறு

வதற்காக என்றே பாஷாக்களும் அதிகாரிகளும் கொல்லப் பட்டனர் என்று கூறுவது மிகையாகாது. ஏராளமான செல் வத்தைத் திரட்டிவைத்தலே அவ் வதிகாரி தவருக நடந்து கொண்டுள்ளான் என்பதற்குச் சான்றுகுமாதலால், அவனைக் கொலை செய்வதே நியாயம் என்று கருதப்பட்டது போலும்!

இக் காரணங்களுடன், மற்றென்றும் சீர்குலைவை விரைவு படுத்தியது. அரசாங்க விவகாரங்களில் அந்தப்புரப் பெண்டிர் களின் செல்வாக்கு மிகவும் அதிகமாகிக் கொண்டிருந்தது. இப்ராஹீமின் வீழ்ச்சியும் இறப்பும், இளவரசர் முஸ்தஃபா கொல்லப்பட்டமை, இளவரசர் பாஎஜீத் கிளர்ந்தெழுந்ததனால் கொலையுண்டமை ஆகியவையெல்லாம் அந்தப்புரத்தில் நடை பெற்றுக் கொண்டிருந்த சதிமிகு சூழ்ச்சிகளின் விளைவுகளே யாகும். மாபெரும் சுல்தானுக விளங்கிய சுலைமானின் ஆட்சிக் காலத்தில் அவருடைய வெள்ளாட்டியாக இருந்த கௌரெம் என்பவளுடைய செல்வாக்கு நாட்டில் மிகவும் அதிகமாகப் படர்ந்திருந்தது. சுலைமானுக்குப் பிறகு வந்தவர்களின் ஆட்சிக் காலத்தில் அவ்வித அந்தப்புரப் பெண்களின் செல்வாக்கு இன்னும் அதிகரித்துவிட்டது. பற்பல வேளைகளில் அது அரசுக் கும் பேராபத்தாகி விட்டது. அந்தப்புரமும்கூடப் பல சதித் திட்டச் சூழ்ச்சிகளின் மையமாயிற்று. மேலும், காலப்போக்கில் ஜனிஸ்ஸரீப் படைவீரர்களும் நாட்டிற்கு ஒரு பேராபத்தாகிக் கொண்டிருந்தனர். அவர்களை அடக்க இயலாத அரசர் ஒருவர் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டியிருந்தது. கௌ ரெத்தின் பேச்சில் மயங்கிய சுல்தான் தமது மூத்த மகனை முஸ்தஃபாவைக் கொன்றது பெரும் தவருகும். தம் நடக்கை யைச் சீர்திருத்திக் கொள்வதாக அவ் விளவரசர் மன்றுடியதெல் லாம் அரசரின் செவியில் ஏறவில்லை. ஒழுக்கங்கெட்ட, தகுதி யற்ற சலீமை அவர் தமக்கு வாரிசாக நியமித்தார். உண்மையில், பட்டத்திற்கு சலீமின் வருகை முஸ்தஃபாவின் கொலைக்குப் பழி தீர்த்துக்கொள்வது போன்றிருந்தது. சுலைமானும் அவருக்கு முற்பட்ட அரசர்களும் தங்களது பெரும் முயற்சியால் உரு வாக்கிய பேரரசைச் சீர்குலைத்துவிட்ட ஒழுக்கங்கெட்ட அரசர் களின் பட்டியலில் சலீம் முதலானவராக இருந்தார்.

இக் குறைபாடுகளும் தவறுகளும் இருந்தபோதிலும், சுலைமானின் ஆட்சி சாலச் சிறந்த ஆட்சி என்பதை மறுக்க முடியாது. ஒரு மாபெரும் அரசைத் தோற்றுவித்த உத்மானிய இனத்தில் சுலைமான் மிகச் சிறந்தவர். ஐரோப்பாவில் ஐந்தாம் சார்லஸ், முதலாம் ஃபிரான்ஸிஸ், பத்தாம் லியோ, எட்டாம்

ஹென்றி, போலந்தின் சிஜிஸ்மண்ட் போன்ற புகழ்வாய்ந்த அரசர்களையெல்லாம் நற்பணிகளிலும் சிறந்த பண்பாடுகளிலும் சுலைமான் மிஞ்சியிருந்தார். அவருடைய குறைகளை மிக எளிதாக எண்ணிவிடலாம். ஆனால், அவருடைய நற்பணிகளையும் நல்ல குணங்களையும் எண்ணி முடிப்பது எளிதன்று. நாற்பதினாயிரம் சதுர மைல் பரவியிருந்ததும், உலகத்திலேயே மிகவும் அழகு வாய்ந்ததும், செழுமை மிக்க பகுதிகள் அடங்கியதுமான மாபெரும் அரசு ஒன்றை எர்த்தொக்ரலின் வழித்தோன்றல்கள் மூன்று நூற்றாண்டுகாலத்தில் உருவாக்கிவிட்டனர்.


சுல்தான் சுலைமான் விட்டுச்சென்ற பேரரசில் நிரந்தரமான சேர்க்கைகள் எதுவும் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. சைப்ரஸ் தீவும் காண்டியாவும் மட்டுமே பின்னாளில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. மற்ற எந்த சுல்தானுடைய ஆட்சியிலும் அவ்வளவு செல்வமோ, செழுமையோ ஏற்படவில்லை; அதிகாரம் உச்சகட்டத்தை யடைந்திருந்தது. அவருடைய காலத்திய துருக்கிய இராச்சியத்தில் விவிலியத்திலும் பண்டை வரலாற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ள புகழ்மிக்க நகரங்கள் அனைத்தும் அடங்கியிருந்தன. ரோமாபுரி, சைரகூஸ், மற்றும் பெர்கமோவிஸ் ஆகிய நகரங்கள் மட்டுமே அதில் இணைக்கப்பட்டிருக்கவில்லை. கார்த்தேஜ், யெம்ஃபிஸ், டயர், நைனவே, பாபிலோனியா, பல்மைரா ஆகிய பண்டை நகரங்கள் இருந்த இடங்களெல்லாம் இப்போது உத்மானியர்களின் நிலமாயிருந்தன. அலெக்ஸாந்திரியா, ஜெருசலேம், ஸ்மிர்னா, டமாஸ்கஸ், நைஸ், புருஸா, ஏதென்ஸ், பிலிப்பி, ஏட்ரியானோப்பில் (எதிர்னே) ஆகிய நகரங்களும் அல்ஜியர்ஸ், கெய்ரோ, மக்கா, மதீனா, பஸ்ரா, பாக்தாத், பெல்கிரேட் ஆகிய நகரங்களும் இஸ்தம்பூலின் சுல்தானுக்கு அடிபணிந்திருந்தன. நைல், ஜோர்தான், ஓராண்ட்டீஸ் (Orantes), யூப்ரட்டீஸ், டைக்ரிஸ், தானூப்ஸ், போரிஸ்தெனிஸ், டான்யூப், ஹெப்ரஸ், இலிஸ்ஸஸ் ஆகிய நதிகளெல்லாம் அப் பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் புரண்டோடிக் கொண்டிருந்தன. மத்தியதரைக் கடலின் கிழக்கு மேற்குப் பிரதேசங்கள், புரோபான்ட்டீஸ், பாலஸ்மாவோடிஸ், யூக்ஸைன், கருங்கடல் ஆகியவையெல்லாம் துருக்கியர்களின் ஏரிகளாயின. உத்மானியர்களின் சந்திரன் அட்லாஸ் மலையையும் காக்கஸஸ் மலையையும் தொட்டுக் கொண்டிருந்தது. அது தன்னுடைய ஒளியை ஏதாஸ், சீனாய், அராரத், கார்மல் மலை, டாரஸ் மலை, ஈட்டா, ஒலிம்பஸ், பெலியோன், ஹேய்மஸ், கார்பேத்தியன் மலைகள் ஆகியவற்றின்மீது வீசிக்கொண்டிருந்தது.

உத்மான் கண்ட கனவு இங்ஙனமாக நனவாகிவிட்டது!

1326ஆம் ஆண்டில் உதுமான் காலஞ்சென்றபோது, அவரது ஆட்சியின் கீழிருந்த மிகச் சிறிய நிலப்பரப்பை, 1566ஆம் ஆண்டில் சுல்தான் சுலைமான் விட்டுச் சென்ற விசாலமான நிலப்பரப்புடன் ஒப்புநோக்கினால், இந்த 240 ஆண்டுகளுக்கிடையில் உத்மானிய பேரரசு எத்துணை அசுரவேகத்தில் வளர்ச்சிபெற்றுவிட்டது என்பது நன்கு விளக்கமாகும். இவ்வாறு மிகச் சடுதியில் விரைவாய் வளர்ந்த அப் பேரரசு இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் எப்படி நறுங்கிச் சிறுத்துவிட்டதென்பதையும் இனி நாம் காணலாம். மாண்புமிகு சுல்தான் சுலைமானின் காலத்தில் வாழ்ந்த ஒரு கவிஞர், பேரரசின் அபாரமான வளர்ச்சியைப் பாராட்டி இயற்றிய கவிதையொன்றில், முஸ்லிம்களின் அருமறையாகிய குர்ஆனிலிருந்து ஒரு மேற்கோளைச் சுட்டிக்காட்டியுள்ளார்:

'இறைவனே, அரசாங்கத்துக்கு உரியவனே! நீ நாடியவருக்கு அரசாங்கத்தை அளிக்கின்றாய்; நீ நாடியவரிடத்திருந்து அரசாங்கத்தைப் பறித்தும் விடுகின்றாய்; மற்றும், நீ நாடியவரை உயர்த்திவிடுகின்றாய்; நீ நாடியவரைத் தாழ்த்தியும் விடுகின்றாய். உனது கரத்திடையேதான் சுபிட்சம் இருக்கிறது. நிச்சயமாக, நீயே அனைத்துப் பொருள்கள் மீதும் பேராண்மை பெற்றவன்.'

குர்ஆன் வேதத்திலுள்ள இம் மேற்கோள் அனைத்துப் பேரரசுகளின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமே பொருந்துவதை நாம் காணலாம்.



படம் 2

[பட வினாக்கம் அடியில் காண்க]

மிக்க விரிவடைந்திருந்த நிலையில் உத்மானியப் பேரரசு

1. ஃபிரான்ஸ்
2. டான்யூப் நதி
3. வியன்னா
4. போலந்து
5. ஹங்கேரி
6. டிரான்ஸில்வேனியா
7. மால்டேவியா
8. போடோலியா
9. ஜெடிஸன்
10. பெஸ்
11. கிரேஷியா
12. கிரிமியா
13. ரஷியா
14. நீப்பர் நதி
15. பூடா
16. பெஸ்த்
17. வெனிஸ்
18. பெல்கிரேட்
19. வலாச்சியா
20. டான்யூப் நதி
21. பல்கேரியா
22. லெர்விடா
23. பாஸ்னியா
24. மான்ட்டி நீக்ரோ
25. ரூமேலியா
26. டால்மேஷியா
27. ஏட்ரியாட்டிக் கடல்
28. லிவாடியா
29. இயோபியா
30. மோரியா
31. கிரீட்
32. கருங்கடல்
33. இஸ்தம்பூல்
34. டிரெபிஸாண்ட்
35. ஜார்ஜியா
36. தகிஸ்தான்
37. காஸ்பியன் கடல்
38. அஜர்பைஜான்
39. அனட்டோலியா
40. கரமானியா
41. மோஸல்
42. ஹர்மதான்
43. பாரசிகம்
44. பாக்தாத்
45. அலெப்போ
46. ஏக்கர்
47. டமாஸ்கஸ்
48. ஜெருசலேம்
49. பஸரா
50. பாரசிக வளைகுடா
51. அல்ஹாஸா
52. கஸா
53. சுயெஸ்
54. அலெக்ஸாந்திரியா
55. கெய்ரோ
56. செங்கடல்
57. மதீனா
58. மக்கா
59. அரேபியா
60. நைல் நதி
61. எகிப்து
62. திரிபோலி
63. திரிபோலி (நகர்)
64. மத்தியதரைக் கடல்
65. தூனிஸ்
66. நேப்பிள்ஸ்
67. அல்ஜியர்ஸ்
68. அல்ஜீரியா
69. ஸ்பானிய நாடு

12. இரண்டாம் சலீமும் பிரதம அமைச்சர் சொக்கொல்லியும் (1566–78)

(Selim II and Grand Vizier Sokolli)

முதற் பத்து உத்மானிய சுல்தான்களுள் இறுதியானவராகவும் மிகச் சிறப்புப் பெற்றவராகவும் விளங்கியவர் சுலைமான் ஆவார். முந்நூறு ஆண்டுகாலம் ஆட்சிபுரிந்த அந்தப் பத்து சுல்தான்களும் ஒரு சிறிய நிலப்பகுதியை ஒரு பேரரசாக்கினர். இவர்கள் பெரும் ஆற்றல் மிக்க இனத்தினராக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், இவர்களுடைய சராசரி ஆட்சிக் காலம் இருபத்தெட்டாண்டாக இருந்தது. இது சராசரி வயதிற்கு மிகவும் அதிகப்பட்டதாகும். அப் பத்து சுல்தான்களுள் ஒருவரைத் தவிர மற்றவர்களெல்லாரும் திறம்படைத்த படைத் தலைவர்களாவர். தாமே நேரில் படைகளைத் திரட்டிச் சென்று முன்னேறுவது அவர்களுக்குச் சாதாரணப் பழக்கமாகவே இருந்தது. அவர்களுள் பலர் இலக்கிய வளர்ச்சியிலும் ஈடுபாடு மிக்கவர்களாக இருந்தனர். பலர் கவிஞர்கள் என்று புகழ் பெற்றும் விளங்கினர். சிறப்பித்து வைக்கும் இவைபோன்ற கூறுகள் காணப்பட்டபோதிலும், அவர்கள் கொடூரமாக நடந்து கொள்வதிலும் சற்றும் தயங்கவில்லை. உலக வரலாற்றிலேயே தலைமுறை தலைமுறையாக இவ்வாரான மாபெரும் அரசர்களைக் கொண்ட மற்றொரு வம்சம் தோன்றிற்றா? என்பதே ஐயத்துக்குரிய வினாவாகும்.

சுலைமானுக்குப் பிறகு, கெளரெம்[1] என்பவளுக்கும் அவருக்கும் பிறந்த அவருடைய மூன்றும் மகன் சலீம் என்பவர் பட்டத்திற்கு வந்தார். 'களிமகன்' என்று அவருக்குப் புனைபெயர் ஒன்று பொருத்தமாக இடப்பட்டது. அவரும் அவருக்குப் பின் வந்த இருபத்தைந்து அரசர்களுள் பலரும் ஒழுக்கங்கெட்டவர்

களாகவே இருந்தனர். இதுவே அந்தப் பேரரசு சீர்குலைவதற்கு ஒரு முக்கிய காரணமாயிற்று. ஆனாலும், அச் சீர்குலைவு உடனடியாக ஏற்பட்டது என்று கூறுவதற்கில்லை. உத்மானியப் பேரரசு ஒருவருடைய முயற்சியினாலோ ஒரு தலைமுறை காலத்திலோ உருவாக்கப்பட்டதன்று. ஒவ்வொரு தலைமுறையிலும் பல திறம்படைத்தவர்களும், அரசியல் வல்லுநர்களும், படைத் தலைவர்களும், நிர்வாகிகளும் அரசர்களுக்கு உறுதுணையாக இருந்து அரும் சாதனைகளை ஆற்றியிருக்கவேண்டும். அப்படிப் பட்டவர்கள் பலர் சுலைமான் இறந்ததற்குப் பிறகும் பல ஆண்டுகள் வரையிலும் உயிருடன் இருந்து சிறந்த பணியாற்றிக் கொண்டிருந்தனர். உண்மையில், பேரரசு உடனடியாகச் சுருங்கிவிடவில்லை. அடுத்த பன்னிரண்டு ஆண்டுக்காலத்தில் அது புத்துயிர் பெற்றுத் தொடர்ந்து பரவிக்கொண்டே இருந்தது. புது வகையான சுல்தான்களில் சலீம் முதலானவர். நாட்டு விவகாரங்களில் அவர் அக்கறையும் கொள்ளவில்லை, அவற்றில் பங்குபெறவும் இல்லை. குடிப்போதையில் மானங் கெட்ட வாழ்க்கையையே அவர் நடத்திவந்தார். பிறருக்கு அவர் ஒரு தகாத எடுத்துக்காட்டாக விளங்கினர். அவர்கால நீதிபதிகள், காஸிகள், உலமாக்கள் யாவருமே குடிப்பழக்கத்தை மேற்கொண்டனர். மதுவின் சிறப்பியல்புகளைப்பற்றிக் கவிஞர்கள் வானளாவப் புகழ்ந்தனர்.

சலீம் தம் பிரதமமந்திரியான சொக்கொல்லி என்பவருடைய செல்வாக்குக்கு உட்பட்டிருந்தார். சொக்கொல்லிதாம் பேரரசின் உண்மை ஆட்சியாளராக நடந்துகொண்டார். அவர் சற்றுத் தாராள மனப்பான்மை கொண்டிருந்தவர். இரண்டு முக்கிய திட்டங்களை அவர் மனத்தில் கொண்டிருந்தார். ஒன்று: செங்கடலிலும் இந்தியக் கடலிலும் துருக்கியரின் கப்பற்படை புகுவதற்கு வசதியாக சுயெஸ் நிலச்சந்தியைக் கடந்து செல்லும் கால்வாய் ஒன்றை வெட்டுவது. இரண்டாவது : டான் நதிக்கும் வோல்கா நதிக்கும் இடையே ஒரு கால்வாயை வெட்டி, சந்திப்பு ஒன்றை ஏற்படுத்துவது. இந்தச் சந்திப்பு மூலமாகத் துருக்கிக் கப்பற்படை டான் நதியில் நுழைந்து கால்வாயைக் கடந்து, வோல்கா நதி வழியாகக் காஸ்பியன் கடலை அடைந்து, அங்கிருந்து புறப்பட்டுப் பாரசீக மாநிலத்திலுள்ள தப்ரீஸைத் தாக்க முடியும். இதனால் பெருத்த லாபம் ஏற்படும்; தவிர, பெருத்த வாணிபமும் விருத்தியடையும். ஆனால், இத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக அஸ்ட்ரகானையும் (Astrakhan) மற்றும் சில ஆட்சிப் பகுதிகளையும் ரஷிய நாட்டிடமிருந்து பறித்துக்கொள்ள வேண்டும்.

இந் நோக்கத்துடன் சொக்கொல்லி 1568-ல் இருபத்தை யாயிரம் ஜனிஸ்ஸரீகளையும் ஸ்பாஹிகளையும் கொண்ட சேனை யைக் கடல்வழியாக அஸாவ் (Azav) என்ற நகருக்கு அனுப்பி வைத்தார். இவர்களுடன், கிரீமியாவிலிருந்து வந்த முப்பதினா யிரம் டார்ட்டார்களும் சேர்ந்துகொண்டனர். பிறகு இந்தக் கூட்டுப் படை வோல்காவின் முகத்துவாரத்திலிருந்த அஸ்ட்ர காணை நோக்கி முன்னேறின. இதுதான் துருக்கியர்கள் முதல் தடவையாக ரஷியர்களுடன் மோதிக்கொண்ட நிகழ்ச்சியாகும். இந்தப் படையெடுப்புப் படுதோல்வியுற்றது. துருக்கியர்களால் அஸ்ட்ரகானைக் கைப்பற்ற முடியவில்லை. ரஷியப் படை ஒன்று டார்ட்டார்களின் படையை முற்றிலுமே முறியடித்தது. துருக்கியர்களின் முக்கியப் படையின் பெரும் பகுதி அஸாவி லிருந்து பின்வாங்க நேரிட்டது. பின்னாளில் அப் படையின் பெரும்பகுதி புயலுக்குப் பலியாயிற்று. ஏழாயிரம் பேர் மட்டுமே இஸ்தம்பூலுக்குத் திரும்பினர். வோல்கா-டான் நதிகள் சந் திப்புத் திட்டம் கைவிடப்பட்டது. சுயெஸ் நிலச்சந்தியில் கட்டப்பட வேண்டியிருந்த கால்வாய்த் திட்டம் காலவரம்பின்றி ஒத்திப்போடப்பட்டது. காரணம், எமன் மாநிலத்தில் அரே பியர்கள் கிளர்ந்தெழுந்தனர். அதை ஒடுக்குவதற்காகச் சினான் ஷாவின் தலைமையில் ஒரு படை அனுப்பப்பட்டது. அப் படை முழுவெற்றியடைந்தது. எமனும் அரேபியாவின் மற்ற மாநிலங்களும் உத்மானியப் பேரரசுக்கு அடிபணியுமாறு செய் யப்பட்டன.

ஏமனை மீண்டும் கைப்பற்றியதற்குப் பிறகு சொக்கொல்லி தானிஸ்ஸைத் தாக்கத் தீர்மானித்தார். ஐந்தாம் சார்லஸ் அதைக் கைப்பற்றிக்கொண்டதற்குப் பிறகு அது ஸ்பானியர் களின் கையிலேயே இருந்தது. இதை மீட்பிப்பதற்காக அனுப்பப் பட்ட கப்பற்படைக்கு ஒலுத்ஜ் பாஷா (Ouloudj Pasha) என்பவர் தலைமை வகித்தார். அவர் ஸ்பானியர்களை முறியடித்து அந் நகரைக் கைப்பற்றிக்கொண்டார். ஆனால், ஸ்பானியப் படை மீண்டும் அந் நகருக்குள் நுழைந்துவிட்டது. 1574ஆம் ஆண்டு வரையிலும் ஸ்பானியர்கள் அதனைத் தம் வசப்படுத்தி வைத் திருந்தனர்.

சைப்ரஸ் தீவைக் கைப்பற்றுவதற்காக 1570-ல் ஒரு படை யெடுப்பு நிகழ்த்தப்பட்டது. அத் தீவு வெனிஸ் குடியரசின் வசம் இருந்தது. இத் திட்டத்தை சொக்கொல்லி எதிர்த்தார். ஆனால், சுல்தான் முதல் தடவையாகத் தம் அமைச்சரின் அறிவுரைக்கு எதிராக முடிவு செய்தார். அத் தீவின் மதுவில்

பெரும் விருப்பம் கொண்டிருந்த சுல்தான் அதை இடையருமல் பெறவிரும்பினர். ஆனால், அத் தீவைத்தாக்குவது வெனிஸுடன் ஏற்கெனவே செய்துகொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தை மீறிய செயலாகிவிடும் என்று உணர்ந்த சுல்தான், அத் தாக்குதலைச் சட்ட பூர்வமாக்குவதற்காக முப்தியினிடமிருந்து ஒரு ஃபத்வாவையும் பெற்றுக் கொண்டார். இந்த ஃபத்வாவுக்கேற்ற படி 1570-ல் தீவின்மீது படையெடுக்கப்பட்டது. ஒரு லட்சம் ஆட்களைக் கொண்ட பெருஞ்சேனை ஒன்று கரா முஸ்தஃபா என் பவரின் தலைமையிலும், கப்பற்படை பியாலேயின் தலைமையிலும் அனுப்பி வைக்கப்பட்டன. கரா முஸ்தஃபா என்பவர் சொக் கொல்லியின் போட்டியாளராவார். இப் படை சைப்ரஸின் தலைநகரான நிக்கோஸியாவை (Nicosia) முற்றுகையிட்டது. ஏழு வாரம் நீடித்த முற்றுகைக்குப் பிறகு அந் நகரம் அடிபணிந்தது. துருக்கிப் படைகள் அதனைச் சூறையாடின. அந் நகரின் முப்பதினாயிரம் குடிமக்கள் கொல்லப்பட்டனர்.

பிறகு முஸ்தஃபா பாஷா அத் தீவின் முக்கிய அரணான ஃபமகோஸ்டாவைத் (Famagosta) தாக்க முற்பட்டார். அந்தக் கோட்டையை கிரேக்கப் படையினரும் இத்தாலியப் படை யினரும் அடங்கிய கலப்புப்படை ஒன்று பிரகாடினே (Bragadino) என்ற ஆற்றல்மிக்க வெனிஸிய படைத்தலைவரின் தலைமையில் பாதுகாத்தது. 1570-ம் ஆண்டு முழுவதும் அப் படை துருக்கி யரை எதிர்த்து நின்றது. எனினும், 1571-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அது சரணடைந்தது. முஸ்தஃபா மிகச் சுமுகமான நிபந்தனைகளையே விதித்தார். இருப்பினும், பிரகாடினே கரா முஸ்தஃபாவை நேரில் சந்தித்தபோது கடுஞ்சொற்களைப் பயன் படுத்தினர் என்ற காரணத்தை முன்னிட்டு, அவர் கொல்லப் பட்டார் ஃபமகோஸ்டாக் கோட்டை வீழ்ச்சியுற்றதனால் முழு சைப்ரஸ் தீவும் வெல்லப்பட்டது. 1878ஆம் ஆண்டுவரை துருக்கியர் கைவசம் இருந்துவந்த அத் தீவு அவ் வாண்டில் பீகன்ஸ்ஃபீல்ட் பிரபுவின் (Lord Beaconsfield) கொள்கையின் படி, பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடம் ஒப்படைக்கப்பட்டது.

சைப்ரஸ் தீவின் இழப்பும் துருக்கியர்கள் அங்கு இழைத்த கொடுமைகளும் கிறித்தவ வல்லரசுகளைப் பீதிக்குட்படுத்தின. மத்தியதரைக் கடலில் ஓங்கிக்கொண்டிருந்த துருக்கியரின் செல்வாக்கை எதிர்ப்பதற்காகப் போப் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக, ஸ்பானிய நாட்டுக்கும் வெனிஸுக்கும் இடையே 1570-ல் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. கிறித்தவ வல்லரசுகள் ஆஸ்ட்ரிய நாட்டினரான டான் ஜூான் (Don

John) என்பவரின் தலைமையில் ஒரு பெரும் சேனையை அனுப்பி வைத்தன. டான் ஜான் மறைந்துபோன பேரரசர் ஐந்தாம் சார்லஸின் களிமகனுவார். ஸ்பானிய நாட்டிலிருந்து மூர்களை விரட்டியடிப்பதற்காக அவர் பெரும் முயற்சி எடுத்துத் தம் திறமையை வெளிப்படுத்தியிருந்தார். அக் காலத்தின் படைத் தலைவர்களுள் சாலச்சிறந்தவர் என்று அவர் கருதப்பட்டார். கிறித்தவக் கப்பற்படையில் இருநூறு கப்பல்களும் பீரங்கிகளும் அடங்கி யிருந்தன. காலாட் படையில் ஸ்பானிய வீரர்களும் வெனிஸின் படைவீரர்களும் போப்பின் படைவீரர்களும் இருந்தனர். டான் ஜான் தலைமைப் படைவீரனுக இருந்தார். பார்மாவின் இளவரசர் (Prince of Parma) ஸ்பானியப் படைக்குத் தலைமை வகித்தார்.

கப்பற்படை 1571, செப்டம்பரில் மெஸ்ஸினுவை யடைந்தது. ஆனல், அதற்குள் சைப்ரஸ் வீழ்ச்சியுற்றுவிட்டது. லெபான்ட்டோ வளைகுடாவில் (Gulf of Lepanto) துருக்கியர்கள் மாபெரும் கப்பற்படையைத் திரட்டி வைத்திருந்தனர். பாஷா அலீ (Pasha Ali) என்னும் இளைஞர் அதற்குத் தலைமை வகித்தார். இவருக்குக் கடற்போரில் அனுபவம் கிடையாது. ஒலுத்ஜ் என்பவர் இவருக்கடுத்த படைத்தலைவராக இருந்தார். பர்த்தத் பாஷா (Perted Pasha) என்பவர் படைகளுக்குத் தலைவராக இருந்தார். இரு கப்பற்படைகளும் லெபான்ட்டோ வளைகுடாவின் முகத்துவாரத்தில் 1571 அக்டோபரில் சந்தித்தன. வெகு விரைவில் போர் மிகக் கடுமையானதாயிற்று. துருக்கித் தளபதி கொல்லப்பட்டார். துண்டிக்கப்பட்ட அவருடைய தலை ஸ்பானியக் கப்பல் ஒன்றின் கொடிமரத்தில் ஏற்றப்பட்டது. அதைக் கண்ணுற்ற துருக்கிப் படைகள் பீதியுற்றன. எல்லாத் திக்குகளிலும் துருக்கிப் படைகள் முறியடிக்கப்பட்டன. ஒலுத்ஜ் கடும்போரிட்டு, இறுதியில் தப்பி ஓடிவிட்டார். துருக்கியர்களின் கப்பற்படையில் பெரும்பகுதியும் அழிக்கப்பட்டது. இந்த மாபெரும் போரில் ஐம்பதினுயிரம் படைவீரர்கள் உயிரிழந்தனர். பதினேயாயிரம் கிறித்தவ அடிமைகள் விடுதலை பெற்றனர்.

துருக்கியர்களுக்கு இது மாபெருந் தோல்வியாகும். மத்திய தரைக் கடலில் முற்காலத்தில் நிகழ்ந்த (Actium) கட்டற்போர் காலந்தொட்டு (கி.மு. 31) இதைப் போன்ற தோல்வி இதுவரை ஏற்பட்டதே இல்லை. ஆனலும், கிறித்தவ வல்லரசுகள் இவ் வெற்றியைப் பின்தொடர்ந்து தாக்குதலை நிகழ்த்தவில்லை. அவ் வெற்றிக்குப் பிறகு, வாகை சூடிய அக் கப்பற்படை கலைக்கப் பட்டது. ஆனல், தோல்வியுற்ற துருக்கியர்கள் தம்மை மீண்

டும் வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டனர். ஏஜியன் கடலில் ஒலுத்ஜ் நாற்பது கப்பல்களைத் திரட்டிக் கொண்டு இஸ்தம்பூலுக்குத் திரும்பினர். இன்னும் சில கப்பல்களுடன் பியாலே அங்கு வந்து சேர்ந்தார். சொக்கொல்லியும் அவருடைய சகாக்களும் கப்பற்படையை உயிர்ப்பிக்கக் கடும் முயற்சி எடுத்தனர். சலீமும்கூட இம் முயற்சியில் அக்கறை காட்டினர். நூற்றறுபது கப்பல்கள் திரட்டப் பட்டன. அடுத்த ஆண்டு வசந்த காலத்துக்குள் எல்லா ஆயத்தங்களும் செய்து முடிக்கப்பட்டு விட்டன. உத்மானியக் கப்பற் படை பெரும் பலத்தைப் பெற்றுவிட்டது. 1572ஆம் ஆண்டு கோடையில் கிறித்தவர்களின் கூட்டுக் கப்பற்படை கிழக்கு மத்தியதரைக் கடலில் மீண்டும் வந்து தோன்றிற்று. செரிகோ (Cerigo) தீவுக்கருகில் இரு படைகளும் நெருங்கின என்றாலும், மோதல் ஏற்படவில்லை. இறுதியில் ஒலுத்ஜ் தம் படைகளுக்கு மேலும் பயிற்சி யளிப்பதற்காகப் பின்வாங்கிக் கொண்டார். கூட்டுப் படை ஒன்றும் செய்வதற்கில்லை.

சுல்தானுடன் தனி ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்வதே உசிதமானதாகும் என்று வெனிஸியர்கள் 1573ஆம் ஆண்டின் இறுதியில் உணர்ந்தனர். இந் நோக்கத்துடன் அவர்களுடைய தூதர் சொக்கொல்லியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இறுதியில் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. சைப்ரஸ் தீவு துருக்கியர்கள் வசமே ஒப்படைக்கப்பட்டது; அதைக் கைப்பற்றுவதற்கு அவர்களுக்கு ஏற்பட்ட செலவையும் ஈடுசெய்வதாக வெனிஸ் வாக்குறுதி யளித்தது. ஸான்டெ தீவுக்காக வெனிஸ் செலுத்தி வந்த கப்பத் தொகை 500 துக்காத்துகளிலிருந்து 1500 துக்காத்துகளாக உயர்த்தப்பட்டது. சைப்ரஸுக்காக வெனிஸ் செலுத்த வேண்டியிருந்த 8000 துக்காத்துகள் கப்பம் நிறுத்தப் பட்டது. டால்மேஷியாவிலும் அல்பேனியாவிலும் இரு வல்லரசுகளின் எல்லைகளும் போருக்கு முற்பட்டிருந்த நிலைக்குக் கொண்டு வரப்பெற்றன. ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் வெனிஸுக்கு மிகவும் மானபங்கம் இழைப்பனவாக இருந்தன.

சுல்தானின் கப்பற்படை புத்துணர்ச்சி பெற்றுத் துரிதமாக எழுச்சி பெற்றதனால், துருக்கி சல்தனத்தே புது ஆற்றலும் நிகரற்ற சக்தியும் பெற்று விளங்கத் தொடங்கிற்று. நெடுங் காலம் வரையிலும் உத்மானியக் கப்பற்படை கடற் கொள்ளைப் படையினரின் உதவியுடன் மத்தியதரைக் கடலில் ஆதிக்கம் செலுத்தி வந்தது. சுல்தானுக்கும் வெனிஸுக்கும் இடையே ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டதற்குப் பிறகு, அக்டோபர் 1571-ல் டான் ஜான் தூனிஸுக்கெதிராக ஸ்பானியக் கப்பற்

படை ஒன்றைத் திரட்டிச் சென்றார். இந்த நகரை ஒலுத்ஜ் துருக்கியர்களின் சார்பாக ஏற்கெனவே கைப்பற்றி இருந்தார்.[1] ஆனாலும், துருக்கியர்கள் அந்த நகரின் கோட்டையை முற்றிலும் பிடித்துக் கொள்ளவில்லை யாதலால், அதனைக் கைப்பற்றுவது டான் ஜானுக்கு எளிதாகவே இருந்தது. தூனிஸ் நகரைக் கைப்பற்றி வைத்திருந்த துருக்கியர்மீது அவர் மிக எளிதாக வெற்றி பெற்றுவிட்டார். அதன் மன்னரான ஹமீதை மீண்டும் சிம்மாசனத்தில் அமர்த்த டான் ஜானுக்கு விருப்ப மில்லை. தூனிஸில் தலை நீட்டிய அந்த சுல்தானை ஸ்பானியர் கள் ஒரு பொருட்டாக மதியாமல் அவரை நேப்பிள்ஸ் நகருக்கு அனுப்பிவிட்டனர்.

டான் ஜான் தமது குறிக்கோளை நிறைவேற்றிக் கொண்டு, தூனிஸ் நகரின் பொறுப்பை இத்தாலிய, ஸ்பானிய வீரர்கள் அடங்கிய ஒரு கலப்புப் படையினிடம் ஒப்படைத்துவிட்டு, ஸ்பானிய நாட்டிற்குப் புறப்பட்டார். அக் கைப்பற்றுதலைப் பற்றிய செய்தி இஸ்தம்பூல் நகருக்கு எட்டியதும் சொக்கொல்லி யும் ஒலுத்ஜும் வெறி கொண்டு எழுந்தனர். 1574-ல் ஒலுத்ஜ் ஒரு பெரும் படையைத் திரட்டிச் சென்று, தூனிஸின் பொறுப்பை ஏற்றிருந்த கலப்புப் படையை வெகு எளிதாகத் தாக்கி முறியடித்து, அம் மாகாணத்தைக் கைப்பற்றிக் கொண் டார். வெனிஸ் ஸ்பெயினுடன் தொடர்ந்து நட்புக் கொண் டிருந்திருக்குமாயின், இந்த நிலை ஏற்பட்டிருக்காது. தனித்து நின்ற அதனால் உத்மானியர்களைச் சமாளிக்க முடியவில்லை.

1574-ல் சுல்தான் சலீம் குடிப்போதையில் இறந்துவிட்டார். அவருக்குப் பிறகு அவர் மகன் மூன்றும் முராத் பட்டத்திற்கு வந்தார். இவருடைய தந்தையைப் போன்றே இவரும் பொது விவகாரங்களில் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை சொக்கொல்லியே பிரதம மந்திரியாக இருந்து வந்தார். 1578-ல் பாரசீகத்துடன் மீண்டும் போர் மூண்டது. சைப்ரஸை வென்றவராகிய முஸ்தஃபாவின் பொறுப்பில் ஒரு பெரும் சேனை ஆசியாவுக்கு அனுப்பப்பட்டது. பாரசீகத்துடன் தொடர்பு கொண்டிருந்த ஜார்ஜியாவை அப் படை முதலில் தாக்கிக் கைப்பற்றிக் கொண் டது. ஆஸர்பைஜான் (Azerbijan) லோரிஸ்டான் (Loristan) ஷெர்ஹெஸால் (Scherhezol) என்னும் மாநிலங்களையும் முஸ்தபா கைப்பற்றிக் கொண்டார். காஸ்பியன் கடலிலிருந்த தாகெஸ் தானிலும் (Dhagestan) அவர் நுழைந்தார். 1578-ல்

[1] முன்பக்கம் 166 பார்க்க.

சொக்கொல்லி அந்தப்புர நாரிமணிகளின் சதிச் சூழ்ச்சிக்குப் பலியானார். அவருடைய வாரிசுகளின் காலத்திலும் போர் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இறுதியில், 1590-ல் பாரசீகத்துடன் அமைதி ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப் பட்டது. அதன்படி, மேலே குறிப்பிடப்பட்ட மாநிலங்கள் பாரசீக நாட்டிற்கே திருப்பிக் கொடுக்கப்பட்டன.

சலீம் இன்னும் சிறிது காலத்திற்கு உயிருடன் இருந்திருப் பாராயின், உத்மானியப் பேரரசுக்குப் பலவீனமும் சீர்குலைவும் ஏற்பட்டிருக்கக் கூடுமோ? என்பதை நிர்ணயிப்பது அவ்வளவு எளிதன்று. 1574-ல் சலீம் குடிப்போதையில் மயங்கி விழுந்து அடிபட்டு இறந்தார். நான்கு ஆண்டுகட்குப் பிறகு அவருடைய அமைச்சர் சொக்கொல்லியும் கொல்லப்பட்டார். அத்துடன், மத்தியக் கிழக்கு வரலாற்றில் சகாப்தம் ஒன்று முடிவடைகின்றது. பேரரசின் விஸ்தரிப்புக்கும் புகழுக்கும் பதிலாக விரைவில் சீர்குலைவும் அழிவும் ஏற்பட்டன. ஆற்றல் மிக்கதும், விசைத் திறம் வாய்ந்ததுமான உத்மானியப் பேரரசு இருந்த இடத்தில், பலவீனமுற்றதும் லஞ்ச ஊழலில் சிக்கிக் கிடந்ததுமான ஒரு தேய்வுற்ற நாடு தோன்றிற்று. அதைத் தாக்குவதற்கு ஐரோப்பாவின் ஆற்றல் மிக்க வல்லரசு நாடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

பதினேழும் நூற்றாண்டில் உத்மானியக் கட்டடக் கலை

உத்மானிய வரலாற்றின் இச் சிறப்புசால் காலத்தில் அதன் பெருமைக்கும் மகிமைக்கும் சான்றுக விளங்கியவை, கம்பீரத் தோற்றத்தையுடைய அதன் பள்ளிகளாகும். சுல்தான்களும், பிரதம அமைச்சர்களும், பாஷாக்களும், இளவரசர்களும், இளவரசிகளும், அந்தப்புரத்துப் பெண்டிரும் தமது நினைவினை நிலைநாட்டி வைப்பதற்காகப் பல மசூதிகளையும் கல்லறைகளையும் கட்டினர். பேரரசில் காணப்படும் மசூதிகள், குறிப்பாக இஸ்தம்பூல் நகரில் காட்சியளித்து வருகின்ற மசூதிகள் பலவும் இந்தக் காலத்தில்தான் கட்டப்பட்டவையாகும். படையெடுப்பு நிகழ்ந்த பொழுதோ அல்லது அதற்குச் சற்றுப் பிறகோ பைஸாண்டியத் திருச்சபைகள் ஒருசில மசூதிகளாக்கப்பட்டன. அவற்றுள் மிகவும் புகழ் வாய்ந்தது, ஹாஜியா சோஃபியா (Hagia Sophia) என்ற திருச்சபையாகும். ஒருசில மசூதிகள் அந்நூற்றாண்டின் இறுதியில் கட்டப்பட்டன என்றாலும், பல பெரும் பள்ளிவாசல்கள் இரண்டாம் பேஸாஜீதின் காலந்தொட்டே தோன்றி விட்டன. அவைபோன்ற மசூதிகளின் வரிசை,

சுல்தான் முதலாம் அஹ்மதுடைய காலத்தில் கட்டப்பட்ட (1617) நீல மசூதி (Blue Mosque) என்ற கட்டடத்துடன் முடிவடைகின்றது.

கட்டடத்தின் மிக எளிமையான வடிவத்தையும் பாணியையும் இஸ்தம்பூலில் சுல்தான் முதலாம் சலீமால் கட்டப்பட்ட மசூதியில் காணலாம். சதுரமான கட்டடத்தின் மீது ஒரு பெரிய அரைக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. சதுரமான கட்டடப் பாணிக்கும் வட்டமான கட்டடப் பாணிக்கும் இடையே இருந்த இடைக் காலத்தில் கட்டடங்கள் தட்டையாகவும் முக்கோண வடிவத்திலும் இருந்தன. சுல்தான்கள் பேஎஜீதும் முதலாம் சுலைமானும் கட்டிய மசூதிகளில் பேரரசுக்கால மசூதிகளுக்குரிய இரண்டாம் வகைப் பாணியை நாம் காணலாம். ஹாஜியா சோஃபியா என்னும் திருச்சபையின் பெருமையையும் மகிமையையும் கண்டு இறும்பூதெய்திய உத்மானியக் கட்டடக் கலைஞர்கள், அதில் காட்சியளிக்கும் நுண்கலை வேலைப்பாடுகளை மிகவும் பாராட்டி, பின்னே நிர்மாணிக்கப்பட்ட மசூதிகளிலும் அத்தகைய நுண்கலை நுணுக்கங்களைத் திறம்பட இயற்றி விட்டிருக்கிறார்கள்.

சினன் (Sinan) என்பவர் அக்காலத்துக் கட்டடக் கலைஞர்களுள் தலைசிறந்தவராவார். சுலைமானின் மகன் முகம்மதுக்காக அவர் கட்டிய ஷாஸாதா (இளவரசர்) மசூதி (Shahzade Mosque) தாமொரு பயிற்றுநராக இருந்தபோது கட்டப்பட்ட மசூதியாகும் என்றும், சுலைமானின் மசூதி ஒரு பயணியின் வேலைப்பாடாகும் என்றும், எதிர்னேயிலுள்ள இரண்டாம் சலீமின் மசூதி தலைசிறந்த கட்டடக் கலைஞன் ஒருவனின் சாதனையாகும் என்றும் அவரே கூறினாராம். சினன் மசூதிகளைக் கட்டுவதில் புதிய பாணி ஒன்றைப் புகுத்தினார். ஷாஸாதா மசூதியில் அவர் கட்டிய கட்டடத்திலிருந்து தொழுகை மாடத்திற்கு வழி சென்றது. அம் மாடத்திலிருந்து கொண்டு தொழுபவர்கள் மெஹ்ராபைக் (Mehrab) காணக்கூடும். சுல்தான் முதலாம் அகமதுவின் மசூதியிலும் இம் முறையே கையாளப்பட்டது. பக்கங்களிலிருந்த சிறிய அரை ஸ்தூபங்களுக்குப் பதிலாக ஒரே ஒரு பெரிய அரைக் கோபுரமே கட்டப்பட்டது. மத்தியில் இருந்த அரைக் கோபுரத்தை வட்டமான தூண்கள் தாங்கி நின்றன. எதிர்னேயில் கட்டப்பட்ட மசூதியில் சினன் தமது பாணியை மேலும் மாற்றிக் கொண்டார். இவ்விதமாகப் பற்பல அலங்கரிப்புகளுடன் கட்டப்பட்ட இஸ்தம்பூல் நகரப் பள்ளிகள் அவற்றின் அரைக் கோபுரங்களுக்கும் ஒல்லியான மினராக்களுக்கும் சிறப்புப்பெற்று விளங்கின.

உத்மானிய இலக்கியம்

பதினாறும் நூற்றாண்டு கட்டடக் கலையில் மட்டுமே புகழ் பெற்று விளங்கவில்லை. இலக்கியத்திலும் அஃது ஓர் ஒளிச்சுடர் வீசும் காலமாக இருந்தது. சுலைமான் வரலாற்று உணர்ச்சியைப் பெற்றிருந்தார். இரண்டாம் முகம்மதுவும் கான்ஸ்டன்ட்டைனும் ஒருவருக்கொருவர் சரிநிகராகவே இருந்தனர். தம்மை ஜஸ்டினியனுக்கு நிகராகவும் சுலைமான் கருதிக் கொண்டார். கிழக்கு ரோமாபுரிப் பேரரசின் பேரரசராக இருந்த ஜஸ்டினியனைப் போன்றே சுலைமானும் சட்டத் தொகுப்புகளை உருவாக்கினர்; சிறப்புமிக்க சமயக் கட்டடங்களை நிருமித்தார்; நீர்த் தேக்கங் களைக் கட்டினர்; படைத் தலைவராகவும் அறிஞர்களை ஆதரிப்பவ ராகவும் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவராகவும் அவர் விளங்கினர். சிறந்த உத்மானிய கவிஞர்கள் எழுத்தாளர்கள் ஆகியவர்களில் காற் பங்கினர், சுலைமானின் மற்றும் இரண்டாம் சலீமின் காலத்துக்குரியவர்களாவர். கவிதைகளும் வரலாறும் அக்காலத்திய சிறந்த இலக்கியச் சாதனைகளாகும். வரலாற்று நிகழ்ச்சிக் குறிப்பேடு ஒன்றை சுலைமான் அன்றன்றும் எழுதி வந்தார். இது இவருடைய ஆட்சிக் காலத்தைப்பற்றி அறிந்து கொள்வதற்குப் பெரும் பயனளிப்பதாக உள்ளது. சுலைமானும் இரண்டாம் சலீமும் புகழ் பெற்ற கவிஞர்களாவர். அக்காலத்தில் வாழ்ந்த அப்துல் பாக்கி (Abd-al-Baki) என்பவர் துருக்கியர் களின் ஆட்சிக் காலத்திலேயே மிகவும் சிறப்புப் பெற்று விளங்கிய கவிஞராவார். மற்றும் கியாலி (Khiali) சாதி (Sati) டெலி பிராதர் (Deli Brader) யஹ்யா பே (Yahya Bey) ஷெம்ஸி (Shemsi) போன்ற பல கவிஞர்களும் இக்காலத்தை அலங் கரித்தவர்களாவர்.

வரலாற்றறிஞர்களும் அக் காலத்தில் திகழ்ந்தனர். அவர்க ளுடைய நூல்கள் சிற்சில வேளைகளில் பொதுவானவையாக வும் சிற்சில வேளைகளில் குறிப்பானவையாகவும் இருந்தன; பின் குறிப்பிடப்பட்ட நூல்கள் ஒரு குறிப்பிட்ட கட்டத்தைப் பற்றியோ குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியைப்பற்றியோ விவரித்தன: ரமலான் (Ramazan) என்பவர் ரோட்ஸ் தீவு கைப்பற்றப் பட்டதைக் குறிப்பிடுகின்றார். கமால் பாஷா ஸாதே (Kamal Pasha Zade) என்பவர் மோஹாக்ஸ் வெற்றியைப்பற்றி எழுதி யுள்ளார். உத்மானிய வரலாற்றறிஞர்களுள் பெருமதிப்புக் குரியவராகிய சாதுத்தீன் (Saad-al-Din) என்பவர் பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் தோன்றினர். சுலைமானின் பேரராகிய மூன்றாம் முராத் என்பவருடைய ஆசானான இவ் வரலாற்றறிஞர்

'வரலாறுகளின் மகுடம்' (The Crown of Histories) என்ற நூலை இயற்றினர். பல பகுதிகளாக எழுதப்பட்ட இந் நூல் உத்மானிய வரலாற்றின் முக்கியப் பகுதியைப் பற்றியதாகும். அவருடைய மகனால் தொடர்ந்து எழுதப்பட்டு வந்த இந்த நூல், பழங் காலந்தொட்டு அவருடைய காலம் வரையிலும் ஏற்பட்ட உத் மானிய வளர்ச்சிக்கான கருத்துக்களின்மீது தன் செல்வாக்கைப் படர வைத்திருந்தது.

மத்தியதரைக் கடற் பிரதேசங்களிலும் ஐரோப்பிய நாடு களிலும் இருந்தனபோன்றே பதினாறும் நூற்றாண்டில் துருக்கிப் பேரரசின் முன்னேற்றமும் இருந்தது. முதலாம் சலீம் கொடுமை யானவர், மிகுந்த அறிவு படைத்தவர், ஆற்றல் மிக்கவர். அவர் தமது அரசாங்கம் என்ற இயந்திரத்தை ஒழுங்குற அமைத்துக்கொண்டு, படையெடுப்புக்கு ஆயத்தமானார். சுலை மான் மதிப்புடன் நடந்துகொண்டார்; ஒழுங்குடனும் நேர்மை யுடனும் மனச்சாட்சியுடனும், கலையார்வ முடையவராகவும் வீரராகவும் பண்பு மிக்கவராகவும் அவர் ஒழுகிக்கொண்டார். உத்மானிய பேரரசுக்கே அவர் ஒரு பெருமதிப்பினை வழங்கினர். இரண்டாம் சலீம் பல திறமைகளைப் படைத்தவர்; ஆனாலும், பொறுப்பற்றவர், உணர்ச்சி வசப்பட்டவர், குடிகாரர். நாட்டின் அழிவை அவர் துரிதப்படுத்தி விட்டார்.

13. உத்மானிய பேரரசின் நிறுவனங்கள்

சுல்தான்

சுல்தான் உத்மானியப் பேரரசின் தலைவராகவும், பல்வேறு சமூக நிலையங்களுக்குத் தலைமை தாங்குபவராகவும் விளங்குகிறார். மேலை நாடுகளில் அவர் 'போர்ட்டே' (Porte) என்று அழைக்கப்பட்டார். ஆணைகளும் முடிவுகளும் அரண்மனையின் தலைமை வாயிலின் வழியாக வெளிவந்தன வாகையால், அப் பெயர் அவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். தமது ஆதிக்கத்துக்குட் பட்டிருந்த இராணுவத்தினின்றும் சுல்தான் தமது அதிகாரம் வரப்பெற்றார். தவிரவும், அவருடைய குடிமக்கள் அவருக்குச் செலுத்திய அஞ்சலி மரியாதை ஆகியவற்றினின்றும், முதலாம் சலீம் எகிப்தைக் கைப்பற்றியதற்குப் பிறகு, கலீஃபா பெற்றிருந்த அரசியல் அமைப்புக்கான நிலையினின்றும், அவர் தமது அதிகாரத்தைப் பெற்றுவந்தார்.

எல்லா இராணுவமும் அவருடைய அதிகாரத்துக்கே உட்பட்டிருந்தன. அடிமைகளாயினும், நிலமானியக் குதிரை வீரர்களாயினும், இராணுவத்தில் ஒழுங்குறச் சேர்ந்திராத படை வீரர்களாயினும், கடற் படையினராயினும், யாவருமே அவருடைய உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தனர். எப் பொழுதுமே அவர்கள் அவ்விதம் நடந்துகொண்டனர் என்று கூறுவதற்கில்லை. நிலமானிய முறைக்குரிய குதிரைவீரர்கள் சுல்தானுக்குத் தெரியாமல் சிற்சில வேளைகளில் கிறித்தவ நாடுகளின்மீது கொள்ளைப் படையெடுப்புகளை நடத்தினர். சிற்சில வேளைகளில் இப்படிப்பட்ட செயல்களால் அரசரின் நிலைக்குத் தொல்லை ஏற்பட்டது. படையெடுத்துச் சென்று விடுவதனால், எதிர்னே இஸ்தம்பூல் போன்ற நகரங்களின் இன்ப சுகங்களைப் பறிகொடுக்க வேண்டியதாகின்றதே என்று மனம் நொந்து

கொண்டிருந்த படையினர் போர் முஸ்தீபுகளைக் கைவிட்டு விட்டு நாடு திரும்ப வேண்டுமெனச் சிற்சில வேளைகளில் வற்புறுத்தினர். அரசர் சிம்மாசனத்திற்கு வரும்போதெல்லாம், பல்வேறு சலுகைகளையும் ரொக்கப் பணத்தையும் தமக்கு அளிக்குமாறு ஜனிஸ்ஸரீப் படையினரை வற்புறுத்தினர். இருந்தபோதிலும், இராணுவப் பணித்துறையினர் பொதுவாக அரசன்பால் விசுவாசம் கொண்டேயிருந்தனர். மேலை நாட்டுப் போர் வீரர்களைவிட இவர்கள் அதிகக் கீழ்ப்படிதலைத் தெரிவித்துக்கொண்டிருந்தனர் என்பது உறுதி. சுல்தான் ஒரு காஸீ (Ghazi) ஆவார்: அதாவது, இஸ்லாமியப் போர் வீரராவார். அதுவே அவர் தலைமை வகிப்பதற்குக் காரணமாயிற்று. உத்மானிய வம்சம் பெற்றிருந்த புகழை மற்றெந்த ஆளும் வம்சமும் பெற்றிருக்கவில்லை. அதிகாரிகளில் பலர் அடிமை நிலையிலிருந்து முன்னுக்கு வந்ததனாலும், அவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியின் விளைவாகவும், அவர்களுடைய வாழ்க்கையின்மீது சுல்தான் அசாதாரணமான பிடிப்பினையைக் கொண்டிருந்தார். அவருடைய விருப்பத்திற்கு மாறுக நடந்துகொள்வதென்றால், தங்கள் உயிருக்கே ஆபத்து விளையக்கூடும் என்பதையும் அந்த அதிகாரிகள் திட்டவட்டமாக அறிந்திருந்தனர்.

உத்மானிய சுல்தான்கள் தம்மை 'கலீஃபா' என்று அழைத்துக் கொள்ளவில்லையாயினும், முதலாம் சலீமுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்தவர்கள் அப் பதவிக்குரிய (கிலாபத்) அதிகாரத்தைப் பயன்படுத்தி வந்தனர். சுல்தான் இஸ்லாமிய நாட்டின் தலைவர், சமயத்தைப் பாதுகாப்பவர், புனிதச் சட்டத்தை நிறைவேற்றுபவர் என்றும் கருதப்பட்டார். முஸ்லிம்கள் அவருக்குக் கீழ்ப்படிதலைத் தெரிவித்தனர். கிறித்தவர்களும் மறைமுகமாக அதுபோன்றே செய்தனர். ஏனெனில், சுல்தான் கிரேக்கத் திருச்சபையின் தலைவரை நியமித்து, அவருக்குரிய ஆடை அங்கிகளை அணிவித்துத் திருச்சபையின் அதிகாரிகளை அவருக்குக் கீழ்ப்படிதலைத் தெரிவிக்குமாறு உத்தரவிட்டார்.

பொதுப்படையாக, உத்மானியர்கள் அராபிய முஸ்லீம்களின் சட்ட திட்டங்களைப் பின்பற்றினர். திட்டவட்டமான நான்கு சட்டத் தொகுப்புகள் பழக்கத்தில் இருந்துவந்தன. மூன்றுக்கும் மேலானதாகவும், முதன்மையானதாகவும் விளங்கியது, ஷரீஅத் (Sharia) என்னும் புனிதச் சட்டமாகும். புனிதச் சட்டத்திற்கு, ஹனஃபீ வகுப்பினர் (Hanifa School) அளித்த விளக்கத்தையே உத்மானியர்கள் பின்பற்றினர். சுல்தான், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் யாவருமே அப் புனிதச் சட்டத்

திற்குக் கட்டுப்பட்டிருந்தனர். அதனைப் பொருட்படுத்தாமை என்பது பேரிழப்பை விலைக்கு வாங்குவதாகும். இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தவை கானூன்கள் (Khanun); அதாவது, அரசன் வெளிப்படையாக வெளியிட்ட ஆணைகளாகும். அவ் வாணைகள் நிர்வாகத்தைப்பற்றியன வாக, அல்லது புனிதச் சட்டத்திற்குத் துணைச் சட்டங்களாக இருக்கக்கூடும். கானூன் கள் உத்மானிய அரசின் சிக்கல் நிறைந்த சடங்குச் சட்டங் களைப்பற்றியனவாகவும் இருக்கக்கூடும். நிலமானிய, இராணுவ, நிதி, குற்ற, காவல்துறைச் சட்டங்களைப்பற்றியன வாகவும் இருக்கக்கூடும். சட்டங்களின் வரிசையில் கடைசியாக இருந் தவை ஆதத் (Adat) மற்றும் உர்ஃப் (Urf) என்பனவாகும். ஆதத் என்பது பழங்காலந் தொட்டுத் துருக்கியர்களும், உத்மானியர் களும், அவர்களால் வெல்லப்பட்டவர்களும் பின்பற்றிய பழக்க வழக்கங்களாகும். அவை ஒவ்வொரு நாட்டினின்றும் வேறு பட்டிருக்கும். உர்ஃப் என்பது ஆட்சிபுரியும் அரசனுடைய இறைமை அல்லது தீர்மானமாகும். அது பழக்க வழக்கங் களுக்கு மாறுகவும் இருக்கக்கூடும். கானூன் ஆதத்துகளையும் உர்ஃபுகளையும் மாற்றவல்லது; மற்ற கானூன்களையும் மாற்றக் கூடியதாகும்; அல்லது ரத்து செய்யக்கூடியதாகும். புனிதச் சட்டம் மீறப்படக் கூடாததாகும். புனிதச் சட்டத்தினுலோ கானூன்களினுலோ நிலைநாட்டப்பட்டிருந்த நாட்டின் மாபெரும் நிறுவனங்கள் அனைத்தும் கடவுளின் படைப்புக்கள் என்றே, சுல்தானின் இறைமைத் தீர்மானத்திலிருந்து தோன்றியவை என்றேதாம் கருதப்பட்டன. எவையாயினும், மக்களுடைய விருப்பத்திலிருந்து வந்தவை என்று அவை எப்பொழுதும் கருதப்படவில்லை. பேரரசின் நிறுவனங்களை, ஆட்சிக்குரிய நிறுவனங்கள், முஸ்லிம் நிறுவனங்கள் என இரண்டாக வகைப் படுத்தி ஆராயலாம்.

1. ஆட்சிக்குரிய நிறுவனங்கள்

ஆளும் நிறுவனத்தில் அடங்கியிருந்தவையாவன: சுல் தானும் அவருடைய குடும்பமும்; அரசர் குடும்பத்து அதிகாரிகள்; அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரிகள்; காலாட்படை, பொறி யியலாளர்கள், போர்க்கப்படையினர், கப்பற்படையினர் ஆகிய வர்கள் அடங்கிய நிரந்தரமான சேனை; இந்த அலுவல்களை மேற்கொள்வதற்காகப் பயிற்சி பெறும் சிறுவர்கள்; நிலமானியப் பிரபுக்கள், வீரர்கள், அவர்களுடைய நிர்வாக அதிகாரிகள் ஆகியவர்களாவர். முஸ்லிம் நிறுவனம் எனப்படுவதில் போதனை சிரியர்கள், சமய வல்லுநர்கள், மசூதிகள், அறக்கட்டளைகள்

ஆகியவற்றின் அதிகாரிகள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், தர்வேஷுகள் ஆகியவர்கள் அடங்கியிருந்தனர். போர்க் கைதிகள், கட்சி மாறினவர்கள் ஆகியவர்கள் எல்லாரும் முன்குறிப்பிடப்பட்ட வகையைச் சேர்ந்தவர்கள். சுதந்தர உரிமைகள் பெற்றிருந்த முஸ்லிம்கள் பின்குறிப்பிடப்பட்ட வகையைச் சார்ந்தவர்களே. இருப்பினும், அவர்கள் ஆளும் நிறுவனத்தில் சேர்ந்திருந்தனர். முதல் தலைமுறை உத்மானியர்களின் மகன்கள் அனைவரும் சுதந்தரம் பெற்ற முஸ்லிம்களாவர். ஆனலும், அவர்கள் பொதுவாக ஆளும் நிறுவனத்தில் பணி புரிந்துகொண்டிருந்தனர். உயர் அதிகாரிகள், நிலமானியப் பிரபுக்கள் ஆகியவர்களுள் பலர் உத்மானிய முஸ்லிம் குடும்பங்களின் வழித்தோன்றல்களாவர். நிலமானியப் பிரபுக்கள் தவிர, ஆளும் நிறுவனத்தைச் சார்ந்த தனி நபர்களும் சுல்தானின் அரசவையின் உறுப்பினர்களாக இருந்தனர். சிறப்பு நிகழ்ச்சிகளிலும் அரசருடைய முகாம்களிலும் அவர்கள் கலந்துகொள்வதற்கும், வீற்றிருப்பதற்கும் உரிமை பெற்றிருந்தனர். இன்னும் குறிப்பாக, அரசவை என்பதில் அந்தப்புரம், உட்புறத்துப் பணித்துறை, வெளிப்புறத்துப் பணித்துறை ஆகியவை எல்லாம் அடங்கியிருந்தன.

ஏறக்குறைய 1540ஆம் ஆண்டு வரையிலும் ஒருசிலரே அந்தப்புரத்தில் இருந்தனர். அது கான்ஸ்டான்ட்டிநோப்பிலில் (இஸ்தம்பூலில்) பழைய மாளிகையில் அமைக்கப்பட்டிருந்தது; அல்லது எதிர்னே, டெமோட்டிக்கா (Demotika) போன்ற இடங்களிலிருந்த அரண்மனைகளில் அமைந்திருந்தது. அதில் சுல்தானின் வெள்ளாட்டிகள், அரசவையின் வேலைக்காரிகள், பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த பெண்கள் ஆகியவர்கள் குடியிருந்தனர். பயிற்சி பெறும் மாணவியர்கள் இருபத்தைந்து வயதடைந்ததும் அதிகாரிகளுக்குத் திருமணம் செய்துகொடுக்கப்பட்டனர். அந்தப்புரத்தில் பிரதான இடத்தைப் பெற்றிருந்தவள் சுல்தானின் தாய் (சுல்தானெ வாலிதா) ஆவாள்; அவளுக்குப் பிறகு மதிப்புப் பெற்றவள் சுல்தானின் மூத்த மகனின் தாய் ஆவாள். அதற்குப் பிறகு மதிப்புப் பெற்றவர்கள் மற்ற மகன்களின் தாய்மார்களாவர். எண்ணிக்கையில் இருநூறுக[1] இருந்த அவர்கள் கருநிற அலிகளால் பாதுகாக்கப்பட்டு வந்தனர். அந்த அந்தப்புரம் 1540-ல் பெரிய மாளிகைக்கு

[1] குர்ஆனின் கட்டளைப்படி எந்த ஒரு கணவனும் ஏக காலத்தில் 4 மனைவியர்க்குமேல் மணக்க முடியாது. அக்கால சுல்தான்களின் பலதாரத்துக்கு முல்லாக்கள் ஒத்தூதி, இப்படித் தவறிழைக்கச் செய்துவிட்டார்கள்.

மாற்றப்பெற்றது. பழைய அரண்மனையில் அந்தப்புரத்திலிருந்து ஓய்வுபெற்ற பெண்களும் வயது முதிர்ந்தவர்களும் தங்கியிருந்தனர்.

சுல்தானின் சொந்த விவகாரங்களைக் கவனிக்கும் அலுவலர்கள் உள்துறைப் பணியாளர்களாவர். அவர்கள் ஐந்து கூட்டத்தினராக, அல்லது அறைகள் அல்லது மாடங்களில் வதிபவர்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். உள்அறை (அரசர் படுக்கை அறை), கருவூலம், உணவுத்துறை அரங்கப் பணிமனை, பெரிய மாடம், சிறிய மாடம் என ஐவகையாகும். உள்பணித்துறையின் தலைவர் 'வாயிலின் படைப்பெருந் தலைவர்' (General of the Gate) என்றழைக்கப்பட்டார். அவர் அரசாங்கத்து உயர் அதிகாரியாவார். சடங்குகளின் தலைவராகவும், அரண்மனைப் பள்ளியின் இயக்குநராகவும், சுல்தானின் அந்தரங்க அதிகாரியாகவும் அவர் பணியாற்றினார். மாடங்களின் நிர்வாகிகளும் அவர்களுடைய நேர்முகத் துணையாளர்களும் வெள்ளைநிற அலிகளாக[1] இருந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டில் அவர்களுடைய எண்ணிக்கை ஐம்பதாக இருந்தது. வெள்ளை அலிகள் ஒருபுறத்தில் இருக்க, மாடங்களின் பயிற்சி இளந்துணைவர் 'பேஜஸ்' (Pages) என்றழைக்கப்பட்டனர். அவர்கள் உயர்வம்சக் கைதிகளிலிருந்தும், கப்பமாக அளிக்கப்பட்ட குழந்தைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர். பெரிய சிறிய மாடங்கள் என்பவை அரண்மனைப் பள்ளியின் பிரிவுகளாகும். மற்ற மாடங்களில் இருந்த சிறுவர்கள் சுல்தானுடைய நிர்வாக விவகாரங்களையும் அவருடைய அரண்மனையின் நிர்வாகப் பொறுப்புகளையும் கவனிப்பதற்காக மேல் பட்டதாரி அளவில் பயிற்சிபெற்று வந்தவர்களாவர். ஓர் இளந்துணைவன் (பேஜ்) அரண்மனை உள்துறையிலிருந்து வெளித்துறைக்குப் பதவி மாற்றம் செய்யப்பட்டானையின், மீண்டும் அவன் உள்துறைக்கு வரமுடியாது. உள்பணித்துறையினர் அரண்மனையில் நடக்கும் எதைப்பற்றியும் வெளியிடாது வாயை மூடிக்கொண்டே இருப்பர்.

வெளிப்பணித்துறையில் சுல்தானுடைய கற்றறிந்த நண்பர்கள், சமையலறைப் பணியாளர்கள், அரசனுடைய சொத்

[1] அந்தப்புரத்துக்குள்ளே இருக்கும் பெண்டிருக்கும், வெளியே இருக்கும் ஆடவருக்கும் இடையே தாராளமாக மாறி மாறிச் சென்றுவர அலிகளுக்கே யோக்யதை உண்டு. அலியைத் தவிர வேறு எந்த வாலிபனாவது அந்தப்புரத்துள் நுழைந்து விடுவானானால், அவன் உயிர் தப்ப முடியாது. சுல்தானிடம் வெள்ளை அலிகளும் சுல்தானுக்களிடம் கறுப்பு அலிகளும் பணிபுரிந்தமை உத்மானியர்கள் கடைப்பிடித்த நாகரிகம் போலும்!

தப் பாதுகாவலர், அரண்மனைப் பாதுகாவலர்கள், தோட்டக் காரர்கள், கூடாரமடிப்பவர்கள், வேட்டைக்காரர்களின் தலைவர் கள், குதிரைப் பாதுகாப்பு வீரர்கள், மற்றும் வழங்கீடு அதிகாரிகள் ஆகியவர்களெல்லாரும் அடங்கியிருந்தனர். இவ் வதிகாரிகளின் சிறப்பும் அவர்கள் வகித்த பதவிகளின் புகழும் பெருமளவும் வேறுபட்டே இருந்தன. சுல்தானின் கற்றறிந்த நண்பர்கள் முஸ்லிம் நிறுவனத்தின் உறுப்பினர்களாக இருந் தனர். அதில் சுல்தானின் சமயப் போதனாசிரியர், அறிவுரை யாளர், பிரசாரகர்கள், முஅஸ்ஸின்கள் (Muezzins), ஓதுபவர் கள், படிப்பவர்கள், சோதிடர்கள், மருத்துவர்கள் மற்றும் அறுவை மருத்துவர்கள் ஆகியவர்கள் எல்லாரும் அடங்கியிருந் தனர். அரசனின் சொந்தப் பாதுகாவலர்கள் உயர் அதிகாரி களின் மகன்களிலிருந்தும், உள்பணித்துறைக்குரிய சிறப்பான பட்டதாரிகளிலிருந்தும், அனுபவமிக்க ஜனிஸ்ஸரீகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்தத்தில், அவர்களின் எண் ணிக்கை நூறுக இருந்தது. அரண்மனைப் பாதுகாவலர்களுள் பலர் பொறுப்புள்ள அதிகாரிகளாவர். தூதர்களும், தூக்கிலிடு பவர்களும் அக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். மற்றவர் கள் அரண்மனைத் தோட்டங்களைக் கவனித்தனர், அல்லது பாஸ்பரஸில் செல்லும் அரசனுடைய படகுகளை ஓட்டினர். ஜனிஸ்ஸரீப் படையில் சேரவிருக்கும் சிறுவர்கள் வெளிப்பணித் துறையில் உதவியாட்களாகவும் பணியாற்றினர்.

முதலாம் சுலைமானுடைய ஆட்சிக் காலத்தில், சுல்தா னுடைய அரசவையிலும் அதனுடைய முந்நூறு கிளைகளிலும் சற்றேறக்குறையப் பத்தாயிரம் பேர் இருந்தனர். அவருக்கு முற்பட்ட சுல்தான்கள் சற்று எளிமையான வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தார்கள். சுல்தான அவருடைய பணியாட்களி னின்றும் வேறுபடுத்திக் காண்பது என்பது இயலாததாகும் என்று மசூதிகளிலும் மற்றும் பல இடங்களிலும் நடைபெற்ற சடங்குகளைப்பற்றிய குறிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன. இரண் டாம் முராதின் அரசவையிலும், உறுதியாக இரண்டாம் முகம் மதுவின் அரசவையிலும் சடங்குகளின் ஆடம்பரம் அதிகமாகி விட்டிருந்தது. பதினைறும் நூற்றாண்டின் மத்தியில் பணித்துறை யின் ஒவ்வொரு பகுதியும் கடைப்பிடித்த சடங்குகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகி விட்டதனால், சடங்குகளுக் கான சட்டத் தொகுப்பு ஒன்று உருவாயிற்று. கடமைகளை நிறைவேற்றுவது போலவே சடங்குகளைப் பின்பற்றுவதும் மிகவும் முக்கியமாகி விட்டது.

சுலைமானின் ஆட்சி தொடங்கும் வரையிலும், அரசாங்கம், நிர்வாகம் ஆகியவற்றின் விவகாரங்களில் அவையினர் தலையிடுவது என்பது மிக அரிதாகவே இருந்தது. சுல்தானுடைய சொந்தத் தேவைகளையும், அரண்மனையினரின் தனிப்பட்ட தேவைகளையும் அரசவையே கவனித்து வந்தது. அரசவை அதிகாரிகளும் அரண்மனை முதல்வர்களும் சுல்தான நேரில் சந்திக்கக் கூடியவர்களாக இருந்ததனால், அவர்கள் பெரும் செல்வாக்குப் பெற்று விளங்கினர்; அவர்களுடைய தயவும் அதிகமாக நாடப்பட்டது. உயர் அதிகாரி ஒருவரை நண்பராகப் பெற்றிருந்தால் பல பலன்களை எவரும் அடைந்து விடலாம். அரசாங்கப் பொறுப்பை ஏற்றிருந்த நிர்வாகிகள், பொதுவாக ஆளும் நிறுவனத்தின் உறுப்பினர்களாக இருந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டு தொட்டு, பெரும்பாலும் கப்பமாகச் செலுத்தப்பட்ட குழந்தைகளிலிருந்தும், கைதிகளாக அடைக்கப்பட்டிருந்த குழந்தைகளிலிருந்தும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்தப் பணித்துறையின் உச்சத்தில் பிரதம அமைச்சர் இருந்தார். பின்னாளில், நான்கு அமைச்சர்கள் 'வஸீர்'கள்[1] எனும் பட்டப் பெயரைப் பெற்றிருந்த போது, அதில் ஒருவர் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார். இந்த அமைச்சர்களைக் கொண்ட சபையை அல்லது 'திவானை' மன்னர் அரச விவகாரங்களைப்பற்றி ஏதும் முடிவெடுக்கக் கலந்து ஆலோசித்தார். அச்சபையின் ஏனை உறுப்பினர்கள், தலைமை நீதிபதிகள் (இரண்டு பேர்) — அனட்டோலியாவுக்கு ஒருவரும், ரூமேலியாவுக்கு ஒருவரும், இரண்டு தப்தேதார்கள் (Deftedars) அல்லது கருவூலர்கள், (ஒருவர் அனட்டோலியாவுக்கும் மற்றவர் ரூமேலியாவுக்கும் நியமிக்கப்பட்டிருந்தனர்) தலைமை நிஷான்ஜி (Nishanji) அல்லது தலைமைச் செயலர் என்பவர்களாவர்.

மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுகளை யெல்லாம் கருவூலர்கள் கவனித்து வந்தனர். இரண்டாம் முகம்மதுவின் ஆட்சிக் காலம் தொடங்கும் வரையிலும் தீர்வைகளை வசூலிக்கும் பொறுப்பைக் கருவூலம் ஏற்றிருந்தது. ஆனால், தீர்வைகளை வசூலிப்பதில் இடையூறுகள் ஏற்பட்டதனால், அப் பொறுப்பு ஏலத்திற்கு விடப்பட்டது. உத்மானியப் பேரரசில் நிதிப் பொறுப்பு, பன்மூகப்படுத்தப்பட்டிருந்தது. மாநில அரசாங்கங்கள் தாம் திரட்டிய நிதிகளைத் தாமே செலவழித்தன. அறக் கொடைகள் சிற்சில வேளைகளில் அறநிலையங்களிலிருந்து வந்த

[1] வஸீர் (Vizier or Wazir) என்னும். அமைச்சர் என்று பொருள்.

வருவாயைக் கொண்டு பேணிக் காக்கப்பட்டு வந்தன. 1520-ல் மத்திய அரசாங்கத்தின் வருமானம் அறுபது இலட்சத்திலிருந்து எண்பது இலட்சம் வரையிலுமான துக்காத்துகளாக இருந்தது என்று கணக்கிடப்பட்டுள்ளது. தகுமைச் செயலர் சுல்தானின் ஆணைகளையும் அவசரச் சட்டங்களையும் பதிவு செய்வார். அதிகார பூர்வமான பத்திரங்கள் அனைத்தின்மீதும் அரசருடைய முத்திரையையும் அவ்வதிகாரியே பொறிப்பார்.

திங்கள், செவ்வாய், சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில் திவான் என்னும் இராச்சிய சபை அரசனைச் சந்தித்தது.பலமணி நேரம் வரை கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டன. அது ஒரு காபினெட் (அமைச்சர் குழுவைப்) போலவும், உயர்நீதி மன்றத்தைப் போலவும் பணியாற்றிற்று. உண்மையில், அது உத்மானிய அரசின் இரு கிளைகளையும் இணைப்பதற்கான வேலையைச் செய்து வந்தது.

படையும் சேனையும்

உத்மானிய அரசு முறையில் சேனை ஒரு முக்கிய இடத்தை வகித்தது. அதற்கு இரண்டு பிரிவுகள் இருந்தன. ஒன்று, போர் புரிவதையே ஒரு தொழிலாகக் கொண்டிருந்த ஜனிஸ்ஸரீப் படையினர். இப் படையே உத்மானிய சேனையின் நடுப்பகுதியாக விளங்கிற்று என்று கூறுவது மிகையாகாது. பதினைரும் நூற்றாண்டில் ஜனிஸ்ஸரீகளின் எண்ணிக்கை பத்தாயிரத்திற்கு மேற்பட்டதாகவே இருந்தது. அவர்களின் தலைவர் 'ஆகா' (Agha) என்றழைக்கப்பட்டார். பொதுவாக, அவர் அரண்மனையில் பயிற்சி பெற்ற அதிகாரியாக இருப்பார்; ஆனாலும், சிற்சில வேளைகளில் மற்ற ஜனிஸ்ஸரீ அதிகாரிகள் கூட்டத்திலிருந்தும் 'ஆகா' தேர்ந்தெடுக்கப்பட்டார். வில்வீரர்களில் நூற்றைம்பது பேர் 'சோலக்' (Solak) என்னும் பாதுகாப்புப் படையாயினர். சுல்தான் படையெடுத்துச் செல்லும் போது இவர்களும் அவருடன் சென்றனர். மற்றச் சிறந்த ஜனிஸ்ஸரீப் படையினரும் சுல்தானின் பணித்துறையில் வேறு பல இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இப் படையில் இருந்தவர்கள் போர்முனைகளிலிருந்து கைதிகளாகப் பிடித்துவரப்பட்டகிறித்தவர்களாவர். பேரரசு நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டிருக்கையில், நிலமானியப் படை போதுமானதாக இருக்கவில்லை. நிலமானியப் படையினரின் கவனமெல்லாம் அவர்களுடைய நிலங்களின்மீதே இருந்ததனால், அவர்களை நம்பி நெடுநாள்வரை வெளிநாட்டில் இருக்கச் சேனையால் இயலவில்லை. ஆகவே, புதிய படை (யெனி செரிஸ்—Yeni Ceries—

அல்லது ஜனிஸ்ஸரீகள்) ஒன்று உருவாயிற்று. 'தெவ்ஷெர்மெ' (Devsherme) என்ற முறையின்படி அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். வெல்லப்பட்ட மாநிலங்களில் குடியிருந்த கிறித்த வர்களின் மகன்கள் இப் படைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இளம் வயதிலேயே அவர்கள் கொண்டு செல்லப்பட்டு, சிறந்த பயிற்சியும் சலுகைகளும் அளிக்கப் பெற்றனர். இவற்றின் விளை வாக, அவர்கள் சுல்தான்மீது தளராப் பற்றுதல் கொண்டிருந் தனர். ஆனலும், அவர்கள் தொழிலுக்காகத் தம் வாழ்க்கை யையே தியாகம் செய்ய நேரிட்டது. அவர்கள் மணம் புரிந்து கொள்ளலாகாது. அவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியின் விளைவாக, அவர்களுக்கு என்று எந்தச் சொந்தக் கருத்துமில் லாது, சுயநலமில்லாது, அவர்கள் சுல்தான் மீது சிறிதும் அசையா விசுவாசத்தைக் கொண்டிருந்தனர். ஆனலும், சுலைமானின் மறைவிற்குப் பிறகு, பதினேழாம் பதினெட்டாம் நூற்றுண்டுகளில் சுல்தான்கள் மிகவும் பலவீனமுற்றவர்களாக ஆகிவிட்டபோது, இக் கூலிப்படை அரசனுக்கு ஒரு பேராபத் தாயிற்று. சதி, சூழ்ச்சிகளில் இது பெரும் பங்கு கொண்டது; பல நெருக்கடிகளை ஏற்படுத்திற்று. 1582-ல் மூன்றும் முராத் அன்னியர்களை இப் படையில் சேர்த்துக்கொண்ட காலந் தொட்டு இக் கேடு ஏற்பட்டது. இதனல் தரமும் பெருமளவும் குறைந்துவிட்டது.

படையின் மற்றொரு கிளை, நிலமானிய முறையின் அடிப் படையில் அமைந்திருந்தது. கலீஃபாக்களின் ஆட்சியின் தொடக்கத்திலும், செல்ஜூக்கியர்களின் காலத்திலும், மீண்டும் உத்மானியப் பேரரசு உருவாகி இருந்த காலத்திலும், தேவைப் பட்டபோது போர்ப்பணி புரியவேண்டும் என்னும் நிபந்தனையின் அடிப்படையில் நிலமானியங்கள் அளிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் இராணுவமுறை அமைந்திருந் தது. நிலத்தில் குடியிருந்து, அதனைப் பயிரிட்டு, குதிரைகளை யும் போர் ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு, ஆட்களுக்குப் பயிற்சி அளித்துப் போர்முனைக்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள முன்வந்தவர்களுக்கு சுல்தான் நிலங்களை வழங்கினர். இதுபோன்று நிலங்களைப் பெற்றிருந்தவர்கள் 'திர்லிக்குகள்' (Dirliks) என்றழைக்கப்பட்டனர். நிலங்களைப் பெற்றவர்களில் பெரும்பாலோர் 'சிப்பாஹீகள்' (Sipahis) என்றழைக்கப்பட்ட னர். அவர்கள் தங்களுடைய வாழ்நாள் முழுவதற்குமே அந் நிலங்களைப் பெற்றிருக்கலாம். அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு, அவர்களுடைய மகன்கள் அதே பொறுப்புகளை அதே நிபந்தனைகளின்படி பெறலாம். ஒரு சிப்பாஹீ மகனை விட்டுச்

செல்லாமல் இறந்துவிடுவானுயின், அவனுடைய நிலங்களும் உரிமைகளும் மீண்டும் அரசனுக்கே உரியனவாகிவிடும். உத்மானியப் பேரரசில் நிலமானியப் படையினரின்மீது மத்திய அரசு தீவிரமான பிடிப்பினேயைக் கொண்டிருந்தது. இதனுல், மாநில அரசுகளால் சுல்தானே எதிர்த்து நிற்க இயலவில்லே. பிந்திய நூற்ருண்டுகளில், சுல்தான் பலவீனமுற்றிருந்தபோது தான், அவ்வித எதிர்ப்புத் தோன்றலாயிற்று.

குதிரைப்படை, 'போர்ட்டேயின் சிப்பாஹீ' (Sipahi of the Porte) என்றழைக்கப்பட்ட ஒழுங்கான குதிரைப்படை என்றும், சிப்பாஹீ (Sipahi) என்றழைக்கப்பட்ட நிலமானிய குதிரைப் படை என்றும் பிரிக்கப்பட்டிருந்தது. நிலமானியக் குதிரைப் படையினர் ஒருசிலர் ஒழுங்கான குதிரைப்படைக்கு உயர்வு பெற்றனர். 'அன்னியப் படை' (Foreign Legion) என்ற ஒரு வகைப்பட்ட சிறப்புப் படை ஒன்றில், உத்மானியரல்லாத துருக்கியர்கள், குர்துகள், அராபியர்கள், கிறித்தவ மதமாற்றம் செய்யப்பட்டவர்கள், சுல்தானுடைய அரசவைக்கப்பாலிருந்து வந்த குதிரைவீரர்கள் ஆகியவர்கள் அடங்கியிருந்தனர்.

உத்மானியர்கள் நுட்பத் தொழில்துறைகளுக்குத் தனிப் பட்ட முக்கியத்துவத்தை அளித்தனர். உத்மானியப் படையினருக்கு அளிக்கப்பட்ட உணவுவசதிகளும், போர்க் கருவிகளும், அவர்களுடைய போக்குவரத்துச் சாதனங்களும், அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்த சாலேகளும் உயர்ந்த தரம் வாய்ந்தவை என்று ஐரோப்பியர்களே ஒப்புக்கொண்டுள்ளனர். பீரங்கிப் படையினரும், வெடிமருந்து கொண்டு செல்லும் படைவீரர்களும் மிகவும் முக்கியமானவர்கள். படையின் இக் கிளேயினர்தாம் உத்மானியர்களுக்குப் பெரும் வெற்றி களேப் பெற்றுத் தந்தனர்.

இரண்டாம் முராத் காலந்தொட்டு, கப்பற்படை உத்மானியப் படையின் ஒரு முக்கிய பகுதியாயிற்று. கடற்பலம் படிப்படியாக வளர்ச்சிபெற்று வந்து, முதலாம் சலீம், முதலாம் சுலேமான் ஆகியவர்களின் ஆட்சிக்காலத்தில் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. உத்மானியர்களின் கப்பற்படை மத்திய தரைக் கடற்பகுதியில் பெரும் ஆதிக்கம் பெற்றிருந்தது. கருங் கடலிலிருந்து ஏட்ரியாட்டிக் கடல்வரையிலும் இருந்த துறை முகங்கள் பலவற்றிலும் கப்பல்கள் கட்டப்பட்டன. வெனிஸ் நகரத்துக் கப்பல் கட்டுபவர்களும், கிரேக்க மற்றும் துருக்கியக் கப்பல் கட்டுபவர்களும் சேர்ந்து இரவும் பகலுமாக உழைத்துக் கப்பற்படைப் பலத்தை வளர்த்து வந்தனர். வஸீர்களின் அந்

தஸ்தைப் பெற்றிருந்த கபுதான்[1] பாஷா (Kupudan Pasha) என் பவர் அக் கப்பற்படைக்குத் தலைமை வகித்தார். வட ஆபிரிக்க கரைகளிலிருந்தும் கிழக்கு மத்தியதரைக் கடற்பகுதியிலிருந்தும் வந்த அனுபவமிக்க மாலுமிகளின் கட்டுப்பாட்டில் அக் கப்பற் படையின் பொறுப்பு இருந்தது. ஸ்பானிய நாடு, ஃபிரான்ஸ் மற்றும் வெனிஸ் ஆகிய நாடுகள் வைத்திருந்தனவே போன்ற பெரும் கப்பற்படைகளை உத்மானியர்களும் வைத்திருந்தனர். அமைதி நாட்களில் உத்மானியக் கப்பற்படைத் தலைவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே கப்பல்களை ஓட்டிச்சென்று, கிறித்தவ ஐரோப்பாவுக்கு எதிராகக் கடற்கொள்ளைக்காரர்க ளாயினர்.

உத்மானியப் படையின் பெரும்பகுதி மாநிலங்களிலிருந்தும் நிலமானியர்களிடத்திருந்தும் வந்து சேர்ந்தது. படையெடுப்பு நிகழப்போவதாக அறிவிக்கப்பட்டவுடன், மாநிலங்களின் ஆளு நர்கள் நிலமானியக் குதிரைப்படையைத் திரட்ட முற்படுவர். திமார் (Timar) ஸியாமத் (Ziamet) என்ற உரிமைகளைப் பெற்றி ருந்த ஒவ்வொரு மானியத்தாரும், ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையின்படி, படைவீரர்களை அனுப்பிவைக்க வேண்டி யிருந்தது. தங்களுடைய தலைவர்களைத் தாமே அவர்கள் தேர்ந்தெடுத்துக்கொண்டனர்.

அகின்ஜிகள் (Akinji's) அஸாப்கள் (Azabs) என்ற மற்றப் பிரிவுகளும் சேனையில் இருந்தன. அகின்ஜிகள் ஒழுங்காகச் சேர்ந்திராத குதிரைப்படைத் தொண்டர்களாவர். அவர் களுக்கு ஊதியம் கிடையாது. கொள்ளைப்பொருளில் ஒரு பகுதி தமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர்களைத் தூண்டிக் கொண்டிருந்தது. அஸாப்கள் அகின்ஜிகளைப் போலவே இருந் தனர். ஆனால், அவர்கள் குதிரைப்படை வீரர்களாவர். உத் மானியர்கள் போருக்குச் செல்லும்போதெல்லாம், இப் படை யினர் சேனைக்கு முன்னால் இருந்துகொண்டு எதிரிகளைத் தாக் கினர்.

2. முஸ்லிம் நிறுவனம்

ஆளும் நிறுவனத்துக்கு நிகராகவே முஸ்லிம் நிறுவனமும் அமைந்திருந்தது. இவ் விரண்டிற்கும் சுல்தான் தலைமை வகித் தார். அனேகமாக, ஒவ்வொரு மட்டத்திலும் அவ்விரண்டும்

[1] 'காப்டன்' (Captain) என்னும் சொல்லின் சிதைவு இது.

ஒன்றோடொன்று தொடர்புகொண்டிருந்தன. முஸ்லிம் நிறுவனம் சமயம், கல்வி, சட்டம் ஆகிய மூன்றுவகைப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றி வந்தது. அந்த நிறுவனத்தின் ஒரு முக்கிய கூறு, அதனுடைய நிதி ஆதரவாகும்.

இஸ்லாமிய சமயத்தில் பூசாரிகளோ, சமயக் குருமார்களோ, துறவிகளோ[1] இல்லாமையால், மேலையமுறைகளின்படி முஸ்லிம் சமயப்பிரிவுகளை வருணிப்பது எளிதன்று. பள்ளிகளில் இருந்த ஆசிரியர்களும், பள்ளிகளின் மூலமாக ஆரம்பக் கல்விக்கப்பாற்பட்ட நிலையை யடைந்தவர்களும் 'கற்றறிந்தவர்கள்' (உலமாக்கள்) என்று வரையறுக்கப்பட்டனர். முஸ்லிம் நிறுவனத்தின் முழுச் சமய உறுப்பினர்கள்: பிரசாரகர்கள், மசூதிப் பாதுகாவலர்கள், முஅஸ்ஸின்கள், தொழுகைகளுக்குத் தலைமை தாங்குவதே தம் தொழிலாகக் கொண்டிருந்தவர்கள், தர்வேஷ்கள், ஷரீஃப்கள், செய்யதுகள் ஆகியவர்களாவர். அறக் கட்டளைகளிலிருந்து வந்த வருமானத்தைக் கொண்டு, மசூதிகளின் பணியாட்களும், மசூதியின் நடவடிக்கைகளில் தலைவர்களாக இருந்தவர்களும் முழு நேரப் பணியாட்களாக நியமிக்கப் பெற்றனர். தர்வேஷ்கள் என்றழைக்கப்படுபவர்கள் கிறித்தவ சமயத்தில் காணப்படும் முனிவர்கள், துறவிகள் முதலியவர்களைப் போன்றவர்களாவர். அவர்கள் புனிதப் போருக்காகப் பிரசாரம் புரிந்தனர்; எதிர்மாறான சமயப் பிரிவுகளைப் பரப்பினர். ஷரீஃபுகளும், செய்யதுகளும் நபிகள் நாயகத்தின் பேரர்களான ஹஸன் ஹுஸைன் ஆகியவர்களின் வழித்தோன்றல்களாவர்; அவர்கள் பச்சைத் தலைப்பாகையை அணிந்து கொள்வர்; தனிப்பட்ட சிறப்புரிமைகளைப் பெற்றிருந்தனர். அவர்களில் ஒருவர் எப்பொழுதும் சுல்தானின் கொடியினைத் தூக்குபவராகப் பணியாற்றினர். அவர் சுல்தானுடைய படையின் அதிகாரிகளுக்கெல்லாம் உயர்வானவர்.

கல்விக்கூடங்களும், கல்லூரிகளும்

பெரிதாயினும் சிறிதாயினும், ஒவ்வொரு மசூதியும் ஆதாரப் பள்ளி அல்லது வாசக சாலையைப் பெற்றிருந்தது. அங்கே மாணவர்கள் எழுதப் படிக்கவும், அராபிய மொழியையும் திருக்குர்ஆனையும் படிக்கவும் கற்றுக்கொண்டனர். சிறப்புப் பள்ளிகள் 'மத்ரஸாக்கள்' (Madrasas — கல்லூரிகள்) என்றழைக்கப்பட்டன. இந்தக் கல்லூரிகளில் இலக்கணம், தர்க்கம், புலன்

[1] இஸ்லாம் துறவறத்தை அங்கீகரிக்கவில்லை. ஆனாலும், துறவிகளான பல 'தர்வேஷ்கள்' எப்படியோ தோன்றிவிட்டனர்.

கடந்த நுண்பொருளியல், சொற்கோப்புக் கலை, நிலக்கணக் கியல், வானநூல் ஆகியவற்றிற்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. சிறப்பு மத்ரஸாக்களில் சட்டங்களும் சமயமும் கற்பிக்கப்பட்டன. மத்ரஸாக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் அறக்கொடைகளி லிருந்து வந்த வருமானத்தின்மூலம் பேணிக் காக்கப்பட்டு வந்தனர். சட்டம் பயிலும் மாணவர்களுக்கு முழுப் பணஉதவி வழங்கப்பட்டது. பேரரசு எங்கிலும் மத்ரஸாக்கள் பரவியிருந்தன. இஸ்தம்பூல் நகரில் ஒவ்வொரு பெரிய மசூதியிலும் ஓரிரண்டு மத்ரஸாக்கள் இருந்தன. ஃபத்தே மசூதியில் எட்டுப் பள்ளி களும், சுலைமானின் மசூதியில் ஐந்து பள்ளிகளும் இருந்தன. மத்ரஸாக்களில் கல்வி பயின்று முடித்தவர்கள், 'கற்றோர்' வகுப் பினராயினர். ஒவ்வொரு கட்டமும் மிகக் கடுமையாக மதிப் பிடப்பட்டது. பட்டதாரி தனிஷ்மந்து (Danishmend) என்ற பட்டத்தைப் பெற்றார். ஆதாரப் பள்ளியில் போதிப்பதற்கு அவர் தகுதி பெற்றவராவார். அதற்கு மேற்பட்ட படிப்பு அவருடைய தகுதியை மேலும் உயர்த்திற்று. அதன்படி அவர் ஒரு மத்ரஸாவில் பேராசிரியராகலாம், அல்லது சட்ட அறிஞ ராகலாம், அல்லது நீதிபதியாகலாம்.

காளீகளும் நீதிபதிகளும்

மத்ரஸாக்களில் சட்டப்படிப்புப் படித்தவர்கள், பொதுவாக நீதிபதிகளாக (காளீ) நியமிக்கப்பட்டனர்; அல்லது சட்ட அறிவுரையாளர்களாகவோ (முஃப்தி) அல்லது இவ் வலுவலர் களுக்குத் துணைவர்களாகவோ நியமிக்கப்பட்டனர். ஒவ்வொரு சிறிய நகரிலும் பெரிய நகரிலும் சுல்தான் ஒரு நீதிபதியை நிய மித்தார். சுற்றுப்புறப் பகுதிகளில் அந்த நீதிபதி நீதி வழங்கி வந்தார். சுல்தானின் அடிமைகளுக்காகவும், ஷரீஃபுகளுக் காகவும், செய்யதுகளுக்காகவும் தனிப்பட்ட நீதிமன்றங்களும் நீதிபதிகளும் இருந்தனர். முஸ்லிம்கள் சம்பந்தப்படாத வழக்கு களில், அன்னியர்களும் முஸ்லிம் அல்லாதாரும் அவரவர் களுடைய சட்டங்களின்படி தீர்ப்பு வழங்கிக்கொண்டனர். அமைச்சர்களும் அவரவர்கட்குரிய நீதிமன்றங்களில் நீதி வழங் கினர். புனிதச் சட்டத்தைத் தொடும் வழக்குகளை ஆராய் வதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. ஒன்றன் மேல் ஒன்றாக ஐந்து வகைப்பட்ட நீதிபதிகள் இருந்தனர். கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் உயர் மட்டத்திற்கு உயர்வு பெற்றும் வந்தனர்.

நீதிபதிகளுக்கான முறைக்கு மேலே இரண்டு காடியாஸ் கர்கள் (Kadiaskers), ஒருவர் ஐரோப்பாவுக்கும் மற்றவர் ஆசியா

வுக்கும் என நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள்தாம் பேரரசின் எல்லா நீதிபதிகளையும் பதவியில் நியமித்தனர். ஒரு நீதி மன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்துக்கு வழக்குகள் மேல் வழக்காகக் (Appeal) கொண்டு போகப்பட்டன. தீர்ப்புகளை உரிமையியல் (சிவில்) அதிகாரிகள் செயற்படுத்தினர். ஒவ் வொரு நீதிபதிக்கும் ஒரு தனிப்பட்ட பட்டப் பெயர் இருந்த போதிலும், அனைவருமே காளீகள் (காஜிகள்) என்று பொது வாக அழைக்கப்பட்டனர். முல்லா (Molla) என்பது யாவரும் அனுபவித்துவந்த பெருமதிப்புக்குரிய பட்டப் பெயராகும்.

ஒவ்வொரு நகரிலும் இருந்த நீதிபதியுடன் ஒரு முஃப்தியும் இருந்தார். அம் முஃப்தி, மத்ரஸாவில் ஒழுங்குறச் சட்டப் படிப்புப் படித்து முடித்தவர்; நீதிபதிகளுக்கும் அரசாங்கத்து உயர் அதிகாரிகளுக்கும் அவர் புனிதச் சட்டத்திற்கு விளக்கம் கூறுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தவர். வாழ்நாள் முழுமைக் கும் ஒருவர் முஃப்தியாக நியமிக்கப்பட்டிருந்தார். இருப்பினும், முஃப்திகள் தனிப்பட்ட குடிமகன்களாகவே இருந்தனர். சட்ட விவகாரங்களில் எந்தச் செயலையும் தொடங்குவதற்கான உரிமை அவர்களுக்குக் கிடையாது. ஒரு நீதிபதிக்கோ, தனிப் பட்ட குடிமகனுக்கோ சட்டத்திற்கான பிரச்சினை ஏதாவது தோன்றிவிடுமாயின், அவர்கள் அதைப்பற்றிய விளக்கத்தைப் பெறுவதற்காக முஃப்தியினிடம் சமர்ப்பித்தனர். முஃப்தி சட்டத்தை ஆராய்ந்து தமது விடையை ஒரு ஃபத்வாவாகக் கொடுத்தார். அந்த ஃபத்வா, பொதுவாக நீதிபதிக்குச் சாதக மாகவோ, அல்லது தனிப்பட்ட குடிமகனுக்குச் சாதகமாகவோ இருக்கும். இஸ்தம்பூலின் முஃப்தி, அந்தஸ்தில் நீதிபதியினும் உயர்ந்தவர். சுல்தானும் அவருடைய வஸீர்களும் பேரரசு முழு துக்குமே மிக முக்கியமுள்ளனவாக விளங்கக்கூடிய கேள்விகளை எழுப்பக் கூடுமாதலால், இந்த முஃப்தி மிக முக்கிய ஓர் அதிகாரி யானார். இரண்டாம் முகம்மது, முஃப்திக்கு ஷெய்க்குல் இஸ்லாம் (Shaik-al-Islam—இஸ்லாத்தின் தலைவர்) என்ற பட்டப் பெயரை அளித்து, அப் பதவியின் மதிப்பினை மேலும் உயர்த்திவிட்டார்.

உத்மானியப் பேரரசில் ஷெய்க்குல் இஸ்லாம் என்னும் பதவி சுல்தானுடைய சொந்த ஹோஜா (போதனாசிரியர்) ஆகியவர் கள் தொட்டு, மிகத் தாழ்மையான நாயிப் (Naib) (கிராம நீதி பதி) ஆதார மசூதிப் பள்ளி ஆசிரியர் ஆகியவர்கள் வரையான யாவரும் அடங்கியிருந்த முஸ்லிம் நிறுவனமாகும். ஒரே கல்வித் திட்டத்தின் கீழும், ஒரு சட்டத் தொகுப்பின் கீழும் பேரரசை

அது இணைத்து வைத்தது. கடு முயற்சி எடுத்துத் தேர்வுகளில் தேர்ச்சி பெறும் ஒவ்வொரு முஸ்லிம் சிறுவனும் நிறுவனத்தி லுள்ள உயர்பதவியைப் பெறக்கூடும்.

முஸ்லிம் நிறுவனத்தில் முன்னுக்கு வருவதற்கு வறுமை ஒரு முட்டுக் கட்டையாக இருக்கவில்லை. பேரரசில் இருந்த மூன்றில் ஒரு பங்கு நிலம் பல்வேறு சமய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. இந்த அறக்கட்டளைகள்—வக்ஃபு கள் (Wakf)—குறிப்பிட்ட மசூதி நூலகம், கல்விக்கூடம், மருத் துவ நிலையம், நீரூற்று ஆகியவற்றின் பேணுதலுக்காக சுல் தானாலும் தனிப்பட்டவராலும் அளிக்கப்பட்ட அன்பளிப்புக ளாகும். பேரரசின் கருவூலம்தான் இந் நிதியின் பொறுப்பை ஏற்றிருந்தது; ஆனாலும், ஷெய்க்குல் இஸ்லாம், அல்லது பிரதம அமைச்சர், அல்லது சுல்தானுக்கு மிக நெருங்கியிருந்த அதிகாரி அதன் காப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அறக் கட் டளையை வழங்கியவர் தம்முடைய வழித்தோன்றல்களும் அதன் நிர்வாகிகளாக இருக்கவேண்டும் என்று பட்டாவில் குறிப்பிட் டிருப்பார். சுல்தானின் அடிமைகள் இம் முறையைக் கடைப் பிடித்து, தங்கள் மகன்களுக்கும் வழித்தோன்றல்களுக்கும் இடையருததும் மாற்றப்படக் கூடாததுமான வருவாயை ஏற்படுத்திக் கொடுத்தனர்.[1] தவிரவும், முஸ்லிம் நிறுவனத்தின் அதிகார உறுப்பினர்களுக்குத் தீர்வைகள் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்ததனாலும், அவர்களுடைய சொத் துக்களைப் பறித்துக்கொள்ள இயலாததனாலும், முஸ்லிம் நிறு வனத்தின் குடும்பங்கள் பல நிதிச் சலுகைகளைப் பெற்றிருந்த துடன், தங்களைத் தனிப்பட்ட சலுகைகளைப் பெற்ற ஒரு கூட்ட மாகவே அமைத்துக்கொண்டும் இருந்தன.

முஸ்லிமல்லாத குடிமக்கள்

உத்மானிய நாட்டிற்கு ஓர்கானின் காலத்தில் முஸ்லிம் உலமாக்கள் வருகை தந்தபோது உத்மானியர்கள் பிற மதத் தினரைச் சகித்துக் கொள்ளும் மனப்பான்மையைப் பெறத் தொடங்கினர். கிறித்தவர்களும் யூதர்களும் அவரவர்கட்குரிய உரிமைகளையும் சுதந்தரத்தையும் பெற்றனர். ஹங்கேரிய

[1] அறக் கட்டளை மூலம் ஒருவர் தம்முடைய பின்னை குட்டிகள் அல்லது வழித் தோன்றல்களின் நலன் கருதி ஏற்படுத்தும் வக்ஃபுக்கு 'வக்ஃபு அலல் அவுலாது' என்று பெயர். இது பற்றிய முழு விளக்கம் 'இஸ்லாமிய இசுலாமியர் சட்டம்' என்னும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் க. வெ. வரிசை எண் 547 நூலில் பார்க்கக் காணலாம்

ஆட்சியிலும் ஹாப்ஸ்பர்க் ஆட்சியிலும் தமக்கு விதிக்கப்பட்டிருந்த சமய கலாசாரக் கட்டுப்பாடுகளைவிட, உத்மானியர்களின்கீழ்த் தாங்கள் பெற்றிருந்த சுயாட்சியையே பால்கன் பகுதிக் குடிமக்கள் அதிகமாக விரும்பினர்.

1453-ல் கான்ஸ்டான்ட்டிநோப்பில் நகரைப்பற்றிய திட்டம் ஏற்பட்டவுடன் இரண்டாம் முகம்மது கிறித்தவர்களிடம் மிகவும் சகிப்புத்தன்மை காட்டினார், அவர்களுக்குரிய சமய உரிமைகளை அளித்தார். உத்மானிய நாட்டில் ஏற்கெனவே மிகத் தீவிரமாக நிலைநாட்டப்பட்டிருந்த பழக்கமாகிய கிறித்தவர்களுக்குரிய சமய சுதந்தரத்தை, அவர்கள் தடங்கலின்றி அனுபவிக்கலாம் என்னும் பழக்கத்தையும் சுல்தான் அங்கீகரித்தார். கிறித்தவ, யூத, அர்மீனிய சமயப் பிரிவுகள் 'மில்லத்துகள்' (Millets) என்றழைக்கப்பட்டன. மில்லத் என்பதற்கு '(உத்மானியப் பேரரசில் குறிப்பிட்ட ஒரு சமயத்தைப் பின்பற்றி வாழும்) கூட்டத்தினர்' என்பது பொருளாகும். ஒவ்வொரு மில்லத் அல்லது நாடு தன் மொழியையே பயன்படுத்துவதற்கும், தன் சமயத்தையும் பண்பாட்டையும் கல்வி நிறுவனங்களையும் பெருக்கிக் கொள்வதற்கும், தீர்வைகளை வசூலித்துப் பேரரசின் கருவூலத்தில் செலுத்துவதற்கும், தன் கூட்டத்தினர் சம்பந்தப்பட்டுள்ள வழக்குகளில் தீர்ப்பளிக்க வல்ல நீதிமன்றங்களைப் பேணிக் காப்பதற்கும் சட்ட பூர்வமான உரிமை பெற்றிருந்தது. ஒவ்வொரு மில்லத்துக்கும் ஒரு தலைவர் இருந்தார். தீர்வைகளை வசூலித்து அரசருக்குச் செலுத்துவதற்கும், தம் சமுதாயத்தினரின் நன்னடக்கைக்கும் விசுவாசத்திற்கும் அந்தத் தலைவர் பொறுப்பு ஏற்றிருந்தார்.

அன்னியர்கள்

இஸ்தம்பூல் நகரில், அன்னியர்களும் தங்கியிருந்தனர். பெரும்பாலும் அவர்கள் வர்த்தகர்களாகவே இருந்தனர். ஒவ்வோர் அன்னிய மக்கட்கூட்டத்தினரும், சுல்தானுக்கும் அந்த அன்னிய நாட்டிற்கும் இடையே ஏற்பட்டிருந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைப்படி வசித்து வந்தனர்.

குறைபாடுகள்

துருக்கி அரசாங்கத்தில் பல சிறப்புமிக்க கூறுகள் இருந்தன என்றாலும், ஒருசில குறைபாடுகளும் இல்லாமற் போகவில்லை. அவ்வரசாங்கத்தின் ஒரு முக்கிய குறை யென்னவென்றால்,

உத்மானியப் பேரரசின் அரசாங்கம் சிறப்புற நடைபெறுவதற்கு சுல்தானுடைய ஆளுமையை நம்பி யிருக்க வேண்டியிருந்தது. குறிப்பாக இந்த நிலை, சுல்தான் படைகளைத் திரட்டிக்கொண்டு படையெடுப்புகளை நிகழ்த்தியபோது ஏற்பட்டது. போர்க்களத்தில் அவரைக் கண்ட படைவீரர்கள் வீரம் பொங்கி எழுந்தனர். பேரவா மிக்க படைத்தலைவர்களும், அவர் தங்களிடை இருந்த தன்விளைவாக, அத்துமீறி நடந்துகொள்ள முடியவில்லை. ஆனால், சுலைமானுடைய ஆட்சிக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த சுல்தான்கள் போர்க்களத்துக்குச் செல்லாது அரண்மனையிலேயே தங்கியிருக்கத் தொடங்கியபோது, முந்தைய உத்மானிய துருக்கியர்கள் ஏற்படுத்திய மரபு மங்கிக் கொண்டிருந்தது. படையில் எங்கும் ஒழுங்கீனம் ஓங்கத் தொடங்கிற்று. போரையே தொழிலாகக் கொண்டிருந்த படை வீரர்கள் அரசியலில் தலையிடத் தொடங்கினர். இறுதியில், பட்டத்திற்கு வருபவர்களையே கூட அவர்கள் தமது செல்வாக்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்படுத்த முயன்றனர்.

[ஒரு விளக்கம்: அரப் மொழியில் போர்த் தலைவர் காஜீ (Ghazi) என்று அழைக்கப்படுகிறார். நீதிபதியாக விளங்குபவர் காளீ (Kali) என்று அழைக்கப்படுகிறார். பாரசீகர்கள் இந்தச் சொல்லைக் 'காஜி' (Kazi) என்று உச்சரிக்க, அதுவே இந்தியாவிலும் பழக்கத்துக்கு வந்துவிட்டது. இதன் சரியான உச்சரிப்பு 'காளீ'யாகும். காஜி என்று உச்சரித்தால், குழப்பம் நேரிடலாம். எனவே, Ghazi என்னும் சொல்லையும் Kali (or Kazi) என்னும் சொல்லையும் கவனித்து உச்சரித்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.]

14. சுல்தானுக்களின் ஆட்சியும் பேரரசின் சீர்குலைவும் (1578-1656)

(The Rule of Sultanas and the Decline of the Empire)

மாபெரும் பேரரசு ஒன்று வீழ்ச்சியுறுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுவது என்பது எளிதன்று. அது வளர்ச்சி பெறும் பொழுது இளம் வயதுடையதாகவும் நிதிநிலை சரியற்றதாகவும் இருப்பினும், அதன் கருவானது தன் பகைவர்களை எதிர்த்து வென்று தன் ஆற்றலை நிரூபிக்கும் சக்தியைப் படைத்திருக்கும். ஆனால், அது வளர்ச்சி பெற்று, செல்வமும் செழுமையும் பேரும் புகழும் பெற்றுத் திகழ்கின்றபோது, சீர்குலைவும் உடன் தொடங்கி விடுகின்றது. அது பெற்றிருக்கும் செல்வம், ஆற்றல், அனுபவம் யாவும் அதன் அழிவைத் தடுப்பதற்குச் சக்தியற்றனவாகி விடுகின்றன. ஓர் உயிருக்கு விளைவதுபோல், ஒரு பேரரசுக்கும் பிறப்பு, இளமை, முதுமை, சீர்குலைவு, மரணம் ஆகிய எல்லாம் நிகழ்கின்றன. அந்நிலை உத்மானியப் பேரரசுக்கும் ஏற்பட்டது.

வீரர்ந்த சுலைமானுடைய ஆட்சிக் காலத்தில், அப் பேரரசு உச்சக் கட்டத்தை எட்டியிருந்தது. அதற்குப் பிறகு சீர்குலைவு தொடங்கிற்று. அச் சீர்குலைவுக்கான காரணங்களைப் பின்வருமாறு வரையறுக்கலாம்: (1) இயல்பான அல்லது மனநிறைவு ஏற்படுத்தக் கூடியதான எல்லைகளை நிர்ணயிக்க இயலாமை. (2) பேரரசு மிகப் பெரிதாக இருந்ததனால், அதனை நிர்வகிப்பது மிகவும் கடினமாகிவிட்டமை. (3) உள்ளுக்குள்ளேயே ஏற்பட்ட அழிவு. இவ்வழிவுக்கு அறிகுறிகளாக இருந்தவை யாவன: அடிமைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான முறை முறிவுறுதலின் விளைவாக அவர்கள் திறனற்று ஒழுகினமை, ஜனிஸ்ஸரீகளின் கீழ்ப்படிதல் இல்லாமை என்பனவாம். (4) துருக்கி சுல்தான்களின் குணவியல்பிலும் திறமையிலும் சீர்குலைவு ஏற்படுதல்.

(5) எதிரி நாடுகளான ஆஸ்ட்ரியாவிலும், போலந்திலும் திறம் படைத்த தலைவர்கள் தோன்றிவிடுதல். (6) ரஷிய நாடு ஒரு பெரும் பகைமை நாடாதல். (7) உத்மானியப் பேரரசுக்குக் கீழ்ப்படிந்திருந்த குடிமக்களிடையே அமைதியற்ற நிலையும், அரசியல் உணர்ச்சி எழும்புதலும். அவர்கள் மேலும் மேலும் மேலைய நாடுகளை நம்பி நிற்கத் தொடங்கினர். இவ் விதமாக, அவர்கள் நாட்டு உணர்ச்சி பெறத் தொடங்கினர். இவையெல் லாம் சீர்குலைவிற்கான காரணங்களாக இராமல், அதன் குறை வியல்புகளாகவும் இருக்கக்கூடும். துருக்கியரின் பேரரசு ஓர் இராணுவப் பேரரசாகும். இராணுவ பலத்தின் அடிப்படையில் அமைந்த எந்தப் பேரரசும் இயங்காது வெறுமனே நின்று கொண்டிருக்க முடியாது. ஒன்று, அது முன்னுல் போக வேண்டும், அல்லது பின்னேக்கிச் செல்ல வேண்டும்; விரைவிலோ, நெடுங்காலங் கழித்தோ, அதன் எல்லைகளுக்கு அது ஒரு முற்றுப் புள்ளியிடவேண்டும். அவ்விதம் செய்யும்பொழுது சீர்குலைவு தொடங்குகின்றது போலும்!

உத்மானியப் பேரரசு விரிவடைந்து கொண்டே சென்றது. ஆனுல், திட்டவட்டமான எல்லைகளை அது பெறவில்லை. எல்லை களுக்குட்பட்டிருக்குமாயின், அப்பேரரசு தன்னைக்கட்டுப்படுத்தி வலுப்படுத்திக் கொண்டிருக்கக்கூடும். மோஹாக்ஸ் போர்க் களத்தில் ஹங்கேரியர்களுக்குத் தோல்வி ஏற்பட்டதனுல், சற்று அதிக வலிமையடைந்திருந்த ஆஸ்ட்ரியா மற்றும் ஜெர்மனி என்னும் கிறித்தவ வல்லரசுகளைத் துருக்கியர் நேருக்கு நேர் சந் திக்கவேண்டி நேர்ந்தது. அவர்கள் வியன்னுவைக் கைப்பற்றத் தவறியது உண்மையில் ஓர் அறிகுறியேயாகும் என்று கருத வேண்டும். அந் நகரம் ஐரோப்பாவுக்கே ஓர் அரணுக நின்றது. அது நடத்திய எதிர்த் தாக்குதலினுலும், ஹங்கேரிய மக்களும் பால்கன் மக்களும் அயராமல் கிளர்ச்சி செய்துகொண் டிருந்ததனுலும் துருக்கியர்களின் சக்தியும் மூலப்பொருள் களும் வற்றிக்கொண்டிருந்தன. தவிர, பேரரசு கிழக்கிலும், எகிப்து கைப்பற்றப்பட்டதனுல் தெற்கிலும் விரிவுபெற்றதனுல், துருக்கியர்கள் ஆசியாவுக்குள் புகுந்து ஓர் எல்லையை நாட வேண்டி நேரிட்டது. பாரசீகர்களுடன் அவர்கள் பல போர்களை யும் புரியவேண்டியிருந்தது. பேரரசு விரிவடைந்து பல மாநிலங் கள் அதில் சேர்த்துக்கொள்ளப்பட்டன வாயினும், அதனுல் தலைநகரின் நிதி நிலையையும் நிர்வாகத் திறமையையும் சமாளிக்க இயலவில்லை. மிகவும் பரந்து விரிந்திருந்ததனுல், ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இருந்த தூரம் மிகவும் அதிக மாக இருந்தது. போக்குவரத்து அவ்வளவு எளிதானதாக

இருக்கவில்லை. இராணுவப் படையெடுப்புகளை நிகழ்த்திப் பல மாநிலங்களைக் கைப்பற்றிக்கொண்டாலும், அவற்றை யெல்லாம் நிர்வகிப்பது என்பது எளிதன்று. அவற்றை ஒன்றுக இணைத்துத் தூரத்திலிருந்த மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டிருக்கச் செய்வது அவ்வளவு சுலபமானதன்று.

அடிமைகளைக் கொண்டிருந்த சிவில் பணித்துறையின் இயல்பில் ஏற்பட்ட மாறுதலிலிருந்து பேரரசு உள்ளுக்குள்ளாக எவ்வளவு அழிவுற்றிருந்தது என்பது புலனுகின்றது. இந்த அடிமைகள் மிக்க விழிப்புடன் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அவர்களுடைய மகன்கள் தங்கள் தந்தைகளின் தொழிலைப் பின் பற்றுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்த விதமாகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள், சிறப்புப் பயிற்சி பெற்றுப் பணித் துறையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அதே சமயத்தில் அவர்கள் வகிக்கும் பதவிகள் மரபுரிமையாகி விடாதபடி தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனலும், இதுபோன்ற ஒரு பணித்துறை நெடுங்காலம்வரை யிலும் தொடர்ந்து இயங்கிவரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அவ் வதிகாரிகளின் மகன்களும், சுதந்தர உணர்ச்சி பெற்ற துருக்கியர்களும் தாங்கள் அரசியல் இராணுவத் தொழில்களை மேற்கொள்ளாவாறு தடுக்கும் ஒரு முறையை ஏற்றுக்கொள்ள மறுத்தது நியாயமானதேயாகும். பதினேரும் நூற்றுண்டின் பிற்பகுதியில் அம் மாறுதல் ஏற்பட்டது. அடிமை அதிகாரிகளின் மகன்களைப் பணித்துறையில் சேர்த்துக்கொள்ளுமாறு சுல்தான் வற்புறுத்தப்பட்டார். அவ் விதம் அவர்கள் சேர்த்துக் கொள் ளப்பட்டதற்குப் பிறகு அப் பணித்துறையின் திறமையும் மங்கத் தொடங்கிற்று.

அதேபோன்ற ஒரு தளர்ச்சி ஜனிஸ்ஸரீகளையும் பாதித்தது. வெற்றிபெறுகின்ற ஒரு படை என்ற நிலையில் அவர்களுடைய சக்தியும் சலுகைகளும் மிக அதிகமாகவே இருந்தன. பணித் துறைக்கு வெளியே யிருந்தவர்கள் தம் மகன்களை அதில் சேர்த்துக்கொள்ளுமாறு மன்றுடினர். காலப்போக்கில், கட்டுப் பாடுகள் தளர்ச்சியுற்றுக்கொண்டே வந்தன. அதிகமாகப் போரிட நேர்ந்தபொழுது, ஜனிஸ்ஸரீகளின் எண்ணிக்கையும் அதிகாரமும் பெருகின. ஆகவே, அமைதிக் காலத்தில் அவர் கள் அரசுக்கும் சுல்தானுக்கும் பெருந் தொல்லை கொடுக்கத் தொடங்கிவிட்டனர். ஒவ்வொரு புதிய அரசரும் பட்டத்துக்கு வரும்போது ஜனிஸ்ஸரீகள் அவரிடத்திருந்து ஏராளமான பணத்தைப் பிடுங்கினர். தலைநகரான இஸ்தம்பூலில் அவர்கள்

அடிக்கடி கிளர்ச்சி செய்துகொண்டிருந்தனர்; தாம் விரும்பிய வர்களையே பேரரசில் உயர்பதவிகளுக்கு அவர்கள் நியமித்தனர். அவ் வதிகாரிகள் அப் படையினரின் நல்விருப்பத்தை இழந்துவிட்டனர்; அவர்கள் கொல்லப்பட்டனர். சிற்சில வேளைகளில் அவர்கள் சுல்தான்களையும் கொன்றுவிட்டனர். இலஞ்ச ஊழல் அதிகமாகிக் கொண்டிருக்கையில், படையின் தலைவர்கள் திறமையை இழந்துவிட்டுப் பொறுப்பற்றவர்களாகவே நடந்துகொண்டனர். போர்க்களையில் முன்னேற்றங்கள் எதுவும் புகுத்தப்படவில்லை. இதனால் துருக்கியர் படையின் வலிமை பின்தங்கிவிட்டது. அப் படையினர் ஏராளமான பணத்தை இலஞ்சமாகப் பிடுங்கிக்கொண்டிருந்ததனால், பேரரசின் கருவூலம் காலியாகிக்கொண்டிருந்தது. இவ் விதமாகத் துருக்கிப் பேரரசை உருவாக்குவதில் பெரும் பங்குபெற்ற ஜனிஸ்ஸரீப்படை அப் பேரரசின் சீர்குலைவிற்கும் ஒரு முக்கிய காரணமாயிற்று.

பேரரசுக்குள் மற்றொரு கேடும் உருவாகிக்கொண்டிருந்தது. பேவியாப் போரில் (Battle of Pavia) ஐந்தாம் சார்லஸினிடம் தோல்வியுற்ற ஃபிரான்ஸிஸ் என்னும் ஃபிரெஞ்சு நாட்டு அரசர் ஐரோப்பாவில் சக்திச் சமநிலையைச் சரிப்படுத்துவதற்காக 1536-ல் சுலைமானின் உதவியை நாடினார். ஃபிரெஞ்சு நாட்டுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதன்படி, லெவாண்ட் அங்காடிகளில் ஃபிரெஞ்சு வர்த்தகர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டன; தூதரக அவைகள் நிறுவப்பட்டன; ஃபிரெஞ்சுக் குடிமக்களுக்கு ஒரு நாட்டு அரசாங்கத்துக்கு அப்பாற்பட்ட உரிமைகள் வழங்கப்பட்டன. உயர்தூதரகத்திற்காக சுலைமான் செய்த பெருமிதமான இச் செயல், அவருக்கும் ஃபிரெஞ்சு நாட்டிற்கும் நலன் நல்குவதாகவே இருந்தது. ஏனெனில், இவ்வித ஒப்பந்தத்தைச் செய்ததன்மூலம் தென்கிழக்கு ஐரோப்பாவிலிருந்த புனித ரோமப் பேரரசை (Holy Roman Empire) ஒடுக்குவதே அவருடைய நோக்கமாகும். ஆனால், அவர் தமது செயலின் விளைவாக, உத்மானிய பேரரசுக்கு ஒரு கேட்டையும் விளைவித்துவிட்டார்; அதாவது, ஒப்பந்தத்தின்பேரில் சரணடைதல் (Capitulations) என்ற ஒரு கேட்டையும் விளைவித்துவிட்டார். அதனுடைய கொடிய விளைவுகள் அவர் காலத்தில் ஏற்படவில்லையாயினும், வலிமை குன்றிய சுல்தான்களின் ஆட்சிக்காலத்தில் கிறித்தவ வல்லரசுகளின் குடிமக்கள் ஃபிரெஞ்சு மக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் போன்ற சலுகைகளைத் தாமும் பெற முயற்சிசெய்து, பெற்றும்கொண்டனர். ஆகவே, 'சரணடைதல்' என்ற முறை உருவெடுக்கத் தொடங்கிற்று;

ஐரோப்பாவில் சமய சீர்திருத்த இயக்கம் தோன்றியிருந்த சூழ் நிலைப் உத்மானியப் பேரரசுக்கு பல சிக்கல்களை ஏற்படுத்தியும் விட்டது. ஏனெனில், துருக்கியர்கள் இஸ்லாத்தின் புனிதச் சட்டத்தின்படி ஆளப்பட்டு வந்ததனாலும், அப் பேரரசில் விஞ் ஞானமும் புதிய கருத்துக்களும் புகமுடியவில்லை யாதலாலும், சுல்தானின் கிறித்தவ குடிமக்கள் அவ் விதி, கட்டுப்பாடுகளுக்கு ஆளாகியிருக்கவில்லை யாதலாலும், பல சிக்கல்கள் முளைத்தன. உண்மையில் இதுபோன்ற கருத்துக்கள் ஐரோப்பாவில் தோன் றிக்கொண் டிருக்கின்றன என்பதைத் துருக்கியர்களுக்கு அக் கிறித்தவக் குடிமக்கள் அறிவித்துவந்தனர். இதனால் நாட்டில் சமநிலை குலைந்துகொண்டிருந்தது. இதனால் பேரரசின் சீர் குலைவும் அதிவேகமாக ஏற்பட்டுக்கொண்டிருந்தது; துருக்கி யின் சக்தியும் வெளிநாடுகளில் அதன் செல்வாக்கும் குலைந்து கொண்டிருந்தன. ஃபிரெஞ்சு அரசரும் துருக்கிப் பேரரசரும் ஒரேவகைப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றிய தனால் சட்டரீதிக்கான புதிய கோட்பாடு ஒன்று உத்மானியப் பேரரசில் தோன்றிற்று. இதன் விளைவாக, அன்னிய நாட்டின ருக்கு உள்ளூரில் இருப்பவர்களுக்கில்லாத சில சிறப்புச் சலுகை கள் வழங்கப்பட்டன. உத்மானியப் பேரரசின் தொடக்க நாட் களில் அதிலிருந்த கிறித்தவக் குடிமக்கள் உத்மானிய நீதி மன்றங்களிலிருந்து நீதி பெறமுடிந்தது. ஆனால், நீதியின் தர மும் நிர்வாகத்தின் தரமும் குறைந்துகொண் டிருக்கையில், கிறித்தவர்கள் சற்று வேறுபாடாகவே நடத்தப்பட்டனர். ஆகவே, மேலையநாடுகள் தங்களுடைய குடிமக்களுக்கு உரிமை களைப் பெற்றுக் கொடுப்பதற்காகச் 'சரணடைதல் முறை'யைத் தொடர்ந்து பின்பற்றவேண்டும் என்றும் துருக்கியை வற் புறுத்தத் தொடங்கின.

சுல்தான்களின் குணவியல்பில் ஏற்பட்ட சீர்குலைவு சுலைமா னுக்குப் பிறகு ஆட்சி புரிந்த சுல்தான்களின் வாழ்க்கையிலிருந் தும் புலனாகின்றது. இரண்டாம் சலீம் 'குடிகாரன்' என்ற பெயரைப் பெற்றான். மூன்றாம் முராத் தீய ஒழுக்கங் கொண்ட வனாய் விளங்கினான். மூன்றாம் முகமது தலைநகரில் ஆடம்பர வாழ்க்கையை மேற்கொள்வதையே அதிகமாக விரும்பினான்.

பதினேழாம் நூற்றாண்டில் ரஷிய நாடு பெரும் முக்கியத் துவம் பெற்று எழுச்சி பெற்றதனால், துருக்கிப் பேரரசுக்கு அதன் எல்லைகளில் ஒரு புதிய ஆபத்துத் தோன்றிற்று. ஒன்பதாம் நூற்றாண்டிலேயே ரஷிய நாட்டுக் கப்பற்படை ஒன்று கோல்டன் ஹார்ன் என்னும் துறைமுகத்தில் தோன்றி, கான்ஸ்டான்ட்டி

நோப்பிலை அச்சுறுத்தியது. பின்னுளில், அதைக் கைப்பற்று வதற்குப் பல முயற்சிகள் நடைபெற்றன. ஆகவே, கான்ஸ் டான்ட்டிநோப்பில் அப்பாலும் கிரேக்கர்களின் ஆதிக்கத்திற்குட் பட்டிருந்த தென்ருலும், ரஷியர்கள் அதைக் கைப்பற்ற விரும் பினர் என்பது புலனுகின்றது. ஆனலும், முந்தைய ரஷிய நாட் டின் பகுதிகள் பதின்மூன்றும் நூற்ருண்டில் டார்ட்டார்களால் கைப்பற்றப்பட்டன. கீவ் (Kiev) மாஸ்கோ (Moscow) ஆகிய இரு நகரங்களும் அழிக்கப்பட்டன. படிப்படியாகத்தான் பிற்கால ரஷிய அரசர்கள் டார்ட்டார்களின் பிடியிலிருந்து விடு பட்டு ரஷியப் பேரரசை உருவாக்கினர். இறுதியில், ரஷியாவும் துருக்கியும் மோதிக்கொள்ளும் நிலை தவிர்க்க முடியாததாகி விட்டது.

சொக்கொல்லி என்ற பிரதம அமைச்சர் கொல்லப்பட்ட தற்குப் பல ஆண்டுகட்குப் பின்பே, நாடு மற்றெரு தகுதி மிக்க பிரதம அமைச்சரைப் பெற்றது. இடையில் வந்த பலவீனமிக்க தகுதியற்ற அமைச்சர்களே சுல்தான்களுக்குப் பதிலாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தனர். சிறிது காலத்திற்கு அதி காரம் சுல்தானின் அந்தப்புரப் பெண்டிர்களின் கையில் சிக்கிற்று. அவர்களுள் முதன்மையானவள் சுல்தானு பாஃபோ (Sultana Baffo) என்ற வெனிஸிய சீமாட்டி ஆவாள். இளம் வயதில் அவள் கடற் கொள்ளைக்காரன் ஒருவனுல் பிடித்துக் கொள்ளப் பட்டு, அடிமையாக சுல்தான் மூன்ரும் முராதின் அந்தப்புரத் திற்குக் கொண்டு வரப்பட்டாள். முக வசீகரமும், சாதுரியமும், பேராசையும் படைத்த அவளுடைய அழகுக்கு இரையான சுல்தான், பிற பெண்களைச் சிறிது காலத்திற்குப் பொருட் படுத்தவே யில்லை. ஆனலும், பஃபோவின் அரசியல் செல் வாக்கைக் கண்டு பீதியுற்ற முராதின் தாய், அவருடைய கவனத்தைத் திருப்புவதற்காக அழகான இரண்டு அடிமைப் பெண்களை அவருக்குக் கொடுத்தாள். பின்னர், சுல்தான் மற்றும் பல அழகிகளின் வலையில் சிக்குண்டு, அரசியல் விவகாரங்களைப் பொருட்படுத்தாது, சிற்றின்பப் பிரியராகக் காலத்தைக் கழித்து வந்தார்.

இந்தக் கவர்ச்சிக் கன்னிகைகளின் மோகவலையில் வீழ்ந் திருந்த சுல்தான், அந்தப்புரத்திலேயே காலத்தைக் கழித்து வந்தார். சுல்தானின் தாய் இறந்து விட்டதற்குப் பிறகு, சுல்தானு பாஃபோ தன் செல்வாக்கை மீண்டும் பெற்ருள். அதே போன்ற செல்வாக்கைத் தன் மகன் மூன்ரும் முகம்மதுவின் மீதும் அவள் பெற்றிருந்தாள். இவ்விதமாக, அந்தப் பெண் இருபத்

தெட்டு ஆண்டுக் காலமட்டும் அரசின்மீது தன் செல்வாக்கைச் செலுத்தி வந்தாள். தகப்பனைப் போலவே முகம்மதுவும் எதற்கும் உதவாதவராக இருந்தார். பட்டத்திற்கு வந்ததும் தமது பத்தொன்பது சகோதரர்களை அவர் கொன்றார். சுல்தானாக ஆவதற்கு முன்பே மாநில ஆளுநராக முகம்மது அனுபவம் பெற்றிருந்தார். இவ்விதம் அனுபவம் பெற்றவர்களுள் இவர்தாம் கடைசியானவர். இவருக்குப் பிறகு பட்டத்திற்கு வர உரிமை படைத்தவர்கள் இஸ்தம்பூலில் 'கூண்டு' என்றழைக்கப்பட்ட விடுதியில் வைக்கப்பட்டனர். அங்கிருந்து அவர்களால் வெளியுலகுடன் எவ்விதத் தொடர்பும்கொள்ள முடியவில்லை. வெளியில் என்ன நடக்கின்றது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. அங்கிருந்து அவர்கள் சுல்தானாவதற்கோ அல்லது கொல்லப்படுவதற்கோதாம் வெளியே கொணரப்பட்டனர். உத்மானியப் பேரரசின் வருந்தத் தக்க சீர்குலைவிற்கு, பட்டத்திற்கு வர வேண்டியவர்கள் இவ்விதமாக நடத்தப்பட்டது ஒரு முக்கிய காரணமாகும் என்று ஒருசில வரலாற்றுசிரியர்கள் கருதுகின்றார்கள். இஃது ஓரளவு உண்மையானதே என்றாலும், இரண்டாம் சலீமும், முன்றாம் முராதும், மூன்றாம் முகம்மதுவும் இவ்விதமாக நடத்தப்படவில்லை என்றாலும், மாநில நிர்வாகத்தில் அனுபவம் பெற்றவர்களாக இருந்தும்கூட, பட்டத்திற்கு வந்தபிறகு அவர்களுடைய தகுதியின்மையும் திறமையின்மையும் தெளிவாகப் புலனாயின.

முகம்மதுக்குப் பிறகு அவர் மகன் அகமத் பதினான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவருக்கு முற்பட்ட இரண்டு சுல்தான்களைப் போன்றே இவரும் திறமையற்றவராக இருந்தார். இவரும் அந்தப்புரத்தினரின் செல்வாக்குக்கு இரையாகிக் கிடந்தார். சுல்தானா பாஃபோ முற்றிலும் புறக்கணிக்கப்பட்டிருந்தாள்; தன் அதிகாரத்தை எல்லாம் அவள் இழந்துவிட்டிருந்தாள். 1617 ல் அகமத் உயிர் நீத்ததும் அவருடைய மூத்த மகன் பட்டத்திற்கு வரவில்லை. அவருடைய சகோதரராகிய, மனநோயால் பீடிக்கப் பட்டிருந்த முஸ்தபா என்பவர் பட்டத்திற்கு வந்தார். தம் சகோதரரான முஸ்தபா மன நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்ற காரணத்தை முன்னிட்டு, அகமத் அவரைக் கொல்லாமல் உயிருடன் விட்டுவைத்திருந்தார். ஆகவே, வாரிசுரிமைச் சட்டப்படி முஸ்தபா பதவிக்கு வந்தார். ஆனாலும், ஒரு சில மாதங்களுக்குப் பிறகு அவர் சிம்மாசனத்திலிருந்து விலக்கப்பட்டார். அகமதின் மகனை இரண்டாம் உத்மான் பதவி ஏற்றார். அவர் சற்று அதிகத் திறமையைப் படைத்திருந்தார். அவரது நான்கு ஆண்டு ஆட்சிக் காலத்தில் அவர் ஜனிஸ்ஸரீகளின் பகை

மையைப் பெற்றுவிட்டார். அவர் பதவியிலிருந்து விலக வேண்டும், பிறகு கொல்லப்பட வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினர். பைத்தியக்கார முஸ்தபா மீண்டும் சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்டுச் சில மாதங்களுக்குப் பிறகு திரும்பவும் விலக்கப்பட்டார். அவருக்குப் பிறகு பன்னிரண்டு வயதினரான நான்காம் முராத் பட்டத்திற்கு வந்தார். அவர் சுய புத்தியுடன் செயற்படும் வரையிலும் அவருடைய தாய் ஆட்சி புரிந்து வந்தாள். இவருக்கு முற்பட்டவர்களுக்கு முராத் முற்றிலும் வேறுபட்டிருந்தார். வயதுக்கு வந்ததும் அவர் தம்மை அந்தப்புரத்துச் செல்வாக்கிலிருந்து விடுவித்துக் கொண்டு, ஆட்சியை எட்டு ஆண்டிற்கு நல்லபடியாக நடத்தி வந்தார். இவர் படையைத் திரட்டிக் கொண்டு போர்க் களத்திற்கு நேரில் சென்ற வீரராவார். 1640-ல் அவர் இறந்ததும் அவருடைய சகோதரர் இரண்டாம் இப்ராஹீம் சுல்தானுகப் பதவி யேற்றார். இவரும் சிற்றின்பங்களில் மூழ்கிக் கிடந்தார். இவருடைய எட்டாண்டு ஆட்சிக் காலத்தில் அந்தப்புரத்துச் செல்வாக்கு மீண்டும் தலை தூக்கத் தொடங்கிற்று. இவருக்கு அடுத்து வந்த நான்காம் முகம்மதுவின் எட்டாண்டு ஆட்சியின்போது அந்தப்புரத்துச் செல்வாக்கு நிலைபெற்றிருந்தது. ஆகவே, 1578-ல் செக்கொல்லி கொல்லப்பட்டதிலிருந்து 1656ஆம் ஆண்டுவரை எழுபத்தெட்டு ஆண்டு காலத்திற்கு சுல்தான்கள் அரியணையில் வீற்றிருக்கையில் அதிகாரம் அந்தப்புரப் பெண்டிரின்பால்தான் இருந்தது. நான்காம் முராதின் எட்டாண்டு ஆட்சிக் காலத்தில் மட்டுமே அச் செல்வாக்குச் செயலற்று மங்கிக் கிடந்தது. அவற்றில் இருபத்தெட்டு ஆண்டுக் காலம்வரை சுல்தானு பாஃபோவும் மற்றும் சில பெண்டிர்களுமே உண்மையில் பேரரசை ஆண்டு வந்தனர். இப் பெண்டிர்களின் விருப்பப்படி பிரதம அமைச்சர்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டனர்; பதவியில் அமர்த்தப்பட்டனர். அவ்வப்பொழுது ஜனிஸ்ஸரீப் படையினரும் குறுக்கிட்டனர். அப் பிரதம அமைச்சர்கள் ஓராண்டுக்கு மேற்பட்டுப் பதவியில் இருந்தனர் என்பது மிக அரிதே. சுல்தானு பாஃபோ பணப் பேராசை பிடித்தவள். அவளும் மற்றும் பல பெண்களும் பதவிகளை ஏலத்துக்கு விடும் முறையை மிக அதிகமாகவே கடைப்பிடித்தனர். நாளடைவில் பேரரசு முழுவதிலுமே இம் முறை தலைதூக்க ஆரம்பித்தது.

சுலைமானின் ஆட்சிக் காலத்தில் ருஸ்தும் என்ற பிரதம அமைச்சர் மாநில ஆளுநர்களின் பதவிகளுக்கும் மற்ற உயர் பதவிகளுக்கும் ஆட்களை நியமிப்பதற்காகப் பணம் வாங்கும் முறையை முதன்முதலாகக் கடைப்பிடித்தார். ஆனால், அவர்

வாங்கின தொகை நிர்ணயிக்கப்பட்டதாகவும் திட்டவட்டமான தாகவும் இருந்தது. வாங்கப்பட்ட பணத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்தப்பட்ட தெனினும், இந்த முறை படைத் துறையில் கையாளப்படவில்லை. ஆனால், இப்பொழுது பணம் எதற்கும் வாங்கப்பட்டது. அதன் தொகையும் திட்ட வட்டமானதாக இருக்கவில்லை. அதில் ஒரு பங்கை சுல்தானும் கவர்ந்து கொள்ள ஆசைப்பட்டார். அதுபோன்றே அந்தப் புரப் பெண்களும் அதில் ஒரு பகுதியைப் பெற்றனர். பெருந் தொகைகளை சுல்தானுக்கும், அவருடைய கூட்டத்தினராக இருந்த பெண்களுக்கும் ஆண்களுக்கும் கொடுத்தால், ஒருவர் பிரதம மந்திரிப் பதவியைப் பெற முடிந்தது. இவ்விதமாக இலஞ்ச ஊழல் பேரரசு எங்கிலும் பரவி நின்றது. பதவிகளை விற்கும் தீய பழக்கத்தின் விளைவாகப் பேரரசின் அரசாங்கத்தின் ஒவ்வொரு பகுதியும் பாதிக்கப்பட்டிருந்தது. மற்ற அதிகாரி களுடன் நீதிபதிகளும் கூடப் பணத்திற்காகத் தீர்ப்பு அளித் தனர். எவன் ஒருவன் அதிகத் தொகையை அளிக்கின்றானோ, அவனுக்குச் சாதகமாகத்தான் தீர்ப்பு அளிக்கப்பட்டது. இலஞ் சம் கொடுக்க முடிந்த பெருங் குற்றவாளிகளும் விடுதலை பெற்றுக் கொண்டனர். ஆகவே, மக்கள் அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இழந்துவிட்டிருந்தனர். அதிகாரிகள் பெருந்தொகையை வாரிக் கொட்டி அப் பதவிகளைப் பெற்றுக் கொண்டமையால், அவர்கள் தங்களுடைய பதவிக் காலங்களில் ஏராளமான பணத்தைத் திரட்ட வேண்டி யிருந்தது. காற்றுள்ளபோதே தூற்றிக் கொண்டனர்.

இந்தத் தீய பழக்கத்திற்கு இரையாகி யிருந்த படைத்துறை யிலும், ஆட்கள் அவர்களுடைய திறமைக்காக உயர்பதவிகளில் நியமிக்கப்படாமல், அவர்கள் கொடுத்த பணத்தைப் பொறுத்து வேலையில் நியமிக்கப்பட்டனர். ஆகையினால், படைத் துறை யில் ஒழுங்கீனம் தலைதூக்கிற்று. மதிப்பிழந்த நாணயங்களைக் கொண்டு சாதாரணப் படை வீரர்களுக்கு ஊதியம் வழங்கப் பட்டதால் அவர்களுக்கு மனக்குறைவு ஏற்பட்டிருந்தது. பூட்டா, தப்ரீஸ் போன்ற எல்லைக் கோட்டைகளிலிருந்த படை வீரர்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். ஜனிஸ்ஸரீப் படை வீரர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அமைச்சர்களைப் பதவியிலிருந்து விலக்குமாறும், கொல்லுமாறும் அப் படைவீரர்கள் வற்புறுத்தி வந்தனர். அவர்களைச் சாந்தப்படுத்துவதற்காக சுல்தானும் அவரின் அந்தப்புரப் பெண்களும் அவ் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க வேண்டியே இருந்தது. டிரான்ஸில்வேனியா, மால்டேவியா, வலாச்சியா ஆகிய மாநிலங்களில் கிளர்ச்சி

மூண்டுவிட்டது. லெபனானில் (Lebonon) இருந்த கிறித்தவர்கள் தங்களை அடக்கி ஆள்பவர்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். பேரரசின் மற்றப் பல இடங்களிலும் கொள்ளைகள் நிகழலாயின.

அந்தப்புரத்துப் பெண்கள் போரை விரும்பவில்லை. வெனிஸியக் குடியரசைச் சார்ந்த சுல்தானு பாஃபோ அக் குடியரசுடன் போர் நிகழ்த்துவதற்குப் பல ஆண்டுகளாக எதிர்ப்புத் தெரிவித்து வந்தாள். ஆஸ்ட்ரியாவுடனும் அமைதி ஏற்படுத்தப் பட்டது. ஆனாலும், 1593-ல் டிரான்ஸில்வேனியாவும் வலாச்சியாவும் கிளர்ச்சி செய்தபோது, ஆஸ்ட்ரியாவும் ஹங்கேரியும் அவற்றின்மீது அனுதாபங் கொண்டு, சுல்தானுக்கெதிராகப் போரிட்டன. பேரரசர் மாக்ஸிமிலியன் (Emperor Maximilian) கௌன்ட் ஃபால்பி (Count Pfalfi) என்பவர்களின் தலைமையில் அந்நாடுகளின் சேனை டான்யூபுக்குச் சென்றது. வழியில் கிரான் (Gran) பெஸ்த் (Pesth) புகாரெஸ்ட் (Bucharest) மற்றும் துருக்கியர்களுக்குரிய இதரக் கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டு, பிறகு அது வார்னுவுக்குச் சென்றது.

இவ்வளவு பெரிய இழப்புக்கள் ஏற்பட்டதனாலும், துருக்கிப் படைகள் முறியடிக்கப்பட்டதனாலும், இஸ்தம்பூலில் பெருங் குழப்பம் ஏற்பட்டது. தகுதியற்ற சுல்தானை முகம்மதுவே அப் படைகளுக்கு நம்பிக்கையை ஊட்டுவதற்காக, அவற்றுக்குத் தலைமை தாங்கிப் போர் நிகழ்த்த வேண்டும் என்று மக்கள் கோரினர். நபிகள் நாயகத்தின் கொடியையே அவர் ஏந்தித் தம் படையினருக்குப் புத்துயிரும் உணர்ச்சியு மூட்ட வேண்டுமென்று அவர்கள் கோரினர். சுல்தான் இதனைச் செய்ய விரும்பவில்லை. இஸ்தம்பூலில் தங்கியிருப்பதையே அவர் விரும்பினார். தன் மகன் தலைநகரை விட்டுவிட்டுப் போய் விட்டால் தன் செல்வாக்கு மறைந்துவிடும் என்று அஞ்சிய சுல்தானு பாஃபோ தன் மகன் செய்ய மறுத்ததற்கு ஆதரவு கொடுத்தாள். அதற்கு மாறாக, அவருடைய ஆசானும் வரலாற்றறிஞருமான சஅதுத்தீன் சுல்தான் படைகளைத் திரட்டிச் செல்லத்தான் வேண்டும் என்று வற்புறுத்தினார். இறுதியில், தங்கள் பாஷா தங்களைப் போர்க்களத்திற்கு நேரில் கொண்டு போகவில்லை யென்றால் தாங்களும் போகப் போவதில்லை என்று ஜனிஸ்ஸரீகள் அறிவித்துவிட்டனர். ஆகவே, சுல்தான் முகம்மது வேறு வழியின்றிப் படைக்குத் தலைமை வகித்தார். துருக்கியர்கள் பெரும் ஆடம்பரத்துடன் படையெடுப்பாளர்களைச் சந்திக்கச் சென்றனர். துருக்கியர்களின் மாபெரும் சேனையைக் கண்ட ஆஸ்ட்ரியர்களும் ஹங்கேரியர்களும் பின்வாங்கினர்.

பல்கேரியாவில் தாங்கள் கைப்பற்றிய எல்லாக் கோட்டைகளை யும் அவர்கள் கைவிட்டனர். டான்யூபை மீண்டும் அவர்கள் கடந்தனர். இறுதியில், இருபடைகளும் ஹங்கேரியில் செரெஸ் டீஸ் (Cerestes) என்ற சமவெளியில் 1596 அக்டோபர் 24 ஆம் நாள் அன்று மோதிக் கொண்டன. இங்கே, நிசீனவில் நிலை நிறுத்திக் கொள்வதற்குரிய போர் ஒன்று நடைபெற்றது.

முகம்மது தம் படையை இயங்க வைப்பதில் எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை போலும்! பிரதம அமைச் சரே உண்மையில் படைக்குத் தலைமை வகித்தார். இரண்டாம் தலைவராக இருந்த சிக்காலா (Cicala) என்பவர் பெரும் ஆற்றல் படைத்தவர். அவர் இத்தாலியனுகப் பிறந்து, இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டவர். சுல்தான் தம் காவலர் சூழப் போர்க் களத்தில் காட்சியளித்தார். நபிகள் நாயகத்தின் கொடி பறக்க விடப்பட்டது. துருக்கியர்களின் உணர்ச்சியையும் ஆர்வத்தையும் அது தூண்டிற்று. முதல் நாள் அன்று துருக் கியர்கள் தோல்வியடைந்தனர். படையின் ஒரு பகுதி முறி யடிக்கப்பட்டது. போர்க் குழு ஒன்று கூடிற்று. மேலும், போர் புரியாது பின்வாங்கிக் கொள்ளலாம் என்று சுல்தான் விரும் பினர். சுஅதுத்தீன் இதைத் தீவிரமாக எதிர்த்தார். அவ ருடைய பலத்த எதிர்ப்பின் பேரில் சுல்தான் தொடர்ந்து போர் புரிய முடிவு செய்தார். இரண்டாம் நாள் அன்றும் நிலைமை அவ்விதமே இருந்தது. மூன்றும் நாள் அன்று, அக்டோபர் 26-ல் இரண்டு முக்கிய படைகளும் ஒன்றை யொன்று நெருங் கின. கௌன்ட் ஃபால்பியின் தலைமையிலிருந்த ஹங்கேரியப் படை உத்மானியப் பீரங்கிப் படையைத் தாக்கிப் பீரங்கிகள் எல்லாவற்றையும் கைப்பற்றிக்கொண்டது. மீட்க முடியாத அளவிற்குத் துருக்கியர்கள் வெற்றியை இழந்துகொண்டிருந் தனர். உயரமான ஒட்டகம் ஒன்றின்மீது அமர்ந்திருந்த சுல்தான் தம் படை இங்குமங்குமாக ஓடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். முடிந்த போதே ஓட்டம் பிடிக்கவேண்டும் என்று அவரும் நினைத்தார். ஆனால், சுஅதுத்தீன் அவரைப் பொறுமையாக இருக்கும்படி வற்புறுத்தினர். சுல்தான் வேறு வழியின்றிப் போர்க்களத்திலேயே தங்கிவிட்டார். அப்பொழுது ஆஸ்ட்ரியர்கள் உத்மானியர்களின் முகாமைத் தாக்கினர். பேரரசர் மாக்ஸிமிலியனின் படை உத்மானியர்களைக் கடந்து சென்று கொள்ளையடிப்பதில் ஈடுபட்டது. இந்த நெருக்கடியான நிலையில் சிக்காலா சிதறிக்கிடந்த கிறித்தவப் படைகளைத் தாக் கினர். வெற்றி உத்மானியர்களுக்குக் கிட்டிற்று. ஆஸ்ட்ரியர் களும் போர்க்களத்திலிருந்து ஓடிவிட்டனர். மாக்ஸிமிலியனும்

சிஜிஸ்மண்டும் தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஓட்டம் பிடித்தனர்.

இந்தத் துணிகரத் தாக்குதலின் விளைவாக உத்மானியர்கள் தாங்கள் இழந்ததை யெல்லாம் மீண்டும் பெற்றுக்கொண்டனர். முப்பதினாயிரம் ஆஸ்ட்ரியர்களும் ஹங்கேரியர்களும் அழிந்தனர். அவர்களுடைய தொண்ணூற்றைந்து பீரங்கிகளும் கைப்பற்றப் பட்டன. ஆர்ச்டியூக்கின் முகாமின் கருவூலமும் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. இதுபோன்ற எதிர்பாராத வெற்றி ஏற்படுவது என்பது வரலாற்றிலேயே மிகவும் அரிதாகும். இவ் வெற்றிக்கு சுல்தான் எவ்வகையிலும் காரணமில்லை. இந்த மாபெரும் வெற்றி சிக்காலாவின் துணிச்சலால்தான் ஏற்பட்டது.

இரண்டாம் முகம்மதுவின் மோஹாக்ஸ் வெற்றிக்குப் பிறகு, டான்யூப் நதிக்கு அப்பாற்பட்ட பகுதியில் இதைவிடச் சிறந்த வெற்றி வேறு ஏதும் கிடையாது. இப் போரில் கிறித்தவர்கள் வெற்றி அடைந்திருப்பார்களாயின், டான்யூபுக்கு வடபுறத்திலிருந்த உத்மானியர்க்குரிய எல்லா உடைமைகளையும் அவர்கள் இழந்திருப்பர். மாக்ஸிமிலியனின் தலைமையிலிருந்த கிறித்தவப்படை மீண்டும் அந் நதியைக் கடந்து பல்கேரியா மாஸிடோனியா ஆகிய பகுதிகளுக்குள் புகுந்திருக்கும். உத்மானியப் பேரரசின் சீர்குலைவு இன்னும் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டிருக்கக்கூடும்.

வெறிபிடித்தவர் போலிருந்த சுல்தான் போருக்குப் பின் உடனேயே தலைநகருக்குத் திரும்பிவிட்டார். சிக்காலா பெற்ற வெற்றிக்காக சுல்தானுக்கு அமோகமான வரவேற்பு அளிக்கப் பட்டது. மீண்டும் அவர் படையைத் திரட்டிக்கொண்டு போர்க் களத்திற்குச் செல்லவில்லை. அந்தப்புரத்துச் சிற்றின்பங் களிலேயே அவர் மூழ்கிக்கிடந்தார். பேரரசின் அரசாட்சி மீண்டும் சுல்தானா பாஃபோவின் கையில் சிக்கிற்று. சிக்காலா பெற்ற வெற்றிக்காக அவர் பிரதம மந்திரியாக உயர்வுபெற்றார். உண்மையில், இது வருந்தத்தக்க தொரு நியமனம் ஆகும். செரெஸ்டீஸ் போரில் தவறுக நடந்துகொண்ட உத்மானிய வீரர்களை சிக்காலா மிகக் கடுமையாக நடத்தினார்; அப் படையினரின் தலைவர்களுக்குத் தூக்கு தண்டனையும் விதித்தார். பெரும்பாலும் சின்ன ஆசியாவைச் சேர்ந்த முப்பதினாயிரம் படைவீரர்கள் பிரிந்து சென்று வீடு திரும்பினர். வழியில் பல் வேறு மாநிலங்களிலும் பேரரசின்மீது பற்றுதலின்மையை அவர்கள் உண்டுபண்ணினர்.

இந்த மாபெரும் வெற்றிக்குப் பிறகு ஆஸ்ட்ரியாவுடன் விட்டு விட்டுப் போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. இருப்பினும், 1606-ல் இரண்டுக்குமிடையே ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது. சில்வட்டோரோக்கில் (Silvatorok) கையெப்பமிடப் பட்ட இவ் வொப்பந்தம் உத்மானியர்களுக்கு அவ்வளவு சாதக மானதாக இல்லை. டிரான்ஸில்வேனியா அவர்கள் பிடியிலிருந்து விடுவிக்கப்பெற்றது. ஹங்கேரியில் ஒரு பாதியை அவர்களே வைத்துக் கொள்ளலாம் என்று உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால், மற்றப் பாதி கப்பம் செலுத்தும் பொறுப்பிலிருந்து விடுதலை பெற்றது. கிரான், எர்லௌ மற்றும் கிராடிஸ்கா (Gradiscka) என்னும் கோட்டைகள் உத்மானியரிடம் ஒப்படைக் கப்பட்டன. ராப் (Raab) கோமார்ன் (Komorn) ஆகியவை ஆஸ்ட்ரியாவிடம் ஒப்படைக்கப்பட்டன. பேரரசருக்கு ஆஸ்ட் ரியா ஆண்டுதோறும் கப்பமாகச் செலுத்திவந்த 30,000 துக் காத்துத் தொகை நிறுத்தப்பெற்றது; ஆனாலும், மொத்த மாக இரண்டு இலட்சம் துக்காத்துத் தொகையை ஆஸ்ட்ரியா சுல்தானுக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. இவ்விதமாக, டிரான்ஸில்வேனியா சரணடைந்து விட்டதனால் உத்மானிய பேரரசின் எல்லை சுருங்கத் தொடங்கிற்று. அக் காலந்தொட்டு அது சுருக்கிக்கொண்டே வந்தது.

இந்த வீழ்ச்சி மற்றொரு வகையிலும் வெளியாயிற்று. பார சீகத்துடன் மீண்டும் தொடங்கிய போர்களில் துருக்கியர் பல தோல்விகளை யடைந்தனர். 1618-ல் சிறிது காலத்திற்கு ஒப் பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன்படி, மூன்றும் முரா தின் காலத்திலும் மூன்றும் முகம்மதின் காலத்திலும் கைப்பற்றப் பட்ட எல்லா மாநிலங்களும் மீண்டும் பாரசீகத்தினிடம் ஒப் படைக்கப்பட்டன. இரண்டாம் சலீமின் காலத்தில் இரண்டு பேரரசுகளுக்குமிடையில் இருந்த எல்லைகள் மீண்டும் நிலை நாட்டப்பட்டன. அதற்கிடையே மோசமான ஆட்சியின் விளை வாகத் துருக்கிப் பேரரசு அதனுடைய அழிவிற்கு விரைந்து கொண்டிருந்தது. எப்படிப்பட்ட படுமோசமான நிலைமை என்பது, இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸ் என்ற அரசர் சுல் தானிடம் பிரிட்டிஷ் தூதராக அனுப்பிய சர் தாமஸ் ரோ (Sir Thomas Roe) என்பவருடைய குறிப்பேடுகளிலிருந்து புலனா கின்றது. ஏற்கெனவே ஒரு சில ஆண்டுகட்கு முன்பு எலிஸ பெத் இராணி சுல்தானுடன் பேச்சு வார்த்தை தொடங்கி, இங்கிலாந்தின்மீது படையெடுக்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்த இரண்டாம் ஃபிலிப்புக் கெதிராக மத்தியதரைக் கடற் பகுதியில் ஒரு கப்பற் படைக் கூட்டணியை உருவாக்குமாறு வற்புறுத்

தினுள். சுல்தானின் பதில் நட்பு ரீதியில் அமைந்திருந்தது என்றாலும், வேறு எவ்வித விளைவும் ஏற்படவில்லை.

1622-ல் சர் தாமஸ் ரோவின் தலைமையில் தூதுக்குழு அனுப்பப்பட்டதன் நோக்கம், அல்ஜீரியா மற்றும் தூனிஸ் ஆகிய மாநிலங்களிலிருந்து வந்த கடற்கொள்ளைக்காரர்கள் பிரிட்டிஷ் வாணிகத்தைப் பாழடித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவேயாகும். அத் தூதர் இஸ்தம்பூலில் ஐந்து ஆண்டுகள் தங்கியிருந்தார்; நிவாரணம் அளிப்பதாக சுல்தானிடமிருந்து வாக்குறுதியும் பெற்றார். அல்ஜீரியாவின் பாஷா திரும்பி அழைக்கப்பட்டு அவருடைய இடத்திற்கு மற்றொருவர் நியமிக்கப்பட்டார். ஆனால், கடற் கொள்ளைகளைப் பொறுத்த வரையிலும் எந்த விதமான விளைவும் ஏற்படவில்லை அத் தூதரின் வருணனையிலிருந்து துருக்கிக் குடிமக்கள் எவ்வித அவல நிலையிலிருந்தனர் என்பது புலனுகின்றது. சிறந்த தலைவர்கள் இல்லாமையும் இலஞ்ச ஊழலுமே அந்த அவல நிலைக்குக் காரணம். அந்த நிலையில் அண்டைப்புற வல்லரசு ஒன்று அப் பேரரசைத் தாக்கியிருக்குமாயின், எந்த விதமான எதிர்ப்புமில்லாமல் அது குலைந்திருக்கும். ஆனால், இரண்டாம் ஃபிலிப்புக்குப் பிறகு ஸ்பானிய நாடானது துருக்கியைப் போன்றே பாழடைந்த நாடாகியிருந்தது. ஜெர்மனியில் உள் நாட்டுப் போர் மூண்டிருந்தது. அன்னியப் பகைவர்களை அதனால் எதிர்த்து நிற்க முடியவில்லை. ரஷிய நாடு அப்பொழுது வளர்ச்சி பெற்ற நாடாக இருக்கவில்லை.

நான்காம் முராத் பட்டத்திற்கு வந்ததும் அந்தப்புரச் செல்வாக்கு மங்கத் தொடங்கிற்று. வயதுக்கு வந்ததும் அவர் தம் தாயினிடத்திருந்து அரசாங்கப் பொறுப்பைப் பெற்றுக்கொண்டார். அவருடைய தாய் கூர்மதி படைத்தவள், நல்லெண்ணத்தைக் கொண்டிருந்தவள்; மகன் வயதுக்கு வராத வரையில் தானே நாட்டை ஆண்டு வந்தாள். ஆனாலும், அப் பொழுது ஏற்பட்டிருந்த பிரச்சினைகளை அவளால் சமாளிக்க முடியவில்லை. பேரரசு எல்லா வகைகளிலும் சீர் கெட்டுக் கொண்டிருந்தது. துருக்கியில் ஏற்பட்டிருந்த குழப்பத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட பாரசீகர்கள் இரிவான் (Erivan) மற்றும் பாக்தாத் ஆகிய மாநிலங்களின்மீது படையெடுத்தனர். அல்ஜீரியா, தூனிஸ் ஆகிய இரு பார்பரி மாநிலங்கள் சுதந்தரம் அடைய முயற்சி எடுத்துக்கொண்டிருந்தன. சுல்தானுடன் நட்புக்கொண்டிருந்த நாடுகளின் வாணிகத்தை அவற்றின் மக்கள் கொள்ளையடித்துக் கொண்டிருந்

தனர்; அவற்றுடன் தனித்தனி ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளப் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருந்தனர். இவற்றின் விளைவாகப் பேரரசின் உள்நாட்டு நிலை மேலும் மோசமாகியிருந்தது. சுல்தானுவைத் தங்கள் செல்வாக்குக்குட்படுத்தி வைத்திருந்த ஜனிஸ்ஸரீப் படையினர் அடிக்கடி கிளர்ச்சி செய்துகொண்டிருந்தனர்.

1632-ல் முராத் இருபத்தொன்றுவது வயதை அடைந்ததும் அரசாங்கப் பொறுப்பைத் தாமே மேற்கொண்டு விட்டார். தமக்கு முற்பட்டவர்களுக்குத் தாம் முற்றிலும் வேறுபட்டவர் என்பதை அவர் வெகு விரைவில் வெளிப்படுத்தி விட்டார். முதன் முதலாக, ஜனிஸ்ஸரீகளின் கிளர்ச்சி ஏற்பட்டது. பிரதம அமைச்சரும் மற்றும் பதினறு உயர் அதிகாரிகளும் கொல்லப்பட வேண்டும் என்று அப் படையினர் கோரினர். முராத் அடி பணிய வேண்டியதாயிற்று. ஆனலும், தமக்கு இதனுல் ஏற் பட்ட அவமானத்தை அவரால் மறக்க முடியவில்லை. அதற்குப் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்றும் அவர் முடிவு செய்தார். நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ள சிப்பாஹீகளை அவர் தம்மைச் சூழ வைத்துக்கொண்டு, ஜனிஸ்ஸரீப் படையினரின் தலைவர்களைத் திடீரென்று தாக்கிக் கொன்றுவிட்டார். இச் செயல் அப் படையினரைப் பீதியில் ஆழ்த்தி அடிபணிய வைத்தது. பிறகு பணித்துறையில் எல்லா மட்டங்களிலும் இருந்த இலஞ்சம் வாங்கும் அதிகாரிகளைப் பதவியிலிருந்து விலக்கும் வேலையில் அவர் ஈடுபட்டார். சந்தேகத்திற்குரிய அதிகாரிகளை யெல்லாம் அவர் தூக்கிலிட்டார். கொடுமையும் தீங்கும் இழைப்பவர்கள் அவரைக் கண்டு நடுங்கினர். தீயதை ஒழிப்பதற்காக அவரே பல கொடுமைகளைப் புரிந்தார். உதிரம்சிந்துவதில் அவர் ஆர்வம் காட்டினர். அவருடைய செயல்கள் கொடுமையானவையாக இருப்பினும், அரசாங்கத்திலும் படையிலும் அவை ஒழுக்கத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. பேரரசில் எங்கும் அவருடைய ஆணை நிறைவேற்றப்பட்டு வந்தது. 'சுல்தான்' என்ற நிலையில் அவ ருடைய அதிகாரம் மீண்டும் நிலைநாட்டப்பட்டது.

'படைத் தலைவர்' என்ற நிலையிலும் அவர் தீவிரமாகச் செயல்பட்டார். அவர் தம் தாயினிடத்திருந்து அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு எட்டு ஆண்டுக்காலத்திற்கு மட்டுமே ஆட்சி நடத்தினர் என்றாலும், அக் குறுகிய காலத்துக் குள் அவர் பாரசீகத்து ஷாவுக்கெதிராக இரண்டு படையெடுப்பு களை நிகழ்த்தினர். முதலாம் படையெடுப்பின் போது அவர் இரிவானைக் கைப்பற்றிக்கொண்டார். இரண்டாம் படையெடுப்

பின் பொழுது பாரசீகர்களின் கடுமையான எதிர்ப்பைச் சமாளித்துக்கொண்டு பாக்தாதை அவர் மீட்டுக்கொண்டார். நகரம் சூறையாடப்பட்டதற்குப் பிறகு அது உத்மானியர்களின் ஆட்சிக்குள்ளாயிற்று. மீண்டும், எண்பது ஆண்டுகட்குப் பிறகுதான் பாரசீகத்துடன் போர் மூண்டது.

இந்தப் படையெடுப்புகளின் போது முராத் பெரும் ஆற்றலுடன் செயல்பட்டார்; தம் படை வீரர்களுடன் தாமும் போர்க்களத்தில் போரிட்டுப் பெரும் துன்பங்களைச் சகித்துக்கொண்டார். இரண்டாம் படையெடுப்பிற்குப் பிறகு அவர் 1639-ல் தலைநகருக்குத் திரும்பியவுடன் மக்கள் அவரைப் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்றனர். ஆனால், 1640-ல் அவர் உயிர் நீத்தார். மரணத் தறுவாயில் இருந்தபொழுது, அவர் தமது சகோதரரும் உத்மானியர்களுள் ஒரே சந்ததியாராக இருந்த வருமான இப்ராஹீமைக் கொல்லும்படி உத்தரவிட்டார். தம் சகோதரரின் ஆட்சிக்காலத்தில் 'கூண்டில்' அடைக்கப்பட்டிருந்த இப்ராஹீம் ஆட்சி புரிவதற்குத் தகுதியற்றவராகவே இருந்தார். இதனை சுல்தானும் உணர்ந்திருந்தார். ஆகவே, தாமே கடைசி உத்மானிய அரசராக உயிர் துறக்க வேண்டும் என்பது அவரது நெடுநாள் அவா என்று ஒருசிலர் கருதுகின்ற அதே நேரத்தில் மற்றும் சிலர், அவர் தமக்குப் பிறகு தம் பிரதம அமைச்சரே பதவிக்கு வரவேண்டுமென விரும்பினர் என்றும் கருதுகின்றனர். சுல்தானின் தாய் தன் இரண்டாம் மகனை இப்ராஹீமைக் காப்பதற்காக சுல்தானின் உத்தரவை நிறைவேற்றி விட்டதாக நடித்தாள். மரணப் படுக்கையில் இருந்த சுல்தானுக்கு இப்ராஹீமைக் கொன்று விட்டதாக ஒரு செய்தியை அனுப்பி வைத்தாள். இதைக் கேட்ட சுல்தான் மன அமைதியடைந்து, ஒரு கொடூரப் புன்னகையுடன் உயிர் நீத்தாராம். உத்மானியப் பேரரசின் சீர்கேட்டை விரும்பியவர்கள் அவ்வரசு தம்முடன் முடிவடைந்து விடவேண்டும் என்ற தமது விருப்பத்தை முராத் நிறைவேற்றுததைக் கண்டு மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும். சுலைமானுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த சுல்தான்கள் திறமையற்றும் ஒழுக்கங்கெட்டும் இருந்ததனால், நெடு நாளுக்கு அந்த நிலையில் பேரரசைச் சமாளிப்பது என்பது இயலக்கூடியதன்று. பேரவாமிக்க அமைச்சராலோ, ஆற்றல்மிக்க துணிகரப் படை வீரர்களாலோ, ஒரு புதிய ஆளும் வம்சம் உருவாகுமேயாயின், பேரரசின் விதி வேறு திசையில் சென்றுவிடும் தன்மையையடையும். பேரரசும் சிதைவிலிருந்து தப்பித்திருக்கக் கூடும். ஆனால், விதி வேறு திசையாகச் சென்றுகொண்டிருந்தது.

முராதுக்குப் பிறகு இப்ராஹீம் பட்டத்திற்கு வந்தார். தகுதியற்றவராகையால் இவர் பதவிக்கு வரக்கூடாது என்று முராத் விரும்பினார். இப்ராஹீமின் எட்டாண்டு ஆட்சியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் முராதின் எண்ணம் சரியே என்பதை உறுதிப் படுத்தின. அந்தக் குறுகிய ஆட்சிக் காலத்தில் இப்ராஹீம் தம் சகோதரர் தமக்கு முன்பு வினைத்திருந்த எல்லா நல்வினைகளையும் பாழடித்துவிட்டார். இவருடைய ஒழுக்கங்கெட்ட குணவியல்பு தலைதூக்கி நின்றது. முராதைப் போன்றே இவரும் இரத்தம் சிந்துவதில் ஆர்வம் கொண்டவராக இருப்பினும், பேரரசு முழுவதிலும் அமைதியையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டும் என்றும், படையில் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் என்றும் அண்ணன் கொண்டிருந்த ஆர்வத்தை இப் புதிய சுல்தான் கொண்டிருக்கவில்லை. இவர் ஒரு கோழை; ஈன புத்தி படைத்தவர். முராத் மிகவும் விழிப்புடன் திரட்டி வைத்திருத்த மூலப் பொருள்களையும் இவர் வெகு விரைவில் பாழாக்கிவிட்டார்; அந்தப்புரத்துக் களியாட்டங்களில் மூழ்கிக் கிடந்தார். உத்மானிய சுல்தான்களிலேயே இவர்தாம் மிகவும் ஒழுக்கங் கெட்டவராக இருந்தார். இவருடைய தாயும் இவருடைய நப்பாசைகளை நிறைவேற்றிக் கொண்டேயிருந்தாள். முராத் ஒடுக்கிய ஒவ்வொரு தீமையும் ஓங்க ஆரம்பித்தது. இஃதெல்லாம் நாட்டின் நலனை மிகத் தீவிரமாகப் பாதித்தது. உள்நாட்டு விவகாரங்கள் இன்னும் சீர்கேடான திசையில் சென்றுகொண்டிருந்தன. அந்தப்புரத்தினரின் செல்வாக்கு மீண்டும் தலைதூக்கத் தொடங்கிற்று. ஜனிஸ்ஸரீகள் சிப்பாஹீகள் ஆகியவர்களுக்கிடையே கிளர்ச்சி மனப்பான்மையும் அதிருப்தியும் பரவின. இஸ்தம்பூலிலிருந்த உலமாக்களுக்கிடையேயும், மற்றும் பல்வேறு மக்களுக்கிடையேயும் அதே போன்ற நிலை ஏற்பட்டது. சுல்தானை ஒழிப்பதற்காக ஒரு சதியும் தீட்டப்பட்டது. உலமாக்களில் பலர் அதனை ஆதரித்தனர். இப்ராஹீமைப் பதவியிலிருந்து விலக்கி அவருடைய ஏழு வயது மகனை முகம்மதை அரியணையில் அமர்த்தவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இதைத் தடுப்பதற்கு இப்ராஹீமின் தாய் பலத்த முயற்சி செய்தபோதிலும் அவள் இறுதியில் அம் முடிவுக்கு இணங்க வேண்டியதாயிற்று. ஜனிஸ்ஸரீப் படையினர் பலர் ஒன்று சேர்ந்து அவரைப் பதவியிலிருந்து விலக்கிக் கொன்று, அவருடைய மகன் நான்காம் முகம்மதுவை அரியணைமீது அமர்த்தினர்.

வெளிநாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரையில் இப்ராஹீமின் எட்டாண்டு ஆட்சிக் காலம் சற்று முக்கியத்துவம்

வாய்ந்ததாகத்தான் இருந்தது. அண்மையில் கொஸ்ஸாக்குகளின் (Cossacks) கைவசமாகியிருந்த அஸாஃப் (Azoff) என்ற முக்கிய நகரத்தை மீண்டும் கைப்பற்றுவதற்காக 1641-ல் படையெடுப்பு நடத்தப்பட்டது. ஆனால், அது தோல்வியுற்றது. மறு ஆண்டில், இன்னும் சற்றுக் கூடுதலான படையை சுல்தான் அனுப்பிவைத்தார். கிரீமியாவிலிருந்த டார்ட்டார்களும் ஆதரவு கொடுத்தனர். இம் முயற்சி வெற்றி கண்டது. நகரைச் சரண் அடையச் செய்வதற்கு முன்னர், கொஸ்ஸாக்குகள் எல்லைக் கோட்டைகளையே இடித்துத் தள்ளி நகரையும் எரித்துவிட்டனர். துருக்கியர்கள் அதை மீண்டும் கட்டிக் கோட்டைகளில் பெரும் படைகளை விட்டுச்சென்றனர். வெனிஸ் குடியரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த கிரீட் தீவைத் தாக்குவதற்காக 1644-ல் ஒரு படை அனுப்பி வைக்கப்பட்டது. இஸ்தம்பூலிலிருந்து எகிப்திற்குச் சென்ற வாணிகக் கப்பல்களை மால்டாத் தீவுக்குரிய கடற்கொள்ளைக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டனர்; பாதுகாப்பிற்காக இவர்கள் கிரீட்டுக்குரிய துறைமுகம் ஒன்றில் அடைக்கலம் புகுந்தனர். சினமுற்ற சுல்தான் மால்டாவைத் தாக்க நினைத்தார். ஆனால், பெரும் தீங்கு இதனால் விளையக்கூடும் என்று அவருக்கு எடுத்துரைக்கப்பட்ட பொழுது அத் திட்டத்தைக் கைவிட்டு, அதற்குப் பதிலாகக் கிரீட்டைத் தாக்க அவர் முடிவு செய்தார். சுல்தானுடன் வெனிஸ் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தபோதிலும், நஷ்டஈடு கொடுப்பதற்கு அது தயாராக இருந்தபோதிலும் கிரீட்டைத் தாக்க அவர் முடிவெடுத்தார்.

வெளித் தோற்றத்திற்கு மால்டாவைத் தாக்குவதுபோலும், ஆனால் முத்திரையிட்ட ஆணையின்படி கிரீட்டைத் தாக்குவதற்கும் 1645-ல் கப்பற்படை ஒன்று அனுப்பப்பட்டது. அப்படை, உத்தரவின்படி கிரீட்டுக்குச் சென்று கொண்டிருக்கையில், அத் தீவின் முக்கிய துறைமுகங்களுள் ஒன்றான கானியாவைத் (Canea) திடீரெனத் தாக்கிற்று. அந் நகரையும் ரெட்டிமோவையும் (Retino) கைப்பற்றிக் கொண்டதற்குப் பிறகு, படை தரையில் இறங்கிற்று. தீவு முழுவதையும் அது கைப்பற்றிக் கொண்டு, அதன் முதன்மைக் கோட்டையும் தலைநகருமாக விளங்கிய காண்டியாவைத் தாக்கிற்று. முற்றுகை இருபத்தைந்து ஆண்டு காலம்வரை நடைபெற்று வந்தது. நகரைக் காப்பாற்றுவதற்காக வெனிஸ் குடியரசு பெரும் முயற்சியும் எடுத்துக் கொண்டது. ஆனாலும், அதிலிருந்த கிரேக்க மக்கள் அதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லையாதலால், நிலைமையைச் சமாளிக்க வெனிஸால் முடியவில்லை.


சுல்தான் இவ்விதமாக வெனிஸ் குடியரசைத் தாக்கித் தம் உடைமைகளை அதிகரித்துக் கொள்ள முயலுகையில் ஆபிரிக்காவின் வடக்குக் கடலோரத்தில் அவருடைய பேரரசுக்குச் சேதம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. பார்பாரி நாடுகளான அல்ஜீரியா மற்றும் தூனிஸ் என்பவை பதினேழாம் நூற்றாண்டின் இடைக் காலந்தொட்டு உத்மானியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுவிட்டன என்று பல வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால், அந்த நிகழ்ச்சிக்கான திட்டவட்டமான தேதியைக் குறிப்பிட இயலவில்லை. ஏனெனில், துண்டிப்புப் பல நாட்களாகவே மெல்ல மெல்ல ஏற்பட்டுக்கொண்டிருந்தது. இந்த இழப்பிற்கு முக்கிய காரணமாக விருந்தது, பதவிகளை அதிக விலைக்கு விற்கும் பழக்கமாகும். திறம்படைத்தவர்கள் பெறவேண்டிய பதவிகளைப் பணமுடையவர்கள் அதிக விலை கொடுத்து வாங்கிக்கொண்டனர். அதே சூழ்நிலையில், அல்ஜீரியா தூனிஸ் ஆகியவற்றின் ஜனிஸ்ஸரீப் படையினரும் உத்மானியப் படையினரும் தங்களுடைய தலைவர்களைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பழக்கம் உருவாயிற்று. 'டே' (Dey) என்றழைக்கப்பட்ட இத் தலைவர்களின் பதவி நியமனம் சுல்தானுடைய இணக்கத்தைப் பெறவேண்டியிருந்தாலும், பின்னாளில் அவ் விணக்கத்தைப் பெறும் பழக்கமும் கைவிடப்பட்டது. படை வீரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'டேக்'கள் உண்மை ஆட்சியாளர்களாயினர். நாளடைவில் அவர்கள் இஸ்தம்பூலிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பாஷாக்களையும் மாநில ஆளுநர்களையும் களைந்தெறிந்து விட்டனர். இவ்விதமாக, உண்மைச் சுதந்தர நிலையை அவர்கள் அடைந்திருந்தனர். இரு நாடுகளும் ஆற்றல் மிகுந்த கப்பற்படைகளை உருவாக்கி வைத்திருந்தன. அக் கப்பற்படைகள் மத்திய தரைக் கடலிலும் அட்லாண்ட்டிக் பெருங்கடலிலும் திரிந்துகொண்டு, வழியில் செல்லும் வாணிகக் கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தன. இப் படைகளுடைய தொல்லை மிகவும் அதிகமாகி விட்டிருந்ததனால், பிற நாட்டினர் சுல்தானுக் கெதிராகப் போர் தொடங்காமலேயே இந் நாடுகளின் மீது போர் தொடுத்தனர். இவ் விதமாக, 1617 ஆம் ஆண்டிலேயே பியூலியூ (Beaulieu) என்ற தளபதியின் தலைமையில் ஃபிரெஞ்சுக் கப்பற்படை ஒன்று அல்ஜீரியக் கப்பற்படையைத் தாக்கி அதிலிருந்த பல கப்பல்களை மூழ்கடித்தது. 1620-ல் சர் ரிச்சர்டு மான்செல் (Sir Richard Mansel) என்பவரின் தலைமையில் பிரிட்டானிய கப்பற்படை ஒன்று அதே போன்ற தாக்குதலை அல்ஜீரியாவின்மீது நடத்தியது. ஆனாலும், விளைவு அவ்வளவு சிறப்பானதாக இருக்கவில்லை. 1655-ல் பிளேக்

(Blake) என்ற தளபதியின் தலைமையில் பிரிட்டிஷ் கப்பற்படை ஒன்று தூனிஸைத் தாக்கிச் சிதறவடித்து அதன் பெரும்பாலான கப்பற்படையை அழித்து அல்ஜீரியாவுக்குச் சென்றது. அங்கே எங்கும் அவலநிலை ஏற்பட்டது. இவ் விரண்டு வேளைகளிலும் சுல்தானுக் கெதிராகப் போர் மூண்டிருப்பதாக ஏதும் அறி விக்கப்படவில்லை. சுல்தானும் இந் நடவடிக்கைகளைத் தவருகக் கருதாது, இங்கிலாந்தின்மீது எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. 1663-ல் பிரிட்டிஷ் அரசுக்கும் சுல்தானுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, அல்ஜீரியர்களைத் தாக் கித் தண்டிப்பதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அனுமதி யளிக்கப்பட்டது. இந்த அனுமதியை அவ்வரசு செம்மையாகப் பயன்படுத்திக்கொண்டு, கடற் கொள்ளைக்காரர்களைக் கடுமை யாகத் தாக்கி வந்தது. இவ்விதமாக, 1650ஆம் ஆண்டுக் குள்ளாக உத்மானியப் பேரரசிலிருந்து அந்த பார்பாரி மாநிலங் கள் முற்றிலும் சுதந்தரம் அடைந்து விட்டிருந்தன. அல்ஜீ ரியாவைப் பொறுத்தவரையில், 1830 வரை அது சுதந்தர நிலையில் இருந்ததற்குப் பிறகு, அவ் வாண்டில் ஃபிரான்ஸினால் அதன் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. தூனிஸும் அவ் விதமே சுதந்தரமடைந்தது. ஆனால், இங்கே 'டே' பதவி மரபுரிமைப் பதவியாக ஆயிற்று. கிரேக்கத் துணிகர வீரர் ஒருவர் 'டே' ஆகி, அவர் காலந்தொட்டு அப் பதவி மரபுரிமை யாயிற்று. 1881-ல் அது ஃபிரெஞ்சுக்காரரால் தாக்கப்பட்டு, இறுதியில் அந் நாட்டின் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப் பட்டது.

இப்ராஹீமுக்குப் பிறகு அவர் மகன் நான்காம் முகம்மது பட்டத்திற்கு வந்தார். இவருடைய ஆட்சி முப்பத்தொன்பது ஆண்டுகட்கு நீடித்தது. அவற்றுள் முதல் எட்டு ஆண்டுக் காலத்தில் பேரரசெங்கிலும் குழப்பம் நிலவியிருந்தது. அர சாங்கம் அந்தப்புரத்தினரிடையே சிக்கிக் கிடந்தது. அந்தப் புரத்திலேயே பிளவு ஏற்பட்டிருந்ததனால் நிலைமை மேலும் மோசமாயிற்று. இரண்டு கட்சிகள் கடுமையாகப் போட்டி யிட்டுக்கொண்டிருந்தன: ஒரு கட்சி மாஜீ சுல்தானின் தாயின் தலைமையிலிருந்தது; தன் மகன் காலத்தில் தான் பயன்படுத்திய அதிகாரத்தை அவள் விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. மற்றது புதிய சுல்தானின் தாயான தொர்கான் (Torchan) என்பவளின் தலைமையில் இருந்தது. இரண்டு கட்சியினரும் ஜனிஸ்ஸரீகளின் ஆதரவையும் சிப்பாஹீகளின் ஆதரவையும் பெற்றிருந்தனர். ஆகவே, தலைநகரின் வீதிகளிலேயே இரு கட்சியினருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. ஆதிக்கம்

பெற்று விளங்கிய கட்சியின் விருப்பு வெறுப்புப்படி பிரதம அமைச்சர்கள் பதவியில் நியமிக்கப்பட்டனர்; அதிலிருந்து விலக்கவும் பட்டனர். பேரரசிலும் மோதல்கள் ஏற்பட்டன. அவற்றைச் சமாளிக்க வல்லவர் எவரும் கிடையார். அவ்விரு பெண்களுக்குமிடையே ஏற்பட்டிருந்த சச்சரவு வயதில் மூத்தவளாக இருந்த மாமியார் கொல்லப்பட்டதுடன் முடிவடைந்தது. நல்ல வேளையாக, இந்த இக்கட்டான நிலையில் ஆஸ்ட்ரியா முப்பதாண்டுப் போரினால் ஏற்பட்ட கஷ்டத்தின் விளைவாகச் செயலற்றுக் கிடந்தது: உத்மானியப் பேரரசைத் தாக்கி, ஹங்கேரியையும் இதர மாநிலங்களையும் கைப்பற்றிக்கொள்ள அதனால் முடியவில்லை. ஆனால், எக் காரணமுமின்றி இப்ராஹீம் கிரீட்டைத் தாக்கியதானால் மூண்ட போர் மட்டும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. மாஸெனிகோ (Macenigo) என்னும் தளபதியின் தலைமையில் இருந்த வெனிஸியக் கப்பற்படை ஒன்று டார்டனல்ஸ் கடலில் உத்மானிய கடற்படை ஒன்றை மூழ்கடித்தது; லெம்னஸ் (Lemnos) டெனிடாஸ் (Tenedos) ஆகிய தீவுகளையும் கைப்பற்றிக் கொண்டது. டார்டனல்ஸையேகூட அது முற்றுகையிட்டது. இந்த நடவடிக்கையும்கூட உத்மானியர்களால் நடத்தப்பட்ட காண்டியா முற்றுகையை நிற்பாட்டவில்லை. நெடுங்காலம் வரையிலும் நிகழ்ந்த இம் முற்றுகையினால் எவ்விதப் பலனும் ஏற்படவில்லை. இதற்கிடையே பேரரசு நெடுகிலும் குழப்பம் நிலவியிருந்தது. சுல்தானு தொர்காளால் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்ட ஒருவரால் அப் பேரரசுக்கு ஒரு மீட்சி ஏற்பட்டது. இவர்தாம் வயது முதிர்ந்த, அனுபவமிக்க நேர்மையான முகம்மது கொப்ரீலீ (Mohammad Kopriilii) என்பவராவார்.

உத்மானியப் பேரரசின் குலைவு 1699-1914



படம் 3

1. ஃபிரான்ஸ்
2. ஆஸ்ட்ரியா
3. ஸ்பானிய நாடு
4. வியன்னா
5. (அ) ஆஸ்ட்ரியாவிற்குக் கொடுக்கப்பட்ட ஹங்கேரி முதலியவை
6. ரூமேனியா
7. ஸெர்பியா
8. பல்கேரியா
9. இத்தாலி
10. மத்தியதரைக் கடல்
11. கிரீஸ்
12. (எ) இத்தாலிக்குக் கொடுக்கப் பட்ட டோடகனிஸ் மற்றும் திரிபோலி (1912)
13. கருங்கடல்
14. கிரிமியா
15. இஸ்தம்பூல்
16. ரஷியா
17. சோஸ்டால்
18. (ஆ) ரஷியாவிற்குக் கொடுக்கப் பட்டவை. (1699, 1878)
19. காஸ்பியன் கடல்
20. ஏரல் கடல்
21. (ஐ) உத்மானியப் பேரரசு (1914)
22. ஈரான் (பாரசிகம்)
23. அரேபியா
24. மக்கா
25. பாரசிக வளைகுடா
26. பலஸ்தினம்
27. (ஊ) பிரிட்டனுக்குக் கொடுக்கப் பட்ட சைப்ரஸ் (1878)
28. மொராக்கோ
29. (ஈ) ஃபிரான்ஸுக்குக் கொடுக்கப் பட்ட அல்ஜீரியா (1830)
30. ரூமேலியா
31. (இ) பால்கனியர்களின் சுதந்தரம் (1817—1913)
32. (உ) எகிப்துஓரளவு சுதந்தரம் அடைதல் (1867)
(எ) தூனீஸியா பிரான்ஸுக்குக் கொடுக்கப்பட்டது.

15. கொப்ரீலீ வஸீர்கள் (1656-1702)

(The Kopriilii Viziers)

இந்த நெருக்கடியான வேளையில் சுல்தான்களுடைய ஆற்றலும் அதிகாரமும் முறிந்து விட்டமையாலும், அதிகாரிகள் லஞ்ச ஊழலில் சிக்கிக் கிடந்தமையாலும், படை ஒழுங்கில்லாமலும் கிளர்ச்சி செய்யும் மனப்பான்மையுடனும் நடந்து கொண்டதனாலும் பேரரசின் சிதைவு எச்சமயமும் ஏற்படவிருந்தபோது, அதன் கேடுகெட்ட பாதையிலிருந்து அதைக் காப்பதற்காகவும், தற்காலிகமாகவாவது அதன் புகழை மீட்டுவிப்பதற்காகவும் ஒருவர் தோன்றினர் — இல்லை, ஒரு குடும்பமே தோன்றிற்று. அடுத்த நாற்பத்தாறு ஆண்டு காலத்திற்குக் கொப்ரீலீ குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பிரதம அமைச்சர்ப் பதவியை வகித்து வந்தனர். தகுதியற்ற முகம்மதுவின் சார்பாகவும் அவருக்குப் பிறகு வந்தவர்களின் சார்பாகவும் அவர்கள் அரசாங்கத்தை நடத்தி வந்தனர். துருக்கியில் எப் பதவியும் மரபுரிமையானதாகி விடவில்லை யாதலால், இக் குடும்பத்தின் தோற்றம் உண்மையில் வியப்புக்குரியதாகும். உத்மானியப் பேரரசின் சிம்மாசனத்தில் உத்மானிய இனத்தினர் இடையருமல் அமர்ந்திருந்தனர். ஆனல், எவ்வித மரபுரிமையினலும் அது ஆதரிக்கப்படவில்லை. உத்மானிய துருக்கியர்களின் அரசியல் சமூகத் திட்டங்கள் எக் காலமும் மக்கள் ஆட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் அமைந்திருந்தன. அரசாங்கத்திலிருந்த உயர் பதவிகளும் தாழ்ந்த பதவிகளும் எவராலும் மேற்கொள்ளப்படுவனவாகவே இருந்தன. தகுதி உள்ளவர்களோ இல்லையோ, நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களோ இல்லையோ, செல்வந்தர்களோ இல்லையோ, எவராயினும் எப் பதவியையும் வகிக்கக் கூடும் என்ற நிலை அப் பேரரசில் இருந்து வந்தது. இதற்கு நிகரற்ற விலக்காக இருந்தவர்கள் கொப்ரீலீ குடும்பத்தினராவர். சுல்தானின் கீழ் இக் குடும்பத்தினர் மிக உயர்ந்த பதவியை

வகித்ததோடல்லாமல், அப் பதவியைத் தங்கள் குடும்பத்தின் தலைமுறை மரபுரிமையாக்கியும் விட்டனர்.

முகம்மது கொப்ரீலீ என்பவர் அல்பேனிய குடும்பம் ஒன்றில் பிறந்தவர். இவருடைய பாட்டனார் சின்ன ஆசியா அமேசியாவில் இருந்த கொப்ரீலீ என்ற சிறு நகருக்கு வந்து குடியேறினர். அவ்விடத்தின் பெயரையே தம் பரம்பரையினரின் குடும்பப் பெயராக அவர் மேற்கொண்டார். அவர்கள் மிக இழிந்த நிலையில் இருந்திருக்கவேண்டும். முகம்மது சமையலறை வேலைக்காரனாக வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு படிப்படியாகப் பல பதவிகளுக்கு அவர் உயர்வு பெற்று, அந்தப்புரத்தவர்களின் ஆதரவையும் பெற்று, இறுதியில் முறையே டமாஸ்கஸ், திரிப்போலி மற்றும் ஜெருசலேம் ஆகியவற்றின் ஆளுநரானார். ஒவ்வொரு பதவியிலும் தம் நேர்மைக்கும் உறுதிக்கும் மனிதாபிமானத்திற்கும் அவர் நற்பெயர் பெற்றுவிளங்கினார். எழுபதாவது வயதில் அவர் சுல்தானின் தாயின் அறிவுரையின் பேரில் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார். பல உலமாக்களும் மற்றுமுள்ள அதிகாரிகளும் இவர் தமது முதுமைப் பருவத்தில் இருப்பதனால், இவரால் சரிவரப் பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது என்று கூறி, இந் நியமனத்திற்குப் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர்; அவருக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்றும், அவ்வுயர் பதவிக்கு அவர் தகுதியற்றவர் என்றும் எடுத்துரைத்தனர். ஆனால், அவர்கள் தங்கள் மதிப்பீடு எவ்வளவு தவறானது என்பதை வெகு விரைவிலேயே அறிந்து கொண்டனர். தாம் பிரதம அமைச்சர் என்ற நிலையில் எக் காரியத்தைச் செய்தாலும் அதனை ஆராயாமலேயே சுல்தான் அங்கீகரிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குப் பதினைந்து வயதினராக இருந்த சுல்தானுடைய தாய் உறுதி அளித்ததற்குப் பிறகுதான் முகம்மது கொப்ரீலீ அப் பதவியை ஏற்றுக் கொண்டார்; உயர் பதவிகளை அளிப்பதிலும் விருதுகளை வழங்குவதிலும் தமக்குப் பரிபூரண சுதந்தரம் இருக்க வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தி அதற்கும் சுல்தானின் தாயை இணங்கும்படி செய்தார். முஃப்தியினிடத்திருந்து ஒரு ஃபத்வாவைப் பெற்றுக் கொண்டு தம் நிலைமையை அவர் மேலும் உறுதிப்படுத்திக் கொண்டார்.

கொப்ரீலீ இவ்விதமாகத் தம்மை வலுப்படுத்திக் கொண்டு, அந்த உயர் பதவியை ஏற்றுக் கொண்டார்; தமக்குக் கிடைத்த அதிகாரத்தை மிகக் கடுமையாகவும் சற்றும் வளைந்து கொடுக்காமலும் பயன்படுத்துவதில் அவர் உடனடியாக முனைந்தார். நான்காம் முராதைப் போலவே இவரும் தவறு செய்பவர்களைத்

தாக்கினர்; அவர்கள் உயர்ந்தவர்களாயிருப்பினும் தாழ்ந்தவர்களாயிருப்பினும், தவறு இழைப்பார்களாயின் கடுந் தண்டனைக்கு ஆளாயினர். கைக்கூலி வாங்கும் அதிகாரிகளும், நேர்மையற்ற நீதிபதிகளும், படையின் தகுதியற்ற அதிகாரிகளும், கலகம் விளைக்கும் படை வீரர்களும் உடனடியாகக் கொல்லப்பட்டனர். அதே கதி இப் புதிய வளரூக்கெதிராகச் சதி செய்து கொண்டிருந்தவர்களுக்கும் ஏற்பட்டது. அவர் பதவி வகித்திருந்த ஐந்தாண்டு காலத்தில் முப்பத்தையாயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தவறு இழைத்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டதனால், விளைவும் மிகத் தீவிரமானதாகவே இருந்தது. கைக்கூலி வாங்கும் பழக்கமும் அநீதியும் பேரரசெங்கிலும் நிறுத்தப்பட்டன. கலவரங்கள் ஒடுக்கப்பட்டன. ஒழுக்கமும் கீழ்ப்படிதலும் ஓங்கி நின்றன.

கொப்ரீலீ துரிதமாகச் செயற்பட்டு, சின்ன ஆசியாவிலும் மற்றும் பல இடங்களிலும் தோன்றிய கிளர்ச்சிகளை ஒடுக்கினர். அவர் உத்மானியக் கப்பற்படையை மாற்றியமைத்ததனால், ஏஜியன் கடலில் துருக்கியர்களின் ஆதிக்க நிலை மீண்டும் தலை தூக்கிற்று. வெனிஸுடன் நிகழ்ந்த போரும் துருக்கியர்களுக்குச் சாதகமாக முடிந்தது. சுல்தான் லெம்னோஸ், டெனிடாஸ் ஆகிய தீவுகளை மீட்டுக் கொண்டார். காண்டியா முற்றுகை சற்றுத் தீவிரமாக நடத்தப்பட்டது.

கொப்ரீலீ 1661-ல் உயிர் நீத்தார். ஆனால், அவர் பதவி வகித்திருந்த ஐந்து ஆண்டு காலத்தில், பேரரசில் அவருடைய ஆட்சியை எதிர்ப்பார் இல்லை. தம் மரணத்தை எதிர்பார்த்தே அவர் தமக்குப் பிறகு பிரதம அமைச்சர்ப் பதவி தம் மகன் அகமது கொப்ரீலீக்கே அளிக்கப்படவேண்டும் என்று சுல்தானின் தாயிடம் ஓர் ஒப்புதலையும் பெற்றுக் கொண்டார். மரணப் படுக்கையில் இருந்து கொண்டு, அவர் தம் மகனுக்குப் பின் வருமாறு அறிவுரை கூறினாராம்:

> 'எப்பொழுதும் பெண்களின் அறிவுரையைக் கேட்காதே. ஒரு குடிமகனை அதிகப் பணக்காரனாக்கி விடாதே. அரசாங்கக் கருவூலத்தை நிரப்பி வைத்துக் கொள். குதிரை மீது பயணம் செய்து கொண்டே இரு. படையை நடமாடச் செய்து கொண்டிரு.'

அகமது கொப்ரீலீ 1661-ல் பிரதம அமைச்சராகப் பதவி ஏற்றபோது, அவருக்கு இருபத்தாறு வயதாகி இருந்தது. உத்மானியப் பேரரசை ஆட்சிபுரிந்த அரசியல் வல்லுநர்களில்

இவர்தாம் சாலச் சிறந்தவர் என்று வரலாற்றறிஞர்கள் கருது கின்றனர். சொக்கொல்லிதாம் இவருக்கு ஓரளவு நிகராவார் என்று கொள்ளலாம். இவருடைய தந்தை இவருக்குச் சிறந்த கல்வியை அளித்தார். மாநிலம் ஒன்றின் ஆளுநர் என்ற நிலை யில் இவர் சிறந்த அனுபவம் பெற்றிருந்தார். தந்தை பெற் றிருந்த வலீயா மனத்திடமும் உறுதியும் இவருக்கு மிருந்தன. ஆனலும், தந்தையைப் போல் இவர் அவ்வளவு கடுமையாக நடந்து கொள்ளவில்லை. பதவிக்கு வந்து ஓராண்டு காலம் வரையிலும் தந்தையின் கடுமையான ஆட்சியை இவரும் நடத் தினர். ஆனலும், தமது நிலை உறுதியாகி விட்டது என்று இவர் உணர்ந்து கொண்டதும் அவ்விதக் கொள்கையைக் கைவிட் டார். அதற்குப் பிறகு அவருடைய நிர்வாகம் நீதியின் அடிப் படையிலும் மனிதாபிமானத்தின் அடிப்படையிலும் அமைந் திருந்தது. வசீகரமான நடை உடை பாவனையை அவர் படைத்திருந்தார். அவர் நேர்மையாகவும் தன்னடக்கத்துட னும் நடந்து கொள்ளும் இயல்புடையவர்; மிகவும் நிதானமாகப் பேசும் தன்மை படைத்தவர்; 1676-ல் அவர் இறக்கும்வரை பதினேந்து ஆண்டு காலம் அப் பேரரசை நிர்வகித்து வந்தார். இவர் இக்காலத்தில் சுல்தான் முகம்மதின் நம்பிக்கைக்குப் பாத் திரமாகி இருந்தார். அந்த சுல்தான் அரசாங்கப் பொறுப்பை அமைச்சரிடமே விட்டுவிட்டு வேட்டையாடுவதில் மூழ்கிக் கிடந்தார்.

அகமத் கொப்பீலீ இஸ்லாமிய சமயக் கொள்கைகளை மிகத் தீவிரமாகப் பின்பற்றுபவராகவும் இருந்தார். சுல்தானின் கிறித் தவக் குடிமக்கள் திருச்சபைகளைக் கட்டக்கூடாது என்று முன்பு விதிக்கப்பட்டிருந்த தடையை இவர் ஒழித்தார்; குடியானவர் களின் நிலையைச் சீர்ப்படுத்துவதற்கும் அவர்களுடைய தீர்வைப் பளுவைக் குறைப்பதற்கும் பெரும் பாடுபட்டார். அவருடைய நிர்வாகத்தில் தவறுகள் ஏற்படவில்லை. வேலைக்கு ஆட்களை நியமிப்பதற்குத் தாம் பணத்தை வாங்க மறுத்துப் பிறருக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அவர் விளங்கினர். பல போர் களை அவர் புரிய வேண்டி யிருந்தாலும், கருவூலத்தை அவர் நிரப்பியே வைத்திருந்தார். உண்மையில் சிவில் நிர்வாகத்தில் தான் அவருடைய முழுத் திறமையும் வெளிப்பட்டது. இராணுவ வாழ்க்கையைப் பொறுத்தவரை அவர் பேரரசுடன் ஒரு சில முக்கிய இடங்களைச் சேர்த்துக் கொண்டாராயினும், அவர் காலத்தில் வரலாற்றிலேயே முதன் முதலாக அந்தப் பேரரசு ஹங்கேரியர்களிடம் தோல்வி யடைந்தது; போலந்து மக்க

ளிடமும் இரண்டாம் தடவையாக அது கடுமையாகத் தோல்வி யடைந்தது.

1663-ல் ஆஸ்ட்ரியாவுடன் போர் மூண்டது. பிரதம அமைச்சர் ஒரிலட்சத்து இருபதினாயிரம் போர் வீரர்களையும் நூற்றிருபத்து மூன்று பீரங்கிகளையும் திரட்டிக் கொண்டு பெல்கிரேட் நகருக்கருகில் டான்யூப் நதியைக் கடந்து, நியூஹாஸல் (Newhausel) அரணை முற்றுகை யிட்டார். ஆஸ்ட்ரியர்கள் வசமிருந்த அக் கோட்டை ஐந்து வார முற்றுகைக்குப் பின் சரண் அடையுமாறு கட்டாயப்படுத்தப்பட்டது. இதற்கிடையே கிரீமியாவின் கான் ஒழுங்குறப் படையில் சேர்ந்திராத குதிரை வீரர்களின் கூட்டத்துடன் மொரேவியாவைக் கைப்பற்றிக் கொண்டார். மொரேவியா மிகக் கடுமையாகச் சூறையாடப்பட்டது. பல்லாயிரக் கணக்கான கிறித்தவர்கள் கைது செய்யப்பட்டு, அடிமைகளாக விற்கப்பட்டனர்.

நியூஹாஸல் அரண் கைப்பற்றப்பட்டதற்குப் பிறகு, அகமது கொப்ரீலீ சுற்றுப்புறங்களிலிருந்த பல சிறிய அரண்களையும் கைப்பற்றிக் கொண்டு, பெல்கிரேட் நகருக்குத் திரும்பினார். அடுத்த ஆண்டில் அவர் மீண்டும் பெல்கிரேடிலிருந்து புறப்பட்டு நியூஹாஸலுக்குச் சென்றார். பிறகு அவர் மூர் நதியைக் கடந்து (River Mur) செரிவாரைக் (Serivar) கைப்பற்றிக் கொண்டார். ஜூலை 26ஆம் நாள் அன்று அவர் ராப் நதி (River Raab) கரையோரத்திலிருந்த கொமார்னை (Komorn) அடைந்தார். கோம்டே மான்டெகுசுலி (Comte Montecuculi) என்பவரின் தலைமையில் ஆஸ்ட்ரிய - ஹங்கேரியப் படை ஒன்று ராப் நதியோரத்தில் கொமார்னுக்கு அருகில் ஓரிடத்தைப் பிடித்து வைத்துக் கொண்டது. எண்ணிக்கையில் அப் படை உத்மானியர்களின் படைக்கு மிகவும் குறைந்ததாகவே இருந்தது. ஆனாலும், செரெஸ்டீஸ் போர் நிகழ்ந்த காலந்தொட்டு ஆஸ்ட்ரியர்கள் தங்களுடைய படைத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியவர்களின் தரத்தில் பெரும் அபிவிருத்தியை உண்டு பண்ணி இருந்தனர். அதே சமயத்தில் உத்மானியர்களின் படையினரிடையே ஒழுங்கில்லாமை ஏற்பட்டிருந்தது. அவர்களுடைய பீரங்கிப் படையிலும் முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

1664, ஆகஸ்ட் முதல் நாளன்று இரு படைகளும் செய்ன்ட் கோத்தார்டு கன்னி மாடத்திற்கு (St. Gotthard Convent) அருகில் மோதிக் கொண்டன. அவ்விடத்தில் மிகக் கடுமையான போர் நிகழ்ந்தது. எண்ணிக்கையில் உத்மானியர்கள்

அதிகமாக இருந்தார்கள் எனினும், அவர்கள் தோல்வி யடைந் தனர். லொரைனின் இளவரசர் சார்ல்ஸ் (Prince Charles of Lorraine) என்பவரின் தலைமையிலிருந்த குதிரைப்படையினரின் துணிச்சலான தாக்குதலே இத் தோல்விக்கு முக்கிய காரண மாகும். பத்தாயிரம் துருக்கியர்கள் மடிந்தனர்; முப்பதினாயிரம் குதிரை வீரர்கள் ஓட்டம் பிடித்தனர். மேலும் சேதம் விளையாத படி பிரதமர் தமது முக்கியப் படையைப் பின்வலித்துக் கொண் டார். ஆஸ்ட்ரியர்களுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டது. அடைந்த வெற்றியைப் பின்தொடர்ந்து செல்லவும் அவர்களால் இயலவில்லை. இருப்பினும், இப் போர் உத்மானியர்களின் வர லாற்றில் முக்கியமானதாகும். ஏனெனில், இதுதான் உத்மானி யர்கள் முதன் முதலாக ஹங்கேரியரிடத்தில் பெற்ற தோல்வி யாகும். உத்மானியர்களின் புகழை இந்தத் தோல்வி பாழ் படுத்தி விட்டது.

ஆஸ்ட்ரியர்கள் மாபெரும் வெற்றியைப் பெற்றார்கள் என்ற லும், அமைதி ஒப்பந்தத்திற்காகப் பிரதம அமைச்சருடன் பேச்சு வார்த்தை தொடங்கினர். போர் நடந்ததற்குப் பத்து நாட்களுக்குப் பிறகு துருக்கியர்கள் முகாமிட்டிருந்த வாஸ்கர் என்ற இடத்தில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. உண் மையில் அது சில்வடோரா ஒப்பந்தத்தின் தொடர்ச்சியே யாகும். புதிய ஒப்பந்தத்தில் காணப்பட்ட சில நிபந்தனைகள் உத்மானியர்களுக்குச் சாதகமாகவே இருந்தன. அதன்படி, டிரான்ஸில்வேனியாவை உத்மானியர்களும் ஆஸ்ட்ரியர்களும் காலி செய்துவிட வேண்டும். துருக்கியர்களின் ஆதரவு பெற் றிருந்த அபாஃபி (Apafy) என்பவர் அம் மாநிலத்தின் அரசராக அங்கீகாரம் பெற்றார்; ஆனால், அவ்வரசர் சுல்தானுக்குக் கப்பம் செலுத்த வேண்டியதாயிற்று. செரிவாலும் நியூஹாஸலும் சுல் தான் வசமே இருக்கவேண்டும். உத்மானியர்களால் கைப்பற்றப் பட்ட ஏழு ஆட்சி உரிமைப் பகுதிகளில் நான்கு அவர்களிடமும் மூன்று பேரரசனிடமும் இருக்க வேண்டும். இவ்வொப்பந்தத் தினால் அகமது கொப்பீலீ பெரும் மனநிறைவு பெற்றார். போரில் அவர் தோல்வியுற்றார் எனினும், சுல்தானுடைய பேரரசின் எல்லைகளை விரிவு படுத்தினார். அக்டோபர் மாதக் கடைசியில் அவர் டெல்கிரேடுக்குப் படைகளுடன் திரும்பினர். இஸ்தம் பூலுக்குத் திரும்பிய அவரை மக்கள் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

1667-ல் அகமது மற்றொரு படையெடுப்பை நிகழ்த்தினார். காண்டியா முற்றுகையை வெற்றிகரமான ஒரு முடிவுக்குக்

கொண்டுவர அவர் மனஉறுதி கொண்டிருந்தார். பெரும் படைப் பலத்துடன் அவர் கிரீட்டை வந்தடைந்தார். வெனிஸியர் கள் காண்டியா நகரை மிகத் தீவிரமாகப் பாதுகாத்து வந்தனர். மொரொஸினி என்பவர் அப் படையின் தலைவராகப் போரிட் டார். அந் நகரின் எதிரில் அகமது மூன்று ஆண்டுகளைக் கழித்தார். வெனிஸியர்கள் அவருக்குப் பெரும் தொகையைக் கொடுத்து அந் நகரைக் காப்பாற்ற முயன்றனர். அதை வாங்க அப் பிரதம அமைச்சர் மறுத்து விட்டார். 1669-ல் ஃபிரெஞ்சு சேனை ஒன்று அங்கு வந்து சேர்ந்ததனால் பாதுகாப்புக்கான முஸ்தீப்பு இன்னும் அதிகமாயிற்று. டக் டெ நொயில்லியே (Duc de Noaillies) என்பவரின் தலைமையிலிருந்த அச் சேனையில் ஃபிரெஞ்சு உயர் குடிமக்களும் ஆறுயிரம் படை வீரர்களும் அடங்கி இருந்தனர். சற்றுப் பிறகு போப்பின் தொண்டர்ப் படைகளும் மால்டாவின் போர் வீரர்களும் அச் சேனையுடன் சேர்ந்து கொண்டனர். இக் கூட்டுப் படை கடலிலிருந்து உத் மானியர்களைத் தாக்கிற்று; அதே சமயத்தில் முற்றுகையிடப் பட்ட நகரத்தினர் எதிர்நோக்கிக் குண்டுகளைப் பாய வைத்த னர். இவ்விதமாக இரு புறங்களிலிருந்தும் நெருப்பைக் கக்க வைத்துக் கூட்டுப் படையினர் துருக்கியர்களை அவர்கள் ஒளிந்து கொண்டிருந்த அகழியிலிருந்து வெளியே இழுக்க வேண்டி யிருந்தது. ஆனால், இம் முயற்சி வெற்றி பெறவில்லை. தாக்கும் ஒரு சில கப்பல்கள் திடீரென்று தீப்பற்றி எரிந்தன. இதனால் அவர்கட்கிடையே குழப்பம் நிலவியது. பிறகு கூட்டுப் படைத் தலைவர்களுக்கிடையே தீவிரமான மனத் தாங்கல் ஏற் பட்டதன் விளைவாகக் கப்பற்படை அங்கிருந்து பின்வாங்கிக் கொண்டது. நகரமும் அதன் விதிக்கே விடப்பட்டது. கூட்டுப் படையினரின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டிருந்தது. எண்ணிக்கையில் அதிகமாக இருந்த துருக்கியர்களால் நிலை மையைச் சமாளிக்க முடிந்தது. சரணடைவதற்கான நிபந் தனைகள் விதிக்கப்பட்டன. இருபத்தைந்து ஆண்டு காலமாக நடைபெற்றுவந்த அம் முற்றுகை இவ்விதமாக முடிவடைந்தது. மொரொஸினிக்கும் பாதுகாக்கும் படைக்கும் சாதகமான சலுகைகள் வழங்கப்பட்டன. தீவு முழுவதுமே துருக்கியர் களின் கைவசமாயிற்று. சற்றுப் பின்னால் வெனிஸுடன் அமைதி ஒப்பந்தம் ஒன்றும் செய்து கொள்ளப்பட்டது. இவ் வொப்பந் தம் சுல்தானின் வசம் கிரீட் மாற்றப்படுவதை அங்கீகரித்தது.

1672-ல் கொப்ரீலீ போலந்தின்மீது போர் தொடுத்தார். அப் போர் உக்ரேனின் (Ukraine) கொஸ்ஸாக்குகளின் சார்பாக மேற்கொள்ளப் பட்டதாகும். கொஸ்ஸாக்குகள் தங்களை அடக்கி

ஆண்டுகொண்டிருந்த போலந்து ஆட்சியாளர்களுக் கெதிராகக் கிளர்ந்தெழுந்து சுல்தானுடைய உதவியை நாடினர். கிளர்ச்சியாளர்களை ஆதரிக்கும் வகையில் கொப்ரீலீ ஆருயிரம் வீரர்களைக் கொண்ட படை ஒன்றை அங்கே அனுப்பி வைத்தார். அதைவிடப் பெரிதான டார்டார்ப் படை ஒன்று அதனுடன் கிரீமியாவில் சேர்ந்துகொண்டது. சுல்தான் இவ் விவகாரத்தில் தலையிடுவதை எதிர்ப்பதற்காக ரஷியாவின் அரசர் போலந்து அரசருடன் சேர்ந்துகொண்டார். 1672-ல் நிகழ்ந்த படையெடுப்பில் காமினீக் (Kaminiec) என்ற முக்கிய நகரம் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. போலந்து நாட்டின் அரசர் அமைதியை நாடினர். புக்ஸாக்ஸ் (Bucsacs) ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன்படி பொடோலியா (Podolia) மாநிலம் சுல்தான் வசம் ஒப்படைக்கப்பட்டது. ஆனலும், இந்த ஒப்பந்தத்தை சொபியஸ்கி (Sobieski) என்ற போலந்து நாட்டுப் படைத்தலைவரும் பிரபுக்களும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். துருக்கியர்களுக் கெதிராக அவர்கள் மீண்டும் போர் தொடுத்தனர். அது நான்கு ஆண்டு வரை நீடித்தது. 1678-ல் அகமது கொப்ரீலீயின் தலைமையில் துருக்கிப்படை ஒன்று சோபியஸ்கியின் தலைமையிலிருந்த போலந்துக்காரர்களிடம் தோல்வி அடைந்தது. சொக்ஸிம் (Choczim) என்ற இடத்தில் ஏற்பட்ட இத்தோல்வியைக் கண்ட சுல்தானின் ஆட்கள் வியப்புற்றனர். வலாச்சியர்களும் மால்தேவியர்களும் போர்க்களத்தை விட்டு ஓடி, எதிரியின் பக்கல் சேர்ந்துகொண்டனர். பல்லாயிரக் கணக்கில் துருக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அடுத்த ஆண்டும் போரிடத் திரும்பிய துருக்கியர்கள் முறியடிக்கப்பட்டனர். 1675-ல் சொபியஸ்கி ரஷியர்களின் உதவியைக்கொண்டு லெம்பர்க் (Lemberg) என்ற இடத்தில் துருக்கியர்களை மிகக் கடுமையாகத் தோற்கடித்தார். ஆனலும், 1676-ல் துருக்கியர்கள் இப்ராஹீம் பாஷா என்பவரின் தலைமையில் போலந்து மக்களைப் பழி வாங்கினர். விடா முயற்சியை மேற்கொண்டு துருக்கியர்கள் வெற்றி பெற்றனர். போலந்தின் அரசாங்கப் பதவி ஏற்றிருந்த சொபியஸ்கி முறியடிக்கப்பட்டார். பொடோலியா முழுவதுமே துருக்கியரின் வசமாயிற்று. இப் பொழுது சொபியஸ்கி ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு இணங்கினர். ஸுராவ்னு (Zurawna) ஒப்பந்தத்தின் (1676, அக்டோபர் 27) நிபந்தனைகள் துருக்கியர்களுக்குச் சற்றுச் சாதகமாகவே இருந்தன. பொடோலியா துருக்கியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வொப்பந்தம் கையொப்பமான ஒரு சில நாட்களுக்குப் பிறகு அகமது கொப்ரீலீ குடிப் போதையில் இறந்தார். ஆஸ்ட்ரியர்களிடமும் போலந்து நாட்டினரிடமும் அவருக்குக் கடுந் தோல்வி ஏற்பட்டது என்றாலும், தம்முடைய விடாமுயற்சியினாலும் பேரரசின் சக்திகளையெல்லாம் சிறப்பாகப் பயன்படுத்தியதனாலும் அத்தோல்வியை அவர் ஈடு செய்து விட்டார். பொடோலியா மாநிலம், கிரீட் தீவு, நியூஹாஸல் மாவட்டம் ஆகியவற்றின் சேர்க்கையினால் பேரரசின் எல்லைகள் மேலும் விரிவு பெற்றன. இவற்றை யெல்லாம் நினைவில் கொண்டு, அவரை ஐரோப்பாவில் உத்மானியப் பேரரசை உருவாக்கியவர்களில் ஒருவர் என்று கருதலாம். அவருடைய ஒளிசால் ஆட்சிமுறை, அவருடைய மனிதாபிமானம், நேர்மை, சமயம் எதுவாக இருப்பினும் யாவருக்கும் ஒரே வகைப்பட்ட நீதியை வழங்கவேண்டும் என்று அவர் வற்புறுத்தியமை, தமது சமயக் கோட்பாடுகளைத் தீவிரமாகப் பின்பற்றினமை, விஞ்ஞானத்திற்கும் இலக்கியத்திற்கும் அவர் காட்டிய ஆதரவு ஆகியவையெல்லாம் துருக்கிய அரசியல் வல்லுநர்களுள் தலைசிறந்தவராக அவரை விளங்க வைத்தன.

அகமது கொப்ரீலீ இறந்ததற்குப் பிறகு அவருடைய சகோதரர் முஸ்தஃபா கொப்ரீலீயையே சுல்தான் பிரதம அமைச்சராக நியமிப்பார் என்று பல வட்டாரங்களில் நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. முஸ்தஃபா கொப்ரீலீ பல மாநிலங்களின் ஆளுநராக அகமதுவின் அரும்பெரும் குணங்களை வெளிப்படுத்தியிருந்தார். ஆனாலும், கெட்ட நேரத்தில் சுல்தான் முகம்மது அப் பதவியைத் தம் மாப்பிள்ளையான காரா முஸ்தஃபா (Kara Mustapha) — கறுப்பு முஸ்தஃபா — என்பவருக்கு அளித்தார். இரத்தம் சிந்துவதிலும், பேராசைக் குணத்திலும், கைக்கூலி பெறுவதிலும் அவர் கெட்ட பெயர் வாங்கி இருந்தார். இது வரையிலும் வேட்டையாட்டங்களில் மூழ்கிக் கிடந்து அரசு விவகாரங்களில் தலையிடாதிருந்த முகம்மது இவ்விதம் நடந்து கொண்டதன் விளைவு மிகப் பயங்கரமானதாக இருந்தது. இதை விட மோசமான பதவி நியமிப்பு வேறு எதுவும் இருக்க முடியாது. புதிய அமைச்சர் பதின்மூன்று ஆண்டு காலம் பதவி வகித்தார். அக் காலம் பேரரசுக்கு ஒரு பேரிடியான காலமாகும்.

1678-ல் புதிய வஸீர் படையைத் திரட்டிக் கொண்டு டான்யூப் நதியைக் கடந்து யூக்ரைனுக்குச் சென்றார். அங்கே ரஷியர்களையும் போலந்துக்காரர்களையும் எதிர்த்துத் தோல்வியடைந்தார். ஆனாலும் போர் பல்வேறு விளைவுகளையும் ஏற்படுத்

திய வண்ணம் 1681ஆம் ஆண்டுவரை நடைபெற்று வந்தது. அவ்வாண்டில் ரஷியர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட துருக்கியர்கள் சச்சரவுக்குரிய ஆட்சிப் பகுதியை விட்டுக் கொடுத்தனர்.

பேரரசர் லியோபால்டின் ((Emperor Leopold) ஆட்சிக்குட் பட்டிருந்த ஹங்கேரியப் பகுதியின் குடிமக்கள் 1682-ல் அவருடைய மதவெறியாட்சிக் கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். ஆஸ்ட்ரியாவைத் தாக்குவதற்கு இது நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்று கருதிய காரா முஸ்தஃபா தாமே அப் பகுதியின் அரசராவதற்கும் அவாக் கொண்டுவிட்டார். எதிர்னேயில் அவர் ஒரு பெரும் படையைத் திரட்டிச் சேகரித்துக்கொண்டு, 1683-ல் டான்யூப் நதியைக் கடந்து முன்னேறினர். டார்ட்டார்களும் பல்லாயிரக் கணக்கில் அவருடன் சேர்ந்து கொண்டனர். வியன்னுவை அடையும் வரை அவருக்கு வழியில் எதிர்ப்பு ஏற்படவில்லை. இந்த மாபெரும் சேனையை எதிர்ப்பதற்குப் பேரரசர் தம்மை ஆயத்தப்படுத்தி வைத்துக் கொள்ளவில்லை. அவரிடம் முப்பத்தையாயிரம் படை வீரர்கள் மட்டுமே இருந்தனர். இந்த நெருக்கடியான வேளையில் பேரரசர் சொபியஸ்கியின் உதவியை நாடினார். ஆனால், போலந்து மக்கள் மிகச் சமீபத்தில்தான் துருக்கியருடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தனர். ஆனலும், சொபியஸ்கி கவலைப் படாமல் ஐம்பதினாயிரம் வீரர்களைக் கொண்ட படை ஒன்றைப் பேரரசரின் உதவிக்காக அனுப்பி வைத்தார். அதற்காக அவ்விருவருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடத்தக்க நிபந்தனை ஒன்று இருந்தது: அதாவது, போப்பாண்டவரின் உத்தரவினால் அது வருங்காலத்தில் ரத்து செய்யப்படக்கூடாது. ஆனலும், போலந்துப் படை சற்றுத் தூரத்திலேயே இருந்ததனால் வியன்னுவை எட்டு வாரங்களுக்கு முன்பு அதனால் வந்து எட்ட முடியவில்லை. காரா முஸ்தஃபா சற்று மும்முரமாக முற்றுகையை நடத்தியிருப்பாராயின், போலந்துப் படை வருவதற்கு முன்பே வியன்னு வீழ்ச்சியடைந்திருக்கும்.

இரண்டாம் தடவையாக வியன்னு முற்றுகையிடப்பட்டது (1683, ஜூலை 15). பேரரசரும் அவருடைய குடும்பத்தினரும் பவேரியாவிற்கு ஓடிவிட்டனர். வியன்னுவின் அரண்கள் சரிவரக் கவனிக்கப்பட வில்லையாதலால், எதிர்ப்புக் கடுமையானதாக இருக்கவில்லை. ஆனலும், அந் நகரின் படைத்தலைவரான கௌன்ட் வான் ஸ்டாரெம்பர்க் (Count Von Stahremberg) என்பவர் அதை மிகப் பலமாகப் பாதுகாத்தார். துருக்கிப்

படைகள் சுவர்களைச் சிதறடித்தன. முற்றுகை யிடப்பட்டோரிடத்திருந்து திடீர்த் தாக்குதல்கள் வந்தபோதிலும், பலன் எதுவும் விளையவில்லை. எண்ணிக்கையில் அதிகமான படை வீரர்களைக் கொண்டிருந்த காரா முஸ்தபா நகரைப் பலமாகத் தாக்கி இருப்பாராயின், அது வீழ்ச்சி யுற்றிருக்கும். ஆனால், அவரோ அதனைச் சரணடையச் செய்து கைப்பற்ற முயன்றார். அவ்விதம் செய்தால் அந் நகரத்தின் செல்வம் அழுங்காமல் குலுங்காமல் தமக்குக் கிடைத்துவிடும் என்று அவர் நம்பினர். ஆனால், அந் நகரைத் தாக்கி வீழ்ச்சியுறச் செய்தால், அச் செல்வம் எல்லாம் படைகளுக்குரியனவாகி விடுமே என்பதையும் அவர் உணர்ந்தார். ஆகவே, இறுதித் தாக்குதலை அவர் ஒத்தி வைத்துக்கொண்டிருந்தார். அதற்குள்ளாக சொபியஸ்கி தம் படைகளைப் போலந்துக்குக் கொண்டுவந்து, பேரரசுப் படைகளுக்குத் தலைமை தாங்கிய லொரைனின் இளவரசர் சார்லஸுடன் சேர்ந்துகொள்ளப் போதிய அவகாசம் பெற்றார். அக் கூட்டுப்படைகள் டுல்ம் (Tulm) என்ற இடத்தில் படகுப் பாலத்தைக் கொண்டு டான்யூபைக் கடந்து, வியன்னாவின் முன்பிருந்த துருக்கிப்படையைப் பின்புறமாகத் தாக்கக் காலெம்பர்குக்குப் (Kalemberg) பின்னலிருந்த கரடுமுரடான நிலப்பகுதியைக் கடந்துவந்தன. அப் படைகள் நதியைக் கடப்பதற்குக் காரா முஸ்தஃபா எதிர்ப்பு அளிக்கத் தவறியது பெரும் பிழையாகும். செப்டம்பர் 6ஆம் தேதியன்று காலெம்பர்க் பகுதியிலிருந்து வீசப்பட்ட குண்டுகள், நகரப் படையினருக்கு உதவி வந்துவிட்டது என்பதை அறிவித்தன.

துருக்கியர்களின் முகாம் குழப்பத்தில் மூழ்கிக் கிடப்பதைக் கண்ட சொபியஸ்கி வெற்றி தமக்கே என்று நம்பினர். தமக்குப் பின்புறத்திலிருந்த மலைத்தொடர்களில் குழுமிவிட்டிருந்த கிறித்தவப் படையினரைக் கண்ட காரா முஸ்தபா போருக்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தார். ஜனிஸ்ஸரீப் படையினரை நகருக்கு முன்புறத்திலிருந்த அகழிகளில் அவர் விட்டுவிட்டு, பின்புறத்திலிருந்து வரும் போலந்துப் படையினரின் தாக்குதலைச் சமாளிப்பதற்காகத் தம் முக்கிய படையைத் திரட்டினர். சொபியஸ்கி தம் படைகளை வட்டம் வட்டமாக அமைத்துத் துருக்கியர்களைத் தாக்கத் தொடங்கினர். டார்ட்டார்ப் படையினர் ஓட்டம் பிடித்தனர். துருக்கியினரின் படையில் குழப்பம் ஏற்பட்டது. சொபியஸ்கி தம் படையைத் திரட்டிக்கொண்டு துருக்கிப் படையின் மத்திய பாகத்தை நேரடியாகத் தாக்கினர். உத்மானியரின் படை சிதறுண்டு ஓடிற்று. பெரும் படுகொலை நடந்தது. ஏராளமான கொள்ளைப் பொரு

ளுடன் துருக்கியர்களின் முகாம் கிறித்தவர்களின் வசமாயிற்று. பிறகு அகழிகளிலிருந்த ஜனிஸ்ஸரீப் படையினர் தாக்கப்பட்டனர்; பின்புறத்திலிருந்து வெற்றிபெற்ற போலந்து வாசிகளும், முன்புறத்திலிருந்து வியன்னாவின் படையினரும் ஜனிஸ்ஸரீகளைத் தாக்கி அவர்களைத் துண்டுதுண்டாக வெட்டி வீழ்த்தினர். சொபியஸ்கியின் வெற்றி முழு வெற்றியாக இருந்தது. ஏராளமான பொருள்களும் ஆட்களும் கிடைத்தனர்.

போர்க்களத்திலிருந்து விரட்டி யடிக்கப்பெற்ற துருக்கிப் படை பீதியடைந்து ஓடியது. பல பாஷாக்களும் படைத் தலைவர்களும் உட்படப் பல்லாயிரக் கணக்கான துருக்கிப் படையினர் கொலையுண்டனர். காரா முஸ்தஃபா அகதிக் கூட்டத்தினருடன் கலந்துகொண்டு தப்பியோடி விட்டார். எஞ்சிய படையினர் ராப் நதி வழியாகத் தப்பித்துக்கொண்டு பூடா வந்தடைந்தனர். அங்கே பிரதம அமைச்சர் அப் படையின் சிறந்த தலைவர்கள்தாம் அப் படுதோல்விக்குக் காரணமாவர் என்று கருதி அவர்களையெல்லாம் கொலை செய்யும்படி உத்தரவிட்டார். தாமே பெல்கிரேடுக்குச் சென்றுவிட்டார். அங்கே சுல்தானின் உத்தரவின் பேரில் அவரும் கொல்லப்பட்டார். அவர் தவருகக் குவித்து வைத்திருந்த கணக்கற்ற செல்வத்தை அரசு பறித்துக் கொண்டது.

இவ்விதமாக இரண்டாம் வியன்னா முற்றுகை அந் நகரைப் பாதுகாத்த படைக்குப் பெரும் புகழ் தேடித் தந்தது. துருக்கியரின் படை பெரிதாக இருந்த போதிலும், மிக மட்டமான எதிரிப் படையினரிடம் அது தோல்வியடைந்தது. இதுபோன்ற பேரிடி எப் படைக்கும் எத் தலைவனுக்கும் ஏற்பட்டிருக்க முடியாது. உத்மானியப் பேரரசைப் பொறுத்தவரை இத் தோல்வி முக்கிய விளைவுகளை உண்டு பண்ணிற்று. 'வெல்லும் நாட்டினர்' என்று விளங்கிய துருக்கியர்களின் புகழை அது அழித்தது. மத்திய ஐரோப்பிய நாடுகளுக்குக் கடந்த இருநூறு ஆண்டு காலமாக உத்மானியர்களைக் கண்டு ஏற்பட்டிருந்த அச்சம் அவற்றின் மனத்திலிருந்து மறையத் தொடங்கிற்று. வியன்னாவின்மீது நடத்திய தாக்குதல் உண்மையில் உத்மானியர்கள் எதிரி நாட்டில் தங்கள் பேரரசை விஸ்தரிக்கச் செய்த இறுதி முயற்சியாகும். இப்பொழுதிலிருந்து அவர்கள் வலிந்து ஆக்கிரமிக்கும் கொள்கையைக் கைவிட்டு, தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டனர். துருக்கியர்களின் பெரும் படை சொபியஸ்கியால் தோற்கடிக்கப்பட்டதன் விளைவாக, ஹங்கேரியில் துருக்கியர்கள் பெருநஷ்டம் அடையவேண்டி

யிருந்தது. தாம் வென்ற பகுதிகளை யெல்லாம் அவர்கள் இழந்துவிட்டனர். ஒரு சில ஆண்டுகட்குப் பிறகு அவர்கள் டான்யூபுக்கப்பால் துரத்தப்பட்டனர்.

வியன்னை முனையில் பெரும் வெற்றிபெற்ற சொபியஸ்கியும் லொரைனும் அவ் வெற்றியைப் பின்தொடர்ந்து மிகத் தீவிர மாகச் செயற்பட்டனர். பாஸ்கெனே (Paskenay) என்ற இடத் தில் அவர்கள் பின்வாங்கிக் கொண்டிருந்த துருக்கியர்களின் திடீர்த் தாக்குதலுக்குட்பட்டு இரண்டாயிரம் ஆட்களை இழந் தனர். ஆனால், இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர்கள் மீண்டும் எதிரிகளைத் தாக்கிப் பலரைப் படுகொலை செய்தனர். டான்யூப் நதியைக் கடந்து செல்வதற்காகத் துருக்கியர்கள் கட்டின படகுப் பாலம், ஓடிக்கொண்டிருந்த அகதிகளின் நெரிசலால் தகர்ந்து சிதறிற்று. ஏழாயிரம் பேர் நீருள் மூழ்கிச் செத்தனர்; அல்லது கொல்லப்பட்டனர். கிறித்தவப் படை பிறகு கிரானுக் குச் சென்று அந்த முக்கியமான கோட்டையை முற்றுகையிட் டது. அது நெடுங்காலமாகத் துருக்கியர்களின் கையில் சிக்கிக் கிடந்தது. ஆனால் கிறித்தவர்கள் அதைக் கைப்பற்றியதற்குப் பிறகு அது துருக்கியர்களுக்கெதிராக ஆஸ்ட்ரியாவுக்கும் ஹங் கேரிக்கும் முக்கிய அரணுயிற்று. இத்துடன் அவ்வாண்டுக்கான படையெடுப்புகளும் முடிவடைந்தன.

இதற்கிடையே வியன்னை வெற்றி இதர ஐரோப்பிய வல்ல ரசுகளைத் துருக்கியர்களுக்கெதிராக ஒன்றுபடத் தூண்டியது. துருக்கியர்களுக்கெதிராக மற்றொரு சிலுவைப் போரை — பதினான்காம் சிலுவைப் போரைத் தொடங்குவதற்குப் போப் பிரசாரம் செய்தார். வெனிஸ் குடியரசு ஒரு படையைத் திரட் டியது. அத்துடன் போப்பாண்டவரின் கப்பல்களும், மால்டாப் போர் வீரர்கள் மற்றும் டஸ்கனியின் மாபெரும் கோமகன் ஆகிய வர்களின் கப்பற் படைகளும் சேர்ந்து கொண்டன. அடுத்த ஆண்டில் இந்தக் கப்பற்படை சாண்ட்டா மாரா (Santa Marra) என்ற தீவையும் பிரவீஸா (Pravesa) என்ற நகரையும் தாக் கிக் கைப்பற்றிக் கொண்டன. வெனிஸியப் படை ஒன்று பாஸ்னியாவையும் அல்பேனியாவையும் தாக்கிற்று.

1684-ல் ஆஸ்ட்ரியர்கள் லொரைனின் தலைமையில் கிரானை விட்டுப் புறப்பட்டு, டான்யூபைக் கடந்து, வார்ஸெனில் (Warzen) இருந்த துருக்கியர்களைத் தாக்கி முறியடித்தனர்; மீண்டும் அவர்கள் பூடாவுக்கு எதிரில் நிகழ்ந்த போரில் அவர்களை முறியடித்துப் பிறகு கோட்டையை முற்றுகையிட்ட

னர். அதற்குள்ளாக மற்றொரு ஆஸ்ட்ரியப் படை குரோஷியா வுக்குள் (Croatia) நுழைந்து துருக்கியர்களுடன் போரிட்டு அவர்களை முறியடித்தது. இதன் விளைவாகக் குரோஷியா மாநிலம் நூற்றைம்பத்தோர் ஆண்டுகாலத் துருக்கியர்ப் பிடியி லிருந்து விடுதலை பெற்று, ஆஸ்ட்ரிய-ஹங்கேரிய உடைமை யாயிற்று. 1685-ல் ஆஸ்ட்ரியர்கள் மேலும் முன்னேறினர். நியூ ஹாஸெல் என்ற முக்கிய அரண், இருபத்திரண்டு ஆண்டுகால மாகத் துருக்கியர் வசப்பட்டிருந்தபின், இப்பொழுது மீண்டும் கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. அதனுடைய மூவாயிரம் படை வீரர்களுள் இருநூறு பேர் மட்டுமே உயிர் தப்பினர். துருக்கியர் களின் பெண்களும் குழந்தைகளும் ஆஸ்ட்ரியப் பேரரசில் இருந்த நிலக்கிழார்களுக்கு விற்கப்பட்டனர். இந் நகரம் கைப் பற்றப்பட்டதனுல் ஐரோப்பா முழுவதிலுமே பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. 1686-ல் பூடா முற்றுகை மீண்டும் தொடங்கப் பட்டது. லொரைனின் இளவரசரின் தலைமையிலிருந்த பேரர சப் படையில் தொண்ணூருயிரம் ஜெர்மானிய, ஹங்கேரிய, குரோஷியப் படைவீரர்கள் அடங்கி இருந்தனர். ஜூன் 18ஆம் நாள் அன்று முற்றுகை தொடங்கிற்று. முற்றுகையைச் சிதற டிப்பதற்காகப் பிரதம அமைச்சரான சுலைமான் என்பவர் மும் முறை முயற்சி செய்தாராயினும், அவர் வெற்றி பெறவில்லை. ஆறு வார முற்றுகைக்குப் பிறகு ஆஸ்ட்ரியர்கள் அந் நகரைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டனர். அதை மிகத் தீரத்துடன் பாதுகாத்துவந்த அப்தி பாஷா (Abdi Pasha) என்பவரும் அதன் படைவீரர்களும் அழிந்தனர். பூடா நகரம் கடுஞ்சூறையாட லுக்கு இரையாயிற்று. அந் நகரம் நூற்று நாற்பத்தைந்து ஆண்டு காலமாகத் துருக்கியர் வசப்பட்டிருந்தது; அக் காலத்தில் ஆறு முற்றுகைகளை அது வெற்றிகரமாக எதிர்த்து நின்றது. இப்பொழுது அது ஹங்கேரியர்களின் வசமாயிற்று.

1687-ல் ஹங்கேரியப் படையெடுப்பு முடிவடைந்ததும் பல தோல்விகளின் விளைவாகத் துருக்கியர்களின் படையினருக் கிடையே பெரும் மனக்கசப்பு ஏற்பட்டிருந்தது; கலகம் செய் வதற்கான மனநிலையில் அது இருந்தது. படையின் முக்கிய அதிகாரிகள்கூடி, பிரதம அமைச்சர் சுலைமானைப் பதவியிலிருந்து விலக்கிக் கொன்றுவிடுமாறு சுல்தானிடம் விண்ணப்பித்தனர். அவர்கள் சியவூஷ் (Siawousch) பாஷாவைத் தங்கள் படைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். பிறகு சேனை டான்யூபைக் கடந்து ஃபிலிப்போபோலிஸுக்குப் (Philippopolis) பின்வாங்கி அங்கிருந்து எதிர்னேவுக்குச் சென்றது; பிறகு அங்கிருந்து அது ஒரு தூதுக் குழுவை சுல்தானிடம் அனுப்பி, அவரைத் தன்

விருப்பங்களுக்கு இணங்குமாறு வற்புறுத்திற்று. சுல்தான் கூட்டிய ராஜ்ஜிய சபையில் அக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாக முடிவு எடுக்கப்பட்டது. சுலைமானுக்குப் பதிலாக சியவூஷ் பாஷா பிரதம வஸீராக நியமிக்கப்பட்டார். விரைவில், சுல்தானின் உத்தரவின் பேரில், சுலைமான் கொல்லப்பட்டார். இந்தச் சலுகையைக் காட்டிப் படையினரைத் தணியவைக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. அவ் விதம் செய்வதால், படையும் இஸ்தம்பூலை நோக்கி முன்னேறுது என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனலும், படை தொடர்ந்து அச்சுறுத்திக்கொண்டு தலைநகரை நோக்கி முன்னேறிற்று. மேலும் அது தன்னுடைய கோரிக்கைகளை அதிகப்படுத்திக் கொண்டது. சுல்தானும் பதவியை விட்டு விலகவேண்டும் என்று அது வற்புறுத்திற்று. இஸ்தம்பூலில் இருந்த அதிகாரிகள் பலரும் அதையே விரும்பினர். அகமது கொப்ரீலீயின் சகோதரரும், அவர் தலைநகரில் இல்லாதபோது பிரதம மந்திரியின் அலுவல்களைக் கவனித்து வந்தவருமான முஸ்தஃபா கொப்ரீலீ உலமாக்கள் கூட்டம் ஒன்றைக் கூட்டி, 'சுல்தான் வேட்டையாட்டங்களில் மூழ்கிக் கிடந்து அரசாங்கப் பொறுப்புகளைச் சரிவரக் கவனித்து வரவில்லையாதலால், நாட்டு மக்களுக்குப் பல துன்பங்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, அவரைப் பதவியிலிருந்து விலக்கி விடுவதே நலமாகும்' என்று எடுத்துரைக்க, கூட்டத்தினர் அதை ஏக மனத்துடன் ஏற்றுக்கொண்டதாகத் தெரிவித்தனர்; சுல்தான் முகம்மதுவைச் சிம்மாசனத்திலிருந்து விலக்கி, அவரது இடத்திற்கு அவருடைய மகனைக் கொண்டு வராது, அவருடைய சட்டபூர்வமான வாரிசான சுலைமான் என்ற சகோதரரைக் கொண்டுவர வேண்டும் என்றும் முடிவெடுத்தனர். பிறகு அவர்கள் அந்தப்புரத்திற்குச் சென்று அங்குத் தங்கியிருந்த அவ் விளவரசரை வெளியே வருமாறு கோரித் தங்கள் முடிவைத் தெரிவித்தனர். இதற்கு எதிர்ப்பு ஏற்படவில்லை. எங்கே தம்மைக் கொன்று விடுவார்களோ என்று அஞ்சி நெடுங்காலமாக அந்தப்புரத்திலேயே அடங்கிக் கிடந்த அவ்விளவரசர் கைதி போலும் இருந்த தம் விடுதியைவிட்டு வெளியேவந்து, சுல்தான் பதவியை ஏற்றார். முப்பத்தொன்பது ஆண்டு காலமாகப் பதவிகளை விற்று வந்த முகம்மது பதவியிலிருந்து விலகியதற்குப் பிறகு, அதுவரை தம் சகோதரர் குடியிருந்த மாளிகைக்குள் நுழைந்து விட்டார். மூன்று ஆண்டுகட்குப் பிறகு முகம்மது உயிர் நீத்தார். எவரும் அவருக்காக வருந்தவில்லை போலும்! உண்மையில் அவருடைய வீழ்ச்சிக்குக் காரணம் வேட்டையாடுவதில் அவருக்கு இருந்த அளவுக்கு மீறிய விருப்பம் அன்று;

ஆனல், ஆணவம் பிடித்த காரா முஸ்தஃபாவின் திறமையில்லாமையே அதற்குக் காரணமாம்.

1687-ல் பட்டத்திற்கு வந்த சுலைமான் எவரும் எதிர்பார்த்ததைவிட அதிகமான திறமையைக் காண்பித்தார் என்றாலும், கலகமனப்பான்மை கொண்டிருந்த ஜனிஸ்ஸரீகளை அவர் அடக்க இயலாதவராகவே இருந்தார். இஸ்தம்பூல் நகரில் அவர்கள் எங்கும் கலகங்களை விளைவித்துக்கொண்டிருந்தனர்; கொலைக் குற்றங்களைப் புரிந்து கொண்டிருந்தனர்; வஸீர்களின் மாளிகைகளையும் மற்றவர்களுடைய விடுதிகளையும் சூறையாடிக் கொண்டிருந்தனர். அண்மையில் அவர்கள் எடுத்த முயற்சியினலேயே பிரதமர் பதவியை மேற்கொண்டிருந்த சியவூஷின் அந்தப்புரத்தையும் அவர்கள் தாக்கினர். அவர் தம் அந்தப்புரத்தைக் காப்பதிலேயே உயிரிழந்தார். அந்தப்புரத்துப் பெண்கள் பெருங் கொடுமைகளுக்கு ஆளாயினர். தலைநகரத்தில் பெருங் குழப்பமும் ஒழுங்கில்லாமையும் அத்துமீறிவிட்டமையால், அந் நகரவாசிகளே கிளர்ந்தெழுந்து ஜனிஸ்ஸரீகளுக்கெதிராக அதிகாரிகளுக்கு ஆதரவு அளித்தனர். அப்படையினரின் ஆகாவும் முக்கிய அதிகாரிகளும் துக்கிலிடப்பட்டதற்குப் பிறகு அமைதி நிலவிற்று.

1688-ல் ஒரு சிறந்த படை ஹங்கேரிய எல்லைக்கு அனுப்பப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகாலமாக ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வதற்காகத்தான் அது அனுப்பப்பட்டது. ஆனல், இந்த இடைவேளையை ஆஸ்ட்ரியர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு, இப்பொழுது லொரைனின் தலைமையில் இருந்த படை, பேடனின் இளவரசர் லூயியின் (Prince Louis of Baden) தலைமையிலிருந்த படை மற்றும் சாவாயின் இளவரசர் எழேனியின் (Prince Eugene of Sovay) தலைமையில் இருந்த படை ஆக மூன்று படைகளையும் சேனையாகத் திரட்டி வைத்திருந்தனர். அம் மூன்று படைத் தலைவர்களும் அசாதாரணத் திறம்படைத்தவர்கள். அவர்கள் இராலு கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக்கொண்டனர். இதனல் பெல்கிரேடுக்குச் செல்லும் வழி அவர்களுக்குத் திறந்து கிடந்தது. பால்கன் பகுதிக்கு ஓர் அரணகவும் ஹங்கேரியின் வாயிலாகவும் இருந்த இந்த மிக முக்கியமான நகரம் இருபத்தொரு நாட்களாக நடந்த தாக்குதலுக்குப் பிறகு ஆகஸ்ட், 1688-ல் அதன் படையின் துரோகச் செயலால் அடிபணிந்தது. அதே சமயத்தில் பேடனின் லூயி பாஸ்னியாவின் மீது படையெடுத்து அதன் பெரும்பாலான பகுதியைக் கைப்பற்றிக் கொண்டுவிட்

டார். டால்மேஷியாவும் துருக்கியர் ஆட்சிக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து அதனைக் கவிழ்த்தது. பின்னால் ஆஸ்ட்ரியர்கள் நிஷ்ஷைக் (Nisch) கைப்பற்றினர். டான்யூப் நதியோரத்திலிருந்த விட்டினும் (Widdin) சீக்கிரமே அவர்கள் வசமாயிற்று. 1689 ஆம் ஆண்டுக்குள்ளாக ஹங்கேரியில் தெமெஸ்வர் (Temesver) வாரர்டின் (Warardin) ஆகிய இரு கோட்டைகள் மட்டுமே துருக்கியர்கள் வசமிருந்தன.

இன்னும் சற்றுத் தூரக்கிழக்கில் துருக்கியர் சற்று அதிக நல்வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். கிரீமியாவிலிருந்து வந்த டார்ட்டாரியப் படை ஒன்று 1688-ல் போலந்தின் மீது படையெடுத்து, செரெத் (Sereth) நதியோரத்தில் போலந்துப் படை ஒன்றை முறியடித்தது. 1689-ல் ரஷியா, உத்மானியர்களுக்கெதிராகத் தோன்றியிருந்த கூட்டணியில் சேர்ந்துகொண்டு கிரீமியாவிற்குப் படை ஒன்றை அனுப்பியபோது, மிகக் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டது. இவ்விதமாகத் துருக்கியர்கள் இப் பகுதியில் ஒருசில வெற்றிகளைப் பெற்ற போதிலும், மற்ற இடங்களிலெல்லாம் எண்ணற்ற தோல்விகளையே அடைந்தனர். ஹங்கேரியாடியின் காலந்தொட்டு முதன் முதலாக இப்போது பால்கன் மாநிலங்கள் ஆஸ்ட்ரியர்களால் அச்சுறுத்தப் பெற்றன. பாஸ்னியா, ஸெர்பியா ஆகியவற்றின் ஒரு சில பகுதிகள் ஆஸ்ட்ரியர்களின் கையில் சிக்கி இருந்தன. மொரிஸினியின் தலைமையில் வெனிஸியர்கள் கிரீஸையும் அல்பேனியாவையும் கைப்பற்றியிருந்தனர். வெனிஸ் படையினர், போப்பின், மால்டாவின் வீரர்கள், டஸ்கனியின் கோமகன் ஆகியவர்களின் கூட்டுக் கப்பற்படை ஒன்று துருக்கிக் கப்பற்படையை மத்திய தரைக் கடலிலிருந்து விரட்டியடித்தது. உத்மானியர்களின் சார்பில் அப்படிப்பட்ட தகுதிமிக்க படைத் தலைவர் எவரும் இருக்கவில்லை.

இதுபோன்ற சூழ்நிலைகளுக் கிடையேதான் 1689-ன் முடிவில் எதிர்னேயில் பேரரசின் பொதுச்சபை ஒன்று கூடிற்று. நீண்ட விவாதத்திற்குப் பிறகு அது ஸாதே கொப்ரீலீ (Zade Kopriilii) என்பவரைப் பிரதம அமைச்சராக நியமிக்குமாறு சுல்தானுக்கு ஆலோசனை கூறிற்று. அகமது கொப்ரீலீ இறந்ததற்குப் பிறகு நான்காம் முகம்மது என்ற சுல்தான் ஸாதே கொப்ரீலீக்குப் பதிலாகக் காரா முஸ்தபாவைப் பிரதம அமைச்சராக நியமித்தார். பதின்மூன்று ஆண்டு காலமாகப் பேரிழப்பையும் மட்டமான ஆட்சியையும் நாடு அனுபவித்ததற்குப் பிறகு, கொப்ரீலீ குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் பிரதம வஸீராகப்

பதவி ஏற்ருர். அவர் பதவியேற்றதுமே பெரும் ஆற்றலையும் திறமையையும் காட்டினர். நிதிநிலையை ஒழுங்குபடுத்துவதற்காக அவர் உடனடியாகத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார்.

பொது மக்களிடத்திருந்து ஏராளமான பணத்தைத் திரட்டி வைத்திருந்த செல்வமிகு அதிகாரிகளின்மீது மிகக் கடுமையான தீர்வைகளை விதித்துக் கொப்ரீலீ கருவூலத்தை நிரப்பி வந்தார்; மாபெரும் வீரர்களை மீண்டும் படையில் அமைத்துக்கொண்டார்; உத்மானியக் கப்பற்படையை உயிர்ப்பித்தார்; டான்யூப் நதியில் போக்கு வரத்து வசதிக்காகப் பல கப்பல்களை நடமாட விட்டார்; திறமையற்றவர்களாகவும் லஞ்சம் வாங்குபவர்களாகவும் இருந்த ஆளுநர்களைப் பதவியிலிருந்து விலக்கி, நேர்மையான, நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களைப் பதவியில் அமர்த்தினர். பேரரசு முழுதிலுமிருந்த கிறித்தவக் குடியானவர்கள் யாவரின் ஆதரவையும் பெற முயன்ருர்; அக் குடியானவர்களை எவ் வகையிலும் துன்புறுத்தக் கூடாது என்று அவர் ஆளுநர்களுக்கும் பாஷாக்களுக்கும் உத்தரவிட்டு விட்டார். தலா தீர்வை யன்றி மற்றெந்தத் தீர்வையையும் அவர்கள்மீது விதிக்கக்கூடாது என்றும் அவர் கட்டளையிட்டு விட்டார். அவரே ஒரு வைதிக முஸ்லிமாக இருந்தாலும், திருச்சபைகளைக் கட்டுவதற்கு எங்கும் கிறித்தவர்களுக்கு அவர் அனுமதி வழங்கிவிட்டார். வாணிகத்தில் விதிக்கப்பட்டிருந்த தேவையற்ற கட்டுப்பாடுகளை அவர் நீக்கினர். அவர் மிக எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்; அவாவை வெறுத்தவராக இருந்த இவர் பேசும்போது ஓரிரு வார்த்தைகளை மட்டுமே உரையாடி முடித்துக்கொள்வார். அவர் ஒரு குற்றமும் புரியாதவர் என்றும், தேவையில்லாத வார்த்தைகளை ஒரு காலும் உதிர்த்ததில்லை என்றும் கருதப்பட்டார். 'நேர்மைக் குணம் படைத்த கொப்ரீலீ' என்று இவர் பொதுவாக அழைக்கப்பட்டார். அப்படிப்பட்டவர் துர்வசமாகத் தம் நாட்டுப் பிரதம வஸீராக இரண்டு ஆண்டுகட்கு மட்டுமே பதவியிலிருந்தார்.

அவர் பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்ட போது ஆஸ்ட்ரியர்கள் டான்யூப் நதியைக் கடந்து மாஸிடோனியா வரையிலும் முன்னேறி இருந்தனர். கொப்ரீலீ அவர்களுக் கெதிராக இரு படைகளை அனுப்பிவைத்து, இரண்டு போர்களில் அவர்களைத் தோற்கடித்தார். இவ் வெற்றிகளின் விளைவாக டான்யூப் நதிக்குத் தெற்குப் பிரதேசத்திலிருந்த பல முக்கிய கேந்திரங்களைத் துருக்கியர்கள் மீண்டும் பெற முடிந்தது. பேரர

சுக்கு இந்தப் பகுதியில் ஏற்பட்டிருந்த ஆபத்தும் கனிந்தெறியப் பட்டது. ஸாதெ கொப்ரீலீ தாமே படைக்குத் தலைமை வகித்து, ஆகஸ்ட் மாதம், 1690-ல் பல்கேரியா வழியாக முன்னேறி சோஃபியாவுக்கும் நிஷ்ஷுக்கும் இடையிலிருந்த ஆஸ்ட்ரியர் கனை விரட்டி, நிஷ்ஷை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண் டார். பிறகு அவர் ஒன்றன்பின் ஒன்றாக ஸெமெண்டிரியா (Semendria) விட்டின் (Widdin) மற்றும் பெல்கிரேட் ஆகிய வற்றைத் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டார். தெகேலி பாஷா வின் தலைமையில் மற்றொரு துருக்கிப்படை டிரான்ஸில் வேனியாவின்மீது படையெடுத்து, அங்கிருந்த ஆஸ்ட்ரியர்களை விரட்டி ஓட்டியது. பெரும் புகழுடன் கொப்ரீலீ தலைநகருக்குத் திரும்பினர்.

இத் தறுவாயில் சுல்தான் சுலைமான் இறந்து, பிறகு அவ ருடைய சகோதரர் இரண்டாம் அகமது (Ahmet II) என்பவர் பட்டத்திற்கு வந்தார். இவருடைய சகோதரரைப் போலவே இவரும் அந்தப்புரத்தில் சிறையடைக்கப்பட்டிருந்தவர்; பேர ரசை ஆள்வதற்கோ படைகளைத் திரட்டிச் செல்வதற்கோ இவரும் திறமையற்றவராகவே இருந்தார். நல்ல வேளையாக, அரசாங்கப் பொறுப்பினை அவர் தம் பிரதம அமைச்சரிடம் ஒப் படைத்திருந்தார். கொப்ரீலீ மீண்டும் படையைத் திரட்டிக் கொண்டு போருக்குச் சென்றார். 1692, மே மாதத்தில் அவர் பெல்கிரேடிலிருந்து புறப்பட்டு டான்யூபின் வலது புறமாக முன் னேறி, பேடனின் லூயி என்பவரின் தலைமையில் பீட்டர் வர்டீன் (Peterwardein) என்ற இடத்திலிருந்து முன்னேறிக் கொண்டு வந்த ஆஸ்ட்ரியர்களைத் தாக்கினர். சாலங்கமென் (Salankamen) என்ற இடத்தில் இரு படைகளும் சந்தித்தன. அவர்களுடைய கப்பற்படைகள் டான்யூப் நதியில் மோதிக் கொண்டன. துருக்கியர்களுக்கே வெற்றி ஏற்பட்டது. ஆனால், நிலப்போரில் அவர்கள் படுதோல்வி யடைந்தனர். அனுபவ முதிர்ந்த படைத் தலைவர்களின் ஆலோசனையையும் ஸாதே பொருட்படுத்தாது, படை உதவி வராமலேயே போர் புரிய வேண்டும் என்று வற்புறுத்தினர். நிகழ்ந்த மிகக் கடுமையான போரில் துருக்கியர்கள் முறியடிக்கப்பட்டனர். மிகவும் மோச மாகிவிட்ட நிலையை மீட்பிப்பதற்காகப் பிரதம வஸீர் வானை ஏந்திக் கூட்டத்துக்குள் நுழைந்து ஆஸ்ட்ரியர்களைத் தாக்கும் போது கொல்லப்பட்டார். படைத்தலைவரை இழந்துவிட்ட துருக்கிப் படைவீரர்கள் மனமுடைந்து அடிபணிந்தனர். பீதியும் குழப்பமும் ஏற்பட்டன. துருக்கியர்களின் முகாமும் நூற்று இருபது பீரங்கிகளும் ஆஸ்ட்ரியர்கள் கையில் சிக்கிக்

கொண்டன. அதே சமயத்தில் தெகேலி பாஷாவும் ஆஸ்ட்ரியர்களால் முறியடிக்கப்பட்டு, டிரான்ஸில்வேனியாவிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார். உத்மானிய பேரரசின் புகழ் தனரமட்டத்துக்கு வீழ்ச்சியுற்றுவிட்டது. தோல்வியினால் ஏற்பட்ட துயராலும் அவமானத்தாலும் சுல்தான் மனமுடைந்து உயிர் நீத்தார். அவருக்குப் பிறகு அவருடைய சகோதரர் நான்காம் முகம்மதுவின் மகன் பதவி ஏற்றார்.

புதிய சுல்தானாகிய இரண்டாம் முஸ்தஃபா (Mustapha II) என்பவர் (1695—1703) தமது நாட்டின் நிலையைச் சரிப்படுத்த உறுதி கொண்டிருந்தாராயினும், அதுபோன்ற நெருக்கடியில் தேவைப்படும் திறமையையோ, விட்டுக்கொடுக்காமல் செயல்படும் ஆற்றலையோ படைத்திருக்கவில்லை. தமக்கு முற்பட்ட சுல்தான்களின் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையே அந்த அவல நிலைக்குக் காரணம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆகவே, பதவிக்கு வந்தவுடன் அவர் பழங்கால நற்பழக்க வழக்கங்களை உயிர்ப்பிக்கப் போவதாகவும், தாமே படையை நேரில் போர்முனைக்குக் கொண்டுபோகப் போவதாகவும் பிரகடனம் செய்தார். அப் பிரகடனத்தின்படி திவான் கூடி, ஆஸ்ட்ரியர்களுக்கெதிராக அனுப்பப்படவிருக்கும் படைக்கு இந்த சுல்தான் தலைமை தாங்க வேண்டுமா என்பதை மூன்று நாட்கள்வரை விவாதித்தது. சுல்தான் அவ்விதம் செய்தால் பெரும் பணம் செலவாவதோடு, பேராபத்தையும் அனுபவிக்க நேரிடும் என்ற காரணத்தை முன்னிட்டு, அவ்விதம் சுல்தான் படைகளைத் திரட்டிக் கொண்டுசெல்லுதல் கூடாது என்று முடிவெடுக்கப்பட்டது. அவர்கள் வெளிப்படையாகக் கூறுவிடினும், சுல்தான் அனுபவமற்றவராயிருப்பதனால் படைக்கே ஒரு பலவீனமாக ஆகிவிடுவாரோ என்று கருதியிருக்கக்கூடும். சுல்தான் அப் பொறுப்பைப் பிரதம வஸீரிடம் ஒப்படைத்துவிடலாம் என்றும் அவர்கள் சுல்தானுக்கு அறிவுரை கூறினர். ஆனாலும், சுல்தான் தாமே படைகளைத் திரட்டிச் செல்வதாக முடிவு செய்துவிட்டார். இந்த முடிவின்படி, இரண்டாம் முஸ்தஃபா ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு, 1696ஆம் ஆண்டில் பெல்கிரேடிலிருந்து தெமெஸ்வாருக்குச் சென்றார். வழியில் பல்வேறு சிறிய கோட்டைகளையும் அவர் கைப்பற்றினார். தெமெஸ்வாருக்கருகில் நிகழ்ந்த போரில் அவர் வெற்றியும் கண்டார். ஆஸ்ட்ரியர்களுக்குப் பெரும் சேதம் விளைந்தது. தெமெஸ்வார் மீட்டுக்கொள்ளப்பட்டது. ஆனாலும், முஸ்தஃபா இவ் வெற்றியைப் பின்தொடரவில்லை. அவர் இஸ்தம்பூலுக்குத் திரும்பிவிட்டார். மக்கள் அவரைப் பெரும் ஆவேசத்துடன் வரவேற்றனர்.

1697-ல் மீண்டும் முஸ்தஃபா படையுடன் பெல்கிரேடிலிருந்து ஹங்கேரிக்குள் நுழைந்தார். ஆனால், அவருடைய திட்டம்தான் என்ன என்பதை அவரே சரிவரப் புரிந்துகொண்டிருக்கவில்லை. போர்க் குழுவின் பல கூட்டங்களில் விவாதித்த தற்குப் பிறகு தெயிஸ் நதிக்கு (River Theiss) வடபுறத்தில் முன்னேற வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. அக் காலத்துச் சாலச் சிறந்த படைத் தலைவராகத் திகழ்ந்த சாவாயின் இளவரசர் எழேனி ஆஸ்ட்ரியர்களின் படைக்குத் தலைமை வகித்தார். தெயிஸ் நதிக்கரையில் ஸென்ட்டா (Zenta) என்னும் இடத்தில் இரு படைகளும் சந்தித்தன. இவ்விடத்தில் துருக்கியர்கள் பாலம் ஒன்றை நிருமித்து வைத்திருந்தனர். சுல்தானும் அவருடைய குதிரைப்படை வீரர்களும் பெரும்பாலான பீரங்கிப் படையினரும் பாலத்தை ஏற்கெனவே கடந்து விட்டிருந்தனர். காலாட்படை இன்னும் இப் பக்கத்தில்தான் இருந்தது. எழேனி திடீரென்று தாக்கிப் பாலத்தைக் கடந்துகொண்டிருந்த படையைத் துண்டித்தார். துருக்கிப் படையினரிடையில் எங்கும் குழப்பம் நிலவிற்று. தலைசிறந்த அதிகாரிகளுக்கிடையே பிளவுகள் ஏற்பட்டன. ஜனிஸ்ஸரீப் படையினர் பலர் போர்க்களத்திலேயே கலகம் செய்து தங்கள் அதிகாரிகளைப் படுகொலை செய்தனர். இருபத்தாருயிரம் துருக்கியர்கள் போர்க்களத்தில் மடிந்தனர். பத்தாயிரம் பேர் பாலத்தைக் கடந்துகொண்டிருக்கையில் மூழ்கி இறந்தனர். பிரதம அமைச்சரும் நான்கு வஸீர்களும் எண்ணற்ற பாஷாக்களும் ஜனிஸ்ஸரீகளின் முப்பது ஆகாக்களும் கொல்லப்பட்டனர். ஆற்றின் அக் கரையிலிருந்து போரைக் கவனித்துக்கொண்டிருந்த சுல்தான் தெமெஸ்வாருக்குத் தப்பிச் சென்று, பிறகு பெல்கிரேடுக்கு வந்து, இஸ்தம்பூலை அடைந்தார். அவர் பெற்ற இந்த இராணுவ அனுபவம் அவரது இராணுவ ஆற்றலைத் தணிய வைத்தது. மீண்டும் அவர் எப்படைக்கும் தலைமை வகிக்கவில்லை. ஆஸ்ட்ரியர்கள் பெரும் கொள்ளைப் பொருளைப் பெற்றனர். தோல்வியடைந்த துருக்கிப் படையினரில் எஞ்சி இருந்தவர்கள் பெல்கிரேடுக்குத் திரும்பிப் பிறகு எதிர்னேயை வந்தடைந்தனர். இளவரசர் எழேனி டான்யூப் நதியைக் கடந்து, பாஸ்னியாவுக்குள் புகுந்து அம்மாநிலத்தின் பெரும் பகுதிக்குத் தம்மையே தலைவராக்கிக் கொண்டார். பதினான்கு ஆண்டு காலமாக இடைவிடாமல் வெற்றி பெற்றுவந்து, இறுதியில் ஆஸ்ட்ரியர்கள் அடைந்த இம்மாபெரும் வெற்றி போரின் முடிவை அவர்களுக்குச் சாதகமாக்கியதோடு, உத்மானிய பேரரசின் இராணுவத் துறையின் அழிவையும் வெளிப்படுத்திக் காட்டிவிட்டது.

போர் நிகழ்ந்த ஆறு நாட்களுக்குப் பிறகு சுல்தான் தமது அவல நிலையில் மீண்டும் கொப்பீலீ குடும்பத்தினரின் உதவியை நாடினார். ஸெண்ட்டாவில் கொல்லப்பட்ட பிரதம அமைச்சரின் பதவியில் முகம்மது கொப்பீலீயின் மூத்த சகோதரருடைய மகனான ஹுஸைன் கொப்பீலீ என்பவரை சுல்தான் நியமித்தார். வியன்னா முற்றுகை வரையிலும் சிற்றின்பங்களில் மூழ்கிக்கிடந்த இவர், அத் தோல்விக்குப் பிறகு அரசாங்கத்தில் பல உயர் பதவிகளைத் திறம்பட வகித்திருந்தார். எனவே, பிரதம வளீரின் பதவிப் பொறுப்புகளைச் சமாளிக்க வல்லவராக இவர் விளங்கினார்.

1697-98ஆம் ஆண்டின் பனிக்காலத்தில் அமைதியை மீண்டும் நிலைநாட்டப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. கிரேட் பிரிட்டன், ஹாலந்து ஆகியவற்றின் சார்பாக பிரிட்டிஷ் தூதரான பேஜெட் பிரபுவால் (Lord Paget) அறிவிக்கப்பட்ட மத்தியஸ்தத்தின்படி, ஆஸ்ட்ரியா வெனிஸ் மற்றும் போலந்து ஆகிய நாடுகள் ஒவ்வொன்றும் அது அதுவும் துருக்கியரிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பெற்றிருந்த ஆட்சிப் பகுதிகளைத் தன்தன்னிடமே வைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிலையை ஆராய்வதற்காக ஹுஸைன் கொப்பீலீ இராஜ்ஜிய சபை ஒன்றைக் கூட்டினார். அவர் செய்ன்ட் கோத்தார்டு போரிலும் இதர போர்களிலும் நேரில் களம் கண்டவர். ஆகவே, ஆஸ்ட்ரியப் படையின் சிறப்பான தகுதியை அவர் அறிந்திருந்தார். வியன்னா முற்றுகை தொட்டு உத்மானியர்கள் ஒன்பது பெரிய போர்களில் முறியடிக்கப்பட்டுள்ளனர். முதல் தரமான ஒன்பது கோட்டைகளை அவர்கள் அதுவரையிலும் இழந்திருந்தனர். போர் நீடித்தால் இவற்றைப் போன்ற தோல்விகளே ஏற்படலாம் என்பதையும் அவர் உணர்ந்தார். ஆகவே, அவருடைய வற்புறுத்தலின் மீது கிரேட் பிரிட்டன் மற்றும் ஹாலந்து ஆகியவற்றின் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொள்ள முடிவெடுக்கப்பட்டது. ரஷியா தவிர மற்ற வல்லரசுகள் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தன. கிரேட் பிரிட்டனும் ஹாலந்தும் சுயநலத்தையே நாடுகின்றன என்றும், அவற்றை நம்புதல் கூடாது என்றும் ரஷிய நாட்டு அரசர் பீட்டர் (Peter) எதிர்ப்புத் தெரிவித்தார். அவருடைய முயற்சிக்கும் மாறுக அமைதி மாநாடு ஒன்றைக் கூட்டவேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. கார்லோவிட்ஸ் (Corlowitz) என்ற இடத்தில் கூடிய அம் மாநாட்டில் ரஷியாவைத் தவிர மற்ற வல்லரசுகள் அனைத்தும் கலந்து கொண்டன. எழுபத்திரண்டு நாட்கள் விவாதத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் பிறகு, பேஜட் பிரபு வழங்கிய யோசனைப்படியே அமைதி நிறுவப்பட்டது. டிரான்ஸில்வேனியா, ஸ்லாவோனியா

மற்றும் மாரோஷ் நதிக்கு வடக்கிலும் தெயிஸ் நதிக்கு மேற்கிலும் இருந்த ஹங்கேரியப் பகுதி ஆகியவற்றை யெல்லாம் ஆஸ்ட்ரியா வைத்துக் கொள்ளவேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனால் துருக்கியர்களுக்கு ஹங்கேரியில் இருந்த உடைமைகளில் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே மிஞ்சி நின்றது. ஹங்கேரி, டிரான்ஸில்வேனியா ஆகியவற்றுக்காகச் செலுத்தப்பட வேண்டியிருந்த கப்பத் தொகையையும் பேரரசர் செலுத்த வேண்டியதில்லை என்று அறிவிக்கப்பட்டது. வெனிஸ் மொரியாவையும் அல்பேனியாவையும் தன்னிடத்திலேயே வைத்துக் கொண்டிருக்கையில், கோரின்த் நிலச் சந்திக்கு வடக்கில் தான் பிடித்து வைத்திருந்த பகுதிகளை விட்டுவிட வேண்டியதாயிற்று. ஸான்டெ தீவின் சார்பாக அக் குடியரசு சுல்தானுக்குச் செலுத்த வேண்டியிருந்த கப்பத் தொகையை மேலும் தொடர்ந்து செலுத்தத் தேவையில்லை என்றும் விதிக்கப் பட்டது. போலந்து பொடோலியாவை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

ஐரோப்பாவின் சர்வதேசத் தொடர்புகளில் கார்லோவிட்ஸ் ஒப்பந்தம் மிகவும் முக்கியமானதாகும். உத்மானியப் பேரரசின் அந்தஸ்து ஐரோப்பிய வல்லரசுகளுக்குக் கவலை தருவதாக உள்ளது என்பதை அது முதன் முதலாக அறிவித்தது. பாதிக் கப்பட்டிருந்த நாடுகளின் சம நிலையையும் அது நிலைநாட்டிற்று. உத்மானியப் பேரரசின் போலிப் பகட்டையும் அது புறக்கணித்தது. அக் காலந்தொட்டுத் துருக்கியர்கள் மத்திய ஐரோப்பாவைத் தாக்குவர் என்ற அச்சம் மறைந்து போயிற்று. இந்த ஒப்பந்தம் பின்னால் ஏற்படவிருந்த பஸ்ஸரோவிட்ச் (Passarowitch) கைனர்ட்ஜி (Kainardji) எதிர்னே மற்றும் பெர்லின் ஒப்பந்தங்களைவிட அதிக இகழ்ச்சிக்குரியதாக இருக்கவில்லை. ஆனாலும், அதே சமயத்தில் அது கிறித்தவர்களுக்குப் பெரும் வெற்றியாகவும் அமைந்தது. உத்மானியப் படை அடைந்த பற்பல தோல்விகளையும் பேரரசின் மூலப் பொருள்கள் காலியாகி விட்டதையும் நினைவில் கொண்டிருந்த ஹுஸைன் கொப்ரீலீ அவ் வொப்பந்தத்திற்கு இணக்கம் தெரிவித்ததில் ஓர் அறிவு மிக்க அரசியல் வல்லுநராக நடந்து கொண்டார். அவருடைய அறிவுரையையும் அவருடைய குடும்பத்தினரின் அறிவுரையையும் பேரரசு ஏற்றுக் கொண்டிருக்குமாயினும், கிறித்தவக் குடிமக்கள் நியாயமாக நடத்தப்பட்டிருப்பார்களாயினும் பின்னாளில் ஏற்படவிருந்த இகழ்ச்சிகளைத் தவிர்த்திருக்கலாம்; வெகு நாட்கள் வரையிலும் பேரரசு சிதறடையாமல் தொடர்ந்து நீடித்திருக்கவும்கூடும்.

கார்லோவிட்ஸ் உடன்படிக்கை ஏற்பட்டதற்குப் பிறகு மூன்று ஆண்டுகள் வரையிலும் ஹுஸைன் கொப்ரீலீ பிரதம வஸீர்ப் பதவியில் வீற்றிருந்தார். தம்முடைய புகழ்வாய்ந்த உறவினரான அகமது கொப்ரீலீயின் குணவியல்புகளையும் திறமைகளையும் அவர் இக் காலத்தில் படைத்திருந்தார் என்பதை வெளிப்படுத்தினர். அவர் மிக்க பண்புடையவர்; பொது நலனில் ஆர்வம் கொண்டிருந்தவர். நாட்டில் அதிகரித்துக்கொண்டிருந்த தீங்குகளைத் தமது சீர்திருத்தங்களால் அவர் அழிக்க முயன்றார். ஜனிஸ்ஸரீகளின் பயங்கர அதிகாரத்தை அவர் ஒடுக்க முயன்றார். குடியானவர்களின் மிக மோசமான நிலையை அபிவிருத்தி செய்வதற்கு அவர் பெரும் பாடுபட்டார். அவர்களுக்கான சீர்திருத்தங்களுக்குப் பிற்போக்காளரிடத்திருந்து பெருத்த எதிர்ப்பு ஏற்பட்டது. பொறுப்பின் சுமையைத் தாள முடியாது அவர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். ஒரு சில வாரங்களுக்குள், 1702-ல் அவர் உயிர் நீத்தார். அவருடைய வாரிசான தல்பதன் பாஷா (Dalbatan Pasha) அவருக்கு முற்றிலும் மாறுபட்டவராக இருந்தார்; இவர் அநாகரிகத்தில் ஊறிப் போன செர்பியன்; எழுதப் படிக்கத் தெரியாதவர்; கொடூர குணத்திற்காகக் கெட்ட பெயர் வாங்கி இருந்தவர்.

1710-ல் மற்றொரு கொப்ரீலீ குடும்பத்தினரான நௌமான் கொப்ரீலீ (Nowouman) என்பவர் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார். தமது குடும்பத்தாரின் பல நற் குணங்களையும் இவர் படைத்திருந்தாராயினும், அப் பதவியை வகிப்பதற்கான தகுதியை இவர் பெற்றிருக்கவில்லை. இவர் எதையும் அளவு மீறிச் செய்யத் துணிந்தார். அரசாங்கத்தின் ஒவ்வொரு விவகாரத்திலும் இவர் தலையிட்டுத் தம்கீழ் வேலை செய்த பலரின் வெறுப்பையும் தேடிக் கொண்டார். அரசாங்கத்து விவகாரங்கள் குழப்பத்தில் மூழ்கின. ஆகவே, ஒரு சில மாதங்களுக்குள் இவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். அக் குடும்பத்தைச் சேர்ந்த மற்றும் ஐந்து பேர் அடுத்த ஒரு சில ஆண்டு காலத்திற்குப் படைத் தலைவர்களாகவும் மாநிலங்களின் ஆளுநர்களாகவும் பதவி வகித்திருந்தனர்.

16. துருக்கியும் ரஷியாவும்
(Turkey and Russia)

(அ) பஸ்ஸரோவிட்ச் உடன்படிக்கை (1702-18)

கொப்ரீலீ வம்ச நான்காவது பிரதம அமைச்சரான ஹுஸைன் என்பவரின் மரணத்திற்குப் பிறகு சுல்தான் முஸ்தஃபா நீண்டநாள் உயிர் வாழவில்லை. அவருடைய ஆட்சியின் தொடக்கத்தில் அவருடைய ஆலோசனைக் குழுவின் விருப்பத்திற்கு மாறுகத் தாம் படைக்குத் தலைமை வகிக்கப் போவதாக எடுத்துக் கொண்டிருந்த முடிவினை அவரால் சரிவர நிறைவேற்ற இயலவில்லை. தமது தோல்வியினால் மனக் கசப்புற்றிருந்த அவர் இறுதியில் ஒழுக்கங் கெட்ட வாழ்க்கையையே மேற்கொண்டுவிட்டார். ஹுஸைன் கொப்ரீலீயின் மறைவிற்குப் பிறகு பேரரசெங்கும் குழப்பம் நிலவிற்று. பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் கிளர்ச்சி நடக்க விருந்தது. அதை யெல்லாம் சமாளிப்பதற்கான திறமையை முஸ்தஃபா பெற்றிருக்கவில்லை. அவர் சுயமாகவே சிம்மாசனத்திலிருந்து விலகிக் கொண்டு அந்தப்புரத்து விடுதியில் அடைக்கலம் புகுந்து விட்டார். அவருக்குப் பிறகு அவருடைய சகோதரர் மூன்றும் அகமது என்பவர் அரியணை ஏறினர். முப்பது வயதினராக இருந்த இவர் இருபத்தேழு ஆண்டு காலம் ஆட்சிபுரிந்தார். இறுதியில் இவர் ஜனிஸ்ஸரீப் படையினரால் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

வழக்கமான ஒதுக்கலுக்கு இவர் ஆளாகி யிருக்கவில்லை யாதலால், பட்டத்துக்கு வருகையில் இவர் உலக அனுபவம் பெற்றவராகவே இருந்தார். ஆனால், அவரை மாபெரும் போர் வீரர் என்று அழைப்பதற்கில்லை. அதே சமயத்தில் அரசியல் விவகாரங்களை அந்தப்புரப் பெண்களிடம் விடுவதற்கும் அவர் தயாராக இருக்கவில்லை. வஸீர்கள் அரசு அதிகாரங்களைத்

தங்கள் கைவசம் குவித்து வைத்துக் கொள்ளவும் அவர் அனுமதிக்கவில்லை. இவ்விதக் குவிப்பு ஆக்கிரமிப்பை அவர்கள் செய்யாதிருக்க, அவர் தம் அமைச்சர்களை அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்தார். அவருடைய ஆட்சியின் முதல் பதினைந்து ஆண்டுகளில் பன்னிரண்டு நபர்கள் பிரதம அமைச்சர்களாகப் பதவி வகித்திருந்தனர். இவ்வித மாற்றங்களை அவர் செய்ததற்கு உண்மைக் காரணம் அவருக்குப் பணத் தேவை நெருக்கடி ஏற்பட்டதும், அவருடைய அந்தப்புரத்துக்கான செலவு அத்து மீறியதாக இருந்ததும்தான் என்று கூறுபவரும் உளர். பிரதம அமைச்சர்கள் தங்கள் பதவியை ஏற்றுக் கொண்ட தறுவாயில் சுல்தானுக்குப் பெருந் தொகையை லஞ்சமாக வழங்குவது வழக்கமாகும். இவ்வித அன்பளிப்புகளை சுல்தான் ஒரு நல்ல வருவாய் ஊதியமாகக் கருதினர். ஆனலும், அவர்கள் குறுகிய காலமே பதவியில் இருந்த காரணத்தால் அவர்களுடைய விவகாரங்களில் சுல்தான் மிக அரிதாகவேதான் குறுக்கிட்டார். அவருடைய சொந்தக் கருத்தைப் பொறுத்தவரை, அவர் அமைதியையே நாடினர். அவருடைய ஆட்சியின் முதல் ஆறு ஆண்டுகளும் கடைசிப் பன்னிரண்டு ஆண்டுகளும் பேரரசில் இடையருமல் அமைதி நிலவி இருந்தது. மற்றும் ஒன்பது ஆண்டு காலத்தில் பேரரசை விரிவுபடுத்துவதான அல்லது சுருங்க வைப்பதான நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன. முன்பு உத்மானியர்கள் வசப்பட்டிருந்த ஆட்சிப் பகுதிகள் இப்பொழுது மீண்டும் கைப்பற்றிக் கொள்ளப்பட்டன. அவர்களிடத்திலிருந்த பகுதிகளை அவர்கள் இழக்கவும் நேரிட்டது. கிரீமியாவின் பாதுகாப்பிற்காக மிக முக்கியமானதாக இருந்த அஸாஃப் நகரமும் சுற்றுப்புறங்களும் ரஷியாவிடத்திருந்து மீட்கப்பட்டன. மொரியாவும் அல்பேனியாவும் வெனிஸ் குடியரசின் கையிலிருந்து மீண்டும் பறித்துக் கொள்ளப்பட்டன. ரஷிய நாட்டுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, பாரசீகத்திற்குரிய சில முக்கிய மாநிலங்களை இருதரப்பினரும் பங்கு போட்டுக் கொண்டனர். அம்மாநிலங்களுள் ஒருசில முன்பு சுல்தானிடம் இருந்தவையாகும். இதற்கு மாருக, கார்லோவிட்ஸ் ஒப்பந்தத்தின்படி ஒப்படைக்கப்பட்டிராத ஹங்கேரியப் பகுதிகளை இப்பொழுது ஆஸ்ட்ரியாவுடன் ஏற்பட்ட போரின் விளைவாக சுல்தான் இழக்க நேரிட்டது. ஸெர்பியா வலாச்சியா முதலியவற்றின் பெரும் பாலான பகுதிகளையும் பேரரசு இழந்துவிட்டது. பெறப்பட்ட ஆட்சிப் பகுதிகளின் பரப்பளவு இழக்கப்பட்டதைவிடச் சற்று அதிகமாகவே இருந்தது. இருப்பினும், இப்பொழுது ஏற்பட்ட வெற்றிகளினுல் ஆஸ்ட்ரியாவினிடத்தில் உத்மானியர்கள் அடைந்த தோல்வியை ஈடுசெய்ய முடியவில்லை.

இந்த சுல்தானுடைய ஆட்சிக் காலத்தில் முதன் முதலாக ஏற்பட்ட போர் ரஷியாவுடன் நடைபெற்றதாகும். அப்பொழுது அந் நாடு மாண்புமிகு பீட்டர் என்பவரால் (Peter the Great) ஆளப்பட்டு வந்தது. ரஷிய நாடு ஒரு சிறந்த ஐரோப்பிய வல்லரசாக விளங்க வேண்டும் என்பது இவருடைய பெரும் அவா. கிரீமியாவைக் கைப்பற்றிக் கொண்டு, நாட்டு எல்லையை விரிவு படுத்த அவர் முயன்றார். அவ்விதம் செய்வதன் மூலம் கருங்கடலை அடையலாம் என்பதும் அவருக்குத் தெரியும். ஆனலும், 1709-ல் புல்ட்டோவாப் போரில் (Battle of Pultowa) பன்னிரண்டாம் சார்லஸை முறியடித்து லிவோனியாவை வென்றதற்குப் பிறகு பீட்டர் விடுதலை பெற்று, அவரால் வேறு திசைகளில் தம் கவனத்தைச் செலுத்த முடிந்தது. அஸாஃப் கடலின் வடகிழக்குக் கரையில் இருந்த அஸாஃப் அரணை ரஷியர்கள் ஏற்கெனவே கைப்பற்றி வைத்திருந்தனர். டாகன்ராக் (Taganrog) என்ற அரணையும் இதர அரண்களையும் பீட்டர் வலுப்படுத்திக்கொண்டு, கிரீமியாவை அச்சுறுத்திக் கொண்டே இருந்தார். போருக்கான இந்த ஆயத்தங்களைக் கேள்வியுற்ற சுல்தான் பீதியடைந்தார். புல்ட்டோவாப் போருக்குப் பிறகு சுவீடனின் அரசர் பன்னிரண்டாம் சார்லஸ் துருக்கியில் அடைக்கலம் பெற்று வந்ததனல், சுல்தானுக்கும் பீட்டருக்கும் இடையே மனக் கசப்பு ஏற்பட்டிருந்தது. சுல்தான் சார்லஸுக்கு அளித்த உபசரிப்பும், அவரைப் பீட்டரிடம் ஒப்படைக்க மறுத்ததும் ரஷிய மன்னருக்கு மேலும் எரிச்சலை ஊட்டின. ரஷிய மன்னரின் பகைமைக்கான எண்ணங்களை அறிந்த சுல்தான் 1711-ல் ரஷியாவின்மீது போர் தொடுத்தார். பல்தாத்ஜி (Paltadji) என்பவரின் தலைமையில் இருந்த சுல்தானின் படை புரூத் நதியைக் (Pruth River) கடந்து மால்தேவியாவுக்குள் நுழைந்தது. ரஷிய மாமன்னர் தம் படைகளைப் போலந்துக்குத் தெற்கில் திரட்டிக் கொண்டு மால்தேவியாவுக்குள் நுழைந்தார். இரு படைகளும் புரூத் நதிக்கரையில் சந்தித்தன. பிணியால் பீடிக்கப்பட்டும் போதிய உணவு இன்றியும் ஏற்கெனவே குறைந்து விட்டிருந்த ரஷியப் படை இப்போது இருபத்துநான்காயிரம் போர்வீரர்களை மட்டுமே கொண்டிருந்தது. உத்மானியர்களின் படையோ, டார்ட்டார்களின் படையும் உடன் சேர்ந்து கொண்டமையினல் ஐந்து மடங்குக்கு அதிகரித்து இருந்தது. டான்யூபை உத்மானியர்கள் கடந்து விட்டிருக்கின்றனர் என்பதை உணராத பீட்டர் ஆத்திரப்பட்டுப் புரூத்துக்கு வலது புறத்தில் தாக்கினர். அவர் இப் பகுதிக்குள்ளே வந்து விட்டமையினல் நதிக்கும், ஸுரவ்னு (Zurowna) என்னும் இடத்திற்கு அருகாமையில் இருந்த சேற்று நிலத்துக்கும் இடையில் சிக்கிக் கொண்டார்.

இங்கிருந்த மஹ்மூதின் உச்சியில் சுல்தான் தம் படைகளை நிறுத்தி வைத்திருந்தார். அவருடைய சக்திவாய்ந்த பீரங்கிகள் ரஷியர்களை விரட்டியோட்டி, நதிக்கு வரா வண்ணம் செய்து, நாலா பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டன. இந்த நிலையில் ரஷியப் படை சரணடைவதைத் தவிர வேறு எதுவும் செய்வதற்கில்லை; உண்மையில், அரசனுடைய மனைவி காத்தரீன் (Catherine) இருந்திராவிடின் அது மறைந்தேயிருக்கும். இந்த அரசி பெரும் விழிப்புடன் ஒருசில ஆயிரம் ரூபில்களைத் (Rouble) திரட்டி, அவற்றையும் தன் அணிகலன்களையும் சுல்தானுடைய பிரதம அமைச்சரின் செயலாளரிடம் அனுப்பிவைத்து, சமாதான ஒப்பந்தத்திற்கான நிபந்தனைகளுக்கு இணங்குதற்காகப் போரைத் தாற்காலிகமாக நிறுத்திவைக்க யோசனை கூறினள். இவ்விதமாக ஓர் ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டது. அவ் வொப்பந்தத்தின் நிபந்தனைகள் ரஷிய நாட்டிற்கு இழிவைப் பெற்றுத் தருவனவாக இருந்தன: டாகன்ராகும் (Taganrog) மற்றும் சில கோட்டைகளும் இடித்துத் தள்ளப்பட்டன; ஸ்வீடனின் அரசர் ரஷிய நாட்டின் வழியாகத் தமது நாட்டுக்குப் போய்ச் சேருவதற்குப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும்; இஸ்தம்பூலில் வருங்காலத்தில் ரஷிய தூதர் எவரும் இருத்தலாகாது. இந்த மாபெரும் சலுகைகளுக்காக ரஷியப் படையினர் தாக்குதலுக்கு இரையாகாது வீடு திரும்புவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். இந் நிபந்தனைகளடங்கிய, கையொப்பமிடப்பட்ட புரூத் ஒப்பந்தத்தை உத்மானியர்களின் முகாமில் இருந்த ஸ்வீடன் நாட்டு அரசரும் கிரீமியாவின் கானும் எதிர்த்தனர். ரஷியாவுடன் தொடர்ந்து போர் நடைபெறத்தான் வேண்டும் என்றே அவர்கள் விரும்பினர். அவர்கள் இஸ்தம்பூலில் நடத்திய சதிச் சூழ்ச்சிகளின் விளைவாக, அவ் வொப்பந்தத்திற்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. ஆகவே, சுல்தான் முன்பு இழந்து விட்டிருந்த அஸாஃப் போன்ற அரண்களை மீட்பித்ததற்காகத் தமக்கு மக்கள் அமோக வரவேற்பளிப்பர் என்று எதிர்பார்த்த பிரதம வஸீர் தலைநகரை அடைந்ததும் தாம் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருப்பதை அறிந்து வியப்புற்றார். அவ் வொப்பந்தத்திற்கு முக்கிய காரணமாயிருந்த கியாயா உஸ்மான் (Kiaya Osman) என்பவரும் எஃப்பண்டி உமர் (Effendi Omar) என்பவரும் சுல்தானுடைய உத்தரவின்படி கொல்லப்பட்டனர். அவ் வொப்பந்தத்தை சுல்தான் அங்கீகரிக்க மறுத்துவிட்டார். ரஷியாவுடன் மீண்டும் போர் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆனால், இறுதியில் பிரிட்டிஷ் தூதராக இருந்த சர் ஆர். சட்டன் (Sir R. Sutton) என்பவருடைய முயற்சியின் விளைவாக அது கைவிடப்பட்டது. நீண்ட பேச்சு

வார்த்தைகளுக்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து, ரஷிய அரசருடன் மற்றோர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. பல்தாத்ஜி செய்துகொண்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகளே இங்கேயும் விதிக்கப்பட்டன.

ரஷியப் படையை அழிப்பதற்கோ அல்லது கைப்பற்றுவதற்கோ ஏற்பட்ட வாய்ப்பினையும், பீட்டர் சிறையிலிடப்படுவதற்கான அரிய வாய்ப்பினையும் பல்தாத்ஜி புறக்கணித்து விட்டார் என்று அவர்மீது வரலாற்றறிஞர்கள் பலர் குற்றஞ் சாட்டியுள்ளனர். அவர் பேரரசி காத்தரீனிடத்திருந்து கைக் கூலி வாங்கிவிட்டார் என்றும் கருதப்பட்டது. ஆனால், மாபெரும் செல்வத்தைச் சம்பாதிக்கக்கூடிய பதவியில் இருந்த ஒரு பிரதம அமைச்சர் இவ்வளவு சிறிய தொகைக்காகத் தம் நாட்டையே விற்றுவிட்டிருப்பாரா என்பது ஐயத்திற்குரியதாகும். பேரரசி வழங்கிய பரிசுகள் ஒரு வேளை பிரதம அமைச்சரின் பணியாட்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கக்கூடும். போரை மேலும் நீடிப்பதனால் இன்னும் சிறப்பான சலுகையைப் பெற்றுவிட முடியாது என்பதை பல்தாத்ஜி உணர்ந்திருக்கவேண்டும். ரஷியப் படையைக் கைப்பற்றியிருந்தாலும் அல்லது அதை அழித்துவிட்டிருந்தாலும் ரஷிய நாட்டினர் அனைவருமே பழிவாங்குவதற்காக ஆவேசத்துடன் எழுந்திருந்திருப்பர். பல்தாத்ஜியைக் கொலை செய்யாது, வெறுமனே பதவியிலிருந்து அவரை நீக்கி, வேறிரு வரைக் கொன்று விட்டதிலிருந்து சுல்தானே அவ் வொப்பந்தத்திற்கு முற்கூட்டியே தம்முடைய இணக்கத்தைத் தெரிவித்திருக்கவேண்டும் என்றும் யூகிக்க இடம் உள்ளது. அஸாஃப் பகுதியை வென்று தம் பேரரசின் எல்லைகளை ரஷிய நாட்டின் மத்திய பகுதி வரை விஸ்தரிக்க சுல்தான் அகமது அவாக் கொண்டிருந்ததாகத் தென்படவில்லை. அந்தச் சூழ்நிலையில் புரூத் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைவிடச் சிறப்பான நிபந்தனைகளை அவர் பெற்றிருக்க முடியாது.

மானபங்கம் ஏற்படுத்துவதாயிருந்த ஓர் ஒப்பந்தத்தை ரஷிய அரசனின்மீது திணித்திருக்கக் கூடாது என்று குற்றம் சாட்டுபவரும் ஒரு சிலர் உள்ளனர். அவ்விதத் திணிப்பினால் போர் கட்டாயமாக மீண்டும் மூண்டுவிட்டிருக்கக்கூடும். ஆனால் ரஷிய அரசரும் இதுபோன்ற கருத்தைக் கொண்டிருக்கவில்லை. ஒரு பேரிடியிலிருந்து தமது சேனை தப்பித்துக் கொண்டதற்குப் பிறகு அவர் மீண்டும் போரிட விரும்பவில்லை. அவ் வொப்பந்தத்தின் நிபந்தனைகள் இகழ்ச்சிக்குரியனவாக இருப்பினும், இரண்டு ஆண்டுகட்குப் பிறகு அவற்றை மீண்டும் புனர்ப் பரி

சீலனை செய்ய அவர் தயாராக இருந்தார். எஞ்சியிருந்த தமது பத்து ஆண்டு ஆட்சிக் காலத்தில் அவர் மீண்டும் துருக்கியர் களுடன் போர் நிகழ்த்தவில்லை. அவர்கள்மீது மனக்கசப்போ அருவருப்போ அவர் கொண்டிருக்கவில்லை. ஒரு சில ஆண்டு கட்குப் பிறகு, பாரசீகத்தைப் பங்கிட்டுக் கொள்வதற்காக அவர் சுல்தானுடன் ஓர் ஒப்பந்தமும் செய்துகொண்டார்.

உண்மையில் புரூத் உடன்படிக்கையைச் செய்துகொண்ட தில் பல்தாத்ஜி தவறு எதுவும் புரிந்துவிடவில்லை. அவர் சாதித்தது அவ்வளவு சிறிய சாதனையன்று. படையை மிகத் திறமையுடன் செயற்படுத்தி ஓர் ஆளுக்கும் உயிர்ச் சேதம் ஏற் படாத வகையில் போரை நிகழ்த்தி, ரஷிய அரசரின்மீது ஓர் ஒப்பந்தத்தைத் திணித்து, அதன்படி பேரரசுடன் அஸாஃபை யும் அதனைச் சுற்றியிருந்த மாவட்டத்தையும் மீட்பித்து இணைத் துக்கொள்வது என்பது அவ்வளவு எளிதான காரியமன்று.

1715-ல் சுல்தான் வெனிஸ் குடியரசுடன் போருக்குச் சென் ரூர். பதினறு ஆண்டுகட்கு முன்பு கார்லோவிட்ஸ் ஒப்பந்தத் தின்படி இழந்துவிட்டிருந்த மொரியாவை மீண்டும் கைப்பற்று வதே அதன் நோக்கமாகும். அந்த மாபெரும் வெற்றியைப் பெற்ற மொரொஸினி என்ற வெனிஸியப் படைத்தலைவர் இப் பொழுது இறந்துவிட்டிருந்தார். ஆஸ்ட்ரியா தலையிடாது என்று எதிர்பார்க்கப்பட்டது. சுல்தானுக்கெதிராகக் கிளர்ச்சி செய்த மான்ட்டிநீக்ரோ குடிமக்களுக்கு வெனிஸ் ஆதரவு கொடுத்ததே போருக்கான காரணமாகக் கூறப்பட்டது. ரஷியாவுடன் போர் புரிவதற்காகத் திரட்டப்பட்டிருந்த படை இதர பணிகளுக்காகப் பயன்படுத்தப் பட்டது. பிரதம அமைச்சரும் சுல்தானின் மாப் பிள்ளையுமான தாமாத் (Damad) ஒரு நூறுயிரம் வீரர்கள் அடங் கிய சேனைக்குத் தலைமை தாங்கினர். ஒரு நூறு கப்பல்களைக் கொண்ட கப்பற்படை ஒன்றும் நிலப்படையுடன் ஒத்துழைத் தது. தெஸ்ஸாலீயிலுள்ள லாரிஸ்ஸா வரையிலும் சுல்தானும் சேனையுடன் சென்றார். ஆனால், அதற்கு மேற்பட்டு அவர் செல்லவில்லை. போரை நிகழ்த்தும் பொறுப்பை அவர் தம் மாப் பிள்ளை தாமாதிடமே விட்டுவிட்டார். அதை நிகழ்த்துவதில் தாமாத் பெரும் திறமையை வெளிப்படுத்தினர். கோரிந்த் முற்றுகையுடன் போர் தொடங்கிற்று. மூன்று வாரப் பலத்த எதிர்ப்பிற்குப் பிறகு கோரிந்த் சரணடைந்தது—(ஜூலை, 7, 1715). நிபந்தனைகள் சற்றுத் தளர்ச்சியானவையாகவே இருந்தன. ஆனால், கோட்டையைக் காலி செய்துகொண் டிருந்த சமயத்தில் வெடிமருந்துப் பெட்டி திடீரென்று வெடித்த

தன் காரணமாக, அறுநூறு அல்லது எழுநூறு துருக்கியர்கள் மடிந்தனர். ஒப்பந்தத்தை மீறி நடப்பதற்கு இது நல்ல வாய்ப்பினை அளித்தது. வெனிஸியர்களும் கிரேக்கர்களும், அவர்கள் படைவீரர்களாக இருப்பினும் சாதாரணக் குடிமக்களாக இருப்பினும், நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டனர் கோரிந்த் கைப்பற்றப்பட்டதற்குப் பிறகு உத்மானியப் படை இரண்டாகப் பிரிவுற்று மொரியாவின்மீது படையெடுத்தது. அங்கிருந்த மொடான் (Modon) கொரான் (Coron) நவாரினே (Navarino) போன்ற வெனிஸிய கோட்டைகளை அதுமிக எளிதாகக் கைப்பற்றிக்கொண்டது. கிரேக்கர் தங்களை ஆண்டு கொண்டிருந்த வெனிஸிய எஜமானர்களுக்கு எவ்வித ஆதரவும் காட்டவில்லை. வெனிஸியர்களுடைய கொடுமையான ஆட்சியிலிருந்து தங்களை விடுவிப்பவர்களாகவே கிரேக்கர்கள் துருக்கியர்களைக் கருதினர்.

மொரியாவைக் கைப்பற்றுவதில் நூற்றிருபது நாட்கள் கழிந்தன. வெளித்திடல்களில் வெனிஸியருக்கும் துருக்கியர்களுக்குமிடையே போர்கள் நிகழவில்லை. படையெடுப்பின் போது முற்றுகைகள் பல மேற்கொள்ளப்பட்டன. கார்ஃபூ (Corfu) என்ற தீவையும் இதர அயோனியத் தீவுகளையும் கைப்பற்றிக்கொண்டு வெனிஸியர்களை விரட்டியடிப்பதே உத்மானியர்களின் நோக்கமாயிருந்தது. ஆனால், இத் தறுவாயில் ஆஸ்ட்ரியப் பேரரசரான ஆரும் சார்லஸ் குறுக்கிட்டு, வெனிஸ் குடியரசுடன் தற்காப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டார். ஆனலும், மொரியாவைக் காப்பாற்றுவதற்குக் காலம் கடந்து விட்டிருந்தது. ஆஸ்ட்ரியாவின் இச் செய்கையைப் போருக்கான ஒரு காரணமாகக் கொள்ளலாமா என்பதைப்பற்றி சுல்தானுடைய அவையினரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. அது கார்லோவிட்ஸ் ஒப்பந்தத்தை மீறி நடப்பதாகும் என்று தாமாத் வாதாடினர். அவர் நேர்மையாக நடந்துகொள்பவராக இருந்தார் எனினும், அவருக்குப் பலத்த எதிர்ப்பு இருந்தது. பெருத்த விவாதத்திற்குப் பிறகு ஆஸ்ட்ரியாமீது போரெழுந்து செல்ல வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. 1,50,000 படைவீரர்களைக் கொண்ட சேனை ஒன்று 1716-ல் தாமாதின் தலைமையில் ஆஸ்ட்ரியாவைத் தாக்க அனுப்பி வைக்கப்பட்டது. செப்டம்பர் மாதத்தில் அது பெல்கிரேடை அடைந்தது. கெமௌவாருக்குச் செல்லவேண்டுமா அல்லது பீட்டர்வர்டீனுக்குச் (Peterwardein) செல்லவேண்டுமா என்பது குறித்துப் போர்க்குழுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அங்கும் கருத்து வேறுபாடு தோன்றிற்று. இறுதியில் பீட்டர்வர்டீனைத் தாக்க வேண்டும் என்று தாமாத் தீர்ப்புக் கூறினர்.

துருக்கியர்கள் ஒரு படகுப் பாலத்தை அமைத்து, சாவே நதியைக் (River Saave) கடந்து, டான்யூப் நதிக்கரை யோர மாகப் பீட்டர்வர்டீன நோக்கி முன்னேறினர். அவர் களுடைய தலைப்புப்படை கார்லோவிட்ஸ் என்ற கிராமத்தில் ஆஸ்ட்ரியர்களுடன் மோதிற்று. அதே இடத்தில் பதினறு ஆண்டுகட்கு முன்பு ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. கார்லோவிட்ஸிலிருந்து பீட்டர்வர்டீன் 10 கி.மீ. தொலைவில் தான் இருந்தது. எண்ணிக்கையில் துருக்கியர்களுக்கு மிக வும் தாழ்ந்திருந்த ஆஸ்ட்ரியப் படை அந்த மாபெரும் கோட் டைக்கு முன்பு நிறுத்திவைக்கப்பட்டது. அதற்கு மீண்டும் இளவரசர் எழேனியே தலைமை தாங்கினர். இடைவேளைகளில் ஆஸ்ட்ரியர்களுக்காக மிகக் கடுமையான போர்களை நிகழ்த்திப் பெரும் புகழ்பெற்று விளங்கிய இவ்வீரருக்கு மார்ல்பரோ கோமக னைத் தவிர (Duke of Marlborough) மற்ற எவரும் நிகராக இருக்கவில்லை. 1716, ஆகஸ்ட் மாதம், பத்தாம் நாளன்று இரு படைகளும் மோதிக்கொண்டன. தொடக்கத்தில் போர் துருக் கியர்களுக்குச் சாதகமாக இருந்தது. ஜனிஸ்ஸரீப் படையினர் மிகத் தீரத்துடன் ஆஸ்ட்ரியப் படைவரிசைகளைப் பிளக்கச் செய் தனர். அத் தருணத்தில் இளவரசர் எழேனி தம் குதிரைப் படையை முன்னுக்குக் கொண்டுவந்தார். எதிர்க்க முடியாத வேகத்துடன் அப் படையினர் ஜனிஸ்ஸரீகளைத் தாக்கி ஆஸ்ட் ரியர்களின் நிலையைச் சீர்ப்படுத்திக்கொண்டனர். போரின் திருப்பம் தமக்குப் பாதகமாக இருக்கின்றது என்பதை உணர்ந்த தாமாத் பாஷா அதிகாரிகளைத் தம்முடன் சேர்த்துக்கொண்டு தம் படையினருக்கு ஊக்கம் ஊட்டுவதற்காகப் போர்க்களத் தின் நடுவில் வந்துவிட்டார். ஆனால், அவர் தாக்குண்டு கார்லோவிட்ஸுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கே அவர் உயிர்நீத்தார்.

தலைவரை இழந்த துருக்கியர்கள் மனமுடைந்தனர்; பீதி யால் பீடிக்கப்பட்டுத் தோல்வியை ஏற்றுக் கொண்டனர். வலது புறத்திலிருந்த அவர்களுடைய படை பெல்கிரேடுக்குப் பின் வாங்கியது. எஞ்சியிருந்த படையினர் அவர்களைப் பின் தொடர்ந்தனர். அவர்களுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. இருப்பினும், இரு தரப்பினருக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது என்று கூறுவதற்கில்லை. இளவரசர் எழேனி இவ் வெற்றியைத் தொடர்ந்து, ஹங்கேரியில் உத்மானியர்களின் கையில் சிக்கி யிருந்த தெமெஸ்வார் என்ற கோட்டையை முற்றுகையிட்டார். ஐந்துவார முற்றுகைக்குப் பிறகு, அந்தக் கோட்டையும் அடி பணிந்தது—(நவம்பர், 25, 1716). இத்துடன் 1716ஆம்

ஆண்டில் நடைபெற்ற படையெடுப்பு முடிவு அடைந்தது. வேறு திசைகளிலும் துருக்கியர்கள் வெற்றி காணவில்லை. கார்ஃபூ முற்றுகையையும் அவர்கள் கலைக்க நேரிட்டது. அவர்களுடைய கப்பற்படை அவ்வப்பொழுது வெனிஸ் கப்பற்படையுடன் மோதிக் கொண்டிருந்தது.

அடுத்த ஆண்டான 1717-ல் மற்றொரு பெரும்படை இஸ்தம்பூலிலிருந்து புறப்பட்டு, டான்யூபுக்குச் சென்றது. தாமாத் பாஷா இறந்ததற்குப் பிறகு, கலீல் (Khalil) என்பவர் பிரதம அமைச்சராகப் பதவி ஏற்றிருந்தார். அவரே இப்பொழுது அப் படைக்குத் தலைமை தாங்கினர். ஆஸ்ட்ரியர்களின் படைக்கு இன்னமும் தலைமை வகித்திருந்த இளவரசர் எழேனி ஒரு படையுடன் பெல்கிரேடுக்குச் சென்று போரைத் தொடங்கினர். முப்பதினாயிரம் உத்மானியப் போர் வீரர்களைக் கொண்டிருந்த அந்த நகரமும் அதன் கோட்டையும் முற்றுகை யிடப்பட்டன. மூன்று வார முற்றுகைக்குப் பிறகு உத்மானியர்களின் சேனை கண்ணுக்குத் தென்பட்டதும், எண்ணிக்கையில் அதிகமாக இருந்த அப் படையைக் கண்ட ஆஸ்ட்ரியப் படைத் தலைவரின் நிலை சற்று மோசமாகவே இருந்தது. முன்புறத்தில் பெல்கிரேடின் படையும், பின்புறத்தில் கலீலின் படையும் நின்றிருக்கையில் ஆஸ்ட்ரியப் படைத் தலைவர் நடுவில் சிக்கிக் கொண்டார்.

இந்த இக்கட்டான நிலையில் உத்மானியர்கள் ஆஸ்ட்ரியர்களைத் தாக்கி இருந்திருப்பார்களாயின், அவர்களுக்கு வெற்றி ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால், அவர்களுடைய படைத் தலைவர் தயங்கினர்; தாமதித்தார். இறுதியில், அவர் முற்றுகையிட்டவர்களையே முற்றுகையிட்டார்: எழேனியின் பின்னல் தம் படையை நிறுத்தி வைத்தார். இறுதியில் இரு சேனைகளின் பீரங்கிப் படைகளும் மோதிக் கொண்டன. இவ் வகையில் துருக்கியர்கள் சற்றுச் சிறப்புப் பெற்றே இருந்தனர். அவர்களிடத்தில் நூற்று நாற்பது பீரங்கிகள் இருந்தன. போதிய உணவு இல்லாமையினால் துருக்கியர்கள் துணிந்து போரிட்டிருப்பர். ஆனால், இதனை எதிர்பார்த்த இளவரசர் எழேனி தாமே உத்மானியர்களின் படை வரிசையைத் தாக்கினர். இந்தத் துணிகரச் செயல் மாபெரும் வெற்றியை ஆஸ்ட்ரியர்களுக்குத் தேடித் தந்தது. மிகக் குறைந்த படையினருடன் ஆஸ்ட்ரியர்கள் 1717 ஆகஸ்ட் 16ஆம் நாள் அன்று துருக்கிப் படை வரிசைகளைத் தகர்த்தெறிந்தனர். வேறு வழியின்றி, உத்மானியர்கள் விட்டுக் கொடுக்க நேரிட்டது. இருபதினாயிரம் துருக்கியர்கள் காயமுற்றனர், அல்லது மடிந்தனர்; ஆஸ்ட்ரியர்கள் புறத்தில் இரண்டா

யிரம் போர் வீரர்கள் மட்டுமே மடிந்தனர். இளவரசர் ஈழேனி தமது வாழ்க்கையில் பதின்மூன்றும் தடவையாக இப்பொழுது காயமுற்றார். குழப்பத்தில் துருக்கியர்கள் பின்வாங்கினர். அடுத்த நாள் பெல்கிரேடும் அதன் முப்பதினாயிரம் படை வீரர்களும் சரணடைந்தனர்.

பெல்கிரேட் போருக்கும் அக் கோட்டை கைப்பற்றப்படுவதற்கும் முன்பு ஆஸ்ட்ரியர்கள் முன்னேறி ஸெர்பியாவின் பெரும் பகுதியையும் கைப்பற்றிக் கொண்டனர். உத்மானிய எஜமானர்களுக்கு கெதிராகக் கிளர்ந்தெழுமாறு ஆஸ்ட்ரியர்கள் ஸெர்பிய குடிமக்களைத் தூண்டினர். ஆனாலும், அவர்களுடைய வேண்டுகோளுக்கு ஒருசிலரே இணங்கி ஆஸ்ட்ரியப் படையுடன் சேர்ந்து கொண்டனர். துருக்கியர்களுக்குப் பதிலாக ஆஸ்ட்ரியர்களைத் தங்கள் தலைவர்களாக ஏற்றுக் கொள்ள ஸெர்பியர்கள் விரும்பவில்லை. டான்யூப் நதிக்குத் தெற்குப் பகுதியிலுள்ள நிலத்தை ஆஸ்ட்ரியர்கள் தாற்காலிகமாகத்தான் கைப்பற்றி வைத்திருந்தனர். இருபத்திரண்டு ஆண்டுகட்குப் பிறகு உத்மானியர்கள் பெல்கிரேடை மீண்டும் கைப்பற்றிக் கொண்டு, ஸெர்பியாவிலிருந்த ஆஸ்ட்ரியர்களை விரட்டியடித்தனர்.

இதற்கிடையே இப் படையெடுப்பின் போதும், பெல்கிரேட் போரிலும் தமது தகுதியின்மையை வெளிப்படுத்தியதற்காகப் பிரதம அமைச்சர் கலீலை சுல்தான் பதவியிலிருந்து நீக்கிவிட்டார். சற்றுப் பிறகு சுல்தானின் மாப்பிள்ளையும் அவருடைய ஆப்த நண்பருமான தாமாத் இப்ராஹீம் (Damad Ibrahim) என்பவர் பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக் கொண்டார். அவர் 1730ஆம் ஆண்டில் பதவியிலிருந்து விலக்கப்படும் வரையில் பன்னிரண்டு ஆண்டு காலத்திற்கு அப் பதவியை வகித்திருந்தார். அதனை வகிப்பதற்குத் தகுதி பெற்றவராகவே அவர் விளங்கினர். ஹங்கேரியை மீட்பிப்பதற்காக மீண்டும் ஒரு போரைத் தொடங்கவேண்டுமென்று பலர் கோரினார்கள். ஆனால் 1717-18 பனிக்காலத்தில் இங்கிலாந்து, ஹாலந்து நாடுகளின் சார்பாக மீண்டும் மத்தியஸ்தம் செய்வதற்குத் தாம் தயாராக இருப்பதாக பிரிட்டிஷ் தூதர் அறிவித்தார். இதற்கு சுல்தானும் ஆஸ்ட்ரியர்களும் இணக்கம் தெரிவித்தனர். பேரரசர் தாம் ஏற்கெனவே சாதித்த சாதனைகளுடன் நின்றுவிட விரும்பினர்; ஏனெனில், மற்றொரு திசையில் போர் மூளவிருந்தது. ஆனால், உத்மானியர்களின் வழியில் சில முட்டுக்கட்டைகள் இருந்தன. இருப்பினும், சுல்தானும் பிரதம வளீரும் அமைதியின் சார்பாகத் தம் தீர்ப்பை வழங்கினர்.

கார்லோவிட்ஸ் மாநாட்டை இப்பொழுது முன்மாதிரியாகக் கொண்டனர். பஸ்ஸரோவிட்ச் (Passarowitch) என்ற இடத்தில் ஒரு மாநாடு கூடிற்று. இங்கிலாந்தும் ஹாலந்தும் மீண்டும் மத்தியஸ்தம் செய்யும் நாடுகளாகப் பணியாற்றின. நீண்ட விவாதத்திற்குப் பிறகு கருத்து ஒற்றுமை ஏற்பட்டது. பஸ்ஸரோவிட்ச் ஒப்பந்தம் என்னும் ஓர் ஒப்பந்தம் முடிவாயிற்று (1718, ஜூலை, 21). இவ் வொப்பந்தத்தின்படி, கார்லோவிட்ஸ் ஒப்பந்தத்தை யொட்டி, உத்மானியர்களின் கரத்திடைச் சிக்கியிருந்த ஹங்கேரியப் பகுதியும், வலாச்சியாவின் பெரும்பகுதி, ஸெர்பியாவின் பெரும் பகுதி, பாஸ்னியாவின் ஒரு பகுதி, மற்றும் பெல்கிரேட் ஸெமெண்டிரியா (Semendria) அரண்கள் ஆகியவையெல்லாமும் ஆஸ்ட்ரியப் பேரரசரிடம் ஒப்படைக்கப்பட்டன.

வெனிஸ் குடியரசின் சார்பாக ஆஸ்ட்ரியா போரைத் தொடங்கிற்று. ஆனால், அந்த வெனிஸ் குடியரசோ ஒப்பந்தத்தின்போது மிக மோசமான நிலையில் இருந்தது. அதைப் பொறுத்தவரையிலும் ஒப்பந்தம் மிகக் கடுமையாகத்தான் இருந்தது. தாமாதால் மீண்டும் வெல்லப்பட்டிருந்த மோரியாவை வெனிஸ் உத்மானியர்களுக்கே கொடுத்துவிட நேர்ந்தது; ஆனாலும், அதற்குப் பதிலாக அது டால்மேஷியாவைப் பெற்றுக் கொண்டது. வெனிஸின் தாக்குதலிலிருந்து ரகூஸா குடியரசைப் (Republic of Ragusa) பாதுகாப்பதற்காக சுல்தான் ஏட்ரியாட்டிக் கடலில் அடைவதற்கான வசதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதற்கு மாநாடு இணக்கம் தெரிவித்தது. கார்ஃபூ தீவை வெனிஸே தொடர்ந்து வைத்துக் கொள்ள முடிந்தது. தவிர, மற்றும் சில அயோனியத் தீவுகளையும், அல்பேனிய டால்மேஷிய கரைகளிலிருந்த ஒரு சில துறைமுகங்களையும் வெனிஸ் தனது வசமே வைத்துக் கொண்டுவிட்டது. அல்ஜீரியா, தூனிஸ், திரிபோலி, மற்றும் ரகூஸா ஆகிய பகுதிகளுக்குரிய கடற் கொள்ளைக்காரர்களின் அட்டூழியங்களை ஒடுக்குவதற்கும் ஹங்கேரிய கிளர்ச்சியாளர்களை ஆஸ்ட்ரியாவின் புது எல்லைக்கு அருகில் குடியேற்றுவதற்குத் தடை விதிப்பதற்கும் சுல்தான் இணங்கினர்.

பீட்டர்வர்டின், பெல்கிரேட் ஆகிய இடங்களில் உத்மானியர்கள் அடைந்த மாபெரும் தோல்விகளுக்குப் பின் ஏற்பட்ட பஸ்ஸரோவிட்ச் ஒப்பந்தம் கார்லோவிட்ஸ் ஒப்பந்தத்தைப் போன்றே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அது ஹங்கேரி முழுவதையும் உத்மானியர்களின் பிடியிலிருந்து விடுவித்தது. உண்மையில் அதை அவர்கள் நிரந்தரமாகவேதான்

கைப்பற்றி வைத்திருந்தனர். உத்மானியப் பேரரசில் அது நிரந்தரமாக இணைக்கப்பட்டிருக்கவில்லை. துருக்கியர்களை அப் பகுதியில் குடியேற்றுவதற்கான எவ்வகை முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அங்கிருந்த குடிமக்களின்மீது இஸ்லாமிய சமயத்தைத் திணிப்பதற்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட வில்லை. பல கோட்டைகளினின்றும் படைகள் விரட்டியடிக்கப் பட்டதற்குப் பிறகு உத்மானியர்களுக்கான சான்றடையாளங் கள் யாவும் மறைந்து போயின. அவர்கள் அங்கெல்லாம் ஒரு காலத்தில் ஆட்சிபுரிந்தனர் என்பதற்கான அடையாளங்கள் ஒன்றுமே காணப்படவில்லை. ஆஸ்ட்ரியர்களைப் பொறுத்த வரை அது ஒரு மாபெரும் சாதனையாகும். அதற்கு இளவரசர் எழேனிதாம் பெரும்பாலும் காரணமாக இருந்தார். ஆனாலும், ஹங்கேரிய மக்கள், அவர்கள் மாகியர்களாக (மஜூஎஸிகளாக) இருப்பினும் ஸ்லாவ்களாக இருப்பினும், கடந்த இரண்டாண்டுப் போரிலோ, அல்லது 1698-99-ல் நடைபெற்ற போரிலோ உத் மானியர்களுக் கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர் என்று கூறுவதற் கில்லை. ஆஸ்ட்ரியர்கள் துருக்கியர்களை அப் பகுதியிலிருந்து விரட்டியோட்டி விட்டனர். ஆனாலும், அவர்களுடைய வெறி பிடித்த ஆட்சி துருக்கியர்களுடைய ஆட்சிக்கு வேறுபட்டதாக இருக்கவில்லை. ஹங்கேரியில் வசித்த மாகியர்கள் பல ஆண்டு களுக்குப் பிறகுதான் ஹங்கேரியர்களின் பிடியிலிருந்து விடுதலை பெற்றனர்.

பஸ்ஸரோவிட்ச் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதில் முடிவடைந்த ஆஸ்ட்ரியப் போர் உத்மானியர் ஆட்சியினின்றும் ஹங்கேரியை விடுவித்ததுடன், மேலும் அதிகமான சாதனைகளை யும் புரிந்தது. நெடுநாட்களாகவே ஐரோப்பியர்களுக்குத் தொல்லை கொடுப்பதாக இருந்த உத்மானியர்களின் புகழுக்கும் அது ஒரு முற்றுப்புள்ளி யிட்டது. பீட்டர்வர்டீன் போரிலும் பெல்கிரேட் போரிலும் உத்மானியர்களைவிட எண்ணிக்கையில் குறைந்திருந்த ஆஸ்ட்ரியப் படையினர் துருக்கியர்களை முறி யடித்தனர். இதிலிருந்து புலனுவதென்னவென்றால், தகுதி வாய்ந்தவர்களின் தலைமையில் ஒழுங்குமுறை தவறாது அமைந் திருந்த ஆஸ்ட்ரியப் படைகளுக்குத் துருக்கிப்படைகள் நிக ரில்லை என்பதாகும். தொடர்ந்து ஏற்பட்ட தோல்விகளினால் துருக்கியர்கள் முற்றிலுமே தம் திறமையை இழந்தனர் போலும்! அக்காலந்தொட்டு அவர்கள் ஐரோப்பாவில் தம்மைப் பாதுகாத் துக்கொள்ளும் நிலையில்தான் இருந்தார்களே யன்றி, வலிந்து தாக்கும் நிலையில் இருக்கவில்லை. இனிமேலும் துருக்கியர்களின் படையெடுப்புகளுக்கு அஞ்சித் தாங்கள் ஒளிந்திருக்க வேண்டிய

தில்லி என்ற துணிச்சல் மனப்பான்மை ஐரோப்பியர்களுக் கிடையே ஏற்பட்டது. துருக்கி சுல்தானின் பிணி எப்பொழுதோ ஆரம்பித்து விட்டது. நாளுக்கு நாள் அவருடைய பிணி அதி கரித்துக்கொண்டே இருந்தது.

(ஆ) பெல்கிரேட் ஒப்பந்தம் (1718-39)

சுல்தான் அகமதுவின் எஞ்சியிருந்த ஆட்சிக் காலத்தில் ஐரோப்பாவில் இடையருத அமைதி நிலவி இருந்தது. பன்னி ரண்டு ஆண்டு காலத்திற்கு தாமாத் இப்ராஹீம் பிரதம அமைச்சராகப் பதவி வகித்து வந்தார். அக் காலத்தில் அவர் சுல்தானின் நன்னம்பிக்கையைப் பெற்றிருந்து, பேரரசின் உண்மையான ஆட்சியாளராக விளங்கினர். அவரும் அமைதி யையே நாடினர். பாரசீக எல்லையில்தான் அந்த அமைதி சற்றுக் குலைந்தது. அந்த இராச்சியம் குழப்பத்தில் மூழ்கிக் கிடந்தது. ஷா ஹுஸைன் என்ற தகுதியற்ற பாரசீக அரசரு டைய ஆட்சி மகமூத் என்ற ஆப்கானியத் துணிகர வீரர் ஒருவ ரால் கவிழ்க்கப்பட்டது. ஹுஸைனின் மகன் தகமாஸ்ப் (Tahmasp) என்பவர் ரஷிய அரசரின் உதவியையும், துருக்கி சுல்தானின் ஆதரவையும் நாடினர். காஸ்பியன் கடல், கருங் கடல் வட்டாரத்தில் ஒரு சில மாநிலங்களைத் தமக்கு அளித்தால் தாம் உதவி நல்க முன்வருவதாகப் பீட்டர் கூறினர்; அவற்றைக் கைப்பற்றுவதற்காக ஒரு படையையும் அவர் அனுப்பி வைத் தார். இது சுல்தானைப் பெரும் பீதிக்குட்படுத்திற்று. இதனால் ரஷியாவுடன் போர் மூளும்போலிருந்தது. ஆனலும், இறுதியில் போர் தவிர்த்துக் கொள்ளப்பட்டது. வட பாரசீகத்தின் வடக் குப் பகுதியை இரு வல்லரசுகளுக்கிடையே பங்கிட்டுக் கொள்வ தற்கான ஒப்பந்தம் ஒன்று 1725-ல் உருவாயிற்று. தம் பாக மாக சுல்தான் ஜார்ஜியா, இரிவான், தப்ரீஸ் மற்றும் பாகூ ஆகிய மாநிலங்களைப் பெற்றார். ரஷியாவுக்குக் கொடுத்து விடுவதாகத் தகமாஸ்ப் ஏற்கெனவே வாக்குறுதி அளித்திருந்த மாநிலங்களும் ஸ்கிர்வான் மாநிலமும் ரஷியாவுக் குரியவை யாயின. செயல் முறையில் ரஷியா தன் பகுதியை ஏற்கெனவே தன் வசப்படுத்தி வைத்துவிட்டிருந்தது. தமக்குரியனவாகக் கருதப்பட்ட பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக சுல்தான் ஒரு படையை அனுப்ப வேண்டியிருந்தது; அதற்கு எதிர்ப்பு ஏற் பட்டபோதிலும், இரிவான், தப்ரீஸ் ஆகிய நகரங்களை அது கைப்பற்றிக் கொண்டது. இதனால் தகமாஸ்ப்புக்கும் சுல்தா னுக்கும் இடையே மோதல் ஏற்படவிருந்தது. ஆனலும், இறுதி

யில் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. தகமாஸ்ப் விலக்கப்பட்டு, மகமூத் ஷாவாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். சுல்தான் மேலே குறிப்பிடப்பட்ட மாநிலங்களைத் தமது ஆட்சிக்குட்படுத்திக் கொள்வதை மகமூத் ஏற்றுக்கொண்டார். ஆனலும், ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாகத் தகமாஸ்ப்பின் சார்பாகச் செயற்பட்ட நாதிர் கான் (Nadir Khan) இந்த மாகாணங்களை மீட்டுப் பாரசீகத்துடன் இணைத்துக்கொண்டார்.

இருபத்தேழு ஆண்டு ஆட்சிக்குப் பிறகு அகமதுவுக்கு எதிராக ஜனிஸ்ஸரீப் படையினர் கலகம் செய்தனர். அதற்குத் தலைமை வகித்தவர் பத்ரோனு (Patrona) என்ற அல்பேனியப் படை வீரர் ஒருவராவார். கலகம் மற்றப் படையினரிடையேயும் பரவியது. குடிமக்களில் ஒருசிலரும் குற்றவாளிகளின் கூட்டங்களும் அதை ஆதரித்தன. இதனைப் பிரதம அமைச்சரின் பகைவர்கள் தூண்டி விட்டிருக்கவும்கூடும். ஆரம்பத்திலேயே அதை ஒடுக்குவதற்குச் சற்றுத் தயக்கம் காட்டப்பட்டது. அகமதுக்குப் பிறகு வந்த சுல்தானுடைய ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அக் கலகம் அவ்வளவு தீவிரமானதாக இருக்கவில்லை என்பதை வெளிப்படுத்தின. ஆரம்பத்திலேயே தக்க நடவடிக்கைகளை எடுத்து அதனை ஒடுக்கியிருக்கமுடியும் என்பதும் புலனுயிற்று. ஆனல் அது முதிர்ந்து பல்வேறு இடங்களிலும் பரவுவதற்கு ஆரம்பித்து விட்டது. சுல்தானின்பால் மக்கள் வெறுப்புக் கொண்டிருந்தமை, அவருடைய வீண் செலவுகள், ஆடம்பர வாழ்க்கை முதலியவற்றை எதிர்த்தே அக் கலகம் மூண்டது என்று ஒருசிலர் கருதுவர். ஆனலும், இதைச் சரியென்று ஏற்றுக் கொள்வதற்கில்லை. நெடுநாட்களாகப் பேரரசில் அமைதிக் கொள்கை மேற்கொள்ளப்பட்டு வந்ததனல், போரிடுவதற்கும் அதன் விளைவாகக் கொள்ளையடிப்பதற்கும் தங்களுக்கு வாய்ப்புக் கிட்டவில்லையே என்று படைவீரர்கள் ஏங்கியதே அக் கலகத்திற்கு உண்மைக் காரணமாக இருக்கக் கூடும். கலகக்காரர்களின் கை சற்று ஓங்கியபோது, அவர்கள் புதிய கொள்கைக்கான திட்டங்கள் எதையும் வற்புறுத்தாதது குறிப்பிடத்தக்கதாகும்.

சுல்தான் தமது அமைச்சர்களைத் தமக்கு அருகாமையில் வைத்துக் கொண்டிருக்கவேண்டும் என்றும், தமக்குக் கலகக்காரர்களால் ஏதும் விபத்து ஏற்படுமாயின், அவ்வமைச்சர்களின் உயிரைப் பலிகொடுத்துத் தம் உயிரை சுல்தான் காத்துக் கொள்ளவேண்டும் என்றும் அவருடைய சகோதரி சுல்தானு கத்தீத்ஜே (Sultana Khadidje) அவருக்கு அறிவுரை வழங்

கினுள். அவரும் அதன்படியே நடந்துகொண்டார் போலும்! கலகம் மூண்டபோது என்ன செய்வது என்றே தெரியாமல் அவர் அலறினர்; கலகக்காரர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். மூன்று முக்கிய அமைச்சர்களைத் தம்மிடம் சரணடைக்கும்படி அவர்கள் சுல்தானை வற்புறுத்தினர். அவ் வமைச்சர்களை உயிருடன் ஒப்படைக்க வேண்டுமா? அல்லது அவர்களைக் கொன்று அவர்களுடைய உடல்களை ஒப்படைக்க வேண்டுமா? என்று சுல்தான் வினவியபோது, அவர்களுடைய பூத உடல்தான் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் பதிலளித்தார்களாம். அதன்படியே சுல்தான் ஈவு இரக்க மின்றித் தமது மாப்பிள்ளையான பிரதம அமைச்சர், கபித்தான் பாஷா மற்றும் கையா ஆகியவர்களை மூச்சுத்திணற அடித்துக் கொன்று, அவர்களுடைய பூத உடல்களைக் கலகக்காரரிடம் ஒப் படைத்தார். இதுவும் ஜனிஸ்ஸரீகளைத் தணிக்கவில்லை. சுல் தான் பதவியிலிருந்து விலகவேண்டும் என்றும் அவர்கள் கோரி னர்கள். தம்மையும் தம் குழந்தைகளையும் உயிருடன் விட்டு விட்டால், தாம் அவ்விதமே பதவியிலிருந்து விலகிவிடுவதாக சுல்தான் வாக்குறுதி அளித்தார். கலகக்காரர்கள் இதற்கு இணங்கினர். எனவே, அகமது தம் மைத்துனரான மகமூதை அழைத்து அவரை சுல்தானுகப் பிரகடனம் செய்தார்.

இரண்டாம் முஸ்தஃபாவின் மகனான மகமூத் தமது முப் பத்து நான்காம் வயதில் சுல்தானுகப் பதவி ஏற்றார். அவர் தம் சிறந்த நாட்களைச் சிறையில் கழித்த காரணத்தால் சுல்தானுகப் பதவி வகிப்பதற்கான தகுதியையே இழந்துவிட்டிருந்தார். இவருக்கு இலக்கியத்தில் ஈடுபாடு இருந்தது; பொது நூலகங் களையும் கல்விக்கூடங்களையும் அதிகமாகவே இவர் ஆதரித்து வந்தார். ஆனால், பேரரசின் விவகாரங்களைக் கவனிப்பதற்கு இவர் சிறிதளவும் தகுதி பெற்றிருக்கவில்லை. இவர் தமது அந்தப் புரத்துத் தலைமை அலியான பஷீர் என்பவனுடைய செல்வாக் குக்கு உட்பட்டிருந்தார். பஷீர் ஓர் அபிசீனிய அடிமை; சுல் தான் இவனை மிகக் குறைந்த தொகைக்கு வாங்கினர்; இவனைப் பற்றிய விவரங்கள் தெரியவில்லையாயினும், முப்பதாண்டு காலம் வரை இவன் மறைந்துநின்று அதிகாரத்தைப் பயன்படுத்தி வந் தான் என்பது புலனுகின்றது. வயது முதிர்ந்து இவன் இறந்த போது ஏராளமான செல்வத்தைப் பின்னே விட்டுச் சென்றான். இவனுடைய ஆலோசனையின் மீதேதான் பிரதம அமைச்சர் கள் பலர் வேலையில் நியமிக்கப்பட்டனர்; வேலையிலிருந்து நீக்கவும்பட்டனர். மகமூத் ஆட்சி புரிந்த இருபத்துநான்கு ஆண்டுகாலத்தில் பதினறு பிரதம அமைச்சர்கள் அப் பதவியை

வகித்தனர். இஃதெல்லாம் பஷீரின் செல்வாக்கின் விளைவாகத் தான் ஏற்பட்டதாகும். எது எவ்வாருக இருப்பினும், மகமூதினுடைய ஆட்சி செம்மையாக நடைபெற்றதற்கும், உடைபடாத கொள்கை பின்பற்றப்பட்டதற்கும் பஷீர்தான் காரணம் என்று கூறுவது மிகையாகாது.

புதிய சுல்தானுடைய ஆட்சிக்காலத்தின் முதல் சில வாரங்களில் அரசின் அதிகாரம் உண்மையில் ஜனிஸ்ஸரீகளின் கையில்தான் சிக்கி இருந்தது. அவர்களுக்குப் பத்ரோனு, மஸ்ஸூலி ஆகியவர்கள் தலைவர்களாக விளங்கினர். இவ்விருவரும் தங்கள் ஆணவத்தினால் பலருடைய வெறுப்புக்கு ஆளாயினர். மற்ற ஜனிஸ்ஸரீப் படையினரின் ஆதரவைத் தந்திரமாகப் பெற்றுக்கொண்ட சுல்தானும் அவருடைய நண்பர்களும் பத்ரோனுவையும், மஸ்ஸூலியையும், அவர்களுடைய ஆதரவாளர்கள் இருபத்தொரு பேரையும் அரண்மனைக்கு அழைத்தனர். அங்கு அவர்கள் சுல்தானின் முன்னிலையிலேயே கொல்லப்பட்டனர். மூன்று நாட்களுக்குள்ளாக ஏழாயிரம் கலகக்கார ஜனிஸ்ஸரீகள் தூக்கிலிடப்பட்டனர்.

இவ்விதமாகத் தலைநகரில் அமைதி ஏற்பட்டதற்குப் பிறகு, பாரசீகத்தின்மீது கவனம் திருப்பப்பட்டது. ரஷியாவுடன் ஏற்பட்ட பங்கீடு ஒப்பந்தத்தின்படி, அவ் விராச்சியத்தின் பெரும் பகுதி சுல்தானிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதையும் ஆனால், அப் பகுதியானது சுல்தானிடம் இன்னும் வந்து சேரவில்லை என்பதையும் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். இதற்கிடையில் கொள்ளைக் கூட்டத் தலைவரான நாதிர் (Nadir)—பின்னாளில் இந்தியாவின்மீது படையெடுத்தவர் என்று புகழ் பெற்றவர்—தகமாஸ்ப்பின் கீழ்ப் பதவியேற்றுப் பாரசீகத்திலிருந்து ஆப்கானியர்களை விரட்டியடித்துத் தகமாஸ்ப்பை ஷாவாக நியமித்திருந்தார். காலப் போக்கில் இவர் தகமாஸ்ப்பைப் பதவியிலிருந்து நீக்கித் தம்மையே பாரசீகத்து 'ஷா' என்று அறிவித்துக் கொண்டார். 1733-35-ல் இவர் துருக்கியர்களின்மீது போர் தொடுத்தார். பல்வேறு களங்களிலும் அவர்களை முறியடித்து, அமைதியை நாடும்படி இவர் வற்புறுத்தினார். ரஷியாவுடன் எத் தருணத்திலும் போர் மூள இருந்ததனால், சுல்தானும் ஒப்பந்தம் செய்துகொள்ள ஆயத்தமாக இருந்தார். ஆகவே 1735-ல் நாதிர்ஷாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன்படி, பங்கீடு ஒப்பந்தத்திற்கு (1725) ஏற்ப, சுல்தானுக்குச் சேர வேண்டிய பாரசீகப் பகுதிகள் பாரசீகத்திற்கே அளிக்கப்பட்டன. துருக்கியுடன் போர் ஏற்படலாம் என்று எதிர்

பார்த்த ரஷியாவும் நாதிருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, முன்பு துருக்கியுடன் செய்துகொண்ட பங்கீடு ஒப்பந்தத்தின்படி தனக்குக் கிடைத்த பாரசீக மாநிலங்களை நாதிருக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டது.

1727-ல் மாண்புமிகு பீட்டர் உயிர் நீத்தார். 1730-ல் பேரரசி ஆன் (Empress Anne) என்னுங் கூர்அறிவும் பேரவாவும் படைத்த பெண் ஒருத்தி ரஷியாவின் சிம்மாசனத்திற்கு வந்தாள். ரஷிய நாடு அதுவரையிலும் பெற்றிராத மாபெரும் படைத்தலைவரான மார்ஷல் மன்னிச் (Marshal Munnich) என்பவர் அவளைத் துருக்கிமீது போரெழுந்து செல்லுமாறு தூண்டினர். அவர் ஐரோப்பாவிலிருந்து துருக்கியர்களை விரட்டுவதாக உறுதியளித்தார். ஆனால், துருக்கித் தலைநகரிலிருந்த பஷீர் அமைதிக் கொள்கையையே நாடினர். எழுபது வயது முதிர்ந்தவரான அவர் தமது கடைசி நாட்களை அமைதியிலேயே கழிக்க விரும்பினர். சுல்தானைப் போரில் இழுப்பதற்கான எதிரியின் ஒவ்வொரு முயற்சியையும் அவர் எதிர்த்துவந்தார். ஃபிரெஞ்சு அரசாங்க உத்தரவின்பேரில் அதன் தூதர் துருக்கியையும் ஆஸ்ட்ரியாவையும் மோதவிட மிகவும் ஆவலாக இருந்தார். வலுப்பமான கடற்படைச் சக்திவாய்ந்த கிரேட் பிரிட்டன் ஹாலந்து ஆகிய இரு வல்லரசுகளும் ஃபிரான்ஸுக்கு எதிராக வேலை செய்து வந்தன. எவ்விதமோ அமைதி நிலவி வந்தது. ஆனாலும், துருக்கியுடன் பெயரளவிற்காவது அமைதியாக இருந்த ரஷிய நாடு 1735-ல் அஸாஃபுக்குச் சுற்றுப்புறத்தில் இருந்த இரு கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டு துருக்கிப் பேரரசின் எல்லையில் மிக முக்கிய அரணாக இருந்த அஸாஃபை அச்சுறுத்தியபோது சுல்தான் ரஷியாவின்மீது போர் தொடுத்தார். மார்ஷல் மன்னிச்சின் தலைமையிலிருந்த ஐம்பத்து நாலாயிரம் படைவீரர்கள் கிரீமியாவைத் தாக்கினர்கள். பெரெகோப் (Pere Kop) என்ற நிலச்சந்தியில் இருந்த அதே பெயரைக் கொண்டிருந்த கோட்டையைச் சிதறடித்துக்கொண்டு அவர்கள் உட்புகுந்தனர்; பெரெகோப் நகரைக் கைப்பற்றிக்கொண்டு பிறகு கிரீமியாவையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டனர். கிரீமியா மிகக் கடுமையாகச் சூறையாடப்பட்டது. பல்லாயிரக் கணக்கான குடிமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இருப்பினும், ரஷியப்படை பிணியாலும் களைப்பினாலும் பாதிக்கப்பட்டுப் பனிக் காலத்திற்கு முன்பே கிரீமியாவை விட்டுப் பின்வாங்கிக்கொண்டது. லியோன்டியூ (Leondiew) என்ற படைத்தலைவனின் கீழிருந்த மற்றொரு ரஷியப் படை கில்பர்ன்க் (Kilburn) கைப்பற்றிக்கொண்டது. லாஸ்ஸி (Lascy) என்ற

படைத்தலைவரின் கீழிருந்த மற்றொரு படை அஸாஃப் நகரைத் தாக்கிக் கைப்பற்றியது.

இதற்கிடையே ரஷிய தூதரக நிபுணர்கள், பேரரசி ஆன்னைப் போலவே ஆஸ்ட்ரியப் பேரரசரான ஆரும் சார்லஸும் துருக்கிய மாநிலங்களைக் கைப்பற்ற மிகவும் ஆவலாய் இருக்கின்றார் என்பதை உணர்ந்தனர். அதற்காக ஒப்பந்தம் செய்து கொள்வதற்கும் அவர் தயாராக இருக்கின்றார் என்பதையும் அவர்கள் அறிந்தனர். இந் நோக்கத்துடன் இவ்விரண்டு ஆட்சியாளர்களும் அந்தரங்க ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர். ஆனால், முழு ஆயத்தமும் இல்லாமல் போரைத் தொடங்குவது உகந்ததன்று என்பதை அறிந்த ஆஸ்ட்ரியர்கள் சுல்தானுடன் அமைதியை நாடுவதாகப் பாசாங்கு செய்து கொண்டிருந்தனர். இதற்காக 1737ஆம் ஆண்டின் துவக்கத்தில் நிமிராஃப் (Nimirof) என்ற இடத்தில் மாநாடு ஒன்று கூட்டப் பட்டது. ஆனால், அவ்விரு தரப்பினருக்குமிடையே நடைபெற்று வந்த அமைதிக்கான பேச்சுவார்த்தைகள் வெறும் வேஷமே என்பதும், உண்மையில் அவை அமைதியை நிலை நிறுத்திக் கொள்ள விரும்பவில்லை என்பதும் தெரிய வந்தன. ஆனாலும், சுல்தான் அமைதியை நிலைநாட்ட மிகவும் ஆவலாய் இருந்தார்; பெருமளவும் விட்டுக்கொடுக்கவும் அவர் தயாராக இருந்தார். எனினும், ரஷியர்களின் தரப்பில் வற்புறுத்தப்பட்ட நிபந்தனைகள் வரம்பு மீறியனவாக இருந்தமையால் சுல்தானாலும் அவருடைய அமைச்சராலும் அவற்றை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. கிரீமியாவை ஒப்படைத்தல், வலாச்சியா மற்றும் மால்தேவியா விடுதலை பெறுதல், கருங்கடலைத் திறந்துவிடுதல், பாஸ்பரஸ், டார்டனல்ஸ் வழியாக ரஷிய கப்பற் படை கருங்கடலுக்குச் செல்வதற்கான உரிமையை அளித்தல், ஒரு கோடியே நான்கு லட்சம் ரூபிள் பணத்தைக் கொடுத்தல் ஆகிய நிபந்தனைகளை ரஷியர்கள் வற்புறுத்தினர். பாஸ்னியா, ஸெர்பியா ஆகியவற்றைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஆஸ்ட்ரியா கோரியது. முழுத் தோல்விக்குப் பிறகுதான் சுல்தான் இவை போன்ற நிபந்தனைகளுக்கு இணங்க முடியும். சினங்கொண்ட சுல்தான் அவற்றை ஏற்க மறுத்து விட்டார். சுல்தானுடைய விருப்பத்திற்கு மாறுகவே மாநாடு கலைந்துவிட்டது. தம் பேரரசைக் காப்பதற்காக சுல்தான் போரைத் தொடங்க வேண்டி வந்தது.

எழுபதினாயிரம் வீரர்கள் அடங்கிய படைக்குத் தலைமை தாங்கிய மன்னிச் 1737-ல் போரைத் தொடங்கிக் கருங்கடலின் வடக்

குக்கரை யோரத்தில் உத்மானியர்களின் மிக முக்கிய அரணாக இருந்த ஓக்ஸகாஃப்பைத் (Oczakoff) தாக்குகையில் லாஸ்ஸி என்ற படைத் தலைவர் நாற்பதினாயிரம் படைவீரர்களுடன் கிரீமியாவின்மீது படையெடுத்தார். ஓக்ஸகாஃப்பைத் துருக்கியர்கள் மிகத் தீவிரமாகப் பாதுகாத்தனர். முற்றுகை தொடங்கி ஒரு சில நாட்களுக்குப் பிறகு தலையாய வெடிமருந்து சாலை வெடித்து, பெரும் உயிர்ச் சேதம் ஏற்பட்டது. பீதியுற்ற துருக்கிப் படைத் தலைவர் சரணடைந்தார். நிபந்தனைகள் சற்றுத் தாராளமானவையாகவே இருந்த போதிலும், படையின் பெரும் பகுதி படுகொலைக்குப் பலியாயிற்று. மூவாயிரம் போர் வீரர்கள் மட்டுமே எஞ்சி நின்றனர். நோய்வாய்ப்பட்டு இறந்த ரஷியப் படைவீரர்களின் எண்ணிக்கையும் மிக அதிகமாகவே இருந்தது. மன்னிச் மேலும் தொடர்ந்து எதுவும் செய்வதற்கில்லை. அதற்கிடையே லாஸ்ஸி கிரீமியாவைத் தாக்கி எதுவும் சாதிக்காமலேயே பின்வாங்கிக் கொண்டார்.

ஆஸ்ட்ரியர்கள் இரு படைகளுடன் பாஸ்னியா மற்றும் ஸெர்பியா ஆகியவற்றைத் தாக்கினர். செகண்டார்ஃப் (Seckondorf) என்ற படைத் தலைவரின் தலைமையிலிருந்த முக்கியப் படை நிஷ்ஷைத் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டு பிறகு விட்டினைத் தாக்கிற்று. ஆனால், இப் படையெடுப்புகளினால் படைக்குப் பெரும் கஷ்டப்பு ஏற்பட்டது. படையின் பெரும்பகுதி டான்யூப் நதியின் சேற்று நிலத்தில் சிக்கிக் கொடும் பிணியால் பாதிக்கப்பட்டு மடிந்தது.

1738ஆம் ஆண்டில் நிகழ்ந்த படையெடுப்புச் சற்றுத் தெளிவான முடிவைப் பெற்றதாக இருந்தது. புத்துயிர் பெற்ற ஆற்றலுடன் துருக்கியர்கள் படையெடுத்துச் சென்று, பிரதம அமைச்சர் எகன் முகம்மது (Yegun Muhammed) என்பவரின் தலைமையில் ஹங்கேரிக்குள் முன்னேறி செமண்டிரியாவையும் ஓர்சோவாவையும் கைப்பற்றிக்கொண்டனர். ஆஸ்ட்ரியர்கள் பெல்கிரேடுக்குப் பின்வாங்கிக் கொண்டனர். மூன்றும் தடவையாக லாஸ்ஸி கிரீமியாவின் மீது படையெடுத்தார். ஆனால், அப் பகுதி முந்தைய இரண்டு படையெடுப்புக்களால் மிகக் கடுமையாகச் சூறையாடப்பட்டு விட்டிருந்ததனால், தம் படையினர்க்கு அங்கு உணவு தேடித்தர வழியில்லாது அவர் விரைவில் பின்வாங்க நேரிட்டது. பனிக் காலத்தில் அமைதி நிலவ சுல்தான் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார். பல வகைகளிலும் விட்டுக் கொடுப்பதற்கும் அவர் தயாராக இருந்தார். ஆனால், மன்னிச் அமைதிக்கான எல்லாத் திட்டங்களையுமே மிகவும் தீவிரமாக

எதிர்த்தார். துருக்கியின்மீது படையெடுத்துச் சென்று இஸ்தம்பூலைக் கைப்பற்ற அவர் துடித்துக்கொண்டிருந்தார். அவருடைய ஏற்பாடுகளின் பேரில் உத்மானியப் பேரரசிலிருந்த ஐரோப்பிய மாநிலங்களின் கிறித்தவ மக்களை, குறிப்பாகக் குடியானவர்களைக் கிளர்ந்தெழும்படி தூண்டத் தூதர்களுங்கூட அனுப்பப்பட்டனர்.

1739-ல் படையெடுப்புத் துவங்கியதும், அப்பொழுது போலந்துக்குரியதாக இருந்த பொடோலியாவின் வழியாக மன்னிச் தம் படையைத் திரட்டிக்கொண்டு சென்றார். இவ்விதமாக அவர் அதன் நடுநிலைமையைக் குலைத்து விட்டார். படையைத் திரட்டிக் கொண்டு செல்லும்போது வழியிலெல்லாம் அவர் சூறையாடினர். அவர் மால்தேவியாவின் எல்லையைக் கடந்து சென்று கோக்ஸிம் (Khoczim) என்ற இடத்தில் துருக்கிப் படை ஒன்றை முறியடித்தார்; பிறகு அம் மாநிலத்தின் தலைநகரான ஜஸ்ஸிக்குச் (Jassy) சென்று அதைக் கைப்பற்றிக் கொண்டார்.

இதற்கிடையே ஆஸ்ட்ரியர்கள் தங்களுடைய இரண்டு படைத் தலைவர்களான வால்லிஸ் (Wallis) மற்றும் நீப்பெர்க் (Niepperg) ஆகியவர்களின் தலைமையில் ஸெர்பியா, பாஸ்னியா ஆகியவற்றைத் தாக்கினர். ஐம்பதினாயிரம் படை வீரர்களைக் கொண்ட ஆஸ்ட்ரிய படை, பீட்டர்வர்டீனிலிருந்து புறப்பட்டு அதை எதிர்நோக்கி வந்து கொண்டிருந்த துருக்கிப் படையின் முழுப் பலத்தை அறிந்து கொள்ளாது, தென்புறத்திற்குச் சென்று கொண்டிருந்தது. சுல்தான் இரண்டு லட்சம் படையினரைத் திரட்டிப் பிரதம அமைச்சர் அல்ஹாஜீ முகம்மது (Elhadji Mohammad) என்பவரின் தலைமையில் அமைத்திருந்தார். குரோட்ஸ்கா (Krotzka) என்ற இடத்தில் இரு சேனைகளும் சந்தித்தன. எதிர்பார்த்தபடியே ஆஸ்ட்ரியர்கள் முறியடிக்கப்பட்டனர். அவர்கள் மீண்டும் பெல்கிரேடுக்குப் பின்வாங்கிக் கொண்டனர். அவர்களை உத்மானியர்கள் பின்தொடர்ந்து பெல்கிரேடைத் தாக்கினர். விரைவில் தற்புகழ்ச்சியில் முனைந்திருந்த ஆஸ்ட்ரிய படைத் தலைவர்களான வால்லிஸும், நீப்பெர்கும் இப்பொழுது அமைதி ஏற்படுத்திக் கொள்வதற்கு மிக ஆவலுடன் துடித்துக் கொண்டிருந்தனர். வில்லினுவ் (Villenauve) என்ற ஃபிரெஞ்சுத் தூதரின் மத்தியஸ்தத்தை ஆஸ்ட்ரியர்கள் ஏற்றுக் கொண்டனர். ரஷியப் படைத் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமலேயே அமைதி ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பஸ்ஸரோவிட்ச் ஒப்பந்தத்

தின்படி, ஆஸ்ட்ரியாவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பெல் கிரேட், ஸெர்பியா மற்றும் பாஸ்னியா ஆகியவற்றின் பெரும் பகுதிகள், வலாச்சியாவின் பெரும்பகுதி இவையெல்லாம் உத்மானியப் பேரரசிடமே மீண்டும் ஒப்படைக்கப்பட்டன. குரோட்ஸ்காவில் உத்மானியர்கள் அடைந்த வெற்றியும், அதை விட, அதை யொட்டி ஏற்பட்ட பெல்கிரேட் ஒப்பந்தமும் மால்தேவியாவில் வெற்றிபெற்ற ரஷியர்களுக்குப் பெருங் குழப்பத்தையும் சினத்தையும் விளைத்தன. இரண்டு லட்சம் படைவீரர்களைக் கொண்டுள்ள துருக்கிப்படை ஒன்று ஆஸ்ட்ரியர்களின் மீது அப்பொழுதுதான் வெற்றி பெற்று டான்யூப் நதிக் கரையில் இருக்கையில், ஜஸ்ஸியிலிருந்த ரஷியப் படை மேலும் முன்னேறித் துருக்கிக்குள் புகவோ அல்லது தன் நிலையை மால்தேவியாவில் சரிசெய்து கொள்ளவோ இயலாத இக்கட்டான நிலையில் இருந்தது. இஸ்தம்பூலைக் கைப்பற்ற மன்னிச் வகுத்த திட்டம் அழிந்தது. ரஷிய பேரரசி ஆஸ்ட்ரியர்களைப் பின் பற்றி, உத்மானியர்களுடன் அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியவளாயினாள். கையொப்பமிடப்பெற்ற ஒப்பந்தத்தின்படி மால்தேவியாவில் ரஷியர்கள் வென்ற பகுதிகளும் கிரீமியாவும் ஓக்ஸகாஃப் என்னும் நகரமும் துருக்கியர் வசம் ஒப்படைக்கப்பட்டன. கருங்கடலோரத்தில் ஒரு குறுகிய நிலப் பகுதியை மட்டுமே ரஷியா வைத்துக் கொள்ள அனுமதிக்கப் பட்டது. அஸாஃப் கடலிலும் ரஷியர்கள் தம் கப்பற்படைகளை வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டது.

இவ்விதமாக, 1739-ல் நிகழ்ந்த படையெடுப்பின் விளைவாக ஏற்பட்ட இரு ஒப்பந்தங்களும் துருக்கிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றிகளாகும். இவற்றுக்கு உத்மானியர்களின் வீரம்தான் காரணம் என்பதற்கில்லை. ஆஸ்ட்ரியர்களின் மூடத்தனமும் திறமையில்லாமையுமே பெருவாரியான காரணங்களாகும்.

(இ) கைனர்ட்ஜி ஒப்பந்தம் (1739-74)

நடைபெற்ற படையெடுப்பும் அதன் விளைவாக ஏற்பட்ட ஒப்பந்தமும் துருக்கிப் பேரரசின் எல்லைகளைச் சுருங்குவதிலிருந்து காத்தன. நெடுங்காலம் வரையிலும் அமைதி நிலவி இருந்தது. சுல்தான் அமைதியை நாடினார் என்பதன்று இதற்குக் காரணம். ஐரோப்பாவிலிருந்த இரு பெரும் வல்லரசுகளான ரஷியாவும் ஆஸ்ட்ரியாவும் துருக்கியைத் துண்டு துண்டாக்க வேண்டும் என்று கொண்டிருந்த நோக்கத்தை அவற்றால் நிறைவேற்ற இயலாமையாலும், அந் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு

அவற்றுல் பரஸ்பரம் இணைய முடியவில்லை யாதலாலும் அமைதி தொடர்ந்து நீடித்து வந்தது. ஆஸ்ட்ரிய பேரரசரான ஆரும் சார்லஸ் 1740-ல் உயிர் நீத்தார். இந்த நிகழ்ச்சியை யொட்டி, அவருடைய உடைமைகளைப் பெறுவதற்காகச் சுற்றுப்புற வல்லரசுகளுக்கிடையே பெரும் சச்சரவு எழுந்தது. அவ்விதம் உண்டான ஆஸ்ட்ரிய வாரிசுரிமைப் போர் 1748-ல் ஏய்லா சப்பேல் (Treaty of Aix-la-Chapalle) என்ற உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதனுல் முடிவடைந்தது. இதை யொட்டி ஏழாண்டுப் போர் என்ற மற்றொரு போரும் மூண்டது. 1763-ல் செய்து கொள்ளப்பட்ட பாரிஸ் உடன்படிக்கை அதனை முடித்தது. இவ்விரு பெரும் போர்களிலும் சுல்தான் கலந்து கொள்ளவில்லை. ஆஸ்ட்ரியா இருந்த சூழ்நிலையில் சுல்தான் அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஹங்கேரியில் தாம் இழந்திருந்த உடைமைகளை மீட்டுக் கொள்ள எம் முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். 1768-ல் ரஷியாமீது போர் மூளும் வரையில் அமைதி எங்குமே நிலவி இருந்தது.

சுல்தான் மகமூத் 1754-ல் இறந்ததற்குப் பிறகு, அவருடைய சகோதரர் இரண்டாம் உத்மான் (Othman II) பட்டத்திற்கு வந்தார். கூன் முதுகினராக இருந்த இவர் மூன்று ஆண்டு கால மட்டுமே ஆட்சி புரிந்தார். அவர் தம் அரசாங்கத்தில் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் எதையும் புகுத்தியதாகத் தென்படவில்லை. அவருடைய மூன்றுண்டு ஆட்சிக் காலத்தில் ஆறுபேர் பிரதம வஸீர்ப் பதவியை வகித்தனர். பஷீருக்குப் பிறகு அந்தப்புரத்து அதிகாரியாக இருந்தவர்தாம் உண்மையான ஆட்சியாளராக அரசை நடத்தி வந்தார்.

உத்மானுக்குப் பிறகு அவருடைய சகோதரர் மூன்றும் முஸ்தஃபா தமது ஐம்பதாவது வயதில் பட்டத்திற்கு வந்தார். சிறையில் அடைபட்டுக் கிடந்த இவரால் பொது விவகாரங்களுடன் தொடர்பு கொண்டிருக்க முடியவில்லை. ஆட்சியின் முதல் ஆறு ஆண்டுக் காலத்தில் அவர் அரசாங்கப் பொறுப்பினைத் தம் பிரதம அமைச்சரான ரகப் பாஷா (Raghab Pasha) என்பவரிடமே விட்டுவைத்திருந்தார். அவ் வமைச்சர் முதிர்ந்த அறிவும் திறமையும் படைத்தவர்; சொக்கொல்லிக்கும் கொப்பரீலிகளுக்கும் நிகரானவர்; அமைதிக் கொள்கையில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தவர்.

ஆனல், அவர் 1763-ல் இறந்து விட்டார். அவருக்குப் பிறகு சுல்தான் முஸ்தபா ஆட்சிப் பொறுப்பைத் தாமே மேற்கொள்ள

லாயினர். நல்லெண்ணத்தையும் பொது நலனில் அக்கறையையும் கொண்டவராக இவர் இருந்தாராயினும், போதிய அளவு ஆற்றல் படைத்தவராக இருக்கவில்லை; எதிலும் அவசரப்படுபவர்; பொறுமையற்றவர். குறிப்பாக, சிறந்த நிர்வாகிகளையும் படைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பதில் இவர் எவ்விதத் தகுதியுமற்றவராகவே விளங்கினர். அதுவரை பின்பற்றப்பட்டு வந்த அமைதிக் கொள்கையை இவர் கைவிட்டுவிட்டுப் போரில் இறங்கினர். விளைவுகள் பேரரசுக்கு மிகவும் மோசமானவையாக இருந்தன. அவர் இருந்த நிலையில், திறமை படைத்தவர்களும் மனச்சாட்சியின்றி நடந்து கொண்டவர்களுமான ரஷியாவின் இரண்டாம் காத்தரீனும் பிரஷ்யாவின் ஃபிரெடரிக்கும் (Catherine II of Russia & Frederic the Great of Prussia) அவருடைய சம காலத்தவர்களாக வந்து வாய்த்தமை அவருடைய துரதிருஷ்டமே யாகும். 1762-ல் ரஷியாவின் மூன்றாம் பீட்டர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு, அவருடைய இடத்தில் அவர் மனைவியான இரண்டாம் காத்தரீன் நியமிக்கப்பட்டாள். அவளுடைய தூண்டுதலின் பேரில் போலந்து துருக்கி ஆகிய இரு வல்லரசுகளின்மீதும் ரஷியா ஆக்கிரமிப்புக் கொள்கையை மேற்கொண்டது. ரஷியாவின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக அண்மையில் சுல்தானுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்பிய மாபெரும் ஃபிரெடரிக் இப்பொழுது தம் கொள்கையை நேர்மாறானதாக்கிக் கொண்டார். 1764-ல் அவர் ரஷிய பேரரசியுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். அதன்படி, ஒருவருடைய உடைமைகளை மற்றவர் காத்துக் கொள்வதற்கும் ஒருவர் தாக்கப்பட்டால் மற்றவர் உதவிக்கு வருவதற்கும் உறுதியளிக்கப் பெற்றது. ஆனால், ஃபிரான்ஸ் பிரஷ்யாவையோ அல்லது துருக்கி ரஷியாவையோ தாக்கிற்று என்றால், பணவுதவி அளிக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு வெகு விரைவில் அவ்விரு வல்லரசுகளுக்குமிடையே மற்றோர் ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டது. அதன்படி, போலந்தைத் துண்டுபடுத்துவதற்கான திட்டமும் அதன் ஒரு பகுதியைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டன. ஆஸ்ட்ரியப் பேரரசியான மெரியா தெரிஸா (Maria Theresa) என்பவளும் தனக்கு விருப்பமில்லாதிருந்தும், அவ் வொப்பந்தத்தில் சேர்ந்து கொண்டாள். இந்த மூன்று சதிகாரர்களின் திட்டத்தை சுல்தான் மிகத் தீவிரமாக எதிர்த்தார். அதாவது, போலந்தை ரஷியப் படைகளும் பிரஷ்யப் படைகளும் கைப்பற்றிக் கொண்டமைக்கு சுல்தான் தமது எதிர்ப்பினைத் தெரிவித்தார். எனினும், ஒரு பலனும் விளையவில்லை. போலந்து முதன் முதலாகப் பகிர்ந்து

கொள்ளப்பட்டது. போரைத் தவிர்க்க ரஷிய அரசு எந்த நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ளவில்லை; அதற்கு மாறுக, துருக்கியர்களைப் போருக்கு இழுக்கப் பல முயற்சிகளையும் அது செய்து வந்தது. கிரீமியா, மொரியா, மாண்டிநீக்ரோ, ஜார்ஜியா முதலிய இடங்களில் சுல்தானுக்கெதிராகக் கிளர்ந்தெழும்படி மக்களை ரஷியா தூண்டிக் கொண்டிருந்தது. போலந்தின் அகதிகளை பெஸ்ஸரேபியாவின் எல்லையைக் கடந்து துரத்திச் சென்று, சுல்தானின்கீழ்ச் சிற்றரசராயிருந்த கிரீமியாவின் கானுடைய ஆட்சிப் பகுதியில் புகுந்து, பால்டா நகரைக் கைப்பற்றிய தன்மூலம் ரஷிய அரசு துருக்கியின் நடுநிலைமையைக் குலைத்தது.

1768 அக்டோபரில் இஸ்தம்பூலில் நடைபெற்ற 'திவான்' ஒன்றில், ரஷியா போலந்திற்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்து பெல்கிரேட் ஒப்பந்தத்தை மீறி நடந்திருக்கின்றது என்றும், ஆகவே அதன்மீது போர் தொடுப்பது நியாயமானதும் அவசியமானதும் ஆகும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், பிரதம அமைச்சராக இருந்த மொஸின் ஸாதே பாஷா என்பவர் போதிய தயாரிப்புகள் செய்யப்பட்டாலன்றி, போருக்குச் செல்வது முறையன்று என்று எடுத்துரைத்தார். இதற்காக அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். எமன் முகம்மது என்பவர் பிரதம வஸீராகப் பதவி ஏற்றார். அவர் ஒரு சிறிதும் தகுதியில்லாதவர்; இராணுவ விவகாரங்களைப்பற்றி அவருக்கு எதுவுமே தெரியாது. போதிய தயாரிப்புகளின்றிப் போர் தொடுக்கப்பட்டதனால், ரஷியாவுக்குத் தன்னை வலுப்படுத்திக்கொள்ளப் போதுமான அவகாசம் கிட்டிற்று. 1769-ல் ஆரம்பமான படையெடுப்பில், மால்தேவியாவைப் பாதுகாப்பதற்கு சுல்தான் ஒரு படையை அனுப்புவதற்கு முன்பே ரஷியா போரில் இறங்கி விட்டது. பேரரசி மூன்று படைகளை அனுப்பிவைத்தாள். காலிட்ஸின் (Galitzin) இளவரசர் தலைமையில் இருந்த முதன்மையான படை மால்தேவியாவின்மீது படையெடுத்துக் காக்எடிம்மை முற்றுகையிட்டது. ஆனாலும், இவ்வளவு எல்லாம் நடந்துகொண்டிருந்த போதிலும், 1769 மே மாதத்தில் தான் பிரதம மந்திரி பாபாதக்லி(Babatagli) என்ற தமது முகாமிலிருந்து வெளியே புறப்பட்டு, இஸ்மாயீலுக்கு அருகிலிருந்த இசாக்ஜீ (Isakdji) என்ற இடத்தை அடைந்தார். அங்கே அவர் போர்க் குழு ஒன்றைக் கூட்டித் தம் தகுதியின்மையை வெளிப்படுத்தினார். எந்தத் திசையில் தாம் படையைச் செலுத்த வேண்டுமென்று அக் குழுவினரை அவர் வினவி, தமக்குப் போர் அனுபவம் கிடையாது என்றும், அவர்களே தக்க விதத்தில் செய்ய வேண்டியதைச் செய்துகொள்ளலாமென்றும் கைவிரித்து விட்

டார். இதைச் செவியேற்ற படைத்தலைவர்கள் வியப்புக்குள் ளாயினர். பெரும் விவாதத்திற்குப் பிறகு ஒரு முடிவு எடுக்கப் பட்டது. டான்யூபைக் கடந்து மால்தேவியாவுக்குள் நுழைந்து பிறகு சூழ்நிலைகளுக்கேற்ப நடந்து கொள்ளவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. உண்மையில், படையெடுப்புக்கு உண் டான தெளிவான திட்டம் எதுவும் இல்லை. அந்தத் தீர்மானத் தின்படி சேனை டான்யூபைக் கடந்துவிட்டது. பிறகு புரூத் நதி யோரமாகச் செல்லவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. காக்ஸிம்முக்கும் ஜஸ்லிக்கும் இடையே இருந்த ஓரிடத்திற்கு அப் படை வந்துசேர்ந்தது. ஆனால், அதற்குள்ளாகவே போதிய உணவு வசதியில்லாமல் அது துன்பத்துக்குள்ளாயிற்று. டான் யூப் நதியையும் புரூத் நதியையும் ஒட்டியிருந்த சேற்று நிலத் தில் மொய்த்த கொசுக்களின் கடியையும் அப் படையினர் அனுப விக்க நேர்ந்தது. அந்தச் சூழ்நிலைகளுக்கிடையே ரஷியர்கள் காக்ஸிம்மைக் கைப்பற்றிக் கொள்வதை சுல்தானின் சேனையால் தடுக்க முடியவில்லை. இறுதியில், எதிரியைச் சந்திக்காமலேயே அது பின்வாங்கி, டான்யூபுக்குத் திரும்பிவிட்டது. இவ் விதமாக 1769-ல் நடைபெற்ற படையெடுப்பு முற்றுப்பெற்றது.

1770ஆம் ஆண்டின் துவக்கத்தில் ரஷியர்கள் ஒன்றுமே செய்யவில்லை. காலிட்ஸின் இளவரசர் துருக்கிப் பிரதமரைப் போலவே தகுதியற்றவராகவும் மூளைக் கோளாறு உள்ளவராக வும் இருந்தார். ஆகவே, பேரரசி அவரைத் திருப்பி அழைத்துக் கொண்டு, அவருடைய பதவியில் ரோமன்ஸாஃப் (Romanzoff) என்பவரை நியமித்தாள். இவர் மன உறுதியும் திறமும் படைத்த மாபெரும் வீரராவார். சுல்தானும் எமன் பாஷாவைத் திருப்பி அழைத்து, அவரைத் தூக்கிலிட உத்தரவிட்டார்.

இதற்கிடையே 'கிழக்குத் திட்டம்' (Oriental Project) என் றழைக்கப்பட்ட தனது திட்டத்தை நிறைவேற்றுவதில் பேரரசி காத்தரீன் முனைந்தாள். கிரீஸில் சுல்தானுக் கெதிராகக் கிளர்ச்சி செய்வதற்காக மதக் குருமார்களின் வேடத்தில் அவள் பல தூதர்களை அனுப்பிவைத்தாள். பொதுக் கிளர்ச்சி ஒன்று ஏற்படலாம் என்ற நம்பிக்கையில் கிளர்ச்சியாளர்களை ஆதரிப்ப தற்காக அவள் பால்டிக் கடலிலிருந்து மத்தியதரைக் கடலுக்கு ஒரு மாபெரும் கப்பற்படையை அனுப்பினாள். அப் படைக்கு அலெக்ஸிஸ் ஓர்லாஃப் (Alexis Orlaff) என்பவர் தலைவராக நிய மிக்கப்பட்டார். ஆனால், உண்மையில் அப் படையின் பொறுப்பு ஆங்கிலத் தளபதியான எல்ஃபின்ஸ்டன் (Elphinstone) என்பவ ரிடமே இருந்தது. மற்றும் பல பிரிட்டிஷ் அதிகாரிகளும் அவ

ருக்கு ஆதரவாக இருந்தனர். உண்மையில், ஒவ்வொரு ரஷிய கப்பலிலும் அப்படிப்பட்ட பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் இருந்தார் எனக் கூறப்பட்டது. இது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தெரிந்துதான் இருந்திருக்கவேண்டும். அவ்வமயம் அவ்வரசு ரஷியாவின் ஆக்கிரமிப்புக் கொள்கையை ஆதரித்தது. இப் படை 1769-ல் கிரான்ஸ்டட் (Cronstadt) என்ற துறைமுகத்தை விட்டு வெளியேறி, 1770 ஆம் ஆண்டு ஃபிப்ரவரி மாதத்தில் மொரியா கடற்கரையை அடைந்தது. அங்கிருந்த கிரேக்கக் கிளர்ச்சியாளர்கள் (மெய்ரோட்டர்கள்—Mairotes) பலர் அதனை வரவேற்றனர். ஒரு ரஷியப் படையும் அங்கு வந்து சேர்ந்தது. அங்கிருந்த ஒரு சில துருக்கியர்க்குக் கிளர்ச்சியாளர்கள் பயங் கரமிக்க கொடுமைகளை இழைத்தனர்.

இப்பொழுது மொரியாவின் ஆளுநராக இருந்த மாஜி பிரதம அமைச்சரான மொஸின் ஸாதே பாஷா மிகத் துரிதமாகச் செயல்பட்டார். அல்பேனியர்களின் படை ஒன்றை அவர் திரட் டிக்கொண்டு, கிரேக்கக் கிளர்ச்சியாளர்களையும் அவர்களுடைய ரஷிய கூட்டாளிகளையும் முறியடித்தார். ரஷியர்களின் கப்பற் படை பின்வாங்கிக்கொள்ள நேர்ந்தது. கடற்கரையில் இருந்த கிரேக்கர்கள் பலரும் மிகக் குரூரமாகக் கொல்லப்பட்டனர். நாட் டுப்புறப் பகுதி முழுவதையுமே அல்பேனியர்கள் சூறையாடி னர். மொடான் (Modon) கொரான் (Coron) ஆகியவற்றை ரஷியப் படை கைப்பற்றுவதில் தோல்வியடைந்து பின்வாங்கிக் கொண்டது. ஸ்கியோஸ் (Scios) தீவின் ஓரத்தில் அதற்கும் உத் மானியக் கப்பற்படைக்கும் மோதல் ஏற்பட்டது. 1760 ஜூலை மாதத்தில் நடைபெற்ற போரில் துருக்கியர்கள் முறியடிக்கப் பெற்றனர். கடற்கொள்ளைக் காரணுக அனுபவம் பெற்றிருந்த அல்ஜீரியாவின் ஹுஸைன் இல்லாமற் போயிருப்பின், அத் தோல்வி இன்னும் கடுமையானதாக இருந்திருக்கக்கூடும்.

தோல்வியடைந்த துருக்கியர்களின் கப்பற்படை க்ஷெஸ்மே (Tchesme) என்ற சிறிய துறைமுகத்தில் அடைக்கலம் புகுந்தது. ஆனால், அவ் விடத்தையும் எல்பின்ஸ்டன் முற்றுகையிட்டார். அவரும் அவருடைய மற்ற அதிகாரிகளும் செய்த சூழ்ச்சிகளின் விளைவாகத் துருக்கியர்க் கப்பல்கள் பலவும் எரிந்து நாசமாயின. ரஷியக் கப்பற்படை உடனே டார்டனல்ஸுக்குச் சென்று நீர்ச் சந்தியின் வழியாக மார்மொராவுக்குள்ளும் இஸ்தம்பூலினுள்ளும் புகுந்துகொள்ள வேண்டும் என்று எல்பின்ஸ்டன் உத்தரவிட் டார். ஆனால், ஓர்லாஃப் தயங்கித் தாமதித்தார். எதிரிகளின் திட்டத்தை அறிந்துகொண்ட துருக்கியர்கள் அப் பகுதிகளில்

ரஷியக் கப்பற்படைகள் ஊடுருவி வரா வண்ணம் தடுக்க எதிர் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டனர்.

ஓர்லாஃபும் ரஷியப்படையினரும் லெம்னோஸ் தீவிற்குச் சென்று அங்கிருந்த கோட்டை ஒன்றை முற்றுகையிட்டனர். ஏஜியன் கடலில் ஒரு முக்கிய கேந்திரத்தைப் பெறுவதே இதன் நோக்கமாகும். இரண்டு மாத முற்றுகைக்குப் பிறகு உள்ளே இருந்த படை சரணடைந்தது. ஓர்லாஃபுடன் சரணடைதலுக்கான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதற்கிடையே லெம்னோஸைக் கைப்பற்றுவதற்குத் தமக்கு அனுமதி யளிக்குமாறு ஹஸன் சுல்தானை வற்புறுத்தினர். இதற்காக நாலாயிரம் முரடர்களையும் அவர் இஸ்தம்பூலில் திரட்டிக்கொண்டார். அவர் திடீரென்று லெம்னோஸை அடைந்து, சரண் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து, ரஷியர்களைத் தாக்கி முறியடித்து, அவர்களுடைய கப்பல்களுடன் அவர்களை ஓட்டம் பிடிக்க வைத்தார்.

இந்த வெற்றிகரமான அருஞ் சாதனைக்குப் பிறகு ஹஸன் உத்மானியக் கப்பற்படையின் கப்பித்தான் பாஷாவாக்கப்பட்டார். அவர் மற்றொரு கப்பற்படையையும் திரட்டிக்கொண்டு மாண்டிரேசோ கடற்கரையில் ரஷியக் கப்பற்படையைச் சந்தித்தார். இரு படைகளுமே வெற்றி பெற்றதாக உரிமை பாராட்டிக்கொண்டன. ஆனால், உண்மையில் ரஷியப் படைதான் அதிக சேதமடைந்ததுபோலும்! அடுத்தாற்போல், ரஷியக் கப்பற்படை எகிப்தின் மம்லூக்குகளின் தலைவரான அலீ-பே (Ali Bey) என்பவருக்கு உதவி வழங்கிற்று. அந்த அலீ-பே என்பவர் அங்கிருந்த துருக்கிப் பாஷாவுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து சிரியாவின்மீது படையெடுத்துக் கொண்டிருந்தார். இந்தக் கிளர்ச்சியாளருக்கு ஆதரவு கொடுப்பதற்காக ஓர்லாஃப் சிரியாவுக்கு நானூறு படை வீரர்களைக் கொண்டு வந்தார். ஆனாலும், அலீ-பே வெகு விரைவில் துன்பத்துக்குள்ளாயினர். அவருக்கெதிராக அவருடைய படையிலேயே கிளர்ச்சி மூண்டுவிட்டது. அதைத் தூண்டிவைத்தவர் அவருடைய மைத்துனரே. அலீ-பே முறியடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். நானூறு ரஷியப் போர் வீரர்களும் கொல்லப்பட்டனர். சுல்தானால் மீண்டும் எகிப்தின்மீது தமது ஆட்சியை நிலைநாட்ட முடிந்தது. ஓர்லாஃபின் படையெடுப்பு ஒரு தலைசிறந்த கப்பற்படையின் தேவையையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

1770-ல் டான்யூபில் நிகழ்த்தப்பட்ட படையெடுப்பு உத்மானியர்களின் நலனுக்குக் கேடு விளைவிப்பதாகவே இருந்தது.

அவர்களுடைய சேனைக்குத் தலைமை வகித்த கலீல் பாஷா அவருக்கு முன்பு இருந்தவரைப் போலவே திறமையற்றவ ராக விளங்கினர். ரஷியப் படைத் தலைவரான ரோமன்ஸாஃப் மால்தேவியாவைக் கைப்பற்றிக் கொண்டார். திறம் படைத்த முப்பதினாயிரம் படைவீரர்களையும் டார்டார்ப் போர் வீரர் களையும் கொண்டு கலீல் ரஷியத் தலைவரைத் தாக்கினர். இரு படைகளும் கார்க்கால் (Karkal) என்ற இடத்தில் சந்தித்தன. கலீல் பாஷா ரஷியர்களை எதிர்த்துநின்றிருக்கையில் அவருடைய டார்ட்டார்ப் படையினர் நிலப்பகுதியைச் சூறையாடி, போக்கு வரத்துக்களைத் துண்டித்துவிட முயன்று கொண்டிருந்தனர். ரோமன்ஸாஃப் துருக்கிப் படை வரிசையைக் கடுமையாகத் தாக்கினர். பீதியுற்றுவிட்ட டார்ட்டார்களும் துருக்கியர்களும் ஓட்டம் பிடித்தனர். அவர்களுடைய முகாமும், பீரங்கிகளும், ஏராளமான உணவுப் பொருள்களும் ரஷியர்களின் கையில் சிக்கின. உயிர் தப்பிய துருக்கியர்கள் டான்யூபை மீண்டும் கடந்தனர். 1770-ல் நிகழ்ந்த படையெடுப்பு முடிவடைந்த போது, டான்யூபுக்கு வட புறத்திலிருந்த எல்லாக் கோட்டை களும் ரஷியர்களுடைய கைக்கு வந்து சேர்ந்துவிட்டன. இவ் விதமாகப் பிரதம வஸீரின் படை முழுதுமே அழிந்தது. இரண் டாயிரம் பேர் மட்டுமே அச்சேனையில் எஞ்சி இருந்தனர்.

1771-ல் துருக்கியர்களுக்கு இன்னும் பெரும் இழப்புகள் ஏற்பட்டன. டொல்குருக்கி இளவரசர் (Prince Dolgorouki) என்பவர் எண்பதினாயிரம் ரஷியப் படை வீரர்களையும் அறுபதி னாயிரம் டார்ட்டார்ப் படை வீரர்களையும் திரட்டிக் கொண்டு, பெரெகோப்பிலிருந்த அரண்களை வெற்றிகரமாகத் தாக்கிய தன் பின், கிரீமியாவின்மீது படை யெடுத்தார். அம் மாநிலம் முழுவதுமே கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. கெர்ச் (Kertch) எனிகாலே (Yenikale) ஆகியவையும் கைப்பற்றிக் கொள்ளப் பட்டன. வலாச்சியாவும் மால்தேவியாவும் ஒன்றன் பின் ஒன்றாக ரஷியர்களின் கையில் சிக்கின. கொக்ஸிம், ஜஸ்ஸி ஆகியவை யும் கைப்பற்றிக் கொள்ளப்பட்டன. இந்தப் படையெடுப்பின் போது துருக்கியர்கள் பெற்ற ஒருசில சிறிய வெற்றிகள் என்ன வென்றால், டான்யூப் நதியோரத்திலிருந்த கியர்கெவோ (Giurgevo) என்ற அரண் மீட்கப்பட்டதும், கருங்கடலோரத்தில் இருந்த ஒக்ஸகாஃப், கில்பர்ன் ஆகிய கோட்டைகள் வெற்றிகர மாகப் பாதுகாக்கப்பட்டனவுமாகும். இருப்பினும், காக்கஸஸ் பகுதியிலும் ரஷியர்களுக்கு வெற்றி கிட்டியது. அவர்கள் துருக் கியர்களை ஜார்ஜியா மற்றும் மிஸ்ரெலியா ஆகிய இடங்களி லிருந்தும் விரட்டியடித்தனர்.

ரஷியர்களின் இந்த மாபெரும் வெற்றிகள் ஆஸ்ட்ரியாவையும் பிரஷ்ஷியாவையும் பீதிக்குள்ளாக்கின. தமக்கு அண்மையில் இருக்கும் ஒரு நாடு இந்த அளவிற்கு விரிவடைவதை அவை விரும்பவில்லை. எனவே, துருக்கிப் பேரரசின் சார்பாக அவை ரஷியாவினிடம் மத்தியஸ்தம் செய்யப் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கின. ஆனால், மற்ற வல்லரசுகள் இதில் தலையிடுவதைப் பேரரசி காத்தரீன் மிகக் கடுமையாக எதிர்த்தாள்; தன்னுடன் மட்டுமே ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள வேண்டும் என்றும் அவள் சுல்தானுக்கு அறிவித்தாள். போலந்திற்கு சார்பாக ரஷியாவின்மீது போர் தொடுப்பதை சுல்தான் மறந்து விட்டு, ரஷியாவிற்கு எதிராக ஆஸ்ட்ரியாவின் ஆதரவைப் பெறுவதற்காக, ஆஸ்ட்ரியாவுடன் போலந்தைப் பங்கிட்டுக் கொள்வதற்கான திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தார். ஆஸ்ட்ரியப் பேரரசர் இத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம், கொள்ளையடிப்பதற்குத் தாம் எதிர்ப்புத் தெரிவித்தார் என்பதன்று; இது போன்ற ஒரு திட்டத்தில் சுல்தான் தமக்கு உறுதியான துணைவராக இருப்பார் என்று ஆஸ்ட்ரியப் பேரரசர் கருதவில்லை. உண்மையில், ஆஸ்ட்ரியா ரஷியா மற்றும் பிரஷ்யா ஆகிய நாடுகள், எப்படி வசதியாக இருக்குமோ அப்படிப் போலந்தையோ துருக்கியையோ துண்டு போடுதற்கு இடையருமல் திட்டங்களைத் தீட்டிக் கொண்டேதாம் இருந்தன.

1771ஆம் ஆண்டில் நிகழ்ந்த படையெடுப்பு முடிவடைந்தும் ரஷியாவுக்கும் சுல்தானுக்குமிடையே அமைதி ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அடுத்த ஆண்டில் புக்காரெஸ்ட் (Bucharest) என்னும் இடத்தில் ஒப்பந்தத்திற்கான நிபந்தனைகளை உருவாக்குவதில் ரஷியா முனைந்திருந்தது. இறுதியில், ரஷியா நிபந்தனைகளைச் சமர்ப்பித்தது. சுல்தானும் அவருடைய முதலமைச்சரும் இதர அமைச்சர்களும் அவற்றை ஏற்றுக்கொள்ள இணக்கம் தெரிவித்தனர். ஆனால், முஃப்தியும் உலமாக்களும் அவற்றை மிகத் தீவிரமாக எதிர்த்தனர். 'திவான்' அவற்றைப் புறக்கணித்துப் போரை மீண்டும் துவக்கிற்று. ஆனால், இதே நிபந்தனைகளையே இரண்டு ஆண்டுகட்குப் பிறகு அவர்கள் ஏற்றுக் கொள்வதற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சற்று அமைதி ஏற்பட்டவுடன் சுல்தான் சிறிது அவகாசம் பெற்றார். மற்றொரு படையெடுப்பை நிகழ்த்த மிகவும் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டன. மொரியாவின் பாதுகாப்பில் மிகவும் சிறப்புப் பெற்று விளங்கிய மொஸின் ஸாதே பாஷா 1772ஆம் ஆண்டின் முடிவில் மீண்டும் பிரதம அமைச்சராக

நியமிக்கப்பட்டார். அவர் படையினர்க்கு ஒரு புத்துணர்ச்சியை யூட்டினர். 1773-ல் புக்காரெஸ்டில் அமைதிக்கான பேச்சு வார்த்தைகள் முடிவடைந்ததும் மீண்டும் போர் தொடங்கப் பட்டது. ஐரோப்பாவில் இவ் வாண்டில் நிகழ்ந்த படையெடுப்பு டான்யூப் நதிக் கரையில் சிலிஸ்டிரியா (Silistria) ருஸ்சுக் (Rustchuk) ஆகிய அரண்களும், கருங்கடலோரத்தில் வார்ணு நகரமும், பால்கன் மலைத் தொடர்களுக்கு வடக்கில் ஷும்லா (Schumla) என்ற மாபெரும் அரணும் சூழ்ந்து கொண்டிருந்த நிலப் பகுதியில் நிகழ்ந்தது. மாநிலத்தில் இருதரப்பினருக்கும் இடையே பற்பல மோதல்கள் ஏற்பட்டன. அவற்றில் பொது வாகத் துருக்கியர்கள் தோல்வி அடைந்தனர். ஆனலும், சிலிஸ் டிரியா, வார்ணு மற்றும் ஷும்லா ஆகிய மூன்று அரண்களும் உத் மானியர்களின் பிடியில் இருந்தவரையில் இவ் வெற்றிகளால் ரஷியர்களுக்குப் பலன் ஏதும் விளையவில்லை.

இப் படையெடுப்பின் போது ரஷியர்களை எதிர்த்துத் துருக்கி யர்கள் சிலிஸ்டிரியாவையும் வார்ணுவையும் மிகத் தீவிரமாகக் காத்தனர். ரோமன்ஸாஃப் அவ்வாண்டின் துவக்கத்தில் சிலிஸ்டிரியாவுக்கு அருகே டான்யூப் நதியைக் கடந்தார். துருக்கிப் படைப் பிரிவு ஒன்றினை அவர் தாக்கி, அவ்வரணுக்குப் பின் வாங்கிக் கொள்ளுமாறு வற்புறுத்தினர்; பிறகு அவ்வரணை முற்றுகை யிட்டார். வெளிப் பாதுகாப்புகளை அவர் மிகக் கடுமை யாகத் தாக்கித் தகர்த் தெறிந்தார். ஆனலும், இப்பொழுது தான் அவர்களுடைய தொல்லைகள் தலைகாட்ட ஆரம்பித்தன. உஸ்மான் பாஷாவின் தலைமையிலிருந்த உத்மானியர்கள் அவ் வரணை மிகத் தீவிரமாகக் காத்தனர். கோட்டைக்குள் ஆண் மக்கள் அனைவரும் படைக்கு உதவ முன்வந்தனர். முன்னேறிக் கொண்டிருந்த ரஷியர்களை அவர்கள் சாலைகளிலும் வீதிகளிலும் எதிர்த்தனர். இறுதியில் ரஷியர்கள் பின்வாங்க நேரிட்டது. எண்ணூயிரம் ஆட்களை அவர்கள் பறிகொடுத்து விட்டிருந்தனர். பின்னுளில் ரோமன்ஸாஃப் குராசான் (Korasan) என்ற இடத் தில் துருக்கியர்களை மிகக் கடுமையாக முறியடித்தார். இதனல் வார்ணுவுக்குச் செல்லும் வழி திறக்கப்பட்டது. ஆனல், இங்கும் துருக்கிப்படை மிகத் தீவிரமாக எதிர்த்து வெற்றி பெற்றது. கருங்கடலில் இருந்த துருக்கிக் கப்பற்படை ஒன்று அவர் களுக்குப் பக்கபலமாக இருந்தது. இதுதான் 1773ஆம் ஆண் டில் நிகழ்ந்த படையெடுப்பின் கடைசிக் காட்சியாகும். இவ் வாண்டின் இறுதியில் சுல்தான் முஸ்தஃபா உயிர் நீத்தார். அவருக்குப் பிறகு அவருடைய உடன் பிறந்தவரான அப்துல் ஹமீது (Abdul Hameed) சுல்தானனர். இவர் நாற்பத்தெட்டு

ஆண்டுகள்வரை அந்தப்புரத்துச் சிறையில் அடைபட்டுக் கிடந்தவர். அவர் தாம் வகிக்கப் போகும் பதவிக்குத் தேவையான அருகதை எதையும் பெற்றிராதவர். இருப்பினும், அவரும் பிரதம வஸீராகத் தொடர்ந்து பதவி வகித்த மொஸின் ஸாதேயும் அமைதியை விரும்பினர்.

1774-ல் படையெடுப்புத் தொடங்கியபோது பிரதம அமைச்சர் ஷும்லாவிலிருந்த தமது முகாமிலிருந்த இருபத்தையாயிரம் படை வீரர்களுடன் புறப்பட்டு டான்யூப்நதிக் கரையிலிருந்த ஹிர்ஸோவா (Hirsova) என்ற இடத்தில் திரண்டிருந்த ரஷியர்களைத் தாக்கும் நோக்கத்துடன் முன்னேறினர். அம் மாநிலத்திலிருந்த ரஷியப் படைகள் சுவார்ரோ (Suwarrow) என்பவரின் தலைமையி லிருந்தன. மாபெரும் படைத் தலைவராக இருந்த இவர் துருக்கியர்கள் தாக்கும் வரையில் காத்துக் கொண்டிருக்க வில்லை. இவர் ஹிர்ஸோவாவிலிருந்து முன்னேறி, கோஸ்ட்லிட்ஜி (Kosthlidji) என்ற இடத்தில் பிரதம அமைச்சரின் படைகளைச் சந்தித்தார். அவருக்குப் பெரும் வெற்றியும் கிட்டிற்று. துருக்கியர்களின் முகாமும் பீரங்கிகளும் பொருள்களும் பெருமளவில் கைப்பற்றிக் கொள்ளப்பட்டன. முறியடிக்கப்பட்ட படை கலைந்தது. பிரதம அமைச்சர் எண்ணூயிரம் வீரர்களுடன் மட்டுமே ஷும்லாவைப் பாதுகாக்கவேண்டி ஏற்பட்டது. ரஷியர்கள் பல சூழ்ச்சிகளை மேற்கொண்டு ஷும்லாவுக்கும் தலைநகருக்கும் இடையே இருந்த போக்குவரத்துக்களைத் துண்டித்து விட்டனர். மொஸின் ஸாதே வேறு வழியின்றிப் போர் நிறுத்தத்தை நாடினர். இதற்கு இணங்க மறுத்த ரஷியர்கள் அமைதி ஒப்பந்தத்திற்கான நிபந்தனைகளை விவாதிக்கத் தயாராக இருந்தனர். இதற்கு சுல்தானின் இணக்கத்தைப் பெற்ற பிரதம அமைச்சர் 1774, ஜூலை 16ஆம் நாள் அன்று கைனர்ட்ஜி என்ற கிராமத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

இவ் வொப்பந்தத்தின் நிபந்தனைகள் இரண்டு ஆண்டுகட்கு முன்பு சுல்தானிடம் சமர்ப்பிக்கப்பட்ட நிபந்தனைகளை நிகர்த்தே இருந்தன. போரின்போது சுல்தானுடைய படைகள் பல்வேறு இடங்களிலும் முறியடிக்கப்பட்டமையாலும், கிரீமியா, வலாச்சியா, மால்தேவியா, மற்றும் பெஸ்ஸரேபியா ஆகியவற்றை ரஷியர்கள் உண்மையில் கைப்பற்றிக் கொண்டதனாலும் நிபந்தனைகள் சற்று மிதமானவையாகவே இருந்தன. பேரரசியும் அமைதியை நிலைநாட்ட மிகவும் ஆவலாக இருந்திருக்க வேண்டும். அவளுடைய தெற்கு மாகாணங்களில் கடுமையான கிளர்ச்சி மூண்டது, போலந்தில் நிலைமை கவலைக்கிடமா யிருந்தது.

துருக்கியுடன் நிகழ்ந்த போரில் அவள் அடைந்த இழப்புகள் ஏராளமானவை யாகும். எனவே, போரிலிருந்து சற்று விடுபடுவது அவளுக்கு மிகவும் இன்றியமையாத அவசியமாகி விட்டது. ஆகவேதான், தோல்வியடைந்திருந்த துருக்கியுடன் அவள் மிதமாகவே நடந்து கொள்ள விரும்பினாள்.

கைனர்ட்ஜி உடன்படிக்கையின்படி, தன் படைகளால் கைப்பற்றப்பட்ட துருக்கியர்களுக்குரிய பெரும்பாலான ஆட்சிப் பகுதிகளை ரஷியா துருக்கியர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டது. ஆனாலும், கிரீமியாவை அது அவ்வாறு திருப்பிக் கொடுக்கவில்லை. போலந்து எல்லை வரையில் கிரீமியாவிலும் பெஸ்ஸரேபியாவிலும் இருந்த டார்ட்டார்களுடைய சுதந்தரம் அங்கீகரிக்கப்பட்டது. அதை ஆளவேண்டிய உள்ளூர் இளவரசர் (கான்) தேர்தலில் துருக்கியும் ரஷியாவும் தலையிடக்கூடாது. இந்தப் புதிய இராச்சியத்தின் விவகாரங்களில் ரஷியாவேனும் துருக்கியேனும் தலையிடுதல் கூடாது. ஆனாலும், வருங்காலத்தில் ரஷியா ஆக்கிரமிப்புக் கொள்கையை மேற் கொள்வதற்கு வழிவகுக்கக் கூடிய ஒரு நிபந்தனை அதில் இருந்தது. கெர்ச் (Kertch) எனிகாலே (Yenikale) ஆகிய அரண்களையும் அஸாஃப் கில்பர்ன் ஆகிய நகரங்களையும் ரஷியாவே வைத்துக்கொண்டது. இதனால், வருங்காலத்தில் கிரீமியாவின்மீது ரஷியா பரிபூர்ண ஆதிக்கம் பெற்றிருக்க முடியும். தற்போதைக்குக் கிரீமியா துருக்கியர்களிடம் ஒப்படைக்கப்படவில்லையாயினும், ரஷியர்கள் வசமும் அது இருக்கவில்லை. முஸ்லிம் மாநிலம் ஒன்றைக் கிறித்தவ வல்லரசு ஒன்றின் ஆதிக்கத்துக்கு மாற்றுவதை உலமாக்கள் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள். அதை மாற்றும்படி ரஷியா வற்புறுத்தி இருக்குமாயின், போர் நீடித்தும் இருக்கக்கூடும். ஒக்ஸகாஃபை சுல்தானே வைத்துக்கொண்டார். ஆனால், யூக்ஸைன் (கருங்கடல்) கரையோரத்திலிருந்த இரு கர்பர்தாக்களிலும் முஸ்லிம்கள் குடியிருந்தனர் என்றாலும், ரஷியர்கள் அவற்றைத் தம் வசப்படுத்தியே வைத்திருந்தனர். இவற்றைத் தவிர, போரின் விளைவாக ரஷியர்களின் வசமான வலாச்சியா, மால்தேவியா, பெஸ்ஸரேபியா, ஜார்ஜியா மற்றும் மிஸ்ரெலியா ஆகியவையெல்லாம் சுல்தானிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டன. வலாச்சியா மற்றும் மால்தேவியா ஆகிய வற்றைப் பொறுத்த வரையிலும் அங்கிருக்கும் கிறித்தவக் குடிமக்கள் தம் சமயத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை வழங்கப்பெறல் வேண்டும் என்றும் ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. மனிதாபிமானத்தின் அடிப்படையில் அமைந்ததும், கடுமையற்றதுமான சுமுகமான நல்லாட்சி நீடிக்கவேண்டும் என்றும்

விதிக்கப்பட்டது. இந்தக் குடி மக்கள் தம் குறைபாடுகளை இஸ்தம்பூலில் இருக்கும் ரஷிய தூதுவர்களிடம் முறையிட்டுக் கொள்வதற்கான உரிமையும் பெற்றனர். வருங்காலத்தில் உத்மானியப் பேரரசுக்குப் பேராபத்தைத் தரக்கூடியதாக இருந்த நிபந்தனை ஒன்றும் விதிக்கப்பட்டது. 'தம்முடைய கிறித்தவக் குடி மக்களின் சமயத்தையும் திருச்சபைகளையும் இடையருமல் பாதுகாப்பதற்கும், இஸ்தம்பூலில் இருக்கும் ரஷிய தூதர்கள் அம் மக்களின் சார்பாக முறையிடுவதற்கும் அனுமதிக்கப்படுவர் என்றும் சுல்தான் வாக்குறுதி அளிக்கின்றார்' என்ற நிபந்தனை அவ் வொப்பந்தத்தில் காணப்பட்டது. இந்த நிபந்தனையை ரஷியா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுதான் பின்னளில் மிகத் தீவிரமாகத் துருக்கியின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடத் தொடங்கிற்று.

இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மிதமானவையாகவே இருப்பினும், இது உத்மானிய-ஐரோப்பிய வரலாறுகளில் ஒரு முக்கிய திருப்பம் என்றும், துருக்கிப் பேரரசு மேலும் துண்டிக்கப்படுவதின் தொடக்கம் என்றும் வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். கார்லோவிட்ஸ் ஒப்பந்தம் ஹங்கேரியின் கிறித்தவக் குடி மக்களுக்கு உத்மானியர்களின் பிடியினின்று விடுதலை அளித்தது. ஆனால், இந்த ஒப்பந்தமோ உத்மானியப் பேரரசிலிருந்து முதன் முதலாக ஒரு முஸ்லிம் மாநிலத்தை வேறுபடுத்தி அதில் இருந்த கிறித்தவக் குடிமக்களின் சார்பில் ரஷியா தலையிடுவதற்கான உரிமையை யளித்தது. இது மாபெரும் புதிய கண்டுபிடிப்பாகும்; துருக்கியர்களுக்கு இது மானக்கேடு' விளைவிப்பதாக இருந்தது; பேரரசின் வருங்காலத்திற்குப் பெரும் இடரை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. குறிப்பாக, அவ்வித இடர் அவ் வொப்பந்தத்தின் பன்னிரண்டாம், பதினான்காம் அம்சங்களினின்றும் வரவிருந்தது. அவற்றின்படி, சுல்தான் தமது கிறித்தவக் குடிமக்களின் சமயத்தைக் காப்பாற்றுவதாகவும் அம் மக்களின் சார்பாக உத்மானிய அரசின் விவகாரங்களில் தலையிடுவதற்கான உரிமை ரஷியர்களுக்கு உண்டு என்பதாகவும் வாக்குறுதி யளித்தார்.

இவ் வகைப்பட்ட ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கு சுல்தான் பிரதம அமைச்சருக்கு முழுஅதிகாரம் வழங்கித்

[1] உத்மானியப் பேரரசு முஸ்லிம்களுக்கு மட்டுமின்றி, கிறித்தவக் குடிமக்களுக்கும் நெடுகவே போதிய பாதுகாப்பு அளித்து வந்திருக்க, இப் பொழுது ரஷியா உத்மானியக் கிறித்தவர்களின் சார்பாகத் தலையிடலாம் என்று துருக்கி சுல்தானே அனுமதி வழங்கும் ஒரு விபரீதக் கட்டம் உருவானது, துருக்கியர்களுக்கு மானக் கேடே ஆகும்.

தான் இருக்க வேண்டும். இருப்பினும், மொஸின் ஸாதே வர வழைக்கப்பட்டு, பதவியிலிருந்து விலக்கப்பட்டார். அவர் இஸ் தம்பூலுக்குச் சென்று கொண்டிருக்கையில், வழியில் விஷ மூட்டப்பட்டதனல் இறந்தார்.

(ச) ஜஸ்ஸி ஒப்பந்தம் (1774-92)
(Peace of Jassy)

கைனர்ட்ஜி ஒப்பந்தம் ஏற்பட்டதற்கும் 1792-ல் ஏற்பட விருந்த ஜஸ்ஸி ஒப்பந்தத்திற்குமிடையே இருபது ஆண்டுகள் கழிந்தன. அவற்றில் முதல் பதின்மூன்று ஆண்டுகளில் பேரரசு முதலாம் அப்துல் ஹமீத் என்ற சுல்தானின் கீழிருந்தபோது அதனுடைய வெளிநாட்டுக் கொள்கை அமைதிக் கோட்பாட் டின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. ரஷியாவுடன் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வந்த போர்களின் விளை வாக உத்மானியப் பேரரசு பல வகைகளிலும் வெறுமையாக்கப் பட்டிருந்தது. சுல்தானுடைய அமைச்சர்கள் அமைதிக் கொள்கை நிலைபெற்றிருக்க வேண்டும் என்று மிகத் தீவிரமாக வற்புறுத்தினர். பேரரசி காத்தரீனிடத்திருந்து போருக்கான தூண்டுதல் எழும்பிக்கொண்டிருந்த போதினும், அவர்கள் அமைதியை நிலைநாட்டவே விரும்பினர். திறம் படைத்தவளும், மனச் சாட்சிக்கு மாருக நடந்து கொள்வதில் சிறிதும் தயங் காதவளுமான அப் பெண்ணரசி விட்டுக்கொடுக்காத உறுதி யுடனும் செயலாற்றலுடனும் தன் எண்ணங்களை நிறைவேற்று வதில் மிகவும் முனைப்பாக இருந்தாள். உள்நாட்டுக்குரிய அரசன் ஒருவனின் தலைமையில் கிரீமியா சுதந்தர நாடாக இருக்கவேண்டும் என்று கைனர்ட்ஜி ஒப்பந்தம் வற்புறுத்திற்று. அதனை மீறி ரஷியா நடந்துகொள்வதென்றல், அது துருக்கியர் களைப் போருக்கு இழுப்பதான செயலேயாகும். ஆனல், சுல் தான் அப் பேரரசியின் எண்ணங்களை நிறைவேருதபடி செய்யச் சக்தியற்றவராகவே இருந்தார். இதனை அறிந்திருந்த அவள் அதற்கேற்றபடி தன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தாள்.

பல்வேறு இடங்களையும் கைப்பற்றுவதற்கு ரஷியா முன்பு கடைப்பிடித்த முறைகளையே இப்பொழுதும் அவள் மேற்கொண் டாள். கெராயைச் (Gherai) சார்ந்த டார்ட்டார்க் குடும்பத்து இளவரசரான டியூலெட் (Dewlet) என்பவர் கிரீமியப் பகுதியின் கானகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதையொட்டி ரஷிய முக வர்கள் கெராயின் எதிரியான ஷாஹின் (Schahin) என்பவரை

ஆதரித்தனர். டியூலெட்டுக்கு எதிராகவும் அவர்கள் கிளர்ச்சி களைத் தூண்டிக்கொண்டிருந்தனர். கிரீமியாவைக் கைப்பற்றித் தன் இராச்சியத்துடன் சேர்த்துக்கொள்வதற்கான பேராசை தனக்குக் கிடையாது என்று காத்தரீன் ஒரு புறத்தில் கூறிக் கொண்டே, ஒழுங்கினை நிலைநாட்ட வேண்டும் என்ற காரணத்தை ஒரு சாக்காகக் கொண்டு, மறுபுறத்தில் தீபகற்பத்திற்கு அவள் ஒரு படையை அனுப்பிவைத்தாள்; அப் படையின் மூலம் டியூலெட்டைச் சிம்மாசனத்திலிருந்து விலகிக் கொள்ளுமாறு வற்புறுத்தி, தன் ஆதரவைப் பெற்றிருந்த ஷாஹினைக் காளைத் தேர்ந்தெடுத்துவிட்டாள். ரஷியப் படை உதவியுடன் சிம்மாசனமேறிய இந்த இளவரசர் ரஷிய தூதரின் அறிவுரைப் படியே எல்லாவற்றிலும் நடந்துகொள்ள வேண்டியதாயிற்று. ஆகையால், மக்கள் அவர்மீது வெறுப்புக் கொண்டுவிட்டனர். அவருக்கெதிராகக் கிளர்ச்சி எழுந்தபொழுது, அவர் பேரரசியின் உதவியை நாடினர். மக்களைத் தணிக்கும் பாவனையில் ரஷியப் படை ஒன்று அங்கு வந்து தோன்றிற்று. அப் படையை எதிர்த்த டார்ட்டார்கள் படுகொலைக்கு ஆளாயினர், அல்லது நாடு கடத்தப்பட்டனர். ஷாஹின் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டார். பிறகு பேரரசி கிரீமியாவைத் தனது இராச்சியத்துடன் இணைத்துக்கொண்டாள். இத்தனையும் செய்து முடித்ததும், அவள் மக்களின் நலனுக்காகவும் தீய அரசாங்கத்தின் பிடியினின்று அவர்களைக் காப்பாற்றி வைப்பதற் காகவுமே அவ்விதம் செய்ததாகப் பாசாங்கு செய்து கொண்டிருந்தாள். சிறிது காலத்திற்கு ஷாஹின் ரஷியாவில் சிறையடைக்கப்பட்டுப் பிறகு துருக்கிக்கே திருப்பி ஓட்டிவிடப்பட்டார். அங்கு அவர் மிக விரைவில் கொல்லப்பட்டார். டார்ட்டார்களின் சுதந்தரத்தைக் காக்க ரஷியாமீது போராடக் கூடிய நிலையில் சுல்தான் இருக்கவில்லையாதலால், 1784-ல் இரு வல்லரசுகளுக்கும் இடையே ஒரு புதிய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன்படி, கிரீமியாவின்மீது ரஷியாவின் இறைமை ஏற்றுக்கொள்ளப்பட்டது!

பின்னாளில் துருக்கியர்களை ஐரோப்பாவிலிருந்தே வெளியேற்றி விடுவதற்குத் தான் கொண்டிருந்த திட்டங்களைக் காத்தரீன் படிப்படியாகச் செயல்படுத்தி வந்தாள். 1779-ல் அவளுக்கு இரண்டாம் பேரன் பிறந்தபோது, அவனுக்குக் 'கான்ஸ்டன்ட்டைன்' என்று அவள் பெயரிட்டாள். அவனுக்குப் பணியாற்றக் கிரேக்கச் செவிலிகள் நியமிக்கப்பட்டனர். அவனுக்குக் கிரேக்க மொழியும் கற்பிக்கப்பட்டது. இனி ஒரு காலத்தில் உத்மானிய பேரரசுக்குப் பதிலாக பைஸான்ஷிய கிரேக்கப் பேரரசு

இஸ்தம்பூலை மீண்டும் பழைய 'கான்ஸ்டான்ட்டிநோப்பிலாக' மாற்றி, அதையே தலைநகராகக் கொண்டு மறுபிறவி எடுக்கக் கூடும் என்ற நம்பிக்கையை அவள் வளர்த்துவந்தாள்; அந்தக் 'கான்ஸ்டான்ட்டிநோப்பிலில்' இருந்தவாறு தன் பேரன் கிரேக்கப் பேரரசனாக முடிசூடி ஆளவேண்டும் என்னும் குறிக்கோளுடனேயே அவனுக்குக் கான்ஸ்டன்ட்டைன் என்று பெயருமிட்டாள்!

இதற்கிடையில், துருக்கியில் பல பயங்கர நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவையெல்லாம் ரஷிய முகவர்களால் தூண்டப்பட்டவையாகும். அல்ஜீரியாவின் மிக்க ஆற்றல் படைத்தவரும் இப்பொழுது கப்பித்தான் பாஷாவாக இருந்தவருமாகிய ஹஸன் என்பவர் கிளர்ச்சிகளை ஒடுக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தார். 1776-ல் அவர் சிரியாவில் கிளர்ச்சி செய்தவரான ஷேய்க் ஜாஹிரை (Sheik Jahir) ஒடுக்கினார். மொரியாவின்மீது ஓர்லாஃப் படையெடுத்தபோது அவருக்கு ஆதரவு கொடுத்து, அவர் முறியடிக்கப்பட்டதற்குப் பிறகு மொரியாவிலேயே தங்கி விட்டவர்களான அல்பேனியர்கள் இப்பொழுது கிளர்ந்தெழுந்த போது 1778-ல் ஹஸன் அவர்களை அவ் விடத்திலிருந்து விரட்டினார். பிறகு ஹஸன் எகிப்தின் மம்லூக்குகளின் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு உத்தரவிடப்பட்டார். ஒரு படையைத் திரட்டிக்கொண்டு அவர் அங்குச் சென்று, சுல்தானின் அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டினார். 1787-ல் அவர் மீண்டும் இஸ்தம்பூலுக்கு வரவழைக்கப் பெற்றார். அப்பொழுது ரஷியாவுடன் போர் மூள இருந்தது. எழுபத்தைந்து வயதாகி விட்டிருந்த இவர் சிறிது காலத்திற்குக் கருங்கடலில் உத்மானியர்களின் கப்பற் படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால், இந்தத் தடவை நற்பேறு அவரை விட்டுச் சென்று விட்டது போலும்! பல முறையும் அவர் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டார்.

துருக்கியைப் போருக்கு இழுக்கக் காத்தரீன் விடாமல் முயன்று வந்தாள். 1787-ல் அவளுக்கும் ஆஸ்ட்ரியாவின் பேரரசராகிய இரண்டாம் ஜோஸஃபுக்குமிடையே ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. துருக்கியர்களுக்கெதிராக இரு தரப்பிலும் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதற்காகவும் துருக்கியர்களைத் திட்டவட்டமாக ஐரோப்பாவிலிருந்து விரட்டியோட்டுதற்காகவுமே அவ் வொப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. துருக்கியின் ஐரோப்பிய மாநிலங்களை அவ் விரு வல்லரசுகளும் தமக்கிடையே பங்கிட்டுக் கொள்வதற்காகப் பங்கீடு ஒப்பந்தம் ஒன்றும் செய்து கொள்ளப்பட்டது. 'கான்ஸ்டான்ட்டி

நோப்பிலில் கிரேக்கப் பேரரசு ஒன்று நிறுவப்பட வேண்டும்' என்றும் திட்டம் தீட்டப்பட்டது.

பேரரசி, தன் காதலரும் தன் விருப்பத்திற்குரியவருமான இளவரசர் போட்டெம்கினின் (Potemkin) ஆதரவைப் பெற்றுக் கிரீமியாவின் வழியாகப் படைகளைத் திரட்டியனுப்பினாள். அவருடைய முயற்சியின் விளைவாகத்தான் கிரீமியா ரஷியப் பேரரசுடன் முன்பு இணைத்துக் கொள்ளப்பட்டது. பேரரசர் ஜோஸப் அவரைக் கெர்ஸன் (Kherson) என்ற இடத்தில் சந்தித்துத் துருக்கியுடன் போருக்குச் செல்வதற்கான திட்டம் ஒன்றைத் தீட்டினர். வெற்றித் தோரணம் ஒன்று நடப்பட்டது. அதில் 'பைஸான்ஷியத்திற்குச் செல்லும் வழி' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன.[1] வலாச்சியா மால்தேவியா ஆகிய மாநிலங்களில் மக்களைக் கிளர்ந்தெழும்படி தூண்டுவதற்கு விஷமிகள் அனுப்பப்பட்டனர். துருக்கியினிடத்திருந்து பெஸ்ஸரேபியா என்ற மாநிலத்தையும் ஒக்ஸகாஃப் என்ற அரணையும் பெறுவதற்காக அதிகார பூர்வமான உரிமைகள் வற்புறுத்தப்பட்டன; அவையனைத்தும் முன்பு கிரீமியாவின் கானுக்குரியனவாயிருந்தன என்று காரணம் கூறப்பட்டது. இவ் வுரிமைப் பாராட்டுதல்கள் துருக்கியர்களுக்கு எரிச்சலை உண்டாக்கின. சில ஆண்டுகளாக அவர்கள் அமைதியாய் வாழ்ந்து வந்ததனால், அவர்கள் புத்துணர்ச்சி பெற்று எழுந்தனர். கில்பர்ன் நகரை மீட்பதற்கும் கிரீமியாவை மீண்டும் கைப்பற்றுவதற்கும் அவர்கள் அவாக்கொண்டுவிட்டனர். மக்கள் உணர்ச்சி தட்டி எழுப்பப்பெற்றது. திவானின் வற்புறுத்தலின் பேரிலும், எல்லைக் கோட்டைகளின் தற்காப்பிற்கான போதிய அளவு ஆயத்தங்களைச் செய்து கொள்ளாமலும் சுல்தான் 1787, ஆகஸ்ட் 15ஆம் நாள் ரஷியாவின்மீது போர் தொடுத்தார்.

கில்பர்னைத் தாக்குவதற்காக நீஸ்டர் (Dniester) நதிக்கரையோரத்தில் இருந்த ஒக்ஸகாஃப் என்ற அரணுக்கு சுல்தான் ஒரு பெரும் படையை அனுப்பினர். அதனுடன் ஒத்துழைப்பதற்காக ஹஸனின் தலைமையில் ஒரு கப்பற்படையும் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், துர்வசமாக கில்பர்னில் இருந்த ரஷியப் படைக்கு சுவார்ரோ என்ற புகழ்பெற்ற படைத் தலைவர் தலைமை வகித்திருந்தார். துருக்கிப் படையின் பெரும்பாலான

[1] 29—5—1453 முதல் உத்மானியப் பேரரசின் தலைநகர் 'இஸ்தம்பூல்' என்று அழைக்கப்பெற்று வந்திருக்க, இப்போது காத்தரீனும் ஜோஸபும் சேர்ந்து அந்தப் பெயரை அழித்து, மிகப் பழைய கிரேக்கப் பெயராகிய 'பைஸான்ஷியம்' என்ற பெயரை மீளவூட்டி, இப்படி முடுக்கி விட்டார்கள். இஃதோர் அரசியற் குறும்பாகும்.

பகுதியை கில்பர்ன் நதியைக் கடந்துசெல்ல விட்டுவிட்டு, அவர் அதை நிலத்தின் மீதிருந்து தாக்கினர். அதே சமயத்தில் நிகோலஃப் (Nicholaif) என்பவர் துருக்கிக் கப்பற்படையைப் பீரங்கிகளால் தாக்கிக்கொண்டிருந்தார். இந்த முறையை அவர்கள் கடைப்பிடித்தமையால், அவர்களுக்கு அமோக வெற்றி கிட்டிற்று. கில்பர்ன் புறத்தில் வந்து சேர்ந்த எண்ணூயிரம் உத்மானிய படைகள் முறியடிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டன. ஹஸனின் கப்பற்படையின் பெரும்பகுதி அழிந்தது. கில்பர்ன்மீது நடத்தப்பட்ட தாக்குதல் முற்றிலுமே தோல்வியடைந்தது.

1787-ல் இரு தரப்பினரும் (துருக்கி-ஆஸ்ட்ரியா) வாளா இருந்தனர். 1788ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆஸ்ட்ரியப் பேரரசர் எக்காரணமு மின்றித் துருக்கியின்மீது போர் தொடுத்தார். தம் நாட்டிலேயே தொல்லைகள் ஏற்பட்ட காரணத்தை முன்னிட்டு அவர் காத்தரீனுடன் ஏற்கெனவே செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைச் செயல்படுத்தத் தாமதித்து விட்டிருந்தார். ஆனால், இப்போது அவ்விதம் செயல்படுத்திக் கொள்வதற்கு அவருக்கு வாய்ப்புக் கிட்டிற்று. ஆகவே, துருக்கியர்கள் இரு மாபெரும் பகைவர்கள் தங்களை எதிர்த்து நிற்பதைக் கண்டனர். ஆனலும், ரஷியாவிற்குத் தெற்கில் ஸ்வீடனுக்கெதிராகப் போர் நிகழ்ந்துவந்தது. எனவே, காத்தரீனல் தன் முழுப் படைப்பலத்தையும் துருக்கியர்களுக்கு எதிராக அனுப்ப இயலவில்லை. இக் காரணத்தை முன்னிட்டு, மால்தேவியாவில் ஆஸ்ட்ரியப் படைகளுக்கு ஆதரவு அளிப்பதாகத் தான் ஏற்கெனவே ஒப்புக்கொண்டபடி படை உதவியை அவளால் அனுப்பமுடியவில்லை. ஏற்கெனவே வாக்குறுதி அளித்தபடி ஏஜியன் கடலில் ஒரு கப்பற்படையை அனுப்புவதற்கும் அவளால் இயலவில்லை. ஆனலும், ஆஸ்ட்ரியாவின் பேரரசர் இரண்டாம் ஜோஸப் இரண்டு லட்சம் படைவீரர்களைக் கொண்டு துருக்கியர்களைத் தாக்க முற்பட்டார். ஆனல், தாம் ஒரு திறமையற்ற படைத் தலைவர் என்பதை அவர் வெகு விரைவிலேயே வெளிப்படுத்திவிட்டார். போரில் நிகரற்றனவாக இருந்த சூழ்நிலைகளின் விளைவாகத் தம் படைகளைத் தோல்வியுறும்படி அவரே செய்து விட்டார்.

ரஷியர்கள் முன்னேறி வருவதற்கான அபாயம் ஒன்றும் தோன்றிவிடாது என்று உணர்ந்த துருக்கியர்கள் பெரும்படை ஒன்றை டான்யூபுக்கப்பால் அனுப்பி வைத்தனர். அது ஆஸ்ட்ரியபடை ஒன்றுடன் மோதி அதைத் தோற்கடித்தது. தோல்வி

யுற்ற இந்தப் படைக்கு நிவாரணம் அளிப்பதற்காகவும், ஹங்கேரியைப் பாதுகாப்பதற்காகவும் ஜோஸப் முன்னேறினார். சிலாட்டினு (Slatina) என்ற இடத்தில் ஒரு மாபெரும் படையையும் அவர் திரட்டினார். மிக அருகாமையில்தான் துருக்கிப் பிரதம அமைச்சரின் சேனை நின்றுகொண்டிருந்தது. இறுதி நேரத்தில், உத்மானியர்களைத் தாக்குவதற்கான தயாரிப்புகளெல்லாம் மேற்கொள்ளப்பட்ட பிறகு பேரரசர் ஏனோ பீதிக்கு உள்ளாயினர்! தாக்குவதற்கான தமது திட்டத்தை அவர் கைவிட்டு விட்டு, தெமெஸ்வார் திசைநோக்கிப் பின்வாங்கினர். நள்ளிரவில் அவர் பின்வாங்குதலை மேற்கொண்டார். எங்கும் குழப்பம் நிலவி இருந்தது. துருக்கியர்கள் மிகவும் நெருங்கிவிட்டனர் என்றும், தாக்க விருக்கின்றனர் என்றும் ஒரு வதந்தி பரவியது. ஆஸ்ட்ரிய பீரங்கிப் படையினர் வேகமாகப் பின்வாங்கத் தொடங்கினர். காலாட்படையினர் அவர்களை எதிரிகள் என்று தவருக நினைத்துக்கொண்டு சிறிய கூட்டங்களாகப் பிரிந்து, தங்கள் பீரங்கிப் படையினரைத் தாக்கத் தொடங்கினர். விடிந்ததும் உண்மை வெளியாயிற்று. ஆஸ்ட்ரியர்கள் தம் ஆட்களைத் தாமே சுட்டுக் கொன்றுவிட்டனர். இப்பொழுது அங்கே துருக்கியர்கள் வந்து உண்மைத் தாக்குதலை நடத்தினர். அவர்கள் ஆஸ்ட்ரியர்களை முறியடித்து அவர்களுடைய பொருள்களையும் பீரங்கிகளையும் கைப்பற்றிக்கொண்டனர். இந்த ஆண்டில் மற்ற எந்த மோதலும் நிகழவில்லை. இராணுவச் சூழ்ச்சியைக் கையாண்டதில் பேரரசர் ஜோஸப் முப்பதினாயிரம் வீரர்களையும் பிணியால் பீடிக்கப்பட்ட நாற்பதினாயிரம் ஆட்களையும் இழந்தார். படைக்குத் தலைமை தாங்குவதற்கு அவர் மீண்டும் துணியவில்லை.

1788-ல் ஆகஸ்ட் மாதம் வரையிலும் ரஷியர்கள் வாளா விருந்தனர். ஆனாலும், அம் மாதத்தில் போட்டெம்கின் (Potemkin) ஒக்ஸகாஃப் என்ற அரணை முற்றுகையிட்டார். முற்றுகை டிஸம்பர் மாதம் வரையிலும் நீடித்தது. அப்பொழுது சுவார்ரோ அவருடைய உதவிக்கு வந்து சேர்ந்தார். இவருடைய ஆலோசனையின் பேரில் கோட்டை தாக்கப்பட்டது. ரஷியர்களுக்கு ஏராளமான இழப்பு நேரிட்டபோதிலும், அவர்கள் எல்லா எதிர்ப்புகளையும் தவிர்த்துக்கொண்டு, நகருக்குள் புகுந்தனர். எங்கும் படுகொலை நடைபெற்றது. ஏராளமான ஆட்சேதம் ஏற்பட்ட போதிலும், 1788-ல் நிகழ்ந்த படையெடுப்புத் துருக்கியர்களுக்கு முற்றிலுமே பாதகமாக இருந்தது என்று கருதுவதற்கில்லை. அவர்கள் ஒக்ஸகாஃபை இழந்து விட்டாலும், கில்பர்னையும் கிரீமியாவையும் மீண்டும் பெறுவதற்கான எல்லா நம்பிக்கைகளும் சிதறுண்டு விட்டன என்றாலும், அவர்

கள் ஆஸ்ட்ரியர்களை வெற்றிகரமாக எதிர்த்தனர். ஜோஸப் நடத்திய தாக்குதல் இகழ்ச்சிக்குரிய வகையில் படுதோல்வி யடைந்தது.

அடுத்த ஆண்டில் நிகழ்ந்த படையெடுப்புத் துருக்கியர் களுக்கு மிக மோசமாக முடிந்தது. 1789ஆம் ஆண்டின் துவக் கத்தில் சுல்தான் அப்துல் ஹமீது இறந்தார். அவருக்குப் பிறகு அவருடைய அண்ணன் மகனை மூன்றும் சலீம் (Selim III) பட் டத்திற்கு வந்தார். இருபத்தேழு வயதினராக இருந்த இவர் ஆற்றல் மிக்கவர்; பொதுநலனில் அக்கறையுள்ளவர். இவர் பட்டத்துக்கு வரவேண்டியவரா யிருந்தும், சுல்தான் ஹமீத் இவரைக் கொடுமையாக நடத்தவில்லை. இவருக்குப் பெரும் சுதந்தரம் அளிக்கப்பட்டிருந்தது. இவருடைய தகப்பனாரான முஸ்தஃபா நினைவுக் குறிப்பேடு ஒன்றை விட்டுச்சென்றார். அதில் அவர் அரசுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளைப்பற்றியும் பரவலான சீர்திருத்தங்களைப் புகுத்துவதற்கான அவசியத்தைப் பற்றியும் எடுத்துக் காட்டியிருந்தார். அக் குறிப்பேடுகளை சலீம் மிகவும் ஆழ்ந்து படித்திருந்தார். தீவிரமான மாறுதல்களுக் கான தேவையை அவர் முற்றிலும் உணர்ந்திருந்தார். நல்ல வேளையாக, அவர் தம் படைகளுக்குத் தாமே தலைமை வகித்துப் போர் முனைக்குச் சேனைகளைக் கொண்டு போகவில்லையானாலும், படையின் நிலையைச் சீர்ப்படுத்துவதற்கும் தம் குடிமக்களிடம் போர் ஆற்றலைப் பரப்புவதற்கும் அவர் பெரும்பாடு பட்டார். அவருடைய அரண்மனையில் ஏராளமாகக் குவிந்து கிடந்த பொன் தட்டுகளையெல்லாம் அவர் தங்கசாலைக்கு அனுப்பியும், அந்தப்புரத்து மாதரசிகளைத் தங்கள் அணிகலன்களைக் கரு வூலத்திற்குக் கொடுத்துவிடுமாறு வற்புறுத்தியும் நிரம்ப நிதி வளத்தைப் பெருக்கினர். எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தங் களைப் புகுத்துவதில் அவர் அக்கறை காட்டினர்.

துருக்கியர்களுக்குத் துர்வசமாக, பேரரசர் ஜோஸப் ஆஸ்ட் ரியப் படைக்கு மீண்டும் தலைமை தாங்க முடியாத அளவிற்கு நோய்வாய்ப்பட் டிருந்தார். ஆகவே, அவருடைய இடத்தை மார்ஷல் லௌடன் (Marshall Lowdon) என்பவர் ஏற்றார். இவர் ஏழாண்டுப் போரில் பெரும் தீரத்துடன் போர் புரிந்தவ ராவார். சிறிய பதவியிலிருந்து படிப்படியாக உயர்ச்சி பெற்று முன்னுக்கு வந்த ஸ்காட்லாந்துக்காரர் அவர்; போர்க்களத்தில் மிக விரைவாகச் சரியான முடிவினை எடுக்க வல்லவர். எழுபத் தைந்து வயதாகி இருந்த போதிலும், அவர் மிக்க ஆவேசத் துடன் போர் புரிய வல்லவர். ஆஸ்ட்ரியப் படைக்கு அவர்

புத்துயிர் ஊட்டினர். அவருடைய தலைமையில் அப் படையின் ஒரு பகுதி பாஸ்னியாவின்மீதும் ஸெர்பியாவின்மீதும் படை யெடுத்தது. அங்கே அது அமோக வெற்றியையும் பெற்றது. பாஸ்னியாவில் முஸ்லிம் மக்கள் அதற்குப் பலத்த எதிர்ப்பு அளித் தனர். ஆனால், ஸெர்பியாவில் விவசாயிகள் அப் படைக்குப் பெரும் உதவியும் ஒத்துழைப்பும் அளித்தனர். கோபர்க் இளவர சரின் (Prince of Coburg) தலைமையில் இருந்த ஆஸ்ட்ரியப் படை ஒன்று சுவார்ரோவின் தலைமையில் இருந்த ரஷியப் படை யுடன் சேர்ந்து கொண்டு மால்தேவியாவைத் தாக்கிற்று. சுல்தான் சலீம் ஹஸனைத் தம் பிரதம அமைச்சராகவும் படைத் தலைவராகவும் நியமித்துக் கொண்டார். ஆனால், சுவார்ரோ போன்ற ஒரு மாபெரும் வீரருக்கு ஹஸன் நிகராக இருக்கவில்லை. ஹஸன் ஒரு பெரும் படையுடன் கோபர்கை எதிர்க்க முன்னேறி னர். மால்தேவியாவின் எல்லையிலுள்ள ஃபோக்ஷானி என்ற இடத்தில் கோபர்க் காத்துக் கொண்டிருந்தார். சுவார்ரோ செயல்பட்டிருக்காவிடின், துருக்கியரின் சிறப்புப் படைக்கு முன் னிலையில் கோபர்க்கின் படை தோல்வி அடைந்திருக்கக் கூடும். ஆனால், சுவார்ரோ 96 கிலோமீட்டர் தூரத்தில் இருந்த மிகக் கடுமையான காடு மலைப் பிரதேசத்தை முப்பத்தாறு மணி நேரத்தில் கடந்து, ஆஸ்ட்ரியர்களின் உதவிக்கு வந்துவிட்டார். அப்படி வந்து இறங்கினதும், சுவார்ரோ அந்திவேளையில் உத்மா னியர்களைத் தாக்க நடவடிக்கைகளை எடுத்தார். அடுத்த நாள் பகல் விடிவதற்கு இரண்டுமணி நேரத்துக்கு முன்பே துருக்கிய ரின் முகாமைத் தாக்கினர். அவர்களுடைய கூடாரங்கள் ரஷிய துப்பாக்கி முனையில் குத்திக் கொண்டு போகப்பட்டன. துருக்கி யர்கள் தங்கள் பீரங்கிகளையும் ஏராளமான பொருள்களையும் இழந்தனர். சலீம் மற்றொரு பெரும் படையை அனுப்பினர். ஆனால், அதுவும் ரிம்மிக் நதியோரத்தில் (Rimmick River) சுவார்ரோவினால் தோற்கடிக்கப்பட்டது.

இந்த இரு பெரும் தோல்விகளும் தலைநகர் இஸ்தம்பூலில் பெரும் பீதியை உண்டாக்கிவிட்டன. இதனைப் போக்குவதற் காக சுல்தான் தம்முடைய ஆற்றல் மிக்க படைத் தலைவரான ஹஸனைக் கொன்றுவிடுமாறு உத்தரவிட்டார். இது சுல்தா னினைத்த பெரும் இழிவான செயலாகும். பற்பல போர்களில் மாபெரும் வீரராக விளங்கியவர் இக் கதிக்கு ஆளாயினர்.

தூர மேற்கில் ஆஸ்ட்ரியர்கள் 1789ஆம் ஆண்டு படை யெடுப்பில் பெல்கிரேடையும் செமெண்ட்ரியாவையும் கைப்பற்றி னர். அடுத்த ஆண்டில் ரஷிய - ஆஸ்ட்ரியப் படை வீரர்

களுக்கு ஏற்படுவதாக இருந்த வெற்றிகள் இரண்டு நிகழ்ச்சி களின் விளைவாக நிறுத்தி வைக்கப்பட்டன. ஒன்று, பேரரசர் ஜோஸஃபினுடைய பேரரசின் பல்வேறு இடங்களில், உள்ளூர்ப் பழக்கங்களுக்கு மாறுக அரசாங்கம் அவசரப்பட்டு மையமாக்கப் பட்ட காரணத்தை முன்னிட்டுத் தோன்றிய கிளர்ச்சிகளின் விளைவாகத் துருக்கியர்களின்மீது கை ஓங்குவதைச் சற்று நிறுத்தி வைப்பது அவசியம் என்று கருதி, உள்ளூரில் தோன்றிய கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்கெனப் போர்முனைகளிலிருந்து படை களை வரவழைத்துக்கொள்ள அவர் விரும்பினர். ஆனலும், அவருடைய அகால மரணம் 1790-ல் ஏற்பட்டது. அவருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த லியோபோல்ட் (Leopold) என்பவர் அறிவும் கூர்மதியும் படைத்தவராகையால், தம் சகோதரரின் கொள்கைக்கு நேர்மாறுன கொள்கையைக் கடைப் பிடித்தார். துருக்கிக்கு எதிராக ரஷியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள் வதை இவர் ஆதரிக்கவில்லை.

போரிலிருந்து ஆஸ்ட்ரியா பின்வாங்கிக் கொண்டதற்கு மற்றெரு காரணம் இங்கிலாந்து, பிரஷ்யா மற்றும் ஹாலந்து ஆகிய நாடுகள் கிழக்கு ஐரோப்பாவின் அரசியல் விவகாரங் களில் தலையிடத் தொடங்கியதாகும். இந்த மூன்று வல்லரசு களும் மிக நெருங்கிய பாதுகாப்புக் கூட்டுறவு ஒன்றை உருவாக்கி யிருந்தன. ஒன்றுக இணைந்து செயல்பட்ட அவற்றின் செல் வாக்கு மிக அதிகமானதாகவே இருந்தது. அவை ஹாலந்தில் ஃபிரெஞ்சு செல்வாக்கை ஒடுக்கின. ரஷியாவுக்கும் ஸ்வீடனுக் கும் இடையே ஏற்பட்டிருந்த தொல்லைகளில் அவை தலையிட்டு அவ்விரு நாடுகளுக்குமிடையே அமைதியை நிலைநாட்டின. இப்பொழுது அவை ஆஸ்ட்ரியாவுக்கும் துருக்கிக்கும் இடையே மத்தியஸ்தம் செய்ய முன்வந்தன. மத்தியஸ்தத்திற்கு இணங்க வில்லை யென்றல், கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவை அச்சுறுத்தின. ஜோஸஃபின் மரணம் அமைதி ஏற்படுவதற்கு மிகவும் ஏதுவாக இருந்தது. துருக்கியர்களுடன் ஒப்பந்தத்திற்கான நிபந்தனைகள் தீட்டப்பட்டன. அவை, சிஸ்டோவா (Sistova) ஒப்பந்தம் என்ற ஓர் ஒப்பந்தத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. போருக்கு முன்பு இருந்த நிலையேதான் இப்பொழுது நீடிக்கவேண்டும் என்று ஒப்பந் தம் வற்புறுத்திற்று. அதன்படி, ஆஸ்ட்ரியா கைப்பற்றி வைத் திருந்த பாஸ்னியா, ஸெர்பியா, மற்றும் வலாச்சியா ஆகியவை யும் பெல்கிரேட், செமெண்டிரியா ஆகிய அரண்களும் துருக்கிக்குத் திருப்பிக் கொடுத்துவிடப்பட வேண்டும் என்று வற் புறுத்தப்பட்டது. குரோஷியாவில் குறுகிய ஒரு நிலப்பகுதியும்

பழைய ஆர்சோவா (Old Orsova) என்ற நகரமும் ஆஸ்ட்ரியர் களின் வசமே விடப்பட்டிருந்தன. இவையெல்லாம் போருக் காக ஆஸ்ட்ரியா எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு ஈடாக மாட்டா. ஆனல், புதிய ஆஸ்ட்ரியப் பேரரசர் துருக்கி துண்டிக் கப்படுவதனுலோ போலந்து துண்டிக்கப்படுவதனுலோ எவ் விதப் பலனேயும் தம் நாடு அடையாது என்றே நம்பினுர். உண் மையில், ஜோஸஃப் உயிருடன் இருந்திருப்பாராயின், பிந்திய நிகழ்ச்சிகள் வேறு திசையில் திரும்பிவிட்டிருந்திருக்கக் கூடும். போலந்துகூடப் பலியாவதிலிருந்து தப்பித்துக் கொண்டிருக்கக் கூடும்.

துருக்கியர்களுக்கெதிராக ஏற்பட்டிருந்த கூட்டுறவில் ரஷி யாவை விட்டு ஆஸ்ட்ரியா பிரிந்தது காத்தரீனுக்குப் பேரிடியாக இருந்தது. ஆனலும், ஸ்வீடனுடன் ஏற்பட்ட ஒப்பந்தம் அந்த இழப்பை ஓரளவு ஈடு செய்தது. அந்த ஒப்பந்தத்தின் விளை வாக, அந் நாட்டின் கப்பற்படையையும் நிலப்படையையும் எஞ்சியிருந்த எதிரிக்கு எதிராகக் காத்தரீன் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. ஐரோப்பாவிலிருந்து துருக்கியர்களை விரட்டுவதற்கான கனவை அவள் இன்னும் கண்டு கொண்டு தான் இருந்தாள். அதுபோலவே, 'கான்ஸ்டான்ட்டி நோப்பி லில்' கிரேக்கப் பேரரசை நிலை நாட்டவும் அவள் கனவு கண்டு கொண்டிருந்தாள். கிறித்தவர்களின் எதிரிகளை (உத்மானியர் களை) விரட்டி யடித்து, அவ்வெதிரி கைப்பற்றி வைத்திருந்த பகுதிகளை மீட்டு, தம் பழைய சுதந்தரத்தையும் உரிமைகளையும் மீண்டும் பெறுவதற்கு ஆயுதங்களை ஏந்திப் பிடித்துக் கிளர்ச்சி செய்யுமாறு கிரேக்கர்களைத் தூண்ட அவள் ஆட்களை அனுப்பிக் கொண்டே இருந்தாள். வலுச் சண்டையைக் கிளப்புவதற்கான சாக்குபோக்குகளை அவள் தேடிப் பிடித்து, போரும் தொடுத்துக் கொண்டாள். லெவாண்டில் இருந்த சற்று அதிக பணக்கார கிரேக்கர்கள் ஒரு பெரும் கப்பற்படையை உருவாக்கி வைத் திருந்தனர். இக் கப்பல்களில் துப்பாக்கிகள் பொருத்தப்பட் டிருந்தன. அப் படையின் பொறுப்பு லாம்பிரியோ காவிலியானி (Lambrio Caviziani) என்ற கிரேக்க தளபதியிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. முழு ஆயத்தங்களுடன் இக் கப்பற்படை ஏஜியன் கடலில் நுழைந்து ஸ்கியாஸ் தீவைத் (Isle of Scios) தன் தள மாகக் கொண்டு விட்டது. அக் கடலில் இருந்த துருக்கிப் படை மிக்க அடிமட்ட நிலையை அடைந்திருந்தது. ஏனெனில், துருக்கிக் கப்பற் படையின் மிகச் சிறந்த கப்பல்கள் கருங்கடலில் பணி யாற்றி வந்தன. ஆனலும், ஏழு அல்ஜீரிய கப்பற் கொள்ளைக் காரர்கள் சுல்தானுக்கு முழு ஆதரவும் கொடுக்க முன்வந்தனர்;

துருக்கிக் கப்பற்படைகளுடன் அவர்கள் இணைந்து கடற்போர் புரிந்து கிரேக்கக் கப்பற்படை ஒன்றை மூழ்கடித்தும் விட்டனர்.

ரஷிய தரைப் படை சற்று நல்ல சூழ்நிலையில் இருந்தது. டான்யூப் நதியின் வடக்குப் புறத்தில் மிக முக்கிய அரணாக இருந்த இஸ்மாயீல் என்ற அரணை அப் படையினர் 1790-ல் கைப்பற்றிக் கொண்டனர். இந்த நகரம் துருக்கியர்களின் கைவசப்பட்டிருந்த வரையிலும் ஒரு படை பெஸ்ஸரேபியாவிலிருந்து புறப்பட்டு பல்கேரியாவுக்குள் நுழைவது அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. அந்தக் கோட்டையைப் பெரும் படை ஒன்று காத்து வந்தது. அதைக் கைப்பற்றுவதற்காகப் போட்டெம்கின் சுவார்ரோவை நியமித்திருந்தார். அவ் வரணை அடைந்து ஆறு நாட்களுக்குப் பிறகு சுவார்ரோ அதைத் தாக்குமாறு கட்டளையிட்டார். பெரும் இழப்புடன் அந் நகரம் கைப்பற்றப்பட்டது. சுவார்ரோவேகூடக் கண்டிராத பெரும் படுகொலை நிகழ்ந்தது. வெற்றியைப்பற்றிய செய்தி செய்ன்ட் பீட்டர்ஸ்பர்குக்கு[1] எட்டியவுடன் பேரரசி பிரிட்டிஷ் தூதராக இருந்த சர் சி. விட்வர்த்தைக் (Sir C. Whitworth) கண்டு பின் வருமாறு குறும்புத் தனமாகக் கூறினாளாம்: 'என்னை செய்ன்ட் பீட்டர்ஸ்பர்கிலிருந்து விரட்டியடிக்க விரும்புபவர்கள் கான்ஸ்டான்ட்டிநோப்பிலுக்குச் சென்று ஓய்வுபெற என்னை அனுமதிப்பார்கள் என்று நம்புகிறேன்!'

அதற்கிடையே இங்கிலாந்து, பிரஷ்யா, ஹாலந்து என்னும் கப்பற்படைப் பலம் மிகுந்த மூன்று வல்லரசுகளும் ஆஸ்ட்ரியாவுக்கும் துருக்கிக்கும் இடையே மத்தியஸ்தம் செய்வதில் வெற்றி பெற்று, அவற்றுக்கிடையே அமைதியை நிலைநாட்டி, ரஷியாவுக்கும் துருக்கிக்கும் இடையேகூட அதே போன்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கு முயன்றன. பேரரசி காத்தரீனுடன் மத்தியஸ்தம் செய்வதற்காக 1790ஆம் ஆண்டில் அவை முயற்சி எடுத்துக் கொண்டன. பிரஷ்ய அரசருக்கு அவள் பதிலளிக்கையில் அம் முயற்சியைப் புறக்கணித்து விட்டாள். ஆனாலும், ஏற்கெனவே தன்னிடத்திலிருந்த நீஸ்டர் நதிக்கும் பக் நதிக்கும் இடையிலுள்ள மாநிலத்தையும் தனக்கு அளித்தால் ஒப்பந்தத்திற்குத் தான் ஆட்சேபிக்கமாட்டாள் என்று மறைமுகமாக அவள் அறிவித்தாள். இதற்குக் கூட்டு வல்லரசுகள் இணங்க மறுத்தன. ஓக்ஸகாஃபைத் துருக்கிக்குத் திருப்பித் தந்துவிடத்தான் வேண்டுமென்று அவரை வற்புறுத்தவும் அவை தயாராகிக் கொண்டிருந்தன.

[1] பின்னாளில் லெனின்கிராட் என்னும் பெயரைப் பெற்றுக்கொண்டிருந்த St. Petersburg என்னும் நகரே பழங்கால ரஷியத் தலைநகராகும்.

கிரேட் பிரிட்டனைப் பொறுத்தவரை, துருக்கியின் சார்பாக அவர்களுடைய பேரரசை ஆதரிப்பது என்பது அந் நாட்டின் கொள்கையில் ஒரு புதிய திருப்பமாகும். பதினெட்டாம் நூற்றாண்டின் பெரும் பகுதியில் அதன் அரசாங்கம் ரஷியாவுடன் தொடர்பு கொண்டிருந்தது. அதனுடைய கொள்கைக்கு அடிப்படையாக இருந்தது ஃபிரான்ஸின் மீது அது கொண்டிருந்த பொறுமையே யாகும். ரஷியாவை அது ஃபிரான்சுக்குச் சரி ஒப்பு நிலையாகக் கருதிற்று. துருக்கிக்கு எதிராக ரஷியா எடுத்துக் கொண்ட எம் முயற்சிக்கும் அது எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. துருக்கியுடன் தொடர்பு கொண்டிருப்பது இங்கிலாந்திற்கு உசிதமானதன்று என்று சாத்தாம் பிரபு (Lord Chatham) வற்புறுத்தி வந்தார். 1784-ல் காத்தரீன் கிரீமியாவை இணைத்துக் கொண்ட பொழுது இங்கிலாந்து மௌனம் சாதித்தது. அப் பொழுது இங்கிலாந்தின் வெளி நாட்டுத் துறையின் அமைச்சராக இருந்த சார்லஸ் ஃபாக்ஸ் (Charles Fox) என்பவர் சாத்தாம் பிரபுவைப் போன்றே ரஷியாவை ஆதரித்தார். எனவே, 1790-ல் இளைய பிட் (Younger Pitt) துருக்கியின் சார்பாகத் தென் கிழக்கு ஆசியாவில் சக்தி சம நிலையை மீண்டும் நிலை நாட்டுவதற்காக ரஷியாவிற்கு எதிராகப் பிரஷ்யாவுடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொள்வது என்பது ஒரு புதிய திருப்பமாகும்.

மத்தியஸ்தத்திற்கான வேண்டுகோளை பிரிட்டிஷ் அரசாங்கம் மீண்டும் விடுத்தது. பீட்டர்ஸ்பர்கில் இருந்த அதன் தூதர், தற்போதைய நிலையின் அடிப்படையில் பேரரசி அமைதியை ஏற்றுக் கொண்டால், துருக்கியர்கள் கிரீமியாவின் மீது கொண்டிருந்த உரிமைகளை முறைப்படி விட்டுக் கொடுப்பதற்குத் தயாராக இருப்பர் என்று அறிவிக்கும்படி உத்தரவிடப்பட்டார். காத்தரீன் இதற்குத் தன் அமைச்சர் வாயிலாக அறிவித்த பதிலில், கூட்டுறவின் உறுப்பினர்கள் இவ்விதமாக ஒரு சுதந்தர அரசாங்கத்தின் (ரஷியாவின்) விவகாரங்களில் தலையிடுவதைத் தான் சிறிதளவும் விரும்பவில்லை என்றும், தன் புகழைக் காப்பாற்றுவதற்கென்று எந்த விதமான உதவியும் தனக்குத் தேவையில்லை என்றும் அறிவித்து விட்டாள். தன் புகழை இழக்க விரும்பாத பேரரசி எவ்வித ஆபத்தையும் சமாளிக்கத் தயாராக இருந்தாள். ஒக்ஸகாஃபையும் அதைச் சுற்றி யிருந்த மாவட்டத்தையும் தானே வைத்துக் கொள்ளத் தன்னை அனுமதித்தால் இங்கிலாந்தின் அரசருடைய நற்பணிகளைத் தான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவள் அறிவித்தாள்.

அவள் அளித்த விடை மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், எந்த நிலையிலும் ரஷியா போரை முடிப்பதற்குத் தயாராக இருப்பதையும், ஐரோப்பாவிலிருந்து துருக்கியரை விரட்டியடித்தே தீர்வதாகத் தான் கொண்டிருந்த உறுதியை விட்டுக் கொடுப்பதற்கும் அவள் தயாராக இருக்கிறாள் என்பதையும் அது வெளிப்படுத்திற்று. ரஷியர்கள் மீண்டும் மீண்டும் வெற்றிகளைப் பெற்றார்கள் என்றாலும், போரில் இறந்த அவர்களின் எண்ணிக்கையும் காயமுற்றவர்களின் எண்ணிக்கையும் உண்மையில் மிக அதிகமாகவே இருந்தன. மற்றும் பல தொல்லைகளும் பேரரசியை எதிர்நோக்கி நின்றன. துருக்கிப் பிரச்சினையை விட அவள் அதிக அக்கறை கொண்டிருந்த போலந்துப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்தது. இரண்டாம் பங்கீடு ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்டது. ஆகவே அவளுக்குச் சற்றுச் சுதந்தரம் தேவைப்பட்டது. இருப்பினும், ஒக்ஸகாஃபை விட்டுக்கொடுக்க அவளுக்கு மனமில்லை.

இதற்கிடையே பிரிட்டிஷ் அரசாங்கமும் பிரஷ்ய அரசாங்கமும் ஒன்றை ஒன்று கலந்தாலோசித்துக் கொண்டிருந்தன. ஒக்ஸகாஃபையும் அதைச் சுற்றியிருந்த மாநிலத்தையும் அவள் சரணடைக்க வேண்டும் என்றும், போருக்கு முன்னால் இருந்த நிலையின் அடிப்படையில் அமைதி ஏற்பட வேண்டும் என்றும் தாங்கள் வற்புறுத்தியே தீர்வதென்று அவை உறுதி கொண்டன. அதே போன்ற நிபந்தனைகளின் பேரில் ஆஸ்ட்ரியாவும் ஸ்வீடனும் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதனால், துருக்கியர்களுக்காகத் தாம் சற்றுக் குறைத்து வற்புறுத்துவது நேர்மையானதாக இருக்காது என்றும், தம் நண்பர்களை அந்த மாவட்டங்களை விட்டுவிடுமாறு வற்புறுத்தினால் தமக்குத் துரோகம் புரிந்ததாக அவர்கள் கருதுவர் என்றும் அவை வாதாடின. ஆகவே, முன்பிருந்த நிலையின் அடிப்படையில் மத்தியஸ்தத்தை நிலைநாட்டப் போருக்குச் செல்லவும் தாம் தயாராக இருப்பதாகக் கூட்டுறவு நாடுகள் அறிவித்தன. பிரிட்டிஷ் அரசாங்கம் முப்பத்தைந்து போர்க் கப்பல்களை பால்டிக் கடலுக்கு அனுப்புவதற்கும் பிரஷ்யா தன் படையை லிவோனியாவுக்கு அனுப்புவதற்கும் இணக்கம் தெரிவித்துக் கொண்டன. இந்த நடவடிக்கையின் பரிசாக எந்த வல்லரசும் எவ்வித ஆட்சிப் பகுதியையும் பெறக் கூடாது என்றும் ஒத்துக் கொள்ளப்பட்டது. கருங்கடலில் சுல்தானுக்கு அதிக பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவோம் என்றும் அவை கூறிக் கொண்டன.

துருக்கியருக்கு உதவியளிக்க வேண்டுமென்று பிட் வற்புறுத்துகையில், சார்லஸ் ஃபாக்ஸும் பர்க்கும் (Burk) அதைப்

பலமாக எதிர்த்தனர். பிட் கொண்டுவந்த பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டதெனினும், அதனைப் பெருவாரியான பாராளு மன்ற உறுப்பினர்கள் ஆதரித்தனர் என்று கூறுவதற்கில்லை. பொதுவாக, ரஷியாவை எதிர்த்துத் துருக்கிக்கு ஆதரவு அளிப் பதைப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்து உறுப்பினர்களாயினும் நாட்டு மக்களில் பலராயினும் அவ்வளவாக விரும்பவில்லை. இந்தச் சூழ்நிலையில் போர்க் கொள்கையை விட்டுவிடுவதாகப் பிட் முடிவு செய்தார்.

இதற்கிடையே துருக்கியர்கள் டான்யூபில் மேலும் தோல்வி களை அனுபவித்து வந்தனர். தங்கள் படைகளை நிரப்புவதற் கும் அவர்கள் கடுமையான முயற்சிகள் செய்து வந்தனர். இருப் பினும், படைவீரர்களுக்குப் பயிற்சி போதவில்லை. ஆகவே, அவர்களால் அனுபவ முதிர்ந்த ரஷியப் படைகளை எதிர்த்துப் போராட முடியவில்லை. குட்டுஸாஃப் (Kutusoff) என்பவர் ஒரு பெரும் ரஷியப் படையினைத் திரட்டிச் சென்று 1791 ஜனவரி யில் பாபாதாக் (Babatagh) என்ற இடத்தில் துருக்கிப் படையை முறியடித்தார். அதே ஆண்டு ஜூலை மாதத்தில் இள வரசர் ரெப்னின் நாற்பதினாயிரம் ரஷியப் படைவீரர்களுடன் எழு பதினாயிரம் துருக்கிப் படையினரை மக்ஸ்யூ (Maksyu) என்ற இடத்தில் தோற்கடித்து விரட்டியடித்தார். கருங்கடலின் கிழக் கிலும் துருக்கியர்களுக்குத் துரதிருஷ்டம் பிடித்து ஆட்டிற்று. குபான் (Kuban) என்ற மாநிலத்தை ரஷியப்படை ஒன்று படையெடுத்துத் தாக்கி அங்கிருந்த துருக்கிப்படை ஒன்றை முறியடித்து மாநிலம் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டது.

இந்தத் தோல்விகளின் விளைவாக, மந்திரி சபை உற்சாக மிழந்தது. துருக்கிக்கு எங்கிருந்தும் எவ்வித உதவியும் வருவ தாகத் தெரியவில்லை. அவர்கள் அமைதியை நாடினர். பேரரசி யும் அமைதி உண்டுபண்ண ஆவலாய் இருந்தாள். போலந்தில் கொஸியுஸ்கு (Kosciuszko) என்பவரின் தலைமையில் அந் நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்ததை அவள் ஒடுக்க நினைத்தாள். அண் மையில் அவளுக்கு வெற்றி கிட்டியதன் விளைவாக, பெஸ்ஸரே பியா, மால்தேவியா, வலாச்சியா மற்றும் குபான் ஆகியவை அவள் வசமாயிருந்தபோதிலும், ஓக்ஸகாஃப் அரணைத் தவிர மற்றெல்லாவற்றையும் அவள் கைவிடத் தயாராக இருந்தாள். இதன் அடிப்படையிலும் பிற நாட்டினர் இவ் விவகாரத்தில் தலையிடக் கூடாது என்ற கருத்தின் அடிப்படையிலும் ஒப்பந்தம் 1791-ல் ரஷியாவுக்கும் துருக்கிக்கும் இடையே ஏற்பட்டது. அதன் நிபந்தனைகள் ஜஸ்ஸி ஒப்பந்தம் என்றழைக்கப்பட்ட

ஒன்றில் இணைத்துக்கொள்ளப்பட்டன. இந்த உடன்படிக்கை யின்படி, நீஸ்டர் நதி ரஷிய பேரரசின் எல்லையாயிற்று. அதற்கு மேற்கில் வெல்லப்பட்ட எல்லாப் பகுதிகளும் துருக்கியருக்கே திருப்பித் தரப்பட்டன. குபான் மாநிலத்தை ரஷியா திருப்பிக் கொடுத்துவிட்டது. ஆனாலும், அப் பகுதியிலிருந்த சிறு சுதந்தர நாடுகளின் பாதுகாவலாளியாகப் பேரரசி ஏற்றுக் கொள்ளப் பட்டாள். டான்யூபிய வட்டாரச் சிற்றரசுப் பகுதிகளி லிருந்து போட்டெம்கினுக்கு ஓர் இராச்சியத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கான எண்ணம் கைவிடப்பட்டது. 'கான்ஸ் டான்ட்டிநோப்பிலில் கிரேக்கப் பேரரசு' ஒன்றை நிலைநாட்டு வதற்கான எண்ணமும் காலவரம்பின்றி ஒற்றிப் போடப்பட்டது. தமக்கு ஒரு தனி இராச்சியம் கிடைக்கவில்லையே என்று ஏங்கிய போட்டெம்கின் ஒப்பந்தம் ஏற்பட்ட ஒரு சில நாட்களுக்குப் பிறகு மனமுடைந்து இறந்தார்.

அடுத்த நான்கு ஆண்டுகளில் பேரரசி மூன்றும் தடவை யாகப் பங்கீடு செய்தாள். இந்தப் பங்கீட்டில் ரஷியாவுக்கு அதிக பங்கு கிடைத்தது. அவள் மட்டும் இனியும் உயிரோடு இருந்திருப்பாளாயின், தான் புதிதாகப் பெற்ற உடைமைகளை, உத்மானிய பேரரசின்மீது புதிய வலுத்தாக்குதல்களை நிகழ்த்தப் பயன்படுத்தி யிருந்தாலும் வியப்பில்லை. இதற்கிடையே கிரீஸ் தன்னை அடக்கி ஆண்டவர்களிடமே மேலும் கொடுமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பதற்கு விடப்பட்டது.

17. புக்காரெஸ்ட் உடன்படிக்கை (1792 – 1812)

(Treaty of Bucharest)

மூன்றும் சலீம் (Selim III)

ஜஸ்ஸி உடன்படிக்கை ஏற்பட்டு இருபது ஆண்டுகள் கழிந்த பிறகு 1812-ல் உத்மானியப் பேரரசின் மற்றொரு பகுதி புக்காரெஸ்ட் உடன்படிக்கையின்படி ரஷியாவிற்குக் கொடுக்கப் பட்டது. இவ்விடைக் காலத்துக்கான துருக்கி நாட்டு வரலாறு நெப்போலியப் போர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததால், அது சுவை மிக்கதாக இருக்கின்றது. ஆனால், அதே சமயத் தில் பேரரசின் பரப்பளவு மேலும் சுருங்கி விட்டது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

1792-ல் ரஷியாவுக்கெதிரான போர் முடிவடைந்த பிறகு சுல்தான் சலீம் அமைதியைப் பேணிக் காக்கவும் பிரெஞ்சுப் புரட்சியினால் ஏற்பட்ட சிக்கல்களிலிருந்து விடுதலை பெற்றிருப்ப தற்கும் மிகவும் ஆவலாய் இருந்தார். தமது நாட்டின் ஒவ்வொரு நிர்வாகத்துறையிலும் குறிப்பாக, படையின் ஒழுங்கு அமைப்பு, பயிற்சி முதலியவற்றில் சீர்திருத்தங்கள் இன்றியமையாதனவாகி விட்டிருக்கின்றன என்பதை சுல்தான் தெளிவாக உணர்ந்திருந் தார். மாபெரும் சீர்திருத்தத் திட்டங்கள் பலவற்றை அவர் தீட்டி, அவற்றைச் செயல்படுத்துவதில் முனைந்தார். ஆனால், 1798-ல் மீண்டும் போர் மூண்டதனால் அத் திட்டங்கள் முனையி லேயே கிள்ளி எறியப்பட்டு விட்டன. ஆஸ்ட்ரியர்களுக்கெதி ராகத் துருக்கியர்களை ஆதரிப்பது என்பது பிரான்ஸின் மரபுக் கொள்கையாக இருந்தது. ஆனாலும், எக்காரணமுமின்றி, பிரெஞ்சு அரசாங்கம் திடீரென்று இவர்கள் மீதும் போர்

தொடுத்தது. பிரான்ஸ் அண்மையில் துருக்கியின் மிக நெருங்கிய சுற்றுப்புற நாடாகிவிட்டிருந்தது. இத்தாலியில் நெப்போலியன் மாபெரும் வெற்றிகளைப் பெற்றதற்குப் பிறகு 1797-ல் ஏற்பட்ட காம்ப்போ ஃபார்மியோ (Campo Formio) என்ற ஒப்பந்தத்தின்படி, வெனிஸ் குடியரசு மறைந்து விட்டது. வெனிஸும் அது அடக்கி ஆண்ட இத்தாலியப் பகுதிகள் பலவும் ஆஸ்ட்ரியாவின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டன. ஏட்ரியாட்டிக் கடற் பகுதியில் வெனிஸ் பெற்றிருந்த உடைமைகளும் அயோனியத் தீவுகளும் நிலப்பகுதியிலிருந்த நகரங்களும் பிரான்ஸின் வசம் ஒப்படைக்கப்பட்டன. வெனிஸியர்களின் கொடுமை தாங்க முடியாததாக இருந்ததனால், அந்தத் தீவு வாசிகள் புதிய எஜமானர்களை மனமார வரவேற்றனர்.

இயக்குநர்க் குழு (The Directory) அப்பொழுது பிரான்ஸை ஆண்டு கொண்டிருந்தது. கிழக்கில் மேலும் எல்லைகளை விரிவு படுத்த அக் குழு பெரும் அவாக் கொண்டிருந்தது. உத்மானியப் பேரரசு முற்றிலுமே குலையும் தறுவாயில் இருக்கின்றது என்று அக் குழுவினர் கருதினர். அக் கருத்து ஓரளவு நியாயமானதாகவே இருந்தது. நாட்டின் மத்திய அரசு பெரும்பாலும் செயலற்றதாகவே இருந்தது. ஜனீனுவின் அலீ (Ali of Janina) விட்டினின் பஷ்வான் ஒக்லூ (Passhwan of Oglu) ஏக்கரின் ஜெஸ்ஸார் (Djezzar of Acre) போன்ற மாநில ஆளுநர்கள் உண்மையில் சுல்தானிடமிருந்து விடுதலை பெற்று, சுயேச்சை மிக்க மன்னர்களாக ஆட்சி புரிந்து கொண்டிருந்தனர். எகிப்தை உண்மையில் மம்லூக்குகள் ஆண்டு வந்தனர். சுல்தானுல் நியமிக்கப்பட்ட அதன் பாஷா எவ்வித அதிகாரமும் பெற்றிருக்கவில்லை. செர்பியாவும் கிரீஸும் கிளர்ச்சியுணர்ச்சியுடன் துடித்துக் கொண்டிருந்தன. இத்தாலியில் படைக்குத் தலைமை வகித்திருந்தபோது, நெப்போலியன் இந்த மாநிலங்களுக்கெல்லாம் தம் தூதர்களையனுப்பி, கிளர்ச்சி புரிந்தால் அவற்றினுக்குத் தாம் ஆதரவு அளிப்பதாக அறிவித்திருந்தார். ஆரம்பத்தில் அவரது எண்ணம், சுல்தானின் ஐரோப்பிய மாநிலங்களிலும் கிரீஸிலும் பிரெஞ்சு ஆதிக்கத்தை விஸ்தரிப்பதாக இருந்தது போலும்! இத்தாலியில் போர் புரிந்த சிறந்த படை வீரர்கள் உட்பட நாற்பதினாயிரம் போர் வீரர்களைக் கொண்ட படை ஒன்று தூலூனில் (Touloun) திரட்டப்பட்டது. எவருக்கும் தெரியாத ஓரிடத்திற்கு அவர்களைக் கொண்டுபோவதற்கு இருநூறு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றின் பாதுகாப்பிற்காகப் பதினைந்து போர்க் கப்பல்களும் மற்றும் பல வகைப்பட்ட கப்பல்களும் அடங்கிய கப்பற் படை ஒன்றும் அனுப்பப்பட்டது. கடைசி

நிலைத்தில் நெப்போலியனின் வற்புறுத்தலின் பேரில் இயக்கு நர்க்குழு எகிப்தின் மீது படையெடுக்க முடிவு செய்தது. அங்கே சுல்தானைத் தாக்க வேண்டும் என்பதன்று அவரது எண்ணம். பிரான்ஸுடன் போர் நிகழ்த்திக் கொண்டிருந்த இங்கிலாந்தைத் தாக்குவதே அவரது உண்மை நோக்கமாகும். எகிப்தை வென்றதற்குப் பிறகு இந்தியாவின் மீது படை யெடுத்து பிரான்ஸுக்காகக் கிழக்கில் ஒரு மாபெரும் பேரரசை உருவாக்குவதற்கான தெளிவற்ற கனவுகளும் காணப்பட்டன. எகிப்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சுல்தானுக்கெதிராக நடத்தப்பட்ட தன்று என்றும் பாசாங்கு செய்யப்பட்டது. கொடுரங்களை இழைத்ததும் கைக்கூலி வாங்கிக் கொண்டிருந் ததுமான மம்லூக்குகளின் ஆட்சியிலிருந்து எகிப்தை விடுவிப் பதே அதன் நோக்கமாகும் என்றும் கூறிக் கொள்ளப்பட்டது. வெளிப்படையாக சுல்தானின்மீது போர் தொடுக்கப்படவில்லை. மம்லூக்குகளை அடக்குவதைத் துருக்கி சுல்தான் ஆதரிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

படையெடுப்பு நடைபெற வேண்டிய இடத்தின் பெயர் மறைத்து வைக்கப்பட்டது. அப் படை 1798, மே 19ஆம் நாள் அன்று தூலூனை விட்டு வெளியேறியது. நெப்போலியன் அதற்குத் தலைமை தாங்கினார். இத்தாலியில் அவருடன் போரிட்ட மாபெரும் வீரர்களும் எகிப்தின் நிலவுச் சின்னங்களை ஆராய்வதற்காக அறிஞர்களும் அப் படையுடன் சென்றனர். இந்த மாபெரும் சேனை எங்குச் செல்கின்றது என்பதை பிரிட்டிஷ் அரசாங்கமும் அறிந்திருக்கவில்லை. ஆனாலும், மத்திய தரைக் கடல் வாயிலில் செய்ன்ட் வின்ஸண்ட் பிரபு (Lord St. Vincent) என்பவரின் தலைமையில் உறுதியான பிரிட்டிஷ் கப்பற்படை ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டது. நெல்ஸனின் தலைமையிலிருந்த ஒரு பெரும் கப்பற்படையிலிருந்த வின்ஸண்ட் பிரபு ஒரு படைப் பிரிவை வேறுபடுத்திக் கொண்டு பிரெஞ்சுப் படை தூலூனி லிருந்து புறப்படுவதைக் காணக் காத்துக் கொண்டிருந்தார். பிரிட்டிஷ் படையில் பிரெஞ்சுப் படை கொண்டிருந்த அள விற்குக் கப்பல்கள் இருந்தபோதிலும், இது அப் படைக்குச் சற்றுக் கீழ்த்தரமானதாகவே இருந்தது.

தூலூனிலிருந்து அந்தரங்கமாகப் புறப்பட்டு மூன்று வாரங் களுக்குப் பிறகு பிரெஞ்சுப் படை மால்டாவை அடைந்தது. முன்பு ஒரு காலத்தில் (1565-ல்) உத்மானியர்களுக் கெதிராக அத் தீவைக் காத்த செய்ன்ட் ஜான் பெரு வீரர்கள் (Knights of St. John) என்ற வீரர்கள் இப்பொழுது பிரெஞ்சுப் படைகளுக்குப்

பலவீனமான எதிர்ப்பினை அளித்தனர். போர் புரியும் முனிவர் களான அச் சிறப்பான வீரர்கள் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையை மேற்கொண்டு, லஞ்ச ஊழலில் சிக்கிக் கிடந்தனர். அந்த நிலையில் அவர்கள் வெகு விரைவில் சரணடைந்து விட்டனர். நெப்போலியன் அத்தீவை பிரான்ஸுடன் இணைத்துக்கொண் டார். பழைமை வாய்ந்த அந்தச் சமய அமைப்பு இவ்விதக் கேவலமான முடிவை அடைந்தது.

நாலாயிரம் வீரர்களை மால்டாவில் விட்டுவிட்டு, அக் கப்பற் படை கிரீட் தீவை நோக்கி விரைந்தது. நெல்ஸன் தம்மைப் பின் துரத்திக்கொண்டு வருகிறார் என்று கேள்வியுற்ற நெப் போலியன் அலெக்ஸாந்திரியாவுக்குச் செல்ல உடனே முடிவு செய்தார். அப்பொழுதுதான் நெப்போலியன் அப் படை எங்குச் செல்கின்றது என்பதை அறிவித்தார். தூலானிலிருந்து பிரெஞ்சுக் கப்பற்படை புறப்பட்டு எகிப்துக்குச் செல்லவிருக்கின்றது என் பதை யூகித்துக்கொண்ட ஆங்கிலத் தளபதி நெல்ஸன் அலெக் ஸாந்திரியாவில் எதிரியைச் சந்தித்து விடலாம் என்ற நம் பிக்கையுடன் தம் கப்பல்களை அத் திசையில் செலுத்தினர். அவர் 28 ஆம் தேதியன்று அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார். பிரெஞ்சுப்படை அங்கே வருவதற்கு முன்பே அவர் அங்கு வந்துவிட்டு, அப் படையைப்பற்றி ஒன்றுமறியாது, சிசிலித் தீவுக்கு விரைந்தார். கிரீட் தீவுக்கருகில் அவ் விரு கப்பற் படை களும் ஒன்றை ஒன்று கடந்து சென்றன; ஒன்றை ஒன்று பார்த் துக்கொண்டன. ஆனல், பனி மூடிக்கொண்டிருந்ததனலும், துப்பறியப் போதுமான வசதிகளைப் பெற்றிராததனலும் நெல் ஸனல் எதிரி எவ்வளவு அருகாமையில் இருக்கின்றன் என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. இந்த இடர்ப்பாடுகள் இருந் திராவிடின், இருநூறு வாகனங்களுக்கிடையே சிக்கிக்கொண்டு விட்ட பிரெஞ்சுப்படை முற்றிலுமே அழிக்கப்பட்டிருக்கக்கூடும். இந்தப் பேரிடி ஏற்பட்டிருக்குமாயின், நெப்போலியனுடைய பிற்கால வாழ்க்கை என்னவாகியிருக்கும் என்பதும், ஐரோப்பிய வரலாற்றின்மீது அதன் விளைவு எவ்வகைப் பட்டதாக இருந் திருக்கும் என்பதும் கற்பனை செய்யப்பட வேண்டிய ஒரு விஷய மாகி யிருக்கும். எனினும், நற்பேறு பெற்றிருந்த பிரெஞ்சுப் படையும் கப்பற்படையும் ஜூலை முதல் நாள் அன்று அலெக் ஸாந்திரியாவுக்குப் பத்திரமாக வந்துசேர்ந்தன. போர்க் கப்பல் கள் மிகப் பெரியனவாக இருந்தமையால், துறைமுகத்துள் அவற்றினுல் நுழைய முடியவில்லை. ஆகவே, 'அபூக்கிர்' விரி

குடாவில் (Abuqir Bay) அவை நங்கூரமிட்டன.[1] அலெக்ஸாந்திரியா பெரும் எதிர்ப்பில்லாமலேயே சரணடைந்தது. தாக்குதல் நடைபெற்ற போது நெப்போலியனே சிறிது காயமுற்றார். ஒரு வாரத்திற்குப் பிறகு படை கெய்ரோ (Cairo) நோக்கி முன்னேறியது. அத் தறுவாயில் தாம் மம்லூக்குகளின் மீது தான் போர் தொடுப்பதாகவும் மக்களின் மீதோ சுல்தானின் மீதோ போர் தொடுக்கவில்லை என்றும் பிரகடனம் ஒன்றின் மூலம் நெப்போலியன் அறிவித்தார். கெய்ரோவுக்குச் செல்லுகையில் படை வெப்பத்தினாலும் கொதிக்கும் மணலினாலும்பெருந் தொல்லை யனுபவித்தது. படைவீரர்கள் முணுமுணுத்தனர். தாங்கள் அங்கே வந்ததற்கான காரணம்தான் யாதோ என்று தவித்தனர். ஆனால், வழியில் மம்லூக்குகளுக் கெதிராக அவர்கள் இரண்டு போர்களைப் புரிந்து அவர்களை மிக எளிதாக முறியடித்தனர். இரண்டு போர்களிலும் அவர்களை எதிர்த்த படைகளின் எண்ணிக்கை பன்னிரண்டாயிரத்திற்கு உட்பட்டே இருந்தது. நெப்போலியன் கெய்ரோ நகரை நெருங்கிக் கொண்டிருக்கையில், பின்வாங்கிக் கொண்டிருந்த எகிப்தியப் படை அதை மிகக் கடுமையாகச் சூறையாடிற்று. அந்த நிலையில் நெப்போலியன் அம் மக்களின் உயிரையும் சொத்துக்களையும் காப்பவராகவே தோற்றமளித்தார். அவர் அங்கே வெகு எளிதாக அமைதியையும் ஒழுக்கக் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டிவிட்டார்.

தம் படையுடன் நேப்பில்ஸ் நகரை அடைந்திருந்த நெல்ஸன் பிரெஞ்சுக் கப்பற்படையின் பயண இலக்கு யாது என்பதைப்பற்றிச் செவியுற்றிருந்தார். அவர் மீண்டும் எகிப்துக்குத் தம் கப்பற் படைகளைத் திரட்டிக்கொண்டு விரைந்தார். 1798 ஆகஸ்ட் முதல் தேதியன்று அவர் எதிரிப் படைகள் அபூக்கிர் விரிகுடாவில் நங்கூரமிட்டிருப்பதைக் கண்டார். போர் வீரர்களும் பீரங்கிகளும் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே இருந்த பிரிட்டிஷ் கப்பற்படை பிரெஞ்சுக் கப்பற்படையைத் தோற்கடித்தது. பிரெஞ்சுக் கப்பற்படையின் தளபதியான புரூவே (Brueys) என்பவர் போரில் கொல்லப்பட்டார். அவருடைய கப்பல் சிதறடிக்கப்பட்டது. இரண்டு கப்பல்கள் மட்டுமே தப்பி ஓடின. ஆனாலும், பிரான்சுக்குச் செல்வதற்கு முன்பு அவை கைப்பற்றப்பட்டன. போரின் விளைவாக பிரான்ஸ்

[1] மத்தியதரைக் கடலோரத்தில் எகிப்தின் வடமேற்கு எல்லையில் அபூக்கிர் என்னும் ஊர் இருக்கிறது. அவ்வூரின் கடற்கரை ஒரு விரிகுடாவாக அமைந்திருப்பதால், அது 'அபூக்கிர் விரிகுடா' என்று அழைக்கப்படுகின்றது

தன் படையுடன் தொடர்பு கொள்ள இயலவில்லை. பிரெஞ்சுப் படை எகிப்திலேயே சிக்கிக் கிடந்தது. இப் பேரிடியைப்பற்றி நெப்போலியன் ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்றுதான் கேள்வியுற்றார். அப்பொழுது படையெடுப்பு ஒன்றை நிகழ்த்திவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த அவர் அங்கேயே தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதை பிரான்ஸுக்கு அறிவித்தார்.

பிரிட்டிஷ் படையின் இக்குறிப்பிடத்தக்க வெற்றி மிக முக்கிய விளைவுகளை ஏற்படுத்திற்று. அதுவரையில் தம் கொள்கையைப் பற்றித் திட்டவட்டமான கருத்து எதையும் கொண்டிராத துருக்கி சுல்தான் பிரான்ஸுக் கெதிராகப் போரிட்டுத் தம் இறைமையை எகிப்தின்மீது மீண்டும் நிலைநாட்டிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை பெற்றெழுந்தார். பிரான்ஸிலிருந்து நெப்போலியன் எந்த விதமான உதவியையும் பெற முடியாது என்பதையும், படையெடுப்பை நடத்திக்கொண்டிருந்த பிரெஞ்சுப்படை படிப்படியாகக் கலைந்துவிடும் என்பதையும் சுல்தான் உணர்ந்திருந்தார். அவர் பிரான்ஸின்மீது போர் தொடுத்து, ரஷியாவுடனும் இங்கிலாந்துடனும் கூட்டுறவினை ஏற்படுத்திக்கொண்டார். ரஷியாவுடன் அவர் செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் வியப்பான விளைவுகள் ஏற்பட்டன. இது வரையிலும் கடும் பகைவர்களாக இருந்த துருக்கி ரஷியா என்னும் இரு நாடுகளின் கூட்டுக் கப்பற்படை ஒன்று டார்டனெல்ஸிலிருந்து புறப்பட்டு, அயோனியன் தீவுகளிலிருந்த பிரெஞ்சுப் படைகளைத் தாக்கி விரட்டியடித்தது.

எகிப்தை மீண்டும் கைப்பற்றுவதற்காக சுல்தான் சிரியாவிலிருந்து ஒரு படையையும் ரோட்ஸ் தீவிலிருந்து மற்றொரு படையையும் திரட்டினார். அவருடைய தாக்குதலை எதிர்பார்க்கும் வகையில் நெப்போலியன் சிரியாவின்மீது படையெடுப்பு நிகழ்த்தினார். 1798-99ஆம் ஆண்டு பனிக்காலத்தை அவர் கெய்ரோவில் கழித்தார். வியப்புக்குரிய அவருடைய வாழ்க்கை வரலாற்றிலேயே அது மிகவும் மோசமான காலமாகும். அவருடைய பொது வாழ்க்கையும் அவ்வளவு சிறப்பானதாக இருக்கவில்லை. எகிப்து மக்களின் நல்லெண்ணத்தைப் பெற, தாம் இஸ்லாமிய சமயத்தில் அளவில்லா நம்பிக்கையும் ஆர்வமும் கொண்டுள்ளதாக அவர் கூறிக்கொண்டார். அச் சமயத்தைத் தாம் தழுவிக் கொண்டதாகவும் பாவனை செய்தார். தம் படைவீரர்களையும் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொள்ளுமாறு அவர் வற்புறுத்தினார். ஆனாலும், அவருடைய முயற்சி பலிக்கவில்லை. ஆனால், இதுபோன்ற மூட நடத்தைகளினால் எவருடைய

மனத்தையும் அவரால் கவர முடியவில்லை. எகிப்திலிருந்த எந்த மதப் பிரிவினரும் அவரை மதிக்கவில்லை. நாட்டில் பல்வேறு இடங்களிலும் பற்பல கிளர்ச்சிகள் தோன்றின. குறிப்பாக, கெய்ரோவில் மிகத் தீவிரமான கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டது. அவையெல்லாம் மிகக் கடுமையாக ஒடுக்கப்பட்டன. கைதானவர்களை மிகக் கொடூரமாக நடத்திப் பிறருக்கு அச்சம் விளைவிக்க அவர் முயன்றார்.

1799-ல் அவர் எகிப்தை விட்டு வெளியேறி, சுயெஸ் நிலச் சந்தியைக் கடந்து, கஸேயை (Gaza) பிப்ரவரி 25 ஆம் நாள் அன்றும் ஜாஃபாவை (Jaffa) மார்ச் 27ஆம் நாள் அன்றும் அடைந்தார். ஜாஃபாவை ஐயாயிரம் துருக்கிப் படை வீரர்கள் காத்து வந்தனர். அவர்கள் மிக்க துணிச்சலுடன் போராடி, தங்களைப் போர்க் கைதிகளாக நடத்தவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அடிபணிந்தனர். ஆனால், இந்த நிபந்தனைக்கு மாறுக அவர்கள் கடலோரத்திற்குக் கொண்டு போகப்பட்டு, நெப்போலியனின் உத்தரவின்படி ஈவு இரக்கமின்றிக் கொல்லப் பட்டனர். ஜாஃபாவை விட்டு அவர் வெளியேறிய ஒரு சில நாட்களில் ஏக்கர் வந்தடைந்தார். 'நான் ஏக்கரைக் கைப் பற்றி விடுவேனுயின், இங்கிருக்கும் இனத்தினரை ஆயுதம் தாங்கும்படி செய்து, கான்ஸ்டான்ட்டிநோப்பிலை அச்சுறுத்துவேன்! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பேரரசைத் தகிடீழாக்கி விடுவேன்!' என்று நெப்போலியன் வீரம் பேசினர்.

ஆனால், அவர் ஏக்கரைக் கடைசியாகத்தான் அடைந்தார். அங்கே தம்மைச் சந்திக்குமாறு கனமான தம் பீரங்கிகளை அவர் முற்கூட்டியே அனுப்பி விட்டிருந்தார். வழியில் பிரிட்டிஷ் கப்பற்படைகள் அவற்றைக் கைப்பற்றிக்கொண்டன; அவற்றைக் கோட்டையின் மண்சுவர்களின்மீது பொருத்தி, பிரெஞ்சுப் படைகளின்மீதே சுடும்படி செய்தன. சர் சிட்னி ஸ்மித் (Sir Sydney Smith) என்பவரின் தலைமையிலிருந்த பிரிட்டிஷ் கப்பற் படை ஒன்று வழியில் பதிவிருந்து, இஸ்தம்பூலுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தது. மூவாயிரம் போர் வீரர்களையே கொண்டிருந்த ஏக்கரை அந்த பிரிட்டிஷ் தளபதியும் கப்பற் படை வீரர்களும் பாதுகாத்தனர். நெப்போலியன் அந் நகரைத் தாக்கினர். ஆனால், அவருடைய முயற்சி வீணுயிற்று. அறுபது நாள் முற்றுகையில் நாற்பது தாக்குதல்கள் நடந்தன; இருபது எதிர்த் தாக்குதல்கள் நடைபெற்றன. 'துயரம் நிரம்பிய அந் நகரில்தான் கிழக்கின் விதியே அடங்கியுள்ளது' என்றார் நெப்போலியன்.

மே 7ஆம் நாள் ரோட்ஸ் தீவிலிருந்த துருக்கிப் படையினிட மிருந்து உதவி கிட்டியது. கிளபெர் (Kleber) என்ற படைத் தலைவரின் தலைமையில் இருந்த படை இறுதித் தாக்குதல் ஒன்றை நடத்திற்று. ஆனால், அதுவும் வீணுயிற்று. நெப் போலியன் தம் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியவரானர். கிழக்கத்திய பேரரசுபற்றி அவர் கண்டுவந்த கனவு எக் கால மும் நிறைவேருதபடி அழிக்கப்பட்டது. மே மாதம் 20ஆம் நாள் அவர் பின்வாங்கத் தொடங்கினர். வரும் வழியில் பாலை வனத்தில் அவரது படை பல இன்னல்களுக்கு உள்ளாயிற்று.

ஜூலை 14ஆம் நாள் பிரெஞ்சுப் படைகள் எகிப்திற்குத் திரும்பியதற்குச் சற்றுப் பிறகு, பிரிட்டனின் கப்பற்படைப் பாது காப்புடன் பதினையாயிரம் துருக்கிப் படை வீரர்கள் அலெக்கிர் விரிகுடாவை அடைந்தனர். அதை நெப்போலியன் 25ஆம் தேதி அன்று தாக்கி முறியடித்தார். பல்லாயிரக் கணக்கான துருக்கியர்கள் கடலுக்கு விரட்டியடிக்கப்பட்டு மூழ்கடிக்கப் பட்டனர். பிரெஞ்சுப் படையிலிருந்த அனுபவ முதிர்ந்த படை வீரர்கள் பயிற்சியற்றும் ஆயுதங்கள் இன்றியும் இருந்த துருக் கியர்களின்மீது பெற்ற வெற்றி நெப்போலியனுக்கு ஒரு நல் வாய்ப்பாக அமைந்துவிட்டது. தோல்வியுற்ற படையெடுப்பின் மீது அவ்வெற்றி சிறிது ஒளியை வீசிற்று. அவருடைய அறிக்கை கள் அதை மிகைபடுத்திக் கொண்டிருந்தன. அந்தத் தறு வாயில் பிரான்சிலிருந்து வந்த செய்தி அவரை பிரான்ஸுக்குத் திரும்பச் செய்தது. அவர் தம் படையை அதன் விதிக்கே விட்டு விட்டார். மிகவும் அந்தரங்கமாகவும் விரைவாகவும் அவர் பிரான்ஸுக்கு வந்து சேர்ந்தார். அங்கே அவர் தம்மைப் 'பெரும் வெற்றியாளர்' என்று காட்டிக்கொண்டார். எகிப்தில் அவர் அடைந்த தோல்வி அவரது வெற்றிகரமான பிற்கால வாழ்க்கையைப் பாதிக்கவில்லை.

1801, மார்ச்சின் துவக்கத்தில் சர் ரால்ஃப் ஆபெர்கிரம்பி (Sir Ralph Abercrombie) என்பவரின் தலைமையில் பதினையா யிரம் பிரிட்டிஷ் படைவீரர்கள் எகிப்துக்கு வந்து சேர்ந்தனர். இந்தியாவிலிருந்து பெய்ர்ட் (Baird) என்ற படைத்தலைவரின் தலைமையில் மற்றொரு படையும் அங்கு வந்து சேர்ந்தது. அங் கிருந்த பிரெஞ்சுப் படையினர் மிகவும் கடுமையாகத் தாக்கப் பட்டனர். கெய்ரோவுக்கும் அலெக்ஸாந்திரியாவுக்குமாக அது பிளவுபட்டிருந்தது. அது மிகக் கடுமையாகத் தோற்கடிக்கப் பட்டு, இறுதியில் அடிபணிய வைக்கப் பெற்றது. பிரெஞ்சுப் படையில் அப்பொழுது இருபத்து நாலாயிரம் வீரர்களும் முந்

நூற்றுப் பன்னிரண்டு பீரங்கிகளும் அடங்கியிருந்தனர். இப் போரிடியைப்பற்றி நெப்போலியன் கேள்வியுற்று, 'நாம் எகிப்தை இழந்துவிட்டோம்; நம்முடைய திட்டங்கள் பிரிட்டிஷ்காரர் களால் அழிக்கப்பட்டுவிட்டன' என்று கூறினராம். சுல்தானுக்கு எகிப்து திருப்பிக் கொடுக்கப்பட்டது. இப்பொழுது அது மம் லூக்குகளின் ஆட்சியிலிருந்தும், பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக் கத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டிருந்தது. சிறிது காலம் வரை யிலும் சுல்தானால் நிய மிக்கப்பட்ட பாஷாக்கள் அதை ஆண்டு வந்தனர். இதற்காக சுல்தானுடைய நன்றிகள் பிரிட்டிஷ் அர சாங்கத்துக்குரியனவாகும். ஆனலும், அவர் வெகு விரைவில் கட்சி மாறி, பிரெஞ்சு அரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டு, பிரிட்டனுக் கெதிராகப் போரிட்டார்.

இதற்கிடையே அமீன்ஸ் (Amiens) என்ற இடத்தில் 1802-ல் இங்கிலாந்தும் பிரான்ஸும் ஒப்பந்தம் செய்துகொண் டன. அதே சமயத்தில் பிரான்ஸுக்கும் சுல்தானுக்குமிடையே யும் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி, எகிப்தின்மீது சுல்தான் இறைமை கொண்டிருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1804-ல் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் இடையே மீண்டும் போர் மூண்டபோது நெப்போலியன் உத்மானியப் பேரரசுடன் தாம் அதுவரை கொண்டிருந்த கொள்கையை மாற்றிக்கொண்டு, அதனுடன் நட்புக்கொள்ளும் கோட்பாட்டைத் தமது கொள்கை யின் அடிப்படையாக்கிக் கொண்டார்.

1802-ல் பிரான்ஸுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதற்குப் பிறகு சில ஆண்டுகளே அமைதியாகக் கழிக்க சுல்தானால் முடிந் தது. அப்பொழுது அவர் பேரரசில் சில முக்கிய உள்நாட்டுச் சீர்திருத்தங்களைப் புகுத்துவதில் தம் கவனத்தைச் செலுத்தி னர். இவற்றில் முதலாவதாகக் கவனிக்கப்பட வேண்டியது ஜனிஸ்ஸரீப் படை. அதை மாற்றி அமைப்பது அல்லது அடக்கு வது அவசியம் என்பதை அவர் உணர்ந்தார். ஜனிஸ்ஸரீகள் போர் புரிவதில் எந்த அளவுக்குத் திறமையை இழந்துவிட்டிருந் தனர் என்பதையும், பேரரசின் ஒவ்வொரு பகுதியிலும் அவர்கள் எந்த அளவுக்கு அரசை வீணே அச்சுறுத்தி வருகின்றனர் என் பதையும் கடந்த போர்கள் திட்டவட்டமாக நிரூபித்துக் காட்டி யுள்ளன. அதிகாரத்தைத் தம் வசப்படுத்திக் கொள்வதிலும், சுல்தானால் நியமிக்கப்பட்ட பாஷாக்களை அதிகாரத்திலிருந்து நீக்குவதிலுமே அவர்கள் மிக முனைப்பாக இருந்தனர். தவிர, குடியானவர்களையும் அவர்கள் துன்புறுத்தி வந்தனர். அவர்களை அடக்கி, ஐரோப்பியப் படைகளை மாதிரியாகக் கொண்டு, ஒரு

சரியான சேனையை உருவாக்குவது துன்பத்தை விளைவிக்கக் கூடும்; அதனால் அரசுக்குப் பேராபத்தும் ஏற்படக்கூடும். ஏனெனில், ஜனிஸ்ஸரீகள் வைதிக முஸ்லிம்களாவர்; அல்லது தீவிர வைதிகர்களே போல் நடித்தனர். மதவெறி பிடித்திருந்த மக்களுடைய ஆதரவு அவர்களுக்கு இருந்தது. திவான் என்ற ஆலோசனைக் குழுவிலுள்ள பலரும் அவர்களை ஆதரித்தனர். உலமாக்கள் பெரும்பாலோர் ஏகமனத்துடன் அவர்களை ஆதரித்தனர். ஆலோசனைக் குழு இரு கட்சிகளாகப் பிளவுபட்டிருந்தது: ஒரு கட்சி சீர்திருத்தத்தை ஆதரித்தது; சுல்தானுக்கு ஆதரவு காட்டிற்று. மற்றது பிற்போக்குவாதிகளைக் கொண்டிருந்தது; இக் கட்சியினர் சீர்திருத்தத்தை எதிர்த்து, ஜனிஸ்ஸரீப் படையினரை ஆதரித்தனர். அந்தக் குழுவில் மற்றொரு வகைப்பட்டவினரை ஆதரித்தனர். ரஷியாவை ஆதரிப்பவர்கள் என்றும் பிளவும் ஏற்பட்டிருந்தது. பிரான்ஸை ஆதரிப்பவர்கள் என்றும் அக் குழுவினர் பிளவுபட்டிருந்தனர். அமீன்ஸ் ஒப்பந்தத்திற்குப் பிறகு சுல்தானுடைய அரசவையில் திறமை மிக்க பிரெஞ்சுத் தூதுவர்கள் அவ்வரசின் பிரதிநிதிகளாக இருந்து வந்தனர்.

மற்றெல்லா இடங்களையும்விட, ஸெர்பியாவில்தான் அந்த ஜனிஸ்ஸரீப் படையினர் குடியானவர்களுக்குப் பெரும் கேடு விளைவிப்பவர்களாகவும் அவர்களை அடக்கி ஆள்பவர்களாகவும் இருந்தனர். எகிப்தின் மம்லூக்குகள் ஆண்டது போலவே இவர்களும் ஸெர்பிய மாநிலத்தை ஆள விரும்பினர். அவர்களுடைய விருப்பப்படி அவர்களை ஸெர்பியாவை ஆளவிட்டிருந்தால், வெகு விரைவில் அது சுல்தானுடைய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று, இராணுவ மதவெறி பிடித்த முஸ்லிம் வல்லாட்சியாகி விட்டிருக்கக் கூடும். அங்கிருந்த ஜனிஸ்ஸரீகள் அவ்விடத்து சிப்பாஹீகளுக்கும் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர். நாட்டுப்புற மாவட்டங்களிலிருந்து சிப்பாஹீகளை விரட்டியடிக்க வேண்டும் என்று ஜனிஸ்ஸரீப் படையினர் விரும்பினர்கள். ஆனால், அக் குடியானவர்களும் சிப்பாஹீகளும் சுல்தானிடம் முறையிட்டனர்.

கொடிய ஜனிஸ்ஸரீகளை அடக்குவதற்கென்று சுல்தான் தீவிர நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கினர். குடியானவர்களிடம் அவர் கொண்டிருந்த அனுதாபத்தைவிட, தம் அதிகாரத்தை அம் மாநிலத்தில் திட்டவட்டமாக மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்ற விருப்பத்தையே அவர் அதிகமாகக் கொண்டிருந்தார். அந்த ஜனிஸ்ஸரீப் படையினரின் தலைவர்களான 'தாஹி'களை அவர் அச்சுறுத்தினர். அவர்கள் தங்களுடைய தலைமை

வழிகளிலிருந்து திருந்தவில்லை யென்றும், அவர்களுக்கெதிராகப் படை அனுப்பப்படும் என்றும் எச்சரித்தார். ஒரு முஸ்லிம் படையைத் தங்களுக் கெதிராக சுல்தான் பயன்படுத்த முடியாது என்று உணர்ந்த அக் கொடியவர்கள், அந்த மாநிலத்திலுள்ள குடியானவர்களுக்கு சுல்தான் ஆயுதங்களை அளிக்கப் போகின்றார் போலும் என்ற முடிவுக்கு வந்தனர். ஒரு பொதுப் படுகொலையைப் புரிந்து அவர்கள் சுல்தானின் எண்ணத்தினை முறியடிக்க விரும்பினர். இதற்கு எதிர்ப்பு அளிக்கப்பட்டிராவிடின், ஸெர்பியாவின் கிறித்தவக் குடிமக்கள் அனைவருமே படுகொலைக்கு ஆளாகியிருந்திருப்பார்கள். ஆனால், குடியானவர்கள் பொறுமையுடன் கீழ்ப்படிந்து நடப்பவர்களாக இப்பொழுது இருக்கவில்லை. சுல்தானுக் கெதிராகவே கிளர்ந்தெழுமாறு சில நாட்களுக்கு முன்புதான் ஆஸ்ட்ரியர்கள் அவர்களைத் தூண்டிக் கொண்டிருந்தனர். ஆஸ்ட்ரியர்கள் அவர்களுக்கு ஆதரவும் கொடுத்தனர். அக் குடியானவர்களில் பலர் படை வீரர்களாகப் பயிற்சி பெற்றிருந்தனர். ஆஸ்ட்ரியர்கள் அவர்களுக்கு அளித்த ஆயுதங்களை அக் குடியானவர்கள் இன்னும் தங்களிடத்திலேயே வைத்திருந்தனர். ஆனால், துரதிருஷ்டம் பிடித்த மக்களுக்கு அது போதுமானதாக இருக்கவில்லை.

எனவே, 1807-ல் அவர்கள் தம்மை அடக்கி ஆள்பவர்களுக் கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். ஜார்ஜ் பெட்ரோவிட்ச்[1] (George Petrowitsch) என்ற தங்களைப் போன்ற குடியானவர் ஒருவரை அவர்கள் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அவரது தலைமையில் அந்தக் குடியானவர்கள் தாஹிகளையும் ஜனிஸ்ஸரீகளையும் நாட்டுப்புற மாவட்டத்திலிருந்து விரட்டினர்.

இந்தக் கேவலமான போரின் தொடக்கத்தில் சுல்தான் குடியானவர்களுக்கு ஆதரவு கொடுத்தார். ஆயுதம் தாங்கிய படை ஒன்றுடன் அவர்களுக்கு உதவியளிக்குமாறு பாஸ்னியாவின் பாஷாவுக்கு உத்தரவிடப்பட்டது. நாட்டுப் புறங்களில் தாஹிகளால் விரட்டப்படாமல் இன்னும் உள்ளூரிலேயே இருந்த சிப்பாஹீகளும் ஆதரவு கொடுத்தனர். ஆனால், ஜனிஸ்ஸரீப் படையினர் நகர்களிலிருந்த மதவெறி பிடித்த முஸ்லிம்களால் ஆதரிக்கப்பட்டனர். விட்டினின் கலகம் செய்யும் பாஷாவான பஷ்வான் ஒக்லூ என்பவரின் ஆதரவையும் அவர்கள் பெற்றிருந்தனர். இருப்பினும், ஸெர்பியாவின் குடியானவர்களின் பலத்த முயற்சியினால்தான் தாஹிகள் முறியடிக்கப்பட்டனர்.

[1] வரலாற்றில் இவர் 'காரா ஜார்ஜ்' என்று புகழ்பெற்று விளங்குகின்றார்.

அவர்களுள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இத்துடன் ஸெர்பியா முழுதுமே, செயல் முறையில் கிறித்தவக் குடியானவர்களின் கைக்கு வந்து சேர்ந்தது. பெல்கிரேடும் இதர கோட்டைகள் சிலவும் மட்டுமே அவர்கள் வசமாகவில்லை. அங்கே சுல்தானின் படைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இங்ஙனமாக, உள்ளூர் ஜனிஸ்ஸரீப் படையினர் அடக்கப்பட வேண்டும் என்று தாம் கொண்டிருந்த எண்ணம் நிறைவேற்றப்பட்டதும், கிளர்ந்தெழுந்த குடியானவர்களை, அவர்களுடைய ஆயுதங்களை ஒப்படைத்து மீண்டும் பழைய நிலையை அடையுமாறு சுல்தான் உத்தரவிட்டார். ஆனால், நாட்டுப் பற்று உணர்ச்சி வசப்பட்டிருந்த கிறித்தவ மக்கள் அப்படிக் கீழ்ப்படிய மறுத்து விட்டனர். தாங்கள் அனைவரும் கிரேக்கத் திருச்சபையினர் என்கிற காரணத்தைக் கூறிக் கொண்டு, அவர்கள் ரஷியாவினிடம் முறையிட்டனர். அவர்களுடைய குறைகளைக் கான்ஸ்டான்ட்டிநோப்பிலில் (இஸ்தம்பூலில்) சமர்ப்பிக்குமாறு ரஷிய அரசர் விடையளித்தார். அவர்களுக்கு ஆதரவு அளிப்பதாகவும் அவர் வாக்குறுதி யளித்தார். பிறகு அவர்கள் பெல்கிரேட் தங்களுடையது என்றும், இதர கோட்டைகளையும் தங்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்றும், செலுத்தாத தீர்வைகளையும் கப்பல்களையும் இனியும் செலுத்தாமலேயே இருப்பதற்குத் தங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தினர். இவர்களுடைய முதல் கோரிக்கை மிகவும் முக்கியமானது. ஏனெனில், சுல்தானின் கீழ்ச் சுயாட்சி பெற்றிருப்பதையே அது வற்புறுத்திற்று.

இந்தக் கோரிக்கைகள் தலைநகரிலிருந்த முஸ்லிம்களுக்குப் பெரும் எரிச்சலை யூட்டின. சுல்தான் அவற்றை உடனடியாகவே புறக்கணித்து விட்டார். தூதுக் குழுவினரைச் சிறையடைக்குமாறும் அவர் ஆணையிட்டார். நிஷ்ஷின் பாஷாவை ஸெர்பியாவின் குடியானவர்களின் மீது படையெடுத்து, கீழ்ப்படியாத குடியானவர்களை அவர்களுடைய முந்தைய நிலைக்குக் கொண்டு வரும்படி சுல்தான் உத்தரவு பிறப்பித்தார். அவர்கள் மடிய வேண்டும் அல்லது அடிமைகளாக வேண்டும் என்று பாஷா அவர்களை அச்சுறுத்தினர். ஸெர்பியாவின் எல்லையில் காரா ஜார்ஜ் இப் படையை எதிர்த்துத் தோற்கடித்தார். அவருக்கெதிராக சுல்தான் அனுப்பிய இரு படைகளையும் அவர் முறியடித்தார். வெளி உதவி எதுவுமின்றியே அவர் பெல்கிரேடையும் இதர கோட்டைகளையும் கைப்பற்றி, அங்கிருந்த துருக்கிப் படை வீரர்களை விரட்டி யடித்தார். இவ்விதமாக, ஸெர்பியா

வாசிகள் தங்களுடைய சொந்த முயற்சியினாலேயே உத்மானியர் களின் பிடியிலிருந்து முழுச் சுதந்தரத்தையும் பெற்றுக் கொண் டனர். இது வருங்காலத்தில் மிகத் தீவிரமான விளைவுகளை விளை விக்கக் கூடியதாக இருந்த ஒரு நிகழ்ச்சி யாகும். இது முஸ்லிம் களின் கண்களைத் திறந்து விட்டது. 'பற்றுதல் கொண்டிருந்த வர்களின் கிளர்ச்சி' என்பது சுல்தானுக்கு எதிராக உருவாகிய புரட்சியாகும் என்பதை ஸெர்பியர்களைப் போலவே முஸ்லிம் களும் உணர்ந்தனர். துருக்கியரின் தோல்விக்குப் பிறகு சுதந் தரம் பெற்ற ஸெர்பியர்கள் தங்கள் விவகாரங்களைக் கவனிப்ப தற்காக ஓர் அரசாங்கத்தையும் உருவாக்கிக் கொண்டனர். 'நிரந்தரமான சென்ட்' — (பேரவை) என்ற ஓர் அமைப்பு நிறுவப்பட்டது. இதன் உறுப்பினர்கள் ஒவ்வொரு மாவட்டத்தி லிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதற்கிடையில், இஸ்தம்பூலில் மிக முக்கியமான நிகழ்ச்சி கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒரு புறத்தில் தூதரக மட்டத்தில் இங்கிலாந்து ரஷியா ஆகியவற்றுக்கும் மறுபுறத்தில் பிரான்சுக்கும் இடையில் கடுமையான போட்டி ஏற்பட்டிருந்தது. ஐரோப்பாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த போரில் சுல்தா னின் ஆதரவைப் பெறுவதற்காக அப் போட்டி நிகழ்ந்து கொண் டிருந்தது. முன்னாளில் மதகுருவாகவும், தற்போது படைவீர ராகவும், திறம்படைத்த தூதராகவும் விளங்கிய செபஸ்டியானி (Sebastiani) என்பவரை நெப்போலியன் அங்குத் தூதராக அனுப்பி யிருந்தார். உல்ம் (Ulm) என்ற இடத்தில் பிரெஞ்சுப் படையினர் ஆஸ்ட்ரியர்களின் மீது பெற்ற மாபெரும் வெற்றி செபஸ்டியானியின் கோரிக்கைகளுக்கு ஆதரவளித்தது. டால்மே ஷியாவையும் குரோஷியாவின் ஒரு பகுதியையும் பிரான்ஸ் அண்மையில் கைப்பற்றிக்கொண்டதனால் அதனால் துருக்கியுடன் மிகநெருங்கிய தொடர்பு கொண்டிருக்க முடிந்தது. துருக்கியின் ஆதரவைப் பெறுவதற்காக செபஸ்டியானி இன்னும் தீவிரமாக வற்புறுத்தினார்.

அதே சமயத்தில் ரஷியாவும் தன் கோரிக்கைகளை விடுத்த தோடு அச்சுறுத்தியும் வந்தது; தன்னுடனும் சுல்தான் ஓர் ஒப் பந்தத்தைச் செய்து கொள்ளவேண்டும் என்று அது வற்புறுத் திற்று. துருக்கியில் கிரேக்க சமயத்தைப் பின்பற்றும் கிறித்தவர் களின் பாதுகாவலனைத் தன்னை சுல்தான் அங்கீகரிக்க வேண் டும் என்றும் ரஷிய நாடு வற்புறுத்திற்று. அவர்களின் சார்பாகத் தலையிடுவதற்கு ரஷிய தூதர் அனுமதிக்கப்பட வேண்டும் என் றும் அது கோரியது. தம் இராணுவத்தின் திறமையின்மையை

உணர்ந்த சுல்தான் தணிந்து போவதைத் தவிர, அவரால் வேறென்றும் செய்ய முடியவில்லை.

ரஷியாவின் கோரிக்கைகள் முஸ்லிம்களின் ஆணவத்தையும் மத வெறியையும் கிளறி விட்டன. இச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட செபஸ்டியானி, ரஷியாவிற்குப் பதிலடி தரும் வகையில், மால்தேவியாவின் வலாச்சியாவின் ஹாஸ்போதார்கள் (The Hospodars) ரஷியாவின் கையாட்கள் என்ற காரணத்தை முன்னிட்டு அவர்களை நீக்கிவிடுமாறு சுல்தானை வற்புறுத்தினர். இவ்விதம் செய்வது சுல்தான் தம் முடன் 1802ஆம் ஆண்டில் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி நடப்பதாகும் என்று ரஷிய மன்னர் கருதினர். அவ்வொப்பந்தத்தின்படி, இரண்டு ஹாஸ்போதார்களும் ரஷியாவின் இணக்கத்துடன் தான் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. எனவே, மால்தேவியா மீது படையெடுப்பதற்கு மிக்கல்சன் (Michelson) என்பவரின் தலைமையிலிருந்த ரஷியப் படைக்கு மன்னர் ஆணை பிறப்பித்தார். அப்படை ஜஸ்ஸிக்குள் நுழைந்து சற்றுப் பிறகு, சுல்தான் எதிர்ப்பு அளிப்பதற்கு முன்னமேயே சொரெஸ்டிக்குள்ளும் புகுந்து விட்டது.

அதே சமயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் ரஷியாவுக்கு ஆதரவு அளித்தது. அர்பத்னுட் (Arbuthnot) என்ற அதன் தூதர் பிரான்ஸுக்கு எதிராக சுல்தான் இங்கிலாந்துடனும் ரஷியாவுடனும் சேர வேண்டும் என்று வற்புறுத்தினர். அதற்கு இணங்க சுல்தான் மறுத்து விட்டார். எனவே, அர்பத்னுட் போர்க் கப்பல் ஒன்றில் ஏறி, டெனிடோஸ் தீவின் அருகில் டக்வர்த் என்பவரின் தலைமையில் காத்துக் கொண்டிருந்த பிரிட்டிஷ் கப்பற்படையுடன் சேர்ந்து கொண்டார். கடற்காற்றுச் சாதகமாக இருந்ததனால், அக் கப்பற்படை துருக்கிப் பீரங்கித் தாக்குதலையும் எதிர்த்துக் கொண்டு டார்டனெல்ஸுக்குள் புகுந்து விட்டது (பிப்ரவரி,19, 1807). பிறகு அது மார்மோராக் கடலில் தோன்றி, அங்கு ஒரு துருக்கிப் போர்க் கப்பலை மூழ்கடித்தது.

இஸ்தம்பூலுக்கு ஒரு சில மைல் தூரத்திலிருந்த பிரின்ஸ் ஐலண்ட்ஸ் என்ற தீவுகளோரத்தில் (Prince Islands) கப்பற் படை நங்கூரமிட்டது. அங்கிருந்து, இஸ்தம்பூலை அப் படை அச்சுறுத்திற்று. உத்மானியக் கப்பற் படையைச் சரணடைந்து விடுமாறும் அர்பத்னுட்டின் கோரிக்கைகளுக்கு முற்றும் இணங்கி விடுமாறும் தளபதி ஒரு விண்ணப்பத்தை சுல்தானிடம்

சமர்ப்பித்தார். அவருடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் தலைநகரையே தகர்த்தெறிவதாக அவர் எச்சரித்தார். அவ்வச்சுறுத்தலைச் செயல்படுத்துவதற்காக உடனடியான நடவடிக்கையை அவர் எடுத்திருக்க வேண்டும். பத்து நாள் வரையிலும் தூதரும் தளபதியும் விவாதங்களில் ஈடுபட்டிருக்கையில், சுல்தானும் அவருடைய ஆண் குடிமக்களும் நகரின் பாதுகாப்புகளை வலுப்படுத்துவதில் மிகத் தீவிரமாக முனைந்திருந்தனர். அதன் சுவர்களில் ஆயிரம் பீரங்கிகள் பொருத்தப்பட்டன. துருக்கிக் கப்பற் படையை அந்தப் பீரங்கிகளின் தாக்குதலிலிருந்து விடுவிப்பதற்காகத் துறைமுகத்தில் பத்திரமான ஓரிடத்திற்கு அது அனுப்பிவைக்கப்பட்டது. டார்டனெல்ஸின் பாதுகாப்புகளும் பெருமளவும் வலுப்படுத்தி வைக்கப்பட்டன. இறுதியில், தாம் பீரங்கியினுல் சுட்டால் பெரும் ஆபத்துத் தம் கப்பற் படைக்கு ஏற்படும் என்பதை டக்வர்த் உணர்ந்தார். பிரிட்டிஷ் கப்பற்படை சேதப்படுமாயின் துருக்கிப்படை அதைக் கடுமையாகத் தாக்கிவிடக்கூடும். டார்டனெல்ஸை மீண்டும் கடந்து செல்ல முடியாது. ஆகவே, அவர் பின்வாங்கிக்கொள்ளத் தீர்மானித்தார். மார்ச் முதல் தேதியன்று அவர் நங்கூரத்தை உயர்த்தி 3ஆம் தேதி அன்று டார்டனெல்ஸைப் பெரும் சேதத்துடன் மீண்டும் கடந்து வந்தார். துருக்கிப் பீரங்கிகளிலிருந்து எறியப்பட்ட பெருங் குண்டுகளால் கப்பல்கள் தாக்குண்டன. இரண்டு வழித்துணைக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. அறுநூறு ஆட்களும் கொல்லப்பட்டனர். அழிக்கப்படுவதிலிருந்து கப்பற்படை மயிரிழையில் தப்பியது. இப் படையெடுப்பும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு மதிப்பையும் புகழையும் தருவதாகவோ வேறு பலன்களை அளிப்பதாகவோ இலங்கவில்லை.

இஸ்தம்பூலுக்கெதிராக இவ் வீணை தாக்குதலை நடத்தியது போதாமல், மேலும் வீணானதும் மூடத்தனமானதுமான மற்றொரு படையெடுப்பையும் பிரிட்டிஷ் அரசாங்கம் நிகழ்த்தியது. இது எகிப்துக்கெதிராக நடைபெற்றது. அப்பொழுது பிரிட்டிஷ் வசப்பட்டிருந்த சிசிலித் தீவிலிருந்து ஐயாயிரம் படை வீரர்கள் அலெக்ஸாந்திரியாவுக்கு அருகில் மார்ச் 17ஆம் நாள் வந்து சேர்ந்தனர். அப் படை அந் நகரை நோக்கி முன்னேறிற்று. நானூற்றைம்பது வீரர்களால் காக்கப்பட்டு வந்த அந் நகரம் வேறு வழியின்றி அடிபணிந்தது. இதுதான் அந்த பிரிட்டிஷ் படை முதலும் கடைசியுமாகப் பெற்ற வெற்றியாகும். சில நாட்களுக்குப் பிறகு 1500 படை வீரர்களைக்கொண்ட சேனை ஒன்று நைல் நதியின் முகத்துவாரத்தில் இருந்த ரோஸெட்டா (Rosetta) என்னும் நகரைத் தாக்க அனுப்பப்பட்டது; ஆனால், அது

விரட்டி அடிக்கப்பட்டது. நிகழ்ந்த மற்றொரு படையெடுப்பும் மேலும் தோல்வியில் முடிவடைந்தது. அனுப்பப்பட்ட இரண்டாயிரம் வீரர்களுள் ஓராயிரம் வீரர்கள் கொல்லப்பட்டனர், அல்லது காயமுற்றனர். துருக்கிப் படைகளுக்கெதிராக மம்லூக்குகள் பிரிட்டிஷ் படைக்கு உதவி அளிப்பர் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், அது நிறைவேறவில்லை. பிரேஸர் என்ற படைத்தலைவரின் தலைமையில் இருந்த சிறியபடை ஒன்று செப்டம்பர் வரையிலும் அலெக்ஸாந்திரியாவில் சிக்கிவிட்டிருந்தது. கெய்ரோவிலிருந்து ஏராளமான துருக்கியர்கள் இவ்விடத்திற்கு முன்னேறிக் கொண்டிருந்தனர். துருக்கியர்களின் கையில் சிக்கியிருந்த பிரிட்டிஷ் கைதிகளைத் தங்களிடத்தில் ஒப்படைத்து விட்டால் சமாதானம் செய்து கொள்வதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாக பிரிட்டிஷ் படையினர் அறிவித்தனர். இந்த வேண்டுகோளுக்கு அவர்கள் இணங்கினர். செப்டம்பர் 25-ல் ஒரு சிறு படை மீண்டும் கப்பல்களில் ஏறிக்கொண்டு சிசிலிக்குத் திரும்பிற்று.

இந்த இரு முட்டாட்டனமான படையெடுப்புகளும் எதிர் மாறான விளைவினை ஏற்படுத்தின. அவை துருக்கி மக்களைக் கோபத்துக்குள்ளாக்கின; சுல்தானின் பிரெஞ்சு அரசுடன் நெருக்கங் கொள்ளுமாறும் செய்தன. அதற்கிடையே டக்வர்த்தின் கப்பற்படையின் முயற்சிகள் தோல்வியடைந்ததால், இஸ்தம்பூலில் சில முக்கியமான நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. ஜனிஸ்ஸரீப் படையின் முக்கிய பகுதி டான்யூபுக்கு அனுப்பப்பட்ட படையுடன் சென்று விட்டதனால், ஐரோப்பிய முறையின்படி ஒரு படையை உருவாக்கிப் பயிற்சியளிப்பதற்கான முயற்சியில் சுல்தான் ஈடுபட்டார். இந்தப் புதிய படையில் மிகவும் இளவயதினராக இருந்த ஜனிஸ்ஸரீப் படையினரைச் சேர்த்துக்கொள்ளுமாறு சுல்தான் உத்தரவிட்டார். இது இஸ்தம்பூலில் இருந்த ஜனிஸ்ஸரீப் படையினரிடையே பெரும் மனக்கசப்பை விளைவித்துவிட்டது. ஆலோசனைக் குழுவினரும் உலமாக்களும் கூட அதனால் வெறுப்புக்கொண்டிருந்தனர். ஆகவே, 1807, மே கடைசியில் ஜனிஸ்ஸரீகள் கலகம் செய்தனர். அவ் விதம் ஆணை பிறப்பித்தவருக்கு மரண தண்டனை யளிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்திய முஃப்தியின் ஃபத்வா ஒன்று ஜனிஸ்ஸரீக் கலகக் காரர்களுக்குப் பெரும் ஆதரவாக இருந்தது. இதைக்கொண்டு தங்களை வலுப்படுத்திக்கொண்ட ஜனிஸ்ஸரீப் படையினர் சுல்தான் பதவியிலிருந்து விலகிக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தும் பிரேரணை ஒன்றை நிறைவேற்றினர். அவர்களுடைய எண்ணத்தைப் பற்றி சலீம் ஏற்கெனவே கேள்வியுற்

றிருந்தார். கலகம் செய்யும் ஜனிஸ்ஸரீப் படையினரை அடக்குவதற்கு அவரிடத்தில் படை ஏதும் இருக்கவில்லை. அவர்களுடைய கோரிக்கைகளை முன்பே அறிந்திருந்த சுல்தான் சுயமாகவே அந்தப்புரத்துச் சிறைக்குச் சென்று, அங்கே குடியிருந்த அடுத்த வாரிசான தம் ஒன்றுவிட்ட சகோதரர் முஸ்தபாவுக்கு சலாம் சொன்னார்.[1] ஜனிஸ்ஸரீயினரின் தூதுக்குழு ஒன்று அரண்மனையை யடைந்தவுடன், அங்கே புதிய சுல்தான் ஒருவர் இதற்கிடையில் பதவியேற்றிருப்பதைக் கண்டு நிம்மதியடைந்தது. முஸ்தபா காலி செய்துவிட்ட சிறைக்குள்ளே சலீம் பெருமிதத்துடன் சென்று விட்டார்.

மூன்றும் முஸ்தபா என்ற புதிய சுல்தான் பலவீனமிக்கவர்; திறமையற்றவர். முப்பது வயதினராக இருந்த இவருக்குக் கல்வி அறிவோ சிந்திக்கும் ஆற்றலோ கிடையாது. ஒரு சில மாதங்களே அவர் சிம்மாசனத்தின்மீது வீற்றிருந்தார். அப்பொழுது அரசாங்கம் உண்மையில் செயலற்றே இருந்தது. அரச பதவியிழந்த சலீம் தமக்கு ஏற்பட்ட சிம்மாசன இழப்பினை மன அமைதியுடன் ஏற்றுக்கொண்டாராயினும், செல்வாக்கு மிகுந்த நண்பர்கள் அவருக்கு இருந்தனர். அவருடைய வீழ்ச்சியை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. சலீமால் ருஸ்த்சுக்கின் (Rustchuck) பாஷாவாகிய பைரக்தார் (Bairactar) என்பவர் நாற்பதினாயிரம் பாஸ்ஸினியர்களையும் அல்பேனியர்களையும் திரட்டிக்கொண்டு இஸ்தம்பூலை நோக்கி முன்னேறினர். அவர்கள் ஜனிஸ்ஸரீகளை அச்சுறுத்தி அரண்மனையையும் தாக்கினர். அதன் வாயில்களை அவர்கள் தட்டி, சலீம் தங்கள் முன்னிலையில் கொண்டுவரப்பட வேண்டும் என்று கோரினர். அவர்களுடைய வருகையைப்பற்றி அறிந்த முஸ்தபா சலீமைக் கொன்றுவிடும்படி உத்தரவிட்டார். அதன்படி அவர் கொல்லப்பட்டார். அரண்மனையில் நுழைந்த பைரக்தார் சிம்மாசனத்தில் முஸ்தபா வீற்றிருப்பதைக் கண்டார். அதிலிருந்து அவர் இழுத்துவிடப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். உத்மானி ஆளும் வமிசத்தாருள் எஞ்சியிருந்தவரான மகமூத் என்பவர் சுல்தானுகப் பதவியில் அமர்த்தப்பெற்றார்.

முஸ்தபாவைச் சிம்மாசனத்திலிருந்து நீக்கி மகமூதை சுல்தானுக அமர்த்தியதற்குப் பிறகு பைரக்தார் பாஸ்ஸினியர்

[1] முஸ்லிம்கள் சந்திக்கும் பொழுது, ஒருவர் மற்றொருவருக்கு சலாம் சொல்வது ஒரு நல்லொழுக்கப் பண்பாகும். ஆனால், ஓர் அரசன் மற்றொருவரைப் பார்த்து முதற்கண் சலாம் சொன்னால், அவன் இவரை ஒரு மன்னராக மதிப்பதாகக் கருதப்படும். எனவே, சலீம் முஸ்தபாவுக்கு சலாம் சொல்லி, இவரை மன்னர் என்று கூறுமல் கூறிவிட்டார்.

கனையும் அல்பேனியர்களையும் வீட்டுக்கனுப்பியது பெரும் தவ
ருகும். அரண்மனையில் விட்டுச் செல்லப்பட்ட நாலாயிரம் பாது
காவலரை நம்பித்தான் சுல்தான் உயிர்வாழ வேண்டியிருந்தது.
ஜனிஸ்ஸரீகளை எதிர்த்து நிற்க அவர்கள் போதுமானவர்களாக
இருக்கவில்லை. அந்தக் கொடியவர்கள் மீண்டும் கலகம் செய்
தனர். அவர்கள் பைரக்தாரை அவருடைய அரண்மனையி
லேயே தாக்கினர். வெடி மருந்து அறையில் அவர் ஒளிந்து
கொண்டார்; ஆனால் அது வெடித்ததனால், காயமுற்று இறந்
தார். ஒரு சில நாட்களுக்கு உள்நாட்டுப் போர் மூண்டது.
சுல்தான் நம்பியிருந்த ஆயுதப் படை ஜனிஸ்ஸரீகளுடன்
சேர்ந்து கொண்டது. எதிர்ப் புரட்சி ஒன்றும் ஏற்பட்டது.
இடைவேளையில் முஸ்தபா கொல்லப்பட்டிருக்காவிடின் மீண்டும்
அவர் பதவிக்கு வந்திருக்க முடிந்திருக்கும். மகமூதுதாம் உக்
மானிய இனத்தினருள் கடைசியாக எஞ்சி நின்றவர் என்பத
னால்தான் அவர் விடப்பட்டார். இப்பொழுது நகரின் தலைவர்
களாகி விட்டிருந்த ஜனிஸ்ஸரீகள் அவரை அடிபணிய வைத்த
னர். சலீம் நிறைவேற்றிய சீர்திருத்தங்களை யெல்லாம் நிரா
கரிப்பதற்கான அரசு ஆணை ஒன்று மகமூதின் பெயரால் பிறப்பிக்
கப்பட்டது. பல்வகைக் குறைபாடுகளும் நிறைந்து கிடந்த
பழைய முறை மீண்டும் நிலைநாட்டப்பட்டது. அடுத்த மூன்று
அல்லது நான்கு ஆண்டுகள் வரையிலும் ஜனிஸ்ஸரீகள்தாம்
பேரரசின் உண்மை ஆட்சியாளர்களாகக் காட்சியளித்தனர்.
அவர்களுடைய கட்டளைப்படி பிரதம அமைச்சர்கள் பதவியில்
நியமிக்கப்பட்டனர்; அதிலிருந்து விலக்கவும் பட்டனர். மகமூத்
பெரும் இகழ்ச்சிக்கு ஆளாயினர். ஆனாலும், அவர் பொறுமை
யுடன் காத்துக் கொண்டிருந்தார். வெகு விரைவில் அவர்களை
மிகக் கடுமையாகப் பழிவாங்கிக் கொண்டார். நிரந்தரமாகவே
அவர்களை ஒழித்தும் விட்டார்.

அதற்கிடையே, எதிர்பார்த்தபடியே துருக்கியர்கள் டான்
யூப் நதிக் கரையில் கடுந்தோல்விகளை அடைந்து கொண்டிருந்
தனர். மால்தேவியாவையும் வலாச்சியாவையும் ரஷியர்கள்
தங்கள் வசமாக்கி யிருந்தனர். அவர்களுடைய படைகள்
டான்யூப் நதியைக் கடந்து சென்று, கரையின் வலது புறத்தி
லிருந்த அரணை முற்றுகை யிட்டன. 1807-ல் ரஷியாவும்
பிரான்ஸும் ஒப்பந்தம் செய்து கொண்டன—(டில்ஸிட் ஒப்பந்
தம்—Treaty of Tilsit). இதன்படி ரஷியர்களுக்கும் துருக்கியர்
களுக்குமிடையே அமைதி நிலவ வேண்டும். மால்தேவியாவி
லிருந்தும் வலாச்சியாவிலிருந்தும் ரஷியப் படைகள் பின்வாங்கிக்
கொள்ளப்பட வேண்டும். ஆனால், அந்தரங்கமான அம்சம்

ஒன்றும் அந்த ஒப்பந்தத்தில் இருந்தது. அதன்படி, ரூமேலியா இஸ்தம்பூல் ஆகியவற்றைத் தவிர, துருக்கியின் இதர மாநிலங்கள் சுல்தானிடத்திருந்து பறித்துக் கொள்ளப்படவேண்டும். இவற்றை என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி நீமன் (Niemun) நதிக் கரையில் நெப்போலியனுக்கும் ரஷிய அரசருக்கு மிடையே நீண்ட வாதங்கள் நடைபெற்றன. டான்யூப் வட்டார மாநிலங்களையும் பல்கேரியாவையும் ரஷியாவிற்குக் கொடுத்து விடுவதற்கு நெப்போலியன் தயாராக இருந்தார். எகிப்து, சிரியா, கிரீஸ், மற்றும் கிரீட் போன்ற தீவுகள் ஆகியவற்றையெல்லாம் பிரான்ஸிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் நெப்போலியன் வற்புறுத்தினர். பாஸ்னியா, ஸெர்பியா ஆகியவை ஆஸ்ட்ரியாவுக் குரியனவாக வேண்டும். இஸ்தம்பூலை என்ன செய்வது என்பதைப்பற்றி விவாதம் மிகத் தீவிரமாக நடைபெற்றது. அதை ரஷியாவிற்குக் கொடுக்க நெப்போலியன் மறுத்து விட்டார். அதைத் தமக்கே கொடுத்து விடவேண்டும் என்று ரஷிய அரசர் வலியுறுத்தினர். இந்தக் காரணத்தை முன்னிட்டு ஒப்பந்தத்தில் பிளவு ஏற்பட்டது. ஆனாலும், அண்மையில் நண்பர்களான துருக்கியர்களைக் கைவிட்டு, அந் நண்பர்களின் தலைமுறை தலைமுறையான எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு பேரரசைத் துண்டிக்க நெப்போலியன் தயாராக இருந்தார் என்பது உறுதி. வரலாற்றிலேயே இதுபோன்ற ஒரு துரோகச் செயலைக் காண்பது அரிது.

டில்ஸிட் ஒப்பந்தத்திற்குக் கீழ்ப்படியும் வகையில் ரஷியா சுல்தானுக்கெதிராகப் போரிடுவதைக் கைவிட்டது. ஆனாலும், ரஷியப்படை வலாச்சியாவையும் மால்தேவியாவையும் தொடர்ந்து கைப்பற்றி வைத்திருந்தது. அவற்றை விட்டு வெளியேறுவதற்கான எண்ணத்தையும் அது வெளிப்படுத்தவில்லை. 1809 ஆம் ஆண்டில் மீண்டும் போர் துவங்கிற்று. ரஷியப் படையுடன் பக்ரேஷன் இளவரசர் (Prince Bugration) என்பவர் டான்யூபைக் கடந்து, அதன் வலப்புறத்திலிருந்த பல அரண்களையும் கைப்பற்றிக் கொண்டார். 1810-ல் சிலிஸ்டிரியா என்ற முக்கிய அரணை ரஷியர்கள் கைப்பற்றிக் கொண்டனர் என்றாலும், ருஸ்த்சுக்கைத் தாக்கியபோது அவர்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது. அவ்வாண்டின் இறுதியில் பால்ட்டின் (Baltin) என்ற இடத்தில் சுல்தானின் படையை ரஷியர்கள் தோற்கடித்தனர். பிறகு அவர்கள் இரண்டாம் முறையாக ருஸ்த்சுக்கைத் தாக்கி, சிஸ்டோவாவைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆனாலும், ஷும்லாவிலிருந்த அரணைக் கைப்பற்றுவதற்கோ, பால்கன் மலைத் தொடர்களைக் கடப்பதற்கோ அவர்களால் முடியவில்லை.

1811-ல் ரஷியாவுக்கும் பிரான்ஸுக்கும் இடையே மீண்டும் போர் மூண்டுவிடவிருந்தது. டான்யூப் கரையிலிருந்த ரஷியப் படைத் தலைவர்கள் தற்பாதுகாப்பிற்குத் தயாராக இருக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டனர். இதைத் துருக்கியர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, டான்யூபுக்கப்பால் ஒரு பெரும் படையை அனுப்பி வைத்தனர். ஆனால், அது இறுதியில் முறியடிக்கப்பட்டு அடிபணிய வைக்கப்பட்டது. ரஷியர்கள் வெற்றி பெற்றுர்களாயினும், ஒப்பந்தம் செய்துகொள்ள ஆயத்த மாக இருந்தனர். வலாச்சியாவையும் மால்தேவியாவையும் தங்களிடமே வைத்துக்கொள்வதாக அவர்கள் இதுகாறும் வற் புறுத்தி வந்தனர். இப்போது அவர்கள் சற்று விட்டுக்கொடுக்க இணங்கினர். நெப்போலியன் ரஷியாவின்மீது படையெடுப்பு நடத்த விருந்தார். எனவே, தம் பேரரசைக் காப்பதற்காக எல்லாச் சக்திகளையும் ஒன்றுகத் திரட்டுவது என்பது ரஷிய அரசைப் பொறுத்தவரையும் மிகவும் அவசியமாகிவிட்டது. 1811-ல் பேச்சு வார்த்தைகள் தொடங்கின. அவற்றின் விளை வாக 'புக்காரெஸ்ட் ஒப்பந்தம்' ஏற்பட்டது (1812, மே, 28). இரு பேரரசுகளுக்கும் இடையே புரூத் நதி புதிய எல்லையாக இருக்க வேண்டும் என்றும் ஏற்றுகொள்ளப்பட்டது. வலாச் சியா முழுதும், மால்தேவியாவின் பெரும் பகுதியும் துருக்கியி னிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. பெஸ்ஸரேபியா வும் மால்தேவியாவின் ஒரு பகுதியும் ரஷியாவிடம் ஒப்படைக் கப்பட்டன.

ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையிலும் ஸெர்பியாவை ரஷியா மிக மோசமாகவே நடத்திற்று. அதன் குடிமக்கள் பொதுவாகக் குற்ற மன்னிப்பு அளிக்கப் பெற்றனர். அவர்க ளுடைய உள்நாட்டு விவகாரங்களில் ரஷியா வருங்காலத்தில் குறுக்கிடலாம் என்றும் விதிக்கப்பட்டது. ஆனாலும், சுல்தானு டைய இறைமைக்குப் பங்கம் ஏற்படாவண்ணம் அது காப் பாற்றப்பட வேண்டும். ஸெர்பியர்களால் கைப்பற்றப்பட்ட பெல்கிரேட் மற்றும் இதர கோட்டைகள் துருக்கிப் படையின ரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். கடைசியாகக் குறிப்பிடப் பட்ட நிபந்தனையே வருங்காலத்தில் பெருந் தொல்லைகளை விளைவிப்பதாக இருந்தது.

18. இரண்டாம் மகமூத் (1803-1859)

(Mahmud II)

கிழக்குப் பிரச்சினை (The Eastern Question)[1]

சலீமுக்கும் முஸ்தபாவுக்கும் பிறகு இரண்டாம் மகமூத் எவ்விதம் பட்டத்திற்கு வந்தார் என்பதைப்பற்றி இதற்கு முற்பட்ட அத்தியாயத்தில் குறிப்பிட்டோம். முப்பத்தோராண்டு காலத்துக்கு நீடித்திருந்த அவரது ஆட்சியின் முதல் நான்கு ஆண்டுகளில் அவர் ஜனிஸ்ஸரீகளிடம் பெரும் அவமானத்தைப் பெற வேண்டியிருந்தது. பின்னாளில் அவர் நடத்திய சிறப்பு மிக்க ஆட்சியைப்பற்றிய அறிகுறி ஏதும் இப்பொழுது வெளியாகவில்லை. வரவிருக்கும் காலத்தில் அவர் வீரர்ந்த சுலைமானுக்குப் பிறகு மிகவும் திறம்படைத்தவரும் உறுதி வாய்ந்தவருமான சுல்தானாக ஆட்சி புரிந்தார். இருப்பினும், அவரைப் போல் துர்ப்பாக்கியசாலியும் இருக்க முடியாது. ஒழுக்கங்கெட்ட சுல்தான்கள் பலரின் காலத்தில் ஏற்கெனவே சுருங்கிவிட்டிருந்த

[1] பல ஆண்டுகளாக நிகரற்றதாக விளங்கி வந்த துருக்கிப் பேரரசு பலவீனமுற்றுக்கொண்டிருக்கையில், அது செல்வாக்குப் பெற்றிருந்த மத்தியதரைக் கடற் பகுதியிலும் பால்கன் பகுதியிலும் யார் அதன் இடத்தைப் பெறுவது என்ற பிரச்சினை தோன்றியது. ரஷியா தானே அப்பகுதிகளின் அதிபதியாக இருக்க வேண்டும் என்று கூறிக கொண்டிருந்தது. பிரிட்டனும் பிரான்ஸும் ரஷிய நாடு அந்த ஆதிக்க நிலையைப் பெறக் கூடாது என்று விரும்பின. ஒரு சிலர் இப் பிரச்சினை பால்கன் தீபகற்பத்தில் ஸ்லாவ் மக்கள் முதன் முதலாகத் தோன்றியதுமே தொடங்கி விட்டது என்று கருதுவர். மற்றும் சிலர் துருக்கியர்கள் மாஸிடோனியாவிலும் பிறகு கான்ஸ்டான்ட்டிநோப்பிலிலும் தோன்றியதும் தொடங்கிற்று எனக் கருதுவர். அதனுடைய தற்காலக் கட்டம் பதினெட்டாம் நூற்றாண்டில் துருக்கிப் பேரரசு அழிவுறத் தொடங்கியதிலிருந்து ஆரம்பமாயிற்று என்று கருதலாம். இதிலும் இதற்குப் பிறகு வரும் அதியாயங்களிலும் நான்கு கட்டங்களாக இது ஆராயப்படுகின்றது: 1. கிரீஸ் சுதந்தரப் போர். 2 முகமத் அலியும் எகிப்தின் விவகாரமும் 3. கிரிமியப் போர். 4. துருக்கிய - ரஷியப் போரும் பெர்லின் உடன்படிக்கையும்.

எல்லோனை மேலும் சுருங்காதவாறு தடுக்க அவரால் இயலவில்லை. இருப்பினும், அவரில்லாமற் போயிருப்பின், இழப்புகள் இன்னும் அதிகமாகவே இருந்திருக்கும். அவர் ஆட்சிக்கு வரும் தறுவாயில் உண்மையில் பேரரசு முற்றிலும் அழிந்துவிடும் நிலையில் இருந்தது. அதன் ஒவ்வொரு பகுதியிலும் கீழ்ப்படியாதவர்களும் கலகங்களை விளைவிப்பவர்களுமான பாஷாக்கள் தங்களது சுதந்தரத்தை வற்புறுத்திக் கொண்டிருந்தனர். எப்பிரஸ்ஸில் ஜனீனுவைச் சார்ந்த புகழ் பெற்ற அலீபாஷா தமது கீழ்ப்படிதல் நிலையைக் களைந்தெறிந்துவிட்டு, தம் ஆட்சியை கிரீஸிலும் தெஸ்ஸாலீயிலும் அயோனியத் தீவுகளிலும் வியாபித்துக் கொள்ளக் கடும் முயற்சி எடுத்துவந்தார். டான்யூப் கரையில் இருந்த விட்டினிலும், டைக்ரிஸ் நதியோரத்தில் பாக்தாதிலும், சிரியாவில் ஏக்கரிலும் மற்ற பாஷாக்களும் அங்ஙனமே வற்புறுத்திக கொண்டிருந்தனர். எகிப்தில் முகம்மத் அலீ (Mehemet Ali)[1] என்பவர் ஆளுநர்ப் பதவியை மேற்கொண்டு, சுல்தானிடமிருந்து விடுவிக்கப்பட்டிருந்த ஒரு படையையும் கப்பற்படையையும் உருவாக்கிக் கொண்டிருந்தார். அரேபியாவில் வஹாபிகள் (Wahabees) என்ற சமயப் பிரிவினர் உண்மையில் சுதந்தர நிலையை அடைந்துவிட்டிருந்தனர். புனித நகரங்களை அவர்கள் கைப்பற்றி வைத்திருந்தனர். ஸெர்பியா, மால்தேவியா, வலாச்சியா மற்றும் கிரீஸ் போன்ற மாநிலங்களிலும் முறை கெட்ட அரசாங்கத்தின் விளைவாக மனக்கசப்பு ஏற்பட்டிருந்தது. இவ்விதமாகப் பிளவுபட்டிருந்த ஒரு பேரரசைப் பிணைத்து வைப்பதில் ஏற்படும் இன்னல், மத்திய அரசின் ஆதிக்கத்துக் குட்பட்ட படை ஒன்று இல்லாமற் போயினமையினால் மேலும் அதிகரித்துவிட்டிருந்தது. அவ்வித மத்திய அரசு, பேரரசு சிதறுண்டு போய்விடத் தக்க வகையில் பிரிந்து செல்லும் கூறுகளைக் கட்டுப்படுத்தி யிருக்கக்கூடும். ஆனால், பேரரசின் பெருக்கத்திற்குப் பெரும் துணைபுரிந்த ஜனிஸ்ஸரீப் படையினர் இப் பொழுது அப் பேரரசுக்குப் பெரும் ஆபத்து விளைவிப்பவர்களாக ஆகிவிட்டிருந்தனர். சுல்தானை அவர்கள் அச்சுறுத்தித் தாங்கள் விரும்பியவர்களைப் பிரதம அமைச்சர்களாக நியமிக்கவும் அப் பதவியிலிருந்து அவர்களை விலக்கவும் கட்டளையிட்டு வந்தனர். ஆனால், டான்யூபில் தொடர்ந்து நிகழ்ந்த படையெடுப்புகளும் பாஷாக்களுடன் ஏற்பட்ட மோதல்களும் ஓர் இராணுவ சக்தி என்ற நிலையில் அவர்கள் எவ்வளவு திறமையற்றவர்களாகிவிட்டிருந்தனர் என்பதற்குச் சான்று கூறின. ஐரோப்பியப் படை

[1] எகிப்தின் பாஷாவாக இலங்கிய இவர் 'முஹம்மத் அலீ' என்னும் தமது பெயரை இப்படி ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் வரைந்து கொண்டார். (அவருக்கு எழுத்து வாசனை இடையாது.)

களுடன் அவர்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், அவர்கள் ஒழுக்க மில்லாதவர்களாகவும் பயிற்சி பெற்றிராத ஒரு கூட்டத்தினராக வுமே தென்பட்டனர். ஐரோப்பிய முறைப்படி உடுத்தவும், பயிற்சி பெறவும், ஆயுதம் தாங்கவும் அவர்கள் பெரும் ஆணவத் துடன் மறுத்துவிட்டனர். போர் முனைக்குத் தகுதியற்றவர் களாக இருந்தபோதிலும், மற்றக் காரியங்களில் மிக்க பயனுள்ள வர்களாகவே அவர்கள் இருந்தனர். அவர்கள் எவ்விதக் கட்டுப் பாட்டுக்கும் உட்பட்டிருக்கவில்லை. அவர்கள் தலைநகரை அச் சுறுத்தினர். மாநிலங்களில் எந்தத் துணிகரமிக்க பாஷாவும் தம்முடைய பேரவா மிக்க கிளர்ச்சி மனப்பான்மை படைத்த பெருந் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அவர்களைப் பயன் படுத்திக்கொள்ள முடிந்தது. இந்தக் கட்டுக்கடங்காப் படையை உடனடியாக அடக்குவது, கட்டுப்படுத்துவது எவ்வளவு அவசி யம் என்பதைத் தமக்கு முன்பு இருந்தவர்களைப் போலவே மகமூதும் உணர்ந்திருந்தார். அத்துடன், ஒழுக்கமும் பயிற்சி யும் பெற்று, கீழ்ப்படிந்து செல்லும் ஒரு புதிய படையை[1] உரு வாக்குவதன் அவசியத்தையும் அவர் அறிந்திருந்தார். இந்த மாபெரும் சாதனையை அவரால் ஆற்ற முடிந்தமைக்காக அவர் துருக்க நாட்டு வரலாற்றில் சிறப்புப்பெற்று விளங்குகின்றார். ஆட்சிக்கு வந்து பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் அந்த எண்ணத்தை அவரால் நிறைவேற்ற முடிந்தது.

தம்மை எதிர்நோக்கி நின்ற மாபெரும் இன்னல்களை வீரமும் உறுதியுடனும், ஆற்றலுடனும் தனித்து நின்றே சமாளிக்க வல்லவராகவும் அவர் விளங்குகிறார். நிகரில்லாத் துன்பங்களுக்கிடையே முப்பத்தோராண்டு காலம் வரை அவர் அரசாங்கத்தின் சுமையைத் தாங்கி நின்றது உண்மையில் பெரும் வியப்புக்குரியதாகும். ஆனாலும், இந்தச் சிறந்த குண வியல்புகளை அவர் பெற்றிருந்தாராயினும், படை சீர்திருத்தம் பெற்றது என்றாலும், அவருடைய பேரரசில் ஏற்பட்ட ஆட்சிப் பகுதிகளின் இழப்பு உண்மையில் மிகவும் அதிகமாகவே இருந்தது. கிரீஸ்ல மொரியாவும், தெஸ்ஸாலியின் எல்லைகள் வரை யிலும், மகாரிந்த் வளைகுடாவுக்கு வட புறத்திலிருந்த மாநிலங் களும ஐரோப்பாவின மூன்று வல்லரசுகளின் உறுதியின் பேரில் முழுச சுதந்தரத்தைப பெற்றுவிட்டன. எகிப்து, மால்தவியா, வலாசியா மற்றும ஸெர்பியா ஆகியவையும் அதே போன்ற சுதந்தர நிலையைப பெற்றுவிட்டன. பெயரளவுக்கு மட்டுமே

[1] 'புதிய படை' என்னும் பொருளை அடக்கிக்கொண்டிருந்த ஜனிஸ்ஸரி இப்பொழுது பழசுபட்டு விட்டது!

அவை சுல்தானுக்குக் கீழ்ப்படிந்த நாடுகளாக இருந்தன. அவை தொடர்ந்து பேரரசுக்கு உறுதியளிப்பனவாக இருக்கவில்லை. இவற்றுக்கெல்லாம் மாறாக, கிளர்ச்சி செய்தவர்களான ஜனீனை, விட்டின், பாக்தாத், ஏக்கர் ஆகியவற்றின் பாஷாக்களின் அதிகாரத்தை அவர் அழித்தார். எகிப்தின் பாஷாவான முகம்மத் அலீயின் மூலமாக அவர் வஹாபிகளை அடக்கி, அவர்களிடமிருந்து மக்கா, மதீனை ஆகிய புனித நகரங்களையும் மீட்பித்தார்.

மகமூத் மற்றவர்களைப் போலல்லாது, இராச்சிய விவகாரங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். அந்தப் புரத்தின்மீது அவருக்கு அவ்வளவாக அக்கறை இருக்கவில்லை. சிற்சில வேளைகளில் அவர் பெரும் கொடுமைகளை இழைத்து விடுவார். தம் சகோதரர் முஸ்தபாவையும் அவருடைய ஒரே மகனையும் அவர் கொன்றார்; முஸ்தபாவின்மூலம் கருக்கொண்டிருந்த அந்தப்புரத்து நான்கு கர்ப்பிணிகளையும் அவர் பாஸ்பரஸில் மூழ்கடித்தார். தம்முடைய திட்டங்களுக்கு மாறான திட்டங்களை வகுத்தவர் எவராயினும் அவரை அந்தரங்கமாகக் கொன்றுவிடுவதில் அவர் சிறிதளவும் தயங்கவேயில்லை. கிரீஸில் புரட்சி ஏற்பட்டவுடன், தம் பேரரசிலிருந்த கிரேக்கர்களைக் கொன்றுவிடும்படி அவர் கட்டளை பிறப்பித்தார். இருப்பினும், இச் செயல்களெல்லாம் அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களின் செயல்களுக்கு ஏற்பவே இருந்தன. பொது மக்கள் அவற்றை ஏற்றும் கொண்டனர்.

அவருடைய ஆட்சிக் காலத்தில் பேரரசு அடைந்த மிகப் பெரிய இழப்பு எகிப்து இழக்கப்பட்டதனால் ஏற்பட்டதாகும். எகிப்து ஒரு முஸ்லிம் நாடு. பல ஆண்டு காலமாகவே அதன்மீது உத்மானியப் பேரரசரின் பிடி தளர்ச்சியுற்றதாக இருந்தபோதிலும், பொதுவாக மம்லூக்குகளே அதனைத் தங்கள் ஆதிக்கத்துக்குட்படுத்தி ஆண்டுவந்த போதினும், சுல்தான் எந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கும் அதனைத்தான் நம்பி இருந்தார். ஆகவே, அப்படிப்பட்ட முக்கியமான மாநிலத்தை இழப்பதென்றால், அது பேரரசுக்குப் பெரும் இழப்பாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

எகிப்தின் பாஷாவாக இருந்த முகம்மத் அலீ (Mehemet Ali) நவீன காலத்தில் இஸ்லாமிய உலகில் தோன்றிய ஒரு மிகவும் சிறப்புப் பெற்ற தலைவராவார். அல்பேனிய முஸ்லிம் மீனவராகவும் காவலாவில் (Kavala) ஒரு சிறிய நிலக்கிழாராகவும் இருந்த

ஒருவரின் மகனுகப் பிறந்த இவர் ஆதரவற்ற அனுதையாக விடப்பட்டார்; அம் மாவட்டத்துத் தலைமை நீதிபதியின் வீட்டில் இவரும் ஒருவராக வளர்க்கப்பட்டார். எழுதவோ படிக்கவோ அவர் கற்றுக்கொள்ளவில்லை. மனிதர்களின் முகங் கள் மட்டுமே தாம் படித்த நூல்கள் என்றும், அதில் அவர் தவறு செய்வது அரிதே என்றும் பின்னுளில் கூறினராம். நெப்போலி யனின் தலைமையில் பிரெஞ்சுப் படை ஒன்று எகிப்தின் மீது படையெடுத்தபோது அதன் பாதுகாப்பிற்காக முகம்மத் அலீ அனுப்பி வைக்கப்பட்டார். முந்நூறு அல்பேனியப் படைவீரர் களுடன் இவரும் ஒரு சிறு அதிகாரியாக அங்கு அனுப்பப்பட் டார்; அப் படைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தவர் வீடு திரும்பியதும், அவ்விடத்தைத் தாமே ஏற்றுக் கொண்டார். அபூக்கிர் விரிகுடாவில் துருக்கிப்படை கடலில் துரத்தியடிக்கப் பட்டதும் (1799) பிரிட்டிஷ் கப்பற்படைத் தலைவனின் கப்பலுக் குரிய படகு ஒன்றில் இவர் மூழ்கடிக்கப்படுவதிலிருந்து காப் பாற்றப்பட்டார். பிறகு எகிப்திலிருந்த அல்பேனியப் படை முழுவதற்குமே இவர் தலைவராக நியமிக்கப்பட்டார்; சிறிது காலத்திற்கு பிரிட்டிஷ் படையிலும் சேர்ந்திருந்தார்.

எகிப்திலிருந்து பிரிட்டிஷ் படை வெளியேறியதற்குப் பிறகு அரசை எவர் கட்டுப்படுத்துவது என்பதில் துருக்கியர்களுக்கும் மம்லூக்குகளுக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டது. முதலில் முகம்மது அலீ மம்லூக்குகளே சுல்தானுக்கெதிராக ஆதரித்தா ரெனினும், பின்னுளில் அவர்களைக் கைவிட்டு, துருக்கியர்களின் பணியில் இருந்த அல்பேனியர்களுக்கு உதவியளித்தார். 1807-ல் பிரிட்டிஷ் அரசு எகிப்திற்கு எதிராக வீணன படை யெடுப்பு ஒன்றை நிகழ்த்தியபோது முகம்மது அலீதான் அதைத் தீவிரமாக எதிர்த்தார். ரோஸெட்டாவில் பல பிரிட்டிஷ் படை வீரர்கள் கொல்லப்பட்ட வேளையில் இவர்தாம் எதிரிகளின் படைக்குத் தலைமை தாங்கினர். ஒரு சில நாள்களுக்குப் பிறகு அவர் வெற்றிகரமாகக் கெய்ரோ நகருக்குள் நுழைந்தார். அக் காலந்தொட்டு அவருடைய பதவியும் செல்வாக்கும் அதிகரித்துக் கொண்டே இருந்தன. அவரது முப்பத்தைந்தாம் வயதில் அவர்தாம் எகிப்திலேயே மிகவும் சக்தி வாய்ந்தவராக விளங் கினர்; தம்மைப் பாஷாவாகவும் அவர் நியமித்துக் கொண்டார்; மம்லூக்குகள் அவரை எதிர்த்துத் தொல்லை கொடுத்தார்க ளாகையால், அவர்களைத் தொலைக்க அவர் தீர்மானித்தார். மம்லூக்குகளில் சிறப்பான ஐந்நூறு பேரைக் கெய்ரோவின் கோட்டையில் கூடிய ஒரு மாநாட்டிற்கு அவர் அழைத்தார். அவர்களுக்குச் சிறந்த விருந்து அளித்ததற்குப் பிறகு, கதவுகளை

மூடி அவர்களைச் சுட்டுக் கொல்லும்படி அவர் கட்டளையிட்டார். மம்லூக்குகளுள் ஒருவர் மட்டுமே மதிலேறிக் குதித்துத் தப்பினர். மற்றவர்கள் அனைவருமே படுகொலைக்கு இரையாயினர். நாட்டில் இருந்த மற்ற மம்லூக்குகளுக்கும் இதே கதி ஏற்பட்டது. மம்லூக்குகளை முகம்மது அலீ இவ்விதமாக அடக்கி ஒடுக்கிய முறையைப் பின்னாளில் சுல்தான் மகமூத் ஜனிஸ்ஸரீப் படையினரை அடக்குவதற்குக் கையாண்டார்.

அன்றையிலிருந்து முகம்மது அலீ எகிப்தின் 'அரசராக' எவ்வித எதிர்ப்புமின்றி ஆட்சி புரிந்து வந்தார். ஒழுங்கினை ஏற்படுத்துவதிலும் ஆட்சி புரிவதிலும் அவர் பெரும் சிறப்புப் பெற்றிருந்தார். தம் பகைவரிடத்தும் தீங்கு இழைத்த அனைவரிடத்தும் அவர் மிகக் கொடுமையாகவும் பழிவாங்கும் மனப்பான்மையுடனும் நடந்து கொண்டாலும், சரியான நீதியை வழங்குவதில் அவர் கண்ணும் கருத்துமாய் இருந்தார்; தம் குடிமக்களுள் எந்த இனத்தினருக்கும் ஜாதியினருக்கும் சமயத்தினருக்கும் ஒருசார்பின்றி நீதி வழங்குவதில் அவர் மிகத் தீவிரமாக நடந்து கொண்டார். எகிப்து அதுவரையும் கண்டிராத அமைதியையும் ஒழுங்கையும் அவர் நிலைநாட்டினர். அவர் தம் ஆட்சியை விஸ்தரிக்கப் பெரும் அவாக் கொண்டிருந்தார். அதை நிறைவேற்றுவதற்காகவும் சுல்தானுக்கெதிராகத் தம் நிலையை வலுப்படுத்திக் கொள்வதற்காகவும் ஒரு லட்சம் படைவீரர்களை அவர் திரட்டி, அவர்கட்கு ஐரோப்பிய முறைப்படி பயிற்சியும் அளித்து, ஆயுதங்களையும் ஏந்திப் பிடிக்கச் செய்தார். பிரெஞ்சு உதவியுடன் அவர் ஆற்றல்மிக்க ஒரு கப்பற்படையையும் உருவாக்கினர். இப் படையைப் பயன்படுத்தி அவர் அராபிய வஹாபி இனக் கிளர்ச்சியாளர்களை சுல்தானின் சார்பாக ஒடுக்கினர். சேனர் (Senaar) சோலைவனத்தை அவர் வென்று சூடானில் எகிப்தின் ஆட்சியைப் பரப்பினர். கிரீஸில் மூண்டுவிட்ட, சுல்தானால் சமாளிக்க முடியாததாக இருந்த புரட்சியை அடக்குவதற்காக சுல்தானின் ஆதரவுக்கு முகம்மது அலீ ஒரு சேனையையும் கப்பற்படையையும் அனுப்பிவைத்தார்.

முகம்மது அலீ கவனிக்க இருந்த விவகாரங்களில் மிகவும் முக்கியமானது ஸெர்பியாவின் விவகாரமாகும். புக்காரெஸ்ட் உடன்படிக்கை அந்த மாநிலத்தை நிலையற்றதும் தெளிவற்றதுமான நிலையில் விட்டிருந்தது. அதன் நிபந்தனைகளின்படி, பெல்கிரேடில் போர் வீரர்களை நிறுத்தி வைப்பதற்கும் அரண்களைக் கட்டி வைப்பதற்கும் துருக்கியர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஸெர்பியர்களுக்கு அவர்கள் சுயாட்சி வழங்கவேண்டும் என்

றும் வற்புறுத்தப்பட்டிருந்தது. எனவே, அதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது. சுயாட்சி வழங்கப்படுகிற வரையிலும் தாங்கள் பெல்கிரேடைத் துருக்கியர்களிடம் ஒப்படைக்க முடியாதென்று ஸெர்பியர்கள் மறுத்து விட்டனர். அதனை உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்று சுல்தான் வற்புறுத்தினர். பின்னல் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலிருந்து ஸெர்பியாவுக்குச் சுயாட்சி கொடுப்பதற்கான விருப்பம் இருக்கவில்லை என்பது புலனாகின்றது. தம்முடைய உரிமைகளை வலிந்து வற்புறுத்துவதற்காக சுல்தான் 1813-ல் ஒரு படையை அனுப்பினர். ஸெர்பியாவின் மாபெரும் தேச பக்தரும் படைவீரருமாகிய காரா ஜார்ஜ், தம்முடைய முந்தைய வீரச் செயல்களுக்கு முற்றிலும் மாறுக, இத் தருணத்தில் தம் இயல்பான நிலையை இழந்து விட்டு, பீதியில் மூழ்கிக் கிடந்தார். ஸெர்பியாவின் உண்மை ஆட்சியாளராக அவர் திரட்டி வைத்திருந்த பெருஞ் செல்வத்தையெல்லாம் மண்ணில் மறைத்து வைத்ததற்குப் பிறகு, கோழையாக நாட்டை விட்டே ஓடி ஆஸ்ட்ரியர்களிடம் அடைக்கலம் புகுந்தார். ஒரு சில ஆண்டுகட்குப் பிறகு தமது முதுமையில் அவர் மீண்டும் தாயகம் திரும்பியபோது சிறையிடப்பட்டு, துரோகியென்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

காரா ஜார்ஜ் இவ்விதமாக ஓட்டம் பிடித்ததற்குப் பிறகு ஸெர்பியா துருக்கியின் தயவை நாடவேண்டியிருந்தது. அதன் பெரும்பாலான பகுதியைத் துருக்கியர்கள் கைப்பற்றிக்கொண்டு விட்டனர். எனவே, ஸெர்பியாவின் வரலாற்றில் ஏற்பட்டிருந்த இத் தருணத்தில் மற்றொரு மாபெரும் தேசபக்தரான மிலோஷ் ஓப்ரினேவிட்ச் (Milosch Obrenowitch) என்பவர் தோன்றினர். அவர் கிறித்தவ மக்களைக் கிளர்ந்தெழுமாறு தூண்டி வெற்றியடையுமாறும் செய்தார். நாட்டுப்புற மாவட்டங்களிலிருந்து துருக்கியர்களை விரட்டியடிப்பதிலும் அவர்களை அரண்களிலேயே அடைத்து வைப்பதிலும் அவர் வெற்றி கண்டார். ஸெர்பிய கோட்டைகளில் அடைபட்டுக் கிடந்த துருக்கியர்களை விடுவிப்பதற்காக மகமூத் மற்றொரு படையை அனுப்பி வைத்தார். ஆனால், அது ஸெர்பியாவின் எல்லையிலேயே நின்று விட்டு, பேச்சு வார்த்தைகளை நடத்திற்று. ஒரு சில ஆண்டுகள் வரையிலும் நிகழ்ந்த இப் பேச்சு வார்த்தைகளால் பலன் ஏதும் விளையவில்லை. பேரரசின் மற்றும் பல பகுதிகளிலும் சிக்கலான பல தொல்லைகள் சுல்தானுக்கு ஏற்பட்டு அவற்றை அவர் கவனிக்க வேண்டியிருந்ததனால், ஸெர்பிய மலைப்பகுதிகளில் தம் படையை எதிரிகளின் திடீர்த் தாக்குதல்களுக்குப் பலியாக்க விரும்பவில்லை.

மகமூத் எதிர்நோக்க வேண்டியிருந்த இன்னல்களுள் மிகவும் தீவிரமானது, 1821-ல் தோன்றிய கிரேக்கர்களின் கிளர்ச்சி யாகும். உத்மானியப் பேரரசின் ஆட்சி கிரீஸில் மிகக் கேடான விளைவுகளை உண்டுபண்ணி விட்டிருந்தது. எந்தச் செயல் களுக்காக ஓர் அரசாங்கம் இருக்கவேண்டுமோ அவற்றை அதனால் சிறிதளவும் நிறைவேற்ற இயலவில்லை. உயிருக்கும் சொத்துக்கும் மானத்திற்கும் பாதுகாப்பு என்பதே கிடையாது. நீதி வழங்குதல் என்பது அதிக விலை கொடுத்தவனுக்கே கிட்டக் கூடிய ஒரு முறையாகி விட்டிருந்தது. பேரரசின் மற்றப் பகுதி களில் குடியிருந்த கிரேக்க மக்களைக் காட்டிலும் கிரீஸில் இருந்த வர்களின் நிலை பல்வகைகளிலும் சீர்கேடாக இருந்தது. இஸ் தம்பூலில் அவர்கள் ஒரு செல்வம் மிக்க பணக்காரக் கூட்டத்தின ராக விளங்கினர். பேரரசின் நிர்வாகத்தில் அவர்களுக்கு அதிக பங்கு இருந்தது. அவர்கள் இல்லாமல் சுல்தானால் ஆட்சியை நடத்த முடியவில்லை. அவர்களுடைய சமயம் தனிப் பாதுகாப் பிற்கு உட்பட்டிருந்தது. பேரரசின் வர்த்தகம், வருமானம் ஆகிய அனைத்தும் அவர்கள் கையில்தாம் இருந்தன. ஸ்மிர்னாவிலும் சலோனிகாவிலும் மற்றும் பல நகரங்களிலும் பல கிரேக்கர்கள் வர்த்தகத்திற்கான தனிச் சலுகைகளைப் பெற்றுப் பெருஞ் செல் வத்தைத் திரட்டி வைத்திருந்தனர். அவருக்கு முற்பட்டவர்கள் பலரைப் போலவே மகமூதும், இம் மக்கள் ஏராளமான தீர்வை களை அரசுக்குச் செலுத்தி வருவதனால் பெரும் நிதி வரு மானத்தை அரசுக்கு உண்டுபண்ணிக் கொடுக்கின்றனர் என் பதை உணர்ந்து, அவர்களை அழிப்பதற்கோ நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கோ மதவெறி கொண்ட முஸ்லிம்களால் வற் புறுத்தப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்த விரும்பவில்லை. ஸியாஸ் (Scios), சாரா (Psara) போன்ற பல்வேறு தீவுகளிலும் அவர்களே ஆட்சியை அமைத்துக்கொண்டு விருப்பம்போல் வாழ்க்கை நடத்திக்கொள்ள அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

எனவே, கிரீஸில் இருந்த கிரேக்கர்களின் நிலை முற்றிலும் மாறுனதாக இருந்தது. அதனைக் குடிமக்கள் நிறைந்த செல்வங் கொழிக்கும் நாடாக ஆக்குவதற்கு சுல்தான் விருப்பம் கொண்டிருக்கவில்லை போலும்! அதனைத் தமக்கு அடங்கிய நாடாகவே இருத்திக்கொள்ள அவர் ஆசைப்பட்டார். பயிரிடு வதற்கேற்ற அந் நாட்டு நிலங்கள் பெரும்பாலும் முஸ்லிம்கள் வயமே இருந்தன. அவர்களுள் பலர், இனத்தில் கிரேக்கர் களாகவே இருந்தனர்; தங்களுடைய சொத்தைக் காத்துக் கொள்வதற்காக அவர்கள் முஸ்லிம்களாகி விட்டனர். அப்பட்ட மான துருக்கிய இனத்தாரைப் போலவே இவர்களும் வெறி

பிடித்தவர்களாகவே இருந்து, குடியானவர்களை மிகக் கொடூரமாக நடத்தி வந்தனர். கிரேக்கர்களைப் பொறுத்த வரையில், உத்மானிய அரசாங்கம் தீர்வைகளை வற்புறுத்தி வசூலித்துக் கொள்ளும் ஓர் இயந்திரமாகவே செயல்பட்டு வந்தது. அவர்களை ஆளுவதற்கு அனுப்பப்பட்ட பாஷாக்கள் தங்களுடைய பதவிக் காலம் மிகக் குறுகலானதாகவே உள்ளது என்பதை உணர்ந்து, எவ்வளவிற்கு எவ்வளவு விரைவில் தங்களைச் செல்வந்தர்களாக்கிக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு பெருஞ் செல்வந்தர்களாக ஆக்கிக்கொள்ள விரைந்தனர். அங்கிருந்த குடிமக்கள் தங்கள் நிலையை ஸியாஸிலும் மற்றும் பல தீவுகளிலும் நிலவிய சுயேச்சை ஆட்சிக்குட்பட்டிருந்தவர்களின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டனர். அரசாங்கம் கவனிக்காமல் விட்டிருந்தாலும், கல்வி ஓரளவு பரவியிருந்தது. மற்ற மாநிலங்களிலிருந்த செல்வச் சீமான்களாகிய பல கிரேக்கர்கள் கல்விக் கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் அறக் கொடைகளை நிரம்பவும் வழங்கியிருந்தனர். கல்வியுடன் பழைய கிரேக்க வரலாற்றைக் கற்பதற்கும், நாட்டுப் பற்றையும் பெருமிதத்தையும் புதுப்பிப்பதற்கும் தேவையான உணர்ச்சியும் உருவாயிற்று. படிப்படியாகப் புரட்சி வித்துகள் கிரீஸில் விதைக்கப்பட்டு வந்தன.

கிரீஸில் தோன்றிய கிளர்ச்சி அரசியல் மற்றும் சமயக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்திருந்ததோடல்லாமல், குடியானவர்களின் போராகவும், நிலமானியக் கொடுமைக்காரர்களுக்கெதிராக விவசாயிகள் நடத்திய பெருங் கிளர்ச்சியாகவும் இருந்தது.

1821, ஏப்ரல் 21ஆம் நாள் அன்று கிளர்ச்சி மொரியாவில் தொடங்கிற்று; விரைவில் அது நாட்டுப்புற மாவட்டங்களுக்கெல்லாம் பரவிற்று. அச் சமயத்தில் கிரேக்க இனத்தைச் சார்ந்தவர்களாகவும் நிலத்தின் நிலமானியத் தலைவர்களாகவும் குடியானவர்களை அடக்கி ஆள்பவர்களாகவுமிருந்த இருபதினாயிரம் முஸ்லிம் மக்கள் நகர்ப்புற மாவட்டங்களில் ஆங்காங்கே பரவியிருந்தனர். இவர்களுள் அனேகர் ஈவு இரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். உயிர் தப்பியவர்கள் துருக்கிப் படைவீரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கோட்டைகளில் அடைக்கலம் புகுந்தனர். கிரேக்கப் புரட்சிக்காரர்கள் இந்தக் கோட்டைகளையும் விரைவில் முற்றுகையிட்டு, அங்கிருந்தவர்களை மூன்று மாதங்களுக்குள் சரணடையச் செய்தனர். சரணடைந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறுகவே அவர்களுள் பலர் கொல்லப்பட்டனர். படைவீரர்களும், துருக்கிக் குடிமக்களும், அதிகாரிகளும் படுகொலைக்கு இரையாயினர்.

இந்தச் சூழ்நிலையில் துருக்கியர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் இடையில் மோதல் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. முதன் முதலாக, மொரியாவின் தலைநகரான திரிபொலிட்ஸாவின் சுற்றுப்புறத்திலுள்ள வால்டெட்ஸி (Valtetsi) என்ற இடத்தில் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அங்கிருந்த மூவாயிரம் குடியானவர்கள் ஐயாயிரம் துருக்கியர்களை முறியடித்தனர். மோதலில் நானூறு துருக்கியர்களும் நூற்றைம்பது கிரேக்கர்களும் உயிரிழந்தனர். இந்தப் போர் ஒரு சிறிய போராக இருப்பினும், துருக்கியர்களின் புகழை அது பாழடித்தது. கிரேக்கக் கிளர்ச்சியாளர்களுக்குங்கூட அவர்கள் நிகரில்லை என்பதை அது திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டியது.

இவ் வெற்றியின் விளைவாக நவரினோவும் திரிபொலிட்ஸாவும் கிரேக்கக் கிளர்ச்சியாளர்களின் வசமாயின. இரண்டு அரண்களிலும் தங்களுக்கும் அங்குக் குடியிருந்தவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற நிபந்தனையின் பேரில் படை வீரர்கள் அடிபணிந்தனர். எனினும், அக் காப்புறுதி வெகு விரைவில் மீறப்பட்டது. அங்கிருந்த முஸ்லிம் படைவீரர்களும் குடிமக்களும் மிகக் கொடுமையாகக் கொல்லப்பட்டனர். சொல்லொணாக் கொடுமைகள் இழைக்கப்பட்டமையால் கிரேக்க வரலாற்றுசிரியர்கள் அவற்றைப்பற்றி எழுத முன்வரவில்லை.

மொரியாவில் நிகழ்ந்த படுகொலையைப்பற்றிய செய்தி இஸ்தம்பூலுக்கு எட்டியவுடன், எங்கும் பீதியும் சினமும் காட்டுத் தீப்போல் பரவின. அங்கிருந்த கிரேக்கர்களின்மீது மிகக் குரூரமாய்ப் பழிவாங்கப்பட்டது. சுல்தானே அதற்கு வழிகாட்டியாக விளங்கினர். தலையார்ந்த கிரேக்கர்கள் பலர் உடனடியாகக் கொல்லப்பட வேண்டுமென்று சுல்தான் உத்தரவிட்டார். பாட்ரியார்க்கும் (Patriarch) மற்றும் பல மேற்றிராணியர்களும் பல்லாயிரக் கணக்கான கிரேக்கர்களும் தலைநகரிலும், ஸ்மிர்னா சலோனிகா போன்ற நகரங்களிலும், சைப்பிரஸிலும் படுகொலை செய்யப்பட்டனர். இந்தக் கொடுமைகளுக்கு சுல்தான் தடை விதிக்கவில்லை. அதையொட்டி, கிரேக்கர்கள் துருக்கியர்களையும், துருக்கியர்கள் கிரேக்கர்களையும் படுகொலை புரிவதில் சிறிதளவும் தயங்கவில்லை.

மொரியாவில் ஆரம்பமான புரட்சியின் விளைவாக, ஒரு சில மாதங்களுக்குள் மொரியாவிலிருந்த துருக்கிப் படைகளும் முஸ்லிம் குடிமக்களும் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். கிரேக்கர்கள் அதிகமாக வாழ்ந்த மற்றும் பல தீவுகளிலும் புரட்சி

பரவிற்று. அங்கிருந்த கிரேக்கர்கள் துருக்கியர்களால் நல்ல முறையில் நடத்தப்பட்டனர் என்றலும், அவர்களும் சுதந்தர வாழ்க்கையையே நாடினர். கிரேக்க வாணிகக் கப்பல்கள் பல இந்தத் தீவுகளுக்குத்தாம் உரியனவாகும். இக் கப்பல்களைக் கொண்டு ஒரு கப்பற் படை உருவாக்கப்பட்டது. அவை அடிக்கடி ஒன்றுகத் திரண்டு, துருக்கிக் கப்பற்படையை முறியடித்துக் கொண்டிருந்தன. பல துருக்கிக் கப்பல்கள் கிரேக்கக் கப்பற் படையின் தாக்குதல்களுக்கு இரையாயின. துருக்கி மாலுமிகள் பெரும் பீதியில் மூழ்கிக் கிடந்தனர்.

1821ஆம் ஆண்டிலிருந்து 1824ஆம் ஆண்டு வரையிலும் துருக்கியர்கள் கிரேக்கக் கிளர்ச்சியாளர்களால் கடலிலும் நிலத்திலும் முறியடிக்கப்பட்டனர். மொரியா மட்டுமின்றி, கோரிந்த் வளைகுடாவுக்கு வடபுறத்திலிருந்த பகுதிகளிலும் சுதந்தர முரசு கொட்டப்பட்டது. ஒரு தேசிய அரசும் பிரதிநிதிகளைக்கொண்ட சபை ஒன்றும் அங்கே உருவாயின. கிரீஸில் ஏற்பட்ட கிளர்ச்சி மேலைய நாடுகளில், குறிப்பாக இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் இருந்தவர்களின் அனுதாபத்தைக் கிரேகர்களுக்குச் சம்பாதித்துக்கொடுத்தது. இருப்பினும், இந்த நாட்டு மக்கள் நெடுங் காலம் வரையிலும் ஒதுங்கி நின்று, கிளர்ச்சியை நேரிடையாக ஆதரிக்காமல் இருந்தனர். இங்கிலாந்தில் சுதந்தர ஒலியை எழுப்பிக்கொண்டிருந்த மாபெரும் கவிஞரான பைரன் பிரபு (Lord Byron) கிரேக்கர்களின் ஆதரவாளராகத் தோன்றி, பல தொண்டர்களைத் திரட்டிச் சென்று, கிரேக்க நாட்டை அடைந்து, அதன் சுதந்தரப் போரில் ஈடுபட்டுத் தம் உயிரையே தியாகம் செய்துவிட்டார். மலேரிய விஷக் காய்ச்சல் கண்டு உயிர் நீத்த இப் பெருமகனரின் செய்தியைப்பற்றிக் கேள்வியுற்ற மேனாட்டினர் கிரேக்கர்களுக்கு ஆதரவு கொடுக்க இன்னும் தீவிரமாக எழுந்தனர்.

நான்கு ஆண்டு காலமாக அப் புரட்சியை அடக்க வீணை முயற்சி செய்ததற்குப் பிறகு, தம் படையால் அதை ஒடுக்க இயலாதென்பதை சுல்தான் முகமூத் உணர்ந்தார். ஐரோப் பியப் படையின் மாதிரியில் எகிப்தின் முகம்மத் அலீ தம் படையை நவீன அமைப்பில் உருவாக்கி அமைத்திருப் பதை சுல்தான் கண்ணுற்றுத் தாமும் அதுபோலவே செய்ய வேண்டுமென்னும் கருத்தைக் கொண்டார். எகிப்தின் புது மாதிரியான சேனையையும் கப்பற்படையையும் கிரீஸுக்கு அனுப்பிவைத்து அதை மீண்டும் கைப்பற்றுமாறு மன்னர் முகம்மத் அலீயை 1824-ல் சுல்தான் வேண்டிக் கொண்டார்.

ஒரு நிபந்தனையின் பேரில் இதைச் செய்வதற்கு மன்னர் முகம்மத் அலீ இணங்கினர். அதாவது, சிரியா, டமாஸ்கஸ் மற்றும் கிரீட் ஆகியவற்றைத் தம்முடைய ஆட்சியில் இணைத்துக் கொள்வதற்கு முகம்மத் அலீக்கு சுல்தான் அனுமதி வழங்கவேண்டும் என்பதாகும். மொரியாவின் கடற்கரையில் சுல்தானுடைய கப்பற்படையுடன் ஒத்துழைக்க மன்னர் முகம்மது அலீ தம் கடற்படையை அனுப்பினர். அக் கப்பற்படை 1824 ஜூலை 25ஆம் நாள் அன்று அலெக்ஸாந்திரியாவிலிருந்து, முகம்மத் அலீயின் மகனான இப்ராஹீம் பாஷாவின் தலைமையில், பத்தாயிரம் காலாட் படையினருடனும் ஓராயிரம் குதிரைப் படையினருடனும் புறப்பட்டது. அவர்கள் மோடோனில் வந்து இறங்கிப் பிறகு நவாரினோவுக்கு முன்னேறினர். அந்தக் கோட்டையைப் பதினாயிரம் படை வீரர்கள் காத்துவந்தனர். ஏழாயிரம் சிறந்த கிரேக்கப்படையினர் அதன் உதவிக்குச் சென்றனர். மூவாயிரம் படை வீரர்களுடன் இப்ராஹீம் அவர்களைக் கடுமையாகத் தோற்கடித்தார். கிரேக்கர்கள் குழப்பத்தில் மூழ்கி இங்குமங்குமாக ஓடினர். சிறந்த கிரேக்கப் படையினர்கூட ஒழுங்குற அமைந்த எகிப்தியப் படையினருக்கு நிகராகவில்லை எனபது இதிலிருந்து புலனாகின்றது.

நவாரினோவைக் கைப்பற்றிய இப்ராஹீம் கிரீஸைக் கைப்பற்றுவதைத் தொடர்ந்து மேற்கொண்டு, வெற்றியும் பெற்றார். துருக்கியர்களுடன் நீண்ட நெடுநாள்களாகக் கிரேக்கர்கள் போர் புரிந்து கொண்டிருந்ததனால், இவர்கள் மிகவும் களைப்புற்றுப் போயிருந்தார்கள். இந்தப் புதிய, ஆனால் மிகவும் திறம்படைத்த எதிரியை அவர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை. ஏப்ரல், 1826-ல் எகிப்தியப் படை மிஸ்ஸலாங்கியைக் (Missalonghi) கைப்பற்றிக் கொண்டது. இதனால் நாலாயிரம் கிரேக்கர்கள் உயிரிழந்தனர். பிறகு அவர் படிப்படியாக மொரியா முழுதையும் அடக்கினார். பினாளில் கோரிந்த, ஏதென்ஸ் ஆகிய நகரங்களும் துருக்கியர் வசமாயின. 1827, மே 5ஆம் நாள் அன்று ஃபேலரம் (Phalerum) துறையில் அல்பேனியப படையின் தலைவராக இருந்த ரஷீத் பாஷா என்பவர் கிரேக்கப் படைகளை முறியடித்து விரட்டினார். கிரேக்க அரசாங்கம் தன் தலைநகரைப் பெலோபொனீசஸ் பகுதியிலிருந்து பாரஸ் (Poros) தீவிற்கு மாற்றிக் கொண்டது. பிறகு கிரீஸ் முழுதுமே குழப்பத்தில் மூழ்கியது. கிரேக்க கப்பற்படை துருக்கிய - எகிப்துக் கப்பற்படைகளை எதிர்த்தது எனினும், கடலில் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வைக்கவும் எகிப்தியர் இருந்த தளத்துடன் இப்ராஹீம் தொடர்பு கொண்டிருப்பதைத் தடுக்கவும் அதனால் இயலவில்லை.

ஐரோப்பிய வல்லரசுகள் தலையிட்டிருக்காவிடின் கிரீஸ் முழுதுமே அடக்கி வெற்றிகொள்ளப்பட்டு, அதில் துருக்கியர்களின் ஆட்சி மீண்டும் நிலைநாட்டப் பட்டிருக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமிருக்க முடியாது. கிரேக்க மக்களை அடக்கி யொடுக்கி அவர்களை அடிமைகளாக விற்றுவிடப் போவதாக இப்ராஹீம் பாஷா அச்சுறுத்தினார்.

இதற்கிடையே இப்ராஹீமின் படைகள் பெற்ற வெற்றிகள் இஸ்தம்பூலில் இருந்தவர்களை வியப்புக்குள்ளாக்கின. இந்த மன நிலையை சுல்தான் மகமூத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, நெடு நாள்களாகத் தாம் மனத்தில் கொண்டிருந்த படைச் சீர்திருத்தத் திட்டத்தை நிறைவேற்ற முற்பட்டார். அவருடைய திட்டத்தை ஆலோசனைக் குழுவினரும் உலமாக்களும் ஏக மனத்துடன் ஆதரித்தனர். எனவே, அவர் அத் திட்டங்களைச் செயல்படுத்தித் தம் கடும் பகைவர்களான ஜனிஸ்ஸரீகளை அடக்கத் தீர்மானித்தார். அவர் பதினாயிரம் பீரங்கிப்படையினரைத் தேர்ந்தெடுத்து அவர்கட்குப் புதிய வகையில் பயிற்சியளித்து, அவர்களை ஆயுதங்களை ஏந்திப் பிடிக்கச் செய்து, அவர்களுடைய உதவியைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய படையை உருவாக்கினர். அதே வகையில் ஒரு சிறிய காலாட்படையை இவருக்கு முன்பே சுல்தான் மூன்றும் சலீம் உருவாக்கியிருந்தார். ஜனிஸ்ஸரீகளின் ஆகாவான ஹுஸைன் பாஷாவும் முஃப்தியும் அவரிடம் விசுவாசத்துடன் இருந்தனர். எனவே, சுல்தான் மகமூத் ஜனிஸ்ஸரீப் படையினரில் கால் பகுதியினரைப் புதிய காலாட்படையில் சேர்த்துக் கொள்ளுமாறு 1826-ல் கட்டளை பிறப்பித்தார். இதற்கு ஜனிஸ்ஸரீகள் மறுத்தனர். அவர்கள் ஒரே கூட்டமாய்ச் சேர்ந்து திரண்டு, சுல்தானை அச்சுறுத்துவதற்காக அரண்மனைக்குள்ளே புகுந்தனர். சுல்தான் தமது உதவிக்குப் பீரங்கிப் படையினரை அழைத்தார். அப் படையினர் ஜனிஸ்ஸரீகளைப் பீரங்கிகளால் சுட்டுப் பொசுக்கி அரண்மனையிலிருந்து விரட்டினர். ஜனிஸ்ஸரீகளுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. கோட்டைக்குத் திரும்பிய அவர்கள் அங்குச் சுட்டுக் கொல்லப்பட்டனர். சுல்தான் இவ் வெற்றியைப் பின்தொடர்ந்து, மேலும் பல்லாயிரக் கணக்கான ஜனிஸ்ஸரீகளைத் தீர்த்துக் கட்டினர். அந்தச் சேனையே முற்றிலும் அழிந்துவிட்டது. அவர்களுடைய பெயரும்கூட அதிகாரபூர்வமான குறிப்பேடுகளிலிருந்து நீக்கப்பெற்றன.[1] பெரும்

[1] முன் 55 ஆம் பக்கம் பார்க்க. உத்மானியப் பேரரசின் ஆரம்ப காலத்தில் உருவான ஜனிஸ்ஸரீப் படையின் இறுதி முடிவு இப்படியாகச் சுவடில்லாமல் மறைந்தொழிந்தது.

வெற்றி பெற்ற சுல்தான் தமது நவீனப் படையை நாற்பத்தையாயிரமாக உயர்த்தினர். இப் புதிய படைக்கு முஸ்லிம்களே தெரிந்தெடுக்கப்பட்டனர். இன்னும் சிறிது அவகாசம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்குமாயின், அப் புதிய படையின் எண்ணிக்கையையும் திறமையையும் அவர் முற்றுப்பெறச் செய்திருப்பார். அப்பொழுது உத்மானியப் பேரரசு மேலும் வளர்ச்சியுற்று, வெல்லப்பட முடியாத ஒரு பெரும் சக்தியாக மாறியிருக்கக் கூடும். சுல்தான் எல்லா அதிகாரங்களையும் தம்மிடத்திலேயே மையமாக்கி வைத்துக்கொள்வதில் தீவிரமாக முனைந்திருந்தார். அவர் நிலமானிய இராணுவ முறையை ஒழித்தார். நிலமானிய படைத்தலைவர்களான பேக்கள் (Beys) ஒடுக்கப்பட்டனர்; அல்லது தங்களது வாழ்நாளுக்கு மட்டுமே அப்படிப்பட்ட மானியங்களை வைத்து அனுபவிக்க அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்குச் செலுத்தப்பட்டு வந்த வாடகைகள் வருங்காலத்தில் நேரடியாக அரசுக்கே செலுத்தப்பட்டுவிட வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேலும் பல முக்கிய சீர்திருத்தங்களையும் அவர் புகுத்தினர். பறிமுதல் செய்வதற்கான நீதி மன்றத்தை (Court of Confiscation) அவர் ஒழித்தார். இந்த நீதிமன்றம் தூக்கு தண்டனை பெற்றவர்கள், நாடு கடத்தப்பட்டவர்கள் முதலியவர்களுடைய சொத்திலிருந்து வரும் வருமானத்தை அரசுக்குச் செலுத்தி வந்தது. ஆனால், சமீப காலத்தில் அது மிகவும் கேவலமாக நடந்து கொண்டிருந்தது. எனவே, அதை சுல்தான் ஒழித்தே விட்டார். பாஷாக்கள் தாங்கள் விரும்பியபடி எவரையும் நீதி விசாரணையின்றித் தூக்கிலிடுவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருந்ததை சுல்தான் அவர்களிடத்திருந்து பறித்துவிட்டார். ஒழுங்கான நீதி விசாரணையின்றியும், மேலிடத்திற்கு முறையீடு செய்வதற்கான உரிமையின்றியும் எவரும் தண்டனைக்கு உட்படுத்தப்படக் கூடாதென்றும் சுல்தான் தடை விதித்துவிட்டார். ஏராளமான வக்ஃப் (Wakf) சொத்தை அவர் அரசாங்கத்தின் நிர்வாகத்திற்கு உட்படுத்தினர். தலைப்பாகையை அணிவதற்குத் தடைவிதித்து, ஃபெஸ்குல்லாயை (துருக்கித் தொப்பியை) அணிவதையே அவர் வற்புறுத்தினர். ஐரோப்பிய முறையின்படி அவர் தாமே உடையுடுத்த முற்பட்டார். மற்ற அரசர்கள் செய்தது போலவே இவரும் தூதர்களையும் அவர்களுடைய மனைவிமார்களையும் மற்றவர்களையும் தம் அரண்மனையில் வரவேற்று உபசரித்தார். அவர் தமது கிறித்தவக் குடிமக்களின் நிலையிலும் மாற்றங்களைப் புகுத்தத் திட்டங்களைத் தீட்டினர்; ஆனால், அவற்றை அவரால் செயல்படுத்த முடியவில்லை. அவருடைய வாழ்க்கை

யில் அவர் இருகாறும் வெற்றியே பெற்று வந்தார். ஜனீனுவின் அரசே போன்ற கிளர்ச்சி செய்யும் புரட்சி மனப்பான்மையுள்ள பாஷாக்களை அவர் அடக்கினர். கிரேக்கக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காக முகம்மத் அலி தம் படையையும் கப்பற் படையையும் அனுப்பி வைத்து, சுல்தானின் இறைமைக்கு அடிபணிந்தார். கிரீஸின் பெரும்பகுதி மீண்டும் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. பேரரசில் இதர பகுதிகளிலிருந்த கிரேக்கர்களும் அடிபணியவைக்கப்பட்டனர். மால்தேவியாவிலும் மற்றும் வலாச்சியாவிலும் தோன்றிய கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டன. ஸெர்பிய கோட்டைகள் அவர் கைவசமாகி யிருந்தன. இவற்றை யெல்லாம்விட, ஜனிஸ்ஸரீப் படையினரும் ஒடுக்கப்பட்டனர். சுல்தான் மகமூத் தமது பேரரசின் மாபெரும் சீர்திருத்தங்களை நிறைவேற்றி யிருந்தார். இவற்றை யெல்லாம் அவர் தமது மன உறுதியுடனே நிறைவேற்றினர்.

இரு நிகழ்ச்சிகள் நடந்தமையால் துருக்கியின் நிலை பெருமளவும் பாதிக்கப்பட்டது; மகமூத் கடைப்பிடித்த சிறந்த கொள்கையின் பலன்களை அவரால் பெற முடியாமலும் போய் விட்டது. ஒன்று, ரஷியாவின் பேரரசரான அலெக்ஸாந்தர் இறந்துவிட்டதாகும். இரண்டு, கிரீஸின் சார்பாக பிரிட்டிஷ் அரசாங்கம் தலையிட முடிவு செய்ததாகும். கடந்த சில ஆண்டு காலமாக அலெக்ஸாந்தர் இருதலைக் கொள்ளி எறும்பு போல் இருந்தார். ஒரு புறத்தில், உத்மானியப் பேரரசின் குடிமக்களாகவும் கிரேக்கத் திருச் சபையைச் சார்ந்தவர்களாகவும் இருந்த கிரேக்கர்கள்பால் ஆழ்ந்த அனுதாபம் அவருக்கு இருந்தது; துருக்கியாட்சியை அவர் தீவிரமாக வெறுத்தார். மறுபுறத்தில், அவர் புரட்சியை வெறுத்தார்; அதைக் கண்டு அஞ்சினர். தெய்விக உரிமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த இவர் தம் குடிமக்கள் கிளர்ந்தெழுவதை ஆதரிக்க முன்வரவில்லை. இவருடைய மனத்திற்குள்ளேயே ஏற்பட்ட இம் மோதலினால் இவர் செயலற்றவராகி விட்டிருந்தார். கிரேக்கக் கிளர்ச்சியாளர்களுக்கு அவர் எவ்வித உதவியும் அளிக்கவில்லை. அவர் உயிருடன் இருக்கும் வரையில் தாம் சுதந்தரம் பெறுவோம் என்ற நம்பிக்கை ஏதும் கிரேக்கர்களுக்குப் பிறக்கவேயில்லை. அவர் 1825-ல் இறந்தார். அவருக்குப் பிறகு அவருடைய சகோதரர் நிக்கலஸ் என்பவர் பட்டத்திற்கு வந்தார். இவர் இளைஞராகவும் ஆற்றல் மிக்கவராகவும் இருந்தார்; ரஷியாவின் கோட்பாடுகளைத் தீவிரமாக ஆதரிப்பவராகவும் இவர் நடந்து கொண்டார். கிளர்ச்சி என்பது தம் அரசுக்கெதிராக நடை

பெருத வரையில் அவர் அதற்கு எதிர்ப்புக்காட்ட விரும்பவில்லை. அவர் துருக்கியர்களை வெறுத்தார்; அவர்களை ஐரோப்பாவிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்று நினைத்தார்; கிரேக்கர்கள்பால் அனுதாபம் கொண்டிருந்தார். அவர் மற்றும் பல காரணங்களை முன்னிட்டும் சுல்தானை வெறுத்து வந்தார். சுல்தான் தமது புது மாதிரியான படையை முழுசாக உருவாக்குவதற்கு முன்பே அவரை முடித்து விடுவது என்றும் அவர் நினைத்ததுண்டு.

பிரிட்டனைப் பொறுத்தவரை, அதன் அரசாங்கம் ஆரம்பத்தில் கிரேக்கப் புரட்சியை ஆதரிக்கவில்லை. அதற்கு மாறுக, அதனை அது எதிர்த்தது. ஆனால், இழைக்கப்பட்ட கொடுமைகளினால் புண்பட்ட பொதுமக்கட் கருத்து அதனை மாற்றிக் கொள்ளுமாறு வற்புறுத்திற்று. வெளிநாட்டு அமைச்சரான கான்னிங் (Canning) தனிப்பட்ட முறையில் கிரீஸின் புரட்சிக்கு ஆதரவு அளிக்கவே விரும்பினர். ஆனால், பொதுவாக பிரிட்டிஷ் அரசாங்கம் கிரீஸில் குழப்ப நிலை நீடித்திருப்பது ஐரோப்பிய அமைதியையே குலைப்பதாகும் என்று கருதியது. துருக்கியைச் சுரண்டி ரஷியா தன்னை விஸ்தரித்துக் கொள்வதையும் அவ்வரசு விரும்பவில்லை. கிரீஸ் மக்களின் கொந்தளிப்பு அடங்கவில்லையாயின் ரஷியா தலையிடும் என்றும், கிரேக்க உரிமைகளுக்கு ஒரு முடிவினை காண வேண்டும் என்று அது கோரிக் கொள்வதோடல்லாமல், மேலும் பல படையெடுப்புகளையும் நிகழ்த்தும் என்றும் பிரிட்டிஷ் அரசாங்கம் கருதியது. ஆகவே, சுல்தானின் இறைமைக்குட்பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அமைந்த சுயாட்சியின் அடிப்படையில் கிரேக்கப் பிரச்சினையைத் தீர்க்க அவ்வரசாங்கம் முடிவு செய்தது. ரஷிய அரசருடன் பேச்சு வார்த்தை நடத்தப் பீட்டர்ஸ்பர்குக்கு வெல்லிங்டனை பிரிட்டிஷ் அரசாங்கம் 1826-ல் அனுப்பியது. அவர் உருவாக்கிய ஏற்பாடு சில நாட்கள் சென்று 'லண்டன் ஒப்பந்தம்' என்றழைக்கப்பட்ட உடன்படிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது (ஜூலை, 6, 1827). இதில் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ரஷியா கையொப்பமிட்டன. கிரீஸின் மக்களைத் தணிப்பதற்காகவே இது செய்து கொள்ளப்பட்டது. உத்மானிய சுல்தானுக்கும் கிரேக்க மக்களுக்கும் இடையே சமரசம் ஏற்படுவதற்காக மத்தியஸ்தம் செய்யப்பட வேண்டுமென்றும் பேச்சு வார்த்தைகளைத் தொடங்குவதற்காக உடனடியாகப் போர் நிறுத்தப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

உத்மானிய சுல்தானிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த திட்டத்தின்படி, சுல்தானின் இறைமையின்கீழ் கிரீஸ் பரிபூரண சுதந்தரம் பெற வேண்டும் என்றும், ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையைக் கப்பமாக சுல்தானுக்கு அது செலுத்த வேண்டுமென்றும் திட்டமிடப்பட்டது. தம் மக்களால் நியமிக்கப்பட்டவர்களால் அந்நாடு ஆளப்பட வேண்டும். அவ்விரு நாடுகளின் மக்களையும் முற்றிலும் வேறுபடுத்துவதற்காகவும் நெடுங்காலச் சச்சரவினால் ஏற்பட்டு வருகிற மோதலைத் தவிர்ப்பதற்காகவும் துருக்கியர்களுக்குரிய உடைமைகளில் முன்னாள் உரிமையாளர்களுக்குக் கப்பத்தையுமன்றிக் குறிப்பிட்ட ஒரு தொகையையும் கூடுதலாக ஆண்டுதோறும் கிரீஸ் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் துருக்கியர் நுழைய அனுமதி அளிக்கப்பட்டனர். மற்றோர் அந்தரங்க நிபந்தனையின்படி, ஒரு மாதத்திற்குள் உத்மானிய சுல்தான் அம் மூன்று வல்லரசுகளின் மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொண்டு உடனடியாகப் போரை நிறுத்துவதற்கு இணங்கவில்லை யாயின், அவை கிரேக்கர்களுடன் சேர்ந்து கொண்டு ஒப்பந்தத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளும் என்று விதிக்கப்பட்டிருந்தது.

இவ்வொப்பந்தத்தின்படி, மூன்று வல்லரசுகளின் தூதர்களும் போரை நிறுத்திக் கொள்ளுமாறும் மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின்படி கிரீஸைத் தணிப்பதற்காக நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் சுல்தானிடம் கோரிக் கொண்டனர். திட்டமிடப்பட்ட அம் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொள்ள சுல்தான் மறுத்துவிட்டார். கிரேக்கக் குடிமக்களின் விவகாரங்களில் தலையிடுவதற்கு அந்த வல்லரசுகளுக்கு உரிமை கிடையாது என்று சுல்தான் கூறிவிட்டார். தாம் ஏன் அதை ஏற்க மறுக்கின்றார் என்பதை விளக்குவதற்காக அவர் தம் மக்களுக்கு ஓர் அறிக்கையையும் வெளியிட்டார். உத்மானிய ஆட்சியின் மீது கிரேக்கர்களுக்கு மனக் குறைவு உள்ளது என்பதை அவர் ஒப்புக்கொள்ள வில்லை. எல்லா வகைகளிலும் கிரேக்கக் குடிமக்கள் முஸ்லிம்களுடன் சரிநிகராகவே நடத்தப்படுகின்றனர் என்பது யாவரும் அறிந்த உண்மை யன்றே? என்றும் அவர் எடுத்துக் காட்டினார்.

சுல்தானுக்கும் தூதர்களுக்குமிடையே நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகள் முடிவடைவதற்குள் கிரீஸில் இருந்த இப்ராஹீமுடைய பெரும் உதவியுடன் எகிப்திய கப்பற்படை தனது தாயகம்வந்து சேர அவகாசம் அளிக்க அவை வேண்டுமென்றே

நீடிக்கப்பட்டன. தூதர்கள் தீட்டிய திட்டங்களை சுல்தான் இறுதியாகப் புறக்கணித்ததற்குப் பிறகு அம் மூன்று வல்லரசுகளின் கப்பற்படைகளும் கிரேக்கத் துறைமுகங்களை முற்றுகையிடுமாறு உத்தரவிடப்பட்டன. எந்தத் துருக்கிக் கப்பல்களையும் எகிப்தின் கப்பல்களையும் உள்ளே வரவும் வெளியே போகவும் அவை அனுமதிக்கலாகா என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதற்கு மேற்பட்டு சர் எட்வர்ட் கார்டிங்டன் என்ற பிரிட்டிஷ் தளபதியின் தலைமையிலிருந்த வல்லரசுகளின் கூட்டுக் கப்பற்படை நவாரினை விரிகுடாவுக்கு வெளியே நின்று கொண்டது. பிறகு அத் தளபதி துருக்கித் தளபதியுடன் பேச்சுவார்த்தை தொடங்கி, கிரேக்கர்களின் சார்பில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். இவ் வொப்பந்தம் கையொப்பமிடப்பட்ட பிறகும் இப்ராஹீம் பாஷாவின் தலைமையில் இருந்த எகிப்திய படைகள் மொரியாவை மிகக் கடுமையாகச் சூறையாடி, சொத்துக்களை அழித்தும், மக்களைக் கொன்று குவித்தும், கைம் பெண்களை எகிப்துக்குக் கொண்டு சென்று அடிமைகளாக விற்றும் வந்தன. பனிக்காலம் நெருங்கிக் கொண்டிருந்ததனால், விரிகுடாவுக்கு வெளியே தாம் தொடர்ந்து நிற்பது இயலாமற் போகும் என்று பிரிட்டிஷ் தளபதி கருதினர். ஆகவே, தம் கப்பற் படையுடன் விரிகுடாவுக்குள் நுழைய அவர் தீர்மானித்தார். துருக்கிக் கப்பற் படை விரிகுடாவின் வாயிலில் ஓரிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கூட்டுப் படைகள் இவ்விரிகுடாவின் வாயில் வழியே நுழைந்து எவ்வித எதிர்ப்புமின்றி உள்ளே புகுந்துவிட்டன.

இது மோதல் ஏற்படுவதற்கான நெருக்கடியான நிலை என்பதை யாவரும் உணர்ந்தனர். முதன் முதலாகத் துருக்கியர்கள் சுட்டனர். அவ்விதம் செய்து அவர்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி நடந்து கொண்டனர். எதிர்த் தரப்பிலும் படைகள் தாக்க ஆயத்தமாயின. இரு தரப்பினருக்குமிடையே போர் மிகக் கடுமையாக நிகழ்ந்தது (1827, அக்டோபர், 20). போர் தொடங்கி ஒருசில மணி நேரத்துக்குள் துருக்கி - எகிப்து கப்பற்படை சின்னபின்னமாயிற்று. ஒருசில சிறிய படகுகளைத் தவிர ஏனைக் கப்பல்கள் யாவும் மூழ்கடிக்கப்பட்டன, அல்லது தீக்கு இரையாக்கப்பட்டன. அப் படையினர் மிகத் தீரமாகப் போரிட்டனரெனினும், எதிரிகளின் படைகளுக்கு அவர்கள் நிகரில்லை. ஆனாலும், அவர்களுடைய பீரங்கிகள் பிரிட்டிஷ் கப்பல்களுக்குப் பெரும் சேதத்தை விளைவித்தன. பழுது பார்க்கப்படுவதற்காக அவற்றுள் பல இங்கிலாந்திற்குத் திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

இந்த மாபெரும் வெற்றியாலும் பிரிட்டிஷ் அரசுக்கு மன நிறைவு ஏற்படவில்லை. இந்த வெற்றிக்குக் காரணமா யிருந்த கொள்கையைத் துவக்கி வைத்த கானிங் இறந்து போயினமை யால், அப் படைக்கு அவ்வகைப்பட்ட ஆற்றலை யூட்டுவார் இல்லை. ஆயினும், நவாரினேவில் துருக்கிக் கப்பற்படை பெருந் தோல்வி அடைந்தது ஒரு முக்கியமான நிகழ்ச்சி யாகும். அத னல் இப்ராஹீம் பாஷாவுக்கும் எகிப்துக்குமிடையே தொடர்பு அறுபட்டது. கிரேக்கத் தீவுகளின் மீது அது கிரேக்கர்களின் ஆதிக்கத்தை மீண்டும் நிலை நாட்டிற்று. கருங்கடலில் அது ரஷியக் கப்பற் படையின் ஆதிக்கத்தை உறுதிப் படுத்தியது. இந்த நிலையானது துருக்கியர்களுடன் ஏற்படவிருக்கும் மோத லில் ரஷியர்களுக்குப் பெரும் உதவியாக இருந்தது. அது வார்னுவைக் கைப்பற்றுவதற்கு வழியமைத்துக் கொடுத்தது. வார்னுவைக் கைப்பற்றியதனல் ரஷியப் படை பால்கன் தீவு களைக் கடந்து இஸ்தம்பூலை அச்சுறுத்துவதற்கு ஏதுவாயிருந்தது.

மொரியாவில் தம் நிலையைச் சமாளிக்க முடியவில்லை என்று உணர்ந்த இப்ராஹீம் பாஷா பிரிட்டிஷ் தளபதியுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். அதன்படி கிரீஸிலிருந்து எகிப்துப் படையைப் பின்வாங்கிக் கொள்வதற்கும், கூட்டுப் படையினரிடத்திருந்து எவ்விதத் தாக்குதலுமின்றி அலெக் ஸாந்திரியாவுக்குச் செல்வதற்கும் இப்ராஹீம் பாஷா அனுமதிக் கப்பட்டார். இப்பொழுது மொரியாவில் துருக்கிப் படைகள் மட்டுமே தங்கி இருந்தன. அங்கிருந்த கோட்டைகள் பலவும் அவர்கள் வசமேதாம் இருந்தன. பின்னர், மெய்சன் (Maison) என்ற பிரெஞ்சுப் படைத் தலைவரின் தலைமையில் ஒரு பிரெஞ்சுப் படை கூட்டுப் படைகளின் சம்மதத்துடன் அங்கு அனுப்பப் பட்டது. அப் படை அங்கிருந்த துருக்கிப் படை வீரர்களையும் விரட்டியடித்தது.

இதற்கிடையே, நவாரினேவில் துருக்கிக் கப்பற்படை தோற்கடிக்கப்பட்டிருந்த போதினும், சுல்தான் லண்டன் ஒப்பந் தத்தை ஏற்க விடாப்பிடியாக மறுத்தே வந்தார். அதற்கு மேற் படியாக இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியவற்றின் தூதர்கள் தலை நகரைவிட்டு வெளியேறி விட்டனர். துருக்கியர்களுக் கெதிராகக் கட்டாயப்படுத்தும் முறைகளை அமல்படுத்த வேண்டும் என்றும், இவற்றைச் செயல்படுத்தும் வகையில் மால்தேவியாவையும் வலாச்சியாவையும் கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்றும் ரஷியப் பேரரசர் வற்புறுத்தினர். ஆனல், இங்கிலாந்தும் பிரான்ஸும் இதை ஏற்க மறுத்து விட்டன. அவை உத்மானியப்

பேரரசு முழுமையாக இருக்க வேண்டும் என்று விரும்பினர்; அதே சமயத்தில் கிரீஸும் சுதந்தரம் பெறவேண்டும் என்றும் விரும்பினர். ஆனால், கிரேக்கப் பிரச்சினை என்பது துருக்கிக் கெதிராக ரஷியா சாட்டிய குறைகளுள் ஒன்றுகும். புக்காரெஸ்ட் உடன்படிக்கையும் பிறகு அகெர்மான் உடன்படிக்கையும் சுல்தானால் மீறப்பட்டு வருகின்றன என்றும், சுல்தானுடைய படைகள் மால்தேவியா, வலாச்சியா மற்றும் ஸெர்பியா ஆகியவற்றை இன்னும் தம் பிடியிலேயே வைத்துள்ளன என்றும் சுல்தான் மீது ரஷியா குற்றம் சாட்டியது. ஆனால், சுல்தான் தம் குடிமக்களுக்காக வெளியிட்ட அறிக்கை ஒன்றில், அகெர்மான் ஒப்பந்தத்தைத் தாம் செய்து கொண்டது அதை மீறுவதற்கேயன்றி, அதன்படி நடப்பதற்காக அன்று என்றும், ரஷியாவைத் தம் முடைய பரம விரோதி என்று தாம் கருதுவதாகவும் அவர் வெளிப்படையாகக் குறிப்பிட்டார்.

1828, ஏப்ரல் 26 ஆம் நாள் அன்று ரஷியா துருக்கியின்மீது போர் தொடுத்தது. கிரீஸைப் பொறுத்தவரை சுல்தான் தங்கள் கோரிக்கையை அதுவரையிலும் ஏற்றுக் கொள்ளவில்லை யாகையால், இங்கிலாந்தும் பிரான்ஸும் ரஷியாவை ஆதரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. துருக்கிப் படையைப் பாழடிப்பதற்காக அவை ரஷியாவுடன் சேர்ந்திருந்தன. ஆனாலும், இப்பொழுது ரஷியா துருக்கியின்மீது படையெடுத்த போது அவை ஒதுங்கி நிற்க வற்புறுத்தப்பட்டன. போரின் நிலையும் அதற்கு மேலாக அதன் விளைவுகளும் துருக்கியின் இறைமையின் கீழ் கிரீஸுக்குச் சுயாட்சி வழங்க மகமூத் மறுத்ததனால் அவர் பெரும் தவறு இழைத்துள்ளார் என்பதைப் புலப்படுத்தின. அதனை அவர் ஏற்றிருந்திருப்பாராயின், அவருடைய கப்பற்படை சிதருமல் உருப்படியாக இருந்திருக்கும். இங்கிலாந்தும் பிரான்ஸும் ரஷியாவின் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இருக்கக் கூடும். அப்பொழுது இருந்த நிலையில் கிரீஸ் பரிபூரண சுதந்தரம் அடைந்து விட்டது. வலாச்சியா, மால்தேவியா, மற்றும் ஸெர்பியா ஆகியவையும் ரஷியா பெற்ற வெற்றிகளின் விளைவாகப் பரிபூரண சுயாட்சியைப் பெற்றுவிட்டன.

பெயரளவிற்குப் படைத்தலைவராக இருந்த ரஷியப் பேரரசர் நிக்கலஸ் தம் படையுடன் 1828, மே 7ஆம் நாள் அன்று புரூத்தைக் கடந்தார். அவருடைய படை மிகச் சிறிதாகவே இருந்தது. கிளர்ச்சி ஒன்று போலந்தில் மூள விருந்ததனால் அங்கும் ஒரு பெரிய படையை நிறுத்திவைக்க வேண்டியிருந்தது. துருக்கியின்மீது ரஷியா நடத்திய தாக்குதலைச் சந்தேகத்துடன்

பார்த்துக்கொண்டிருந்த ஆஸ்ட்ரியாவைக் கவனித்துக் கொள்வதற்காகவும் மற்றொரு படை உக்ரைன் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பாஸ்கியாவிட்ச் (Paskiawitch) என்பவரின் தலைமையிலிருந்த நான்காவது ரஷியப் படை ஒன்று காக்கஸஸிலிருந்து சின்ன ஆசியாமீது படையெடுத்தது. அத்தலையாய படை பால்கன் தீவுகளைக் கடந்து இஸ்தம்பூலையும் அச்சுறுத்த வேண்டி இருந்தது. மால்தேவியாவிலும் வலாச்சியாவிலும் துருக்கியர்கள் எதிர்ப்பு அளிக்கவில்லை. ஆனலும், ஜூன் 8ஆம் நாள் வரையிலும் ரஷியர்களால் டான்யூப் நதியைக் கடக்க இயலவில்லை. சுல்தான் பல இடுக்கண்களுக்கிடையே போரை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவருடைய பழைமை வாய்ந்த ஜனிஸ்ஸரீப்படை அண்மையில் கலைக்கப்பட்டுவிட்டிருந்தது. ஐரோப்பிய முறைகளின்படி பயிற்சியளிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட மற்றொரு நவீனப் படை புத்தம் புதிதாகவும் தோற்சி பெருததாகவும் இருந்தது. அதில் இருந்த பலர் வாலிப இளைஞர்களாகவே இருந்தனர். இப்புதிய இராணுவப்படையைப் பலரும் விரும்பவில்லையாதலால், வற்புறுத்தலுடன் கட்டாயப் படுத்தியே அதில் ஆட்களைச் சேர்க்க வேண்டியிருந்தது. காக்கப்பட வேண்டியிருந்த பல்வேறு இடங்களுக்கும் படைகளை அனுப்பி விட்டதற்குப் பிறகு பல்கேரியாவில் ரஷியர்களை எதிர்ப்பதற்கும், டான்யூப் நதி யோரத்தில் இருந்த கோட்டைகளுக்கும் ஷும்லா மற்றும் வார்ணா என்ற அரண்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கும் ஒரு சிறிய படை மட்டுமே எஞ்சியிருந்தது. ஆனலும், இந்தப் படைகளுக்கு ஆயுதம் தாங்கிய துருக்கிக் குடிமக்களே ஆதரவு அளித்தனர். மேலும் ஒரு குறையும் துருக்கியர்களுக்கு இருந்தது. அவர்களுக்குரிய கப்பற் படையின் பெரும் பகுதி நவாரினோவில் அழிக்கப்பட்டுவிட்டது. ஆகவே, ரஷியர்களால் கருங்கடலில் முழு ஆதிக்கமும் பெற்று விளங்க முடிந்தது. டார்டனெல்ஸை முற்றுகையிடுவதற்காக ஏஜியன் தீவுக் கூட்டத்திற்கு மற்றொரு படையை அனுப்புவதற்கும் அவர்களால் முடிந்தது.

இத்தனை இன்னல்கள் இருந்தபோதினும், துருக்கியர்கள் ஐரோப்பாவில் ரஷியப் படையெடுப்பை மிகத் தீவிரமாக எதிர்க்கத் தொடங்கினர். 1828-ல் நடைபெற்ற படையெடுப்புகள் பெரும்பாலும் அரண்களை முற்றுகையிடுவனவாகவே இருந்தன. அப் போர்களில், துருக்கி வீரர்கள் முற்றுகையிடப்பட்டிருந்த அரண்களிலிருந்த முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்று, மதில்களுக்குள் ளிருந்தவாறே தீவிரமாகப் போரிட்டனர். ஆனலும்,

நேரடியான போரில் தீவிரப் பயிற்சிபெற்ற எதிரிகளின் முன்னால் அவர்களால் நிற்க முடியவில்லை.

ரஷியர்கள் டான்யூப் நதியைக் கடந்ததற்குப் பிறகு அந்நதியின் கிழக்குப்புறத்தில் இருந்த மிக முக்கிய அரணான இப்ரெய்லை (Ibrail) முற்றுகையிட்டனர்; ஷும்லாவை நோக்கி முன்னேறுவதற்கு முன்னர் அதைக் கைப்பற்றிக்கொள்வது மிகவும் அவசியமாக இருந்தது. அக்கோட்டையின் படையினரும் அதில் வசித்து வந்தவர்களும் மிகத் தீரத்துடன் எதிர்ப்பு அளித்தனர். ஐந்து வாரங்களுக்குப் பிறகுதான் அது ஜூன் 17ஆம் நாள் அன்று அடிபணிந்தது. அப்பொழுது ரஷியப்படை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது; ஒன்று சிலிஸ்டிரியாவைத் தாக்க வேண்டும்; மற்றொன்று வார்னாவை முற்றுகையிடவேண்டும்; மூன்றுவதும் மிக முக்கியமானதும் பேரரசரின் தலைமையில் ஷும்லாவை நோக்கி முன்னேற வேண்டும். சிலிஸ்டிரியாவின் மீது நடத்திய தாக்குதல் தோல்வியடைந்தது. அங்குப் பயன்படுத்தப்பட்ட படை ஒரு சில வாரங்களுக்குப் பிறகு பேரரசரின் படைக்கு ஆதரவளிப்பதற்காக ஷும்லா நோக்கி முன்னேறிற்று. இந்தப் படையின் துணையைக்கொண்டும் ஷும்லா அரணுக்குப் பின்னால் இருந்த துருக்கியரின் முகாமை முற்றுகையிட முடியவில்லை. அங்கும் வெற்றி ஏற்படவில்லை. அப் படையின் ஒரு பகுதி இப்பொழுது வார்னாவைத் தாக்கச் சென்ற படைக்கு உதவியளிக்க விரைந்தது.

ஆகஸ்ட் 18ஆம் நாள் ஒன்பதினாயிரம் படை வீரர்களுடன் ரஷியப் பேரரசர் வார்னா வந்தடைந்தார். முற்றுகையும் தொடங்கிற்று. அதே சமயத்தில் கருங்கடலில் கிரெய்க் (Greig) என்ற தளபதியின் தலைமையிலிருந்த ரஷியக் கப்பற்படை கடலிலிருந்து தாக்கத் தொடங்கிற்று. துருக்கியர்கள் நம்பிக்கையிழந்துவிட்டுப் பல நாட்கள் வரையிலும் தொடர்ந்து எதிர்த்துக்கொண்டிருந்தனர். அவர்களுடைய படைக்குத் தலைமை தாங்கிய ஜூஸுப் பாஷா (Jussuf Pasha) என்பவர் மட்டும் துரோகம் புரியும் வகையில் அந் நகரை விட்டுவிட்டுச் சென்றிருக்காவிடின், துருக்கியர்களுடைய முயற்சி வெற்றியடைந்திருக்கக் கூடும். கப்பித்தான் பாஷாவின் தலைமையிலிருந்த எஞ்சியபடை அடிபணிய மறுத்துவிட்டது. ஆனாலும், வெகு விரைவில் அதுவும் சரணடைந்தது. வார்னாவும் ரஷியர்கள் வசமாயிற்று. அதுவின்றி பால்கன் தீவுகளை ரஷியர்களால் கடந்து முன்னேறியிருக்க முடியாது. வார்னா அடிபணிந்ததுடன், 1828ஆம் ஆண்டின் படையெடுப்பு முடிவடைந்தது. பால்கன் தீவுகளுக்குச் செல்வதைத் தடுத்து

நின்ற நான்கு அரண்களுள் இரண்டினை ரஷியர்கள் தம்வசப் படுத்தி விட்டபோதிலும், துருக்கியர்களுக்கும் ஓரளவு வெற்றி ஏற்பட்டது. அவர்கள் ரஷியர்களை விடாமல் ஓராண்டு வரையிலும் எதிர்த்து, இஸ்தம்பூலுக்கு முன்னேற வேண்டுமென்ற அந்த எதிரிகளின் நோக்கத்தை நிறைவேறுதபடி தடுத்து வந்தனர். முற்றுகையினாலும் பிணியினாலும் ரஷியர்களுக்கு ஏராளமான சேதம் ஏற்பட்டுவிட்டது.

1829ஆம் ஆண்டின் படையெடுப்புச் சற்றுத் தாமதித்தே ஆரம்பமாயிற்று. மே மாத மத்தியில்தான் ரஷியப் படையினர் டைபிட்ஷ் (Diebitsch) என்ற படைத்தலைவரின் தலைமையில் போர் முனைக்கு வந்து போரிட்டனர். நடத்தவேண்டிய படையெடுப்புக்கு அப் படை போதுமானதாக இருக்கவில்லை. முன்னேறுவதற்கு சிலிஸ்டிரியாவைக் கைப்பற்றுவது மிகவும் அவசியம் என்று கருதப்பட்டது. 1829 மே 17ஆம் நாள் அன்று முற்றுகை தொடங்கிற்று. இதற்காகப் பயன்படுத்தப்பட்ட சேனை பதினான்காயிரம் படைவீரர்களைக் கொண்டிருந்தது. துருக்கியர்களின் படை மிக அதிகமாக இருந்தபோதிலும், நாற்பத்து நான்கு நாட்கள் வரை முற்றுகையிட்டதற்குப் பிறகே நகரம் சரணடைந்தது.

அதற்கிடையே டைபிட்ஷ் தம் முக்கிய படையுடன் ஷும்லாவை நோக்கி முன்னேறினர். ஹுஸைன் பாஷாவுக்குப் பிறகு பிரதம அமைச்சராகப் பதவி ஏற்றிருந்த ரஷீத் பாஷாவும் செராஸ்கியரும் (Seraskier) நாற்பதினாயிரம் வீரர்களுடன் ஷும்லாவிலிருந்து புறப்பட்டனர். குலூட்ஸ்கா (Kulewtska) என்ற இடத்தில் போர் மிகக் கடுமையாக நிகழ்ந்தது. எண்ணிக்கையில் மிகச் சிறிதாயிருந்த படையினால் துருக்கியர்கள் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டனர். போர்க்களத்திலிருந்து துருக்கியர் பலர் அங்குமிங்குமாக ஓடினர். அவர்களுடைய பீரங்கிகள் ரஷியர் வசமாயின. அறுநூறு ஆட்களுடன் ரஷீத் ஷும்லாவுக்குத் தப்பி ஓடிவிட்டார். அங்கே மற்றும் பல இடங்களிலிருந்தும் வந்த அகதிகள் அடைக்கலம் புகுந்திருந்தனர். குலூட்ஸ்காவில் ஏற்பட்ட வெற்றியினால் பல முக்கிய விளைவுகள் ஏற்பட்டன. அதில்தான் மகமூதின் புதிய படை முதன் முதலாகச் சோதிக்கப்பட்டது. ரஷியப் படையினர் உண்மையிலேயே அதிக சிறப்பினைப் பெற்றுள்ளனர் என்பதை அது திட்டவட்டமாக நிரூபித்துக் காட்டிவிட்டது.

சிலிஸ்டிரியா ஜூலை 18ஆம் நாள் அன்று வீழ்ச்சி யுற்றது. அதன் முற்றுகையில் ஈடுபட்டிருந்த ரஷியர்கள் ஷும்லாவின்

முன்னே நின்றிருந்த டைபிட்ஷுடன் சேர்ந்து கொண்டனர். அந்த நிலையில் ஷும்லாவையும் அதன் படையையும் கைப்பற்றிக் கொள்ளாமலே பால்கன் தீவுகளைக் கடந்துவிடுவது என்று பெரும் துணிச்சலுடன் அவர் முடிவு செய்துவிட்டார். அக்கோட்டையை முற்றுகையிடுவதற்காகப் பத்தாயிரம் வீரர்களை அங்கே விட்டு விட்டு டைபிட்ஷ் அந்தரங்கமாக பால்கன் தீவுகளைக் கடக்கத் தொடங்கினர். ஷும்லாவின் மீது தாக்குதல் நடைபெறும் என்றும், அதன் பாதுகாப்பிற்காக இருக்கும் படை போதாது என்றும் கருதிய ரஷீத் பாஷா பால்கன் கணவாய்களைப் பாதுகாப்பதற்காக அமர்த்தப்பட்டிருந்த படைகளையெல்லாம் பின்வலித்துக் கொண்டார். அதற்குப் பிறகு பால்கன் தீவுகளைக் கடப்பதில் டைபிட்ஷுக்கு எவ்வித எதிர்ப்பும் முளைக்கவில்லை. பெருந் துன்பங்களுக்கெல்லாம் உட்பட்டு, அவர் மலைத்தொடர்களை ஒன்பது நாட்களுக்குள்ளாகக் கடந்துவிட்டார். மலைப்பிரதேசத்தின் தெற்குப் பகுதிக்கு வந்தவுடன் அவர் கருங்கடல் திசைக்குத் திரும்பி முன்னேறத் தொடங்கினர். கிரெய்க் என்ற தளபதியின் தலைமையில் அங்கு ஏற்கெனவே இருந்த கப்பற்படையுடன் அவர் தொடர்பு கொண்டார்.

மலைகளுக்குத் தெற்கில் ஐடோஸ் (Aidos) கர்னபாத் (Karnabad) மற்றும் சில்வானே (Silvano) என்ற மூவிடங்களிலும் போர்கள் நிகழ்ந்தன. இவ்வெல்லாம் சிறிய துருக்கிப் படைகளுடன் மோதல் ஏற்பட்டது. அப் படைகள் தோற்கடிக்கப் பெற்று விரட்டியடிக்கப் பெற்றன. பால்கன் தீவுகளைக் கடந்து மூன்று வாரங்களுக்குப் பிறகு டைபிட்ஷ் எண்பதினாயிரம் குடிமக்களைக் கொண்டிருந்த எதிர்னே நகரத்துக்கு எதிரில் படையுடன் வந்து நின்றார். அவருடைய படையினரின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டிருந்தும் பெரும் பீதி ஏற்பட்டது. அது வரையிலும் எதிரிகளின் படை பால்கன் தீவுகளின் தென் பகுதி வரை வந்தது கிடையாது. எதிர்னே நகரும் அதன் படையும் எவ்வித எதிர்ப்பும் அளிக்காமலே சரணடைந்தன. பல்கேரியா வழியாக அந்தப் படை வந்த இடங்களிலெல்லாம் கிறித்தவக் குடியானவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டனர். ஆசியாவிலும் கூட 1829ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட படையெடுப்புத் துருக்கியர்களுக்குத் தோல்வியையே விளைத்தது. பாஸ்கிவெட்ச் என்பவர் அவர்களைத் திறந்தவெளி யொன்றில் தோற்கடித்து எர்ஸிரோமைக் கைப்பற்றிக்கொண்டார். இப்பொழுது அவர் டிரெபிஸாண்டை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தார்.

எதிரிகள் பால்கன் தீவுகளைக் கடந்து எதிர்னேயைக் கைப் பற்றிக் கொண்டுவிட்டனர் என்னும் செய்தியைக் கேள்வியுற்ற இஸ்தம்பூல் வாசிகள் பீதியிலும் கடுந் துயரிலும் மூழ்கினர். சுல் தான் ஒருவர் மட்டுமே தமது சுயநிலையை மறந்துவிடவில்லை. நகரைக் காப்பாற்றுவதற்காக அந்த நகரவாசிகள் அனைவரையுமே திரளுமாறு அவர் பிரகடனம் ஒன்றை வெளியிட்டார். படைக் குத் தானே தலைமை தாங்கப் போவதாகவும் அவர் அறிவித்தார். நபிகள் நாயகத்தின் புனிதக் கொடி ஏந்திப் பிடிக்கப்பட்டது. ஆனால், படையினரை மேற்பார்வையிட வந்த சுல்தான் குதிரை மீதேறிப் பாய்ந்து பெரும் வீரராக நிமிர்ந்து கம்பீரமாகக் காட்சி யளிப்பதற்கு மாறாக, செல்வச் செருக்குமிக்க ஆணவத்துடன் உல்லாசமாக வரும் பிரபுகுலச் சீமான் மாதிரி சொகுசுமிக்க ஒரு கோச்சு வண்டியில் ஏறிவந்தார். இது துருக்கியர்கள் அதுவரை கண்டிராத ஒரு காட்சியாகையால், தொண்டர்களின் ஆர்வம் தணிவுபெற்றது.

நகரைப் பாதுகாக்க அந்த நகரவாசிகள் எல்லா ஆர்வத்தை யுமே இழந்து விட்டிருந்தனர். எதிரியுடன் சமாதானம் செய்து கொள்ளுமாறு சுல்தானின் அமைச்சர்கள் ஏகமனதுடன் சுல் தானை வேண்டிக்கொண்டனர். ரஷியப்படையின் பலவீனத்தை அவர்கள் உணர்ந்திருக்க வில்லை போலும்! சுல்தானின் அழைப் பின்பேரில் இஸ்தம்பூலுக்குத் திரும்பிய ஆங்கில, பிரெஞ்சுத் தூதர்களும் அவ் வமைச்சர்களின் வேண்டுகோளை ஆமோதித் தனர். இவையெல்லாம் போலியான வெற்று ஆடம்பர வேடங் களின் அடிப்படையில் அமைந்த நயவஞ்சகமிக்க அறிவுரை களாகும். உண்மையில், ரஷியப் படையின் நிலைமை மிகவும் மோசமானதாகவே இருந்தது. போர்க்களங்கள் பலவற்றில் அதற்குப் பெரும் இழப்பு ஏற்பட்டிருந்தது; வழியில் பல இன்னல் களுக்கு அது இரையாயிற்று; பிணியால் பீடிக்கப்பட்டு நலிந்தது. மேற்கொண்டு ஏதும் உதவி பெறுவதற்கான வாய்ப்பும் அதற்குக் கிடையாது. பால்கன் தீவுகளிலிருந்து பின்வாங்கிக் கொள்வது என்பதும் அறவே இயலாத சோதனையாகிவிட்டிருந்தது. ஷும் லாவிலிருந்த துருக்கிப்படைக்கு இப்பொழுது உதவி கிடைத் தது. ஒரு சமயத்தில் பேரரசுக்கு உதவி நல்ல மறுத்த, ஆனால் இப்பொழுது பேரரசுக்கு ஆபத்து விளையுமாயின் தம்மையும் அது நிச்சயம் பாதிக்கும் என்று அச்சமுற்றுவிட்ட ஸ்கோட்ராவின் பாஷா இருபதினாயிரம் அல்பேனியர்களுக்குத் தலைமை தாங்கிய வராய் சுல்தானுக்கு ஆதரவு அளிக்க முன்வந்தார். இப்படிப் பட்ட நிலையில் இஸ்தம்பூலை நோக்கி ரஷியர் முன்னேறுவதென் பதும் ஆபத்துக்குரியதாகும்; அதை நிறைவேற்றுவதும் இயலாத

காரியமாகும். ரஷியப்படையின் இத் தன்மையான பலவீனங் கள் சுல்தானுக்குத் தெரியவில்லை.

கடும் வற்புறுத்தலின்பேரில், சுல்தான் அமைதி ஒப்பந்தத் திற்கான நிபந்தனைகளை விவாதிப்பதற்காக எதிர்னே நகருக் குத் தம் தூதர்களை அனுப்பினர். டைபிட்ஷ் தாம் சிக்கிக் கொண்டிருக்கும் நிலை எவ்வளவு அபாயகரமானது என்பதை நன்கு உணர்ந்திருந்தார். ஆகவே, அவரும் சமாதானம் செய்து கொள்வதற்கே ஆவலாயிருந்தார். ஆனால், அதே சமயத்தில் அவர் உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும் நடந்து கொண்டார். அமைதி ஏற்படுத்திக்கொள்ள ஆவலாய் இருந்த போதும் போர் முனையில் முன்னேறுவதற்கு அவர் ஆயத்த மாகவே யிருந்தார். உண்மையில் அவருக்கு ஏற்பட்டிருந்த சங்கடமான நிலையை உத்மானியர்கள் அறிந்திருப்பார்களாயின் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கவே மாட்டார்கள். ஆனால், சுல்தான் வேண்டாத காரணங்களுக்கெல்லாம் பீதியுற் றிருந்ததனால்[1] அமைதிக்கு இணங்கினர். செப்டம்பர் 19ஆம் நாள் அன்று அமைதி ஏற்பட்டு, எதிர்னேயில் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

அந்த அமைதி ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் சற்று மித மானவையாகவே இருந்தன. ஆனால், உத்மானியப் பேரரசைப் பொறுத்தவரையிலும் அவை மிகத் தீவிரமானவையாகவே இருந்தன. போர் தொடரும்பொழுதே கூடுதலான ஆட்சிப் பகுதிகளைக் கவர்ந்துகொள்ள வேண்டுமென்னும் எவ்வித அவா வும் தமக்குக் கிடையாது என்று ரஷிய பேரரசர் நிக்கலஸ் அறி வித்திருந்தார். அந்த வாக்குறுதியை மீறி அவர் நடந்து கொள்ளவில்லை. இரண்டு சிறிய விதிவிலக்குகளையின்றி, போரின் போது தான் கைப்பற்றிய எல்லா இடங்களையும் ரஷியா கைவிட்டு விட்டது. டான்யூபின் சுலினை முகத்துவாரத்திற்கு வழியாக இருந்ததனால், முக்கியத்துவம் பெற்றிருந்த மால்தேவி யாவின் ஒரு பகுதியை அது தன் வசப்படுத்தியே வைத்திருந் தது. ஆசியாவில் கர்ஸ் (Karz) மற்றும் எர்ஸிரோம் ஆகிய இடங்கள் துருக்கிக்கே திருப்பிக் கொடுத்து விடப்பட்டன. ஐரோப்பாவில் புரூத் நதி இரு தரப்பினருக்கும் இடையே தொடர்ந்து எல்லையாக இருந்து வந்தது. ஆனால், மால்தேவி

[1] ரஷியர்களின் உபத்திரவங்களைத் துருக்கியர்கள் கொஞ்சமும் மோப்பம் பிடிக்க முடியாதவாறு இஸ்தம்பூலிலிருந்த பிரிட்டிஷ், பிரெஞ்சுத் தூதர் கள் வஞ்சகமாகக் கபட நாடகம் ஆடியதை சுல்தான் முற்றும் நம்பி ஏமாந்தார்.

யாவும் வலாச்சியாவும் பெயரளவிற்கு உத்மானிய பேரரசுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டபோதிலும், செயல் முறையில் அவை அதனிடமிருந்து விடுவிக்கப்பட்டு விட்டன. அவை இரண்டும் முற்றிலும் சுயாட்சி பெற்ற நாடுகளாயின; சுல்தானிடத்திருந்து விடுபட்டுத் தங்களுக்கென்று ஒரு தனிச் சேனையை அமைத்துக் கொள்வதற்கான உரிமையும் அவற்றினுக்குக் கொடுக்கப்பட்டது. சுல்தான் அவற்றினுக்குப் பெயரளவிற்கு மட்டுமே மேலதிகாரியாக இலங்கவேண்டும். கிட்டத்தட்ட இதே போன்ற நிலை ஸெர்பியாவுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டது. இருப்பினும், பெல்கிரேட், ஓர்சோவா (Orsova) முதலிய கோட்டைகளில் போர் வீரர்களை நிறுத்தி வைத்துக் கொள்வதற்கான உரிமை சுல்தானுக்கு அளிக்கப்பட்டது. நாட்டின் ஏனைப் பல்வேறு பகுதிகளிலிருந்தும் துருக்கியர்கள் வெளியேற்றப்பட்டனர். சிலிஸ்டிரியா மீண்டும் துருக்கிக்கே கொடுத்து விடப்படவேண்டும். ஆனால், டான்யூபிலிருந்த மற்றக் கோட்டைகள் தரைமட்ட மாக்கப்படவேண்டும். ரஷியாவுக்கு ஏற்பட்ட போருக்கான செலவை ஈடுசெய்வதற்காக ஏராளமான தொகையைத் துருக்கி ரஷியாவுக்குக் கொடுக்கவேண்டும். பத்தாண்டுக் காலத்துக்குள் அப் பெருந்தொகை செலுத்தித் தீர்க்கப்படவேண்டும்.

கிரீஸைப் பொறுத்தவரையிலும் லண்டன் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை சுல்தான் பின்பற்ற வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டது. மூன்று வல்லரசுகளுக்குமிடையே மீண்டும் 1829, மார்ச் மாதத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தையும் சுல்தான் ஏற்று நடக்கவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி, எல்லைக்கோடு ஓலோ வளைகுடாவிலிருந்து ஆர்டா வளைகுடா வரையிலும் செல்லவேண்டு மென்று நிர்ணயிக்கப் பட்டது. இதற்குத் தெற்கில் இருக்கும் பகுதி மரபுரிமையான முடியாட்சிக்குட்பட்டிருக்க வேண்டும்; சுல்தானின் இணக்கத்துடனும் அவருடைய மேலதிகாரத்துக்குட்பட்டும் மூன்று வல்லரசுகளாலும் ஒரு கிறித்தவ இளவரசர் அப் பகுதியின் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதன் சமயத்தையும் வாணிப உரிமையையும் சிறந்த வகையில் காக்கவல்ல ஒரு நிர்வாகம் நிலை நாட்டப்பட வேண்டும். இந்த நிபந்தனைகளை யெல்லாம் இங்கிலாந்து பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளின் தூதர்கள் சுல்தானிடம் சமர்ப்பித்தனர் (மார்ச்சு, 22, 1829). அதற்கு எவ்வித விடையும் தர முடியாதென்று அவர் விடாப்பிடியாக மறுத்து வந்தார். ரஷியர்கள் பால்கன் தீவுகளைக் கடந்து விட்டவுடன், இங்கிலாந்தையும் பிரான்ஸையும் சற்றுத் தணியவைப்பதற்

காக, ஒரு ஹாஸ்பொடாரின் (Hospodor) தலைமையில் கிரீஸ் சுயாட்சி பெறுவதற்கு சுல்தான் இணக்கம் தெரிவித்தார். அந்தத் தூதர்கள் இதை ஏற்க மறுத்துவிட்டனர். ரஷியாவுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, சுல்தான் அவர்கள் விரும்பிய முழுக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டார்.

கிரீஸைப் பொறுத்த மட்டில், ரஷியா சுல்தானுடன் தனிப் பட்ட ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டது. இங்கிலாந்தின் அரசாங்கத்துக்கும் பிரான்ஸின் அரசாங்கத்துக்கும் உணர்ச்சி புண்பட்டுவிட்டது போலும்! கிரீஸைத் துருக்கிய ஆட்சியினின்றும் விடுவித்ததற்கான பெருமையை ரஷியப் பேரரசர் தாமே அடையவேண்டுமென்று விரும்பினர் போலும்! ஆகவே, 1827 ஆம் ஆண்டுக்குரிய லண்டன் ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதற்கான பொறுப்பு ரஷியாவுக்கு மட்டுமே இருந்தது என்று கூறுவதற்கில்லை என்றும், உண்மையில் அது மூன்று அரசுகளின் செயலேயாகும் என்றும் அவை ரஷியாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தன. இதை யொட்டி, லண்டன் நகரில் மீண்டும் ஒரு மாநாடு கூடிற்று. கிரீஸின்மீது சுல்தானுக்கு இருந்த மேலதிகாரம் ஒழிக்கப்படவேண்டும் என்றும், கிரேக்கர்களுக்கு முழுச் சுதந்தரம் வாங்கித் தரவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டன. அதே சமயத்தில், புதிய இராச்சியத்தின் எல்லையைப் பெருமளவும் முன் குறிப்பிடப்பட்டதைவிட இன்னமும் குறுக்கி அமைக்கவேண்டும் என்றும், அவ் வெல்லைக்கோடு ஆர்க்கிலஸ் (Archilous) நதியின் முகத்துவாரத்திலிருந்து ஸ்பெர்க்கியஸ் (Sperkius) நதியின் முகத்துவாரம் வரையிலும் செல்லவேண்டுமென்றும் துர்வசமாக ஒரு முடிவு எடுக்கப்பட்டது. இவ் விதம் வரையறுப்பதால் அக்கர்னேனியாவும் (Acarnania) தெஸ்ஸாலீயின் பெரும்பகுதியும் அப் புதிய இராச்சியத்திலிருந்து விலக்கப் பட்டிருந்தன. கிரீட்டும் சேர்த்துக் கொள்ளப்படக் கூடாது என்றும் அவர்கள் தீர்மானித்தனர். இதுபோன்ற ஓர் எல்லையை அமைத்தது ஒரு பெரும் மூடச் செயலாகும்.

இந்தப் புதிய திட்டத்திற்கு சுல்தான் இணங்கி விட்டார். தம்முடைய மேலதிகாரத்துக்கு உட்பட்டுச் சுயாட்சி பெற்ற ஒரு பெரிய கிரீஸை வைத்திருப்பதைவிட, முழுச் சுதந்தரத்தையும் பெற்றிருக்கும் ஒரு சிறிய கிரீஸ் உருவாவதையே அவர் அதிகம் விரும்பினர். ஆகவே, கிரேக்க மக்களைக் கொண்டிருந்த சுற்றுப்புற மாவட்டங்கள் அடங்கியிராத ஒரு சிறிய, ஆனால் முழுச் சுதந்தரம் பெற்ற ஒரு கிரீஸ் உருவாயிற்று. இதனால் வருங்காலத்தில் பெருந் தொல்லைகள் ஏற்படவிருந்தன. இதன் ஒரு

விளைவென்ன வென்றால், சாக்ஸே கோபர்க் (Saxe-Coburg) வமிசத்தைச் சார்ந்த, பின்னாளில் பெல்ஜியத்தின் அரசரான இளவரசர் லியோபோல்ட் (Leopold) கிரீஸின் பரப்பளவு மிகவும் குறுகிக் கிடக்கிறது என்னும் ஒரே காரணத்தை முன்னிட்டு அந்நாட்டின் அரச பதவியை ஏற்க மறுத்துவிட்டதாகும். ஆகவே, அப் பதவிக்கு வல்லரசுகள் பவேரிய அரசரின் மகனை ஒத்தோவைத் (Otho) தேர்ந்தெடுத்தனர். இவர் பிற்போக்காளராகவும் தகுதியற்றவராகவுமே இருந்தார். இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சராகவும் இம் மாறுதல்களுக் கெல்லாம் பெரும்பாலும் காரணமாகவும் இருந்தவரான அபர்டீன் பிரபு (Lord Aberdeen) கிரீஸ் நாட்டை ஒரு கம்மியான பரப்பளவுள்ள நாடாக அமைக்கவே மிகவும் ஆவலாய் இருந்தாராம்.

எதிர்னேயின் உடன்படிக்கையின் விளைவாக ரஷியா மிகச் சிறிய ஆட்சிப் பகுதியை மட்டுமே பெற்றிருக்கையில், கிறித்தவக் குடிமக்களைப் பொறுத்தவரை துருக்கிக்கு ஏற்பட்ட இழப்புப் பேரிழப்பாகவே இருந்தது. ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதற்குப் பிறகு சுல்தான் தெராபியாவிலிருந்த அரண்மனையில் புகுந்து கதவுகளை மூடிக் கொண்டு, பெருந்துயரில் மூழ்கிக் கிடந்தாராம். இப்படிப்பட்ட நிலைக்குக் காரணமும் இருந்தது. அவர் அரியணைக்கு வந்ததற்குப் பிறகு எவற்றுக்காக வெல்லாம் பாடுபட்டாரோ அவற்றினை யெல்லாம் அவ் வொப்பந்தம் பறித்துக்கொண்டு விட்டது. அது சுல்தானுக்கும் அவருடைய குடிமக்களுக்கும் பெரும் இகழ்ச்சியாக இருந்தது. தம்முடைய பேரரசின் மற்றப் பகுதிகளுக்கு ஏற்படவிருந்த அவல நிலைக்கு அது ஒரு முன்னோடியாக விளங்கிற்று. எதிர்னே நகரத்தில் சிக்கித் தவித்த ரஷியப் படைகளின் உண்மை நிலையைத் தக்க சமயத்தில் தெரிந்து கொள்ளாமல் ஏமாற்றமடைந்த கதையை அவர் கேள்வியுற்றதற்குப் பிறகு அவருடைய துயர் மேலும் அதிகரித்திருக்க வேண்டும். இருப்பினும், இதைவிடப் பொல்லாத தவற்றை சுல்தான் இழைத்து விட்டார். அதுதான் லண்டன் ஒப்பந்தத்திற்குப் பிறகு அவர் கிரீஸைப் பொறுத்த வரையில் மூன்று வல்லரசுகளுடனும் ஒப்பந்தம் செய்துகொள்ள மறுத்ததாகும். 1827 ஆம் ஆண்டிலேயே கிரீஸுக்குச் சுயாட்சியை வழங்கும் வகையில் அவர் நடந்து கொண்டிருந்திருப்பாராயின், ரஷியா போரைத் தொடுத்திருக்க நேரிட்டிருக்காது; ஒருவேளை அப்படியே போர் மூண்டுவிட்டிருந்தாலும் அவருக்கு உதவியாகப் பல நாடுகள் முன் வந்தும் இருக்கக் கூடும். நவாரினேவில் அவருடைய கப்பற்படை அழிந்திருக்க வேண்டியிராது; தம் படையைச் சீர்திருத்தி அமைத்துக் கொள்ளவும் அவருக்குப்

போதிய அவகாசம் கிடைத்திருக்கக் கூடும். ஆனால், அப்படிச் செய்யவில்லை யாதலால், அவர் மால்தேவியா வலாச்சியா மற்றும் ஸெர்பியாவை இழந்து விட்டார். கிரீஸ் தன் சுதந்தரத்தைப் பெற்று விட்டது; தவிர அவர் விரைவில் முஸ்லிம் நாடாக விளங்கிய எகிப்தின் மீதிருந்த தமது ஆதிக்கத்தையும் இழக்க நேரிட்டது.

1824-ல் கிரீஸுக்கெதிராக சுல்தானுக்கு உதவி யளிக்க முன்வந்த முகம்மத் அலீ அவ்வுதவிக்கு ஈடாக சிரியா, டமாஸ்கஸ், திரிப்போலி மற்றும் கிரீட் ஆகியவற்றின் ஆட்சிப் பொறுப்பைத் தம்மிடம் விட்டுவிடவேண்டுமெனக் கோரிய நிபந்தனையை இப்போது வற்புறுத்தினர். ஆனால், நவாரினோவில் துருக்கி-எகிப்து கப்பற்படை அழிக்கப்பட்டதற்குப் பிறகு 1827-ல் முகம்மத் அலீ அந்த வாக்குறுதியைச் செயல்படுத்துமாறு சுல்தானை வற்புறுத்தியதால், சுல்தான் அதற்குத் திட்டவட்டமாக மறுத்து விட்டார். கிரீட்டின் ஆட்சிப் பொறுப்பை மட்டுமே அவர் முகம்மத் அலீயிடம் ஒப்படைக்க இணங்கினர். கொடுத்த வாக்கை சுல்தான் மீறியதற்காக முகம்மத் அலீ பெரும் சினமுற்றார்; தாம் விரும்பிய மாநிலங்களை வலிந்து பெறத் தீர்மானித்தார். அழிக்கப்பட்ட கப்பற் படைக்குப் பதிலாக அவர் மற்றொரு படையை உருவாக்குவதில் தீவிரமாக முனைந்தார்; தம்முடைய படையை மேலும் வலுப்படுத்திக் கொண்டார். 1832-ல் போருக்கான ஆயத்தங்களை யெல்லாம் முடித்துவிட்டு, அவர் சிரியாவின் பாஷாவுக் கெதிராகப் போரைத் தொடங்கினர். சுல்தானை எதிர்த்துப் போர் நிகழ்த்துவதாக முகம்மத் அலீ பாசாங்கு பண்ணி, இப்ராஹீமின் தலைமையில் படை ஒன்றைப் பாலைவனத்தைக் கடக்கச் செய்து சிரியாவுக்குள் அனுப்பி வைத்தார். அப் படை தொல்லை எதுவுமின்றி காஸாவையும் ஜெருசலேமையும் கைப்பற்றிக் கொண்டு ஏக்கரை நோக்கி முன்னேறியது. அங்கே எகிப்துக் கப்பற்படை அதைச் சந்தித்து அக் கோட்டையின் மீது வெற்றிகரமான தாக்குதலை நிகழ்த்துவதற்கு ஒத்துழைத்தது. இந்த வெற்றிக்குப் பிறகு இப்ராஹீம் தம் படையுடன் அலெப்போ மற்றும் டமாஸ்கஸ் ஆகியவற்றிற்குச் சென்று இரு துருக்கிப் படைகளை முறியடித்தார். பிறகு அவர் குன்றுகளைக் கடந்து சின்ன ஆசியாவுக்குள் புகுந்து கோனியா (Konia) என்ற இடத்தில் மாபெரும் போரில் ஈடுபட்ட (1832, அக்டோபர், 27) பெரிய துருக்கிப் படை ஒன்றை முறியடித்தார். பிறகு அவர் புருஸா நோக்கிச் சென்றார்.

இந்தப் பேரிடிகளெல்லாம் இஸ்தம்பூல் வாசிகளுக்குப் பெரும் அதிர்ச்சியை விளைத்தன. இப்ராஹீம் அவருடைய படையுடன் பாஸ்பரஸுக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்த சுல்தானிடம் வல்லமை வாய்ந்த மற்றெந்தப் படையும் இருக்க வில்லை. இப் பேராபத்தின் போது சுல்தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியை எகிப்தியர்களுக் கெதிராக நாடினார்; வருங் காலத்தில் அவ்வரசாங்கத்துடன் தாம் மிகவும் நெருங்கிய நட்புக் கொள்வதாகவும் அவர் உறுதி யளித்தார். இஸ்தம்பூலில் பிரிட்டிஷ் தூதராக இருந்த சர் ஸ்டாஃப்போர்ட் கான்னிங் (Sir Stafford Canning) என்பவர் சுல்தானுக்கு உதவியளிக்க வேண்டும் என்று மிகத் தீவிரமாக வற்புறுத்திய போதிலும், துருக்கியருடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தைச் சரிவர உணர்ந்திராத பார்மெஸ்டன் அவ்வித உதவியை யளிக்கக் கூடாது என்று வாதாடினர். அந்த நிலையில் சுல்தான் மகமூத் ரஷியப் பேரரசரின் உதவியை நாடினர். அப் பேரரசர் உதவி யளிப்பதற்குப் பெரும் மகிழ்ச்சியுடன் முன் வந்தார். அவ் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு அப் பேரரசர் துருக்கியில் ரஷியாவின் செல்வாக்கை மிகைபடுத்திக் கொள்ள விரும்பினர். ஆகவே, அண்மையில் இரண்டாம் முறையாக ரஷியப் பேரரசருக்கும் சுல்தானுக்குமிடையே மிக நெருங்கிய கூட்டுறவு ஏற்பட்டது. 1833, பிப்ரவரியில் ஒரு ரஷியப் படை செபாஸ்டப்பூல் (Sebastapol) என்ற இடத்திலிருந்து புறப்பட்டு, இஸ்தம்பூலின் பாதுகாப்பிற்காக பாஸ்பரஸைக் கடந்தது.

ஆகவே, இக் காரணங்களை முன்னிட்டுத் துருக்கி நாட்டில் ரஷியாவின் செல்வாக்கு ஆதிக்கம் பெற்று, சிறிது காலத்திற்கு மேலோங்கி நின்றது. ரஷியர்களைத் தவிர மற்றெவராலும் சுல்தானை நெருங்க முடியவில்லை. துருக்கிப் பேரரசில் ரஷியப் படை வீரர்களும் மாலுமிகளும் எங்கும் காணப்பட்டனர். துருக்கிப் படைகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கு ரஷியர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையானது பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு அரசாங்கங்களுக்குப் பெரும் பீதியை யளித்தது. ரஷியா இஸ்தம்பூலைத் தன் செல்வாக்குக்கு உட்படுத்துவதை அவ்விரு அரசாங்கங்களும் எவ்வாறு தடுப்பதென்று பெரும் கவலையுற்று விட்டன. இஸ்தம்பூலில் ரஷியப் படைகள் நிறுத்தி வைக்கப்பட்டமைக்கு முக்கிய காரணம் இப்ராஹீமின் வெற்றி பெற்ற படை முன்னேறிக் கொண்டே யிருந்ததாகும். ஆகவே, சுல்தான் ரஷியப் படையை இஸ்தம்பூலிலிருந்து வெளியேறச் செய்து விட்டால், முகம்மத் அலி மேலும் படையெடுத்துப் பாய்வதைத் தடைசெய்வதற்குத் தாங்கள் முன்னின்று போராட

உறுதியளிப்பதாக அவ்விரு அரசுகளும் கோரிக்கை விடுத்தன. பிரான்ஸ் முகம்மத் அலீயிடம் மிக நெருங்கிய நட்புக் கொண்டிருந்ததோடு, சுல்தானின் பிடியிலிருந்த எகிப்து சுதந்தர மடைந்தே தீர வேண்டுமென்று விரும்பிய போதிலும், இஸ்தம்பூல் ரஷியர்களின் செல்வாக்குக்கு ஆளாகிக் கிடப்பதை அதனால் கொஞ்சமும் காணச் சகிக்க முடியவில்லை.

இறுதியில் பெரும் முயற்சியின் விளைவாக, இரட்டை ஏற்பாடு உருவாயிற்று. இதில் பாமெர்ஸ்டன் பெரும் பங்கு பெற்றார். முவ்வல்லரசுகளான ரஷியா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியவற்றின் படைகளுக் கெதிராக இஸ்தம்பூலைத் தாம் தாக்குவதென்பது எளிதன்று என்பதை உணர்ந்த முகம்மத் அலீ சுல்தானுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டார். அவ்விருவருக்கும் இடையே 1833-ல் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அதன்படி முகம்மத் அலீ எகிப்தின் பாஷாவாக மட்டுமல்லாமல், சிரியா, டமாஸ்கஸ், ஆதனு, திரிபோலி மற்றும் கிரீட் ஆகியவற்றின் பாஷாவாகவும் அங்கீகரிக்கப்பட்டதனால் அவருடைய புகழும் அதிகாரமும் அதிகரித்தன. சுல்தான் மேலதிகாரியாக மட்டுமே இருக்க வேண்டும். இந்த மாநிலங்களை ஆளும் பொறுப்பு முகம்மத் அலீக்கு அவருடைய வாழ்நாளுக்கு மட்டுமே அளிக்கப்பட்டது. இவ்வுரிமை அவருடைய மகனான இப்ராஹீம் பதவி வகிக்கும் காலத்திலோ அல்லது அவருடைய பிற் சந்ததியார்களின் காலத்திலோ தொடர்ந்து நீடித்திருக்கும் என்பதற்கு எவ்வித உறுதியும் அளிக்கப்படவில்லை. அப்பொழுது இருந்த நிலையில், இந்தச் சலுகைகளெல்லாம் சுல்தானுக்குப் பெரும் இழிவைத் தருவனவாகவே இருந்தன. அதே சமயத்தில் ரஷியா தன் படைகளை இஸ்தம்பூலிலிருந்து வெளியேற்றிக் கொள்வதற்கு ஒரே ஒரு நிபந்தனையின் பேரில் இணங்கிற்று. அதாவது, அங்கியார் ஸ்கெலெஸ்ஸி (Unkiar Skelessi) என்னும் ஒப்பந்த மொன்று உருவாயிற்று. அதில் கண்ட நிபந்தனைகளின்படி, சுல்தானின் அனுமதியின்றியே எக் காலமும் பாஸ்பரஸ், மற்றும் டார்டனெல்ஸ் வழியாக ரஷியக் கப்பல்கள் சென்று வருவதற்கான சலுகை வழங்கப்பட்டிருந்தது. அதே சமயத்தில் அது போன்ற சலுகையை மற்றெந்த வல்லரசும் ரஷியாவின் அனுமதியில்லாமல் பெறக் கூடாது. துருக்கிப் பேரரசின் சூழ்நிலைகள் வற்புறுத்துமாயின், பாஸ்பரஸுக்கு ஒரு படையை அனுப்புவதற்கான சலுகையையும் ரஷியா பெற்றது. முகம்மத் அலீக்காக வெளியிடப்பட்ட அரசு ஆணை 1838, மே 5ஆம் நாளன்று பிறப்பிக்கப்படுகையில், ரஷியாவுடன் ஏற்பட்ட அங்கியார் ஸ்கெலெஸ்ஸி என்ற ஒப்பந்தம் அதே ஆண்டு,

ஜூலை 8ஆம் நாள் அன்று கையொப்பமிடப்பட்டது. இவ் விரண்டு நடவடிக்கைகளின் விளைவாக, ஐரோப்பா முழுவதை யுமே போரில் மூழ்கடிக்க விருந்ததான முகம்மத் அலியிலை இஸ்தம்பூலுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் அடியுடன் நீங்கிற்று. முகம்மத் அலியின் பொறுப்பில் விடப்பட்ட மாநிலங்களுக்கு எகிப்தின் படை பின்வாங்கிக் கொள்ளப்பட்டது. இஸ்தம்பூலி லிருந்த ரஷியப் படைகளும் பின்வலித்துக் கொள்ளப்பட்டன.

ரஷியாவுக்கும் எகிப்துக்கும் சாதகமானதாகவும், துருக்கிக்கு இகழ்ச்சி யுண்டு பண்ணுவதாகவும் இருந்த இந்த ஏற்பாட் டிற்குப் பிறகு, பேரரசர் நிக்கலஸ், எகிப்தின் முகம்மத் அலி ஆகியவர்களுடன் சுல்தானுல் சிறிது காலத்திற்கு அமைதியாக இருக்க முடிந்தது. ஆனல், அடிக்கடி பல உள் நாட்டுத் தொல்லைகளும் கிளர்ச்சிகளும் தோன்றிக் கொண்டே இருந்தன. அவற்றை மகமூத் ஒடுக்கினர் என்றுலும், எளிதாக அவரால் அப்படிச் செய்துவிட முடியவில்லை. இடைவேளையில் மகமூத் முகம்மத் அலி ஆகிய இருவருமே மற்றொரு மோதலுக்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தனர். முகம்மத் அலியின் தலை மையில் பேரரசின் ஒரு பெரும் பகுதி சுதந்தரம் பெற்றிருப்பதை மகமூதால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. முகம்மத் அலியோ தம் பதவியை மரபுரிமையுடையதாக்கவும், தம்மை முற்றிலும் சுதந்தரமான அரசராக ஆக்கிக் கொள்ளவும் பெரும் பாடுபட்டார். மகமூதுக்குப் பதிலாகத் தம்மையே உத்மானியப் பேரரசின் தலைவராக்கிக் கொள்ளவும் அவர் ஆசைப்படத் தவறியதில்லை. இந்த இடைவேளையில் சுல்தான் வான் மோட்கி (Von Moltke) என்ற பிரஷ்ய தளபதியின் கீழ்ப் பல பிரஷ்ய அதிகாரிகளைப் படை வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக நியமித்திருந்தார். அதே சமயத்தில் முகம்மத் அலியும் அதே நோக்கத்துடன் பல பிரெஞ்சு அதிகாரிகளை எகிப்தில் நியமித் திருந்தார். ஐந்து ஆண்டுகட்குப் பிறகு இருதரப்பினருக்கு மிடையே மீண்டும் போர் மூண்டது.

முகம்மத் அலி தம் தலைவரான சுல்தானின் மீது போரைத் தொடங்குவதற்காகத் தாம் இனிமேலும் சுல்தானுக்குக் கப்பம் செலுத்தப் போவதில்லை என்று 1838-ல் வெளிப்படையாக அறி வித்து விட்டார். இது உண்மையில் சுதந்தரத்திற்கான அறிக் கையாகவும், தம் கீழ்ப்படிதலைக் களைந்தெறிவதற்கான நோக் கத்தை வெளிப்படுத்தும் அறிவிப்பாகவும் இருந்தது. மகமூதைப் பொறுத்தவரையில், கிளர்ச்சி செய்யும் பாஷாவை எப்படியும் அடக்கி விடவே அவர் உறுதி கொண்டு விட்டிருந்தார். சிரியா

வின் மீது படையெடுப்பதற்காக யூப்ரட்டீஸ் நதி யோரத்தில் ஒரு சேனையை அவர் திரட்டியும் வைத்திருந்தார். அந்தத் தருணம் சுல்தானுக்குச் சற்றுச் சாதகமாகவே இருந்தது போலும்! ஏனெனில், சிரியா நாட்டு மக்கள் முகம்மத் அலீக் கெதிராகக் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தனர். அந்தப் பாஷாவின் ஆட்சி கொடுங்கோலாட்சியாக இருக்கின்றது என்பதே அக் கிளர்ச்சிக்குக் காரணமாம். 1839ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மகமூத் போரைத் தொடுத்து, சிரியாவின் மீது படையெடுக்கத் தமது படைக்கு உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார். ஒன்பது பெருங் கப்பல்களையும் இருபத்து நான்கு சிறிய கப்பல்களையும் கொண்டிருந்த கப்பற் படை ஒன்றையும் அவர் சிரியாவுக்கு அனுப்பிவைத்தார்; யூப்ரட்டீஸ் நதிக் கரையிலிருந்து முன்னேறிக்கொண்டு வந்த படையுடன் ஒத்துழைக்குமாறு அக் கப்பற் படைக்கு ஆணையிட்டார்.

ஆனால், இந்தப் படையெடுப்புகள் தோல்வியடைந்தன. சிரியாவின் மீது படையெடுத்த சேனையை இப்ராஹீமின் தலைமையில் எகிப்தியர்கள் நாஸிப் (Nazeb) என்ற இடத்தில் சந்தித்தனர் (ஜூன், 25, 1839). இரண்டு படைகளின் பலமும் சற்றுச் சரிசமமாகவே இருந்தது. ஆனலும், துருக்கியர்கள் முற்றிலும் முறியடிக்கப் பெற்றனர். அவர்களுடைய படைவீரர்கள் பலர் போர்க் களத்திலிருந்து தப்பி ஓடி எதிரியினுடன் சேர்ந்து விட்டனர். எஞ்சியவர்கள் விரட்டியடிக்கப்பட்டு, கலைக்கப்பட்டனர். ஆருயிரம் வீரர்கள் இறந்தனர், அல்லது காயமுற்றனர். பத்தாயிரம் பேர் சிறைவாரப்பட்டனர். ஒரு நூறு பீரங்கிகளும் ஏராளமான பொருள்களும் எகிப்தியர்களின் வசம் சிக்கின. இப் பகுதிகளில் துருக்கிப்படை சுவடே இல்லாமல் மறைந்து விட்டது.

மாபெரும் துருக்கிக் கப்பற்படை ஜூலை 6ஆம் நாள் அன்று பாஸ்பரஸிலிருந்து புறப்பட்டது. மக்கள் அதைப் பெரும் உற்சாகத்துடன் வழியனுப்பி வைத்தனர். அதற்கு அகமத் என்ற கப்பற் படைத் தலைவன் தலைமை வகித்தான். ஆனல், அவன் சுல்தானுக்குத் துரோகம் இழைத்து விட்டான். டார்டனெல்ஸைக் கடந்ததற்குப் பிறகு, சுல்தானின் உத்தரவின்படி அவன் சிரியாவுக்குச் செல்லாமல், நேராக அலெக்ஸாந்திரியாவிற்குச் சென்று, தனது படையை சுல்தானின் விரோதியான முகம்மத் அலீயினிடம் ஒப்படைத்து விட்டான். இத் துரோகச் செயலுக்காக அப் படைத் தலைவன் ஏராளமான கைக்கூலியைப் பெற்றிருக்க வேண்டும்.

இந்தப் பெரும் தோல்விகள் இரண்டைப்பற்றியும் சுல்தான் அறியவில்லை. ஏனெனில், அவர் 1839, ஜூலை முதல் நாள் அன்று உயிர் நீத்து விட்டார். இவ்விதமாக முப்பத்தோராண்டாக நடைபெற்று வந்த ஆட்சி முடிவடைந்தது. இவர் சீர்திருத்தங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதைப் படையை மாற்றி அமைக்க முயன்றதிலிருந்து ஓரளவு உணர முடிந்தது. உண்மையில் அவரது அச் சீர்திருத்தம் முற்றுப் பெற்றிருக்குமாயின், உத்மானியப் பேரரசின் வரலாறே வேறு திசை நோக்கிச் சென்றிருக்கும். இருப்பினும், அவர் அப் படையைக் கொண்டு பாஷாக்கள் பலரின் சுயாட்சியை ஒடுக்க முடிந்தது; இராணுவ மானியங்களைப் பறித்துக் கொள்ள முடிந்தது. அனட்டோலியாவை ஒழுங்குற அமைந்த மத்திய நிர்வாகத்துக்குட் படுத்தி வைக்கவும் அவரால் முடிந்தது. இது உண்மையில் ஒரு பெரும் சாதனை யாகும்.

பேரரசின் பல்வேறு இடங்களிலும் கிளர்ச்சிகளை எதிர் நோக்க வேண்டியிருந்ததனாலும் ஐரோப்பிய நாடுகளின், குறிப்பாக ரஷியாவின் வற்புறுத்தல் அதிகரித்துக் கொண்டிருந்ததனாலும் சுல்தான் மகமூத் நிர்வாகத்தைப் பல்வேறு வகைகளிலும் மாற்றி அமைக்கத் தீவிர முயற்சியை எடுத்துக்கொண்டார். நிர்வாகத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி மேலை நாடுகளுக்குரிய சீர்திருத்த முறைகளை அவர் புகுத்தினார். அலுவலர் பணித்துறையை அவர் நவீன முறைகளின் அடிப்படையில் ஒழுங்காக அமைத்தார். நீதி விசாரணையின்றித் தூக்கு தண்டனை விதிப்பதற்கான அதிகாரத்தை அவர் மாநில ஆளுநர்களிடமிருந்து பறித்துக்கொண்டார்; பறிமுதல் நீதி மன்றத்தை அழித்துவிட்டார். வெளிநாட்டு அமைச்சுத் துறையும் உள்நாட்டு அமைச்சுத் துறையும் மாற்றி அமைக்கப்பெற்றன. முதன் முதலாக ஐரோப்பிய தலைநகரங்களுக்குத் துருக்கியின் தூதர்கள் அனுப்பப்பட்டனர்.

கல்வியின் மகத்துவத்தை சுல்தான் அறிந்திருந்தார். இராணுவக் கல்விக் கூடத்துடன் ஒரு மருத்துவப் பள்ளியையும் ஏராளமான உயர்நிலைப் பள்ளிகளையும் சுல்தான் நிறுவி யிருந்தார். ஆதாரக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. அவ்விதக் கல்வியைப் பெற்றிராத எவரும் எக் கைத்தொழிலையும் மேற் கொள்ளக்கூடாது என்று அரசக் கட்டளை ஒன்றும் பிறப்பிக்கப் பட்டிருந்தது. பொது மக்களுக்கு ஒளியூட்டுவதற்காக 'லா மானிஷியே உத்மான்' என்ற அதிகாரபூர்வமான பத்திரிகை பிரெஞ்சு மொழியிலும் துருக்கி மொழியிலும் வெளியாயிற்று. மேலும்,

பயிற்சி பெறுவதற்காக மாணவர்கள் அயல் நாடுகளுக்கு அனுப் பப்பட்டனர். ஆனால், பெரும் எதிர்ப்பு ஏற்படலாம் என்று அஞ்சி அவர் உலமாக்களைச் சீர்திருத்த முற்படவில்லை. அணிய வேண்டிய உடைகளிலும் அவர் மாற்றங்களைப் புகுத்தினர் என் பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம்.

நவீன முறைகளின்படி ஒரு படையை உருவாக்கி அதற்குத் தேவைப்படும் ஆயுதங்களை அளித்ததனால், புதியதும் பெரிது மான செலவுகள் ஏற்பட்டன. முதல் முதலாக மத்திய அரசுத் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டமையால் பெரும் செலவுகள் ஏற்பட்டன. அதிகரித்துக்கொண்டிருந்த அரசாங்கச் செல வினைச் சமாளிப்பதற்காக 'இல்திஸாம் முறை' (Ilthizam System) —அதாவது அதிக விலை கொடுப்பவனுக்கு வரிகளை வசூலிக்கும் பொறுப்பினை விற்றுவிடுவது — பெரும்பாலும் கையாளப்பட்டது. அன்னியர்களிடமிருந்தும் கொடும் வட்டிக்குக் கடன்கள் வாங்கப் பட்டன. கடன் கொடுத்தவர்களுக்குத் தனிப்பட்ட சலுகை களும் வழங்கப்பட்டன. நாளடைவில் அப் பழக்கம் அரசின் நலனையும் மக்களுடைய நலனையும் மிகக் கடுமையாகப் பாதித் தது. இருப்பினும், அவருடைய சீர்திருத்தங்களின் நோக்கங் களை மக்கள் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. அவற்றில் பல அக்கால நிலைக்கு அப்பாற்பட்டவையாக இருந்தமையால், மக்கள் சிற்சில சமயங்களில் சுல்தானை எதிர்க்கவும் செய்தனர்.

அவருடைய சீர்திருத்தத்திற்கான முயற்சியில் அவர் அவ் வளவாக வெற்றிபெற வில்லை யென்றாலும், வரலாற்றாசிரியர்கள் அவரை மிக உயர்வாகவே மதிப்பிட்டுள்ளனர். கிரிஸி போன்ற வரலாற்றறிஞர்கள் அவரை வானளாவப் புகழ்ந்துள்ளார்கள். சுல்தான்களின் பட்டியலில் அவர்கள் அவருக்கு முதலிடத்தை அளிக்கின்றனர். அவருடைய ஆற்றலுக்கும் அசையா மன உறுதிக்கும் அவர்கள் சான்று கூறுகின்றனர். அப் பெருங்குண வியல்புகள் அவரிடத்தில் காணப்பட்டன என்பதில் சிறிதளவும் ஐயப்பாடு இருக்க முடியாது. மற்றெந்த மன்னருக்கும் அது போன்று தொடர்ந்து எதிர்ப்பட்ட தொல்லைகளைச் சமாளிக்க நேரிட்டிருக்காது. பேரரசின் சுமையை அவர் பெரும்பாலும் தனி யாகவே பொறுத்து வந்தார். இருப்பினும், அவருடைய நிர் வாகமும் தூதரகமும் தோல்வியடைந்தன என்பதையும், அவ ருடைய பேரரசு அவருக்கு முற்பட்டவர்களுடைய காலத்தை விட அவருடைய காலத்தில் அதிக ஆட்சிப் பகுதிகளை இழக்க நேர்ந்தது என்பதையும் நாம் மனத்தில் கொள்ளவேண்டும். அவருடைய படைகள் பெரும்பாலும் தோல்வியே அடைந்தன

என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அவருடைய அசையா உறுதி உண்மையில் மாண்புமிக்கதாகவே இருந்தது என்றாலும், ரஷியப் படைகள் இஸ்தம்பூலை நெருங்கிக் கொண்டிருந்த மிக நெருக்கடியான நேரத்தில் அவ்வுறுதி அவரைக் கைவிட்டு விட்டது மற்றொரு சமயத்தில் அவர் 1827-ன் கிரீஸுக்கான ஒப்பந்தத்துக்கு இணங்கியிருக்க வேண்டிய சமயத்திலும் அவரை அது கைவிட்டது. முகம்மத் அலியைப் போன்ற ஆற்றலை அவர் படைத்திருக்கவில்லை. வல்லரசுகள் மட்டும் தலையிட்டிருக்கவில்லையாயின், அவருடைய பேரரசு எப்பொழுதோ சீர்குலைந்திருக்கும். அவரை அறியாமலேயே அவர் தமது சீர்திருத்தங்களினால் நாட்டுப்பற்று வளர்வதற்கும் காரணமாயினர். துருக்கியை நவீன மயமாக்குவதற்காக அவர் மேற்கொண்ட மாறுதல்கள் ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் 'தற்காலத் துருக்கியின் தந்தை' எனக் கருதப்படுபவரான முஸ்தஃபா கமால் பூர்த்தி செய்யப்பட்டன.

19. சுல்தான் அப்துல் மஜீத் (1839-1861)

(Sultan Abdul Medjid)

கிழக்குப் பிரச்சினை (தொடர்ச்சி)

இரண்டாம் மகமூத் புகுத்திய சீர்திருத்தங்கள் அனைத்தும் பிரெஞ்சுப் புரட்சி வலியுறுத்திய கோட்பாட்டின் அடிப்படையிலும் பதினெட்டாம் நூற்றாண்டுக்குரிய ஐரோப்பிய அறிவொளிக்கான கோட்பாட்டின் அடிப்படையிலும் அமைந்திராமல், மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பெருக்குவதற்காகப் பிரெஞ்சு மன்னர் பதினான்காம் லூயியும் நெப்போலியன் போனபார்ட்டும் நிறைவேற்றிய அரசாங்க மாறுதல்களை யொட்டியே அமைந்திருந்தன. ஜனிஸ்ஸரீகளைப் பூண்டோடு ஒழிப்பது மிக முக்கியத் தேவையாகிவிட்டிருந்தது. அவர்களை ஒழித்துக்கட்டிய பிறகு, ஐரோப்பிய முறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்சியும் அளிக்கப்பட்டிருந்த புதிய படை ஒன்று சுல்தானின் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டது. சமாளிக்கப்பட முடியாதவர்களும், கீழ்ப்படிந்து நடவாதவர்களுமான மாநில ஆளுநர்கள் புதிய படையினை எதிர்த்து நிற்க இயலாது, ஒருவர்பின் ஒருவராக அடிபணிந்தனர். முகம்மத் அலீ பாஷாவை அடிபணிய வைக்க வேண்டுமென்று சுல்தான் கொண்டிருந்த அவாவினால் ஏற்பட்டவையே 1832-1833, 1839ஆம் ஆண்டுகளின் தோல்விகளாகும். பிந்தைய போரில் மகமூத் மாற்றியமைத்த காலாட்படையும் கப்பற்படையும் அழிக்கப்பட்டன. ஜூலை முதல் நாள் அன்று அவர் உயிரிழந்ததற்குப் பிறகு அவருடைய பதினாறு வயது மகனை அப்துல் மஜீத் என்பவர் பட்டத்திற்கு வந்தார்.

இவர் உடலாற்றலோ மன ஆற்றலோ இன்றித் தணிந்து செல்லும் குணவியல்பினைப் படைத்தவராக இருந்தார்; ஒழுக்கங் கெட்டும் வாழ்ந்தார். நல்ல கல்வியைப் பெறாது, பேடிகளான

அலிகளின் கூட்டத்தையும் பெண் பாலார்களின் கூட்டத்தை யுமே இவர் அதிகமாக நாடினர்; குடிப் பழக்கத்தையும் இவர் மேற் கொண்டிருந்தார். இவருடைய தந்தை எல்லா அரசாங்க அதிகாரங்களையும் தம்மிடத்திலேயே மையமாக்கி வைத்திருந்து அமைச்சர்களை அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்ததனால், இந்த இளம் சுல்தானைக் கட்டுப்படுத்தி நாட்டை ஆளுவதற்குத் தகுதி பெற்றவர் எவரும் இருக்கவில்லை. இந்த சுல்தானின் ஆட்சிக் காலத்தில் அரசின் முக்கிய அதிகாரம்—உள்நாட்டு விவகாரங் களாகட்டும், அயல் நாட்டு விவகாரங்களாகட்டும்—அனைத்தும் பெரும்பாலும் வல்லரசுகளின் தூதர்களின் கையில்தான் சிக்கிக் கிடந்தன. அவர்கள் ஏகமனத்துடன் செயல்படும் வேளைகளில் தான் அதிகாரம் கூட்டாகப் பயன்படுத்தப்பட்டது. மற்ற வேளை களில் எவராவது ஒருவர், குறிப்பாக பிரிட்டிஷ் தூதர்தாம் அதைக் கையாண்டனர். சர் ஸ்டாப்ஃபோர்ட் கான்னிங் என் பவர் 1842—1853 வரையிலும் சுல்தானின்மீது பெரும் செல் வாக்குப் படைத்திருந்தார்.

இப் புதிய சுல்தானின் ஆட்சியில் துருக்கிப் பேரரசு எவ்வித ஆட்சிப் பகுதியையும் இழக்கவில்லை யாதலால், இவருடைய தந்தையைவிட இவரை அதிக நற்பேறு பெற்றவர் என்றே நாம் கருத வேண்டும். இருப்பினும், இவருடைய ஆட்சிக் காலத்தில் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. ஒன்று, முகம்மத் அலீ பாஷா கொண்டிருந்த பேராவல் மிக்க திட்டங்கள் ஒடுக்கப் படுதலும், மரபுரிமையுடையதாக ஆக்கப்பட்ட அவரது ஆட்சிப் பொறுப்பு எகிப்தில் மட்டுமே நிலைத்திருத்தலும் என்பதாகும். மற்றொன்று, கிரீமியப் போர் என்று வரலாற்றில் பெயர் பெற்று விளங்கும் ரஷியப் போராகும். அதன் விளைவாக, இருபது ஆண்டு காலமட்டும் ஐரோப்பாவில் துருக்கிப் பேரரசு தண்டிக் கப்படாமல் காக்கப்பட்டு வந்தது.

முதல் நிகழ்ச்சியைப் பொறுத்தவரை, மகமூதின் ஆட்சியின் இறுதி ஆண்டில் எகிப்தின் முகம்மத் அலீ பெரும் பலத்தைப் பெற்றுவிட் டிருந்தார். அதைக் கொண்டு அவர் உத்மானியப் பேரரசினைக் கவிழ்த்தும் இருக்கக்கூடும். ஆசியாவில் நாளிப் என்ற இடத்தில் முக்கிய துருக்கிக் கப்பற்படை ஒன்றை அவர் அழித்திருந்தார். ஆனால், இந்த நிலையில் அவர் சற்று நிதான மாகவே நடந்துகொண்டார். எகிப்து, சிரியா, திரிபோலி, ஆதனு மற்றும் கிரீட் ஆகியவற்றின் ஆட்சிப் பொறுப்பைத் தம் குடும்பத்தினரே மரபுரிமையாகப் பெற்றிருக்க வேண்டும் என் பதை ஏற்றுக்கொண்டால் சுல்தானுடன் ஒப்பந்தம் செய்து

கொள்ளத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் அறிவித்தார். தம் தலைவருக்கெதிராகத் தம் கப்பற் படையைப் பயன்படுத்தத் தாம் விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார். அவருடைய நிபந்தனைகளுக்கு சுல்தான் இணங்கி விடுவாராயின், அவருக்கே அப் படையைத் திருப்பிக் கொடுத்து விடுவதாகவும் அவர் தெரியப்படுத்தினர். சுல்தான் மகமூத் மட்டும் இப்பொழுது உயிருடன் இருந்திருப்பாராயின், அவர் இந்த நிபந்தனைகளை யெல்லாம் முற்றிலும் புறக்கணித்திருப்பார்; கிளர்ச்சி செய்யும் பாஷாவுடன் போருக்கும் சென்றிருப்பார். ஆனால், இந்த நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க அப்துல் மஜீத் போதிய துணிச்சல் பெற்றிருக்கவில்லை. இரண்டு பேரிடிகளும் இஸ்தம்பூலை ஒரே பீதிக்குள் மூழ்கடித்தன. ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் பலரும் அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை கூறினர். ஆனால், அதுவரை நடைபெறுத நிகழ்ச்சி ஒன்று அப்பொழுது நடைபெற்றதனால் அவர் அவ்விதம் இணங்குவதிலிருந்து தடுத்துவிடப்பட்டார். இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷியா, ஆஸ்ட்ரியா மற்றும் பிரஷ்யா ஆகிய ஐந்து வல்லரசுகளின் தூதர்கள் ஒன்றுகூடி, முகம்மத் அலியின் கோரிக்கைகளுக்கு இணங்குவது என்பது தங்களுடைய அரசாங்கங்களுக்கு இழிவைத் தேடித் தருவதாகும் என்னும் முடிவுக்கு வந்தனர்; முகம்மத் அலி சமர்ப்பித்த நிபந்தனைகளைத் தங்களுடைய அரசாங்கங்கள் விவாதிக்க விரும்புவதாகவும், அப் பாஷாவுடன் எந்த விதமான உடன்பாட்டையும் செய்துகொள்ள வேண்டியதில்லை என்றும் அவர்கள் சுல்தானுக்கு அறிவித்தனர். இதற்கு ஆலோசனைக் குழு இணங்கிற்று. கிளர்ந்தெழுந்த பாஷாவுக்கும் சுல்தானுக்கும் ஏற்பட்ட பிரச்சினைக்கு முடிவுகாணும் பொறுப்பு அத் தூதர்களின் கரத்திடை வந்து சிக்கிற்று. துருக்கிப் பேரரசு அவர்களுடைய செல்வாக்கின்கீழ் வரத் தொடங்கிற்று.

இத் தறுவாயில் ரஷிய பேரரசர் ஸார் நிக்கலஸின் (Czar Nicholas) போக்கு மற்ற வல்லரசுகளுடன் இணங்கிச் செல்வதாகவே இருந்தது. எகிப்தின் பிரச்சினைக்கு முடிவு காண அவை ஏகமனத்துடன் ஒரு திட்டத்தைச் சமர்ப்பிக்க முன்வந்தால், தாமும் புக்காரெஸ்ட் மற்றும் அகர்மான் ஒப்பந்தங்களின்படி பெற்றிருந்த சிறப்புச் சலுகைகளை வற்புறுத்தப் போவதில்லை என்றும் அவர் கூறினர்; இஸ்தம்பூலிலிருந்தும் பாஸ்பரஸிலிருந்தும் எஞ்சிய தம் படைகளைப் பின்வாங்கிக் கொள்வதற்கும் அவர் இணங்கினர். ரஷியப் பேரரசின் பெருந்தன்மையான போக்கினைக் கண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாகத் தம் வியப்பையும் பாராட்டுதலையும் அதன் தூதர் தெரிவித்தார். இந்த

நிகழ்ச்சியின் விளைவாக, லண்டன் நகரில் ஐந்து வல்லரசுகளின் பிரதிநிதிகளின் மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் பிரிட்டனின் சார்பாகப் பாமெர்ஸ்டன் பிரபுவும் (Lord Palmerston) ரஷியாவின் சார்பாக பாரன் புருன்னேவும் (Baron Brunnow) தலையார்ந்த பங்கு பெற்றனர். ஆனால், அம் மாநாட்டில் பிரான்ஸின் வற்புறுத்தலின் விளைவாக, கடுமையான கருத்து வேறுபாடுகள் தோன்றின. ரஷியா இஸ்தம்பூலைத் தன் வசப்படுத்தி வைப்பதற்கு பிரான்ஸின் அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருந்த போதிலும், எகிப்து, சிரியா ஆகியவற்றின் மரபுரிமையான ஆட்சிப் பொறுப்பை அடைவதற்கு முகம்மத் அலீ பாராட்டிய உரிமைக்கு முழு ஆதரவு கொடுத்தது; சுல்தானிடத்திருந்து முழுச் சுதந்தரத்தைப் பெற்றுவிடவும் அவ் வரசாங்கம் எகிப்தை அந்தரங்கத்தில் ஊக்குவித்துக் கொண்டிருந்தது. மற்ற வல்லரசுகளுக் கெதிராகவும் அது முகம்மத் அலீயை ஆதரித்தது. பிரான்ஸுடன் இணங்கிச் செல்ல முடியாது என்று உணர்ந்த இங்கிலாந்து, ரஷியா, ஆஸ்ட்ரியா ஆகிய நாடுகள் இறுதியில் அதனுடைய இணக்கமின்றியே செயல்பட முடிவு எடுத்து, முகம்மத் அலீ பாஷாவை சிரியாவினின்று வெளியேறுமாறு வற்புறுத்தி, அவரை சுல்தானுக்கு அடிபணியுமாறு கட்டாயப்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தின. நீண்ட விவாதத்திற்குப் பிறகு, 1840, ஜூலை 15ஆம் நாள் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சுல்தானுக்குக் கீழ்ப்படியத்தான் வேண்டுமென்று பாஷாவுக்கு இறுதி எச்சரிக்கை ஒன்றையும் அவை விடுத்தன. இந்த இறுதி எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டுப் பத்து நாட்களுக்குள் சிரியாவிலிருந்து தம் படையைப் பின்வலித்துக் கொள்வதற்கு முகம்மத் அலீ ஆணை பிறப்பித்து விட்டு, துருக்கிக் கப்பற்படையை மீண்டும் சுல்தானுக்கே அவர் திருப்பிக் கொடுத்து விடுவாராயின், அவரை எகிப்தின் மரபுரிமையான பாஷாவாக உயர்த்திவிடவும், அவருடைய வாழ் நாட்களுக்கு மட்டும் அவரை சிரியாவின் பாஷாவாகத் தாங்கள் அங்கீகரிக்கவும் தயாராக இருப்பதாக அவை வாக்குறுதி யளித்தன; இல்லையெனில், எகிப்தின் மரபுரிமை ஆட்சிப் பொறுப்பும் அவருடைய வாழ் நாட்களுக்கு மட்டும் சிரியாவின் பாஷாவாக அவர் இலங்குவதற்கான உரிமையும் வாபஸ் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவை திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டன. இந்த இறுதி எச்சரிக்கையை ஏற்றுக்கொள்ள முகம்மத் அலீ மறுத்தாலோ, தாமதித்தாலோ மூன்று வல்லரசுகளின் கப்பற்படைகளும் எகிப்தையும் சிரியாவையும் உடனடியாக முற்றுகையிடும் என்றும் முகம்மது அலீ எச்சரிக்கப் பெற்றார். இத்தகு இறுதி எச்சரிக்கைபற்றி பிரான்ஸுக்குச் செய்தி எட்டியவுடன், அது

பெரிதும் சினமுற்று விட்டது. முகம்மத் அலீ வல்லரசுகளின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தத் தவறி விடவே, பிரிட்டிஷ் கப்பற்படை மற்ற இரு வல்லரசுகளின் சிறிய கப்பற்படைகளின் உதவியுடன் சிரியாவின் கடற்கரையை நெருங்கி விட்டது என்று பிரான்ஸுக்குத் தெரியவந்தது. முன்பு எழுந்த சினம் இப்போது பெரும் ஆத்திரப் புயலாக உருப்பெற்றது. இது பிரான்ஸை அவமதிப்பதாகும் என்றும் கருதப்பட்டது. ஆகவே, எந்நிமிடமும் பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்குமிடையே போர் மூள விருந்தது. போருக்கான அச்சுறுத்தலை பிரெஞ்சு அரசாங்கம் வெளியிட்டும் விட்டது. ஆனாலும், அறிவுடையவர்களின் செல்வாக்குச் சற்று ஓங்கியதும், பிரான்ஸ் கடற் போருக்கான முழு ஆயத்தத்துடன் இருக்கவில்லை என்பதும், போர் மூளுமாயின் அக் கப்பற்படையினால் பிரிட்டிஷ் கப்பற்படையை எதிர்த்துச் சமாளிக்க அறவே முடியாது என்பதும் புலனாயின.

பாமெர்ஸ்டனின் தூண்டுதலின் விளைவாக, மூன்று வல்லரசுகளும் பிரான்ஸின் அச்சுறுத்தலுக்கு அஞ்சித் தங்களுடைய கொள்கையை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை; முகம்மத் அலீயைத் தாக்கத்தான் வேண்டும் என்று அவை வற்புறுத்தின. இருப்பினும், பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் இடையே மூள விருந்த போர் தவிர்த்துக் கொள்ளப்பட்டது. அதற்கிடையே ஸ்டாப் ஃபோர்ட் (Stopford) நேப்பியர் (Napier) என்னும் இரு தளபதிகளின் தலைமையில் பிரிட்டிஷ் கப்பற்படை பைரூத்துக்கு (Beirut) எதிரே தோன்றி, அதன் அரணைப் பீரங்கிக் குண்டுகளினால் தகர்த்தெறிந்தது. நேப்பியரின் தலைமையில் வந்து கரை இறங்கிய இரண்டாயிரம் படைவீரர்கள் எகிப்துப் படைகளை முறியடித்தனர். அதே வகையான தாக்குதல் ஒருசில நாட்களுக்குப் பிறகு ஏக்கரிலும் நடைபெற்றது. பிரிட்டிஷ் கப்பற்படை இக் கோட்டையின் மதில்களையெல்லாம் தகர்த்தெறிந்தது. நேப்பியர் தலைமையில் ஆறுயிரம் வீரர்கள் அவ் விடத்தை அடைந்து இப்ராஹீமின் படையை முறியடித்தனர். இந்தத் தாக்குதல்களின்போதுதான் முதன் முதலாக நீராவிப் போர்க் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. முகம்மத் அலீயின் கொடுங்கோலாட்சியை எதிர்த்து, சிரியாவின் குடிமக்கள் அதே சமயத்தில் உள் நாட்டில் கிளர்ச்சி செய்தது கூட்டுப் படைகளுக்குப் பெரும் உதவியளிப்பதாகவும் இருந்தது. எகிப்தின் படையில் கட்சி மாற்றமும் மிகத் தீவிரமாக நடைபெற்றது. இதனால் இப்ராஹீமின் படைவீரர்களின் எண்ணிக்கை பெருமளவும் குறைந்து விட்டிருந்தது.

சிரியாவின் கடற்கரை யோரத்தில் நிகழ்ந்த இந்தத் தாக்கு தல்களுக்குப் பிறகு நேப்பியர் தம் கப்பற்படையுடன் புறப்பட்டு அலெக்ஸாந்திரியா நகரின் எதிரில் தோன்றித் தாக்கப் போவ தாக அச்சுறுத்தினர். சுல்தானுக்கும் மற்ற மூன்று வல்லரசினர் களுக்கும் எதிராகப் போர் புரிவதென்பது இயலாதென்பதை முகம்மத் அலீ உணர்ந்துகொண்டார். ஆகவே, அவர் தளபதி நேப்பியருடன் சமாதான ஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தை களைத் தொடங்கினர். தாம் சிரியாவை விட்டு வெளியேற வேண்டுமாயின், தம்மைத் துருக்கி சுல்தான் எகிப்தின் மர புரிமைப் பாஷாவாக அங்கீகரிக்கவேண்டும் என்ற நிபந்தனை யின் பேரில் அவர் இணங்கினர். இதற்கிடையே முகம்மத் அலீ அனுபவித்து வந்த எல்லா இடத்து ஆட்சிப் பொறுப்புகளி லிருந்தும் அவரை நீக்கும்படியான ஓர் அரச ஆணையை சுல்தான் வெளியிட்டார். இதனால் தீவிரமான விளைவு ஏதும் நிகழ்ந்து விடவில்லை. இறுதியில், 1841, செப்டம்பர் 20ஆம் நாள் அன்று முகம்மத் அலீ பாஷாவுக்கும் மூன்று வல்லரசுகளுக்குமிடையே ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

முகம்மத் அலீ அரச பதவியிலிருந்து நீக்கப்பட்டாரெனினும், இப்பொழுது எகிப்தின் மரபுரிமைப் பாஷாவாக அவர் அங்கீகரிக் கப்பட்டார். ஆனால், மற்றப் பகுதிகளின் ஆட்சிப் பொறுப்பு அவரிடத்திருந்து பறித்துக் கொள்ளப்பட்டது. எகிப்தின் வரு மானத்தில் காற் பங்குக்குச் சரிசமமான தொகையை அவர் சுல்தானுக்குக் கப்பமாகச் செலுத்த வேண்டியதாயிற்று. அவர் தமது படையை சிரியாவிலிருந்து வெளியேற்றிக் கொள்ள வேண்டுமென்றும், எகிப்தில் பதினெட்டாயிரம் வீரர்களை விடக் கூடுதலானவர் நிரம்பிய படை எதையும் அவர் வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் வற்புறுத்தப்பட்டார்.

சுல்தானை ஒதுக்கிவிட்டு, அவர் சார்பாக அந்த மூன்று வல்லரசுகள் எகிப்தின் பாஷாவுடன் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டமையால், சுல்தானுடைய ஆலோசனைக் குழு எதிர் பார்த்ததைவிட அதிகமான ஆதாயமே சுல்தானுக்குக் கிடைத் தது. சிரியாவின் அரசாங்கப் பொறுப்பு முகம்மத் அலீயின் கரத்தினின்று பறித்துக் கொள்ளப்பட்டு, சுல்தான் வசமே மீண் டும் ஒப்படைக்கப்பட்டது. ஆனாலும், எகிப்து வெறும் பெயரள விற்கு மட்டுமே சுல்தானின் மேலதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது. மற்றெல்லா வகைகளிலும் அது சுல்தானின் பிடியினின்று விடு விக்கப்பட்டு, சுதந்தர நாடாக ஆக்கப்பட்டு விட்டது. இந்த நிலை சுல்தானின் படைப்பலத்தினால் ஏற்பட்டதன்று; பாமெர்ஸ்

டனின் தூதரகத் தலைமையில் மூன்று வல்லரசுகள் ஆற்றிய திறமிகு செயல்களால் அது ஏற்பட்டதாகும். இவ் வேற்பாட்டிற்கு பிரான்ஸ் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தது. முகம்மத் அலீ யின்மீது திணிக்கப்பட்ட இறுதி ஏற்பாடு மூப்பு அடைந்திருந்த அவரது இதயத்தையே பிளந்துவிட்டது போலும்! அவருடைய இறுதி எட்டாண்டுகள் மிகவும் சோகத்திலேயே கழிந்தன. திறமை வாய்ந்தவரும், சிறப்புப் பெற்றவருமான அவருடைய மகனான இப்ராஹீமின் மரணம் அச் சோக நிலையை மேலும் மிகை படுத்திற்று. எகிப்தைப்பற்றி முடிவான ஏற்பாட்டின் விளை வாக, 1841-ல் ரஷியாவும் துருக்கியும் உட்பட அனைத்து வல்லரசு களுக்குமிடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அதன்படி, துருக்கியின் கப்பல்களைத் தவிர மற்றெந்த நாட்டின் போர்க் கப்பல்களும் நீர்ச் சந்தியின் வழியாகக் கருங்கடலுக்குள் போவ தற்கும் அங்கிருந்து வருவதற்கும் தடை விதிக்கப்பட்டது.

1841-ல் இந்தத் தீவிரமான பிரச்சினைகளுக்கு முடிவு காணப் பட்டதற்குப் பிறகு, பன்னிரண்டு ஆண்டு வரையிலும் துருக்கி யில் பெரிதும் அமைதி குடிகொண்டிருந்தது. அவ்வப்பொழுது ஆங்காங்கே சில கலகங்களும் கிளர்ச்சிகளும் முளைத்துக்கொண்டு தாம் இருந்தன. இவற்றை உமர் பாஷா என்பவர் மிகத் திறமையுடன் ஒடுக்கி வந்தார். இந்தக் காலத்தில்தான் சுல் தானின் அரண்மனையில் பிரிட்டிஷ் தூதராக அமர்ந்திருந்த ஸர் ஸ்டாப்ஃபோர்ட் கான்னிங், சுல்தான் அப்துல் மஜீதின் மீது ஒரு தனிப்பட்ட செல்வாக்கைப் பெற்றிருந்தார். உண்மையில் அவர்தாம் துருக்கி கிலாஃபத்தின் ஆட்சியாளராக இருந்தார் என்று கூறுவது மிகையாகாது.

அவர் மூன்று முறை பிரிட்டனின் தூதராக இஸ்தம்பூலில் பணியாற்றியுள்ளார். 1812-ல் சுல்தானை ரஷியாவுடன் புக்கா ரெஸ்ட் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினர். இதன் விளைவாக, ரஷிய பேரரசர் சுல்தானிடமிருந்து சற்றே விடுபட்டு, டான்யூபிலிருந்து தம் படைகளைப் பின்வாங்கி, நெப் போலியனின் படைகளின் மீது பாய ஒரு நல்ல வாய்ப்பைப் பெற்றார். இது ரஷியாவின் மீது நெப்போலியன் நிகழ்த்திய படையெடுப்புத் தோல்வியுறுவதற்கும் முக்கிய காரணமாயிற்று. பின்னர் ஒரு தடவை கிரீஸ் சுதந்தரமடைந்ததற்குப் பிறகு, அதன் எல்லைகளை நிர்ணயிப்பதில் கான்னிங் பிரபு ஈடுபட்டிருந் தார். 1842-ல் அபர்டீன் பிரபு அவரை இங்கிலாந்தின் தூத ராக சுல்தானிடம் அனுப்பி வைத்தார். 1858ஆம் ஆண்டுவரை இரு குறுகிய இடைக் காலத்தைத் தவிர நெடுகவே அவர் அப்

பதவியை வகித்து வந்தார். இந்தப் பதினறு ஆண்டு காலத்தில் அவர் 'மாபெரும் எல்சி' (The Great Elchi — சிறப்பான தூதர்) என்று புகழ் பெற்று விளங்கினர். கிறித்தவ குடியானவர்கள் அவரைப் 'பாதுஷாங்களின் பாதுஷா' என்றழைத்தனர். அவருடைய செல்வாக்குச் சிற்சில வேளைகளில் கட்டுக்கடங்காததாகி விட்டபடியால், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அதனால் பல தொல்லைகளும்கூட ஏற்பட்டன. பிரிட்டனுக்கும் ரஷியாவுக்கும் இடையே விரைவில் மூளுகற்கிருந்த கடும் போருக்கு அவரே உண்மைக் காரணமாக விளங்கினர் என்று கூறினால், அது மிகையாகாது.

இதற்கிடையே, பேரரசின் நிர்வாகமும் சட்டங்களும் நெடு நாட்களாகவே சீர்திருத்தப்பட வேண்டியிருந்தன. அவ்விதச் சீர்திருத்தம் அப்பேரரசுக்கு மிகவும் இன்றியமையாததாகி விட்டிருந்தது. இதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் சுல்தான் மகமூத் உணர்ந்து அதற்கான ஒரு திட்டத்திற்கு அறுமதியும் வழங்கியிருந்தார். ஆனால், அவ் வாணையை வெளியிடுவதற்கு முன்பே அவர் உயிரிழந்தார். இந்தக் கொள்கையைப் பற்றி அவர் தம் மகன் அப்துல் மஜீதுக்குப் போதித்திருக்க வேண்டும். ஏனெனில், ரஷீத் பாஷா என்ற பிரதமரின் ஆலோசனையின் பேரில், புதிய சுல்தான் அப்துல் மஜீத் பட்டத்துக்கு வந்தவுடனேயே தமது முதல் செயல்களுள் ஒன்றாக, சீர்திருத்தத்திற்கான அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அது குல்காணேயின் ஹட்டி ஷரிஃப் (Hatti-Shariff of Gulkhane) என்று பெயர் பெற்று விளங்கிற்று. அது, தம் குடிமக்கள் அனைவருக்கும் சாதி மதம் இனம் என்ற எவ்வகைப்பட்ட வேறுபாடுமின்றி, உயிர் மானம் சொத்து ஆகியவற்றுக்கான பூரண பாதுகாப்பு அளிப்பதாகவும், தீர்வைகளைச் செலுத்தும் பொறுப்பை யாவருக்கும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொடுப்பதாகவும், எல்லாக் கைதிகளுக்கும் பகிரங்க நீதி விசாரணைத் தீர்ப்பு வழங்குவதாகவும், தனிநபர் சொத்தை உருவாக்கி அனுபவிப்பதற்கான அடிப்படை உரிமையை அளிப்பதாகவும், படைக்கு ஒழுங்குற ஆட்களைத் தெரிந்தெடுக்கப் போவதாகவும் வாக்குறுதி யளித்தது. இந்தக் கோட்பாடுகளைச் செயல்படுத்துவதற்காக ஒரு குழுவையும் அது நியமித்தது. ஆனால், சீர்திருத்தத்திற்கான இம் மாபெரும் சாசனம் செயல்படுவதற்குத் தேவைப்பட்ட மகமூதின் ஆற்றல் அப்துல் மஜீதினிடம் இருக்கவில்லை. ஆகவே, பயங்கர மிக்க எதிர்மாறான விளைவு ஏற்பட்டது. ரஷீத் பாஷா பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டார். அவருக்கு அடுத்தபடியாக வந்த ரிஸா பாஷாவும் (Riza Pasha) அவருடைய

சகாக்களும் பிற்போக்காளர்களாக, மதவெறி பிடித்தவர்களாக, கிறித்தவர்களுக்கெதிரிகளாக இருந்தார்கள். துருக்கியின் சீர் திருத்தத்திற்கான மற்ற வாக்குறுதிகளைப் போன்றே ஹட்டி ஷரீஃபும் செயல்பட இயலாததாகி விட்டது. ரிஸா லஞ்ச ஊழலில் சிக்குண்டிருந்தவர்; அரசாங்கப் பொதுக் கருவூலத்திலிருந்து கணக்கில்லாமல் செல்வத்தைக் களவாடியவர். இவரையும் இவரைப் போன்ற இவருடைய சகாக்களையும் பதவியிலிருந்து விலக்குவது பிரிட்டிஷ் தூதர் கான்னிங்கின் முக்கிய பொறுப்பாயிற்று. ரஷீத் மீண்டும் பதவிக்கு வர அத் தூதர் பெரு முயற்சி செய்தார். கிறித்தவர்களின்மீது வெறுப்புக் கொண்டிருப்பவர்களைக் கொண்டு குடியானவர்களின் சீர்திருத்தத்திற்கெனப் பாடுபடுவது முடியாத காரியமாகையால், அப்படிப்பட்டவர்களைப் பதவியிலிருந்து வெளியேற்றுவது மிகவும் அத்தியாவசியமாகி விட்டது.

கான்னிங் மிகப் பொறுமையுடன் சுல்தான் மஜீதின் மீது பெரும் செல்வாக்கைச் செலுத்தத் தொடங்கினர். அதன் விளைவாக, அவர் அமைச்சர்க் குழுவில் ஒரு மாற்றத்தைப் புகுத்தினர். இந்தச் சீர்திருத்தங்களை யெல்லாம் ரஷீத் ஒருவர்தாம் கொண்டு வர முடியும் என்பதை உணர்ந்து, அவரை மீண்டும் பதவிக்கு வருமாறு செய்தார். 1845-ல் துருக்கியின் வெளிநாட்டு அமைச்சராக ரஷீத் பதவி ஏற்று, அடுத்த ஆண்டில் மீண்டும் பிரதமராஞர். அவர் அப் பதவிக்கு வந்தவுடன், 1839-ல் தொடங்கிய சீர்திருத்த இயக்கத்தை அவர் மீண்டும் உயிர்ப்பித்து, பழைய, தூய்மையான, சகிக்கும் ஆற்றல் வாய்ந்த பண்பாட்டுப் பழக்க வழக்கங்களின் வகையில் டான்ஸிமாட் (Tanzimat — மாற்று அமைப்பு) என்னும் மாற்று அமைப்பினை உருவாக்க நடவடிக்கைகளை எடுத்தார். இந்த இயக்கத்திற்குட் 'டான்ஸிமாட்' என்று பெயரிடப்பட்டது. அவருடைய நண்பர்களும் ஆதரவாளர்களுமான அலீயும் ஃபுஆதும் (Ali and Faud) கல்வி முறையை ஒழுங்கு மிக்கதும் விசாலம் பெற்றதுமான ஓர் அடிப்படையில் நிறுவ முயன்றனர். 'இஸ்தம்பூல் பல்கலைக்கழகம்' 1846-ல் நிலை நாட்டப்பட்டது. ஏற்கெனவே மகமூதாலும் அப்துல் மஜீதாலும் தொடங்கப்பட்ட மருத்துவ விவசாயக் கல்லூரிகள், கப்பற்படைப் பயிற்சி நிலையங்கள், அரசு நிர்வாகப் பயிற்சி நிலையங்கள் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளையெல்லாம் ஒருமுகப்படுத்துவதற்காகவே இந்தப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், அது செயல்படுவதில் பல காரணங்களால் தாமதம் ஏற்பட்டது. உயர்நிலைக் கல்விமுறையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு ஒன்று அனை

வர்க்கும் கட்டாயமான இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது; இலவசப் பாட நூல்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தியது. 1851ஆம் ஆண்டுக்குள்ளாக இவ்வகைப்பட்ட ஆறு பள்ளிகள் பணியாற்றி வந்தன. ஆனாலும், இத் திட்டம் போதிய நிதி வசதியில்லாத காரணத்தாலும், பிற்போக்கான தலைவர்கள் மீண்டும் பதவிக்கு வந்து விட்டதனாலும் வெகு விரைவில் சீர்குலைந்து விட்டது.

1846-ல் சர் ஸ்டாப் ஃபோர்ட் கான்னிங் இங்கிலாந்திற்குத் திரும்பினார். மீண்டும் 1848-ல்தான் அவர் இஸ்தம்பூலுக்குத் திரும்பி வந்தார். அவர் இஸ்தம்பூலில் இல்லாத போது ரஷீத் பதவியிலிருந்து வீழ்ச்சியடைந்திருந்தார். ஆனால், கான்னிங் அந் நகருக்குத் திரும்பியதும், சீர்திருத்தவாதியாக இருந்த அவ் வமைச்சரை மீண்டும் பதவியில் வைத்துக் கொள்ளுமாறு வற் புறுத்தினார். அதன்படியே ரஷீதும் பிரதம அமைச்சராக நியமிக் கப்பட்டார். இந்த மாபெரும் தூதரின் செல்வாக்கு உண்மையில் மிகவும் மகத்தானதாக இருந்தது. ரஷீதின் வெற்றிகளிலும் அர சாங்கத்தில் அவரால் ஏற்பட்ட முன்னேற்றங்களிலும் அம் மாபெரும் தூதரின் செல்வாக்கினை நாம் திட்டவட்டமாகக் காண் கின்றோம். இருப்பினும், டான்ஸிமாட் இயக்கம் என்பது அன்னி யர் குறுக்கிடுதலின் விளைவாக ஏற்பட்டதன்று; மெய்யாகவே, அது உள்ளிருந்தே தோன்றிய ஓர் இயக்கமாகும். மத்திய கிழக்குப் பகுதியில் 1840ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட பிரிட் டிஷ் வாணிகப் பெருக்கம் சுல்தானுக்கு பிரிட்டனின் நட்பை வெகு எளிதாகப் பெற்றுத் தந்தது.

உண்மையான டான்ஸிமாட் உணர்ச்சி துருக்கியர்கள் பலர் மேலை நாடுகளின் கல்வி முறையை மேற் கொண்டதனாலும், நடை யுடை பாவனைகளில் அவர்கள் ஐரோப்பியரைப் பின் பற்றியதனாலும் தோன்றிற்று. இவ்வகை வளர்ச்சிக்குக் கிரிமியப் போர் நிகழ்வதற்கு முற்பட்ட பத்தாண்டு காலத்தில் ஆரம் பிக்கப்பட்ட ஏராளமான பத்திரிகைகளும், வரையப்பட்ட நூல் களும் சிறந்த சான்று வழங்குகின்றன. அரசியல், வரலாறு, வாழ்க்கை வரலாறு, தத்துவ இயல் ஆகியவற்றை மக்கள் பலரும் விரும்பிக் கற்றனர். புதிய கருத்துகள் இளைஞர் சமுதாயத்தை ஊக்குவித்தன. ஐரோப்பாவில் எல்லா இடங்களிலும் பழைமைக் கெதிராகக் கிளர்ச்சிகள் தொடங்கின. பழைய நிலை மாறத் தொடங்கிற்று. ஐரோப்பாவின் ஓர் எல்லையிலிருந்த துருக்கியால் இவ்வியக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை. கிரேக்கர்கள், அர்மீனியர்கள், பல்கேரியர்கள் மற்றும் பலருக்

கிடையே வளர்ந்து கொண்டே யிருந்த நாட்டுப் பற்று, துருக்கியர்களின் நாட்டுப் பற்றை ஊக்குவித்தது. ஆனாலும், துருக்கியர்களைப் பொறுத்தவரையில் நாட்டுப்பற்று இஸ்தம்பூலில் ஆரம்பக் கட்டத்தில்தான் இருந்தது. மற்ற இடங்களில் அது இன்னும் தோன்றவே இல்லை.

ரஷீத் புகுத்திய சீர்திருத்தங்களில் சில தலைநகருக்கப்பாலும் செயல்படுத்தப்பட்டன. எல்லாருக்கும் சரிசமமான ஒத்த நீதியை வழங்குதல், மாநில ஆளுநர்களிடமிருந்து தூக்கு தண்டனை அளிக்கும் உரிமையைப் பறித்தல், ஆளுநர்களுக்கு ஆலோசனை கூறுவதற்குச் சபைகளை உருவாக்குதல் போன்ற சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. சபைகளில் பலர் செல்வந்தர்களாக இருந்ததனால் பெரும் மாறுதல்களை அவர்கள் விரும்பவில்லை. இருப்பினும், முறையற்ற ஆட்சி நடைபெறுவதை அவை தடுத்து வந்தன.

சீர்திருத்துகின்ற, துருக்கியை ஒரு நவீன ஐரோப்பிய நாடாக மாற்றுகின்ற நம்பிக்கைகளைத் தாம் கைவிட்டுவிட்டதாக ஸர் ஸ்டிராட்ஃபோர்ட் கான்னிங் இஸ்தம்பூலிலிருந்து அறிவித்தார். 1852-ல் அவர் இங்கிலாந்துக்குத் திரும்பி விட்டார். கைக்கூலி வாங்கும் அதிகாரிகள் தலைநகரில் சூழ்ந்து கொண்டிருப்பதையும், தம் நல்லெண்ணத்துக் குரியவரான ரஷீதே கைக்கூலி வாங்கத் தொடங்கி விட்டார் என்பதையும் அவர் அறிந்திருந்தார். சமூக மாறுதல்கள் மிகக் குறைந்த வேகத்தில் ஏற்படுகின்றன என்பதை அம் மாபெரும் தூதரால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. மேலைய ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு ஏற்படுவதன் மூலம் துருக்கி மக்கள் பலர் மாறிக் கொண்டுதான் இருந்தனர்; குறிப்பாக, இளைஞர்கள் பல மாறுதல்களுக்கு ஆளாயினர். அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கையில், ஒருவரை ஒருவர் ஊக்குவித்துக் கொண்டனர்; முந்தைய தலைமுறைகளுக்குரியவர்களின் சமூக அறிவியல் அரசியல் கோட்பாடுகளை அவ்விளைஞர்கள் ஏற்க மறுக்கத் தொடங்கினர்.

1852-ல் பிரான்ஸின் மற்றும், ரஷியாவின் பிரதிநிதிகளுக்கு இடையே இஸ்தம்பூலில் மிகக் கடுமையான தூதரகச் சச்சரவு ஒன்று ஏற்பட்டது. ஜெருஸலேம் நகரில் உள்ள புனிதக் கல்லறை எவருடைய பாதுகாப்பில் இருக்கவேண்டும் என்பதைப் பற்றியும், அதை யொட்டிய ஒருசில நுணுக்கங்களைப்பற்றியும் அச் சச்சரவு மூண்டது. இந்தத் தீவிரமான பிரச்சினையைப்

பேரரசர் நிக்கலஸ் (Czar Nicholas) தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு, மேலும் தீவிரமான தகராறுகளை எழுப்ப முயன்று கொண்டிருந்தார். தம் திட்டங்களுக்கு இங்கிலாந்து அளிக்கும் எதிர்ப்பை முறியடிக்க அவர் விரும்பினார் போலும்! செய்ன்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் — (ரஷிய தலைநகரில்) பிரிட்டிஷ் தூதராக இருந்த சர் ஹாமில்டன் செய்மூர் என்பவர்பால் ரஷியப் பேரரசர் தம் மனத்தைத் திறந்து பேசினார்:

'துருக்கியின் விவகாரங்கள் ஒழுங்கில்லா நிலையில் சிக்கிக் கிடக்கின்றன. நாடே துண்டு துண்டாகிக் கொண்டிருக்கின்றது. அதனுடைய வீழ்ச்சி ஒரு பெரும் வாய்ப்புக் கேடாகும். இந்த விவகாரங்களைப்பற்றி இங்கிலாந்தும் ரஷியாவும் ஓர் உடன்பாட்டிற்கு வருவதும், ஒன்று மற்ற அரசுக்குத் தெரியாமல் எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்பதும் மிகவும் முக்கிய மாகும். நம்மிடத்தில் நோயால் பீடிக்கப்பட்டவர் ஒருவர் உள்ளார்.[1] அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டுள்ளார். நான் உண்மையை வெளிப்படையாக எடுத்துரைப்பதென்றால், இந்த நோயாளி நாம் தேவையான ஏற்பாடுகளை எடுப்பதற்கு முன்பே நம் கையிலிருந்து நழுவிச் சென்று விடுவாராயின் அது ஒரு பெரும் துரதிருஷ்டமே யாகும்.'

பின்னரும் அவர் பல வேளைகளில் சுல்தானின் மிக மோசமான நிலையைச் சுட்டிக் காட்டிக் கொண்டேயிருந்தார். அவருடைய பேச்சுகள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் அதை விட அதிகமாக இங்கிலாந்தின் பொதுமக்களுக்கும் அருவருப்பைத் தந்தன. கிழக்குப் பிரச்சினையை முன்னுக்குக் கொண்டு வருவதற்காக ரஷியா பெரும்பாடுபடுகிறது என்றும் கருதப்பட்டது. துருக்கிப் பேரரசைத் துண்டித்து அதிகமான பங்கினை ரஷியா கவர முயல்கின்றது என்றும் கருதப்பட்டது. ஆனாலும், இக் கருத்துக்கள் அவ்வளவு பொருத்தமானதல்ல என்பதைப் பின்னாளில் நிகழ்ந்த கிளர்ச்சிகள் திட்டவட்டமாக எடுத்துக் காட்டுகின்றன. பேரரசர் நிக்கலஸின் கொள்கையைப்பற்றிச் சற்று நியாயமான கருத்தையே நாம் கொள்ளலாம். துருக்கிப் பேரரசு பெரும் நோய்வாய்ப்பட்டுள்ளது என்று அவர் வருணித்தது நியாயமானதே என்பதைப் பின்னாளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் நிரூபித்து விட்டன. ஏனெனில், அக் காலத்தில் அது ஐரோப்பாவில் தனது ஆதிக்கத்தை இழக்கத் தொடங்கிற்று. தவிரவும், உத்மானியப் பேரரசு துண்டிக்கப்பட்டதற்குப் பிறகு தன்னுடைய பங்காக ரஷியா ஒரு சிறு பகுதியையே பெற்றது.

[1] துருக்கியை Sick-man of Europe என்று அழைத்தனர்.

உத்மானியப் பேரரசைத் துண்டு போடுவதற்கான திட்டத்தில் தான் சேர விரும்பவில்லை என்று 1852-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்தபோதிலும், பிரிவினை ஏற்பட்டதற்குப் பிறகு அவ்வரசாங்கம் எகிப்து, சூடான், மற்றும் சைப்பிரஸ் தீவுகள் ஆகியவை எல்லாம் அடங்கிய அதிகமான பகுதியைப் பெற்றுக் கொண்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

1853ஆம் ஆண்டின் துவக்கத்தில் ரஷியப் பேரரசர், வீண் பெருமைப் படுபவரும் முரடருமான இளவரசர் மென்ஷிகாஃப் (Prince Menschikof) என்ற படை வீரனை சுல்தானிடம் தூதனுக அனுப்பினர். புனிதக் கல்லறையைப் பாதுகாக்கும் பொறுப்பு ரஷியர்களுடையதே யன்றி, பிரெஞ்சுக்காரர்களுடையதன்று என அந்தத் தூதன் சுல்தானிடம் வற்புறுத்த வேண்டும் என்று கட்டளையிடப் பட்டான். உத்மானியப் பேரரசு முழுதிலும் ரஷியா கிறித்தவக் குடிமக்களின் சமயத்தைப் பாதுகாக்க உரிமை பெற்றுள்ளது என்று வற்புறுத்துமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இவ்விதமாக ரஷியாவின் கோரிக்கைகள் படிப்படியாக அதிகமாகிக் கொண்டிருந்த நெருக்கமான சமயத்தில்தான் மீண்டும் கான்னிங் சுல்தானிடம் தூதராக அனுப்பப்பட்டார். இப் பொழுது அவர் ஸ்டிராட்ஃபோர்ட் பிரபு என்று பெயர் பெற்று விளங்கினர். புனிதக் கல்லறையைப் பொறுத்தவரையிலும் ரஷியாவும் பிரான்ஸும் வற்புறுத்தும் கோரிக்கைகளையும் அவை மேற்கொண்டுள்ள வல்லாட்சிக்கான போக்கையும் ஈடுசெய்யும் வகையில் பிரிட்டனின் ஆண்மிகச் செல்வாக்கைப் பயன்படுத்துமாறு அவர் உத்தரவிடப்பட்டார். ஒரு சில வல்லரசுகள் மேற்கொண்டிருக்கும் அச்சுறுத்துவதற்கான தொனிக்குக் காரணம் சுல்தானின் முறைகேடான நிர்வாகமும் அன்னிய நாடுகளின் குறைபாடுகளுமாகும் என்பதை எடுத்துக் கூறுமாறு அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது; கிறித்தவக் குடிமக்கள் கிளர்ந்தெழக்கூடும் என்று தோன்றியிருக்கும் நெருக்கடியை மிகவும் சாமர்த்தியமாகச் சமாளிக்க வேண்டியதாக இருக்கும் என்றும், தன்னம்பிக்கையுடனும் நேர்மையுடனும் மனச்சாட்சியுடனும் சமாளித்தால்தான் பின்னளில் அமைதியும் சுதந்தர நிலையும் ஏற்படும் என்றும் சுல்தானிடம் எடுத்துரைக்குமாறும் அவருக்கு உத்தரவிடப்பட்டது. துருக்கியில் முக்கிய சீர்திருத்தங்களைப் புகுத்தினால்தான் பிரிட்டிஷ் மக்கள் முன்வந்து ஆதரவு கொடுப்பர் என்று எடுத்துரைக்கவும் அவர் பாடுபட வேண்டியிருந்தது. துருக்கி அரசாங்கத்திற்கு உடனடியாக நெருக்கடி ஏதாவது ஏற்படுமாயின், மால்டாவில் உள்ள பிரிட்டிஷ் கப்பற்படையின் தளபதியை எந்நேரமும் போருக்கு ஆயத்தமாக இருக்கும்படி

வேண்டிக் கொள்ளவும் அத் தூதருக்கு அதிகாரம் அளிக்கப் பட்டிருந்தது.

இஸ்தம்பூலுக்கு வந்து சேர்ந்தவுடன், ஸ்டிராட்ஃபோர்ட் பிரபு தமக்கு நெருங்கியவரான அப்துர் ரஷீத் பதவியிலிருந்து விலக்கப்பட்டு மற்றொருவர் அவ்விடத்தை அலங்கரிப்பதைக் கண்டார். இது ரஷியாவின் தூதரான மென்ஷிகாஃபின் செயலாகும். அவர் சுல்தானை அச்சுறுத்தி, தம் செல்வாக்கை அவர்மீது நிலைநாட்டி யிருந்தார். சுல்தானிடம் தாம் கோரிய கோரிக்கைகளைப் பிரிட்டிஷ் தூதருக்குத் தெரியப்படுத்தக் கூடாது என்றும் அவ்விதம் தெரிவித்தால் தாம் இஸ்தம்பூலை விட்டு வெளியேற நேரிடுமென்பதாகவும் அத்தூதர் அச்சுறுத்தி யிருந்தார். ஆனால், ரஷிய கோரிக்கைகள் யாவை என்பதைப் பற்றி பிரிட்டிஷ் தூதர் முழு விவரங்களையும் எளிதாகவே பெற்று விட்டார். புனித இடங்களுக்கான பிரச்சினையைக் கிரேக்கத் திருச் சபையின் பாதுகாப்புக்கான பிரச்சினையிலிருந்து வேறு படுத்துவதில் அவர் ஒரு பெரும் தூதரகத் திறமையைக் காட்டி னார். புனிதக் கல்லறையைப்பற்றிய பிரச்சினையை அவர் வெகு சாதுர்யமாக பிரான்ஸ், ரஷியா மற்றும் சுல்தான் ஆகியவர்களுக் கிடையே தீர்த்துவிட்டார். கிரேக்கத் திருச்சபைக்குப் பாது காப்பு அளிப்பதற்கான பிரச்சினை மட்டுமே தீர்க்கப்பட வேண்டி யிருந்தது. உண்மைப் பிரச்சினை என்னவென்றால், துருக்கியில் ஆதிக்க நிலை பெற்றிருக்க வேண்டியது ரஷியாவின் செல்வாக்கா அல்லது பிரிட்டனின் செல்வாக்கா? கிறித்தவக் குடிமக்களின் முன்னேற்றத்திற்காகவும் பாதுகாப்புக்காகவும் தேவைப்படும் சீர்திருத்தங்கள் ரஷியாவின் பாதுகாப்பின் கீழ் நிறைவேற்றப் படவேண்டுமா அல்லது பிரிட்டனின் பாதுகாப்பின் கீழ் நிறை வேற்றப்பட வேண்டுமா? என்பதும் ஒரு முக்கியப் பிரச்சினை யாகும். இத் தருணத்தில் இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை பிரிட்டிஷ் மந்திரி சபையின் கரத்திடை யில்லாமல் ஸ்டிராட்ஃபோர்ட் பிரபுவின் கையில்தான் இருந்தது என்று கூறு வது மிகையாகாது. சுல்தானிடத்தில் நடைபெற்றுக் கொண் டிருந்த சச்சரவில், தூதரக அரசியல் தந்திரத்தில் பெரும் வல்லமை பெற்றிருந்த ஸ்டிராட்ஃபோர்டினிடம் ரஷிய தூதர் முற்றிலும் தோல்வி யடைந்தார். ஸ்டிராட்ஃபோர்ட் வந்து சேர்ந்ததற்குப் பிறகு அவருடைய முயற்சியின் விளைவாகத் துருக்கி அமைச்சர்க் குழு மாற்றி யமைக்கப்பட்டது. ரஷியாவின் ஆதரவைப் பெற்றிருந்தவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

ரிஃபாத் பாஷா (Refat Pasha) என்பவர் பிரதம அமைச்சராஞர். ஸ்டிராட்ஃபோர்டின் தலையார்ந்த நண்பரான ரஷீத் வெளி நாட்டு அமைச்சராகப் பதவி ஏற்ருர்.

ஸ்டிராட்ஃபோர்டின் ஆலோசனையின் மீது சுல்தான் ரஷியாவின் கோரிக்கைகளை எதிர்க்க உறுதி கொண்டுவிட்டார். கிரேக்கத் திருச்சபையைப் பாதுகாப்பதற்கான பொறுப்புத் தனக்கே உரியதாகும் என்று ரஷியா வற்புறுத்தியதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சுல்தான் அறிவித்தார். இதனல் ரஷியாவுக்கும் சுல்தானுக்குமிடையே இருந்த தூதரகத் தொடர்பு அறுபட்டது (மே, 21). இதைத் தொடர்ந்து மே 31ஆம் நாள் அன்று மென்ஷிகாஃபின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளுமாறு சுல்தானை வற்புறுத்தும் அறிக்கை ஒன்று ரஷிய அரசாங்கத்திலிருந்து வெளியாயிற்று. ஸ்டிராட்ஃபோர்டின் தூண்டுதலின் காரணமாக சுல்தான் அதையும் ஏற்க மறுத்து விட்டார். அதை யொட்டி, ஜூலை 3ஆம் நாள் அன்று ரஷியப் படை ஒன்று புரூத் நதியைக் கடந்து மால்தேவியா, வலாச்சியா ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டது. ஒரு சில நாட் களுக்குப் பிறகு வெளியான அறிக்கை ஒன்றில், ஆட்சிப் பகுதி களைக் கைப்பற்றுவதற்கான எண்ணம் தமக்குக் கிடையாது என்றும், துருக்கியின் கிறித்தவக் குடிமக்களின் சார்பாகத் தமது கோரிக்கைகளை வற்புறுத்துவதற்காகவேதான் தாம் அம் மாநிலங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் ரஷியப் பேரரசர் அறிவித்தார்.

துருக்கி அரசாங்கம் தன் வசமுள்ள கிறித்தவ குடிமக்களைச் சிறப்பாக நடத்துவதில்லை என்பதும், அதற்கான முறையீட்டினை ரஷிய அரசாங்கம் சமர்ப்பித்திருந்தது என்பதும் உண்மை. ஸ்கூட்டாரி (Scutari), மொனஸ்டிர் (Manastir), பிரவீசா (Prevesa) ஆகியவற்றில் இருந்த பிரிட்டிஷ் தூதர்கள் ஒழுங் கின்மை, அநீதி, கைக்கூலி வாங்குதல் போன்ற அட்டூழியங் களைப்பற்றிய விவரங்களைத் தமக்கு அனுப்பியிருப்பதாக ஸ்டிராட்ஃபோர்ட் பிரபு 1853, ஜூலை 22ஆம் நாள் அன்று ஓர் அறிக்கையை சுல்தானுக்கு அனுப்பினர். அவையொத்த குறை களைத் தவிர்க்கப் போவதாக முன்னர் பிரதம அமைச்சர் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் எடுத்துரைத்தார்; அந்தக் குறைபாடுகள் இன்னும் தொடர்ந்து இருந்து வருகின்றன என்பதையும் மிக்க மன வருத்தத்துடன் அவர் முறையிட்டார். இதைப்பற்றி பிரிட்டிஷ் தூதருக்கு பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சரான கிளாரெண்டன் பிரபு

துருக்கிப் பேரரசில் ஒழுங்கில்லாமை நிலவுவதைத் தாம் முற்றிலும் அறிந்திருப்பதாகத் தெரிவித்தார். கிறித்தவ குடி மக்களைச் சிறப்பாக நடத்துவதாக முன்னுளில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டுக் கொண்டே இருந்தன என்றாலும், ஸ்டிராட்ஃபோர்ட் பிரபுவும் கிளாரெண்டன் பிரபுவும் வருங்காலத்தில் சுல்தான் திருந்திவிடுவார் என்று ஆழ்ந்த நம்பிக்கையைக் கொண்டிருந்தனர்.

டான்யூப் வட்டார மாநிலங்களை ரஷியா கைப்பற்றிக் கொண்டதனால் மட்டும் போர் மூண்டது என்று கூறுவதற்கில்லை. இந்த மாநிலங்கள் சுல்தானின் மேலதிகாரத்துக்கு உட்பட்டிருந்தன என்றாலும், செயல் முறையில் அவை ரஷியாவின் பாதுகாப்பின்கீழ்ச் சுதந்தர முற்றனவாகவே இருந்தன. ஒரு சில நிபந்தனைகளின்படி, தனது படைகளை ரஷியா அங்கு அனுப்புவதற்கான உரிமையையும் பெற்றிருந்தது. இருப்பினும், ரஷியா அம் மாநிலங்களைத் தனது ஆட்சியின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் தொடர்ந்து அடக்கி வைத்துக் கொண்டிருந்த பிடிவாதத் தன்மை, சுல்தானின் பகைமையை வலிய வரவழைத்துக் கொள்வதற்கு ஒப்பான செயலாகும்; இறுதியில் இச் செயல் போர் முனைக்கே இழுத்துச் சென்றும்விடும்.

அதிகார பூர்வமாக ஸ்டிராட்ஃபோர்ட் பிரபு, கிளாரெண்டன் சுமத்திய பொறுப்பினை நிறைவேற்றி வந்தார். இருப்பினும், வியன்னு கோரிக்கையை சுல்தான் நிராகரித்ததற்கு முக்கிய காரணம், பிரிட்டிஷ் தூதராவார். வியன்னு மாநாட்டின் விளைவாக உருவான ஏற்பாடு தோல்வியடைந்ததற்குப் பிறகு 1853 அக்டோபர் 1ஆம் நாள் அன்று ஸ்டிராட்ஃபோர்டின் ஆலோசனையின்மீது ரஷியா டான்யூப் வட்டார மாநிலங்களை விட்டு வெளியேற வேண்டும் என்று சுல்தான் வற்புறுத்தி இருந்தும்கூட அப்படி அது செயல்படவில்லை யாதலால், இரு வாரங்களுக்குப் பிறகு போர் தொடுத்தார். இவ்வகையில் துருக்கியர்கள் உண்மையில் மிகத் துணிகரமாகவே நடந்து கொண்டனர். உமர் பாஷாவின் தலைமையிலிருந்த துருக்கிப்படை டான்யூபைக் கடந்து சென்று ஒல்டேனிட்ஸா (Oltenitza) மற்றும் சிட்டாலே (Citale) ஆகிய இடங்களில் ரஷியர்களை முறியடித்தது.

அதற்கிடையே அக்டோபர் 22ஆம் நாள் அன்று துருக்கியும் ரஷியாவும் போரில் மூழ்கியிருந்த வேளையில் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியவற்றின் கப்பற்படைகள் டார்டனெல்ஸுக்குள் நுழைந்துவிட்டன. இது 1841-ம் ஆண்டு உடன்படிக்கையை

மீறிய செயலாகக் கருதப்படவில்லையாயினும், பகைமைக்கான செயலாகவே கருதப்பட்டது. இருப்பினும், பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே வந்தன. அமைதி ஏற்படலாம் என்ற நம்பிக்கை, நவம்பர் 30ஆம் நாள் அன்று ஸெபாஸ்டப்பூலிலிருந்து (Sebastapol) புறப்பட்ட ரஷியக் கப்பற் படை ஒன்று சைனேப் (Sinope) துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த துருக்கியரின் கப்பற்படையைக் கடுமையாகத் தாக்கி அழித்துவிட்டதனால், சிதைந்தது. இந்தப் போரில் நாலாயிரம் துருக்கிப் படைவீரர்கள் மரணமடைந்தனர். இது உண்மையில் போருக்கான செயலாகும். இதனால் இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் பெரும் சலசலப்பு ஏற்பட்டது. இது துரோகச் செயல் என்றும் படுகொலை என்றும் கண்டிக்கப்பட்டது. பாஸ்பரஸில் இருந்த இரு நாடுகளின் கப்பற்படைகளும் கருங் கடலுக்குள் நுழைந்து, அங்கே அவை சந்திக்கக் கூடிய ரஷியப் போர்க் கப்பல்களைத் துறைமுகங்களுக்குச் சென்று விடுமாறு வற்புறுத்த வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டன. இனியும் தொடர்ந்து துருக்கியின்மீது நடைபெறும் தாக்குதல்களையும் அவை தடுக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. இதனால் போர் தவிர்க்க முடியாததாகி விட்டது. இருப்பினும், சிறிது காலத்திற்குப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன. 1854, மார்ச் 28ஆம் நாள் அன்றுதான் இங்கிலாந்தும் பிரான்ஸும் ரஷியாவின்மீது அதிகார பூர்வமாகப் போர் தொடுத்தன. அவ்விரு வல்லரசுகளும் தங்கள் படைகளை முதலில் இஸ்தம்பூலுக்கும், அடுத்து வார்னவுக்கும் அனுப்பின. ரஷியாவின் தாக்குதலிலிருந்து துருக்கியைப் பாதுகாப்பதற்கும் இரண்டு டான்யூப் வட்ட மாநிலங்களிலிருந்து ரஷியர்களை வெளியேறுமாறு வற்புறுத்துவதற்கும் அப் படைகள் கருங் கடலுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

1854ஆம் ஆண்டின் துவக்கத்திலேயே ரஷியப் படை ஒன்று டான்யூப் நதியைக் கடந்து பால்கன் வட்டாரத்துக்கும் இஸ்தம்பூலுக்கும் செல்லும் வழியில் முட்டுக் கட்டையாக நின்று வந்த அரணான எலிஸ்ட்ரியாவை முற்றுகையிட்டது. அக் கோட்டை மூஸா பாஷா (Moussa Pasha) என்பவரின் தலைமையிலிருந்த துருக்கிப்படை ஒன்றினால் விடாப் பிடியுடனும் ஆற்றலுடனும் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஜூன் 25ஆம் நாள் அன்று அக் கோட்டையைக் கைப்பற்ற முடியாது என்பதை ரஷியர்கள் உணர்ந்தனர். ஆகவே, அவர்கள் அம் முற்றுகையைக் கலைத்து விட்டு டான்யூபை மீண்டும் கடந்து திரும்பி வந்தனர். வரும்

வழியில் அவர்களுக்குப் பெரும் ஆட்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன.

டான்யூபையும், பால்கன் தீவுகளையும் ரஷியர்கள் கடந்து வந்து தொல்லை கொடுப்பர் என்ற நிலை முடிவடைந்தது. எவருடைய உதவியுமின்றியே துருக்கியர்கள் அத் திட்டத்தைச் செயலற்றதாக்கி விட்டனர். அதற்கும் மேலாக ரஷியப்படை டான்யூப் வட்டார மாநிலங்களிலிருந்து வெளியேறி விட்டது. அவ் விடங்களில் ஆஸ்ட்ரியப்படை ஒன்று ரஷியர்களின் ஒப்புதலுடனும் இரு மேலைய நாடுகளின் ஒப்புதலுடனும் குடியேறிற்று. எனவே, இங்கிலாந்தையும் பிரான்ஸையும் பொறுத்த வரையில் போர் தொடர்ந்து நடப்பதற்கான காரணம் எதுவும் இருக்க வில்லை. துருக்கியின் எல்லைகளை அவை தொடர்ந்து காப்பதற் கான அவசியமும் மறைந்துவிட்டது. ஆனால், அவ்விரு நாடு களிலும் மக்கள் உணர்ச்சி வசப்பட்டிருந்த போருக்கான மன நிலையிலேயே இருந்து வந்தனர். போர் மூண்டு இரத்தம் சிந் தப்பட்டாலன்றி, அவ் வுணர்ச்சி மறைவதற்கான அறிகுறி தென்படவில்லை. கிரீமியாவின்மீது படையெடுப்பதற்காக வார்ணா வில் திரட்டி வைத்திருந்த படைகளைப் பயன்படுத்த அவ்விரு வல்லரசுகளும் தீர்மானித்தன. துருக்கியர்களுக்குத் தொடர்ந்து அச்சமூட்டி வந்த ஸெபாஸ்டப்பூல் என்ற படைக்கலச்சாலை யைத் (Arsenal) தகர்த்தெறிவது அவர்களுடைய மிக முக்கிய நோக்கமாயிற்று.

அக் காலந் தொட்டுப் போரில் துருக்கியர்களின் பங்கு இரண்டாம் தரமானதாகவும் முக்கியமற்றதாகவும் இருந்தது. போர் பெரும்பாலும் இரு நட்பு நாடுகளுக்கும் ரஷியாவுக்கும் இடையே நிகழ்ந்து கொண்டிருந்தது. கிரீமியாவிலுள்ள யூப டோரியாவில் (Eupatoria) இரு படைகளும் வெற்றிகரமாக வந்து இறங்குதல், ஆல்மா (Alma) என்ற இடத்தில் அவை ரஷியப் படைகளின்மீது வெற்றி பெறுதல், அவற்றின் பகுதி ஒன்று ஸெபாஸ்டப்பூலின் தெற்குப் பகுதிக்குச் செல்லுதல், நீண்ட காலம் வரை நீடித்து வந்த அக் கோட்டைக்கான முற்றுகை, பாலக்லாவா (Balaklava) மற்றும் இங்கர்மான் (Inkerman) ஆகிய புகழ்பெற்ற போர்கள் நிகழ்தல், 1854-55 பனிக் காலத்தில் பிரிட்டிஷ் படைவீரர் சொல்லொணா இன்னல்களுக்கு ஆளாதல், டோட்லிபென் (Todleben) என்ற படைத் தலைவரின் தலைமையில் அக் கோட்டை பாதுகாக்கப்படுதல், மலாக் காஃப்பை 1855, செப்டம்பர் 8ஆம் நாள் அன்று பிரெஞ்சு படைகள் கைப்பற்றுதல், அதன் விளைவாக ஸெபாஸ்டப்பூல்

நகரமும் அரணும் காலியாதல் ஆகிய நிகழ்ச்சிகளெல்லாம் வர லாற்றுச் சுவைமிக்கவையாக இருப்பினும், நமது ஆராய்ச்சிக்கு அவை அவ்வளவு முக்கியமானவையல்ல; நேசப் படைகள் துருக்கிப் படைகளை அவ்வளவாகப் பயன்படுத்திக் கொள்ளவு மில்லை. 1854ஆம் ஆண்டில் இலையுதிர் காலத்தில் ஏழாயிரம் பேர்களைக்கொண்ட படை ஒன்று கிரீமியாவுக்கு அனுப்பப்பட்டு, பாலக்லாவாவின் பாதுகாப்பிற்குப் பயன் படுத்தப்பட்டது. ஒரு சிறிதும் தகுதியற்ற அதிகாரிகள் அதற்குத் தலைமை வகித்தனர். பாலக்லாவாப் போர் நிகழ்ந்த நாள் அன்று காலையில் ரஷியர் களால் தாக்குண்டபோது அவ் வீரர்கள் போர்க்களத்தை விட்டு ஓடியே விட்டனர். இதனால் அண்டையிலிருந்த படையினர்க் குப் பெரும் ஆபத்து ஏற்பட்டது. சற்றுப் பிறகு உமர் பாஷாவின் தலைமையில் மற்றொரு துருக்கிப் படை யூபடோரியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1855ஆம் ஆண்டின் துவக்கத்தில் அது பெரும் வலிமை பெற்ற ரஷியப் படையினால் தாக்கப்பெற்ற தெனினும், சுவர்களுக்குப் பின் நின்றுகொண்டு எதிர்த் தாக்கு தல் நடத்தி ரஷியர்களை விரட்டியடித்தது. வெறுக்கப்பட்ட துருக் கியர்களால் தமது படை தோற்கடிக்கப்பட்டதனால் ஏற்பட்ட இழிவுணர்ச்சியே பேரரசர் நிக்கலஸ் மனமுடைந்து உடனடி யாக இறந்துவிட்டதற்குக் காரணமாகும் எனக் கருதப்பட்டது.

சின்ன ஆசியாவில் மற்றொரு ரஷியப்படை துருக்கிய ஆட் சிப்பகுதியின் மீது படையெடுத்துக் கார்ஸ் (Kars) என்ற அரணை முற்றுகையிட்டது. இதனை வில்லியம்ஸ் (General Williams) மற்றும் டீஸ்டேல் (Teesdale) என்ற படைத் தலைவர்களின் கீழ்த் துருக்கியர்கள், நினைவில் கொண்டிருக்கும் வகையில், மிகக் கடுமையாக எதிர்த்தனர். நான்கு மாதக் கடும் முற்றுகைக்குப் பிறகு போதிய உணவும் ஆயுதங்களும் இல்லாமையினால் ரஷியா சரணடைந்தது. துருக்கி அரசாங்கத்தின் மன்னிக்க முடியாத பொருட்படுத்தாமையே அவ்விதத் தோல்விக்குக் காரணமாகும். வில்லிஸ்டிரியா முற்றுகையிடப்பட்ட போதாகட்டும், யூபடோரியா வின் பாதுகாப்பின் போதாகட்டும், கார்ஸ் முற்றுகையிடப்பட்ட போதாகட்டும் சிறந்த தலைவர்களின் கீழ்த் துருக்கிப் படை வீரர்கள் அரண்களின் பின்னால் நின்றுகொண்டு மிகவும் சிறப் பாகப் போரிடுவர் என்பதை நிரூபிக்கும் சான்று வழங்கினர். ஆனாலும், நேச நாடுகள் துருக்கிப் படை வீரர்களின் இராணுவ முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கவில்லை போலும்! அவர்களை அந்நாட்டுப் படைத்தலைவர்கள் சரிவரப் பயன்படுத்திக்கொள் ளவே இல்லை. போரின் கடைசியில்தான் அந் நாட்டினர் துருக் கியர்களின் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கினர்.

1855-ல் மலகாஃப் (Malakoff) என்ற அரண் பிரெஞ்சுப்படையினரால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. அதுவே, அவ் வாண்டில் நடைபெற்ற படையெடுப்பின் இறுதி முக்கிய நிகழ்ச்சியாகும். பிரெஞ்சுப் படையினரிடையே போரினால் கசப்பு ஏற்பட்டுள்ளது என்பது புலனுயிற்று. பிரெஞ்சுப் பொதுமக்கட் கருத்தும் அது தொடர்ந்து நடைபெற்று வருவதை எதிர்த்தது. அப் போர் தொடர்ந்து நடைபெறுவதனுல் பிரான்ஸுக்கு எவ்வித லாபமும் கிடையாது. ஸெபாஸ்டப்பூல் கைப்பற்றப்பட்டதனுலும் ரஷியக் கப்பற்படை அழிக்கப்பட்டதனுலும் பிரெஞ்சு ராணுவ உணர்ச்சி சற்றுக் குளிர்ந்தது. கிரீமியாவில் பிரெஞ்சுப் படையினர் பிணியால் மிகக் கடுமையாகப் பீடிக்கப்பட்டனர். பிரிட்டிஷாரைப் பொறுத்தவரையிலும் நிலைமை மாருனதாக இருந்தது. அவர்களுடைய படை மிகத் தீவிரமாகப் போரிட்டது. ரெடானில் அது இழந்துவிட்ட நிலையை மீண்டும் பெறுவதில் பெருங் கருத்தாய் இருந்தது. படைவீரரைப் போன்றே பிரிட்டிஷ் அரசாங்கமும் மற்றெரு படையெடுப்பினை நிகழ்த்தப் பெரும் ஆவலாய்த் துடித்துக்கொண்டிருந்தது. ஆனுல், பிரெஞ்சுக்காரர்களின்றி அவர்கள் எதையும் தீவிரமாகச் செய்வதற்கில்லை. பிரெஞ்சுப் பேரரசர் மூன்றும் நெப்போலியன் ரஷிய பேரரசர் அலெக்ஸாந்தருடன் அந்தரங்கமாகப் பேச்சு வார்த்தை தொடங்கிவிட்டார். ரஷியப்படை கார்ஸ்ஸைக் கைப்பற்றிக் கொண்டதனுலும் ஸெபாஸ்டப்பூலில் மிகத் தீவிரமாக எதிரியை எதிர்த்துப் போரிட்டதனுலும் அதனுடைய புகழுக்கு இழுக்கு ஏற்படாமல் அமைதிக்கான பேச்சு வார்த்தைகளைத் தொடங்க அப் படை தயங்கவில்லை. இதுபோன்ற சூழ்நிலைகளுக்கிடையே இங்கிலாந்து மட்டுமே எக் காரணத்தைக் கொண்டேனும் போரைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்திருந்தது. கிரீமியப் படையெடுப்பை முற்றுப்பெறச் செய்தல், சிர்கேசியர்களின் உதவிக்காகக் காக்கஸஸுக்கு ஒரு படையை அனுப்பிவைத்தல், ரஷியாவின் பிடியிலிருந்து பின்லாந்தை (Finland) விடுவிப்பதற்காக மற்றெரு பிரிட்டிஷ் படையை அனுப்புதல் போன்ற திட்டங்களெல்லாம் நம்பத்தகாதவை யாகும். பிரெஞ்சுக்காரர்களின் அறிவுசால் கொள்கையினுல் இங்கிலாந்து இவ்விதத் திட்டங்களினின்றும் காத்துக்கொள்ளப்பட்டது. பிரிட்டிஷ் அரசு தனது விருப்பத்திற்கு மாருகவே அமைதிக்கான பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டது. இது ஆஸ்ட்ரியாவின் மத்தியஸ்தத்தினுல் சாதிக்கப்பட்டது. தாற்காலிகமாக நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. 1856-ல் பாரிஸ் மாநகரில் வல்லரசுகளின் மாநாடு ஒன்று கூடியது. அதில் அமைதி ஒப்பந்தம் ஒன்று கையொப்பமிடப்பட்டது.

கிரீமியப் போர் ஓர் ஐரோப்பிய போராகும் என்பதை அந்த ஒப்பந்தம் மற்றும் இரு ஒப்பந்தங்களுடன் இணைந்து தெளிவுற அறிவித்துவிட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி, ஆசியாவில் ரஷியாவினால் கைப்பற்றப்பட்ட ஆட்சிப் பகுதிகளாயினும் ஐரோப்பாவில் நேசநாடுகளால் கைப்பற்றப்பட்ட ஆட்சிப்பகுதிகளாயினும் அவையெல்லாம் அவற்றின் முன்னுள் சொந்தக்காரர்களிடத்து ஒப்படைக்கப்பட்டன. புக்காரெஸ்ட் ஒப்பந்தத்தின்படி ரஷியாவிடம் ஒப்படைக்கப்பட்ட பெஸ்ஸரேபியாவின் ஒரு பகுதியானது மால்தேவியாவுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. இரண்டு டான்யூப் வட்டார மாநிலங்களை ரஷியா பாதுகாப்பதற்காகப் பெற்றிருந்த ஏகபோக உரிமை ஒழிக்கப்பட்டது. அவை வல்லரசுகளின் கூட்டுப் பாதுகாப்பில் வைக்கப்பட்டன. அவற்றின்மீது சுல்தானின் மேலதிகாரம் அங்கீகரிக்கப்பட்டது. ஆனாலும், அவற்றுக்கான சுதந்தர நிர்வாகத்தைத் தாம் பேணிக் காக்க சுல்தான் இணங்கியிருந்தார்; அம் மாநிலங்களின் மக்களுக்கு மத உரிமை, சட்டங்களை இயற்றுவதற்கான உரிமை மற்றும் வர்த்தக உரிமைகள் முதலியவற்றை சுல்தான் அளிப்பதாகத் தெரிவித்தார். தேசியப் படைகளை அமைத்துக்கொள்ளவும் அவற்றினுக்கு உரிமை வழங்கப்பட்டது. ஒரே ஓர் உரிமை நீங்கலாக, அதே போன்ற மற்ற உரிமைகள் ஸெர்பியாவுக்கும் அளிக்கப்பட்டன; அதாவது, தேசியப் படையை உருவாக்கிக் கொள்வதற்கான உரிமை மட்டும் ஸெர்பியாவுக்கு அளிக்கப்படவில்லை. ஆனால், வல்லரசுகளின் இணக்கத்துடன்தான் சுல்தான் படையைக்கொண்டு ஸெர்பிய மக்களின் விவகாரங்களில் தலையிடலாம் என்றும் விதிக்கப்பட்டுவிட்டது. கருங்கடல் நடு நிலையான பகுதியென்று அறிவிக்கப்பட்டது. எல்லா நாடுகளின் வர்த்தகக் கப்பல்களும் தடையின்றி அங்குச் செல்லலாம் என்றும், அதே சமயத்தில் ரஷியா துருக்கி ஆகியவற்றின் போர்க்கப்பல்கள் மட்டும் அங்கே நடமாடுவது கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டது. அவ்விரு வல்லரசுகளும் அதன் கடற்கரை யோரங்களில் போர்த் தளவாடங்களை நிறுவக்கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டது.

துருக்கியின் உள்நாட்டு நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும் சுல்தான் தமது கிறித்தவக் குடி மக்களின் நலனுக்காகப் பாடுபடப் போவதாக வாக்குறுதி யளித்தார். ஆனால், அதே சமயத்தில் அன்னிய நாடுகள் அவருடைய உள்நாட்டு விவகாரங்களிலோ கிறித்தவக் குடிமக்களின் விவகாரங்களிலோ எவ்வகையிலும் தலையிடுதல் கூடாது எனறும் அவர் உடன்படிக்கையின் வாயிலாக அறிவித்திருந்தார். உண்மையில் இந்த ஒப்

பந்தம் ஏற்படுவதற்கு முன்பே ஸ்டிராட்ஃபோர்ட் பிரபு, உத்மானியப் பேரரசின் கிறித்தவர்களின் நலனுக்காக மற்றொரு சாசனத்தை சுல்தானிடத்திருந்து பெற்றிருந்தார். அந்த அரச ஆணை (Royal Decree) ஹட்டி ஹுமாயூன் (Hatti-Humayun) என்ற பெயரைக்கொண்டு விளங்கிற்று. இதைப்பற்றி அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது சுல்தானைக் கட்டுப்படுத்துவதாக இருக்கவில்லை யாயினும், கிறித்தவர்களின் முன்னேற்றத்திற்காக சுல்தான் பாடுபடுவார் என்ற அந்த நல்லெண்ணத்தை மட்டுமே வெளியிட்டது. இஸ்தம்பூல் நகரில் இருந்த ஸ்டிராட்ஃபோர்ட் பிரபு மாநாட்டின் நோக்கங்களைப்பற்றிச் செவியேற்றதும் தம் எதிர்ப்பினைத் தெரிவித்தார்: 'சற்று முன்பு சுல்தான் அறிவித்துள்ள ஹட்டி ஹுமாயூன் என்ற உரிமைகள் சாசனத்தை அமைதி ஒப்பந்தத்திலேயே சேர்த்துக் கொள்வதற்கும், அதே சமயத்தில் சுல்தானுக்கும் அவருடைய குடிமக்களுக்குமிடையே எவ் விஷயமாகவும் ஐரோப்பிய வல்லரசுகள் தலையிடப் போவதில்லை என்று அறிவித்துள்ளதற்கும் இங்கே பலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். குடிமுறை உரிமைகளைப் பொறுத்தவரையிலும் பேரரசரின் ஃபர்மான் கிறித்தவர்களையும் முஸ்லிம்களையும் சம நிலையில் வைத்துள்ளது. பேரரசரின் ஆணையில் கண்டுள்ள நிபந்தனைகளை சுல்தான் சுயமாகவே செயல்படுத்த மாட்டார் என்று பலர் ஐயுறுகின்றனர். எனவே, உருவாக இருக்கும் நிலையில் இந்த ஒப்பந்தம் கிறித்தவர்களின் உரிமையை உறுதிப்படுத்தும்; ஆனல் நம்பிக்கையைப் பாழாக்கி விடும். கிறித்தவர்களுக்கு அவநம்பிக்கைக்கான நிலையும் துருக்கியர்களுக்கு அஞ்சுவதற்கான நிலையும் ஏற்படுமாகில் அவ் விருவருக்கும் இடையே மிகக் கடுமையான பகைமை ஏற்பட்டு விடும்; வெகு விரைவில் ஒரு பயங்கரப் போரை மீண்டும் தொடங்கிவிடும்.' இவ்வித எதிர்ப்பினுல் எவ்விதப் பலனும் ஏற்படவில்லை. மாநாட்டில் பிரிட்டிஷ் தூதராக இருந்த கிளாரெண்டன் பிரபு செயலற்றிருந்தார். பிரெஞ்சுப் பிரதிநிதிகளின் ஆதரவு அவருக்குக் கிட்டிடவில்லை. மற்றும், துருக்கியில் சீர்திருத்தங்கள் புகுத்தப்படுவதைப்பற்றி அப் பிரதிநிதிகள் சிறிதளவும் கவலைப்படவில்லை. போர் எவ்விதம் தொடங்கியது என்பதைப் பற்றியும், துருக்கியில் இருக்கும் கிறித்தவகுடிமக்களின் சார்பாகத் தலையிடுவதற்கான உரிமையைத் தாம் கொண்டாடியதை ஏனை வல்லரசுகள் மறுத்துவிட்டதைப்பற்றியும் மனத்தில் கொண்டு, ரஷியா இப்படிப்பட்ட உரிமையைப் பிற வல்லரசுகள் வழங்கப் பெறுவதை ஏற்க மறுத்துவிட்டது. ரத்து செய்வதான அந்த நிபந்தனை ஒப்பந்தத்திலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டது. அது பேரரசரின் ஆணையின் விளைவுகளை ரத்து செய்து

விட்டது. ஹட்டி ஹுமாயூன் என்ற அந்த அரச ஆணை சுய மாகவே செயலற்றதாகிவிட்டது. ஸ்டிராட்ஃபோர்ட் பிரபு பெரும் ஏமாற்றமுற்றார். பிரான்ஸுக்கு இணங்கி நடக்க வேண்டியிருந்ததனால் தம் அரசே தம்மைப் பலிகொடுத்து விட்டதை நினைத்து அவர் மனம் நொந்தார். எப்படிப்பட்ட நிலையில் ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்டது என்று அவருக்குத் தெரிந்ததும், 'அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதைவிட எனது வலது கரத்தையே நான் துண்டித்துக் கொண்டிருப்பேன்!' என்று கூறினாராம். பாரிஸ் உடன்படிக்கை துருக்கியில் சீர்திருத்த இயக்கத்திற்கே சாவு மணி அடித்துவிட்டது என்று அவர் வருந்தினர். முறை கெட்ட அரசாங்கத்தினிடமிருந்து கிறித்தவ மக்கள் காப்பாற்றப்படவில்லை என்றால் பேரரசே அழிந்துவிடும் என்று அவர் எடுத்துரைத்தார். துருக்கியர்கள் அவர்கள் வழியே விடப்பட்டால் எவ்விதமான சீர்திருத்தத்தையும் புகுத்த மாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும்; தாம் இவ்வளவு கஷ்டப்பட்டு முயற்சி எடுத்தும், கிரீமியப் போர் முடிவடைவதற்கு முன்பே ஹட்டி ஹுமாயூன் என்ற அரச ஆணையின் வாயிலாகச் சீர்திருத்தத்திற்கான வாக்குறுதியைப் பெற்ற சாதனையெல்லாம் வீணாகிவிடும் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். பாரிஸ் மாநாட்டில் இங்கிலாந்திற்குத் துரோகம் இழைக்கப்பட்டுள்ளது என்பதையும், ஹட்டி ஹுமாயூனை ஒப்பந்தத்துடன் இணைத்து விட்டிருக்கும் நிபந்தனையானது அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்ற காரணத்தை முன்னிட்டுத் தனியாகவோ அல்லது கூட்டாகவோ துருக்கியின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கான உரிமையைப் பெரும் வல்லரசுகளுக்கு அளிக்கவில்லை என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். இது புதிய சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதற்குப் பெரும் தடையாக இருக்கும் என்று அவர் கருதினர். அச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதற்காகத் துருக்கியர்களை அச்சுறுத்தினாலன்றி வேறு வழி இல்லை என்று அவர் வற்புறுத்தினர். அதுபோன்ற அச்சுறுத்தல் பல வெளி நாடுகளிலிருந்தும் வரவேண்டும் என்றும் அவர் கருதினர். இதனை இங்கிலாந்து தனியாகவோ பிரான்ஸ் போன்ற இதர வல்லரசுகளுடன் இணைந்தோ செய்யக்கூடும். இங்கிலாந்து தனித்து நின்றே அதைச் செய்வதை அவர் அதிகமாக விரும்பினர்; ஏனை வல்லரசுகள் கூடிச் செய்யக்கூடும் என்பதில் அதிக நம்பிக்கை இருக்கவில்லை. ஆனால் செய்யப்பட்ட ஒப்பந்தமோ எல்லா வகையான நம்பிக்கைகளையும் பாழடித்துவிட்டது. நம்பிக்கை இழந்த அவர் அவ் வாண்டிலேயே எல்லாப் பதவிகளிலிருந்தும் விலகிக் கொண்டார்.

அவருடைய பதவிக்குப் பின்னுளில் டால்லிங் பிரபு (Lord Dalling) என விளங்கிய சர் ஹென்றி புல்வெர் (Sir Henry Bulwer) என்பவர் வந்தார். இவர் திறமை படைத்த தூதராக இருந்தார் எனினும், துருக்கியில் சீர்திருத்தங்கள் ஏற்படுவதைப் பற்றி அவர் சிறிதளவும் கவலைப்படவில்லை. தனிப்பட்ட வகையில் அவர் சுல்தானிடமிருந்து பல சலுகைகளைப் பெற்றிருந்தனால் தம் செல்வாக்கை இழந்து விட்டிருந்தார். ஹட்டி ஹுமாயூனைச் செயல்படுத்துவதற்காக அவர் எல்லா வகையிலும் சுல்தானை வற்புறுத்தவுமில்லை; தூண்டவுமில்லை. சீர்திருத்தத்திற்காகத் துருக்கியர்கள் தாம் அளித்த வாக்குறுதிகளையெல்லாம் முற்றிலும் மறந்து விட்டனர். பாரிஸ் ஒப்பந்தத்தில் துர்வசமாக இணைக்கப் பெற்றிருந்த அந்த நிபந்தனையின் விளைவாகத் தம் நம்பிக்கைகளெல்லாம் சிதறுண்டு போவதையும், எதிர்பார்த்தனவெல்லாம் உண்மையில் நடப்பதையும் கொடுங்கோலாட்சியின் விளைவாக 1874-ல் பாஸ்னியா, ஹெர்ஸிகோவினு, பல்கேரியாவிலிருந்த கிறித்தவ குடிமக்கள் கிளர்ந்தெழுந்ததையும், ரஷியப் படைகளின் உதவியினால் அவர்கள் இறுதியாக விடுதலை பெறுவதையும், ஸ்டிராட்ஃபோர்ட் தமது வயது முதிர்ந்த நாட்களில் ஓய்வு பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் காண நேர்ந்தன.

இக்காலக் கண்ணோட்டத்தில் கிரீமியப் போரை ஆராயுங்கால், அதன் ஒரு முக்கிய விளைவாகத் தென்படுவதென்ன வென்றால், துருக்கிப் பேரரசின் சீர்குலைவு இன்னம் சிறிது காலத்திற்குத் தள்ளிப்போய்த் தாமதப்பட்டு விட்டது என்பதுதானாகும். பால்கன் பகுதிகளிலிருந்த கிறித்தவ மக்களுடைய 'பாதுகாவலர்' என்று ரஷிய நாடு உரிமை பாராட்டிக் கொண்டதையும் அது தாற்காலிகமாக நிராகரித்தது. இங்கிலாந்தின் ஆதரவின் பேரில் துருக்கிப் பேரரசு சீர்திருத்தம் பெறக்கூடும் என்று ஸ்டிராட்ஃபோர்ட் பிரபு கொண்டிருந்த நம்பிக்கை தூள் தூளாயிற்று. பாரிஸ் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதனால், துருக்கியில் எவ்விதச் சீர்திருத்தமும் புகுத்தப்படவில்லை. சீர்திருத்த இயக்கம் முற்றிலும் நிறுத்தப்படவில்லையாயினும், அது அடிமட்டத்தை நோக்கிச் செல்வது தடைப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் 1876-ல் கிறித்தவ குடிமக்களின் குமுறிக் கொண்டிருந்த குறைபாடுகள் எல்லாம் ஒரு கிளர்ச்சியை உருவாக்கி விட்டன. இதனால் இங்கிலாந்து மற்றும் இதர வல்லரசுகள் முதலியவற்றின் ஆதரவுடன் ரஷியா அவ்விவகாரங்களில் தலையிடத் தொடங்கிற்று. கிரீமியப் போரின் விளைவாக மத்திய கிழக்கின் மீது பல முக்கிய விளைவுகள் ஏற்பட்டன. பல ஐரோப்

பியர்கள் அதன்மீது தங்கள் கவனத்தைச் செலுத்தினர். அப் போரில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் போர்களும் பற்றிய விவரங்கள் மிக விரிவாகப் பத்திரிகைகளில் வெளியாயின. 'மத்திய கிழக்குப் பிரதேசம்' (The Middle East) என்று ஒன்று உள்ளது; அதில் பல பிரச்சினைகள் உள்ளன என்பதைப் பல ஐரோப்பியர் கள் முதன் முதலாக உணர்ந்தனர். தவிர, பாரிஸில் நடந்த மாநாட்டின் விளைவாக ருமேனியா என்ற புதிய நாடு ஒன்றும் உருவாயிற்று. துருக்கிக்கும் ரஷியாவுக்கும் இடையே ஓர் அரண் நிர்மாணிக்கப்பட்டால் டான்யூப் நதியோர மாநிலங்களுக்கு அதிக பாதுகாப்புக் கிடைக்கக் கூடும் என்று வெற்றியாளர்கள் கருதினர். உத்மானியப் பேரரசு உடைபடுமோ என்று அஞ்சிய பிரிட்டன், 'மால்தேவியா வலாச்சியாவின் ஐக்கியம்' என்ற ஒன்றை நிலைநாட்டிற்று. இறுதியில், அவ்விரு மாநிலங்களிலும் இருந்த மக்கள் ஒன்றுபட வேண்டும் என்று வற்புறுத்திய இயல் பான விருப்பம் அங்கீகரிக்கப்பட்டது. 1866-ல் ருமேனிய மக்கள் ஹோஹன்ஸொலர்ன் வமிசத்தைச் சார்ந்த சார்லஸ் என்ற இளவரசரை 'இளவரசர் கரோல்' (Prince Carol) என்னும் மகுடமிட்டுத் தங்களுடைய அரசராக்கிக் கொண்டனர். காலப் போக்கில் ருமேனியா தனது சுதந்தரத்திற்காக மேலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டது.

1861-ல் சுல்தான் அப்துல் மஜீத் உயிர் நீத்தார். தாம் இளமையில் கண்டு வந்த கனவுகளில் ஒன்றினையேனும் அவர் நனவாக்கவில்லை. அவருடைய கருத்துகள் பலவும் சிறப்பான வையாகவே இருந்தன. அவர் மனிதாபிமானம் படைத்தவர்; தமது நாட்டில் சீர்திருத்தம் எவ்வளவு அவசியமும் முக்கியமு மானது என்பதை உணர்ந்திருந்தவர். மற்ற நாடுகளைப் போலவே தம்முடைய நாடும் முன்னேற்றமடைய வேண்டும் என்று அவர் விரும்பினர். ஆனால், அந்தச் சிறந்த கருத்து களைச் செயல்படுத்துவதற்கான திறமையையோ மன உறுதி யையோ அவர் படைத்திருக்கவில்லை. ஆகவே, ஸ்டிராட் போர்ட் பிரபுவுக்கு அவர் சீர்திருத்தம் செய்வதாக அளித்த வாக் குறுதியை அவரால் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையின் விளைவாக அவர் இளம்வயதி லேயே முதுமை எய்திக் கிழவனாகி விட்டார். மேலை ஐரோப்பிய நாடுகளின் கடன்கொடுப்போரிடம் அவர்தாம் முதன் முதலாகச் சிக்கிய சுல்தானுவார். ரஷியாவுடன் போரை நிறுத்துவதற் காக அவர் பெருந் தொகைகளைக் கடன் வாங்கினர். ஆனால், வாங்கின தொகையில் பெரும் பகுதியை அவர் வெற்று ஆடம் பரங்களில் பாழ்படுத்தி விணாக்கினர். அந்த ஆடம்பரங்களுக்

கிடையே அரச விவகாரங்களை அவர் முற்றிலுமே மறந்து விட்டார். எங்கும் லஞ்ச ஊழல் தலைவிரித்து ஆடிக் கொண்டிருந்தது.

அப்துல் மஜீதுக்குப் பிறகு அவருடைய சகோதரர் அப்துல் அஸீஸ் (Abdul Aziz) என்பவர் சுல்தானானார். இவர் கம்பீரமிக்க தோற்றம் வாய்ந்தவர்; அழகாக நடக்கக் கூடியவர். காண்பதற்கு அவர் எல்லா வகையிலும் பொருத்தமான ஒரு சுல்தானாகவே தென்பட்டார். ஆனால், அவரைப்பற்றி அதற்கு மேல் எதுவும் கூறுவதற்கில்லை. சரியான கல்வி எதுவும் அவருக்கு அளிக்கப்படவில்லை. பல ஆண்டுகள் அவர் சிறைப் பட்டே கிடந்தார். ஆனால், உள்ளிருந்து கொண்டே அவர் மத வெறிபிடித்த கட்சியினருடன் தொடர்பு கொண்டிருந்து, தாம் பதவிக்கு வந்து விட்டால் அவர்கள் விரும்பாத சீர்திருத்தங்களை யெல்லாம் கைவிட்டுவிடுவதாக வாக்களித்தார். ஆனால், சிறிது காலத்திற்கு அவ்வுறுதியை அவர் காப்பாற்றிக் கொள்ளாது ஒரு சில சீர்திருத்தங்களைப் புகுத்த முற்பட்டார். தமக்கு முற்பட்ட இருவருடைய வழியிலேயே தாமும் சென்று சீர்திருத்தங்களைப் புகுத்தப் போவதாக அவர் பதவிக்கு வந்தவுடன் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். நாட்டு மூலப்பொருள்களை மிகச் சிக்கனமாகச் செலவு செய்து, அரண்மனையின் செலவுகளைக் குறைத்துக் கொள்வதாக அவர் வாக்குறுதி அளித்தார். அந்தப் புரத்துப் பெண்களின் எண்ணிக்கையை மிகவும் குறைத்து விடுவதாகவும் அவர் கூறிக் கொண்டார். ஆனால், இவை முற்றும் நல்விருப்பங்களாகவே நின்றுவிட்டன. செயலளவில் அவற்றுக்கு மாறுன நடவடிக்கைகளையே அவர் எடுத்துக் கொண்டார். அவருடைய வீண் செலவுகள் அவருடைய சகோதரரின் வீண் செலவுகளையெல்லாம் மிஞ்சி விட்டன. அவருடைய ஆட்சிக் காலத்தில் வெளிநாடுகளைப் பொறுத்த வரை அமைதி ஏற்பட்டிருந்தது. அதனை வாய்ப்பாகக் கொண்டு, அவர் தம் சகோதரர் புகுத்தப் போவதாக வாக்குறுதி யளித்த சீர்திருத்தங்களைப் புகுத்தியிருக்கக்கூடும். ஆனால், ஒன்றுமே செய்யப்படவில்லை. அவருடைய அரச ஆணை செயற்படாமலேயே இருந்தது. அவரைப் போலவே அவருடைய அமைச்சர்களும் சீர்திருத்தத்தைப் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து வந்த பிரிட்டிஷ் தூதர்களும் சீர்திருத்தத்திற்காக எவ்வித நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ளவில்லை.

இவருடைய ஆட்சிக் காலத்திலும் பெருந் தொகைகள் கடனுகப் பெறப்பட்டன. லண்டன், பாரிஸ் போன்ற இடங்களில்

இருந்த செல்வந்தர்கள் அவருக்குப் பெருந் தொகைகளைக் கடனாகக் கொடுத்தனர். அவர் வாங்கின தொகைக்கு வட்டி செலுத்தியதாகத் தோன்றவில்லை. கடன் வாங்குவதனாலேயே பெரும் ஊழல்கள் ஏற்பட்டன. பணம் திரும்பி வந்துவிடும் என்ற நம்பிக்கையில் பலர் தொடர்ந்து கடன் கொடுத்துக்கொண்டேயிருந்தனர். 1874-ல் துருக்கியின் நிதிநிலை அளவு கடந்து கேவலமாகிவிட்டது. வாங்கின கடனில் பாதியளவு கூடத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டது. இதனால் துருக்கியின் விவகாரங்களில் மேலைய நாட்டினர் சற்றுக் கடுமையாக நடக்கத் தொடங்கினர். இறுதியில், கடன் கொடுத்தவர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அதன்படி, சர்வதேசக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது; ஒரு சில மூலங்களிலிருந்து வந்த வருமானங்கள் அதன் வசம் ஒப்படைக்கப்பட்டன. அதில் ஒரு பகுதியை வட்டியைக் கொடுப்பதற்காகச் செலவழிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இவ்விதமாகத் துருக்கியின் நிதிநிலையின்மீது அன்னியர்களின் ஆதிக்கம் ஓங்குகிற சூழ்நிலை தோன்றிற்று.

இவ் வாட்சிக்காலத்தில் ரஷிய அரசாங்கம் மிகச் சாதுர்யமான தூதரக முறைகளைக் கடைப்பிடித்தும், வன்முறையைக் கையாளப் போவதாக அச்சுறுத்தியும் சுல்தானின்மீது மீண்டும் செல்வாக்குப் பெற்றுக்கொண்டது. அதன் தூதர் இக்ணதீஃப் (Ignatief) என்பவர் துருக்கி அரசாங்கத்தின்மீது பெரும் செல்வாக்குப் பெற்றிருந்ததோடு, பிரதம அமைச்சர்களை நியமிப்பதிலும் பெரும் பங்கு பெற்றிருந்தார். பேரரசு கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்பதை மூன்று நிகழ்ச்சிகள் அறிவித்தன: டான்யூப் வட்டார மாநிலங்களான மால்தேவியாவும் வலாச்சியாவும் ருமேனியா என்னும் ஒரு தனி நாடாக ஆவதற்கு ஒன்றுக இணைந்தன. 1868-ல் இளவரசர் கரோல் அந் நாட்டின் அரசராஞர். சுல்தான் அவரை மரபுரிமை அரசராக அங்கீகரித்தார். அவ்விரண்டு மாநிலங்களும் ஒன்றுக இணைந்ததனால் சுதந்தரமும் பெற்றுவிட்டன. அதே சமயத்தில் பிரஷ்யாவைச் சார்ந்த சார்லஸ் அந் நாட்டின் அரசராக ஏற்றுக் கொள்ளப்பட்டதனால் அதன்மீது பிரஷ்யாவின் செல்வாக்கும் படரத் தொடங்கிற்று. ஸெர்பியாவும் சுதந்தர நிலை பெறுவதில் பெரும் முன்னேற்றம் அடைந்தது. பெல்கிரேடில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துருக்கிப் படையை சுல்தான் பின்வாங்கிக் கொண்டார். இவ் விரண்டு நிகழ்ச்சிகளும் வல்லரசுகளின் வற்புறுத்தலின் பேரில் நடைபெற்றவையாகும்.

கருங்கடலில் ரஷிய - துருக்கிப் போர்க் கப்பல்கள் செல்வதற்கும் அந்தக் கடலின் கரைகளில் அரண்களையும் போர்க் கருவிச் சாலைகளையும் கட்டுவதற்கும் பாரிஸ் ஒப்பந்தம் தடை விதித்திருந்ததை ரஷியா ஃபிராங்கோ-ஜெர்மன் போரின்போது, 1870, அக்டோபர் 31ஆம் நாள் அன்று, ரத்து செய்து விட்டது. இவ்விதம் ரஷியப் பேரரசர் செய்து கொள்வதற்குப் பிரஷ்யாவின் சார்பாக பிஸ்மார்க் உறுதியளித்து, 1870-ல் பிரான்ஸுக்கும் பிரஷ்யாவிற்குமிடையே நிகழ்ந்த போரில் ரஷியா நடுநிலைமை எய்தியிருக்குமாறு செய்தார். எங்கே போர் மூண்டுவிடுமோ என்று கிளாட்ஸ்டனின் தலைமையில் இருந்த பிரிட்டிஷ் அரசு அவ்வித மறுப்புக்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. ஆனால், எவருடைய நலனுக்காக அந்த நிபந்தனை விதிக்கப்பட்டிருந்ததோ, அந்த சுல்தானே ரஷியாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

1870ஆம் ஆண்டில் மற்றொரு நிகழ்ச்சியும் நிகழ்ந்தது. அதனுடைய முழு முக்கியத்துவத்தை அத் தருணத்தில் எவராலும் உணர்ந்துகொள்ள இயலவில்லை. அவ் வாண்டுக்கு முன்பு பால்கன் பகுதியில் இருந்த பல்கேரியர்கள், பாஸ்னியர்கள் போன்ற கிறித்தவ ஸ்லாவ் வம்ச மக்கள் ஆன்மிகத் துறையில் கிரேக்கத் தலைமைக் குருமாரின் அதிகார வரம்புக்கு உட்பட்டிருந்தனர். கிழக்குப் பிரச்சினையில் முனைந்திருந்த அரசியல் வாதிகள் பல்கேரியாவின் பழைய வரலாற்றையும், அது ஒரு தனி நாடு என உரிமை பாராட்டிக் கொண்டிருந்ததையும் மறந்துவிட்டனர், அல்லது புறக்கணித்து விட்டனர் போலும்! 1870, மார்ச்சு மாதம் 10ஆம் நாள் அன்று ரஷியாவின் வற்புறுத்தலின் பேரில் அப்துல் அஸீஸ் ஓர் அரசு ஆணையைப் பிறப்பித்தார். அது பல்கேரியா ஒரு தனிப்பட்ட நாடு என்பதை அங்கீகரித்தது. கிரேக்கத் திருச்சபையை அது உருவாக்கியது. இது பால்கன் தீவுகளில் ஒரு புதிய நாட்டிற்கு அடிகோலிட்டது. நெடுங் காலமாக மறந்துவிடப்பட்டிருந்த பல்கேரியா இப்பொழுது இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வரத் தொடங்கிற்று. இதனுடைய முக்கியத்துவம் பின்னே போகப் போகத் தெரியும்.

துருக்கி சுல்தான் அப்துல் அஸீஸ் செய்ய வேண்டிய வற்றைச் செய்யத் தவறிவிட்டார்; செய்ய வேண்டாதனவற்றை மூர்க்கமாக செய்து முடித்தார். வட்டிக்குக் கடன் வாங்கியும் ஒரு புண்ணியமுமில்லை. பணமுடையால் அரசாங்கமே நிதிநிலை நொடிப்பில் சிக்கிவிட்டது. பாரிஸ் ஒப்பந்தம் வழங்கிய சலுகை பறிக்கப்பட்டு, ரஷியா கருங்கடலுக்குள் தன்னிஷ்டம்போல்

போர்க் கப்பல்களை நடமாடித் திரியவிடலாம், கடற்கரையோரங்களில் போர்க் கருவிச்சாலைகள் போன்றவற்றை நிருமித்துக் கொள்ளலாம் என்னும் விபரீத நிலை உருவாக்கி விடப்பட்டது. மக்களும் அரசியல்வாதிகளும் கிளர்ந்தெழுந்தனர். எனவே, 1876-ல் இஸ்தம்பூலில் இரத்தம் சிந்தாப் புரட்சி ஒன்று ஏற்பட்டது. புதிய அமைச்சர்க் குழு ஒன்றை நியமிக்குமாறு அப்துல் அஸீஸ் வற்புறுத்தப்பட்டார். உண்மைச் சீர்திருத்த வாதியாக இருந்த மிதத் பாஷா (Midhat Pasha) என்பவரும் புரட்சியை நிகழ்த்திய குழுவினருள் ஓர் அங்கத்தினராக இருந்தார். அவர்கள் அனைவரும் சுல்தானைப் பதவியிலிருந்து விலக்கி வெளியேற்ற முடிவு செய்தனர். இவருடைய திறமையின்மைக்கும் ஆடம்பரத்திற்கும் இவரைப் பதவியிலிருந்து நீக்கலாம் என்று முஃப்தி ஒரு ஃபத்வாவும் வெளியிட்டார். சுல்தானை ஆதரிக்க எவரும் முன்வரவில்லை. அவர் எதிர்ப்புத் தெரிவித்தார் என்றாலும், வேறு வழியின்றிக் கீழ்ப்படிய வேண்டியதாயிற்று. பதவியிலிருந்து விலக்கப்பட்டு நான்கு நாட்களுக்குப் பிறகு அவர் இறந்துவிட்டார். அது ஒரு தற்கொலை என்று மருத்துவர்கள் கூறினர்.

20. இரண்டாம் அப்துல் ஹமீது (1876 - 1909)

(Abdul Hamid II)

சுல்தான் அப்துல் அஸீஸ் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்குப் பிறகு அவருடைய அண்ணனுகிய அப்துல் மஜீதின் மூத்த மகன் 'ஐந்தாம் முராத்' என்ற பட்டப் பெயருடன் சுல்தான் ஆனார். நெடுங் காலம்வரையிலும் சிறையில் அடைபட்டுக் கிடந்த அவர் எல்லா வகைகளிலும் செயலற்றவராகவே இருந்தார். சற்றுமே எதிர்பாராமல் அவருக்குக் கிடைத்த இப் பதவியின் விளைவாக அவருடைய நடக்கை கட்டுக் கடங்காததாகி விட்டது. ஒரு சில வாரங்களுக்குள்ளாகவே 1876, ஆகஸ்ட் 31ஆம் நாள் அன்று அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டிய அவசியம் நேரிட்டது. அவருடைய சகோதரர் அப்துல் ஹமீது என்பவர் 'இரண்டாம் அப்துல் ஹமீது' என்ற பட்டப் பெயருடன் சுல்தானுகப் பதவி ஏற்றார். இவர் 33 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தார்.

உத்மானிய அரச குடும்பத்திலேயே இந்த அப்துல் ஹமீது மிக இழிவான குணத்தைப் படைத்தவர்; சூழ்ச்சிக்காரர்; நம்பத் தகாதவர்; மிகக் கொடூரமான சதிகாரர். அவருடைய தாய் ஓர் அர்மீனியப் பெண். அவருக்கு ஆற்றல் என்பதே கிடையாது. எங்கே தமக்கெதிராகச் சதிகள் மூளுமோ, எங்கே தம்மைக் கொலை செய்து விடுவார்களோ என்று அவர் எக்காலமும் அஞ்சிக்கொண்டே இருந்தார். எவரையுமே அவர் நம்பவில்லை; அவருடைய அமைச்சர்கள்மீதும் அவருக்கு நம்பிக்கை கிடையாது. அவர்கள் தங்களுக்கிடையே கலந்தாலோசித்துக் கொள்வதை அவர் அனுமதிக்கவில்லை. இரு அமைச்சர்கள் தனியாகச் சந்தித்தனர் என்று அவர் கேள்வியுற்றாலும், உடனே அவர்கள்மீது சந்தேகங்கொண்டு, அவர்களுடைய நடக்கைக்கான விளக்கத்தைக் கோருவார். ஒற்றர்களின் ஒரு படையைக்

கூட அவர் நியமித்திருந்தார். அவருடைய அமைச்சர்கள், தூதர்கள், மற்றும் முக்கிய பதவிகள் வகித்திருந்தவர்கள் ஆகியோரின் நடவடிக்கைகளைப்பற்றி அந்த ஒற்றர்கள் அரசருக்குத் தெரிவித்து வந்தனர். பற்பல வேளைகளில் அவர்கள் தவருன தகவல்களையும் அரசருக்கு அளித்து வந்தனர். அவற்றை முழுதும் நம்பிவிடும் சுல்தான் அவற்றிற்கேற்ப நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டார். சாதாரணமாக அவர் எடுக்க விரும்பாத நடவடிக்கைகளை எடுக்க வைப்பதற்காக, சதிகள் ஏற்படவிருக்கின்றன என்று அவர்கள் சுல்தானிடம் பொய் கூறுவர். தம் பகைவர்களை அந்தரங்கமாகக் கொலை செய்வதற்கான உரிமையை அவர் பாராட்டி அதனைப் பயனும் படுத்தினர். துருக்கி வாசி எவரும் பத்திரமாக இருக்க முடியவில்லை. எந்நேரமும் ஒருவன் திடீரென்று மறைந்துவிடக் கூடும். அவ்விதம் மறைந்து விட்டவர்களுள் பலர் கொல்லப்பட்டனர்; ஒரு சிலர் நாடு கடத்தப்பட்டனர். இவ்வாறெல்லாம் அவர் கொடூர குணத்தினால் செய்தார் என்று கூறுவதற்கில்லை; எவரேனும் தம்மைக் கொலை செய்து விடுவார்களோ என்று அவர் மனத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருந்த அச்சமே அவரை அவ்வாறுக நடந்துகொள்ளச் செய்தது. அயல் நாட்டுத் தூதர்கள் அவரைத் தங்கள் செல்வாக்குக்கு உட்படுத்த இயலவில்லை. போர் மூண்டு விடும் என்ற அச்சம் ஒன்றுதான் அவரை அவ்வப்பொழுது அடிபணிய வைத்தது. அவர் ஒரு தூதரை மற்றொருவருக்கெதிராகத் தூண்டிவிட்டுக் கொண்டே இருந்தார். தூதரக மூலமாக மிகக் கேவலமான சதிகளைப் புரிவதில் அவர் பெரும் வல்லமை பெற்று விளங்கினர்.

அப்துல் ஹமீதின் வாழ்க்கை கடும் முயற்சியிலேயே கழிந்தது. அவர் தம் பதவியில் மிகக் கடுமையாக உழைத்து வந்தார். அவருடைய குறைபாடுகள் எதுவாயிருப்பினும், தம் அமைச்சர்களுக்கும் அரசுக்கும் அவர் நிகரற்ற தலைவராக விளங்கினர். அவருடைய ஆட்சி சர்வாதிகாரமாக, நிகரற்ற எதேச்சாதிகாரமாக இருந்தது. அவர் எவரையுமே நம்பவில்லையாதலால் பல சிறிய விவரங்களையும்கூட அவரே கவனிக்க நேரிட்டது. ஆனலும், அவ்வளவு பெரிய அரசின் விவகாரங்களைப் போதிய தகவல்கள் இல்லாமல் அவர் கவனிக்க முடியவில்லையாதலால், அவ்விதத் தகவல்களை அவரால் கடும் முயற்சியெடுத்துப் பெற்று வந்தார்; இருப்பினும், எவரிடத்திருந்து எந்தத் தகவல்கள் அவருக்கு வந்து கொண்டிருந்தன என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. சுல்தானின் அதிகாரிகளுக்கும் அரண்மனையின்

அலுவலர்களுக்குமிடையே சச்சரவுகள் நடைபெற்றுவந்ததனல் நாட்டில் எங்கும் இடையருமல் குழப்பம் ஏற்பட்டிருந்தது.

வெளித் தோற்றத்திற்கு சுல்தான் அப்துல் ஹமீது மிகவும் பண்புடையவர் போன்று நடந்து கொண்டாராயினும், உண்மையில் அவர் மிகக் கேவலமான மனிதராவார். அவர் அளவு மீறிப் பேராசை பிடித்தவர். அவருடைய செலவுகள் அளவு மீறியனவாக இருந்தன. அதே சமயத்தில் அவர் கொடை வள்ளலாகவும் நடந்துகொண்டார். இருப்பினும், அவர் ஏராளமான செல்வத்தைத் திரட்டி வைத்திருந்தார். அதனை அவர் ஜெர்மானிய வங்கியாளரின் மூலமாக வெளிநாடுகளில் முதலீடு செய்து வைத்திருந்தார். பதவியிலிருந்து நீக்கப்பட்டதும், இந்தச் செல்வத்தை அவரிடமிருந்து பறித்து விடவேண்டும் என்பதற்காகவே அவர் உயிருடன் விட்டுவைக்கப்பட்டார். இலஞ்சம் வாங்குவதிலும் அவர் தவறவில்லை. துருக்கிய ஆட்சியில் காணப்பட்ட அதிகாரப் பதவிகளை விற்பது என்ற குறைபாட்டினைக் களைந்துவிட அவர் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு சிறந்த அரசாங்கம் நிறுவப்பட வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு இருந்தது என்றாலும், சமய வெறியிலிருந்து அவர் விடுதலை பெற்றிருந்தார் என்றாலும், அவருடைய ஆட்சியில் எல்லாம் சீர்கெட்டே கிடந்தன. பெர்லின் ஒப்பந்தம் ஏற்பட்டதற்குப் பிறகு பல ஆண்டு வரையிலும் அமைதி நிறுவப்பட்டிருந்த போதிலும், அவருடைய குடிமக்களின் நிலையில் அபிவிருத்தி ஏற்படவே இல்லை. ஆகவே, அவருடைய ஆட்சியின்போது, அவருடைய பேரரசு அதுவரையிலும் கண்டிராத வகையில் துண்டிக்கப்பட்டது. எல்லா அதிகாரத்தையும் அவர் தம்மிடத்திலே மட்டுமே குவித்து வைத்திருந்ததனல் ஏற்பட்ட தீய விளைவுகளுக்கெல்லாம் அவரேதாம் காரணமாவார்.

ஆரம்பத்தில் சுல்தான் அப்துல் ஹமீது தம் பேரரசின் உருக்குலையா நிலையைப் பாதிப்பதாக இருந்த மிகத் தீவிரமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. 1875-ல் பாஸ்னியாவிலும் ஹெர்ஸிகோவினாவிலும் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. இக் கிளர்ச்சிக்குத் துருக்கிப் பாஷாக்களின் சீர்கேடான ஆட்சி, அவர்களுடைய பேராசை, வரிகளை வசூலிக்கும் உரிமையை அதிக விலைகொடுப்பவர்களுக்கு விற்றுவிடுதல் ஆகியவை மட்டுமே காரணமாயிருக்கவில்லை; பல குறைபாடுகளைக் கொண்டிருந்த ஒரு விவசாய முறையும் அதற்குக் காரணமாகும். குடியானவர்களைப் போன்றே நிலக்கிழார்கள் பலர் முஸ்லிம்களாகி விட்டிருந்தனர். அவர்களுடைய முன்னோர்கள்,

உத்மானியர்கள் அவர்களுடைய நாட்டைக் கைப்பற்றிக் கொள்கையில், தங்கள் நிலத்தைக் காப்பதற்காக முஸ்லிம் களாகிவிட்டனர். துருக்கிய இனத்தைச் சார்ந்த நிலக்கிழார் களைப் போலவே இவர்களும் பேராசை பிடித்தவர்களாகவும் வைதிகப் பித்து நிறைந்தவர்களாகவும் இருந்தனர். அந்த மாநிலங்களின் நிர்வாகத்தில் கிறித்தவர்களே நியமிக்கப்பட வில்லை. நீதி மன்றங்களில் கிறித்தவர்களின் சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நீதியையோ அநீதியையோ விலை கொடுத் துத்தான் வாங்க நேரிட்டது. யாரைத் தாங்கள் பாதுகாக்க வேண்டுமோ அவர்களிடத்திருந்தே காவலரும் மற்றும் உயர் அதிகாரிகளும் பணத்தை வலிந்து கறந்து கொண்டிருந்தனர்.

1874-ல் சாகுபடி விளைச்சல் மிக மோசமாக இருந்ததே 1875 கிளர்ச்சியின் உடனடியான காரணமாகும். வரிவசூலிக்கும் உரிமையைக் கிரயம் கொடுத்து வாங்கியவர்கள் எவ்விதமான தள்ளுபடியும் செய்ய முன்வரவில்லை. முதன் முதலாக அந்தக் கிளர்ச்சி முஸ்லிம் நிலக் கிழார்கள், உள்ளூர்த் துருக்கி அதிகாரி கள் ஆகியவர்களுக் கெதிராகவே நிகழ்ந்ததன்றி, சுல்தானுக் கெதிராக நடைபெறவில்லை. ஆனால், விரைவில் அது பொதுக் கிளர்ச்சியாக உருவெடுத்து, சுல்தானின் அரசாங்கத்துக் கெதி ராக நடைபெற்றது. அது மற்ற இடங்களுக்குப் பரவாமலிருக்க சுல்தான் சலுகைகளை அளிக்க வேண்டும் என்று வற்புறுத்து வதற்கும் ஆஸ்ட்ரியாவும் ரஷியாவும் தீவிர முயற்சிகளைச் செய் தன. இரு மாநிலங்களையும் தணிய வைப்பதற்கான திட்டம் ஒன்றை ஆஸ்ட்ரிய - ஹங்கேரிய வெளிநாட்டு அமைச்சரான கௌண்ட் ஆண்டிரஸ்ஸி (Count Andrassy) என்பவர் தீட்டினார். வரிகளை வசூலிக்கும் உரிமையைக் கிரயத்துக்கு விற்கும் முறையை ஒழிக்க வேண்டும் என்றும், மாநிலங்களில் வசூலிக்கப் படும் வரிகளை அம் மாநிலங்களின் அபிவிருத்திக்காகவே செலவு செய்ய வேண்டும் என்றும், முழுச் சமய சமநிலை நிறுவப்பட வேண்டும் என்றும், இந்தச் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப் படுகின்றனவா என்பதைக் கவனிப்பதற்காகக் காப்புக் குழு ஒன்று நிறுவப்பட வேண்டும் என்றும் அத் திட்டம் வற்புறுத் தியது. அத் திட்டத்தை ரஷியா, பிரிட்டன் மற்றும் இதர வல்லரசுகள் ஆகியவை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு அது சுல்தானிடம் சமர்ப்பிக்கப்பட்டது. சுல்தானும் அதற்கு இணங்கி விட்டார். ஆனால், துருக்கி சுல்தான் அளித்த மற்ற வாக்குறுதி களைப் போலவே அதுவும் செயல்படாமலேயே இருந்தது. அத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக எவ்விதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இரண்டு மாநிலங்களிலும்

கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்று வந்தது. கிளர்ச்சியாளர்கள் தங்கள் கோரிக்கைகளை அதிகரித்துக் கொண்டே இருந்தனர். மூன்றில் ஒரு பங்கு நிலத்தைக் குடியானவர்களுக்கே கொடுத்து விடவேண்டும் என்று அவர்கள் கோரினர். இந்தக் கிளர்ச்சி இயக்கம் விரைவில் பல்கேரியாவுக்கும் பரவியது. அந் நாட்டில் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டது.

1876, ஏப்ரல் 21ஆம் நாள் அன்று பல்கேரியர்கள் படக்கை (Batak) மையமாகக் கொண்டிருந்த ரொடோப் மலைகளின் (Rodope Mountains) தெற்குச் சரிவுகளில் கிளர்ந்தெழுந்தனர். அதனை இஸ்தம்பூலிலிருந்து அனுப்பப்பட்ட சிறிய படை ஒன்று அகமத் ஆகா என்பவரின் தலைமையில் பெரும் ஆட்சேதம் எதுவும் இல்லாமல் வெகு எளிதாக ஒடுக்கியது. ஆனால், சுல்தானின் படையினர் கிளர்ச்சியாளர்களையும் அம் மாவட்டத்தின் குடி மக்களையும் பெரிதும் கொடுமைக்கு ஆளாக்கினர். கொடூரச் செயல்கள் இழைப்பதைத் தவிர வேறெதையும் அறியாத பாஷி-பஸூக் கூட்டத்தினர் (Bashi-Basouks) அம் மக்களின் மீது பாய்ந்து கொடுமைப்படுத்தினர். கொலை, கற்பழிப்பு இவையெல்லாம் மிகச் சாதாரணமாகப் புரியப்பட்டன. அறுபது கிராமங்கள் தீக்கிரையாயின. ஆயிரத்து இருநூறு பேர் — பெரும்பாலும் பெண்கள், குழந்தைகள் — படக்கில் இருந்த திருச்சபையினுள் அடைக்கலம் புகுந்தனர். ஆனால், அங்கே அவர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர்.[1] இவ்விதக் கொடுமை மிக்க அரக்கத்தனத்துக்குச் சுமார் பன்னிரண்டாயிரம் பேர் பலியாயினர். இந்தச் சாதனைக்காக அகமத் ஆகா சுல்தானிடமிருந்து பெரும் பாராட்டுதலைப் பெற்றார்! ஒரு கிளர்ச்சியை ஒடுக்குவதில் இவ்வித முறையை சுல்தான் கடைப் பிடிப்பதில் வியப்பு ஏதும் இருக்கவில்லை. மற்றக் குடி மக்கள் அவ்விதம் செய்யக் கூடாது என்பதற்காகத்தான் கிளர்ச்சியாளர்கள் சிறிதும் ஈவும் இரக்கமுமின்றி அவ்விதம் நடத்தப்பட்டனர். ஆனால், இக் கிளர்ச்சியின் போது புதிதாக நடந்த ஒரு நிகழ்ச்சி என்னவென்றால், படக்கில் நிகழ்ந்த கொடுமைகளைப்பற்றிய முழு விவரங்களும் 'டெய்லி நியூஸ்' (Daily News) என்ற லண்டன் தினசரிப் பத்திரிகையில் மிக விரிவாக வெளி வந்ததாகும். இதனால் இங்கிலாந்தில் பொது மக்களின் கருத்துத் தூண்டிவிடப்பட்டது. பிரதம அமைச்சராக இருந்த பெஞ்ஜமின் டிஸ்ரேலி (Benjamin Disraeli) உண்மையை

[1] மாதாக் கோயில் போன்ற புனித ஆலயங்களுக்குள் அடைக்கலம் தேடிக் கொள்பவர் எவராயிருப்பினும், அவர் மீது எத்த அதிகாரியோ பகைவரோ ஒருவிதமான இடைஞ்சலையும் உண்டு பண்ணுவது தகாது. இப்படி அடைக்கலம் தேடும் பாதுகாப்பு Sanctuary எனப்படும். துருக்கியர் அப் புனிதப் பாதுகாப்புக்கு ஊனமிழைத்து விட்டார்கள்.

மழுப்ப முயன்ருரெனினும், அந்தத் தினசரியின் நிருபரான மாக்காஹன் (Macgahan) என்பவரும், பின்னர் இஸ்தம்பூலில் பிரிட்டிஷ் தூதராக நியமனம் பெற்ற வால்டர் பேரிங் (Walter Baring) என்பவரும் அதனை உறுதிப்படுத்தினர். இதைப் போன்ற கொடுமையான குற்றம் நடப்பு நூற்ருண்டின் வரலாற்றி லேயே நிகழ்ந்ததில்லை என்றும் கூறப்பட்டது. கிரீமியப் போருக்குக் காரணமா யிருந்த பிரிட்டிஷ் தலைவர்களுள் எஞ்சி யிருந்தவரான கிளாட்ஸ்டன், பல்கேரிய கொடுமைகளைப்பற்றிக் கேள்வியுற்று, சமீபத்தில் 'லிபரல் கட்சி'யிலிருந்து ஓய்வு பெறு வதற்காக அரசியலிலிருந்தே ஒதுங்கி இருந்த நிலையை விட்டு விட்டு, மீண்டும் துருக்கியின் கிறித்தவக் குடிமக்களின் சார்பாக சுல்தானுக்கெதிராகத் தமது குரலை எழுப்பினர்.

அதற்கிடையே படக்கில் நிகழ்ந்த கொடுமைகள் ரஷியா வின் சினத்தையும் ஆஸ்ட்ரியாவின் அச்சங்களையும் கிளப்பி விட்டன. சலோனிக்காவில் தோன்றிய மதவெறி பிடித்த முஸ்லிம்களின் கிளர்ச்சியின் விளைவாக, பிரான்ஸ் ஜெர்மனி ஆகியவற்றின் தூதர்கள் கொல்லப்பட்டனர். பாஸ்னியாவில் இருந்த தங்கள் உடன் பிறவா ஸெர்பிய சகோதரர்களுக்காக அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஸெர்பியாவிலிருந்தும், மாண்ட்டி நீக்ரோவிலிருந்தும் மக்கள் துருக்கியர்களின்மீது போர் தொடுத்தனர். துருக்கிப் படை ஒன்று ஸெர்பியர்களை முறியடித் தது. ஸெர்பியர்கள் ரஷியாவின் உதவியை நாடினர். ஜெர்மனி யின் ஆதரவைப் பெற்ற ரஷியாவும் ஆஸ்ட்ரியாவும் மீண்டும் போர் எழக் கூடாது என்பதற்காகப் பெரிதும் முயற்சி செய்தன. மிகவும் அவசியம் என்று கருதப்பட்ட சீர்திருத்தங்களைப் புகுத்து வதற்கு சுல்தானை வற்புறுத்துவதற்காக 'பெர்லின் குறிப்புகள்' (Berlin Memorandum) என்ற அறிக்கை ஒன்றையும் அந்த நாடு கள் வெளியிட்டன. இந்தத் திட்டத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது; இத் திட்டம் தீட்டப்பட்ட பொழுது தன்னைக் கலந்தாலோசிக்கவில்லை என்றும், எனவே இது வெற்றி பெறுது என்று தான் நம்புவதாகவும் அவ் வரசாங் கம் அறிவித்தமையே அவ் விணக்கத்தை அளிக்காததற்குக் காரணங்களாகும். அத் தறுவாயில் பிரிட்டிஷ் நலன்களைப் பாது காப்பதற்காக மத்தியதரைக் கடலில் இருந்த பிரிட்டிஷ் கப்பற் படை பெஸிகா விரிகுடாவுக்கு (Besika Bay) மாற்றப்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கம் தனித்து நிற்க விரும்புவதால்தான் பெர்லின் அறிக்கைக்கு இணங்கவில்லை என்று கருதிய கிளாட்ஸ் டன், அரசாங்கத்தைப் பாராளுமன்றத்தில் மிகக் கடுமையாகத்

தாக்கிவிட்டார். 1876-ல் 'பல்கேரியக் கொடுமைகள்' (The Bulgarian Horrors) என்று தாம் எழுதிய ஒரு சிறு நூலையும் அவர் வெளியிட்டார். அதில் அவர் படக்கில் நடந்த கொடுமைகளையும் படுகொலைகளையும் பெரும் சொல்வன்மையுடன் எடுத்துக் கூறி, துருக்கி அரசாங்கத்தை மிகக் கடுமையாகத் தாக்கினர். அந்த நூல் உடனடியான விளைவுகளை உண்டு பண்ணிற்று. அதைத் தொடர்ந்து அவர் பல இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்தினர். பொதுக் கூட்டங்களில் துருக்கியின் கிறித்தவக் குடிமக்களுக்கு அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. துருக்கியர் இழைத்த கொடுமைகளுக்காகவும் தீய அரசாங்கத்திற்காகவும் துருக்கியர்களுக்கு எதிராகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. ஸ்டிராட்ஃபோர்ட் பிரபு இந்த இயக்கத்திற்கு முழு ஆதரவும் கொடுத்ததுடன் நில்லாமல், பிரிட்டிஷ் அரசாங்கம் கிறித்தவ மக்களின் உரிமைகளுக்கு மட்டுமே யல்லாமல், துருக்கியின் வேறு சமயக் குடிமக்களின் உரிமைகளுக்காகவும் பாடுபட வேண்டும் என்றும் வற்புறுத்தினர். இங்கிலாந்தின் கற்றறிந்தவர்கள் பலரும் கட்சி வேறுபாடுகளையும் மறந்து, இவ்வியக்கத்தில் சேர்ந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் எர்ல் ஆஃப் பீகன்ஸ்ஃபீல்ட் (Lord of Beconsfield) என்று பதவி உயர்வு பெற்ற டிஸ்ரேலி காமன்ஸ் சபையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டதற்குப் பிறகு, இந்த இயக்கத்தை மிகத் தீவிர மாக எதிர்த்து வந்தார். அவருடைய அனுதாபங்கள் எல்லாம் சுல்தானின் சார்பாகவே இருந்தன. அவருடைய கிழக்கத்திய கொள்கை முற்பட்ட தலைமுறையினரின் கொள்கைக்கு ஏற்ற படியே இருந்தது. ஒரு காலத்தில் கிளாட்ஸ்டனும் கூட அக் கொள்கையை ஆதரித்தார். ஆகவே, அப் பழைய கொள் கையை இப்போது ஏன் மாற்ற வேண்டும்? என்று அவருக்கு விளங்கவில்லை. ரஷியா மேலும் முன்னேற்றமடையக்கூடும் என்று அவர் அஞ்சினர். ரஷியப் பேரரசரின் கொள்கைகளில் அவருக்குச் சிறிதளவும் நம்பிக்கை இல்லை. ஏய்ல்ஸ்பரி (Aylesbury)யில் செப்டம்பர் 20 ஆம் நாள் அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் தம் கருத்துக்களை வற்புறுத்திக் கூறினர். இயக்கத்தின் வேகத்தைக் குறைக்க அவர் முயன்றார். 'பல்கேரியக் கொடுமைகள்' என்பதை அவர் ஏளனம் செய்தார். அக் கொடுமைகளை இழைத்தவர்களைவிட, அவற்றைப்பற்றிப் பேசி அவற்றை ஒரு பெரும் பிரச்சினையாக்கி விட்டவர்கள் அதிகமும் கொடுமையானவர்கள் என்று அவர் அறிவித்தார். ரஷியாவுக்கெதிராக அவர் துருக்கியர்களை ஆதரிக்க எவ்விதத்

தயக்கமும் தெரிவிக்கவில்லை. கிரீமியப் போருக்குக் காரணமாயிருந்த கொள்கையை மீண்டும் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வற்புறுத்தினர். ஆனால், அவருடைய முயற்சி அனைத்தும் வீணாயிற்று. பிரிட்டனில் காற்றுத் துருக்கியர்களுக்கு எதிராகவே வீசிக் கொண்டிருந்தது.

கிளாட்ஸ்டனால் தொடங்கப்பட்ட இயக்கம், பிற வல்லரசுகளுடன் சேர்ந்துகொண்டு துருக்கி அரசாங்கத்தைக் கிறித்தவக் குடிமக்களைக் கொண்டிருந்த மாநிலங்களுக்குச் சுயாட்சி கொடுக்க வேண்டுமென்றும், சீர்திருத்தங்களை நிறைவேற்றியாக வேண்டுமென்றும் கட்டாயப்படுத்துமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தை வற்புறுத்தவில்லை என்றாலும், வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அது இரண்டு முக்கிய விளைவுகளை உண்டுபண்ணியது. கிரீமியப் போருக்குக் காரணமாயிருந்த கொள்கை மீண்டும் தொடரப்படுவதை அது முற்றிலும் தடுத்தது. துருக்கியை ஆதரிக்க வேண்டும் என்று வற்புறுத்திய பீகன்ஸ்ஃபீல்டைப் போன்றவர்களுடைய முயற்சியை அது சிதறடித்தது. அதே சமயத்தில், ரஷியா ஆயுதம் தாங்கியவாறு துருக்கியின் விவகாரங்களில் தலையிடுவதற்கும் அது தூண்டியது. அவ்விதம் செய்தால், பிரிட்டன் குறுக்கே நிற்காது என்பதையும் அது தெளிவுபடுத்தியது. பீகன்ஸ்ஃபீல்டின் மந்திரி சபை அப்பொருளைப்பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டிருந்தது. அதன் உறுப்பினர்களுள் பலர் துருக்கியின் சார்பாக ரஷியாவுடன் போருக்குச் செல்வதை விரும்பவில்லை. வெளிநாட்டு அமைச்சராக இருந்த டெர்பி பிரபுவும் அவ்விதமே கருதினர்.

ஏய்ல்ஸ்பரியில் பீகன்ஸ்ஃபீல்ட் பிரபு தமது உணர்ச்சி வசப்பட்ட சொற்பொழிவாற்றியதற்கு மறு நாள், செப்டம்பர் 21ஆம் நாள் அன்று அரசாங்கத்தின் சார்பாக டெர்பி பிரபு, இஸ்தம்பூலில் இருந்த பிரிட்டிஷ் தூதருக்கு, பல்கேரியாவில் துருக்கிப் படைகள் புரிந்த அட்டூழியங்கள் பிரிட்டிஷ்மக்களின் சினத்தைத் தூண்டி விட்டுள்ளன என்பதையும், பாரிஸ் உடன்படிக்கைக்கு உடந்தையாக இருந்த பிரிட்டன் அம் மக்களின் உண்மை உணர்ச்சிகளைப் பொருட்படுத்தாமல் இருக்க முடியாது என்றும் தெரிவிக்குமாறு கட்டளையிட்டார். அந்த அட்டூழியங்களைப் புரிந்தவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்றும் அவர் சுல்தானை வற்புறுத்தினர். மேலும், அக்டோபர் 30ஆம் நாள் அன்று செய்ன்ட் பீட்டர்ஸ்பர்கிலிருந்த பிரிட்டிஷ் தூதரின் மூலமாக டெர்பி பிரபு, துருக்கியர்கள் இழைத்த கொடுமைகளுக்காக பிரிட்டனில் மக்கள் பெரும் உணர்ச்சி வசப்பட்டிருந்த

போதிலும், துருக்கி அரசாங்கத்திற்கு எத் திசையிலிருந்து எவ்வித ஆபத்தேனும் ஏற்பட்டால், அதனால் சுயெஸ் கால்வாயில் பிரிட்டினின் நலன்கள் பாதிக்கப்பட்டே தீரும் என்றால், அம்மக்களுடைய உணர்ச்சிகள் முற்றிலும் மாறிவிடக்கூடும் என்று ரஷிய அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தினர். இஸ்தம்பூலின் மீது படையெடுத்தல் கூடாது, எகிப்தில் பிரிட்டிஷ் நலன்கள் பாதிக்கப்படக்கூடா என்ற நிபந்தனைகளின் பேரில் துருக்கிக் கெதிராக ரஷியா நடவடிக்கை எடுக்குமாயின், பிரிட்டிஷ் அரசாங்கம் தலையிடாது என்றே அவ்வறிக்கையின் விளக்கமாகக் கொள்ளவேண்டும். அவ்விதம்தான் ரஷியப்பேரரசரும் அதனைப் புரிந்து கொண்டதனால், இஸ்தம்பூலின்மீது தாம் தாக்குதல் நிகழ்த்த நினைக்கவில்லை யென்றும், பல்கேரியாவை இணைத்துக் கொள்ளத் தமக்கு எவ்வித அந்தரங்க எண்ணமும் கிடையாது என்றும் நவம்பர் 2ஆம் நாள் அன்று அவர் திட்டவட்டமாக எடுத்துக் கூறிவிட்டார்.

இவ்விதமாக ரஷியாவின் ஸார் மன்னர் தமது எண்ணங்களைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறிவிட்ட போதிலும், ஒரு சில நாட்களுக்குப் பிறகு பீகன்ஸ்ஃபீல்ட் பிரபு நவம்பர் 9ஆம் நாள் அன்று லண்டனில் கில்ட்ஹாலில் நடத்திய உரையில் துருக்கியை மிகத் தீவிரமாக ஆதரித்தார். அவர் நிகழ்த்திய உரை ரஷியாவுக்கெதிராகப் போரைத் தூண்டுவதாகவே இருந்தது. அவ்வுரை பிரிட்டிஷ் பிரதமர் ரஷியப் பேரரசை நம்பவில்லை என்பதைத் தெளிவுபடுத்திவிட்டது. பிரிட்டிஷ் பிரதமரின் அச்சுறுத்துவதான இவ்விதச் சொற்பொழிவு கம்பியில்லாத் தந்தியின் மூலமாக ரஷியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதைக் கேள்வியுற்ற ரஷியப் பேரரசர் மிகவும் சினங்கொண்டார். நவம்பர் 10ஆம் நாள் அன்று அவர், கிறித்தவ மக்களுக்குப் போதுமளவு பாதுகாப்பு அளிப்பதற்கான உறுதியை சுல்தானிடமிருந்து பெற முடியவில்லையென்றால் தாம் பிற நாடுகளின் ஆதரவின்றியே நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், அவ்விதம் செய்தால் மக்கள் தமக்கு ஆதரவு கொடுப்பர் என்று தமக்கு நம்பிக்கை உள்ளது என்பதாகவும் மாஸ்கோவில் வெளிப்படையாக அறிவித்தார்.

இதற்கிடையே, டெர்பி பிரபுவின் முயற்சியின் விளைவாக, ஐரோப்பாவில் கிறித்தவக் குடிமக்கள் மேலும் சிறப்பாகப் பாதுகாக்கப்படுவதற்கென்று என்ன நிர்வாக மாறுதல்கள் புகுத்தப்படவேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கான திட்டங்களை ஆலோசிப்பதற்காக இஸ்தம்பூலில் வல்லரசுகளின் பிரதிநிதி

களுடைய மாநாடு ஒன்றைக் கூட்டுவதற்காக ரஷியாவுடனும் இதர வல்லரசுகளுடனும் ஏற்பாடுகள் செய்து வைக்கப்பட்டிருந்தன.

இந்தியத் துறையின் செயலாளராகவும் (Secretary of State for India) பிரிட்டிஷ் மந்திரி சபையின் உறுப்பினராகவும் இருந்த சாலிஸ்பரி பிரபு (Lord Salisbury) இங்கிலாந்தின் பிரதிநிதியாக இந்த மாநாட்டில் கலந்துகொண்டார். மாநாடு 1876-ம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் நாள் அன்று இஸ்தம்பூலில் கூடிற்று. மாநாடு கூடுவதற்கு ஒரு நாள் முன்னர் மிதத் பாஷாவின் தூண்டுதலின் பேரில், சுல்தான் ஓர் அரச ஆணையை வெளியிட்டார். அது அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்திற்கான திட்டம் ஒன்றை வெளியிட்டது. அத் திட்டத்தை ஐந்தாம் முராதின் குறுகிய ஆட்சிக் காலத்தில் சுல்தானுடைய அமைச்சர்கள் ஏற்கெனவே ஏற்றிருந்தனர். ஆனால், அப்துல் ஹமீது பட்டத்திற்கு வந்ததும், அதை அவர் ஏற்க மறுத்துவிட்டார். இப்பொழுது வெளியான இத் திட்டத்தின்படி, தேசீய அரசியல் நிர்ணய சபை ஒன்று கூட்டப்பட்டது. அதன் உறுப்பினர்கள் வயதுக்கு வந்த எல்லா மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநாடு வற்புறுத்தப் போகும் சீர்திருத்தங்களுக்கான திட்டத்தை விடச் சற்று அதிக விசாலமான திட்டத்தை வெளியிட அத் திட்டம் முயன்றது. உண்மையாகவே சீர்திருத்தத்தைப் புகுத்த விரும்பிய மிதத் பாஷா இதனைச் சரியான நோக்கத்துடன்தான் புகுத்த முயன்றார். ஆனால், சுல்தான் இவ்விதம் செய்ததன் உண்மை நோக்கம் மாநாட்டினரின் கண்களில் மண்ணை வீசவே என்பதும், மாநாடு முடிந்தவுடன் அரசியல் அமைப்பினைப் புறக்கணித்து விடவே அவர் துணிந்திருந்தார் என்பதும் பின்னாளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளால் நிரூபிக்கப்பட்டுவிட்டன. மாநாட்டினர் சற்றுத் தாராளமான மனத்துடன் நடந்துகொண்டு, சுல்தானின் இத் திட்டத்தை உண்மையான செயல் என்று கருதி, அதனை உத்மானியப் பேரரசின் விசாலமான சீர்திருத்தத்தின் அடிப்படையாகப் பயன்படுத்தியே இருப்பார்கள். ஆனால், அது ஒரு வெறும் மோசச் செயலாகும் என்றே அவர்கள் கருதினர். அது வெளியிடப்படவில்லை என்று பாவித்துக் கொண்டே அவர்கள் தங்கள் விவாதங்களை நிகழ்த்தினர். துருக்கியின் கிறித்தவ மாநிலங்களுக்குச் சுயாட்சி நிறுவனங்களை அளிப்பதும் வல்லரசுகளின் இணக்கத்திற்கேற்றபடி ஆளுநர்களை நியமிப்பதுமான ஒரு மாற்றுத் திட்டத்தை அவர்கள் தீட்டினர். மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதிநிதிக்கும் ரஷியப் பிரதிநிதிக்கு மிடையே எவ்விதக் கருத்து வேறுபாடும் இருக்கவில்லை. அவர்

களுடைய தூண்டுதலின் பேரில் மாநாடு சுல்தானிடத்திருந்து தான் வற்புறுத்திப் பெற முயன்ற கோரிக்கைகளை மிகவும் குறைத்துக்கொண்டது.

மாநாட்டின் திட்டங்கள் தம்முடைய இறைமைக்கான அதி காரங்களை மிகத் தீவிரமாக பாதிக்கின்றன என்ற காரணத்தை முன்னிட்டு சுல்தான் அவற்றை ஏற்க வெட்ட வெளிச்சமாக மறுத்துவிட்டார். பேரரசுக்காகவென்று உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் மிகத் தீவிரமாக வற்புறுத்தினர். சலுகைகளைக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்குச் சிறிதளவும் கிடையாது. சீர்திருத்தங்களைப் புகுத்தத் தாம் மறுப்பதால் ரஷியாவுடன் போர் மூண்டுவிடு மானால், துருக்கியுடன் மற்ற நாடுகளும் சேர்ந்துவிடும் என்று அவர் திட்டவட்டமாக நம்பினர். பீகன்ஸ்ஃபீல்ட் பிரபு ஆற்றிய கில்ட்ஹால் சொற்பொழிவுக்கு ஏற்றபடிதான் அவர் தமது கொள்கையை அமைத்துக்கொண்டார்.

மாநாடு கலைந்து விட்டதற்கு ஒரு சில நாட்களுக்குப் பிறகு மிதத் பாஷா பெரும் இழுக்கு ஏற்படும் வகையில் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். புதிய அரசியல் அமைப்பு அதை உருவாக்கிய வர் நீக்கப்பட்டதற்குப் பிறகு வெகு நாட்கள் வரை நிலைத்திருக்க வில்லை. மே, 1877-ல் சுல்தான் அப்துல் ஹமீது அதைச் சிறிது காலத்திற்கு நிறுத்திவைத்து, கூட்டப்பட்ட சட்ட மன்றத்தைக் கலைத்துவிட்டார். நிலைத்திருந்த இரண்டு மாத காலத்தில் அதனுடைய உறுப்பினர்கள் ஹமீதிய ஆட்சி முறையில் காணப் பட்ட மிகக் கேவலமான குறைபாடுகளை வெளிப்படுத்திவிட உறுதிகொண்டிருந்தனர். பிறகு சுல்தான் அப்துல் அஸீஸின் கொலைக்கு மிதத் பாஷாவே காரணமாவார் என்று அவர்மீது ஒரு பொய்க் குற்றம் சாட்டப்பட்டது. கைக்கூலி வாங்கச் சற்றும் தயங்காத நீதிபதிகளைக்கொண்டு அவர்மீது விசாரணை நடத்தப் பட்டது. குறுக்கு விசாரணை செய்வதற்கும் அவர் அனுமதிக்கப் படவில்லை. அவர் குற்றவாளியே என்று தீர்ப்பு அளிக்கப் பட்டது. தூக்கு தண்டனைக்கு அவர் ஆளாக வேண்டும் என்று வழங்கப்பட்ட அத் தீர்ப்பு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வற்புறுத் தலின் காரணமாக, அரேபியாவுக்கு அவர் நாடு கடத்தப்பட வேண்டும் என்னும் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

அதற்கிடையே கிழக்குப் பிரச்சினையை முடிப்பதற்காக 1877-ல் மீண்டும் ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. அந் நோக்கத்துடன் ரஷியப் பேரரசர், கௌன்ட் ஸ்கௌவலாஃப்

(Count Schouvalaff) என்பவரின் தலைமையில் சிறப்புத் தூதுக்குழு ஒன்றை லண்டனுக்கு அனுப்பினர். வல்லரசுகளுக்கிடையே ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. முதல் குறிப்பாக அது வரையப்பட்டு, சுல்தானிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பாரிஸ் ஒப்பந்தத்திற்கு முற்றிலும் மாறுபட்டிருக்கின்றது என்றும், உள்மானியப் பேரரசின் விவகாரங்களில் தலையிடுகின்றது என்றும் அதனை சுல்தான் ஏப்ரல் 10ஆம் நாள் அன்று நிராகரித்து விட்டார். இதைக் காரணங் காட்டி ரஷியா துருக்கியின்மீது போர் தொடுத்தது. சுல்தான் ஐரோப்பிய வல்லரசுகள் சமர்ப்பித்த குறிப்பினை நிராகரித்து விட்டதனால் ஐரோப்பாவையே அவமதித்து விட்டார் என்று அப் போருக்கு ஒரு காரணத்தையும் ரஷியா கூறிக்கொண்டது. ஆகவே, ரஷியா முழு ஐரோப்பாவின் சார்பாகச் செயல்படுகின்றது என்ற நிலையை ஏற்றுக் கொண்டது. ஆனால், இங்கிலாந்து மட்டுமே இந் நிலையிலிருந்து ஒதுங்கி நின்றது. ரஷியாவின் செயல் துருக்கியில் சீர்திருத்தம் புகுத்தப்படுவதற்கு ஒரு முட்டுக்கட்டையாக உள்ளது என்றும், கிறித்தவர்களின் நலன் ஒரு போரினால் சீர் செய்யப்பட்டுவிடும் என்று கருதுவது மிக துர்வசமானதாகும் என்றும் ரஷிய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட அறிக்கையில் டெர்பி பிரபு அறிவித்திருந்தார். இந்தத் தீர்ப்பு உண்மையில் மிகவும் துர்வசமானதாகும். ஆனாலும், ரஷியாவுடன் போருக்குச் செல்வது அல்லது அதனுடைய பகைமையை வாங்குவது என்பது மிகவும் தவருனதாகும் என்று நல்வசமாக கிளாட்ஸ்டன் எடுத்துரைத்தார். இந்த உரைக்கு உள்ளூர் அமைச்சராயிருந்த சர் ரிச்சர்டு கிராஸ் (Sir Richard Cross) என்பவர் அரசாங்கத்தின் சார்பாக விடையளித்தார். உண்மையில் பீகன்ஸ்ஃபீல்டின் கொள்கையல்லாது டெர்பி பிரபுவின் கொள்கைதான் மந்திரி சபையின் கொள்கையாகும் என்று, அவ் விடையில் அறிவிக்கப்பட்டது. ரஷியா போரைத் தொடங்கியதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் வருந்துகின்றது என்றும், அதனால் எவ்வித நலனும் எவருக்கும் ஏற்படப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். சுயெஸ் கால்வாயோ, எகிப்தோ அல்லது இஸ்தம்பூலோ அச்சுறுத்தப் பட்டாலன்றி, பிரிட்டிஷ் அரசாங்கம் மற்றப்படி எவர் சார்பாகவும் தலையிடாது என்றும் அவர் கூறினர்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இந்த முடிவிலிருந்து, சுல்தான் பீகன்ஸ்ஃபீல்டின் உரைகளிலிருந்து உருவாக்கிக் கொண்டிருந்த நம்பிக்கைகள் நிறைவேறவில்லை என்பது தெளிவாயிற்று. சுல்தான் தமது பேரரசின் மீது ரஷியா நடத்திய தாக்குதலைத் தனித்து நின்றே எதிர்நோக்க வேண்டியதாயிற்று. 1877,

ஏப்ரல் 24ஆம் நாள் அன்று போர் மூண்டது. போர் தொடரப் பட்டதும், இரு ரஷியப் படைகள் துருக்கியின் மீது படையெடுத் தன. ஒன்று இரண்டரை லட்சம் வீரர்களைக் கொண்டு நிக்கலஸ் கோமகனின் தலைமையில் ஐரோப்பாவிலிருந்தும், மற்றென்று, ஒன்றரை லட்சம் வீரர்களைக் கொண்டு மைக்கேல் கோமகனின் தலைமையில் ஆசியாவிலிருந்தும் திரண்டன. முதல் படை புரூத் நதியைக் கடந்து, இன்னமும் உத்மானியப் பேரரசின் ஒரு பகுதி யாகவே இருந்த ருமேனியாவுக்குள் புகுந்தது. ஆனால், ஏப்ரல் 15 ஆம் நாள் அன்று ரஷியப் படைகள் அம் மாநிலத்தின் வழி யாகச் செல்வதற்கும், மற்ற வகைப்பட்ட உதவிகளை அது (ரஷியா) பெறுவதற்கும் உறுதி யளிப்பதான ஒப்பந்தம் ஒன்றை ருமேனிய சட்ட மன்றம் ரஷியாவுடன் செய்து கொண்டது. சுல் தான் இயல்பாகவே இதனைப் பகைமைக்கான செயல் என்று கருதி, டான்யூபில் இருந்த கலாஃபத் (Kalafat) என்ற ருமேனிய அரணைத் தாக்க ஆணையிட்டார். இதன் விளைவாக, மே 21 ஆம் நாள் அன்று ருமேனியர்கள் துருக்கியின் மீது போர் தொடுத் தனர். படையெடுப்பின் போதெல்லாம் அவர்கள் ரஷியப் படைகளுக்குப் பெரும் உதவியும் அளித்தனர். போரின் போக்கை ஆராய்கையில் ருமேனியர்களின் உதவி இல்லாமற் போயிருப்பின், அந்த பல்கேரியப் படையெடுப்பு வெற்றிகரமாக முடிந்திருக்காது என்பது புலனாகும்.

ஆஸ்ட்ரியா - ஹங்கேரி நாடுகள் நடுநிலைமை வகிக்கும் என்று ரஷியா உறுதி பெற்று, துருக்கியின் மீது படையெடுப்பு நிகழ்த்துவதற்கு அது மேலும் வழி செய்தது. ரெய்ஸ்டாட்டில் ரஷியப் பேரரசர் ஆஸ்ட்ரியப் பேரரசரை நேரில் சந்தித்தபோது இஸ்தம்பூலைக் கைப்பற்றும் நோக்கம் தமக்குக் கிடையாது என்று உறுதியளித்தார். தவிரவும், போரின் போது ஆஸ்ட்ரியா - ஹங்கேரி, நடுநிலைமையை வகிக்குமானால், துருக்கியர்களுக் கெதிராக வெற்றி ஏற்பட்டதெனில் அதற்குக் கைம்மாறாக பாஸ்னியாவும் ஹெர்ஸிகோவினாவும் ஆஸ்ட்ரிய - ஹங்கேரிக்குக் கொடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

டான்யூப் சமவெளியில் அளவுகடந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதனால், போர் தொடங்கி இரண்டு மாதங்களுக்குப் பிறகு தான் ரஷியப் படை நதியைக் கடக்க முடிந்தது. இரண்டு இடங் களில், அதாவது தொப்ருட்ஷாவிலும் (Dobrudscha) ஹிர்சோவா விலும் (Hirsova) அது கடந்தது. அந்த இரண்டு இடங்களிலும் அதற்கு எதிர்ப்பு ஏற்படவில்லை. துருக்கிப்படை எண்ணிக்கை யில் ரஷியப் படைக்குச் சரிசமமாக இருந்தபோதிலும், அதன்

தலைவரான அப்துல் கரீம் படையை நடத்துவதற்குச் சிறிதும் தகுதியில்லாதவராக இருந்தார். ஐந்நூறு மைல் அளவில் பரவியிருந்த அவருடைய படையை ஒரே இடத்தில் திரட்ட அவரால் முடியவில்லை. ரஷியர்கள் நைக்கோபோலிஸைக் கைப்பற்றியதற்குப் பிறகு, பல்கேரியாவுக்குள் நுழைந்து, அதன் பழைமை வாய்ந்த கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டனர். எல்லா விடங்களிலும் அவர்கள் பல்கேரியர்களால் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டனர்.

கௌர்கோ என்ற படைத் தலைவர் ஹெய்ன்கோயி (Hainkoii) கணவாய் வழியாக பால்கன் பகுதியை வெற்றிகரமாகக் கடந்து, டுருட்ஜா சமவெளி வழியாக எஸ்கிஸக்ரா (Eskizagra) வரையிலும் முன்னேறி, பல்கேரியாவுக்குள் நுழைந்தார். பிறகு அங்கிருந்து திரும்பி, அவர் தெற்கிலிருந்த ஷிப்கா கணவாயைத் தாக்கி, அங்கிருந்த துருக்கிப் படை ஒன்றை முறியடித்தார். அதற்கிடையே ஜூலை மாதத் தொடக்கத்தில் டிரினோவோவிலிருந்து வந்த முக்கிய ரஷியப் படை ஒன்று டான்யூபிலிருந்து தெற்கே இருபது மைல் தூரத்திலிருந்த பிலெவ்னு என்ற இடத்தில் உஸ்மான் பாஷாவின் தலைமையிலிருந்த துருக்கிப் படையைச் சந்தித்தது.

பிலெவ்னு (Plevna) ஒரு கோட்டையன்று. அது உறுதியான ஓர் இயற்கை அரணாகும். அதன் மண் சுவர்களின் பின்னால் துருக்கியர்கள் நின்று கொண்டு ஐந்து மாதங்கள் வரையிலும் மிகத் தீவிரமாக எதிர்த்து வந்தனர். ருமேனியப் படையின் உதவியைக் கொண்டு ரஷியர்கள் மும்முறை தாக்குதல் நடத்தினர். அவர்கள் பெரும் சேதமும் அடைந்தனர். ஆகவே, ஸெபாஸ்டப்பூலின் பாதுகாப்பில் பெரும் வீரராக விளங்கிய டோட்லிபென் என்ற படைத் தலைவருடைய ஆலோசனையின் மீது, தாக்குதல் நடத்திப் பிலெவ்னுவைக் கைப்பற்றுவதற்கான முயற்சி கைவிடப்பட்டது. மிகக் கடுமையாக அது முற்றுகையிடப் பெற்றது. சுலைமான் பாஷாவின் தலைமையில் வெற்றிகரமாகப் பல தாக்குதல் நிகழ்ந்த போதிலும், கௌர்கோஷிப்கா கணவாயைக் கைப்பற்றி யிருந்ததனால், பிலெவ்னுவின் நிவாரணத்திற்காகத் துருக்கிப் படை ஒன்றும் முன்னேற முடியவில்லை. அதன் விளைவென்ன வென்றால், ஐந்து மாத காலமாக மிகத் தீவிரமாக எதிர்த்து நின்றதற்குப் பிறகு உஸ்மான் பாஷா தம் படைக்குப் போதிய அளவு உணவு இல்லாமற் போய்ப் பெரும் துன்பப்பட்டார். முற்றுகையிட்டுக் கொண்டிருந்த எதிரிப் படைகளின் வரிசையைத் தகர்த்துச் செல்ல அவர் மன

உறுதி கொண்டிருந்தார். ஆனலும், இந்தக் கோட்டைத் தாக்குதல் தோல்வியடைந்தது. உஸ்மானும் அவருடைய முப்பத்திரண்டாயிரம் படை வீரர்களும் 1878, ஜனவரி 9ஆம் நாள் அன்று சரணடையுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். இதனல் பிலெவ்னவின் முன்னிலையில் இருந்த ரஷியப் படைக்குச் சற்று நிவாரணம் கிட்டிற்று. கௌர்கோவும் ரஷியப் படையின் முதன்மையான பகுதியும் பிறகு சோஃபியாவுக்குச் சென்றனர். மற்றெரு ரஷியப் படைக்குத் தலைமை வகித்த ஸ்கோபெலெஃப் என்பவர் பால்கன் மலைப் பிரதேசங்கள் வழியாக முன்னேறத் தீர்மானித்தார். மற்றெரு பாஷாவின் கீழ்த் தொண்ணூருயிரம் துருக்கிய வீரர்களைக் கொண்ட படை ஷிப்கா கணவாயின் தெற்குக் கோடியில் நிறுத்தி வைக்கப்பட்டது; அவருடைய வழியையும் அது மடக்கியது. ஷிப்கா கணவாய் நெடுகத் தாக்குமாறு ஒரு சிறிய படைக்கு உத்தர விட்டுவிட்டு ஸ்கோபெலெஃப் மிஞ்சியிருந்த இரு படைப் பகுதிகளையும் உடன் கொண்டு சென்று, மலைகளைக் கடந்து, ஷிஞ்சேவாவிலிருந்த எதிரியின் ஒரு பகுதியைத் தாக்கினர். துருக்கியர்கள் முறியடிக்கப்பட்டனர்; எல்லாப் படையினரும் சரணடைய வேண்டியதாயிற்று. ஸ்கோபெலெஃப்பின் மாபெரும் சாதனையின் விளைவாக, நிக்கலஸ் மேலும் எதிர்ப்பு ஏதுமில்லாமல் எதிர்னேவுக்கு முன்னேறத் தொடங்கினர். அவர் அதனை ஜனவரி 28ஆம் நாள் அன்று கைப்பற்றிக் கொண்டார். அதற்கிடையே துருக்கியர்கள் மேலும் பல இடங்களிலும் தோல்வியடைந்தனர். ஸெர்பியர்கள் நிஷ் என்ற முக்கிய நகரைக் கைப்பற்றிக் கொண்டனர். மாண்ட்டி நீக்ரோவர்கள் அந்திவாரி விரிகுடாவில் (Antivari Bay) ஸ்பிஸ்ஸாவையும் (Spizza) ஏட்ரியாட்டிக் கடலில் டல்சிக்னேவையும் (Dulcigno) கைப்பற்றிக் கொண்டனர்.

ஐரோப்பாவில் இருந்தது போலவே ஆசியாவிலும் துருக்கியர்களுக்கு நற்பேறு கிட்டவில்லை. முக்தார் பாஷா (Muktar Pasha) என்பவரின் தலைமையில் அவர்களுடைய படை எண்ணிக்கையில் ரஷியர்களுக்குக் குறைந்ததாய் இருக்கவில்லையாயினும், அது பிளவுபட்டு, கார்ஸ், அர்தஹான், எர்ஸிரோம் என்ற மூன்று இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 1877-ல் நடைபெற்ற படையெடுப்பின்போது ரஷியர்கள் இம் மூன்று முக்கிய கோட்டைகளைக் கைப்பற்றுவதிலும் அர்மீனியர்கள் குடியிருந்த எல்லாப் பகுதிகளையும் கைப்பற்றிக் கொள்வதிலும் வெற்றி கண்டனர். 1878-ல் ஜனவரி மாதத்திற்குள்ளாக ஆசியாவிலாகட்டும் ஐரோப்பாவிலாகட்டும் துருக்கியர்களின் எதிர்ப்புச் செயலளவில் முடிந்துவிட்டது. அவர்கள் அமைதியை

நாடி, ஐரோப்பிய வல்லரசுகளின் மத்தியஸ்தத்தைப் பெற முயன்றனர். ஜனவரி 31ஆம் நாள் அன்று போர் நிறுத்தத்திற்கான ஒப்பந்தம் ஏற்பட்டது.

இஸ்தம்பூல் தலைநகரம் கைப்பற்றப்பட்டு, அந்நகருக்குள் ரஷியர்கள் முன்னேறுவார்களானால் அவர்களைத் தடுக்கத் துருக்கியர்கள் முற்றிலும் சக்தியற்று இருக்கின்றனர் என்ற உண்மையும் பிரிட்டிஷ் அரசைப் பீதிக்குள்ளாக்கிற்று. கிரீமியப் போர்க் கொள்கையை மீண்டும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், ரஷியர்கள் பல்கேரியாவின்மீது படையெடுக்காதபடி துருக்கியர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்றும் பீகன்ஸ்ஃபீல்ட் வற்புறுத்தியதை அதுவரையிலும் ஏற்றுக் கொள்ளாதிருந்த ஆங்கிலேயர்கள், குறிப்பாகக் கற்றறிந்த ஆங்கிலேயர்கள் இஸ்தம்பூல் ரஷியர்களால் கைப்பற்றப்படுவதை மிகக் கடுமையாய் எதிர்த்தனர். அப்படிப்பட்ட ஒரு கைப்பற்றுதல் தாற்காலிகமாக இருப்பினும், அது எந்நேரத்திலும் ஏற்படவிருந்தது.

பெஸிகா விரிகுடாவில் இருந்த பிரிட்டிஷ் கப்பற் படைக்கு டார்டனெல்ஸில் நுழையுமாறு உத்தரவிடப்பட்டது. இங்கிலாந்தில் போருக்கான ஆயத்தங்கள் மிகத் தீவிரமாக நடைபெற்று வந்தன. இதற்கும் விடையளிக்கும் வகையில் ரஷியா தன் படையை இஸ்தம்பூலுக்கு மிக அருகாமையில் கொண்டு வந்தது. நிக்கலஸ் கோமகனின் செயலகம் இஸ்தம்பூலுக்கு மிக அருகாமையில் மார்மோராக் கடலோரத்தில் ஸான் ஸ்டீஃபனே (San Stefano) என்ற கிராமத்தில் நிறுவப்பட்டது. பிரிட்டிஷ் கப்பற் படையின் ஒரு பகுதி இஸ்தம்பூலருகில் பிரின்ஸ் தீவு (Prince Island) என்ற தீவுகளருகில் ஓரிடத்தில் நிறுத்தி வைக்கப் பெற்றது. ஆகவே, இங்கிலாந்துக்கும் ரஷியாவுக்கு மிடையே மிக நெருக்கடியான ஒரு கட்டம் ஏற்பட்டுவிட்டது.

இதற்கிடையில், ரஷியாவுக்கும் சுல்தானுக்கு மிடையே நேர்முகமான பேச்சு வார்த்தைகள் தொடங்கின. அவற்றின் விளைவாக, அவ் விருவருக்குமிடையே ஸான்ஸ்டீஃபனே ஒப்பந்தம் (Treaty of San Stefano) செய்து கொள்ளப்பட்டது அது பிரிட்டிஷ் அரசுக்கு ரஷியா அளித்த வாக்குறுதிகளுக்கு ஏற்பவே அமைந்திருந்தது. இஸ்தம்பூல், திரேஸ் மாநிலம், எதிர்னே ஆகியவை துருக்கியர்களின் வசமே விடப்பட்டிருந்தன. தலைநகரம் தாற்காலிகமாகவும்கூட ரஷியப் படையினரால் கைப்பற்றப்பட்டிருக்கக் கூடாது. பல்கேரியா ஒரு ரஷிய மாநிலமாகக் கூடாது; சுதந்திர நாடுமாகக் கூடாது. ஆனால், டான்யூ

பின் தெற்குப் பகுதியைக் கொண்டும், கருங்கடலின் ஏஜியன் கடலின் எல்லைகளைக் கொண்டும் திரேஸின் பெரும் பகுதியையும் உள் அடக்கி வைத்திருந்த 'பெரிய பல்கேரியா' ஒன்று சுயாட்சி பெற்ற நாடாக உருவாக்கப்பட்டது. பெயரளவிற்கு மட்டும் அது சுல்தானுக்குக் கீழ்ப்படிந்திருந்தது. ரஷியாவின் அங்கீகாரத்தைப் பெற்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இளவரசர் ஒருவர் அதன் ஆட்சி புரியவேண்டும். இவ்விதமாக அமைக்கப்பட்ட அந்த நாடு பால்கன் தீபகற்பத்திலிருந்த எஞ்சிய உடைமைகளுடன் சுல்தானுடைய தொடர்பைத் துண்டித்தது. ஸெர்பியா, மாண்ட்டிநீக்ரோ ஆகியவை விஸ்தரிக்கப்பட்டன; சுதந்தர நாடுகளுமாயின. பாஸ்னியா, ஹெர்ஸிகோவினு ஆகியவற்றில் சுயாட்சி பெற்ற நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டும்; பெயரளவில் மட்டுமே அவை சுல்தானுக்குக் கீழ்ப் பட்டவையாக இருக்கவேண்டும். கிரீஸுக்கு நிலப் பகுதிகள் எதுவும் அளிக்கப்படவில்லை. ஆனாலும், எப்பிரஸ், தெஸ்ஸாலீ, மற்றும் கிரீட் ஆகியவற்றில் சீர்திருத்தம் பெற்ற நிறுவனங்கள் புகுத்தப்படவேண்டும். ரஷியப் படைக்கு மிகச் சிறப்பாக உதவியளித்திருந்தும், ருமேனியர்கள் மிகக் கேவலமாக நடத்தப்பட்டனர். பாரிஸ் ஒப்பந்தத்தின் விளைவாக ரஷியர்கள் வசமாக மால்தேவியாவுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டதும், பெரும்பாலும் ருமேனியர்கள் குடியிருந்த பகுதியாக இருந்ததுமான பெஸ்ஸரேபியப் பகுதி ரஷியாவுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. அத்துடன் டான்யூப் நதி யோரமாக இருந்த ஒரு குறுகிய நிலப்பகுதி ரஷியாவுக்கு அளிக்கப்பட்டது. இதற்கு இணையாக ஒரு சில பல்கேரியர்களையும் துருக்கியர்களையுமே கொண்டிருந்த டொப்ருட்ஸா என்ற வறண்ட நிலப் பகுதியை ருமேனியா பெற்றது. ருமேனியா ஒரு சுதந்தர நாடாக இருக்கவேண்டும். ஆசியாவில் கார்ஸ், அர்தஹான், பாஎஜீத், பத்தூம் (Batoum) மற்றும் அவற்றின் மாவட்டங்களும் ரஷியாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். எர்ஸிரோம் துருக்கியருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். 1,20,00,000 பவுன் தொகையைத் துருக்கி ரஷியாவுக்கு நஷ்ட ஈடாக அளிக்க வேண்டும்.

ஸான் ஸ்டீஃபனோ ஒப்பந்தத்தின் இந்த நிபந்தனைகள் வெளியிடப்பட்டதனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஐயப்பாடுகள் நீங்கிவிடவில்லை. ஐரோப்பாவில் துருக்கி முற்றிலுமே துண்டிக்கப்பட்டு விடுகின்றது என்றே தொடக்கத்தில் ஐயம் எழுந்து விட்டது. பீக்கன்ஸ்ஃபீல்டும் துருக்கியை ஆதரிக்க விரும்பிய அவரைப் போன்றவர்களும் ஒரு பெரும் பல்கேரியா ரஷியாவின் செல்வாக்குக்கு உட்பட்டே யிருக்குமென்றும், இறுதியில் இஸ்தம்

பூகோலக் கைப்பற்றிக் கொள்வதற்கே அதை ஒரு படிக்கட்டாக ரஷியா பயன்படுத்தக் கூடும் என்றும் நம்பினர். பால்கன் தீபகற்பத்தில் ரஷியாவின் செல்வாக்கையும் அபிவிருத்தியையும் ஒடுக்குவதற்கு ஏற்ற தடுப்பு அரணாக திருப்தியுற்ற, வளம்பெற்ற, சுயாட்சி பெற்ற ஒரு நாட்டை நிறுத்தி வைக்க வேண்டியதே மகத்தான தேவை என்பதையும், அப்படிப்பட்ட நாடு எவ்வளவுக்கு எவ்வளவு பெரிதாக இருக்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது நல்லதாகும் என்பதையும் கிளாட்ஸ்டன் வற்புறுத்திக் கொண்டிருந்ததை முன்பு பீகன்ஸ்ஃபீல்டும் அவரைப் போன்றவர்களும் புரிந்து கொள்ளவில்லை. இந்த ஐயப்பாடுகளுக்கிடையே பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு 'பெரிய' பல்கேரியா உருவாக்கப்படுவதை எதிர்க்க முடிவு செய்துவிட்டது; அவ்விதம் எதிர்ப்பதனால் ரஷியாவுடன் போர் மூண்டு விட்டாலும் அதனைப் பொருட்படுத்தக் கூடாது என்றும் அது தீர்மானித்து விட்டது. ஸான் ஸ்டீஃபனோ ஒப்பந்தம் 1856-ல் செய்து கொள்ளப்பட்ட பாரிஸ் ஒப்பந்தத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கின்றது என்றும், ஐரோப்பிய வல்லரசுகளினால் அது மாற்றி அமைக்கப்படவேண்டும் என்றும் அவ்வரசாங்கம் வற்புறுத்திற்று.

அந்த ஒப்பந்தத்தின் ஒரு சில நிபந்தனைகளை மட்டுமன்றி, முழு ஒப்பந்தத்தையும் எந்த மாநாட்டின் பரிசீலனைக்கும் சமர்ப்பிக்க ரஷியா விரும்பவில்லை. ஆகவே, இங்கிலாந்துக்கும் ரஷியாவுக்கும் இடையே எந்த நிமிடத்திலும் போர் மூண்டுவிடும்போல் இருந்தது. போருக்கான தயாரிப்புகளில் இங்கிலாந்து மிகத் தீவிரமாக முனைந்திருந்தது; இந்தியப் படைகளைக்கூட மால்டா தீவிற்கு அனுப்பி வைத்தது. போரை எதிர்த்த டெர்பி பிரபுவும், குடியேற்ற நாடுகள் துறையின் அமைச்சராய் விளங்கிய கார்னர்வான் பிரபுவும் (Lord Carnarvan) அமைச்சரவைக் குழுவிலிருந்து தம் பதவியை ராஜினாமா செய்து விட்டனர். இறுதியில், போரை விரும்பிய கட்சியே நிலைத்து நின்றது. ஆனால், ரஷியப் பேரரசர் போரை விரும்பவில்லை. கடைசி நேரத்தில், முற்குறிப்பிட்ட அந்த நிபந்தனைகளை ஒரு மாநாட்டின்முன் சமர்ப்பிப்பதற்கான ஒப்பந்தம் இரு அரசுகளுக்குமிடையே ஏற்பட்டது. இவ்வாறுகப் போரும் தவிர்க்கப் பட்டது. அந்தரங்கமாக இருக்க வேண்டுமென்று மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆனால் இங்கிலாந்தில் எவ்விதமாகவோ வெளியாகிவிட்ட ஒப்பந்தத்தைக் கண்ணுற்ற ஆங்கிலப் பொதுமக்கள் வியப்புற்றனர். அதாவது, பல்கேரியாவைப் பொறுத்தவரையில் ஒருசலுகையை ரஷியா வழங்குமானால், பிரிட்டிஷ் அரசாங்கம் மாநாட்டில் ஸான் ஸ்டீஃபனோ

வின் முக்கிய நிபந்தனைகளை ஆதரிக்கும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. உருவாக்கப்பட இருந்த பெரும்பல்கேரியா, இந்தஒப் பந்தத்தின்படி, மூன்று பகுதிகளாகத் துண்டிக்கப்படவேண்டும். டான்யூபுக்கும் பால்கன் மலைகளுக்கும் இடையிலுள்ள பகுதியை ஸான் ஸ்டீஃபனே ஒப்பந்தப்படி அமைத்துக்கொள்ளவேண்டும். அதன் இரண்டாம் பகுதிக்கு — பால்கன் மலைகளுக்குத் தெற்கில் உள்ள பகுதிக்கு — கிழக்கு ருமேலியா எனப் பெயரிட வேண்டும்; இது சுல்தானின் சற்று நேர்முகமான ஆட்சிக்குட்பட்ட சுயாட்சி பெற்ற மாநிலமாக இருக்க வேண்டும். மூன்றும் பகுதி — அதாவது, ஏஜியன் கடலோரத்தில் பல்கேரியர்கள், ஸெர்பியர்கள், கிரேக்கர்கள், ஒருசில முஸ்லிம்கள் ஆகியவர்கள் எல்லாரும் அடங்கியிருந்த கலப்பு மக்கள் தொகையைக் கொண்டிருந்த பகுதி, சிறந்த நிர்வாகம் அங்கே உருவாக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் சுல்தானுக்கே திருப்பிக் கொடுக்கப் படவேண்டும். இந்தப் பகுதி மாஸிடோனியா எனப் பெயரிடப் பட்டது.

வல்லரசுகளின் மாநாடு பெர்லின் நகரில் பிஸ்மார்க்கின் தலைமையில் 1878, ஜூன் 13ஆம் நாள் அன்று கூடிற்று. 1815ஆம் ஆண்டில் வியன்னாவில் கூடிய மாநாட்டிற்குப் பிறகு இதுதான் முக்கிய மாநாடாக விளங்கிற்று. வல்லரசுகள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி வைத்தன. இங்கிலாந்து பீக்கன்ஸ்ஃபீல்ட் பிரபுவையும் சாலிஸ்பரி பிரபுவையும் அனுப்பி வைத்தது ரஷியா தன் பிரதிநிதிகளாக இளவரசர் கோர்சகாஃபையும் கௌண்ட் ஸ்கெவலாப்பையும் அனுப்பியது. பிரான்ஸின் பிரதமர் வாட்டிங்க்டன் என்பவர் தம் நாட்டின் பிரதிநிதியாகச் சென்றார். இத்தாலியின் பிரதிநிதி அதன் வெளிநாட்டு அமைச்சரான கௌன்ட் கோர்டி என்பவராவார். கௌண்ட் ஆண்டிரஸ்ஸி ஆஸ்ட்ரியாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார் தக்க தகுதி வாய்ந்த ஒரு பிரதிநிதியை சுல்தானால் தேர்ந்தெடுக்க முடியவில்லை போலும்! கார்தியோடோரி என்ற ஒரு கிரேக்கரும் முகம்மத் அலீ என்பவரும் சுல்தானின் பிரதிநிதிகளாக மாநாட்டில் கலந்து கொண்டனர். ஜெர்மனியின் பிரதிநிதி பிஸ்மார்க் என்பவர் ஆவார். அவர் நேர்மையான தரகராக அம் மாநாட்டில் கலந்து கொண்டார். ஸான் ஸ்டீஃபனே ஒப்பந்தத்தினால் தோன்றிய எல்லாப் பிரச்சினைகளையும் ஆராய்வதற்கான அதிகாரம் அம் மாநாட்டிற்கு அளிக்கப்பட்டிருந்த போதிலும், இங்கிலாந்துக்கும் ரஷியாவுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் அதனுடைய கரங்கள் பெருமளவும் கட்டுண்டிருந்தன என்பதை மாநாடு உணர்ந்து கொண்டது. ஏற்கெனவே தீட்டப்பட்டிருந்த

திட்டத்தின்படி பெரும் பல்கேரியாவை மூன்றுகத் துண்டிப் பதைத் தவிர மாநாட்டிற்கு வேறு வழி தோன்றவில்லை. அவ் விதமாக அதைத் துண்டிப்பதுதான் அந்த இரண்டு நாடுகளுக்கு மிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். செயற்கையாக உருவாக்கப்பட்ட கிழக்கு ரூமேலியாவைப் பொறுத்தவரையிலும் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கை யில், துருக்கியை ஆதரித்த பீகன்ஸ்ஃபீல்ட் பிரபு சுல்தான் தமது எல்லைக் கோட்டைகளில் படைகளை வைத்துக் கொள்வதற்கான உரிமையைப் பெற்றிருக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். இந்த உரிமை அளிக்கப்படவில்லை என்றால் மாநாட்டையே கலைத்துவிடுவதாகவும் அவர் அச்சுறுத்தினர். இதற்கு ரஷியா மிகத் தீவிரமாக எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், இறுதியில் விட்டுக் கொடுக்க நேரிட்டது. இது உண்மையில் பீக்கன்ஸ் ஃபீல்ட் பிரபுவுக்கு பெரும் வெற்றியாகும்.

பாஸ்னியா, ஹெர்ஸிகோவினா என்ற இரு மாநிலங்களைப் பொறுத்த வரையிலும், பெர்லின் மாநாடு ஸான் ஸ்டீஃபனோ ஒப்பந்தத்தில் மிக முக்கியமான மாறுதலைப் புகுத்தியது. பிஸ்மார்க்கின் வற்புறுத்தலின் பேரில் இவ் விரண்டு மாநிலங் களும் சுயாட்சி அளிக்கப்படாமல், ஆஸ்ட்ரியர்கள் அங்கே குடி யேறுவதற்கும், அவர்களே அவற்றை நிர்வகிப்பதற்கும் ஆஸ்ட்ரி யாவிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனாலும், பெயரளவில் அவை துருக்கிப் பேரரசின் ஓர் இன்றியமையாத பகுதியாகவே இருந் தன. மாண்ட்டிநீக்ரோவிற்கு ஸான் ஸ்டீஃபனோ ஒப்பந்தப்படி அளிக்கப்பட்ட நிலப்பகுதியை அந்த மாநிலம் விட்டுக் கொடுக்க நேரிட்டது. கிரீஸ் தன் ஆட்சிப் பகுதியை விஸ்தரிக்க வேண் டும் என்று வற்புறுத்திய கோரிக்கையை பிரான்ஸின் பிரதிநிதி கள் ஆதரித்தார்கள் எனினும், அதை பீக்கன்ஸ்ஃபீல்ட் மிகத் தீவிரமாக எதிர்த்தார். கிரீஸின் ஆட்சிப் பகுதியின் எல்லைகளில் தெஸ்ஸாலியும் எப்பிரஸின் ஒரு பகுதியும் அடங்கி யிருக்க வேண் டும் என்ற கோரிக்கையோடு மாநாடு நிறுத்திக் கொண்டது. முக்கிய சீர்திருத்தங்களை, வல்லரசுகளால் நியமிக்கப்படும் குழு ஒன்றின் சிபாரிசுகளின் பேரில் சுல்தான் தமது ஐரோப்பிய மாநிலங்களில் நிர்வாகத்திலும் சட்ட முறையிலும் புகுத்த வேண் டும் என்றும் வற்புறுத்தப்பட்டது.

ஆசியாவில் ரஷியா ஒருசில மாநிலங்களைத் தன்வசப்படுத்தி வைத்திருப்பதையும், எர்ஸிரோம் மற்றும் பாதஜீத் ஆகிய பகுதி களை சுல்தானுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டதையும் மாநாடு உறுதிப்படுத்தியது. அர்மீனியர்களுக்கு நல்ல அரசு அமைத்துக்

கொடுக்கப்படும் என்றும், குர்துகள் சிர்க்காசியர்கள் ஆகியவர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது. முக்கியத்துவமற்ற மற்றும் ஒரு சில மாறுதல்களும் ஸான் ஸ்டீஃபனோ ஒப்பந்தத்தில் புகுத்தப்பட்டதற்குப் பிறகு ஜூலை 13, 1878 அன்று பெர்லின் ஒப்பந்தத்தில் வல்லரசுகள் கையொப்பமிட்டன.

இவ்விதமான ஏற்பாடு பெரும்பாலும் பீக்கன்ஸ்ஃபீல்டின் சொந்த முயற்சியால் உருவானதாகும். வெற்றி வாகை சூடிக் கொண்டு அவர் தாயகம் திரும்பினர். தன்மானத்தை இழந்து விடாமல், அமைதியை நிலைநாட்டிக் கொண்டதாக அவர் கூறிக் கொண்டார். விசால பல்கேரியாவைப் பொறுத்தவரையிலும் ஸான் ஸ்டீஃபனோ ஒப்பந்தத்தை பெர்லின் ஒப்பந்தம் நிராகரித்து விட்டபோதிலும், ஐரோப்பாவில் சுல்தானுக்குரிய மற்றப் பகுதிகள் அடங்கிய துருக்கிப் பேரரசை அது துண்டுபடுத்திற்று. அதனால் எண்பது லட்சம் பேர் சுல்தானின் ஆட்சியினின்றும் விடுதலை பெற்றனர். இம் மாபெரும் சாதனை பெரும்பாலும் ரஷியாவின் முயற்சியினால் தோன்றியதாகும். ஆனாலும், அது பெஸ்ஸரேபியாவிலும் அர்மீனியாவிலும் பெற்ற இலாபங்கள் அம் முயற்சிக்கு உகந்தனவாக இருக்கவில்லை. பல்கேரியா பிளவுபடுதலுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கையாண்ட தூதரகக் கொள்கையே காரணமாகும். தன் திட்டத்திற்கு இணக்கம் தெரிவிக்கப்பட வில்லையாயின், போர் மூண்டுவிடும் என்று அச்சுறுத்தியே பிரிட்டன் அதனைச் சாதித்துக்கொண்டது. ஆனாலும், விளைவுகள் அவ்வளவு சிறப்பானவையாக இருக்கவில்லை. இவ்விதமாகத் துண்டிக்கப்பட்ட மாநிலங்களில் இரண்டு மாநிலங்கள் ஏழு ஆண்டுகட்குப் பிறகு மீண்டும் இணைக்கப்பெற்றன. இறுதியில் அவை சரிசமமான அளவில் ஸெர்பியாவுடனும் கிரீஸுடனும் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

பல்கேரியாவின் துண்டிப்பினால் இஸ்தம்பூலின்மீது துருக்கியர்களின் ஆதிக்கத்தை பெர்லின் ஒப்பந்தம் வலுப்படுத்திற்று என்பதனால் பிரிட்டனுக்கு நிரந்தரமான நலன் ஏற்பட்டது என்று கருதினாலன்றி, மற்ற எவ்வகையிலும் அந் நாட்டிற்கு அவ் வொப்பந்தத்தினால் எவ்வித இலாபமும் ஏற்படவில்லை. இருப்பினும், நிலத்திற்காக ஏற்பட்ட சச்சரவினால் அந் நாடும் ஒரு பகுதியைப் பெற்றுக்கொண்டது. பெர்லின் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தவர்கள் வியப்புறும் வண்ணம் வெளியிடப்பட்ட மற்றோர் அந்தரங்க ஒப்பந்தத்தின்படி, பாஸ்னியா, ஹெர்ஸிகோவினா ஆகிய மாநிலங்கள் ஆஸ்ட்ரியாவின் ஆட்சிப் பொறுப்

பில் விட்டுவைக்கப்பட்டாற் போன்றே சைப்பிரஸ் தீவு பிரிட்டனுடைய பொறுப்பில் விடப்பட்டது. இதற்கு ஈடாக பிரிட்டன் ஆசியாவிலிருந்த சுல்தானுடைய உடைமைகளைப் பாதுகாப்பதாக உறுதியளித்தது. ஆனால், சின்ன ஆசியாவின் கிழக்குப் பகுதியிலுள்ள அர்மீனிய மக்களின் நலனுக்காகச் சிறந்த அரசாங்கத்தை சுல்தான் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில்தான் அந்த உத்தரவாதம் அளிக்கப்பட்டது. அந்த நிபந்தனை நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது மிகவும் சரியே என்பதை வற்புறுத்துவதற்காக, சைப்பிரஸைப் பெறுவதனால் பிரிட்டன் ஒரு முக்கிய தளத்தைப் பெறுகின்றது என்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் வாதிக்கப்பட்டது. அத் தீவு பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டில் இருக்கும் வரையில், பிரிட்டன் சுல்தானுக்கு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை மானியமாக அளித்துவரும் என்றும் உறுதியளிக்கப்பட்டது. இதனால் பின்னாளில் அத் தீவில் வசித்த மக்களுக்குப் பெரும் தொல்லைகள் ஏற்பட்டன. 1914-ல் பிரிட்டன் அதனை நிரந்தரமாகத் தன் வசப்படுத்திக்கொண்டு விட்டது. சுல்தானுக் கெதிராக கிளாட்ஸ்டன் உருவாக்கிய இயக்கம் ஒரு முக்கிய விளைவினை உண்டாக்கிற்று. அதாவது, பால்கன் பகுதியில் வாழும் கிறித்தவக் குடிமக்களின் சார்பாக ரஷியா தலையிடுவதைத் தடுப்பதற்காக பிரிட்டன் வன்முறையைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்த தேவையை அது தவிர்த்துக் கொண்டது. இவ்வொப்பந்தத்தின் விளைவாக, பெருவாரியான மக்களுடைய துயர் குறைந்தது என்றும், கிழக்கில் மக்களின் மகிழ்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அது ஒரு பெரும் கருவியாக இருந்தது என்றும் கிளாட்ஸ்டன் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார். பிரிட்டன் அவ் வொப்பந்தத்தைச் செய்துகொண்டதன் மூலம் முடமான பந்தயக் குதிரையின்மீது பணத்தைக்கட்டி பிரிட்டன் கோட்டை விட்டது என்று பின்னாளில் சாலிஸ்பரி குறிப்பிட்டார்.

ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட அடுத்த மூன்று ஆண்டு காலத்தில் நிபந்தனைகளைச் செயல்படுத்துவதில் வல்லரசுகள் தீவிரமாக ஈடுபட்டிருந்தன. இரண்டு முக்கிய பிரச்சினைகள் பெருந் தொல்லையை அளித்தன. நிபந்தனைகளை நிறைவேற்ற முடியா வகையில் சுல்தான் தம்மால் இயன்ற எல்லா வகை முட்டுக்கட்டைகளையும் போட்டார். ஏட்ரியாட்டிக் கடலில் மாண்ட்டிநீக்ரோவினிடம் ஒரு துறைமுகம் ஒப்படைக்கப்படும் என்று ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனாலும்,

1880-ல் கிளாட்ஸ்டன் மீண்டும் இங்கிலாந்தில் பதவி ஏற்றதற்குப் பிறகுதான் சுல்தான் இதுபற்றி மிகத் தீவிரமாக வற்புறுத்தப் பட்டார். சுல்தானுக்கெதிராக ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்காக ஏட்ரியாட்டிக் கடற்கரைக்குக் கூட்டுக் கப்பற்படை ஒன்றை அனுப்புமாறும் கிளாட்ஸ்டன் வல்லரசுகளை வற்புறுத்தினார். ஆனாலும் அவரது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அது பயன்படவில்லை. ஏட்ரியாட்டிக் கடற்கரை முற்றுகையிடப் படுவதை சுல்தான் பொருட்படுத்தவில்லை. சின்ன ஆசியாவுக்குத் தன் கப்பற் படைகளை அனுப்புவதாக பிரிட்டிஷ் அரசாங்கம் அச்சுறுத்தியதற்கும், வருமானத்தை நிறுத்திவிடக் கூடிய வகையில் சுங்க சத்திரங்களைக் கைப்பற்றப் போவதாக அச்சுறுத்தியதற்கும் பிறகுதான் சுல்தான் அடிபணிந்தார். இறுதியாக டல்சிக்னோ (Dulcigno) துறைமுகமும் அதைச் சுற்றியிருந்த மாவட்டமும் மாண்ட்டிநீக்ரோவிடம் ஒப்படைக்கப்பட்டு, ஏட்ரியாட்டிக் கடற்கரைக்குப் போவதற்கான உரிமையும் அதற்கு அளிக்கப்பட்டது.

கிரீஸின் நிலை மேலும் தொல்லையளிப்பதாக இருந்தது. கிரீஸுக்கு எந்த ஆட்சிப் பகுதியையும் ஒப்படைப்பதற்கான திட்டவட்டமான வாக்குறுதியோ உத்தரவாதமோ பெர்லின் ஒப்பந்தத்தில் காணப்படவில்லை. அவ்விதம் கொடுக்கலாம் என்று ஒருவகையான சிபாரிசைத்தான் அது செய்தது. அதனை ஏற்றுக்கொள்வதும் விட்டுவிடுவதும் சுல்தானின் பொறுப்பில் விடப்பட்டன. பால்கன் பகுதிகளின் விடுதலைப் போரில் கிரீஸ் கலந்துகொள்ள வில்லையாதலால், அவ்வித உரிமை எதையும் அது பாராட்டிக் கொள்வதற்கில்லை. ஆனால், அதன் எல்லைகளைப்பற்றிய குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவையை சுல்தான் உணர்ந்திருந்தார். தெஸ்ஸாலீ மற்றும் எப்பிரஸ் ஆகிய பகுதிகளை கிரீஸில் அடங்கியிருக்குமாறு செய்வதற்கான ஓர் எல்லை வரையறையினை வகுப்பதற்கு பெர்லினில் கூடிய வல்லரசுகளின் மற்றொரு மாநாடு ஆதரவு தெரிவித்தது. இதனை கிரீஸ் வரவேற்றது; ஆனால், சுல்தான் அதனை நிராகரித்துவிட்டார். ஆனால், வல்லரசுகள் தம் கருத்தினை வன்முறைக் கட்டாயத்துடன் நிறைவேற்ற முன்வரவில்லை. மாநாட்டில் கிரீஸுக்கு ஆதரவு காண்பித்த பிரெஞ்சு அரசு பின்வாங்கிக்கொண்டது. இறுதியில் இரண்டு ஆண்டு காலமாகத் தூதரக முயற்சிகள் செய்ததற்கும் பிறகு சுல்தானிடம் பிரிட்டிஷ் தூதராக இருந்த கோஷன் (Goschen) என்பவரின் முயற்சியின் பேரில் சமரசம் ஏற்பட்டது. தெஸ்ஸாலீ முழுவதையும், எப்பிரஸின் மூன்றில் ஒரு பகுதியையும் கொண்டிருக்கக்கூடிய பகுதிகள் கிரீஸுக்காக வரையறுத்துக் கொடுக்

கப்பட்டன. இந்த எல்லைக் கோட்டிலிருந்து முஸ்லிம் அல்பேனியர்கள் குடியிருந்த ஜனீனுவும் இதர மாவட்டங்களும் விலக்கப்பட்டிருந்தன. கிரேக்கர்கள் எண்ணிக்கையில் அதிகமாயிருந்த ஒரு சில மாவட்டங்களும் விலக்கப்பட்டிருந்தன. இருப்பினும், அப்பொழுது இருந்த சூழ்நிலையில் இந்த ஏற்பாடு எல்லா வகையிலும் சிறப்பு மிக்கதாகவே தென்பட்டது. மேலும் பரிபூரண ஏற்பாடு ஒன்று உருவாவதற்கு கிரீஸ் இன்னும் சில ஆண்டு காலம் காத்திருக்க வேண்டியிருந்தது.

பெர்லின் ஒப்பந்தத்தின்படி, சட்ட முறையிலும் நிர்வாகத்திலும் மிக அவசியமாயிருந்த சீர்திருத்தங்களைப் பேரரசின் ஐரோப்பிய மாநிலங்களில் புகுத்துவதற்காக வல்லரசுகள் 1880-ல் ஒரு குழுவை நியமித்தன. அதில் பிரிட்டனின் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட எட்மண்ட் ஃபிட்ஸ்மாரிஸ் (Edmund Fitzmaurice) என்பவர் சீர்திருத்தத்திற்கான முழுமையான திட்டம் ஒன்றைத் தீட்டினர். அதனைக் குழு ஏற்றுக்கொண்டது. ஒப்பந்தத்தின்படி, அது சுல்தானிடமும் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளுக்குப் பிறகு 1908ஆம் ஆண்டு வரையிலும் இருபத்தெட்டு ஆண்டு காலம்வரை துருக்கி வெளிநாட்டுப் போர்களிலிருந்து விடுதலை பெற்று அமைதியாக வாழ்க்கை நடத்தி வந்தது. இதனால் சுல்தானால் அளிக்கப்பட்டதும், பெர்லின் ஒப்பந்தத்தினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டதுமான சீர்திருத்தத்திற்கான வாக்குறுதிகளை மாஸிடோனியாவிலும் மற்ற பால்கன் மாநிலங்களிலும், கிரீட், அர்மீனியா ஆகியவற்றிலும் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. ஆனாலும், கிரீட்டைத் தவிர மற்ற எந்தப் பகுதியிலும் அவ் வாக்குறுதிகளை சுல்தானால் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. வளர்ச்சியைப் பெருக்கக்கூடிய சீர்திருத்தத்திற்கான திட்டம் எதையுமே சுல்தான் எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ளவுமில்லை. தீட்டப்பட்ட திட்டம் வெற்றுக் காகிதமாகவே கருதப்பட்டது. ஒழுங்கீனமும் முறையற்ற ஆட்சியும் தணியாமல் நிலைத்திருந்தன.

உத்மானியப் பேரரசு நிதானமாக, ஆனாலும், நிச்சயமாகச் சீர்குலைந்து கொண்டிருப்பதற்குக் காரணங்கள் பல தோன்றிக் கொண்டிருந்தன. அவற்றுள் மிக முக்கியமானது, பல்கேரியாவுடன் அது கொண்டிருந்த தொடர்பாகும். பெர்லின் ஒப்பந்தத்தின்படி, பெரிய பல்கேரியா துண்டிக்கப்பட்டது. அவ்

விதம் துண்டிக்கப்பட்ட மிகச் சிறிய பகுதி 'பல்கேரியா' என்று அழைக்கப்பெற்றது. அது வல்லரசுகளின் இணக்கத்துடன், பாட்டன் பர்க்கின் அலெக்ஸாந்தர் (Alexander of Battenburg) என்ற, பெரும் தகுதியும் சாதனைகளை ஆற்றும் வல்லமையும் படைத்த இளைஞரைத் தன் அரசராகத் தேர்ந்தெடுத்தது. பல்கேரியாவிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்த கிழக்கு ருமேலியா, உடனடியாக சுல்தானுக்குக் கீழ்ப்படிந்தது; ஆனலும், சுயாட்சி நிலைபெற்ற ஒரு தனி மாநிலமாக அமைக்கப்பட்டது. சுல்தானுல் நியமிக்கப்பட்ட கிறித்தவ ஆளுநர் ஒருவரிடம் அதன் பொறுப்பு விடப்பட்டது. அவராலும், பீகன்ஸ்பீல்டின் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை. தனித்தனி சுங்கவரி முறைகளால் ஏற்பட்ட பொருளாதாரத் தொல்லைகளும் நாட்டுப் பற்றின் அடிப் படையில் அமைந்திருந்த அவாக்களும் ஐக்கியத்தை அவசிய மாக்கின. இரு மாநிலங்களின் சட்டமன்றத்தினரும் அவ்வித ஐக்கியத்தை இடையருமல் வற்புறுத்தி வந்தனர்.

ஆனல், அவ்விரண்டும் ஒன்றுபடுவதை ரஷியா இப் பொழுது எதிர்த்தது. ஆனலும், நம்பமுடியாத வகையில் சாலிஸ்பரியின் வற்புறுத்தலின் பேரில் பிரிட்டன் அதற்கு ஆதரவு தெரிவித்தது. அவ்விரண்டு மாநிலங்களும் வேறு பட்டிருக்க வேண்டும் என்று அவரும் பீக்கன்ஸ்ஃபீல்ட் பிரபுவும் பெர்லின் மாநாட்டில் தீவிரமாக வற்புறுத்தியவர்களாவர். அவ் விதக் கருத்தினை ஏற்றுக்கொள்ளுமாறு அவரை இஸ்தம்பூலில் சர் வில்லியம் வைட் (Sir William White) என்ற பிரிட்டிஷ் தூதர் வற்புறுத்தினர். ஐக்கியப்பட்ட பல்கேரியா எஞ்சியிருந்த துருக்கிப் பகுதியை ரஷியா மேலும் பறித்துக்கொள்ளாதபடி தடுக்கக்கூடும் என்பது அவரது கருத்தாகும்.

பல்கேரியர்களைப் பொறுத்தவரையிலும் நல்வசமாக சுல் தானும் அதே முடிவுக்கு வந்திருந்தார். ஆகவே, 1885-ல் இரு மாநிலங்களும் ஒன்றுபடவேண்டும் என்று வற்புறுத்தி ஒரு பல் கேரியப்படை கிழக்கு ருமேலியாவை அந் நாட்டு மக்களின் முழு ஆதரவுடன் கைப்பற்றிக்கொண்டதும், சுல்தான் உண்மையான எதிர்ப்பு எதையும் தெரிவிக்கவில்லை. ஐக்கியத்தை, ஏற் கெனவே முடிந்துவிட்ட ஒரு செயலாக ஏற்றுக் கொள்ளுமாறு அவர் வற்புறுத்தப்பட்டார். பெர்லின் ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்பட்ட தூதரக இன்னலில் சுல்தான் 1886-ல் பல்கேரிய இள வரசரையே ருமேலியாவின் ஆளுநராக நியமித்துத் தவிர்த்துக் கொண்டார். அந் நாள் தொட்டு இரண்டு நாடுகளின் சட்ட மன்றத்தினர்களும் ஒரு மன்றத்தின் உறுப்பினர்களாக சோஃபி

யாவில் கூடினர். செயல் முறையில் ஐக்கியமும் ஏற்பட்டு விட்டது. இதனால் ஸெர்பியாவில் பெரும் மனநிறைவற்ற நிலை ஏற்பட்டது. அண்டைப்புற நாட்டின் ஆக்கிரமிப்புக் கொள்கையினால் பொருமை கொண்டிருந்த ஸெர்பியா நஷ்ட ஈடு கோரிற்று. ஆகவே, ஸெர்பியாவிற்கும் பல்கேரியாவிற்கு மிடையே போர் மூண்டது. சிலிவ்னிட்ஸாவில் (Slivnitza) மூன்று நாள் போருக்குப் பிறகு எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாக, பல்கேரியர்கள் பெரும் வெற்றி கண்டனர். வெற்றிபெற்ற படையினர் பெல்கிரேடை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர். ஆனால், வல்லரசுகள் மீண்டும் குறுக்கிட்டுப் போருக்கு முன்பிருந்த நிலையின் அடிப்படையில் சமரசம் ஏற்படவேண்டும் என்று வற்புறுத்தின. ரஷிய பேரரசர் தம் உறவினரான அலெக்ஸாந்தரின் செயலை மிகவும் கடுமையாக வெறுத்தார். ஆகவே, ரஷியாவின் தூண்டுதலின்பேரில் அந்த வாலிப அரசர் கடத்தப்பட்டு, பதவியிலிருந்து விலகிக்கொள்ளுமாறு வற்புறுத்தவும் பட்டார். அவரை ஆதரித்து பல்கேரியாவில் தீவிர இயக்கம் ஒன்று உருவாயிற்று. ஆகவே, அவர் விடுதலை பெற்று, பெரும் ஆரவாரத்துடன் பல்கேரியாவுக்குத் திரும்பினர். ஆனாலும், இந்த நெருக்கடியான வேளையில் அவர் மனமுடைந்து விட்டதனால், அவரை ஆதரித்த மக்களுடைய வேண்டுகோளுக்கு இணங்காமல், ரஷிய அரசரின் கோரிக்கைக்கே அடிபணிந்து, பதவியிலிருந்து விலகிக்கொண்டார். அவருடைய இடத்திற்கு சாக்ஸே-கோபர்கின் ஃபெர்டினன்ட் (Ferdinand of Saxe-Coburg) என்ற இளவரசர் நியமிக்கப்பட்டார்.

சுல்தான் அப்துல் ஹமீதின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட சர்வதேசத் தொல்லைக்குக் கிரீட்டும் ஒரு காரணமாகும். பெர்லினில் கூடிய வல்லரசுகள் அதனை கிரீஸுடன் சேர்த்துக் கொள்வதற்கோ அல்லது அவ்விதம் செய்து கொள்ளுமாறு சுல்தானுக்கு சிபார்சு செய்வதற்கோ மறுத்துவிட்டன. புதிய கிரித்தவ ஆளுநர் ஒருவருடைய தலைமையில் சீர்திருத்தம் பெற்ற நிர்வாக முறை ஒன்றை அத் தீவில் நிலைநாட்ட வேண்டும் என்பதற்கான உத்தரவாதத்தை அளித்ததுடன், அவ்வல்லரசுகள் திருப்தி பெற்று விட்டன. இதனை நிறைவேற்றும் வகையில் பெரும் நிர்வாகத் திறமை பெற்றவரும், சுல்தானின் கிரேக்கக் குடிமகனுமான ஃபோட்டியாடிஸ் பாஷா (Photiades Pasha) என்பவர் அத் தீவின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். பிரதிநிதிகளைக்கொண்ட சட்டமன்றம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. ஒரு சில ஆண்டுக் காலத்திற்கு அத் தீவில் அமைதியும் வளமும் நிலைத்திருந்தன. ஆனால், பின்னாளில் ஃபோட்டியாடிஸ் ஓய்வு பெற்றுக்கொண்ட

தும், சுல்தான் முஸ்லிம் ஆளுநர் ஒருவரை அத் தீவின் ஆட்சியாளராக நியமித்துத் தம் அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ள முயன்றார். இதைத் தொடர்ந்து 1896 ல் கிளர்ச்சி ஏற்பட்டது. அத் தீவில் எண்ணிக்கையில் அதிகமாக இருந்த கிரேக்கர்களுக்கு கிரேக்க அரசும் கிரேக்க மக்களும் பெரும் ஆதரவு கொடுத்தனர். சுல்தானுக்கும் கிரேக்கர்களுக்கும் இடையே போர் மூண்டது. வான்டெர் கோல்ட்ஸ் (Von der Goltz) என்ற படைத்தலைவரின் தலைமையில் ஜெர்மானிய அதிகாரிகளால் பயிற்சி அளிக்கப்பட்ட துருக்கியர்ப் படை இப் பொழுதுதான் முதன் முதலாகத் தன் திறமையை வெளிப்படுத்த வாய்ப்புப் பெற்றது. முப்பது நாட்களில் அது கிரேக்கப் படையை முற்றிலுமே முறியடித்துத் தெஸ்ஸாலீயையும் எப்பிரஸையும் கைப்பற்றிக்கொண்டது அதன் பேரில் வல்லரசுகள் குறுக்கிட்டுத் தமது வெற்றியைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளாதவாறு சுல்தானைத் தடுத்தன. போரிட்டுக்கொண்டிருந்தவர்களிடையே அமைதிநிலவவேண்டும் என்று மீண்டும் வற்புறுத்தப்பட்டது. கிரீஸ் தனது எல்லைக்குட்பட்டிருந்த ஒரு சிறிய நிலப்பகுதியை விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று; போருக்காகச் செலவான 40 லட்சம் பவுன் தொகையையும் அது கொடுக்க நேரிட்டது.

அதன் பேரில் துருக்கியர்கள் தெஸ்ஸாலீயைக் காலி செய்து விட்டனர். அத்துடன், பெரும்பாலான முஸ்லிம் பேக்கள் (அதாவது நிலக்கிழார்கள்) மறைந்தனர். அச் சமயத்தில் சுல்தான் வைத்திருந்ததைவிட உறுதியான கப்பற்படை ஒன்றினை கிரீஸ் பெற்றிருந்த போதிலும், கடற் போரின்போது அது செயலற்றே இருந்தது. துருக்கிப்படைகள் கிரீட் தீவின்மீது படையெடுப்பு நிகழ்த்தி அதை ஓரளவு கைப்பற்றவும் முடிந்தது. சுல்தானுடன் நட்புத் தொடர்புகொள்ள விரும்பிய கைஸரின் ஜெர்மனியைத்தவிர, மற்ற நான்கு வல்லரசுகளும் வருங்காலத்தில் இராணுவ ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்காக வேண்டித் தீவை முற்றுகையிட்டு, அதன் கடலோரத்திலிருந்த துறைமுகங்களைக் கைப்பற்றிக்கொண்டு, இறுதியில் அங்கிருந்த துருக்கிப்படைகளை வெளியேறுமாறு வற்புறுத்தின. கிரீஸின் மன்னருடைய மகனை ஜார்ஜ் என்பவர் வல்லரசுகளின் வற்புறுத்தலின் பேரில் தீவின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அத் தீவிற்குரிய சட்டமன்றமும் உயிர்ப்பிக்கப்பட்டது. இந்த ஏற்பாடு தாற்காலிக ஏற்பாடாகவே இருந்தது; 1908-ல் துருக்கியில் புரட்சி ஏற்படுகிற வரையிலும் அந்த ஏற்பாடு நிலைத்திருந்தது. பாஸ்னியா, ஹெர்ஸிகோவினு ஆகியவற்றை ஆஸ்ட்ரியா இணைத்

துக்கொண்டபோது கிரீட்டின் சட்டமன்றம் கிரீஸுடன் சேர்ந்து கொண்டதாக அது பிரகடனம் செய்தது. அந் நாள் மூதல் கிரீஸுடன் கிரீட் இணைத்துக் கொள்ளப்பட்டுவிட்டது. அதனை வல்லரசுகளும் ஏற்றுக்கொண்டிருந்தன.

அர்மீனியர்களைப் பொறுத்தவரையிலும், பெர்லின் உடன் படிக்கையின்படி சுல்தான் அளித்த வாக்குறுதிகளைச் செயல் படுத்தி வைப்பதில் வல்லரசுகள் அவ்வளவு வெற்றிபெறவில்லை. அர்மீனியர்கள் குடியிருந்த மாநிலங்களுக்காகக் கோரப்பட்ட சீர்திருத்தங்களுக்கான திட்டங்களை உடனடியாகச் செயல் படுத்த சுல்தான் வாக்குறுதி அளித்திருந்தார். எவ்வெச் சீர் திருத்தங்களைச் செயல்படுத்தி யுள்ளார் என்பதை சுல்தான் அவ் வப்பொழுது வல்லரசுகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. இந்த நிபந்தனைகளே மிகவும் முக்கிய மானவை. ஏனெனில், 1877-ல் துருக்கியின் ஆசிய மாநிலங் களை ரஷியர்கள் தாக்கிக் கைப்பற்றிக் கொண்ட எர்ஸோரம் மற்றும் பாஎஜீத் என்ற மாநிலங்கள் கொள்கை யளவில் இந்த நிபந்தனைகளின்படிதான் சுல்தானுக்குத் திருப்பிக் கொடுக்கப் பட்டன. இந்த நிபந்தனைகள் செயல்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்திருக்குமாயின், அர்மீனியர்கள் குடியிருந்த மாநிலங்களை மீண்டும் சுல்தானுக்குக் கொடுத்துவிடும் அளவிற்கு வல்லரசுகள் கொடூரமாக நடந்து கொண்டிருக்க மாட்டா என் றும் கருதலாம். அர்மீனியாவைப் பொறுத்தவரையிலும் 1888-ல் சாலிஸ்பரி பிரபு சுல்தானிடம் சற்றுக் கடுமையாகவே பேசி விட்டார். சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்படவில்லை யென்றால், வன்முறையைக் கடைப்பிடிக்கப் போவதாகவும் அவர் அச்சுறுத் தினார். அப்படி அச்சுறுத்தப்பட்ட போதிலும் சுல்தான் எந்தச் சீர்திருத்தத் திட்டங்களையும் நிறைவேற்றவில்லை. 1892-ல் கிளாட்ஸ்டன் மீண்டும் பதவிக்கு வந்தபோது அர்மீனியர்களின் நலனுக்காக சுல்தானிடம் வாதாடினார். ஆனால், அப்பொழுது அவரை மற்ற வல்லரசுகள் எவையும் ஆதரிக்கவில்லை. இறுதியில் பிஸ்மார்க் பொறுமையை இழந்து அவ் விஷயத்தைக் கைவிட்டு விடுமாறு கூறிவிட்டார். அவ் வேளையில், கார்ஸ்ஸைச் (Kars) சுற்றியிருந்த மாவட்டங்களில் குடியிருந்த அர்மீனியர்களை அவர் களுடைய தேசியத் திருச் சபையைக் கைவிட்டு, கிரேக்கத் திருச்சபையில் சேர்ந்து கொள்ளுமாறு ரஷியா வற்புறுத்திக் கொண்டிருந்தது. சுல்தானின் குடிமக்களாக இருந்த அர்மீனி யர்களுக்கு எவ்வகையிலும் ஆதரவு காண்பிக்க அந் நாட்டிற்கு விருப்பம் கிடையாது.

ஆகவே, பெர்லின் ஒப்பந்தத்தின்படி, குர்துகளின் தாக்கு தல்களுக்கெதிராக அர்மீனியர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக சுல்தான் வாக்குறுதி யளித்திருந்த போதிலும், அவருடைய நடத்தையின் விளைவாக, அவர்களால் எவ்விதப் பாதுகாப்பை யும் பெற முடியவில்லை. அமைதியாக வாழ விரும்பிய அர்மீனி யர்களுக்கெதிராகக் குர்துகள சிர்க்காஸியர்கள் ஆகியவர்களின் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே யிருந்தன. அர்மீனியர்கள் எங்குக் கிளர்ந்தெழுந்து விடுவார்களோ என்ற சந்தேகம் பின்னுளில் சுல்தானுக்கு எழுந்தது. ஆங்காங்கே ரஷியர்களுடைய ஆதரவைப் பெற்று, அர்மீனியர்கள் கிளர்ச்சி யும் செய்து கொண்டிருந்தனர். ஆனல், இவற்றை யெல்லாம் சுல்தானின் அரசாங்கம் வெகு எளிதாக அடக்கிவிட்டது. இருப் பினும், அவற்றையெல்லாம் சுல்தான் ஒரு சாக்காகக் கொண்டு துரதிருஷ்டம் பிடித்த அம் மக்களை மீண்டும் படுகொலை செய்து வந்தார். சிறிய அளவில் படுகொலைகள் 1889-ல் தொடங்கின. தொடர்ந்து கொலைகள் நடைபெற்றுக் கொண்டே இருந்தன. அர்மீனியர்களை முற்றிலுமே அழித்துவிட வேண்டும், அல்லது தங்கள் உரிமைகளுக்காகப் பாடுபடாத வகையில் அவர்களைத் தண்டித்து அச்சுறுத்திவிட வேண்டும் என்று சுல்தான் அப்துல் ஹமீது முடிவு செய்துவிட்டார் போலும்! இந்தக் கொள்கை 1894-ல் உச்ச கட்டத்தை எட்டி நின்றது. அர்மீனியர்கள் குடி யிருந்த நாட்டிற்கு ஆய்வாளர்கள் அனுப்பப்பட்டனர். மாவட் டங்களில் வசிக்கும் முஸ்லிம்களை மசூதிகளுக்கு அழைத்து, சுல் தானுடைய விருப்பங்களையும் திட்டங்களையும் அவர்களுக்கு அறிவிக்குமாறு அவ்வாய்வாளர்களுக்கு உத்தரவிடப்பட்டது. அர்மீனியர்களுடைய சொத்துக்களைப் பறித்துக் கொள்வதற்கு அவர்களுக்கு உரிமையளிக்கப்படுகின்றது என்று அம் முஸ்லிம் களுக்கு அறிவிக்கவேண்டு மென்றும் உத்தரவிடப்பட்டது; தேவைப்பட்டால் அவர்களைக் கொன்றும் விடலாம் என்றும் அறி விக்கப்பட்டது. இது முஸ்லிம்களின் சமயவெறியைக் கிளறி விடுவதற்கான முயற்சியன்று; உண்மையில் அது அவர்களுடைய பணப்பித்துப் பேராசையைத் தூண்டி விடுவதற்கான முயற்சியே யாகும்.

அதே சமயத்தில் இச் செயல்களைப்பற்றிய செய்திகள் எது வும் வெளியுலகத்திற்கு எட்டாதபடி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன இந்தக் கொடூரச் செயல்கள் நடைபெற்ற பகுதிகளில் அன்னியர்கள் எவரும் நுழைவதற்கு அனுமதி யளிக்கப்படவில்லை. ஒரு சில இடங்களில்தாம் முல்லாக்கள் இந்த உத்தரவுகள் திருக் குர்ஆனுக்கு மாறுக உள்ளன என்ற

காரணத்தை முன்னிட்டு அவற்றைச் செயல்படுத்த மறுத்து விட்டனர். ஆனாலும், பொதுவாக இந்த உத்தரவுகள் செயல் படுத்தப்பட்டன. கொலையும் கொள்ளையும் நிகழ்த்தப் பெற வேண்டும் என்று மசூதிகளில் பிரசங்கங்கள் நடத்தப்பட்டன. பிட்லிஸ் மாவட்டத்தில் ஸெகி பாஷா என்பவர் இருபத்துநான்கு அர்மீனிய கிராமங்களை அழித்து விட்டார். அங்கிருந்த குடி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்தக் கொடூர மிக்க செயல்களுக்காக சுல்தான் ஸெகி பாஷாவைக் கௌரவித்தார். ஷாக்கிர் பாஷாவின் மூலமாகவும் மற்றும் பல இராணுவ, சிவில் அதிகாரிகளின் மூலமாகவும் சுல்தான் அப்துல் ஹமீது 1895-லும் மீண்டும் 1896ஆம் ஆண்டிலும் அர்மீனியர்களைப் படுகொலைக்கு ஆளாக்கினார். ஒரு லட்சம் அர்மீனியர்கள் இவ்விதமாகக் கொல்லப்பட்டனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. தலைநகரான இஸ்தம்பூலிலேயே அர்மீனியர்கள் தாக்கப்பட்டனர். அதற்குப் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்த எதிர்ப்பு வீணாயிற்று. இருப் பினும், இக் கொலைகளுள் எல்லாம் மிக மோசமான படுகொலை 1915-ல் நடைபெற்ற ஒன்றாகும்.

பெர்லின் ஒப்பந்தத்தின்படி துருக்கியர்களின் ஆட்சியின் கீழ்க் குடியேற்றம் பெற்ற மாஸிடோனியர்கள் மற்றும் பால்கன் மக்கள் ஆகியவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டி யிருந்தது. அம் மாவட்டங்களில் வசித்து வந்த மக்கள் ஒரே இனத்தவ ரல்லர் என்ற உண்மை அப் பிரச்சினையை மேலும் மோசமாக்கியது. பல்கேரியர்கள், கிரேக்கர்கள் மற்றும் ஸெர்பியர்கள் முதலியோர் பல்வேறு மாவட்டங்களிலும் இருந்த மக்களுடன் கலந்து விட்டிருந்தனர். ஆகவே, அவர்களைத் திட்டவட்டமாக வரையறுக்க முடியவில்லை. பக்கத்திலிருந்த பல்கேரியா, ஸெர் பியா மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகள் தங்களுக்கிடையே பொறுமை கொண்டு நடுவிலிருந்த மாவட்டங்களுக்கு உரிமை பாராட்டிக் கொண்டிருந்தன. இந்த நிலை ஏற்பட்டிருந்த போதி லும், இதனை சுல்தான் ஒரு சாக்காகப் பயன்படுத்துவது முறை யற்றதாகும். இம் மக்கள் அனைவரும் பெர்லின் உடன்படிக்கை யின்படி விடுதலை பெற்றிருந்த அண்டையிலிருந்த மக்களைக் கண்டு பொறுமையும் தங்கள் மீதே எரிச்சலும் கொண்டிருந் தனர். உண்மையில், விடுதலை பெற்றவர்களின் நிலை மிகவும் சிறப்புற்றதாகவே இருந்தது. பல்கேரியா, கிரீஸ் ஆகிய இடங் களில் எல்லாம் மக்களுடைய வாழ்க்கை நிலையில் பெரும் சிறப் பான மாறுதல் ஏற்பட்டிருந்தது. அதே சமயத்தில், துருக்கியர் ஆட்சிக்குட்பட்டிருந்த மக்களுடைய நிலை எல்லா வகையிலும் இன்னமும் மோசமாகி விட்டிருந்தது. கிறித்தவ பால்கன்

மாநிலங்களில் கொடுங்கோலாட்சி கட்டுக்கடங்காமல் நடை பெற்றுக் கொண்டிருந்தது. அராஜகமும் கொள்ளை யடித்தலும் ஓங்கியிருந்தன. துருக்கிய அதிகாரிகளின் பேராசையும் கொடு மையும் முன்னைவிட இப்பொழுது மோசமாகிவிட்டன. எல்லாத் திக்குகளிலும் மனக் கொதிப்பு ஏற்பட்டிருந்தது. இப்படிப்பட்ட நிலையே சுல்தானுடைய முஸ்லிம் குடிமக்களுக்கும் ஏற்பட்டிருந் தது. குறிப்பாக, முஸ்லிம் குடியானவர்களின் நிலை பயங்கர அளவிற்கு மோசமாகி விட்டது.

இவ்வித நிலையானது அடுத்த பதினேழு ஆண்டு காலத் துக்கு நீடித்திருந்தது. அதே சமயத்தில் சுல்தானின் ஆட்சியி லிருந்து விடுதலைபெற்றிருந்த பகுதிகளில் வாழ்ந்த மக்களுடைய நிலையில் நாளுக்கு நாள் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டிருந் தது. அந்த இரு நிலைகளுக்கும் இடையே இருந்த வேறுபாடு உண்மையில் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. கிறித்தவர்களா யினும் முஸ்லிம்களாயினும் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் சுல்தானையும் அவருடைய அரசாங்கத்தையும் வெறுக்கத் தொடங்கினர்.

சுல்தானின் ஆட்சியினின்றும் விடுதலை பெற்று முஸ்லிம் ஆட்சியாளர்களின்கீழ் அமைந்த மாநிலங்களின் அனுபவமும் அவ்வளவு சிறப்புற்றதாக இருக்கவில்லை. எகிப்து, தூனிஸ் போன்ற பகுதிகளில் மக்களின் நிலை சற்றுப் பின்தங்கியே இருந் தது. சுல்தானுடைய ஆட்சியில் காணப்பட்ட குறைபாடுகளும் பலவீனங்களும் இவற்றின் அரசாங்கங்களிலும் காணப்பட்டன. எகிப்தில் நடைபெற்று வந்த முகம்மது அலியின் ஒளிசால் வல் லாட்சி மறைந்து, இப்பொழுது ஒரு கொடுங்கோலாட்சி அங்கே உருவாகியிருந்தது. கொடுங்கோலனாக விளங்கிய அவருடைய பேரனாகிய இஸ்மாயீல் என்பவன் பிரெஞ்சு மற்றும் ஆங்கிலக் கடன் கொடுப்பாரிடம் சிக்கிக்கொண்டு, பெருந்தொகைகளைக் கடன் வாங்கி, நாட்டிற்கு அப் பணம் எவ் வகையிலும் பயன் படாதபடி விரையமாக்கிக் கொண்டிருந்தான். நாட்டில் பணப் பற்றாக்குறை தோன்றிற்று; நாடெங்கிலும் அவல நிலை ஏற் பட்டது. ஆகவே, பிரெஞ்சு அரசாங்கமும் பிரிட்டிஷ் அரசாங்க மும் குறுக்கிட்டு நாட்டின் நிதி நிலையின்மீது சர்வதேசக் கட்டுப் பாடு விதிக்க வற்புறுத்தின. 1879-ல் இஸ்மாயீல் பதவியி லிருந்து விலக்கப்பட்டான். ஆனால், 1881-ல் இந்த அன்னியக் கட்டுப்பாட்டுக்கெதிராக மக்கள் இயக்கம் ஒன்று தோன்றிற்று. அரபி என்பவரின் தலைமையில் இருந்த படையும் கிளர்ந்தெழுந் தது. இங்கிலாந்திற்கு இராணுவ ஒத்துழைப்பு அளிக்க

பிரெஞ்சு அரசாங்கம் மறுத்துவிட்டது. ஆனலும், பிரிட்டன் எகிப்திற்கு எதிராகப் படையெடுப்பு நிகழ்த்தி, அரபியையும் அவருடைய படையையும் தோற்கடித்து, இஸ்மாயீலின் மகன் தவ்ஃபீக் (Taufique) என்பவரை ஆட்சியாளராக நியமித்து விட்டது. நிதியின்மீது சர்வதேசக் கட்டுப்பாடு ஓரளவு நிலை நாட்டப்பட்டது. எகிப்து பிரிட்டனின் பாதுகாப்பின்கீழ் வந்து விட்டது என்று கூறுவதில் பிழை ஏதும் இருக்க முடியாது.

அப்துல் ஹமீதின் பேரரசில் எகிப்தின் பிரச்சினை பெரும் தொல்லை கொடுப்பதாக இருந்தது. இக்காலத்தில் துருக்கிப் பேரரசையும் எகிப்தில் சுல்தானின் அதிகாரத்தையும் அழியாமல் காப்பதே பிரிட்டனில் இருந்த இரு அரசியல் கட்சிகளின் கோட் பாடாக இருந்தது. எகிப்தின் படை நடத்திய கிளர்ச்சியை ஒடுக்குவதற்காக கிளாட்ஸ்டனுடைய அரசாங்கம் பிரிட்டிஷ் படையை அனுப்ப வேண்டுமென்று 1882-ல் உத்தேசித்த போது, சுல்தானுடைய ஆதரவுடனும் இணக்கத்துடனும் அவ் விதம் செய்ய அவ் வரசாங்கம் மிக ஆவலாய் இருந்தது. தம் முடைய இறைமை யதிகாரங்களை வலியுறுத்தவும், பிரிட்டிஷ் படையுடன் ஒத்துழைக்கவும் ஒரு படையை அனுப்பி வைக்கு மாறு சுல்தான் அப்துல் ஹமீதுக்கு அவ்வரசு கோரிக்கை விடுத் தது. அவர் அதற்கு மறுத்துவிட்டால் பிரிட்டிஷ் அரசாங்கம் அவரது ஒத்துழைப்பு இல்லாமலேயே செயல்படும் என்பதை சுல்தானுல் நம்பவே முடியவில்லை. ஆனுல், பிரிட்டிஷ் அர சாங்கம் அங்ஙனமே நடந்துகொண்டது. ஒரு பிரிட்டிஷ் படை எகிப்தை அடைந்து, அங்குத் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த கிளர்ச்சியை சுல்தானின் உதவி இல்லாமலேயே ஒடுக்கிற்று. சுல்தான் அப்துல் ஹமீது தமது கொள்கையின் தவற்றைக் காலம் கடந்த பிறகு அறிந்துகொள்ள வாய்ப்புப் பெற்றார்.

1885ஆம் ஆண்டுக்கும் 1887ஆம் ஆண்டுக்கும் இடையில் சாலிஸ்பரி பிரபு பிரதம அமைச்சராகப் பதவி வகித்திருந்த போது, எகிப்திலிருந்து இறுதியாக பிரிட்டிஷ் படையைப் பின் வாங்கிக் கொள்வதற்காக ஏற்பாடு ஒன்றை சுல்தானுடன் செய்து கொள்வதற்கு அவர் மிகவும் ஆவலாயிருந்தார். சுல் தானுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்காகச் சிறப் புத் தூதர் ஒருவரையும் அவர் இஸ்தம்பூலுக்கு அனுப்பினர். செய்துகொள்ள நினைத்த அவ் வொப்பந்தத்தின்படி பின்னுளில் தேவை ஏற்பட்டால், பிரிட்டிஷ் படைகளை மட்டுமே பயன் படுத்திக் கொள்வதாக வற்புறுத்தும் நிபந்தனையின் பேரில் ஏழு ஆண்டு காலத்திற்குள்ளாக பிரிட்டிஷ் படையைப் பின்வாங்கிக்

கொள்வதாக அறிவிக்கப்பட்டது. நட்பின் அடிப்படையில் அமைந்திருந்ததும், நலன் நல்குவதாக இருந்ததுமான இந்த நிபந்தனையை சுல்தானின் அமைச்சர்கள் அனைவரும், ஆரம்பத்தில் சுல்தானும்கூட ஏற்றுக்கொண்டார்களாயினும், பின்னரில் அதில் கையொப்பமிடுவதற்கு சுல்தான் மறுத்துவிட்டார். தாம் இழைத்த தவற்றினை சுல்தான் பின்னரில் உணர்ந்து கொண்டதும், மீண்டும் பேச்சு வார்த்தைகளைத் தொடங்க முயன்றார். ஆனால், அதற்கு சாலிஸ்பரி பிரபு மறுத்துவிட்டார். இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் சுல்தான் அப்துல் ஹமீதின் விடாப் பிடியான தன்மையாலும், மூடத்தனத்தாலும், தவற்றினாலும் எகிப்து பிரிட்டனை நம்பியிருக்க வேண்டிய நாடாய் விளங்க நேரிட்டது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

அதே போன்ற கூறுகள் பிரான்ஸின் சார்பாகத் தூனிசிலும் செயல்பட்டுக் கொண்டிருந்தன. இந்த மாநிலத்தைக் கைப்பற்றிக் கொள்வதைப்பற்றிய விவாதங்கள் பெர்லின் மாநாட்டில் வல்லரசுகளுக்கிடையே நடைபெற்றன. அவ்விதம் செய்தால் பிரான்ஸுக்கும் இத்தாலிய நாட்டிற்கும் இடையே மனக்கசப்பு ஏற்படக்கூடும் என்றும், அவ்விரு நாடுகளுக்குமிடையே உள்ள பிளவு மேலும் அதிகரிக்கும் என்றும், அவ்விதப் பிளவு தம் நாடான ஜெர்மனிக்குச் சாதகமாக இருக்கும் என்றும் பிஸ்மார்க் நம்பிக்கைகொண்டு, பிரான்ஸ் தூனிஸைக் கைப்பற்றிக் கொள்வதை ஆதரித்தார். பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் இத் திட்டத்தை ஆதரித்தனர். ஆகவே, 1881, 1883 ஆகிய ஆண்டுகளுக்கிடையே பிரெஞ்சு அரசாங்கம் தூனிஸ்ஸைத் தன் பாதுகாப்புக்குட்படுத்திற்று; பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவுடன் தான் அது அவ்விதம் செய்துகொண்டது. ஆனாலும், தூனிஸ்ஸைப் பொறுத்தவரையிலும் உண்மையில் அது கடந்த மூன்று நூற்றாண்டுகளாகவே துருக்கிப் பேரரசினின்றும் தொடர்பற்று இருந்தது.

எகிப்திலாகட்டும், தூனிஸ்ஸிலாகட்டும் ஐரோப்பிய ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டதனால் அந் நாட்டு மக்களின் நிலையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. துருக்கி யரசில் காணப்படும் குறைபாடுகளை எவ்விதம் நிவர்த்தித்துக் கொள்ளலாம் என்பதற்கும் அவை சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கின. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுக் காலத்தில் துருக்கியின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் முக்கிய மாறுதல்களைப் புகுத்த வேண்டும் என்பதை வற்புறுத்தும் அரசியல் கட்சி ஒன்று துருக்கி முஸ்லிம்களிடையே தோன்றிற்று. இளைப்பு, முன்னேற்

றம் ஆகியவற்றை வற்புறுத்தும் கட்சி (Party of Union and Progress) என்று அதற்குப் பெயரிடப்பட்டது. அதனுடைய உறுப்பினர்கள் 'இளந் துருக்கியர்கள்' (Young Turks) என்றழைக்கப்பட்டனர். வெளி நாடுகளுக்குக் கடத்தப்பட்டு, பெரும் பாலும் பாரிஸ் மாநகரில் குடியேறியிருந்தவர்களால் அக் கட்சி உருவாக்கப்பட்டது. பிறகு அது துருக்கி அரசியலில் ஈடுபட்டு, இஸ்தம்பூல் நகரில் பலருடைய ஆதரவையும் பெற்று விளங்கிற்று. அதனை ஆதரித்தவர்களில் பலர் துருக்கிப்படையிலும் இருந்தனர். சலோனிக்காவில் குழு ஒன்றை நிறுவிய அக் கட்சி அங்கே இருந்த துருக்கிப் படை அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. 1908ஆம் ஆண்டுக்குள்ளாக அக் கட்சி ஒரு பெரும் வலிமை பெற்ற கட்சியாகிவிட்டது. அதன் திறம்படைத்த உறுப்பினர்களுள் பலர் யூதர்களாக இருந்தனர்.

எங்கும் அதிருப்தி நிலவியிருந்தது. சுல்தானுல் நிலை நாட்டப்பட்டிருந்ததும், அவருடைய அரசாங்கத்தின் முக்கிய கருவியாக இருந்ததுமான ஒற்றர் முறை பலதரப்பட்ட மக்களுக்கிடையேயும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. மன நிறைவற்ற நிலை படையிலும் நிலவித்திருந்தது. படையின் ஆதரவு தங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்பது தெளிவான பிறகு தான் அக் கட்சியின் உறுப்பினர்கள செயல்படத் தொடங்கினர். உடனே அவர்கள் தங்கள் திட்டங்களைச் செயல்படுத்த முற்பட்டனர். சலோனிக்காவில் 1908, ஜூலை 23ஆம் நாள் அன்று குழுவின் சார்பாக அன்வர் பே என்பவர் புரட்சி நிலையைப் பிரகடனப்படுத்தினர். அதே நாளில் இரண்டாம், மூன்றும் படைப் பிரிவுகளும் இஸ்தம்பூலுக்கு அணிவகுத்துச் சென்று, அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றங்களைப் புகுத்த சுல்தானை வற்புறுத்தப் போவதாகத் தம் எண்ணத்தை வெளிப்படுத்தின. சீர்திருத்தமுற்ற அரசியல் அமைப்பினை சுல்தான் அப்துல் ஹமீது ஏற்றுக்கொண்டாராயின், அவரையே பதவியில் வைத்துக் கொள்ளலாம் என்றும் குழுவின் சார்பாக அறிவிக்கப்பட்டது. சுல்தானின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதும் அவரே பாதுகாவலராகவும் இருந்த அல்பேனியப் படையின் ஆதரவு தங்களுக்குக் கிடைக்கும் என்றும் அக் கட்சியினர் உறுதிப் படுத்திக்கொண்டனர். தம் படையே தமக்கு எதிரியாகிவிட்டது என்பதை உணர்ந்துகொண்ட சுல்தான் அப்துல் ஹமீது புரட்சிக்கட்சியின் கோரிக்கைகளுக்குத் தாம் இணங்குவதாக அறிவித்தார். உலக வரலாற்றிலேயே மற்றெந்தப் புரட்சியும் ஒரு துளியேனும் இரத்தம் சிந்தாமலும் மிகவும் வெற்றிகரமாகவும் இதைப்போல் நடை

பெறவில்லை. லஞ்ச ஊழலில் சிக்கிக் கிடந்த, மக்களால் வெறுக்கப்பட்ட அமைச்சர்களை சுல்தான் பதவியிலிருந்து விலக்கி விட்டார்; குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையே அவர் அமைச்சர்களாக நியமித்துக்கொண்டார். 1877-ல் கலைத்த பாராளுமன்றத்தை அவர் மீண்டும் கூட்டுவதற்கும் இணங்கினார். ஒற்றர் முறை ஒழிந்து விட்டதாக ஒரு ஃபர்மானையும் அவர் வெளியிட்டார். புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தாம் பின்பற்றப் போவதாகவும் அவர் வெளிப்படையாக அறிவித்தார். அவர் அளித்த வாக்குறுதிகளை இஸ்தம்பூல் வாசிகள் சிறிது காலத்துக்கேனும் நம்பினர். மக்களுடைய கோரிக்கைகள் இஸ்லாமிய சட்டங்களுக்கு மாறுக இருக்கவில்லை என்றும் ஷெய்குல் இஸ்லாம் அறிவித்தார். இரட்டைத் தேர்தல் முறையின்படி, தேசிய சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு தேர்தலும் நடைபெற்றது. எல்லா இனத்தினரும் சமயத்தினரும் வாக்களிப்பதற்கான உரிமையைப் பெற்றனர்.

புதிய அரசியல் திட்டம் அமலில் வந்துவிட்டதாக மக்கள் எங்கும் மகிழ்ச்சியில் மூழ்கிக் கிடந்தனர். ஆனால், அதைப் பற்றி சலோனிக்காவிற்கும் இஸ்தம்பூலுக்கும் அப்பால் இருந்த மக்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. மக்கள் மனத்தில் இங்கிலாந்துக்கான மதிப்புப் பெருமளவும் உயர்ந்திருந்தது. புதிய தூதராக நியமிக்கப்பட்ட சர் கெரார்ட் லோதர் (Sir Gerard Lowther) என்பவர் தம் பதவியை ஏற்பதற்காக இஸ்தம்பூலுக்கு வந்தபோது, மக்கள் அவரைப் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்றனர். டிஸம்பர் 10ஆம் நாள் புதிய பாராளுமன்றம் கூடிற்று. அதனை சுல்தான் திறந்து வைக்கையில், புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தையும் மக்களுடைய புனிதமான உரிமைகளையும் தாம் பாதுகாக்கப் போவதாக அறிவித்தார். பல்வேறு கிறித்தவக் குடிமக்களுக்கும் மற்ற இனத்தாருக்கும் சட்ட மன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. அச் சபையினரும் அதன் நடவடிக்கைகளில் பெரும் ஊக்கம் காட்டினர்.

ஆனாலும், வெகு விரைவில் தொல்லைகள் தோன்றத் தொடங்கின. பிற்போக்கான நிலை தலைதூக்கத் தொடங்கிற்று. இவற்றுக்கெல்லாம் சுல்தானே காரணமாவார். இளைஞர்கள் கட்சியை எதிர்த்து அல்பேனியாவில் கிளர்ச்சி ஏற்பட்டது. அல்பேனியப் பாதுகாவலரைப் பெரும் கைக்கூலி கொடுத்து சுல்தான் மீண்டும் தம் வசப்படுத்திக் கொண்டார். பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் கலகங்கள் தோன்றின. தலைநகரான

இஸ்தம்பூலில்தான் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் பெரும் ஆபத்து நிலை ஏற்பட்டது. புதிய அரசின் முதல் சாதனை பெரும் பணச் செலவில் பேணிக் காக்கப்பட்டு வந்த ஒற்றர் முறையை ஒழித்ததாகும். புதிய அமைச்சர்கள் தேவையில்லாத பல அரசு ஊழியர்களையும் பதவியிலிருந்து விலக்கி விட்டனர். இவ்விரு கூட்டத்தினரும் புதிய அரசின்மீது பெரும் அவநம்பிக்கை கொண்டிருந்தனர். சுல்தானுடைய பழைய ஆட்சி மீண்டும் நிறுவப்பட்டால்தான் தங்களுக்கு விமோசனம் ஏற்படும் என்று அவர்கள் கருதினர். மத வெறி பிடித்த ஒருசில முல்லாக்களும் அவர்களை ஆதரித்தனர்; புதிய அரசியல் அமைப்புச் சட்டம் இஸ்லாமிய சட்டத்திற்கு முற்றிலும் மாறுனதாகும் என்றும் அவர்கள் பிரசாரம் செய்தனர். இவர்களை யெல்லாம்விட சுல்தான் அப்துல் ஹமீதே மிகத் தீவிரமான பிற்போக்குக் கொள்கைகளை மேற்கொள்ள முற்பட்டார். ஏராளமான பணத்தைக் கைக்கூலியாக வழங்கி, படையினரை அரசியல் அமைப்புச் சட்டத்தில் தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும் பற்றுதலையும் கைவிடுமாறு தூண்டினர். புதிய அமைச்சர்களும் ஒரு பெரிய தவற்றை இழைத்தனர். அரசியல் காரணங்களுக்காக, சுல்தானுடைய விருப்பத்தின்படி சிறையில் அடைபட்டுக் கிடந்தவர்களை மட்டுமே யல்லாமல், தீவிரக் குற்றங்களைப் புரிந்தவர்களையும் அவ்வமைச்சர்கள் சிறையிலிருந்து விடுவித்து விட்டனர். இவர்கள் அனைவரும் நகரில் ஒரு பெரும் கூட்டமாக உருவாகி, எங்கும் குழப்பத்தையும் அச்சத்தையும் பரப்பிக் கொண்டிருந்தனர்.

புதிய அரசியல் அமைப்புச் சட்டம் பிரகடனம் ஆனதற்கு ஒன்பது மாதங்களுக்குப் பிறகு 1909, ஏப்ரல் 13ஆம் நாள் அன்று இஸ்தம்பூலில் இருந்த படைகளிடையே கிளர்ச்சி மூண்டது. எதிர்ப் புரட்சி ஒன்றும் பிரகடனம் செய்யப்பட்டது. அதற்குத் தலைமை தாங்குவதற்குத் திறம்படைத்த தலைவர்கள் எவரும் கிடையாது. அப்துல் ஹமீது அதனை வெளிப்படையாக ஆதரிக்க முன்வரவில்லை. ஆனால், மனக் கசப்புற்றவர்களின் ஆதரவைப் பெற்று அது சிறிது காலத்திற்கு வெற்றிகரமாக நடைபெற்று வந்தது. புதிய அமைச்சர்களும், கட்சியின் உறுப்பினர்களும், புதிய சட்ட மன்றத்தின் உறுப்பினர்களும் தற்காப்பிற்காக வேறிடத்திற்கு ஓடி விட்டனர். அந்தத் தறுவாயில் அப்துல் ஹமீது மட்டும் சற்றுத் துணிகரமாக முன்வந்து பிற்போக்காளர்களை ஆதரித்திருப்பாராயின், தம்முடைய பகைவர்களை ஒடுக்கிப் பழைய ஆட்சியை மீண்டும் நிலைநாட்டியிருக்கக் கூடும். ஆனால், அவ்விதம் செய்ய அவர் துணிச்சலற்றவராக

இருந்தார். அவ் வியக்கத்திற்கு அந்தரங்கமாகப் பணவுதவி மட்டுமே அளித்து வந்ததோடு அவர் நின்று கொண்டார்.

அதற்கிடையே இளந் துருக்கியர்களின் குழு ஒன்று சலோனிக்காவில் கூடி, எதிர்ப் புரட்சியை வன்முறையினால் அடக்கத் தீர்மானித்தது. அவர்கள் தங்களை ஆதரிக்குமாறு மூன்றாம் படைப்பிரிவின் தலைவரான மகமூத் ஷெஃப்கத் பாஷாவை (Mahmoud Shefket Pasha) விரும்பி அழைத்தனர். அவர் தாம் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக உறுதி பூண்டிருப்பதாகக் கூறிக் கொண்டு, படையுடன் இஸ்தம்பூல் நோக்கி முன்னேற இணங்கினார். சான் ஸ்டீஃபனோவில் அவர், ஏற்கெனவே தலைநகரைவிட்டு ஓட்டம் பிடித்திருந்த சட்ட மன்ற உறுப்பினர்களையும் அமைச்சர்களையும் சந்தித்தார். ஏப்ரல் இருபத்து நான்காம் தேதிக்குள்ளாக அவரது படை கிளர்ச்சி செய்து கொண்டிருந்த படையினரின் பலவீனமிக்க எதிர்ப்பினை முறியடித்து, தலைநகரின் பல்வேறு பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டு விட்டது. எதிர்ப்புரட்சி அதிக உயிர்ச் சேதமில்லாமலேயே ஒடுக்கப்பட்டது. அரசியல் நிர்ணய சபை மீண்டும் கூடியது. அப்துல் ஹமீதை என்ன செய்வது என்பது அது கவனிக்க வேண்டிய முதல் பிரச்சினையாயிற்று. ஷெய்குல் இஸ்லாமைக் கலந்தாலோசித்து, சுல்தானைப் பதவியிலிருந்து விலக்கி விடுவது என்று முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவினை சுல்தானுக்கு அறியப்படுத்துவதற்காக ஒரு குழுவையும் அம் மன்றத்தினர் அனுப்பினர். தம்மைப்பற்றிய முடிவை அறிந்த சுல்தான் 'இது என்னுடைய விதி' என்று கூறினாராம். தம்மை உயிருடன் வாழ விடுவார்களா? என்ற கேள்விக்குப் பதில் காணும் பொறுப்பு அம் மன்றத்திற்கே விடப்பட்டது.

அப்துல் ஹமீது தம்மை ஆதரிப்பாரின்றித் தவித்தார். ஜெர்மானியப் பேரரசைத் தவிர மற்ற எவருமே அவரை மனமார வெறுத்தனர். ஆனாலும், ஆபத்து நேரத்தில் அப் பேரரசரும் அவரைக் கைவிட்டார். இளந் துருக்கியர்களின் கட்சியுடன் அப் பேரரசர் சூழ்ச்சிகளைச் செய்து கொண்டு, சுல்தானை உயிருடன் விட்டுவிட்டால் தாம் புதிய அரசியல் அமைப்பினை அங்கீகரிக்கப் போவதாக வாக்குறுதி யளித்தார். சுல்தான் உயிர்ப் பிச்சை அளிக்கப்பட்டார். அவரும் அவருடைய ஆசைக்குப் பாத்திரமான பெண்களும் சலோனிக்காவுக்கு மாற்றப்பட்டனர். அங்கு அவர் கைதியாகவே வாழ்க்கை நடத்தி வந்தார். அரண்மனையிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டபோது பல கோடிப் பவுன் மதிப்புள்ள பணமும் இரத்தினங்களும் கண்டெடுக்கப்

பட்டன. அதில் பெரும்பகுதி ஜெர்மானியப் பேரரசரான கைஸருக்கு உரியதாகிவிட்டது. முப்பத்து மூன்று ஆண்டுகால மாக நடைபெற்று வந்த அப்துல் ஹமீதின் ஆட்சி இவ்விதமாக முடிவடைந்தது. அவருடைய குடிமக்களுடைய நிலை மேலும் மோசமாகி விட்டிருந்தது. 'அழிந்து போன அப்துல் ஹமீது' என்று அவருடைய சம காலத்தவரால் இகழப்பட்ட சுல்தான் இவ்விதமாகப் பதவியிலிருந்து விலக நேரிட்டது.[1]

அவர் ஒரே குழப்பத்தில் மூழ்கி இருந்ததனால், திட்டவட்ட மான கொள்கையை அவரால் பின்பற்ற முடியவில்லை. தயாள குணம், அதே சமயத்தில் கொடூரத் தன்மை; வாரி வழங்கும் கொடைத் தன்மை, அதே சமயத்தில் கஞ்சத்தனம்; கோழைத் தனம், அதே சமயத்தில் ஆற்றல் மிகுந்திருந்தமை; சாதுர்யம், அதே சமயத்தில் அறிவில்லாமை; மிதமாக நடந்து கொள்ளும் இயல்பு, அதே சமயத்தில் அளவுமீறி நடந்து கொள்ளுதல் போன்ற பல்வேறு குணவியல்புகளையும் அவருடைய சொற்களி லும் செயல்களிலும் நாம் காணக்கூடும்.

இருப்பினும், அவர் சாதுர்யம் மிக்கவர், மிகக் கொடூரமாக நடந்து கொண்டவர் என்பதை எவரும் மறுக்க முடியாது. அவர் பிற்போக்காளர்களைக் கொண்டு தம் கொள்கைகளை நிறை வேற்றிக் கொள்ள முயன்றவர். நாட்டில் பற்றுதல் இல்லாமை யையும் மன நிறைவற்ற தன்மையையும் முற்றிலுமே ஒழித்து விட அவர் திட்டமிட்டார். நாட்டுப்பற்றின் அடிப்படையில் அமைந்த கூறுகளும் தம் வல்லாட்சிக்குப் பேராபத்துகளாகும் என்று உணர்ந்த அவர், முஸ்லிம்களாக இருந்த தமது பெருவாரி யான குடிமக்களின் சமய உணர்ச்சியைத் தட்டி எழுப்ப முயன்றார்.

அவரிடத்தில் குறைகள் பல இருந்தபோதிலும், அவருடைய பேரரசின் முழுமை நிலையை அவர் பாதுகாத்து வந்தார் என்பது மறுக்க முடியாத உண்மை யாகும். வல்லரசுகளுக்கிடையே அவர் பல சூழ்ச்சிகளையும் செய்து எவ்விதமோ முப்பத்து மூன்று ஆண்டுகாலம்வரை ஆட்சி புரிந்துவிட்டார். ஆனால், கட்டுக்

[1] பிரான்ஸ் நாட்டில் பெரும் புரட்சி தோன்றி, பதினாறாவது லூயி மன்ன ரும் அவருடைய குடும்பத்தினரும் படுகொலை புரியப் பட்டார்க ளல்லவா? அந்த வரலாற்றை வருணிப்பவர்கள் 'பூர்பன் வம்ச மன்னர் கள் எந்த ஒன்றையும் கற்றுக் கொள்ளவுமில்லை; எந்த ஒன்றையும் மறக்கவுமில்லை' (Bourbons learned nothing and forgot nothing) என்று கூறுவர். சுல்தான் அப்துல் ஹமீதையும் இவ்வாறே பொருத்தமுடன் நாமும் வருணிக்கலாம்.

கடங்காத அவரது வல்லாட்சி உள்நாட்டிலேயே பெரும் பகை வர்களை உருவாக்கி, பேரரசே அழிந்து போகுமாறு செய்து விட்டது.

அப்துல் ஹமீதும் இஸ்லாமிய ஒற்றுமை இயக்கமும் (Abdul Hamid II and Pan Islamism)

அப்துல் ஹமீது தம்முடைய வல்லாட்சியைப் பலப்படுத்து வதற்குத் தம் சமயமாகிய இஸ்லாத்தை ஒரு கருவியாகப் பயன் படுத்த முனைந்தார். 18-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய தேசிய உணர்வு, துருக்கியிலும் பரவ ஆரம்பித்தது. இதன் விளைவாகத் துருக்கி சுல்தானின் ஆட்சிக்குட்பட்டிருந்த பல்வேறு இன மக்களும் சுதந்தரமடைந்து மக்களாட்சியை நிறுவுவதில் ஆர்வம் காண்பிக்க ஆரம்பித்தனர். ஐரோப்பாவில் சுல்தானின் ஆட்சி பெரும் எதிர்ப்புக்கு இலக்காகியது. அதனை அழிவிலிருந்து காப்பது முடியாது என்றுணர்ந்த அப்துல் ஹமீது, ஆசியாவிலுள்ள தம் பகுதிகளின் மீது தமக்கிருந்த பற்றினை நன்கு வலுப்படுத்த முனைந்தார். கீழ்த்திசை நாடுகளில் தேசிய உணர்வும் மக்களாட்சிப் பற்றும் இன்னும் தீவிரமாக ஏற்பட வில்லை. மேலும், அங்கிருந்த மக்களில் பெரும்பாலோர் பழைமை வாதிகளாக, புரட்சிக் கருத்துக்களை எதிர்ப்பவர்களாக விளங்கி யமை அப்துல் ஹமீதுக்குப் பெருந்துணையாக இருந்தன. இம் மக்களைத் தம் தலைமையின் கீழ் ஒன்றுபடுத்துவதற்கு இஸ் லாத்தைப் பயன்படுத்த அப்துல் ஹமீது துணிந்தார். மறைந்து விட்ட கலீஃபாக்களின் பேரரசினைப் போன்ற ஒன்றினை மீண் டும் நிறுவிவிட வேண்டும் என்பது பல முஸ்லிம் தலைவர்களின் விருப்பமாக இருந்தது. அத் தலைவர்களும், மற்றும் அப்துல் ஹமீதின் நண்பர்களும் அவர் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்த சுன்னி முஸ்லிம்களின் கலீஃபா வாகத் தம்மை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட னர். அவ்வாறு செய்தல் அந்த முஸ்லிம் மக்களின் ஆதரவினை அவருக்குத் தேடித் தரும் என்றும், உலக அரசியலில், குறிப்பாக ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே சுல்தானின மதிப்பை உயர்த்திவிடும் என்றும் அவர்கள் கருதினர்.

கி.பி. 1517ஆம் ஆண்டில் கெய்ரோவில் மம்லூக்குகளின் ஆதரவிலிருந்த அப்பாஸி வம்ச கலீஃபாவான அல் முத்தவக்கில் (Al Mutawakkil) என்பாரிடமிருந்து அப் பதவியை சலீம் தமது குடும்பத்திற்கு மாற்றியமைத்த போதிலும், அதனை எந்த சுல்

தானும் பயன்படுத்தவில்லை.[1] அப் பதவியைத் தற்சமயம் பயன் படுத்தி, மங்கிவரும் தமது புகழினை மீண்டும் வலுப்படுத்த அப்துல் ஹமீது முன்வந்தார். அவர் தம்மை, சுன்னீ முஸ்லிம் களின் கலீஃபா என்று அறிவித்துக் கொண்டார். அனைத்து முஸ்லிம்களும் அவரது ஆணைக்குக் கீழ்ப்படிதல் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது. முஸ்லிம்களைக் கொண்டிருந்த நாடுகள் பலவற்றிற்கும் அவர் தமது ஆதரவு பெற்ற தூதர்களை அனுப்பித் தமது கொள்கையினைப் பரப்ப ஆரம்பித்தார். செய்தித் தாள் கள் பலவும் 'சுல்தான் கலீஃபா அப்துல் ஹமீதின்' பெருமை களை எடுத்தியம்ப ஆரம்பித்தன. இஸ்தம்பூலில் பல சமயப் பேரவைகள் கூட்டப்பட்டன. உலகெங்கிலுமுள்ள முஸ்லிம் களின் உதவியுடன் போடப்பட்ட 'ஹிஜாஸ் இருப்புப் பாதை' (Hijaz Railway) சுல்தான் அப்துல் ஹமீது புனித நகரங்களின் பாதுகாவலர் என்பதை வெளிப்படுத்தியது. ஆனால், அவ் விருப்புப் பாதை, அரப்நாட்டில் கலகம் ஏற்படுமாயின், துருக்கிப் படைகள் விரைந்து சென்று அக் கலகத்தினை அடக்கவும் பயன் படும் என்ற உண்மையைப் பெரும்பாலான முஸ்லிம்கள் உணர வில்லை.

ஐரோப்பிய அரசுகள் பலவும் அப்துல் ஹமீதின் இஸ்லாமிய ஒற்றுமை இயக்கத்திற்கு (Pan Islamism) தமது ஆதரவை நல்கின. இரண்டாம் கெய்சர் வில்லியம் தம்மை 'இஸ்லாமிய சமயத்தின் நண்பர்' என்று அறிவித்துக் கொண்டார். இவை யனைத்தும் அப்துல் ஹமீதின் பெருமையை உயர்த்தின.

அப்துல் ஹமீது தம்மை 'கலீஃபா' என்றும் அனைத்து சுன்னீ முஸ்லிம்களின் புரவலர் என்றும் அறிவித்துக் கொண்டதற்குச் சமய உணர்வு மட்டும் காரணமன்று என்பது நன்கு விளங்கும். இக் கொள்கையின் மூலம் பல்வேறு இன முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றுத் தமது வல்லாட்சியை வலுப்படுத்துவதே அவரது எண்ணமாகும். முதலில் இத் திட்டத்திற்குப் பெரும் ஆதரவு இருந்த போதிலும், இது வியக்கத் தக்க வெற்றியைப் பெறவில்லை. வளர்ந்துவரும் தேசிய உணர்வுக்கு முன் சமயத் தால் ஈடுகொடுக்க முடியவில்லை. சுன்னீ முஸ்லிம்களுக்கிடையே கூட, சமய உணர்வு ஒற்றுமையை ஏற்படுத்த முடியவில்லை. அராபியர்களும் துருக்கியர்களும் ஒரே சமயத்தைப் பின்பற்றிய போதிலும், அராபியர்கள் துருக்கியரின் தலைமையை வெறுத்தனர். துருக்கியிலேயே, தேசிய உணர்வால் உந்தப்பட்ட

[1] முன் பக்கம் 134 பார்க்க.

துருக்கிய தலைவர்கள் சமயத் துறையிலும் அரசியல் ஆட்சிமுறையிலும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று கூக்குரலிட்டனர். அச் சமயத்தில் மறைந்து போன கலீஃபாப் பதவி மீண்டும் வலுப்படுத்தப்படுவது, தேசியவாதிகளின் உணர்ச்சியைத் தீவிரமாகத் தூண்டியது. மேலும், முஸ்லிம்களின் காவலனாகத் தம்மை அறிவித்துக் கொண்ட சுல்தான், ஐரோப் பியர்களுடன் நட்புப் பூண்டு செயல்பட்டதைப் பல முஸ்லிம் களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'இஸ்லாமிய ஒற்றுமை இயக்கம்' என்பது அப்துல் ஹமீதால் எழுப்பப்படும் வெறும் குரலே யன்றி, சுல்தானின் உண்மையான சமய உணர்வின் வினாவாலெழுந்ததன்று என்பதனை விரைவில் முஸ்லிம்கள் உணர்ந்தனர். அதன் காரணமாக, கலீஃபா அப்துல் ஹமீதின் பெருமை விரைவில் வீழ்ச்சியடையத் தொடங்கியது. அவரால் உருவாக்கப்பட்ட இஸ்லாமிய ஒற்றுமை இயக்கம் அவருடனேயே 1909ஆம் ஆண்டில் மறைந்தும் விட்டது.

21. இளந் துருக்கியர்கள் (1909 – 14)

(Young Turks)

பால்கன் போர்கள் (Balkan Wars)

சுல்தான் அப்துல் ஹமீதுக்குப் பிறகு அவருடைய அறுபத்து நான்கு வயது சகோதரரான முகம்மது 'ஐந்தாம் முகம்மது' (Mohamed V) என்ற பட்டப் பெயருடன் சுல்தானாக அறிவிக்கப் பட்டார். இவர் சுதந்தர வாழ்க்கை என்பதையே அறியாதவர். வையகத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதே அவருக்குத் தெரியாது. அந்தப்புரத்திற்கே தம் வாழ்க்கையை அவர் அர்ப்பணித்திருந்தார் போலும்! அவருடைய தோற்றத்தைக் கண்ட உடனே அவர் ஒன்றுக்கும் உதவாதவர் என்பதை அறிந்து கொள்ளலாம். குள்ளமாகவும், கூனிக் குறுகிய முதுகு டனும், குழி விழுந்த கண்களுடனும் நோயால் பீடிக்கப்பட்ட பிணியாளராகவே அவர் தென்பட்டார். அறிவுக் கூர்மை என் பதே அவருடைய முகத்தில் காணப்படாத ஒன்றாகும். எங்கே எதிரிகள் தம்மைக் கொன்று விடுவார்களோ என்ற கிலியும் அச்சமும் அவருடைய முகத்தில் எக்காலமும் படர்ந்திருந்தன.

பழைய சகோதரர் பதவியிலிருந்து விலக்கப்பட்டதற்குக் காரணமாயிருந்த சதித் திட்டத்தில் அவர் கலந்து கொள்ள வில்லை. அவ்வித அந்தரங்கப் பொறுப்பை எந்த அறிவாளியும் அவரிடத்தில் ஒப்படைத்திருக்க மாட்டார். தாம் அரசியலில் கலந்து கொண்டிருக்கின்றார் என்று அப்துல் ஹமீது சந்தேகிக்கக் கூடும் என்று கருதி, அவ்விதச் சந்தேகத்தைப் போக்குவதற் காக அவர் ஒரு மூடனைப் போல் நடந்து கொள்வாராம். எங்கே தம்மைக் கொன்று விடுவார்களோ என்ற அச்சம் அவரை எக் காலமும் வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. இவரைப் போன்றவரைப் பதவிக்குக் கொண்டு வந்தால்தான் தங்க

ளுடைய காரியங்களைச் சாதித்துக் கொள்ள முடியும் என்று சதி காரர்கள் நினைத்திருக்கக் கூடும்.

பிற்போக்காளர்கள் முறியடிக்கப்பட்டு, அப்துல் ஹமீது பதவி விலக்கம் செய்யப்பட்டதற்குப் பிறகு, 1909-ல் இளந் துருக்கியர்கள் மீண்டும் பதவிக்கு வந்தனர். அக் காலத்தில் பேரரசில் சீர்திருத்தங்களைப் புகுத்துவதற்கான வாய்ப்பினை அவர்கள் பெற்றனர். ஆனலும், அவர்கள் அதைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அக் குழுவில் ஒன்றை எதிர்த்து மற்றொன்று மிகத் தீவிரமாக மோதிக் கொள்ளக் கூடிய இரு பிரிவுகள் இருந்தன என்பது காலப் போக்கில் தெளிவாயிற்று. கையோங்கி யிருந்த கட்சி பிற நாட்டைப் பழிப்பதில் ஈடுபட்ட தாகவும் தன்னுடைய நோக்கங்களில் குறுகிய தேசப் பற்றுக் கொண்டதாகவும் இருந்தது; உள்ளூர்ப் பழக்க வழக்கங்களையும் இன வேறுபாடுகளையும் சிறிதளவும் பொருட்படுத்தாது, பேரரசைத் துருக்கி மயமாக்கி ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தவும் அக் கட்சி முயன்றது. பேரரசில் சுல்தானுடைய ஆட்சிக்குக் கீழ்ப்படிந்திருந்து தங்களுக்குரிய மொழியையே பேசி வந்தவர் களின் மீது துருக்கி மொழியை அக் கட்சியினர் வலுக்கட்டாய மாகத் திணிக்க முயன்றனர். அல்பேனியாவில் பள்ளிகளில் அல்பேனிய மொழியைக் கற்றுக் கொடுப்பதற்கும் அரேபியாவில் புனித இஸ்லாமிய மொழியான அராபிய மொழியைக் கற்றுக் கொடுப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது. படையில் யாவருமே சேரவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினர். பால்கன் மாநிலங்களில் இருந்த கிறித்தவர்களைப் படையில் கட்டாயமாகச் சேரவேண்டு மென்று அவர்கள் வற்புறுத்தியதனல் பல்லாயிரக் கணக்கான பல்கேரியர்கள், கிரேக்கர்கள், ஸெர்பியர்கள், மாஸி டோனியாவின் குடிமக்கள் ஆகியவர்களெல்லாம் சுற்றுப்புற நாடுகளுக்குள்ளே ஓடி ஒளிந்து கொண்டனர். இந்த வாய்ப் பினை இளந் துருக்கியர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு, பாஸ்னியாவிலிருந்த பல்லாயிரக்கணக் கான முஸ்லிம்களை மாஸிடோனியாவிற்கு வந்து அங்கிருந்த முஸ்லிம் மக்கள் தொகையைப் பெருக்கிவிடுமாறு செய்து கொண்டனர். இவ்விதமாக வந்த இவர்கள் பெருந்தொல்லை களுக்குக் காரணமாயினர். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அங்கெல்லாம் இளந் துருக்கியர்க் கட்சி யின் குழுக்கள் அமைக்கப்பட்டன. அக் குழுக்கள் மக்களுக்குப் பல பயங்கரமிக்க கொடுமைகளை இழைத்து வந்தன. அக் கொடுமைகள் அப்துல் ஹமீத் இழைத்த கொடுமைகளைவிடப் பொல்லாதனவா யிருந்தன. மக்களைப் பெருஞ் சினத்துக்குள்

ளாக்கிய அவரது ஒற்றர் முறை அடக்கப்பட்டது. ஆனலும், ஆங்காங்கே பல சிறிய சிறிய அப்துல் ஹமீதுகள் தோன்றி விட்டனர்.

தலைநகரில் இருந்த மத்திய அரசாங்கம் நிர்வாகத்தின் ஒவ்வொரு விஷயத்திலும் மிக உன்னிப்பாகத் தலையிடுவதில் காலஞ் சென்ற சுல்தானையே பின்பற்றியது. பேரரசில் இருந்த கிறித்தவக் குடிமக்களின் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே இருந்தது. அதற்கிடையே இங்கிலாந்திலும் அதன் அரசியல் அமைப்பிலும் மக்கள் கொண்டிருந்த ஆர்வம் இஸ்தம்பூலைப் பொறுத்தவரை தணிந்து கொண்டே யிருந்தது. இதற்குக் காரணம் எதுவாயினும், சுல்தானிடத்தில் பிரிட்டிஷ் செல்வாக்குப் பெருமளவும் குறைந்து விட்டிருந்தது என்பது மட்டும் உண்மை. அதே சமயத்தில் ஜெர்மனியின் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே யிருந்தது. முதல் உலகப் போரில் ஜெர்மனிக்குப் பெரும் பயனளிப்பதாக இருந்த கூட்டுறவு அச் சமயத்தில் உருவாகிக் கொண்டிருந்தது. இந்தத் தறுவாயில் இளந்துருக்கியர்களில் எக் கட்சியினரின் பலம் ஓங்கியிருந்ததோ அதற்கேற்றபடி பிரதம அமைச்சரின் பதவியிலும் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன.

பேரரசின் துண்டிப்பு வெகு விரைவில் மீண்டும் துவங்கப் பெற்றது. பல நாடுகளும் துருக்கியின் பகுதிகளைப் பறிப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தன. அவற்றைத் தடுத்து நிறுத்து வதில் அப்துல் ஹமீதுக்குக் கிடைத்த வெற்றியைவிடக் குறைந்த வெற்றியே இளந் துருக்கியர்களுக்கு ஏற்பட்டது. அப்துல் ஹமீதாவது அவற்றைத் தம் அறிவுக் கூர்மையாலும் தந்திரத்தி னலும் சமாளித்துக் கொண்டிருந்தார். ஆனல், இளந் துருக்கி யர்கள் அவ்விதக் குணவியல்புகளைப் படைத்திருக்கவில்லை யாதலால், நிலைமை மேலும் மோசமாகிக் கொண்டிருந்தது. இருப்பினும், நெடு நாட்களாக அவருடைய அரசாங்கம் இழைத்து வந்த தவறுகள்தாம் இளந் துருக்கியர்கள் பதவி வகித்திருந்த காலத்தில் ஏற்பட்ட பேரிடிக்குக் காரணமாகும் என்பதைச் சிறிதளவும் தயக்கமின்றிக் கூறலாம்.

1908ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சிக்குப் பிறகு வெகு விரைவில் அதே ஆண்டு அக்டோபர் மாதம் ஏழாம் நாள் அன்று, புதிய அரசியல் அமைப்புத் திட்டம் அமலில் வருவதற்கு முன்பு, நெருக்கடியை ஆஸ்ட்ரியா - ஹங்கேரிய அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, பெர்லின் ஒப்பந்தத்தில்

வல்லரசுகளால் விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளைப் புறக்கணித்துவிட்டு, பாஸ்னியாவையும் ஹெர்ஸிகோவினாவையும் இணைத்துக் கொண்டுவிட்டது. இது சரி என்பதை நிரூபிப்பதற்காக எவ்வித முயற்சியும் செய்து கொள்ளப்படவில்லை. மக்களைப் பொறுத்தவரையிலும் அவ்வினைப்பு எவ்வித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை. செயல் முறையில் அவ்விரு மாநிலங்களும் ஆஸ்ட்ரியா-ஹங்கேரியின் ஆட்சிக்கே உட்பட்டிருந்தன. ஏற்பட்ட ஒரே ஒரு வேறுபாடென்னவென்றால், உத்மானியர்களின் இறைமைக்கு ஒரு சின்னமாக இருந்த ஃபெஸ் (Fez) என்னும் தொப்பியை அணிவதை பாஸ்னியாவின் படைவீரர்கள் கைவிட்டனர். அவ்விரு மாநிலங்களின் இணைப்பும் துருக்கியர்களுக்கிடையே பெருஞ் சினத்தை உருவாக்கிற்று. அது தங்களுடைய பேரரசை அவமதிப்பதாகும் என்று அவர்கள் கருதினர். ரஷிய நாட்டிலும் மனக் கசப்பு ஏற்படுவதற்கு அது ஒரு முக்கிய காரணமாயிற்று. முதல் உலக யுத்தம் மூளுவதற்கும் அது ஓரளவு காரணமாயிற்று. நோவி பாஸாரின் சன்ஜக் பகுதியைக் கைப்பற்றியிருப்பதை ஆஸ்ட்ரிய அரசாங்கம் கைவிட்டு, உத்மானிய அரசின் கடனில் ஒரு பகுதியை அடைப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இந்தச் சலுகைகளெல்லாவற்றுக்கும் சுல்தான் இணக்கம் தெரிவித்ததனால், ஆஸ்ட்ரிய அரசின் குற்றத்தை அவர் மன்னித்து விட்டிருக்கவேண்டும். பல்கேரியாவின் ஆட்சியாளரான இளவரசர் ஃபெர்டினண்ட் ஆஸ்ட்ரிய-ஹங்கேரிய அரசினை விரைவில் பின்பற்றலானார். அவர் தம்மை ஒரு சுதந்திர அரசராகப் பிரகடனப் படுத்திக்கொண்டார். இதனாலும் அவருடைய குடிமக்களுடைய நிலையில் பெரும் மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. கிரீட் தீவும் கிரீஸும் ஒன்றுபட்டுவிட்டதாக அத் தீவின் சட்டமன்றம் அக்டோபர் 12ஆம் நாள் அன்று பிரகடனம் செய்தது.

பேரரசுக்கு மற்றும் ஓர் அடி எதிர்பாராத திக்கிலிருந்து, அதாவது இத்தாலிய நாட்டிலிருந்து விழுந்தது. இத்தாலிய நாடு சற்றும் எதிர்பாரா வகையில் காரணம் ஏதுமின்றித் திடீர்த் தாக்குதல் ஒன்றைத் திரிப்போலியின்மீது நடத்திற்று. ஆபிரிக்காவின் இந்த மாநிலம் எக்காலத்திலும் சுயாட்சி பெற்றதாக இருக்கவில்லை. அது துருக்கிப் பேரரசின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. சுல்தானின் ஆட்சி இஸ்தம்பூல் நகரத்திலிருந்தவாறு அம் மாநிலத்தின்மீது நேர்முகமாகவே நடைபெற்று வந்தது. அதனுடைய குடி மக்களைப் பொறுத்தவரை, திரிப்போலி நகரிலும் அதன் கடற்கரையிலிருந்த இதர பகுதிகளிலும் வாழ்ந்தவர்கள் அப்பட்டமான முஸ்லிம்களாகவும், அதாவது

துருக்கியர்களாகவும், மூர்களாகவும், உள்நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் அரைச் சுதந்தரமுள்ள அராபியர்களாகவும் விளங்கினர். இப் பகுதிகளின் குடிமக்கள் அரசியல் மாறுதல் எதையும் நாடவில்லை. ஆகவே, அதன்மீது தாக்குதல் நடத்துவதற்கான காரணம் எதுவுமே இத்தாலிய நாட்டிற்கு ஏற்படவில்லை. இருப்பினும், அந் நாடு நீண்ட ஒரு குற்றப் பத்திரிகையைத் தயாரித்து வெளியிட்டது. இது உண்மையில் ஓர் ஆக்கிரமிப்புச் செயலாகும். பிரான்ஸ் தூனிஸ்ஸைக் கைப்பற்றிக் கொண்டதனால் ஏற்பட்ட பொறுமையே இத்தாலி இவ்விதம் நடந்துகொள்வதற்குக் காரணமாகும். இருப்பினும், பிரான்ஸும் பிரிட்டனும் அந்த ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொள்ளவில்லை.

1910ஆம் ஆண்டு முடிவு பெறும் வரையிலும் இத்தாலிய அரசு துருக்கிப் பேரரசின் முழுமையை அழியாது காக்கவே விரும்பிற்று. ஆகவே, அவ்விரு நாடுகளுக்குமிடையே இருந்த நிலையைக் குலைப்பதற்கான காரணம் எதுவும் மூளாத்துவிடவில்லை. ஆயினும், 1911, செப்டம்பரில் திரிப்போலியைக் கைப்பற்றப் போவதாக இத்தாலிய அரசு தன் விருப்பத்தை அறிவித்தது. இது சுல்தானை அதிர்ச்சிக்குள்ளாக்கிற்று. தான் அம் மாநிலத்தைத் தன்னுடன் இணைத்துக்கொள்ளப் போவதாக இத்தாலிய அரசாங்கம் வல்லரசுகளுக்கு அறிவித்தது. அந் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஐம்பதினாயிரம் படைவீரர்களைக்கொண்ட ஒரு படையையும் அது அனுப்பிவைத்தது. ஏட்ரியாட்டிக் கடலில் இருந்த துருக்கிய நகரமான பிரவீஸாவை அதன் கப்பற்படை தாக்கி, துருக்கிக் கப்பற்படையை டார்டனல்ஸில் அடைக்கலம் புகுமாறு வற்புறுத்திற்று. ஏஜியன் கடலில் இருந்த தீவுகள் பலவற்றையும் அவ்வரசு கைப்பற்றிக் கொண்டது.

சுல்தானுக்குப் பெருங்குறை ஒன்று ஏற்பட்டிருந்தது. பல ஆண்டு காலமாக சுல்தான் அப்துல் ஹமீது தம் கப்பற் படையைக் கவனிப்பில்லாமலேயே விட்டு வைத்திருந்தார். தமக்கு முன்பு இருந்தவரைப் பதவியில் இருந்து விலக்குவதில் அது கலந்துகொண்டதனால் அதன்மீது அவர் குறைகொண்டிருந்தார். போர்க் கப்பல்களைப் பழுது பார்ப்பதற்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கி வைக்கப்படும் பணத்தைத் தம் முடைய சொந்தச் செலவிற்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு அவர் படைத்துறை அமைச்சரை அனுமதித்திருந்தார். பல ஆண்டுகளாகத் துருக்கிக் கப்பற்படை கோல்டன் ஹார்ன்

துறைமுகத்தை விட்டு வெளியேறவேயில்லை. அந்த நிலை ஏற்பட்டிருக்காவிடில், அப்துல் ஹமீதினுடைய காலத்தில் ஐரோப்பாவின் கப்பற்படைகளுக்குள் மூன்றும் இடத்தை வகித்த துருக்கிக் கப்பற்படை ஆபிரிக்காவில் இத்தாலிய படை வந்திறங்குவதையே தடுத்திருக்கக்கூடும். திரிப்போலியி லிருந்த படையின் எண்ணிக்கையை இளந் துருக்கியர்கள் பெரு மளவும் குறைத்துவிட்டனர். இத்தாலிய அரசு போர் தொடுத்த தற்குப் பிறகு துருக்கிப் படையை மேலும் வலுப்படுத்துவது என்பது எளிதான செயலாக இருக்கவில்லை. குறிப்பாக, பிரிட்டிஷ் அரசாங்கம் எகிப்து நடுநிலைமை எய்தியுள்ளது என்று அறிவித்து விட்டதற்குப் பிறகு அச்செயல் மேலும் கடினமாகி விட்டது.

தடைகள், தொல்லைகள் பல ஏற்பட்டிருந்த போதிலும், சுல்தான் தமது ஆபிரிக்க மாநிலத்தை மிக மும்முரமாகப் பாது காக்க முற்பட்டார். அப் பகுதியில் தேவைப்படும் போர் முறையை இத்தாலியப் படைகள் அறிந்திருந்த காரணத்தால் சுல்தானின் படைகளால் முன்னேற முடியவில்லை. 1912, அக்டோபர் மாதம் வரையிலும் போர் நீடித்தது. தம்முடைய எல்லைக்கு மிக அருகாமையிலேயே ஆபத்து ஏற்பட்டதன் விளை வாக சுல்தான் போரை முடித்துக்கொள்ள நேரிட்டது.

இத்தாலியுடன் போர் ஏற்படுதல், அதன் விளைவாகத் திரிப் போலியின் பாதுகாப்பிற்காக ஏராளமான துருக்கிப்படைகள் போரிடுதல், துருக்கித் துறைமுகங்களை இத்தாலியப் படை முற்றுகையிடுதல், அதனால் சுல்தான் தம்முடைய படைகளை பால்கன் மாநிலங்களுக்கு மாற்ற இயலாது தவித்தல் ஆகிய இவையெல்லாம் ஐரோப்பாவில் சுல்தானின் இதர மாநிலங் களில் குடியிருந்த கிறித்தவர்களின் சார்பாக கிரீஸ், பல்கேரியா மற்றும் ஸெர்பியா தலையிடுவதை இன்றியமையாததாக்கி விட் டன. அந்த மாநிலங்களில் சுல்தானுக் கெதிராகக் கிளர்ச்சிகள் மூண்டு கொண்டிருந்தன.

இளந் துருக்கியர்களின் ஆட்சிக் காலத்தில் இந்தக் கிறித்தவ மாநிலங்களின் நிலையில் சிறிதளவும் முன்னேற்றம் ஏற்படவில்லை; மாறுக, இருந்த நிலை மேலும் மோசமாகிவிட்டது. ஆளுநர்களும் உத்மானிய அதிகாரிகளும் எப்பொழுதும் இருந் தது போலவே இப்பொழுதும் கைக்கூலி வாங்குபவர்களாகவும், தங்கள் இச்சைப்படி நடந்து கொள்பவர்களாகவும் காட்சி யளித்தனர். உயிருக்கோ சொத்துக்கோ பாதுகாப்பு என்பது

கிடையாது. கிறித்தவ கிராமங்களின் பாதுகாப்பிற்காக அனுப் பப்பட்ட துருக்கிப் படைவீரர்கள் அக் கிராமங்களையே கொள்ளை யடித்தனர். கொள்ளைக் கூட்டங்கள் சிற்சில வேளைகளில் கிரேக்க வீரர்களைப்போல் உடை தரித்துக்கொண்டும், சிற்சில வேளைகளில் பல்கேரிய வீரர்களைப்போல் உடை தரித்துக் கொண்டும் கிராமங்களைக் கொள்ளையடித்து வந்தன. வல்லரசு கள் தொடர்ந்து வற்புறுத்தி வந்த சீர்திருத்தங்கள் எவற்றை யுமே இளந் துருக்கியர்கள் செயல்படுத்த முன்வரவில்லை. செயல்படுத்தக் கூடியதாக இருந்த ஒவ்வொரு திட்டமும் அப்துல் ஹமீதின் ஆட்சியில் முப்பதாண்டு காலமாகச் செயல் படாமல் இருந்தது போலவே இப்பொழுதும் இருந்தது. இளந் துருக்கியர்கள் எல்லாவற்றையும் துருக்கி மயமாக்க முயன்ற தனால் மேலும் பல இன்னல்கள் அவர்களை எதிர்நோக்கி நின்றன. முறையற்ற ஆட்சிக்கும் கொடுங்கோலாட்சிக்கும் இனியும் தொடர்ந்து விருப்புடன் மக்கள் பணிந்து நடக்க மாஸிடோனியாவின் நிலை அனுமதிக்கவில்லை. அவர்களைச் சூழ்ந்திருந்தவர்கள் பல்கேரியர்கள், ஸெர்பியர்கள், கிரேக்கர் கள் மற்றும் பலவகைப்பட்ட இனத்தினர்கள் ஆகியவர்களாவர். இவர்கள் அனைவரும் ரஷியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆகிய வற்றின் உதவியைப் பெற்றுத் துருக்கியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று விட்டிருந்தனர். கிரீஸ், பல்கேரியா மற்றும் ஸெர்பியா ஆகியவற்றின் மக்கள் வெறுக்கத்தக்கதாக இருந்த ஆட்சிக் குட்பட்டிருந்த தமது இனத்தாரிடம் அனுதாபம் கொண்டிருந்தனர். ஆகவே, ஒழுங்கையும் சிறந்த அரசாங் கத்தையும் நிலைநாட்டுவதற்காக அவர்கள் அம் மக்களின் சார் பாகக் குறுக்கிட்டதில் நியாயம் இருந்தது. மாஸிடோனியா விலுள்ள கொச்சானை (Kotchana) என்ற இடத்தில் பல்கேரியர் களும் மாண்ட்டிநீக்ரோவின் எல்லையில் ஸெர்பியர்களும் படு கொலையுண்டதனால் நெருக்கடி மேலும் கடுமையாகிவிட்டது.

1912ஆம் ஆண்டு துவக்கத்தில் மாஸிடோனியாவில் ஆயு தம் தாங்கித் தலையிடுவதற்காக கிரீஸ், பல்கேரியா, மற்றும் ஸெர்பியா ஆகியவற்றின் அரசுகளுக்கிடையே கிரீஸின் நாட்டுப் பற்று மிக்க பிரதமரான வெனிஸிலோஸ் (Venezelos) என்பவரின் தூண்டுதலின் பேரில் பேச்சு வார்த்தைகள் தொடங்கின. வரலாற்றிலேயே முதல் தடவையாகவும் ஒரே ஒரு தடவை யாகவும் இம் மூன்று நாடுகளுக்கிடையே சுல்தானுக்கு எதிரான ஒற்றுமை ஏற்பட்டது. இவ்வித இணைப்பின் விளைவாகத் துருக் கியர்களை முறியடித்தல், அவர்களுடைய ஐரோப்பிய உடைமை களிலிருந்து அவர்களை விரட்டியடித்தல் என்ற குறிக்கோள்கள்

உடனடியாக நிறைவேற்றப்பட்டன என்றும், அவர்களுடைய குறிக்கோள்கள் வெற்றி பெற்றபின், அவ்வினைப்பு உடைபட்டு விட்டது. அதனால் பல துர்வசமான விளைவுகள் ஏற்பட்டன.

1912, மார்ச்சு மாதம் 18ஆம் நாள் அன்று துருக்கிக்கு எதிராக நடக்கவிருக்கும் போரில் ஒன்றுக்கொன்று இராணுவ உதவி புரிந்து கொள்வதற்காக ஒப்பந்தம் ஒன்று பல்கேரியா விற்கும் செர்பியாவுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்டது. மாஸிடோனியாவின் பகுதி ஒன்று வெல்லப்படுமாயின், இரு நாடுகளுக்கும் அருகிலுள்ள நிலப் பகுதியை ஒவ்வொரு நாடும் தனது ஆட்சிப் பகுதியுடன் இணைத்துக்கொள்ளலாம் என்றும் நடுவிலுள்ள எஞ்சிய பகுதியை ரஷியாவின் மத்தியஸ்தத்தின் படி அவரவரும் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் என்றும் அவ் வொப்பந்தத்தில் காணப்பட்ட அந்தரங்க நிபந்தனை ஒன்று வற்புறுத்திற்று. இரண்டு மாதங்களுக்குப் பிறகு கிரீஸுக்கும் பல்கேரியாவுக்கும் இடையே மற்றோர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன்படி, இரு நாடுகளோ அல்லது இரண்டில் ஏதேனும் ஒன்றே துருக்கியால் தாக்கப்படுமாயின், அவ்விரு நாடுகளும் ஒன்றுக்கொன்று உதவி புரியவேண்டும் என்று விதிக்கப்பட்டது. போருக்குப் பிறகு இலாபங்களை எவ் விதம் பகிர்ந்து கொள்வது என்பதைப்பற்றி ஒன்றுமே குறிப் பிடப்படவில்லை. சற்றுப் பிறகு மாண்ட்டிநீக்ரோவும் இக் கூட்டுறவுகளில் சேர்ந்து கொண்டது. அந் நாட்டைப் பொறுத்த வரையிலும், துருக்கியுடன் போருக்குச் செல்வதற்கு அது எக் காலமும் துடித்துக்கொண்டே இருந்தது.

இந்த ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளன என்றும், எந்நேரமும் போர் மூண்டுவிடக் கூடும் என்றும் வல்லரசுகளுக் குத் தெரிந்தவுடன், புயலை அடக்கி அமைதியை நிறுவ அவை எல்லா முயற்சிகளையும் எடுத்தன. எல்லா வல்லரசுகளின் சார் பாகவும் செப்டம்பர் 25ஆம் நாள் அன்று ரஷியா, ஆஸ்ட்ரியா ஆகிய நாடுகள் மிகத் தீவிரமான எதிர்ப்பினைத் தெரிவித்தன. முறித்துவிட்ட பெர்லின் ஒப்பந்தத்தை உயிர்ப்பிக்க அவை முயன்றன. அந்த ஒப்பந்தத்தின் இருபத்து மூன்றும் நிபந் தனையின்படி, அந்த மாநிலங்களில் நிர்வாகச் சீர்திருத்தம் செய்யப் போவதாக அவை பொறுப்பு ஏற்றுக்கொண்டன. ஆனாலும், அப்படிப்பட்ட சீர்திருத்தங்கள் சுல்தானுடைய இறைமையையோ பேரரசையோ எவ்விதத்திலும் பாதிக்கக் கூடா என்றும் அவை வற்புறுத்தியதனால் அவ் வாக்குறுதிகள் செயலற்றனவாகிவிட்டன. அக்டோபர் 15ஆம் நாள் அன்று

பால்கன் நாடுகள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், வல்லரசுகளின் அறிவுரையின்படி தாங்கள் நடந்துகொள்ளப் போவதில்லை என்று மிக்க மரியாதையுடன், ஆனால் அதே சமயத்தில் மிகக் கண்டிப்புடன் எடுத்துக் கூறிவிட்டன. அச் சீர்திருத்தங்களையெல்லாம் சுல்தான் உடனடியாகப் புகுத்தவேண்டும் என்றும் அந்த நாடுகள் வற்புறுத்தின.

அவை வற்புறுத்திய சீர்திருத்தங்களில் ஒன்று, பேரரசிலுள்ள மாநிலங்களுக்கு இனத்தின் அடிப்படையில் சுயாட்சி அளிக்கப்படவேண்டும் என்பதாகும். இந்த இறுதி எச்சரிக்கையைப் பெற்ற சுல்தான் அதனைப் போருக்கான அறிவிப்பே என்று கருதிவிட்டார். ஆகவே, இத்தாலிய நாட்டின் வாயிலிலேயே ஏற்படவிருக்கும் போரில் இத்தாலிய நாட்டையே ஈடுபடுத்தும் நோக்கத்துடன் சுல்தான் அந் நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். அக்டோபர் 15ஆம் நாள் அன்று செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, திரிப்போலியிலிருந்து சுல்தான் தமது படைகளைப் பின்வாங்கிக் கொள்வதற்கு இணங்கினார். இவ்விதம் செய்ததன் மூலம், திரிப்போலியை இத்தாலிய நாடு கைப்பற்றிக் கொண்டிருப்பதை அவர் செயல் முறையில் அங்கீகரித்து விட்டார். மறுபுறத்தில், ஏஜியன் கடலில் தான் கைப்பற்றி வைத்திருந்த தீவுகளிலிருந்து பின்வாங்கிக்கொள்வதற்கு இத்தாலி நாடு இணங்கிற்று. ஆனால், அவ்வாக்குறுதியை அது நிறைவேற்றவில்லை.

அதற்கிடையில் பால்கன் பகுதிகளில் சச்சரவுகள் தொடங்கிவிட்டன. அக்டோபர் 8ஆம் நாள் அன்று மாண்ட்டிநீக்ரோ போரைத் தொடங்கிற்று. அக்டோபர் 18ஆம் நாள் அன்று மற்ற மூன்று நாடுகளும் அதைப் பின்பற்றின. அதே நாளில் ஒவ்வொரு நாடும் துருக்கியின்மீது படையெடுப்பு நிகழ்த்துவதற்காகத் தன் படைகளை அனுப்பி வைத்தது. துருக்கியின் கிறித்தவ மாநிலங்கள் சீரான அரசாங்கத்தைப் பெறவேண்டும் என்ற பொதுவான நோக்கத்துடன் அந் நாடுகள் மறைவான எண்ணங்கள் சிலவற்றையும் கொண்டிருந்தன. கிரீட்டையும் ஏஜியனிலிருந்த ஏனைத் தீவுகளையும் பெறவேண்டும் என்று கிரீஸ் விரும்பியது; தனது நிலப்பரப்பில் தனது எல்லைகளை மேலும் விஸ்தரித்துக் கொள்ளவேண்டும் என்ற அவாவும் அதற்கு இருந்தது. ஸான் ஸ்டீஃபனோ ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 'பெரிய பல்கேரியா'வைத் தன் வசப்படுத்திக்கொள்ள பல்கேரியா துடிதுடித்துக்கொண்டிருந்தது. செர்பியாவும் தன்னுடைய எல்லைகளை மீட்பித்து, ஏஜியன் கடல், ஏட்ரியாட்டிக்

கடல் ஆகிய இரண்டுக்குள்ளும் புகுவதற்கு வாயில்களைத் தேடிக் கொண்டிருந்தது. அல்பேனியாவின் ஒரு பகுதியை மாண்ட்டி நீக்ரோ தன் வசப்படுத்த விரும்பியது; ஏட்ரியாட்டிக் கடலுக் கப்பாலும் தன் எல்லைகளை விஸ்தரித்துக் கொள்வதிலும் நாட்டங் கொண்டிருந்தது. ஒவ்வொரு நாடும் தனது எல்லைகளுக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் தன் இனத்தைச் சார்ந்த மக்கள் குடி யிருப்பதை உணர்ந்திருந்தது. அம் மக்கள் கொடுங்கோலாட்சிக் குட்பட்டு உதவிக்காகக் கதறிக்கொண்டிருந்தனர் என்பதை யும் அந் நாடுகள் அறிந்திருந்தன. ஆனால், அவை அனைத்தும் தம் தம் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள முடியுமா என்பன ஐயத்துக்குரியனவாக இருந்தன.

கூட்டுப் படையின் எண்ணிக்கை ஏழு லட்சமாக இருந்தது. துருக்கியோ ஐரோப்பாவில் நான்கு லட்சம் படைவீரர்களை மட்டுமே கொண்டிருந்தது. ஆனால், ஆசியாவில் அதன் படை வீரர்களின் எண்ணிக்கை ஏராளமாக இருந்தது. மொத்தத்தில் அதன் வீரர்களின் எண்ணிக்கை கூட்டுப் படையினரின் எண் ணிக்கைக்கு மிக அதிகமாகவே இருந்தது. ஆகவே, ஐரோப்பா வில் துருக்கி மிகத் தீரத்துடன் போரிடக்கூடும் என்று எதிர் பார்க்கப்பட்டது.

பட்டத்திற்கு வரவேண்டிய இளவரசர் கான்ஸ்டண்ட் டைனின் (பின்னாளில் கிரீஸின் மன்னராய் உயர்ந்தவர்) தலைமையில் கிரேக்கப்படை வடக்கு எல்லையைக் கடந்து நான்கு நாட்களுக்குள், அக்டோபர் 22ஆம் நாள் அன்று ஹஸன் பாஷா வின் தலைமையிலிருந்த துருக்கிப்படை ஒன்றை சரண்டா போரஸ் (Sarandaporus) என்ற இடத்தில் சந்தித்தது. துருக் கியர்களின் எண்ணிக்கை சற்றுக் குறைவாகவே இருந்த போதிலும், போரிடுவதற்கு அவர்கள் மிக உறுதியுடனேயே நின்றிருந்தனர். இருந்தபோதிலும், அவர்கள் முறியடிக்கப் பட்டு, அடுத்த நாள் இரவில் பின்வாங்கிக் கொள்ளுமாறு வற் புறுத்தப்பட்டனர். அடுத்த நாள் கிரேக்கர்கள் மீண்டும் தாக்கத் தொடங்கினர். துரதிருஷ்டம் பிடித்த துருக்கியர்கள் சரண்டாபோரஸில் தாங்கள் அடைந்த தோல்வியினால் மன முடைந்தும், இரவில் நெடுந் தூரம்வரை நடந்து வந்ததனால் களைப்புற்றும் இருந்த நிலையில் திடீரென்று ஓரிடத்தில் தாக்கப் பட்டனர். அச்சத்திற்கும் மனச் சோர்வுக்கும் இரையான அவர் கள் எதிரியின் முன்னால் ஓட்டம் பிடித்தனர். ஓடுகையில் அவர்கள் பீரங்கிகளையும் போக்குவரத்துச் சாதனங்களையும் தங்கள் பின்னால் விட்டுச் சென்றனர்.

பின்வாங்கிக் கொண்டிருந்த துருக்கியர்கள் பெரும் பீதிக்கு உட்பட்டிருந்தார்கள் எனினும், வழியில் இருந்த துரதிருஷ்டம் பிடித்த கிறித்தவ குடிமக்களைப் பழிவாங்கி விட்டனர். ஈவு இரக்க மின்றி அவர்களைக் கொன்றனர். படையில் எஞ்சி யிருந்த பகுதி வேரியா (Veria) என்ற இடத்தை யடைந்தது. அங்கே அதன் உதவிக்குப் பதினான்கு புதிய படைகள் வந்து சேர்ந்தன. அக் டோபர் 28ஆம் நாள் கிரேக்கப் படை மீண்டும் நகரத் தொடங் கிற்று. வேரியாவின் முன்னிலையில் அப் படை மீண்டும் துருக்கி யர்களைச் சந்திக்க நேர்ந்தது. துருக்கியர்களை எதிரிகளின் படைகள் மிகத் தீவிரமாகச் சூழ்ந்திருந்தன. வெகு விரைவில் போர் முடிந்துவிட்டது. கிரேக்கர்கள் துருக்கியர்களை மீண்டும் தோற்கடித்தனர். துருக்கிப் படை அதிகாரிகளும் சாதாரணப் படை வீரர்களும் பெருங் கூட்டமாக ஓட்டம் பிடித்தனர். இந்தத் திட்டவட்டமான தோல்விகளுக்குப் பிறகு மிஞ்சிய உத்மானியப் படையினர் நவம்பர் 3ஆம் நாள் அன்று வார்டார் நதியைக் கடந்து சென்றனர். 8ஆம் தேதியன்று சலோனிக்கா நகரம் கிரேக்கர்களிடம் சரணடைந்தது. இது துரோகத்தின் விளைவே யாகும் என்று சந்தேகிக்கப்பட்டது. ஹஸன் பாஷாவும் அவரு டைய இருபத்தையாயிரம் படை வீரர்களும் கைதிகளாயினர். அடுத்த நாள் பல்கேரியப் படை ஒன்று திரேஸிலிருந்த முக்கிய படையினின்று தனியே விலகி, சலோனிக்காவின் முன்னிலையில் வந்து நின்றுவிட்டது. அந்த முக்கிய நகரத்தைக் கொள்ளை யடித்துக் கிடைக்கும் பொருளில் தானும் ஒரு பகுதியைப் பெறவே அது அவ்விதம் மிகவும் அவசரப்பட்டு வந்து சேர்ந்தது. அதனுடைய தலைவனின் வேண்டுகோளின் பேரில் பல்கேரியப் படையின் இரண்டு பிரிவுகள் அந் நகருக்குள் நுழைவதற்குக் கிரேக்கர்கள் அனுமதி வழங்கினர். இவ்விதக் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட போதிலும், பத்துப் படைப் பிரிவுகள் அங்கே அனுப்பப்பட்டன. பின்னாளில் அங்கு ஏற்பட்ட பல தொல்லை களுக்கும் அவை காரணமாயின.

இவ்விதமாகக் கிரேக்கர்கள் சிறிதும் எதிர்பாராத பெரும் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டிருக்கையில், வடக்கிலிருந்து ஸெர்பியர்கள் முன்னேறிக் கொண்டிருந்தனர். ஸெக்கி பாஷா (Zeki Pasha) என்பவரின் தலைமையில் ஒரு லட்சம் போர் வீரர் களைக் கொண்ட துருக்கிப் படை ஒன்று அவர்களைச் சந்திப்பதற் காக வார்டார் நதிச் சமவெளியில் வந்து சேர்ந்தது. எண் ணிக்கையில் சரிசமமாக இருந்த இரு படைகளும் அக்டோபர் 23ஆம் நாள் அன்று குமானேவோ (Kumanovo) என்ற இடத்தில் சந்தித்தன. துருக்கியர்களிடம் நவீனப் போர்க் கருவிகள் இருந்

தன; ஆனால், அக் கருவிகளைச் சரிவரப் பயன்படுத்துவதற்குத் தகுதி பெற்ற வல்லுநர்கள் இருக்கவில்லை. அவர்களுடைய பீரங்கிப் படை உண்மையில் மிகவும் சிறப்புப் பெற்றதாகும். எண்ணிக்கையில் அது ஸெர்பியர்களின் படையைவிடச் சிறந்ததாகவே இருந்தது. இவ்வளவு இருந்தும், துருக்கியர்கள்பால் மேலும் சில முக்கிய வசதிகள் இல்லாத காரணத்தால் எல்லாமே பயனற்றனவாகி விட்டன. அதிகாரிகளுக்கும் மற்றும் படை வீரர்களுக்கும் போதிய அளவு உணவு கிட்டவில்லை. வறுமை யினால் வாடிக் கொண்டிருந்த குடியானவர்களையே அவர்கள் நம்பி இருக்க வேண்டியதாயிற்று. தட்ப வெப்ப நிலையும் மிகவும் பாதகமாக இருந்தது. கோடையில் அணிய வேண்டிய ஆடை களையே படை வீரர்கள் குளிர்காலத்திலும் அணிய வேண்டிய தாயிற்று. சிறந்த வீரர்களாலும் போதிய அளவு உணவும் ஆடையும் இன்றிப் போரிட முடியவில்லை. ஆகவே, போரில் பெரும் எதிர்ப்பை அளித்த போதிலும், துருக்கிப் படைகள் ஸெர்பியாவின் தலைசிறந்த காலாட் படைகளால் பிளவுபட்டன. துருக்கிப் படைகள் அவசரமாகப் பின்வாங்கி ஓட நேரிட்டன. துருக்கிப் பீரங்கிப் படை முற்றிலுமே அழிந்தது. ஒரு லட்சம் போர் வீரர்களில் நாற்பதினாயிரம் வீரர்கள் மட்டுமே உயிர் தப்பினர். ஸெர்பியர்களின் மிகப் பழைமையான தலைநகரமான உஸ்குப் (Uskub) கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. மற்றொரு ஸெர்பியப் படை ஏட்ரியாட்டிக் கடலை நோக்கி முன்னேறி டுராஸ்ஸோவைக் (Durazzo) கைப்பற்றிக் கொண்டது.

குமானேவோவில் நிகழ்ந்த கடுமையானதும், திட்டவட்ட மானதுமான போருக்குப் பிறகு எஞ்சி யிருந்த துருக்கிப் படை வார்டார் சமவெளி வழியாக வெலஸ்ஸுக்குப் (Veles) பின் வாங்கி, பிறகு சலோனிக்காவை நோக்கி முன்னேறுது, மொனஸ்டிர்குச் (Monastir) செல்லும் வழியிலுள்ள பிரிலீப் (Prilip) நோக்கி மேற்குப் புறமாக முன்னேறியது. ஸெர்பியர் கள் சிறிது தாமதிப்பிற்குப் பிறகு பிரிலிப்பில் மீண்டும் துருக்கியர் களுடன் மோதினர். அங்கே துருக்கியர்களின் நிலை உண்மை யில் உறுதி வாய்ந்ததாக இருந்தது. ஸெர்பியப் படை தன் வல்லமையைக் கொண்டு அந் நகரைக் கைப்பற்றிக்கொண்டது.

பிறகு துருக்கியர்கள் மொனஸ்டிர்குப் பின்வாங்கிக் கொண்டனர். அங்கே படை உதவி அவர்களுக்குக் காத்துக் கொண்டிருந்தது. நவம்பர் 17ஆம், 18ஆம் நாட்களில் மொனஸ் டிர்குக்கு முன்பினில் மற்றொரு பெரும்போர் நிகழ்ந்தது. மீண்டும் துருக்கியர்கள் தோற்கடிக்கப்பட்டனர்; பத்தாயிரம் பேர் சிறை

யடைக்கப்பட்டனர். எஞ்சி யிருந்த படை அல்பேனியாவுக்குள் பின்வாங்கிக் கொண்டது. அங்கே பருவ மாறுதலின் விளைவாக ஸெர்பியர்களால் அவர்களைப் பின்தொடர முடியவில்லை. இறுதி யில், துருக்கியர்கள் அடுத்த வசந்த காலத்தில் ஏட்ரியாட்டிக் பகுதியிலிருந்து கடல் வழியாக இஸ்தம்பூலுக்குக் கொண்டுவந்து சேர்ப்பிக்கப்பட்டனர். இதைவிட அதிகமான வெற்றியை ஸெர் பியர்கள் பெற்றே இருக்க முடியாது. ஸெகியின் படை முற்றி லுமே அழிக்கப்பட்டது.

தெருக்கடி மிகுந்த இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், கிழக்கில் பல்கேரியர்கள் இவற்றை நிகர்த்த வெற்றிகளைப் பெற்றுக் கொண்டிருந்தனர். அவர்கள் ஒரு பெரும் படையுடன் அக்டோபர் 18ஆம் நாள் அன்று திரேஸின் மீது படையெடுத்தனர்; 22ஆம் நாள் அன்று அவர் கள் கர்க் கிலிஸ்ஸி (Kirk Kilisse) என்ற இடத்தில் துருக்கிப்படை ஒன்றைச் சந்தித்து இரு நாட் போருக்குப் பிறகு அதைத் தோற் கடித்தனர். 28ஆம் நாள் அன்று அவர்கள் நளீம் பாஷாவின் தலைமையிலிருந்த துருக்கிப் படை ஒன்றை எதிர்த்தனர். துருக் கியர்களின் படை லுலு பர்காஸிலிருந்து (Lulu Burgas) விஸா (Visa) வரையிலும் வரிசையாக நின்று கொண்டிருந்தது. அப் படை மிகக் கடுமையான எதிர்ப்பினை அளித்தது. ஆனால், பல் கேரியாவின் இரண்டு நாள் கடுமையான தாக்குதலுக்குப் பிறகு துருக்கியர்கள் விட்டுக் கொடுத்தனர். அவர்களுக்குப் பெருத்த சேதமும் ஏற்பட்டது. இஸ்தம்பூலைப் பாதுகாத்து வந்த சங்கிலித் தொடர் போன்று அமைந்திருந்த சடால்ஜா (Tchatalja) என் னும் அரண்களுக்குப் பின்னால் துருக்கிப் படைகள் வந்து நின்றன. திரேஸின் வழியாக முன்னேறிக் கொண்டிருந்த பல்கேரியப் படை வீரர்கள் பல்கார் இனத்தினரின் உதவியைப் பெற்றுத் துருக்கி மக்களுக்குப் பலவிதமான பயங்கரக் கொடுமை களை இழைத்தனர்.

நவம்பர் 17ஆம் நாள் அன்று சடால்ஜா அரண் வரிசைகளை பல்கேரியர்கள் மிகத் தீவிரமாகத் தாக்கினர். ஆனால், அதற் குள்ளாகத் துருக்கியர்கள் மேலும் படைகளைத் திரட்டி வைத் திருந்தனர். எனவே, பல்கேரியர்கள் பலமுறை மூர்க்கத்துடன் தாக்கியும், அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. டிஸம்பர் 8ஆம் நாள் வல்லரசுகளின் முயற்சியின் பேரில் துருக்கிக்கும், பல்கேரியா மற்றும் ஸெர்பியா ஆகியவற்றுக்கும் இடையே போர் நிறுத்தத்திற்கான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. எனி னும், கிரீஸுடனும் மாண்ட்டிநீக்ரோவுடனும் தொடர்ந்து போர்

நீடித்து நடைபெற்றே வந்தது. நிகழ்ந்த போர்களில் எல்லாம் கிரேக்கர்களும், ஸெர்பியர்களும், பல்கேரியர்களும், மாண்ட்டி நீக்ரோப் படை வீரர்களும் துருக்கியர்களைத் தோற்கடித்து வந்தனர். துருக்கியர் மாஸிடோனியாவிலிருந்தும், திரேஸ் மற்றும் எப்பிரஸ் ஆகியவற்றின் பெரும்பாலான பகுதிகளிலிருந் தும் விரட்டியோட்டப்பட்டனர். ஆனாலும், அவர்கள் எதிர்னே, ஜனீனா மற்றும் ஸ்கூடாரி ஆகியவற்றைத் தம் வசப்படுத்தியே வைத்திருந்தனர். அரண்களுக்குப் பின்னால் இருந்து கொண்டு போரிட்டபோதுதான் துருக்கியர்கள் தங்கள் தீரத்தைக் காண் பித்தனர். மற்றப்படி, திறந்த வெளிகளில் போரிட்டபோதெல் லாம் அவர்கள் தோல்வியே கண்டனர். உண்மையில், ஒரு காலத்தில் மாபெரும் வீரர்களாய் விளங்கிய துருக்கியர்கள், வரலாற்றிலேயே தங்கள் வீரத்திற்குப் புகழ் பெற்று விளங்கிய மாவீரர்கள் வெறுத்தொதுக்கப்பட்ட, தங்களுக்குக்கீழ் அற்பக் குடிமக்களாக இருந்து வந்த பலவீனமுற்றிருந்த சாதாரண ஸெர்பியர்களாலும் கிரேக்கர்களாலும் விரட்டியடிக்கப்பட்டன ரென்ருல், அது நம்ப முடியாத ஒரு செய்தியாக இருக்கின்றது. எல்லா வகையிலும் கிரேக்கர்கள் துருக்கியர்களைவிடச் சிறப்பு மிக்கவர்களாய் விளங்கத் தொடங்கினர்.

இவ்வளவு பெரிய சீர்குலைவுக்குக் காரணங்கள் பல இருந்த போதினும், அவற்றுள் மிக முக்கியமானதாக விளங்கியது, அவர் களுடைய படைகளுக்குத் தேவைப்பட்ட அத்தியாவசியமான உணவு வகைகளைப் போதிய அளவில் அரசு அளிக்கத் தவறியதே யாகும். படைகள் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு உணவு இல்லாமல் பட்டினி கிடக்கிற கதிக்கு விடப்படுவது மிகவும் சாதாரணமான ஒரு வழக்கமாக இருந்தது. மற்றொரு முக்கிய காரணமும் இருந்தது: ஐரோப்பாவில் போரிட்ட வீரர்களுள் பலர் உள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த கிறித்தவ குடிமக்களாய் விளங்கினர். இவர்களுக்கு எதிரிகளிடத்தில்தான் பற்றும் அனு தாபமும் அதிகமாக இருந்தன. துருக்கியர் தோற்கடிக்கப்பட்ட போதெல்லாம், இவர்கள் துருக்கியர்களைத் தாக்கத் தயங்க வில்லை.

போர் நிறுத்தத்துக்கான ஒப்பந்தம் ஏற்பட்டதற்குப் பிறகு 1912-13ஆம் ஆண்டு பனிக் காலத்தில் அமைதி ஏற்படுவதற் கான மாநாட்டை லண்டன் நகரில் கூட்டுவதற்குப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. ஆனால், பலன் எதுவும் விளைய வில்லை. அவை முறிவதற்கு எதிர்னேயைப் பற்றிய பிரச்சினை காரணமாகும். நிரந்தரமான அமைதி நிலவவேண்டுமென்ருல்,

எதிர்னேயைத் தங்களிடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று பல்கேரியர்கள் வற்புறுத்தினர். சுல்தான் முதலில் இக் கோரிக்கைக்கு விட்டுக் கொடுக்கத்தான் விரும்பினர். ஆனால், இஸ்தம்பூலில் இராணுவக் கலகம் ஒன்று மூண்டது. அன்வர் பே (Enver Bey) என்பவரின் தலைமையில் இராணுவக் குழு ஒன்று, அமைச்சர்கள் கூடி அப் பிரச்சினையைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்த அறையினுள் நுழைந்து, அவ்வரணை ஒப்படைப்பதற்குத் தனது எதிர்ப்பினைத் தெரிவிக்க முயன்றது. அவர்கள் நுழைவதைத் தடுத்தபோது, போர் அமைச்சரான நஸீம் பாஷாவும் அவருடைய மெய்காப்பாளரும் கொல்லப்பட்டனர். இதன் விளைவாகப் பிரதம அமைச்சரும் அச்சத்தால் பதவியினின்றும் விலகிக் கொண்டார். இளந் துருக்கியர்கள் இயக்கத்திற்கு ஆரம்பத்தில் பெரும் ஆதரவாளராக இருந்த மகமூத் ஷெக்பத் என்பவர் அப் பதவியின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். எதிர்னேயை ஒப்படைக்க அவர் மறுத்துவிட்டதனால், நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் முறிந்தன.

1913ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஜனவரி நான்காம் நாள் அன்று போர் நிறுத்தத்துக்கான ஒப்பந்த காலம் முடிந்து விட்டது என்று பல்கேரியர்கள் அறிவித்துவிட்டனர். ஆகவே, போர் மீண்டும் தொடங்கிற்று. பிப்ரவரி நான்காம் நாள் அன்று பல்கேரியப் படை எதிர்னேயைத் தாக்கத் தொடங்கிற்று. இந்த வேளையில் ஐயாயிரம் ஸெர்பியர்கள் பல்கேரியப் படைக்கு ஆதரவாக நின்றனர். அதே தினத்தில் அவர்கள் புலேர் (Bulair) என்ற நகருக்கருகில் போரிட்டுத் துருக்கியர்களை முறியடித்து, அந்த முக்கியமான அரணைக் கைப்பற்றிக் கொண்டு, டார்டனெல்ஸைத் தங்கள் ஆதிக்கத்துக்குட்படுத்த முயன்றனர். கிரேக்கர்களும் மீண்டும் போரைத் தொடங்கினர். அவர்கள் எப்பிரஸுக்கு ஒரு படையை அனுப்பி வைத்து, மார்ச் 6ஆம் நாள் அன்று ஜனீனாவைக் கைப்பற்றிக் கொண்டு, முப்பத்து மூவாயிரம் துருக்கியர்களைச் சிறையிலடைத்தனர். ஏராளமான பீரங்கிகளும் துப்பாக்கிகளும் அவர்கள் வயம் சிக்கின. அதே மாதம் பத்தாம் நாள் அன்று அவர்களுடைய கப்பற்படை சாமோஸ் தீவைக் (Samos) கைப்பற்றிக் கொண்டது.

மார்ச் மாதம் 28ஆம் நாள் அன்று பல்கேரியர்கள் எதிர்னேயையும் அங்கிருந்த இருபதினாயிரம் உத்மானியப் படைவீரர்களையும் கைப்பற்றிக்கொண்டனர். ஏப்ரல் 21ஆம் நாள் அன்று மாண்ட்டிநீக்ரோவர்கள் ஸ்கூடாரியைக் கைப்பற்றி விட்டனர். வரிசையாக ஏற்பட்ட இத் தோல்விக்குப் பிறகு, சுல்தான்

அமைதியை நிலைநாட்ட முற்பட்டார்; எதிர்னேயையும் திரேஸ் முழுவதையும் ஒப்படைப்பதற்கும் அவர் ஆயத்தமாகி விட்டார்; மத்தியஸ்தம் செய்து வைக்குமாறு வல்லரசுகளை வேண்டிக்கொண்டார். கூட்டுறவு கொண்டிருந்த நாடுகளும் அதற்கு இணங்கின. ஏஜியன் கடலில் ஈஜினிலிருந்து கருங் கடலில் மீடியாவரை வரையப்பட்ட கோட்டிற்குத் தெற்கிலுள்ள திரேஸின் ஒரு சிறிய பகுதியைத் தவிர ஐரோப்பாவில் தமக் குரிய எல்லா உடைமைகளையும் சுல்தான் ஒப்படைத்துவிட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் லண்டனில் இரண்டாம் மாநாடு ஒன்று கூடிற்று. கிரீட் தீவு கிரீஸிடம் ஒப் படைக்கப்படவேண்டும் என்று முடிவாயிற்று. அண்மையில் துருக் கியின் கைவசமான ஏஜியன் தீவுகளைப்பற்றிய பிரச்சினை வல்ல ரசுகளின் தீர்ப்புக்கு விடப்பட்டது. இதற்கான ஒப்பந்தம் ஒன்றும் சுல்தானுக்கும் வல்லரசுகளுக்கும் இடையே செய்துகொள்ளப் பட்டது. ஆனால், ஒப்படைக்கப்பட்ட பகுதிகள் எவ்விதம் பால் கன் நாடுகளுக்கிடையே பங்கிட்டுக் கொள்ளப்படவேண்டும் என்பது மிகப் பெரிய பிரச்சினையாகிவிட்டது. இதில் ருமேனியர் களும் தலையிட்டு விட்டதனால், பிரச்சினை மேலும் சிக்கல்கள் நிறைந்ததாகி விட்டது.

பொது எதிரியான துருக்கிக்கு எதிராகக் கூட்டுறவை அமைத்துக்கொண்டு இருந்த நான்கு நாடுகளும் இப்பொழுது கொள்ளைப் பொருள்களைப் பங்கிட்டுக் கொள்வதில் ஒன்றன்மீது மற்றொன்று எரிச்சலும் பொறுமையும் கொள்ளத் தொடங்கிவிட் டன. துருக்கிப் படைகளின் தோல்விக்குப் பெருமளவும் காரண மாக இருந்த ஸெர்பியா, மாஸிடோனியாவின் ஒரு சிறிய பகு தியை மட்டும் தனக்குரிய பங்காய்ப் பெறுவதற்கு விரும்பவில்லை. அல்பேனியா சுதந்தரம் பெற்ற தனி நாடாக இருக்கவேண்டும் என்று வல்லரசுகள் அளித்த தீர்ப்பின் விளைவாக, ஏட்ரியாட்டிக் கடலுக்குள் நுழைவதற்கான வாயில்கூட ஸெர்பியா பெற முடியா மல் போய்விட்டது. எதிர்னே உட்பட்த் திரேஸை பல் கேரியா கைப்பற்றிக் கொள்வதனால் பால்கன் பகுதிகளில் ஸெர் பியாவுக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் சக்தி சமநிலை மாற நேரிடும். அதனால் அது மாஸிடோனியாவில் மேலும் அதிகப் பகுதியைப் பெற விரும்பியது. அம் மாநிலத்தில் பாதிக்கு மேற் பட்ட பகுதியை ஸெர்பியா ஏற்கெனவே தன் வசப்படுத்தி வைத்திருந்தது. அதுபோன்றே பல்கேரியாவும் ஸான் ஸ்டீஃபனோ ஒப்பந்தத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 'பெரிய பல் கேரியா' என்னும் பகுதிக்கு உரிமை பாராட்டிக்கொண்டது. தன் உரிமையை ஆதரிக்கும் வகையில் அதன் வரலாறும்

அமைந்திருந்தது. சலோனிக்காவைப் பெற அது தீர்மானித் திருந்தது; கிரேக்கர்களின்மீது அது கடும் பொறுமைப் பட்டுக் கொண்டுமிருந்தது. கிரேக்கர்களைப் பொறுத்தவரையிலும் அவர் கள் அந் நகரத்தையும் மாஸிடோனியாவின் தெற்குப் பாதிப் பகுதியையும் தங்கள் வசப்படுத்தி வைத்திருந்தனர். இந்த மாநிலங்களை யெல்லாம் அவர்கள் வன்முறையால் கைப்பற்றி வைத்திருந்தனர்; அவற்றை விட்டுக் கொடுக்கவும் அவர் களுக்கு மனம் வரவில்லை. லண்டன் மாநாட்டில் எந்த ஒரு முடிவும் ஏற்பட வழியில்லாமற் போயிற்று. இந்த வேறுபாடு களை யெல்லாம் சரிப்படுத்துவதற்கு ரஷியா எடுத்த முயற்சிகள் வீணாயின. நடுவராக இருப்பதற்கு அது முன்வந்தது; அப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத் தனது தலைநகருக்கு அவற்றின் பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமாறு பால்கன் நாடுகளுக்கு அது வேண்டுகோளும் விடுத்தது.

ஆனால், பல்கேரிய அரசோ மற்ற பால்கன் நாடுகளுக்கு எந்தவிதமான சலுகையையும் அளிக்க விரும்பவில்லை. அமை தியை நாடிய அவற்றின் அமைச்சர்களின் வாயை, போர் வீழுவுள்ள அமைச்சர்கள் மூடிவிட்டனர். போர் மூளுவதற்கு முன்பு அந் நாடு கடைப்பிடித்த கொள்கைக்குக் காரணமா யிருந்த அதன் திறம்படைத்த பிரதமரான எம். குவெஷாஃப் (M. Gueshoff) என்பவர் இப்பொழுது அமைதியையே விரும் பியமையால், பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு அவர் கட்டாயப் படுத்தப்பட்டார். மனச் சாட்சிக்கு மாறுக நடந்து கொள்வதில் சற்றும் தயங்காதவரும், ஆழ்ந்த சதி சூழ்ச்சிக் காரருமான அரசர் ஃபெர்டினண்ட், போர்க் கட்சியை ஆதரித் தார். அந் நாட்டிற்குப் பெரும் தீங்கு இழைப்பதாக இருந்த கொள்கையைத் தலைமீது சுமத்திக் கொள்வதற்கு அவர் தாம் காரணமாயிருந்தார். வன்முறையைக் கடைப்பிடித்தால் ருமேனி யப் படையை எதிர்க்க நேரிடும் என்றும், அப்பொழுது சுல்தான் அப் படையுடன் சேர்ந்து கொள்ளக்கூடும் என்றும் ரஷிய அரசு விடுத்த எச்சரிக்கையை அந்த அரசர் முற்றிலும் புறக்கணித்து விட்டு, சமீபத்தில் தம் நாட்டுடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொண்ட நாடுகளின்மீது போர் தொடுத்தார். அரசருக்கும் அவருடைய அரசுக்கும் தம் படைத் திறமையில் அளவிலா நம் பிக்கை ஏற்பட்டிருந்தது. ஆணவமிக்க அவர்கள் கிரீஸின், ஸெர்பியாவின் சேனை வீரர்களைப்பற்றி மிகக் கேவலமாகத் தப்புக் கணக்குப் போட்டுவிட்டனர்.

போரைத் தொடுக்கப் போவதாக எந்த விதமான எச் சரிக்கையும் அறிவிப்பும் இல்லாமலேயே மாஸிடோனியாவி

விருந்த பல்கேரியப்படை, காரணமின்றியும் திடீரென்று கிரேக்க ஸெர்பிய எல்லைக் கேந்திரங்களைத் தாக்கிற்று. இந்தத் துரோகச் செயலைத் தொடர்ந்து அடுத்த நாள் ஒரு லட்சம் பல்கேரியப் படைவீரர்கள் வலது புறத்திலிருந்த ஸெர்பியப் படையைத் தாக்கினர். முதலில் வெற்றி ஏற்படுவதாக இருந்தது. ஸெர்பியர்கள் பின்வாங்கிக் கொண்டனர். ஆனால், ஜூலை மாதம் முதல் நாள் அன்று, மாண்ட்டிநீக்ரோவர்களின் ஆதரவு பெற்ற ஸெர்பியர்கள், பல்கேரியர்களின் எண்ணிக்கைக்குச் சரிநிகர் சமானமான அளவிற்குத் தங்களை நிகராக்கிக்கொண்டு எதிர்த்துத் தாக்க முற்பட்டனர். ஜூலை இரண்டாம் நாள் அன்று பிரகல்பாப்ஸா நதிக்கரையில் (Bragalbabza River) அவர்கள் பல்கேரியர்களை முறியடித்து, அவர்களுடைய பீரங்கிகள் பலவற்றையும் கைப்பற்றிக்கொண்டனர். ஜூலை நான்காம் நாள் அன்று அதே வீரவுடன் மற்றொரு போரும் நிகழ்ந்தது. ஜூலை 8ஆம் நாள் இஸ்திப் (Istib) கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. பிறகு பல்கேரியர்கள் தங்களுடைய எல்லைக்கே பின்வாங்கிக் கொள்ள வேண்டிய கட்டாயக் கட்டத்தை எட்டிவிட்டனர்.

அதற்குள்ளாக, சலோனிக்காவில் குவிந்திருந்த கிரேக்கர்களின் முக்கியப் படை பல்கேரியர்களைத் தாக்க முற்பட்டது. இரு படைகளும் எண்ணிக்கையில் சரிசமமாகவே இருந்தன. வார்டார் நதிக்கும் ஸ்துரூமா (Struma) நதிக்கும் இடையே சரிசமமான தொலைவில் இருந்த கில்திச் (Kiltich) என்னும் இடத்தில் இரு படைகளும் சந்தித்தன. கிரேக்கர்கள் தம் பகைவர்களை மிகக் கடுமையாக முறியடித்தனர். இதையொட்டிச் சில நாட்களுக்குப் பிறகு, டொய்ரான் (Doiran) ஸ்துரும்னிட்ஸா (Strumnitza) என்ற இடங்களிலும் பெரும் வெற்றிகள் ஏற்பட்டன.

ரஷிய அரசாங்கம் தீர்க்கதரிசனமாக உரைத்ததெல்லாம் நடந்தேறிவிட்டது. இதர பால்கன் நாடுகளுடன் பல்கேரியர்கள் போரில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதை அறிந்த ருமேனியர்கள், மாநாடு தங்களுக்கு அளித்துள்ள சிறிய சலுகையினால் தாங்கள் கொஞ்சமும் திருப்தியடைய முடியவில்லை என்று அறிவித்தனர். தொப்ருட்ச்சா என்ற இடத்தில் மேலும் தங்களுக்குச் சலுகைகள் வழங்கப்படவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினர். தங்களுடைய கோரிக்கையை வற்புறுத்துவதற்காக ஜூலை 10ஆம் நாள் அன்று அவர்கள் டான்யூபுக்கப்பால் ஒரு படையை அனுப்பி வைத்தனர். எந்த விதமான எதிர்ப்பும் இல்லாமல் அது சோஃபியாவை நெருங்கிக் கொண்டிருந்தது. தாங்கள் ஏற்கெனவே இழந்திருந்த பகுதிகளை மீண்டும் பெற்றுக்

கொள்ள அந்தச் சூழ்நிலையைத் துருக்கியர்கள் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர். ஒரு சில வாரங்களுக்கு முன்னர்த்தான் கையொப்பமிடப்பட்ட 'லண்டன் ஒப்பந்தத்தை'க் கிழித்தெறிய அவர்கள் தீர்மானித்தும் விட்டனர். அவர்கள் எதிர்னேயைத் தாக்குவதற்காக அன்வர் பாஷாவின் தலைமையில் படை யொன்றை ஜூலை 15ஆம் நாள் அன்று திரேஸ் வழியாக அனுப் பினர். அந்த முக்கிய நகரை அவர்கள் வெகு எளிதாகக் கைப் பற்றிக் கொண்டனர். டெமோடிகாவையும் கர்க் கிலிஸ்ஸியையும் அவர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

பல்கேரியர்களின் நிலை உண்மையில் கண்ணராவியாக இருந் தது. அவர்களுடைய படைகள் எல்லா விடங்களிலும் முறி யடிக்கப்பட்டு, விரட்டியோட்டப்பட்டன. படையெடுத்துக் கொண்டிருந்த வீரர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். வேறு வழியின்றி, அவர்கள் அமைதியை நாட வேண்டிய தாயிற்று. வல்லரசுகள் பங்கு பெறுத, பால்கன் பிரதிநிதிகள் மட்டுமே அடங்கியிருந்த ஒரு மாநாட்டைக் கூட்டுவதற்கும், போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்வதற்கும் ஜூலை 31ஆம் நாள் அன்று இணக்கம் தெரிவிக்கப்பட்டது. புக்காரெஸ்ட் நக ரில் அந்த மாநாடு கூடியது. மாநாட்டில் பல்கேரியர்கள் மிக இக்கட்டான நிலையில் சிக்கிக் கொண்டனர். கட்டாயமாக வன் முறைகளே கடைப்பிடிக்கப்படும் என்ற அச்சுறுத்தலின் பேரில் அவர்கள் தங்களுடைய பெரும் திட்டங்களைக் கைவிடுமாறு வற்புறுத்தப்பட்டதோடல்லாமல், தங்களுடைய எதிரிகளுக்கும் அவர்கள் பெரும் சலுகைகளை வழங்கித்தான் ஆக வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்பட்டனர். லண்டனில் கூடிய மாநாட் டில் சமரசத்திற்கு அவர்கள் இணங்கியிருப்பார்களாயின் அல்லது ரஷியாவின் மத்தியஸ்தத்திற்குக் கட்டுப்பட்டிருப்பார்களாயின், மாஸிடோனியாவின் பெரும் பகுதியை அவர்கள் தமக்கே பெற் றிருந்திருக்கக்கூடும். மேலும், எதிர்னேயும் டெமோடிகாவும் உட்பட்ட திரேஸின் பெரும் பகுதியை அவர்கள் தங்களிடத்தி லேயே வைத்திருக்கக்கூடும். அந்த நிலையில் அவர்கள் சிலிஸ் டிரியாவையும் டான்யூப் நதிக் கரையிலிருந்த சிறிய நிலப்பகுதி யையும் மட்டுமே விட்டுக்கொடுக்க நேரிட்டிருக்கும். ஆனால், இப்பொழுது நிலைமை அடியுடன் மாறிவிட்டமையினால், முழு மாஸிடோனியாவையுமே அவர்கள் கிரீஸுக்கும் ஸெர்பியாவிற் கும் இடையே பங்கிட்டுக் கொடுக்குமாறு வற்புறுத்தப்பட்டனர். டொப்ருட்ச்சாவின் ஒரு பகுதியை ருமேனியர்களுக்கும் எதிர்னே உட்பட்ட திரேஸில் அவர்கள் கைப்பற்றியிருந்த பெரும் பகுதியை இப்பொழுது துருக்கியர்களுக்கும் விட்டுக் கொடுக்க

வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டது. அண்மையில் நடைபெற்ற போர்களில் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குக் கைம்மாருகத் திரேஸில் முக்கியமில்லா ஒரு சிறு பகுதியை மட்டும் பெற்றனர். அவர்களுடைய ஈன நடக்கைக்கும் அகம் பாவம் பிடித்த திமிருக்கும் அவர்கள் நியாயமாகவே தண்டிக்கப் பட்டனர்.

துருக்கியுடன் நடைபெற்ற இரண்டாண்டுப் போரில் கிடைத்த கொள்ளைப் பொருளில் பெரும் பகுதி கிரீஸுக்கே கிட்டிற்று. மாஸிடோனியாவில் பாதிக்கு மேற்பட்ட பகுதியை அது பெற்றது. கிரீட், சாமாஸ், ஏஜியனிலிருந்த மற்றத் தீவுகள் ஆகியவற்றையும் அது நிரந்தரமாகப் பெற்றுவிட்டது. அதனுடைய ஆட்சிப் பகுதியும் மக்கள் தொகையும் மேலும் அரைப் பங்கு அதிகரித்து விட்டிருந்தது. ஸெர்பியாவுக்கு ஏராளமான நிலப்பகுதியும் மக்கட்டொகையும் கிடைத்தன. ஆனால், பல்கேரியா பெற்ற நிலப்பகுதி அவ்வளவு பெரிதாக இருக்கவில்லை. ருமேனியா, மாண்ட்டிநீக்ரோ ஆகியவையும் ஒரு சில பகுதிகளையே பெற்றன. மக்கட்டொகையிலாகட்டும் நிலப் பரப்பிலாகட்டும் துருக்கியர்களின் இழப்புப் பெரும் இழப்பாகவே இருந்தது. எனினும், இதனை ஈடுபடுத்தும் வகையில் துருக்கியர்கள் எதிர்னே, டெமோடிகா மற்றும் கர்க் கிலிஸ்ஸி ஆகியவற்றை மீட்டுக் கொண்டனர். இதனால் இளந் துருக்கியர்களின் புகழ் சற்று உயர்ந்தது. அவர்களுடைய தலைவரான அன்வர் பாஷா விரைவில் போர் அமைச்சராணார்.

சுல்தான் எதிர்னேயை மீண்டும் பெற்றுக் கொண்டதற்காகவும், ருமேனிய அரசர் வெற்றிகரமாகத் தலையிட்டதற்காகவும் ஜெர்மானியப் பேரரசரான கைஸர் தமது பாராட்டுதல்களைக் கம்பியில்லாத் தந்தி மூலமாகத் தெரிவித்தார். அவர் தம் மைத்துனரான கிரீஸின் அரசர் கான்ஸ்டண்ட்டைனுக்கு 'ஜெர்மானியப் படையின் ஃபீல்ட் மார்ஷல்' என்ற விருதையும் வழங்கினார். அவ் விருதினை பெர்லினில் கூடிய ஜெர்மானிய படைத் தலைவர்களின் கூட்டம் ஒன்றில் அவ் வரசர் நேரில் பெற்றார். அவ் வமயம் அவர் பேசியபோது, தாம் பெற்ற வெற்றிக்கு முதல் காரணம் தம்முடைய படையின் ஆற்றல் என்றும், இரண்டாவதாக, அவரும் அவருடைய சகாக்கள் பலரும் பெர்லினில் பெற்ற தீவிரமான இராணுவப் பயிற்சி என்றும் எடுத்துரைத்தார். அக் காலந்தொட்டு ஐரோப்பாவில் 1914-ல் போர் தொடங்கும் வரையிலும் மத்திய கிழக்குப் பகுதியில் ஜெர்மானியின் செல்வாக்கு மிக அதிகமாகவே இருந்தது. குறிப்பாகத் துருக்கியில் அச்

செல்வாக்கு நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருந்தது. அன்வர் பாஷாவின் செல்வாக்கும் அதிகரித்துக் கொண்டிருந்தது. அந்த நிலையில் இளந் துருக்கியர்களின் செயல்கள், 1914-ல் நிகழவிருந்த போருக்கு வழிவகுத்துக் கொண்டேயிருந்தன.

பால்கன் போர்கள் முடிவடைந்தன. இளந் துருக்கியர்கள் ஐரோப்பாவிலிருந்த எல்லா உடைமைகளையும் இழந்து விட்டனர். வருங் காலத்தைக் கருத்தில் கொண்டு காண்போமானால், இது ஒரு மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியே யாகும்; ஏனெனில், அது வரையிலும் அப் பகுதிகளைக் காக்க ஏராளமாகப் பணம் செல வழிக்கப்பட்டு வந்தது. அத் தறுவாயில் அது இளந் துருக்கியர் களுள் தீவிரவாதிகளாக இருந்தவர்களுக்கு அதிகாரத்தை வழங் கியது. 1913, ஜனவரியில் அரசுக் கெதிராக நிகழ்ந்த புரட்சிக்குப் பிறகு மகமூத் ஷெவ்கத் பாஷா பிரதம அமைச்ச ரானார். ஆனால், ஜூன் மாதத்தில் அவர் கொல்லப்பட்டதனாலும், உறுதியற்றவராக இருந்த ஸையம் ஹலீம் பாஷா என்ற எகிப்திய இளவரசர் பிரதம அமைச்சரானதனாலும் அரசின் பொறுப்புத் தலத் (Talat), அன்வர், ஜமால் என்னும் மூவரிடத்தும் சிக்கியது.

தலத் பே எளிய குடும்பத்தில் பிறந்தவர்; சலோனிக்காவில் கம்பியில்லாத் தந்தித் துறையில் அரசாங்க ஊழியராக வேலை பார்த்து வந்தவர். ஆனால், சிறந்த அறிவாளியாகையால், அவர் மாஸிடோனியாவில் உருவான புரட்சிக்குக் காரணமானார். இளந் துருக்கியர்களின் பல அரசாங்கங்களில் அவர் அமைச்சரா கப் பதவி வகித்தார். அவர் தம் தொழிலில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்து, ஏழையாகவே வாழ்க்கை நடத்தி வந்தார். அவருடைய குணத்திலுங்கூட அவர் ஒரு தீவிர வாதியாக இருக்கவில்லை. தாம் கடைப்பிடித்த முறைகளில் ஈவு இரக்க மின்றி நடந்துகொண்ட அவர், சொந்த ஒழுக்கத்தைத் தேசிய ஒழுக்கத்தி லிருந்து வேறுபடுத்தி, தனிப்பட்ட வகையில் செய்யக்கூடாத ஒரு சில செயல்களைத் தேச நலனுக்காகச் செய்யலாம் என்று கருதினார். மிக்க மரியாதையுடன் நடந்து கொள்பவராகவும், பிறர்பால் பொறுமை கொண்டவராகவும் இருந்த அவர் தம்முடைய எளிய பிறப்பினை எக்காலமும் மறந் ததேயில்லை.

அன்வர் கீழ்த்தர மத்திய வகுப்புக் குடும்பத்தில் பிறந்தவர்; இராணுவப் பயிற்சி பெற்றவர். சுல்தான் அப்துல் ஹமீதை

எதிர்த்ததனலும், 1908-ல் நிகழ்ந்த புரட்சியின்போது மாஸி டோனிய குன்றுகளில் ஒடி ஒளிந்து கொண்டதனலும் பொது மக்களின் கவனத்திற்கு வந்த இவர் தேசபக்தராய் விளங்கி, இத்தாலிக் கெதிராக லிபியாவில் நடந்த போரில் பெரும் புகழ் பெற்றார். சாதனைகளை நிறைவேற்றி வைப்பதில் இவர் கண்ணும் கருத்துமா யிருந்தார். துருக்கி நாட்டுப் பற்றுக் கொண்டிருந்த இவர் அப் போக்கினை இவருடைய வாழ்நாள் முழுவதிலுமே மேற்கொண்டிருந்தார். முதல் உலகப் போரில் ஜெர்மானிய நாடு துருக்கியுடன் துணையாகக் கலந்துகொண்டதற்கு மற்றவர் களைவிட இவர்தாம் முக்கிய காரணமாவார். இவர் அதிகாரத் தில் உயர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கையில் ஆணவம் பிடித்த வராக மாறி வந்ததுடன், மக்களோடு தொடர்பு அற்றவராகிக் கொண்டும் இருந்தார். அந் நிலையைக் கண்டு வருந்தி அவ ருடைய முன்னாள் ஆதரிப்பாளர்கள், 'அன்வர் பாஷா அன்வர் பே (Bey)யை அழித்துவிட்டார்' என்று கூறிக்கொண்டனர்.

கப்பற்றுறைக்கு அமைச்சரான ஜமால், இணைப்பு மற்றும் முன்னேற்றக் கழகத்தின் (Society of Union and Progress) தொடக் கத்திலேயே அதன் உறுப்பினராக இருந்தவர். அவர் பழங்கால உத்மானியக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். இஸ்லா மியர்கள் அனைவரையும் சார்ந்த இயக்கத்தில் ஒருவராக அவர் இருந்தார்; ஆனால், நாளடைவில் மிகத் தீவிரத் துருக்கித் தேச பக்தரானார். மூவருள் மிகவும் வலிமை குன்றியவராக இருந்த ஜமால் இளந் துருக்கியர்களுக்கு ஒரு காவலராகப் பணியாற்றி வந்தார்; அவர்களுக்கிடையே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட முயன்றார். முதல் உலகப் போரில் துருக்கி நாடு குதிக்கும் வரையிலும் இம் மூவர்தாம் துருக்கியை ஆண்டு வந் தனர். கீழ்ப்படியாத கட்சி உறுப்பினர் தண்டிக்கப்பட்டனர்; எதிரிகள் விலக்கப்பட்டனர். துருக்கி அரசாங்க வட்டாரங்களில் உறுதியற்ற நிலையும் திகிலும் முன்போல மீண்டும் தாண்டவ மாடத் தொடங்கிவிட்டன.

22. துருக்கிய - ஜெர்மானிய கூட்டுறவின் தொடக்கம்

ஜூன் 26, 1914-ல் சரஜீவோவில் (Sarajevo) ஆஸ்ட்ரிய இளவரசர் ஃப்ரான்ஸ் ஃபெர்டினண்ட் (Archduke Franz Ferdinand) என்பவர் கொல்லப்பட்டதனால் உலகமே அதிர்ச்சிக்குள்ளாயிற்று. ஜெர்மானிய நாட்டை ஆதரிக்கும் வகையில் துருக்கி அப் போரில் இறங்கிற்று. அந்த நிலை ஏற்படுவதற்கான காரணம், கடந்த முப்பதாண்டு காலமாக ஜெர்மனிக்கும் துருக்கிக்கு மிடையே நடைபெற்று வந்த தூதரக, இராணுவ, மற்றும் பொருளாதார முயற்சிகள் அண்மைக் கிழக்கிலும், குறிப்பாக, இஸ்தம்பூலிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தமையால்தான் என்பது தேற்றம்.

ஜெர்மனியை ஓர் உறுதி வாய்ந்த நாடாக்கிய பிஸ்மார்க்கை இரண்டாம் வில்லியம் பதவியிலிருந்து விலக்கிய பத்து ஆண்டுகட்கு முன்பே அந்த அமைச்சர் துருக்கியின் விவகாரங்களில் தனி அக்கறை காட்டத் தொடங்கினர். சுல்தான் அப்துல் ஹமீதின் வேண்டுகோளுக்கு இணங்கி பிஸ்மார்க் வான் டெர் கோல்ட்ஸ் என்பவரின் தலைமையில் ஓர் இராணுவத் தூதுக் குழுவை இஸ்தம்பூலுக்கு அனுப்பிவைத்தார். 1880-ல் கிளாட்ஸ்டன் மீண்டும் பதவிக்கு வந்ததன் பின், பிரிட்டனுக்கும் துருக்கிக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டிருந்ததைக் கண்ட பிஸ்மார்க், தமது நாட்டைத் துருக்கியின் நண்பனாகக் காட்சியளிக்கச் செய்வதற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். எவரும் கனவிலும் கற்பித்திருக்க முடியாத அளவிற்குத் தமது செல்வாக்கை அந் நாட்டின்மீது படர வைத்துக்கொள்ள அவரால் முடிந்தது. இருப்பினும், ஆக்கிரமிப்புப் புரிவதற்காக ஆட்டோ வான் பிஸ்மார்க் இப்படிப்பட்ட கொள்கையைக்

கடைப்பிடித்தார் என்று கூறுவதற்கில்லை. இங்கிலாந்தையும் ரஷியாவையும் மோதவைக்க விருந்த கிழக்குப் பிரச்சினை மீண்டும் மிகத் தீவிரமாக உயிர்பெற்று எழுந்துவிட்டதனால், அமைதிக் கொள்கையை அவரால் தொடர்ந்து பின்பற்ற முடிய வில்லை. ஜெர்மனியின் குறைபாடுகளை அவர் அறிந்து வைத் திருந்தார். போரை மேற்கொள்ளாமலேயே இஸ்தம்பூலில் பல விதமான சதித் திட்டச் சூழ்ச்சிகளை மேற்கொண்டு, போரைத் துவக்காமலே தமது நாட்டின் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ள அவர் முயன்றார். ரஷிய - துருக்கியப் போருக்கும் 1878ஆம் ஆண்டில் நடந்த பெர்லின் மாநாட்டுக்கும் பிறகு ரஷியாவுக்கும் ஆஸ்ட்ரிய - ஹங்கேரிக்கும் இடையே எங்கே போர் மூண்டு விடுமோ என்று அவர் பெருமளவும் அஞ்சினார். அவ்விதம் போர் மூண்டுவிட்டிருக்குமாயின், இரு பேரரசர்களுள் எவரேனும் ஒருவரின் பக்கல் அவருடைய நாடு சேரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கக்கூடும். அவரைப் பொறுத்தவரை யிலும், அவர் அவ்விரு பேரரசுகளுடனும் நட்புறவு கொண்டிருப் பதைத்தான் விரும்பினார். 1890-ல் பிஸ்மார்க் வீழ்ச்சி அடை யும் வரையிலும் இஸ்தம்பூலில் ஜெர்மனி கடைப்பிடித்த தூதரகக் கொள்கை துருக்கிக்குச் சாதகமாகவே இருந்து வந்தது. ஆனால் இரண்டாம் வில்லியம் (கைஸர்) பட்டத்திற்கு வந்தபொழுது, துருக்கிப் பேரரசில் ஜெர்மானியர்களுடைய செல்வாக்குப் பரவு வதற்கு மிகச் சாதகமான வாய்ப்பு நிலவுகின்றது என்ற கருத் தினை அவர் மிக உறுதியாகக் கொள்ளும்படி நிலைமை முற்றிற்று. இதைப்பற்றிய கருத்து வேறுபாடு ஜெர்மானியப் பேரரசருக்கும் அவருடைய பிரதம அமைச்சருக்கும் இடையே அதிகரித்துக் கொண்டேவந்தது.

அடுத்த பத்தாண்டு காலத்தில் துருக்கியில் ஜெர்மானியர் கள் பொருளாதார, அரசியல் துறைகளில் மிகத் தீவிரமாகச் செயலாற்றி வந்தனர். ஆசியப் பகுதியில் மார்மோராக் கட லோரப் பகுதியில் பாஸ்பரஸிலிருந்து சிறிது தூரத்திற்கு ரயில் பாதை அமைப்பதற்காக பிரிட்டிஷ் கம்பெனியாருக்குக் கொடுக் கப்பட்டிருந்த பொறுப்பினை இப்பொழுது துருக்கியர் துஷே வங்கி யிடம் (Deutsche Bank) ஒப்படைத்தனர். இருப்புப் பாதையை அமைப்பதை அங்காரா வரையிலும் நீட்டி விடுவதற்கான பொறுப்பும் இப்பொழுது 'ஜெர்மன் - அனட்டோலிய ரயில்வே கம்பெனி'யாரிடம் ஒப்படைக்கப்பட்டது. எல்லாத் திசை களிலும் ஜெர்மானியர்கள் துருக்கிக்குள் அமைதியாகவே புகுந்து கொண்டிருந்தனர். மிகத் தீவிரமான அரசு உதவி பெற்ற கப்பல் கம்பெனிகள் மத்தியதரைக் கடலிலும், கருங்

கடலிலும் மிகச் சுறுசுறுப்பாகச் செயலாற்றிக் கொண்டிருந்தன. ஜெர்மனிக்கும் துருக்கிக்கும் இடையே செய்தித் தொடர்பு ஏற் படுவதற்காக, ஜெர்மானிய கம்பியில்லாத் தந்தி கம்பெனி ஒன்று உருவாக்கப்பட்டது. இந்தத் துறையில் ஜெர்மானியர்கள்தாம் துருக்கியில் முதன் முதலாக நடவடிக்கைகளை மேற்கொண்ட னர். ஜெர்மானிய வியாபாரம் வருணிக்க முடியாத அளவிற்குப் பெருகிற்று. ஆயுத வர்த்தகமும் அதிகரித்தது. துருக்கிப்படை ஜெர்மானிய இராணுவ அதிகாரிகளால் ஒழுங்குறச் சீரமைப்புப் பெற்றதோடு, ஜெர்மானியப் போர்க் கருவிகளை எவ்வாறு பயன் படுத்துவதென்றும் அது பயிற்சி அளிக்கப்பட்டது. ஜெர்மானியக் கல்விக் கூடங்கள், ஜெர்மானிய விஞ்ஞானக் குழுக்கள், ஜெர் மானிய சமய நிறுவனங்கள் முதலியனவும்கூட ஜெர்மானிய பண்பாட்டையும் மொழியையும் துருக்கியில் பரப்புவதற்குக் கைஸர் வில்லியத்தினுல் ஊக்குவிக்கப்பட்டன. 1897-ல் கிரீஸ் மூடத்தனமாகத் தனித்து நின்று :சுல்தான் அப்துல் ஹமீதுக்கெதிராகப் போருக்குச் சென்றபொழுது சுல்தான் அப் போரில் வெற்றி பெற்ருரல்லவா? கிறித்தவ நாடான கிரீஸ்மீது முஸ்லிம் நாடு பெற்ற வெற்றியை மற்ருரு கிறித்தவ நாடான ஜெர்மனியின் பேரரசர் பாராட்டித் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். மாபெரும் ஐரோப்பிய போர் ஒன்று மூண்டுவிடுமாயின், அதில் ஜெர்மனியின் மகத்தான துணை வனைத் துருக்கி திகழும் என்று இவர் ஏற்கெனவே கனவுகளைக் கண்டு கொண்டிருந்தார்.

துருக்கியில் ஜெர்மானியர்களுக்குத் தனிப்பட்ட சலுகைகளை வழங்கியதற்கு ஈடாக, கைஸர் இரண்டாம் வில்லியம் சுல்தான் அப்துல் ஹமீதின் அட்டூழியங்களையும் கொடூரச் செயல்களையும் மன்னித்து விடவும், சிற்சில வேளைகளில் ஊக்குவிப்பதற்கும் தயாராக இருந்தார். சுல்தான் புகுத்த வேண்டும் என்று ஐரோப்பிய வல்லரசுகள் வற்புறுத்தி வந்த சீர்திருத்தங்களும் ஜெர்மனியின் தலையிடுதலின் விளைவாகத் தடைப்பட்டன. ஆனு லும், சுல்தான் அப்துல் ஹமீது 'கலீஃபா' என்கிற முறையில், முஸ்லிம் உலகத்தின் மீது தம் அதிகாரத்தைப் பயன்படுத்த விரும்பி, அதற்கான உரிமையையும் பாராட்டிக் கொண்டு, 'அனைத்து இஸ்லாமியர்' என்ற இயக்கம் ஒன்றைத் தம்முடைய மதி நுட்பத்தினுல் உருவாக்கிக் கொண்டு, அந்த உரிமையை மேலும் தீவிரமாக வற்புறுத்திக் கொண்டிருந்ததை ஜெர்மானிய தூதரகம் ஆதரித்தது. அவர் பாராட்டிய உரிமை, கெய்ரோவில் மறைந்து வாழ்ந்த அப்பாஸீ வம்சக் கலீஃபாக்களின் வழித் தோன்றல் ஒருவர், மாபெரும் வெற்றியாளரான சலீமுக்கு,

வெறும் 'நிழலாக' இருந்த உரிமைகளை மாற்றிவிட்டதன் அடிப்படையிலும், இஸ்லாமிய சமயத்தின் மிகப் புனிதமான நகரங்கள் எனக் கருதப்பட்ட மக்கா மதீனு ஆகியவற்றைத் தாம் நிர்வகித்து வந்தார் என்ற அடிப்படையிலும் அமைந்திருந்தது. ஆனால், ஷீஆ சமயப் பிரிவினரும், ஒருசில சுன்னீகளும் அவ்வித உரிமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஐரோப்பிய வல்லரசுகளுள் ஜெர்மனி மட்டுமே அவ் வுரிமையின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தது. 'அனைந்து இஸ்லாமியர்' என்ற இயக்கம் வருங் காலத்தில் ஐரோப்பிய வல்லரசுகளுக்குப் பெருந் தொல்லை களை இழைக்கக்கூடும் என்பதை ஜெர்மனியின் ஆட்சியாளர்கள் உணர்ந்திருந்தனர். ஆகவே, வெளிப்படையாக சுல்தானையும் முப்பது கோடி முஸ்லிம் மக்களையும் தாம் ஆதரிப்பதை அறிவிக்க இரண்டாம் வில்லியம் சிறிதளவும் தயங்கவில்லை.[1] 1774-ல் ஏற்பட்ட குட்சுக் கைனர்ட்ஜி என்ற ஒப்பந்தத்தில் குறிக்கப்படாமல் விட்டுவிடப்பட்ட கலீஃபா என்ற விருது இப்பொழுது முதன் முதலாக சுல்தான் அப்துல் ஹமீதின் காலத்தில் ஐரோப்பிய வல்லரசு ஒன்றால் அங்கீகரிக்கப்படுகின்றது.[2] இது இங்ஙனம் இருக்க, சுல்தானை பத்தொன்பதாம் நூற்றாண்டில் செய்து கொள்ளப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்கள் அனைத்திலும் அந்த விருதினை விட்டுவிட்டு, சற்று நவீனமாக இருந்த 'உத்மானியர் களின் பேரரசர்' என்ற விருதினை மட்டுமே குறித்துக் கொள்ள விரும்பினர்.

[1] நாம் முன்னமே விளக்கியுள்ளவாறு, உத்மான் வம்ச சுல்தான்களுக்குக் கிடைத்த 'கலீஃபா' என்னும் பட்டமும் பதவியும் சந்தர்ப்ப சூழ்நிலை களால் வாய்த்தனவாகும். முதலாம் சலீமின் காலந் தொட்டு, உத்மானிய சுல்தான்கள் அப்பாஸி வம்ச வாரிசுகளான 'கலீஃபாக்கள்' என்றே கருதி வந்தார்களெனினும் அப்துல் ஹமீது மட்டுமே இதை ஒரு 'சமய சஞ்ஜீவி'யாகப் பயன்படுத்தி, எதிரிகளை ஏய்க்கவும், அகில உலக முஸ்லிம்களைத் தமது மேலதிகாரத்தின் கீழ்க் கொணரவும் திட்டமிட்டார். அவருடைய இந்த நயவஞ்சகச் செயலை முழு மனத்துடன் ஜெர்மனியின் கைஸர் ஆதரித்ததற்கு முதற் காரணம் என்னவென்றால், அப்துல் ஹமீதை உலகெங்குமுள்ள முஸ்லிம்கள் ஆதரிப்பார்கள்; அவரையே கலீஃபாவாக ஏற்றுக் கொள்வார்கள், இதன் விளைவாக, பிரிட்டிஷாரின், பிரெஞ்சுக்காரர்களின், மற்றும் டச்சுக்காரர்களின் ஆட்சியின் கீழ் உள்ள அகில உலக முஸ்லிம்களும் அந்த ஐரோப்பிய ஆட்சியாளர்களை எதிர்த்து, துருக்கி சுல்தானுடைய 'கலீஃபாவுக்கே' பணிவார்கள். எனவே, இந்த நேரத்தில் அந்தத் துருக்கி சுல்தானை ஜெர்மனி ஆதரித்தால், அகில உலக முஸ்லிம்களின் அனுதாபத்தையும் தாம் சுலபமாகப் பெற்று விடலாம் என்றெல்லாம் கைஸர் கணக்கிட்டார். ஆகையினால் தான் அவர் தம்மை சுல்தான்களின் ஆதரவாளர், முப்பது கோடி முஸ்லிம்களின் அனுதாபி என்றெல்லாம் உலகப் போர் மூளுமுன்னே பகிரங்கமாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.

[2] ஐரோப்பாவிலிருந்த வேறெந்த வல்லரசும் துருக்கி சுல்தான்களை 'கலீஃபா' என்று ஏற்கவுமில்லை; அங்கீகரிக்கவுமில்லை. ஜெர்மனி மட்டுமே தனிச்சலுகை (உள்நோக்கத்துடன்) அங்கீகாரமளித்தது. எனவேதான், உலகப் போர் மூண்டபோது, துருக்கியை ஜெர்மனி தனது பாதுகாப்பின் கீழ் ஒரு குட்டி நாடாக ஆக்கிக் கொண்டது. — (பக். 445 தலைப்பில் பார்க்க)

1908-ல் இஸ்தம்பூலில் நிகழ்ந்த புரட்சியின் விளைவாகத் துருக்கியின் மீது ஜெர்மனியின் பிடி சற்றுத் தளர வேண்டிய தாயிற்று. கைஸர் வில்லியத்திற்கும் சுல்தான் அப்துல் ஹமீதுக்கும் மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்ததை இளந் துருக்கியர்கள் சிறிது சந்தேகக் கண்களுடன் நோக்கினர். ஹாப்ஸ்பர்க் குடும்பத்தைச் சார்ந்த மன்னர் திடீரென்று பாஸ்னியா-ஹெர்ஸிகோவினுவை இணைத்துக் கொண்டதனுலும், அதற்கு ஒருசில மாதங்களுக்குப் பிறகு பல்கேரியா சுதந்தர நாடு என்று அறிவிக்கப்பட்டதனுலும் துருக்கியர்க்கு ஜெர்மனியின் அரசியல் நட்பில் நம்பிக்கை குறைந்து விட்டது. இருப்பினும், ஜெர்மானியர்களின் ஆதிக்கம் தாற்காலிகமாகத்தான் குலைந்திருந்தது. மிகச் சடுதியில் இளந் துருக்கியர்களின் கட்சி ஹமீது கடைப்பிடித்த கொள்கையையே மீண்டும் மேற்கொண்டது. வெகு விரைவில் அது ஜெர்மனியின் உதவியை நாடவேண்டியதாயிற்று. அந்தக் கட்சியில் இராணுவ பலத்தில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் அதிகமாக இருந்ததனுல், அவர்களுக்கும் பிரஷ்ய இராணுவத்தினருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. புரட்சியில் கலந்து கொண்ட பல முக்கிய துருக்கி அதிகாரிகளும் ஜெர்மனியில் கல்வி பயின்றவர்கள்; ஜெர்மானிய இராணுவ முறையில் பயிற்சி பெற்றவர்கள். மதத்தில் மிக ஆழமான நம்பிக்கை கொண்டிராத இளந் துருக்கியர்கள் 'அணைத்து இஸ்லாமியர்' என்ற இயக்கத்தில் முதன் முதலில் அவ்வளவாக நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அவர்கள் தங்களுடைய நாடான துருக்கியின் மீது மட்டுமே அதிகமாகப் பற்றுக் கொண்டிருந்தனர். அதற்கு மட்டுமே அவர்கள் அதிக முக்கியத்துவம் அளித்தனர். இவர்களது இந்தத் திட்டம் அனைத்தும் பிரஷ்யர் திட்டத்தையொட்டியே இருந்தது. அதைப் போன்றே இவர்களுடைய திட்டத்தை வன்முறையினுல் செயல்படுத்த வேண்டியும் இருந்தது. அதன் நோக்கம், துருக்கிப் பேரரசில் இருந்த துருக்கியர் இனத்தைச் சேர்ந்திராதவர்கள் அனைவரையும் ஆளும் துருக்கியருக்குக் கீழ்ப்படிய வைப்பது என்பதாகும். துருக்கிப் பேரரசுக்கு வெளியே இருந்த, ஏதேனும் ஒருவகையில் துருக்கியர் இனத்துடன் தொடர்பு கொண்டிருந்தவர்களைத் துருக்கிய ஆட்சிக்குட்படுத்துவது என்பதும் மற்றொரு நோக்கமாகும். அது போன்ற இனத் தொடர்பு காணப்படாவிடில், 'அனைத்து இஸ்லாமியர்' என்ற இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்வது என்பதும் ஒரு நோக்கமாக இருந்தது.

இவ்விதமாக, புத்தம் புதிதானதும், சக்திமிக்கதுமான ஒரு தொடர்பு இஸ்தம்பூலுக்கும் பெர்லினுக்கும் இடையே

ஏற்பட்டது. ஜெர்மனியுடன் நட்புக் கொண்டிருந்த இத்தாலிய நாடு 1911-ல் திடீரென்று போதிய காரணமில்லாமலேயே துருக்கியரைத் தாக்கியதனால் ஜெர்மனிக்குச் சற்று இக்கட்டான நிலை ஏற்பட்டது. முதல் பால்கன் போர் இத்தாலியப் போரைத் தொடர்ந்து நிகழ்வுற்றது. 1912-13-ல் துருக்கி அடைந்த கடும் தோல்விகளால் ஜெர்மனி பெரும் ஏமாற்றத்தை அடைந்தது. இருந்த போதிலும், ஜெர்மனி தனது தூதரகக் கொள்கையைத் தீவிரமாக மேற்கொண்டதன் விளைவாக, லண்டனின் கூடிய மாநாட்டில் (1913) பிரிட்டிஷ் அரசாங்கம் அமைதியை நிலைநாட்டத் தான் ஆவலாய் இருந்ததைத் துருக்கியை அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குப் பயன்படுத்திக் கொண்டது. இளந் துருக்கியர்களின் தலைவரான அன்வர் பாஷா என்பவர் ஜெர்மனியின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தார். 1914ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஜெர்மானிய அதிகாரிகளும் ஜெர்மானியப் பொருள்களும் துருக்கிக்குள் அளவில்லாமல் நுழைந்து கொண்டிருந்தனர். திட்டவட்டமான கூட்டுறவுக்கான பேச்சு வார்த்தைகளும் அன்வர் பாஷாவுக்கும் ஜெர்மன் தூதரான ஹெர் வான் வாங்கென்ஹீம் (Herr Von Wangenheim) என்பவருக்கும் இடையே நடைபெற்று வந்தன. ஆகஸ்ட் 1914-ல் உலகப் பெரும் போர் மூண்டபோது, இஸ்தம்பூலில் இப்படிப்பட்ட நிலைதான் நிலவிற்று.

23. முதல் உலகப் பெரும் போர் (1914-18)

(The Great War)

சரஜீவோவில் ஃபிரான்ஸ் ஃபெர்டினண்ட் (Franz Ferdinand) சுட்டுக் கொல்லப்பட்டார். ஆஸ்ட்ரியாவைச் சார்ந்த இவருடைய கொலையானது உலகத்தையே மிகக் குரூரமாகப் பாதித்தது. அதனுடைய விளைவுகள் முழு உலகத்தையுமே பெருங் குலுக்குக் குலுக்கி விட்டன. உத்மானியப் பேரரசின்மீது வீழ்ந்த அப் பெரும் போரின் அதிர்ச்சிமிக்க பேரிடிகள் அப் பேரரசை அழித்தன. செல்வாக்கு மிக்க பிரமுகர் பலரும், 'துருக்கி நடுநிலைமையை எய்தி இருக்க வேண்டும்; இல்லையெனில், ஏற்கெனவே சிதறுண்டு கிடந்த அது பரிதாபகரமாய் முறியடிக்கப்பட்டு, வறுமையினாலும், புரட்சிகளினாலும், பால்கன் போர்களினாலும் மேலும் தூள் தூளாகிவிடும்' என்று கருதினர்கள். ஃபிரெஞ்சுக்காரர்களும் பிரிட்டிஷ்காரர்களும் அமைத்திருந்த அரசியல் மற்றும் பல்கலைக் கழக வட்டாரங்களுடைய முற்போக்கான மாடிகளில் பயிற்சி பெற்றிருந்த ஒரு கூட்டத்தினர், பிரிட்டன், ஃபிரான்ஸ், ரஷியா ஆகிய மூன்று நாடுகளும் ஏற்படுத்திக் கொண்டிருந்த கூட்டுறவில் (Entente) துருக்கியும் சேர்ந்து விடுதல் மிகவும் நல்லதென்று விருப்பம் தெரிவித்தார்கள்.

ஆனாலும் 'ஐக்கிய முன்னேற்றம்' என்னும் கட்சியின் குழு ஒன்றில் ஆதிக்க நிலை பெற்று விளங்கிய இராணுவத் தலைவர்கள் ஜெர்மானிய இராணுவ முறையில் பயிற்சி பெற்று, அதன் சீர்மிகு சிறப்பை உணர்ந்திருந்தனர். போர் அமைச்சராக இருந்த அன்வர் பாஷாவினால் வழி காண்பிக்கப்பட்டும், ஜெர்மன் தூதரான ஹெர் வான் வாங்கென்ஹீம் என்பவரால் ஊக்கு விக்கப்பட்டும் வந்த மூன்று நபர்களடங்கிய துருக்கி அமைச்சர்க் குழு, 1914, ஆகஸ்ட் மாதம் 2ஆம் நாள் அன்று அத்தரங்க

ஒப்பந்தம் ஒன்றை ஜெர்மனியுடன் செய்து கொண்டது. துருக்கியும் ஜெர்மனியும் ஒன்று மற்றொன்றுக்கு உதவிபுரிவதாகக் கூறிக் கொண்டன. துருக்கியிலிருந்து தன் இராணுவத் தூதுக் குழுவைப் பின்வாங்கிக் கொள்ளாது என்று ஜெர்மனி வாக்குறுதி யளித்தது. இந்த அந்தரங்கமான ஒப்பந்தம் ஐந்து துருக்கியர் களுக்கு மட்டுமே தெரிந்திருந்த போதிலும், ஒரு வாரத்திற்குப் பிறகு கோபென் (Goben) பிரெஸ்லா (Breslaw) என்ற இரு ஜெர்மன் போர்க் கப்பல்கள் வாங்கப்பட்டவுடனே அவ் வொப் பந்தம் மேலும் உறுதியாயிற்று. இங்கிலாந்தில் தயாரிக்கப் பட்டுத் துருக்கிக்கு ஒப்படைக்கப்பட இருந்தனவும், ஆனல் போர் ஆரம்பமாகி விட்டதனல் இங்கிலாந்தே வைத்துக் கொண்டனவுமான இரு கப்பல்களுக்குப் பதிலாக முன்சொல்லப் பட்ட இரண்டு கப்பல்களும் ஜெர்மனியிடமிருந்து வாங்கிக் கொள்ளப்பட்டன என்று வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது. 'சுல்தான் சலீம் யாவுஸ்' (Sultan Salim Yavuz) என்றும், 'மிடில்லி' (Midilli) அல்லது மைட்டிலீன் (Mytilene) என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்ட அந்த ஜெர்மானியப் போர்க் கப்பல்கள் தொடர்ந்து ஜெர்மானிய அதிகாரிகளின் பொறுப்பிலேயே இன் னமும் இருந்து வந்தன. இவற்றில் இருந்த பீரங்கிகள் இஸ்தம் பூல் அரண்மனையை நோக்கிப் பொருத்தி வைக்கப்பட்டு, அதனைப் பாதுகாத்து வந்தன.

அடுத்த பதினெரு வார காலத்தில் ஐரோப்பாவிலும், சுல் தான் இருந்த இடத்திலும் இராணுவத் தூதரக நிகழ்ச்சிகள் பல துரிதமாக நிகழ்ந்தன. நேச நாடுகளுடன் கூட்டுறவு (Entente) ஏற்படுத்திக் கொள்ள நடந்த பேச்சு வார்த்தைகள் 'காபிடு லேஷன்ஸ்'[1] (Capitulations), கிழக்கு எல்லைப் பகுதிகளில் துருக்கிப் படைகள் திரட்டப்படுதல், அனட்டோலியா, திரேஸ் மற்றும் ஏஜியன் தீவுகளில் ஜெர்மனியர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படல் போன்ற பற்பல பிரச்சினைகளைக் கிளப்பி விட்டன. துருக்கியின் கோரிக்கைகளோ உண்மையில் மிக அதிகமாக இருந்தன. உத்மானியர்களின் இராணுவ பலத்தைப் பற்றி ரஷியாவும், இங்கிலாந்தும், பிரான்ஸும் மிகத் தாழ்வான கருத் தையே கொண்டிருந்தன. எனவே, அதை மிக எளிதாகத் தோற்கடித்து விடலாம் என்று அவை நம்பின. ஆகவே, மத்திய வல்லரசுகளுடன் அது சேர்ந்திருப்பதையே அவை விரும்பின. அவ்விதம் இருந்தால் வெற்றிக்குப் பிறகு துருக்கியைத் தங்களுக்

[1] துருக்கிப் போரசில் வாழும் பிற நாட்டவரின் பொறுப்புகள், அவர்கள் பின்பற்ற வேண்டிய வழி முறைகள், சட்டங்கள் ஆகியவற்றை வரை யறை செய்து விளக்கும் 'காபிடுலேஷன்ஸ்' என்ற முறை.

கிடையே பங்கிட்டுக் கொள்வது மிக எளிதாக இருக்கும் என்பது அவர்களது கருத்து. அவ்விதம் செய்தால்தான் ரஷியா தான் விரும்பிய இஸ்தம்பூலையும் நீர்ச் சந்திப் பகுதிகளையும் பெற முடியும்.

துருக்கியின் உயர் வட்டார நபர்கள் சிறுபான்மையினராகவும், பொது மக்களுடன் தொடர்பு அற்றவர்களாகவும் இருந்த போதிலும், அந்த உயர் வட்டாரத்தில் இருந்த தீவிரவாதிகளுள் துணிச்சல் மிக்கவர்களின் கொள்கைகளே செல்லுபடி ஆயின. துருக்கியில் ஜெர்மானியர்களுக் கெதிராக எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அக்டோபர் மாதம் முடிவடைவதற்குள்ளாக அவர்களுடைய அதிகாரிகள் முழு ஆதிக்க நிலையைப் பெற்றுவிட்டிருந்தார்கள். கர்னல் வெபர் (Colonel Weber) என்ற தளபதி டார்டனெல்ஸின் வாயில்களை மூடி விட்டார். முதல் மார்னே போரில் ஜெர்மானியர்கள் முறியடிக்கப் பட்டதற்குப் பிறகு, ஸெபாஸ்டப்பூலையும் ஒடெஸ்ஸாவையும் தாக்க வேண்டுமென்பதற்காக ஜெர்மானிய உயர் இராணுவக் குழு சூச்சான் (Souchon) என்பவரின் தலைமையில் யாவூஸ், மிடில்லி என்னும் முற்சொன்ன போர்க்கப்பல்களையும் துருக்கிக்கு அனுப்பி வைத்து, அதைப் போரில் முழு மூச்சாக இறக்கி விட்டது — (28, அக்டோபர், 1914). அப் போர்க் கப்பல்கள் உள்ளே வந்து நுழைவதற்கு அனுமதி வழங்கிய அன்வர் முன்னமே போரில் குதிக்கத் தீர்மானித்து விட்டிருந்தார். நவம்பர் 4ஆம் நாள் அன்று ரஷியா போரில் இறங்குவதாக அறிவித்தது. அடுத்த நாள் இங்கிலாந்தும் பிரான்ஸும் அவ்விதமே செய்தன. நவம்பர் 14ஆம் நாள் அன்று சுல்தான் 'புனிதப் போரை'த் (Jehad) தொடங்கினர். இங்ஙனமாகத் துருக்கி போரில் இறங்கியதனால், தன் அழிவைத் தானே தேடிக் கொண்டது என்பது பல துருக்கித் தலைவர்களின் கருத்தாகும்.

துருக்கிப் பொது மக்கள் — அனட்டோலியாவின் கிராமவாசிகள் — இதைப் புனிதப் போரென்று கருதினாலும் கருதாவிட்டாலும் தங்களுடைய சுல்தானுக்காகவும் அவருடைய அரசுக்காகவும் எத்தகைய தியாகம் புரிவதற்கும், ஆதரவுகளை நல்குவதற்கும் ஆயத்தமாக இருந்தனர். ஆனால், வட ஆபிரிக்காவில் ஃபிரெஞ் சுக்காரர்களின் ஆட்சியின் கீழ் இருந்த முஸ்லிம்களும், எகிப்து, சூடான், இந்தியா முதலிய நாடுகளில் பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழிருந்த முஸ்லிம்களும், மத்திய ஆசியாவில் ரஷியர்களின் ஆட்சியின்கீழ் இருந்த முஸ்லிம் மக்களும் கிளர்ச்சிசெய்யும்படி அவர்களைத் தூண்டி விடலாமென்றும், எகிப்தையும் லிபியாவை

யும் மீண்டும் கைப்பற்றிக் கொண்டு விடலாமென்றும் துருக்கி அரசியல் கட்சி கனவு கண்டு கொண்டிருந்தது. அக் கனவை நனவாக்குவதற்குச் சுறுசுறுப்பான அராபிய ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பதையும் அது உணர்ந்திருந்தது. ஆனால், 'புனிதப் போர்' என்ற குரலைச் செவிதாழ்த்திக் கேட்பார் இல்லை. அற்பமான சிறு கிளர்ச்சியுங்கூட எங்கும் நிகழவில்லை. பொதுவாக, அராபியர்கள் துருக்கியர்களை வெறுத்தனர். தவிரவும், கிறித்தவ வல்லரசுகளான ஜெர்மனியுடனும் ஆஸ்ட்ரியா-ஹங்கேரியுடனும் சேர்ந்துகொண்டு சுல்தான் 'புனிதப் போர்' என்று குரலெழுப்பிய முரண்பாடான செயல், புனிதப் போர் என்பதன் மகத்துவத்தையே பொருளற்ற தாக்கிவிட்டது என்பதுதான் உலகப் பிரமுகர்களான பல முஸ்லீம்களின் கருத்தாகும்.

இது அராபியர்களிடையே இரண்டு விளைவுகளை உண்டு பண்ணிற்று. துருக்கி போரில் ஈடுபடுவது, ஐக்கியப்பட்டதும் சர்வ சுதந்தரம் பெற்றதுமான ஓர் அராபிய நாட்டினை உருவாக்கி விடுவதற்கு இறைவன் வழங்குகிற உன்னதமான நல்வாய்ப்பாகும் என்று சிலர் கருதினர். மற்றும் சிலர், குறிப்பாக அராபிய அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களும், அவர்களைச் சூழ்ந்திருந்தவர்களும் உத்மானிய சுல்தானுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து பேராசினின்று விடுபட்டு, சுதந்தரமான அராபிய இராச்சியங்களை நிலைநாட்டிக்கொள்ள அருமையான வாய்ப்பை நல்குகிற உத்தமமான தருணம் இப் போர்க் கோலம் என்று கருதினர். இப்படியாகத் தனிப்பட்ட நாடுகளை உருவாக்க விரும்பியவர்கள் பெரும்பாலும் சுயநலத்தை நாடியவர்களாகவே விளங்கினர் என்று கூறுவது மிகையாகாது.

துருக்கி போரில் முழுமூச்சாக இறங்கியதும் துருக்கியின் விவகாரங்களின்மீது ஜெர்மனியினது ஆதிக்கம் மேலும் அதிகரித்து விட்டது. படையின் பொறுப்பு வான் சான்டெர்ஸ் (General Von Saunders) என்ற தளபதியிடமும், கப்பற்படையின் பொறுப்பு சூச்சான் என்னும் கடல் தளபதியிடமும் இருந்தன. போக்குவரத்து வசதிகள், உணவுப்பொருள்களை வழங்குதல், மற்றும் போர்க் காலத்திற்கான முக்கிய பிரச்சினைகள் ஆகியவற்றின் பொறுப்பு எல்லாம் பெரும்பாலும் துருக்கியரிடமே விடப்பட்டன. இருப்பினும், அவ்வப்பொழுதும் துருக்கியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை ஜெர்மானியர்களே நிர்ணயித்தனர். ஜெர்மன் அதிகாரிகள் தங்களுடைய விருப்பப்படியெல்லாம் நடந்து வந்தனர். துருக்கியில் ஜெர்மானியர்கள் நிரம்பி வழிந்

தனர். போர் மேலும் தீவிரமடைந்து மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில், துருக்கி ஜெர்மனியின் பாதுகாப்பில் இருந்த ஒரு குட்டி நாடாகவே மாறிவிட்டது!

துருக்கிக் கப்பற்படை ஒன்று கருங்கடலில் பாய்ந்தது. இந் நிகழ்ச்சிக்குச் சில நாட்களுக்குப் பிறகு பிரிட்டிஷ் படை ஒன்று டார்டனெல்ஸுக்குச் செல்லும் வழியைத் தாக்கிற்று. பிரிட் டிஷ் போர்க்கால அமைச்சர்க்குழு (War Cabinet) வின்ஸ்டன் சர்ச்சிலின் கருத்துகளை ஏற்றுக்கொண்டு, துருக்கியைப் போரி லிருந்து வெளியேற்றுவதற்காகவும், ரஷியாவுக்கு ஆயுதங்களை வழங்குவதற்கு ஒரு சிறந்த நெடுஞ்சாலைப் பாதையை நிர் மாணிப்பதற்காகவும் நீர்ச்சந்திகளின் வழியாக ஒரு படையை அனுப்புவதற்கு இணங்கிற்று. ஆனாலும், பிரிட்டிஷ் இராணு வத் துறையினர் அத் திட்டம் செயல்படாவண்ணம் குலைத்து விட்டனர். 1915 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் கப்பற்படைகள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலவும் வீணாகிவிட்ட பொழுது, ஏப்ரல் மாதம் காலிப்போலி (Gallipoli) தீபகற்பத்தில் ஆங்கில-பிரெஞ்சுப்படை ஒன்று வந்து இறங்கிற்று. ஆனால், அப் படையோ துருக்கியரிடத்திருந்து மிகக் கடுமையான எதிர்ப் பினைப் பெறவேண்டியதாயிற்று. வான் சான்டெர்லின் தலைமையில் இருந்த ஜெர்மானிய இராணுவ அதிகாரிகளும் மிகவும் தீரத்துடன் போரிட்டனர். பெருஞ் சேதமடைந்த ஆங்கில - பிரெஞ்சுப்படைகளுடன் ஆகஸ்ட் மாதத்தில் இத் தாலியர்களும் சேர்ந்து கொண்டனர். இத்தாலியப் படைகள் எதிரியின் படைகளைப் பிளந்து முன்னேறி வெற்றி பெறுவன வாகவும் இருந்தன. ஆனாலும், நீர்ச்சந்தியிலுள்ள பாஸ்பரஸ் பகுதியில் ரஷியர்களின் ஒத்துழைப்புக் கிட்டாமையும், துருக்கியர் களின், ஜெர்மானியர்களின் சாதுர்யமான நடவடிக்கைகளும், மற்றும் நேச நாடுகளின் ஒற்றர் முறை சரிவரச் செயல்படா திருந்தமை போன்ற சூழ்நிலைகளும் இத்தாலியப் படைகள் முன்னேற்றம் காண முடியா வண்ணம் செய்துவிட்டன. இறுதி யில், இப்படிப்பட்ட சாதகமான வசதிகளெல்லாம் 1916, ஜன வரியில் நீர்ச்சந்திப் பகுதியிலிருந்து நேச நாடுகளைப் பின்வாங் கிக் கொள்ளும்படி செய்தன. பின்வாங்குதலில் யொட்டிச் சேதங் கள் ஏதும் ஏற்படவில்லை.

டார்டனெல்ஸ் பகுதியில் நிகழ்ந்த துருக்கி - ஜெர்மன் தாக்குதல்களைக் கண்டு ரஷியர்கள் கவலை கொண்டனர். ஏனெனில், பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகள் நீர்ச்சந்தியைக் கைவசப்படுத்திக் கொள்ளுமோ? இஸ்தம்பூலைக் கைப்பற்றிக்

கொண்டுவிடுமோ? அவற்றை யெல்லாம் ரஷியர்களிடம் ஒப்படைக்காமல் அவை தாமே சொந்தமாக்கிக் கொள்ளுமோ? என்ற அச்சம் ரஷியர்களுக்கு ஏற்பட்டிருந்தது. இருந்த போதிலும், காக்கஸஸ் பகுதியில் துருக்கியர்களின் தாக்குதலிலிருந்து விடுதலை பெறுவதற்காக அவர்கள் ஒரு சில நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதே சமயத்தில் கிழக்கிலிருந்து ரஷியர்களை விரட்டியடிப்பதற்கும், எகிப்திலிருந்து பிரிட்டனை விரட்டி வெளியேற்றுவதற்கும் துருக்கியர்கள் திட்டமிட்டிருந்தனர். 1914ஆம் ஆண்டின் கடைசி மாதங்களில் துருக்கிப்படைகள் கார்ஸ் என்னுமிடத்தையும், பாடும் என்னும் இடத்தையும் கைப்பற்றுவதற்கு முன்னேறின. ஆனால், அன்வர் தக்க நடவடிக்கைகளைச் சரியாக எடுக்கவில்லை. ஆகவே, துவக்கத்தில் ஒரு சில வெற்றிகளைப் பெற்றும், துருக்கியர்கள் பெருஞ் சேதத்துடன் பிறகு பின்வாங்க நேர்ந்தது. அர்மீனியப் புரட்சிக்காரர்களையும், ஒழுங்குறப் படையில் சேர்ந்து பயிற்சி பெறுத வீரர்களையும் உதவியாகக் கொண்டு, 1915-1916-ல் நிகழ்த்தப்பட்ட படையெடுப்புகளின் போது ரஷியர்கள் எர்ஸீரம் (Erzerum) வான் (Van) ட்ரெப்பிஸாண்டு (Trepizond), எர்சிஞ்ஜான் (Erzinjan) மற்றும் கிழக்கில் இருந்த ஒரு சில நகரங்கள் ஆகியவற்றையெல்லாம் கைப்பற்றிக் கொண்டனர். இரண்டாம் படைப்பிரிவின் தலைவராக விளங்கிய முஸ்தஃபா கமால் பாஷா (Mustafa Kamal) காக்கஸஸ் பகுதியிலிருந்த மூன்றும் படைப்பிரிவுடன் சேர்ந்து கொண்டார். எனினும், குறிப்பிடத்தக்க வினைவுகள் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. போக்குவரத்தே ஸ்தம்பித்துப் போய்விட்டது. ஆயுதங்களும் பொருள்களும் போதிய அளவு கிடைக்கவில்லை. எங்கும் மக்கள் நோயால் பீடிக்கப்பட்டனர். பல்லாயிரக் கணக்கான வீரர்கள் தக்க உணவு, உடை மற்றும் பலவித வசதிகளின்றி மாண்டனர்.

1917ஆம் ஆண்டில் ரஷியாவில் புரட்சி ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சியானது ரஷியாவில் காக்கஸஸின் நிலையை மிகத் தீவிரமாகப் பாதித்துவிட்டது. குறிப்பாக, பனிக்காலத்தில் நிகழ்ந்த போல்ஷ்விக் புரட்சி (Bolshevik Revolution) மிகத் தீவிரமான வினைவுகளை உண்டு பண்ணிற்று. அர்மீனிய, ஜார்ஜியப் படைகளைத் தவிர மற்றெல்லா ரஷியப்படைகளும் மறையத் தொடங்கின. பிரெஸ்ட் லிட்டோவாக் (Brest Litovak) என்ற ஒப்பந்தத்தின்படி, துருக்கிக்கு அளிக்கப்பட்ட கார்ஸ், அர்தஹான் மற்றும் பாடும் ஆகியவற்றைக் கைவசப்படுத்திக் கொள்வதற்காக அத் துருக்கிப்படைகள் மிக வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தன. ஆனாலும், ஜார்ஜிய, அர்மீனியப் படைகள் பாடும்மை மீண்டும் கைப்பற்றிக்கொண்டு, துருக்கியர்கள் அங்கு நுழையாதபடி

செய்துவிட்டன. பின்னளில், பாகூவில் போல்ஷ்விக் அர்மீனியப் புரட்சி ஒன்று ஏற்பட்டதனலும், பத்தாயிரம் துருக்கியர்கள் கொல்லப்பட்டதனலும், துருக்கியர்கள் அனைவரும் ஒருமித்து, மிகத் தீவிரமாகப் போரிட்டனர். அதன் விளைவாக, 1918ஆம் ஆண்டு செப்டம்பரில் அந் நகரம் கைப்பற்றப்பட்டதுடன், பல அர்மீனியர்களும் கொல்லப்பட்டனர். காக்கஸஸ் பகுதியில் துருக்கி பாய்ந்ததை அங்கீகரிக்காமல், ஜெர்மனி அதனைக் கடிந்துகொண்டது. காக்கஸஸ் பகுதியையும், குறிப்பாக பாகூவையும் மூன்றும் நாடு ஏதாகிலும் தாக்கினல் ஜெர்மனி முன்வந்து அவற்றைப் பாதுகாக்கும் என்று வற்புறுத்தும் போல்ஷ்விக் - ஜெர்மானிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும் அளவிற்கு ஜெர்மனி சினம் கொண்டிருந்தது. ஆனலும், 1918-ல் போர் முடிவடைந்ததும் ஜெர்மானிய படைகளுக்கோ, துருக்கிய படைகளுக்கோ எவ்விதமான ஆதரவும் கிடைக்க வில்லை. ஆகவே, காக்கஸஸின் கதி நேச நாடுகள் தீர்க்க வேண்டிய ஒரு முக்கிய பிரச்சினையாகி விட்டது.

அன்வரின் இரண்டாம் பேரவா எப்படியாவது எகிப்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்பதாக இருந்தது. 1914ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் துவக்கத்தில் எகிப்தில் பிரிட்டன் பல முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. துருக்கியர்கள் போரில் மிகவும் துரிதமாக இறங்கி விட்டதற்குப் பிறகு (டிஸம்பர், 18, 1914) அந்த 'உலக மகா யுத்தம்' நடைபெற்ற காலம் வரையிலும் அது பிரிட்டிஷ் பாதுகாப்பில் இருந்து வந்தது. அங்கு ஆட்சி புரிந்து கொண்டிருந்த கதீவ் அப்பாஸ் ஹில்மி (Khedive Abbas Hilmi) என்பவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு, அவருடைய இடத்தில் ஹுஸைன் (Husayn) என்பவர் சுல்தானுக நியமிக்கப்பட்டார். கப்பற் படைத் துறையின் அமைச்சரான ஜமால் பாஷா என்பவர் நான்காம் உத்மானியப் படைக்குத் தலைமை தாங்கி, பலஸ்தீனம் உட்பட சிரியாவின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டார். 1915-ல் பிப்ரவரி மாதத்தின் துவக்கத்தில் அவருடைய படைகள் சுயெஸ் கால்வாயைத் திடீரென்று தாக்கின. ஆனல், கிழக்குக் கரையைப் பாதுகாக்கப் போதிய அளவு சேனைப் பலம் இல்லாததனல், அவருடைய படை வீரர்கள் சினுய் தீபகற்பத்தில் வரிசையாக அமைந்திருந்த கேந்திரங்களான மான் (Maan) பீர்ஷீபா (Beersheba) மற்றும் காஸா (Gaza) ஆகியவற்றில் தங்கிக்கொண்டனர். 1915ஆம் ஆண்டு முழுவதுமே, சுறுசுறுப்பாக நடமாடும் சிறிய படைகள் சுயெஸ் கால்வாயின் மீது தாக்குதல்களை

நடத்திக் கொண்டே இருந்தன. இதனால் பிரிட்டிஷ் அரசு பெரிய படை ஒன்றைத் திரட்டி வைக்க வேண்டியதாயிற்று. ஆனால், அதே சமயத்தில் அக் கொள்ளையடிப்புகளை நிகழ்த்திய சிரிய, துருக்கிப் படைகள் பின்வாங்கிக் கொள்வது தவிர்க்க முடியாததாகப் போயினமையால், பிரிட்டன் திரட்டி வைத்த பெரிய படை மனச் சோர்வு அடைய வேண்டியதாயிற்று.

கால்வாயைத் தாக்குவதற்கான உத்தரவு 1916, பிப்ரவரி மாதத்தில் இடப்பட்டது. ஆனால், போக்குவரத்துச் சரியில்லாத தனால் தட்ப வெப்ப நிலை சரியாகும் வரையில் அந்தத் தாக்குதல் தாமதிக்கப்பட்டது. பிறகு நடத்தப்பட்ட தாக்குதல் படு தோல்வியில் முடிவடைந்தது. அக் காலந் தொட்டு, போர் முடிவடையும் வரையிலும் துருக்கிய - ஜெர்மன் படையினர் இப் பகுதியில் தம்மைத் தற்காத்துக் கொள்வதிலேயே முனைப்பாக இருந்தனர். மேலும், சிரியாவில் ஜமால் பாஷா கடைப்பிடித்த கடுமையான கொள்கைகள் அராபியர்களைப் பகைவர்களாக்கி விட்டன. இருப்பினும், 1917-ல் மார்ச், ஏப்ரல் மாதங்களில் காஸா போரில் (Battle of Gaza) துருக்கிய - ஜெர்மானியப் படைகள் பிரிட்டிஷ் பீரங்கித் தாக்குதலை வெகு தீரத்துடன் எதிர்த்து நின்று, பகைவர்களைச் சினுங்குப் பின்னல் தள்ளி விட்டன. அவ் வாண்டின் இறுதியில் தளபதி வான் ஃபால்கன்ஹய்னின் (General Von Falkenhayn) தலைமையில் ஜெர்மானியர்கள் நிகழ்த்திய படையெடுப்பின் விளைவாகப் பலஸ்தீனத்தில் ஒரு சாதகமான தீர்ப்புக் கிடைக்கும் என்று நம்பப்பட்டது. ஆனால், முன்போலவே இப்பொழுதும் போக்குவரத்து வசதி இல்லாமை, தேவைப்பட்ட பொருள்களை வழியில் பறிகொடுத்தமை, அராபிய பாலைவனக் கூட்டத்தினரின் தொல்லைகள், ஆலன்பி (Allenby) என்பவரின் தலைமையில் பிரிட்டிஷ் படைகள் வந்து குவிந்தமை ஆகியவை யெல்லாம் வான் ஃபால்கன்ஹய்னுக்குப் பேரிழப் பினைத் தேடிக் கொடுத்தன.

மத்திய கிழக்குப் பகுதியில் மெஸபொட்டேமியாவில் (Mesopotamia) போர் மும்முரமாக நடைபெற்றது. இந்தியாவிலிருந்து வந்த பிரிட்டிஷ் படைகள், துருக்கிப் படைகள் போரில் இறங்குவதற்கு முன்பே பஸராவைக் (Bassorah) கைப்பற்றிக் கொண்டு விட்டன; தொடர்ந்து அவை வட திசை நோக்கி டைக்ரிஸ், யூஃப்ரட்டீஸ் ஆகிய நதிகள் சந்திக்கும் இடத்தை[1]

[1] அராபிய மொழியில் தஜ்லா - ஃபுராத் என்று அழைக்கப் பெறும் டைக்ரிஸ் - யூஃப்ரட்டீஸ் நதிகள் இரண்டும் இராக் நாட்டில் சந்திக்கும் இடம் 'ஷத்துல் அரப்' என்று அழைக்கப்படும்.

நோக்கி முன்னேறின. டௌன்ஷெண்ட் (Town Shend) என்பவரின் தலைமையில் அமைந்த பெரும்படை ஒன்று கூத்துல் அமாராவை (Kut-al-Amara) 1915-ல் கைப்பற்றிக் கொண்டது. ஆனலும், நவம்பரில் பாக்தாதுக்குத் தெற்கில் அது தோல்வியுற்று, கூத்துல் அமாராவுக்குப் பின்வாங்கிக் கொண்டது. அவ்விடத்தில் ஆறும் துருக்கிப் படை அதனைச் சரணடைய வைத்தது (ஏப்ரல், 1916). இருந்த போதிலும், அன்வரின் மாமனன ஹலீல் பாஷா தாம் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து செயலாற்றுமல், தெற்கு இராக் பகுதியின் மீது தங்களுடைய ஆதிக்கத்தைப் பிரிட்டிஷ் மற்றும் இந்திய படைகள் நிலைநாட்டிக் கொள்ளக் கூடிய அளவுக்கு ஏமாந்து விட்டுக் கொடுத்தார். புதிய ரயில் பாதை ஒன்று போடப்பட்டது. சிறந்த காலாட்படையினரும், பீரங்கிப் படையினரும் மற்றும் தேவைப் பொருள்களும் மாட் (Maude) என்பவரின் தலைமையில் திரட்டப்பட்டனர். கூத்துல் அமாராவை அவர்கள் மீண்டும் கைப்பற்றினர். பாக்தாதைக் கைப்பற்றுவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது — (மார்ச், 1917). அவ்வாண்டு முடிவடைவதற்குள் பிரிட்டிஷ் படைகள் மோஸலுக்கும் பாக்தாதுக்கும் இடையே நடுப்பாதித் தொலைவில் வந்து சேர்ந்துவிட்டன. ஆனல், 1918-ல் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதற்கு முன்பு அப் படைகள் மோஸலை எட்டவில்லை.

முதல் உலகப் பெரும் போர் மத்திய கிழக்குப் பகுதியில் துருக்கிப் பேரரசைச் சிதறடித்துக்கொண்டிருக்கையில், அப் பேரரசில் இருந்துவந்த இரண்டு தேசிய கூட்டத்தினர் எதிரிக்கு (நேசக் கட்சியினர்க்கு) உதவி செய்து கொண்டிருந்தனர். அவர்களே அராபியர்களும், அர்மீனியர்களும் ஆவார்கள். அர்மீனியர்களுள் செல்வந்தர்களாய் விளங்கியவர்கள் தாங்கள் யாவரும் உத்மானிய அரசாங்கத்தையும் போரையும் ஆதரித்தே தீரவேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனல், அர்மீனிய வைதிகத் திருச்சபையின் தலைவர், ரஷியப் பேரரசரே அனைத்து அர்மீனியர்களின் பாதுகாவலராவார் என்று அறிவித்திருந்தார். ஆகவே, இஸ்தம்பூலிலும் மேற்றிசை நகரங்களிலும் வாழ்ந்த அர்மீனியர்கள் போருக்கு ஆதரவு நல்கவேண்டும் என்ற ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்கையில், கிழக்கே சின்ன ஆசியாவில் வசித்த அர்மீனியர்கள் பாஸ்டிர்மாஜியான் (Pasdirmajian) போன்ற மேனாட்டு அர்மீனியத் தீவிரவாதிகளைப் பின்பற்றி, அடிக்கடி கிளர்ச்சிகளைச் செய்தும், வான், எர்ஸிரோம் ஆகிய பகுதிகளில் வெளிப்படையாகப் போரிட்டும் ரஷியாவை ஆதரித்

தனர். ஒரு சில மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் அனை வருமே கொல்லப்பட்டனர். 1915-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வான்னில் அர்மீனிய அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து, 1915ஆம் ஆண்டிலும் 1916ஆம் ஆண்டிலும் அர்மீனியர்கள் பலர் படுகொலைக்கு இரையாயினர். போர் தொடங்கிய ஆரம்ப காலத்தில் பதினைந்து லட்சம் அர் மீனியர்கள் துருக்கியில் குடியிருந்தனர். அலெப்போவிலும் எர்ஸிரோமின் எட்டு மாவட்டங்களிலும் அவர்கள் பெருவாரி யாகச் செறிந்து கிடந்தனர். முக்கிய உத்தரவு 1915, ஜூன் மாதத்தில் பிறப்பிக்கப்பட்டது. செய்திப் போக்குவரத்துச் சாதனப் பாதைகளிலிருந்தும், இராணுவ கேந்திரங்கள் அமைந் திருந்த இடங்களிலிருந்தும் முஸ்லிம் அல்லாதார் அனைவரும் மாற்றப்படவேண்டும் என்னும் ஆணை பிறப்பிக்கப்பட்டது; முஸ்லிம் அல்லாதார் மட்டும் அடங்கியிருந்த படைகள் அனைத் தும் ஆயுதங்கள் பறிக்கப்பட்டுப் பின்னால் தள்ளப்பட்டன.

அச் செயலின் உள்ளந்தரங்க முக்கியத்துவம் அம் மக்கள் நாடு கடத்தப்பட்டபோது விளங்கத் தொடங்கிற்று. பொதுவாக, எல்லாரும் போய்ச் சேரவேண்டிய இடமாக இருந்த சிரியாவில் அன்றாடத் தேவைப் பொருள்கள் போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லையாதலால், பட்டினியாலும் கனப்பினாலும் ஆயிரக் கணக்கில் மக்கள் மடிந்தனர். சாவதற்கென்றே பலர் பாலை வனப் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டனர் போல் தென்பட்டது! ஒவ்வொருவனும் பெருந் தொல்லைக்கு உள்ளானான். கிழக்கு அனட்டோலியாவில் இருந்த அர்மீனியக் குடிமக்களுக்குச் சாதாரணமாக வழங்கப்பட்டு வந்த சேவைகளும் பொருள்களும் நிறுத்தப்பட்டமையினால், 1916-1917ஆம் ஆண்டுகளில் காக் கஸஸ் பகுதிகளில் போர் நடைபெறுவதற்குத் தடைகள் முளைத்து விட்டன. பல குர்த், துருக்கிக் கொள்ளைக் கூட்டங்கள் அர்மீனியர்களின்மீது பாய்ந்து தாக்கிக் கொண்டிருந்தன; இவை போன்ற கூட்டங்கள் கணக்கற்ற அட்டூழியங்களையும் புரிந் தன. நடுநிலைமை வகித்திருந்த நாடுகள் பலவும் சுல்தானிடம் முறை யிட்டன. ஜெர்மானிய அதிகாரிகள் அச் செய்திகளைக் கண்டு அந்தரங்கத்தில் வருந்திக் கொண்டிருந்தனர். ஆனாலும், அன்வரோ, அன்றி அவருடைய அரசாங்கமோ எப்படிப்பட்ட முறையீடுகளுக்கும் செவி சாய்ப்பதாகத் தென்படவில்லை; ஏனெனில், துருக்கி அரசாங்கத்தில் இருந்த செல்வாக்கு மிக்க தனி நபர்கள் சிலர் கிழக்குத் துருக்கியில் இருந்த அர்மீனிய மக்களை முற்றிலுமே ஒழித்து விடுவது என்று தீர்மானித்திருந்

தனர். முடிவாக, ஐந்து லட்சம் அர்மீனியர்கள் அழிந்தனர் என்பது உண்மை. ஒரு சிலரை நாடு கடத்துவது அவசிய மாகவே இருந்தது. ஆனால், எல்லாரையும் அவ்விதம் செய்வது என்பது உண்மையில் தேவையற்றதாகும். துருக்கியர்கள் பலர் தனிப்பட்ட அர்மீனியர்களுக்கும் கூட்டத்தினருக்கும் பாதுகாப்பு அளித்தனர். பொதுவாகத் துருக்கியர்கள் அர்மீனியர்களைக் கடுமையாக நாடு கடத்தியதும், அவ்விதம் செய்ததனால் ஏராள மான உயிர்ச்சேதம் ஏற்பட்டதும் துருக்கியருக்குப் பெரும் இழுக் காகும் என்று அவர்களுட் பலர் கருதினர்கள்.

உத்மானிய அரசாங்கத் தலைவர்கள் எதிர்நோக்க வேண்டி யிருந்த மற்றொரு முக்கிய தேசியப் பிரச்சினை அராபியர்களின் பற்றுதல், பேரவாக்கள் ஆகியவற்றைப்பற்றிய தாகும். ஜூன், 1916ஆம் ஆண்டு வரையிலும் வெளிப்படையாகக் கிளர்ச்சிகள் ஏதும் நடைபெறவில்லை. ஆனால், அம் மாதத்தில் மக்காவின் ஷரீஃப் ஹுசைன் என்பவர் ஹிஜாஸில் (Hijaz) தம்முடைய பிரத்தியேக ஆட்சியை நிறுவி விட்டதாக அறிவித்தார். அந்தச் செயலுக்கு முன்பு உத்மானிய அரசின் பிரதிநிதியாக வும், நான்காம் படையின் தலைவராகவும் விளங்கிய ஜமால் பாஷா என்பவர் சிரியாவில் வெளித்தோற்றத்திற்காகவாவது ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டி வைத்திருந்தார். ஜமால் 'அனைத்து இஸ்லாமியர்கள்' என்ற இயக்கத்தை ஆத ரித்ததுடன், போருக்காக அராபியர்களின் மெய்யான ஒத் துழைப்பையும் பெற முயன்றார். ஆனால், பல முஸ்லிம், கிறித்தவ தலைவர்கள் துரோகச் செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள் என் பதை நிரூபித்துக் காட்டும் பத்திரங்கள் பல அவருடைய கரத் திடைச் சிக்கின. 1915-ல் பலர் சிறையடைக்கப்பட்டனர்; பைரூத்தின் பிராதன இடத்தில், யாவரும் காணக்கூடிய திறந்த வெளியில் பதினெரு பேர் தூக்கிலிடப்பட்டனர். காலிப் போலியில் நிகழ்ந்த படையெடுப்புக்காகப் படைகளை அனுப்பி வைக்குமாறு ஜமாலை அன்வர் கோரியபோது, அல்-அஹத் ((Al-Ahad) என்ற இயக்கத்தின் தலைவர்கள் பலர் உட்பட, அராபியர்களைக் கொண்டிருந்த சேனை ஒன்று அனுப்பி வைக் கப்பட்டது. இது பெருமளவும் நம்பிக்கைக்குரியதே என்ற காரணத்தை யொட்டியே அவ்வாறு அனுப்பப்பட்டது. துருக் கிப்படைகளை பைரூத்திலும் டமாஸ்கஸ்லிலும் நிறுத்தி வைக்க லாம் என்பது தலைவர்களின் கருத்து. ஓராண்டுக்குப் பிறகு (ஏப்ரல், 1916) புகழ் பெற்றவர்களும், செல்வாக்கு மிகுந்தவர் களுமான தலைவர்கள் பலர் உட்படச் சுமார் இருநூறு அராபியர் கள் சிறையிலிடப்பட்டனர். அவர்கள்மீது வழக்குத் தொடரப்

பட்டது; அவர்களுக்குப் பலவகைப்பட்ட தண்டனைகளும் விதிக்கப்பட்டன. இருபத்திரண்டு பேர் பைரூத்திலும் டமாஸ்கஸ்லிலும் தூக்கிலிடப்பட்டனர். மற்றெல்லாச் செயல்களையும்விட இந்தச் செயலானது ஷரீஃப் ஹுசைன் அராபியர்களின் சுதந்தரத்தைப் பிரகடனப்படுத்துவதற்குத் தூண்டுகோலாக இருந்தது.

அவ்விதப்பட்ட பிரகடனத்திற்கு முன்பு அராபிய-பிரிட்டிஷ் தொடர்புகள் என்னவாக இருந்தன? பாரசீகக் குடாவின் மேற்குக் கரையோரத்திலும், அராபியாவின் தென்கரையோரங்களிலும் பல அராபிய சிற்றரசுகள் இருந்தன. அவற்றில் ஒவ்வொன்றும் பிரிட்டனுடன் நட்புறவு கொண்டிருந்தது. அந்த நட்பினை உருவாக்கிய ஒப்பந்தத்தின்படி அந் நாடுகளின் வெளி நாட்டுக் கொள்கையின் பொறுப்பு முழுதும் பிரிட்டனிடம் இருந்தது. உண்மையில், அச் சிற்றரசுகளெல்லாம் பிரிட்டிஷ் பாதுகாப்பின்கீழ் இருந்தன என்று கூறுவது மிகையாகாது. பிரிட்டிஷ் தூதர் ஒருவர் இந்தச் சிற்றரசு நாடு ஒவ்வொன்றிலும் தங்கியிருந்து அரசாங்க விவகாரங்களைப்பற்றிய அறிவுரைகளை வழங்கி, அவற்றை மகிழ வைப்பதற்காகத் தங்க நாணயங்களையும் சுண்டிச் சுண்டிக் கொடுத்தார்.

போர் மூளவிருந்த பொழுது பிரிட்டிஷ் கப்பற்படையைச் சார்ந்த கரப்டன் ஷேக்ஸ்பியர் (Captain Shakespear) என்பவர் நஜ்தின் (Nejd) அப்துல் அஸீஸ் இப்னு சுஹூத் (Abdul Aziz Ibn Saud) என்பவரைச் சந்தித்து, அராபிய-பிரிட்டிஷ் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். அதன்படி, இப்னு சுஹூத் தம்முடைய வெளிநாட்டுத்துறைப் பொறுப்பினைப் பிரிட்டிஷாரின் கையில் ஒப்படைத்துவிட்டு, பண உதவியைப் பெற்றுக் கொள்ள இணங்கினர். பொதுவாக, அராபியர்கள் என்ற பிரச்சினையைப்பற்றியோ, ஐக்கிய அராபிய நாடு என்ற பிரச்சினையைப்பற்றியோ ஏதும் குறிப்பிடப்படவில்லை; மறைமுகமாகவும் அதனைப்பற்றிய குறிப்பு ஏதும் தொனிக்கவில்லை. அராபியாவில் ஒரு முக்கிய பகுதியானது இப்னுசுஹூதின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. ஆகவே, இராக்கிலும் பாரசீக வளைகுடாவிலும் பிரிட்டனுக்கும் துருக்கிக்கும் இடையே நிகழ்வுற்ற போரில் அவர் நடுநிலைமை வகிக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதையே பிரிட்டிஷ் அரசு நாடிற்று.

மற்றொரு முக்கியமான விவகாரத்தில் ஹுசைன் ஈடுபட்டிருந்தார். அவரை இளந் துருக்கியர்கள் மக்காவின் இளவரச

ராக ஹிஜாஸுக்கு அனுப்பியிருந்தார்கள். 1914ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஹுசைனின் இரண்டாவது மகனான அப்துல்லா என்பவர் கெய்ரோ நகருக்கு வந்து, அங்கே எகிப்தின் பிரிட்டிஷ் பிரதிநிதியாக இருந்த கிச்னர் பிரபுவைச் சந்தித்தார். துருக்கியரிடமிருந்து பிரிந்து செல்ல விரும்பும் ஷரீஃப் ஹுசைனுக்குப் பிரிட்டனால் பண உதவி அளிக்க முடியுமா? என்று அவர் இவரை விசாரித்தார். போர் தொடங்கிய பின்னர் கிச்னர் பிரபு அந்தப் பேச்சு வார்த்தையை நினைவு கூர்ந்து, அப்துல்லாவைச் சந்தித்து, துருக்கியர்களுக் கெதிராகப் பிரிட்டிஷாருடன் ஷரீஃப் ஹுசைன் நேச ஒப்பந்தம் செய்துகொள்ள முடியுமா என்பதை விசாரிக்குமாறு ரொனால்ட் ஸ்டார்ஸ் (Ronald Storrs) என்ற பிரிட்டிஷ் அதிகாரிக்குக் கட்டளையிட்டார்.

இவ்விதமாக, ஷரீஃப் ஹுசைனுக்கும் எகிப்திலிருந்த பிரிட்டிஷாருக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் தொடங்கின. ஹுசைன் மிக இக்கட்டான நிலையில் சிக்கிக்கொண்டுவிட்டார். அவருடைய மூன்றும் மகனான ஃபைஸல் பிரிட்டிஷாரையோ, பிரெஞ்சுக்காரரையோ நம்பவில்லை; மாறாக, துருக்கியர்களுடன் ஒத்துழைத்து, அவர்களுடைய நன்றிக்குப் பாத்திரமாவதையே அவர் நாடினார். ஆனாலும், ஃபைஸலின் அண்ணன் அப்துல்லா துருக்கியரிடமிருந்து முழு விடுதலை பெறவே விரும்பினார். பிரிட்டிஷாரின் உதவியைப் பெறுவதற்காக உலகப் போரைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஹுசைன் திட்டமிட்டார். அதை நிறைவேற்றுவதற்காக, டமாஸ்கஸ்லிலும் பைரூத்திலும் இருந்த அந்தரங்க அராபிய குழுக்களின் ஒத்துழைப்பையும் அவர் நாடினார். இதற்கான முடிவினை ஹுசைன் 1916, ஜூன் மாதம் வரையிலும் எடுக்கவில்லை. அதற்கிடையே ஹுசைனுக்கும் ஸர் ஹென்றி மக்மோஹனுக்கும் (Sir Henry McMahon — எகிப்தில் பிரிட்டிஷ் உயர் ஆணையராக இருந்தவர்) இடையே நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகள் அராபிய சுதந்தரத்தைப் பற்றிய பிரச்சினையையும் அரபு நாட்டைப்பற்றிய பிரச்சினையையும் முன்னுக்குக் கொண்டுவந்தன. இந்தப் பேச்சு வார்த்தைகளின் விளைவாக, போர் வெற்றிகரமாக முடிந்ததற்குப் பிறகு ஓர் அரபு நாட்டைப் பிரிட்டன் உருவாக்கும் என்று பிரிட்டன் உறுதியளித்தது. அந்த நாட்டின் எல்லை வடபுறத்தில் அலெக்ஸாண்ட்ரெட்டாவிலிருந்து ஈரானிய எல்லை வரையிலும் வரையப்பட்டு, பின்னர் தெற்கில் பாரசீகக் குடாவிற்குச் செல்லும் கோடாக இருந்தது. அராபிய தீபகற்பம் முழுவதுமே அதில் அடங்கியிருக்கவேண்டும். இதிலிருந்து விலக்கப்பட்டிருக்க

வேண்டிய பகுதிகள் பிரிட்டிஷ் ஏடன், டமாஸ்கஸுக்கு மேற்கில் சிரியாவின் மாவட்டங்கள், ஹோம்ஸ், ஹாமா, அலெப்போ ஆகியவையாகும். அலெப்போவைப் பொறுத்தவரையிலும் பிரான்சின் உத்தரவில்லாமல் பிரிட்டன் உறுதி கூறுவதற்கு மறுத்துவிட்டது. இந்த அரபு நாட்டைக் கவனத்தில் கொண்டிராத எவ்வித ஒப்பந்தத்தையும் பிரிட்டன் எவரிடத்தும் செய்து கொள்ளாது என்றும் வாக்குறுதி யளிக்கப்பட்டது. அராபியாவின் எப் பகுதியையும் வேற்று நாட்டினிடம் குறிப்பாக, பிரான்சினிடம் ஒப்படைப்பதற்கான ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கு ஷரீஃப் ஹுசைன் இணங்கவில்லை. பிரிட்டனுடன் தனிப்பட்ட நிபந்தனைகளைக் கொண்ட ஒப்பந்தத்தைச் செய்த குவைத், மஸ்கத் போன்ற சிற்றரசு நாடுகளும் ஐக்கிய அராபியாவிலிருந்து விலக்கப்பட்டுவிட்டன.

ஆனால், பிரிட்டிஷாரைச் சமாளிப்பதற்கு ஹுசைனால் சுதந்தரமாக நடந்து கொள்ள முடியவில்லை. அவருடைய மகனான ஃபைஸல் அராபிய புரட்சி இயக்கத்தின் தலைவர்களுடன் அந்தரங்கமாகப் பேச்சு வார்த்தை நடத்தி வந்தார். 1915-ல் அந்தரங்க டமாஸ்கஸ் ஒப்பந்தப் பத்திரிகையை அவர் தம் தகப்பனாரிடம் சமர்ப்பித்தார். இந்தப் பத்திரம் இனி உருவாக வேண்டியிருந்த அராபிய நாட்டின் எல்லைகளை நிர்ணயித்தது. அவ்வெல்லைகள் பிற்காலத்தில் மக்மோஹனிடம் ஹுசைன் கோரியதைப் போன்றே இருந்தன. 'காபிடுலேஷன்ஸ்' என்ற கொள்கையைக் கைவிட்டு, அதற்குப் பதிலாகப் பொருளாதாரச் சலுகைகளை அது நாடியது. அந்தப் பத்திரத்தை உருவாக்கியவர்கள், அராபியர்கள் எந்த நிபந்தனைகளின் பேரில் கிளர்ச்சி செய்ய இணங்குகிறார்களோ அவற்றைப் பிரிட்டிஷாரிடம் சமர்ப்பிப்பதற்காக ஹுசைனுக்கு அழைப்பு விடுத்தனர். ஹுசைன்-மக்மோஹன் பேச்சு வார்த்தைகளை வெறுமனே இரு தனிப்பட்டவரிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் எனக் கருதாது, பிரிட்டிஷ் அரசாங்கம், அராபிய மக்கள் என்ற இரு கூட்டங்களின் பிரதிநிதிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் என்றே கருத வேண்டும்.

ஹுசைனுடன் இந்தப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கையில், நேச நாடுகள் இகழ்ச்சிக்குரிய தங்களது அந்தரங்க ஒப்பந்தங்களை உருவாக்குவதில் முனைந்திருந்தன. இந்த அந்தரங்க ஒப்பந்தங்கள் உத்மானிய துருக்கிப் பேரரசின் அராபிய பகுதிகளைத் தமக்குள் எவ்விதம் பங்கிட்டுக் கொள்வது என்பதைப்பற்றியனவாக இருந்தன.

1914-ல் போர் தொடங்கியவுடன் இஸ்தம்பூலியும், நீர்ச்சந்தியையும், அதன் இரு புறங்களிலுமிருந்த ஏராளமான நிலப் பகுதியையும் ரஷியா இங்கிலாந்தினிடத்திருந்தும் பிரான்ஸினிடத்திருந்தும் பெற முயன்றது. தூதரகப் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு 1915, மார்ச்சில் ரஷியா கோரும் நாடுகளை அது பெற்றுக் கொள்ளலாம் என வாக்குறுதி யளிக்கப்பட்டது. இதற்குப் பதிலாக ஆசியத் துருக்கியில் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு உரிமைகள் தனிப்பட்ட ஒப்பந்தத்தினால் நிர்ணயிக்கப் படும் என்றும், ஈரானில் நடுநிலையானதாக இருந்த பகுதி பிரிட்டிஷ் செல்வாக்குக்குட்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஒரு மாதத்திற்குப் பிறகு இத்தாலியைப் போரில் இறங்க வைப்பதற்காக லண்டன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப் பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, டோடகனிஸ் (Dodecanese) தீவுகளின் மீது இத்தாலியின் இறைமை நாட்டப்படப் போவதாகவும், லிபியாவின்மீது உத்மானிய கலீஃபா பாராட்டி வந்த எல்லா உரிமைகளையும் களைந்தெறியப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அன்டல்யாவில் இத்தாலி கோரிய உரிமைகள் அளிக்கப்பட்டன. அந்தப் பகுதியும் இத்தாலிக்கே கொடுத்து விடப்படப் போவதாக உறுதியளிக்கப்பட்டது. துருக்கி துண்டிக்கப்படவில்லையாயின், இத்தாலிக்கு வேறு இடங்களின் நிலப் பகுதிகள் வழங்கப்படும் என்ற உறுதியும் அளிக்கப்பட்டது.

இந்த அந்தரங்க ஒப்பந்தங்களுள் மிகவும் முக்கியமான தான சைக்ஸ் - பிக்கோ ஒப்பந்தம் (Sykes - Picot Agreement) (ஏப்ரல் 26, 1916), கொடுக்கப்படுவதாக ஏற்கெனவே வாக்குறுதி யளிக்கப்பட்ட நீர்ச்சந்திப் பகுதிகளையும், எர்ஸிரோம், ட்ரெப்பிஸாண்டு, வான், பிட்லிஸ் மற்றும் குர்திஸ்தான் ஆகிய மாவட்டங்களையும் ரஷியாவுக்கு அளித்தது. டைருக்கு வட பகுதியில் சிரியாவின் குறுகிய கடற்கரைப் பகுதி, மெர்ஸின் உட்பட அதானு மாவட்டம், திட்டவட்டமான எல்லைகளைப் பெற்றிருந்த சிலிசியாவின் பகுதி ஆகியவை பிரான்ஸினிடம் ஒப்படைக்கப்பட்டன. மத்திய தரைக் கடலில் ஹைஃபா, அதானு ஆகியவற்றைச் சுற்றியிருக்கும் பகுதியையும் பாக்தாதிலிருந்து பாரசீகக் குடா வரையிலும் நீடித்திருந்த மெஸபொட்டேமியாவை (இராக்கை)யும் பிரிட்டன் பெற்றுக் கொண்டது. ஜோர்தான் நதிக்கு மேற்கிலும் காஸாவிலிருந்து டைர் வரையிலும் பரவியிருந்த பலஸ்தீனம் (Palestine) ரஷியாவின் வற்புறுத்தலின் பேரில் பிரெஞ்சு சிரியாவிலிருந்து துண்டிக்கப்பட்டது. அங்கே புனித ஸ்தலங்கள் இருந்ததனாலும், ஏராளமான ரஷிய

வைதிக நிறுவனங்கள் இருந்ததனலும், சர்வதேச நிர்வாகம் நிலைநாட்டப்படும் என்று அதற்கு உறுதியும் அளிக்கப்பட்டது. கிழக்கில் டமாஸ்கஸ், அலெப்போ ஆகியவற்றிலிருந்து மோசல் வழியாக ஈரானிய எல்லைவரையிலும் வியாபித்திருந்த சிரியாவின் பகுதி பிரெஞ்சு பாதுகாப்பின் கீழ் அமர்த்தப்பட்டது. கிர்கூக்கி லிருந்து அகபாவரையிலும், மத்தியதரைக் கடலிலிருந்து பாரசீக வளைகுடா வரையிலும் பரவியிருந்த பகுதி பிரிட்டிஷாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அலெக்ஸாண்ட்ரெட்டா சர்வதேசத் துறைமுகமாகும் என அறிவிக்கப்பட்டது.

சைக்ஸ் - பிக்கோ ஒப்பந்தமானது ஹுசைன்-மக்மோஹன் பேச்சு வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டதற்குப் பிறகு அந்தரங்கமாகக் கையொப்ப மிடப்பட்டது. நடந்த துரோகத்தைப்பற்றி ஹுசைன் 1917-ன் இறுதியில் அறிந்தார். அப்பொழுதுதான் போல்ஷ்விக்குகள் பேரரச சுவடிக் கூடத்தில் வைக்கப்பட்டிருந்த அந்தரங்க ஒப்பந்தங்களை வெளியிட்டனர். அதற்கான விளக் கத்தை ஹுசைன் கோரினார். 1918-ல் அவர் அப்பொழுது பிரிட்டனின் வெளிநாட்டு அமைச்சராக இருந்த பால்ஃபர் பிரபு (Lord Balfour) வினிடமிருந்து ஓர் அறிக்கையைப் பெற்றார். அவ்வறிக்கை சைக்ஸ் - பிக்கோ ஒப்பந்தம் என்னும் எந்த ஓர் ஒப்பந்தமும் எந்தக் காலத்திலும் உருவாகவில்லையே! என்று அறிவித்தது. போர் முடியும்வரையிலும் ஹுசைன் பிரிட்டிஷாரை நம்பியே இருந்தார்.

ஆனால், சைக்ஸ் - பிக்கோ என்னும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுத்தான் உள்ளது என்பதை அறிந்த இத்தாலியர் கள் தங்களுடைய பேரவாக்கள் திட்டவட்டமாக நிர்ணயிக்கப் படவேண்டும் என்று வற்புறுத்தினர். ஆகவே, 1917-ல் செய்ன்ட் ஜீன் டு மாரியன்னே (St. Jean de Maurienne) என்ற ஓர் ஓரத்திலிருந்த புகைவண்டிப் பெட்டி ஒன்றில் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய மூன்று நாடுகளின் பிரதம அமைச்சர் களும் கூடி, இத்தாலி மேலும் இஸ்மீர் (Izmir), அன்டல்யா, கோன்யா ஆகியவற்றையும், தென்மேற்கு அனட்டோலியாவை யும் பெற்றுக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தனர். இஸ்மீருக்கு வடக்கிலுள்ள மாவட்டம் ஒன்றும் இத்தாலிக்கு வந்து சேர்ந்தது. இத்தாலி இஸ்மீரைப் பெற்ற அதே சமயத்தில் வெனிஸிலா ஸுக்கு ஸைப்ரஸையும், மேற்கு ஆசியாவில் ஒரு பகுதியையும் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. போரில் நேச நாடு களின் பக்கம் கிரீஸை இழுப்பதே அவ்வித வாக்குறுதியின்

நோக்கமாகும். மத்திய கிழக்கின் வருங்காலத்தைப்பற்றிய உறுதிகளும் மாற்று உறுதிகளும் உருவாகத் தொடங்கின.

'யூதத்தாயக இயக்கம்' (Zionism) என்பது எவரும் இதுவரை கேட்டிராத ஒன்றுகும். பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதிக் கால் நூற்றுண்டு காலத்தில் ஐரோப்பிய யூதர்களிடையே தோன்றிய 'சமூக - அரசியல் மற்றும் தேசிய இயக்கம்' என்று அச் சொல்லுக்கு ஒருவாறு விளக்கம் கூறலாம். ரஷியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் யூதர்களுக்கெதிராகக் கடைப்பிடிக்கப் பட்ட கொள்கையின் விளைவாக அந்த இயக்கம் உருவாயிற்று. தியொடொர் ஹெர்ஸல் (Theodore Herzel) என்பவர் 1897-ல் பேஸில்லில் (Basle) 'உலக யூதர் நிறுவனம்' என்ற ஓர் அமைப் பினை நிர்மாணித்தார். பலஸ்தீனத்தில் யூதர்களின் குடியேற்ற அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சுல்தானை அந் நிறுவனத்தினர் வற்புறுத்தி வந்தனர். ஆனால், சுல்தான் அவ்விதம் செய்தால் மேலும் பல தேசிய பிரச்சினைகள் முளைக்கக் கூடும் என்று அஞ்சி அதனை மறுத்து விட்டார். இப்படிப்பட்ட குடியேற்ற அமைப்பினை உகாண்டாவில் அமைத்துக் கொடுப்ப தாக பிரிட்டிஷார் கூறியதை யூதர்களின் குழு ஏற்றுக் கொள்ள வில்லை. யூதர்களின் புனித பூமி அடங்கியிராத யூதக் குடியேற்ற நாடு என்பது தங்கள் கோட்பாட்டுக்கும் கருத்துக்கும் நேர் முரணானது என்பது அத் தீவிர யூதர்களின் வாதமாகும்.

1914-ல் உலகப் போர் தோன்றவிருந்த தறுவாயில், யூதர் கள் ஜெர்மனியில் மிகத் துரிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருந் தனர். இரண்டு பிரிவுகளாக ஐரோப்பா பிளவுபட்ட பொழுது, லண்டனில் மற்றொரு மையமும் தோன்றியது. அதற்கு, ரஷியா வில் பிறந்த டாக்டர் செய்ம் வெய்ஸ்மன் (Dr. Chaim Weizmann) என்பவர் தலைவரானார். அனைத்து யூதர் இயக்கத்திற்கு எதிர்ப்பு ஆங்கில - யூதர் சங்கத்திலிருந்தும் பிரிட்டிஷ் யூதர்களின் பிரதி நிதிகளின் குழுவினிடத்திருந்தும் வந்தது. ஆனால், வெய்ஸ்மன், லாயிட் ஜார்ஜ் உட்படப் பலருடைய முயற்சியைக் கொண்டு பால்ஃபரின் நல்லிருப்பத்திற்குப் பாத்திரமானார். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பிராண்டெய்ஸ் என்ற நீதிபதியின் (Justice Brandeis) தலைமையில் யூதர்களின் குழு ஒன்று அமைக்கப் பெற் றது. அதற்கு ரப்பி வைஸ் (Rubbi Wise) எழேனி மெயர் (Eugene Meyer), நாதன் ஸ்டிராஸ் (Nathan Strauss), ஃபெலிக்ஸ் ஃபிரான்க்ஃபர்ட்டர் (Felix Frankfurter) என்பவர்களும் ஆதரவு அளித்தனர்.

உத்மானிய பேரரசின் மறைவிற்குப் பிறகு பலஸ்தீனத்தில் 'யூதர்களின் பொதுநல அரசியல் அமைப்பு' ஒன்றினை நிறுவுவதாக வாக்குறுதி யளிக்க வேண்டும் என்று யூதர்கள் நேசநாடுகளை வற்புறுத்தினர்.[1] அந் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பத்திரிகைகளிலும் தனிப்பட்ட வகையிலும் அரசியல் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அப்படிப்பட்ட நாடு ஒன்றை விரும்பியவர்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து கொண்டிருந்தது. குறிப்பாக, அந்த நாடு சுயெஸ் கால்வாய்க்கு அருகில் அமைந்திருக்கப் போவதால், பிரிட்டிஷ் செல்வாக்குக்கு அது உட்பட்டிருக்கும் என்று அவர்கள் உணரத் தொடங்கினர். அந்த முயற்சிகள் எல்லாம் 1917, நவம்பர் 2ஆம் நாள் அன்று வெற்றி கண்டன. அந்த நாள் அன்று பால்ஃபர் பிரபு ராத்ஸ்சைல்ட்[2] பிரபுவுக்குப் பின்வருமாறு எழுதினார்:

'பலஸ்தீனத்தில் யூதர்களுக்கெனத் தனித்தாயகம் ஒன்றை அமைத்துக் கொடுப்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்புகின்றது. அந்த நோக்கத்தை உருவாக்குவதற்காக அவ் வரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும். ஆனால், அவ்விதம் மேற்கொள்வதனால், பலஸ்தீனத்தில் ஏற்கெனவே குடியிருந்துவரும் யூதரல்லாத குடிமக்களின் சிவில் மற்றும் சமய உரிமைகளைப் பாதிக்காத முறையிலும், மற்றெந்த நாட்டில் வசிக்கும் யூதர்கள் பெற்றிருக்கும் உரிமைகள் அரசியல் அந்தஸ்து ஆகியவற்றைப் பாதிக்காத முறையிலும் ஒழுகிக் கொள்ளும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.' இந்த அறிக்கைதான் வரலாற்றில் 'பால்ஃபர் அறிக்கை' (Balfour Declaration) எனப் புகழ் பெற்று விளங்குகின்றது. இதற்குப் பிரிட்டிஷ் ஆட்சிக் குழுவும், அமெரிக்காவின் ஜனதிபதி உட்ரோ வில்ஸனும் இணக்கம் தெரிவித்தனர். பின்னவர் ஒருசில திருத்தங்களையும் புகுத்துமாறு வற்புறுத்தினர். பின்னாளில் பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளும் அதை ஏற்றுக் கொண்டன. 1918, அக்டோபரில் வில்ஸன் அதனை வெளிப்படையாக அங்கீகரித்தார். அந்த அறிக்கையின் உண்மைப் பொருள்தான் என்ன என்பதைப்பற்றி விவாதங்கள் சமீப

[1] மிகவும் செல்வம் படைத்தவர்கள் யூதர்களே. அவர்களே மிகக் கூடுதலான வட்டிக்குப் பெரும் தொகையைக் கடனுக்கொடுத்துப் பெரும் போர்களை நிகழ்த்தி வைக்கப் பணத்தை 'முதலீடு' செய்தார்கள் எனவே, 1914-18 உலகப் போரில் நேச நாட்டினர், குறிப்பாக பிரிட்டிஷார் யூதர்களுக்கு நிரம்பவும் கடமைப்பட்டார்கள்; கடன்பட்டார்கள். அந்தக் கடனுக்குப் பரிகாரமே இப்படிப்பட்ட கோரிக்கையாகும்.

[2] 'மோஸஸ் ராத்ஸ்சைல்டு' என்று அழைக்கப்படும் மூஸா ராஷித் என்னும் யூதர், உலகின் மிகப் பெரும் பணக்காரக் கோடீசுவராக விளங்கியவர்; முதல் உலகப் போர் நிகழ ராணமாய்க் கடன் வழங்கியவர்களுள் பெருந்தனக்காரர்.

காலம் வரையிலும் நடந்து கொண்டிருந்தன. ஆனால், அது எழுதப்பட்ட பொழுது அதன் நோக்கத்தைப்பற்றி எவ்வித ஐயப்பாடும் இருந்ததாகத் தெரியவில்லை. மேலும், அது சைக்ஸ்-பிக்கோ ஒப்பந்தத்திற்கும் ஹுசைன் - மக்மோஹன் பேச்சுக்களுக்கும் முற்றிலும் மாறுபட்டதாகும். அதனை உருவாக்கியவர்கள் அது உருவானதற்கான காரணங்களைக் கூறிக்கொண்டனர். நேச நாடுகள் ஜெர்மனியிலும் ஆஸ்ட்ரியாவிலும் இருந்த யூதர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவ்வாறு அறிவிக்கப்பட்டது என்று ஒரு சிலர் கூறிக் கொண்டனர். இது ஓரளவு உண்மையாகவும் இருக்கக்கூடும். ஏனெனில், 1918-ல் ஜெர்மனியும் துருக்கியும் பலஸ்தீனத்தில் யூதர்களின் குடியேற்ற அமைப்புக்கான ஒரு குழுவுக்குச் சாசனம் ஒன்றை அளிக்க முன்வந்தன. ஆனாலும், யூதர்கள் விடாப்பிடியாக முயற்சி செய்து வந்ததனால் தான் அவர்கள் தங்கள் நோக்கம் நிறைவேற்றப்படுவதில் வெற்றி கண்டனர். ஆனால், முழுப் பலஸ்தீன் நாட்டையும் அவ்வறிக்கை தங்களுடைய தேசமாகக் குறிப்பிடவில்லையே என்று அறிந்து அவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

பால்ஃபர் அறிக்கையைப்பற்றிய செய்தி ஹுசைனுக்கு எட்டியதும் அவர் பெரும் கவலையில் மூழ்கினர். அவ் வறிக்கை விடப்பட்டதற்கான காரணத்தையும் அவர் அறிய முயன்றார். பலஸ்தீனத்தில் யூதர் குடியேற்றம் ஏற்படுவதனால் அராபிய மக்களுடைய அரசியல் பொருளாதார சுதந்தரம் பாதிக்கப்படமாட்டாது என்று பேராசிரியர் ஹோகார்த் (Hogarth) விளக்கங் கூறினார். அப்பொழுதும் ஹுசைன் பிரிட்டிஷாரை நம்பினர்.

போரின் பொழுது நேச நாடுகள் மற்றொரு வாக்குறுதியையும் அளித்தன. பாக்தாதும் ஜெரூஸலமும் பிரிட்டிஷ் படைகளின் வசம் சிக்கியபோது, வெற்றி பெற்ற படைத் தலைவர்கள், வருங்காலத்துக் குடியேற்றங்கள் உள்ளூர் மக்களுடைய இணக்கத்துடன்தான் செய்யப்படும் என்று அறிவித்தனர். இந்த அறிவிப்புகள் ஜனாதிபதி வில்ஸனின் பதினான்கு அம்சத் திட்டத்திற்கு வழிகாட்டியாக இருந்தன. குறிப்பாக, அவை வில்ஸனின் பன்னிரண்டாம் அம்சத்திற்கு வழிகாட்டியாக இருந்தன. அந்த அம்சம், உத்மானியப் பேரரசின் துருக்கியப் பகுதிகளின் இறைமை மிக உறுதியானதாக இருக்கவேண்டும் என்றும், மற்ற நாட்டு மக்களுக்கும் பரிபூரணப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தியது. கிரேக்கர்கள், அர்மீனியர்கள் மற்றும் அராபியர்கள் அனைவரும் இந்தக் குறிப்புத் தங்களைப்பற்றியதாகும் என்று கருதித் தங்களுடைய நம்பிக்கைகளை வளர்த்துக்

கொண்டே இருந்தனர். வில்ஸனுடைய அறிக்கை தங்களுடைய நம்பிக்கைகளை நிறைவேற்றப் போகின்றது என்றும் எதிர் பார்த்திருந்தனர்.

எல்டெரிம் என்றழைக்கப்பட்ட துருக்கிப் படையெடுப்பின் தோல்வி (1917-கோடைக்காலம்) பிரிட்டிஷார் பலஸ்தீனத்தில் புகுவதற்கு எகிப்தில் ஏற்பாடுகளைச் செய்ய வழிவகுத்துக் கொடுத்தது. 1917, டிஸம்பரில் ஜெருசலத்தை ஆலன்பீ கைப்பற்றினார். பிரெஞ்சுப் படைகள் உடன்வர, பிரிட்டிஷ் படைகள் கரையோரமாக வடபுறத்திற்குச் சென்று டயர், சிடான், பைரூத் மற்றும் திரிப்போலி ஆகியவற்றைக் கைப் பற்றிக்கொண்டன. ஃபைஸல் (Faysal) என்பவரின் தலைமையி லிருந்த அராபியர்கள் செய்திப் போக்குவரத்துகளை அயராமல் தொல்லைக்குள்ளாக்கிக் கொண்டிருந்தனர். 1916, ஜூனில் தோன்றிய 'அராபிய புரட்சி' ஹிஜாஸில் துருக்கியர்களின் ஆட்சியைப் பாழாக்கிற்று. ஜோர்டானுக்குக் கிழக்கில் ஃபைஸ லின் தலைமையில் இருந்த அராபியர்கள் ஆலன்பீயைத் திணற வைத்தனர். T. E. லாரென்ஸ் (T. E. Lawrence), C. C. வில்சன் (C. C. Wilson) மற்றும் சர் ரெஜினல்ட் வின்கேட் (Sir Reginald Wingate) போன்ற அதிகாரிகளின் தூண்டுதல்களின் பேரிலும், பிரிட்டிஷாரின் தங்கத்தையும் ஆயுதங்களையும் பெற்றும், அரா பியர்கள் அக்கபா (Akaba), மான் (Maan) ஆகியவற்றைக் கைப் பற்றிக்கொண்டு, 1918 அக்டோபரில், பிரிட்டிஷார் நுழைந்த அதே சமயத்தில், டமாஸ்கஸுக்குள் நுழைந்தனர். முஸ்தஃபா கமால் பாஷா (Mustafa Kamal Pasha) என்பவரின் தலைமையில் இருந்த ஏழாம் துருக்கிப்படையினர் அலெப்போவுக்கு எதிரில் அராபியர்களைத் தடுத்து நிறுத்தினர். ஆனாலும், முட்ரோஸ் (Mudros) என்ற இடத்தில் நேச நாடுகளுக்கும் துருக்கிக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் எல்லாச் சச்சரவு களுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது.

1918ஆம் ஆண்டு கோடையில் மேற்குப் போர் முனையில் ஜெர்மானியர்கள் அடைந்த தோல்விகளும், ஜெர்மனிக்கு உடனடியாக ஏற்படவிருந்த வீழ்ச்சியும், மத்தியதரைக் கடல் பகுதியில் போரைப் பெரும்பாலும் முடித்துவிட்டன. ஜெர் மானிய ஆயுதங்களும் பொது உதவியும் இல்லாமல், துருக்கிப் பேரரசு உறுதியான எதிர்ப்பினைத் தொடர்ந்து அளித்திருக்க முடியாது. பிரிட்டிஷ் மத்தியதரைக் கடற்படையின் தலைவ ரான கஃப் கால்தோர்ப் (Gough-Calthorpe) என்பவரும் இஸ்ஸத் பாஷாவின் புதிய துருக்கி அரசாங்கத்தின் பிரதிநிதிகளும்

போர் நிறுத்த ஒப்பந்தத்தை 1918, அக்டோபர் 30ஆம் நாள் அன்று செய்து கொண்டனர். அது நிபந்தனையற்ற சரண் அன்று. ஆனாலும், துருக்கிப் படைகள் களைக்கப்பட்டன. நேச நாடுகள் நீர்ச்சந்திக்குச் செல்வதற்கும், அதன்மீது ஆதிக்கம் பெற்றிருப்பதற்கும் உரிமை பெற்றன.

நான்கு ஆண்டுகள் வரை நடைபெற்று வந்த அந்த உலகப் போர் துருக்கிச் சமுதாயத்தில் பல மாறுதல்களைப் புகுத்திற்று. போரினால் ஏற்பட்ட படுமோசமான சூழ்நிலைகளின் விளைவாக, 'நோயாளி உண்மையிலேயே செத்துவிட்டார்!' என்று ஆஸ்க்வித் (Asquith)[1] கூறும் அளவிற்கு அது சீர்குலைந்து விட்டிருந்தது. துருக்கியில் தோன்றிய நிலை உண்மையில் மிகக் கேவலமுற்றே இருந்தது. கிராமங்களைவிடப் பெரிய நகரங்கள்தாம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. குறிப்பாக, தலைநகர் இஸ்தம்பூல் மிக மிகத் தீவிரமாய்ப் பாதிக்கப்பட்டுவிட்டது. அனைத்து வகைப் பொருள்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டது கொள்ளை லாபம் சம்பாதிக்கும் கள்ள வர்த்தகர்கள் பலர் தோன்றினர். பொதுமக்களின் உடல் நிலையோ, பரவலாக, மிகத் தீவிரமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. பொதுவாக, மிகவும் அடிமட்டத்தை எட்டியிருந்த வாழ்க்கைத்தரம் இன்னும் கேவலமாயிற்று. ஊதியங்களில் பெரும் ஏற்றம் எதுவும் ஏற்படவில்லையாயினும், விலை வாசிகள் பன்மடங்காக ஏறிக்கொண்டே சென்றன. பல முக்கிய பொருள்கள் கிடைப்பதே அரிதாகிவிட்டது. வெளி நாட்டுப் பொருள் உள்நாட்டுக்கு வருவதற்குத் தடை விதிக்கப் பட்டது. உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருள்களை அரசாங்கமே பறிமுதல் செய்துகொண்டது. அரசினால் அரசாங்கத்தை நடத்தவே முடியவில்லை. தகுதியின்மை, பொல்லாங்கு, திறமையின்மை ஆகியவைதாம் ஓங்கி நின்றன. 'காபிடுலேஷன்ஸ்' என்ற கோட்பாடு கைவிடப்பட்டது. உத்மானியப் பொதுக் கடன் துறைக்கு முற்றுப்புள்ளி யிடப்பட்டது. போரின் பெருஞ் சுமையைத் தாங்கி நின்ற அரசாங்கம் தனக்குப் பழக்கமில்லாத பல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியிருந்தது. துருக்கி நாடே முடிவடைந்து விடும்போல் இருந்தது. 'செத்த நோயாளி மீண்டும் உயிர்பெற்று எழுவது என்பது இயலாது' என்று ஆஸ்க்வித் கூறிவிட்டார்.

[1] ஹெர்பர்ட் ஹென்றி ஆஸ்க்வித் என்பவர் இங்கிலாந்தின் பிரதமராக இரு முறை தொடர்ந்து 1908 முதல் 1916 வரை பதவி வகித்தவராவார்.

இருந்த போதிலும், போரின் விளைவாகச் சமூகத்தில் பல புதிய கூறுகள் முளைத்தன. அரசாங்கத்தின் அதிகாரம் மங்கிக் கொண்டிருக்கையில், அராபியர்கள், கிரேக்கர்கள், அர்மீனியர்கள், மற்றும் பேரரசின் கீழ்ப்படிந்த நிலையிலிருந்த எல்லா நாட்டினர்களும் தங்களுடைய தேசிய உணர்ச்சியை வெளியிடத் தொடங்கினர். அர்மீனியர்களைப் பொறுத்த வரையிலும், அது அவர்களை அழிவுக்கு இழுத்துச் சென்றது. கிரேக்கர்களைப் பொறுத்தவரையிலும், அது அவர்களுடைய கனவுகளைத் தாற்காலிகமாக நனவாக்கிக் கொள்ளச் செய்தது. அராபியர்களைப் பொறுத்தவரையிலும், அது மாபெரும் கிளர்ச்சியை எழுப்பிப் புதிய அராபிய நாடுகளை உருவாக்கிற்று. துருக்கியர்களைப் பொறுத்தவரையிலும், துரிதமான சீர்குலைவு, ஹாலிதே எதிப் (Halide Edib), மற்றும் அகமத் அமீன் (Ahmad Emin) போன்ற மக்கள் தலைவர்கள், முற்போக்காளர்கள் ஆகியவர்களுக்கும், முஸ்தஃபா கமால் பாஷா போன்ற தீவிரத் தேசிய வாதிகளுக்கும் சுயநலத்தை நாடாது, நாட்டின் அபிவிருத்தியை நாடுபவர்களிடம் அரசாங்கத்தின் பொறுப்பினை ஒப்படைக்க வேண்டும் என்று எடுத்துரைப்பதற்கு வாய்ப்பு அளித்தது.

போரின் மற்றொரு முக்கிய விளைவென்ன வெனில், மத்திய கிழக்குப் பகுதியைப் பொறுத்தவரையிலும், அங்கே பல பிரிட்டிஷ், பிரெஞ்சு, இத்தாலிய, ஜெர்மன் படைவீரர்கள் வந்து குவிந்துவிட்டதாகும். மத்திய கிழக்கு வாசிகள் பலர் மேலை நாட்டினரை நோக்கி, அவர்களுடைய பழக்கவழக்கங்களை முதன் முதலாக அறியத் தொடங்கினர். அவர்களுடைய இயந்திரங்கள் அப் பகுதி மக்களுக்குப் புதிய உலகுகளையே திறந்து காட்டிவிட்டன. அந்த நான்கு ஆண்டு காலத்தில் மத்திய கிழக்குப் பகுதியின் போக்குவரத்திலிருந்து, சமயநிலை வரையிலும் எல்லாத் துறைகளிலும் மிகத் தீவிரமான விளைவுகள் விளைந்தன. மத்திய கிழக்குக்கு ஒரு புதிய சகாப்தமே தொடங்கி விட்டது.

24. பாரிஸ் ஒப்பந்த மாநாடு
(Paris Peace Conference)

போர் நிறுத்த ஒப்பந்தம் முட்ரோஸ் தீவுக்கரையில் செய்து கொள்ளப்பட்டது. இதனால் மத்திய கிழக்கில் முதல் உலகப் போர் நிறுத்தப்பட்டது. அவ்வொப்பந்தம் ஏற்பட்ட பிறகு இரண்டு வாரங்களுக்குள்ளாகவே ஜெர்மனி நேச நாடுகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. இதன் விளைவாக, அதிகார பூர்வமாகப் போர் நின்றுவிட்டது. மத்திய கிழக்கின் விதியை நிர்ணயிக்கும் பொறுப்புப் பல்வேறு நிலப் பரப்புப் பகுதிகளையும் கைப்பற்றி வைத்திருந்த படையினரிடம் சிக்கிற்று. உண்மையில் கூறப்போனால், அந்தப் பொறுப்பானது பாரிஸ் மாநகரில் பெருங் கூட்டமாகக் கூடியிருந்த அரசியல் வாதிகள், தூதர்கள், அரசியல் வல்லுநர்கள், பத்திரிகை நிருபர் கள், மற்றும் அமைதி ஏற்படுத்துவதற்காக அங்கே திரண் டிருந்த தனிப்பட்ட ஒவ்வொரு கூட்டத்தின் பிரதிநிதிகள் ஆகிய இவர்களிடம்தான் சிக்கிக் கிடந்தது. 'மத்திய கிழக்கு' என்பது மொத்தத்தில் செப்பனிடப்பட வேண்டியிருந்த ஏற் பாட்டின் ஒரு சிறு பகுதியேயாகும். எல்லாவற்றையும்விட, ஜெர்மனியுடன் தொடர்பு கொண்டிருந்த பிரச்சினைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பிரான்ஸ், ஜெர்மனி, மற்றும் மத்திய ஐரோப்பா ஆகியவற்றைப்பற்றிய முடிவுகளே, மத்திய கிழக்குப் பகுதியைப்பற்றிய முடிவுகளுக்கேற்றபடி அமைத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

மத்திய கிழக்கைப்பற்றி ஏற்பட்ட தலையார்ந்த மோதல், நேச நாடுகளுக்கிடையே பரிமாறிக் கொள்ளப்பெற்ற அந்தரங்க ஒப்பந்தங்கள் மற்றும் கடிதங்கள் ஆகியவற்றிலும், குறிப்பாகப் போரின்போது நேச நாட்டுத் தலைவர்கள் வெளியிட்ட அறிக்கை கள் முதலியவற்றிலும் காணப்பட்ட வேறுபாடுகளால் தோன்றிய

தாகும். லண்டன் ஒப்பந்தம் (1915), சைக்கஸ்-பிக்கோ ஒப்பந்தம், பால்ஃபர் அறிக்கை, ஹுசைன் - மக்மோஹன் பேச்சுவார்த்தைகள், பதினான்கு அம்சங்கள் திட்டம், பாக்தாத் ஜெரூசலம் ஆகியவற்றில் வெளியான விடுதலைக்கான அறிக்கைகள், 'மக்களாட்சிக் கோட்பாட்டிற்காக உலகத்தைப் பத்திரப்படுத்துதல்' என்று எழுப்பப்பட்ட சுலோகம் ஆகியவற்றிலெல்லாம் முரண்பாடுகளே வெகு எளிதில் நாம் காணலாம். ஆகவே, பாரிஸ் மாநகரில் கூடிய மாநாட்டில் பங்குபற்றிய தலைவர்கள் உயர் நம்பிக்கையுடன் சென்றனர்.

மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்ற லாயிட் ஜார்ஜ், மத்திய கிழக்குப் பகுதியில் இருந்த மக்களுடன் பிரிட்டன் நட்புறவை நாடுவதாகவும், எனவே அவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தாம் பாடுபடப் போவதாகவும் அவர்களுடைய ஆசைகளை நிறைவேற்றி வைக்கப் போவதாகவும் கூறிக்கொண்டார். ஆனால், உண்மையில் அவருடைய ஒரே நோக்கம் பிரிட்டனின் நலனைப் பாதுகாத்து, அவற்றை மேலும் விருத்தியடையச் செய்வது என்பதாகும். எகிப்து, மெஸபொட்டேமியா, அரேபியா, பலஸ்தீனம், ஈரான், சைப்ரஸ் மற்றும் காக்கஸஸ் பகுதிகள் எல்லாம் பிரிட்டனுக்கே சேரவேண்டும் என்று கருதப்பட்டது. எந்த நிலையிலும் இஸ்தம்பூலையும் நீர்ச்சந்தியையும் பிரான்சினிடம் ஒப்படைக்கக் கூடாது என்பது லாயிட் ஜார்ஜின் அந்தரங்க எண்ணமாகும். மத்திய கிழக்கில் சிரியா மற்றும் அனட்டோலியாவின் ஒரு சில பகுதிகள் ஆகியவற்றைத் தவிர, மற்றெல்லாப் பகுதிகளும் பிரிட்டிஷ் பேரரசின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை செய்யும் என்றே கருதப்பட்டன. இதற்கு மாறுக, கிளமென்ஸோ (Clemenceau) என்பவர் சிரியா, தெற்கு அனட்டோலியா ஆகியவற்றின் மீது பிரெஞ்சு ஆதிக்கமே நிலைத்திருக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். அவரே நீர்ச்சந்தியின் மீதும் ஆதிக்கம் பெற்றிருக்க விரும்பினர்; துருக்கி சுல்தானைத் தம்பால் ஈர்க்க ஒரு பிரெஞ்சுத் தூதரையும் அவரிடம் விட்டு வைக்க விரும்பினர். ஜனாதிபதி வில்ஸன் தமது பதினான்கு அம்சத் திட்டத்தின்படி அமைதியை நிறுவ உண்மையாகவே பெரும் பாடுபட்டார். நேச நாட்டு அரசுகள் அனைத்தும் தம் அறிக்கைக்கு இணக்கம் தெரிவித்து விட்டதனால், முன்புரியப்பட்ட எல்லாப் பாவங்களும் மறைந்து விட்டன என்று அப்போது அவர் நம்பினர்.

இந்த மூன்று பெருந்தலைவர்களும் முக்கியமான முடிவுகளைச் செய்து கொண்டனர். ஆனால், பலர் மத்திய கிழக்கில் பல்வேறு

தேசிய அல்லது சொந்த நலன்களைக் கொண்டிருந்தனர். அராபியர்களின் சார்பாகவும், தம் தந்தையின் சார்பாகவும், ஹிஜாஸ் (Hijaz) என்ற இராச்சியத்தின் சார்பாகவும் இளவரசர் ஃபைஸல் பாரிஸுக்கு வந்து சேர்ந்தார். அராபியர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்த, தங்களுக்கென்று தனியாக அமைய வேண்டிய நாடு வரையறுக்கப்படும் என்று முன்பு பிரிட்டிஷார் வாக்களித்திருந்த உறுதியை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று ஃபைஸல் எதிர்பார்த்தார். அர்மீனியர்களில் மூன்று பிரிவினர்களும் தங்களுடைய நாட்டைப் பொறுத்தவரையிலும் மூன்று வகைப்பட்ட முரணான கோரிக்கைகளைச் சமர்ப்பித்தனர். ஆகவே, உண்மை நிலையை அறிவதற்காக ஜனாதிபதி வில்ஸன் ஹார்போர்ட் தூதுக்குழுவை அனுப்ப வேண்டிய அவசியம் நேரிட்டு விட்டது. கிரேக்க நாட்டுப் பிரதமரான வெனிஸிலாஸ் (Venezelos) என்பவரோ, பழங் கிரேக்கப் பேரரசை மீண்டும் உயிர்ப்பித்து, மேற்கு ஆசியா மைனர் (சின்ன ஆசியா), இஸ்தம்பூல், மற்றும் நீர்ச்சந்திப் பகுதிகள் அதில் அடங்கியிருக்கக்கூடிய முறையில் அமைத்துத் தருமாறு நேச நாடுகளிடமிருந்து வாக்குறுதிபெறப் பெருத்த முயற்சி செய்தார். இத்தாலியின் பிரதம அமைச்சரான ஒர்லாண்டோ (Orlando) என்பவரோ, டொடெகெனிஸ் தீவுகள், அன்டல்யாவைச் சுற்றியுள்ள தென்மேற்கு ஆசியப் பகுதி, இஸ்மீரும் அதைச் சுற்றியுள்ள இடமும் ஆகியவற்றை யெல்லாம் பெறத் திட்டமிட்டிருந்தார்.

பாங்க் (நிதிமனை) பிரமுகர்கள், எண்ணெய் ஸ்தாபன அதிபர்கள், கடன் கொடுக்கும் லேவாதேவிக்காரர்கள், சமயப் பிரசாரகர்கள், திருச்சபையினர், கப்பல் அதிபர்கள், பல்வேறு மனிதாபிமானம் மிக்கவர்கள் ஆகியவர்களுங்கூடத் தங்களுடைய நலன்களை விருத்தி செய்து கொள்வதற்காகப் பாரிஸ் நகரில் திரண்டனர். பெரும் வரவேற்புகள், மாபெரும் விருந்துகள், மற்றும் நர்த்தன நடனங்கள் ஆகியவற்றுக்கிடையே மத்திய கிழக்கின் விதி நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்தது. துருக்கியர்களைத் தவிர மற்ற யாவரும் அங்கே கூடியிருந்தனர். ஆனாலும், அவர்களுடைய அதிகாரபூர்வமற்ற பிரதிநிதிகள் ஜெனீவா நகரில் இருந்தனர். ஒரு சமயத்தில் மாநாட்டின் தலைமைக் குழுவின் முன்னிலையில் ஓர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்குப் பிரதம அமைச்சரான தாமாத் ஃபரீத் பாஷா என்பவர் அனுமதிக்கப்பட்டார்.

டாக்டர் வெய்ஸ்மன், பிராண்டெய்ஸ் என்ற நீதிபதி, வைஸ், பேராசிரியர் ஃபிரான்க்ஃபர்ட்டர் மற்றும் சொகோலோ

என்பவர்கள் யூதத்தாயக இயக்கத்தின் விஸ்தரிப்பைக் கவனித்துக்கொண்டும், அதன் பரப்பளவை மேலும் பெருக்கிக் கொண்டும், பேச்சு வார்த்தைகளின் மூலமாக பால்ஃபர் அறிக்கையை, மத்திய கிழக்கைப் பொறுத்த வரையிலும், உறுதியாகச் செயல்படுத்துவதில் தீவிரமாக முனைந்திருந்தனர். இந்தத் தீவிர யூதத் தாயக இயக்கத்தினரை யூதச் சமயத்தைச் சார்ந்தவர்களான எட்வின் மான்ட்டேகு (Edwin Montague), கிளாட் ஜீ. மாண்ட்டிஃபோர் (Claude G. Montiefore), ஜேக்கப் ஷிஃப் (Jacob H. Schiff), லூயி மார்ஷல் (Louis Marshall), மேயர் சல்ஸ்பெர்ஜர் (Mayer Sulzberger) ஆகியவர்கள் எதிர்த்தனர். யூதத் தாயக இயக்கமானது யூதர்கள் மேலிய நாடுகளில் படிப்படியாக அங்கங்கே இணைத்துக் கொள்ளப்படுவதற்குப் பெரும் தடையாக இருக்கும் என்று சுல்தானிடம் முன்னாள் அமெரிக்க தூதராகவும், ஜனநாயகக் கட்சியின் (Democratic Party) பொருளாளராகவும் பணியாற்றிய ஹென்றி மார்கந்தவ் (Henry Morgenthau) என்பவர் கருதினார். பலஸ்தீனத்தில் யூதர்களுக்கெனத் தனி நாடு ஒன்று ஏற்பட்டால், இரட்டை நாட்டுரிமைப் பிரச்சினை உருவாகிவிடும் என்றும் அவர் கருதினார். ஆகவே, மற்றும் 299 தலையார்ந்த அமெரிக்க யூதர்களுடன் இவரும் சேர்ந்து, அப்படிப்பட்ட ஒரு நாட்டை உருவாக்கக்கூடாது என்று ஜனாதிபதி வில்ஸனிடம் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்.

இருந்த போதிலும், யூதத் தாயக இயக்கத்தினர் ஒரு சிலர் லாயிட் ஜார்ஜ், பால்ஃபர், மில்னர் பிரபு, ராபர்ட் செசில் பிரபு மற்றும் ஜனாதிபதி வில்ஸன் ஆகியவர்களின் ஆதரவைப் பெற்று விட்டனர். ஆனாலும், சுய நிர்ணயக் கொள்கையானது யூதர் நாடு உருவாவதற்குத் தடையாக இருந்தது போலும்! யூதர்கள் பலஸ்தீனத்து மக்களில் பதினைந்து விழுக்காடுகள்தான் இருந்தனர். மக்கள் தொகையின் கண்ணோட்டத்தில் பார்த்தால், பலஸ்தீனம் ஹுசைன் நாடிய அராபிய நாட்டுடன் இணைய வேண்டி இருக்கும். யூதத் தாயக இயக்கத்தினரின் வாதங்கள் லாயிட் ஜார்ஜின் உள்ளத்தை அவ்வளவாகக் கவரவில்லையென்றாலும், புனித இடங்கள் 'நாத்திக' பிரான்ஸின் கரத்திடைச் சிக்குவதை அவர் தீவிரமாக எதிர்த்தார். மத்திய கிழக்கில் சுயெஸ் கால்வாய், மற்றும் பல பிரிட்டிஷ் உடைமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கப் பலஸ்தீனை ஓர் அரணாக வைத்திருக்க வேண்டும் என்ற கருத்துப் பரவலாகவே ஏற்பட்டிருந்தது. யூதர்களும் தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, பிரிட்டிஷாரின் அக் கருத்தை ஆதரித்த

தோடு, அப்படிப்பட்ட யூத நாடு ஒன்று உருவாகுமாயின், அது நிச்சயமாகப் பிரிட்டிஷ் செல்வாக்குக்கு உட்பட்டே இருக்கும் என்றும் அறிவித்தனர். இறுதியில், யூதத் தாயக இயக்கத்தினரின் கனவுகள் நனவாயின. பால்ஃபர் அறிக்கையிலிருந்து ஒரு பத்தி எடுக்கப்பட்டு, அமைதி உடன்படிக்கைகளில் இணைத்துக் கொள்ளப்பட்டது. அதனைச் சர்வதேச சங்கமும் (League of Nations) ஏற்றுக்கொண்டது.

மத்திய கிழக்கைப்பற்றிப் பாராட்டப்பட்ட உரிமைகளிலிருந்தும், மாற்று உரிமைகளிலிருந்தும் கிங்-கிரேன் குழு (King-Crane Commission) என்னும் குழு ஒன்று உருவாயிற்று. அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு மற்றும் இத்தாலிய பிரதிநிதிகளைக் கொண்ட விசாரணைக் குழு ஒன்று சிரியா, பலஸ்தீனம், மெஸபொட்டேமியா, அர்மீனியா ஆகியவற்றைப் பார்வையிடச் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி வில்ஸன் வற்புறுத்தினார். சுயநிர்ணய உரிமையைச் செயல்படுத்தத் தேவையான விவரங்களைப் பெறுவதே அதன் நோக்கமாகும். முதலில் பிரெஞ்சு, பிரிட்டிஷ், இத்தாலிய அரசுகள் அதற்கு இணங்கின; ஆனால், அவை பின்னளில் ஒத்துழைக்க மறுத்துவிட்டன. ஆகவே, ஒபர்லின் கல்லூரியின் (Oberlin College) தலைவரான ஹென்றி சி. கிங் என்பவரும், வர்த்தகப் பிரமுகரான சார்ல்ஸ் ஆர். கிரேன் என்பவரும் அமெரிக்கப்பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1919-ல் அவ்விடங்களைப் பார்வையிடச் சென்றனர். அவர்கள் பலஸ்தீனம், சிரியா, மற்றும் துருக்கி ஆகியவற்றுக்குச் சென்று, விண்ணப்பங்களைப் பெற்றுப் பரிசீலனை செய்தனர்; உள்ளூர் மக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்தனர். மேலிய மக்களாட்சிக் கோட்பாட்டில் நம்பிக்கை வைத்தவர்களாக இருந்த அராபியர்கள் இந்தக் குழுவினை மனமார வரவேற்றனர். 1919 இறுதியில் கிங்-கிரேன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அது இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையே ஏற்கெனவே ஏற்பட்டிருந்த உடன்பாடுகளுக்கு மாறுக இருந்ததனால், அது வெளியிடப்படவில்லை. வில்ஸன் நோய்வாய்ப் பட்டிருந்ததனால், அப்பிரச்சினையை அவரால் தொடர்ந்து வற்புறுத்த முடியவில்லை.

மத்திய கிழக்கைப்பற்றி நிரந்தரமான முடிவுகள் எதையும் 1919-ல் பாரிஸ் மாநகரில் எடுக்க முடியவில்லை. அந்தப் பகுதியைப்பற்றிய அமைதி ஒப்பந்தம் ஏற்படுவது என்பது உறுதியாக இருக்கவில்லை. வில்ஸன் கடும் நோய்வாய்ப் பட்டிருந்தார். எந்த ஆட்சிப் பகுதியின் பொறுப்பையும் தன் தலைமீது போட்டுக் கொள்வதற்கு அமெரிக்க செனெட்டும் மக்களும் விரும்பவில்லை

ரஷியா ஒதுங்கி நின்றுவிட்டது. ஜெர்மனியும் ஆஸ்ட்ரியாவும் தரை மட்டமாகி விட்டிருந்தன. இத்தாலி உள்நாட்டுச் சச்சரவுகளால் பிளவு பட்டிருந்தது. அதனுல் அதற்குப் பெரும் ஏமாற்றமே ஏற்பட்டுவிட்டது. ஆகவே, மத்திய கிழக்கைப் பற்றியதான பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பு இங்கிலாந்தின் மீதும் பிரான்ஸின்மீதுமே வந்து விடிந்தது. அதற்குள்ளாக, குடியேறியிருந்த படைகள் மத்திய கிழக்கை ஆட்சி புரிந்து வந்தன. மக்களோ அமைதி வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருந்தனர்.

எகிப்து, பலஸ்தீனம், மற்றும் லெபனன் ஆகியவை ஆலன்பீயின் தலைமையில் இருந்த பிரிட்டிஷ் படைகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தன. ஃபைஸலும் அராபியர்களும் ஹிஜாஸின் மீதும், டமாஸ்கஸ் உட்பட அராபியாவின் உட்பகுதிகளின்மீதும் ஆதிக்கம் பெற்றிருந்தனர். மீண்டும் பிரிட்டன் மெஸபொட்டேமியாவின்மீது ஆதிக்கம் பெற்றுவிட்டது. அதன் படை மோஸலிலிருந்து பாரசீக வளைகுடா வரையிலும் பரவலாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பிரிட்டனின் அதிகாரபூர்வமான கொள்கை என்னவென்றால், கைப்பற்றப்பட்ட பகுதிகளில் எந்த அளவைத் தன்வசப்படுத்திக் கட்டுப்படுத்த முடியுமோ அவ்வளவையும் வைத்துக்கொண்டு, மத்திய கிழக்கை பிரிட்டிஷ் பேரரசின் ஓர் உறுதியான உறுப்பாக அமைத்துக்கொண்டுவிட வேண்டும் என்பதாகும்.

ஆனல், எப்படிப்பட்ட கொள்கையை மேற்கொள்வது என்பது ஆட்சிப் பகுதிகளைக் கைப்பற்றி வைத்திருந்த ராணுவப் படைகளுடைய அதிகாரிகளின் அல்லது சாதாரணப் படைவீரர்களின் பிரச்சினையன்று. 1919-ல் இருந்த பிரிட்டிஷ் சேனையானது போரின்பொழுது உருவாக்கப்பட்ட சிவிலியன் படையேயாகும். ஆகவே, அப் படையிலிருந்த பெரும்பாலோரின் நோக்கம் அந்தச் சேனையை விரைவில் கலைத்துவிடவேண்டும் என்பதாகும். மத்திய கிழக்கிலிருந்த அதிகாரிகள் தங்களுடைய பதவிகளிலிருந்து விலகிக் கொள்ளலாயினர். புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தட்பவெப்ப நிலையையோ அரசியல் சூழ்நிலையையோ சமாளிக்க வல்லவர்களாக விளங்கவில்லை. தவிரவும், ஆட்சிப் பகுதிகளில் தங்கியிருந்த அதிகாரிகளால் உறுதியான எவ்விதத் திட்டத்தின்படியும் நடந்துகொள்ள இயலவில்லை யாதலால், எங்கும் குழப்பம் சூழ்ந்துகொண்டுவிட்டது.

1919ஆம் ஆண்டின் இறுதி மாதங்களில் பைரூத்திலும் லெபனான்வட்டாரக் கடற்கரையோரங்களிலும் இருந்த பிரிட்டிஷ் படைகள் மாறி, அவ்விடங்களுக்கு பிரெஞ்சுப் படைகள் வந்து சேர்ந்தன. பாரிஸ் நகரில் செய்துகொண்ட ஒப்பந்தங்களின்படி, கௌராண்ட் (Gourand) என்ற படைத்தலைவர் சிரியாவில் நேச நாட்டு நிர்வாகியானார். இந்த நடவடிக்கைகள், மத்திய கிழக்குக்கான திட்டம் வெறுக்கப்பட்ட சைக்கஸ்-பிக்கோ ஒப்பந்தத்தின்படி அமைந்திருக்கப் போகின்றது என்பதை அராபியர்களுக்கு முற்கூட்டியே அறிவித்தன. ஆகவே, ஜெரூசலத்திலும் ஜாஃபாவிலும் யூதர்களுக்கெதிராகக் கலகங்கள் மூண்டெழுந்தன. ஃபைஸல் சிரியாவின் அரசராகவும், அப்துல்லா என்பவர் இராக்கின் அரசராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டமையும், பாக்தாதில் சலசலப்பு மேலும் அதிகரித்தமையும், எகிப்தில் கிளர்ச்சி எழுந்தமையும், கெய்ரோவிற்கு மில்னர் பிரபுக் குழு சென்றமையும் ஆகிய இவையெல்லாம் மத்திய கிழக்குப் பகுதி பற்றிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வது மிகவும் அவசியம் என்பதைப் பிரிட்டனுக்கு உணர்த்தின.

மோஸலில் கிடைக்கும் எண்ணெயை எவ்விதம் பகிர்ந்து கொள்வது என்ற பிரச்சினை பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கு மிடையே எழுந்துவிட்ட பிரச்சினைகளுள் மிக முக்கியமானதாகும். 75 விழுக்காடு பிரிட்டிஷ், 25 விழுக்காடு ஜெர்மன் முதலீட்டினைக் கொண்டிருந்த 'துருக்கிய பெட்ரோலியம் கம்பெனி' என்னும் நிறுவனம், 1914-ல் போர் மூளு முன்னரே, மோஸல் எண்ணெயைத் தானே அடைவது என்னும் உரிமையைப் பெற்றுவிட்டிருந்தது. ஆனால், சைக்கஸ் - பிக்கோ ஒப்பந்தம் மோஸலை பிரான்ஸினிடம் ஒப்படைத்தது. ஆகவே, 1918, டிஸம்பர் மாதத்திலேயே மோஸலை மெஸபொட்டேமியாவுடன் இணைத்துவிடுமாறு பிரிட்டன் பிரான்ஸை வற்புறுத்தத் தொடங்கிற்று. எண்ணெய்க்கான பல்வேறு திட்டங்கள் விவாதிக்கப்பட்டன. ஆனால், பேச்சு வார்த்தை நடத்துவோர் இத்தாலியில் சாம் ரீமோ என்ற இடத்தை அடையும் வரையிலும் எந்தத் திட்டத்தையும் ஏற்றுக் கொள்ள இணங்கவில்லை. அங்கே 1920, ஏப்ரல் 24ஆம் நாள் அன்று, பேச்சு வார்த்தை நடத்துவோர் அப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வந்து, ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர்.

சாம் ரீமோ ஒப்பந்தம் (Sam Remo Agreement) உத்மானியப் பேரரசுடன் அமைதி உடன்பாடு ஏற்படுவதற்கு வழி வகுத்துக் கொடுத்தது. 1920, ஆகஸ்ட் 10ஆம் நாள் அன்று செவ்ரே

ஒப்பந்தம் (Treaty of Sevres) செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, சிரியா, மெஸபொட்டேமியா, அராபியா, எகிப்து ஆகிய நாடுகள் தம்முடைய பேரரசிலிருந்து பிரிந்து செல்வதற்கு சுல்தான் அங்கீகாரம் அளித்தார். எகிப்தின்மீது பிரிட்டிஷ் பாதுகாப்பு இருப்பது அனுமதிக்கப்பட்டது. கட்டளை உரிமை யளிக்கப்பட்ட ஏதாவது ஒரு வல்லரசின் பாதுகாப்பின் கீழ் சிரியாவும் மெஸபொட்டேமியாவும் தாற்காலிகமாகச் சுதந்தரம் அடைந்திருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. பிரிட்டனுடன் நட்புறவு கொண்டிருந்த அரபு நாட்டு அரசர்களின் சர்வ ஆட்சி உரிமையும் (Sovereignty) அவர்களுடைய நாடுகளின் சுதந்தரமும் (Independence) ஏற்றுக்கொள்ளப் பட்டன. ஏற்கெனவே பிரான்ஸுக்கு அளிக்கப்பட்டிருந்த சிரியாவில் அலெக்ஸாண்ட்ரெட்டா, அலெப்போ, திமஷ்க் என்னும் டமாஸ்கஸ், பைரூத் ஆகிய நகரங்களும் அடங்கி யிருந்தன. யோர்தான் நதியின் இரு புறங்களிலும் அமைந்திருந்ததும், அக்கபா வளைகுடா வரையிலும் பரவி இருந்ததுமான நிலங்கள் அடங்கிய பலஸ்தீனம் பிரிட்டனுக்குக் கட்டளை உரிமையாக வழங்கப்பட்டது. மேலும் பல ஒப்பந்தங்களும் செய்து கொள்ளப்பட்டன. 'துருக்கிய பெட்ரோலியம் கம்பெனி'யில் ஜெர்மனிக்கு இருந்த பங்குகள் (Shares) பிரான்ஸுக்கு வழங்கப்பட்டன. சிரியாவுக்குள் எண்ணெய்க் குழாய் வரிசைகளை இணைப்பதற்கான உரிமை பிரிட்டனுக்கு அளிக்கப்பட்டது. ஃபைஸலையும் அவரது சிரிய - அராபிய இராச்சியத்தையும் வன்முறையுடன் நடத்துவதற்கும், தேவை ஏற்பட்டால் அடக்குவதற்கும் பிரான்ஸுக்கு அதிகாரம் வழங்கப் பெற்றது.

செவ்ரே ஒப்பந்தம் தீட்டப்படுவதற்கு முன்பே அது புறக்கணிக்கப்பட்டது. உத்மானியப் பேரரசின் துருக்கியப் பகுதிகளில் நிலவிய பல்வேறு சூழ்நிலைகளின் விளைவாக அது ஏற்றுக் கொள்ளப்படவே யில்லை. ஆகவே, கொள்கை யளவில் மத்திய கிழக்கில் இறுதி ஏற்பாடுகள் உருவாவதற்கு லாசான்னே ஒப்பந்தம் (1923) (Treaty of Lausanne) வரையிலும் காத்திருக்கவேண்டியிருந்தது. ஆயினும், அந்த இறுதி ஒப்பந்தத்தினால் நிர்ணயிக்கப்பட்ட உத்மானியப் பேரரசின் துருக்கியருடையதல்லாத பகுதிகளின் எல்லைகள், பிரிவுகள் ஆகியவை சாம் ரீமோ, செவ்ரே ஒப்பந்தங்களினால் நிர்ணயிக்கப்பட்டமைக்குப் பெருமளவும் வேறுபட்டிருக்கவில்லை. சாம் ரீமோ ஒப்பந்தத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தாற்காலிகமான கட்டளை உரிமைகள் அடுத்த இருபதாண்டு காலத்திற்கு அராபிய அரசியல், பொருளாதார வாழ்க்கை எவ்விதமாக அமைந்திருக்க வேண்டும் என்பதை

எடுத்துக் காட்டின. பிரிட்டனும் பிரான்ஸும் தத்தமக்குரிய பகுதிகளில் உடனடியான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டன. மேலும் ஓர் ஏற்பாடு உண்மையில் இக்கால ஒப்பந்தங்களைச் சார்ந்ததாகும். குடியேற்ற நாடுகள் துறையின் அமைச்சராக (Secretary of State for Colonies) இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill) 1921 மார்ச்சில் கெய்ரோவில் பிரிட்டிஷ் மத்திய கிழக்கு நிபுணர்களுடனும், குறிப்பாக முறையே பலஸ்தீனம், இராக் ஆகியவற்றின் உயர் ஆணையாளர்களாக இருந்த சர் ஹெர்பட் சாமுவேல், சர் பெர்சி காக்ஸ் ஆகியவர்களுடனும் நீண்ட விவாதங்களை நடத்தினர். அவர்கள் திட்டம் ஒன்றின்படி, திமஷ்கிலிருந்து[1] ஏற்கெனவே ஓட்டப்பட்டிருந்த ஃபைஸல் இராக்கின் சிம்மாசனத்தின்மீது அமர்த்தப்பட்டார். அதே திட்டம் யோர்தானின் கிழக்குப் புறத்துப் பலஸ்தீனத்தின் ஒரு பகுதியை இளவரசர் அப்துல்லாவுக்காக 'ட்ரான்ஸ் ஜோர்டான்' என்னும் ஒரு நாடாக உருவாக்கியது. முதலில் அவருக்கு இராக்கைக்[2] கொடுப்பதாக வாக்குறுதி யளிக்கப்பட்டிருந்தது. சிரியாவின் வழியாக எண்ணெயைப் பெறுவதற்கு பிரெஞ்சுக் காரருக்குப் பிரிட்டிஷார் கடமைப்பட்டிருக்க விரும்பவில்லையாதலால், சிரிய பாலைவனத்தின் ஒரு பகுதி ட்ரான்ஸ் ஜோர்டானுடன் சேர்க்கப்படவேண்டும் என்று உரிமை பாராட்டப்பட்டது. இதன் விளைவாக, பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு உட்பட்ட மோஸலிலிருந்து மத்தியதரைக் கடல் வரையிலும் நீண்ட சாலை ஒன்று உருவாயிற்று.

உத்மானியப் பேரரசின் துருக்கிப் பகுதிகளில் நேசநாடுகளின் விவகாரங்கள் சரிவர நடைபெறவில்லை. 1918, நவம்பர் 13ஆம் நாள் அன்று நேசநாடுகளின் கூட்டுக் கப்பற்படை ஒன்று பாஸ்பரஸைக் கடந்து சென்று, கோல்டன் ஹார்னில் நங்கூரமிட்டது. பத்து நாட்களுக்குப் பிறகு பிரெஞ்சுப்படைத் தலைவர் ஒருவரின் கீழ் நேசப்படை ஒன்று இஸ்தம்பூலினுள்ளே நுழைந்தது. அதற்குப் பிறகு பிரெஞ்சு, பிரிட்டிஷ், இத்தாலிய, அமெரிக்க உயர் ஆணையர்கள் நகரில் நிறுவப்பட்டிருந்த நான்கு மண்டலங்களின் பொறுப்பினை ஏற்பதற்காக அங்கு விரைந்தனர். மேலைநாட்டு வாணிபர்கள் பலர் இஸ்தம்பூல் வர்த்தகத்தில் பெரும் அக்கறை காண்பித்தனர். துருக்கியில் பலவகைப்பட்ட பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டமையால் வாணிபம் பெரு

[1] திமஷ்க் என்னும் பெயரே ஐரோப்பிய மொழிகளில் Damascus என்று திரிபு அடைந்து விட்டது.

[2] இராக் என்பது மெஸபொட்டேமியாவைக் குறிக்கும். இதை ஈராக் என்று உச்சரிக்கக்கூடாது.

கிற்று. அங்குக் குடியிருந்த கிரேக்கர்கள், அமெரிக்கர்கள் ஆகியவர்கள் நேச நாட்டினர் தங்களை விடுவிப்பதற்காக வந்துள்ளனர் என்று கருதி, அவர்களை மனமார வரவேற்றனர். அன்னிய நாடுகளிலிருந்து வந்து அங்குக் குடியிருந்தவர்கள், போர் முடிவடைந்ததனால் தங்களுடைய நாடுகளிலிருந்து வர்த்தகர்கள் பலர் வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதை அறிந்து மகிழ்ச்சியுற்றனர். நிலைமை 1914-ல் (போருக்கு முன்னால்) இருந்ததைப் போல் ஆகிவிட்டிருந்தது. 'காபிடுலேஷன்ஸ்' என்ற கொள்கை உயிர்ப்பிக்கப்பட்டது. உத்மானிய பொதுக் கடன் நிர்வாக அமைப்பு மீண்டும் பணியாற்றத் தொடங்கிற்று. மேலும் மேலும் சலுகைகளைப் பெறுவதற்கான வேட்டைகள் நடைபெற்ற வண்ணம் இருந்தன.

வெற்றி பலருக்கு இனிப்பாக இருந்தது. இருப்பினும், எண்ணற்ற அனுதைகளும், அகதிகளும், உடல் ஊனமுற்றோரும், போரினால் பல வகைகளிலும் சேத மடைந்தவர்களும் இருந்தனர். பொதுவாகவே துருக்கியர்கள் போரை விரும்பவில்லையாதலால், போர் முடிவடைந்தவுடன் அவர்களே முதலில் நிம்மதி யடைந்தனர். ஆனால், படையினர் வந்து குடியேறக் கூடிய அளவுக்கு வழிவகுத்த நேசநாடுகளின் அநீதியைக் கண்டு துருக்கியர் மனம் வருந்தினர். ஆரும் முகம்மது என்னும் சுல்தானும், அவருடைய அமைச்சர்களும் நேச நாடுகளின் கைப்பொம்மைகள் என்பது விரைவில் தெளிவாகிவிட்டது. நேச நாடுகள் தமக்கிடையே மோதிக் கொள்ளாமல் இருந்தால், அனட்டோலியா துண்டிக்கப்படும் என்பதும் தெளிவாயிற்று.

மோஸலிலிருந்து வடபுறம்நோக்கி பிரிட்டன் முன்னேறியது. பிரான்ஸ் சிலிசியா மீது உரிமை பாராட்டியது. தனக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இத்தாலி தன் படைகளை அன்டல்யாவுக்கு அனுப்பி வைத்தது. வெனிஸிலாஸுக்குப் பாரிஸ் நகரில் கூடிய வல்லரசுகள் ஏற்கெனவே வழங்கியிருந்த உடைமைகளைக் கைப்பற்றுவதற்காக இஸ்மீர்[1] என்ற இடத்தில் கிரேக்கப் படைகள் 'நேச நாடுகளின் படைகள்' என்ற பெயருடன் வந்து இறங்கின. கிரேக்கர்கள் அப் பகுதியைக் கைப்பற்றிக் கொள்வதற்காக வெனிஸிலாஸ் பிரிட்டனின், பிரான்ஸின் ஆதரவையும், வில்ஸனின் ஆதரவையும் பெற்று, 1919, மே 15ஆம் நாள் அதைக் கைப்பற்றத் தொடங்கினர். இது உண்மையில் அவர்

[1] ஸ்மிர்னு என்னும் ஊரே இஸ்மீர் என்று அழைக்கப்படுகிறது.

இழைத்த பெருந் தவருகும். துருக்கியர்கள் எதிர்த்தார்கள் என்றாலும், கிரேக்கர்கள் இழைத்த கொடுமைகள் விவரிக்க முடியாத பயங்கர மிக்கனவாக இருந்தன. ஆகவே, 'ஆசியா மைனரில்' துருக்கியர்கள் கிரேக்கரின் ஆட்சியை ஏற்றுக் கொள்வது என்பது இயலாததாகி விட்டது.

இஸ்மீரில் கிரேக்கர்கள் வந்து சேர்ந்ததற்கு மறுநாள், படைகளைக் கலைப்பதற்கென்றும், அனட்டோலியாவில் சட்டம் அமைதி ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்கென்றும் நேச நாடுகளின் உயர் ஆணையாளர்களாலும் சுல்தானாலும் முஸ்தஃபா கமால் பாஷா (Mustafa Kamal Pasha) என்பவர் மூன்றாம் படையின் தலைவராக நியமிக்கப்பட்டார். அந்த உத்தரவுடன் அவர் கருங்கடலின் கரையிலிருந்த ஷம்சுன் (Samsun) என்ற இடத்திற்குக் கப்பற்படைகளைத் திரட்டிக் கொண்டு சென்றார். கோடைக் காலம் முடிவதற்குள்ளாக அவர் அப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். எர்ஜீரம் (Erzerum), சிவாஸ் (Sivas) என்னும் இடங்களில் அவர் புரட்சியுணர்வுடன் தேசிய மாநாடுகளைக் கூட்டி, ஐரோப்பாவிலும் அனட்டோலியாவிலும் துருக்கியின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சங்கத்தில் சேருமாறு தேசிய பற்றுடைய எல்லாத் துருக்கியர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

இஸ்மீரில் கிரேக்கர்கள் வந்து இறங்கியதன் விளைவாக இஸ்தம்பூலின் வீதிகளில் கிளர்ச்சிகள் நடைபெற்றன. இதனால் துருக்கியர்களுக்கு நேசநாடுகளின்மீது இருந்த வெறுப்பு மேலும் அதிகரித்தது. அக்டோபரில் ஃபரீத் பாஷாவின் அரசு பதவி நீக்கம் செய்யப்பட்டது. அலீ ரிஸா பாஷா என்பவரின் தலைமையில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. அவர் கமால் பாஷாவுடனும் தேசியவாதிகளுடனும் சமரசம் ஏற்படுத்திக் கொண்டு விடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இஸ்தம்பூலில் தேசியவாதிகளின் எண்ணிக்கை அதிகரித்து விட்டதுடன், அங்கிருந்த உத்மானிய பாராளுமன்றமும் அவ் வியக்கத்தை ஆதரித்தது. 1920, ஜனவரியில் அவர்கள் ஆறு அம்சத் திட்டம் ஒன்றைத் தீட்டினர். அத் திட்டத்தின் அடிப்படையில் நிரந்தரமான அமைதி நிலவலாம் என எதிர்பார்க்கப்பட்டது. அது அராபியர்கள் மேற்குத் திரேஸ், கார்ஸின் கீழை மாநிலங்கள், அர்தஹான், பாடும் ஆகியவை சுய நிர்ணயம் பெற்றிருக்க வேண்டும் என்று யோசனை கூறியதுடன், துருக்கிப் பகுதிகளின் முழு அரசியல் பொருளாதார ஒற்றுமை மற்றும் சுதந்தரம், சிறுபான்மையோர் சர்வதேச முறைப்படி பாதுகாக்கப்படல், நீர்ச்சந்தி சர்வதேசமயமாக்கப்படுதல் ஆகிய கோட்பாடுகளையும் வற்புறுத்தியது.

இஸ்தம்பூலில் தேசியவாதிகள் மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றிருந்ததனாலும், பல தலைவர்களுக்கிடையே துரிதமான ஒத்துழைப்பு இருந்ததனாலும், 1920 மார்ச்சில் பிரிட்டிஷார் அக் காரணங்களால் தூண்டப் பெற்று, ஆற்றல் வாய்ந்த ஒரு படையுடன் இஸ்தம்பூலைக் கைப்பற்றத் தீவிரமாக முனைந்தனர். அலீ ரிஸா பதவியிலிருந்து விலக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக சாலி பாஷா என்பவர் நியமிக்கப்பட்டார். அனட்டோலியாவிற்குத் தப்பி ஓடவோ, அல்லது வேறெங்கேனும் மறைந்திருக்கவோ இயலாத தேசியவாதிகளும் முக்கிய துருக்கித் தலைவர்களும் சிறையிலடைக்கப்பட்டு மால்டாவுக்கு அனுப்பப்பட்டனர்.

படைப் பற்றாட்சி என்பது இதுவரையிலும் கொள்கையளவில் மட்டுமே இருந்தது. பிரிட்டிஷார் முழு ஆதிக்கம் பெற்றிருந்ததனால் நாட்டுப்பற்று மிக்க துருக்கியர்கள் கமாலையும் அவருடைய தேசியவாதிகளையும் நாடினர். 1920, ஏப்ரலில் மாபெரும் தேசிய மன்றம் அங்க்காரா என்னும் நகரில் கூடி, ஆறு அம்சத் திட்டத்தை ஏற்றுக் கமாலை அம் மன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. சுல்தான் முகம்மது பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டார். தாமாத் ஃபரீத் பாஷா இரண்டாம் முறையாகப் பிரதம அமைச்சரானார். துருக்கியர்கள் இப்பொழுது தம் உரிமைக்காகவும் சுதந்தரத்திற்காகவும் போராட ஆயத்தமாகி விட்டனர்.

ஆனால், 'ஐரோப்பாவின் நோயாளி' முதல் உலகப் போரின் பொழுது அளிக்கப்பட்ட தண்டனைக்குப் பிறகு செத்தாற்போல் கிடந்த மயக்கத்திலிருந்து மீண்டும் எழுந்து கொள்வார் என்று நேச நாடுகள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. உள் நாட்டுக்குள் புகைந்து கொண்டிருந்த தொல்லைகளும் ஓலங்களும், மரணத்துக்கு முன்பு ஏற்படும் தொல்லைகளும் ஓலங்களுமாகும் என்று அவை கருதி யிருந்தன. சாம் ரீமோ மாநாடு வல்லரசுகளின் செவ்ரே ஒப்பந்தத்திற்கு ஈர்த்தது எவ்வளவிற்கு உண்மையற்றதாகும் என்பதையும் சுட்டிக் காட்டியது. மேற்கு, கிழக்குத் திரேஸ் ஆகியவை கிரீஸுக்கு அளிக்கப்பட்டன. இஸ்மீர் மாவட்டமும் நகரமும் கிரேக்கர்களால் ஐந்து ஆண்டுவரையிலும் நிர்வகிக்கப்படும்; அதற்குப் பிறகு அதனுடைய வருங்காலத்தை நிர்ணயிப்பதற்காகக் குடிமக்களிடையே நேர்முகமான வாக்கெடுப்பு ஒன்று நடைபெறும் என்று முடிவாயிற்று. அர்மீனியா ஒரு சுதந்தர நாடாக நிலைநாட்டப்பட்டது. அதற்கும் துருக்கிக்கும் இடையே உண்டான எல்லைக் கோட்டை ஜனாதிபதி

வில்ஸன் தமது மத்தியஸ்தத்தின் மூலமாக நிர்ணயிப்பார். யூஃப்ரட்டீஸ் நதிக்குக் கிழக்கிலுள்ள குர்தீஸ்தான் (Kurdistan) சுயாட்சி பெற்றது; சர்வதேச சங்கத்தின் இணக்கத்துடன் அதன் சுதந்தரம் மாற்றப்படலாம். இஸ்தம்பூல் சுல்தானின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த போதிலும், நீர்ச்சந்தி சர்வதேசக் குழு ஒன்றின் மூலமே நிர்வகிக்கப்படும். துருக்கி 50,000 வீரர் களைக் கொண்ட படையை வைத்துக் கொள்ளலாம்; ஆனால், அது நேச நாடுகளின் மேற்பார்வையில் இருக்கும். சிறுபான்மை யோரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டன. 'காபிடுலேஷன்ஸ்' கள் அவமானத்துக்குரிய புதிய அம்சங்களுடன் மீண்டும் நிலை நாட்டப்பட்டன. பிரிட்டிஷ், பிரெஞ்சு, இத்தாலிய மேற்பார்வை யில் வைக்கப்பட்ட உத்மானிய பொதுக்கடன் நிர்வாகம், பொருளாதார, நிதி, வரவு செலவுத் திட்டங்களை வகுத்தல் ஆகியவற்றின் மீது அந் நாடுகளின் பரிபூரண ஆதிக்கத்தைப் பெற்றுத் தந்தது. துருக்கியர்களுக்கு மேலும் சகிக்க முடியாத எரிச்சலூட்டியது, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய மூன்று நாடுகளுக்குமிடையே எஞ்சி யிருந்த துருக்கி நாடு பங்கிட்டுக் கொள்ளப்படும் என்ற அறிக்கையாகும். செவ்ரே ஒப்பந்தம் துருக்கியைத் தரைமட்டமாக்கி விட்டது; சுயமரி யாதையுள்ள எந்தத் துருக்கியனும் அதனை வெறுக்காமல் இருக்க முடியாது.

ஆகவே, அங்காராவில் இருந்த கமால் பாஷாவும் தேசிய வாதிகளும் மாறிமாறி, கொள்ளைக்காரர்கள் என்றும், ஒன்றுக் கும் பயன்படாக் கொடிய மக்கள் என்றும், அவர்களுடைய இயக்கம் ஒரு கேலிக்கூத்து என்றும் கருதப்பட்டனர். அவர்கள், இஸ்தம்பூலிலும் நீர்ச்சந்தியிலும் பிரிட்டிஷ்காரர்களையும், இஸ் மீரில் கிரேக்கர்களையும், அன்டல்யாவில் இத்தாலியர்களையும், அதனுவில் பிரெஞ்சுக்காரர்களையும், குர்தீஸ்தானத்தில் பிரிட் டிஷ்காரர்களையும், வடகிழக்கு மாவட்டங்களில் அர்மீனியர்களை யும் எதிர்த்தனர். நல்வசமாக எல்லா எதிரிகளும் ஒன்றுபட்டுக் கமாலை எதிர்க்காததனால், அவரால் அவர்களை ஒவ்வொருவராகச் சமாளிக்க முடிந்தது.

கமால் பாஷாவின் கீர்த்தி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கருக்கொண்டு, அக் காலத்திய இளந் துருக்கியர்களின் பாடல்கள், வாதங்கள் ஆகியவற்றால் ஊட்டி வளர்க்கப் பெற்ற தற்காலத் துருக்கி தேசிய இயக்கமானது 1919 - 1920-ல் பிறந்தது. அது முதன் முதலாக

மத்திய அனட்டோலியாவில் தோன்றியது. அதன் பிறப்பின் போது, பல எதிரிகளை எதிர்த்துப் பல சுதந்தரப் போர்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. அப்போது இராணுவ மற்றும் அரசியல் மருத்துவச்சியா யிருந்த ஒருத்திக்கு முஸ்தஃபா கமால் 1881-ல் சலோனிக்காவில் பிறந்தார். அவர் ஏழை நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர். மொனஸ்டிர், இஸ்தம்பூல் ஆகிய வற்றில் இருந்த இராணுவப் பள்ளிகளில் பயிற்சி பெற்று, கணித நூலிலும், சொற்பொழிவாற்றும் வன்மையிலும் அவர் புகழ் பெற்று விளங்கினர். இராணுவ அதிகாரி என்ற நிலையில் அவர் டமாஸ்கஸிலும் மொனஸ்டிரிலும் பணிபுரிந்து, 1908-ல் நிகழ்ந்த 'இளந் துருக்கியர் புரட்சி'க்கு முன்பும் பின்பும் படையில் ஏற்பட்டுக் கொண்டிருந்த புரட்சிகளில் மிகத் தீவிரமாகக் கலந்து கொண்டிருந்தார். இத்தாலிக்கு எதிராக நடைபெற்ற போரில் அவர் லிபியாவில் இராணுவப் பணிபுரிந்தார். பால்கன் போர் களிலும் அவர் கலந்து கொண்டார். 1914-ல் போர் மூண்டதும் அவர் சோஃபியாவில் இராணுவத் தூதராக நியமிக்கப்பட்டார். ஆனால், விரைவில் அவர் அங்கிருந்து மாற்றம் பெற்று, காலிப் போலிப் படையெடுப்புக்குத் தலைமை வகித்த லிமான் வான் சாண்டெர்ஸ் (Liman Von Sanders) என்பவரின் பெரும் நம் பிக்கைக்குப் பாத்திரரான துருக்கி அதிகாரிகளுள் ஒருவரானார். 1918ஆம் ஆண்டுக்குள்ளாக அவர் ஒவ்வொரு துருக்கிப் போர் முனையிலும் படைகளுக்குத் தலைமை தாங்கிப் போரிட்டிருக்கிறார்.

இந்த மாபெரும் தலைவர் மதிக் கூர்மையையும், முதல் தரமான வேலையைத் தாமே செய்வதற்கும், பிறரைச் செய்ய வைப்பதற்குமான ஓர் அரும் ஆற்றலையும் படைத்திருந்தார். எதைச் செய்தாலும் அதில் எவ்விதச் சிறு குற்றங் குறையும் இருக்கக் கூடாது என்று அவர் வற்புறுத்தினர். இளம் பிராயத்து ஆசிரியர் ஒருவர் அவரைக் 'கமால்' (முழு நிறைவு) என்று பெயரிட்டாராம். அதுவே கடைசிவரையிலும் அவருடைய பெயராகிவிட்டது. ஆடம்பரத்தையும் அர்த்தமற்ற வெற்றுச் சடங்குகளையும் அவர் விரும்பவில்லை. இந்த வகையில் அவர் சிற்சில வேளைகளில் சற்றுக் கொடூரமாகவும் நடந்துகொண்டார். அடக்க முடியாத மன உறுதி, ஆற்றல், கைக்கூலி வாங்காத் தன்மை ஆகியவற்றைப் பெற்ற பற்றுமிக்க தேசியவாதியாக அவர் இருந்தபோதிலும், அவருடைய சொந்த வாழ்க்கையில் அவர் சற்றுக் கூடுதலான சிற்றின்பப் பற்றுள்ளவராகவும், கொடூரத் தன்மையுடையவராகவும் இருந்தார். இதனால் சிற்சில வேளைகளில் அன்னிய பிரமுகர்களுக்குத் தொல்லையும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

1920-ல் அங்க்காராவில் உறுதி வாய்ந்தவராகவும், விட்டுக் கொடுக்காத மனப்பான்மை படைக்கப் பெற்றவராகவுமிருந்த முஸ்தபா கமால் துருக்கி தேசியவாதியாக எழுந்து, முதல் உலகப் போரில் வெற்றி பெற்ற நாடுகளை வீணாக எதிர்த்து நின்றார். ஒரு சிலரே அவருக்கு ஆதரவு அளித்தனர். அவருடைய படை வீரர்களோ போர் புரிவதற்கே சக்தியற்றவர்களாக இருந்தனர். இருந்தபோதிலும், உறுதி வாய்ந்ததும், இதுவரை முறியடிக்கப் படாததுமான துருக்கிய ஒன்பதாம் படை ஒரு சிறந்த வித்தாக இருந்தது. அந்தப் படை காக்கஸஸ் பகுதியில் செயலாற்றி, காஸ்பியன் கடல் நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. அதை வைத்துக்கொண்டு, கமால் அஞ்சா நெஞ்சம் படைத்த ஒரு படையை உருவாக்கினார். 1920-ல் வசந்த காலத்தில் பிரெஞ்சுப் படைகளை அலெப்போவுக்குத் திரும்பும்படி செய்து, மே மாதத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டு, அவர்களைப் போரிலிருந்து வெளியேற்றி விட்டார். பிறகு அர்மீனியர்கள்புறம் திரும்பிய கியாஸிம் காரா பெகிர் பாஷாவின் தலைமையில் இருந்த துருக்கியர்கள் கார்ஸ்ஸைக் கைப்பற்றிக் கொண்டு, போல்ஷ்விக்குகளின் உதவியுடன் அர்மீனியப் படைகளை முறியடித்தார். 1920-ல் கையொப்பமான கும்ரு ஒப்பந்தம் கார்ஸ், அர்தஹான் ஆகியவற்றைக் கைவிட்டுவிட்ட ரஷியாவுக்கு அவற்றுக்குப் பதிலாகப் பாடுமைக் கொடுத்தது. ஒரு சில மாதங்களுக்குப் பிறகு 'மாஸ்கோ ஒப்பந்தம்' இந்தப் புதிய எல்லையை உறுதிப்படுத்தியதோடு, பேரரசவாதிகளுக்கெதிராகத் துருக்கிய தேசியவாதிகளுக்கு ரஷியா உதவி அளிப்பதாகவும் வாக்குறுதியளித்தது. தவிரவும், 1921, மார்ச்சில் கமால் இத்தாலியுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி, இத்தாலியர்கள் ஒரு சில திட்டவட்டமான பொருளாதாரச் சலுகைகளுக்காக அன்டல்யாவையும் இஸ்மீரின் தெற்கிலிருந்த ஸ்காலா நுவா (Scala Nuòva) ஆகியவற்றையும் காலி செய்து விட்டனர். இதன் விளைவாக, 1921ஆம் ஆண்டு கோடைக்காலம் முடிவடைவதற்குள்ளாக, கமால் நீர்ச்சந்தியில் இருந்த பிரிட்டிஷ் படையையும் கிரேக்கப் படையையும் மட்டுமே எதிர்க்க வேண்டி வந்தது. உண்மையில், அப் படைகள் மிகவும் பலம் குன்றியவையாகவே இருந்தன.

பிரிட்டிஷ் வற்புறுத்தலின் காரணமாக, 1920, ஜூன் மாதந் தொட்டு, துருக்கியில் நேச நாடுகளின் நிலையைப் பாதுகாக்கும் பொறுப்பு, கமாலின் தோழர்களிடமிருந்து நாட்டை விடுவிக்கும் பொறுப்பு, துருக்கியர்களின் மீது அமைதியைத் திணிக்கும் பொறுப்பு ஆகியவற்றைக் கிரேக்கர்களிடம் நேச நாடுகள் ஒப்

படைத்திருந்தன. அப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக கிரேக்கப்படைகள் திரேஸ், அனட்டோலியா ஆகியவற்றை நோக்கி முன்னேறின. அடுத்த பதினொன்று மாத காலத்தில் அவர்கள் பெருவாரியான வெற்றியைப் பெற்றனர்; ஐரோப்பாவில் எதிர்னேயையும், ஆசியா மைனரில் அஃப்யான் கராஹிஸார் (Afyon Karahisar), குதாயா (Kutahya), எக்கிஷெர் (Ekisher) மற்றும் இஸ்மீர் ஆகியவற்றையும் அவர்கள் கைப்பற்றி வைத்திருந்தனர். கமால் பெற்ற இரண்டே வெற்றிகள், இரண்டு இனோனுப் (Inonu) போர்களில் பெற்றவையாகும். அங்கே இஸ்மத் என்ற படைத்தலைவர் 1921, ஜனவரியிலும் மார்ச்சிலும் அழியாப் புகழைப் பெற்றார்.

ஆனால், காலம் கமாலுக்குச் சாதகமாக இருந்தது. ஜெர்மனி கொடுக்கவேண்டிய நஷ்ட ஈடுகள், ரைன்லாந்துப் பிரச்சினை ஆகியவற்றைப்பற்றியும், மற்றும் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றியும் பிரிட்டனும் பிரான்ஸும் தமக்குள் சச்சரவிட்டுக் கொண்டிருந்தன. அந்தச் சச்சரவுகள் துருக்கியரின் கொள்கைகளைப்பற்றிப் பிளவுகளை ஏற்படுத்தின. பிரான்க்லின்-பூவில்லான் (Franklin-Bouillon) என்பவர் அங்காராவுக்கு அனுப்பப்பட்டார். அங்கே பிரான்ஸுக்கும் தேசிய அரசாங்கத்துக்குமிடையே அந்தரங்க அமைதிக்கான, நட்புக்கான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. கமால் வெற்றி பெறுவார் என்பதை அறிந்துகொண்டு, பிரான்ஸ் அவரை அதிகார பூர்வமில்லாத வகையில் அங்கீகரித்தது. ஆசியா மைனரின் பொருளாதார மறு அமைப்புக்காகவும் வளர்ச்சிக்காகவும் அவருடைய ஒத்துழைப்பை அது நாடிற்று. பிரெஞ்சு ஆயுதங்கள் உண்மையில் அங்காராவிற்குச் சென்று கொண்டிருந்தன.

கிரீஸின் அரசர் அலெக்ஸாந்தர் தாம் வளர்த்த தமது செல்லப் பிராணியாகிய குரங்கின் கடியால் விஷமுண்டு, 1920, அக்டோபரில் இறந்துவிட்டார். அவருக்குப் பிறகு அவருடைய தந்தை கான்ஸ்டன்ட்டைன் என்பவர் மீண்டும் நாட்டுக்கு வரவழைக்கப்பட்டு மன்னராக உயர்த்தப்பட்டார். பிரிட்டிஷார் கான்ஸ்டன்ட்டைனை நம்பவில்லை. கிரேக்கர்கள் இழைத்தது தவறென்று பிரிட்டிஷார் அறிவுரை வழங்கியதை அவர்கள் ஏற்க மறுத்து விட்டதனால், பிரிட்டிஷார் அனட்டோலியாவில் கிரேக்கர்கள் செய்யவிருந்ததை அவர்களே செய்து கொள்ளட்டுமென்று விட்டுவிட்டனர். கான்ஸ்டன்ட்டைன் அங்காராவைத் தாக்க விரும்பினர். அதே சமயத்தில் கர்ஸன் பிரபு இங்கிலாந்து இந்தச் சிக்கலிலிருந்து வெளிவருவதற்கு உண்டான வழி என்ன

வென்று தேடிக்கொண்டிருந்தார். 1921, பிப்ரவரியில் அங்காராவின் வெளிநாட்டு அமைச்சரான பக்கர் சமி (Bekir Sami) என்பவர் லண்டனில் கூடிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்த அழைப்பினை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். ஆனால், துருக்கியர்களைத் தாக்குமாறு லாயிட் ஜார்ஜ் கிரேக்கர்களைத் தூண்டிக்கொண்டிருந்ததனால், அவர்கள் மாநாட்டைப் புறக்கணித்துவிட்டனர். பிரான்ஸும் இத்தாலியும் கமாலுடன் சமரசம் செய்து கொண்டதற்குப் பிறகும், கர்ஸன் அமைதியை நிலைநிறுத்துவதில் இரண்டாம் தடவையாகத் தோல்வியடைந்ததற்குப் பிறகும் வல்லரசுகள் தாங்கள் நடுநிலைமை வகிப்பதாக அறிவித்தன. ஆகவே, கிரேக்கர்களுக்கு லாயிட் ஜார்ஜ் அரசியல் உதவி மட்டுமே நல்க முடியும் என்று வாக்குறுதியளித்தார். கிரேக்கர்களுக்கு ஆயுத உதவி யளிக்கப்பட வில்லையாயினும், துருக்கித் தேசியவாதிகள் போர்க் கருவிகளை இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ரஷியா ஆகிய நாடுகளிலிருந்து தொடர்ந்து பெற்றே வந்தனர்.

இதற்கிடையில், 1921, செப்டம்பரில் மூன்று வார இடைவெளியில் முடிவடைந்த சகரியாப் (Sakarya) போர் கிரேக்கர்கள் முன்னேறுவதற்கு முட்டுக்கட்டை யிட்டது. துருக்கியர்கள் அதி தீரத்துடனும் விடாப்பிடியாகவும் போரிட்டதனால் வெற்றி அவர்களுக்கே கிட்டிற்று. இருப்பினும், தாம் பெற்ற வெற்றியைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்வதற்குக் கமாலுக்கு ஓராண்டுக்கு மேலாயிற்று. அவர் தம் படைகளை மாற்றி அமைத்துக்கொண்டு, இஸ்மீரைத் தாக்கத் தொடங்கினர். தங்களுடைய பரிதாபகரமான நிலையை அறிந்துகொண்ட கிரேக்கர்கள் இஸ்தம்பூலைத் தாங்கள் ஆக்கிரமிப்புச் செய்தாலன்றி, செவ்ரே ஒப்பந்தத்தைச் செயல்படுத்த முடியாது என்று நேச நாடுகளுக்கு அறிவித்தனர். இந்த நிபந்தனை பிரிட்டிஷாருக்கு வெறுப்பூட்டுவதாக இருந்தது. அவர்கள் இஸ்தம்பூலைப் பேரரசுடன் இணைத்துக்கொள்ள விரும்பினர்.

1922, ஆகஸ்ட் 26ஆம் நாள் அன்று சகரியாவில் இருந்த படைகளைப் பிளந்துகொண்டு துருக்கியர் முன்னேறினர். ஆகஸ்ட் 30ஆம் நாள் நடைபெற்ற தும்லுப்பினர் போருக்குப் (Dumlupinar Battle) பிறகு கிரேக்கர்களின் படை பொதுவாக ஓட்டம் பிடிக்கத் தொடங்கிற்று; செப்டம்பர் 2ஆம் நாள் அன்று தளபதி டிரிகௌபிஸ்ஸும் (Tricoupis) அவருடைய மற்ற அதிகாரிகளும் சிறையிலடைக்கப்பட்டனர். முஸ்தஃபா கமால் செப்டம்பர் 11ஆம் நாள் அன்று இஸ்மீருக்குள் நுழைந்தார்.

செப்டம்பர் 19ஆம் நாளுக்குள்ளாக அனட்டோலியாவிலிருந்து எல்லா கிரேக்கப் படைகளும் வெளியேற்றப்பட்டன. கிரீஸுடன் நடந்த போரில் வெற்றி ஏற்பட்டது. ஆனாலும், மனக்கசப்புத் தொடர்ந்திருந்தது. பின்வாங்கிக் கொண்டிருந்த கிரேக்கப் படை வழியில் பெருஞ் சேதத்தை விளைவித்தது; எவ்விதப் பாதுகாப்புமில்லாமல் இருந்த துருக்கிக் கிராமவாசிகளைப் பல வகைகளிலும் கொடுமைப் படுத்திற்று. இஸ்மீர் கைப்பற்றப்பட்ட தற்குப் பிறகு அங்கே ஏற்பட்ட தீ விபத்து அந் நகரில் பாதியை நாசமாக்கிவிட்டது. அத் தீயை எவர் மூட்டினர் என்பதை நிர்ணயிக்க முடியவில்லை. ஆனால், அதனால் ஏற்பட்ட சேதம் சொல்லொணாததாக இருந்தது.

தேசியவாதிகள் இஸ்மீரிலிருந்து நீர்ச்சந்தி நோக்கி முன்னேறினர். டார்டனெல்ஸிலிருந்த இத்தாலிய, பிரெஞ்சுப் படைகள் ஐரோப்பிய பகுதிக்குக் கடந்துசென்றன. படைகளை அனுப்புமாறு லாயிட் ஜார்ஜ் டொமினியன் அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஆனால், அதற்குச் செவி தாழ்த்துவோர் எவருமிலர். மேற்கொண்டும் உதவிக்குப் படைகள் வரவில்லையாயின், தம்முடைய நிலை இக்கட்டானதாகிவிடும் என்பதை உணர்ந்த ஹாரிங்டன் என்ற படைத்தலைவர் (General Harrington) நேச நாடுகளுக்கும், பெரும் தேசிய மன்றத்து அரசுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். அவ் வொப்பந்தம் 1922, அக்டோபர் 11ஆம் நாள் அன்று முதன்யாவில் (Mudanya) கையொப்பமாயிற்று. எதிர்னே உட்பட, கிழக்குத் திரேஸ் துருக்கியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது; அமைதி ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக மாநாடு ஒன்று கூட்டுவதற்கான திட்டமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கமால் வெற்றி பெற்றுவிட்டார். துருக்கியை அடைவதற்காக உலகப் போருக்குப் பிறகு பிரிட்டன் கையாண்ட கொள்கை குலைந்தது. அத்துடன் லாயிட் ஜார்ஜும் குலைந்துவிட்டார்.

சுல்தான் பதவி ஒழிப்பு

நேச நாடுகளால் துருக்கியின்மீது திணிக்கப்பட்ட செவ்ரே உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டதால், சுல்தான் முகம்மதுவின் மதிப்புப் பெருமளவும் குறைந்தது. இளந் துருக்கியத் தலைவர்கள் அவரைத் 'துரோகி' என்றழைக்கத் தொடங்கினர். இவ் வுடன்படிக்கையின்படி, துருக்கி ஐரோப்பாவிலிருந்த

தனது பகுதிகளை இழந்தது. ஆசியாவிலும் துருக்கியின் ஆதிக்கம் பெருமளவுக்குக் குறைக்கப்பட்டது. மேலும், துருக்கியின் மீது ஐரோப்பிய அரசுகளின் ஆதிக்கம் வளரத் தொடங்கிற்று. இதனை மிக நன்கு பயன் படுத்திக்கொண்ட தேசிய வீரர்கள் முஸ்தஃபா கமாலின் தலைமையில், அங்காராவில் ஒரு குடியரசை நிறுவினர். இவ் விரு சக்திகளுக்குமிடையே, அதாவது இஸ்தம்பூலிலிருந்த சுல்தானின் அரசு, அங்காராவிலிருந்த தேசிய அரசுக்கிடையே நாளடைவில் பெரும் போட்டி ஏற்படத் தொடங்கிற்று. முஸ்தபா கமாலின் தலைமையின்கீழ்த் தேசியவாதிகள் ஐரோப்பிய வல்லரசுகளைத் துணிவுடன் எதிர்க்கத் தொடங்கினர்; நேச நாடுகளின் கைப்பாவையாக இயங்கிவந்த சுல்தானின் ஆட்சியை ஒழிக்கவும் திட்டமிட்டனர். விரைவிலேயே பிரெஞ்சுக்காரரும், இத்தாலியரும், கிரேக்கரும் தேசிய வாதிகளால் தோற்கடிக்கப்பட்டுத் துருக்கியிலிருந்து வெளியேற்றப் பட்டனர். எஞ்சியிருந்த பிரிட்டிஷாரும் துருக்கியுடன் சமாதானம் செய்துகொள்ள முன்வந்தனர். முதன்யாப் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அது தேசிய வாதிகளுக்குப் பெரும் வெற்றியாக அமைந்தது. சுல்தானின் புகழ் மேலும் இழிந்து மங்கத் தொடங்கிற்று. நாட்டின் தலைமை அதிகாரம் அங்காராவிலுள்ள தேசிய அரசின்வயமே உள்ளது என்பதனை இவ் வொப்பந்தம் வலியுறுத்திற்று.

முதன்யா ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டதால், செவ்ரே உடன்படிக்கையை மாற்றவேண்டிய அவசியம் நேரிட்டது. எனவே, நேச நாடுகளின் பிரதிநிதிகள் புதியதொரு சமாதான ஒப்பந்தத்தினை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இம் முறை லாசான்னே என்ற இடத்தில் கூடப்போகும் மாநாட்டிற்குத் தம் பிரதிநிதிகளை அனுப்பும்படி தேசிய அரசையும், சுல்தானின் அரசையும் அவர்கள் கேட்டுக் கொண்டனர். இச் செயலைத் தேசிய வாதிகள் சிறிதும் விரும்பவில்லை. செவ்ரே உடன்படிக்கையைத் தன்னலத்திற்காக ஏற்று, தமது நாட்டின் நலனை மறந்த சுல்தானை மீண்டும் மாநாட்டிற்கு அழைப்பது நேச நாடுகளின் சூழ்ச்சி என்று கருதப்பட்டது. இதன் மூலம் ஏதாவது குழப்பத்தினை உருவாக்கி, தமது நிலையைப் பயன் படுத்திக்கொள்ள ஐரோப்பிய அரசுகள் செயல்படுகின்றன என்ற எண்ணமும் தேசிய வாதிகளின் உள்ளத்தில் உதித்தது. இச் சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக்கொண்ட முஸ்தஃபா கமால், இச் சிக்கல்களுக்கு மூலகாரணமான 'சுல்தான்' என்னும் பதவியை ஒழித்துக் கட்டுவதற்கு முழு மூச்சாகச் செயலிட ஆரம்பித்தார்.

1922-ம் ஆண்டு, நவம்பர் மாதம், முதல் நாளன்று அங்க் காராவில் கூடிய தேசிய அவையில் பெரும் வாக்குவாதம் நிகழ்ந்தது. முஸ்தஃபா கமாலின் தலையீட்டினால், கலீஃபாப் பதவி சுல்தானின் பதவியினின்று பிரிக்கப்பட்டது. சுல்தானின் பதவி ஒழிக்கப்பட்டு விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் நாட்டின் உண்மையான அரசியல் தலைமை மக்களிடமே உள்ளது என்ற உண்மை வெளிப்பட்டது. உத்மானிய வம் சத்தைச் சார்ந்த மிகவும் கற்றறிந்த ஒருவருக்குக் கலீஃபாப் பதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இவ் வறிக்கை யின்படி, கடைசி 'கலீஃபா சுல்தானுனா' ஆரும் முகம்மது பதவி யிலிருந்து விலக்கப்பட்டார். அவர் ஓர் ஆங்கிலேயப் போர்க் கப்பலில் ஏறி, மால்டாத் தீவிற்குத் தப்பிச் சென்றார். காலியாகி விட்ட பதவியில் உறவினரான அப்துல் மஜீத் 'கலீஃபா'வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கலீஃபாவே யன்றி, சுல்தான் அல்லர் என்பதை நாம் மறக்கலாகாது.

விளைவுகள்

சுல்தானின் பதவி ஒழிப்பு என்பது, நவீனத் துருக்கியின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாகும். மறைந்து வருகின்ற உத்மானியப் பேரரசிற்குப் பதிலாக எழுச்சியும் திறனுமிக்க, புதியதொரு தேசிய அரசு உருவாகியுள்ளது என்ற உண்மையை அது புலப்படுத்திற்று. ஏறக்குறைய ஆறு நூற்றாண்டு காலம் இடையருது நடைபெற்று வந்த உத்மானிய வம்சத்தின் ஆட்சி இதன் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இனி, துருக்கி யில் இயங்கும் அரசு, ஒரு வம்சத்தின் நலனுக்காக அன்றி, துருக்கியர் அனைவருக்காகவும் பாடுபடும் என்று உணர்த்தப் பட்டது. ஐரோப்பாவில் வலுப்பெற்றுவந்த தேசிய உணர்வும், மக்களாட்சிப் பற்றும் ஆசியாவிலும் தோன்ற ஆரம்பித்து விட்டன என்பதனை இப் பதவி ஒழிப்பு வெளிப்படுத்திற்று. தங்களைப் பதவியில் தங்கவைத்துக் கொள்வதற்காகத் தமது மக்களின் நலனை மேல்நாட்டு அரசுகளின் வசம் அடகு வைத்து வந்த கீழைநாட்டு அரசர்களின் கொடும் பழக்கத்திற்குத் துருக்கி யில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இப் பதவி ஒழிக்கப் பட்டதன் மூலம், இதுவரை துருக்கியில் நிலவிவந்த இரட்டையாட்சி—சுல்தானின் அரசு, தேசிய அரசு—மறைந்தது. இனி நாட்டின் தலைமை, மக்களின் ஆதரவு பெற்று அங்காராவில் இயங்கும் அரசையே சாரும். இதன் மூலம் துருக்கியில் இவ்விரு சக்திகளுக்கிடையே ஏற்பட விருந்த உள்

நாட்டுப் போர்களும், அதனால் விளையக்கூடிய தீமைகளும் தவிர்க்கப்பட்டன.

சுல்தானின் பதவி ஒழிப்பு, பொருளாதாரத் துறையில் துருக்கிக்குப் பெரும் நன்மைகளைத் தேடித் தந்தது. சுல்தானின் பொருட்டாகவும், அவரது அந்தப்புர மாதர்களின் பொருட்டாகவும் இனிச் செலவுகள் ஏதுமில்லை. ஆடம்பரச் செலவுகள் அனைத்தும் மறைந்தன. சுல்தானின் தனிப்பட்ட கரிசனத்தைப் பெற்று வரி ஏய்ப்புச் செய்தவர்களால் இனிமேலும் தேசிய அரசை ஏமாற்ற முடியாமற் போயிற்று. இதனால் அரசின் நிதி நிலைமையில் பெரும் மாறுதல் ஏற்பட்டது; வருமானம் மிகவாகப் பெருகிற்று.

சுல்தான் ஒழிப்புக்குப் பின்னால்

லாசான்னேயில் (Lausanne) கூடுவதற்கு அழைப்புகள் 1922, அக்டோபர் 27ஆம் நாள் அன்று விடுக்கப்பட்டன. அழைப்பினைக் கமால் அக்டோபர் 31ஆம் நாள் ஒப்புக்கொண்டார். சுல்தானின் அரசுக்கு அனுப்பப்பட்ட அதே போன்ற அழைப்பினால் மாபெரும் தேசிய மன்றம் நவம்பர் 1ஆம் தேதி அன்று ஒரு சட்டத்தை நிறைவேற்றி, ஆறாம் முகம்மதைப் பதவியிலிருந்து விலக்கி, அவருடைய அரசாங்கத்தின் எல்லாச் சட்டங்களையும் ரத்து செய்து விட்டது. முன்னமே நாம் குறிப்பிட்டதுபோல், அந்த சுல்தான் பிரிட்டிஷ் கப்பல் ஒன்றில் ஏறி, மால்டாவுக்கு ஓடிவிட்டார்; நவம்பர் 18ஆம் நாள் அன்று அந்த மன்றமானது அவருடைய ஒன்றுவிட்ட சகோதரரான அப்துல் மஜீதைக் கலீஃபாவாகத் தேர்ந்தெடுத்தது. இவ்வளவுடன் உத்மானியப் பேரரசு முடிவடைந்து விட்டது.

1922, நவம்பர் 20ஆம் நாள் கூட்டப்பட்ட லாசான்னே மாநாடு பல இன்னல்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. 1923, ஜூலை 24ஆம் நாள் அன்று கையொப்பமிடப்பட்ட இறுதிச் செயல்களுக்கு முன்பு அதன் கூட்டம் ஒருமுறை ஒத்திப் போடப்பட்டது. இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ரஷியா, ஜப்பான், பல்கேரியா, ருமேனியா, யூகோஸ்லாவியா, கிரீஸ், மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் மாநாட்டில் கலந்துகொண்டு, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரங்களில் கையொப்பமிட்டன. அமெரிக்க ஐக்கிய நாடு அதிகாரபூர்வமற்ற கண்காணிப்பாளர்களையே அனுப்பி வைத்தது. இருப்பினும், அவர்

கள் சில சமயங்களில் விவாதங்களில் தீவிரமாகப் பங்கு பெற்றனர். மாநாடு முறிவுறுகிற வரையிலும், இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சர் கர்ஸன் பிரபு அதில் முக்கிய பங்கு பெற்றிருந்தார். இஸ்மத் பாஷா என்பவர் துருக்கியின் பிரதிநிதியாக மாநாட்டில் கலந்துகொண்டார். இதுவரை அவரைப் பற்றி எவரும் கேள்விப்பட்டதே கிடையாது. அவர் ஐந்தடி நான்கு அங்குலமே உயரமுள்ளவராகவும், செவிடராகவும் இருந்தாராயினும், நிலைமையைச் சமாளிக்கக்கூடிய வல்லமை பெற்றிருந்தார். அவர் எளிதாக எதையுமே விட்டுக் கொடுப்பதில்லை; மிகச் சாதுர்யமாகப் பேச்சு வார்த்தைகளை நடத்த வல்லவர். உண்மையில் எதுவும் கெட்டுவிடவில்லை. துருக்கியர்கள் தங்களது சுதந்தரத்திற்காக மீண்டும் போரிடக்கூடும். பிரிட்டிஷாரோ துணிந்து மீண்டும் போரில் இறங்கத் துணியாது, தங்களுடைய பிரதம அமைச்சரைப் பதவியிலிருந்து விலக்கி விட்டனர்.

மாநாட்டில் எழுந்த பிரச்சினைகள் பல்வேறு தலைப்புகளின் கீழ்ப் பிரிக்கப்பட்டன. எதிர்னே உட்படக் கிழக்குத் திரேஸ் முழு இறைமையுடன் துருக்கியுடன் சேர்ந்துகொண்டது. ஏஜியன் தீவுகளுள் டெனிடாஸ்ஸும் இம்பிராஸ்ஸும் துருக்கியுடன் சேர்ந்தன; டொடிகனிஸ்ஸை இத்தாலி பெற்றது. மிஞ்சி இருந்தவை கிரீஸுக்குக் கிடைத்தன. நீர்ச்சந்திக்கான ஏற்பாட்டின்படி, அப் பகுதியின்மீது துருக்கி முழு இறைமை பெற்றது. இருப்பினும், இரு கரையிலும் பதினைந்து மைல் (24 கி.மீ.) தூரத்திற்குப் படைகளை நிறுத்தி வைக்கக்கூடாது என்றும், நீர்ச்சந்தியில் போக்குவரத்தினை லாசான்னே ஒப்பந்தத்துடன் செய்து கொள்ளப்பட்ட சர்வதேச ஒப்பந்தம் ஒன்றினால் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. பிரிட்டனும் துருக்கியும் பின்னரில் தமக்கிடையே பேச்சு வார்த்தைகளை நடத்தி, மோஸலின் எல்லையை நிர்ணயித்துக்கொள்ளவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. அர்மீனிய, கிரேக்கச் சிறுபான்மையினரைப் பொறுத்தவரை, ஆஸ்ட்ரியா, ஹங்கேரி, பல்கேரியா ஆகியவற்றுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் நிபந்தனைகளை நிகர்த்தவற்றைத் துருக்கி ஏற்றுக்கொண்டது. கட்டாயமான மக்கள் மாற்றத்திற்கு கிரேக்கர்கள் இணங்கினர். துருக்கியில் 'காபிடுலேஷன்'களும் வெளிநாட்டினரின் மற்றச் சலுகைகளும் முற்றிலுமே ஒழிக்கப்பட்டன. உத்மானிய பொதுக்கடன் நிர்வாகத்திற்கு முற்றுப் புள்ளி யிடப்பட்டது; நிதிப் பிரச்சினைகளுக்கு முடிவு காணப்பட்டது. உத்மானியர்களின் பொதுக்கடனைத் தீர்க்கும் பொறுப்பினைப்

பின்தொடர்ந்து வந்த அரசுகள் ஏற்றுக்கொண்டன. இறுதியாக, போருக்கு முன்பு அளிக்கப்பட்டிருந்த சலுகைகளும் நேச நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. லாசான்னே ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதற்குப் பிறகு ஐந்து ஆண்டு வரையிலும் துருக்கி தன்னுடைய சுங்க வரித் திட்டத்தை மாற்றப் போவதில்லை என்றும் ஒப்புக்கொண்டது.

குறிப்பிட்ட கடைசி மூன்று நிபந்தனைகளையொட்டி, 1923 பிப்ரவரியில் மாநாட்டில் பிளவு ஏற்பட்டது. ஏப்ரலில் மீண்டும் கூடுவதற்கு முன்பு, மாபெரும் தேசிய மன்றம் இஸ்மத் மேற்கொண்ட நிலையிலிருந்து பின்வாங்க முடியாதென்று மறுத்து விட்டது. கர்ஸன் பிரபு பதவியிலிருந்து விலக்கப்பட்டிருந்தார். துருக்கியர்கள் ஓய்வுபெற்ற கப்பற்படைத்தலைவரான செஸ்டரின் தலைமையில் இருந்த அமெரிக்கரின் கூட்டத்திற்கு எண்ணெய், ரயில் பாதைகள், மற்றும் பல்வேறு மூலப்பொருள்கள் ஆகியவற்றைப் பெருக்குவதற்காகச் சலுகைகள் கொடுத்து, நேச நாடுகளுக்கிடையே பீதியை மூட்டிவிட்டனர். செஸ்டரின் தலைமையிலிருந்த கூட்டத்தினரை அமெரிக்க அரசு ஆதரிக்கவில்லை என்று அது வெளிப்படையாக அறிவித்தது. ஆனாலும், மாநாடு மீண்டும் கூடியபொழுது, புதிய அமெரிக்கத் தூதரான ஜோசப் C. க்ரு (Joseph C. Grew) என்பவர் துருக்கியிலுள்ள எண்ணெய் வளர்ச்சியில் அமெரிக்கா பங்குகொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார். இப்படிப்பட்ட அறிக்கை பிரெஞ்சு, பிரிட்டிஷ் ஆசைகளைக் கட்டுப்படுத்தியதோடு அல்லாமல், துருக்கியர்களுடைய கோரிக்கைகளைச் சற்றுத் தாராளமாகக் கவனிக்கவும் வழிசெய்து கொடுத்தது. ஒரு சில திருத்தங்களுடன் லாசான்னே ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் துருக்கியும் கையொப்பமிட்டன. ஆனால், அதனை அமெரிக்க செனெட் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. அந்த இரு நாடுகளும் ஒன்றுக் கெதிராக மற்றொன்று போரில் ஈடுபட்டிருக்கவில்லையாதலால், அவற்றினுக்கு இடையே அமைதி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டிய அவசியம் நேரிடவில்லை. எனினும், 1927ஆம் ஆண்டின் இறுதியில்தான் தூதரகத் தொடர்பு அவைகட்கு இடையே ஏற்பட்டது. அங்காராவில் ஜோசப் க்ரு (Joseph C. Grew) என்பவர் அமெரிக்கத் தூதராக வரவேற்கப்பட்டார்.

கிரீஸுக்கும் துருக்கிக்கும் இடையே மக்கட் பரிவர்த்தனை மாற்றம் சர்வதேச சங்கத்தின் ஆதரவின்கீழ் 1923ஆம் ஆண்டு கோடையில் தொடங்கிற்று; பல மாதங்கள் வரை அது நடைபெற்று வந்தது. பெருந் தொல்லைகளுக்கும் அவை நிகழ்ந்தன

இடையே பல லட்சக் கணக்கான கிரேக்கர்களும் துருக்கியர் களும் பரஸ்பரம் இடம் பெயர்ந்தனர். கிரீஸைப் பொறுத்த வரையிலும் அதனுடைய விளைவு மிகத் தீவிரமானதாக இருந் தது. பல வர்த்தகர்கள் துருக்கியை விட்டு வெளியேறினர். ஆனால், இந்த நஷ்டத்திற்கு ஈடாக, ஓர் ஐக்கியமுற்ற வலுப்ப மான துருக்கி உருவாகுகின்றது என்று இஸ்மத் மக்களுக்கு நினைவூட்டினார்.

1923ஆம் ஆண்டு கோடையில் லாசான்னே ஒப்பந்தமும், அதை யொட்டி ஏற்பட்ட பல சிறிய ஒப்பந்தங்களும் அங்கீகரிக் கப்பட்டன. 1923, அக்டோபர் 29ஆம் நாள் அன்று அதாவது, முதல் உலகப் போரில் உத்மானியப் பேரரசு நுழைந்து சரியாக ஒன்பது ஆண்டுகட்குப் பிறகு, மாபெரும் தேசிய மன்றம் அங்க காராவில் 'துருக்கிக் குடியரசை' நிலைநிறுத்திற்று. காஸி (Ghazi) முஸ்தபா கமால் பாஷாவை அதன் தலைமையதிகாரியாக அது தேர்ந்தெடுத்தது.

25. மாபெரும் துருக்கியர் முஸ்தஃபா கமால் பாஷாவின் தலைமையில் துருக்கிக் குடியரசு

துருக்கியரின் அரசு குடியரசாக (Republic) இருக்கும் என்று 1923, அக்டோபர் 29ஆம் நாள் அன்று மாபெரும் தேசிய மன்றம் அறிவித்தது. அதே நாளில் காஸீ முஸ்தஃபா கமால் பாஷா குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். குடியரசு என்பது புதிதான ஒரு கருத்து அன்று. அதன் அறிவிப்பு இப்படிப்பட்ட கருத்துப் பல நாட்களுக்கு முன்பே உருவாகத் தொடங்கி விட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

சுல்தானின் வசம் இருந்துவந்த அதிகாரம் கமாலுடைய கைக்கு 1919-ல் வந்து சேர்ந்தது. அவ் வாண்டில் தேசியவாதிகள் மிக உறுதியாக இருந்ததனால், அவர்கள் சுல்தான் அமைத்த ஃபரீத் பாஷாவின் அமைச்சர்க் குழுவைப் பதவியிலிருந்து விலக்கி, புதிய பாராளுமன்றம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அலி பாஷாவின் தலைமையில் அமைக்கப்பட்ட புதிய அமைச்சர்க் குழுவினரிடம் தங்களே அங்கீகரிக்குமாறு வற்புறுத்தினர். புதுப் பாராளுமன்றத்தை அங்காராவில் தான் கூட்டவேண்டுமென்று வற்புறுத்தக் கமாலினால் முடியவில்லை யாயினும், அவருடைய திட்டத்தில் பெரும்பாலானவற்றை அம் மன்றத்தினர் ஏற்றுக் கொண்டு விட்டதனால், சுல்தானைப் பாதுகாப்பதற்காக பிரிட்டிஷ்காரர்கள் அந் நகரில் நிரம்பி யிருக்கும்படி நேரிட்டது. பிறகு, கமால் 1920, ஏப்ரல் 23ஆம் நாள் அன்று அங்காராவில் மன்றத்தின் சிறப்புக்கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அது தன்னை 'மாபெரும் தேசிய மன்றம்' என்று அழைத்துக் கொண்டு, சுல்தானின் கைதிக்கான அந்தஸ்தை உணர்ந்து, அவர் மன்றத்திற்கு மேற்பட்டவர் அல்லர் என்று அறிவித்தது. கமால் அதன் தலைவரானார். இராஜ்ஜிய சபை ஒன்று அங்காரா அரசாங்கத்தின் நிர்வாகக் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆனாலும், மாபெரும் தேசிய மன்றம், அது நிரந்தரமான அரசாங்கமா அல்லது தாற்காலிகமான அரசாங்கமா என்று 1921, ஜனவரி 30ஆம் தேதிவரையிலும் தொடர்ந்து விவாதித்துக் கொண்டிருந்தது. அந்த நாட்களில் அந்த மன்றமானது அரசாங்கத்தின் அடிப்படை அம்சங்கள் பத்தினை 1876, 1908ஆம் ஆண்டுகளில், முன்பு உருவான அரசியல் அமைப்புச் சட்டங்களுக்குத் திருத்தங்களாக நிறைவேற்றிற்று. இந்தப் பத்து அம்சங்கள் சபையை ஒரு நிரந்தரமான நிறுவனமாக நிலை நாட்டின. இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை அதன் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் அவை வற்புறுத்தின. 1924, ஏப்ரல் 20ஆம் நாள் வரையிலும் அவை அரசாங்கத்தின் அடிப்படையாகவும் இருந்தன. அந்தத் தேதி யன்று புதிய அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்று ஏற்றுக் கொள்ளப் பெற்றது. இதற்கிடையில், 1923, ஏப்ரல் மாதத்தில் இரண்டாம் அவை ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தச் சபையானது கமாலுக்கும் அவருடைய சகாக்களுக்கும் பெரும் ஆதரவு அளித்தது. இந்தச் சபைதான் குடியரசைப் பிரகடனப்படுத்தியதுடன், புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தையும் உருவாக்கி விட்டது.

அங்காராவில் கூடிய அந்த அவை (சபை) குடியரசின் அரசியல் சட்ட அமைப்பின் அடிப்படையில் செயல்பட்டு, படிப்படியாக மாபெரும் தேசிய மன்றமாக உயர்ந்தது. இதற்கிடையில் ஐரோப்பாவிலும் அனட்டோலியாவிலும் கமாலினால் நிறுவப்பட்ட 'துருக்கியர் உரிமைகள் பாதுகாப்புக்கான கழகம்' 1922-ல் மக்களின் கட்சியாக (Halk Firkasi) மாறிப் பிறகு அடுத்த ஆண்டில் 'குடியரசு மக்கட் கட்சி' (ஜூமூரியத் ஹல்க் ஃபிர்க்கஸி — Gumhuriyet Halk Firkasi) என்னும் கட்சியாயிற்று. அதன் தலைவர் என்ற நிலையில், கமால் கட்சி மேடையையும் குழுக்களையும் விவாதங்களுக்காகவும், கொள்கைகளை உருவாக்குவதற்காகவும் அடிக்கடி பயன்படுத்திக் கொண்டார். இந்தக் கூட்டங்களிலேயே முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன. கிரேக்கப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் குறிக்கோள்கள் என்ன என்பதை எளிதாக நிர்ணயிக்க முடிந்தது. ஆனால், முதன்மைப் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பிறகு கமால் தமது கொள்கைகளை நிறைவேற்ற எல்லா முறைகளையும் கடைப்பிடிக்கத் தொடங்கினர். நெருக்கடியான வேளைகளில் அவர் மிகச் சாதுர்யமாகவே நிலைமைகளைச் சமாளித்து வந்தார்.

அரசியல் அமைப்புச் சட்டம் மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு நாட்டில் அரசியல் - சமய அமைப்பில் ஒரு முக்கிய மாறு

தல் புகுத்தப்பட்டது. 1922-ல் ஆரும் முகம்மது இஸ்தம்பூலை விட்டு மால்டாவுக்குப் புறப்பட்டபோது மாபெரும் தேசிய மன்றம் கலீஃபாவின் பதவி காலியாகி விட்டது என்று அறிக்கை வெளியிட்டு, பெரும் தேசியவாதியாக இருந்த அப்துல் மஜீதை அப் பதவிக்காகத் தேர்ந்தெடுத்தது. அப்பொழுது நிலவிய சூழ்நிலையில், அப் பதவியை அவசரப்பட்டு ஒழித்துவிட்டு, மாறுதல் விரும்பாதவர்களாக இருந்த பெரும்பாலான துருக்கி மக்களுக்கு அதிர்ச்சி ஊட்டக் கமாலும் அவருடைய சகாக்களும் விரும்பவில்லை. தவிரவும், சமய அதிகாரத்திடமிருந்து கலீஃபாவை வேறுபடுத்திக் கருதுவது என்பது இயலாத செயலாகும். ஏனெனில், துருக்கியர்கள் பலரின் கருத்தில் அவர் போப் ஆண்டவருக்கு இணையானவராக இருந்தார். இருந்தபோதிலும், சமய சட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர் ஒரு சில மரபுகளுக்கென்று வெறும் பொம்மையாக இருக்க முடியாது என்பதைத் தேசியவாதிகள் உணர்ந்திருந்தனர்.[1]

கலீஃபாவின் பதவியைப்பற்றி மாபெரும் தேசியமன்றத்தில் குரல்கள் எழுந்தபொழுது, அப் பதவியை ஒழித்துவிட வேண்டும் என்றும், சமயப் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட வேண்டும் என்றும் கமால் யோசனை கூறினார். 1924, மார்ச்சில் கட்சிக் கூட்டத்தில் அந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது; அடுத்த நாள் மன்றம் அதை நிறைவேற்றியும் விட்டது. மேலும், உத்மானிய அரச குடும்பமே துருக்கியிலிருந்து நாடு கடத்தப் பட்டது. புனிதச் சமய நீதிமன்றங்கள் கலைக்கப்பட்டன. அறநிலைத் துறை அமைச்சர்களின் பொறுப்புகள் புதிதாக உருவாக்கப்பட்ட சமயத் துறைக்கு மாற்றப்பட்டன. அந்தத் துறையானது பிரதம அமைச்சரின் நேர்முகப் பார்வையில் அமர்த்தப் பட்டிருந்தது. மறைமுகமான வகையில் அவரே (பிரதமரே) கலீஃபாவாகவும் ஆகிவிட்டார்.

1924ஆம் ஆண்டின் வசந்த காலம் வரையிலும் துருக்கி அரசு 1876, 1908ஆம் ஆண்டுகளின் உத்மானிய அரசியல் அமைப்புச் சட்டங்களையே பின்பற்றி வந்தது. தேவையான இடங்களில் திருத்தங்கள் புகுத்தப்பட்டன. எதிர்பார்க்கப்பட்ட 'குடியரசு அரசியல் அமைப்புத் திட்டம்' 1924, ஏப்ரல் 20ஆம் நாள் அன்று பிரகடனம் செய்யப்பட்டது. அதிக வாதமில்லாமல் தீட்டப்பட்ட அந்த அரசியல் அமைப்புச் சட்டமானது,

[1] பின்னே 'கலீஃபா பதவி ஒழிப்பு—ஒரு குறிப்பு' என்னும் தலைப்பில் விளக்கம் காணலாம். (பக்கம். 510)

இறைமை துருக்கிக் குடிமக்களுக்கே உரியதாகும் என்று திட்ட வட்டமாக அறிவித்தது. மாபெரும் தேசிய மன்றம் அந்த நாட்டு மக்களின் பிரதிநிதியாகும். சட்டப்படி எல்லாத் துருக்கியர்களும் சரிசமானர்களே யாவர். தனிப்பட்டவரோ குழுவினரோ சிறப்புச் சலுகைகள் பெறுவதற்கு அது தடை விதித்தது. பேச்சுரிமை, சிந்தனை உரிமை, எழுத்து உரிமை, நடமாடுவதற்கான உரிமை ஆகியவற்றையெல்லாம் அது உறுதிப்படுத்தியது. துருக்கிக் குடியரசில் வாழும் எந்தக் குடிமகனும், எந்த இனத்தவனாயினும், சமயத்தினனாயினும் அவன் துருக்கியனாவான். இஸ்லாம் நாட்டின் சமயமாகும் என்றும் அறிவிக்கப்பட்டது. குடியரசின் ஆட்சி மொழி துருக்கி மொழியாகும்; அங்காரா நகரத்தில்தான் அரசாங்கத்துத் தலைமைக் காரியாலயம் இருக்க வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது.

அரசியல் அமைப்புச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அரசாங்கம் கொள்கை யளவில் ஜனநாயகமாக இருப்பினும், உண்மையில் அது அப்பொழுதாகட்டும் அல்லது இருபது ஆண்டுகட்குப் பிறகாகட்டும், கமாலினாலும் அவருடைய சகாக்களினாலும் அடக்கி ஆளப்படும் ஒரு கட்சி அரசாங்கமாகவே இருந்தது. எல்லோருக்குமான வாக்குரிமையின் அடிப்படையில் மாபெரும் தேசிய மன்றம் நான்கு ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. பெண்கள் அவ் வுரிமையை 1934-ல் பெற்றனர். அதன் உறுப்பினர்களிலிருந்து குடியரசின் ஜனாதிபதி நான்கு ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜனாதிபதி பிரதம அமைச்சரை நியமித்தார். ஜனாதிபதியின் இணக்கத்துடனும் மன்றத்தின் இணக்கத்துடனும் பிரதம அமைச்சர் தமது சகாக்களை நியமித்தார். ஆனாலும், 1945ஆம் ஆண்டு வரையிலும் அரசாங்கத்தின் பொறுப்புப் பெரும்பாலும் குடியரசு மக்கட் கட்சியின் கரத்திடைத்தான் இருந்தது. பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் மாபெரும் தேசிய மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்கள் அந்தக் கட்சியினால் நியமிக்கப்பட்டனர். ஒரே ஒரு பெயர்ப் பட்டியல் வாக்காளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. யார் எந்தப் பதவிக்குப் போட்டியிடவேண்டும் என்பது கட்சிக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்டது. மாபெரும் தேசிய மன்றத்தில் விவாதங்கள் தீவிரமாக ஒன்றும் நடைபெறவில்லை. எல்லா முடிவுகளும் கமாலால்தான் எடுக்கப்பட்டன.

நியாயமாகவே கமால் ஒரு 'சர்வாதிகாரி' என்று அழைக்கப்பட்டார். முக்கிய கொள்கைகள் அனைத்தையும் அவர்

நிர்ணயித்தார்; அரசின் உயர் அதிகாரிகளை அவரே நியமித்தார்; தம்முடைய விருப்பத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கட்சியையும் நாட்டையும் அவர் வற்புறுத்தினார். ஆனாலும், நாட்டையும் பொது மக்களின் நலத்தையும் பாதிக்கக்கூடிய விவகாரங்களை அவர் மிக விழிப்புடன், நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னரே மிகச் சாதுரியமாகப் பேசிச் சமாளிக்க முயன்றார். துருக்கியர்களுள் எல்லாம் தாமே நனி சிறந்தவர் என்பதையும், தாம் ஒருவரால் மட்டுமேதான் அவர்களுக்கென எதையும் சாதிக்க இயலும் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். துருக்கியருக்கு எது நன்மை பயக்கும் என்பதையும், அதை எவ்விதம் அடைவது என்பதையும் அவர் அறிந்திருந்தார். துருக்கி மக்களின் நலனில் அவருக்கு ஆழ்ந்த அபிமானம் இருந்தது; அவர் கொஞ்சமும் சுயநலத்தை நாடியதில்லை. இந்த வகையில் அவர் 'நன்மை பயக்கும் சர்வாதிகாரியாகவே' (Benevolent Despot) நடந்து கொண்டார். துருக்கியில் அவருடைய எஞ்சிய வாழ்நாட்களில் கட்டுப்பாடற்ற தேர்தல் ஏதாகிலும் நடைபெற்றிருக்குமாயின், அவர்தாம் அக் குடியரசின் சர்வாதிகாரியாக மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார் என்பதில் சிறிதளவும் ஐயப்பாடு இருக்க முடியாது.

புதிய அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கும், குடியரசு ஆட்சி ஒழுங்குபடுத்தப்பட்டதற்கும் பிறகு, இனியும் பல சீர்திருத்தங்கள் அதிவேகமாகப் புகுத்தப்பட்டன. முடிந்த போதெல்லாம் கமாலும் மற்றும் பல தலைவர்களும் அனட்டோலியாவில் சுற்றுப் பயணம் செய்து, என்ன செய்யப்படுகின்றது என்பதைப்பற்றிய தேவையை விளக்கிக் காட்டியும் புகுத்த வேண்டியதைப்பற்றி விளம்பரப்படுத்தியும் வந்தனர். துருக்கியின் வடக்கு, கிழக்கு எல்லைப் பிரதேசங்களில் நடைபெற்றுக் கொண்டிருந்த சோவியத் திட்டங்களில் கமால் கருத்துச் செலுத்தாது, மேலை நாடுகளிலும் அவற்றின் ஜனநாயகக் கோட்பாடுகளிலும் அதிகமான கவனத்தைச் செலுத்தினார். நவீனத் துருக்கி நாட்டின் தலைவர்கள் மேலை நாடுகளில் கல்வி பயின்றனர், அல்லது அந்த ஆசிரியர்களின் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டிருந்தனர். இஸ்தம்பூலில் இருந்த கலாத்தா சாரே லிசே (Galata Saray Lycee) என்ற முக்கியமான பள்ளி குறிப்பிடத்தக்கதாகும். அப் பள்ளியில் போதனை மொழி பிரெஞ்சு மொழியாக இருந்தது. அங்குப் பின்பற்றப்பட்ட மரபுகள் நிச்சயமாக பிரெஞ்சு மரபுகளாகவும் மேலை நாட்டு மரபுகளாகவும் இருந்தன.

1920ஆம் ஆண்டுக்கும் 1930ஆம் ஆண்டுக்கும் இடையில் துருக்கியின் அன்றாட வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் புகுத்தப்

பட்ட சீர்திருத்தங்கள் ஒவ்வொரு நிலையையும் தொடுவதாக இருந்தது. ஆரம்பத்தில் மாறுதல்கள் சற்று விரைவாகவே நடைபெற்றன; எந்த ஒரு திட்டமான வழியிலும் அது செல்ல வில்லை. இந்தச் சீர்திருத்தங்களின் வரிசை முறையை நினைவில் கொண்டிருக்க முடியாது என்று உணர்ந்து கமால் இவ்விதமாகத் திட்டமில்லாது நடைபெற்றுவரும் வளர்ச்சியை 1931 ஆம் ஆண்டில் நிறுத்திவிட்டார். திட்டம் முழுவதையும் 'கமால் கோட்பாடு' (கமாலிஸம் — Kemalism) என்று அவர் பெயரிட்டுத் தமது சீர்திருத்தங்களை ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தினர். இந்த ஆறு பிரிவுகளும் 1935-ல் நடைபெற விருந்த பொதுத் தேர்தலில் அவரது கட்சியின் தேர்தல் திட்டத்தின் அடிப்படையாயிற்று. இவையெல்லாம் நவீனத் துருக்கி நாட்டின் என்றென்றுமே அழியாத கோட்பாடுகள் என்று கருதப்பட்டு, 1937-ல் அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் ஒன்றினால் அச் சட்டத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. அவையாவன :

Kemalism—கமாலிஸம் அல்லது கமாலின் கோட்பாடுகள் :

1.	குடியரசுக் கோட்பாடு	— Republicanism
2.	மதச் சார்பின்மை	— Secularism
3.	கூட்டாண்மை	— Populism
4.	நாட்டுப்பற்று	— Nationalism
5.	அரசுடமை	— Statism
6.	சீர்திருத்தம்	— Reformism

அரசியல் அமைப்புச் சட்டத்தில் முதல் அம்சம் பின்வருமாறு அமைந்திருந்தது: துருக்கி நாடு ஒரு குடியரசாகும். தமக்கிருந்த செல்வாக்கைத் துணையாகக் கொண்டு, கமால் தம்மை ஓர் அரசராகவோ அல்லது சுல்தானாகவோ நியமித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், முடியாட்சியே கூடாது; குடியரசுதான் அமைய வேண்டும் என்று அவர் தீவிரமாக வற்புறுத்தினர். ஏனெனில், இப்படிப்பட்ட கருத்தே மேலை நாடுகளின் கருத்தாக இருந்து வந்தது; மக்களாட்சிக்கு உகந்ததாக இருந்தது. துருக்கிக்குக் குடியாட்சியே மிகவும் பொருத்தமான அரசியல் முறை ஆகும் என்று கமால் நம்பினர். ஆனால், மாறுதலை விரும்பாதவர்கள், பழைய அரச குடும்பத்தை ஆதரித்தவர்கள், சமயக் குழுவினர் மற்றும் வைதிகர்கள் எல்லாரும் பழைய அமைப்பே தொடர வேண்டும் என்று விரும்பினர். குடியரசை நிரந்தரமானதாக்குவதற்காகக் கமால் 1926-ல் பல முக்கியமான சீர்திருத்தங்களைச் செயல்படுத்தினர்.

கலீஃபாவின் பதவியை ஒழித்து விட்டதனாலும், ஷரீஅத் அடிப்படையிலமைந்த நீதிமன்றங்களை மூடிவிட்டதனாலும் மட்டும் துருக்கியின் அடிப்படைச் சட்டம் மாறிவிடவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டச் சீர்திருத்தங்கள் துருக்கியின் வர்த்தக, குற்றச் சட்டங்களை மேலை நாட்டு மயமாக்கி விட்டன. ஆனால், சிவில் சட்டமும் நீதிமுறைகளும் சமய சட்டமான ஷரீஅத்தையே ஒட்டியிருந்தன. இப்படிப்பட்ட நீதி யமைப்பு இருபதாம் நூற்றாண்டு குடியரசின் சூழ்நிலைக்கு உகந்ததாக இருக்கவில்லை என்று கமாலும் அவருடைய கட்சிக்காரர் களும் வாதாடினர். மேலை நாடுகளின் அடிப்படைச் சட்டங் களில் வழக்கறிஞர்களுக்கும் நீதிபதிகளுக்கும் பயிற்சி அளிப்பதற் காக 1925-ல் அங்காராவில் ஒரு சட்டக் கல்லூரி திறக்கப் பட்டது. 1926-ன் துவக்கத்தில் மாபெரும் தேசிய மன்றமானது சுவிட்ஸர்லாந்து சட்டத்தின் அடிப்படையில் அமைந்திருந்த புதிய சிவில், மற்றும் கடன் சட்டத் தொகுப்பு, இத்தாலிய சட்டத்திலிருந்து பெறப்பட்ட குற்றச் சட்டத் தொகுப்பு, ஜெர் மானிய வர்த்தகச் சட்டத்திலிருந்து பெறப்பட்ட புதிய வர்த்தகச் சட்டத் தொகுப்பு ஆகியவற்றை ஏற்றுக் கொண்டது. அவ் வாண்டின் இறுதியில் அச் சட்டத் தொகுப்புகளெல்லாம் செயல் முறையில் கொண்டு வரப்பட்டன. 1927ஆம் ஆண்டு முதல் துருக்கி நாட்டுச் சட்ட முறையானது மேலை நாடுகளின் முறை யின் ஒரு கிளையாகவே இருந்து வருகின்றது. சமயச் சார்பற்ற தன்மையையும், மேலை நாடுகளின் இயல்புகளையும் படைக்கப் பெற்றிருந்த இந்தப் புதிய சட்டங்கள் மிக உறுதியாக நிலை நாட்டப்பட்டமையால், பழைய ஆட்சிமுறை கற்பனை செய்தும் பார்க்க முடியாத அளவிற்குப் பழைமையானதாகி விட்டது என்பது தினைவில் ஏற்க முடியாத ஒரு கருத்தாகிவிட்டது.

மிக முக்கியமான இரண்டாம் சீர்திருத்தமென்னவென்றால், நாடு சமயச் சார்பில்லாக் கோட்பாட்டினை மேற்கொண்டிருக்கும் என்பதாகும். இஸ்லாமிய சமயம் துருக்கியர் வாழ்க்கையில் எல்லா அம்சங்களையும் தொடுவதாக இருந்தது. சமுதாயத்தின் மீது அவ்விதமான பிடிப்பு ஒன்றினை இஸ்லாம் பெற்றிருந்ததனால், அது வளர்ச்சி குன்றிக் கொண்டிருந்தது என்றும், கீழ்நாடுகளுக் கும் மேலை நாடுகளுக்குமிடையே வேறுபாடுகள் தோன்று கின்றன என்றும் கமாலும் அவருடைய சகாக்களும், மேலை நாடு களுடன் அவர்கள் தொடர்பு கொண்டிருந்த காரணத்தை முன் னிட்டுக் கருதினர். முஸ்லிம்களுக்கு ஒரு புனிதமான நாளான வெள்ளிக்கிழமை நாட்டில் எல்லோருமே கட்டாயமாக ஓய்வு

பெற வேண்டிய நாள் என்று 1924-ல் அறிவிக்கப்பட்டது. 1925-ல் தர்வேஷ்களின் (துறவிகளின்) குழுக்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. புனிதக் கல்லறைகள் யாவும் மூடப்பட்டன. பெரும் அதிர்ச்சி ஊட்டிய ஒரு சீர்திருத்தம் என்னவென்றால், ஆண்கள் எல்லாம் 'ஃபெஸ்' (Fez) என்னும் (துருக்கித்) தொப்பியை அணியக் கூடாது என்றும், முகமூடியைக் கொண்ட குல்லாயை அணிய வேண்டும் என்றும் வற்புறுத்திய ஆணை யாகும். கமாலே மேல் நாட்டினர் அணியும் குல்லாயை (Hat) அணிந்திருந்தார். படையினரும் மேனாட்டின் படைவீரர்கள் அணிவது போன்ற குல்லாயை அணிந்தனர். ஃபெஸ் என்ற தொப்பியானது[1] இரண்டாம் மகமூதின் காலத்தில் மேற்கிலிருந்து துருக்கிக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், அது முஸ்லிம் களின் சின்னம் என்றுதான் கருதப்பட்டது.[2] முகமூடிக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. ஆனாலும், அதற்கு மறைமுகத் தடை விதிக்கப்பட்டது.

1926-ல் சுவிஸ் மக்களின் சிவில் சட்டத் தொகுப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதனால் சமயச் சார்பில்லாத பல மாறுதல்கள் அத் துடன் தோன்றின. சட்டத்திற்கும் அதிகார காரியங்களுக்கும் அன்றாட நாட்களுக்குமாக இருந்த முஸ்லிம் நாட்காட்டியைப் பின்பற்றுவது கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக மேற்கு நாடுகள் பின்பற்றிய கிரிகோரியன் நாட்காட்டிமுறை மேற் கொள்ளப்பட்டது. நாடெங்கிலும் 1342 என்ற முஸ்லிம் ஹிஜ்ரி ஆண்டு, கி.பி. 1926ஆம் ஆண்டாயிற்று. இருப்பினும், ரம்ஸான் மாதத்தைக் கணக்கிடுவதற்கும், இதர புனித நாட்களுக்கும் முஸ்லிம் கால அட்டவணை பின்பற்றப்பட்டது.[3] (ரம்ஸான் என்பது முஸ்லிம்களின் நோன்பு மாதம்.)

[1] செந்நிறமாகவும், அடி அகன்றும், நுனி குறுகியும் உயர்ந்த, ஒரு கருஞ் சூஞ்சம் தொங்குகின்ற தொப்பி Fezcap என்று அழைக்கப்படும். இந்தத் தொப்பியையே மேனாட்டுக் கிறித்துவர்கள் பல ஆண்டுகள் வரை உபயோகித்து வந்தனர். பிறகு அவர்கள் அதைக் கைவிட்டு வேறு மாதிரியான, விளிம்புடன் கூடிய தொப்பிகளை அணியத்தொடங் கவே, ∴பெஸ் தொப்பி முஸ்லிம்களின் சின்னமாகி, 'துருக்கித்தொப்பி' என்னும் பெயரையும் பெற்றுவிட்டது. முஸ்லிம்கள் தொழும்போது இத் தொப்பி இடையூறு விளைக்காது.

[2] முன் பக்கம் 319 பார்க்க.

[3] ஜனவரி முதல் நாள் தொடங்கி, டிஸம்பர் 31ம் நாள் வரை கணக்கிடும் முறை ஆண்டொன்றுக்கு 365.25 நாட்களோ உள்ளடக்கி, சூரியனைப் பூமி ஒரு தடவை சுற்றி வரும் காலத்தைக் காண்பிக்கிறது. ஆனால், 'சாந்திர மான' முறை என்னும் நிலைக்கணக்கிலமைந்த முஸ்லிம் ஆண்டு, சந்திரன் பூமியை 12 முறை சுற்றுகிற வருடத்தைக் கணக்காய்க் கொள்கிறது. இது சூரிய ஆண்டுக்கு 11 நாட்கள் கம்மியாம்.

மேலை நாடுகளின் சட்ட முறை மேற்கொள்ளப்பட்டதனால் தோன்றிய மிக முக்கியமான விளைவென்ன வென்றால், ஒரு கணவன் நான்கு மனைவிவரை மணந்துகொள்ளும் முறை மறைந்ததாகும். அதே சமயத்தில் பெண்களின் அந்தஸ்தும் உயர்ந்தது. சாதாரணமாகவே, பல ஆண்களால் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணம் புரிந்துகொள்ள முடியவில்லையாதலால், அவ்விதத் திருமண முறைக்கு ஒரு தடை விதித்ததனால், தீவிரமான விளைவு ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. ஆனால், பெண்களின் வாழ்க்கையில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டதனால், துருக்கியர் சமுதாயத்தின்மீது அதன் விளைவுகள் மிகத் தீவிரமானவையாக இருந்தன.

சமயச் சார்பில்லா நிலையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டதனால், 1928-ல் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தம் பெற்றது. துருக்கி ஓர் 'இஸ்லாமிய நாடு' என்று இருந்த கூற்று அதிலிருந்து விலக்கப்பட்டது. அரசாங்க அலுவலர்கள் தத்தம் பதவிகளை ஏற்கும்பொழுது தங்களுடைய மனச்சாட்சியின்படி நடக்கப் போவதாகப் பிரமாணம் எடுக்க வேண்டுமே யன்றி, கடவுளின்மீது பிரமாணம் எடுக்கக்கூடாது என்றும் அத்திருத்தம் வற்புறுத்திற்று. பின்னாளில் (1935) ஓய்வு நாள் ஞாயிற்றுக் கிழமையாக மாற்றப்பட்டுவிட்டது.

ஒருகால் கமால் நாத்திகராக இருந்திருக்கக்கூடும். ஆனால், அவரைச் சுற்றியிருந்தவர்கள் பலர் சமயப் பற்றுடையவர்களாகவே இருந்தனர். இருந்த போதிலும், அனைவருமே தேசிய வாழ்க்கையில் சமயத்திற்கான அந்தஸ்துக்கு முக்கியத்துவம் அளிப்பதைக் கைவிட்டனர். ஒரு சிலரே திருநாள்களைக் கொண்டாடினர். இஸ்தம்பூலிலும் அங்காராவிலும் பலர் ரம்ஸான் மாதத்தையே பொருட்படுத்தவில்லை. பல குழந்தைகளுக்குத் தொழுகை முறையேகூடக் கற்றுக் கொடுக்கப்படவில்லை. அரசுப் பள்ளிகளிலிருந்தும், தனியார் பள்ளிகளிலிருந்தும் சமய போதனையே விலக்கப்பட்டுவிட்டது. இஸ்தம்பூல் பல்கலைக் கழகத்தில் தத்துவஇயல் பாடத்தை மிகச் சிலரே மாணாக்கர்களாயிருந்து படித்து வந்ததனால், அந்தத் துறையானது 1933-ல் இலக்கியத்துறையுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. 1939ஆம் ஆண்டுக்குள்ளாகத் துருக்கி ஒரு சமயச் சார்பில்லா நாடாயிற்று. இந்த வகையில் அது பிரான்ஸ், ஜெர்மனி, அல்லது அமெரிக்க ஐக்கிய நாட்டைப்போல் உருப்பெற்று விட்டது.

உத்மானியப் பேரரசில் 'காபிடுலேஷன்ஸ்' என்ற முறையும் 'மில்லத்' என்ற முறையும் அயல் நாட்டினருக்கும் உள்நாட்டிலிருந்த பல்வேறுபட்ட சிறுபான்மையோருக்கும் பல்வேறு சிறப்புரிமைகளை அளித்திருந்தன. தனிரவும், சில குடும்பங்களும் தனிப்பட்டவர்களும் குறிப்பிட்ட ஒருசில சலுகைகளைப் பெற்றிருந்தனர். ஆனால், குடியரசில் அரசியல் அமைப்பின் 69 ஆவது அம்சத்தின்படி, எல்லாத் துருக்கியர்களுமே சட்டத்தின் கண் முன்னிட்டத்தில் சரிசமமாவர். குழுக்களும், வகுப்புகளும், குடும்பங்களும், தனிப்பட்டவர்களும் பாராட்டிக் கொள்வதான எல்லா வகைச் சலுகைகளும் ஒழிக்கப்பட்டுவிட்டன.

ஆரம்ப காலத்தில் துருக்கியர் சமுதாயம் மக்களாட்சிக் கோட்பாட்டு இயல்பினைப் படைத்திருந்தது. அனட்டோலியாவில் குடியானவர்களது கிராமங்களில் அதுபோன்ற இயல்புகளை இன்றும் நாம் காணலாம். நவீனத் துருக்கிக் குடியரசும் அதன் சுதந்தரமும் இந்தக் குடியானவர்களான மக்களால்தாம் பெறப்பட்டனவையாகும். ஆகவே, அவர்களுக்கென்றே நவீனத் துருக்கியர் சமுதாயம் அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. அவர்கள் சுமக்கவேண்டியிருந்த வரிச் சுமையானது எந்தக் காலத்திலுமே அதிகமானதாகத்தான் இருந்தது. ஆகவே, அவர்கள் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக அந்தச் சுமையைப் பெருமளவும் குறைக்கப் போவதாகக் கமால் முதன் முதலில் ஆற்றிய சொற்பொழிவில் குறிப்பிட்டிருந்தார். 1925-ல் மாபெரும் தேசிய மன்றம் அவர்களுடைய நிலங்களின்மீது விதிக்கப்பட்ட டைத் (Tithe — பத்தில் ஒரு பங்கு) என்ற தீர்வையைத் தவிர்த்தது; விளைச்சலை அதிகப்படுத்துவதற்காக விவசாயத் தீர்வைகளும் சற்றுக் குறைக்கப்பட்டன.

இலவசமானதும், ஒருமைப் படுத்தப் பட்டதுமான கல்வித் திட்டமும் மேற்கொள்ளப் பட்டது. அரசின் கண்காணிப்பில் இருந்த ஆதாரக் கல்வித் திட்டம் கட்டாயமாக்கப் பட்டது. ஒருமைப் படுத்தப்பட்ட கல்வித் திட்டத்தை வற்புறுத்திய அரசியல் அமைப்புக்கான சட்டத்தை யொட்டி, இக் காலத்தில் பல்லாயிரக் கணக்கான பள்ளிகள் திறக்கப்பட்டன. ஆரம்பத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஏனெனில், ஆசிரியர்கள் இல்லாவிடின் கல்வித் திட்டமே அழிந்துவிடும் என்பதைக் கமால் அறிந்திருந்தார். ஒவ்வொரு கிராமத்திலும் ஐந்து வகுப்புகளைக்கொண்ட பள்ளிகள் நிறுவப்பட்டன. மாணவர்களுக்குப் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிப்பதற்காகவும், சிறப்பு உயர்நிலைப் பள்ளிகளிலும்

சிறிய கல்லூரிகளிலும் சேர்ந்து படிக்க அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும் உயர்நிலைப் பள்ளிகள் நகரங்களில் திறக்கப் பட்டன. இவற்றிற்கு மேலாக அமைந்திருந்தது இஸ்தம்பூல் பல்கலைக் கழகமாகும்.

படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை எண்பது விழுக் காடாக இருந்தது. யாவரும் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்று கமால் விருப்பங்கொண்டிருந்தார். அராபிய எழுத்துப் படிவம் துருக்கி மொழிக்குப் பொருந்தியதாக இருக்கவில்லை. அந்த மொழியில் பேசுவதும் அதிலுள்ள வார்த்தைகளைக் கூட்டு வதும் அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. ஆகவே, 1928-ல் மாபெரும் தேசிய மன்றம் லத்தீன் மொழியின் அடிப் படையில் ஒரு புதிய துருக்கி எழுத்துத் தொகுதியை மேற் கொண்டது; 1929, ஜனவரி 1ஆம் நாள் அன்று அது கட்டாய மாக்கப்பட்டது. ஆகவே, அத் தேதிக்குப் பிறகு நூல்கள், பத்திரிகைகள் எல்லாம் புது எழுத்து முறையையே கடைப் பிடித்தன. இந்த மாறுதல் அவ்வளவு எளிதானதாக இருக்க வில்லை. ஒவ்வொரு பாடப் பகுதிக்கும் புதிய நூல்கள் எழுதப் பட்டன. 1928-ல் போதிய அளவிற்கு நூல்கள் கிடைக்கவில்லை யாதலால், பள்ளிகளின் திறப்புப் பல வாரங்கள் வரை தள்ளிப் போடப்பட்டது. கற்றறிந்தவர்கள் மீண்டும் புது எழுத்துருவில் படிக்க எழுதக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. புதிய எழுத்துக்கள் முறையை அரசு வெகுவாக விளம்பரம் செய்தது. கமாலும், தேசிய மன்றத்தின் உறுப்பினர்களும் அம் முறையைப் பற்றிப் போதனை செய்து வந்தனர். தலைப்பாகையை மாற்று வதைவிட எழுத்து முறையை மாற்றுவது என்பது மிகவும் கடின மாக இருந்தது. ஆனாலும், அது பலன் விளைவிப்பதாக இருந் தது. அடுத்த பத்து ஆண்டுக் காலத்தில் லட்சக்கணக்கான மக்கள் படிக்கக் கற்றுக்கொண்டனர். எழுதப் படிக்காதவர் களின் எண்ணிக்கை ஐம்பது விழுக்காடாகக் குறைந்தது, பல பத்திரிகைகள் தோன்றின. தட்டுப் பொறியில் சிக்கல்கள் குறைந்தன. பலரையும் மாற்றக்கூடிய நவீன கால வாழ்க்கை அந்த நாட்டில் உருவாயிற்று.

முதியோர் கல்வித் திட்டத்தைக் குடியரசு ஆதரித்தது. 1908-ல் இளந் துருக்கியர் இயக்கத்துடன் தொடங்கிய பொதுக் கல்வித் திட்டத்தை அரசு முதலில் துர்க் ஆக் (Turk Ock—Turkish Hearth) என்பதை அமைத்துக்கொண்டும், 1932ஆம் ஆண்டுக்குப் பிறகு ஹல்கேவி (Halkevi) என்பதை அமைத்துக் கொண்டும் ஆதரவு கொடுத்து வந்தது. இந்த நிறுவனங்களை

யொட்டிப் படிப்பகங்கள், நூலகங்கள், நாடகங்கள், இசை, சமூகம், கல்வி ஆகியவற்றுக்கான திட்டங்கள் தோன்றின. நவீனத் துருக்கியின் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் நாடு முழுவதிலும் பல்வேறு மக்களுக்கிடையேயும் பரப்புவதில் அந்த மன்றங்கள் மிக முனைப்பாக இருந்தன.

நாட்டுப்பற்று என்பது கமாலின் திட்டத்தில் நான்காவது இடத்தைப் பெற்றிருந்தது. உத்மானியப் பேரரசில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல்வேறு வழியாகத் தேசப்பற்றுப் பெருகிற்று. கிரேக்கர்கள், ஸெர்பியர்கள், பல்கேரியர்கள், அர்மீனியர்கள் மற்றும் பலர் சுயாட்சி பெறுவதற்கும், சுதந்தரம் பெறுவதற்கும் பெரும் பாடுபட்டனர். அவர்களுடைய ஆர்வத்தின் விளைவாகத் தேசியப் போர்கள் மூண்டன. அவற்றின் விளைவாகப் படுகொலைகள், அட்டூழியங்கள், சூறையாடுதல் ஆகியவையெல்லாம் துருக்கியர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட்டன. நாட்டுப் பற்று உணர்ச்சியுடன் எழுந்த உத்மானியர்களுக்கு அனைத்து இஸ்லாமியர் இயக்கம், அனைத்துத்தூரானியர் இயக்கம் போன்றவையெல்லாம் பெருந் தடையாக இருந்தன. கமால் இயல்பாகவே நாட்டுப்பற்றுக் கொண்டிருந்தவர். தாம் ஒரு துருக்கியர் என்று கூறிக் கொள்வதில் அவர் அளவில்லாப் பெருமை கொண்டார். அவர் தம் திட்டத்தின்படி துருக்கியர் அனைவரையும் தங்களுடைய இனத்திலும் மரபுரிமைகளிலும் பெருமை கொள்ளும்படி செய்ய முயன்றார்.

கமாலின் அரசாங்கத்தினால் புகுத்தப்பட்ட எல்லாச் சீர்திருத்தங்களின் மீதும் நாட்டுப்பற்று என்பதன் சாயல் பட்டிருந்தபோதிலும், ஆதாரப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகளுக்காக லத்தீன் எழுத்து முறையின்படி எழுதப்பட்ட புதிய வரலாற்று நூல்கள் மிகவும் முக்கியமானவை யாகும். முதலாம் சுலைமானுடைய காலத்துக்குப் பிற்பட்ட காலத்தின் வரலாற்றை மறக்க வரலாற்று நூல்கள் சுருக்கி எழுதப்பட்டன. இருந்தபோதிலும், அவை துருக்கியர்களுக்குச் சிறப்பு மிக்க பழங்காலம் ஒன்றை உருவாக்கியது. சுமேரியர்களும் (Sumerians), ஹிட்டைட்டுகளும் (Hittites) துருக்கியர்களாயினர். மத்திய கிழக்கில் தொன்றுதொட்டு வரும் செமிட்டுகள் (Semites) அல்லாதார்கள் எல்லாம் துருக்கியர் என்று உரிமை பாராட்டிக் கொண்டனர். உண்மையில், மத்திய ஆசியாவிலிருந்து வந்த மக்கள் அனைவருமே துருக்கியர்களாவர் என்று கருதப்பட்டனர். மனிதனைக் குறிப்பிடும் துருக்கிச் சொல் ஆதம் (Adam) என்பதாகும். ஆதம்தான் முதல் மனிதன் என்று கூறுவது மரபு. ஆகவே, ஆதமும் துருக்கியராவார். எனவே,

எல்லா மனித வர்க்கத்தினரும் துருக்கியர்களாவர். இவ்விதக் கோட்பாடுகளுக்கும் வாதங்களுக்கும் எதிர்ப்பு அளித்தவர்கள் கண்டிக்கப்பட்டனர். ஆகவே, இதில் நம்பிக்கை யற்றிருந்த பலரும் மௌனம் சாதித்தனர். இப்படிப்பட்ட கருத்துகளில் துருக்கியர் பலர் மகிழ்ச்சி கொண்டனர். இவையெல்லாம் துருக்கியரின் நாட்டுப்பற்றை மேலும் அதிகமாகத் தூண்டிவிட்டன.

தேசிய சாயல் பெற்றிருந்த மற்றும் பல தீவிரமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன. கடந்த ஐம்பதாண்டு காலமாகத் துருக்கி இலக்கியமும் பத்திரிகைகளும் பயன்படுத்திய துருக்கி மொழியில் ஏராளமான அராபிய சொற்கள் நிரம்பிக் கிடந்தன. இந்தச் சொற்கள் பேச்சு வழக்கிலுள்ள துருக்கி மொழியில் காணப்படாமையால், பலருக்கு அவற்றின் பொருள் விளங்கவில்லை. புதிய எழுத்துமுறை கையாளப்பட்டதற்குப் பிறகு துருக்கி மொழியை அராபியச் சொற்களின் பிடியிலிருந்து விடுவிக்கவும், பழங்காலத் தூய்மையான துருக்கிச் சொற்களை மீண்டும் உயிர்ப்பிக்கவும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்தப் புதிய சூழ்நிலைகளுக்கிடையில் அரசாங்கம் வாரந் தோறும் புதிய துருக்கிச் சொற்களின் பட்டியல்களை வெளியிட்டுக் கொண்டிருந்தது. அவற்றுக்கு இணையான பழைய சொற்களையும் அரசு வெளியிட்டது. அரசாங்க வெளியீடுகள் அனைத்தும் புதிய சொற்களைப் பயன்படுத்தி வந்தமையாலும், பழங்காலச் சொற்கள் அடங்கிய கடிதப் போக்குவரத்துகள் முற்றிலும் கவனிக்கப்படாமல் விடப்பட்டமையாலும், வர்த்தக நிலையங்களும் அயல்நாட்டு நிறுவனங்களும் மிகத் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்த மொழி மாறுதல்களைப் பின்பற்றுவதற்காக, அதில் தேர்ச்சி பெற்றவர்களை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுவிட்டது. இவற்றின் விளைவாக, அராபிய நாட்டுக்குரிய வளர்ச்சியும் செழுமையும் மங்கிவிட்டன வென்றாலும், துருக்கியர்கள் தாங்கள் பேசுவது போன்றே எழுதக் கூடிய மொழி ஒன்றைப் பெற்றது மாபெரும் நலனாகும்.

குடும்பப் பெயர்களை மேற்கொள்ளுமாறும், அவற்றைப் பயன்படுத்துமாறும் அரசு கட்டாயமாக்கியதும் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். பழங் காலத்திய ஒருசில துருக்கிக் குடும்பங்களே தங்களுக்கெனப் பெயரைக் கொண்டிருந்தன. ஆனாலும், அவை அவற்றைப் பயன்படுத்தவில்லை. மாபெரும் தேசிய மன்றமானது கமாலுக்கு 'அத்தா துர்க்' (துருக்கியர்களின்

தந்தை)[1] என்னும் பெயரை வழங்கிற்று. இனேனு என்ற இடத்தில் இஸ்மத் பெற்ற இரு வெற்றிகளுக்காக அவருக்கு 'இனேனு' என்று பெயரிடப்பட்டது. மற்றும் பல பொருத்தமான பெயர்கள் கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டன. ஒவ்வொரு குடும்பத் தலைவரும் பக்கத்திலிருந்த காவல் நிலையத்திற்குச் சென்று, அங்குத் தொங்கவிடப்பட்டிருந்த குடும்பப் பெயர்ப் பட்டியலிலிருந்து தமக்கு வேண்டிய பெயரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

சிற்சில வேளைகளில் நாட்டுப் பற்றுத் துருக்கியர்களை விழுங்கி விடும்போல் இருந்தது. பாரபட்ச மில்லாததும், நட்புரிமையுடையதுமான திறனுய்வு உணர்ச்சியை அவர்கள் விரும்பாத அளவிற்கு வளர்த்து விட்டிருந்தனர். தாம் ஆதரித்த கோட்பாடுகள் அனைத்திலும் அத்தா துர்க்குக்கு நம்பிக்கை இருந்ததா? என்பது விவாதத்துக்குரியதாகும். ஆனால், அவற்றைப்பற்றி எந்த விதமான வெளிப்படையான விவாதத்தையும் நடத்த அவர் விரும்பவில்லை என்பது உண்மை. எது எப்படி யிருப்பினும், அத் தத்துவங்கள் பயன் விளைக்கத் தக்கனவாக இருந்தன. 'துருக்கி துருக்கியர்களுக்கே, துருக்கியர்கள் துருக்கிக்கே' என்ற அத்தா துர்க்கின் சுலோகம் மிகப் பெருமையுடன் நாட்டினுல் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும்.

லாசான்னே மாநாட்டில் 'காபிடுலேஷன்ஸ்' என்ற உரிமைகளைப்பற்றியும், பொருளாதார துறையிலும் நிதித் துறையிலும் போராசின் ஆட்சி முறையைத் தோற்றுவிப்பதென்னும் மறைமுகமான பொருள்களைப்பற்றியும் கடுமையான விவாதங்கள் நடைபெற்றன. இவற்றில் துருக்கியர்களுக்கு ஏற்பட்ட வெற்றி சட்டச் சீர்திருத்தங்களுக்கும், இனியும் சிறப்பான நீதி வழங்கும் முறைகளுக்கும் வழிவகுத்துக் கொடுத்தது. அடுத்த ஐந்தாண்டு காலத்திற்குச் சுங்கவரித் திட்டத்தில் மாற்றம் ஏதும் ஏற்படாது என்று வாக்குறுதி யளிக்கப்பட்டதனுல், பொருளாதார சுதந்தரம் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டது. கமாலின் ஆலோசகர்கள் துருக்கியின் பொருளாதார மூலப்பொருள்களைப் பெருக்கவும், அன்னியர்களின் செல்வாக்கு அதிகமாக இல்லாமலோ, அவர்கள் அதிகமாகக் கலந்து கொள்ளாமலோ உருவாகக் கூடிய தொழில் முறையை நாட்டில் தோற்றுவிக்கவும் விரும்பினர். அன்

[1] 'அத்தா துர்க்' என்னும் சொற்றொடரைத் துருக்கியர்கள் பிரெஞ்சு உச்சரிப்பில் Ata Turk என்று எழுதவே, நம் நாட்டினர் விஷயம் புரியாமல், 'அடா டர்க்' என்று அதைத் தவருக உச்சரித்து வருகின்றனர். 'அத்தா' என்னும் தமிழ்ச் சொல்லுக்கு உள்ள அதே உச்சரிப்பும் பொருளும் அந்தத் துருக்கிச் சொல்லுக்கும் உண்டு. (அத்தன்—தந்தை)

னியக் கடன்கள், முதலீடு, சலுகைகள் ஆகியவற்றினால் துருக்கிப் பேரரசுக்கு ஏற்பட்ட துர்வசமான அனுபவங்கள் மீண்டும் அப்படிப்பட்ட ஒரு பரிதாப நிலை குடியரசுக்கு ஏற்படாதவாறு பாதுகாக்குமாறு கமாலைத் தூண்டின. அவருடைய கருத்து, துருக்கி தனக்குரிய மூலப்பொருள் வளங்களைப் பெருக்கிக் கொண்டு, மிக உறுதியான பாதுகாப்பு அளிப்பதான சுங்க வரி முறையைக் கடைப்பிடித்துப் பல்வேறு தொழில்களைப் பெருக்க வேண்டும் என்பதாகும்.

வரவிருந்த சுங்க வரித் திட்டத்தைப்பற்றி அறிந்த வியாபாரிகள் 1929-ல் ஏராளமான பொருள்களை இறக்குமதி செய்து கொண்டனர். இதனால் அவ் வாண்டின் வர்த்தகப் பற்றாக்குறை பத்துக் கோடிப் பவுனுக்கு மேற்பட்டதாக இருந்தது. நவம்பர் மாதத்துக்குள்ளாகப் பொருள்களின் விலைகளைக் கட்டித் தீர்ப்பதற்காக ஏற்பட்ட அன்னியச் செலாவணிக்கான தேவை துருக்கிப் பவுனின் மதிப்பினைக் குறைத்து வைத்திருந்தது. வர்த்தகத் துறையில் பீதி ஏற்பட்டிருந்ததன் காரணமாகப் பெருங் குழப்பம் ஏற்பட்டிருந்தது. இறக்குமதிகளையும் ஏற்றுமதிகளையும் சுங்கவரித் திட்டமில்லாது நாணயமாற்று முறையினால் கட்டுப்படுத்தலாம் என்பதை வெகு விரைவில் துருக்கியர் கண்டு பிடித்து விட்டனர். கட்டுப்பாடற்ற பொருளாதார நிலையைப் புகுத்தலாம் என்பதையும் அவர்கள் உணர்ந்தனர்.

உலகப் பொருளாதார மந்தம் ஏற்பட்டதனால், துருக்கியின் ஏற்றுமதிகள் குறைந்து விட்டன. இதனால் இறக்குமதி செய்வதற்கான அனுமதிச் சீட்டுகளைக் கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. நாஜி (Nazi) ஜெர்மனியுடன் மிகச் சாதகமான வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்பதைத் துருக்கியர்கள் உணர்ந்த வுடன், அவர்கள் அதனை உடனடியாக ஏற்றுக் கொண்டனர். ஜெர்மனியுடன் வர்த்தகம் பெருகிற்று; 1936ஆம் ஆண்டுக்குள்ளாகத் துருக்கியின் ஏற்றுமதிப் பொருள்களில் ஐம்பது விழுக்காடு ஜெர்மனிக்கே சென்றன. புகையிலையைத் துருக்கி அங்காடிகளில் வாங்குவதைவிட, ஹாம்பர்கில் மலிவாகப் பெறலாம் என்று அமெரிக்கப் புகையிலை கம்பெனிகள் அறிந்து கொண்டன. உலகில் நிலவும் விலைகளைவிட அதிகமான விலை கொடுத்து ஜெர்மனி பொருள்களை வாங்குகின்றது என்பதை உணர்ந்து, துருக்கி பெரும் மகிழ்ச்சி கொண்டிருந்த போதிலும், ஜெர்மானிய அங்காடிகளிலெல்லாம் உற்பத்தியான பொருள்கள் பலவற்றின் விலைகள் மிக அதிகமாக உள்ளன என்பதை அது அறியாமல் இல்லை. இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்கென்று தக்க நடவடிக்கைகளைத் துருக்கி அரசு எடுக்க வேண்டியிருந்தது.

வேளாண்மை தலையார்ந்த தொழில் என்றும், நாட்டின் மூலப் பொருள் என்றும் உணர்ந்திருந்த கமால், விரோபொருள் களை அதிகரிக்கப் பெரும் பாடுபட்டார். அங்காராவில் அவர் ஒரு மாதிரிப் பண்ணையை நிறுவினர். அங்கே புதிய விவசாய முறைகளும், நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ஆகிய வற்றைக் கையாளுவது எப்படி என்பதும் கண்கூடாகக் காட்டப் பட்டன. 1889-ல் உத்மானியர்கள் 'வேளாண்மை வங்கி' என்ற ஒரு வங்கியை நிறுவினர்கள். இப்பொழுது அதனுடைய பணி கள் பெரிதளவும் அதிகரித்து விட்டன. அது ஏராளமான கடனைச் சிறிய குடியானவர்களுக்கு வழங்கிற்று. கடன் கொடுக்கும் கூட்டுறவு நிலையங்கள் 1929-ல் நிலைநாட்டப் பெற்றன. 1932-ல் விவசாயப் பொருள்களின் விலைகளை நிலைப்படுத்தி வைப்பதற்காக அவற்றுக்கு அரசு ஆதரவு காட்டியது 1938-ல் அங்காராவில் திறக்கப்பட்ட வேளாண்மைக் கல்லூரி பின் னாளில் அங்காராப் பல்கலைக் கழகத்தில் இணைக்கப் பெற்றது. இவ்வித உதவிகளுடன் துருக்கி விவசாயிகள் கமாலின் தலைமை யில் தங்களுடைய நாட்டின் நிலையைப் பெரிதும் முன்னேற்ற மடையச் செய்தனர். உலகத்தில் மற்ற எல்லாவிடங்களிலும் விவசாயத்தின் நிலையில் பெரும் மந்தம் ஏற்பட்டிருந்த போதிலும், துருக்கி விவசாயிகளின் நிலை உண்மையில் சிறப்பானதாகவே இருந்தது. இரண்டாம் உலகப் போர் ஆரம்பமானபோது அவர் கள் உண்மையாகவே வளம் பெற்றவர்களாக விளங்கினர்.

விவசாயத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தோடு ஒப்பு நோக் கின், தொழில்துறை முன்னேற்றம் பின்தங்கியே உள்ளது என்று கமால் கருதினர். தொழில் துறையைப்பற்றிய அறிவு ஒரு சிலருக்கே இருந்தது; பணத்தை வைத்திருந்தவர்கள் அதனைத் தொழில் துறையில் முதலீடு செய்யாது, கட்டடங்கள் வாங்கு வதிலோ நிலங்களை வாங்குவதிலோதாம் செலவழித்தனர். தனியார் தொழில் மிகவும் பின்தங்கி நின்றது. அதற்கு மாறாக, அரசு சுவாதீனம் பெற்றிருந்த தீக்குச்சி, தேயிலை, சிகரெட்டுகள், மதுபானங்கள், உப்பு ஆகிய தொழில்களும் அரசுடைமையாக்கப் பட்டன. அரசினால் நடத்தப்பட்டு வந்த புகைவண்டிகள், துறைமுக வசதிகள், மின்பொருள்கள், நீராவிக் கப்பல்கள் ஆகிய வற்றிலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. வளர்ச்சிக் கான திட்டங்கள் பலன் நல்குவனவாக இருந்தன. பல்வேறு பகுதிகளிலும் இருப்புப் பாதைகள் போடப்பட்டன. பொதுப் பணித்துறையையும் அரசு சுவாதீனங்களையும் சீர்படுத்தியதற்குப் பிறகு கமால் தமது கவனத்தை அரசுரிமையாக்கப்பட்ட தொழில் களின் மீது செலுத்தினர். பாங்க் ஆஃப் அஃபேர்ஸ் (Bank of

Affairs) என்னும் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருந்த வங்கி, வியாபாரத்திற்கும், ஓரளவு ஆதரவு பெற்ற தொழில்களுக்கும் உதவி யளித்தது. ஆனால், அதனிடம் இருந்த முதலீடு சிறிய தொகையாகத்தான் இருந்ததனால், அதிக உதவியோ ஊக்கமோ அதனால் அளிக்க முடியவில்லை. 1933 ல் அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்காக என்று ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தீட்டியது. சுமெர் வங்கி (Sumer Bank) என்ற வங்கி அது போன்ற தொழில்களைச் சொந்தமாகப் பெற்று நடத்தி வருவதற்கு அனுமதி பெற்றது. ஆடைகள், தாள்கள், சர்க்கரை, எஃகு ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காகப் பல தொழிற் சாலைகள் துவக்கி வைக்கப்பட்டன. உலோகத் தொழிலுக்கும் கனிப் பொருள் தொழில்களுக்கும் தக்க உதவி யளிப்பதற்காக அரசு எட்டி (Eti) வங்கி என்ற ஒரு வங்கியை நிருமித்துப் பண உதவியையும் வழங்கிற்று.

அரசே தொழில்களை உருவாக்கி நடத்தி வருவதைப்பற்றித் துருக்கியில் விவாதங்கள் முளைத்தன. இம் முறையானது நாட்டைப் பொதுவுடைமைக் கோட்பாட்டிற்குக் கொண்டு செல்லும் என்று தக்க ஆதாரங்களுடன் ஒருசிலர் வாதாடினர். இக் கொள்கையானது ஹிட்லர், முஸோலினி போன்ற சர்வாதிகாரிகளால் பிரசாரம் செய்யப்பட்டுவந்த ஒருவகை எதேச்சாதிகாரமாகும் என்றும் மற்றும் சிலர் கருதினர். இது உண்மையில் பெருஞ் செல்வத்தில் திளைக்கும் தனியார்களுக்கு இடங் கொடுக்காத, நாட்டில் நலனை விளைவிக்கக் கூடியதான அரசுப் பொதுவுடைமைக் கோட்பாடாகும் என்று மற்றொரு கூட்டத்தினர் வாதாடினர்.

கமால் தீட்டிய ஆறுவது திட்டம் சீர்திருத்தத்தை வற்புறுத்தியது. மூடத்தனமான பழமைமைக்குக் கமால் எதிர்ப்புத் தெரிவித்தார். அதுபோன்றே, எப்போதும் இருக்கும் நிலையை அப்படியே பின்பற்றுவதையும் அவர் விரும்பவில்லை. மாறுதலுக்காக என்று மாறுதலைப் புகுத்துவதையும் அவர் விரும்பவில்லை. இருப்பினும், சீர்திருத்தவாதிகளும் முதுமைப் பருவத்தை அடைகையில் பழைமையையே விரும்புபவர்களாகி விடுகின்றனர் என்பதை அவர் உணர்ந்திருந்தார்; குறிப்பாக, அரசாங்கத்து உயர் பதவி வகிக்கிறவர்களுக்கு அந்த நிலை ஏற்படுகின்றது என்பதை அவர் அறிவார். கமால், தாம் நடத்திய புரட்சி படிப்படியாக, இடையருமல் வளர்ச்சி பெற வேண்டும் என்று விரும்பினர். இந்த வகையில் சேர்ந்ததுதான் பெண்களைப்பற்றிய சீர்திருத்தத் திட்டம். அவர்களுடைய சட்டபூர்வமான அந்தஸ்து, ஆடை

கள் ஆகியவற்றில் மட்டுமே மாறுதல் ஏற்படாமல், மற்றும் பல வகைகளிலும் மாறுதல்கள் ஏற்பட வேண்டும் என்று அவர் வற்புறுத்தினர். வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் அவர்கள் ஈடுபடவேண்டும் என்றும், பல்வேறு தொழில்களையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். பெண்களும் மருத்துவர்களாக வேண்டும், வழக்கறிஞர்களாக வேண்டும், அதிகாரிகளாக வேண்டும் என்றெல்லாம் அவர் விரும்பினர். இந்த முயற்சிகளின் விளைவாக, ஒருசில பெண்கள் சட்டமன்றத்தின் உறுப்பினர்களுமாயினர்.

பழைய உத்மானிய அரசு ஒவ்வொரு துறையிலும் லஞ்ச ஊழலில் சிக்கி இருந்தது. கைக்கூலி கொடுப்பதும், வாங்குவதும் மிகச் சாதாரணச் செயல்களாகவே இருந்தன. இவை எல்லாவற்றையும் ஒழித்துக் கட்டுவதில் கமால் மிகத் தீவிரமாக நடந்து கொண்டார். அவருடைய முயற்சியின் விளைவாக, லஞ்சம் கொடுக்கும், வாங்கும் பழக்கம் முற்றிலும் மறைந்துவிடவில்லை யென்றாலும், அதுபோன்ற குற்றங்களை ஒருவர் புரிந்திருப்பதாக நிரூபிக்கப்பட்டால், அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு விடுவார்; அவர்மீது வழக்கும் தொடரப்பட்டது. அவருடைய இந்த மாபெரும் முயற்சிகளின் விளைவாக, நிர்வாகத்தில் சிறிதளவாவது தூய்மை ஏற்பட்டது என்பதை எவரும் மறுக்க இயலாது. மூடநம்பிக்கைகளைப் போக்குவதிலும் அவர் தீவிரமாக முனைந்திருந்தார்.

கமால் பதவி வகித்திருந்த காலத்தின் பெரும்பாலான பகுதியில் அவருடைய தலைமையில் ஒரே ஓர் அரசியல் கட்சியே செயலாற்றி வந்தபோதிலும், அவர் தீட்டிய ஆறு அம்சத் திட்டத்தை எல்லா அரசியல்வாதிகளும் ஆதரித்தனர் என்ற போதிலும், துருக்கியில் அரசியல் கிடையாது என்று கூறுவது பொருத்தமாகாது. 1923, அக்டோபர் 30ஆம் நாள் அன்று இஸ்மத் பாஷா பிரதம அமைச்சரானார். அவர் பதின்மூன்று திங்கள் பதவி வகித்ததற்குப் பிறகு அப் பதவியை ஃபெத்தி பே (Fethy Bey) என்பவர் ஏற்றுக் கொண்டார். அத் தறுவாயில் தேசிய இயக்கத்து உறுப்பினர்கள் கமாலுக்கெதிராக 'முன்னேற்றக் கட்சி' என்ற கட்சி ஒன்றை உருவாக்கினர். அவர்கள் ஒருமைப் பாடற்ற கூட்டத்தினராகவே இருந்தனர்; பலர் மன நிறைவற்றிருந்தனர்; ஒருசிலர் பழைமையை விரும்பும் தீவிரவாதிகளாக இருந்துகொண்டு, சுல்தானின் ஆட்சியை மீண்டும் உயிர்ப்பிக்க விரும்பினர். மற்றும் சிலர் உண்மையான முற்போக்காளர்களாகவும், மக்களாட்சிக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்க

ளாகவும் இருந்தனர். அவர்கள் எல்லாரும் கமாலின் எதேச்சாதிகாரப் போக்கிற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். ஜனநாயக முறைகள் மீண்டும் நாட்டில் கடைப்பிடிக்கப்படக் கூடும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

ஃபெத்தி நிர்வாகத்தை நடத்துவதற்கான தகுதி பெற்றிராத காரணத்தால், இஸ்மத் பாஷா 1925, மார்ச்சில் மீண்டும் பதவிக்கு வந்தவுடன், நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்கான சட்டத்தை நிறைவேற்றினர். சுதந்தர நீதிமன்றம் என்ற ஒரு நீதிமன்றத்தையும் அவர் நிலைநாட்டினர். எதிர்ப்பளித்த ஒருசிலர் நாட்டின் பகைவர்களாகக் குற்றம் சாட்டப்பட்டனர்; ஒருசிலர் தூக்கிலுமிடப்பட்டனர்; மற்றும் சிலர் நாடுகடத்தப்பட்டனர்; பத்திரிகைகள் மூடப்பட்டன. புகழ் மிக்கவரான அகமத் அமீன் போன்ற பத்திரிகை ஆசிரியர்கள் பல்வேறு கால அளவுக்கு நாடு கடத்தப்பட்டனர். முற்போக்காளராக விளங்கிய ஹாலிதே எதிப் (Halide Edib) என்பவரும், அவருடைய கணவரான டாக்டர் அத்னன் அதிவர் (Dr. Adnan Adivar) என்பவரும் துருக்கியை விட்டு வெளியேறி, ஐரோப்பாவில் பல்வேறு இடங்களிலும் தங்கியிருந்து, 1938-ல் அனைவர்க்கும் அரசியல் குற்றமன்னிப்பு அளிக்கப்பட்டதற்குப் பிறகு தாயகம் திரும்பினர். 'முன்னேற்றக் கட்சி' கலைக்கப்பட்டது என்று குறிப்பிடத் தேவையில்லை. இந்த அரசியல் நிகழ்ச்சிகளின் விளைவாக, தென்கிழக்கு மாநிலங்களில் இருந்த குர்தீ இனத்தாரிடையே சச்சரவுகள் மூண்டன.

மாபெரும் தேசிய மன்றத்திற்கு 1927-ல் தேர்தல் நடைபெற்றது. கமால் இரண்டாம் தடவையாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த மன்றம் கூடுவதற்குச் சற்றே முன்பு, குடியரசு மக்கட் கட்சியின் கூட்டம் ஒன்பது நாள்வரை தொடர்ந்து நடைபெற்றது. அதில் ஆறு நாள்வரையிலும் கமால் ஆற்றிய, வரலாற்றில் புகழ்பெற்று விளங்கும் சொற்பொழிவில், 1918-ல் முட்ரோஸ் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் போது கேவலமான வகையில் தோற்கடிக்கப்பட்டு இகழ்ச்சியடைந்திருந்த நிலையிலிருந்து, 1927-ல் மீண்டும் உயிர்பெற்று விளங்கும் நிலைவரைக்கும் எல்லா நிகழ்ச்சிகளையும் அவர் எடுத்துக் கூறினர். கமாலின் ஆதரவாளர்கள் தங்களுடைய நிலை சற்று உறுதியாக இருக்கின்றது என்று அறிந்தவுடன் ஒழுங்கு அமைப்புக்காக உருவாக்கப்பட்டிருந்த சட்டங்களை 1929-ல் ரத்து செய்து விட்டனர். அப்பொழுது பிரான்ஸில் துருக்கியின் தூதராக இருந்த ஃபெத்தி பே 1930-ல் நாட்டுக்குத் திரும்ப

அழைக்கப்பட்டார். எதிர்க் கட்சி ஒன்றை நிலைநாட்டவும் அவருக்கு வாய்ப்பும் அனுமதியும் வழங்கப்பெற்றன. அவர் அமைத்த முன்னேற்றக் கட்சியில் இஸ்தம்பூல், இஸ்மீர் ஆகிய இடங்களிலிருந்து வந்த மனநிறைவற்றிருந்த பலர் உறுப்பினர் களாக இருந்தனர். அந்த இரண்டு இடங்களிலும் சர்வதேசப் பொருளாதார மந்தமும், புதிய வர்த்தகப் பாதுகாப்பு வரிகளும் வர்த்தகத்தை மிக மோசமாகப் பாதித்துவிட்டன. முற்போக் காளர்கள் வர்த்தக உரிமை மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினர். குடியரசு கட்சியினர் தேசியப் பொரு ளாதார நிலையைப் பெருக்குவதில் தாமதம் காட்டுகின்றனர் என்றும் அவர்கள் குற்றம் சாட்டினர். அவர்களுடைய எதிர்ப்புக் குடியரசு கட்சியினருக்குச் சற்று அச்சத்தையும் விளைவித்தது. அரசியல் கட்சிக் கூட்டங்கள் ஒருசில ரகளைகளில் முடிவடைந்த போது, துருக்கியில் ஒரு கட்சிக்கு மேற்பட்ட கட்சிகள் நீடிக்கக் கூடிய நிலை இன்னும் தோன்றவில்லை என்ற முடிவுக்குக் கமால் வந்தார். ஆகவே, 1930-ல் ஃபெத்தி பேயின் கட்சி கலைக்கப்பட் டது. நான்காண்டுகட்கு ஒருமுறை நடைபெறும் தேர்தல் 1931, மே மாதத்தில் நடைபெற்றது. அதில் குடியரசு மக்கட் கட்சி மாபெரும் வெற்றி பெற்றுவிட்டது. கமால் மூன்றும் தடவை யாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவிக்கு வந்தவுடன், அக் கட்சி முன்னேற்றக் கட்சியினரின் குற்றச் சாட்டுகளைப் போக்கும் வகையில் பல முக்கிய சீர்திருத்தங்களைப் புகுத்தியது.

நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. குடியரசு மக்கள் கட்சி யினர் எதிர்ப்பு இல்லாமல் 1935-ல் மீண்டும் தேர்தலில் கலந்து கொண்டனர். அத்தா துர்க் நான்காம் தடவையாக ஜனாதிபதி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1937, அக்டோபரில் இஸ்மத் இனோனு பிரதம அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொண் டார்; செலால் (ஜலால்) பேயார் (Celal Bayar) என்பவர் அப் பொறுப்பை ஏற்றார். பதினேழு ஆண்டுக் காலம்வரை கமாலும் இனோனுவும் ஒன்றாக வேலை செய்துவந்தனர். என்றாலும், அவர் களுடைய இயல்புகளில் அடிப்படை வேறுபாடு இருந்தேவந்தது. கட்சி ஒழுங்கு, உறுதியான அதிகாரம், மைய ஆதிக்கம் ஆகிய கருத்துகள் அவ் விருவரையும் இணைத்து வைத்திருந்தன. ஆனால் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில், அவர்கட்கு இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றிவிட்டன. குறிப்பாக, மத்தியதரைக் கடலில் இத்தாலி, மற்றும் சிரியாவில் பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளின் விவகாரங்களினால் அவ் விருவரின் நட்பு முரிந்தது.

1938, நவம்பர் 10ஆம் நாள் அன்று கமால் அத்தா துர்க் உயிர் நீத்தார். அத்து மீறிய குடிப் பழக்கம், அளவு மீறிய ஊதாரித்தனம் ஆகியவற்றின் விளைவாக, இரும்பு போன்ற அவரது உடல்நிலை சீர்கெட்டது. அவருடைய மரணம் நாட்டிற்கு ஒரு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. அத் தறுவாயில் வெளியான மக்களுடைய உணர்ச்சி அவரை மக்கள் எவ்வளவு நேசித்தனர், அவர்பால் எவ்வளவு அன்பு செலுத்தினர் என்பதைக் காட்டிற்று. அடுத்தநாள் இனோனு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பேயார் பிரதமர்ப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். 1939-ல் புதிய மாபெரும் தேசிய மன்றம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. இனோனு மீண்டும் நான்கு ஆண்டுக் காலத்திற்கு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், ஐரோப்பாவும் உலகமும் அப்பொழுது இரண்டாம் உலகப் போருக்காகத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தன. மற்றும் பல பிரச்சினைகள் இனோனுவை எதிர்நோக்கி நின்றன.

கமால் பதவி வகித்திருந்தபோது, துருக்கியின் உள்நாட்டு விவகாரங்களில் பெரும் முன்னேற்றம் விளைந்துவிட்டிருந்தது. இங்ஙனமே துருக்கியின் வெளிநாட்டு விவகாரங்களிலும் முன்னேற்றம் காணப்பெற்றது. துருக்கிக்கும் இராக்குக்கும் இடையே இருந்த தெளிவற்ற எல்லையை நிர்ணயிக்கும் பொறுப்பை லாசான்னே ஒப்பந்தம் பிரிட்டனிடம் ஒப்படைத்தது. பேச்சுவார்த்தைகள் நீடித்துக் கொண்டே யிருந்தன. 1925-ல் இக்கட்டான நிலை ஏற்பட்டது. தென்கிழக்கில் பிரிட்டன் குர்தீ இனத்தாரைக் கிளர்ச்சி செய்யத் தூண்டிக் கொண்டிருக்கிறது என்று கமால் கருதியது நியாயமே. குர்தீ இனத்தாரைக் கிளர்ச்சி செய்யத் தூண்டிவிடுவது மிக எளிதான செயலாகும். சச்சரவுக்குக் காரணமாக இருந்த மோஸல் மாநிலத்தில் பெருவாரியான குர்தீ மக்கள் குடியிருந்தனர். அவர்களுடைய தலைவர்கள் சுதந்தரமான குர்தீஸ்தான் என்ற ஒரு நாட்டை உருவாக்க விரும்பினர். தவிரவும், துருக்கியில் இருந்த குர்தீ இனத்தினரும், தேசியவாதிகளின் ஆட்சியை மையமாக்கும் திட்டங்களையும் சமயச் சார்பில்லாத் திட்டங்களையும் எதிர்த்து வந்தனர். அங்காராவில் பற்பல வேளைகளில் கூடிய கட்சிச் செயற்குழுவின் கூட்டங்களில் மோஸல் போரைப்பற்றிய விவாதங்கள் மூண்டன. ஆனாலும், அமைதி நீடித்தது. 1926-ல் இங்கிலாந்தும் துருக்கியும் ஓர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. அதன்படி, மோஸல் இராக்குக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. மோஸலில் கிடைக்கும் எண்ணெயைப்பற்றிய பெரும் பிரச்சினை எழுந்தது. உண்மையில்,

எண்ணெய்தான் சச்சரவுக்குக் காரணம் என்று கூறப்பட்டது. மோஸலில் எண்ணெய் எடுப்பதில் பிரிட்டன் அதிக அக்கறை காட்டியது. ஆனால், அப் பகுதி துருக்கியரின் இறைமைக்கு உட்படுத்தப்பட்டதெனில், அந்த நலன்க ளெல்லாவற்றையும் பிரிட்டன் இழக்க நேரிடும். சிறிது காலத்திற்கு அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளுக்கு 25 விழுக்காடு உரிமைகள் அளிக்கப்பட்டவுடன், துருக்கியின் சார்பாக அமெரிக்கர் காட்டிய உற்சாகம் தணிந்துவிட்டது; இருப்பினும், ஒப்பந்தம் துருக்கிக் கும் பத்து விழுக்காடு உரிமைகளை அளித்தது.

மக்கள் மாற்றத்திற்குப் பிறகு கிரீஸுடன் தொடர்பு துரிதமாக முன்னேற்றம் பெற்றது. கிரீஸின் பிரதமரான வெனிஸிலோஸ் துருக்கிக்கு விஜயம் செய்தார். இஸ்தம்பூலிலும் அங்காரா விலும் அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. 1930-ல் ஏதென்ஸ் நகரில் நடைபெற்ற மாநாடுகள் துருக்கி, கிரீஸ், பல் கேரியா, ருமேனியா, யூகோஸ்லாவியா மற்றும் அல்பேனியா ஆகியவற்றுக்கிடையே நட்புறவை ஏற்படுத்தின. அதுபோன்ற கூட்டங்கள் ஆண்டுதோறும் நடைபெற்றன. 1934-ல் 'பால்கன் ஒப்பந்தம்' செய்து கொள்ளப்பட்டது. அதில், பால்கன் பகுதி களின் எல்லைகளுக்கு உறுதியளிக்கப்பட்டது. ஆனால், பல்கேரியா வும் அல்பேனியாவும் அவ் வொப்பந்தத்தை ஏற்க மறுத்து விட்டன.

1932, ஜூலை மாதத்தில் துருக்கி சர்வதேச சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1934-ல் அது பாதுகாப்புச் சபைக் கும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது. துருக்கி ஒரு சிறிய நாடாக இருப்பினும், சங்கத்தின் விவகாரங்களில் அது தீவிரமான கருத்துச் செலுத்தி வந்தது. பயங்கரப் போதை மருந்துகளை விற் பதைத் தடுப்பதற்காகவும், கூட்டுப் பிணையத்தை நிலைப்படுத்து வதற்காகவும் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் துருக்கியும் பெரும் பங்கு பெற்றது. ஸ்பெயின் குடியரசுக்கு அது ஆதரவு நல்கியது; இத்தாலியில் ரோமப் பேரரசை மீண்டும் நிலைநாட்டு வதற்காக முஸோலினி கையாண்ட கொள்கையின் மறைமுக மான பொருளையும் அவர்கள் உணர்ந்திருந்தனர்.

எத்தியோப்பியாவை (Ethiopia) இத்தாலி தாக்கியவுடன் துருக்கித் தூதரகம் செயலில் இறங்கி, நீர்ச்சந்தியில் படைகள் நிறுத்தி வைக்கப்படலாகா என்ற நிலையை மாற்ற முயன்றது. அறிவிக்கப்படாமலேயே நடைபெற்றுக் கொண்டிருந்த போர் களிலும், இராணுவ ஆக்கிரமிப்புக்குச் சமாதானம் கூறிக்

கொண்டிருந்ததனாலும், டார்டனெல்ஸிலும் பாஸ்பரஸிலும் துருக்கி பாதுகாப்பில்லாத நிலையில் சிக்கிக்கொண்டு விட்டது. பெருத்த ஆயத்தங்களுக்குப் பிறகு மாந்த்ரோவில் (Montreux) லாசான்னே ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட நாடுகள் கூடின. அங்கே பல்கேரியா, பிரான்ஸ், பிரிட்டன், ஜப்பான், ருமேனியா, துருக்கி மற்றும் ரஷியா ஆகிய நாடுகள் 1936, ஜூலை 20ஆம் நாள் அன்று, நீர்ச்சந்திக்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டன. இத்தாலிக் கெதிராகப் பொருளாதார நடவடிக்கை களை எடுக்கவேண்டும் என்று சர்வதேச சங்கம் வற்புறுத்தியதைத் துருக்கி ஆதரித்ததனால், இத்தாலி 1938ஆம் ஆண்டு வரையிலும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுத்து வந்தது.

பிரிட்டன் மாநாட்டில் கலந்து கொண்டதன் நோக்கம், நீர்ச்சந்தியில் அரண்களை நிருமித்துத் தனது நிலையை உறுதிப் படுத்திக் கொள்வதற்கும், அப் பகுதியை நிர்வகிப்பதற்கும் உரிமை பெறுவது என்பதாகும். போரின்போது துருக்கி நடு நிலைமை வகிக்கும் நிலையில், ரஷியாவைத் தாக்குவதற்கு அந்த வழியாகத் தன் கப்பல்களைக் கொண்டு செல்வதற்கான உரி மையைப் பெற்றுவிடவேண்டும் என்பதும் பிரிட்டனின் நோக்க மாகும். துருக்கிக்கு நீர்ச்சந்தியின்மீது முழு இறைமையையும் அளிக்க வேண்டும் என்பதற்காக ரஷியா மாநாட்டில் கலந்து கொண்டது. ஆனால், அந்த நிலையில் அன்னியக் கப்பல்கள் கருங்கடலில் நுழையக் கூடா என்றும் அது வற்புறுத்திற்று. மாந்த்ரோ மாநாட்டில் கலந்துகொண்ட துருக்கிப் பிரதிநிதிகள் முதலில் ரஷியாவை ஆதரிக்க விரும்பினர். ஆனால், நாளடை வில் பிரிட்டிஷாரின் புறம் சாய்ந்து விடலாம் என்ற எண்ணமும் அவர்களுக்கு இருந்தது. இவ்விதமாக, எந்த வல்லரசையும் பகைத்துக் கொள்ளாது, எல்லாப் புறங்களிலும் இலாபத்தைப் பெற்றுக் கொள்ளலாமென்று துருக்கியர்கள் கடைப்பிடித்த இக் கொள்கை இறுதியில் வெற்றியும் பெற்றது. மாந்த்ரோ மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவு துருக்கிக்கு மிகவும் சாதகமாக இருந்ததனால், அத்தா துர்க் பெரு மகிழ்ச்சி யுற்றார். பல வகை களிலும் துருக்கியின் நிலை சற்று உறுதிபெற்று விட்டது.

சர்வதேச விவகாரங்களில் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முன்னாளில் பாக்தாத் ஒப்பந்தத்தில் சேர்ந்து கொண்டது போலவே, இப்பொழுது துருக்கி நாடு சாதாபாது ஒப்பந்தம் (Saadabad Pact) என்னும் ஓர் ஒப்பந்தத்தை ஈரான், இராக் மற்றும் ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளுடன் செய்து கொண்டது. அது ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையே ஒரு பாலத்தை நிருமிப்பதற்காகத் துருக்கி எடுத்த முயற்சியாகும்

இரு புறங்களிலும் இருந்த நாடுகளுடன் நட்புறவு கொண்டிருப்பதே துருக்கியின் நோக்கமாகும்.


தெற்கில் சிரியாவின் எல்லை துருக்கிக்குப் பெரும் தொல்லை கொடுப்பதாக இருந்தது. 1926ஆம் ஆண்டுவரையிலும் பிரான்ஸுடன் எல்லைச் சச்சரவுகள் பல விளைந்து கொண்டிருந்தன. சிரியாவில் புகுந்து கொள்ளையடித்துத் தொல்லை கொடுத்து வந்த கொள்ளைக் கூட்டத்தினருக்குத் துருக்கி ஆதரவு நல்குகிறது என்று பிரான்ஸ் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தது. அலெக்ஸாண்ட்ரெட்டா மாநிலத்திலும் நிலைமை அவ்விதமே இருந்தது. சிரியாவின்மீது பேராண்மை உரிமை பெற்றிருந்த பிரான்ஸ் அலெக்ஸாண்ட்ரெட்டாவுக்குத் தனிப்பட்ட நிர்வாகத்தை உண்டுபண்ணிக் கொடுப்பதாக வாக்குறுதி யளிக்கவே, 1938-ல் துருக்கி-பிரெஞ்சுக் கூட்டுத் தலைமை ஆட்சி ஒன்று அங்கே நிறுவப் பெற்றது. அப் பகுதி மக்கள் சுயாட்சி பெற்று விட்டதாக அறிவித்துக் கொண்டு, ஹாட்டே குடியரசைப் (Hatay Republic) பிரகடனம் செய்து கொண்டனர்; பிரகடனத்துக்குப் பிறகு, துருக்கியுடன் இணைவதற்கும் அவர்கள் விருப்பம் தெரிவித்தனர். சிரியாவிலிருந்த அராபியர்களின் எதிர்ப்பையும் மீறி, பிரான்ஸ் அதற்கு இணக்கந் தெரிவித்தது. ஹாட்டே 1939, ஜூன் மாதத்தில் துருக்கியுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. பிறகு, செப்டம்பர் 2ஆம் நாள் இரண்டாம் உலகப் போர் மூண்டது.

கலீஃபா பதவி ஒழிப்பு—ஒரு குறிப்பு

1922ஆம் ஆண்டில் சுல்தானின் பதவி அகற்றப்பட்டவுடனேயே, துருக்கியில் ஒரு குடியரசை நிறுவ முஸ்தஃபா கமால் முனைந்தார். விரைவிலேயே, துருக்கி ஒரு குடியரசு என்றழைக்கப்பட்ட போதிலும், அது நன்கு நிறுவப்படுவதற்கு இஸ்லாமிய மரபார்ந்த நிறுவனங்களும் அவற்றின் தலைமைப் பீடமான கலீஃபாப் பதவியும் தடைகளாக விளங்கும் என்பதனை முஸ்தஃபா நன்கறிந்திருந்தார். கலீஃபா தமது அரசியல் செல்வாக்கினை இழந்து விட்டிருந்த போதிலும், இஸ்லாமிய மதத் தலைவர் என்ற முறையில், பெரும்பாலானவர்களின் ஆதரவினைப் பெற்றிருந்தார். திறமை மிக்க ஒருவர் கலீஃபாவாக வந்தால், அவர் தமது பதவி அதிகாரத்தைப் பயன்படுத்திக் குடியரசை ஒழித்துவிட வழி ஏற்பட்டு விடக்கூடும் என்று தேசியவாதிகள் கருதினர். எனவே, அப் பதவியும் ஒழிக்கப்பட்டாலன்றி, துருக்கியில் தலையெடுத்துள்ள குடியரசு ஆட்சி நிலைத்திருக்க முடியாது என்னும் உண்மையைக் கமால் பாஷா

நன்குணர்ந்தார். எனினும், அப் பதவியை ஒழிப்பதில் அவர் அவசரப்படவில்லை. ஏனெனில், பெரும்பாலான துருக்கியர், கலீஃபாவை இன்னும் தங்களின் பெருமதிப்பிற்குரிய தலைவராகக் கருதி வந்தனர். எனவே, தக்க சூழ்நிலை உருவாகும் வரை அவர் காத்திருக்க முடிவு செய்தார். அப்படிப்பட்ட சூழ்நிலை விரைவிலேயே வந்து வாய்த்தது. இந்தியாவிலிருந்த இரண்டு முஸ்லிம் தலைவர்களாகிய ஆகா கானும் (Aga Khan), அமீர் அலீயும் (Ameer Ali), முஸ்தஃபா கமாலின் வேலையை எளிதாக்கினர். அவர்கள் துருக்கியின் பிரதமரான இஸ்மத் பாஷாவுக்கு (Ismet Pasha) எழுதிய கடிதத்தில், கலீஃபாப் பதவியினை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கியிருந்தனர். அவர்களிருவரும் ஆங்கிலேயரின் ஆதரவு பெற்றவர்கள் என்றும், எனவே துருக்கியின் அரசியலில் குழப்பம் விளைவிக்க கலீஃபாப் பிரச்சினையைத் தூண்டுகின்றனர் என்றும் மக்களிடையே ஓர் எண்ணத்தினை முஸ்தஃபா கமால் பரப்பிவிட்டார். அது அவர் விரும்பிய விளைவினை உண்டுபண்ணி விட்டது. இந்த ஒரு பதவி இருப்பதால்தான் இத்தன்மைத்தான தகராறுகள் விளையக் கூடும் என்ற கருத்து மக்களிடையே ஏற்பட்டது. அவ் வுணர் வினைப் பிரதிபலிக்கும் வகையில், 1924ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3ஆம் நாள் கூடிய தேசிய அவை, அப்துல் மஜீத் பதவியிலிருந்து அகற்றப்பட்டதாகவும், கலீஃபாப் பதவி ஒழிக்கப்பட்டு விட்டதாகவும் அறிவித்தது. அப்துல் மஜீதும், மற்றும் இருந்த உத்மானிய அரச குடும்பத்தினர் அனைவரும் துருக்கியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

சுமார் 13 நூற்றாண்டுக் காலமாக இயங்கி வந்த இப் பதவி ஒழிக்கப்பட்டது. கிரேக்கர்களைத் துருக்கியினின்று விரட்டியதன் மூலம், 'இஸ்லாத்தின் வாள்' என்ற பட்டத்தினைப் பெற்ற முஸ்தஃபாவே அச் சமயத்தின் தலைமைப் பதவியையும் வீழ்த்தியது வரலாற்றின் விந்தையாகும். இப் பதவி ஒழிப்பின் காரணமாக, 1543 முதல் சுன்னீ முஸ்லிம் பிரிவினரின் தலைமையகமாக விளங்கிவந்த துருக்கி அந் நிலையை இழந்தது; இஸ்லாமிய உலகினை ஒன்றுபடுத்தி வந்த ஒரு சக்தி மறைந்தது. துருக்கியின் மீது இஸ்லாம் கொண்டிருந்த பிடி தளரத் தொடங்கிற்று. துருக்கியின் கல்வி மற்றும் சமூக வாழ்க்கையில் இஸ்லாம் வகித்த பங்கு குறையத் தொடங்கியது. மசூதிகளின் ஆதரவில் இயங்கிய மத்ரஸாக்கள் (மதபோதனைப் பள்ளிகள்) மறைந்து, அரசின் பள்ளிகள் பல தோன்றின. ஏனை ஐரோப்பிய நாடுகளைப் போலத் துருக்கியும் உண்மையிலேயே ஒரு குடியரசாக மாறிவிட்டது.



படம் 4

(படவிளக்கம் எதிர்ப்பக்கத்தில் காண்க)

உதுமானியப் பேரரசின் பிரிவினை, 1920.


1. கருங்கடல்
2. இஸ்தம்பூல்
3. பாடும்
4. சோவியத் இணைப்பு நாடு
5. காஸ்பியன் கடல்
6. பாகூ
7. ஆஸர்பாய்ஜான்
8. நப்ரீஸ்
9. அர்மீனியர்கள்
10. வான் ஏரி
11. குர்துஸ்
12. அலெக்ஸாண்ட்ரெட்டா
13. அலெப்போ
14. துருக்கி
15. அங்க்காரா
16. இஸ்மீர் (ஸ்மிர்ணு)
17. டோடகனிஸ் தீவு. (1939-ல் சிரியாவினுல் துருக்கிக்குக் கொடுக்கப்பட்டது.)
18. சைப்ரஸ் (பிரிட்டன்)
19. கிரீட்
20. மத்தியதரைக் கடல்
21. சிரியா (பிரெஞ்ச்)
22. பைரூத்
23. டமாஸ்கஸ் (திமஷ்க்)
24. ஹைஃபா
25. பலஸ்தீனம் (பிரிட்டிஷ் மாண்டேட்)
26. அலெக்ஸாந்திரியா
27. அம்மான்
28. சுயெஸ் கால்வாய்
29. சினுய் தீபகற்பம்
30. கெய்ரோ (காஹிரா)
31. நைல் நதி
32. எகிப்து (உதுமானியப் பேரரசுடன் பெயரளவில் இருந்த தொடர்பு 1915-ல் அறுபட்டது)
33. அஸ்வான்
34. ஆங்கில-எகிப்து சூடான்
35. மோஸல்
36. டைக்ரிஸ் நதி (திஜ்லா)
37. யூப்ரடிஸ் நதி (ஃபுராத்)
38. பாக்தாத்
39. இராக் (பிரிட்டிஷ் மாண்டேட்)
40. தெஹிரான்
41. ஈரான் (பாரசீகம்)
42. குவைத்
43. பாரசீக வளைகுடா
44. நஜ்து
45. அரேபியா
46. சவூதி
47. மதீனு
48. ரியாத்
49. ஹிஜாஸ்
50. மக்கா
51. செங்கடல்
52. ஏமன் (சவூதி அரேபியாவினிடமிருந்து 1934-ல் விடுதலை பெற்றது)
53. அதன் (பிரிட்டிஷ்)

வட்டத்துக்குள் இருப்பவை : 1915-1917 அந்தரங்க ஒப்பந்தங்கள்

1. ரஷியா
2. பிரான்ஸ்
3. பிரிட்டிஷ்
4. அனேத்து உலக
5. இத்தாலி
6. துருக்கி

உதுமானிய வம்சம்

1. உத்மான்
2. ஓர்கான்
3. முராத் I
4. பாஎஜீத் I
5. முகம்மது I
6. முராத் II
7. முகம்மது II
8. பாஎஜீத் II
9. சலீம் I
10. சுலைமான் I
11. சலீம் II
12. முராத் III
13. முகம்மது III


14. அகமது I
15. முஸ்தஃபா I
16. உத்மான் II
17. முராத் IV
18. இப்ராஹீம்
19. முகம்மது IV
20. சுலைமான் II
21. அகமது II
22. முஸ்தபா II
23. அகமது III
24. மகமூது I
25. உத்மான் III
26. முஸ்தஃபா III
27. அப்துல் ஹமீது I
28. சலீம் III
29. முஸ்தஃபா IV
30. மகமூது II
31. அப்துல் மஜீத்
32. அப்துல் அஸீஸ்
33. முராத் V
34. அப்துல் ஹமீது II
35. முகம்மது V
36. முகம்மது VI

மேற்கோள் நூற்பட்டியல்

பொது நூல்கள்

SIR EDWARD CREASY — History of the Ottoman Turks

LANE-POOLE — Turkey

T. L. JARNAN — Turkey (Modern State Series)

SYDNEY NETTLETON FISHER — The Middle East—A History

M. PHILIPS PRICE — A History of Turkey (From Empire to Republic)

VON HAMMER PURGSTALL — History of the Ottoman Empire 18 Vols. (Translated from the German)

EVERSLEY AND VALENTINE CHIROL — The Turkish Empire from 1288—1922

குறிப்பிட்ட தலைப்புகளுக்குப் பின்வரும் நூல்கள் பயனுள்ளனவாகக் காணப்படும்

H. A. GIBBONS — The Foundation of the Ottoman Empire

PAUL WITTEK — The Rise of the Ottoman Empire

A. D. ALDERSON — The Structure of the Ottoman Dynasty

SIR EDWIN PEARS — The Destruction of the Greek Empire and the Story of the Capture of Constantinople

H. A. R. GIBB AND HAROLD BOWEN — Islamic Society and the West: A Study of the Impact of Western Civilization on Muslim Culture in the Near East, Volume I (in two parts)

MERRIMAN — Suleiman the Magnificent, 1520—1566

Encyclopaedia of Islam

SIR PAUL RYCAUT — History of the Turkish Empire (1623—1677) 2 Volumes

SIR HARRY LUKE — The Making of Modern Turkey from Byzantium to Angora

J. A. R. MARRIOTT — The Eastern Question—An Historical Study in European Diplomacy

MARY LUCILLE SHAY — The Ottoman Empire from 1720 to 1734

WILLIAM MILLER — The Balkans, Roumania, Bulgaria, Servia and Montenegro with new chapter containing their History from 1896 to 1922

WILLIAM MILLER — The Ottoman Empire, 1801-1913

ALEXANDER PALLIS — In the Days of the Janissaries

PAUL F. SHUPP — The European Powers and the Near Eastern Question, 1806-1807

HAROLD W. V. TEMPERLEY — England and the Near East, Vol. I, The Cremea

SHAFIK GHURBAL — The Beginnings of the Egyptian Question and the Rise of Mehemet Ali

WILLIAM ETON — A Survey of the Turkish Empire

S. G. CHACONAS ADMANTIOS KORAIS — A Study in Greek Nationalism

FRANK EDGAR BAILEY — British Policy and the Turkish Reform Movement—A Study in Anglo-Turkish Relations, 1826-1853

C. W. CRAWLEY — The Question of Greek Independence

HENRY DODWELL — The Founder of Modern Egypt—A Study of Muhammad Ali

JOHN MARLOWE — A History of Modern Egypt and Anglo-Egyptian Relations, 1800 - 1953

ARTHUR E. P. BROME WEIGALL — A History of Events in Egypt from 1798 to 1914

GEORGE YOUNG — Egypt

B. G. AMBROSE L. LLOYD — Egypt Since Cromer, 2 Vols.

C. C. ADAMS — Islamism and Modernism in Egypt

R. W. SETON-WATSON — Disraeli, Gladstone and the Eastern Question : A Study in Diplomacy and Party Politics

DONALD C. BLAIRDELL — European Financial Control in the Ottoman Empire : A Study of the Establishment

SHOTWELL AND DEAK — Turkey at the Straits : A Short History

SIR ARNOLD T. WILSON — The Suez Canal, Its past, present and future

A. O. SARKISSIAN — History of the Armenian Question to 1885

URIEL HEYD — The Foundations of Turkish Nationalism

ALI HAYDAR MIDHAT — The Life of Midhat Pasha

SIR EDWIN PEARS — Forty Years in Constantinople (1873-1915)

CYRUS HAMLIN — Among the Turks

SIR EDWIN PEARS — Life of Abdul Hamid

ELIOT GINNEL. ED. — Modern Turkey

ERNEST RAMSAUR — The Young Turks

SIR CHARLES N. E. ELIOT — Turkey in Europe

CHARLES R. BUXTON — Turkey in Revolution

G. F. ABBOT — Turkey, Greece and the Great Powers

AHMED EMIN — Turkey in the World War

HARRY N. HOWARD — The Partition of Turkey

H. W. V. TEMPERLEY — A History of the Peace Conference of Paris, Vol. VI

ARNOLD J. TOYNBEE — Survey of International Affairs, Vol. I. The Islamic World since the Peace Settlement

ARNOLD TOYNBEE AND KENNETH P. KIRKWOOD — Turkey

D. E. WEBSTER — The Turkey of Ataturk : Social Process in the Turkish Reformation

HAROLD C. ARMSTRONG — Grey Wolf, Mustafa Kemal : An intimate study of a Dictator

LORD KINROSS — Ataturk — The Rebirth of a Nation

கலைச்சொல் அகராதி

Administration	—	நிர்வாகம்; ஆட்சி முறை
Archives	—	சுவடிக் கூடம்
Armistice	—	போர் நிறுத்த ஒப்பந்தம்
Ata Turk	—	அத்தா துர்க் (முஸ்தஃபா கமால் பாஷா)
Autonomy	—	சுயாட்சி
Bay	—	விரிகுடா
Caliphate	—	கிலாஃபத்
Capitation tax	—	தலைவரி; ஆள்வரி
Capitulation	—	துருக்கிப் பேரரசில் வாழும் பிற நாட்டவரின் பொறுப்புகள், அவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள், சட்டங்கள் ஆகியவற்றை வரையறை செய்து விளக்கும் முறை
Chronology	—	கால வரிசை முறை
Conference	—	மாநாடு
Constitution	—	அரசியல் அமைப்புச் சட்டம்
Dervish	—	துறவி
Fatwah	—	சமயக் கட்டளை
Feudal System	—	நிலமானிய முறை
Ghazi	—	இஸ்லாமியப் போர் வீரர்
Governor	—	ஆளுநர்
Grand Vizier	—	பிரதம அமைச்சர்

Hatti- Shariff — உன்னதமான சொற்கள்
Hereditary — மரபுரிமையான

Institutions — நிறுவனங்கள்; அமைப்புகள்

Janissaries — ஜனிஸ்ஸரீ என்னும் புதிய காலாட்படை வீரர்கள்

Kanuni — சட்டங்களை வழங்குபவர்
Kazi — நீதிபதி

Madressa — கல்லூரி
Mandate — உரிமைக் கட்டளை
Mufti — சட்ட ஆலோசகர்; முஸ்லிம் சட்ட அறிஞர்
Mullah — நீதிபதி

Province — மாநிலம்

Reactionary — பிற்போக்காளன்

Shaik — இஸ்லாமிய ஞானி
Sovereignty — இறைமை
Straits — நீர்ச்சந்தி
Sultana — சுல்தானின் மனைவி அல்லது பெண்ணரசி
Sultana Valideh — சுல்தானின் தாயார்
Sultanate — சல்தனத்

Ulema — இஸ்லாமிய அறிஞர்

Yavuz — கடுமையானவன்; வளையாதவன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-600031

❋

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்
(Tamil Medium Books for Colleges)

இதுவரை 606 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

❋

மேலும், விரைவில் வெளிவருபவை

பொறியியல்	...	43	நூல்கள்
சட்டம்	...	19	,,
மருத்துவம்	...	9	,,
இயற்பியல்	...	27	,,
வேதியியல்	...	21	,,
தாவரவியல்	...	17	,,
விலங்கியல்	...	7	,,
கணிதம்	...	19	,,
வணிகவியல்	...	30	,,
பொருளாதாரம்	...	21	,,
புவியியல்	...	12	,,
வரலாறு	...	36	,,
மனையியல்	...	2	,,
தத்துவம்	...	5	,,
உளவியல்	...	4	,,
புள்ளியியல்	...	2	,,
கல்வி	...	3	,,
நிலப் பொதியியல்	...	3	,,
அரசியல்	...	25	,,

கிடைக்குமிடம் :

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு
(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)
கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்
சென்னை-600006

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்